சர்க்காரியா விசாரணைக் கமிஷன்



தொகுதி 3


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சர்க்காரியா விசாரணைக் கமிஷன்

(தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர், ஏனைய அமைச்சர்கள் ஆகியோருக்கு எதிரான குற்றச் சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்காக 1952ஆம் ஆண்டு 60-வது சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டது.)



இறுதி அறிக்கை

தொகுதி 3

[கமிஷனுக்கு விசாரணைக்கு அனுப்பப்பட்ட 18, 20, 21, 23 ஆகிய தொடர் எண்கள் குறித்து-அமைச்சரவைச் செயலகம் (பணியாளர்-நிர்வாகச் சீர்திருத்தத் துறை) அரசிதழ் அறிவிப்பு எண் S. O. 74(E). நாள் 3—2—1976.]

110-G 13


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொகுதி 3


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்.

சாட்சியம் பற்றிய விவாதமும் குற்றச்சாட்டுகள் குறித்து நான் செய்த முடிவுகளும்.

குற்றச் சாட்டின் தொடர் எண்.	பொருள்.	பக்கம்.
	தொகுதி 1.	
1.	மேகலா பிக்சர்ஸ்	1–23
2.	அஞ்சுகம் பிக்சர்ஸ்	24–31
4.	சென்னை, கோபாலபுரத்தில் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்குச் சொந்தமான இயங்கர்ச் சொத்துக்கள்	32–40
5.	அஞ்சுகம் பதிப்பகம்	41–49
6.	திருவாரூரிலுள்ள மகனது இல்லம் குறித்து	50
7.	திருமதி தர்மா	51–60
8.	மருமகன், திரு அமிர்தம்	61–65
9.	திரு வைத்தியலிங்கம், முதலமைச்சரின் நேர்முக உதவியாளர்.	66–70
10.	வீராணம் திட்டம்	71–150
13.	ஜே.கே.கே. அங்கப்ப செட்டியார் பிரதர்ஸ் & குடும்ப நிறுவனங்கள் குறித்து	151–162
	தொகுதி 2.	
14.	சம்யநல்லூர் மின் சக்தி உற்பத்தி நிலையத்தை விற்றது .	1–56
17.	சர்க்கரை பேர ஊழல்	57–240
	தொகுதி 3.	
18.	தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு	1–63
20.	கோடைக்கானல்-பழனி சாலை	63–64
21.	தி.மு.க. வும், தனியார் அறக் கட்டளைகளும்—	
	(A) சென்னை தி.மு.க. அறக்கட்டளை. ..	65 69
	(B) மதுரை மாவட்ட தி.மு.க. அறக்கட்டளை. ..	69–71
	(C) நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை ..	71–78
	(D) பேரறிஞர் அண்ணா அறக்கட்டளை ..	78–85
	(E) மன்றம் அறக்கட்டளை. ..	85
	(F) இராம அரங்கண்ணல் அறக்கட்டளை. ..	85–86
	(G) கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை	86–87
	(H) அண்ணா அறக்கட்டளை .	87–89
	(I) முத்து வேலர் அறக்கட்டளை	89–90
	(J) டாக்டர் வெற்றிச்செல்வி அன்பழகன் அறக்கட்டளை	91
	(A) முதல் (J) வரையில் உள்ளவை குறித்த முடிவு	91–93

23. (1) வல்லநாடு நிலவள வங்கி 94–238

(2) தஞ்சாவூர் அர்பன் வங்கி விவகாரங்கள் .. . 238–239

(3) தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கி விவகாரங்கள் . 239

(4) தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி விவகாரங்கள். 240–242

தொகுதி 4.

24. தி.மு.க. தொழிற்சங்கங்களை உருவாக்க அரசு நிர்வாக இயந்திரத்தையும் ஆயுதம் தாங்கிய கும்பல்களையும் பயன்படுத்துதல்—

(i) சிம்சன் கம்பெனி விவகாரங்கள் 1–30

(ii) சாரதா ஸ்டுடியோ விவகாரங்கள் 30–33

(iii) மாநில மின்சார வாரிய விவகாரங்கள் 33–38

25. பத்திரிகைகளை அச்சுறுத்தியதும் அவற்றைத் தாக்கியதும் 39–65

26. கட்சி நடவடிக்கைகளுக்கு அரசு இயந்திரத்தைத் தவறுகப் பயன்படுத்தியது 66–71

27. எதிர்க் கட்சியினர் அனைவரையும் ஒடுக்கக் காவலர் தவறுகப் பயன்படுத்தப்பட்டிருத்தல்— 72–73

(a) இராமநாதபுரம் மாவட்டம், சிங்கம்புணரியில் 27—8—1972ல் நடந்த நிகழ்ச்சி 73–78

(b) திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரியில் 1971 அக்டோபரில் நடந்த நிகழ்ச்சி 78

(c) கோயம்புத்தூர் மாவட்டத்தில் பவானி அருகே சடையம்பட்டியில் 1971 செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற சம்பவம் 78–80

(d) 1971 நவம்பரில் திருநெல்வேலி மாவட்டம், கரிவலம் வந்த நல்லூரில் நடந்த சம்பவம் 80–81

(e) 1972 ஜனவரியில் நடைபெற்ற நிகழ்ச்சி— தொழிற்சங்கத் தலைவர்களைத் தாக்கியது. 81–82

(f) சேலம் மாவட்டம், நாமக்கல்லில் 26—2—1972ல் நடைபெற்ற நிகழ்ச்சி 82–83

(g) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் 27—2—1972-ல் நடைபெற்ற நிகழ்ச்சி 83–85

(h), (i) பெத்தநாயக்கன்பாளையம், சாத்தூர், மாணமதுரை முதலிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் 85–87

28. சக்தி பைப்ஸ் 87–115

முடிவுகளின் சுருக்கம் 116–132

பொதுக் கருத்துரைகள் 133–139

இணைப்பு '' A ''—வரப்பெற்ற உறுதிமொழிப் பத்திரங்கள் முதலியவை குறித்த புள்ளி விவரங்கள் 140–143

குற்றச் சாட்டு எண் 18.

முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி, முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் திரு. வி. எஸ். நியாகராஜ முதலியார் மற்றும் ஏனையோருக்கு எதிராக.

மனுதாரர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அளித்த மகஜரில் கொடுக்கப்பட்டுள்ள இக் குற்றச் சாட்டின் விவரம் பின்வருமாறு :—

"முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியின் நெருங்கிய நண்பரான தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் தலைவர் திரு. வி. எஸ். நியாகராஜ முதலியார் 2 கோடி ரூபாய்க்கு மேல் பொதுப் பணத்தைக் கையாடியுள்ளார்" என்று தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் செயலாளர் தாக்கல் செய்த அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. இவ் வழக்கைக் காவல் துறையிடம் ஒப்படைத்து, திரு. வி. எஸ். நியாகராஜ முதலியார் மீதும் சம்பந்தப்பட்ட ஏனையோர் மீதும் வழக்கு தொடருமாறு அதிகாரிகளும், தலைமைச் செயலாளரும் பரிவுரை செய்ததற்கு மாறாக, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனரும் தலையிட்டதன் பேரில், உருப்படியான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்பதோடு, திரு. வி. எஸ். நியாகராஜ முதலியாரையும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக் குழு உறுப்பினர்களையும் கைது செய்வது மில்லை, அவர்கள் மீது வழக்கு தொடரவுமில்லை. அதற்கு மாறாக அவர்கள் தங்களது பதவிகளை ராஜினமா செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்."

இதே குற்றச்சாட்டை திரு. எம். கல்யாண சுந்தரம் குடியரசுத் தலைவரிடம் கொடுத்த மகஜரில் குறிப்பிட்டுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:—

"திரு. வி. எஸ். நியாகராஜ முதலியார் தமிழ்நாட்டிலுள்ள பெரும் நிலக்கிழார்களில் ஒருவர் என்பதோடு பெரிய தொழிலதிபரும் ஆவார். இவர் முதலமைச்சரின் நெருங்கிய நண்பராவார். இருவரும் திருவாரூரில் பிறந்தவர்கள். திரு. வி. எஸ். நியாகராஜ முதலியார் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் தலைவராவார். தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பைச் சேர்ந்த சுமார் 2 கோடி ரூபாய் கையாடல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது. இது குறித்துத் தணிக்கை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. திரு. வி. எஸ். நியாகராஜ முதலியார் மீதும் மேற்சொன்ன கூட்டமைப்பு நிர்வாகக் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் மீதும் வழக்கு தொடருமாறு துறைகளால் செயற் குறிப்புகள் அனுப்பிவைக்கப்பட்டன. இருப் பினும், முதலமைச்சரின் தலையீட்டின் பேரில் வழக்கு தொடருவதற்கான செயற் குறிப்புகள் கைவிடப்பட்டன. இப் பெரும் தொகையை வசூலிக்க மேற்கொண்டும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. எந்தப் பிரதிபலன் கருதி, இந்தத் திரு. வி. எஸ். நியாகராஜ முதலியார், அவருடைய கூட்டாளிகள் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குறித்து தீவிரமாக விசாரணை செய்யப்பட வேண்டும்."

மனுதாரர்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் 5 (2) விதியின் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டன.

இதற்குப் பதிலளிக்கும் வண்ணம் திரு. கருணாநிதியும், திரு. சி. பா. ஆதித்தனரும் 1976-ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் நாளிட்ட தங்களது உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். காவல் துறை சூப்பிரண்டு திரு. கே. ஆர். ராஜகோபாலன் திரு. எஸ். ஸ்ரீமஹூர்த்தி, திரு. வி. எஸ். டி. முதலியார் ஆகியோரும் உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். தனது வளரவும் பாதிக்கப்படக் கூடியவரும் இருந்த முன்னாள் தொழில்—சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ். மாதவனும் 8—9—1976-ஆம் நாளிட்ட உறுதி மொழிப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்தார். அவனங்களையும், திரு. வி. எஸ். டி. முதலியார். காவல்துறை சூப்பிரண்டு திரு. கே. ஆர். ஸ்ரீராஜ கோபாலன் ஆகியோர் தாக்கல் செய்த உறுதி மொழிப் பத்திரங்களையும் அய்வு செய்த பிறகு, திரு. மு. கருணாநிதி 8—9—1976 ஆம் நாளிட்ட எதிர் உறுதிமொழிப் பத்திரம் ஒன்றை மேலும் தாக்கல் செய்தார். மனுதாரர்களால் தங்களது உறுதிமொழிப் பத்திரங்களில் விளக்கப்பட்டுள்ள இக் குற்றச் சாட்டுகளுக்கு இந்த உறுதிமொழிப் பத்திரத்தில் அவர் விளக்கமாகப் பதிலளித்தார். அவ்வகை அவணங்கள், திரு. கே. ஆர். இராஜ கோபாலன், திரு. வி. எஸ். டி. முதலியார் ஆகியோர அளித்த உறுதிமொழிப் பத்திரங்கள் ஆகிய வற்றில் உள்ளனவை குறித்தும் அவர் கருத்து தெரிவித்தார்.

திரு. மு கருணாநிதி, கொடுத்த 23—7—1976 ஆம் நாளிட்ட முதல் உறுதி மொழிப் பத்திரத்தில் பின்வருவனவற்றைக் கூற விழைந்துள்ளார் :—

திரு. வி. எஸ். டி. முதலியார், எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர் என்னும் குற்றச்சாட்டு பொய்யானதாகும்.

திரு. வி. எஸ். டி. முதலியாருக்குச் சொந்த மான, கரும்பு பயிரிடக்கூடிய 3,314 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் அரசால் 1972-ல் எடுத்துக் கொள்ளப்பட்டது. சாதாரணமாகப் பார்த்தால் அது போன்ற நிலம் 2.6 கோடி ரூபாய்

பெறும். ஆனல், திரு. வி. எஸ். டி. முதலியார் நஷ்ட ஈடாக 16·72 இலட்சம் ரூபாய்தான் பெற உரிமையுடையவர் என்று முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பில் காணப்பட்ட முறைகேடுகளேச் சரிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இணேப் பதிவாளர் திரு. ஜி. என். தாஸ் தற் காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டார். நடவடிக்கை எடுக்க காவல்துறையிடம் இது ஒப்படைக்கப்பட்டது.

அரசு, குழுவை நீக்கிவிட்டு,அக் கூட்டமைப்பைத் தனி அதிகாரியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

திரு. வி. எஸ். டி. முதலியாரைப் பாதுகாக்க எதிர்மனுதாரர் தலேயிட்டார் என்னும் குற்றச் சாட்டு பொய்யானதாகும்.

திரு. மு. கருணுநிதி 8—9—1976-ல் மேலும் அளித்த உறுதிமொழிப் பத்திரத்தில் இதன் விளக்க மாகக் கூறித் திரும்பவும் மறுத்துள்ளார். தான், வி. எஸ். டி. முதலியாரை ஒருபோதும் சுட்டிக் காத்ததில்லே என்றும், தவறிழைத்திருக்கக்கூடிய அவரிடமோ இக் கூட்டமைப்பின் ஏனேய நிர்வாகிகளிடமோ தனக்குத் தனி அன்பு ஏதும் இல்லேயென்றும் அவர் உறுதியாகத் தெரி வித்துள்ளார். தவறு செய்துள்ளதாக விசாரணே யில் தெரிய வருபவர்கள் மீது உரிய, கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு தான் கூறி யுள்ளதாக இவர் கூறும் கூற்றுக்கு ஆதர வாகப் பலவேறு தணிக்கை அறிக்கைகளேயும் அவற்றின் மீது அவர் பிறப்பித்த ஆணேகளேயும் எடுத்துக் காட்டியுள்ளார். முன்னுள் தலேமைச் செயலாளரான திரு. இராயப்பாவால் தாக்கல் செய்யப்பட்டதும் இறுதியாக விசாரணேக்காகத் தலேமை நீதி மன்றத்திற்கு வந்ததுமான ரிட் மனுவில் திரு. இராயப்பா கூறியிருந்த குற்றச் சாட்டை இவர் மேலும் மறுத்துள்ளார். திரு. வி. எஸ். டி. முதலியார் மீது வழக்கு தொட வேண்டுமென்று திரு. இராயப்பா கருத்து தெரிவித்ததாகவும், அதன் பேரில் திரு. இராயப்பா மீது முன்னுள் முதலமைச்சர் திரு. மு. கருணுநிதிக்கு ஆத்திரம் வந்ததாகவும், அதனுல் மதிப்பு மிகுந்த தலேமைச் செயலாளர் பதவியி லிருந்து வேறு பதவிக்குத் திரு. இராயப்பாவை மாற்றினர் என்றும் குற்றச்சாட்டில் கூறப்பட்டிருந் தது. திரு. வி. எஸ். டி. முதலியார் மீது வழக்கு தொடர வேண்டுமென்று திரு. இராயப்பா ஒருபோதும் கருத்து தெரிவிக்கவில்லே ; எனவே, இராயப்பா மீது திரு. மு. கருணுநிதிக்கு ஆத்திரம் ஏற்பட்டது என்பதற்கே இடமில்லே எனறு அந்த ரீட் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட தனது எதிர் உறுதிமொழிப் பத்திரத்தில் திரு. மு. கருணுநிதி கூறியுள்ளார். தணிக்கை முடிந்த பிறகு, சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நட வடிக்கை எடுக்கப்படுவதற்காக இவ் வழக்கைக் காவல்துறையினரிடம் ஒப்படைக்கலாம் என்பதே திரு. இராயப்பா (10—12—1970ஆம் நாளிட்ட அவ ரது குறிப்பின்படி) தெரிவித்த கருத்தாகும் என்று, இந்த விசாரணேக் கமிஷன் முன் திரு. மு. கருணு நிதி 8—9—1976-ல் தாக்கல் செய்த அவரது உறுதி மொழிப் பத்திரத்தில் கூறியுள்ளதுடன் தனது பழைய நிலேயிலேயே உறுதியாக நின்ருர். அந்த நேரத்தில், சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் என்றே எடுக்க வேண்டிய அவசியமான நடவடிக்கைகள் யாவை என்பதையோ முடிவு செய்து விடுவதற்கில்லே. தணிக்கை அறிக்கை குறித்து 20—4—1971-ல் நடைபெற்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்டபோது, இந்தக் கூட்டமைப்பின் மீது எதிராகவே தக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்பதற்கு ஆதரவாக எதிர்மனுதாரர் (திரு. கருணுநிதி) கருத்து தெரிவித்துள்ளார். முதலமைச்சர் என்ற முறையில் அவர் சுட்டிக் காட்ட இயன்றதெல்லாம் யாதெனில், சம்பந்தப் பட்ட அதிகாரிகளால் தேவையான விவரங்கள் அளிக்கப்பட்ட பிறகு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகளில் உரிமையில், 'குற்றவியல் நடவடிக்கைகள் ஆகிய இரண்டும் அடங்கி யிருக்க வேண்டும் என்பதேயாகும். உண்மையில் காவல்துறையினர், இக் கூட்டமைப்பின் செய லாளர்—இணேப்பதிவாளர் ஜி. என். தாஸுக்கு எதிராகப் புலனுய்வு நடவடிக்கைகளே மேற் கொண்டனர். இதோடு, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 71-ஆவது பிரிவின்கீழ் திரு. வி. எஸ். டி. முதலியாருக்கும் ஏனேயோருக்கும் எதிராக 1·17 கோடி ரூபாய் அவர்களிட மிருந்து வசூல் செய்வதற்கான நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளது என்று எதிர்மனு தாரர் திரு. மு. கருணுநிதி மேலும் கூறியுள்ளார். இக் கருத்துரைகளேக் கூறி, திரு. வி. எஸ். டி. முதலியாரைப் பாதுகாக்கத் தான் முயன்றதாகக் கூறும் குற்றச்சாட்டு பொய்யானதாகும் என்று அவர் கூறியுள்ளார்.

திரு. சி. பா. ஆதித்தனுர் தனது எதிர் உறுதிமொழிப் பத்திரத்தில் ஏனேயவற்றோடு பின்வருமாறும் தெரிவித்துள்ளார் :—

தலேயிடப்பட்டதாகக் கூறும் குற்றச்சாட்டு பொய்யானதாகும்.

மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பது தடுக்கப்பட்டது என்னும் குற்றச்சாட்டில் உண்மை ஏதும் இல்லே. திரு. இராயப்பாவே தனது கூற்றை மாற்றிக் கொள்ள வேண்டி யிருந்தது. திரு. வி. எஸ். டி. முதலியாரைப் பாதுகாக்க இராயப்பாவிடம் பேசுமாறு திரு. கருணுநிதி திரு. சி. பா. ஆதித்தனுரை ஒரு போதும் கேட்டதில்லே. அதுபோன்ற

சாரியத்திற்காகத் திரு. சி. பா. ஆதித்தனர் ஒரு போதும் திரு. இராயப்பாவிடம் பேசியதும் இல்லை.

தொகை வசூலிப்பதற்கான நடவடிக்கை இறுதியாக 5-4-1973-ல் கூட்டறவுச் சங்கங்களின் பதிவாளரால் முடிவு செய்யப்பட்டது. இது குறித்து திரு. வி. எஸ். டி. முதலியாருக்கு 19-4-1973-ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது.

அமைச்சர்களின் துறைகள் 1973 ஜூனில் மாற்றியமைக்கப்பட்டன. அப்போது திரு. சி. பா. ஆதித்தனர் கூட்டுறவுத் துறையிலிருந்து மாற்றப்பட்டார். அதிலிருந்து இது குறித்து அவருக்கு ஏதுவும் தெரியாது.

மனுதாரர்கள் அளித்த மகஜர்களில் கொடுக்கப் பட்டுள்ள குற்றச் சாட்டுகளைத் திரு. வி. எஸ். டி. முதலியார் 24-7-1976 ஆம் நாளிட்ட தனது எதிர் உறுதிமொழிப் பத்திரத்தில் அழுத்தந்திருத்தமாக மறுத்துள்ளார். தான் திரு. மு. கருணாநிதியின் நெருங்கிய நண்பர் என்பதை மறுத்துள்ளார். திரு. மு. கருணாநிதி தனக்கு ஆதரவாக ஒருபோதும் நடந்ததில்லை என்பதற்குப் பல சான்றுகளை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். பொதுமக்கள் பணத்தை இரண்டு கோடி ரூபாய் அளவிற்குச் கையாடல் செய்துள்ளதாகக் கூறப்படும் குற்றச் சாட்டு ''பொய்யானதும் காழ்ப்பின்பேரில் கூறப்பட்டதும் ஆகும்'' என்று அவர் கூறியுள்ளார். தேவை ஏற்படும்போது அவரது உறுதிமொழிப் பத்திரத்திலிருந்து மேலும் எடுத்துக் காட்டப்படும். எனவே, அவரது உறுதிமொழிப் பத்திரத்திலுள்ள முக்கியமான எல்லாவற்றையும் இவ்விடத்தில், எடுத்துக் கூறுவது உசிதமல்ல.

கமிஷனால் பயன்படுத்தப்படும் புலனுய்வு அதிகாரிகளிடம் 1952ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் 5A பிரிவின்கீழ் இக் குற்றச் சாட்டையும் ஒப்படைத்தேன். முழுமையாகப் புலனுய்வு செய்து முடித்த பிறகு, புலனுய்வுக் குழுவின் தலைவர்—காவல்துறை துப்பிரண்டு திரு. கணேசன், புலனுய்வு அறிக்கையைத் தாக்கல் செய்தார். புலனுய்வின்போது விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் அனைவரும் அளித்த வாக்குமூலங்கள் இந்தப் புலனுய்வு அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய ஆவணச் சாட்சியங்கள், புலனுய்வு அதிகாரிகளால் அலுவலக ஆவணங்களிலிருந்து எடுக்கப் பட்ட சுருக்கக் குறிப்புகள் ஆகிய அனைத்தின் பட்டியல் ஒன்று அதில் கொடுக்கப்பட்டுள்ளது. புலனுய்வு அறிக்கை தாக்கல் செய்யப் பட்டது எதிர்மனுதாரர்களுக்குத் தெரிவிக்கப் பட்டது. புலனுய்வு அறிக்கையில் கூறப்பட் டுள்ளவற்றிற்கு மறுமொழியாக ஏதேனும் கூற விழைந்தால் அவர்களது மறுமொழியையும், அதில் சொல்லப்பட்டுள்ளவற்றிற்கு எதிரான சாட்சியத்தையும் தாக்கல் செய்ய அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. திரு. மு. கருணாநிதியும், திரு. மாதவனும் அந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ளவில்லை என்பதோடு, இப் புலனுய்வு அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளவை குறித்து அவர்களது கருத்துரைகளைத் தெரிவிக்க வும் இல்லை. புலனுய்வு அறிக்கை சம்பந்தமான கருத்துரைகள் எவையும் கொண்ட துணை உறுதி மொழிப் பத்திரத்தையோ வாக்குமூலத்தையோ திரு. சி. பா. ஆதித்தனரும் தாக்கல் செய்யவில்லை.

இருப்பினும், திரு. வி. எஸ். டி. முதலியார் பெரியதொரு உறுதிமொழிப் பத்திரத்தை 29-1-1977-ல் தாக்கல் செய்துள்ளார். அவருக்கு எதிராகப் புலனுய்வு அறிக்கையில் கொடுக்கப் பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அல்லது மறைமுக மாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தை யும் ஒவ்வொன்றாக மறுத்துக் கூறியுள்ளார்.

மேற்சொன்ன சட்டத்தின் 5A பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட புலனுய்வு அதிகாரிகளால் சேகரிக்கப்பட்ட தலவல்கள் பின்வருமாறு :

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு லிமிடெட், திருவாரூர், ஒரு கூட்டுறவுச் சங்கமாக, தமிழ்நாடு 1932 ஆம் ஆண்டு 6-வது சட்டத்தின்கீழ் 29-1-1941-ல் பதிவு செய்யப்பட்டது. கூட்டுறவு மூலம் விற்பனை செய்தல், பதப்படுத்துதல், பணிவசதிகளை அளித்தல் ஆகியவை இக் கூட்டமைப்பின் முக்கிய அலுவல்கள் ஆகும். திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் தலைவராக 1943-லிருந்து 1972வரையில் இருந்து வந்துள்ளார். 1965வரையில், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு, அரசின் இருப்புதாரர்களாக இருந்து இச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள உழவர்களுக்கு இரசாயன உரங்களை வழங்கும் கூட்டுறவு விற்பனை நிறுவனமாகப் பணிபுரித் துள்ளது. தமிழ்நாட்டில் 1964-65-ல் நிலவிய உணவுப் பற்றாக்குறை இக் கூட்டமைப்பிற்கு புதியதொரு பணியை அளித்தது. 1965-ல் நவீன அரிசி ஆலை ஒன்று, மத்திய, மாநில அரசுகளின் வேண்டுகோளின் பேரில் கட்டப் பட்டது. தமிழ்நாடு அரசின் கட்டுப்பாடு—மேற்பார்வையின்கீழ், பெருமளவில் நெல்லைக் கொள்முதல் செய்யும் திட்டத்தில், 1967-லிருந்து சடுபடுமாறு இக் கூட்டமைப்பிற்குக் கட்டளையிடப் பட்டது.

இக் கூட்டமைப்பிற்கான கணக்குகள் உரிய முறையில் வைத்து வரப்படவில்லை என்று தணிக்கையாளர்களால் 1965, 1966, 1967 ஆம் ஆண்டுகளுக்குரிய தணிக்கை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கூட்டமைப்பின் கணக்குகளைத் தணிக்கை செய்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைத் தணிக்கை அதிகாரிக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. P. B. கிருஷ்ண

சுவாமி 1970 பிப்ரவரியில் கட்டளையிட்டார்.. கொள்முதல் செய்யும் காரியங்களுக்காக இருந்த ரொக்கக் கடன் கணக்கிலிருந்து தொகையை வேறு காரியத்திற்காகக் கொடுத்தது, இருவாளர்கள் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு (இவ்வாலைக்கு திரு. வி. எஸ். டி. முதலியார் தலைவராவார்) கடன் அடிப்படையில் உரங்களை விற்பனை செய்தது, கணக்குகள் தாறுமாறாக இருந்தமை ஆகியவை உட்பட பல்வேறு முறைகேடுகள் 16—3—1970 ஆம் நாளிட்ட தலைமைத் தணிக்கை அதிகாரியின் அறிக்கையிலிருந்து தெரிய வருகின்றன. (புலனுய்வு அறிக்கையின் II-வது தொகுதியில் 1 முதல் 60வரையிலுள்ள பக்கங்களைக் காண்க.)

பதிவாளர் திரு. P. B. கிருஷ்ணசுவாமி தஞ்சாவூரிலுள்ள இக் கூட்டமைப்பின் அலுவலகத்திற்கு 13—5—1970-ல் நேரடியாகச் சென்று பார்வையிட்டு, தாம் செய்த ஆய்வு குறித்த விவரத்தை 30—5—1970-ல் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார். அதன் நகல் ஒன்றைக் கூட்டுறவுத் துறை அரசுச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளார். (அறிக்கையின் II-வது தொகுதியின் 61 முதல் 88 வரையிலுள்ள பக்கங்களைக் காண்க). பல்வேறு முறைகேடுகள், தவருன நிர்வாகம், நடைமுறைகள்—கொள்கைகளை வகுத்துத் திட்டமிடுவதில் கவனக்குறைவு, துறைக்கு விரிவான கணக்குகளை அளிக்கத் தவறியது முதலிய பல்வேறு முறைகேடுகள் குறித்து அந்த ஆய்வு அறிக்கையிலும் சொல்லப்பட்டுள்ளது. நில வரிவசூலிப்புச் சட்டத்தின் விதித்துறைகளைக் கொண்டு, அரசுக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்வது குறித்துக் கருதிப் பார்க்கலாம் என்று திரு. கிருஷ்ண சுவாமி குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டமைப்பிற்கு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா 3.50 கோடி ரூபாய் வரையில் ரொக்கக் கடன் வசதி வழங்கியது. இதற்குத் தமிழ்நாடு அரசு உத்தரவாதம் அளித்தது. நெல், அரிசி, சாக்குப்பைகள் முதலியவற்றை அடைமானம் வைத்துக் கொடுக்கப்பட்ட பிணையத்தின் பேரில் இந்த அளவுக்கு ரொக்கக் கடன் வசதி அளிக்கப்பட்டது. இக் கடன் தொகை நெல் கொள்முதல் காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தக் கருதப்பட்டதாகும். அடைமானம் வைக்கப்பட்ட இருப்புப் பொருள்கள் மீது பெறப்பட்ட ரொக்கக் கடன் வரையறையை விஞ்சிவிட்டது, நெல் கொள்முதல் செய்யும் காரியத்திற்காக வழங்கப்பட்ட கடன் தொகை அதற்குப் பயன்படுத்தாமல் ஏனைய காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது ஆகியவை தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் கவனத்திற்கு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா 13—8—1968-லிருந்து பல கடிதங்கள் மூலம் தெரிவித்துள்ளது. இந்தக் கடிதங்களின் மீது தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு நடவடிக்கை ஏதும் எடுக்காத போது, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, 30—9—1970 ஆம் நாளிட்ட தனது கடிதத்தின் மூலம் இந்த முறைகேடுகள் குறித்து மாநில அரசின் கவனத்தை ஈர்த்தது. (புலனுய்வு அறிக்கையின் II-வது தொகுதியின் 104-வது பக்கத்தைக் காண்க) இருப்பு குறைந்ததற்கான காரணத்தைக் கூறுமாறும், குறைவைச் சரிக்கட்டக் கணக்கில் போதிய தொகையைச் செலுத்துமாறும் தாங்கள் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்கு எழுதிக் கேட்டதாகவும், அதற்குப் பதில் ஏதும் அளிக்கப்படவில்லை என்றும் இந்தக் கடிதத்தில் வங்கி சுட்டிக் காட்டியிருந்தது. வங்கி அளித்த முன் பணங்களைத் திருப்பிச் செலுத்த தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்போடு உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்படவில்லையென்றும், அரசின் உத்தரவாதத்தைச் செயல்படுத்துமாறு கேட்பதைத் தவிர வேறு வழியேதும் தங்களுக்கு இல்லையென்றும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மாநில அரசுக்குத் தெளிவுபடுத்தியது.

தமிழ்நாடு மாநிலச் கூட்டுறவு வங்கிச் செயலாளர் திரு. D. வர்த்தமானன் 21—7—1970 தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு அலுவலகத்திற்குச் சென்று அதன் கணக்குகளை ஆய்வு செய்தார். கணக்குகள் மிகவும் மோசமான நிலையில் இருந்ததை 24—7—1970 ஆம் நாளிட்ட வர்த்தமானனின் அறிக்கையும் காட்டியது. (அறிக்கையின் II-வது தொகுதியில் 111 முதல் 120 வரையுள்ள பக்கங்களைக் காண்க). முன்னர் மறுப்புகள் தெரிவிக்கப் பட்டிருந்தபோதிலும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு சிறப்பு வீதங்களில் இரசாயன உரங்களை திரு ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு வழங்கியது மூலம் கடன் வசதியைத் தொடர்ந்து அளித்து வந்தது என்பதை இவர் குறிப்பாகவும் சிறப்பாகவும் சுட்டிக் காட்டியிருந்தார். இந்தக் கணக்கில் திரு ஆரூரான் சர்க்கரை ஆலை தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்கு 15.66 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியிருந்தது. பயிர்ப் பருவமல்லாத போது இரசாயன உரங்களை வாங்கியது, இருப்பு குறைந்தது, ரொக்கக் கடன் கணக்கைத் தவருகப் பயன்படுத்தியது, தலைமை அலுவலகத்தின் ரொக்க இருப்பில் 15,155.97 ரூபாய் குறைந்தது முதலியவை ஐயத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் பலவற்றில் உள்ள ஏனைய பலமுறைகேடுகள் வர்த்தமானன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வர்த்தமானன் அறிக்கை கிடைக்கப்பெற்ற வுடன், கூட்டுறவுத் துறையின் அப்போதைய செயலாளர் திரு. ஆர். பசுபதி, இதனைக்

கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனாரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். வர்த்தமானன் அறிக்கை குறித்து, சேப்பாக்கம், அரசு விருந்தினர் இல்லத்தில் உயர் நிலைக் கூட்டத்தில் 25-7-1970-ல் விவாதிக்கப்பட்டது. இக் கூட்டத்திற்கு முன்னுள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி, கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. ஆதித்தனார், தலைமைச் செயலாளர் திரு. இராயப்பர், கூட்டுறவுத் துறைச் செயலாளர் திரு. பசுபதி, கூட்டுறவுச் சங்கங்களின் தற்காலிக பதிவாளர் திரு. கேசவ் கினி, வர்த்தமானன் ஆகியோர் வந்திருந்தனர். தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் அலுவல்களில் உள்ள இந்த முறைகேடுகளுக்குத் திரு. வி. எஸ். டி. முதலியார் எந்த அளவுக்குப் பொறுப்பாவார் என்பதைத் தெரிவிக்குமாறு இக் கூட்டத்தில் திரு. மு. கருணாநிதி வர்த்தமானனைக் கேட்டார். அந்த நேரத்தில் திரு. வி. எஸ். டி. முதலியார் பாரிசில் இருந்தார். திரு. பசுபதியின் கூற்றுக்கிணங்க, திரு. மு. கருணாநிதி பின்வருமாறு சொன்னார்:—

> ''திரு. வி. எஸ். டி. முதலியாருக்கு எதிராக இங்கு நாம் முடிவெடுக்கும்போது, அவர் பாரிசில் உள்ளார்.''

இக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள் ஏதும் இல்லை. ஆனால், தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65-வது பிரிவின்கீழ் விசாரணை ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று, இக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது என்று இரு பசுபதியும் திரு. கேசவ்கினியும் கூறியுள்ளனர்.

அதன்பிறகு, திரு. கேசவ்கினி 27-7-1970 ஆம் நாளிட்ட கடிதம் ஒன்றை அரசுக்கு அனுப்பி வைத்தார். (அறிக்கையின் 11-வது தொகுதியைச் சேர்ந்த 91 முதல் 96 வரையுள்ள பக்கங்களைக் காண்க). தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு செயல்படுவதில் உள்ள பெருத்த முறைகேடுகள் குறித்து அக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டதோடு, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் விசாரணை ஒன்றை நடத்த மாநில வர்த்தகத் திட்டங்களின் தலைமைத் தணிக்கையாளர் திரு. அஜிமுதீனுக்கு அதிகாரம் அளிக்கலாமென்றும் அவர் தனது அறிக்கையை இரண்டு மாதங்களுக்குள் தாக்கல் செய்யவேண்டுமென்றும் கோரப்படலாம் என்றும் கருத்து தெரிவித்திருந்தார். திரு. அஜிமுதீன் கூட்டுறவுத் துறையின் அதிகாரியாயிலேயே; ஆதலால், உடனடியாக ஆணைகள் பிறப்பிக்கப்படுவதற்காக இதனைத் திரு. கேசவ்கினி அரசுக்கு அனுப்பி வைத்தார்.

கினியின் கடிதம் வரப்பெற்றதன் பேரில், திரு. பசுபதி இவ் விசாரணையை நடத்த திரு. அஜிமுதீனுக்கு அனுமதி அளிக்கவும் அவருக்குத் துணையாக வேண்டிய பணியாளர்களை அளிப்பதற்குமான பதிவாளரின் செயற் குறிப்பை ஏற்றுக் கொள்வதற்குப் பரிவுரை செய்து சுற்றுரேட்டைக் குறிப்பு ஒன்றை அதற்கடுத்த நாளன்று அதாவது 28—7—70-ல் அனுப்பி வைத்தார். இக் குறிப்பில் நிதித் துறைச் செயலாளரும், சட்டத் துறைச் செயலாளரும், தலைமைச் செயலாளரும் அதனை ஒப்புக் கொண்ட வகையில் கையொப்பம் இட்டுள்ளனர். தலைமைச் செயலாளர் இக் கோப்பை 29-7-70-ல் கூட்டுறவுத் துறை அமைச்சருக்கும், தொழில் அமைச்சருக்கும் முதல் அமைச்சருக்கும் அனுப்பி வைத்தார்.

இந் நிலையில் இக் கோப்பில் ஏதோ குறுக்கீடு நிகழ்ந்துள்ளது என்று புலனுய்வு அறிக்கை கூறுகின்றது. திரு. வி. எஸ். டி. முதலியார் பாரிசிலிருந்து திரும்பி வந்தவுடன் முதலமைச்சரைச் சந்தித்ததன் விளைவாக இவ்வாறு நடைபெற்றுள்ளது என்று திரு. சேசவ்கினியின் கூற்று உள்ளது. கூட்டுறவுத்துறை அமைச்சர் 29—7—70-ல் அக் கோப்பில் ''விவாதிக்கப்பட வேண்டியுள்ளது'' என்ற எழுதியுள்ளதோடு ''M.I.'' ''C.M.''என்ற எழுத்துகளை அடித்து விட்டார். இருப்பினும், அடுத்த பக்கத்தில் 25—8—70-ம் நாளிட்ட பிறிதொரு குறிப்பு ஒன்றைக் கூட்டுறவுத் துறை அமைச்சர் எழுதியுள்ளார். அக் குறிப்பு பின் வருமாறு :—

> ''செயலாளருடன் விவாதிக்கப்பட்டது. விசாரணை ஒன்றை நடத்துவதற்காக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் அதிகாரம் அளிக்கப்பட்டு பிறிதொரு துறையின் தலைவரை நியமிப்பது அவையம் இல்லை என்று கருதப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தனது நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அதிகாரிகளின் துணையைக் கொண்டு தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அவருக்கு ஆலோசனை நல்கப்படலாம். இதனை உடனடியாகச் செய்யலாம். அடுத்த பிறப்பிக்கப்பட்ட பிறகு, இக் கோப்பு முதலமைச்சருக்குச் சுற்றுரேட்ட முறையில் அனுப்பப்படலாம்.''

(ஒ-ம்) சி. பா. ஆதித்தனார்,
25—8—1970.

அதன்கீழ் ''C. M.'' என்று கட்டச்சு செய்யப்பட்டிருந்த எழுத்துக்களுக்கு எதிராக ''I. j''என்று அமைச்சர் தானே எழுதியுள்ளார். ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகு இக் கோப்பு முதலமைச்சருக்கு அனுப்பப்படலாம் என்று அதன் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார். இருப்பினும், அமைச்சரின் 29-7-70-ஆம் நாளிட்ட மேலொப்பத்திற்கு மேலே முதலமைச்சரின் 17—8—70 நாள் முத்திரை உள்ளது. இக் கோப்பு 17—8—70 ஆம் நாளன்றே முதலமைச்சர் அலு

வலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது இதன் மூலம் தெரிகிறது. அமைச்சரின் 25—8—70-ம் நாளிட்ட குறிப்பு, ஒரு துண்டுக் காகிதத்தில் தட்டச்சு செய்யப்பட்டு 21—8—70ஆம் நாளிட்ட பிறிதொரு குறிப்பின்மீது ஒட்டப்பட்டுள்ளது. அவ்வாறு அடிக்கப்பட்டது என்ன என்று அறிவதற்காக அதனைப் படம் பிடித்து புற செவ்புக் கதிர் ஒளி வீசிப் பார்த்ததில் தெரிய வருவது யாதெனில், ''இது குறித்து நான் முதலமைச்சருடன் கலந்து பேசினேன்'' (அறிக்கையின் II-வது தொகுதியைச் சேர்ந்த 130-A பக்கத்தில் உள்ள சட்டம் சார்ந்த குற்ற அறிவியல் ஆய்வகம் அனுப்பிய நிழற்படத்தைக் காண்க). கூட்டுறவுத்துறை அமைச்சர் இக் குறிப்புக்கு 29-7-70-ல் ஒப்புதல் அளித்துள்ளார். அதன் பிறகு இக் கோப்பு முதலமைச்சருக்கு 17-8-70-ல் சென்றுள்ளது. முதலமைச்சரும் கூட்டுறவுத்துறை அமைச்சரும் இது குறித்துக் கலந்து பேசியிருக்கக்கூடும்: அதன் விளைவாக, 21—8—70ஆம் நாளிட்ட மூலக் குறிப்பை அமைச்சர் எழுதியிருக்கலாம். முதலமைச்சரோடு கலந்து பேசியது பற்றிய குறிப்பை மறைப்பதற்காகப் பின்னர் 21—8—70ஆம் நாளிட்ட குறிப்பில் உள்ள முதல் வாக்கியம் அடிக்கப்பட்டு, ''இது குறித்து நான் முதலமைச்சருடன் கலந்து பேசினேன்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''செயலாளருடன் விவாதிக்கப்பட்டது'' எனும் சொற்றொடரை அமைத்துக் கொண்டு அந்தக் குறிப்பு பின்னர் தண்டுக் காகிதம் ஒன்றில் மீண்டும் தட்டச்சு செய்யப்பட்டது என்பது தெரிய வருகிறது.

அப்போதிருந்த செயலாளர் திரு. பசுபதி, தமிழ் நாடு 1961ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் திரு. அழிமுதீன் விசாரணை ஒன்றை நடத்துவது என்ற எடுக்கப்பட்ட முடிவை மறு பரிசீலனை செய்வது பற்றி அமைச்சருடன் தான் பேசவேயில்லையென்று அவர் திட்ட வட்டமாக மறுத்துள்ளார்.

21—8—70 ஆம் நாளிட்ட அந்த குறிப்பு கூட்டுறவுத் துறை அமைச்சர் முதலமைச்சருடன் கலந்து பேசிய பிறகுதான் தட்டச்சு செய்யப்பட்டது என்று அமைச்சரின் அரசுத் பதிவு பெற்ற நேர்முக உதவியாளரின் திரு. எஸ். நடராசன் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுத் துறை அமைச்சரின் 25-8-1970ஆம் நாளிட்ட ஆணைகளுடன் கூடிய இக் கோப்பு வரப் பெற்றதன் பேரில், செயலாளர் திரு. பசுபதி அரசின் ஆணைகளைத் தெரிவித்து கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு நேர்முகக் கடிதம் ஒன்றை எழுதினார். இது குறித்து விசாரணை நடந்த பிறிதொரு துறைத் தலைவரை நியமிப்பது அவசியமில்லை என்றும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தனது நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள அதிகாரிகளின் உதவியோடு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்றும் அக் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது. இக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதற்கு மாறாக, 65-வது பிரிவின்கீழ் விசாரணை நடத்த வேண்டாமென்றும், 64-வது பிரிவின்கீழ் தணிக்கை செய்தாலே போதுமென்றும் முதலமைச்சர் கருதுவதாகச் செயலாளர் பசுபதி வாய்மொழியாகச் சொன்னார் என்று திரு. கிவி கூறியுள்ளார். தான் கூட்டுறவு அமைச்சருடன் தொடர்பு கொண்டதாகவும், மேற்சொன்ன சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் விசாரணை நடத்த வேண்டாம் என்பது முதலமைச்சரின் முடிவாகும் என்றும் அவர் உறுதியாகக் கூறியதாக, திரு. கிவி மேலும் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் கணக்குகளையும் ஆவணங்களையும் சிறப்புத் தணிக்கைப் பிரிவின் உதவியோடு தணிக்கை செய்யுமாறு, கூட்டுறவுத் தணிக்கை அதிகாரி திரு. கே. வைத்தியநாதனுக்கு 25—8—1970-ல் திரு. கிவி கட்டளையிட்டார். இச் சட்டத்தின் 65-வது பிரிவின்படிக்கான அதிகாரம் தனக்கு அளிக்கப்பட்டவேண்டிய அவசியம் என்று கூட்டுறவுத் தணிக்கை அதிகாரி கருதினால், அவர் அரசை அணுக வேண்டும் என்று, திரு. கிவி, செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார். பதிவாளரின் இக் கருத்துரை வரன்முறை மீறியது என்று அரசுச் செயலாளர் கருத்து தெரிவித்திருந்தார். தென் ஏற்காடு மாவட்ட வழக்காளி மாக இக் கருத்துரைக்குக் கீழே கூட்டுறவுத் துறை அமைச்சர் கையொப்பம் இட்டிருந்தார். மேற்சொன்ன சட்டத்தின் 64-வது பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்குமாறு தான் கிவியிடம் கூறவில்லை என்று செயலாளர் பசுபதி செப்பியுள்ளார். தனது அமைச்சரின் கட்டளைகளின்படி 64-வது பிரிவின்கீழ் பதிவாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று அமைச்சர் தன்னிடம் கூறியதாகச் செயலாளர் பசுபதி மேலும் தெரிவித்தார்.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் 1—10—70ம் நாளிட்ட கடிதம், நிதித் துறைச் செயலாளரால் தலைமைச் செயலாளருக்கும் கூட்டுறவுத் துறை அமைச்சருக்கும் முதலமைச்சருக்கும் 6—10—70-ல் அனுப்பிவைக்கப்பட்டது. 7—10—70-ல் தலைமைச் செயலாளர் பின் வருமாறு குறிப்பிட்டிருந்தார்:—

''அரசின் நலனைப் பாதுகாக்கப் பயனுறுதியான நடவடிக்கை எடுப்பதை இனியும் காலம் தாழ்த்தாது உடனடியாக எடுக்க வேண்டும்.. மேற் கொண்டும் தாமதம் செய்தால், அது அரசுக்கு இடர்பாட்டையும் இக்கட்டான சூழ்நிலையையும் ஏற்படுத்தும்''.

இதற்குக் கீழே கூட்டுறவுத் துறை அமைச்சர் 7—10—70-ல் கையொப்பம் இட்டுள்ளார். 8—10—70-ல் முதலமைச்சர் பின்வருமாறு எழுதியுள்ளார். ''கூட்டுறவுத் துறை அமைச்சர் உடனடியாக நேரில் பேசலாம்.'' தான் ''முதலமைச்சருடன் இது குறித்துப் பேசியதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் 26-100-70-ல் மேற்குறிப்பு

எழுதியுள்ளார். நிலுவையாக உள்ள முன் பணத்தை உடனடியாகச் செலுத்துமாறு வற்புறுத்த வேண்டாமென்று ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவைக் கேட்டுக் கொள்ளும் வகையில் பதில் ஒன்றை அனுப்பலாம் என்று கருத்து தெரிவித்து, சுற்றுரேட்டைக் குறிப்பு ஒன்றை 23—11—70-ல் கூட்டுறவுத் துறைச் செயலாளர் அனுப்பிவைத்தார். இக் குறிப்பின்மீது திரு. இராயப்பா 10—12—70-ல் பின்வருமாறு எழுதியிருந்தார்.

''அரசு, துறை நலனையும் மதிப்பையும் பாதுகாக்கவும் பொதுமக்கள் பணத்தைப் பேணிப் பாதுகாக்கவும் தணிக்கையை உடனடியாக முடிக்க மும்முர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எப்படியும் இத் தணிக்கை 1970 டிசம்பர் இறுதிக்குள் முடிவடைந்து விட வேண்டும். தவறு செய்தோருக்கு எதிராகக் குற்றவியல் நடவடிக்கை எடுப்பதற்காக இவ் வழக்கைக் காவல் துறையினரிடம் ஒப்படைக்கவேண்டும்.''

இதற்குக் கூட்டுறவுத்துறை அமைச்சர் 10—12—1970-லும் முதலமைச்சர் 28—1—1971-லும் ஒப்புதல் அளித்தனர்.

பதிவாளர் ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ள படி 64-வது பிரிவின்கீழ் செய்யப்படும் தணிக்கைப் பணியின் முன்னேற்றம் குறித்துக் கூட்டுறவுத் துறைச் செயலாளர் அவ்வப்போது ஆய்வு செய்து வந்தார். இந்த ஆய்வுகள் நிலவற்றின்போது வி.எஸ்.டி. முதலியாரும் உடன் இருந்தார். நிதித் துறைச் செயலாளர் திரு.வேங்கடரமணனும் விவாதத்தில் கலந்து கொண்டார். தான் முதலமைச்சரோடு பேசியபோது, திரு. வி.எஸ்.டி. முதலியார் மாற்று அரசியல் கட்சியைச் சேர்ந்த பெரும்புள்ளி யாவார் என்றும் தணிக்கை முழுவதும் நடைபெற்று முடிந்து வி.எஸ்.டி. முதலியார் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்வதற்காக அவருக்கு முழு வாய்ப்பளிக்கிற வரை அவருக்கெதிராக நேரடியாக வழக்கு தொடரத் தான் விரும்பவில்லை என்றும் முதலமைச்சர் தெரிவித்ததாக அவரது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

தணிக்கை அறிக்கை இறுதியாக 19—1—1971-லும் 11—3—1971-லும் இரு பகுதிகளாக வரப் பெற்றது. இந்த அறிக்கையிலிருந்து தெரியவந்த முக்கியமான விஷயங்கள் வருமாறு :—

(a) மொத்தம் 156·57 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

(b) தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு, தங்களுக்கு அனுமதிக்கத்தக்க ரொக்கக் கடன் அளவுக்கு அதிகமாக ரொக்கக் கடனைப் பெறுவதற்காக உண்மையில் உள்ள இருப்பின் நிலையை மறைத்து ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிற்குப் பொய்யான விவரக் கணக்குகளைக் கொடுத்தது. ரொக்கக் கடனுக்காக அடைமானம் வைக்கப்பட்ட இருப்பை 30—6—1970-ல் சரிபார்த்தபோது, பெற்ற கடன் 336·59 இலட்சம் ரூபாயாக இருக்க, பொருள் இருப்பின் மதிப்பு 160·00 இலட்சம் ரூபாய்தான் என்று தெரியவந்தது. இவ்வாறாக, 176·59 இலட்சம் ரூபாய் குறைந்துள்ளது.

(c) வங்கியோடு கொண்டுள்ள இந்த ரொக்கக் கடன் கணக்கில் 10·25 இலட்சம் ரூபாய்க்கு, தவிட்டு எண்ணெய் எடுப்பதற்கான தொழிற் சாலைக்கு வழங்கி நிறுவப்பட்ட இயந்திரங்களின் (இதற்கான ஒப்பந்தப்புள்ளி ஒன்று திருவாளர்கள் டெஸ்மெண்ட் இந்தியா லிமிடெட்டிடம் கொடுக் கப்பட்டுள்ளது.) உரிமை குறித்துக் கொள்ளுமாறு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிற்குத் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு அதிகாரம் அளித் துள்ளது அரசின் தேவையான. ஒப்புதலேப் பெறாமல் இந்த ரொக்கக் கடன் கணக்கின் மீது உரிமை குறித்துக் கொள்ளுமாறு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிற்குத் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு குழு அதிகாரம் அளித்தது முற்றிலும் முறைகேடானதாகும்.

(d) வகைதொகை இன்றிப் புதிய கோணிப் பைகளே இக் கூட்டமைப்பு வாங்கியதால் இதற்கு 88,525 ரூபாய் இழப்பு ஏற்பட்டது. கொள்முதல் செய்யப்பட்ட நெல்லும் தரக்குறைவானதாகும். கொள்முதல் செய்யும் பணிக்காக பல இலட்சம் ரூபாய் முன்பணமாக திரு ஆரூரான் சர்க்கரை ஆலைக்கும், பல்வேறு முகவரமைப்புகளுக்கும், அங்காடிச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டது.

(e) மூலதனச் செலவு, உரங்கள் முதலியவை குறித்து 62·86 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி மாற்றிச் செலவிடப்பட்டுள்ளது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு, நெல் கொள்முதலுக்கான தனது நிதியை உரங்கள் வியாபாரம் செய்வதற்குப் பயன்படுத்தியுள்ளது. 42·98 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உரங்கள் திரு ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ஈடாக இந்த நிறுவனத்திடமிருந்து 21·42 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நெல்தான் கொள்முதல் செய்யப்பட்டது.

(f) பணியாளர் செலவு மிகவும் அதிகரித் துள்ளது. பயணப்படி வழங்குவது, பூச்சிகொல்லி மருந்துகள் வாங்குவது, ஏனைய பல்வகை நடவடிக் கைகள் ஆகியவற்றில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளன.

தணிக்கை அறிக்கை வரப்பெற்றதன் பேரில், அப்போதைய கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் திரு. கே.ஜே.எம். ஷெட்டி கூட்டுறவுத் துறைச் செயலாளருக்குத் தமது ஆய்வு அறிக்கையை 23—3—1971 அன்று அனுப்பினார். நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும் மிகக் கண்டிப்பான முறையில் பரிகார நடவடிக்கைகளே மேற்கொள்ளவேண்டியது அவசியம் எனவும் பதிவாளர் அதில் கூறியிருந்தார். துறை(அரசு)அதிகாரிகள் தமது பணிகளைச் செய்யத் தவறியமைக்காக ஒழுங்கு நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார். தஞ்சாவூர்

கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்கு (TCMF) ஏற்பட்ட விரயத்திற்குக் குழு எந்த அளவுக்குப் பொறுப்புடையதாய் ஆக்கப்படக்கூடும் என்பதைச் சட்டத் துறையுடன் கலந்தாலோசிக்கலா மெனவும் அவர் கருத்து தெரிவித்தார்.

பதிவாளரது ஆய்வறிக்கையும், தணிக்கை அறிக்கையும் வரப்பெற்றதன் பேரில், செயலாளர் (கூட்டுறவு), குழுவைக் கலைத்து விடவும், இழப்புத் தொகையை வசூலிப்பதற்குச் சட்டத்தின் 71-வது பிரிவின்கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், கூட்டுறவுத் துறையில் துணைப் பதிவாளர் என்ற நிலையான பதவித் தரத்தில் இருந்துவரும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புச் செயலாளராகப் பணிபுரிய முகமையில் அனுப்பப் பட்டவருமான திரு. ஜி. என். தாஸைத் தற்காலிக மாகப் பதவி நீக்கம் செய்யலாமெனவும் 31-3-71 நாளிட்ட தமது குறிப்பில் பரிவுரை செய்தார். இது குறித்து சட்டத்துறையுடன் கலந்தாலோசித்து 23-4-1971 அன்று அதன் கருத்து பெறப்பட்டது. இது, உணவுத் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர், முதலமைச்சர் ஆகியோருக்குச் சுற்றோட்டமுறையில் அனுப்பப்பட்டது. இது குறித்து கூட்டுறவுத் துறைச் செயலாளருடன் விவாதிக்க விரும்புவதாக நிதித் துறைச் செயலாளர் குறிப்பு எழுதினார். அதன்பின்னர், சில காலத்திற்கு இக் கோப்பு குறித்து நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இதற்கிடையில், கூட்டுறவு குறித்த பிரச்சினைகள் பற்றி விவாதிக்க 20-4-1971 அன்று முதலமைச்சர் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். இக் கூட்டத்திற்குத் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகமும் வந்திருந்தார். தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் விவகாரங்கள் விவாதத்திற்கு வந்தன. கூட்டமைப்பு மோசமான நிலையிலுள்ளதாகவும், அவியைமாயின், கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் விதித்துறைகளைப் பயன்படுத்தி நிலைமையைச் சீர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் கருத்து தெரிவித்தார். மோசமாய் உள்ள நிலையைச் சீர் செய்வதன் அவசரத் தன்மையைத் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்புத் தலைவர் வி. எஸ். டி. முதலியாருடன் கூட்டுறவு அமைச்சர் பேச வேண்டுமென்று முதலமைச்சர் விரும்பினார். வி.எஸ்.டி. முதலியார் இதற்குச் செவி மடுக்காவிடின், பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படலாமென்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

கூட்டுறவுத் துறை அமைச்சர், வி. எஸ். டி. முதலியாரைச் சந்தித்ததாக கோப்பில் எந்தக் குறிப்பும் இல்லை.

1971, ஜூலையிலிருந்து, இக் கோப்பில் நிர்வாகக் குழுவை மாற்றியமைப்பது, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு வழக்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும் பொருட்டு அதற்குக் கூடுதல் நிதி உதவி அளிப்பதற்கு வகை செய்வது ஆகியவை விவாதிக்கப்பட்ட முக்கிய மான பொருள்களாகும்.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்கு நிதியுதவி அளித்தல், குழுவில் பெரும் பான்மையினராக இருக்கும் வகையில் அரசு இயக்குநர்களை நியமித்தல், ஐ.ஏ.எஸ்.அதிகாரி ஒருவரை நிர்வாக இயக்குநராக நியமித்தல் ஆகிய வற்றை மேற்கொள்ளாலாமென கருத்து தெரிவித்து, கூட்டுறவுத் துறைக் கூடுதல் செயலாளர் திரு. வி. சங்கரன் சுற்றோட்டக் குறிப்பு ஒன்றை 18-8-1971-ல் அனுப்பினார். கூட்டுறவுத் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர் ஆகியோர் இந்தக் கோப்பினைப் பார்த்துள்ளனர். பெரும்பான்மையினர் அரசு இயக்குநர்களாக இருப்பதற்கான கருத்தைத் தலைமைச் செயலாளர் ஏற்கவில்லை என்பதைக் காணலாம். சாதாரணமாக, கூட்டுறவுத் துறை அமைச்சருக்குக் கோப்பு அனுப்பப்படுவதற்குப் பதிலாக, தலைமைச் செயலாளர் முதலமைச்சரைச் சந்தித்துப் பேசினார். அதன் விளைவாக, இவ்விஷயம் குறித்து வி.எஸ்.டி. முதலியாருடன் விவாதிக்க வேண்டுமென்று முதலமைச்சர் கட்டளையிட்டார்.

அதற்கிணங்க, 25-8-1971 அன்று கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அக் கூட்டத்திற்குக் கூட்டுறவுத் துறைச் செயலாளர், உணவுத் துறை செயலாளர், நிதித் துறைச் செயலாளர், வி.எஸ்.டி. முதலியார் ஆகியோர் வந்திருந்தனர். முன்னாள் தலைவர் திரு. வி. எஸ். டி. முதலியார் தொடர்ந்து தலைவராக இருப்பது நலமாய் இருக்குமென்றும், ஆனால், அதே சமயத்தில் நிர்வாக நடவடிக்கைகளின் பொறுப்பு முதநிலை ஐ.ஏ. எஸ். அதிகாரி ஒருவரிடம் இருக்க வேண்டும் என்றும் தலைமைச் செயலாளர் கருத்து தெரிவித்தார். 25-8-1971 நாளிட்ட இந்தக் குறிப்பை 11-9-1971 அன்று முதலமைச்சர் பார்த்தார். வழக்கமான நடைமுறைக்கு இது மாறானதாகும். கூட்டுறவுத் துறை அமைச்சர் மூலம் இது அனுப்பப்பட வில்லை. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்குத் தனிப்பட்ட நிதியுதவி அளிக்கப் படலாம் என்றும் தற்காலிகமாக வி.எஸ்.டி. முதலியார் தொடர்ந்து தலைவராக இருந்து வரலாம் என்றும் கடமையைச் செய்யத் தவறியதற்காக சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை மேற் கொள்ளப்படலாம் என்றும் முதலமைச்சர் கட்டளையிட்டார். எனினும், முதலமைச்சரின் இக் கட்டளைகள் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்குத் தெரிவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

குழுவை மாற்றியமைப்பது குறித்து கூட்டுறவுத் துறைக் கூடுதல் செயலாளரும் நிதித் துறைச் செயலாளரும் 16-10-1971 அன்று கூடிப் பேசினர். 17-10-1971 அன்று, நிதித் துறைச் செயலாளர், முதலமைச்சருடன் இது குறித்துப்

பேசினார். இது குறித்துத் தொழில் அமைச்சருடன் (திரு. மாதவன்) கலந்து பேசுமாறு முதலமைச்சர் நிதித்துறைச் செயலாளருக்குக் கட்டளை இட்டார். இதனைத் தொடர்ந்து ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. அந்தப் பேச்சுவார்த்தைகளில் தலைமைச் செயலாளர், கூட்டுறவு அமைச்சர், தொழில் அமைச்சர், முதலமைச்சர் உள்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். இறுதியாக, 20—1—1972 அன்று, முதலமைச்சர் பின்வரும் ஆணைகளைப் பிறப்பித்தார் :

''விவாதிக்கப்பட்டது. இயக்குநர் குழு ராஜினாமா செய்ததால், தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூட்டுறவுச் சங்கப் பதிவாளரைக் கேட்டுக்கொள்வது.''.

20—1—1972 அன்று, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக் குழுவைக் கலைத்து, அதன் நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு தனி அதிகாரி ஒருவரை நியமித்துப் பதிவாளர் ஆணைகள் பிறப்பித்தார்.

இணைப் பதிவாளர் ஜி. என். தாஸுக்கு (இக் காலத்தில் இவர் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புச் செயலாளராக இருந்தார்) எதிராக உள்ள குற்றச் சாட்டுகளைத் தொகுத்துக் கூறலாமெனக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பரிவுரை செய்தார். இவர் (தாஸ்) தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் நிறைமையற்ற நிர்வாகத்திற்கும், அதன் மோசமான நிலைமைக்கும் பொறுப்புடையவராவார். கூட்டுறவுத் துறைச் செயலாளர் 20—7—1970-ல் குறிப்பு ஒன்றைச் சுற்றோட்ட முறையில் அனுப்பி வைத்தார். அதில், ''செயலாளர் நேரில் பேசுக'' என்று 25—7—1970-ல் கூட்டுறவு அமைச்சர் எழுதி வைத்தார். 1970, ஜூலை மாதம் 27-ம் நாளன்று அமைச்சரும் செயலாளரும் இது பற்றிப் பேசியதில் செயலாளரின் குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக் கணக்குகள் குறித்துச் சிறப்புத் தணிக்கை நடந்து வருவதால், இந்நிலையில் அதிகாரிகள் மீது துறை நடவடிக்கை மேற்கொள்வது நடைமுறைகளுக்குப் பாதிக்கக்கூடும் என்றும், எனவே, தணிக்கைக் கருத்துகளுக்கு நிர்வாகம் அளிக்கும் பதிலைப் பொறுத்து ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றும் பதிவாளர் பதவிப்பொறுப்பிலுள்ள கேசவ்லினி 16—9—1970 அன்று செயலாளருக்குத் தெரிவித்தார். இக் கருத்தையே 20—11—1970 அன்று பதிவாளர் திரு. ஷெட்டியும் தெரிவித்தார். சிறப்புத் தணிக்கை முடிவடையும் வரையில் காத்திருக்க வேண்டியது அவசியமில்லையென்றும் எனவே, ஜி.என். தாஸுக்கெதிராக நேரடியாகவே குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யுமாறும் அரசு 4—12—1970 அன்று பதிவாளருக்குத் தெரிவித்தது. எனினும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக் கணக்குகள் குறித்த தணிக்கை முடிவடைந்ததாகவும், ஜி. என். தாஸுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், எனவே, அவரது விளக்கத்துடன் அவசியமான கோப்புகள் அரசுக்கு அனுப்பப்படும் என்றும் திரு. ஷெட்டி 10—4—1971-ல் தெரிவிக்கிற வரையில் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

திரு. ஷெட்டி பணி மாற்றம் செய்யப்பட்ட பின்னர், அவரது பதவிக்கு வந்த திரு. பெல்லியப்பா (பதிவாளர்) 8—8—1971 அன்று, தணிக்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட பல முறைகேடுகள், தவறுகளுக்குத் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு நிர்வாகமும் தலைமை நிர்வாக அதிகாரிகளும் எந்த அளவு பொறுப்புள்ளவர்களென நிர்ணயிப்பதில் சட்டப் பிரச்சினைகள் அடங்கியுள்ளன என்றும், அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் சட்டத் துறையுடன் கலந்தாலோசிப்பது நல்லதென்றும் அரசுக்கு எழுதினர். இக் கடிதம் குறித்து கூட்டுறவுத் துறை, குறிப்பு ஒன்று தயாரித்தது. ஜி.என். தாஸுக்கும் பிறருக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதை இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறவரை நிறுத்தி வைக்கலாமென பதிவாளருக்குத் தெரிவிக்கலாமென்று கூட்டுறவுத் துறைச் செயலாளர் அதில் ஆணைகள் பிறப்பித்தார்.

16—10—1971 அன்று கூட்டுறவு அமைச்சரின் அரசிதழ் பதிவுள்ள நேர்முக உதவியாளர் எஸ். நடராசன், ஜி.என். தாஸ் சம்பந்தப்பட்ட நடவடிக்கையை விரைவு படுத்த வேண்டுமென்று கூட்டுறவு அமைச்சர் விரும்புவதாக, வழக்கமான தூண்டுகாகிதம் ஒன்றில் குறிப்பு ஒன்றை அனுப்பினர். கடமைகளைச் செய்யத்தவறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படலாமென்று மற்றொரு கோப்பில் முதலமைச்சர் எழுதிய குறிப்பைக் கவனிக்குமாறு சுற்றோட்டக் குறிப்பு ஒன்றை 27—10—1971 அன்று செயலாளர் அனுப்பினர். இதில் கீழ்க்கண்டவாறு கூட்டுறவு அமைச்சர் குறிப்பு எழுதினர் :—

''இருப்பு குறித்த பொய்யான அறிக்கைகளில் கையொப்பமிட்டு அதன் மூலம் இவர் இந்திய ஸ்டேட் வங்கியில் கடன்பெற்றார் என்பது திரு. ஜி. என். தாஸ் மீதுள்ள வழக்காகும்.

''இதனால் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு பெரும் இழப்புக்குள்ளாகியது. இது ஒரு குற்ற வழக்காகும். இது இ. பி. கோ. வின்கீழ் வருகிறது. ஏனைய நடவடிக்கைகளுக்குப் பாதகமின்றி, உடனடி நடவடிக்கை

எடுப்பதற்காகவும் இது குறித்து வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவுக்கு அனுப்பப்படலாம்.''

(ஒப்பம்) சி.பா. ஆதித்தனர்,
30—10—1971.

பின்னர், இக் கோப்பு உள் துறைக்கும் சட்டத் துறைக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப் பட்டது. துறை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகையில், நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப் படுவதற்குத் தடையேதுமில்லை என்று சட்டத் துறை ஆலோசனை வழங்கியது. அமைச்சரது ஆணைகளுக்கிணங்க, புலனுய்வுக்காக இதனை 14—12—1971 அன்று பதிவாளர் வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவுக்கு (குற்றப் புலனுய்வு துறை) அனுப்பினர்.

காவல்துறை சூப்பிரண்டு திரு. கே. ஆர். இராஜ கோபாலன் இ. பி. கோ. 409-வது பிரிவின் கீழ் வழக்கு ஒன்றை முதலில் பதிவு செய்தார். பின்னர் 10—1—1972 அன்று அதனை இ. பி. கோ. 420 பிரிவாக மாற்றினர். 13—1—1972, 14—1—1972 ஆகிய நாட்களில் கூட்டுறவு அமைச்சரிடமிருந்து கட்டளைகள் பெற்றுக்கொண்ட பின்னர், காவல் துறை இன்ஸ்பெக்டர் எஸ். ஏ. காதருடன் புலனுய் வை மேற்பார்வையிடுவதற்காக 19—1—1972 அன்று திருவாரூருக்குச் சென்றார். இந்த நிலையில் திரு. இராஜகோபாலுக்கு இவ் வழக்கு குறித்துப் புலனுய்வை நிறுத்திவிட்டு உடனடியாகச் சென்னைக்குத் திரும்புமாறு சென்னை குற்றப் புல னுய்வுத்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் - ஜெனரல் திரு. எஸ். கிருஷ்ணராஜரிடமிருந்து செய்தி வந்தது. அதன்படி, புலனுய்வை நிறுத்தி விடும்படி இன்ஸ் பெக்டருக்குக் கட்டளையிட்டு விட்டு, வழக்குக் குறிப் புப் புத்தகத்தில் அவ்வாறே பதிவு ஒன்றைச் செய்து விட்டு, 22-1-1972-ல் சென்னைக்குத் திரும்பினர். அவர், டெபுடி இன்ஸ்பெக்டர் - ஜெனரல் திரு. கிருஷ்ணராஜரைச் சந்தித்த போது, இவ் வழக்கு குறித்து முதலமைச்சர் அவருடன் பேச விரும்பு வதாகக் கூறினர். வாய் மொழியாகக் கொடுக் கப்பட்ட அரசு ஆணையின் காரணமாக, இவ் வழக்கு குறித்துப் புலனுய்வு தள்ளிப்போடப் பட்டது என்று காவல்துறை சூப்பிரண்டின் வாரக் குறிப்பேட்டில் திரு. கிருஷ்ணராஜ், குறிப்பு ஒன்றை எழுதினர்.

திரு. கிருஷ்ணராஜுடன் திரு. இராஜகோபாலன் 4—2—1972-ல் தலைமைச் செயலகத்தில் முத லமைச்சர் திரு. கருணாநிதியைச் சந்தித்தார். ''இ. பி. கோ. 409-வது பிரிவின் கீழ்'' பதிவு செய்ய்ப்பட்ட குற்றச் சாட்டினை ''இ. பி. கோ. 420-வது பிரிவிற்கு'' ஏன் மாற்றினர் என்பது குறித்து முதலமைச்சரிடம் விளக்கிக் கூறுகையில், முதலமைச்சர் ''இவ் வழக்கைப் பதிவு செய்யுமாறு உங்களிடம் யார் கூறினர்கள்'' என்று கோப மாகக் கேட்டார். வழக்கைப் பதிவு செய்து புல னுய்வு செய்யுமாறு அரசிடமிருந்து குறிப்பாகக் கட்டளை வந்ததென அவர் பதிலளித்தபோது திரு. கருணாநிதி ''கண்டவர்களெல்லாம் அரசாங் கம் என்று ஆகி விட முடியுமா'' என்று அவர் கோபமாகத் தமிழில் கூறினர். அச் சந்திப்பின் போது உடனிருந்த நிதித்துறைச் செயலாளர், திரு. எஸ். வேங்கடரமணன் முதலமைச்சரின் கோபத்தைத் தணிவித்தார். அதன் பின்னர் தொழில் அமைச்சர் திரு. மாதவனைச் சந்தித்து இது குறித்து விவாதிக்குமாறு திரு. இராஜ கோபாலனிடம் திரு. கருணாநிதி கூறினர்.

அதன்படி, திரு. இராஜகோபாலன், திரு. கிருஷ்ணராஜ் ஆகியோர் திரு. மாதவனைச் சந்தித் தனர். இவ் வழக்கை எவ்வாறு நடவடிக்கை மேற் கொள்ளாமல் கைவிடலாம் என்பது குறித்து யோசனை கூறுமாறு திரு. இராஜகோபாலனை மாத வன் கேட்டார். எந்த வழக்கிலும் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாமல் கைவிடுவதற்கு அரசுக்கு விரிவான அதிகாரங்கள் இருப்பதாக, திரு. இராஜ கோபாலன் கூறியபோது திரு. மாதவன், அவ் வாறு செய்வது அரசுக்குத் தர்ம சங்கடமான நிலைமையை ஏற்படுத்தும் என்று கூறினர். அரசுக்கு எந்தவித தர்ம சங்கடமான நிலைமை யையும் ஏற்படுத்தாமல், இந் நடவடிக்கையைக் கைவிடுவதற்கு யோசனை கூறுமாறு அவரைத் திரு. மாதவன் கேட்டார். சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் விசாரணை ஒன்றை நடத்துமாறு பதி வாளரைக் கேட்கலாம் என்றும் இந்த விசாரணை முடியும் வரையில் இவ் வழக்கை நிறுத்தி வைக்க லாம் என்றும் திரு. இராஜகோபாலன் யோசனை கூறினர். இவ் வழக்கு குறித்து பதிவாளருடன் பேச மாறு திரு. இராஜகோபாலனுக்கு 16—2—1972 அன்று திரு. மாதவன் கட்டளையிட்டார். திரு. இராஜகோபாலன் பதிவாளரைச் (பெல்லி யப்பா) சந்தித்தார். அவர் சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் விசாரணை நடத்துமாறு ஆணையிடு வதற்கு மறுத்தார். இராஜகோபாலன் திரு. மாதவனிடம் சென்று அவர் கூறியதைத் தெரிவித் தார். அதன் பேரில் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகத்தைச் சந்திக்குமாறு திரு. மாதவன் அவரிடம் கூறினர்.

17—2—1972 அன்று இராஜகோபாலனும், கிருஷ்ணராஜும் தலைமைச் செயலாளரைச் சந்தித் தனர். இவ் வழக்கு குறித்து மீண்டும் பதிவாள ருடன் பேசுமாறு தலைமைச் செயலாளர் அவர் களுக்குக் கட்டளையிட்டார். 14—3—1972 அன்று இராஜகோபாலனும், திரு. கிருஷ்ணராஜும் பெல்லியப்பாவைச் சந்தித்தனர். எனினும்,

அவர் தணிக்கை அறிக்கையில் எல்லா விஷயங் களும் கொடுக்கப்பட்டுள்ளதால் 65-வது பிரிவின் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதற்கில்லை என்று விடாப்பிடியாகப் பிடிவாதமாகக் கூறிவிட்டார்.

26—3—1972 அன்று வந்த தொலைபேசிச் செய்தியின் காரணமாக அமைச்சர் திரு. மாதவனை இராஜகோபாலன் மீண்டும் சந்தித்தார். கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் விசாரணை நடத்தும்படிக் கேட்டுக் கொண்டு அறிக்கை அனுப்புமாறு திரு. மாதவன் அவருக்குக் கட்டளையிட்டார். அதன்படி, 23—6—1972 அன்று இவ் வழக்கு குறித்து எல்லா உண்மை களையும் வெளிக்கொணர 65-வது பிரிவின் கீழ் விசாரணை நடத்தும்படிப் பதிவாளரைக் கேட்கும் அறிக்கை ஒன்றை இராஜகோபாலன் அனுப்பினர். மேலும், அவர் பதிவு செய்துள்ள இந்தக் குற்ற வழக்கில், மேற்கொண்டும் நடவடிக்கை எதனையும் தாம் எடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில் 65-வது பிரிவின் கீழ் விசாரணை மேற்கொள்ள வேண்டியது அவசியமா என்பது குறித்து கேட்டு 16—7—1972 அன்று அரசுக்கு இதனைப் பதிவாளர் அனுப்பினர். இக் கோப்பு கூட்டுறவு அமைச்சர், தொழிலமைச்சர், முத லமைச்சர் ஆகியோருக்குச் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது. 65-வது பிரிவின் கீழ் விசாரணை நடத்தும் கருத்தை 27—7—1972 ஆம் நாளன்று முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார். எனினும், திரு. மாதவன் பின்வரும் விளவை எழுப் பினர். "நடவடிக்கை எடுப்பதற்கு 65-வது பிரி வின் கீழ் அறிக்கை பெற வேண்டியது அவசியம்? அல்லது 64-வது பிரிவின் கீழ்க் தொடுக்கப்பட்ட அறிக்கையையொட்டி, சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் நாம் நடவடிக்கை மேற்கொள்ளலாமா? சட்டத்துறை இதனைப் பரிசீலனை செய்யலாம்". இது 11—8—1972 அன்று உள்ள நிலை.

தவறிழைத்த அதிகாரிகள் கடமையிலிருந்து தவறியது மெய்ப்பிக்கப்படுவதற்குத் தணிக்கை அறிக்கையின் அடிப்படையிலேயே போதிய விவரங்கள் இருக்குமாயின், பதிவாளர் குற்ற நட வடிக்கை மேற்கொள்ளலாம்என்று 18—8—1972-ல் சட்டத்துறை கருத்து தெரிவித்தது. தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் நட வடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்று கருத்து தெரிவித்து திரு. மாதவன் 22—8—1972 நாளன்று முதலமைச்சருக்குச் சட்டத்துறையின் இக் குறிப்பினை நேரடியாக அனுப்பினர். அதே நாளறை திரு. மாதவனின் பரிவுரைக்கு முத லமைச்சர் ஒப்புதல் அளித்தார். திரு. ஜி. என். தாஸ் மீது குற்ற நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பது குறித்த குறிப்பு பின்னர் கூட்டுறவுத் துறையால் தயாரிக்கப்பட்டு அமைகளுக்காக, கூட்டுறவு அமைச்சருக்கு அனுப்பப்பட்டது. இக் குறிப்பு வரப்பெற்றதன்மேல், கூட்டுறவு அமைச்சர், ஜி. என். தாஸ் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடரப்படலாம் என்றும், தணிக்கை அறிக்கை யின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவர்மீதும் பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு பதிவாளரிடம் கூறலாம் என்றும் 1972, செப்டம்பர் 3-ஆம் நாளன்று ஆணைகள் பிறப்பித்தார். அமைச்சரது ஆணைகள் 4-9-1972 அன்று பதிவாளருக்கு அனுப்பப்பட்டன. அவர் அவற்றை 8-10-1972 அன்று காவல்துறை, குப்பிரண்டுக்கு அனுப்பினர். முன்னர் நிறுத்தி வைக்கப்பட்ட புலனுய்வைத் தொடருமாறு சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டருக்குக் காவல் துறை குப்பிரண்டு அதன்பேரில் கட்டளையிட்டார். காவல்துறை குப்பிரண்டு ராஜகோபாலன், முதலமைச்சர், கூட்டுறவு அமைச்சர், தொழில மைச்சர், கூட்டுறவுச் சங்கப் பதிவாளர், தலைமைச் செயலாளர் ஆகியோரைப் பல்வேறு நாட்களில் சந்தித்தது குறித்து, தமது வாராந் தரக் குறிப்பேட்டில் நிகழ்ச்சிகள் நடந்தபோதே பதிவு செய்திருந்தார்.

இயக்குநர் குழுவுக்கெதிரான நடவடிக்கை குறித்து 5-4-1973வரையில் பயனுடையதாக எதுவும் செய்யப்படவில்லை. 5-4-1973-ல் பதிவா ளர், தஞ்ந்த நடவடிக்கையை மேற்கொள்ளு மாறு தஞ்சாவூர், இணைப்பதிவாளருக்குக் கட்டளை யிட்டார். அதற்குப் பிறகு, இணைப் பதிவாளர், 19-4-1973 அன்று இழப்புத் தொகையை வசூலிக் கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னர், வி. எஸ். தியாகராஜ முதலியாரும் ஏனைய முன்னள் இயக்குநர்களும், ஆயிவுக்காகப் பொருத்தமான ஆவணங்கள் யாவும் மனுதாரர்களுக்குக் கொடுக்கப் பட வேண்டும் என்று வேண்டுகோண்டு 2-12-1974-ல் உயர்நீதிமன்றத்தில் ரிட்மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். மேலும், அவர்கள் நடவடிக்கைகளைத் தொடராமலிருக்க இடைக் காலத் தடையாணை பிறப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டனர். அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. ரிட்மனுவை உயர்நீதிமன்றம் 23-4-1975-ல் ஏற்றுக் கொண்டு தேவைப்படும் ஆணைகளைப் பிறப்பித்தது. அதன்படி, ஜி. என். தாஸுக்கு எதிரான வழக்கு தொடர்பாக, காவல்துறை யினரால் கைப்பற்றப்பட்ட எல்லா ஆவணங் களும் முன்னுள் இயக்குநர்கள் படித்துப் பார்க்க, கொடுக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடப் பட்டது.

புலனுய்வு அறிக்கையின்படி ஜி. என். தாஸ் மீது எடுக்கப்பட்ட குற்றநடவடிக்கை, இழப்புத் தொகையை வசூலிப்பதற்கு வி. எஸ். டி. முதலியார் உட்பட முன்னுள் இயக்குநர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தவிர, இது குறித்து வேறு எந்த நடவடிக்கையை யும் மாநில அரசு மேற்கொள்ளவில்லை.

விவாதத்தின்போது எதிர்மனுதாரர் வி. எஸ். டி. முதலியாரின் வழக்குரைஞர்,

கூட்டுறவுச் சங்க இணைப்பதிவாளர் (இழப்புத் தொகை வசூல் நடவடிக்கை) பிறப்பித்த 6-6-1971 நாளிட்ட விவரமான ஆணையைக் கமிஷன் முன்னர் வைத்தார். அந்த ஆணையின் மூலம் அவர், தஞ்சாவூர், கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் முன்னுள் இயக்குநர்கள், அதிகாரிகள், செலுத்த வேண்டிய 1,17,55,832·73 ரூபாயை 7,96,276.56 ரூபாயாகக் குறைத்தார். இவ்வாறு குறைத்தது, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 71-ஆவது பிரிவின்கீழ்ப் பிறப்பிக்கப் பட்ட 19-4-1973 நாளிட்ட இழப்புத் தொகை வசூல் நடவடிக்கை அறிவிப்பில் காட்டப்பட்டது. இணைப்பதிவாளரின் கூற்றுப்படி உரிமைக் கோரிக்கை முழுவதும் நிலைநிறுத்தப்பட முடியாது. இணைப் பதிவாளரின் இந்த ஆணைக் கெதிராக மாறில அரசு, தகுதிவாய்ந்த அதிகாரிக்கு மேல்முறையீடு செய்து கொண்டுள்ளதாக, திரு. வானமாமலை கமிஷனுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் முக்கியமான ஆதாரம், சமகாலத்தில் அலுவலக ஆவணங்களிலிருந்து கொடுக்கப்பட்ட ஆவணச் சாட்சியமாகும். மேலே குறிப்பிட்டுள்ள சாட்சிகளின் வாய்மொழிச் சாட்சியம் இதற்குத் துணையாக உள்ளது. இவர்களது வாக்குமூலங்கள் 5-A பிரிவின்மேற் புலனுய்வு அலுவலர்களால் பதிவு செய்யப்பட்டன.

(1) எஸ். பாலசுப்பிரமணியம், கூட்டுறவுச் சங்க முன்னுள் துணைப் பதிவாளர்.

(2) D. வர்த்தமானன், சென்னை மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்டின் முன்னுள் செயலாளர்.

(3) கே. கேசவ் கினி, கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்.

(4) கே. வைத்தியநாதன், சென்னை கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகத்தில் முன்னுள் தலைமைத் தணிக்கை அதிகாரி.

(5) B. ஆதிகேசவலு, தணிக்கையாளர், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு லிமிடெட், திருவாரூர்.

(6) கே. சுப்பிரமணியம், கூட்டுறவு உதவிப் பதிவாளர்/கண்காணிப்பாளர், கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகம்.

(7) எஸ். ராமமூர்த்தி ஐயர், முன்னுள் ஏஜென்ட், இந்திய ஸ்டேட் வங்கி, திருவாரூர் கினை, திருவாரூர்.

(8) கி. எஸ், கல்யாணசுந்தரம், அப்போதைய தலைமை வளர்ச்சி அதிகாரி, இந்திய ஸ்டேட் வங்கி, சென்னை உள்ளூர் தலைமை அலுவலகம், சென்னை.

(9) வி. புருஷோத்தமன், முன்னுள் பிராஞ்ச் மேனேஜர், நெல் கொள்முதல் குறித்து வடபாதி மங்கலத்திலுள்ள T.A.S. பிராஞ்ச்.

(10) இராமலிங்கம், உலோகப் பற்றவைப் பாளர், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு லிமிடெட், திருவாரூர்.

(11) ஆர். பசுபதி, ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு அரசுச் செயலாளர், கூட்டுறவுத் துறை, சென்னை.

(12) ஜே. வில்சன் சுந்தர ராஜ், துணைச் செயலாளர், சட்டத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.

(13) கே. ஜே. எம். ஷெட்டி, ஐ.ஏ.எஸ்., சென்னை, கூட்டுறவுச் சங்க முன்னுள் பதிவாளர்.

(14) எம். கோவிந்தராஜன், துணைப் பதிவாளர் (இழப்புத் தொகை வசூல் நடவடிக்கை), கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் அலுவலகம் (இழப்புத் தொகை வசூல் நடவடிக்கை), திருவாரூர்.

(15) எஸ். நடராசன், தமிழ்நாடு கூட்டுறவு அமைச்சரின் அரசிதழ் பதிவு பெற்ற முன்னுள் நேர்முக உதவியாளர்.

(16) எஸ். ராஜகோபாலன், முன்னுள் அரசு உதவிச் செயலாளர், கூட்டுறவுத் துறை, சென்னை.

(17) P. ஆழ்வார், முன்னுள் உதவிச் செயலாளர், கூட்டுறவுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை.

(18) ஐ. பொன்னுசாமி, முன்னுள் துணைச் செயலாளர், கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு அரசு.

(19) எஸ். கிருஷ்ணமூர்த்தி, தனி அலுவலர், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு லிமிடெட், திருவாரூர்.

(20) கே. ஆர். ராஜகோபாலன், ஐ.பி.எஸ்., காவல் துறை டிப்பிரண்டு, வணிகக் குற்றப்புலனுய்வுப் பிரிவு, குற்றப் புலனுய்வுத் துறை, சென்னை.

(21) எஸ். கிருஷ்ணராஜ், ஐ.பி.எஸ்., காவல் துறை முன்னுள் துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல், குற்றப் புலனுய்வுத் துறை, தமிழ்நாடு.

(22) எஸ். ஏ. காதர், காவல் துறை முன்னுள் இன்ஸ்பெக்டர், வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவு, தஞ்சாவூர்.

(23) என். ராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர், சட்டத் துறை, தலைமைச் செயலகம், சென்னை.

(24) P. சபாநாயகம், ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு அரசின் முன்னுள் தலைமைச் செயலாளர், சென்னை.

(25) P. M. பெல்லியப்பா, கூட்டுறவுச் சங்க முன்னுள் பதிவாளர், சென்னை.

(26) எஸ். வேங்கடரமணன், ஐ.ஏ.எஸ்., அரசு முன்னுள் செயலாளர், நிதித்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை.

(27) வி. சங்கரன், ஐ.ஏ.எஸ். முன்னுள் கூடுதல் செயலாளர் (கூட்டுறவுத் துறை), தமிழ்நாடு அரசு.

(28) சி. ஏ. கருணாகர மேனோன், காவல் துறை முன்னுள் டெபுடி சூப்பிரண்டு, வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவு, குற்றப் புலனுய்வுத் துறை, மதுரை கோட்டம்.

(29) டி. ஆர். ராமசாமி, காவல் துறை உதவிக் கமிஷனர், வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவு, குற்றப் புலனுய்வுத் துறை, சென்னை.

(30) ஜி. கிருஷ்ணசாமி, துணைப் பதிவாளர், செயலாளர், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு லிமிடெட், திருவாரூர்.

(31) சி. என். ராகவன், ஐ.ஏ.எஸ்., முன்னுள் செயலாளர், கூட்டுறவுத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை.

(32) டி.ஏ.எஸ். பிரகாசம், கூட்டுறவுச் சங்கக் கூடுதல் பதிவாளர் (கடன்), கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகம், சென்னை.

(33) ஏ. ஞானபிரகாசம், கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் (இழப்புத் தொகையை வசூலிக்கும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்புடையவர்), திருவாரூர்.

(34) பி. ஜி. முகமது சலீஹா, முன்னுள் செயலாளர், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு லிமிடெட், திருவாரூர்.

(35) எம். எஸ். ஜெயராமன், கூட்டுறவுச் சங்க முதுநிலை ஆய்வாளர், கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் அலுவலகம், தஞ்சாவூர்.

(36) ஏ. கார்த்திகேயன், முன்னுள் உதவியாளர், கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகம், சென்னை.

(37) டாக்டர், ஜி. வெங்கடசாமி, கண் சிகிச்சை மருத்துவர், அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை.

(38) எம். பஷீர் அஹமத், முன்னுள் பெருந் தலைவர், திருவாரூர் ஊராட்சி ஒன்றியம், திருவாரூர்.

(39) எம். பழனியப்பன், நிர்வாக அதிகாரி, ஸ்ரீ நியாகராஜசாமி கோயில், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம்.

(40) பி. என். கிருஷ்ணமூர்த்தி, முன்னுள் தொழில்-சட்ட அமைச்சரின், பின்னர் உணவு-கூட்டுறவு அமைச்சரின் (திரு. செ. மாதவன்), இளநிலை நேர்முக உதவியாளர்.

இதில் சம்பந்தப்பட்டுள்ளவர்களுடைய வழக்குரைஞரின் வாதங்களைக் கேட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளவற்றை நான் கவனமாக ஆய்வு செய்துள்ளேன். திரு. வானமாமலை, தமிழ்நாடு அரசின் சார்பாகவும், திரு. ராகவாச்சாரி, திரு. எம். ஜீ. இராமச்சந்திரன் சார்பாகவும், திரு. பால்பாண்டியன், திரு. கல்யாணசுந்தரம் சார்பாகவும் இவ் வழக்கில் வாதாடியுள்ளனர். திரு. எச். நாரிமன், எதிர்மனுதாரர் வி.எஸ்.டி. முதலியார் (இதன் பின்னர் சுருக்கமாக வி.எஸ்.டி. என்றழைக்கப்படுகிறார்) சார்பில் வாதங்களை எடுத்துரைத்தார். மற்றைய எதிர்மனுதாரர்கள் சார்பில் எவரும் வாதிடவில்லை. ஆனால், திரு. நாரிமன் எடுத்துரைத்த வாதத்தில் அந்த எதிர் மனுதாரர்களின் எதிர் உறுதிமொழிப் பத்திரங்களில் அறிவிக்கப்பட்டுள்ள கருத்துகள் அடங்கியுள்ளன.

முகவுரை

3—2—1976 நாளிட்ட மத்திய அரசு அறிவிப்பின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள 18 ஆம் எண் குற்றச்சாட்டு குறித்து—இது மனுதாரர்களின் மகஜரிலிருந்து எடுக்கப்பட்டது—வி.எஸ்.டி. வழக்குரைஞர் பகுப்பாய்வு செய்தார். அதில் கண்டுள்ள குற்றச்சாட்டின் முக்கிய அம்சங்களாவன.—

(a) வி. எஸ். டி. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் தலைவராக இருந்தபோது, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்குச் சொந்தமான பொதுப் பணம் இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு/இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் ''ஏமாற்றினார்'', ''கையாடல் செய்தார்'' அல்லது ''ஏமாற்றினார்'' அல்லது ''கையாடல் செய்தார்''.

(b) ஏமாற்றியது / கையாடல் செய்தது கீழ்க்கண்டவற்றிலிருந்து தெரியவருகிறது.—

(i) தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிச் செயலாளரின் (திரு. வர்த்தமானன்) 24-7-70 நாளிட்ட அறிக்கை.

(ii) ''தணிக்கை அறிக்கைகள்'' (தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் தணிக்கையாளர் திரு. பி. ஆதிசேசவலு, 1—1—68 முதல் 31—12—68 வரையிலான கால அளவு தொடர்பாக அளித்த) 19—1—1971 நாளிட்ட அறிக்கை ஒன்று; மற்றொன்று (சென்னை, கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகத்தின் முன்னுள் தலைமைத் தணிக்கை அதிகாரி கே. வைத்தியநாதன் 1—1—1969 முதல் 30—6—1970 வரையிலான கால அளவு தொடர்பாக அளித்த) 23-3-1971 நாளிட்ட தணிக்கை அறிக்கை.

(c) வி.எஸ்.டி. மீதும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு நிர்வாகக் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் மீதும் வழக்கு தொடர்வது காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று அரசுத் துறை அதிகாரிகளும் தலைமைச் செயலாளரும் செய்த பரிவுரைகள்.

(d) முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி, கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் ஆகியோரது தலையீட்டின் காரணமாக வி.எஸ்.டி.

மீது வழக்கு தொடர்வதற்கான கருத்து கைவிடப் பட்டதோடல்லாமல், கையாடல் செய்த தொகையை வசூலிப்பதற்கு மேற்கொண்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இந்த நடவடிக்கை தவிர்க்கப்பட்டது.

(c) வி.எஸ்.டி. மீது வழக்கு தொடர்வதும் அவர் மீது சிவில் வழக்கு தொடர்வதும், அல்லது வழக்கு தொடர்வது அல்லது சிவில் வழக்கு தொடர்வது குறித்த நடவடிக்கை கைவிடப் பட்டது, விசாரணை செய்யப்படவேண்டிய விஷய மாகும். முதலமைச்சர், கூட்டுறவு அமைச்சர் ஆகியோரின் நட்புறவும் இடையீடும் இல்லாதிருந் தால் இதில் கண்டுள்ள உண்மைகளும் சூழ்நிலை களும் வழக்கு தொடர்வதையும், இதில் சம்பந் தப்பட்டுள்ள பெருந்தொகைகளை வசூலிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதையும் அவசியப்படுத்தி யிருக்கும் என்பதே திட்டவட்டமான அனுமானம்.

தொடக்கநிலை வாதங்கள்

எதிர்மனுதார் வி.எஸ். டி.யின் சார்பாக வாதாட வந்திருந்த வழக்குரைஞர் திரு. எப்.எஸ். நாரி மனின் முதல் வாதம், 3-2-1976 நாளிட்ட மத்திய அரசு அறிவிப்பின் 18-வது தொடர் எண்ணில் இணைப்பில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளதைத் தவிர, வேறெந்த விஷயமும் கமிஷன் முன்னர் விசாரணை வரம்புக்குள் வராது என்பதேயாகும். 18 ஆம் எண்ணிலுள்ள குற்றச்சாட்டில் வராத இனங்கள், 5-A பிரிவின்கீழ் கமிஷனுல் நியமிக் கப்பட்ட புலனுய்வு அலுவலர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை ''பிதியு'' குற்றச்சாட்டுகளும்கூட வழக்குரைஞரின் கருத்துப்படி ''கண் கூடாகச் சரியல்ல, ஆதார மற்றவை'' என்பதாகும்.

இந்த வாதத்தை நான் ஏற்பதற்கில்லை, கமி ஷனின் ஆய்வு வரம்பின் (b), (c) பகுதிகளின் எல்லே மிகவும் பரந்தது. 18 ஆம் எண் குற்றச் சாட்டுக்குத் தொடர்பான அல்லது சம்பந்தப் பட்ட அல்லது இடைநிகழ்வான எதுவும் இந்த விசாரணே வரம்புக்குள் வரும்.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக் குச் சொந்தமான சுமார் 3 கோடி ரூபாயை/அதற்கு மேலாக எதிர்மனுதாரர் வி.எஸ்.டி. மோசடி செய் தார் என்று குற்றச்சாட்டு பட்டியலில் 18-வது வரிசை எண்ணில் அவர்மீது சுமத்தப்பட்டுள்ள முக்கிய குற்றச்சாட்டு வெளிப்படையாகவே நிலைக்கும் என்பது திரு. நாரிமனின் அடுத்த வாதம் ஆகும்.

இந்தத் தொடக்க நிலையில் முடிவான கருத்து எதனேயும் தெரிவிக்க நான் விரும்பவில்லே. தஞ்சா வூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் நிதிகளே வி.எஸ்.டி. மோசடி செய்தார் அல்லது கையாடல் செய்தார் என்பதற்கு இந்த அடிப்படை ஆவணங் களில் எதுவும் காணப்படவில்லே அல்லது குறிப் பிடப்படவில்லே என்பதை இப்போது கூறுவது போதுமானதாகும் :

'a) தமிழ்நாடு கூட்டுறவு வங்கியின்அப் போதைய செயலாளர் திரு. வர்த்தமானனின் 24-7-1970-ஆம் நாளிட்ட ஆய்வு அறிக்கை.

(b) (i). 1-1-1968 முதல் 31-12-1968 வரை உள்ள கால அளவுக்கான 19-1-1971 ஆம் நாளிட்ட தணிக்கை அறிக்கை.

(ii). 1-1-1969 முதல் 30-6-1970 வரை யிலான கால அளவுக்கான 13—3—1971-ம் நாளிட்ட தணிக்கை அறிக்கை.

18 ஆம் எண் குற்றச்சாட்டில் கண்டுள்ள மற்றெரு குற்றச்சாட்டு யாதெனில், வி.எஸ்.டி. முதலியார் இப்படிப்பட்ட பெருந்தவருன செயல் களில் ஈடுபட்டார் என்றும், வி.எஸ்.டி. மீதும் தஞ் சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் நிரு வாகக் குழுவைச் சேர்ந்த பிற உறுப்பினர்கள் மீதும் வழக்கு தொடர்வதற்காக இந்த வழக்கு காவல்துறையிடம் ஒப்படைக்கப்படலாம் என்று அரசுத்துறை அதிகாரிகளும் தலேமைச் செயலா ரும் பரிவுரை செய்திருந்தனர்; ஆனுல் இச் செயற் குறிப்பை முதலமைச்சர் திரு. கருணுநிதி முடக்கி விட்டார் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

வி.எஸ்.டி. மீது வழக்கு தொடரும்படி அல்லது அவர்மீதான வழக்கு எதனேயும் புலனுய்வுக் காக, குறிப்பாகக் காவல்துறையினரிடம் ஒப் படைக்கும்படித் திட்டவட்டமான செயற்குறிப்பு எதுவும் செய்யப்பட்டதாகக் காட்டும் திட்ட வட்டமான அல்லது தெளிவான குறிப்பு எதுவும் அலுவலகக் குறிப்புகளிலோ அதிகாரிகள், தலே மைச் செயலாளர் அல்லது துறையின் பிற உறுப் பினர்களது பரிவுரைகளிலோ இல்லே. இதுபற்றிப் பின்னர் விவாதிக்கப்படும்.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப் பின் நிருவாகத்தினரின் தவருன நிருவாக முறை கேடுகள், பணத்தைத் தவருன காரியங்களுக்குப் பயன்படுத்தியிருத்தல், கணக்குகளே முறையாகவும் உண்மையாகவும் எழுதிவரத் தவறிவிட்டது பற்றிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என் பதில் ஐயம் இல்லே. இவற்றில் வி.எஸ்.டி. யும் சிக்கி யிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ரொக் கக் கடன் அடிப்படையில் சலுகை விதங்களில் உரங்களே வழங்கியிருப்பதானது, வி.எஸ்.டி. மீது குற்றப்பொறுப்பைச் சுமத்துமா என்பது சர்ச்சைக் குரிய பொருளாகும். இது பற்றி இப்போது விவாதிக்கப்படும். இது தவிர, அவர்மீது குற்றப் பொறுப்பு சுமத்துகிற தெளிவான வெளிப்படை யான பெரும் முறைகேடு யாதெனில், பொய்யான இருப்புக் கணக்குகளே 'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தி யா' வங்கியிடம் கொடுத்து அதன் பேரில் தஞ்சா வூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்கு அந்த வங்கி முன்பணங்களே வழங்கியதாகும். இந்த முறைகேட்டுக்கான பொறுப்பாளி, கூட்டுறவுத்

துறையில் மூத்த இணைப் பதிவாளராக இருந்த, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைக்கு அரசு நியமித்து அனுப்பிய செயலாளரான, ஜி.என். தாஸ் தான் என்று வெளிப்படையாகவே நிர்ணயிக்கப்பட்டது. இதுதொடர்பாக, ஜி.என். தாஸ் மீது இ.பி.கோ. 420 வது பிரிவின்கீழ் 1/70 ஆம் குற்ற எண்ணில் குற்றவழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடரில் கண்டுள்ள மற்றெரு குற்றச்சாட்டு யாதெனில், இதில் சம்பந்தப்பட்ட 'பெரும் பணத்தை' வருவி செய்யுஸிவிலில் நடவடிக்கைகள் கூடத் தொடங்கப்பட்டில்லீலை என்றும் இந்த விவகாரத்தில் முதலமைச்சரும் கூட்டுறவு அமைச்சரும் தகாத முறையில் தலையீட்டதே இதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இது நிலைக்காது என்பது வெளிப்படை. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் வி.எஸ்.டி. உட்பட நிர்வாகக் குழு உறுப்பினர்களின் சிவில் பொறுப்பு குறித்து தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 71 வது பிரிவின் கீழ் இழப்புத் தொகை வசூல் நடவடிக்கைகள் 19-4-1973 அன்று தொடங்கப்பட்டதாக பதிவேட்டில் உள்ள குறிப்புகள் தெரிவிக்கின்றன. இதுபற்றி நீர விசாரணை செய்த பின்னர், வி. எஸ். டி. மீதும் நிர்வாகக் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் மீதும் அந்த நடவடிக்கை எடுப்பது நிச்சயமாக நிலைத்து நிற்காது என்று தகுதி வாய்ந்த அதிகாரி முடிவு செய்தார். இழப்புத் தொகை வசூல் நடவடிக்கைகளைப் பற்றி விசாரித்த அதிகாரியின் ஆணையை எதிர்த்து மேல் முறையீடு செய்து கொள்ள அரசு கருதியிருப்பதாக என்னிடம் கூறப்பட்டது; ஆனால், அதன் ஆணையை உயர் அதிகார மன்றமோ உயர் அதிகார வரம்பு உடைய நீதிமன்றமோ தள்ளிவைக்காத வரையில், இது செல்திறன் உடையதாக இருக்கும்.

அது எப்படி இருந்தபோதிலும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பில் சுமார் 2 கோடி ரூபாய் சுரண்டப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கும், அவர்மீது இழப்புத் தொகை வசூல் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கும் பதிவேட்டில் உள்ள குறிப்புகள் ஆதரவாக இல்லை என்ற முடிவு, 18 ஆம் எண் குற்றச்சாட்டு தொடர்பான அல்லது அந்தக் குற்றச்சாட்டிலிருந்து எழுகின்ற விசாரணைக்குரிய பொருள்களை ஒன்றும் இல்லாததாக ஆக்கிவிடாது. எதிர்மனுதாரர்களான திரு. கருணாநிதி, ஆதித்தனார் ஆகியோரைப் பொறுத்த வரையில், அவர்கள் இந்த விவகாரத்தில் மட்டும் மீறித் தலையிட்டு வி.எஸ்.டி. மீதும் அவரது சகாக்கள் மீதும் முறையாக விசாரணை நடத்துவதையும் புலனுய்வு செய்வதையும் தடுத்துவிட்டனர்; முறையாகவும் முழுமையாகவும் புலனுய்வு செய்யப்பட்டிருந்தால், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் நிதிகளை வி.எஸ்.டி.யும் ஏனையோரும் கையாடல் செய்திருப்பது அல்லது தவருன காரியங்களுக்குப் பயன்படுத்தி இருப்பது தெரிய வந்திருக்கும் என்பதே இந்தக் குற்றச்சாட்டின் சாராம்சம் ஆகும்.

திரு. வானமாமலை சரியாகக் குறிப்பிட்டிருப்பதைப் போல் 3-2-1976 ஆம் நாளிட்ட அரசு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டு குற்ற விசாரணைக் குற்றச்சாட்டாக மட்டும் கருதப்படலாகாது. இந்தக் குற்றச்சாட்டிலிருந்து நியாயமாக கூறப்படுபவையும் அல்லது இக் குற்றச்சாட்டிலிருந்து எழுபவையும் 3-2-1976 ஆம் நாள் இட்ட அரசு அறிவிப்பின் (a), (b), (c) ஆகிய பகுதிகளின் பரந்த வரம்பிற்குள் வருபவையுமான எல்லாப் பிரச்சினைகளையும் கமிஷன் விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. வழக்குரைஞர் கூறிய படி, கீழ்க்காணும் பிரச்சனைகளை அல்லது விவாதப் பொருள்களை முடிவு செய்ய வேண்டும் :

I (a) தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை

(i). 16-8-1970 ஆம் நாளிட்ட தலைமைத் தணிக்கை அதிகாரி அறிக்கையில்,

(ii). 30-3-1970 ஆம் நாளிட்ட, கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் திரு. P. B. கிருஷ்ணசாமி அறிக்கையில்,

(iii). தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் செயலாளர் திரு. வர்த்தமானனின் 24-7-1970 ஆம் நாளிட்ட அறிக்கையில்

முறைகேடுகள் எவையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளனவா ? ஆம் எனில், அவை யாவை ?

(b) மேற்குறிப்பிட்ட அறிக்கைகளை விவாதிக்க அரசு விருந்தினர் இல்லத்தில் 25-7-1970 அன்று கூட்டம் எதுவும் நடைபெற்றதா ? ஆம் எனில், அக் கூட்டத்தில் எடுத்த முடிவு யாது ?

(c) கூட்டுறவு அமைச்சர் அப்போதைய முதலமைச்சருடன் இது பற்றி விவாதித்தாரா ? சட்டத்தின் 65 வது பிரிவின் கீழ் விசாரணை ஒன்றை நடத்துவதாயும் அது குறித்து எடுத்த முடிவில் தன் பெயர் சம்பந்தப்படுவதையும் அப்போதைய முதலமைச்சர் விரும்பவில்லையா ?

(d) இதன் விளைவாக அலுவலகக் கோப்பு பின்னர் திருத்தப்பட்டதா ? ஆம் எனில், இந்த நடவடிக்கையின் நோக்கம் என்ன ?

(e) தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் மீது 65 வது பிரிவின் கீழ் விசாரணை ஒன்று நடத்துவதைத் தவிர்க்க முதலமைச்சர் அவரது அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தினரா ? ஆம் எனில், எதற்காக ?

II. (a) தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்குக் கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுக்கும்படிக் கேட்டு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, அரசுக்கு எழுதியதா ?

(b) சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்ற நட வடிக்கை எடுக்க, அப்போதைய தலைமைச் செய லாளர் திரு. இராயப்பா பரிந்துரைத்தாரா ?

(c) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிற்கு அனுப் பும் பதிலில் கூட திரு. வி.எஸ்.டி. முதலியாருக்கு முதலமைச்சர் உதவ விரும்பினாரா ?

III. 'தவறுகளைச் சரி செய்ய' வேண்டி இந்த விஷயமாக திரு. வி.எஸ்.டி.யுடன் விவாதிக்கும்படி அப்போதைய முதலமைச்சர் பிறப்பித்த கட்டளை யின் தாத்பரியம் யாது ?

IV. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்ட மைப்பினைப்பற்றி கடுமையாகக் குறை கூறியிருக் கும்போது, அந்த நிறுவனத்திற்கு மேலும் நிதி உதவி செய்யவும், வி.எஸ்.டி.யைத் தலைவராகத் தொடர்ந்து இருக்கச் செய்யவும் முதலமைச்சர் விரும்பினாரா ?

V. அப்போதைய செயலாளர் திரு. ஜி. என். தாஸ் மீது புலனுய்வு செய்வதை ஐயத்திற்கிடமான ஒரு முறையைப் பின்பற்றி அப்போதைய முதல மைச்சர் தடுத்து நிறுத்திவிட்டாரா ? இந்த வகை யில் அதிகாரம் தவருகப் பயன்படுத்தப்பட்டதா?

VI. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப் பில் குற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா ? அவற்றிற்கு வி.எஸ்.டி. பொறுப்பாளியா ?

இனி வரும் விவாதத்தில் இவற்றை ஆய்வு செய்யக் கருதப்படுகிறது.

விவாதப் பொருள் எண் 1.

முன்னுரை—கூட்டமைப்பின் பணிகள்.

இந்தக் கூட்டமைப்பின் பணிகளாவன : நெல், இரசாயன உரங்களைக் கொள்முதல் செய்து விளி யோகித்தல், கூட்டுறவு முறையில் விற்பனை செய் தல், நெல், வேளாண்மைத் தூணைப் பொருட்கள், வேளாண்மை விதைகள் ஆகியவற்றைப் பக்குவப் படுத்தல், டிராக்டர்களை வாடகைக்கு விடுதல், பூச்சி கொல்லி மருந்துகளைத் தெளித்தல் போன்ற பணி வசதிகளைச் செய்து கொடுத்தல். கூட்ட மைப்பின் நிதி நடவடிக்கைகள் 1970-ல் ஆண்டு ஒன்றுக்கு 7 கோடி ரூபாய் வரை எட்டின.

வி.எஸ்.டி. இந்தக் கூட்டமைப்பில் 1943 ஆம் ஆண்டிலிருந்து, இந்தக் கூட்டமைப்பின் நிர்வாகக் குழு 20–1–1972-ல் கலைக்கப்பட்டது வரை, தலை வராக இருந்திருக்கிறார்.

தமிழ்நாடு அரசுக்கு இதில் இருந்த நிதிப் பொறுப்பு.

இந்தக் கூட்டமைப்பின் பங்கு மூலதனத்தில் தமிழ்நாடு அரசு முதலீடு செய்திருப்பது தவிர, இந்த நிறுவனத்தின் பல்வேறு திட்டங்களுக்கு உதவித் தொகையாகவும், கடனுகவும் தொகை அளித்ததன் மூலம் தமிழ்நாடு அரசுக்கு இதில் பெரும் நிதிப் பொறுப்பு ஏற்பட்டது. 1957 முதல் 1970 வரை தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் பங்கு மூலதனத்திற்கு அளித்த தொகையும் அதற்கு வழங்கிய கடன்களும் சேர்ந்து மொத்தம் 1.50 கோடி ரூபாய்க்கு மேலாகும்.

டிராக்டர்கள் வாங்குவதற்காக ஒட்டுமொத்தக் கடனுக 5 இலட்ச ரூபாய் கொடுத்திருப்பது தவிர, உர வாணிபத்திற்காக 60 இலட்ச ரூபாய்க்கும் பொதுவான காரியங்களுக்காக ரூ. 3 இலட்சம், ரூ. 5 இலட்சத்திற்கும் ரொக்கக் கடன் வசதியைத் தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கி அளித்தது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்வதற்காக ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிடம் இருந்து 3.50 கோடி ரூபாய் வரை ரொக்கக் கடன் வசதியை இந்தக் கூட்டமைப்பு பெற்றது. இதற்குத் தமிழ்நாடு அரசு 4–11–1957 தேதியிட்ட 1987 ஆம் எண் அரசாணையில் உத்தரவாதம் அளித்துள்ளது.

1968 ஆம் ஆண்டில் எஸ். பாலசுப்பிரமணியம், தனிக்கை செய்திருத்தல்.

கூட்டுறவு உதவிப் பதிவாளர்-தணிக்கையாளர் எஸ். பாலசுப்பிரமணியம் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் 1965 ஆம் ஆண்டுக் கணக்குகளை 1968 பிப்ரவரியில் தணிக்கை செய் தார். இதில், கூட்டமைப்பின் கணக்குகள் முறை யாக எழுதி வரப்படவில்லை என்பதையும் அவர் கண்டார்.

தலைமைத் தணிக்கை அதிகாரியின் 16-3-1970 ஆம் நாளிட்ட அறிக்கை.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் கணக்குகளை ஆய்வு செய்யும்படி அப்போதைய கூட் டுறவுச் சங்கப் பதிவாளர் P.B. கிருஷ்ணசாமி கட் டனியிட்டதன் பேரில், தலைமைத் தணிக்கை அதிகாரி அந்தக் கூட்டமைப்பின் கணக்குகளைத் தணிக்கை செய்து அதுபற்றி தனது அறிக்கையை 16–3–1970 அன்று அனுப்பி வைத்தார். (குறிப்புக் கோப்பிற்குப் பிறகு 303–305ஆம் பக்கங்களில் உள்ள 1ஆம் எண் ஆவணத்தைக் காண்க.) தலை மைத் தணிக்கை அதிகாரியின் மேற்சொன்ன அறிக்கை ,புலனுய்வு அறிக்கையின் தொகுதி II-ல் 1–60 பக்கங்களில் எழுதிக்கொடுக்கப் பட்டுள்ளது. அதில், ஏனையவற்றிற்கிடையே, கீழ்க் காணும் முறைகேடுகளையும் அவர் சுட்டிக்காட்டி யிருந்தார் :—

1. 4 வது துணைவிதியின்படி, செலுத்தப் பட்ட பங்கு மூலதனம் 20 இலட்ச ரூபாயாக இருக்க வேண்டும். ஆனல், நாளது வரை செலுத் தப்பட்ட பங்குமூலதனம் 28·39 இலட்சம் ரூபா யாக இருக்கிறது. அதாவது கூடுதலாக 8·39 இலட்ச ரூபாய் இருக்கிறது.

2. இயக்குநர்கள் குழுக் கூட்டம், கூட்டமைப்பின் 17-வது துணைவிதியின்படி, முறையாக நடை பெறவில்லை.....

3. 34-வது துணைவிதியின்படிப் பொதுக்குழுக் கூட்டம் ஆண்டுக்கு ஒருமுறையாவது கூட்டப்பட வேண்டும். ஆனால், 1968-லும் 1969-லும் பொதுக் குழுக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.

4. கொள்முதல் விலைக்காகவும் கடன்பேரில் உரங்கள் விற்பனைக்காகவும் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் (T.A.S.) நிறுவனத்திற்குப் பணம் கொடுக்கப்பட் டிருக்கிறது.

தணிக்கையாளர் பட்டியலிட்டுக் கொடுத்துள்ள இந்தக் குறைபாடுகள் பற்றி 10–5–1970 அன்று தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் P.B. கிருஷ்ணசாமியின் 30-5-1970 ஆம் நாளிட்ட ஆய்வு அறிக்கை.

தலைமைத் தணிக்கை அதிகாரியிடமிருந்து அறிக்கை வந்தவுடன், பதிவாளர் P.B. கிருஷ்ண சாமி 13–5–1970 அன்று தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்குச் சென்றார். அதன பணிகளை இவர் ஆய்வு செய்து 30–5–1970-ஆம் நாளிட்ட தனது ஆய்வு அறிக்கையை அனுப்பினர். அதில், ஏனையவற்றுடன், கீழ்க்காணும் முறைகேடு களை அவர் குறிப்பிட்டிருந்தார்:—

(a) நிர்வாகக் குழுவின் தவறான நிர்வாகம்;

(b) மட்டரக நெல்லை உயர்ரக நெல்லாக வாங்கியிருத்தல்;

(c) தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு, விற்பனைச் சங்கங்களின் கணக்குகளை எழுதிவராதிருத்தல் முதலியவை;

(d) கூட்டமைப்பின் கணக்குகளில் பெரும் குழப்பம் காணப்படுதல்.

இது தொடர்பாக அவர் குறிப்பிட்டிருப்பதா வது.—''கணக்குகளைச் சரிசெய்தால் விற்பனைத் தாத உண்மைகள் வெட்டவெளிச்சம் ஆகி விடுமோ என்ற அச்சத்தில் கணக்கில் உள்ள தவறு களைச் சரிசெய்வதில் கூட்டமைப்பு ஆர்வம் காட்ட வில்லை என்றும் வேறு எவர் மீதாகிலும் பொறுப்பு சுமத்தவும் தங்களுடைய குற்றங்களுக்கும் தவறு களுக்கும் ஏற்புடையதான விளக்கங்களை அளிப் விக்கும்படிச் செய்யவும் முயற்சி செய்யப்பட்ட தாகவும் நினைக்கத் தூண்டுகிறது''.

(e) இக் கூட்டமைப்பு 1961 முதல் நட்டத் தில் செயல்பட்டு வந்திருக்கின்றது. 1967ஆம் ஆண்டுக்கு 5·13 இலட்ச ரூபாயை ஆதாயங்காட்டி கணக்கை முடித்தேன். ஆனால், அந்த ஆண்டிற்கு சுமார் 13 இலட்ச ரூபாய் நட்டம் ஏற்பட்டது என்றும், அந்த ஆண்டு இறுதிவரை சேர்ந்து வந்த நட்டம் 18·81 இலட்ச ரூபாய் என்றும் தணிக்கை அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

(f) அன்றுடக் குறிப்பேடு போன்ற முக்கிய மான கணக்குகளில் காசாளரோ கணக்காளரோ தலைமைக் கணக்கு அலுவலரோ அவற்றைச் சரி பார்த்து மேலொப்பம் இடவில்லை. பல்வேறு கணக்குகளில் முறையாக மேலொப்பம் இடப்பட்ட பதிவுகள் இல்லாதபோது, கூட்டமைப்பு கடந்த காலத்தில் செயல்பட்டு வந்ததில் தெரியவந்துள்ள இப்படிப்பட்ட முறைகேடுகளுக்கு பொறுப்பாளிகள் யார் என்பதை இக் கூட்டமைப்பு எவ்வாறு முடிவு செய்யும் என்பது தெரியவில்லை.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் செயலாளர் திரு. வர்த்தமானனின் 24-7-1970 ஆம் நாளிட்ட அறிக்கை.

1–7–1970 அன்று கூட்டுறவு சங்கப் பதிவாளர், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் செய லாளர் திரு. வர்த்தமானன், தஞ்சாவூர் இணைப் பதி வாளர், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்ட மைப்பின் தலைவர் ஆகியோருடன் கலந்து பேசினர்.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப் பின் உர வியாபாரத்திற்காக 60 இலட்ச ரூபாய் ரொக்கக் கடன் வசதி அளிப்பது தொடர்பாக 21–7–1970 அன்று, திரு. வர்த்தமானன் மேற்படி நிறுவனத்திற்குச் சென்று பார்வையிட்டார். கூட்டமைப்பின் அலுவல் நிலவரத்தை 24–7–1970 அன்று கவனித்த பின்னர், வர்த்தமானன் தனது அறிக்கையை அனுப்பினர். (புலனுய்வு அறிக்கை பாகம் II-ல் 111–122 பக்கங்களில் அப்படியே கொடுக்கப்பட்டுள்ள 3 ஆம் எண் ஆவணத்தின் 189–207 பக்கங்களைக் காண்க) இந்த அறிக்கை யில் வி. எஸ். டி. யை நேரடியாகச் சம்பந்தப் படுத்திக் குறிப்பிடும் ஒரே வாக்குமூலம் யாதெனில் இரசாயன உரங்களை வழங்குவதன் மூலம் திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு (இந்த நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவில் வி.எஸ்.டி. தலைவராக இருக்கிறார்). தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு 60 இலட்ச ரூபாய்க்கு ரொக்கக் கடன் வசதி அளித்திருப்ப தேயாகும். வர்த்தமானனின் அறிக்கையில் 3-வது பாராவில் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் முக்கியமான பகுதி பின்வருமாறு :—

''திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனத்திற்கு (இந்த நிறுவனத்தின் தலைவர் வி.எஸ்.டி. முதலி யார்) கடன் வசதி அளிப்பதற்கு ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்திருந்தபோதிலும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு மூலம் நிறுவனத் திற்கு இரசாயன உரங்களை வழங்குவதன் வாயி லாக அதற்குத் தொடர்ந்து ரொக்கக் கடன் வசதி அளித்து வந்திருப்பதாகத் தெரிய வந்துள் ளது. இரசாயன உரத்திற்குச் சலுகை வீதங்கள் திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனத்திற்குக் குறிப்

பிடப்பட்டுள்ளன. இந்த வியாபாரத்தில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்கு டன்னுக்கு 30 ரூபாய் ஆதாயம் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. இதில் எதற்கு மறுப்பு தெரிவிக்கப்படுகிறது என்றால், கூட்டுறவுக் கடன் வசதி ஒரு தனியார் துறை நிறுவனத்திற்கு அளிக்கப்படக் கூடாது என்பதேயாகும். திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் தனக்குத் தேவைப்படும் இரசாயன உரத்தைத் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு மூலமாகப் பெறுவதற்குக் காரணம், இரசாயன உரம் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கடன் பேரில் உரத்தைப் பெற்றுக் கொள்ள அதற்குச் சிரமம் இருந்திருக்கலாம் என்பதேயாகும். கடன் பேரில் வழங்கப்பட்ட இரசாயன உரத்திற்காக, திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்கு இப்போது 15.66 இலட்ச ரூபாய் கொடுக்க வேண்டியிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்குக் கணக்குப் புத்தகத்தின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் சுமார் 15.38 இலட்ச ரூபாய்க்கு வழங்கிய நெல்லுக்கான மதிப்பைச் சரிக்கட்டிய பின்னர், இந்த 15.66 இலட்ச ரூபாய் கொடுக்க வேண்டியிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்கு வழங்கிய நெல்லுக்காக தனக்கு 20 இலட்ச ரூபாய் சேர வேண்டும் என்று குறிப்பிட்டு, தான் செலுத்த வேண்டிய நிகரத் தொகை குறித்து இப்போது தகராறு செய்து வருகிறது. திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனத்திற்குக் கடன் பேரில் வழங்கப்பட்ட இரசாயன உரத்திற்காக அதனை வழங்கியவர்களுக்குச் சேரவேண்டிய தொகை முழுவதையும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு அநேகமாகச் செலுத்திவிட்டது என்று தெரியவருகிறது''.

வி.எஸ்.டி. 24-7-1976 ஆம் நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தின் 50, 52-வது பாரக்களில் இதற்கு விரிவாகப் பதில் அளித்துள்ளார். சுருக்கமாகக் கூறினீ, அவர் கூறியுள்ளது யாதெனில், திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனத்துடன் பதிவு செய்துள்ள தனியார் கரும்பு சாகுபடியாளர்களுக்குச் சென்னை உரத் தொழிற்சாலையின் உரங்களை முழுமையும்படியும், அவர்களுக்கு வழங்கும் உரத்திற்கான விலையை திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனத்தின் கணக்கில் பற்று எழுதும் படியும் தஞ்சாவூர் வட்டார கூட்டுறவுச் சங்க இணைப்பதிவாளர் நிட்டவட்டமாகக் கட்டளை யிட்டுள்ளதன் பேரிலேயே இவ்வாறு செய்யப் பட்டது என்று கூறுகிறார். சென்னை உர நிறுவனம் ஒரு கூட்டுத் துறை நிறுவனம் ஆகும். இதில் வி.எஸ்.டி.-க்கோ அவரது குடும்பத்தினருக்கோ நிதிவகை அக்கறை எதுவும் கிடையாது. திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனத்துடன் இணைப் பதிவாளர் செய்துகொண்ட இந்த ஏற்பாட்டின்படி இரசாயன உரம் கடன் பேரில் வழங்கப்பட வேண்டும். இதற்கு ஆண்டு ஒன்றுக்கு 9 சத வீதம் வட்டி விதிக்கப்படும். கரும்பு சாகுபடியாளர்களுக்கு அவர்கள் வழங்கிய கரும்புக்காக திரு ஆரூரான் சுகர்ஸ் விலையைக் கொடுக்கும் சமயம் உரத்திற்கான அசலும் மேற்படி வட்டியும் மேற்படி நிறுவனம் அளித்த உத்தரவாதத்தின்படி வசூலிக்கப்பட வேண்டும். இதற்குத் திரு ஆரூரான் சுகர்ஸ் உத்தரவாதம் அளிக்க வேண்டும். தஞ்சாவூர், கூட்டுறவுச் சங்க இணைப்பதிவாளரின் குறிப்பிட்ட கட்டளை 22-7-1968 ஆம் நாளிட்ட நடவடிக்கைக் குறிப்பில் இருக்கிறது. இது வி.எஸ்.டி. யின் 24-7-1976 ஆம் நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்தில் IV இணைப்பில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

புலனுய்வு அறிக்கை, 5-A பிரிவின்கீழ் புலனுய்வு அலுவலரால் 12-7-1976 அன்று பதிவு செய்யப்பட்ட வர்த்தமானனின் வாக்குமூலத்தைக் குறிப்பிடுவதோடு, பாகம்-I, 13-14 ஆம் பக்கங்களில் பின்வருமாறு கூறுகிறது :—

''திரு. ஆரூரான் சுகர்சுக்குச் சலுகை வீதங்களில் ரொக்கக் கடன் வசதி தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் நலனுக்கு எதிராக அளிக்கப் பெற்றிருக்கிறது; இதன் வினைவாக, திரு ஆரூரான் சுகர்சுக்கு அதிகாரம் அளிக்கப் படாத முறையில் கிட்டிய ஆதாயம் அந்த அளவுக்குப் பணம் கையாடல் செய்ததற்கு ஒப்பாகும் என்று திரு. D. வர்த்தமானன் அவரது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.''

இவ்வாறு பணத்தை வேறு காரியத்திற்குப் பயன்படுத்தியது 'கையாடல்' செய்ததற்கு ஒப்பாகும் என்று வர்த்தமானனின் அறிக்கையில் நிட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை என்பதை நான் காண்கிறேன். திரு. நரிமான் சரியாகச் சுட்டிக் காட்டியிருப்பது போல், இந்தக் கமிஷனை அமைத்து 3-2-1976 ஆம் நாளிட்ட அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர், 5-A பிரிவின்கீழ் புலனுய்வு அதிகாரிகளால் அவர் விசாரிக்கப்பட்ட போது முதற் தடவையாக 'கையாடல்' என்ற சொல் அவரால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆயினும், திரு. நரிமானின் வாதத்தை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலாது. ரொக்கக் கடன் அடிப்படையில் சலுகை வீதங்களில் இரசாயன உரத்தைத் திரு ஆரூரான் சுகர்சுக்கு வழங்கியது பணம் கையாடல் செய்யப்பட்டதற்கு ஒப்பாகுமா இல்லையா என்ற பிரச்சினை இன்னும் அப்படியேதான் இருக்கிறது. இப்பிரச்சினை பற்றிப் பின்னர் கவனிக்கப்படும். 22—7—1968 ஆம் நாளிட்ட நடவடிக்கைக் குறிப்பில் கண்டுள்ள இணைப்பதிவாளரின் கட்டளைகளின்படி, கடன் பேரில் இரசாயன உரங்களைத் தான் பெற்றுக்கொண்டதாக வி. எஸ். டி. உறுதியிட்டுக் கூறியிருப்பது அலுவலகப் பதிவேட்டின்

மூலம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை இப் போதைக்குக் கூறுவதே போதுமானதாகும். 24—7—1976-ஆம் நாளிட்ட வி. எஸ். டி. யின் உறுதிமொழிப் பத்திரத்தில் IV ஆம் இணைப்பில் சுருக்கி கொடுக்கப்பட்டுள்ள, தஞ்சாவூர், இணைப்பதிவாளரின் 22—7—1968 ஆம் நாளிட்ட நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்ததில், சென்னை உர நிறுவனத்தின் இரசாயன உரங்களைக் கரும்பு சாகுபடியாளர்களுக்குத் திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் மூலமாகத் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு விற்றவிலை '' தனியார் நிறுவனங்கள், தனிப்பட்ட சாகுபடியாளர்களுக்கு இப்படிப்பட்ட இரசாயன உரங்களை விற்கின்ற விலையைக் காட்டிலும் சற்றுக்கூடுதலான விலையைக் '' குறிப்பிடுவதாகத் தெரிகிறது. திரு ஆரூரான் சுகர்களுக்குச் சலுகை விதங்களில் இரசாயன உரங்கள் விநி யோகப்பட்டதாக வர்த்தமானன் அறிக்கையில் கூறப் பட்டிருப்பதற்கு இது முரணுக இருப்பதுபோல் தோன்றுகிறது. அப்படியே இருந்தாலும், கரும்பு சாகுபடியாளரிடமிருந்து தொகையை வசூலிக்கும் பொறுப்பு திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனத்தின்மீது சுமத்தப்பட்டுள்ளது. இல் வாறு வழங்கிய இரசாயன உரங்களுக்கான தொகையும் அதற்கு ஆண்டொன்றுக்கு 9 சதவீத வட்டியும் திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்குச் செலுத்தியிருப்பது சார்சைக்கு அப்பாற்பட்டதாகும்.

கடன் பேரில் வழங்கப்பட்ட இரசாயன உரங்களுக்காக, திரு ஆரூரான் சுகர்ஸ் நிறு வனம் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை கூட்டமைப் பிறகு இப்போது 15'66 இலட்சம் ரூபாய் கொடுக்கவேண்டியிருப்பதாக வர்த்தமானனின் 24—7—1970 ஆம் நாளிட்ட அறிக்கையில் கூறப் பட்டுள்ள குற்றச்சாட்டில் உண்மையிருப்பதாகத் தோன்றவில்லை.

திரு ஆரூரான் சுகர்ஸ் கணக்குகள் தணிக்கை மிடப்பட்டுள்ளபடி, 31—10—1969 வரை எல்லா நாட்களிலும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புதான் திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனத்துக்கு எப்போதும் பணம் கொடுக்க வேண்டியிருந்ததாக திரு. நாரிமன் வாதிடுகிறார். வி. எஸ். டி. அவரது மேற்சொன்ன உறுதிமொழிப் பத்திரத்தில் 314, 315-வது பாராக்களில் இதனைத் திட்டவட்டமாகக் கூறி யிருந்ததோடு, 31—7—1970 அன்று தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்குத் திரு ஆரூ ரான் சுகர்ஸ் நிறுவனம் கொடுக்கவேண்டிய எஞ்சிய தொகை ரூ. 66,294·43 தான். 15'66 இலட்ச ரூபாய் அல்ல என்றும், இதனை யும் திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்குப் பின் னர் செலுத்திவிட்டதென்றும் கூறியிருந்தார். வி. எஸ். டி. அவரது உறுதிமொழிப் பத்திரத் தோடு துணையாகக் கொடுத்துள்ள XVII-வது இணைப்பில் திரு. ஆரூரான் சுகரின் தனிக்கை யாளர்கள் அளித்த சான்றிதழையும் இதற்கு ஆதாரமாகக் காட்டியுள்ளார். பொதுவாக இந்த பரஸ்பர, நடப்புக் கணக்கில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புதான் தனக்குக் கடன்பட்டிருந்ததாக வி. எஸ். டி. உறுதியிட்டுக் கூறியிருப்பதற்கு அப்போதைய கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் திரு. H.B.N. ஷெட்டி பொது (தனிப் பணி அலுவலர்) துறை, அரசு இணைச் செயலாளர் திரு. A. விஸ்வநாதனுக்கு எழுதிய 4—7—1976 ஆம் நாளிட்ட கடிதம் ஆதாரமாக இருக்கிறது. இந்தக் கடிதம் 1127/76 ஆம் எண் வழக்கு திரு ஆரூரான் சுகர்க்கும் தஞ்சாவூர் கூட்டுறவு விற் பனைக் கூட்டமைப்பிற்கும் உள்ள கணக்குகள் குறித்து என்ற தலைப்பிடப்பட்ட கோப்பின் 37-ம் பக்கத்தில் உள்ளது. இந்தக் கடிதத்தில் ஏனையவற்றிற்கிடையே கூறியிருப்பதாவது :

'' பார்வையிலுள்ள முதல் கடிதத்தின் 2, 6-வது பாராக்களை ஒட்டி திரு. ஆரூரான் சுகர்களது இரசாயன உரங்கள் வழங்கியிருப்பது பற்றி தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப் பின் பதிவேடுகளை ஆய்வு செய்து குறிப்பு ஒன்றை இத்துடன் இணைத்துள்ளேன். தஞ்சாவூர் கூட் டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் சம்பந்தப்பட்ட கோப்புகளைப் பார்த்ததில் இருதரப்பினரும் விவரக் கணக்குகளைப் பரிமாறிக்கொண்ட பின்னர் இக்கூட்டமைப்பு திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு 6,699·66 ரூபாய் கொடுக்க வேண்டியிருப்பதைப் புலப்படுத்துவ தாகச் சொல்லப்படுகிறது. ''

கூட்டுறவு உதவிப் பதிவாளர் திரு. K.சுப்பிர மணியம் தயாரித்த குறிப்பு ஒன்று இக் கடிதத் துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இது ''வழக்கு (1127/76) திரு ஆரூரான் சுகர்க்கும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்புக்குள் உள்ள கணக்குகள் பற்றி'' என்ற தலைப்பிடப்பட்ட கோப் பில் 39-48ஆம் பக்கங்களில் உள்ளது. இந்தக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது :—

'' திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 92. 800 ரூபாய் வசூலிக்க, இக் கூட்டமைப்பு 7—2—1975 அன்று நடுவர் தீர்ப்பு கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. கோப்பிலுள் பார்க்கையில் இருதரப்பினரும் அவ ரவரது விவரக்கணக்குகளைப் பரிமாற்றம் செய்து கொண்டபின்னர் திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனத்துக்கு இக் கூட்டமைப்பு ரூ. 6,699.66 கொடுக்க வேண்டியுள்ளதாகத் தெரிகிறது. விவரக் கணக்குகளைப் பார்த்ததில், திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் நிறுவனம் இக் கூட்டமைப்பி மிருந்து வெவ்வேறு கணக்குகளில் கோரிய பல தொகைகள், அவற்றிற்குத் திரு ஆரூரான்

110-G— 3—3-A

சுகர்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து விவரங்கள் கேட்டிருந்தபோதிலும், தெளிவான விவரங்கள் கிடைக்காமையினால் இன்னும் தீர்வு செய்யப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது''.

வர்த்தமானனின் அறிக்கைக்குப் பின்னர் நடந்த நிகழ்ச்சிகள்.

அரசு விருந்தினர் இல்லத்தில் 25-7-1970 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வர்த்தமானனின் அறிக்கை பற்றி விவாதித்தல்.

24—7—1970 அன்று வர்த்தமானன் தனது அறிக்கையைத் தொழில் அமைச்சர் திரு. மாதவனுக்கும் தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறைச் செயலாளருக்கும் (திரு. பசுபதி) அனுப்பினர்.

D. வர்த்தமானனின் சாட்சியம்.

D. வர்த்தமானன் 8—12—1976 அன்று கமிஷனின் முன்பு தாக்கல் செய்த அவரது உறுதிமொழிப் பத்திரத்தில் இந்தக் கூட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார் :

''நான் அறிக்கையை அனுப்பிய 24—7—70 நாளுக்கு அடுத்த நாள், அரசு விருந்தினர் இல்லத்திற்கு வரும்படி நான் அழைக்கப்பெற்றேன். அச்சமயம், முன்னாள் முதலமைச்சர் பாரியில் உலகத் தமிழ்மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு அப்போதுதான் திரும்பி வந்திருந்தார். திரு. வி. எஸ். டி. முதலியாரும் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்தார். அரசு விருந்தினர் இல்லத்திற்கு வரும்படி திரு. D. A. சுயம்பிரகாசம் மூலமாக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி என்னை அழைத்திருந்தார். முற்பகல் சுமார் 11 மணிக்கு அரசு விருந்தினர் இல்லத்திற்கு நான் சென்றபோது, திரு. ஆர். பசுபதி, திரு. D. A. சுயம்பிரகாசம், முன்னாள் அமைச்சர் திரு. ஆதித்தனார், முன்னாள் அமைச்சர் திரு. ப. உ. சண்முகம், திரு. கேசவ் லிவி, திரு. E. P. இராயப்பா அகியோர் அங்கிருந்தனர். முன்னாள் முதலமைச்சர் எனது அறிக்கையைத் தம் கையில் வைத்திருந்தார். அச்சமயம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் தலைவர் திரு. வி. எஸ். டி. முதலியார், கூட்டமைப்பின் விவகாரங்களில் நடந்துள்ள முறைகேடுகளுக்குத் தவிப்பட்ட முறையில் எந்த அளவு பொறுப்பு என்பதைத் தன்னிடம் தெரிவிக்கும்படி முன்னாள் முதலமைச்சர் என்னைக் கேட்டார். அக் கூட்டமைப்பின் கணக்குகளில் பொருள் இருப்பு குறைந்திருப்பதாகத் தெரியவந்த தன் அடிப்படையிலேயே எங்கள் அறிக்கை கொடுக்கப்பட்டது என்றும் கூட்டமைப்பில் பல வேறு நிர்வாகிகளுக்கு இதற்குள்ள பொறுப்பு குறித்து நீர விசாரித்துப் பரிசீலிக்க வேண்டுமென்றும் நான் கூறினேன். திரு. வி. எஸ். டி. முதலியார் எங்களுக்கு நல்ல நண்பர் என்றும், போதுமான காரணமின்றி திரு. வி. எஸ். டி. முதலியார் மீது நடவடிக்கை எடுத்தால் அதனால் நல்ல நண்பரை இழக்க நேரிடும் என்றும் மேலும் இந்த நடவடிக்கைக்கு அரசியல் நோக்கம் இருப்பதாக ஓர் எண்ணத்தை இது தோற்றுவிக்கும் என்றும் அப்போதைய முதலமைச்சர் குறிப்பிட்டார்.''

[முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக அடிக் கோடிட்டுள்ளேன்.]

வர்த்தமானன் 5-A பிரிவின்கீழ் கொடுத்த வாக்குமூலத்திலோ, அவரது உறுதிமொழிப் பத்திரத்திலோ, 25—7—1970 அன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65-வது பிரிவின்கீழ் விசாரணை ஒன்றைத் தொடங்க ஒருமித்த வகையிலோ மற்றப்படியோ முடிவு எதுவும் எடுக்கப்பட்டதாகே அழுத்தந்திருத்தமாக கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவரது உறுதிமொழிப் பத்திரத்தின் 15-வது பாராவில் உள்ள பகுதி மேலே கொடுக்கப்பட்டுள்ளது. இது 5-A பிரிவின்கீழ் அவர் கொடுத்த வாக்குமூலத்திற்கு 16-வது பாராவில் உள்ளதுடன் சொல்லுக்குச் சொல் அப்படியே ஒத்துள்ளது.

K. கேசவ் லிவியின் வாக்குமூலம்.

கூட்டுறவுச் சங்கப் பதிவாளராக அப்போது பொறுப்பு வகித்த K. கேசவ் லிவி, 25—7—1970 அன்று அரசு விருந்தினர் இல்லத்தில் நடைபெற்ற கூட்டம் பற்றித் தனக்குத் தெரிந்ததைக் கூறுவதாவது :

''தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் அப்போதைய செயலாளர் திரு. D. வர்த்தமானன், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் மோசமான நிலவரத்தை விவரித்து 24—7—1970ஆம் நாளிட்ட அறிக்கை ஒன்றை அனுப்பினார்..... இந்த அறிக்கைபற்றி விவாதிப்பதற்காக 25—7—1970 அன்று காலை 9 மணிக்கு அரசு விருந்தினர் இல்லத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு வரும்படி, கூட்டுறவுத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் என்னிடம் தெரிவித்தார். காலை சுமார் 9 மணிக்கு அரசு விருந்தினர் இல்லத்தில் நடந்த கூட்டத்தில் நான் கலந்துகொண்டேன். அங்கு முன்னாள் முதல் அமைச்சரும் (திரு. மு. கருணாநிதி). முன்னாள் கூட்டுறவு அமைச்சரும் (திரு. ஏ. பா. ஆதித்தனார்), முன்னாள் அமைச்சர் திரு ப. உ. சண்முகமும், தலைமைச் செயலாளர் திரு. E. P. இராயப்பா, ஐ.ஏ.எஸ்-ம், திரு. D. வர்த்தமானனும், கூட்டுறவுத்துறைச் செயலாளர் திரு. R. பசுபதி, ஐ.ஏ.எஸ்-ம், ஏனையோரும் இருந்தனர். தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் விவகாரங்கள் சம்பந்தப்பட்ட பதிவேடுகளை அந்தக் கூட்டத்திற்கு நான் எடுத்துச் சென்றிருந்தேன். அந்தக் கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர், திரு. D. வர்த்தமானனின் அறிக்கையைக் கையில் வைத்

திருந்தார். திரு. D. வர்த்தமானனின் அறிக்கையில் கண்டுள்ள வாறுவினவிக்கும் அம்சங்கள் பற்றி முன்னுள் முதலமைச்சர் விவாதித்தார். தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் தலைவர் திரு. வி. எஸ். டி. முதலியார் இந்த முறை கேடுகளுக்குத் தனிப்பட்ட முறையில் எந்த அளவு பொறுப்பாளியாவார் என்பது பற்றியும் அவர் அறிய விரும்பினர்.

வி.எஸ்.டி. முதலியார் தன்னுடைய நெருங்கிய நண்பரென்றபோதிலும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பில் நடைபெற்ற முறை கேடுகளுக்கு யார் பொறுப்பு என்பதைத் துறை நிர்வாகிக்கலாம் என்றும் முன்னுள் முதலமைச்சர் அச்சமயத்தில் கூறினர். ஆகவே, 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணையொன்று நடத்த உத்தரவிடப்பட்டது.''

[முக்கியதுவத்தைக்குறிக்க அடிக்கோடிட்டுள்ளேன்]

R. பசுபதியின் கூற்று.

கூட்டுறவுத் துறையின் அந்நாள் அரசுச் செயலாளர், திரு. ஆர். பசுபதி, 6—12—1976-ல் கொடுத்துள்ள தனது உறுதிமொழிப்பத்திரத்தில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார் :

''திரு. வர்த்தமானனின் அறிக்கை வரப்பெற்ற ஒரிரு நாட்களில், விவாதமொன்றுக்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் ஏற்பாடு செய்தார். சேப்பாக்கத்திலுள்ள அரசு விருந்தினர் மாளிகையில் விவாதம் நடந்தது; முதலமைச்சர், கூட்டுறவுத் துறை அமைச்சர், திரு. D.A.S. பிரகாசம், கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர், திரு. வர்த்தமானன் ஆகியோரும், நானும் விவாதம் நடைபெற்ற இடத்தில் இருந்தோம். அப்போது வேறு யார் யார் வந்திருந்தனர் என்பதை என்னால் நினைவுபடுத்திக் கூற இயலவில்லை. திரு. வர்த்தமானனின் அறிக்கை விரிவாக விவாதிக்கப்பட்டது; கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணையொன்று நடத்துவது அவசியமென்று கருதப்பட்டது; சம்பந்தப்பட்ட கால அளவில் கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் செயலாளராகச் செயல்பட்டு வந்ததால், கூட்டுறவுத் துறை அல்லாது வேறு துறையைச் சேர்ந்த —போதுமான தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் அந்த விசாரணையை நடத்துமாறு கேட்டுக்கொள்வது உகந்தது என்றும் விவாதத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது. விசாரணை அதிகாரியாக யாரை நியமிப்பது என்பது விருந்தினர் மாளிகையில் விவாதம் நடைபெற்ற அன்று மாலை அல்லது அடுத்த நாள் முடிவு செய்யப்பட்டதாக எனக்கு நினைவு.''

D.A.S. பிரகாசத்தின் வாக்குமூலம்.

திரு. D. A. S. பிரகாசமும் இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்ததாகக் கூறப்படுகிறது. 7—12—1976 ஆம் தேதியிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில் அவர் கொடுத்துள்ள வாக்குமூலம் வருமாறு :—

''திரு.வர்த்தமானனின் 24—7—1970 ஆம் தேதியிட்ட அறிக்கையின் அடிப்படையில் விவாதம் நடைபெற்றது; 30—6—1970 ஆம் தேதி நிலவரப்படி இருப்புக் கணக்கைச் சரிபார்த்தபின், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் கடன்களுக்கான ஈகூட்டுப்பொருள் பெரிதும் குறைவதை அந்த அறிக்கை வெளிப்படுத்தியது. கணக்குகள் முழுவதுமாக எழுதி முடிக்கப்படவில்லை. அந்த விவாதத்திற்குப் பிறகு, முறைகேடுகள் குறித்த சரியான நிலையை அறிந்துகொள்ளவும், முறைகேடுகளுக்குக் காரணமானவர்கள் யார் என்று முடிவு செய்யவும் தடவுடிக்கை எடுக்கப்படலாமென்ற மூன்னுள் முதலமைச்சர் கூறினர்.''

இணைப்பதிவாளர்-தஞ்சாவூர் விற்பனைக் கூட்டமைப்பின் செயலாளர் மாற்றப்படவேண்டுமென்றும் அவர் கூறினர்.

[முக்கியத்துவத்தை உணர்த்த அடிக் கோடிட்டுள்ளேன்.]

வி.எஸ்.டி. தன்னுடைய நெருங்கிய நண்பரென்றும், அந்த முறைகேடுகளுக்கு அவர் தனிப்பட்ட முறையில் எந்த அளவுக்குப் பொறுப்பு என்றறிய தான் விரும்புவதாகவும் முன்னுள் முதலமைச்சர் கருத்து தெரிவித்துள்ளதாகக் கூறப்படுவது பற்றி சாட்சி எதுவும் செப்பவில்லை; மேலும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணையொன்று நடத்துவது பற்றி ஏதேனும் முடிவெடுக்கப்பட்டதா என்பதையும் அவர் கூறவில்லை.

விவாதத்தின்போது, வி.எஸ்.டி. பற்றி அந்நாள் முதலமைச்சர் குறிப்பாக ஏதேனும் கூறியிருந்தால் அதைப்பற்றியும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணையொன்று நடத்துவது பற்றி ஏதேனும் முடிவெடுத்திருந்தால் அதைப்பற்றியும், இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட சாட்சிகள் கொடுத்துள்ள வாக்குமூலங்களில் சில வித்தியாசங்களும் முரண்பாடுகளும் இருக்கின்றன என்பது மேலே கொடுத்துள்ள பகுதிகளிலிருந்து தெரியவரும். இந்தக் கூட்டத்தில் நடவடிக்கைகள் பற்றிய குறிப்புப் புத்தகம் எதுவும் அகப்படவில்லை. அதேகாலமாக, இது தனிப்பட்ட முறையில் நடந்த கூட்டமாக இருக்கலாம். சம்பவங்கள்

நடந்து நீண்ட காலமாகிவிட்டதால் சாட்சிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மறதி காரணமாக இந்த முரண்பாடுகள் தோன்றியிருக்கலாம். அந்தக் கூட்டத்தில் ஏதேனும் முடிவெடுக்கப்பட்டதா என்பது குறித்தும், யார் சொன்னதன் பேரில் அவ்வாறு முடிவெடுக்கப்பட்டது என்பது குறித்தும், வர்த்தமானன் கொடுத்துள்ள வாக்குமூலத்திற்கும் கேசவ் கினி கொடுத்துள்ள வாக்குமூலத்திற்கும் இடையே முரண்பாடு இருப்பதற்கு, அந்தக் கூட்டம் முடிவடையும்வரை தான் தொடர்ந்து அங்கு இருக்கவில்லையென்று வர்த்தமானனே கூறியிருப்பது காரணமாக இருக்கலாம். கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அவர் வெளியேறிவிட்டார். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில், வர்த்தமானன் அறிக்கை மீது மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதில் அக்கறை கொள்ளவேண்டியவர் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் என்ற வகையில் கேசவ் கினிதான். ஆகவே, அந்தக் கூட்டத்தில் என்ன முடிவெடுக்கப்பட்டது என்பது, மற்ற அதிகாரிகளைக் காட்டிலும் கேசவ் கினிக்குத்தான் நன்கு நினைவுக்கு வேண்டும். எப்படிக்குச் சாத்தியமிருக்கிறது. பிரகாசத்தின் சாட்சியத்தைப் பெரிதும் ஒத்துள்ள கேசவ் கினியின் சாட்சியம், வி.எஸ்.டி.-க்குப் பாதுகாப்பு கொடுக்கவோ அவருக்கு எதிரான விசாரணைத் திட்டத்தை முறியடிக்கவோ திரு. கருணாநிதி முயற்சி ஏதும் செய்ததாகத் தெரிவிக்கவில்லை. வி.எஸ்.டி. தன்னுடைய நெருங்கிய நண்பர் என்று தெரிவித்த முதலமைச்சர், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65ஆவது பிரிவின்கீழ் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு விவகாரங்கள் குறித்து விசாரணையொன்று நடத்துவதன் மூலம், முறைகேடுகளுக்கு யார் பொறுப்பு என்பதைத் தீர்மானிக்குமாறு துறையை வலியுறுத்தினர் என்பதையே அந்தச் சாட்சியம் எடுத்துக்காட்டுகிறது. முதலமைச்சர் சொன்னதெல்லாம், போதிய முகாந்திரமின்றி வி.எஸ்.டி.க்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்று முன்னெச்சரிக்கை செய்ததுதானே என்பது, வர்த்தமானனின் சாட்சியத்திலிருந்தும் கினியின் வாக்குமூலத்திலிருந்தும் தெரியவரும். பொது நலனுக்குப் பாதகமான வகையில், நண்பரொருவருக்கு முறையற்ற பாதுகாப்பு கொடுக்க விரும்பிய முதலமைச்சர் ஒருவர் இவ்வாறு நடந்துகொண்டிருக்கமாட்டார் என்பது உறுதி.

65ஆவது பிரிவின்கீழ் அறிமுத்தின் விசாரணை நடத்தவேண்டுமென்பது.

வர்த்தமானனின் அறிக்கை வரப்பெற்றதன் பேரில், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பில் நடைபெற்ற பெரிய முறைகேடுகளைப் பற்றி குறிப்பிட்டும், தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65ஆவது பிரிவின்கீழ் விசாரணையொன்று, நிதித் துறையுடன் இணைந்த அரசு வணிகத் திட்டத் தலைமை அதிகாரியான திரு. அறிமுதினால் (அதாவது, கூட்டுறவுத் துறை சாராத அதிகாரி ஒருவரால்) நடத்தப்பட வேண்டுமெனப் பரிந்துரை செய்தும், கூட்டுறவுத் துறைச் செயலாளருக்கு, 27— 7— 1970-ல் பதிவாளர் கேசவ் கினி கடிதம் எழுதினார். மாவட்டத்தில் விற்பனைச் சங்கங்கள் மூலமாக, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பினால் செய்யப்பட்ட பெரிய கொள்முதல் தொடர்பாக இருப்பு சரிபார்க்கப்பட்டதில் பெருமளவு இருப்பு குறைவது பற்றியும், நெல், அரிசி, கோணிப் பைகள் முதலியவற்றின் மதிப்பு, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிடமிருந்து பெற்ற தொகைகளுக்கு ஈடு செய்யப் போதுமானதாக இல்லை என்பது பற்றியும் விளக்கியிருந்தார். சுமார் 2 கோடி ரூபாய் இவ்வாறு குறைவதாக அவர் கூறினார். 27— 7— 1970ஆம் தேதியிட்ட இந்தக் கடிதத்தில், 25— 7— 1970-ல், நடைபெற்ற எந்தக் கூட்டம் பற்றியும் ஒரு வார்த்தைகூட அவர் கூறவில்லை. சொல்லப் போனால், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் ''அமைப்பு, செயல்முறை, நிதி நிலைமை'' ஆகியவை குறித்து விசாரணை செய்ய அறிமுதினை நியமிப்பதற்கு அரசின் அனுமதியை அவர் கோரினார்.

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65-வது பிரிவின்கீழ் விசாரணை நடத்தும் செயற்குறிப்பு அடங்கிய கேசவ் கினியின் கடிதத்தை, கூட்டுறவுத் துறைச் செயலாளர் பகபதி, அன்றே வரப் பெற்றார். அறிமுதின் விசாரணை நடத்த அனுமதிக்கப்பட வேண்டுமெனச் செயற்குறிப்பு கொடுத்து 28— 7— 1970ஆம் தேதியன்று சுற்றோட்டக் குறிப்பொன்றைப் பகபதி அனுப்பினர். இச் செயற்குறிப்புக்கு நிதித்துறைச் செயலாளர், சட்டத்துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர் திரு. E. P. இராயப்பா ஆகியோர் அன்றே ஒப்புதல் அளித்து, கோப்பு, கூட்டுறவுத் துறை அமைச்சர், தொழில்துறை அமைச்சர், முதலமைச்சர் ஆகியோருக்கு 29— 7— 1970ஆம் தேதி சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

இச் சமயத்தில் முதலமைச்சர் திரு. கருணாநிதியை வி.எஸ்.டி. சந்தித்ததாகவும், அதன் பின்னர், அவர் (திரு. கருணாநிதி), தனது நண்பரை இறுதியில் சட்ட நடவடிக்கைக்கு ஆட்படுத்தக் கூடிய உத்தேச நடவடிக்கையிலிருந்து காப்பாற்றுவதற்காகப் பாடுபட்டதாகவும் வானமாமலை வாதம் செய்கிறார். அரசு விருந்தினர் மாளிகையில் திரு. கருணாநிதியும் அதிகாரிகளும் கலந்துகொண்ட கூட்டம் நடந்து முடிந்த பிறகு வி. எஸ். டி. பாரிஸிலிருந்து திரும்பி, முதலமைச்சரைச் சந்தித்து, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் விவகாரங்கள் குறித்துப் பேசினர் என்பதே வாதமாகும். அதையடுத்து, அந்த

கூட்டமைப்பு தொடர்பான விவகாரங்களில் முதலமைச்சர் அசாதாரணமாக நடந்துகொண்டதுடன் தெரிக்கவேண்டிய விஷயமென்று வாதம் தொடருகிறது. திரு. வானமாமலையின் அணுகுமுறை குறைகாண முடியாத அடிப்படையில் அமையவில்லை.

முதலாவதாக, வி. எஸ். டி. வெளிநாடு சென்று திரும்பியதுமே கருணாநிதியைச் சந்தித்தார் என்பதற்குச் சரியான சாட்சியம் இல்லை. இதுவரையில், கேசவ் லிவி கொடுத்துள்ள வாய்மொழியான உறுதியற்ற சாட்சியம் தான் இருக்கிறது. ''திரு வி. எஸ். டி. முதலியார் முன்னுள் முதலமைச்சரைச் சந்தித்ததாகவும், 65ஆவது பிரிவின்கீழ் விசாரணைக்கு உத்தரவிடாதவாறு பார்த்துக்கொள்ளுமாறு முன்னுள் முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டதாகவும்'' 27—8—1970 அன்றே அந்தத் தேதி வாக்கிலோ கூட்டுறவுத் துறைச் செயலாளர் (பகபதி) தன்னிடம் கூறியதாக 5-A பிரிவின்கீழ் புலனுய்வு அதிகாரி பதிவு செய்த வாக்குமூலத்தில் கேசவ் லிவி கூறினார்.

ஆனால், 5-A பிரிவின்கீழ் பகபதி கொடுத்த வாக்குமூலத்திலும் பின்னர் அளித்த உறுதிமொழிப் பத்திரத்திலும் கேசவ் லிவியின் இந்த வாக்குமூலத்தை உறுதிப்படுத்தவில்லை. வி.எஸ்.டி. முதலமைச்சரைச் சந்தித்ததாகவும், 65ஆவது பிரிவின்கீழ் விசாரணைக்கு உத்திரவிடாதவாறு பார்த்துக்கொள்ளுமாறு முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டதாகவும் கேசவ் லிவியிடம் தான் சொன்னதாகப் பகபதி கூறவில்லை.

இரண்டாவதாக, வி. எஸ். டி.-முதலமைச்சர் சந்திப்பு பற்றி தனக்கு எப்படி தகவல் கிடைத்தது என்பதை கேசவ் லிவி திட்டவட்டமாகக் கூறியுலவில்லை. இந்த விஷயத்தில் தன்னுடைய நிலையை அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்கிறார். 5-A பிரிவின்கீழ் 1—8—1976-ல் புலனுய்வு அதிகாரி அவரை விசாரணை செய்தார். வி. எஸ். டி.-முதலமைச்சர் சந்திப்பு பற்றி பகபதி மூலமாகத்தெரிந்து கொண்டதாக அப்போது வாக்குமூலம் கொடுத்தார். அதன் பிறகு, 21—8—1976-ல் புலனுய்வு அதிகாரி பகபதியை விசாரணை செய்தார். அதையடுத்து, பகபதி தனது உறுதிமொழிப் பத்திரத்தில் 6-12-1976-ல் அத்தாட்சிக் கையெழுத்து பெற்று விசாரணைக் கமிஷன் முன்னிலையில் தாக்கல் செய்தார். ஒரு நாள் கழித்து, 7—12—1976-ல் கேசவ் லிவி தன்னுடைய உறுதிமொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்தார். பின்னர் தாக்கல் செய்த இந்த உறுதிமொழிப்பத்திரத்தில், தான் ஏற்கெனவே கொடுத்திருந்த வாக்குமூலத்திற்கு வித்தியாசப்படும் வகையில் வாக்குமூலம் கொடுத்தார்; அது வருமாறு: ''திரு. வி. எஸ். டி. முதலியார் என்னுடைய வீட்டில் என்னைச் சந்தித்து, தான் முன்னுள் முதலமைச்சரைச் சந்தித்ததாகவும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் விவகாரங்கள் குறித்துப் பேசியதாகவும் தெரிவித்தார்'' எனினும், 65-ஆவது பிரிவின்கீழ் விசாரணை நடத்துவதை முதலமைச்சர் விரும்பவில்லை என்றும், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 64-வது பிரிவின்கீழ் தணிக்கையொன்று நடத்தினாலே போதும் என்று கருதுவதாகவும் கூட்டுறவுத்துறைச் செயலாளர், (பகபதி) வாய்மொழியாகக் கூறியதாகக் கிளி கூறினர். கிளியின் இந்தக் கூற்றைப் பகபதி அடியோடு மறுக்கிறார்.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 65-ஆவது பிரிவின்கீழ் விசாரணையொன்று நடத்தப்படக்கூடாது என்று பகபதி மூலம் கிளிக்கு வாய்மொழியாகவோ வேறு வகையிலோ தெரிவித்தார் என்று முடிவுக்கு வரக்கூடிய வகையில், வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ தெரிவிக்கக்கூடிய குறிப்பு ஏதும் அரசு ஆவணங்களில் காணப்படவில்லை.

K. கிளி, வர்த்தமானன், பகபதி, பிரகாசம் ஆகியோரின் சாட்சியங்களையெல்லாம் சேர்த்துப் பார்த்தால், 25—7—1970-ல் நடைபெற்ற கூட்டத்தில் முதலமைச்சர் நடந்துகொண்ட விதம், நேர்மையாகவும் நியாயமாகவும் இருந்தது என்பதும், வி. எஸ். டி.-க்குச் சாதகமான முறையில் அல்லது, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு விவகாரங்கள் குறித்த உத்தேச விசாரணைக்கு எதிரான முறையில் ஒருதலைப்பட்சமாக இல்லவேன் பதும் உறுதியாகிறது. வி. எஸ். டி. தன்னுடைய நண்பரென்பதை அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவந்த முதலமைச்சர், அவர்கள் விசாரணைப் பணியைத் தொடர வேண்டுமென்றும், முறைகேடு எதற்கேனும் வி. எஸ். டி. தவிப்பட்டமுறையில் காரணமாக இருந்தார் என்று காட்டக்கூடிய சரியான சான்று விசாரணையில் வெளிப்பட்டால், அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் கூறினர். ஆகவே, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் விவகாரங்கள் தொடர்பாக முதலமைச்சர் நடந்துகொண்ட விதத்தில் 25—7—1970-க்குப் பிறகு குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் இருந்ததா என்பதை ஆலோசித்துப்பார்க்க வேண்டும்.''

ஆவணம் 1-ல், 3—4ஆம் பக்கங்களை ஆராய்ந்து பார்த்ததில், 28—7—1970-ல் பகபதி அனுப்பிய கோப்பில் ''விவாதிக்கப்பட வேண்டும்'' என்று குறிப்பு எழுதியிருந்தார்; அ(தொ) (தொழில் துறை அமைச்சர்) என்ற எழுத்துக்கள் பேனா மையினுல் அடிக்கப்பட்டிருந்தன. அடுத்த பக்கத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் குறிப்பு எழுதியுள்ளதாகத் தோன்றுகிறது; அது வருமாறு:—

* ''செயலாளருடன் விவாதிக்கப்பட்டது'', கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் அனுமதி பெற விருக்கும் விசாரணையை நடத்த மற்றெரு

துறையைச் சேர்ந்த அதிகாரியை நியமிப்பது அவசியமில்லை என்று கருதப்படுகிறது. கூட்டுறவுச் சங்கப் பதிவாளர், தனது நிர்வாகப் பொறுப்பிலுள்ள அதிகாரிகளின் உதவியுடன், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் தருந்த நடவடிக்கை எடுக்குமாறு ஆலோனை கூறப்படலாம். இதை உடனடியாகச் செய்யலாம். இதுவகையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு, இக் கோப்பு, சுற்றோட்ட முறையில் முதலமைச்சருக்கு அனுப்பப்படலாம்.

(ஒப்பம்) சி.பா. ஆதித்தனார்,
25-8-1970,
அமைச்சர் (கூட்டுறவுத்துறை)

இந்தக் குறிப்புக்குக் கீழே '' CM '' என்ற தட்டச்சு எழுத்துக்களுக்கெதிரே '' (e.n.) என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் தம் கைப்பட எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தின் மீது '' தேர்தலில் பிறப்பிக்கப்பட்ட பிறகு '' (after issue) என்னும் பொருள்பட அவ்வாறு எழுதியிருக்கிறார்.

எனினும், சம்பந்தப்பட்ட ஆவணத்தைத் தருவிப் பார்த்ததில், இந்தக் கோப்பில் 17-8-1970 என்று முதலமைச்சர் அலுவலகத்தின், தேதி முத்திரை காணப்படுவதால், 17-8-1970-ல் இது முதலமைச்சர் அலுவலகத்திற்குப் போயிருப்பதாகத் தோன்றுகிறது; இக் கோப்பின் முதலமைச்சருக்கு அனுப்பியதும், '' விவாதிக்கப்பட வேண்டும் '' என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் மேற்குறிப்பு எழுதியதும் தேவையாக இருக்கிறது. இவ் விஷயம் முதலமைச்சருடன் விவாதிக்கப்படும் என்று இந்த மேற்குறிப்பு கூறுவதாகப் பொருள் கொள்ளலாம்.

கூட்டுறவுத் துறை அமைச்சரின் 25-8-1970 ஆம் தேதியிட்ட குறிப்பு (மேலே சொல்லப்பட்டது,) துண்டுத்தாள் ஒன்றில் தட்டச்சு செய்யப்பட்டு, 21-8-1970 ஆம் தேதியிட்ட மற்றொரு குறிப்பின் மீது ஒட்டப்பட்டிருக்கிறது என்று கூறுவதே இங்கு பொருத்தமுடையதாகும். 25-8-1970 ஆம் தேதியிட்ட குறிப்பு எழுதி ஒட்டப்பட்ட தாளுக்குக் கீழே இருந்த 21-8-1970 ஆம் தேதியிட்ட பழைய குறிப்பு இன்னும் ஒருவாறு புலப்படுகிறது. 21-8-1970 ஆம் தேதியிட்ட பழைய குறிப்பின் முதல் வாக்கியம் அடிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தவிர, 25-8-1970 ஆம் தேதியிட்டு ஒட்டப்பட்ட குறிப்பும் 21-8-1970 ஆம் தேதியிட்ட பழைய குறிப்பும் ஒரே மாதிரியானவை என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். மேற்படி குறிப்பில் அடிக்கப்பட்ட பகுதி ''முதலமைச்சருடன் இதை நான் விவாதித்தேன் '' என்பதாக விசாரணைக் கமிஷனுக்கு உதவியாகப் பணியாற்றும் புலனுய்வு அலுவலர், புற சிவப்புக் கதிர் ஒளிவீச்சில் படம் பிடித்துக் கண்டறிந்தது. ஆகவே, கூட்டுறவுத் துறை அமைச்சர், இந்த விஷயத்தை 21-8-1970-ல் முதலமைச்சருடன் விவாதித்ததையடுத்து மேற் குறிப்பு எழுதினர் என்ற ஊகம் செய்வது தவறு காது. அதன் பின்னர், இந்த விஷயத்தைத் தான் முதலமைச்சருடன் விவாதித்ததாகக் குறிப்பிடும் சொற்களை நீக்கிவிட்டு, பழைய மேற்குறிப்புக்குப் பதிலாக, 25-8-1970-ல் புதிய குறிப்பு ஒன்று எழுதியிருப்பதற்குக் காரணம் என்ன என்பது அமைச்சருக்கே வெளிச்சம்.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65 ஆவது பிரிவின் கீழ் விசாரணையொன்று, நடத்துவதென முதலில் உத்தேசிக்கப்பட்டது என்ற வகையில், முதலமைச்சர் உத்தரவின் பேரில், தான் செய்திருக்கக்கூடிய இந்த மாற்றம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்கு எதிராக மேற்கொள்ளப்படவிருந்த நடவடிக்கையில் செய்யப்படும் மாற்றம் என்றே பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது என்றும், ஆனால், 25-8-1970 ஆம் தேதியிட்ட இந்தக் குறிப்பு, '' கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் தன்னுடைய நிர்வாகப் பொறுப்பிலுள்ள அதிகாரிகளின் உதவியுடன், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பொருத்தமான நடவடிக்கை எதனையும் '' மேற்கொள்ளும் விருப்ப அதிகாரத்தைக் கொடுத்து என்னும் வாஸ்தாமாவில் தெரிவித்தார். கூட்டுறவுத் துறை அமைச்சருடன் முதலமைச்சர் நிர்வாகப் பொறுப்பிலுள்ள அதிகாரிகளின் உதவியுடன், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பொருத்தமான நடவடிக்கை எதனையும் '' மேற்கொள்ளும் விருப்ப அதிகாரத்தைக் கொடுத்து என்னும் வாஸ்தாமாவில் தெரிவித்தார். கூட்டுறவுத் துறை அமைச்சருடன் முதலமைச்சர் விவாதித்த போது, தனது நண்பர், வி.எஸ்.டி.-யையும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பைச் சேர்ந்த அவரது (வி.எஸ்.டி.) கூட்டாளிகளையும் காப்பாற்றுவதற்காக, முதலமைச்சர் கொடுத்த நேர்மையற்ற — இரகசியமான உத்தரவுகளை மறைப்பதற்காகவே அந்தக் குறிப்பில் இந்த மாற்றம் செய்யப்பட்டதாக வாதிடப்படுகிறது.

இந்த வாதம் கற்பனைச் சிறகடித்துப் பறக்கும் வகையில் எங்கோ போகிறது. ஆவணத்தில் அல்லது 21-8-1970 ஆம் தேதியிட்ட முதல் குறிப்பிலும் அதற்குப் பதிலாக எழுதப்பட்ட 25-8-1970 ஆம் தேதியிட்ட குறிப்பிலும் உள்ளதை மட்டும் நாம் எடுத்துக் கொண்டால், அது, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் எடுக்கக் கூடிய நடவடிக்கை தொடர்பாக அரசு கொண்டுள்ள நிலையில் குறிப்பாதற்காக மாற்றம் ஏற்பட்டிருப் பதாகக் குறிப்பிடுகிறதெனக் கொள்ள முடியாது. விசாரணை நடத்த, கூட்டுறவுத் துறையைச் சாராத அதிகாரியொருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதே உத்தேசமாக இருந்ததால், நியமன விஷயத்தை அந்நாள் பதிவாளர் சேசவ் ளினி, அரசின் பரிலேனிக்கு அனுப்பிய தாகத் தோன்றுகிறது. 65 ஆவது பிரிவின் கீழ் விசாரணையொன்று நடத்தப்பட வேண்டுமா அல்லது தனிப்பட்ட தணிக்கை செய்யப்பட வேண்டுமா அல்லது தமிழ்நாடு கூட்டுறவச்

சங்கங்கள் சட்டத்தின் கீழ் மேற்கொள்ள சூழ் நிலைகளில் வேறு நடவடிக்கை ஏதேனும் மேற் கொள்ளப்பட வேண்டுமா என்பது, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கே அதிகாரம் உள்ள ஒன்றாகும். பதிவாளர், அவராகவே அல்லது அவர் எழுத்து மூலமாக அதிகாரமளித்துள்ள ஒருவர் மூலமாக, விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு, 65 ஆவது பிரிவின்கீழ் அரசின் முன் அனுமதியைப் பெறுவது அவசியமில்லை.

65 ஆவது பிரிவின்கீழ் விசாரணையொன்று நடத்த உத்தரவிடாமல் 64 ஆவது பிரிவின்கீழ் தனித் தனிக்கை மட்டுமே நடத்த உத்தரவிட வேண்டுமென வாய்மொழியாகப் பதிவாளரிடம் தெரிவிக்கப்பட்டது என்று திரு. வானமாமலை வாதிடுகிறார்; பதிவாளரின் அதிகாரத்தை, தகுந்த தொரு வாய்மொழி உத்தரவின் மூலம் அவரது விருப்பப்படி மாற்றிக்கொள்வதற்குப் போதுமான வாய்ப்பு ஏற்படுத்துவதுதான் அமைச்சரின் 25—8—1970 ஆம் தேதியிட்ட உத்தரவின் நோக்கமாகும். அந் நாள் பதிவாளரான சேஷ்ஷினியின் வாக்குமூலம் இது தொடர்பில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

கினியின சாட்சியத்தை ஆராய்வதற்கு முன்னர் அமைச்சரின் 25—8—1970 ஆம் தேதியிட்ட குறிப்பை வரப்பெற்ற கூட்டுறவுத் துறைச் செயலாளர், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் அமைப்பு, செயல்முறை, நிதி நிலைமை ஆகியவை குறித்து அரசு வணிகத் திட்டக் குழு விசாரணை நடத்த வேண்டுமென விடுத்த வேண்டுகோளை அரசு கவனமாகப் பரிசீலனை செய்ததாகவும், பதிவாளரின் அங்கி காரம் பெறக்கூடிய வகையில் விசாரணை நடத்து வதற்கு வேறெரு துறை அதிகாரி அவசிய மில்லை என்று கருதுவதாகவும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்குத் தெரிவித்து, 27-8-1970-ல் கடிதமொன்று அனுப்பினர் என்பதை இங்குக் குறிப்பிடலாம். அந்தக் கடிதம் பின்வருமாறு முடிகிறது :

''அதையொட்டி, உங்கள் நிர்வாகப் பொறுப்பிலுள்ள அதிகாரிகளின் உதவியுடன், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் தகுந்த நடவடிக்கை ஏதேனும் எடுக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.''

அதே நாளான 27—8—1970 அன்று தலைமைத் தணிக்கை அதிகாரி, தன் பொறுப்பி லுள்ள தனித் தணிக்கைக் குழுவின் உதவியைத் தேவையான அளவுக்குப் பயன்படுத்தி, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் கணக்குகளைத் தணிக்கை செய்யுமாறு தலைமைத் தணிக்கை அதிகாரியான திரு. கே. வைத்தியநாதனைத் தான் கேட்டுக்கொண்டதாகக் கூட்டுறவுத் துறை செயலாளரிடம் பதிவாளர் (கூட்டுறவுத் துறையின் 18—4—1972 ஆம் நாளிட்ட 197 ஆம் எண் அரசாணையின் 15ஆம் பக்கத்தைக் காண்க, தெரிவித்தார். சட்டத்தின் 64ஆவது பிரிவின் கீழ், பதிவாளருக்குரிய அதிகாரங்களை மட்டும் தலைமைத் தணிக்கை அதிகாரி பயன்படுத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

65 ஆவது பிரிவின்கீழ் விசாரணை செய்வது அவசிய மென்று தணிக்கையின்போது தெரியவந்தால், அதுவகையில் தேவையான உத்தரவுகளைப் பெற, தலைமைத் தணிக்கை அதிகாரி அரசை அணுக வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந் தார்.

கமிஷனுக்கு உதவியாகச் செயல்பட்டு வரும் புலனுய்வு அலுவலர், சட்டத்தின் 5-A பிரிவின் கீழ் சேஷ்ஷினியை விசாரணை செய்தார். சேஷ்ஷினி உறுதிமொழிப் பத்திரம் ஒன்றையும் தாக்கல் செய்தார். சட்டத்தின் 64 ஆவது பிரிவின்கீழ் தனித் தணிக்கை ஒன்றை மேற் கொள்ளுமாறு தலைமைத் தணிக்கை அதிகாரிக்கு எத்தகைய குறிப்பையேனும் தான் உத்தரவு பிறப்பித் தார் என்பது குறித்து, கினி தனது வாக்கு மூலத்தின் 8 ஆவது பாராவில் பின்வருமாறு கூறியுள்ளார் :—

''8. கூட்டுறவுத் துறைச் செயலாளர் திரு. ஆர். பகபதி, ஐ. ஏ. எஸ். அவர்களிட மிருந்து 27—8—1970 ஆம் தேதியிட்ட, 22517 CA/1/70 ஆம் எண்ணுள்ள நேர்முகக் கடிதம் பெறப்பெற்றதன்பேரில், இவ் விஷயம் குறித்து அவருடன் நேரில் விவாதித்தேன்; தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் கணக்கு மீதத் தணிக்கை செய்தாலே போதும் என்றும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணை நடத்துவது அவசியமில்லையென்றும் அவர் தெரிவித்தார். கூட்டுறவுத் துறைச் செயலாளரிடம் நான் தனியே விவாதித்துக் கொண்டிருந்தபோது, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் செயல் முறை குறித்து 65 ஆவது பிரிவு விசாரணை நடந்த முன்னுள் முதலமைச்சர் விரும்பவில்லை யென்றும், ஆகவே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 64 ஆவது பிரிவின்கீழ் தனிக்கையொன்று செய்தாலே போதுமென்றும் செயலாளர் கூறினர்.''

அந்த முடிவு, அதாவது, விசாரணை நடத்த வேண்டாமென்ற முடிவு, முதலமைச்சர் செய்த முடிவென்று கூட்டுறவுத்துறை அமைச்சர் தெரிவித்ததாகவும் கினி கூறியுள்ளார். அவர் மேலும் கூறினர்:

''9. இத்தகைய சூழ்நிலைகளில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் செயல்முறை

குறித்து, நான் கடையாக எழுதிய 27—7—1970 ஆம் தேதியிட்ட R. C. 106188/P.A/70 ஆம் எண் கடிதத்தில் கூறியிருந்ததுபோல, 65-ஆவது பிரிவு விசாரணை நடத்த வேண்டுமென கேட்பது அவசியமென நான் உணர்ந்திருந்தேன்; இருந்தாலும், கூட்டுறவுத் துறைச் செயலாளரின் வாய்மொழி உத்தரவின் காரணமாக நான் என்னுடைய முடிவைக் கைவிட வேண்டியிருந்தது. ஆகவே, தனித் தணிக்கைக் குழுவின் உதவியுடன், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் கணக்கைத் தணிக்கை செய்யுமாறு தலைமைத் தணிக்கை அதிகாரி திரு. கே. வைத்தியநாதனைக் கேட்டுக்கொண்டதாக 27—8—1970 ஆம் தேதியிட்ட 106188/70/P. A. எண்ணுள்ள எனது நேர்முகக் கடிதத்தில் அவருக்குத் தெரிவித்தேன்.''

இவ் விஷயத்தில் திரு. பகபதி என்ன சொல்லிருர் என்று இப்போது பார்க்கலாம். கேசவ் கினியிடமிருந்து 27—8—1970 ஆம் தேதியிட்ட நேர்முகக் கடிதம் வரப்பெற்ற செயலாளர் (பகபதி), ஏன்ய குறிப்புகளுடன் கீழ்க்கண்டகுறிப்பையும்எழுதினர்:

''தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டத்தின் 66வதாவது பிரிவின்கீழ் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கே அதிகாரங்கள் இருப்பதால், கடைசி வாக்கியம் தேவையற்றது.''

செயலாளரின் இந்தக் குறிப்பு முற்றிலும் சரியானதென்று எனக்குத் தோன்றுகிறது. கூட்டுறவுத் துறை அமைச்சரின் 25—8—1970 ஆம் தேதியிட்ட குறிப்புடன், இக் கோப்பு 25—8—1970 ஆம் தேதியன்று தனக்குத் திரும்பி வந்ததாகப் பகபதி தன்னுடைய உறுதிமொழிப் பத்திரத்தின் 12-ஆவது பாராவில் கூறியுள்ளார். அதன்பின் அவர் கூறினர்: ''29—7—1970 ஆம் தேதியிட்ட மேற்சொன்ன குறிப்பு, அலாதியாகவும் புதுமையாகவும் இருக்கிறது. கூட்டுறவுத்துறை அமைச்சருடன் விவாதிப்பது குறித்த மேற்சொன்ன குறிப்புடன், கோப்பு எனக்கு ஒருபோதும் வரவில்லை. 25—8—1970 அன்றுதான் இக் கோப்பு எனக்குத் திரும்பிவந்தது. எனினும், பகபதி தனது உறுதிமொழிப் பத்திரத்தின் 13-ஆவது பாராவில் பின்வருமாறு கூறுகிறர்:

''13. கூட்டுறவுத் துறை அமைச்சரின் 25—8—1970 ஆம் தேதியிட்ட உத்தரவு, நிதித் துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர், நான் ஆகியோர் செய்த பரிந்துரைகளுக்கேற்ப இல்லை. சம்பந்தப்பட்ட கோப்பு, 29—7—1970 (குறிப்புக்குத் தலைமை செயலாளர் ஒப்புதல் அளித்த தேதி) தேதியிலிருந்து 25—8—1970 ஆம் தேதி (அமைச்சரின் உத்தரவுகளுடன் கோப்பு திரும்பப் பெற்ற தேதி) வரை சுற்றேட்டத்தில் இருந்தபோது, இவ் விஷயம் குறித்து அவர் என்னுடன் விவாதம் எதுவும் நடத்தியிருக்கக்கூடும் என ''செயலாளருடன் விவாதிக்கப்பட்டது'' என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் எழுதியுள்ள குறிப்பிலிருந்து ஊகம் கொள்வது சரியல்ல..... .....முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற விவாதங்களில் ஏதேனும் முடிவெடுக்கப்பட்டிருந்தால், அந்த முடிவை முதலமைச்சர்தான் மாற்றியிருக்க முடியும். கூட்டுறவுத் துறை அமைச்சரின் 25—8—1970 ஆம் தேதியிட்ட உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கு முதலமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளார் என்பதால், கூட்டுறவுத் துறை அமைச்சர், 25—8—1970 ஆம் தேதியிட்ட தன்னுடைய உத்தரவுகளுக்கு முதல் அமைச்சரின் முன் அனுமதி பெற்றிருக்கிறர் என்றே தெளிவாக எடுத்துக் கொள்ள வேண்டும். .....''

''65-ஆவது பிரிவின்கீழ் விசாரணையை நடத்த வேண்டும் என்பதுதான், முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவாகும். இதற்கென்று திரு. அழிமுதின் நியமீக் தப்படுவதாக இல்லையென்றாலும், 129(1)-ஆவது பிரிவின்கீழ் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்குத் தாக்கீது ஒன்றைப் பிறப்பித்து அந்த முடிவைச் செயற்படுத்தியிருக்க முடியும்; ஆனல், அமைச்சரின் 25—8—1970 ஆம் தேதியிட்ட குறிப்பு உரிமையைக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்குக் கொடுத்தது.''

அடுத்து, 25—8—1970 ஆம் தேதியிட்ட அமைச்சர் உத்தரவைச் செயற்படுத்துவதற்காக, பதிவாளருக்குத் (கேசவ் கினிக்கு) தான் அனுப்பிய 27—8—1970 ஆம் தேதியிட்ட நேர்முகக் கடிதத்தைப் பற்றி சாட்சி குறிப்பிடுகிறர். நேர்முகக் கடிதம் அனுப்பப்பட்ட பிறகு, 28—8—1970-ல் அக் கோப்பு முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டு, 24—9—1970-ல் அவருடைய ஒப்புதலைப் பெற்றது. 15 ஆவது பாராவில் ஏனேயவற்றைக் கூறும்போது, கீழ்க்கண்டதையும் சாட்சி கூறியுள்ளார் :—

''இவ் விஷயத்தில் தன்னுடைய (கூட்டுறவுத் துறை அமைச்சருடைய) உத்தரவின்படி கேசவ் கினி நடந்து கொண்டதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் கூறியது இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. அவர் எடுக்க வேண்டியிருந்த இந்த நடவடிக்கை முறைபற்றி திரு. கேசவ் கினிக்கு ஆலோசனை அல்லது உத்தரவு எதுவும் நான் கொடுக்கவில்லை.''

K. கினிக்கு 27—8—1970 ஆம் தேதியிட்ட நேர்முகக் கடிதம் எழுதிய அதே நேரத்தில் 65 ஆவது பிரிவு விசாரணையொன்றை நடத்தக் கூடாதென்றும் 64 ஆவது பிரிவின்கீழ் தணிக்கை யொன்று நடத்திஞலே போதுமென்றும் முதலமைச்சர் விரும்புவதால், 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணையொன்று கினி நடத்தக்கூடாதென்று பகபதி தன்னிடம் வாய்மொழியாக

உத்தரவிட்டதாக, இனி கூறியுள்ளதை பகபதி மறுக்கிறார்.

திரு. பகபதி, முதலில் அதிகாரியாவார்; அப்படியிருக்க, ஒரு வித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எழுத்து மூலமாகக் குறிப்பிட்டு விட்டு, வேறு விதமாக நடக்க வேண்டுமென்று வாய்மொழியாக உத்தரவிட்டு இரட்டைவேட மிட்டார் என்று நம்புவது கடினமாயிருக்கிறது. 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணையொன்று நடத்த அரசின் அனுமதியைப் பெறுவது தொடர்பாக, 27—8—1970-ல் கேசவ் இனி எழுதியுள்ள கடிதத் திற்கு எதிரான வாதம் (எற்கெனவே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது). அந்த அனுமதி அவசிய மென்று கருதப்பட்டால், அது, சட்டத்தின் 64 ஆவது பிரிவின்கீழ் மட்டும் நடவடிக்கை மேற் கொள்ள பகபதியிடமிருந்து வாய்மொழி உத்தர வுகள் பெற்றதாகக் கூறும் இனியின் வாதம் உண்மையா என்பதை ஐயப்பாட்டுக்கு உரியதாக்குகிறது.

மேலும், சட்டத்தின் 65 ஆவது பிரிவின்கீழ், பதிவாளரைக்கொண்டு விசாரணையொன்று நடத்த வேண்டுமென எடுக்கப்பட்ட முடிவு, 25—7—1970 ஆம் தேதி முதலமைச்சர் கலந்து கொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவாகும் என்று கேசவ் இனி கூறுகிறார்.

நிலைமை அதுவாக இருந்தால், அந்த முடிவி லிருந்து மாறுபடுவதற்கு முன்னர் அது குறித்து முதலமைச்சரின் கருத்து என்ன என்பதை உரிய வகையில் எழுத்து மூலமாகத் தெரிந்து கொண் டிருக்க வேண்டும் என்பது இயல்பான அலுவலக நடைமுறைகளில் வகுக்கப்பட்டுள்ள நியதி யாகும். அவ்வாறே முதலமைச்சர் ஏதேனும் கருத்து தெரிவித்திருந்தாலும், முதலமைச்ச ரிடமிருந்து செயலாளர் மூலம் (அவர் இது போல கூறுகிறார்) வாய்மொழியாகப் பெற்ற உத் தரவுகளை அல்லது கருத்துரைகளை, ஏற்றுக்கொள் ளப்பட்ட வழக்கப்படி, கோப்பிலாவது அலு வலகப் பதிவேடுகளில் எங்காவது குறித்துக் கொண்டிருக்க வேண்டும். அதை அவர் செய்ய வில்லை என்பது, 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணை நடத்துவதைக் கைவிடுமாறும், பதிலாக, 64 ஆவது பிரிவின்கீழ் தனித் தனிக்கையொன்று நடத்துமாறும் வாய்மொழி உத்தரவுகள் எவை யேனும் அவர் பெற்றார் என்பதைச் சந்தேகத்திற்கு இடமாக்கிவிடுகிறது.

அது எப்படியிருந்தாலும், இவ் விஷயத்தில் பகபதி, கேசவ் இனி ஆகிய இருவரில் யார் உண்மை கூறவில்லை என்று தீர்மானிப்பது கடினமாக இருக்கிறது. ஆனால், இவ் விஷயத்தில், தன்னு டைய (அமைச்சருடைய) உத்தரவுகளின்படி கேசவ் இனி நடந்துகொண்டார் என்று அச் சமயத்தில் அமைச்சர் தன்னிடம் தெரிவித்த தாகப் பகபதி கூறுவது மட்டும் கேசவ் இனியின் வாக்குமூலத்தை ஒத்திருக்கிறது (மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ள 15 ஆவது பாராவின் கடைசி வாக்கியத்தைக் காண்க).

"65 ஆவது பிரிவு விசாரணை அவசியமென்று தணிக்கையில் தெரியவரும்போது தேவையான உத்தரவுகள் பெற தலைமைத் தணிக்கை அதிகாரி, அரசு அனுமதிவேண்டும்" என்ற வாசகத்தை 27—8—1970ஆம் தேதியிட்ட தனது உத்தரவில் இனி சேர்த்துக்கொண்டது, அரசின் உத்தரவின் பேரில்தான் அவ்வாறு செய்யப்படுகிறது என்ப தையும், மேற்கொண்டு எடுக்கும் நடவடிக்கையும் அந்த உத்தரவுகளின் அடிப்படையில்தான் அமைந்திருக்கும் என்பதையும் சூசகமாகத் தெரிவிக்கின்றன என்று வானமாமலை வாதம் செய்தார்.

இனியின் சுடித்தில் இந்தப் பகுதிக்கு எதிராகப் பகபதி கூறும் வாதம், அரசிடமிருந்து வாய் மொழி உத்தரவுகள் பெற்றே தான் செயல்பட்டதாகக் கூறும் இனியின் வாதத்திற்கு எதிராக உள்ளது என்பது ஏற்கெனவே சொல்லப் பட்டுள்ளது. இந்தத் தகவல் இனிக்குத் தெரியப் படுத்தப்பட்டதாகக் காட்டுவதற்குச் சான்று ஏதும் இல்லாததின், பகபதியின் எதிர் வாதத்தை விரிவான அளவில் ஏற்பதற்கில்லை. பல்வேறு சங்கமோனின் கணக்குகளின் எச் சமயத்திலும் தணிக்கை செய்ய அல்லது தணிக்கை செய்விக்க பதிவாளருக்கு அதிகாரமளிக்கக் கூடிய தனி விதித் துறையொன்று தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத் தின் 64 ஆவது பிரிவில் உள்ளது என்பதையும், அந்தத் தணிக்கையில் தெடு முடிவடைந்த கடன் தொகைகளை (எவையேனும் இருப்பின்) ஆய்வு செய்வது, சங்கத்தின் ரொக்க இருப்பையும் பிணையத் தொகைக கணக்கையும் சரி பார்ப்பது, இருப்புகளையும் பொறுப்புகளையும் மதிப்பீடு செய்வது ஆகியவற்றையும் 64 ஆவது பிரிவின் (1) உட்பிரிவில் அடங்கும் என்பதையும் இங்குக் குறிப் பிடலாம், (3) உட்பிரிவின்படி, பதிவாளர் அல்லது (1) உட்பிரிவின்கீழ் அவரால் அதிகார மளிக்கப்பட்ட ஒருவர், நியாயமான சமயங்கள் எல்லாவற்றிலும், சங்கத்திற்குச் சொந்தமான அல்லது சங்கத்தின் பொறுப்பிலுள்ள புத்தகங்கள், கணக்குகள், ஆவணங்கள், பிணையங்கள், ரொக்கம், ஏனைய சொத்துகள் ஆகியவற்றைத் தடையின்றிப் பார்வையிட அதிகாரம் உண்டு; அத்தகைய புத்தகங்கள், கணக்குகள், ஆவணங்கள், பிணையங்கள், ரொக்கம் அல்லது ஏனைய சொத்துக்களைச் சங்கத் தலைமையிடத்தைச் சேர்ந்த ஒரிடத்தில் அல்லது அதன் கிளையொன்றில் சமர்ப்பிக்குமாறு அவற்றைத் தன் வசம் வைத்துள்ள அல்லது பொறுப்பில் வைத்துள்ள ஒருவருக்கு, அவர் அழைப்பாணை கொடுக்கலாம்.

'' சங்கத்தில் எந்தச் சமயத்திலேனும் அதிகாரியாக அல்லது பணியாளராக இருக்கும் அல்லது இருந்திருக்கும் ஒவ்வொருவரும், சங்கத்தில் உறுப்பினராய் இருக்கும் அல்லது இருந்திருக்கும் ஒவ்வொருவரும், சங்கத்தின் பற்று வரவுகள் குறித்தும் செயல்முறை குறித்தும், பதிவாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒருவர் கேட்கக்கூடிய தகவல்கள் கொடுக்க வேண்டும் '' என்று (4) உட்பிரிவு கூறுகிறது.

''தவறுகள் எவையேனும் நடந்திருப்பதாகத் தெரியவந்தால், தணிக்கையில் அவற்றை ஆணையில் குறிப்பிட்ட காலத்திற்குள் கூறவதற்கு, ஆணையில் குறிப்பிடப்படக்கூடிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சங்க அதிகாரி எவருக்கும் எழுத்து மூலமான உத்தரவைப் பதிவாளர் பிறப்பிக்கலாம் '' என்று (5) உட்பிரிவு கூறுகிறது.

65-வது பிரிவின் விசாரணை வரம்பு மிகவும் பரந்தது.

இப் பிரிவின்படி பதிவாளர் தன்னிச்சையாகவோ, மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் விண்ணப்பம் செய்துகொள்வதன் பேரிலோ மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்வதன் பேரிலோ, பதிவு பெற்ற சங்கமொன்றின் அமைப்பு செயல் முறை, நிதி நிலைமை ஆகியவை குறித்து விசாரணையொன்று நடத்தலாம் ; அல்லது விசாரணையொன்று நடத்துமாறு, இதுவரையில் எழுத்து மூலமான உத்தரவின்படி அவரால் (பதிவாளரால்) அதிகாரமளிக்கப்பட்ட ஒருவருக்குக் கட்டளையிடலாம். 65 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ், ஒரு சங்கத்தின் நிதி நிலைமையை விசாரணை செய்வதில், அச் சங்கத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்வதும் நிச்சயமாக அடங்கும். எனினும், 65 ஆவது பிரிவின்கீழ், குறிப்பாக, நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பி அவர்களை விசாரணை செய்யும் விஷயத்தில் விசாரணை அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்கள், 64 ஆவது பிரிவின்கீழ் விசாரணை அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்களை விட விரிவானவையாகும்.

சங்கத்தின் விவகாரங்கள் பற்றி நன்கு தெரிந்து வைத்திருப்பவர் என்று அவர் நம்பக்கூடிய எவரையேனும் வரவழைத்து உறுதிமொழியின் மேல் பரிசீலனை செய்யவும் புத்தகங்கள் கணக்குப் புத்தகங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்வது தவிர பொதுக்குழுவின் கூட்டங்களைக் கூட்டவும் 65-வது பிரிவின்கீழ் அவர் அதிகாரமுள்ளவராவார்.

64-வது பிரிவின்கீழ் அவர் சங்கத்தின் கணக்குப் புத்தகங்களையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்யலாம். அந்தக் கணக்குப் புத்தகங்கள் ஆவணங்கள் ரொக்கங்கள் சங்கத்தின் சொத்துக்கள் தொடர்பாக தகவல் கொடுக்கக்கூடிய மேற்படி சங்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் பணியாளர்கள் அல்லது நிகழ்கால உறுப்பினர்கள் பணியாளர்கள் ஆகியோர்களை மட்டுமே விசாரணை செய்யலாம் ; ஏனையோரை விசாரணை செய்யக்கூடாது.

எனவே, 65-வது பிரிவின்கீழ் விசாரணை ஒன்றை நடத்துவதற்காக 27—7—1970 நாளிட்ட தனது முந்தைய செயற்குறிப்புக்கு மாறுதலாக 64-வது பிரிவின் கீழ் தணிக்கை நடத்தவேண்டுமென்று கிளி ஆணையிட்டபோது அவர் மேலிடத்து உத்தரவுகளின்படி, அதாவது, அமைச்சரின் உத்தரவின்படி நடந்து கொண்டிருக்கிறார். ஆனால் மேற்படி சட்டத்தின் 64-வது பிரிவு என்று தணிக்கைக்கு விசாரணையை வரையறுக்குமாறு செய்த தனால் எவ்வித பெரிய நிருபம் ஏற்படவில்லை. 64-வது பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்று பதிவாளர் பின்னர் 65-வது பிரிவின்கீழ் விசாரணை ஒன்றை நடத்துமாறு ஆணையிடுவதைத் தடுப்பதாகச் சட்டத்திலோ விதிகளிலோ எந்தவித மான விதித்துறையும் இல்லை. சொல்லப் போனால், சங்கத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ளுதல், கணக்குகளச் சோதனையிடல் தொடர்பான ஆவணங்களையும் ரொக்கத்தையும் ஏனைய சொத்துகளையும் சரிபார்த்தல் ஆகியவை மேற்படி சட்டத்தின் 65-வது பிரிவின்கீழ் விசாரணை ஒன்றை நடத்துவதற்கு வசதியான முன்னேடியாக அமையலாம். சங்கத்தில் பணம் கையாடல் நடந்திருக்கின்றதா மோசடி நடந்திருக்கின்றதா அல்லது வேறு ஏதாவது முறைகேடு நடந்திருக்கின்றதா என்பதைத் தணிக்கையிலிதான் கண்டுபிடிக்கமுடியும்.

வி. எஸ். டி. முதலியார், ஏனையோருக்கு எதிரான இழப்புத் தொகை வசூல் நடவடிக்கைகளைக் கவனித்த இணைப்பதிவாளர் கணக்குப் புத்தகங்கள் இல்லாத காரணத்தினால் பல்வேறு முறைகேடுகளைத் தனது அறிக்கையில் விட்டுவிட்டார். இதனால் உத்தேச இழப்புத் தொகை வசூல் தொகையான 117 லட்சத்தை ரு. 7 இலட்சமாகக் குறைத்துள்ளார். இதிலும் இந்த 7 இலட்சம் தொகையும் உறுதியாக்கப்படவில்லை. 65-வது பிரிவின்கீழ் விசாரணை ஒன்று நடத்தப்பட்டிருந்தால், விசாரணை அதிகாரி தம்முன் சமர்ப்பிக்கப்படும் புத்தகங்கள் கணக்குப் புத்தகங்கள் ஆகியவற்றைத் தீவிரமாகப் பரிசீலனை செய்வதைத் தவிர முழு விவரங்களையும் அலசி ஆராய்ந்து உண்மையைத் தெரிந்து கொள்வார். கணக்குகள் பல வைத்து வரப்படவில்லை. அவை காணமல் போய்விட்டன, அல்லது மறைக்கப்பட்டுவிட்டன எனறு புலனுய்வு அதிகாரி தனது புலனுய்வு அறிக்கையின் I-வது தொகுதியில் 302-வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதை இந்த சந்தர்ப்பத்தில் வானமாமலை குறிப்பிடுகிறார்.

இந்த வாதம் செல்லாது என்று எனக்குத் தோன்றுகிறது. 64-வது பிரிவின்கீழ் முழு, சிறப்புத் தணிக்கை ஒன்றை நடத்துவதற்கான அவசியத்தை அது வலியுறுத்துகிறது. இழப்புத்

தொகை வசூல் நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்னமே இத்தகைய நிறப்புத் தணிக்கை அவசியமெனத் தோன்றுகிறது. இன்னும் சொல்லப் போனால் 65-வது பிரிவின்கீழ் முழு விசாரணை ஒன்றை அல்லது குற்றப் புலனாய்வு ஒன்றை நடத்துவது அவசியமெனத் தோன்றுகிறது. பொதுவாக மேற்படி சட்டத்தின் ஏனைய விதித்துறை கவின்கீழ் அல்லது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்க உண்மையான அவசியம் உள்ளதா அல்லவா என்பதைக் கண்டறியத் தணிக்கை இன்றியமையாத முன்னேடி நடவடிக்கையாகும்.

II ஆவது பிரச்சினை தொடர்பாக.

இந்திய ஸ்டேட் வங்கி 1970 ஆகஸ்ட் திங்களில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் இருப்புகள் குறைவாக இருப்பதைத் தெரிந்து கொண்டது. இந்தக் கூட்டமைப்புக்கு இந்திய ஸ்டேட் வங்கி ரொக்க வசதிகளையும் கடன் வசதிகளையும் அளித்திருந்தது. எனவே, இருப்பு குறைவு பற்றித் தகவல் அனுப்புமாறு கூட்டமைப்பைக் கேட்டுக்கொண்டது. கூட்டமைப்பின் சரக்குகளைக் கூட்டுறவுத் துறை சரிபார்த்து அளித்த சான்றிதழின் நகலை அனுப்புமாறு இந்திய ஸ்டேட் வங்கியின் செயலாளர்—பொருளாளர் திரு. பசுபதிக்கு நேர்முகக் கடிதம் ஒன்று வரைந்தார். இது 11—8—1970 அன்று நடந்தது. (கூட்டுறவுத் துறையின் 29—6—1974 நாளிட்ட 285 ஆம் அரசாணையைச் சார்ந்த துறை சார்ந்த கோப்பின் 11-வது பக்கத்தைப் பார்க்க வும்.) பொருத்தமான அறிக்கைகளின் நகல் களை அனுப்புமாறு இந்திய ஸ்டேட் வங்கி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவ்வண்ணமே 30—6—1970 அன்றுள்ளவாறு சரிபார்த்தல் அறிக்கைகளின் நகல் ஒன்றை இந்திய ஸ்டேட் வங்கிக்கு அனுப்பியது.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு அனுப்பியுள்ள புள்ளிவிவரங்கள் சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்டியும், நெல் வாங்குவதற்கான நிதியிலிருந்து உரங்கள் வாங்குவதற்குத் தொகை பயன்படுத்தப்பட்டது என்று குறிப்பிட்டும் திருவாரூர் இந்திய ஸ்டேட் வங்கியைச் சேர்ந்த திரு. எஸ். ராமமூர்த்தி, வி. எஸ். டி. முதலியாருக்குக் கடிதம் ஒன்றை எழுதினார். ஏனைய முறைகேடுகளையும் அவர் சுட்டிக் காட்டினார். இதுபற்றி கவனிப்பதாக வி. எஸ். டி. முதலியார் பதில் எழுதினர்.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு கொடுக்கவேண்டிய கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படுவது பற்றி மாநில அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைத் தெரிவிக்குமாறு நிதித் துறைச் செயலாளருக்கு இந்திய ஸ்டேட் வங்கியின் துணைச் செயலாளர்—பொருளாளர் 1—10—1970 அன்று கடிதம் எழுதினர்.

இதன் மேல் 7—10—1970 அன்று தலைமைச் செயலாளர் பின்வருமாறு மேற்குறிப்பு எழுதினர் :—

''அரசின் நலனைப் பாதுகாக்கச் சீரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதில் தாமதம் ஏற்பட்டால் அரசுக்கு இடர்ப்பாடும், சங்கடமும் உருவாகும்.''

இக் குறிப்புரையை அதே நாளில் கூட்டுறவு அமைச்சர் பார்த்தார். முதலமைச்சர் 8-10-70 அன்று கீழ்க்கண்டவாறு குறிப்பு எழுதினர்.

''கூட்டுறவு அமைச்சர் உடனடியாக இது பற்றி விவாதிக்கலாம்.''

அதன் பின்னர் 26—10—1970 அன்று கூட்டுறவு அமைச்சர் பின்வருமாறு எழுதினர்:—

''முதலமைச்சருடன் விவாதிக்கப்பட்டது. செயலாளர் பேசுக''

(இந்திய ஸ்டேட் வங்கிக்குக் கொடுக்கப்பட வேண்டிய பதில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றி இந்த விவாதம் அமைந்தது போலும்!)

கூட்டுறவு சங்கங்கள் பதிவாளர் 2—11—1970 அன்று செயலாளர் பசுபதிக்குக் கடிதம் ஒன்றை எழுதினர். அதில் 30—9—1970 அன்று உள்ளவாறு கூட்டமைப்பின் நிலையைப் பற்றி அவர் விவரித்ததுடன் இந்திய ஸ்டேட் வங்கிக்குக் கொடுக்க வேண்டிய தொகை பற்றியும் அதில் குறிப்பிட்டிருந்தார். (கூட்டுறவுத் துறையின் 29—6—1974 நாளிட்ட 285 ஆம் எண் அரசு ஆணையின் கோப்பைச் சேர்ந்த 59-69 பக்கங்களைப் பார்க்கவும்.)

பதிவாளர் 2—11—1970 அன்று எழுதிய கடிதம் தெளிவில்லாமலும் முடிவு ஒன்றைச் செய்வதற்கு அவசியமான விவரங்கள் இல்லாமலும் உள்ளது என்று செயலாளர் 5—11—1970 நாளிட்ட கடிதத்தில் பதிவாளருக்கு எழுதினர்.

10—11—1970 அன்று அப்போது கூட்டுறவுச் சங்கப்பதிவாளராக இருந்த திரு. கே. ஜே. எம். ஷெட்டி, ஐ. ஏ. எஸ். அவர்கள் செயலாளரின் 2—11—1970 நாளிட்ட கடிதத்திற்கும் பதில் வரைந்தார்.

அத்தரங்கம் :

கே. ஜே. எம். ஷெட்டி, ஐ. ஏ. எஸ்.,
கூட்டுறவுப்பதிவாளர், ¦சேப்பாக்கம், சென்னை-5
நேர்முகக் கடித எண் 109937//C1/70—16 நாள் 10—11—1970.

அன்பார்ந்த பசுபதி அவர்களுக்கு,

பொருள் : விற்பனை–தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு—ரொக்க—கடன் வசதி —இந்திய ஸ்டேட் வங்கியால் கொடுக்கப்பட்டது —மேற்கொண்டும் குறிப்புரைகள்—கேட்கப் படுதல் பற்றி.

பார்வை : தங்கள் 5–11–1970 நாளிட்ட 24260/CAI/70 எண்ணுள்ள நேர்முகக் கடிதம்.

தங்களுடைய நேர்முகக் கடிதத்தில் கேட்டுள்ள வற்றிற்குப் பதில் அளிக்கும் வகையில் நான் கீழ்க் கண்டவற்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அலுவலகத்தின் 2–11–1970 நாளிட்ட R. C. 109937/CI/70-13 எண்ணுள்ள இந்த அலுவ லகத்தின் கடிதத்தில் தண்டுள்ள அறிக்கை கூட்ட மைப்பில் கிடைத்த புள்ளி விவரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. தங்களது 6–10–1970 நாளிட்ட நேர்முகக் கடிதத்தில் சொல்லியுள்ளபடி இந்திய ஸ்டேட் வங்கிக்கு பதில் அனுப்பும் நோக் கத்துடனே அக் கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளது. கூட்டமைப்பு 30–9–1970 அன்றுள்ள வாறு இந்திய ஸ்டேட் வங்கியிலிருந்து வாங்கிய கடன்கள், கடன்களைத் திரும்பத்தருவதற்கான சாத்தியக் கூறுகள் ஆகியவற்றைக் குறித்தும் விளக்குகின்றது.

(2) கூட்டமைப்பின் கணக்குகள் சரியாக எழு தப்படவில்லை என்பதை அரசு அறியும். இதன் விளைவாக, கூட்டமைப்பின் நடைமுறையில் உள்ள பல்வேறு குறைபாடுகளும் விபரீதங்களும் சரியாக மதிப்பிடப்பெற இயலவில்லை. கூட்ட மைப்பின் உண்மையான நிலையையும் உண்மை யான நிதி நிலைமையையும் கண்டறியவும் இந்த முறைகேடுகளுக்குக் காரணமானவர்களைக் கண்டு பிடிக்கவும் அரசு உத்தரவின் பேரில் சிறப்புத் தணிக்கை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத் தணிக்கை தலைமைத் தணிக்கை அதிகாரியின் மேற்பார்வையில் நடந்து வருகிறது. தங்கள் நேர்முகக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளை குழுவுக்குள்ள பொறுப்பு, துறை அதிகாரிகளுக்குள்ள பொறுப்பு ஆகியவை உட்பட இத் தணிக்கையில் விவாதிக்கப்படும். எனவே, தணிக்கை முடிவடைந்தவுடன் கூட்டமைப்பின் தெளிவான விவரம் ஒன்று தெரிய வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(3) கூட்டமைப்பிற்கு ஏற்கெனவே சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள், முறைகேடுகள் ஆகியவை குறித்து, கூட்டமைப்பிலிருந்து பதில் வரப்பெற்ற பின்னர்தான் மூலதனச் செலவிற் காக கூட்டமைப்பிற்கு மேற்கொண்டும் உதவி அளிப்பது பற்றி முடிவு செய்ய முடியும். இத்த கைய சூழ்நிலைகளில் 2–11–1970 நாளிட்ட இந்த அலுவலகக் கடிதத்தில் கருத்து தெரிவித்துள்ள படி, தொகை பற்றி வற்புறுத்த வேண்டாமென்று இந்திய ஸ்டேட் வங்கியை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்உள்ளுள்ள,
கே. ஜே. எம். ஷெட்டி.
11–11–1970.

பெறுநர் :

திரு. ஆர். பசுபதி, ஐ. ஏ. எஸ்.,
அரசுச் செயலாளர்,
கூட்டுறவுத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

(கோடிட்ட பகுதி வலியுறுத்துவதற்காக)

மேலே உள்ள கடிதத்தில் கண்டுள்ள முக்கிய மான மொழிகள் தற்போது கோடிட்டுக் காட் டப்பட்டுள்ளன. கூட்டமைப்பின் உண்மையான நிதி நிலையைக் கண்டறியும் பொருட்டு அரசின் கூட்டாளரின்படி சிறப்புத் தணிக்கை ஒன்றிற்குப் பதிவாளர் ஏற்பாடு செய்தார் என்பதைக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள வரிகள் காண்பிக் கின்றன. அத்தகைய தணிக்கைக்குப் பிறகு கூட் டமைப்பின் உண்மையான நிலைமை தெரியவரும். மேற்குறிப்பிட்டுள்ள குறைபாடுகளுக்கு காரண மானவர்களைப் பாதுகாக்க வேண்டு மென்ற முல் அசாங்கம் அல்லது சம்பந்தப்பட்ட துறை இதுதகைய நடவடிக்கையை நிச்சயமாக எடுத் திருக்காது.

10–11–1970 நாளிட்ட கடிதத்திற்குப் பதில் எழுதும் வகையில் கூட்டுறவுத் துறைச் செய லாளர் பசுபதி அவர்கள் கூட்டுறவுத்துறையின் 29–6–1971 நாளிட்ட 285-ஆம் எண் அரசு ஆணை யின் கோப்பில் 9-வது பக்கத்தில் கீழ்க்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

"இவ்விக்கையில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்களையும் அதை முடிப்பதற்கான தேதி ஒன்றை நிச்சயிப்பது குறித்தும் நான் 17–11–70 நாளன்று கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருடன் நான் பேசவிருக்கிறேன். ஆனால் இந்திய ஸ்டேட் வங்கிக்குக் கடிதம் எழுதுவது குறித்து இதற்காகக் காத்திருக்க வேண்டாம். ஆனால், இத்தகைய நிலைமை உருவாவதற்குக் காரணம் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் அலுவலகம் உரிய முறையில் நிர்வாக மேற்பார்வை பார்க் காததும் இத்தகைய நிலை உருவாக அனுமதிப் பதும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகத் தின் தவறுதான்.

(வலியுறுத்திக் காட்டுவதற்காக அடியில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.)

கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகம் திருந்த அள்வில் நிர்வாக மேற்பார்வை பார்க்கத் தவறியது என்று செயலாளர் குறை கூறியுள்ளது தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின்

நிர்வாகக் கட்டுப்பாடு முதுநிலை இணைப்பதிவாளர் திரு. ஜி. என். தாஸ் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்ததையும் அவரது பணிகள் அக் கூட்ட மைப்பின் செயலாளராகச் செயல்படுவதற்கு அரசினுல் அச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட தையும் திரு. நாரிமன் குறிப்பிட்டுள்ளார்.

16—11—1970 அன்று நிதிச் செயலாளர் மின் வருமாறு குறிப்பு எழுதினுர்.

" இந்திய வங்கிக்கு அனுப்பப்பட வேண்டிய பதில் குறித்து தகுந்த வரைவு ஒன்று தயாராக வைக்கப்படலாம். அக் கடிதம் அனுப்பப்படுமுன் நிதித்துறை அதனைப் பார்ப்பது நல்லது."

" இந்த ஆலோனை மேற்கொண்டும் தவருன நிர்வாகத்துக்கு உட்படுவதற்கு அனும திப்பதைவிட இந்த ஆலோனை நாமே மேற் கொள்வது பொருத்தமாகும்."

" கூட்டுறவுத் தணிக்கையின் நிறன் பற்றி இதிலிருந்து நாம் ஒரு பாடம் தெரிந்து கொள்ள வேண்டும். கூட்டுறவுத் தணிக்கை மேலும் செவ்வையாக நடந்திருந்தால், முன்னரே கிவப்பு விளக்கு காட்டப்பட்டிருக்கும். அரசு உத்தரவாதம் கொடுத்திருப்பதால் தலைமைத் தணிக்கையாளர் இதில் கூடுப்பாடு மேற்கொண் டிருக்க வேண்டுமென்று நிதித்துறை கருதுகிறது. ஆண்டுத் தணிக்கையை அவர் செய்ய வேண்டு மென்று கேட்கப்பட வேண்டும்."

(வலியுறுத்திக் காட்டுவதற்காக கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.)

வரைவு பதில் ஒன்றை அலுவலகம் தயாரித்தது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாகக் கொடுக்குமாறு வற்புறுத்த வேண்டாமென்று இந்திய ரிசேட் வங்கிக்கு அக் கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந் தது. 21—11—1970 நாளிட்ட குறிப்புடன் இந்த வரைவு விடை சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்ட பொழுது தலைமைச் செயலாளர் திரு. கே.பி.ராய்பா நீண்டதொரு குறிப்பை 10—12—1970 அன்று அதில் எழுதினர். இக் குறிப்பு பற்றி புலனுய்வுப் பிரிவும் மாநில அரசின் வழக்குரைஞரும் மனு தாரின் வழக்குரைஞரும் அடிக்கடி குறிப்பிடுவதால் அது முழுவதும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

" 30—6—1970 அன்றுள்ளவாறு தஞ்சா வூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் இருப்பிலுள்ள சரக்குகளே நேரடியாகச் சரி பார்த்ததன்மேல் கூட்டமைப்பிலுள்ள ரொக்க மாக மாற்றத்தக்க இருப்புகள் பொறுப்பு களைவிட 2 கோடி ரூபாய்க்கு மேல் குறைந்துள்ளன என்றும் முன்பணங்கள் வழங்குவதிலும் தணக்கு கள் வைத்து வருவதிலும் கடுமையான முறை கேடுகளைக் கூட்டமைப்பு செய்துள்ளது என்றும் மாநிலக் கூட்டுறவு வங்கியின் செயலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கவனத் திற்கும் அரசின் நாட்டத்திற்கும் 24—7—1970 அன்று கொண்டுவந்திருந்தபோதிலும், இன் றைய தேதி வரையில் கணக்குகள் தணிக்கை செய்யும் பணி முடிவு பெறவில்லை; மேலும், இத் தகைய கடுமையான முறைகேடுகளைச் செய் வதற்குப் பொறுப்பாளவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை அல்லது பொருத்தமான ஏனைய நடவடிக்கை எடுக்க எந்தச்செயலும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய நிலையின் காரணமாகக் கூட்டமைப்பின் கணக்குகளே இரண்டு மாதங்களுக்குள் அதாவது 31—10—1970-க்குள் கூட்டுறவுத் துறையின் தலைமைத் தணிக்கை அதிகாரி தணிக்கை செய்ய வேண்டுமென்று கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு அரசு கட்டளையிட்டது. இக்கால வரையறை சரிவர் பின்பற்றப்படவில்லை. தலைமைத் தணிக் கையாளர் கூட்டமைப்பின் தணிக்கையை 15—1—1971-க்குள்தான் முடிக்கமுடியுமென்று இப்பொழுது சொல்லப்படுகிறது. கூட்டுறவுத் துறை 2 கோடி ரூபாய் அளவுக்குப் பொதுப்பணத் தை முறைகேடுகள், தவருன பழக்க வழக்கங் களுக்கு உட்படுத்தியதுமில்லாமல், இத்தகைய நிலைமைக்குக் காரணமானவர்களைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்க உரிய காலத்தில் எச் செயலும் மேற்கொள்ளாதது மிகவும் கவலைக் குரிய விஷயமாகும். இந்த விஷயத்தில் இனி தாமதம் கூடாது. ஏனெனில், 2 கோடி ரூபாய் அளவில் முறைகேடுகள் நடந்துள்ளன என்பதை அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவந்தபோதிலும் இந்த நிலைமையை நிவர்த்திக்க அல்லது சரிசெய்ய நிறைவான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப் படவில்லை என்ற பொதுமக்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் ஏனையோரும் அரசைக் குறை கூறுவர். இத்தகைய முக்கியமானதொரு விவ காரத்தில் கூட்டுறவுத் துறையின் செயலாளர் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் கணக்குகளச் சிறப்புத் தணிக்கைக்கு உட் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு அவசிய மாயின் இப்பெரும் பணியை முடிக்க கூடுதல் பணியாளரைப் பணியில் அமர்த்துவதன் மூலம் அரசு நிர்ணயித்துள்ள கால அளவிற்குள் சிறப்புத் தணிக்கையை முடிக்க கூட்டுறவுத்துறை செய லாளர் உரிய நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும். அரசின் மதிப்பையும் துறையின் மதிப்பையும் பொதுப்பணத்தையும் பாதுகாப் பதற்காகத் தணிக்கையை உடனடியாக முடிக்க அல்லது எவ்வாருயினும், 1970 டிசம்பர் இறுதிக்கு முன்னர் முடிக்க நடவடிக்கை கடுமை யாக எடுக்கப்படவேண்டும். தவறு செய்த

வர்கள் மீது குற்றவியல் சட்டத்தின்படி நடவடிக்கை எடுப்பதற்காக இவ்வழக்கு காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். சாதாரண விதிகளின் கீழ் கூட பொதுப் பணத்தை கிராம அதிகாரி உட்பட அரசுப் பணியாளர் ஒருவர் தம் சொந்தப் பயனுக்குக் கையாண்டால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுடன் குற்றவியல் விதிகளின் கீழும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும். கோடிக் கணக்கான பொதுப்பணம் தவருகப் பயன்படுத்தப்படுகையில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திராவன்றி மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் முன்போ பொது கணக்குக் குழுவின் முன்போ சட்டமன்றத்திற்கு முன்போ பதில் சொல்வது கடினமாக இருக்கும்.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு கொடுக்க வேண்டிய நிலுவைத்தொகைனை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டாமென இந்திய ஸ்டேட் வங்கியைக் கேட்டுக் கொண்டு தயாரிக்கப் பட்டுள்ள வரைவுக் கடிதம் அனுப்பப்படலாம்.

(ஒம்.) ஈ. பி. இராயப்பா,
10—12—1970.

(வலியுறுத்திக் காட்டுவதற்காக கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.)

மேற்சொன்ன குறிப்பில் இரண்டுவித செயற் குறிப்புகள் இருப்பது தெரியவரும். தணிக்கையை 1970 டிசம்பர் திங்களுக்குள் முடிக்க தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பது முதற் செயற்குறிப்பு. இரண்டாவது செயற் குறிப்பு ஏறத்தாழ முதற் செயற்குறிப்பு போன்றதேயாகும். அதாவது தணிக்கைக்குப் பிறகு இந்த வழக்கு காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்; குற்றவாளிகள் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதாகும். பிறப்புத் தணிக்கைக்குப் பின்னர் அத் தணிக்கையில் குற்றம் இழைத்தவர்கள் என்று சந்தேகமின்றி மெய்ப்பிக்கப்படுபவர்கள் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது இக் குறிப்பிலிருந்து திட்டவட்டமாகத் தெரிகிறது. குற்றம் செய்திருக்கக்கூடியவர்கள் என்று கருதப்படுபவர்களில் வி.எஸ்.டி. முதலியார் ஒருவர் என்று இக் குறிப்பில் எந்த இடத்திலும் திரு. இராயப்பா குறிப்பிடவில்லை. அந்த மாத இறுதியிலேயே அரசுக்கு அனுப்பப்படவேண்டிய பிறப்புத் தணிக்கை அறிக்கைக்கு காத்திருக்காமலேயே இந்த வழக்கு குற்றவியல் நடவடிக்கை நேரடியாக எடுக்கப்படுவதற்காக, காவல்துறை யினரிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று திரு. இராயப்பா பரிவுரை செய்துள்ளதுபோல் அரசு வழக்குரைஞரும் மனுதாரர்களின் வழக்கு குரைஞரும் வாதித்துள்ளனர். ஆனால் இக் குறிப்பில் நியாயமாகப் படித்து அறிந்து கொள்ள முற்படின் அவ்வாறு அதில் எழுதப்படவில்லை. திரு. இராயப்பா எழுதிய குறிப்பில் வி.எஸ்.டி. முதலியார் பற்றியோ வேறு எவர் பற்றியோ குறிப்பிடப்படவில்லை. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் பொறுப்பைச் சிறப்புத் தணிக்கை அறிக்கைக்கு அவர் விட்டுவிடுகிறார். எப்படியாயினும் குற்றம் இழைத்தவர் என்று திரு. இராயப்பாவின் குறிப்பில் எழுதப்பட்டிருப்பது தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் நிர்வாகம் முழுவதையுமே குறிப்பதாகும். இக் கூட்டமைப்பின் நிர்வாகம் முதலில் அரசு அலுவலர் திரு. தாஸ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கூட்டமைப்பின் நிர்வாகக் குழு பற்றி வெளிப்படையாகவோ உட்கிடக்கையாகவோகூட இக் குறிப்பில் எந்த விதமான குறிப்பும் சூசகமாகக் கூட இல்லை.

திரு. இராயப்பா உறுதி மொழிப்பத்திரம் வாயிலாக அல்லது 5A பிரிவின் கீழ் வாக்குமூலம் ஒன்றையும் கொடுக்கவில்லை. முதலமைச்சரின் நெருங்கிய நண்பராகிய வி. எஸ். டி. முதலியார் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு தாம் பரிவுரை செய்ததன் காரணமாகத் திரு. கருணாநிதி தம்மீது எரிச்சலுற்றார் என்றும், தம்மைத் தலைமைச் செயலாளர் பதவியிலிருந்து மாற்றியதற்கு இதுவும் ஒரு காரணமென்றும் திரு. இராயப்பா தலைமை நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுவில் திரு. இராயப்பா உறுதி மொழிப் பத்திரத்தில் குற்றம் சாட்டியுள்ளார் என்று சொல்லப்படுகிறது.

தலைமை நீதி மன்றத்தின் தீர்ப்பு எனக்கு அனுப்பப்படவுமில்லை. திரு. இராயப்பாவின் குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படவில்லை என்று அவ்வழக்கிலிருந்து தெரியவருகிறது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு செலுத்த வேண்டிய தொகையை உடனடியாகச் செலுத்துமாறு வற்புறுத்த வேண்டாமென்று இந்திய ஸ்டேட் வங்கியைக் கேட்டுக் கொண்டு எழுதப்பட்ட வரைவுக் கடிதத்திற்கு திரு. இராயப்பா ஒப்புதல் அளித்தார் என்பது இங்குக் குறிப்பிட வேண்டியுள்ளது. இந்த வரைவில் பதில் கடிதத்திற்கு ஒப்புதல் அளித்து கூட்டுறவு அமைச்சர் 10—12—1970 அன்று அதில் கையெழுத்திட்டார். முதலமைச்சர் 28—1—1971 அன்று அதில் கையெழுத்திட்டார். இக் கடிதம் இந்திய ஸ்டேட் வங்கிக்கு 29—1—1971 அன்று அனுப்பப்பட்டது.

தலைமைச் செய்லாளர் அனுப்பிய குறிப்பில் 28—1—1971 அன்று கையெழுத்திட்டதனாலேயே முதலமைச்சர் அதற்கு ஒப்புதல் அளித்து விட்டதாகக் கருத முடியாது என்றும் இந்திய ஸ்டேட் வங்கிக்கு அனுப்பப்பட வேண்டிய கடித வரைவுக்கு ஒப்புதல் அளித்தார் என்றும் திரு. வானமாமலை வாதித்தார்.

இந்த வாதம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. மேற் நிலை அதிகாரி ஒருவர் குறிப்பு ஒன்றைத் தயாரித்து மேலதிகாரிக்கு அனுப்பி மேலதிகாரி அதில் கையெழுத்திட்டால் அக் குறிப்பு முழுவதையும் மேலதிகாரி ஒப்புக் கொள்கிறார் என்றே பொருளாகும். எனவே, வரைவுக் கடிதத்தை மட்டுமே முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார் என்றும், குறிப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் சொல்வது பருத்தறிவிற்குப் புறம்பானது. திரு. இராயப்பா எழுதிய குறிப்பு அடங்கிய கோப்பு முழுவதும் முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

தலைமைச் செயலாளரின் குறிப்புக்கு முதலமைச்சர் ஒப்புதல் அளித்த பின்னர் கூட்டுறவுத் துறைச் செயலாளர் திரு. பகபதி 30—1—1971 அன்று கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் திரு. ஷெட்டிக்குக் கடிதம் ஒன்றை எழுதினார். தணிக்கை முதலில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது போல 31—10—1970க்குள் ஏன் முடிக்கப்படவில்லை என்று காரணம் காட்டுமாறும் தணிக்கை எப்படியாயினும் தலைமைத் தணிக்கையாளரால் 31—1—1971க்குள் முடிக்கப்பட வேண்டுமென்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் மேலும் எழுதியிருந்ததாவது :—

"பல்லாண்டுகளாக ஏராளமான பொதுப் பணம் முறைகேடாகவும் தவருகவும் பயன் படுத்தப்படுவதைக் கூட்டுறவுத் துறை அனுமதித்தமைன்றி இத்தகைய நிலைக்குப் பொறுப்பாக இருந்தவர்களை வளைத்துப் பிடிக்க உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறியது மிகவும் வருத்தமான விஷயமாகும்."

இத்தகைய கடுமையான முறைகேடுகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காதது குறித்து செய்யப்பட்டுள்ள இக் குறிப்பிடு இத்தக் கூட்டமைப்பின் அன்றாட நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்கள் மீது, அதாவது கூட்டமைப்பின் நிர்வாகிகளாகச் செயலாற்ற அனுப்பப்பட்ட அரசு அதிகாரிகளின் உடனடியான மேற்பார்வையின் கீழ் அன்றாட நிர்வாகத்திற்குப் பொறுப்பு வகித்த வர்களையே சுட்டிக் காட்டுகிறது.

வி. எஸ். டி. முதலியார் 24—7—1976 நாளிட்ட தனது தூண் உறுதி மொழிப் பத்திரத்தின் 8 முதல் 13 வரையிலுள்ள பாராக்களிலும் 28-வதுபராவிலும் 133 முதல் 136 வரையுள்ள பாராக்களிலும் 181, 184, 185 ஆகிய பாராக்களிலும் வி. எஸ். டி. முதலியார் கூறியுள்ளதாவது:—தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு தலைமை நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், தாம் கேட்டுக் கொண்டதன் மேல் அவர்கள் இப் பணிக்கு அனுப்பப் பட்டனர். நிர்வாகக் குழு கேட்டுக் கொண்டதன் மேல் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த முதுநிலைப் பார்வையிடும் தணிக்கையாளர்கள் 15 ஆரம்பக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒவ்வொன்றிலும் ஒரே சமயத்தில் தணிக்கை செய்யுமாறு நியமிக்கப்பட்டனர்.

இது பற்றி மேற்கொண்டும் விவரிக்கும் முன்னர், கூட்டுறவுச் சங்கங்களின் முதுநிலை இணைப் பதிவாளராகிய திரு. ஜி. என். தாஸ் மேற்படி கூட்டமைப்பின் செயலாளராக எவ் வாறு நியமிக்கப்பட்டார் என்பதைக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும். வி. எஸ். டி. முதலியார் மேற்படி கூட்டமைப்பின் தலைவராக இருந்தபோது கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளராகிய திரு. வி. கே. ஸி. நடராஜன் அவர்களுக்கு 7—3—1968 அன்று கடிதம் ஒன்று எழுதினர். நல்ல அனுபவம் வாய்ந்த கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் ஒருவரை 1—4—1968 முதற்கொண்டு மேற்படி கூட்டமைப்பின் செயலாளர்ப் பணியுரிய அனுப்புமாறு அக் கடிதத்தில் அவர் கேட்டுக் கொண்டார். எந்த இணைப் பதிவாளரைச் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு அனுப்புவது என்பதைப் பதிவாளரின் விருப்ப உரிமைக்கே விட்டு விட்டார். அதே கடிதத்தில் மேற்படி கூட்டமைப்பின் நிர்வாகத்திலுள்ள அரிசி ஆலையின் உற்பத்தி மேலாளராக நியமிக்கப்படுவதற்காக துணைப் பதிவாளர் ஒருவரையும் கூட்டமைப்பிற்கு அனுப்புமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

மேற்படி கடிதத்திற்குப் பதிவாளர் 25—6—1968 அன்று பதில் எழுதினர் : "கூட்டமைப்பின் செயலாளராகப் பணிபுரிய இணைப் பதிவாளரின் பணிகளை அயலிடப் பணி நியந்தனைகளின் பேரில் அனுப்புவதற்கு ஒப்புதல் வழங்குமாறு அரசை நான் கேட்டுக் கொண்டுள்ளேன்".

அதன் பின்னர் 22—8—1968 நாளிட்ட அரசு ஆணையின்படி கூட்டுறவுச் சங்கங்கள் இணைப் பதிவாளர்களில் ஒருவராகிய திரு. கனகசபாபதி மேற்படி கூட்டமைப்பின் செயலாளராகச் செயல்படஅனுப்பிவைக்கப்பட்டார். அதன் பின்னர் முதுநிலை அதிகாரி ஒருவரை மேற்படி கூட்டமைப்பில் செயலாளராக நியமிப்பது பொருத்தமாகும் என்று அரசு நினைத்தது. அவ்வண்ணமே அப்பொழுது தஞ்சாவூர் மாவட்டத்தில் இணைப்பதிவாளராக இருந்த ஜி. என். தாஸ்—இவர் கூட்டுறவுச் சங்க இணைப்பதிவாளர்களில் மிகவும் மூத்தவர்—மேற்படி கூட்டமைப்பின் செயலாளராக 18—5—1970 வரையிலுள்ள கால அளவுக்கு நியமிக்கப்பட்டார். அவரின் நியமனம் கூட்டுறவுத் துறையின் 21—8—1969 நாளிட்ட 2602 ஆம் அரசு ஆணையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. பின்னர் மேற்படி கூட்டமைப்பு ஜி. என். தாஸ் அவர்களின் பணி தொடர்ந்து இருக்க வேண்டும் என்று

11—5—1970 நாளிட்ட அவர்களது கடிதத்தில் பதிவாளரை கேட்டுக்கொண்டது.

1968, 1969, 1970-ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள்.

''கூட்டுறவுத் துறைச் செயலாளர் விடுத்த ஒரு வினவுக்குப் பதிலளிக்கும் வகையில், திரு கே. ஜே. எம். ஷெட்டி 6—1—1971 நாளிட்ட தனது கடிதத்தில் ''தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை அமைப்பின் விவகாரங்களில் தணிக்கைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது 30—6—1970-ல் முடியும் கால அளவிற்கான தணிக்கை முடிவு பெறும் நிலையிலுள்ளது. இத்தணிக்கையில் தமிழ் நாடு கூட்டுறவு வங்கியின் கடிதத்தில் சொல்லப் பட்டுள்ள கூறுகள் அனைத்தும் கவனிக்கப்படும்.''

1—1—1968 முதல் 31—12—1968 வரையிலும் 1—1—1969 முதல் 30—6—1970 வரையிலும் உள்ள காலஅளவுக்கான தணிக்கை அறிக்கைகளை முறையே 19—1—1971 அன்றும் 13—3—1971 அன்றும் தலைமைத் தணிக்கை அதிகாரி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அனுப்பினார். 1968 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை 19—1—1971 நாளிட்ட கடிதத்துடன் அனுப்பப்பட்டது. தணிக்கை அறிக்கையில் தலைமைத் தணிக்கை அதிகாரி குறிப்பிட்டுள்ள முறைகேடுகளாவன :—

(a) அதிக அளவு பதர், அந்நியப் பொருட்கள் ஆகிவற்றைத் தவிர்க்கும் வகையில் நல்ல தரமான நெல் கொள்முதல் செய்ய போதுமான நடவடிக்கைகளை மேற்படி கூட்டமைப்பு எடுக்க வில்லை.

(b) ஏஜென்ட் சங்கங்களிடமுள்ள இருப்பு களை மதிப்பிட கூட்டமைப்பு முயற்சி எடுக்கவில்லை. அதேபோல ஏஜென்ட் சங்கங்கள் வைத்திருந்த இருப்புகள் பற்றி முறையான இருப்பு பதிவேடு எதுவும் வைத்து வரப்படவில்லை.

(c) கொள்முதல் பணிகள் நடக்கையில் கிளை மேலாளர்களும் பணியாளர்களும் சரிவர பணியாற்றின்றனரா என்பதைக் கண்காணிக்க முறையான கட்டுப்பாடு எதையும் கூட்டமைப்பு ஏலுத்த வில்லை. மேலும் இது குறித்து உரிய, தக்க நடவடிக்கை எடுக்காததனால் இருப்புக்களில் பற்றாக் குறை ஏற்பட்டது. பொருள்களும் களவாடப் பட்டன.

(d) போதிய நிதி உதவி கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளதா என்பதைக் கவனிக்காமலும் திட்டம் இழப்பின்றிச் செயல் படுத்தப்பட முடியுமா என்பதைக் கவனிக்காமலும் உழவர் களுக்கு டிராக்டர் பணி வசதி அளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டது என்று தோன்றுகிறது.

(e) மேற்படி கூட்டமைப்பில் மிகப் பெரிய அளவில் பணியாளர்கள் உள்ளனர், பணியாளர் ஒவ்வொருவருக்குமான கடமைகள், பொறுப்புகள் செவ்வையாக வரையறுக்கப்படவில்லை.

(f) பல்வேறு மூன்களில் உள்ள வணிக வீக காரங்களின் பெரிய அளவினதான தன்மையைக் கருத்திற்கொண்டு பார்த்தால் களவு போதல்' சரக்குப் பற்றாக்குறை ஏற்படுதல் போன்றவற்றைத் தவிர்க்க தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். இக்கூட்டமைப்பு போன்ற பெரிய தொரு நிறுவனத்தில் உள் தணிக்கையும் வரவு செலவு கட்டுப்பாடும் மிகவும் அவசியமாகும்.

(g) தூண விதிகள் சில இடங்களில் மீறப் பட்டுள்ளன''.

19—1—1971 நாளிட்ட 1968-ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையில் இரண்டே இடங்களில் வி.எஸ்.டி. முதலியார் பற்றி குறிப்பிடப்பட் டுள்ளது. அவை வருமாறு :

(i) '' பணியாளர்களது பணி நிபந்தனைகள் தொடர்பான 1-ஆம் தூண விதியின்படி சங்கத்தின் பணியாளர்கள் எண்ணிக்கையை அவ்வப் போது நிர்ணயிக்கவும் ஒவ்வொரு வகைப்பணியாளருக்குமான சம்பள வீதங்களை நிர்ணயிக்கவும் இயக்குநர் குழுவிற்குத் தகுதியுண்டு. இயக்குநர் குழு பணியாளர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கவில்லை. தேவையின்றியும் கூட்டமைப்பின் நிதி நிலையைக் கருத்தில் கொள்ளாமலும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. திருவாளர்கள் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலையினுல் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் சார்பாக கிளை தொகைகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதும் அத் தொகைகள் பின்னர் கணக்கு விவர அறிக்கைகள் வந்தவுடன் கூட்டமைப்பினுல் ஈடு செய்யப்பட் டுள்ளன என்பதும் தெரியவருகிறது. தலைவரின் நேர்முக உதவியாளரது பணியாளர் அமைப்புச் செலவு மேற்படி கூட்டமைப்பினுல் ஈடு செய்யப் பட்டது என்றும் தெரியவருகிறது. இது குறித்துக் கடிதம் ஒன்று 24—5—1969 அன்று கூட்டமைப் பிற்கு அனுப்பப்பட்டது. ஆனுல், இந்த நியமனம் 27—10—1968 முதல் செயலுக்கு வந்தது. மேலும் கூட்டமைப்பு இச் செலவை இத் தேதியி லிருந்து ஈடு செய்துள்ளது. தவிப்பட்ட நிறுவனத்தில் ஊழியர் ஒருவர் அயலிடப் பணியில் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிய அனுப்பப்படுவது என்பது வழக்கமில்லாத வழக்கமாகும். இந்த நபர் சென்னையில் பணி புரிவதாகச் சொல்லப்படுகிறது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் அலுவலகம் எதுவும் சென்னையில் இல்லை.

(ii) '' தணிக்கைக்கான ஆண்டில் ரூ. 1.16 லட்சம் அளவிற்கு உரங்களை டி.ஏ.எஸ். லிமிடெட் நிறுவனத்திற்குக் கடனுக வழங்குமாறும் (9 சதவீத

வட்டியில்) தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்குத் தஞ்சாவூர் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அனுமதி அளித்தார். கடனுக்கு விற்பனை செய்வதற்குத் துணை விதிகளில் இடமில்லை. 31—12—1968 அன்றுள்ளபடி ரூ. 1.03 லட்சம் நிலுவையாக உள்ளது. கொள்முதல் முன் பணங்கள், உரங்களைக் கடனில் விற்பனை செய்வது ஆகியவை இத்தொகையில் அடங்கும். இத்தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படலாம்.''

மேற்படி கூட்டமைப்பின் தலைவரது நேர்முக உதவியாளராகச் சாமியப்பாவைச் சென்னையில் நியமனம் செய்தது குறித்து முதல் மறுப்புரை எழுதப்பட்டுள்ளது என்பதைக் காணலாம்.

இது எவ்வாறு நேர்ந்தது என்பது பற்றி திரு. வி. எஸ். டி. முதலியார் தனது துணை உறுதிமொழிப் பத்திரத்தில் 164 முதல் 168 வரை பிலுள்ள பாராக்களில் விளக்கியுள்ளார். சாமிப்பப்பா நியமனத்திற்கு முன்னரேயே தலைவரின் நேர்முக உதவியாளர் ஒருவர் சென்னையில் நியமிக்கப்பட்டார் என்று தெரிகிறது. இவர் ஒருசில மாதங்களுக்குப் பின்னர் திடீரென்று ராஜினாமா செய்தார். அதன்மேல் சாமியப்பா—டி. ஏ. எஸ். லிமிடெட் நிறுவனத்தின் ஒரு பணியாளராவார்.—மேற்படி கூட்டமைப்பின் தலைவருக்கு நேர்முக உதவியாளராக நியமிக்கப்படுவதற்காக அனுப்பப்பட்டார். இவரது நியமனம் பின்னர் மேற்படி கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவினுல் 30—9—1970 அன்று ஏற்பளிக்கப்பட்டது. மேற்படி கூட்டமைப்பின் தலைவர் சென்னையிலிருந்தும் தனது பணிகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. ஏனெனில் சென்னையிலும் அவருக்கு வீடு ஒன்று இருந்தது. மேற்படி கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையில் தனது அலுவல்களைச் செவ்வையாக நிறைவேற்றும் பொருட்டு நேர்முக உதவியாளராகத் தனிப்பட்ட ஒருவரை அவர் நியமித்துக்கொள்வது அசாதாரணமான செய்கை அல்ல என்று நான் நினைக்கிறேன். இந்த நியமனம் பின்னர் நிர்வாகக் குழுவின் ஏற்புபெற்றது. நேர்முக உதவியாளராக நியமிக்கப்பட்டவர் அதே நேரத்தில் டி. ஏ. எஸ். லிமிடெட் நிறுவனத்திலும் தொடர்ந்து பணியாற்றியதுதான் ஆட்சேபிக்கத்தக்கது. முந்திய ஒரு நாளிலிருந்து அவருக்கு ஆதாயம் ஏற்படும் வகையில் அதுவும் மேற்படி கூட்டமைப்பின் செலவில் ஆதாயம் ஏற்படும் வகையில் அவரது நியமனத்தை ஏற்பளிப்பதுதான் முறை யற்ற செயலாகும்.

மேற்படி மறுப்புரையில் இரண்டாவது இனம் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு உரம் வழங்கியது குறித்தது ஆகும். டி. ஏ. எஸ். லிமிடெட் நிறுவனத்திற்கு கரும்பு வழங்கிய கரும்பு சாகுபடியாளர்களுக்கு வழங்கப்படுவதற்காக உரங்களை 9 சதவீத வட்டியுடன் கடனில் எடுத்துக் கொள்ளத் தாம் தொடங்கியதாக வி. எஸ். டி. முதலியார் ஏற்கெனவே விளக்கியுள்ளார். டி. ஏ. எஸ். நிறுவனமும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பிற்கு நெல் வழங்கியது. நெல் விலை உர விலைக்குச் சரிக்கட்டப்பட்டது. அநேக இடங்களில் கணக்குகள் சரிகட்டப்படும்பொழுது தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு கடன் வாங்கியவரும் டி. ஏ. எஸ். நிறுவனம் கடன் கொடுத்தவருமாகவும் கணக்கு காட்டப்பட்டுள்ளது.

24—7—1970 அன்று டி. ஏ. எஸ். நிறுவனம் இரசாயனங்கள், உரங்கள் ஆகியவை கடனுக வழங்கப்பட்ட வகையில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்கு ரூ. 15·66 லட்சம் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனுல், அந்த மாத இறுதியில் அதாவது 31—7—1970 அன்று கணக்குகள் தீர்க்கப்பட்டபோது டி. ஏ. எஸ். நிறுவனம் தஞ்சாவூர் கூட்டமைப்பிற்கு ரூ. 66,294.43 மட்டுமே கொடுக்கவேண்டியிருந்தது. இத்தொகையையும் டி. ஏ. எஸ். நிறுவனம் பின்னர் கொடுத்துத் தீர்த்து விட்டது.

மேற்படி அறிக்கையில் உள்ள இரண்டாவது இனத்தைப் பொறுத்தவரையில் கடன் விற்பனைக்குத் துணைவிதியில் வகை செய்யப்படவில்லை என்பதே அறிக்கையில் எழுதப்பட்ட மறுப்புரையாகும். ஆனுல் தஞ்சாவூர் வட்டார இணைப் பதிவாளரே உரங்களைக் கடனுக ஆண்டு ஒன்றுக்கு 9 சதவீத வட்டியுடன் விற்பனை செய்யுமாறு 22—8—1968 நாளிட்ட தனது ஆணையில் கட்டளையிட்டுள்ளார். (வி. எஸ். டி. முதலியாரின் முதல் உறுதிமொழிப் பத்திரத்தின் IV இணைப்பைப் பார்க்கவும்) இத்தொகை முழுவதும் டி. ஏ. எஸ். லிமிடெட் நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்பட்டு விட்டதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

டி.ஏ.எஸ். நிறுவனத்திற்குக் கடனுக உரங்களை விற்பனை செய்யும் இட்டத்திற்கு ஏற்பு வழங்கிய இணைப் பதிவாளர் வேறு யாருமில்லை, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பில் செயலாளராக முகைமையில் பணிபுரிகையில் அவரால் செய்யப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட குற்றத்திற்காக இந்தியத் தண்டனைக் கோவையின் 420-வது பிரிவின்கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளவர் திரு. ஜி.என். தாஸ்தான் என்று திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் வழக்குரைஞராகிய திரு. ராகவாச்சாரி வாதித்தார். தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கம் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு அளித்த கடன் வசதிகள் கூட்டுறவுச் சங்கம் அல்லாத சங்கங்களுக்குத் திருப்பப்பட்டிருக்கக் கூடாது என்று அவர் மேலும் கூறினர். சிறப்புக் கடன் வசதியாக சலுகை வட்டி வீதங்களில் மேற்படி கூட்டமைப்புச் செலவில் டி. ஏ. எஸ். நிறுவனத்திற்குக் கடன் வசதிகளைத் திருப்பியது டி. ஏ. எஸ். நிறுவனத்திற்கு அதிகாரமற்ற ஆதாயங்களைத்

110-G—13—5-A

தந்தது என்றும் அந்தஅளவுக்கு அத்தொகையைப் பயன்படுத்தியது குற்றவகையில் பணக் கையாடல் செய்தது போன்றதாகும். டி. ஏ. எஸ் நிறுவனம் சார்பாக ரொக்க வசதிகளையும் கடன் வசதிகளையும் இருப்பிது முறை கேடான செயல் என்பதை ஒப்புக்கொண்டாலும் அதனைக் குற்ற வகையிலான பணக் கையாடல் என்று சொல்ல முடியாது. ஏனெனில், குற்றவகையிலான பணக் கையாடல் நடப்பதற்கு நேர்மையற்ற நோக்கம் ஒன்று இருக்க வேண்டும். நேர்மையற்ற நோக்கம் என்றல் தவருன ஆதாயமோ தவருன இழப்போ ஏற்படுத்தும் நோக்கம் என்று இந்திய தண்டனை விதிக்கோவையில் விளக்கம் சொல்லப் பட்டுள்ளது. அதாவது ஒருவர் தமக்குச் சட்டப்படிக்கு உரிமையல்லாத சொத்து ஒன்று குறித்து சட்டபடிக்கல்லாத வழியைப் பின்பற்றி ஆதாயமடைவது என்பது இந்திய தண்டனை விதிக்கோவையின் 23-வது பிரிவின் மேற் தவருன வழியில் சட்டிய ஆதாயம்என்று பொருள் கூறப் படுகிறது. இந்த நிகழ்வில் டி. ஏ. எஸ். நிறு வனத்திற்குக் கடன் விற்பனை அனுமதித்தது சம் பந்தப்பட்ட அரசுத்துறையின் அதிகாரி ஒருவ ரால் அதாவது இணைப்பதிவாளரால் செய்யப் பட்டதாகும். எனவே, இவ்வரை முறையற்றது என்று சொல்லலாமே தவிர சட்டத்திற்குப் புறம்பானது என்று கூறமுடியாது.

டி. ஏ. எஸ். நிறுவனத்திற்கு உரங்களைக் கடனாக 9 சதவீத வட்டியுடன் வழங்குமாறு வெளியி டப்பட்ட ஆணை கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளராகிய ஜீ. என். தாஸ் அவர்களால் 22—7—1968 அன்று அதாவது அப் தஞ்சா வூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் செய லாளராக வருவதற்கு நின்டகாலத்திற்கு முன் னரே வெளியிடப்பட்டது என்பதை நினை கவனிக்க வேண்டும். மேலும், அவரைப் பெயர் குறிப்பிட்டு மேற்படி கூட்டமைப்பு அல்லது அதன் தலைவரோ வரவழைக்கவில்லை. ஜி. என். தான் தற்போது இந்தியத் தண்டனை விதிக்கோவையில் 420-வது பிரிவின் மேற் குற்றமொன்றிற்காக அவர்மீது வழக்கு விசாரணையில் உள்ளது என்பதனாலேயே அவர் வி. எஸ். டி. முதலியாருடன் சேர்ந்து கொண்டு கெட்ட நோக்கத்துடன் அல்லது மோசடியான நோக்கத்துடன் 22—7—68 நாளிட்ட ஆணையைப் பிறப்பித்ததாக அனு மானிப்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. ஜி. என். தாஸ் முழுவதும் வேறுபட்ட ஒரு குற்றத்திற்காக இந்திய ஸ்டேட் வங்கிக்குத் தவருன இருப்பு அறிக்கைகளை அளித்து எந்த இருப்புகளின் மேல் வங்கி ரொக்க கடன் வசதி அளித்துள்ளதோ அந்த இருப்பின் அளவுக்கு மிகையாக ரொக்கக் கடன் வசதியைப் பெற்றதற் காக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. டி. ஏ. எஸ். நிறுவனம் தனது தலிப்பட்ட நிறுவனம் அல்ல என்றும் அது பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம் என்றும் அதில் ஒரு சிறு சதவீதப் பங்குகளையே அவரும் அவரது குடும்ப உறுப்பினர்கள் வைத்திருக் கின்றனரென்றும் வி. எஸ். டி. முதலியார் தவது தரப்பு உறுதிமொழிப் பத்திரத்தில் குறிப் பிட்டுள்ளார்.

எப்படியாயினும், வி. எஸ். டி. முதலியாரோ இயக்குநர்கள் குழுவின் வேறு எந்த உறுப்பினரோ அல்லது மேற்படி கூட்டமைப்பின் இயக்குநர்களி டமோ பணத்தை மோசடி செய்தார்கள் அல்லது சொந்த பயனுக்காகக் "கையாடல்" செய்தார்கள் என்று 19—1—1971 நாளிட்ட தனிக்கை அறிக் கையில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை.

1—1—1969 முதல் 30—6—1970 வரையிலுள்ள கால அளவிற்கான தனிக்கை அறிக்கை 13—7—1971 நாளிட்டது.

இந்த அறிக்கை முந்திய தனிக்கை அறிக்கை யைப் போலவே அமைந்துள்ளது. ஆயினும், இது இன்னும் விரிவானது. இதில் கூறப்பட்டுள்ள விஷயங்களாவன :—

(1) இந்திய ஸ்டேட் வங்கிக்குப் பொய்யான அறிக்கைகளை அளித்தது குறித்த முறைகேடுகள். காண்பிக்கப்பட்ட சரக்கின் மதிப்பு ரூ. 546·84 லட்சமாகும். பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் மதிப்பு ரூ. 160.03 லட்சமாகும். இவ்வாருக ரூ. 176·57 லட்சம் பற்றுக்குறை ஏற்பட்டது. நிலுவை ரூ. 336.59 லட்சமாகும்.

(2) கூட்டமைப்பு நோக்கக் கடன் வசதி பெறுவதற்காக உண்மையில் இருந்த இருப்பிற்கு எந்தவிதத்திலும் தொடர்பில்லாத வகையில் தவருன தகவல்கள் கொடுத்தது.

(3) கோணிப்பைகள் வாங்கியதில் முறை கேடுகள் இருந்தன. வாங்கியது குறித்த விவரங் கள் கூட்டமைப்பு முன் வைக்கப்படவில்லை. வாங்கப்படாமல் இருந்த பருடியை ரத்து செய்ய உரிய நேரத்தில் வி. எஸ். டி. முதலியார் தலைவர் என்ற முறையில் நடவடிக்கை எடுத்திராவிடில் கூட்டமைப்பு ரூ. 60 லட்சம் மதிப்புள்ள கோணிப் பைகளை மேற்கொண்டும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய நில உருவாகி இருக்கும். இதனால் மேற்படி கூட்டமைப்பு கடுமையான நிதி இடர்ப் பாடுகளுக்கு உள்ளாகி இருக்கும்.

(4) வரைமுறையின்றி பூச்சிக்கொல்லி மருந்துகள் வாங்கப்பட்டன.

(5) பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புச்சு நெல் கொள்முதல் செய்வதற்காக டி. ஏ. எஸ். நிறுவனத்திற்கு முன்பணங்கள் வழங்கப்பட்டன. திரு. ஆரோன் சர்க்கரை ஆலை மூலமாக கொள் முதல் செய்யப்பட்ட 2,132 மூட்டை ஐ.ஆர். 8 நெல் மூட்டை ஒன்றுக்கு ரூ. 26.65 மட்டும் தான் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனல், மூட்டை ஒன்றுக்கு ரூ. 31.50 வீதத்தில் தொகை கொடுக்கப்பட்டது. டி.ஏ.எஸ். நிறுவனத்தின் தலைமை இரசாயன வல்லுநர்களுக்குப் பயணப்படி

கொடுத்தது, ஏனைய சிறு இனங்கள் ஆகிய வற்றிற்கு நிர்வாகக் குழுவின் ஒப்புதல் பெற வில்லை என்ற காரணத்தினுல் மறுப்புரை தெரி விக்கப்பட்டுள்ளது.

(6) கணக்குகள் வைத்துவந்த முறையில் உள்ள முறைகேடுகளுக்காக இந்திய ஸ்டேட் வங்கி தண்ட வட்டி விதித்தது.

(7) சரக்குகள் இருப்பு பெருமளவில் பற்றாக் குறையாக இருந்தது.

டி.ஏ.எஸ். நிறுவனத்திற்கு ரொக்கக் கடன் வசதி யில் உரங்கள் வழங்கியது பற்றி தணிக்கை அறிக் கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதற்காக அக்கணக்கில் அவர்களுக்கு எதிராக நிலுவைத் தொகை எதுவும் கான்பிக்கப்படவில்லை. அன்றி யும் வி.எஸ்.டி. முதலியார் பணத்தை மோசடி செய்ததாகவோ சொந்த பயனுக்காகத் தவருகப் பயன்படுத்தியதாகவோ இலேசான குற்றச்சாட்டு கூட இல்லை. வி. எஸ். டி. முதலியார் பற்றி தணிக்கை அறிக்கையில் கீழ்க்காணும் வரிகளே காணப்படுகின்றன :—

''எந்தத் நேதியிலிருந்து முறைகேடுகள் இருந்து வருகின்றன என்பதைத் திட்டவட்டமாக அறிய வங்கிக்கு வழியில்லையாதலால் 1—1—1970 முதற்கொண்டு கணக்கு வாங்கியுள்ள தொகை முழுவதற்கும் ஆண்டு ஒன்றிற்கு 12 சதவீதம் தண்ட வட்டி விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தென்று இந்திய ஸ்டேட் வங்கி 26—11—1970 நாளிட்ட தனது கடிதத்தில் கூட்டமைப்புக்குத் தெரிவித்துள்ளது. 1971 ஜனவரித் திங்களில் ரொக்க கடன் கணக்கில் ரு. 13.72 லட்சம் தண்ட வட்டியாக விதிக்கப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 12 சதவீத தண்டவட்டியை விதிப்பது நியாயமில்லை, பொருத்தமுமில்லை என்றும் ஏனெ னில் இந்தமுன்தொகைகேட்டுபேச்சு வார்த்தைகள் நடக்கையில் எந்த இடக்கிலும் தண்ட வட்டி பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்றும் கூட்ட மைப்புத் தலைவர் 9—1—1971 நாளிட்ட கடிதத்தில் வங்கிக்கு எழுதினர். எனவே, தண்ட வட்டியை விதிக்க வேண்டாமென்று அவர் வங்கியைக் கேட்டுக் கொண்டார்.''

(பக்கம் 29)

''புதிய கோணிப்பைகள் வாங்குவதற்காக மேற்குறிப்பிட்ட மூன்று நிறுவனங்களிடம் கொடுக் கப்பட்ட ஆணைகளுக்கும் ஒப்பந்தகனே முடிவு செய் வதற்கும் நிர்வாகக் குழு 3—9—1970 நாளிட்ட 11-வது தீர்மானத்தில் ஒப்புதல் அளித்தது. கொள் முதல் குறித்த ஆணைகள் செயலாளரின் ஒப்புத லுடன் வைக்கப்பட்டன. ஆனல் கொள்முதல் ஆணைகள் வைக்கப்பட்ட நேரத்தில் இதுவிஷயம் நிர்வாகக் குழுவின் முன் வைக்கப்படவில்லை. திட்டமிட்டுக் கொள்முதல் செய்யப்படவில்லை என்பதும் கூட்டமைப்பிற்கு ஆதாயம் ஏற்படும் வகையில் கொள்முதல் செய்ய எந்த முயற்சியும் செய்யப்படவில்லை என்பதும் தெரியவருகிறது. ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான வாயில்கள் பரிசீலனை செய்யப்படவில்லை''.

''பணப்பட்டியல்களுக்குப் பணம் கொடுத்துத் தீர்ப்பதில் ஏற்பட்ட தாமதத்தினுல் 1969 அக்டோபர் முதல் 1970 ஏப்ரல் வரையில் உள்ள கால அளவில் தாமதக் கட்டணமாக கூட்டமைப்பு ரூ. 4,152 செலுத்தவேண்டியிருந்தது. உண்மை யில் சொல்லப் போனல், இந்தக் கொள்முதல் ஆணைகளில் வராமல் எஞ்சியிருந்த பகுதியை ரத்து செய்து 1970 ஆகஸ்டு திங்களில் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிராவிடில், கூட்டமைப்பு மேற்கொண்டும் 5,316 பேல்கள் கோணிப்பைகளை வாங்கும்படி நேர்ந்திருக்கும். இதனுல் ரூ. 60 லட்சத்திற்கு மேற்பட்ட செலவு ஏற்பட்டிருக் கும். இதனுல் கூட்டமைப்புக்குக் கடுமையான நிதி நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கும்.''

(பக்கங்கள் 42—43)

கோணிப்பைகள் வாங்குவதற்காக கொடுக்கப் பட்டிருந்த கொள்முதல் ஆணையை வி.எஸ்.டி. முதலியார் உரிய நேரத்தில் ரத்து செய்ததன் காரணமாக ரூ. 60 லட்சம் நிமப்பு மேற்படி கூட்டமைப்பிற்கு ஏற்படாமல் தவிர்த்தார் என்பது இதிலிருந்து தெரிய வரும். நவருன கணக்கு களைக் கொடுப்பதற்கு வி.எஸ்.டி. முதலியார் சம்மதித்ததாக தணிக்கை அறிக்கையில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. மாருக, நிமப்புத் தொகை வரும் நடவடிக்கைகளில் விசாரணை செய்த திரு. மாதவசர்மா, ஐ.ஏ.எஸ். மேற்படி கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவைக் கலைத்து விட்டபிறகு இக் கூட்டமைப்பின் விவகா ரங்களைப் புலனுய்வு செய்கையில் தவருன கணக்கு களைக் கொடுத்ததற்கான பொறுப்பை, சோம சுந்தரம், ராமசாமி ஆகிய இரு கணக்காளர்கள் மேலும் கமத்துகிருர். 22—3—1972 நாளிட்ட தனது அறிக்கையில் அவர் குறிப்பிடுவதாவது :

''அவர்கள் தலைவரிடம் சொல்லியிருந்தால் நிலைமை நல்லபடியாக இருந்திருக்கும்.'' திரு. மாதவ சர்மாவின் ஆய்வு முடிவுகளின்படி தலைவர் வி.எஸ்.டி.முதலியாருக்கு இக் கணக்கு அறிக்கைகள் பற்றியும் உண்மையான இருப்பு அறிக்கை பற்றியும் ஒன்றுமே தெரியாது.

3, 4 பிரச்னைகள் :

19—1—1971, 11—3—1971 நாளிட்ட நிறப்புத் தணிக்கை அறிக்கைகளுக்குப் பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகள்.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு தொடர்பான தணிக்கை அறிக்கைகள் கிடைத்த வுடன் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளராகிய

திரு.கே.ஜே.எம்.ஷெட்டி அவைபற்றி தனது கருத் துரைகளுடன் அவற்றைக் கூட்டுறவுத் துறைச் செயலாளர் திரு. ஆர். பசுபதி அவர்களுக்கு அனுப்பி வைத்தார். அக்குறிப்புரைகளில் நிர்வாகத்தின் பொறுப்புகளையும் கூட்டமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரியின் பொறுப்புகளையும் தனித் தனியாக வரையறுத்தார். இவற்றை 4-A, 4-B பாராக்களில் காணலாம். (18—4—1972 நாளிட்ட 197 ஆம் அரசு ஆணையைப் பார்க்கவும். நடப்புக் கோப்புப் பக்கம் 229—271.) நிர்வாகக் குழுவின் பொறுப்புகள் குழுவிற்கு எதிராகக் கொடுகைப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் ஆகியவை பற்றி 4-A பாராவில் குறிப்பிடப் பட்டுள்ளன. குழுவிற்கு எதிராகச் செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குழு செய்யாத பிழைகள் பற்றியதேயாகும். சட்ட முரண்பாடுகள் பற்றிய தாகாது அல்லது சட்ட முறையான செயல் முறை கேடாக நிறைவேற்றியது பற்றியதாகாது. திரு. ஷெட்டி அவர்கள் எழுதியுள்ளதை மேற்கோளாகக் காட்ட வேண்டுமாயின் :—

''பல்வேறு திட்டங்கள் பற்றிய ஆதாயம் ஏற்புடைமை ஆகியவை பற்றியும் தமக்குள்ள நிதி வாயில்கள் பற்றியும் முன்னதாகவே பரிசீலனை செய்து பார்க்க நிர்வாகக் குழு தவறிவிட்டது. மேலும் இத் திட்டங்களின் செயல்முறை பற்றியும், செலவுகள் பற்றியும், ஆதாயம் பற்றியும் அவ்வப்போது செவ்விய முறையில் ஆய்ந்து பார்க்கவும் தவறிவிட்டது''.

மேற்படி ஆவணத்தின் 4-B பாராவில் திரு. ஷெட்டி கூட்டமைப்பின் செயல் முறையிலுள்ள பல்வேறு முறைகேடுகள், தவறுகள் ஆகியவற்றுக் கான பொறுப்பைக் கூட்டமைப்பின் செயலாளர் மீதும், அதாவது ஜி. என். தாஸ் மீதும் அவருக்குமுன் பதவியிலிருந்த திரு. நடராசன் மீதும் சுமத்தினர், இவர்கள் இருவரும் அரசு அதிகாரிகள்: மேற்படி கூட்டமைப்பின் செயலாளராகப் பணிபுரிய அனுப்பப்பட்டவர்கள், செயலாளர் மீது குறிப்பிடப்பட்ட சில குற்றச்சாட்டுகள் ஈமே கொடுக்கப்பட்டுள்ளன:—

''(v) இந்திய ஸ்டேட் வங்கியிடமிருந்து வாங்க வேண்டிய கடன்களுக்கான பிணையப் பொருள்களின் மதிப்பை அதிகமாகக் காண்பித்து கூட்டமைப்பு வேண்டுமென்றே தவருன அறிக்கைகளை அனுப்ப முயற்சித்தது. இதன் பலனாக 30—5—1970 நாளன்று இருந்த இருப்புகளுக்கும் வழங்கப்பட்ட கடன் தொகைக்கும் இடையே இருந்த பற்றுக்குறை ரூ. 1.77 கோடியாகும். இந்தப் பற்றுக்குறையை மறைக்கும் பொருட்டும் மேற்கொண்டும் ரொக்கக் கடன் வசதி பெறும் பொருட்டும் கணக்குகள் மாற்றி எழுதப்பட்டன. செயலாளருக்குத் தெரிந்தே கணக்குகள் மாற்றி அமைக்கப்பட்டன என்று தலைமைத் தணிக்கை அதிகாரிகளின் அறிக்கை கூறுகிறது. இதனால் மேற்படி கூட்டமைப்பின் உண்மையான நிதிநிலை நீண்டகாலமாக இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிட்டது. பெரிய அளவில் பணம் எவருக்கும் தெரியாமல் எவராலும் தடுக்கப்படாமல் வேறு இடத்திற்குச் சென்று விட்டது''.

''(viii) கணக்குகளையும் பல்வேறு பதிவேடுகளையும் சரிவர வைத்து வர அவர் தவறி விட்டார். அதன் காரணமாகத் தணிக்கைப் பணி தாமதப்பட்டது. உண்மையான நிதி நிலை நீண்ட காலம் வெளிப்படாமல் நின்றது.

''(ix) ஒவ்வொரு பருவ காலத்தின் இறுதியிலும் ஏஜெண்ட்; சங்கங்களின் கொள்முதல் கணக்குகளை உடனடியாகத் தீர்த்து வைக்கவில்லை. செலவிடப்படாத முன் தொகையைத் திரும்ப வாங்கிக் கொள்ளவுமில்லை.

''(x) கூட்டமைப்பின் செயலாளராக பணியில் சேருவதற்கு முன்னர் அவர் தஞ்சாவூர் வட்டார இணைப் பதிவாளராக இருந்தார். இம் முறையில் அவர் டிரான்ஸிட்டர்கள், பெட்ரோமாக்ஸ் விளக்குகள் ஆகியவற்றை வாங்க ஆணைகள் பிறப்பித்தார். அவற்றுக்கான விலை கூட்டமைப்பின் நிதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டார். இவ்வாறாக இவர் தமது செயல் வரம்பினைக் கடந்து செயல் பட்டார்.

''(xi) திரு ஜி. என். தாஸ் அவர்களைத் தவிர தலைமைக் கணக்கு அதிகாரியிடத்திலும், கணக்கு அதிகாரியிடத்திலும் (இவர்கள் இப்போது பணியில் இல்லை) முன்னர் செயலாளர் திரு. நடராசனிடத்திலும் குற்றங்கள் உள்ளன. திரு நடராசன் 1966 முதல் 1969 மே வரையில் கூட்டமைப்பின் தலைமை பதிவாளராக, செயலாளராகச் செயல் பட்டார். அவரும் மேற்கானும் முறைகேடுகளுக்குப் பொறுப்பாவார்.

(1) திரு ஜி. என். தாஸுக்கு எதிராக (viii), (ix) ல் குறிப்பிடப்பட்டுள்ள குறை பாடுகள்:—

(2) பயன்படுத்தப்பட்ட கோணிப்பைகள் டெண்டர்கள் கோராமல் பல்வேறு விலைகளில் பெரிய அளவில் வாங்கப்பட்டன.

(3) டெண்டர்கள் கோராமல் கொள் முதல் காரியங்களுக்காகத் தனியார் வாரிகளை வாடகைக்கு அமர்த்தியது.

(4) தவிட்டு எண்ணெய் பிரிவுத் தொடர் பாக பணிக் கணக்குகளை வைத்துவரத் தவறியது; திருவாளர்கள் கெமிக்கல் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகளையும் வரையறைகளையும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கத் தவறியது.

அவர்களது பதவிக்கால அளவில் கணக்குகள் மாற்றி எழுதப்பட்டிருந்தன. அவருக்கும் இவை எல்லாம் தெரியும். ஆனால் இந்த முறை கேடுகளை நிவர்த்தி செய்ய அவர் தவறிவிட்டார்.

எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றி திரு. ஷெட்டி கூறுவதாவது:—

"துறை அதிகாரிகளின் தவறுகள் பற்றி நான் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிறேன்.

கூட்டமைப்பின் நிர்வாகத்தினரைச் சார்ந்த பல்வேறு குறைகள், குற்றங்கள், காரணமாக கூட்டமைப்பிற்குப் பெரிய அளவில் இழப்பு ஏற்பட்டது. கூட்டமைப்பிற்கு ஏற்பட்ட இந்த இழப்பிற்கு நிர்வாகக் குழு எந்த அளவுக்குப் பொறுப்பாகும் என்பதைக் கருதிப் பார்த்தால் சட்டப்படிக்கான சிக்கல்கள் ஏற்படும். எனவே, இப்பிரச்சினையைச் சட்டத்துறை ஆராய்ந்து பார்த்து எனக்குத் தகுந்த ஆலோசனை கூறப் படலாம்."

செயலகத்தில் கூட்டுறவுத் துறையின் உதவிச் செயலாளர் எஸ். இராஜகோபாலன் 30-3-1971 அன்று குறிப்பு ஒன்றை எழுதினார். கூட்டமைப்புக்கு இழப்பு ஏற்பட்டதற்கான முக்கியமான காரணங்களை அதில் சுருக்கமாக எழுதினார். 7-வது பாராவில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:—

"தணிக்கை அறிக்கையிலிருந்து தெரியவரும் முக்கியமான முறைகேடு என்னவென்றால் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு இந்திய ஸ்டேட் வங்கிக்கு கணக்கு அறிக்கைகளைத் தவருக அனுப்பியதே ஆகும்."

எவ்வாறு இருந்த போதிலும் ரொக்கப்பற்று வசதி இடமளிக்கப்பட்டிருந்ததும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள முறையும் அவை குறித்து எழுதப்பட்டுள்ள விவரங்களும் (இவை அல்வாறு இருப்பதாகக் காட்டும் பொருட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளன.) அதாவது வணிகத்திலுள்ள இருப்புக்கு எது நியாயமாகத் தேவையோ அதைக் காட்டிலும் அதிக அளவில் அடங்குவதாகக் குறித்தெழுதப்பட்டுள்ள விவரங்களும் பயன் படுத்திக் கொள்ளப்பட்டுள்ள முறையும் இந்திய ஸ்டேட் வங்கி ஒரு கடுமையான போக்கை மேற் கொள்ளுமாறு செய்துள்ளது. இதனால் இந்திய ஸ்டேட் வங்கிக்கு கூட்டமைப்பு தரவேண்டிய நிலுவைத் தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற் காக நிதியாயில்களைக் கண்டறியவேண்டிய ஒரு இக்கட்டான நிலையில் அரசு வைக்கப்பட்டது. மேற்சொன்ன கால அளவில், கூட்டமைப்பில் பணிபுரிந்து வந்த இரண்டு பதிவாளர்/செயலாளர் தான் இத்தகைய நிலைமைக்குப் பெரிதும் பொறுப் பாளியாவார் என்பதை இது தொடர்பாக இங்குச் சுட்டிக் காட்டுவது நல்லது. இந்த அதிகாரி களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நட வடிக்கைக் குறித்து எனது குறிப்பின்கண் பின்னர் ஓரிடத்தில் தனியே விளக்கியுள்ளேன். ...." (இதனால் இக்கருத்து வலியுறுத்த பட்டுள்ளது).

மேற்சொன்ன குறிப்பில் 8-வது பாராவி உதவிச் செயலாளர், அந்த நிர்வாகத்தின் மீதும், நிர்வாகப் பணியாளர்கள் மீதும், குற்றப் பொறுப்பு எதுவும் இருப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று தள்ளிவிட்டார். அவர் குறித் துள்ள சொற்கள் வருமாறு:—

"8. இந்தக் கூட்டமைப்பு இதன் தலைவர், நிர்வாக அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோர் ஏழைத் துள்ள செய்யத்தக்கவை அல்லாத செயல்கள், செய்யத் தக்கன செய்யாமை பலவற்றைக் குறித்து 4-வது பாராவில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.. கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் .. .... நடப்புக் கோப்பில் பக்கங்கள் 253-267 ஒழுங்கீனங்களும்..... குறைபாடுகளும் கடுமையான தன்மையை உடையனவாக இருந் தாலும்....நிர்வாகம் ....நிர்வாகப் பணி யாளர் ஆகியோர் பேரில் குற்றப் பொறுப்பு இருப் பதாகத் தோன்றவில்லை. இவையனைத்திலிருந் தும் கூட்டமைப்பின் அலுவல்கள், விவகாரங் கள் மிது மோசமாகத் திட்டமிடப்பட்டு நிறை வேற்றப்பட்டுள்ளன என்ற மட்டுமே தெரிய வருகிறது....இதன் விளைவாக பெரும் தொகை இழப்பு ஏற்பட்டுள்ளது....கணக்குகளை அடித் துத் திருத்துவதற்காகச் செய்துள்ள முயற்சி களிலிருந்து கடன் தொகை பெரும் பொருட்டு கூடுதலாகத் தகவல்களைச் சேர்த்துள்ளனர் எனத் தெரிகிறது....."

உதவிச் செயலாளர் தம்முடைய குறிப்பில் 9-வது பாராவில், நிர்வாகக் குழுவை ரத்து செய்வதற்குத் தமிழ்நாடு 1961-ம் ஆண்டு கூட்டு றவுச் சங்கங்கள் சட்டத்தின் 72-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற கூறியுள்ளார். அவரது சொற்கள் வருமாறு:—

"9 .....இருப்பினும் பங்கு மூலதனமாகவும், கடன்உதவித் தொகைகளாகவும் அரசின் நிதிகள் மிகப் பெருமளவில் முடங்கியிருக் கின்ற ஒரு நிறுவனத்தைக் கலைத்து விடுவது இயலாது. அதே சமயத்தில், இத்தகைய ஒரு நிறுவனத்தை நடத்துவதற்குத் தேவைப் படுகின்ற போறுப்புணர்ச்சியும், தகுதியும் பெற்றிருக்கும் நிலைக்கு முற்றிலும் பொருந்தி வராததென்று செயலவில் நிரூபித்துவிட்டுள்ள ஒரு நிர்வாகக் குழுவைக் கொண்டு இதனைத் தொடர்ந்து நடத்தி வருவதென்பதும் இயலாது. ஆகவே, இந்தக் கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவைக் கலைத்துவிடுவது மிகவும் பொருத்த மானதென்று தோன்றுகிறது.

கூட்டமைப்புக்கு ஏற்பட்ட இந்த இழப்பு களை வருலிக்கும் பொருட்டு, சட்டத்தின் 71-வது பிரிவின் கீழ் தண்டனை வகுலிப்பு நடவடிக்கை (Surcharge Proceedings) எடுக்க வேண்டுமென்ற நேர்முகக் கடிதம் ஒன்றின் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரைக் கேட்டுக் கொள்ளலாம் என்றும் உதவிச் செய லாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுத் துறைச் செயலாளர் திரு ஆர். பசுபதியிடம் இந்தக் குறிப்பு வந்து சேர்ந்ததும், அவர் தம்முடைய குறிப்புகளை எழுதினார். (பார்க்க: கூட்டுறவுத் துறையில் 18—4—72-ம் நாளில் பிறந்த 197-ம் எண்ணுள்ள அரசாணையின் குறிப்புக் கோப்பில் 34—66 பக்கங்கள்.) அந்தக் குறிப்பில் ஏனைய பல கருத்துக்களுக்கிடையே அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

''6. இந்த நிறுவனத்தில் நிர்வாகக் குழுவினது பொறுப்பை நிறைவேற்றுவதில் மிக மிகக் கவலைக் குறைவாக நடந்துள்ளது. இந்த நிறுவனத்தின் அலுவல்களைக் கவனிப்பதில் செய்ய வேண்டியதைச் செய்யாதது செய்யக் கூடாததைச் செய்தது ஆகியவை பற்றி கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரின் அறிக்கையில் 253—259 பக்கங்களில் ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிர்வாகக் குழு 1967-ம் ஆண்டிலிருந்து பொதுக் குழுக் கூட்டங்களை கூட்டவே இல்லை. (இயக்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மட்டுமே அவ்வப்போது கூட்டியது.) மேலும், இந்த நிர்வாகக் குழு முறைப்படி ஒழுங்காக கூட்டமும் இல்லை. எனவே, இதன் மீது நம்பிக்கை வைத்து இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தி வருவது என்பது இயலாத காரியம். ஆகவே, இது தொடர்பாக எடுக்கத் தக்க பொருத்தமான ஒரே நடவடிக்கை தமிழ்நாடு 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 72-வது பிரிவின் கீழ் நிர்வாகக் குழுவைக் கலைத்து விடுவதே ஆகும். இந்தப் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரிடம் போதுமான தகவல்கள் உள்ளன. ஆனால், இது தொடர்பாக அரசு எந்தக் கட்டளையும் பிறப்பிக்க இயலாது. தமிழ்நாடு 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 72-வது பிரிவில் சொல்லி உள்ளது போல் 'கருத்தினை' உருவாக்கவேண்டியது பதிவாளர் தான். எனவே, நாம் பதிவாளருக்குத் தக்கது என்று தோன்றக்கூடிய நடவடிக்கை எடுக்குமாறு அவருக்கு உத்தரவு பிறப்பிக்கலாம்... இந்த நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு இக் கூட்டமைப்பிற்கெனத் தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்ட பிறகு, இதற்கு எந்த வகையிலேனும் மேலும் நிதி உதவி வழங்குவது விரும்பத்தக்கது.''

திரு. பசுபதி தம்முடைய குறிப்பின் 7-வது பாராவில் பின்வருமாறு பரிவுரை செய்துள்ளார் :—

''7. இந்த நிறுவனத்திற்கு ஏற்பட்ட பல இழப்புகளுக்கு இந்த நிர்வாகக் குழுவைச் சேர்ந்த அரசுச் சார்பற்ற உறுப்பினர்களே பெரிதும் பொறுப்பாளிகளாவர். எனவே, இதன் பொருட்டு அவர்கள் மீது தமிழ்நாடு 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 71-வது பிரிவின் கீழ் சர்சார்ஜ் நடவடிக்கைகள் தொடங்கப்படவேண்டும். இதில் எவ்விதச் சட்ட இடையூறும் ஏராது. இதனைச் செய்வதால் 'சட்டச் சிக்கல்கள்' ஏற்படும் என்று கூறுவதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் எதனைக் குறிப்பிட விழைகிறார் என்பது தெரியவில்லை. தமிழ் நாடு 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 71-வது பிரிவின் கீழ் தக்க நடவடிக்கையைத் தொடங்குமாறு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு ஆலோசனை கூறலாம். இதிலும் கூட, அரசிட மிருந்து எவ்வித நிட்டவட்டமான உத்தரவும் இல்லாமல், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் தாமாகவே அவருடைய அளவில் நடவடிக்கை எடுப்பது விரும்பத்தக்கது.''

இச் சட்டத்தின் 71-வது, 72-வது பிரிவின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தின்மீது சட்டத் துறை தனது ஆலோசனை கூறலாம் என்று திரு. பசுபதி தம்முடைய குறிப்பில் 8-வது பாராவில் கூறியுள்ளார். ஜீ. என். தாஸுடைய பொறுப்பைக் குறித்துச் செயலாளர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார் :—

''9. .....இவருடைய பதவிக் காலத்தில் தான் இந்திய ஸ்டேட் வங்கியிடம் பெற்றுள்ள ரொக்கப் பற்று வசதி குறித்த பொய்யான குறிப்பு விளக்கவுரைகள் மிகப் பெருமளவில் அளிக்கப்பட்டுள்ளனவெனத் தோன்றுகிறது. உண்மையில் உள்ள இருப்பின் மதிப்பிற்கும் ரொக்கப் பற்று வசதி குறித்து குறிப்பு விளக்கத்தின்படியான இருப்பின் மதிப்பிற்கும் இடையேயுள்ள வேறுபாடு 1969-ம் ஆண்டில் அக்டோபர் திங்களில் சுமார் ரூ. 96 லட்சமாக இருந்தது, 1970 ஜூன் திங்களில் ரூ. 134 லட்சமாக உயர்ந்தது. கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்குத் தவிமைத் தணிக்கை அதிகாரி கொடுத்துள்ள பல்வேறு நிதி விவர அறிக்கைகளிலிருந்து நெல்லைக் குறித்த வியாபாரக் கணக்கைப் பொறுத்தவரை, நிகரப் பற்றுக் குறை அதாவது, உண்மையில் ஏற்பட்ட இழப்பு ஏறத்தாழ இதே அளவில்தான் இருந்தது. திரு. தாஸ் மட்டிலும் 1969 ஜூன் திங்களிலேயே சிரமத்தைப் பார்க்காமல் முயன்று சரியான நிலைமையைப் பற்றி மேலும் சிறிதளவு கவனம் செலுத்திப் பரிசீலனை செய்திருப்பாரேயானால், மற்றும் அவ்வாறு பரிசீலனை செய்தபடி இந்திய ஸ்டேட் வங்கிக்குச் சரியான இருப்பு நிலைமையைத் தெரிவித்திருப்பாரேயானால், இந்திய ஸ்டேட் வங்கியிட மிருந்து மிகையான அளவில் கடன்களைப் பெற்றிருப்பது நிகழ்ந்திருக்காது ; மேலும், இது போன்ற இருப்பு நிலைமையைக் குறித்து பொய்யான குறிப்பு விவரங்களைத் தெரிவிப்பதும் தொடர்ந்து நிகழ்ந்திருக்காது ; இவற்

றிற்கு மேலாக, 1969 ஜூன் திங்களில் அல்லது அதற்கு முன்னரே கூட உண்மையான நிலைமை கண்டுபிடிக்கப்பட்டிருக்கும். இவை தவிர, நிறுவனத்துக்கு நேரிடையாக ஏற்பட்ட பல இழப்பினுக்குக் காரணமாக இருந்த வேறு பல முறைகேடுகளுக்கும் இவரே பொறுப்பாவார்—பார்க்க. கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரின் அறிக்கை ந. கோ. பக்கங்கள் 259—265.''

இந்தக் காரணங்களின் பேரில் ஜீ. என். தாஸ் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் மீதும் கணக்காளர் எஸ். நடராஜன் மீதும் செய்ய வேண்டாத தைச் செய்ததும், செய்யவேண்டியதைச் செய்யாததும் ஆகியவகையில் இழைத்த பல குற்றங்களுக்காகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் படவேண்டுமென்றும் செயலாளர் திரு. பசுபதி செயற்குறிப்பை அனுப்பியுள்ளார்.

செயலாளர் தம்முடைய குறிப்பின் 11-வது பாராவில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :—

''இவ்விரு அதிகாரிகளும் நிறுவனத்தின் அலுவல்களைக் குறித்து விளக்கமாகப் பரிசீலனை செய்ய கவனம் எடுத்துக் கொள்ளவில்லை என்பது மட்டு மல்ல. இவர்கள் உண்மையாகவே, வேண்டு மென்றே பல ஒழுங்கீனங்களைப் புரிந்துள்ளார்கள். அதல் விளைவாக நிறுவனத்தின் வியாபாரங் களிலும், அலுவல்களிலும் குழப்பமான நிலை ஏற்பட்டுள்ளது. அன்றியும், நிறுவனத்துக்குப் பண இழப்பும் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிறுவனம் தற்போது அடைந்துள்ள மோசமான நிலைமைக்கு இவர்களுடைய நடவடிக்கைகளே காரணமாகும்''.

இருந்த போதிலும், இவர் எஸ். நடராஜனை தற்காலிக வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்று பரிந்துரைக்கவில்லை. ஏனென்றால், இவருடைய கருத்தின்படி 'இவர் மீதுள்ள வழக்கு ஜீ. என். தாஸ் மீதுள்ள வழக்கைப் போன்ற தன்மையுடைய தாக தோன்றவில்லை'.

செயலாளர் தம்முடைய குறிப்பின் 12 வது பாராவில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :—

''இந்த இரு அதிகாரிகள் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் பொழுது அது குறித்து தெளிவான விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்றும் தெளிவற்ற முறையில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யலாகாது என்றும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப் படவேண்டும்''.

கூட்டுறவுத் துறையின் அரசு உதவித் செயலாளரும், அரசுச் செயலாளரும் அளித்துள்ள குறிப்பை ஒரு முறைப் பார்த்தால், இவ் விரு உயர் அதிகாரிகளும் தஞ்சாவூர் கூட்டுறவு விற் பனைக் கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவைச் சேர்ந்த அரசுச் சார்பற்ற உறுப்பினராக இருப் பினும் சரி, அல்லது கூட்டமைப்புக்கு முகமைப் பணியிற் சென்றுள்ள அரசு அலுவலராக இருப் பினும் சரி, எவரேனும் காப்பாற்றுவதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. சட்டத்தின் 71 வது பிரிவின்கீழ் ரூ. 1 கோடியும் அதற்கு மேற்பட்ட அளவுத் தொகையைத் தண்டனை வழுல் நடவடிக் கையின் மூலம் வசூலிக்கக் கருதப்பட்டுள்ளது. இங்கு எடுக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ள நட வடிக்கை தாராளமான போக்கைக் காட்டவில்லே. எப்படிக் கருதிப் பார்த்தாலும் அரசின் சார்பில் ஏற்பட்டுள்ள சில குறைபாடுகளை மறைக்க மேற்கொண்ட முயற்சியாகவும் இதனைச்சொல்ல முடியாது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட் டமைப்பு நிறுவனத்தில் பணியாற்றிய அரசு அலு வலர்களும், அரசுக் சார்பற்ற அலுவலர்களும் தாங்கள் ஈழைத்த செய்தக்க அல்லாத செயல்களா லும், செய்தக்க செய்யாமையாலும் கூட்டமைப் புக்கு உண்டான பொருள் இழப்புகள் தொடர் பாக அவர்கள் மீது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு சரியான முயற்சி மேற்கொள்ளப்பட் டதுளைக் கூறலாம்.

பசுபதி தெரிவித்திருப்பது தமிழ்நாடு கூட் டுறவுச் சங்கத்தின் 71-வது, 72-வது பிரிவின்கீழ் நடவடிக்கை எடுப்பது குறித்து உத்தேச நட வடிக்கையைப் பரிசீலனை செய்யுமாறு சட்டத் துறை யிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. எந்த விஷயம் பற்றி சட்டத் துறையிடம் கேட்கப்பட்டதோ அதைப் பற்றி மட்டுமே அத்துறை தனது கருத் தைத் தெரிவித்தது. தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஒழுங்கீனங்கள் தொடர் பாக எவர் மீதும் குற்றப் பொறுப்பு சுமத்தப்பட முடியுமா என்பது பற்றி அத்துறை பரிசீலனை செய்யவில்லை. இந்த குறிப்பிட்ட வழக்கில் சட்டத்தின் 71-வது, 72-வது பிரிவின்கீழ் பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு கூட் டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு அரசு உத்தர விட இயலும் வகையில் சட்டத் துறை 8—4—71ல் தனது கருத்தைத் தெரிவித்தது. இருந்தாலும் சட்டத்தின் 71-வது, 72-வது பிரிவின்கீழ் மேற்சொன்னது போன்ற நடவடிக்கை எடுக்கு மாறு அரசு, மறுப்புக்கு இடமில்லாத வகையில் முடிவான முறையில் பதிவாளருக்குக் கட்டளை யிட முடியும் என்பதைக் கூட்டுறவுத் துறைச் செயலாளர் (பசுபதி) ஒப்புக் கொள்ளவில்லை. எனவே, அவர் இந்த நிலைமை பற்றி மறுபடி பரி சீலனை செய்யுமாறு சட்டத் துறையைக் கேட்டார். சட்டத் துறை இது பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்கப்பட்டிருந்த அளவில், கூட்டுறவு தொடர்பான முக்கியமான பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக முதலமைச்சர் திரு. கருணாநிதி அமைச்சரவைக் கூட்டத்தை 20—4—71 ஆம் நாளில் கூட்டினர். இந்தக்

கூட்டத்தில் அமைச்சர்கள் முன்னிலையில் வைப் பதற்காக கூட்டுறவுத் துறை குறிப்பு ஒன்றைத் தயாரித்தது. இந்தக் குறிப்பினைக் கூட்டுறவுத் துறையில் 18—4—72 ஆம் நாளில் பிறந்த 197 ஆம் எண் அரசாணையில் குறிப்புக் கோப்பில் 68 முதல் 76 வரையிலான பக்கங்களில் காண லாம். மேலே நாம் குறிப்பிட்ட கூட்டுறவுத் துறை உதவிச் செயலாளர், கூட்டுறவுத் துறைச் செயலாளர் ஆகியோர் தயாரித்த குறிப்புகளின் அடிப்படையில் இக்குறிப்பு தயாரிக்கப்பட்டது. அமைச்சரவைக் கூட்டத்தில் கூட்டுறவுச் செய லாளருடைய தொகுப்புக் குறிப்பு பரிசிலனை செய்யப்பட்டது. இந்த அமைச்சரவைக் கூட்டத்தினுடைய நடவடிக்கை குறிப்புகளின் ஒரு பகுதியைக் கூட்டுறவுத் துறையில் 18—4—72-ம் நாளில் பிறந்த 197ம் எண் அரசாணையில் ந. கோ. 281-ம் பக்கத்தில் காணலாம். அது வருமாறு:—

20—4—71-ம் நாளில் முதலமைச்சருடன் விவாதிக்கப் பட்ட பொருள்கள்.

(2) திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு செயல்படுவது குறித்து :

கூட்டுறவு அமைச்சர் இந்தக் கூட்டமைப்பின் தற்போதைய நிதி நிலைமைப் பற்றி விளக்கிக் கூறி னார். அவர் மேலும் சொன்ன பொழுது எல்லா வகைப்பட்ட வரவுகளையும் கணக்கில் கொண்ட பிறகும், இந்திய ஸ்டேட் வங்கி தண்ட வட்டியைத் தள்ளி விட்டதை வரவாகக் கணக்கில் கொண்ட பிறகும், வெளிச் சந்தையில் அரிசி விற்பனை முத லானவற்றிலிருந்து கிடைத்த வருவாய்களையும் கணக்கில் சேர்த்துக் கொண்ட பிறகும் கூட ஏறத் தாழ 1 கோடி ரூபாய் அளவிற்கு இந்தக் கூட்ட மைப்பு கணக்குக் காட்ட இயலவில்லை. அப்படி யென்றால், இந்த அளவுக்கு அரசுக்கு இழப்பு ஏற் பட்டது என்பதே இதன் பொருளாகும்.

இது குறித்து மேலும் முதலமைச்சர் குறிப் பிட்டதாவது : —இந்தக் கூட்டமைப்பு தவருன வழியில் இயங்கிக் கொண்டிருக்குமானால் அவ சியம் ஏற்பட்டால், தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் விதித் துறைகளைப் பயன்படுத்தி இந்த நிலைமையைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் அரசுச் சார்பற்றவர்களே தலைவர்களாக இருக்க வேண்டும் என்கின்ற அதே சமயத்தில் காசோலை களில் கையொப்பம் இடுதல் போன்ற நிதி அதிகாரங்கள் போதுமான பதவித் தகுதியுடைய அரசு அலுவலர் ஒருவரிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதும் அரசின் பொதுவான கொள் கையாகும் என்றார். மேலும் கூட்டுறவு அமைச்சர் நிலைமையைத் திருத்தி விவகாரங்களை ஒழுங்கு படுத்துவதற்காக உரிய அவசரத் தேவையைக் கவ னத்திற்குக் கொண்டுவரும்பொருட்டு இதைப் பற்றி தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்ட மைப்பின் தலைவரிடம் எடுத்துரைக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பின் தலைவர் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிவுரைக்குச் செவி சாய்க்க வில்லையென்றால் இது தொடர்பாகப் பொருத்த மான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் சொன்னார்.

(ஒ-ம்) ஏ. எஸ். வேங்கடராமன், 28—4—71.
(ஒ-ம்) சி. பா. ஆதித்தனார், கூட்டுறவு அமைச்சர், 29—4—71.
(ஒ-ம்) மு. கருணாநிதி, முதலமைச்சர்.
9—5—1971''.

அரசின் சார்பான வழக்கறிஞரும், புகார் மனு தாரரின் வழக்கறிஞரும் இது தொடர்பாகச் சுட்டிக் காட்டியதாவது: மேற்சொன்ன அமைச்சரவைக் கூட்டத்தில் கூட்டமைப்பின் மூலமாக அரசுக்கு ஏற்பட்டிருந்த இழப்பு மதிப் பீடு ரூ. 1 கோடியாக இருந்த போதிலும் கூட திரு. கருணாநிதி தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்படி மட்டுமே நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

'விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதற்கான அவசர முக்கியத்துவத்தைக் கூட்டமைப்பின் தலை வருக்கு (வி. எஸ். டி.) எடுத்தரைத்து வலியுறுத் தும் பொருட்டு கூட்டுறவு அமைச்சர் அவரிடம் பேச வேண்டும் என்று திரு. கருணாநிதி குறிப் பிட்டிருப்பது கூட அவர் வி. எஸ். டி.-யைக் காப் பாற்ற முயன்றுளளார் எனபதைக் காட்டிக் கொடுத்து விடுகிறது என்று பணிவுடன் கூறிக் கொள்வதாக இந்த வழக்கறிஞர்கள் குறிப்பிட்ட னர். மேலும் அமைச்சரின் அறிவுரைக்குச் செவி சாய்க்கவில்லையென்றால் இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று முதலமைச்சர் தெரிவித்த மாற்றுக் கருத்துக்கூட எப்படிப் பார்த்தாலும் குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என பொருள் கொள்ளக்கூடும் என்று தெரியவில்லை எனவும் வாதிடப்பட்டது. நிரு. வி. எஸ். டி. மீது உரிமை வழக்குப் பொறப்பு, குற்ற வழக்குப் பொறுப்பு ஆகிய இருவகைப் பொறுப்புகளி லிருந்தும் அவரைக் காப்பாற்ற உதவுவதற்கான தெளிவான முயற்சியே இது என்றும் அந்த வழக்கறிஞர்கள் வாதித்தனர்.

20—4—1971-ம் நாளில் நடைபெற்ற அமைச் சரவைக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளில் காணப்படுகின்ற முதலமைச்சர் எழுதிய குறிப்பு களில் மாறுபாடான கேடுதருகின்ற பொருள் எதனை யும் காண்பது அழகல்ல என்று எனக்குத் தோன்று கிறது. முதலமைச்சர் தெரிவித்த நடவடிக்கை யானது இழப்புத் தொகை வசூல் நடவடிக்கையை மட்டுமே குறிப்பிடுகிறது என்று வைத்துக் கொண்டாலும் கூட, முதலில் வி.எஸ்.டி. இந்தக் கூட்டமைப்பின் விவகாரங்களை ஒழுங்குபடுத்திச்

சேராக்குவது அவசரமான தேவையாகும் என்று அவரைக் கேட்டுக்கொள்வதும், அவர் அந்த அறிவுரைக்கு இணங்காமல் போகுல் மட்டுமே அவர்மீது பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் தெரிவித்த கருத்தில் முரையற்றது எதுவுமில்லே. தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 71-வது பிரிவின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கையும் கூட அந்த நடவடிக்கையின் அளவில் குற்ற வழக்கு நடவடிக்கையாக அமைந்திராவிட்டாலும் கூட அது உண்மையிலேயே கடுமையான விசாரணை உள்ளடக்கிய மிகக் கடுமையான இயல்புடைய நடவடிக்கையாகும் என்பது நீனேவில் கொள்ளத் தக்கது. இந்தப் பிரிவில் விதிக்கப்பட்டுள்ளது வருமாறு :—ஒரு சங்கத்தின் அமைப்பில் அல்லது நிருவாகத்தில் அக்கறை கொண்டிருந்த அல்லது இருக்கின்ற நபர் எவரும் அல்லது அந்தச் சங்கத்தின் முன்னுள் அல்லது இந்நாள் அதிகாரி அல்லது பணியாளர் எவரும் சட்டத்தின் 64-வது பிரிவின் கீழ் நடைபெறும் ஒரு தணிக்கையின்போது அல்லது சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் நடைபெறும் ஒரு விசாரணையின்போது இதுபோன்ற சமயங்களில் அவர் சங்கத்துக்கு உரிய பணத்தைக் கையாடியுள்ளார் என்று அல்லது அதனேத் தம் முடன் வைத்துக் கொண்டுள்ளார் என்று அல்லது ஏனேய ஒரு சொத்தை மோசடியாக தம்மிடம் வைத்துக் கொண்டுள்ளார் என்று அல்லது சங்கம் தொடர்பாக நம்பிக்கை மோசடிக் குற்றம் புரிந்துள்ளார் என்று அல்லது வேண்டுமென்றே கவனக்குறைவாக இருந்ததன் மூலம் அல்லது நம்பிக்கை மோசடி செய்து சங்கத்தின் சொத்துக்களில் குறைபாட்டை ஏற்படுத்தியுள்ளார் என்று அல்லது சட்டத்திற்கு அல்லது அதன் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளுக்கு அல்லது சங்கத்தின் துணே விதிகளுக்குப் புறம்பான முறையில் தொகை எதையும் கொடுத்துள்ளார் என்று முதற் பார்வையில் தெளிவாகத் தெரிய வந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது. அந்நபரின் செயலால் விளேந்த இழப்பினே வசூலிப்பதற்கு 71-வது பிரிவு இந்த அதிகாரத்தை அளிக்கிறது. இந்த 71-வது பிரிவைச் சேர்ந்த (1)-வது உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர் ஒருவர் இது தொடர்பாக தமது தரப்பை எடுத்துச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றபடி அவர்மீது எந்த ஆணேயும் பிறப்பிக்கப்படக்கூடாது என்று அந்த உட்பிரிவின் (2)-வது வரம்பு நிபந்தனே தெளிவாகக் கூறுகிறது. இந்த வழக்கில் முதலில் கூட்டுறவு அமைச்சர் இது தொடர்பாக வி. எஸ். டி. யுடன் தொடர்பு கொண்டு விவகாரங்களே ஒழுங்குபடுத்த வேண்டிய அவசரத் தேவையைப் பற்றி அவரிடம் எடுத்துரைக்க வேண்டுமென முதலமைச்சர் தெரிவித்திருந்த கருத்து மேற் சொன்ன வரம்பு நிபந்தனேயில் குறிப்பாக கூறப் பட்டுள்ள அடிப்படை விதிக்கு ஒத்த முறையில் அமைந்துள்ளது.

28—7—1971-ம் நாளில் கூட்டுறவுத் துறை சுற்றோட்டக் குறிப்பு ஒன்றைத் தயாரித்தது. இந்தக் குறிப்பில் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது : "(a) இந்த நிறுவனத்தில் அரசுக்கு உள்ள பற்றினுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கின்ற வகையில் அரச இயக்குநர்கள் நியமிக்கப் படவேண்டும். அரசு நியமனதாரர்களில் ஒருவர் தெரிந்தெடுக்கப்பட்டு நிருவாக இயக்குநராக நியமிக்கப்பட வேண்டும். (b) இந்த நிறுவனத்தின் தலேவர் தற்போது செலுத்தி வருகின்ற அதிகாரங்களுடன் இயக்குநர்களின் தலேவராக அல்லது முன்புபோல் இதன் தலேவராகத் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்படலாம்." நாம் மேலே சொன்ன (a) பகுதியிலுள்ள கருத்து 1969 செப்டம்பரில் வி.எஸ்.டி. யிடமிருந்தே வந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

18—8—1971 ஆம் நாளில் கூட்டுறவுத் துறையின் கூடுதல் செயலாளர் திரு. வி. சங்கரன் சுற்றோட்டக் குறிப்பொன்றைத் தயாரித்து முன் வைத்தார். அதில் இப்போதுள்ள நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனேக் கூட்டமைப்புக்கு உதவும் வகையில் அதற்கு கூடுதல் நிதி உதவி அளிக்கவேண்டுமென்று தெரிவித் திருந்தார். அவர் தமது (திருத்தக்) குறிப்பில், ரு. 27.28 லட்சம் தொகையைத் திருப்பிச் செலுத்தத்தக்கப் பங்குமூலதனமாக அனுமதிக்கலாம் என்றும், மேலும் ரு. 20 லட்சம் தொகையைத் தற்காலிகக் கடனுக அனுமதிக்கலாம் என்றும் இந்த தற்காலிகக் கடன் தொகையை வருவாய் வாரியத்திடமிருந்து வரவேண்டிய அரசுக் கணக்கிலான ரசாயன உரங்கள் சேமிப்புக்குக் கொடுக்கப் படவேண்டிய கோரிக்கைத் தொகைகளுக்காக சரிக் கட்டப்படலாம் என்றும் பரிந்துரை செய்தார். இவ்வாறு கிடைக்கின்ற கடன் தொகையைச் சரிக் கட்டிய பின்னர், அரசிடமிருந்து வரவேண்டிய தொகைகளேப் பெற்ற பிறகும் இந்திய ஸ்டேட் வங்கியிடம் எஞ்சி நிற்கக்கூடிய றொக்கக் கடன் நிலுவையான ரு. 1,15.34 லட்சம் தொகை மாறில அரசுக்கு நேரிடையாக செலுத்தப்பட வேண்டிய கடனுக மாற்றப்படலாம் என்றும், இந்தத் தொகை அதிலிருந்து செலுத்தப்பட வேண்டியுள்ளதான ரு.18.65 லட்சம் தண்ட வட்டித் தொகையைத் தள்ளிவிட்ட பிறகு இது ஐந்தாண்டுக் காலத்தில் திருப்பிச் செலுத்தத்தக்கப் பங்கு மூலதனமாக மாற்றப்படுவதன் மூலம் திருப் பிச் செலுத்தப்படலாம் என்று அவர் பரிந்துரைத் தார். அரசு இதில் மிகப் பேரளவில் பங்கு கொண்டிருப்பதை முன்னிட்டு இயக்குநர் குழுவில் பெரும்பான்மை வகிக்கின்ற வகையில் அரசு இயக்குநர்கள் நியமனம் செய்யப்படவேண்டுமென்றும்,

தற்போதைய தலைவரையும் இயக்குநர் குழுவையும் மாற்றுமாலேயே ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் இயக்குநர் குழுவில் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது. இந்தக் குறிப்பு 25—8—1971-ம் நாளில் தலைமைச் செயலாளரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதற்கு ஒப்புதல் அளித்த போது அவர் வி.எஸ்.டி.யே தலைவராக நீடிப்பது அனுகூலமாக இருக்குமென்றும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் நிர்வாக அலுவல்கள் ஐ.ஏ.எஸ். பதவித் தரத்தைச் சேர்ந்த முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரிடம் இருக்கவேண்டும் என்றும், அவர் இந்தக் கூட்டமைப்பின் நிர்வாக இயக்குநராகப் பணிபுரிய வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

இருப்பினும் தலைமைச் செயலாளர் (சபாநாயகம்) அரசு இயக்குநர்கள் பெரும்பான்மையாக இருக்க வேண்டிய நேரமையில்லையென்றும், ஏனெனில் அரசு இயக்குநர் ஒருவர் இருக்கும்பட்சத்தில் எற்றுக் கொண்டுள்ள நடைமுறை விதியின்படி அவர் ஒரு கருத்தை ஒப்புக்கொள்ள மறுப்பாராஞல் அந்த விஷயம் உடனடியாக ஒத்திப் போடப்பட்டு அரசின் ஆலோசனை கேட்கப்பட வேண்டும் என் திருப்பதால் அவர் அவ்வாறு அறிவுரை அளித்துள்ளார். பின்னர் இந்தக் குறிப்பு சுற்றோட்ட முறையில் கூட்டுறவு அமைச்சர், முதலமைச்சர் ஆகியோருடைய ஆணைகளைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டது. ஆனுல், அந்தக் கோப்பினை ஆய்வு செய்ததிலிருந்து தலைமைச் செயலாளர் இந்த விஷயத்தில் முதலமைச்சரை நேரிடையாகக் கலந்தாலோசித்துள்ளார் என்றும் அவர் முதலமைச்சருடன் விவாதித்ததை யொட்டி 25—8—1971-ம் நாளில் குறிப்பொன்றை எழுதியுள்ளார் என்றும் தெரியவருகிறது.

25-8-71-ம் நாளில் எழுதிய இந்தக் குறிப்பில் தலைமைச் செயலாளர் தெரிவித்துள்ளதாவது: ''தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் விவாத நிர்வாகத்தைப் பொறுத்த வரை திருப்பிச் செலுத்தத்தக்கதல்லாத பங்குகளில் மாநில அரசுக் கடனுக்கு ரூ. 1 கோடியை வழங்கும் முன்னதாக அப்பற்றி விவரித்து உயிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.'' அவர் இக் குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: ''இது தொடர்பாக இந்த விஷயம் பற்றி தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் தலைவருடன் விவாதம் செய்யப்பட வேண்டும் என்ற முதலமைச்சர் கட்டளையிட்டுள்ளார். அதற்கிணங்க இன்று பிற்பகலில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் கூட்டுறவுத் துறைச் செயலாளர், உணவுத் துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர் ஆகியோர் வந்திருந்தனர்''. இந்தக் குறிப்பிலிருந்து மேலும் தெரியவரும் விவரங்களாவன: தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிற்கு மிகப் பெருமளவில் இழப்புகள் ஏற்பட்டுள்ள காரணத்தால் இந்த கூட்டமைப்பிற்கு நிதி உதவி வழங்கும் முன்னதாக, இதன் நிர்வாகத்தில் மிகக் கடுமையாக மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும் என்று இதன் தலைவரிடம் (வி. எஸ், டி.) தலைமைச் செயலாளர் விளக்கினர். ''தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புத் தலைவர் இது தொடர்பாக தெரிவித்த கருத்து என்னவென்றால் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னதாக இந்தக் கூட்டமைப்புத் தொடங்குவதற்கு இவரே காரணகர்த்தாவாக இருந்தார் என்றும், இதனை இத்தனை ஆண்டுகளாக வளர்த்து இன்றுள்ள நிலைக்கு உருவாக்கியுள்ளார் என்றும்..... இந்த நிர்வாகத்தை தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசு விரும்பினுல் அதற்கு குறுக்கே நிற்க தாம் விரும்பவில்லை என்றும் அவர் சொன்னர். இதன் நிர்வாகத்தில் அரசு இயக்குநர்கள் கூடுதலான அளவில் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்பதையும் அவர் ஒப்புக் கொண்டார். உயர்ந்த பதவி நிலையிலுள்ள அரசு இயக்குனர்கள் நியமிக்கப்படுவது இந்தக் கூட்டமைப்பின் நிர்வாகத்துக்கு உதவும் என்று அவர் குறிப்பிட்டார். அவர் மூதுநிலை அதிகாரி ஒருவர் நிர்வாக இயக்குனராக நியமிக்கப்பட வேண்டும் என்றும் நிர்வாகக் குழுவின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் அரசு மேலும் மூன்று இயக்குனர்களை நியமிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு தாம் 1969 செப்டம்பரில் அரசுக்கு அனுப்பிய செயற்குறிப்புக்களைக் குறிப்பிட்டார்.'' மேலும், நிரு. வி. எஸ். டி. யே தொடர்ந்து அதன் தலைவராகப் பதவி வகித்து வர அனுமதிக்கப்படுவது அதற்கு அனுகூலமளிப்பதாக இருக்குமென்று தலைமைச் செயலாளர் பரிந்துரைத்துள்ளார். இந்தக் குறிப்பினை 11-9-71-ம் நாளில் முதலமைச்சர் பார்த்துள்ளார். அவர் ஓரக்கோட்டுப் பகுதியில் பின் வரும் குறிப்பை எழுதியிள்ளார்; ''நான் இதற்கு ஒப்புக் கொள்கிறேன். ஆனுல், அவர் தற்காலிகமாக மட்டுமே அவ்வாறு தொடர்ந்து தலைவராக இருக்க அனுமதிக்கப்படலாம்.'' இந்தச் செயற் குறிப்பிற்கும் தலைமைச் செயலாளர் பணிந்து அனுப்பிய இச் செயற்குறிப்பின் ஏனைய அம்சங்களுக்கும் ஒப்புதல் அளிக்கின்ற பொழுது முதலமைச்சர் பின்வருமாறு மேற்குறிப்பை எழுதியுள்ளார். ''ஒப்புக் கொள்கிறேன். இந்தக் குறைபாடுகளுக்குத் தொடர்பான நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படலாம்'' (ஒப்பம்) மு. கருணுநிதி. முதலமைச்சர்., 11-9-71. இதன் பிறகு உணவு வருவாய் துறை அமைச்சர் இதனைப் பார்த்து 18-9-71-ம் நாளில் கையொப்பம் இட்டுள்ளார். கூட்டுறவு அமைச்சர் 20-9-71-ம் நாளில் இதனைப் பார்த்து கையொப்பம் இட்டுள்ளார்.

வாரிய நிர்வாக அமைப்பில் திருத்தி அமைக்கின்ற கருத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட பொழுது நிதித் துறைச் செயலாளர் ஒரு

ஐயப்பாட்டிணை எழுப்பினர். அதாவது, இந்தக் கூட்டமைப்பின் தலைவர் பதவிக் காலத்தை எவ்வாறு தற்காலிகமாக வரையறுக்க முடியும் என்னும் ஐயத்தை எழுப்பினர். கூடுதல் செயலாளருடன் இது பற்றிக் கலந்து விவாதித்த பிறகு இயக்குநர் குழுவில் நவிப்பட்ட உறுப்பினர்கள் பெற்றுள்ள பிரதிநிதித்துவத்தை நீக்குவதன் மூலம் இப் பதவிக் காலத்தை தற்காலிகமானதாக ஆக்க முடியும் என்று அவர் கருதினார். இது தொடர்பாக அவர் 17—10—71-ம் நாளில் முதலமைச்சருடனும் தொழில் அமைச்சர் திரு. மாதவனுடனும் விவாதித்தார். தொழில் அமைச்சர் திரு. மாதவன், திரு வி.எஸ்.டி.யைத் தற் காலிகத் தலைவராகக் கொண்டிருப்பதென்பது எந்த அளவிற்குச் சட்ட பூர்வமாக நிலைபெறத் தக்கதாக இருக்கும் என்று பரிசீலனை செய்யப் படவேண்டும் எனக் கருதினர். இது தொடர் பாக கூட்டமைப்பின் துணை விதிகள் திருத்தப் படவேண்டுமென்ற ஒரு கருத்து கூறப்பட்டது. அந்தக் குறிப்பிலிருந்து மேலும் தெரிய வந்த தாவது: இயக்குநர் குழுவைத் தேர்ந்தி அமைப் பது குறித்த வரைவு தயாரிக்கப்பட்டு கூட் டுறவு அமைச்சராலும், தொழில் அமைச்ச ராலும், முதலமைச்சராலும் ஒப்புதல் அளிக்கப் படவேண்டும் எனவும் அதன் பிறகு அவ் வொப்புதலுக்கு இணங்க சட்ட மன்றப் பேர வையின் அடுத்தத் கூட்டத் தொடருக்கு முன்னதாக அணை பிறப்பிக்கப்படவேண்டுமென வும் தெரிய வந்தது.

கூட்டுறவுத் துறையின் கூடுதல் செயலாளர் 19—10—71-ம் நாளில் ஏற்பளிப்பிற்கான வரைவு அரசாணை ஒன்றைக் கொண்டுள்ள மற்றொரு குறிப்பைத் தயாரித்து முன் வைத்த தாகத் தோன்றுகிறது. இந்த வரைவு அரசாணை கோப்பில் கிடைக்கவில்லை. இந்தக் குறிப்பு தொழில் அமைச்சருக்குப் பணித்தனுப்பப் பட்டது. அவர் இதனை முதலமைச்சர் முடிவு செய்யலாமென்று எழுதி மேலொப்பம் இட் டார். இந்த மேற்குறிப்புடன் இக் கோப்பு முதலமைச்சர் முன் வைக்கப்பட்ட பொழுது அவர் ''கூட்டுறவு அமைச்சரும், தொழில் அமைச்சரும் விவாதிக்கலாம்'' என்று குறிப் பெழுதினர். இதற்கிணங்க இக் கோப்பு கூட்டுறவு அமைச்சருக்குச் சுற்றேட்டமுறையில் அனுப்பப்பட்டது. அவர் 29—12—71-ம் நாளில் தொழில் அமைச்சர் இது குறித்து விவாதிப்பதற்குத் தமக்கு வசதியான நாளைக் குறிப்பிடலாம் என்று மேலொப்பம் இட்டார். அதன் பிறகு இந்தக் குறிப்பு தொழில் அமைச் சரின் பார்வைக்கு வந்ததா இல்லையா எனக் காட்டுவதற்கு இக் கோப்பில் வேறு மேலொப் பம் எதுவுமில்லை. ஆனால் அதனை அடுத்து முதலமைச்சர் எழுதியுள்ள முதற் கோப்பி லிருந்து இந்தக் கோப்பு தொழிலமைச்ச ருக்குச் சென்றுள்ளது எனவும் முதலமைச்சர் இந்த விஷயம் பற்றி தொழிலமைச்சர், கூட் டுறவு அமைச்சர் ஆகிய இருவருடனும் விவா தித்துள்ளார் எனவும் தெரிகிறது.

கூடுதல் செயலாளர் தயாரித்தனுப்பிய மேற் சொன்ன குறிப்பு இவ்வாறு சுற்றேட்ட முறை யில் ஆணை பெறுவதற்காக அனுப்பப்பட்டிருந்த நிலையில் வி.எஸ்.டி. யும் இயக்குநர் குழுவைச் சேர்ந்த மற்ற 7 உறுப்பினர்களும் 15—1—72-ம் நாளில் தத்தம் பதவி விலகல் கடிதங்களை முதலமைச்சருக்கு அனுப்பி வைத்தனர். அவற் றின் நகல்களைத் தலைமைச் செயலாளருக்கு அனுப்பினர். இந்த பதவி விலகல் கடிதத்தின் நகல்கள் 20—1—72-ம் நாளில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு வந்து சேர்ந்தன. இவ்வாறு உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்திருப்பினிலையில் இருந்த காரணம் என்னவென்று ஆவணங்களிலிருந்து புலப்பட வில்லை. ஆனால் அந்நாள் நிதிச் செயலாளர் திரு. வேங்கடரமணன் கூறுகின்றபடி, கூட்டு றவுச் சங்கங்களின் பதிவாளர் தம்மை வந்து பார்க்குமாறு வி.எஸ்.டி.க்கு சொல்லி அனுப் பினர் என்றும், அவர்தான் அரைப் பதவி விலகு மாறு ஆலோசனை கூறினர் என்றும் தெரி கிறது. முதலமைச்சரது உத்தரவின் பேரிலேயே கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் இதனைச் செய்திருப்பார் என்று வேங்கடரமணன் நம்புகிறார். இயக்குநர் குழுவினர் பதவி விலகல் செய்துள்ளதால் கூட்டுறவுத் சங்கங்களின் பதி வாளர் இதுகுறித்து பொருத்தமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு கேட்கப்படலாமென்று முதலமைச்சர் தெரிவித்தார். தமது பதவி விலகலைத் தெரிவித்து வி. எஸ். டி. அனுப்பிய கடிதமும் அவருடைய கோப்புகளில் அனுப்பிய பதவி விலகல் கடிதமும் ஆவணத்தில் கண்டுபிடிக்க முடிய வில்லை. அவனை நிதிமைச் செயலாளருக்கு அனுப்பிய அக் கடிதத்தின் நகல் மட்டுமே இக் கோப்பில் காணக் கிடைக்கிறது. இக் கடிதம் வரப் பெறுவதன் மேல் தலைமைச் செயலாளர் முதலமைச்சருடன் இவ் விஷயம் குறித்து விவா தித்து இந்த விலகல் கடிதத்தை ஏற்குமாறும் இயக்குநர் குழுவை மாற்றியமைக்குமாறும் கருத்துரை ஒன்றைத் தெரிவித்தார். தலைமைச் செயலாளர் எழுதிய இந்த மேற்குறிப்பின் அடிப்படையில் கூட்டுறவுத் துறையின் கூடுதல் செயலாளர் சுற்றேட்டக் குறிப்பொன்றைத் தயாரித்தார். அதன்கண் முதலமைச்சர், தலைமைச் செயலாளர் ஆகியோரது கட்டளை யொட்டி இக் குறிப்பு சுற்றேட்ட முறையில் ஆணைக்கு அனுப்பப்படுகிறது என்று திட்ட வட்டமாகக் குறிப்பிட்டார். தலைமைச் செய லாளர் இவ் விஷயம் பற்றி முதலமைச்சருடனும் கூட்டுறவு அமைச்சருடனும் நேரிடையாகவே உரித்த

பிறகு அவர் முதலமைச்சரும் கூட்டுறவு அமைச்சரும் இந்தச் செயற்குறிப்பைத் தொடர்ந்து செயற் படுத்துவதில்லை என்று முடிவு செய் துள்ளதாகவும் இது குறித்து கூட்டுறவுச் சங் கங்களின் பதிவாளரால் மாற்றுச் செயற் குறிப்புகள் பணித்தனுப்பப்பட உள்ளன என்றும் மேற்குறிப் பொன்றை எழுதினார். இதனைத் தலைமைச் செய லாளர் 20—1—72-ல் எழுதி கையொப்பம் இட் டுள்ளார். அதே நாளில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கூட்டுறவுத் துறைச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை எழுதினர். அக்கடிதத்தில் அவர் தமிழ் நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 72 வது பிரிவைச் சேர்ந்த விதிக் துறைகள் அதா வது அப் பிரிவில் உள்ள (1) (a),(b) உட்பிரிவுகளை -தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்ட மைப்பைப் பொறுத்தவரை அதன் இயக்குநர் குழுவைத் தனது தரப்பை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளிக்காமலும் அச்சங்கம் கடன் பட் டிருக்கிற நிதி உதவியளிக்கும் வங்கியுடன் கலந்து ஆலோசனை செய்வதைத் தவிர்க்கின்ற வகையிலும் அதனை உடனடியாகக் கலைத்து அதற்குத் தனி அதிகாரி ஒருவரை நியமிக்கத் தமக்கு உதவும் வகை யில் அவ் விதித் துறைகள் திருத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். பதிவாளர் அனுப்பிய இந்த செயற்குறிப்பினுக்கு கூட்டுறவு அமைச்சர் ஒப்புதல் அளித்தார். இது தொடர் பாக தேவைப்படுகின்ற ஆணைகளைப் பிறப்பிக்கு மாறு கூட்டுறவுத் துறை கூடுதல் செய லாளருக்குக் கட்டளையிடப்பட்டது.

சட்டத் துறை, மேலே குறிப்பிட்டுள்ள 72-வது பிரிவைச் சேர்ந்த இரண்டு பகுதிகளையும் அரசு திருத்தியமைக்க கூட குழுவைக் கலைத்து பிறப்பிக்கின்ற ஆணை நீலை நிற்க இயலாது என்று கருத்துத் தெரிவித்தது. சட்டத் துறை இவ்வாறு ஆலோசனை அளித்திருந் தும்கூட, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் பிறப்பிக்கின்ற ஓர் ஆணையின் மூலம் இயக்குநர் குழுவைக் கலைத்து விடலாம்என்கிற கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் இரண்டு பகுதிகளைச் சேர்ந்த விதித் துறைகளில் மாறுதல் செய்ய அரசு ஆணைகளைப் பிறப்பித்தது.

மாநில அரசு வழக்குரைஞரும், புகார் மனு தாரர்களின் வழக்குரைஞர்களும் முதலமைச்சர் திரு. கருணாநிதி வி. எஸ். டி. யைப் பதவி விலகுமாறு ஆலோசனை கூறியதன் மூலம் தம் முடைய நண்பரான அவரை இடையூறுகளிலின் றும் விடுவித்துள்ளார் என்றும் மேலும் அவருக்கு வரவிருந்த பெரும் பழியிலின்றும் அவரைச் காத்துள்ளார் என்றும் வாதித்தனர். இது மட்டுமல்ல,மேலும், அவர் இது தொடர்பாக தாம் அளிக்கவிருந்த விளக்கத்தை அளிப்பதிலின்றும் அவரைக் காத்துள்ளார். இதன் மூலம் தஞ் சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பில் நிகழ்ந்துள்ள முறைகேடுகளைக் குறித்த தம் நிலையை இன்னதென்று தெளிவாக்குவதிலிருந்தும் அந்தக் கூட்டமைப்பு தற்போது அடைந்துள்ள நெருக்கடி யான நிலைமையைக் குறித்தும் இதற்கு இயக்கு நர் குழுவின் பங்கு என்ன என்பது குறித்தும் இந்த நெருக்கடி ஏற்படுவதற்கு அவருடைய பங்கு என்ன என்பது குறித்தும் தெளிவுபடுத்து வதிலிருந்தும் கூட அவரைக் காத்துள்ளார்.

முதலமைச்சர் வி.எஸ்.டி.யுடன் நடந்து கொண்டுள்ள போக்கின் சந்தர்ப்பங்களினுல் ஏற்பட்ட விளைவுகள் முழுவதையும் பின்னர் கருதிப் பார்க்கும் போது மதிப்பிட வசதியாக இருக்கும். ஆனால், இந்தச் சூழ்நிலைகளில் எதுவும் தனியே எடுத்துப் பரிசீலனை செய்ததில் முடிவான கருத்தினை உடையதாக இல்லை அல்லது கெட்ட எண்ணத்துடன் முதலமைச்சரின் நடவடிக்கை அல்லது செயல்களில் இவை அமையவும் இல்லை என்ற வலுவைக் குறைப்பதாக மட்டும் இங்கு உள்ளது என்பதைக் குறிப்பிடுவது போதுமானது.

கருத்து எண். 5

ஜி. என். தாஸ் மீது ஐயத்துக்கு இடமளிக்கின்ற முறைகளில் காவல் துறை நடத்திய புலனுய்வு.

கூட்டுறவுத் துறையின் உதவிச் செயலாளர் திரு. எஸ். ஜராஜகோபாலன் 30—3—1971-ம் நாளில் எழுதியுள்ள தமது குறிப்பில் ஏனையவற்றிற் விடையே பின் வரும் கருத்துக்களைக் குறிப்பிட்டுள் ளார் என்று இங்கு நினைவுகூரப்பட்டது. அதா வது '' தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள மிக முக்கியமான பெரிய முறைகேடு தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு இந்திய ஸ்டேட் வங்கிக்குக் கடன்கள் தொடர்பாக அளித்த பொய்யான விவர அறிக்கையே ஆகும் என்றும் மேற்சொன்ன காலத்தில் இக் கூட் டமைப்பின் இணைப் பதிவாளர்—செயலாளராகப் பணிபுரிந்து வந்த திரு.ஜி.என். தாஸ், இத்தகைய நிலைமைக்குப் பெரிதும் பொறுப்பாளியாவார் என் றும் குறிப்பிடப்பட்டது. அதாவது, தணிக்கை அறிக்கை தெரிவித்த தகவல்களின் படியும் அரசின் தலைமைச் செயலகம் அறிந்துகொண்ட படியும், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் விவகாரங்களில் காணப்பட்ட மிக மோசமான நிலைமைக்கு முக்கியமாக முழுப் பொறுப்பை அதன் செயலாளராக ஜி. என். தாஸ் மீது சுமத்தியது ஆகும். இது தான் அந்தச் சமயத்தில் அரசுத் தலைமைச் செயலகம் கொண்டிருந்த கருத்தாகும்.

இந்த நிலைமைக்கு மாறுக புகார் மனுதாரர்கள் சார்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதம் என்ன வென்றால், திரு. கருணாநிதி ஜி. என். தாஸ் மீது கூட வழக்கு தொடரப்படுவதை விரும்பவில்லை. ஏனென்றால் இந்த வழக்கில் காவல் துறை புல னுய்வு செய்யுமானால் அந்தப் புலனுய்விலிருந்து வி. எஸ். டி. மீது தவறு இருப்பதைக் காட்டக் கூடிய புலன் எதுவும் கிடைத்துவிடக் கூடு மென்று அந்நாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி

அஞ்சினர் என்று வாதிடப்பட்டது. தவறு இழைத்தவர்கள் என்று கருதப்பட்ட அதிகாரிகள் மீது மட்டுமல்லாமல் வி. எஸ். டி. மீதும் அவருடைய சகாக்களின் மீதும் கூட தண்டத் தொகை வசூல் நடவடிக்கை தொடங்கப்பட்டிருந்தது என்பதிலிருந்து இந்த வாதத்தில் உள்ள பொய்மை புலனுகும்.

கூட்டுறவுத் துறைச் செயலாளர் திரு. பசுபதி 20—7—1970 ஆம் நாளில் எழுதிய தம்முடைய குறிப்பில் இந்த வழக்கில் இணைப் பதிவாளர் மீது (ஜி. என். தாஸ் மீது) நடவடிக்கை எடுப்பதற்கு தகுந்த ஆதாரம் உள்ளது என்று குறிப்பிட்டார். இது குறித்து விவாதித்த பிறகு கூட்டுறவு அமைச்சர் பசுபதியின் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்தார். இருந்தபோதிலும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் நிர்வாகத்தில் காணப்பட்ட ஒழுங்கீனங்களைக் குறித்து அந்த நிர்வாகம் தன்னுடைய விளக்கத்தை அளிக்கின்ற வரையில் இந்த அதிகாரிகளின் மீதான ஒழுங்கு முறை நடவடிக்கை நிறுத்தி வைக்கப்படவேண்டும் என கேசவ்வினி கருத்துத் தெரிவித்தார். ஆனல், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரான கே. ஜே. எம். ஷெட்டி அரசுக்கார்பற்றவர்கள் மீதும் அரசு அதிகாரிகள் மீதும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கை குறித்து ஒட்டுமொத்தமாகமுழுமையாகப் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தார். ஆனல், அரசு பதிவாளருக்குத் தெரிவித்த பதிலில் சிறப்புத் தணிக்கை நடைபெற்று முடியும் வரை காத்திருக்கத் தேவையில்லை என்றும் இணைப்பதிவாளர் மீது குற்றச் சாட்டைத் தயாரிக்கும் பணியைப் பதிவாளர் மேற்கொண்டு தொடரலாம் என்றும் தெரிவித்தது. அதற்கிணங்க, இணைப் பதிவாளர் மீது குற்றச் சாட்டுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றும் அது தொடர்பான கோப்புகளும் இணைப் பதிவாளர் அவற்றிற்கு அளித்துள்ள விளக்கமும் அரசுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்றும் ஷெட்டி அரசுக்குத் தெரிவித்தார்.

8—8—1971 ஆம் நாளில் அப்போது கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளராக இருந்த திரு. பெல்லியப்பாஇயக்குநர்குழு இதில்எந்த அளவுக்குப் பொறுப்புடையது என்பது பற்றி சட்டத் துறையால் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று அரசுக்குத் தெரிவித்து இயக்குநர் குழுவின் மீது நடவடிக்கை எடுப்பது பற்றிய ஒரு முடிவு இன்னும் மேற்கொள்ளப்படாத நிலையில் ஜி. என். தாஸ் மீது தாம் நடவடிக்கை தொடரியலுமா எனக் கேட்டு அரசின் ஆணைகளை வேண்டினர். இணைப் பதிவாளர் (ஜி. என். தாஸ் மீது) ஒழுங்குமுறை நடவடிக்கை எடுப்பது குறித்த பிரச்சினை, இது குறித்து இறுதியாணை பிறப்பிக்கும் வரையில் முடிவு செய்யப்படாமல் காத்திருக்கலாம் என்று ஆணை பிறப்பித்து அக் கோப்பினைத் தம் மீடமே முடிவு செய்யாமல் வைத்துக் கொண்டார். இருப்பினும், கூட்டுறவு அமைச்சர் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் விவகாரங்களைக் குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று விரும்பி அது தொடர்பாக கோப்பு தம்மிடம் சுற்றுக்கு முறையில் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்று கேட்டார்.

இதற்கிடையில் 16—10—1971 அன்று, கூட்டுறவு அமைச்சரின் அரசிதழ் பதிவுள்ள நேர்முக உதவியாளர் திரு. நடராஜன், கூட்டுறவுத் துறைச் செயலாளருக்குப் பின்வருமாறு குறிப்பு ஒன்றை அனுப்பினர் :—

"தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக்கூட்டமைப்பு விவகாரங்களில் (ஜி. என். தாஸ் தொடர்பாக) உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கூட்டுறவு அமைச்சர் கருதுகிறார். சம்பந்தப்பட்ட கோப்பு (இந்திய ஸ்டேட் வங்கிக்குத் தவருன இருப்பு அறிக்கைகளைக் கொடுத்தது) சுற்றுக்குட்ட முறையில் அனுப்பப்படலாம்".

அதற்கிணங்க, 27—10—1971 அன்று சுற்றுக்குட்டக் குறிப்பு ஒன்றைக் கூட்டுறவுத்துறை தயாரித்தது. அக்குறிப்பின் 2ஆவது பாராவில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது :—

"2. .....கூட்டமைப்பு திருப்தியற்ற முறையில் செயல்பட்டமைக்குக் காரணமான பல்வேறு முறைகேடுகள், தவறுகளுக்கு கூட்டமைப்பின் நிர்வாகமும், தலைமை நிர்வாகிகளான திரு. ஜி. என். தாஸும், எஸ். நடராஜனும் பொறுப்பு என்று பதிவாளரது அறிக்கையில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. .....திரு. ஜி. என். தாஸ், இந்திய ஸ்டேட் வங்கிக்குக் கூட்டமைப்பு அனுப்பிய தவருன இருப்புக் கணக்கு அறிக்கைகளுக்குப் பொறுப்புடையவராவார். இது, திரு. ஜி. என். தாஸ்மீது உள்ள குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும்."

அக்குறிப்பின் 3ஆவது பாராவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: "இந்தக் கோப்பு சுற்றுக்குட்டமுறையில் அனுப்பப் பட்டபோது, கடமையைச் செய்யத் தவறியதற்குச் சம்பந்தப்பட்ட நபர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று முதலமைச்சர் பணித்துள்ளார். இதுகுறித்து ஆணைகள் பிறப்பிக்கப்படவில்லை. இது மீண்டும் தவியாகச் சுற்றுக்குட்டமுறையில் அனுப்பப்பட்டு வருகிறது".

இக்குறிப்புக்குக் கூட்டுறவு அமைச்சர் 30—10—1971 அன்று பின்வருமாறு மேற்குறிப்பு எழுதியுள்ளார் :

"திரு. ஜி. என். தாஸ் இருப்பு குறித்து தவருன அறிக்கைகளில் கையொப்பமிட்டு, அதன் மூலம் இந்திய ஸ்டேட் வங்கியிடமிருந்து கடன

பெற்று, அதனில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பைப் பெரும் இழப்புக்குள்ளாக்கினர் என்பதே அவர்மீதுள்ள வழக்காகும். இவ் வழக்கு குற்றம் சம்பந்தப்பட்டதாகும். இது இ.பி.கோவின்கீழ் வருகிறது. இவர்மீது பின்னர் எடுக்கப்படலாகும் ஏனைய நடவடிக்கைகளுக்குப் பாதகமின்றி, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்காக, வணிகக் குற்றப்புலனுய்வுப் பிரிவுக்கு இவ்விஷயம் அனுப்பப்படலாம்.''

இக் கோப்பைப் படித்துப் பார்த்த சட்டத் துறைத் துணைச் செயலாளர், திரு. ஜீ. என். தாஸ் மீது ஏனைய நடவடிக்கைகள் எடுப்பதற்கு அவர்மீதான இக்குற்ற நடவடிக்கை தடையாக இருக்குமா என்பது குறித்து கருத்து தெரிவிப்ப தற்காகத்தான் தமக்கு அனுப்பப்பட்டதென்று அவர் அனுமானித்தார். எனவே, அக்கருத்து தடை ஏதும் இராது என்று அவர் கருத்து தெரிவித்தார்.

அமைச்சரின் ஆணைகளுக்கிணங்க, 30-11-1971 அன்று, கூட்டுறவுத் துறைச் செயலாளர், ஜீ. என். தாஸ் மீது காவல்துறையில் புகார் கொடுக்குமாறு கட்டளையிட்டு சங்கப் பதிவாளருக்கு எழுதினர். அதன்படி, 14-12-1971 அன்று காவல்துறையில் பதிவாளர் புகார் ஒன்றைக் கொடுத்தார். அப்புகார் 10-1-1972 அன்று 1/1972ஆம் எண் குற்றமாகப் பதிவு செய்யப்பட்டது. அதே நாளன்று அவர் பின்வருமாறு எழுதி அனுப்பினர்:

''பார்வையில் குறிப்பிட்டுள்ள அரசு குறிப்பாணை பெற்றுத் கொண்டதாக ஒப்பம் அளிக்கையில், அதில் கூறியுள்ளவாறு அதனைக் குற்றப் புலனுய்வுத்துறை, வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவுக்கு நான் அனுப்பியதைக் கூற விரும்புகிறேன். காவல்துறை சூப்பிரண்டுக்கு அனுப்பிய கடிதத்தின் நால் தகவலுக்காக இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. காவல்துறை சூப்பிரண்டிடமிருந்து புலனுய்வு முடிவுக்குறித்துத் தகவல் வந்தபின்னர் அடுத்த அறிக்கையை நான் அனுப்புகிறேன்.''

வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவால் புலனுய்வு செய்யப்படுவதற்காகக் காவல்துறையில் ஜீ. என். தாஸுக்கு எதிராக வழக்கைப் பதிவு செய்வதற்கு கூட்டுறவு அமைச்சர் ஆணைகள் பிறப்பித்த காலகட்டத்தில் முதலமைச்சர் திரு. கருணாநிதி வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற் கொண்டிருந்தார். 5-12-1971 அன்று அவர் சென்னைக்குத் திரும்பினர்.

இவ்வழக்கு குறித்து புலனுய்வு செய்த காவல் துறை சூப்பிரண்டு கே.ஆர். இராஜகோபாலனின் வாக்குமூலத்தின்படி, கூட்டுறவு அமைச்சர் திரு. ஆதித்தனார் 13-1-1972 அன்று அவரை அழைத்து தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு வழக்கு குறித்து நீதிபரமாகப் புலனுய்வு மேற் கொள்ளுமாறு கட்டளையிட்டதாகக் கூறி யுள்ளார். காவல்துறை சூப்பிரண்டு திரு. இராஜ கோபாலன் புலனுய்வு தொடர்பாகத் தஞ்சாவூர் மாவட்டத்திற்குச் சென்று புலனுய்வை மேற்பார்வையிட்டார். 19-1-1972 அன்று தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்குச் சென்று நேரடி ஆய்வை மேற்கொண்டார். கும்பகோணத்தை அடைந்தபோது குற்றப் புல னுய்வுத்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரலிட மிருந்து வந்த ஒரு தகவலாளர் மூலம் டெபுடி இன்ஸ்பெக்டர்ஜெனரலுடன் அவர் உடனடி யாகத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு கூறியதாகத் தெரியவந்தது. அதற்கிணங்க, அவர் காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலுடன் (திரு. கிருஷ்ணராஜ்) தொலைபேசி யில் தொடர்பு கொண்டார். இவ்வழக்கு குறித்த புலனுய்வை நிறுத்திவிட்டு சென்னைக்கு வந்து தம்மைச் சந்திக்குமாறு டெபுடி இன்ஸ் பெக்டர்ஜெரல் சாட்சிக்குக் கட்டளையிட்டார். புலனுய்வை நிறுத்திவிடுமாறு இன்ஸ்பெக்டர் திரு. எஸ்.ஏ. காதருக்குச் சாட்சி கட்டளையிட்டார். அவர் 21-1-1972 அன்று சென்னைக்குத் திரும்பி 22-1-1972 அன்றி திருஞ்ராஜைச் சந்தித்து அவரது கட்டளைகளைப் பெற்றார். அதன் பின்னர், அவரும், காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரலும் 4-2-1972 அன்று தலைமைச் செய லகத்திற்குச் சென்று முதலமைச்சரைப் பார்த்த னர். தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்ட மைப்பு குறித்த வழக்கை எந்தப்பிரிவின்கீழ் அவர் புலனுய்வு செய்து வருவதாக முதலமைச்சர் அவரிடம் கேட்டார். இ.பி.கோ. 409-வது பிரிவின்கீழ் கூட்டமைப்புச் செயலாளர்மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டதாகவும், ஆனல், தொடர்ந்து வந்த உண்மைகள் அவ்வழக்கு இ.பி.கோ. 420-ஆவது பிரிவின்கீழ் வருவதாகக் குறிப்பிடு வதால் அப்பிரிவிற்கு இவ்வழக்கை மாற்றிய தாகவும் இராஜகோபாலன் தெரிவித்தார். இ.பி.கோ. 420-வது பிரிவிற்கு மாற்றியது குறித்து பதிலளித்ததைக் கேட்டதும் முதலமைச்சர் கோபமடைந்து ''இந்த வழக் கைப் பதிவு செய்யுமாறு உங்களிடம் யார் கூறியது?'' என்று கேட்டார். ''வழக்கு ஒன்றைப் பதிவுசெய்து புலனுய்வு செய்யுமாறு திட்டவட்ட மான கட்டளை அரசிடமிருந்து வந்ததாக'' அவர் பதிலளித்தார். பின்னர் முதலமைச்சர் ''கண்டவரெல்லாம் அரசாங்கம் என்று ஆகிவிட முடியுமா'' என்று தமிழில் கோபமாகக் கூறினர். அங்கிருந்த நிதித்துறைச் செயலாளர் திரு. எஸ். வெங்கிடரமணன், திரு.கே.ஆர். இராஜகோபாலன் வெளியிலேயே இருந்து வருவதால் அவருக்கு யார் அதிகாரம் வாய்ந்தவர் என்று தெரியவில்லை என்று கூறி முதலமைச்சரைச் சமாதானப் படுத்தினர். அதன்பேரில், முதலமைச்சர், இவ் வழக்கு குறித்து உடனடியாக விவாதித்துக் கட்டளைகளைப் பெறுவதற்காக தொழிலமைச்சர்

திரு. எஸ். மாதவனைச் சந்திக்குமாறு சாட்சிக்குக் கட்டளையிட்டார். அதன் பின்னர் அவரும் டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரலும், திரு. செ. மாதவனைச் சந்தித்தனர். இவ்வழக்கு குறித்து நடவடிக்கை மேற்கொள்ளாமல் கைவிடுவதற்கு யோசனை தெரிவிக்குமாறு அமைச்சர் கேட்டார். அரசுக்கு எல்லா அதிகாரமும் இருப்பதாகவும் வழக்கின் எந்நிலையிலும் நடவடிக்கையைக் கைவிடுவதற்கு அரசுக்கு அதிகாரம் உண்டு என்றும் அவர் பதிலளித்தார். வழக்கைத் திரும்பப் பெறுவதற்கு அரசுக்குத் தர்ம சங்கடமாக இருக்கும் என்று அமைச்சர் கூறினர். சட்டத்தின் 65-வது பிரிவின்கீழ் விசாரணை நடத்திய பின்னர் கூட்டுறவுத் துறையின் எல்லா வழக்குகளும் காவல்துறைக்கு அனுப்பப் படுகின்றன என்று சாட்சி கருத்து தெரிவித்தார்; எனவே, அத்தகைய ஒரு விசாரணைக்கு ஆணையிடலாம் என்றும், இதற்கிடையில் இவ் வழக்குப் புலனுய்வை நிறுத்திவைக்கலாம் என்றும் அவசியமாயின் விசாரணை முடிந்த பின்னர் புதிதாகப் புகார் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவித்தார். கூட்டுறவுச் சங்கப் பதிவாளரைச் சந்தித்து இதுகுறித்து விவாதிக்குமாறு அவருக்கு அமைச்சர் கட்டளையிட்டார். அதன்படி சாட்சி கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் திரு. பெல்லியப்பாவை 16—2—1972 அன்று சந்தித்து இவ்விஷயம் குறித்து அவரிடம் விவாதித்தார். சட்டத்தின் 65-வது பிரிவின்கீழ் விசாரணை செய்யும்படி ஆணையிடப் பதிவாளர் மறுத்தார். பின்னர் அதே நாளன்று காவல் துறை சூப்பிரண்டும், டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரலும் தொழில்-சட்ட அமைச்சரைச் சந்தித்து கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் கருத்துக் களைத் தெரிவித்தனர். தலைமைச் செயலாளரைச் சந்திக்குமாறு அமைச்சர் அவர்களிடம் கூறினர். அதன்படி டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரலும், காவல்துறை சூப்பிரண்டும் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகத்தை 17—2—1972 அன்று சந்தித்து 1/72 ஆம் குற்ற எண்ணில் பதிவு செய்யப்பட்ட வழக்கு குறித்து விவாதித்தனர். கூட்டுறவுச் சங்கப் பதிவாளரை மீண்டும் சந்திக்குமாறு அவர்களுக்கு அவர் கட்டளையிட்டார். ஆனால், தணிக்கை அறிக்கையில் எல்லா விஷயங்களும் கொடுக்கப் பட்டுள்ளதென்றும் சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட வேண்டியதில்லையென்றும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் முன்னர் கூறிய கருத்தையே வலியுறுத்திக் கூறினர்.

நான்கு திங்களுக்குப் பின்னர், தொழில்-சட்ட அமைச்சரின் நேர்முக உதவியாளர், அமைச்சரைச் சந்திக்குமாறு காவல் துறை சூப்பிரண்டுக்குத் தொலைபேசி மூலம் செய்தி கொடுத்தார். அதன்படி அவர் அமைச்சரைச் சந்தித்தார். தமிழ்நாடு சட்டத்தின் 65-வது பிரிவின்கீழ் விசாரணை ஒன்றை நடத்துமாறு யோசனைகூறி அறிக்கை ஒன்றை அனுப்புமாறு அமைச்சர் அவருக்குக் கட்டளையிட்டார். அதே நாளன்று காவல் துறை சூப்பிரண்டு, 1/72 ஆம் குற்ற எண்ணில் பதிவு செய்யப்பட்ட வழக்கு குறித்து முழு உண்மைகளைக் கண்டறிவதற்கு, சட்டத்தின் 65-வது பிரிவின்கீழ் விசாரணை ஒன்றை நடத்துமாறும், 65-வது பிரிவின்கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணையின் முடிவு தெரிகிற வரை வழக்கை முடிப்பதற்கான ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டியும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு எழுத்து மூலமான அறிக்கை ஒன்றை அனுப்பினர்.

காவல் துறை சூப்பிரண்டிடமிருந்து எழுத்து மூலமான இந்த வேண்டுகோள் வரப்பெற்றதன் பேரில், பதிவாளர் இந்நிலையில் சட்டத்தின் 65-வது பிரிவின்கீழ் விசாரணை ஒன்று நடத்த வேண்டியது அவசியமா என்பது குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்படுவதற்காக இதனை அரசுக்கு அனுப்பினர். இக்கோப்பு கூட்டுறவு அமைச்சர், தொழில் அமைச்சர், முதலமைச்சர் ஆகியோருக்குச் சுற்றோட்ட முறையில் அனுப்பப் பட்டது. கூட்டுறவு அமைச்சர் 27—7—1972 அன்று இக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து இக் கோப்பினைத் தொழில் அமைச்சருக்கு அனுப்பினர். அவர் 11—8—1972 வரையில் அக் கோப்பினைத் தன்னிடமே வைத்திருந்தார். "தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டத்தின் 65-வது பிரிவின்கீழ் விசாரணை நடத்த வேண்டிய அவசியமா? 64-வது பிரிவின்கீழ் தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற் கொள்ள முடியாதா" என்ற வினவை அதே நாளன்று தொழில் அமைச்சர் எழுப்பினர். மேலும், இக் கருத்து குறித்து பரிசீலனை செய்து மாறு சட்டத் துறைக்கு உத்தரவிட்டார். 64-வது பிரிவின்படிக்கான அறிக்கையையொட்டியே நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்று சட்டத்துறை கருத்து தெரிவித்தது; அதாவது 65-வது பிரிவின்கீழ் விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என்பது இதற்குப் பொருளாகும். பின்னர், இக் கோப்பு தொழிலமைச்சருக்கு அனுப்பப்பட்டது. அப்போது அவர், சட்டத்தின் 64-வது பிரிவின்கீழ் தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற் கொள்ளப்படலாம் என்று குறிப்பு எழுதி அக் கோப்பினைக் கூட்டுறவு அமைச்சர் மூலம் அனுப்பாமல் நேரடியாக முதலமைச்சருக்கு அனுப்பினர். முதலமைச்சர் அந்நாளன்றே தொழிலமைச்சரின் பரிவுரைக்கு ஒப்புதல் அளித்து கூட்டுறவுத் துறைக்கு அக் கோப்பை அனுப்பினர். பின்னர், இக் கோப்பு, கூட்டுறவு அமைச்சருக்கு மீண்டும் சுற்றோட்ட முறையில் அனுப்பப் பட்டது.

ஜி. என். தாஸ் மீது குற்ற நடவடிக்கை தொடரப்படலாமா என்பது குறித்து குறிப்பு

ஒன்றைக் கூட்டுறவுத் துறை தயாரித்தது. 3—9—1972 அன்று கூட்டுறவு அமைச்சர், ஜி. என். தாஸ் மீது நடவடிக்கை தொடரப் படவேண்டுமென்று எழுதி அனுப்பினர். மேலும், தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் அவர் சட்டத்தின் 64-வது பிரிவின்கீழ், சம்பந்தப்பட்ட வர்கள் அனைவர் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்குக் கட்டளையிட்டார். இது அந்நாளன்றே தொழி லமைச்சரால் பார்க்கப்பட்டது. அதற்கு மறு நாள் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது.

கூட்டுறவுச் சங்கப் பதிவாளர், புலனுய்வைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவு, காவல் துறை சூப்பிரண்டுக்கு 8—10—1972 அன்று கட்டளையிட்டார். 14-12-1972 அன்று வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவு சூப்பிரண்டு தொழிலமைச்சரைச் சந்தித்தார். புலனுய்வை விரைந்து முடிக்குமாறு தொழில் அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில் இரண்டு வினுக்கள் எழுகின்றன. முதலாவது, தமது முன் அனுமதியின்றி ஜி.என். தாஸ் மீது வழக்கு ஒன்றைப் பதிவு செய்து, புலனுய்வு செய்தது குறித்து முதலமைச்சர் தமது வெறுப்பைக் காவல் துறை சூப்பிரண்டு திரு. கே. ஆர்.இராஜகோபாலனிடம் தெரிவித்தது;இரண்டா வது இவ்வழக்கில் மேற்கொண்டும் புலனுய்வு செய் யாமல் நிறுத்தி விடுவதற்கான வழி வகையைக் கண்டறிவதற்கு, சட்ட அமைச்சர் திரு. கே. மாதவன் மூலம் முதலமைச்சர் அவருக்குக் கட்டளை யிட்டாரா என்பது.

கே.ஆர். இராஜகோபாலனைத் தவிர காவல்துறை முன்னுள் டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரலின் சாட் சியமும் உள்ளது. கமிஷனுக்கு உதவிபுரியும் புலனுய்வு அலுவலர்களில் 5-A பிரிவின்கீழ் இவர் விசாரிக்கப்பட்டார். இவரும் கமிஷன் முன்னர் 9—12—1976 நாளிட்ட தமது உறுதிமொழிப் பத் திரத்தைத் தாக்கல் செய்தார். இச்சாட்சி, வயது முதிர்வு காரணமாக 1974, அக்டோபரில் பணியி லிருந்து ஓய்வுபெற்றார். இவர் 19—1—1972 அன்று முதலமைச்சர் திரு. கருணாநிதியைச் சந்தித்ததாக வும், அப்போது அவர் இவ் வழக்கில் மேற் கொண்டு புலனுய்வை நடத்தாமல் நிறுத்தி வைக்கு மாறும் இது குறித்து அரசு ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும் என்றும் முதலமைச்சர் தம்மிடம் கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து சாட்சி, காவல்துறை, சூப்பிரண்டின் வாராந்தரக் குறிப்பேட்டில் 25—1—1972 ஆம் நாளன்று பதிவு ஒன்றைச் செய்திருந்தார். மேலும், இவர், காவல் துறை சூப்பிரண்டு, கே.ஆர்.இராஜகோபாலனுடன் 4—2—1972 அன்று முதலமைச்சரைச் சந்தித்தது குறித்தும் முதலமைச்சர், கட்டளைகளைப் பெறுவதற் காக சட்ட அமைச்சரைச் சந்திக்குமாறு தங்களுக்கு கட்டளையிட்டது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

சட்ட அமைச்சரைச் சந்தித்தது குறித்து சாட்சி கூறியுள்ளதாவது: சட்ட அமைச்சர் குறிப்பு அனுப் பியதன் மேல், நாங்கள் இவ்வழக்கு குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சருடன் விவாதித்தோம். விவாதத்தின்போது, இவ்வழக்கு குறித்து மேற் கொண்டும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்க வேண்டும்னாலும், மேலும் நடவடிக்கை எடுக்காமல் கைவிடுவதற்கான ஆணையைப் பிறப்பிக்க அரசுக்கு அதிகாரமுண்டு என்று வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவு சூப்பிரண்டு கருத்து தெரிவித்தார். இவ்வாறு செய்வது அரசுக்குத் தர்ம சங்கடமாக இருக்கும் என்று சட்ட அமைச்சர் கூறியபோது, வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவு சூப்பிரண்டு, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் விசாரணை நடத்துவதற்கான ஆணைகள் பிறப் பிக்கப்படலாமென கருத்து தெரிவித்தார். பின்னர் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரைச் சந்திக்குமாறு அமைச்சர் எங்களிடம் கூறினர்.

திரு. கே. ஆர். இராஜகோபாலன் தமது வாக்கு மூலத்தில் கூறியுள்ளதையே இவரும் கூறினர். முதலமைச்சர் கோபமாகக் கூறியதாக கே. ஆர். இராஜகோபாலன் கூறியதை திரு. கிருஷ்ணராஜீ உறுதிசெய்யவில்லை என்பதை ஈண்டுக் கருத்திற் கொள்ளலாம்.

இந்த முக்கியமான சமயத்தில் அங்கு இருந்த தாகக் கூறப்படுகிற நிதித்துறைச்செயலாளர் திரு. வேங்கிடரமணன் 5-A பிரிவின்கீழ் அளித்த தமது வாக்குமூலத்திலும், 17—12—1976 நாளிட்ட தமது உறுதிமொழிப் பத்திரத்திலும் கூறியுள்ள தாவது: ''தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்ட மைப்பு இயக்குநர்கள் இராஜினமா செய்த பின்னர், காவல்துறை சூப்பிரண்டு கே. ஆர். இராஜ கோபாலனும் டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் எஸ். கிருஷ்ணராஜ்வும் முதலமைச்சரைச் சந்தித்த போது, திருவாரூரில் புலனுய்வு செய்த வழக்கு என்ன என்று இராஜகோபாலனை முதலமைச்சர் கேட்டார். தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்ட மைப்பின் (இணைப் பதிவாளர்) செயலாளர் மீதுள்ள புகார் குறித்த விவரங்களை அப்போது இராஜகோபாலன் தெரிவித்தார். சிறிது நேர விவாதத்திற்குப் பின்னர், வழக்கைப் பதிவு செய்யு மாறு காவல்துறை சூப்பிரண்டிடம் யார் கூறியது என்று முதலமைச்சர் கேட்டார். கூட்டுறவு அமைச்சரை உணர்த்தி, அரசிடமிருந்து திட்ட வட்டமாக கட்டளை வந்தது என்று அவர் பதிலளித் தார். இது முதலமைச்சருக்குத் தெரியாது என்ற தோன்றுகிறது. ''திரு. கே. ஆர். இராஜகோபாலன் சார்பில் நான் தலையிட்டேன். ஏனெனில், அவர் சிறந்ததோர் அதிகாரி என்று எனக்குத் தெரியும் அதன்பின் தொழிலமைச்சரைச் சந்திக் குமாறு காவல் துறை அதிகாரிகள் இருவருக்கும் முதலமைச்சர் கட்டளையிட்டார்.''

அக் கூட்டத்தில் ஒருபுறம் சட்ட அமைச்சருக்கும் மற்றொருபுறம் இராஜகோபாலன், திருஷ்ணராஜ்

ஆகியோருக்கும் இடையே என்ன நடந்தது என்பது குறித்து வெங்கிடரமணன் எதனையும் கூற வில்லை என்பதைக் கவனிக்கலாம். இக்கருத்துப் பற்றி திருஷ்ணராஜ் வாக்குமூலத்திற்கும் சாட்சியின் வாக்குமூலத்திற்கும் இடையே முரண்பாடி ருப்பது வெளிப்படையே. சட்ட அமைச்சருடன் பேசியபோதும் வேங்கடரமணன் வந்து இருந்தார் என்று கிருஷ்ணராஜ் உறுதியாகக் கூறினார். "கண்டவர்களெல்லாம் அரசாங்கம் என்று ஆகிவிட முடியுமா" என்று முதலமைச்சர் குறிப்பிட்ட கருத்து குறித்து இராஜகோபாலனுக்கு முழு ஆதரவு தந்து வெங்கட்ரமணன் சாட்சி கூற வில்லே. இத்தகைய முரண்பாடுகள் இருந்த போதிலும், முதலமைச்சர் வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் இவ்வழக்கு குறித்து புலனுய்வு செய்த காவல் துறை சூப்பிரண்டை அழைத்தார் என்பது குறித்தும், முதலமைச்சர் மாநிலத்தில் இல்லாத போது வழக்கைப் பதிவு செய்து புலனுய்வு செய்ததில் அவர் அதிருப்தி அடைந்தது குறித்தும் இம் மூவரும் ஒரே விதமாகச் சாட்சியம் அளித்துள்ளனர். சக அமைச்சர்களான திரு. நெடுஞ்செழியன், திரு. மாதவன் ஆகியோரது மதிப்பைக் குறைக்கும் விதத்தில் தாம் ஏதும் கூறவில்லே எனத் திரு. கருணநிதி மறுத்துள்ளார். ஆனல், அவ் விருவருக்கும் எதிராக இவ்வாறு குறிப்பு தெரிவிக்கப்பட்டதாக எவரும் கூறவில்லே. அவர் அவ்வாறு ஏதேனும் கூறியிருந்தாலும், அது, கூட்டுறவு அமைச்சரும், திரு.தாஸ் மீது வழக்கு தொடருமாறு ஆணேயிட்டவருமான திரு. ஆதித்தனரையே குறிப்பிடும். எப்படியும், இக் கருத்து குறித்து சாட்சி அளித்த வாய்மொழி வாக்குமூலங்களில் வேறுபாடுகள் இருப்பதால் முதலமைச்சர் தம் சக அமைச்சர் எவர்மீதும் இத்தகைய இழிவான குறிப்பு ஒன்றைச் செய்தார் என்று இராஜகோபாலன் கூறியதை நம்ப முடியாது. காவல்துறை சூப்பிரண்டு அழைக்கப்பட்டு இவ்வழக்கு குறித்து மேற்கொண்டும் புலனுய்வு செய்வதற்குச் சட்ட அமைச்சரிடமிருந்து கட்டளே கீழ்ப் பெறுமாறு அவருக்குக் கட்டளேயிடப்பட்டது என்ற உண்மை நிலேத்து நிற்கிறது.

திரு. பெல்லியப்பா, தனது உறுதிமொழிப் பத்திரத்தின் 9, 10-ஆவது பாராக்களில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :—

"9. காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரலும், வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவுக்குப் பொறுப்புவகிக்கும் காவல்துறை சூப்பிரண்டும் என்னே என் அலுவலகத்தில் சந்தித்து, 65 ஆவது பிரிவின்கீழ் புதிதாக விசாரணே நடத்த ஆணேயிடுமாறு கேட்டுக் கொண்டனர். நேரில் பேசியதை அடுத்து கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு 23-6-72 நாளிட்ட G3/GM/15497/71-ஆம் எண் கடிதம் ஒன்று அனுப்பப் பட்டது. எனக்கு முன்னர் இருந்த திரு. கிளி 65-ஆவது பிரிவின்கீழ் விசாரணே ஒன்று நடத்தப் படுவதற்கு, அதுவும் கூட்டுறவுத் துறை அதிகாரியால் அல்லாமல் வேருெரு துறை அதிகாரியான திரு. அஜிமுத்தீன் என்பவரால் நடத்தப்பட வேண்டுமென்று அரசுக்குச் செயற் குறிப்பு (27-7-70 நாளிட்ட Rc 106188/PA/70-1, K.Dis. 1873/73 கூட்டுறவுச் சங்கப் பதிவாளரது அலுவலகம், பக்கம் 21) ஒன்றை அனுப்பியது எனக்குத் தெரியும். இதன் அடிப்படையில், சட்டத்தின் 65-ஆவது பிரிவின் கீழ் விசாரணே நடத்துவது அவசியமா என்பதைத் தெரிவிக்குமாறு அரசை நான் கேட்டுக் கொண்டேன்."

"10. சட்டத்தின் 65ஆவது பிரிவின்கீழ் விசாரணே அவசியமில்லே என்றும், திரு. ஜி. என். தாஸ் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்றும் 4-9-72 நாளிட்ட 5491/GAS/69-28-ஆம் எண் குறிப்பாணேயில் அரசு எனக்குத் தெரிவித்தது. சட்டத்தின் 64 ஆவது பிரிவின்கீழ் பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், சம்பந்தப்பட்டவர்கள் அனேவர்மீதும் பொருத்தமான நடவடிக்கை எடுத்து அறிக்கை ஒன்றை அரசுக்கு அனுப்புமாறு கூட்டுறவுச் சங்கப் பதிவாளரைக் கேட்டுக் கொண்டதாக அக்குறிப்பாணேயில் குறிப்பிடப்பட்டிருந்தது."

திருஷ்ணராஜும், இராஜகோபாலனும் சட்ட அமைச்சர் திரு. மாதவனேச் சந்தித்தபோது, புலனுய்வை நிறுத்துவதற்கு வழி ஒன்றைத் தெரிவிக்குமாறு அவர்களிடம் அமைச்சர் கேட்டதாகவும், அதற்கு காவல்துறை சூப்பிரண்டு கருத்து தெரிவித்ததன் மேல், இந்நிலேயில், 65-ஆவது பிரிவின் கீழ் விசாரணே ஒன்று நடத்துவதற்குக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடம் சென்று கேட்டுக் கொள்ளுமாறு அமைச்சர் அவர்களுக்குக் கட்டளே இட்டார் என்று திருஷ்ணராஜ், இராஜகோபாலன் ஆகியோரது சாட்சியத்தைப் பெல்லியப்பா அளித்த வாக்குமூலம் உறுதிப்படுத்துகிறது. இந்நிலேயில் சட்டத்தின் 65-ஆவது பிரிவின்கீழ் விசாரணே நடத்துவதற்கு ஆணேயிடுவதன் மூலம் ஜி. என். தாஸ் மீது நடத்தப்படும் குற்றப் புலனுய்வை நிறுத்துவதற்கு ஆதாரத்தை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று சட்ட அமைச்சர் திரு. மாதவனே முதலமைச்சரோ தம்மிடம் தெரிவித்தார் என்பதைப் பெல்லியப்பா சாட்சியத்தில் உள்ளது எதுவும் காட்டவில்லே.

இது குறித்து இராஜகோபாலனும், திருஷ்ண ராஜும் வாய்மொழியாக அளித்த சாட்சியம் பொய்யானது என்று குறிப்பிடுவதற்கான மற்றெரு விஷயம், திரு. மாதவனது பொறுப்பின்கீழ் இருந்த சட்டத்துறை, கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணே நடத்துவது அவசியமில்லே என்றும், சட்டத்தின் 64-ஆவது பிரிவின்படிக்கான அறிக்கையின் அடிப்படையில் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப் படலாமென்றும் ஆலோசணே அளித்ததேயாகும். ஜி. என். தாஸ் மீதும் மற்றவர்கள் மீதும் செய்யப்பட்டுவந்த புலனுய்வை, இந்நிலேயில் சட்டத்தின்

65 ஆவது பிரிவின் கீழ் விசாரணை ஒன்றை நடத்த ஆணையிடுவதன் மூலம் தடுத்து நிறுத்தி விடுவது என்று சட்ட அமைச்சர் கருதி இருந்தால் அல்லது சட்ட அமைச்சர் மூலம் முதலமைச்சர் கருத்து தெரிவித்திருந்தால், இந்த ஏற்பாட்டிற்கு ஆதரவாக திரு. மாதவனின் பொறுப்பின்கீழ் உள்ள சட்ட அதிகாரிகளின் கருத்தைப் பெறுவதில் அவர் களுக்கு இடையூறு இருத்திருக்காது.

திருஷ்ணராஜ், K. R. இராஜகோபாலன் ஆகியோரை அவர் அழைத்து கண்டித்தது குறித்து அவர்கள் தங்கள் உறுதிமொழிப் பத்திரங்களில் கூறியுள்ளதை திரு. கருணாநிதி 8—9—1976 நாளிட்ட தமது எதிர் உறுதிமொழிப் பத்திரத்தில் திட்டவட்டமாக மறுத்தார். திரு. கருணாநிதி தமது உறுதிமொழிப் பத்திரத்தின் 15, 16, 17, 18 ஆவது பாராக்களில் குறிப்பிட்டுள்ளது வருமாறு:—

''15. காவல்துறைக்கு இவ் விஷயம் அனுப்பப்பட்ட பின்னர், காவல்துறை சூப்பிரண்டு 23—6—1972 நாளிட்ட தனது கடிதத்தில், மேற்கொண்டும் ஆராய்ந்ததில் இந்தவிவகாரங்கள் குறித்த முழுதகவல்களும் புகாரில் கொடுத்திருக்கவில்லை என்றும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணை செய்யப்படுவது மேற்கொண்டும் விசாரணை செய்வதற்குத் துணையாய் இருக்கும் என்றும், எனவே 65 ஆவது பிரிவின்படிக்கான விசாரணை ஒன்றை நடத்த ஆணையிடலாம் என்றும், அந்த விசாரணையின் வீளைவாகக் குற்றம் ஏதேனும் கண்டு பிடிக்கப்பட்டால் அது குறித்துப் புதிதாகப் புகார் ஒன்று செய்து கொள்ளலாமென்றும் எழுதி இருந்தார். மேலும், இது குறித்து முடிவெடுக்கப்படும் வரையில் தான் மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''16. இந்த நிலையில், திரு. கே. ஆர். இராஜகோபாலன் உறுதிமொழிப் பத்திரம் குறித்துப் பரிசீலனை செய்வது பொருத்தமாக உள்ளது. இவ் விஷயத்தில் நான் தலையிட்டதாக திரு. கே. ஆர். இராஜகோபாலன் சொல்லியிருப்பது எனக்குத் திங்கிழைக்கும் கருத்துடன் கூறப்பட்ட அப்பட்டமான பொய்யேயன்றி வேறெதுவுமில்லை. உறுதிமொழிப் பத்திரத்தின் 6-வது பாராவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டு 4—2—1972 அன்று திரு. இராஜகோபாலன் தலைமைச் செயலகத்திற்கு வந்து என்னைச் சந்தித்தார் என்பதும் எந்தப் பிரிவின்கீழ் இவ்வழக்கு குறித்துப் புலனுய்வு செய்தீர்கள் என்று நான் கேட்டேன் என்பதும் பொய்யானவையாகும். 10—1—1972 அன்றே அவர் இக்குற்றத்தை இ.பி.கோ. 409 ஆவது பிரிவிலிருந்து இ.பி.கோ. 420 ஆவது பிரிவிற்கு மாற்றியிருந்தார். அப்படியிருக்க, 409 ஆவது பிரிவின்கீழ் வழக்கு குறித்துப் புலனுய்வு செய்வதாக என்னிடம் கூறினர் என்பது விசித்திரமாக உள்ளது. நான் கோபமடைந்து ''வழக்கைப் பதிவு செய்யுமாறு யார் கூறியது?'' என்று கேட்டதாக அவர் கூறியுள்ள குற்றச்சாட்டு முழுவதும் பொய்யானதாகும். சக அமைச்சர்களின் ஒப்புதலுக்குப் பின்னர் அரசின் கட்டளைகளின்படி இது காவல்துறைக்கு அனுப்பப் பட்டது என்று தலைமைச் செயலகக் கோப்புகளிலிருந்து எவர்க்கும் தெரிந்திருக்கும்போது ''இவ்வழக்கைப் பதிவு செய்யுமாறு உங்களிடம் யார் கூறியது'' அல்லது ''அதிகாரம் அளிக்கப்படாத நபர்கள் அரசாங்கம் என அழைக்கப்படலாமா?'' என்று அவரை நான் கேட்டதாகக் கூறுவது கேலிக்கூத்தாகும். அதிகாரமற்ற நபர்களாக என் சக அமைச்சர்கள் திரு. நெடுஞ்செழியன், திரு. மாதவன் ஆகியோரையே நான் குறிப்பிட்டதாக திரு. இராஜகோபாலன் கூறமாட்டார் என்பது உறுதி. இக்கூற்றைப் பொய்யாக்கியதற்காக மற்றெரு விஷயத்தைக் கீழே குறிப்பிடுகிறேன். குற்ற எண் பதிவு செய்யப்படும் பொழுது, முதலில் திரு. தாஸுக்கு எதிராகவே செய்யப்பட்டிருக்கிறது. திரு. நியாகராஜ முதலியார் குற்றவாளியாகக் காட்டப்படவில்லை. 19—1—1972 அன்று திருவாருருக்கு அவர் சென்ற போது திரு. நியாகராஜ முதலியார் குறித்துப் புலனுய்வு செய்ததாகவோ அவர் அந்நாளன்று திரு. நியாகராஜமுதலியாருக்கு எதிராக எதையேனும் கண்டுபிடித்ததாகவோ திரு. இராஜகோபாலன் கூறிவிடவில்லை. எனவே, எந்த விதத்திலும் தலையிட்டதாக அவரை அழைத்துப் புலனுய்வை நிறுத்திவிடுமாறு நான் கூறினேன் என்பதை நம்ப முடியாது. திரு. வேங்கடரமணன் அச்சமயத்தில் இருந்தார் என்பதையும், என்னை அவர் சந்தித்துப்பேசினர் என்பதையும் நான் மறுக்கிறேன். விவாதம் தொடர்பாகத் தொழிலமைச்சரைச் சந்திக்குமாறு அவரிடம் நான் கூறியதாகச் சொல்வதையும் மறுக்கிறேன். மேலும், இது தொடர்பாகக் குற்றப்புலனுய்வுத் துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. கிருஷ்ண ராஜுடன் நான் பேசவில்லை.''

''17. சட்ட அமைச்சர் திரு. மாதவன் இவ்வழக்கில் நடவடிக்கையை மேற்கொள்ளாமல் கைவிடுமாறு அவரைக் கேட்டதாக 7 ஆவது பாராவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டு பொய்யானது, இது குறித்துத் திரு. மாதவனிடம் நான் கேட்டேன். திரு. மாதவனிடமிருந்து பெற்ற தகவலிலிருந்து அவரும் இவ்விஷயத்தில் தலையிடவில்லை என்று நான் கூறுகிறேன். மேலும் நடவடிக்கைகளைக் கைவிடுவதற்கான வழிவகைகளைத் தெரிவிக்குமாறு அவர் திரு. இராஜகோபாலனிடம் கேட்கவில்லை. 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணை தொடங்கப்படலாமென்று அவர் தெரிவித்ததாகக் கூறுவதும் பொய்யானது. ஜூன் 23 ஆம் நாளிற்குப்பின்னர் நடந்த நிகழ்ச்சிகளிலிருந்து 7 முதல் 10 வரையிலுள்ள பாராக்களில் குறிப்பிட்டுள்ள குற்றச் சாட்டுகள் உண்மையானவையல்ல என்பது தெளிவாகும்.''

''18. 23—6—1972 நாளிட்ட கடிதத்தைப் பதிவாளர் பெற்றுக்கொண்டார்.

உடனடியாகப் பதிவாளர் அவ்விஷயத்தை 22—7—1972 அன்று அரசுக்குத் தெரியப்படுத் தினர். இது 11—8—72 அன்று அமைச்சருக்குச் சுற்றேட்ட முறையில் அனுப்பப்பட்டபோது 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணை ஒன்று நடத்த வேண்டியது உண்மையிலேயே அவசியமா என்று பரிசீலனை செய்யுமாறு சட்டத் துறையைச் சட்ட அமைச்சர் கேட்டுள்ளார். பின்னர் சட்ட அமைச்சருடன் கலந்து பேசி அலுவலகக் குறிப் பொன்று தயாரிக்கப்பட்டது. 3—9—1972 நாளிட்ட சுற்றேட்டுக் குறிப்பில் சட்ட அமைச்சர் பின் வருமாறு எழுதியுள்ளார்:—

''திரு. தாஸ் மீது நடவடிக்கை மேற்கொள்ளப் படலாம். 64 ஆவது பிரிவின்படிக்கான தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர் அனைவர் மீதும் பொருத்தமான நடவடிக்கை மேற் கொள்ளுமாறு கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடம் கூறலாம்.''

''65 ஆவது பிரிவின் கீழ் விசாரணை ஒன்று நடத்துமாறு கேட்டு குறிப்பொன்றை அனுப்புமாறு சட்ட அமைச்சர் அதிகாரப் பற்றற்ற முறையிலும் வாய்மொழியாகவும் அவரிடம் கூறிவிட்டு, அந்த விசாரணை பொருத்தமானதா என்று பரிசீலனை செய்யுமாறு தலைமைச் செயலகத்தைக் கேட்டதாகவும், பின்னர் 65 ஆவது பிரிவின் கீழ் விசாரணை நடத்த வேண்டியதில்லை என்று தாமாகவே முடிவெடுத்ததாகவும் தெரிவிப்பது கேலிக்கூத்தாகும். மேற்சொன்னதிலிருந்து திரு. மாதவன் இவ் விஷயத்தில் தலையிட்டிருக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது. இவ் விஷயத்தில் தலை யிடுமாறு திரு. மாதவனை ஒருபோதும் நான் கேட்டுக்கொள்ளவில்லை.''

மேற்கூறிய சாட்சிகள் தம்மைச்சம்பந்தப்படுத்திக் கூறியுள்ளதை 8—9—1976 நாளிட்ட தனது எதிர் உறுதிமொழிப் பத்திரத்தில் திரு. மாதவன் மறுத் துள்ளார். அவரது வார்த்தைகளிலேயே சொல்ல தானால் :—

'' எல்லாக் குற்றச் சாட்டுகளும் பொய்யா னவை என்று நான் மறுக்கிறேன். அலுவலகக் காரியங்கள் சம்பந்தமாக ஒரு சில சமயங்களில் டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலும், இராஜ கோபாலனும் என்னை வந்து பார்த்திருக்கக்கூடும் என்பது உண்மையாயிருக்கலாம். சம்பந்தப்பட்ட எல்லா நபர்கள் மீதும் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு அரசிடமிருந்து கட்டளை வந்தது என்பதும் அரசாணைகளை ஒட்டியே இந்த வழக்கு காவல்துறைக்கு அனுப்பப்பட்டது என்பதும் திரு. கருணாநிதியின் உறுதிமொழிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சிகளிலிருந்து தெளிவா கின்றது. இவ்வழக்கு குறித்து நடவடிக்கை மேற் கொள்ளாமல் கைவிடவேண்டுமென அரசு விரும் பினால், அவ்வாறு செய்வதற்குக் காவல் துறை அதி காரி ஒருவரின் உதவியையோ கருத்தையோ அரசு கேட்க வேண்டிய அவசியமில்லை.....கூட்டுறவுச் சங்கக் கூடுதல் பதிவாளர் 65 ஆவது பிரிவின் கீழ் விசாரணை ஒன்றை நடத்தப்போவதாகத் தாமாகவே அரசுக்குத் தெரிவித்திருக்கையில், 65 ஆவது பிரி வின் கீழ் விசாரணை ஒன்றுக்குப் பரிவுரை செய்யு மாறு இராஜகோபாலனை நான் கேட்டதாகக் கூறுவது பொருளற்றதாகும். கூட்டுறவுச் சங் கப் பதிவாளர் பெல்லியப்பாவை அவர் சந்தித்த தாக 8 ஆவது பாராவில் குறிப்பிட்டுள்ள குற்றச் சாட்டும், 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணை நடத்த ஆணையிடுவதற்குப் பதிவாளர் மறுத்ததும் உண்மை யாய் இருக்க முடியாது. அன்று பிற்பகல் டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலும் (குற்றப் புலனுய்வுத் துறை) இராஜகோபாலனும் என்னைச் சந்தித்து இது குறித்துத் தெரிவித்ததாகக் கூறப்படுவதும் பொய்யே. இதுதொடர்பாகத் தலைமைச் செயலாள ரைச் சந்திக்குமாறு நான் அவரிடம் கூறியதாக உள்ள குற்றச்சாட்டும் பொய்யானது. அவர் திரு. சபாநாயகத்தை அலுவல் முறையில் சந்தித் திருக்கக் கூடும், தற்போது இந்த விஷயங்களை அந்த அலுவலக சந்திப்புகளுடன் தவருகத் திரித் துக் கூறியுள்ளார். கூட்டமைப்பு விவகாரங்கள் குறித்து சட்டத்தின் 65 ஆவது பிரிவின்கீழ் விசா ரணை ஒன்று நடத்துவதற்கான அறிக்கை ஒன்றை அனுப்புமாறு அவருக்கு நான் கட்டளை இட்டதாகக் கூறுவது பொய்யானது. 23—6—1972 நாளிட்ட கடிதம் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அனுப்பப் பட்டு மீண்டும் அரசுக்கு அனுப்பப்பட்டு எனக்கு சுற்றேட்ட முறையில் வந்துபோது நான் பின்வருமாறு குறிப்பொன்றை எழுதினேன் என்பதிலிருந்து இக் குற்றச்சாட்டின் பொய்மை வெளிப்படத் தெரிகிறது :—

'' நடவடிக்கை மேற்கொள்வதற்கு 65 ஆவது பிரிவின் கீழ் அறிக்கை ஒன்று அனுப்பப்படுவது அவசியமா அல்லது 64 ஆவது பிரிவின் கீழ் அனுப்பப் பட்ட தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் நாம் நடவடிக்கை மேற்கொள்ள முடியுமா,''.

'' ஏராஜகோபால் மூலமாக இக் கடிதத்தை நானே பெற்றிருந்தால் கோப்பிலுள்ள இந்த ஆணையை 11—8—1972 அன்று நான் பிறப்பித் திருப்பேன். எப்படிப் பொருந்தும்? பின்னர் சம் பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படலாம் என்றும் சட்டத்தின் 64-வது பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட தணிக்கை அறிக்கை அடிப்படையில் சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் பொருத்த மான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூட்டுறவுச்சங்கப் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட லாம் என்றும் 3—9—1972 அன்று திட்டவட்ட மாக அனைனை நான் பிறப்பித்துள்ளேன். 65 வது பிரிவின்கீழ் விசாரணை நடத்த வேண்டியது அவசிய மல்ல என்று 4—9—1972 நாளிட்ட கடிதம் அர சிடமிருந்து தமக்குக் கிடைத்ததாகக் கடிதத்தின் 12 ஆவது பாராவில் இராஜகோபாலன் தாமாகவே குறிப்பிட்டுள்ளார். புலனுய்வை விரைவுபடுத்து

மாறு அவரிடம் நான் கேட்டுக் கொண்டுள்ளதாக வும் கடைசி பாராவில் அவர் குறிப்பிட்டுள்ளார். கூட்டமைப்பு விவகாரங்களில் தவறிழைத்தோர் மீது நடவடிக்கை மேற்கொள்வதில் உள்ளதாகக் கூறப்படும் தாமதம் சட்டமன்றப் பேரவையில் பல முறை குறிப்பிடப்பட்டது. அச்சமயங்களில் நான் சட்ட அமைச்சராகஇருப்பதால் புலனுய்வை விரைவுபடுத்துமாறு என்னிடம் முதலமைச்சர் பலமுறை கூறியுள்ளார். இது குறித்து அதிகாரி களீடம் நான் சந்திக்கும் போதெல்லாம் புலனுய்வை விரைவுபடுத்துமாறு எப்போதும் அவர் களுக்கு நான் கட்டளீயிட்டு வந்தேன். புலனுய்வை நிறுத்திவிடுமாறு அல்லது கைவிடுமாறு அல்லது புலனுய்வைத் தாமதப்படுத்துமாறு எச்சமயத்திலும் நான் கட்டளீயிட்டதில்லை. அல்லது அந்த விஷயத்தில் தலீயிட்டு எந்தவகையிலும் உத்தரவு பிறப்பிக்கவில்லீ அல்லது வழக்கத்திற்குப் புறம்பாக எதனீயும் செய்யுமாறு அதிகாரி களுக்குக் கட்டனீ இடவில்லீ. இந்த விஷயம் என்னிடமோ முதலமைச்சரிடமோ பேச்சு வார்த்தைக்கு வரும்பொழுதெல்லாம், தவறி ழைத்தவர்கள் அணீவர்மீதும் (அவர் எவராயிருந் தாலும்) நடவடிக்கை மேற்கொள்ள வேண்டு மென்கிற கொள்கையில் நாங்கள் விடாப்பிடியாக இருந்தோம் என்பதும், கடைசியாக அவர்கள் மீது குற்றமுமுக்கு தொடரப்பட்டது என்பதும், திரு. வி. எஸ். நியாகராஜ முதலியார்மீது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு இழப்புத் தொகை வசூல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டது என்பதும், இவ்விஷயம் இன்னும் முடிவாகவில்லீ என்பதும், இந்நிகழ்ச்சி கள்பற்றி வினக்கியுள்ளதிலிருந்து தெரியவரும்".

முன்னுள் கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர், 23-7-1976 நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தாவது :

" ..... தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனீக் கூட்டமைப்பு தொடர்பான விவகாரத் தில், அதிகாரிகள் அல்லது முன்னுள் தலீமைச் செயலாளர் செய்த பரிவுரையில் நான் தலீயிட்ட தாகக் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டு முழுவதும் நியாயமற்றதாகும். " " முறையான தணிக்கைக் கும், விசாரணீக்கும் பின்னர் இழப்புத் தொகை வசூல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டி இருந்தது என்றும், கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் 1,17,55,832 ரூபாய் சம்பந்தப்பட்ட இழப்புத் தொகை வசூல் நடவடிக்கை அறிவிப்பை 5-4-73 அன்று இறுதியாக முடிவு செய்தார் என்றும், இது பற்றி இணீப் பதி வாளருக்குத் தெரிவிக்கப்பட்டது என்றும், அவர் அந்த அறிவிப்பை வி. எஸ். டிக்கு அனுப்பினர் என்றும்..... " அவர் மேற்கொண்டும் குறிப்பிட்டுள்ளார். 1973 ஜூன் திங்களில் அமைச்சர்கள் கவனிக்கும் துறைகள் மாற்றி யமைக்கப்பட்டபோது, கூட்டுறவுத்துறை அமைச்சர் பதவி சான்று கூறியவரிடமிருந்து மாற்றப்பட்டது.

இவ்வாருக ஒருபுறம் முன்னுள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி, சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன், கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் இவர்கள் கொடுத்த உறுதி மொழிப் பத்திரங்களும், மற்றொருபுறம் திரு. கிருஷ்ணராஜ், திரு. கே. ஆர். ஜிராஜகோபாலன், திரு. எஸ். வேங்கடரமணன் ஆகியோர் குறித்த உறுதிமொழிப் பத்திரங்களும் உள்ளன. இக்கருத்து குறித்து இவ்வழக்கில் ஒவ்வொருவரும் சத்திய பிரமாணம் செய்துள்ளதால் யார் கூறுவது சரியானது என்று சொல்வதற்கில்லீ. ஆனுல், மேற்சொன்ன மூன்று சாட்சிகளும் இக்கருத்து குறித்து தமது நிலீவிலிருந்தே கூறியுள்ளனர். இது அலுவலக ஆவணங்களில் குறிப்பிட்டுள் தற்கு முரணுக உள்ளது. எதிர்மனுதாரர்கள் மூவர் கொடுத்த கருத்துக்களுக்கு அலுவலகக் கோப்புகளில் எழுதப்பட்டுள்ளவை ஆதரவாக உள்ளன.

விவகாரம் ஏற்பட்ட பிறகுதான் இந்த அதிகாரபூர்வமான சான்றேடுகள் இட்டுக் கட்டப்பட்டன என்று எவரும் வாதிடவில்லீ. ஆகவே, முடிவாக ஆய்ந்தால், இந்தச் சான்றேடுகள், வழக்கைப் பிரதிவாதிகளுக்குச் சாதகமாகக்கொண்டு செல்கின்றன; நடுநிலீயோடு விசாரிப்பதில் விழிப்பாக இருக்கவேண்டியிருப்ப தால் மேற்சொன்ன சாட்சிகளின் உரியவாறு மெய்ப் பித்தப்படாத சாட்சியம் அதிகாரபூர்வமான சான் றேடுகளில் காணப்படுவதற்குப் பொருந்தவில்லீ என்ற அளவில் அந்த சாட்சியத்தை ஏற்றுக் கொள்வதால் இடருண்டாகும்.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனீக் கூட்டமைப் பின் விவகாரங்கள்பற்றி வெளிப்படையாகவே சர்ச்சைகள் தோன்றியதால், ஜி. என். தாஸ், வி. எஸ். டி. மற்றவர்கள் ஆகியோருக்கெதிரான நடவடிக்கையை விரைவுபடுத்த, முதலமைச்சர் வேண்டுகோளீன்பேரில் சட்டத்துறை அமைச்சர் இயன்ற நடவடிக்கைகளெல்லாம் மேற் கொண்டார் என்று தங்களுடைய எதிர் உறுதி மொழிப் பத்திரங்களில் எதிர்மனுதார்கள் தெரி வித்துள்ளனர். மாதவனின் வாதம் அதிகாரபூர்வ சான்றேடுகள் மூலம் உறுதிப்படுகிறது. 65 ஆவது பிரிவின்கீழ் முன்னதாகவே விசாரணீ செய்யாமல், ஜி. என். தாஸுக்கு எதிராகக் கிரிமினல் நடவடிக்கை தொடரலாமா என்று கருத்தறிய இந்த வழக்கு சட்டத்துறைக்கு அனுப்பப்பட்டது. 64 ஆவது பிரிவின்கீழ் தணிக்கை அறிக்கையின் அடிப்படையிலேயே அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படலாமென சட்டத்துறை ஆலோசனீ கூறியது. 64-வது பிரிவின்படிக்கான தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாமென தொழில்துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனரும் தன்னுடைய குறிப்பில்

தெரிவித்திருந்தார். பின்னர், கோப்பு நேரடியாக முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது. தொழில் துறை அமைச்சரின் பரிந்துரைக்கும் சட்டத்துறை அமைச்சரின் பரிந்துரைக்கும் முதலமைச்சர் அன்றே ஒப்புதல் அளித்தார். அதன்பின்னர், ஜி. என். தாஸுக்கு எதிராகக் கிரிமினல் வழக்கு தொடரப்பட வேண்டுமா என்று கேட்டு குறிப்பொன்றைக் கூட்டுறவுத்துறை சமர்ப்பித்தது. 64-ஆவது பிரிவின்கீழ் தணிக்கை அறிக்கையின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட அலுவலர்மீதும் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அவர் உத்தரவிட்டார். இந்த உத்தரவுபற்றி பதிவாளருக்கு முறையாகத் தெரிவிக்கப்பட்டது; அதையடுத்து, புலன் விசாரணை தொடங்குமாறு, வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவைச் சேர்ந்த காவல்துறை சூப்பிரண்டுக்கு 8-10-1972-ல் பதிவாளர் கூறினர். காவல்துறை சூப்பிரண்டு, 14-12-1972 அன்று தொழில்துறை அமைச்சரைச் சந்தித்தார். புலன் விசாரணையை விரைவுப்படுத்த வேண்டு மென்று இவரிடம் அமைச்சர் கூறினர்.

1972 நவம்பரில், இந்தியக் குடியரசுத் தலைவரிடம் மனுதாரர்கள் சமர்ப்பித்திருந்த மகஜருக்குப் பதில் கூறும் வகையில் இழப்புத் தொகையை வசூலிக்கத் தவிப்பட்டவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என திரு. கருணாநிதி தெரிவித்தார் என்றும் ஆனால், அத்தகைய நடவடிக்கை எதுவும் அப்போது மேற்கொள்ளக் கருதப்படவில்லை என்பது கோப்பிலிருந்து தெரிய வருகிறது என்றும் திரு. வானமாமலை கூறுகிறார். இது தொடர்பாக, தமிழ்நாடு அரசின், அந்நாள் அரசுச் சார்பில் கொடுக்கப்பட்ட எதிர் உரைக்குப் பதிலுரையை எடுத்துக் காட்டினார்; சம்பந்தப்பட்ட விஷயத்தை அவர் தொடர்ந்து கவனித்து வருவதாகவும், அவரது பதில் எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த பதிவாளரின் அறிக்கை கூறுவதாக பதில் உரையில் காணப்படுகிறது. அதிகாரிகள் இதனை வைத்தே அரசுச் சார்பற்றவர்களிடமிருந்து இழப்புத் தொகை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதெனத் திரு. மு. கருணாநிதி தனது பதிலில் குறிப்பிட்டது பொய்யென வாதிடப்படுகிறது. மனுதாரர்கள் சமர்ப்பித்த மகஜர்களுக்கு திரு. கருணாநிதியும் அவரது சகாக்களும் அளித்திருந்த பதிலில் தவறான தகவல் கொடுக்கப்பட்டதாக நான் நினைக்கவில்லை. உண்மையில் சொல்லப் போனால், அவர்கள் தங்களுடைய பதிலைச் சமர்ப்பித்த பிறகுதான் வி.எஸ்.டி.-க்கும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் நிர்வாகிகள் அரசுச் சார்பற்றவர்கள் ஆகியோர் மீது இழப்புத் தொகை வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1971 டிசம்பர் 14-ம் தேதியில் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் காவல் துறையினரிடம் தாக்கல்செய்யப்பட்ட புகார் சம்பந்தமாக (இந்தப் புகாரின் அடிப்படையில் 1/72 ஆம் எண் குற்றவழக்கு பதிவு செய்யப்பட்டது). வி.எஸ்.டி. தனது தூண்டுதலுக்கு உறுதிமொழிப் பத்திரத்தில் விரிவாகக் கருத்து தெரிவித்துள்ளார். காவல் துறையினர் தயாரித்த அல்லது சேகரித்த பல்வேறு ஆவணங்கள், அல்லது, புலனுய்வு செய்யும் காவல் துறை டெபுடி சூப்பிரண்டுக்கும் சென்னை, காவல் துறை குற்றப் புலனுய்வு சூப்பிரண்டுக்குமிடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்து, அரசு உதவி வழக்குரைஞர்-1 28—12—1974-ல் எழுத்து மூலமாகத் தெரிவித்த கருத்து ஆகிய வற்றிலிருந்து எடுக்கப்பட்டவற்றை பகுதிகளும் தன்னுடைய தூண்டுதலுக்கு உறுதிமொழிப் பத்திரத்தில் அவர் (வி.எஸ்.டி.) மேற்கோள் காட்டியுள்ளார். பல்வேறு முறைகேடுகளை எடுத்துக்காட்டக் கூடியவகையில் அமைந்துள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் ஆவணங்களும் கடிதங்களும் தன் மீது (வி.எஸ்.டி. மீது) குற்றம் சாட்டுபவையாக இல்லையென்றும், எல்லா முறைகேடுகள் குறித்தும் காவல் துறையினர் மேற்கொண்ட முழு புலன் விசாரணையும் தனக்கு (வி.எஸ்.டி.-க்கு) எதிரான குற்ற வழக்குக்கு முகாந்திரம் இருப்பதாகத் தெரிவிக்கவில்லையென்றும் காட்டு வதற்காகவே இதையெல்லாம் அவர் செய்திருக் கிறார். எடுத்துக்காட்டாக, தஞ்சாவூர் காவல் துறை டெபுடி சூப்பிரண்டு, சென்னை குற்றப் புலனுய்வுத்துறை, வணிகக் குற்றப் புலனுய்வுப் பிரிவு காவல்துறை சூப்பிரண்டுக்கு 27—4—1974-ஆம் தேதி எழுதியுள்ள கடிதத்தில் கீழ்க் காணும் பகுதியை எடுத்துக்காட்டியுள்ளார்.

"..... கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் முன்னாள் இயக்குநர்களும் பரிசீலனை செய்வதற்காகவும் ஆய்வு செய்வதற்காகவும் இணைப் பதிவாளருக்கு இந்த ஆவணங்கள் தேவைப்படுகின்றன. புலன் விசாரணையிலுள்ள இந்தக் குற்றவழக்கில் அவர்கள் குற்றஞ்சாட்டப்படுபவர்களாக இருக்கக்கூடும். இத்தகைய சூழ்நிலைகளில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களைக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் முன்னாள் இயக்குநர்களும் பார்வையிடுவதற்காகக் கொடுக்கலாமா என்பது குறித்து உத்தரவுகள் வேண்டுகிறேன்." [முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக, அடிக் கோடிட்டுள்ளேன்].

காவல் துறையினர் வி.எஸ்.டி.க்கு எதிராகவும் புலனுய்வு மேற்கொண்டனர் என்பதையே இது காட்டுவதாக திரு. நாரிமன் வாதிடுகிறார். மீண்டும், இவ்வழக்கில் அரசு உதவி வழக்குரைஞர்-1 28—12—1974-ல் தெரிவித்துள்ள கருத்தில் கீழ்க்காணும் பகுதிகளை வி.எஸ்.டி. ஏன்யவற்றிற்கு இடையே எடுத்துக்காட்டுகிறார்.

"திருவாரூரிலுள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் செயலாளருக்கு, திருவாரூர், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ஏஜன்ட் 2—7—1969-ல் ஒரு கடிதமும், 10—9—1969-ல் மற்றொரு கடிதமும் (நகல்கள் திருவாரூரிலுள்ள

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளன) வரப்பெற்றதன் பேரில், தலைவர் அல்லது இயக்குநர்கள் சக குற்றவாளியாக, குற்றவாளிகளாகக் குற்றஞ் சாட்டப்படலாமா என்பது குறித்து மதுரை, குற்றப் புலனுய்வுத்துறை, வணிகக் குற்றப் புலனுய்வு பிரிவு காவல்துறை டெபுடி சூப் பிரண்டு கேட்டுள்ளது தொடர்பாக என்னுடைய கருத்தைத் தெரிவிக்குமாறு பணிக்கப்பட்டுள் ளேன் ''.

அரசு உதவி வழக்குரைஞர்-1 கொடுத் துள்ள அறிக்கையின் மேற்சொன்ன பகுதி, குறிப்பாக, கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பகுதி தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பில் நடை பெற்ற முறைகேடுகள் தொடர்பான குற்ற மெதிலும் வி. எஸ். டி. சம்பந்தப்பட்டிருந்தாரா என்றறிய காவல் துறையினர் விசாரணை நடத்தினர் என்பதைக் காட்டுகிறது என்று நாரிமன் கூறு கிறார். 1/72-ஆம் எண் குற்றவழக்கு தொடர் பாக 100-க்கும் மேற்பட்ட சாட்சிகளைக் காவல் துறையினர் விசாரணை செய்தனர் என்றும் வி.எஸ்.டி. யிடமிருந்தும் வாக்கு மூலம் பெறப் பட்டது என்றும் நாரிமன் தெரிவித்துள்ளார். இந்த சாட்சிகளில் எவரும் (இவர்களுடைய வாக்கு மூலங்கள், 161-ஆவது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன), ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவிடம் பொய் இகப்புக் கணக்குகள் கொடுத்ததற்கு வி.எஸ்.டி. யாவது குழு உறுப் பினர் எவராவது பொறுப்பு என்று தெரிவிக்க வில்லை என்றும் வாதிடப்படுகிறது. அந்தக் குற்றத்தில் வி.எஸ்.டி. பங்கு கொண்டதாகக் கூறப்படுவது குறித்து காவல் துறையினர் விசாரிக்கவில்லை என்று 4—7—1976-ல் திரு. கருணாகர மேனனும் 14—7—1976-ல் டி. ஆர். இராமசாமியும் புலனுய்வு அதிகாரிகளிடம் கொடுத் துள்ளதாகக் கூறப்படும் வாக்குமூலங்களேயே புலனுய்வு அதிகாரிகள் நம்பியுள்ளனர் என்று திரு. நாரிமன் கூறினார். வழக்குரைஞரின் வாதப் படி, இந்த வாக்குமூலங்கள், வழக்குக் குறிப் பேட்டில் கண்டுள்ள தகவல்களுக்கு முரணாக உள்ளன. மேனனும் இராமசுவாமியும் கொடுத் துள்ளதாகக் கூறப்படும் இந்த வாக்குமூலங்கள் 5-A பிரிவின்கீழ் கமிஷன் யாருடைய பணிகளைப் பயன்படுத்தி வருகிறதோ அந்தப் புலனுய்வு அதிகாரிகளால் பதிவு செய்யப்பட்டதென்றும், V.S.T. மீது வழக்கு தொடருவதற்குத் திட்டம் இருந்ததாகவும், ஆனால் முதலமைச்சரும் மற்றவர்களும் தலையிட்டதன்பேரில் அது கைவிடப்பட்டதாகவும் மகஜரில் கூறப்பட்ட புகாருக்கு சப்பைக்கட்டு கட்டவே இந்த வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் வாதத்தில் வலியுறுத்தப்படுகிறது. ஆனால், V.S.T. மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும் திட்டம் ஒன்று இருந்ததாகச் சான் றேடுகள் எவையும் சுரட்டவில்லை என்று வாதம் தொடருகிறது. கருணாகர மேனனின் 25—11—1976 ஆம் தேதியிட்ட உறுதிமொழியின் ஒரு பகுதி யும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது ; அது மீதே கொடுக்கப்பட்டுள்ளது—

'' .....கடனுக்கு இருப்பு காட்டும் கணக்குகள் ஜோடிக்கப் பட்டதில் தலைவர் வி. எஸ். தியாகராஜ முதலியாரின் பங்கு என்ன என்று ஆராயப்பட்டது ; ஆனல், அவர்மீது குற்றம் சாட்டக்கூடிய தடயம் எதுவும் கிடைக்கவில்லே. இந்த நிலையில், காவல் துறையினரின் உதவியுடன் நாங்கள் கைப்பற்றிய கணக்குப் புத்தகங்கள் அனைத்தையும் தஞ்சாவூர் வட்டார இணைப் பதிவாளரிடம் ஒப்படைக்கு மாறு உத்தரவுகள் வந்தன. அதையொட்டி, காவல் துறையினர் வசமிருந்த கணக்குப் புத்தகங்கள் எல்லாவற்றையும் தஞ்சாவூர் வட் டார இணைப் பதிவாளர் திரு. வேலுவிடம் 1975 ஜூலேயில் ஒப்படைத்தேன் ''.

ஜி. என். தாஸுக்கு எதிரான 1/72ஆம் எண் குற்ற வழக்கில் புலன்விசாரணை செய்யப்பட்டது குறித்து கருத்தெதுவும் கூறுவது சரியென்று நான் நினைக்கவில்லே. வி.எஸ்.டி-யின் வழக்குரைஞர் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே மேற்சொன்ன வாதங்களேநான் எடுத்துக்காட்டியுள்ளேன்.ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவிடமிருந்து கடன் பெறுவதற் காக, பொருள் இருப்பை உயர்த்திக்காட்டி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவிடம் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு அளித்த பொருள் இருப் புக் கணக்குகள் ஜோடிக்கப்பட்டதில் வி.எஸ்.டி., எந்த அளவுக்குப் பங்கெடுத்துக் கொண்டார் என்பது ஜோடிக்கப்பட்ட இக்கணக்குகள் தொடர் பாக ஆராயப்பட்டது என்றும், ஆனல் வி.எஸ்.டி. முதலியாருக்கு எதிராக எதுவும் காணப்படவில்லே யென்றும்,விசாரணைக் கமிஷன் முன்னிலேயில் கருணு கரமேனன் தாக்கல் செய்துள்ள உறுதிமொழிப் பத்திரத்தை மட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது நமக்குப் போதும். ஆனல், இந்த அம் சம் மட்டும், அதாவது பொருள் இருப்புக் கணக்கு கள் ஜோடிப்பு மட்டும் முழுவதாக ஆராயப் பட்டது என்றும், இறுதியாக அரசு வழக்குரைஞர்-1 இதுபற்றிக் கலந்தாலோசிக்கப்பட்டார் என்றும் கருணாகர மேனன் மேலும் கூறியுள்ளார். சான் றேடுகளேயும் ஏனேய தாள்களேயும் 1975 ஜூலேயில் தஞ்சாவூர் வட்டார இணைப் பதிவாளரிடம் கொடுத் தது பற்றி கருணாகர மேனனின் உறுதிமொழிப் பத்திரத்தில் கூறியிருப்பது, மேற்படி வட்டார இணைப் பதிவாளரிடம் முடிவெடுக்கப்படாமல் இருந்த இழப்புத் தொகை வசூல் நடவடிக்கை தொடர்பானதாகும் என்பதையும் கவனிக்கலாம்.

விவாதப் பொருள் எண் 6.
வி.எஸ்.டி. குற்றம் செய்தவரா?

கடைசி விவாதப் பொருளுக்குச் செல்வதற்கு முன்னர், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச்

சங்கங்கள் சட்டத்தின் 71ஆவது பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் பொறுத்தவரை, பொருள் இருப்பு பற்றி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவிற்குப் பொய்க் கணக்குகள் கொடுத்தது தொடர்பான தணிக்கை அறிக்கை முடிவுகளின் அடிப்படையில், அந்தப் பொய்யான இருப்புக் கணக்குகள் சம்பந்தமாகக் கிரிமினல் குற்றம் செய்ததற்குப் பொறுப்பானவர் என்றுகண்டறியப்பட்ட ஜி.என்.தாஸுக்குஎதிராக எவ்வாறு கிரிமினல் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பது மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது என்பதை இங்கு கவனத்திற் கொள்வது பொருத்தமாக இருக்கும். தணிக்கை அறிக்கைகள் வரப்பெற்ற பிறகு, கூட்டமைப்புக்கு ஏற்பட்ட இழப்புகளைத் திருப்பி வசூலிக்க, நிர்வாகக் குழுவிற்கும் நிர்வாகப் பணியாளர்களுக்கும் எதிராக தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 71 ஆவது பிரிவின்கீழ் இழப்புத் தொகை வசூல் நடவடிக்கை மேற்கொள்ளப்படலாமென 30-3-1971 அன்று கூட்டுறவுத் துறை உதவிச் செயலாளரும், 31-3-1971 அன்று கூட்டுறவுத் துறைச் செயலாளரும் அலோசனை கூறினர் என்பதைச் சுருக்கமாக நினைவிற் கொள்ளலாம்.

1972 நவம்பரில்/டிசம்பரில், மனுதாரர்கள் இந்தியக் குடியரசுத் தலைவரிடம் மகஜர்கள் சமர்ப்பிப்பதற்குப் பல மாதங்கள் முன்னரே கூட்டுறவுத் துறை உதவிச்செயலாளரும் கூட்டுறவுத் துறைச் செயலாளரும் இந்த அலோசனைகள் தெரிவித் திருந்தனர் என்பது கவனிக்க வேண்டிய விஷய மாகும்.

மேலும், தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் சட்டத்தின் 64ஆவது பிரிவின்கீழ் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு 4-9-1972-ல் கூட்டுறவுத் துறைச் செயலாளர் கடிதம் எழுதினர்.

அத்துடன், ஜி.என். தாஸ் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் வகையில் கவனக் குறிப்பு (Memo) ஒன்றை அவருக்கு 8-10-1972-ல் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கொடுத்தார் என்பதையும் இங்குக் குறிப்பிடலாம். அந்தக் குறிப்புடன் குற்றச்சாட்டுகள் குறித்த விவரக் குறிப்பொன்றும் இணைக்கப்பட்டிருந்தது. இந்தப் புகார் தொடர்பாக சாட்டப்பட்ட குற்றம் வருமாறு :

''அவர் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் செயலாளராக இருந்தபோது தனது கடமைகளை நிறைவேற்றுவதில் மிக அசட்டையாக இருந்தார். கூட்டமைப்பின் தவருன நிர்வாகத்திற்கு அவர்தான் பொறுப்பு.''

9-10-1972ஆம் தேதி 198978/71 ஆம் எண் ஆணையின் குறிப்புப் பகுதியின் 7ஆவது பக்கத்தில் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் ஏற்பளித்த குறிப்பு வருமாறு :

''பல்வேறு வகைகளில் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பாக, முன்னாள் குழு உறுப்பினர்களுக்கும் முன்னாள் செயலாளருக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதைப் பொறுத்தவரை, தலைமைத் தணிக்கை அதிகாரியின் அறிக்கை மீது இவ்விஷயம் விரிவாக ஆய்வு செய்யப்படும் ; குறிப்பு விரைவில் சமர்ப்பிக்கப்படும்.''

14-10-1972 ஆம் தேதி, கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கூட்டுறவுத் துறைச் செயலாளருக்குக் கடிதம் எழுதுகையில், ஜி.என்.தாஸுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டதாகவும், ஏனையோர் மீது நடவடிக்கை எடுப்பதைப் பொறுத்த வரை, தலைமைத் தணிக்கை அதிகாரி அறிக்கையின் அடிப்படையில் அது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் மற்றவற்றிற்கிடையே குறிப்பிட்டிருந்தார்.

20-10-1972 ஆம் தேதியிட்ட அலுவலகக் குறிப்பு, ஏனையவற்றுடன் பின்வருவதையும் தெரிவிக்கிறது :

''30-6-1970 வரையிலான கால அளவுக்கு மட்டும் தலைமைத் தணிக்கை அதிகாரி அறிக்கை கொடுத்துள்ளதால், 1-7-1970 முதல் தனி அதிகாரி பொறுப்பேற்கும் வரையிலான கால அளவில் சங்கத்திற்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டது என்பதும் அந்த இழப்பில் நிர்வாகக் குழுவிற்கு எந்த அளவுக்குப் பொறுப்பு என்பதும் தெரியவில்லை. மேலும், கடந்த ஆண்டுகளில் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட இழப்புக்குப் பொறுப்பானவர்கள் யார் யார் என்பது குறித்த விவரங்களும் அவர்கள் எந்த அளவுக்குப் பொறுப்பானவர்கள் என்பது குறித்த விவரங்களும், அந்தத் தொகைகளை அவர்களிடமிருந்து வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காகச் சேகரிக்கப்படவிருக்கின்றன. ஆகவே, இது வகையில் விவரமாக விசாரணை செய்து, விரிவானதோர் அறிக்கை கொடுக்குமாறு தனித் தனிக் கைக் குழு கோரப்படலாம்.''

(முக்கிய பகுதி அடிக் கோடிடப்பட்டுள்ளது)

மேற்சொன்ன குறிப்பில், 19-10-1972-ல் தலைமைத் தணிக்கை அதிகாரி கீழ்க்கண்டவாறு எழுதினர் :

''இந்த வேலையை எடுத்துக்கொண்டு விவரங்கள் கொடுக்குமாறு தனித் தணிக்கைக் குழுவிற்கு ஏற்கெனவே உதவி செய்த 'H' பிரிவு கண்காணிப்பாளரைக் கேட்டுள்ளேன்.''

பின்னர் 20-10-1972-ல் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் திரு. பி.எம். பெல்லியப்பா பின்வருமாறு குறிப்பு எழுதினர்:—

''இந்த வேலை விரைவுபடுத்தப்பட்டு, விரைவில் முடிக்கப்பட வேண்டும். வேலை எந்த அள

வுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது என்று எடுத்துத் தெரியப்படுத்தவும்.''

20—10—1972 ஆம் தேதியிட்ட அலுவலகக் குறிப்பில் கோடிட்ட சொற்கள்தான் மிகவும் முக்கியமான சொற்களாகும். சம்பந்தப்பட்டவர்கள் வேண்டுமென்றே அலட்சியமாக இருந்தார்கள் அல்லது கையாடல் செய்தார்கள் அல்லது சுருட்டினார்கள் என்பன போன்ற காரணங்களினால் அந்த இழப்பு ஏற்பட்டது என்று நிரூபிக்கப்படும் போது, இழப்புத்தொகை வசூல் நடவடிக்கை மேற்கொள்வதன் மூலமே, கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்புத் தொகைகளை வசூலிக்க 71-ஆவது பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கலாம் என்பதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்தான், 71 ஆவது பிரிவின்கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் தகுதி பெற்ற வராவார். மனுதாரர்கள், திரு. M. G. இராமச்சந்திரனும், திரு. M. கல்யாண சுந்தரமும், 1972 நவம்பர்/டிசம்பரில் மதுரை மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கோடுப்பதற்கு முன்னரே பதிவாளர் அத்தகைய முடிவெடுத்திருந்தார் என்பதை அலுவலக ஆவணங்கள் காட்டுகின்றன. ஆகவே, அரசுச் சார்பற்ற சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்டத்தின் 71 ஆவது பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக, மனுதாரர்களின் மகஜர்களுக்குப் பதிலளிக்கையில் திரு. கருணாநிதி தவருகக் கூறியிருக்கிறார் என்று கூறும் திரு. வானமாமலையின் வாதம் சரியல்ல;

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் கணக்குகளைச் சிறப்புத் தணிக்கை செய்தவர்களில் ஒருவரான M. R. சிவிவாசனும் (கூட்டுறவுத் துணைப்பதிவாளர்), K. சிவிவாசனும் (சப்-இன்ஸ்பெக்டர்), '' கூட்டமைப்பின் முன்னாள் குழு உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தேவையான சில தகவல்களைச் சேகரித்துவர தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு அலுவலகத்துக்குச் சென்று வருமாறு கோரப்பட்டனர், '' என்பதை ஆர்.சி-எஸ். 198978/71-ன் எண் குறிப்புக்கோப்பின் 12-வது பக்கம் காட்டுகிறது.

5—4—1973-ல் தஞ்சாவூர் வட்டாரக் கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளருக்குக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பின்வருமாறு கடிதம் எழுதினர்;—

'' 1-1-1968 முதல் 31—12—1968 வரையிலும், 1-1-1969 முதல் 30-6-1970 வரையிலும் உள்ள கால அளவுக்கு, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் கணக்குகளைத் தணிக்கை செய்ததில், மிகமோசமான முறைகேடுகள் நடந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது; அந்த முறைகேடுகளின் காரணமாகக் கூட்டமைப்புக்கு 141.05 இலட்சம் ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்சொன்ன கால அளவுகளுக்கான தணிக்கை அறிக்கைகளின் நகலொன்றும் தஞ்சாவூர் வட்டார இணைப் பதிவாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன. இழப்புகளுக்குக் காரணமான வர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து தகவல் தெரிவிக்குமாறும் அவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். ''

19-4-1973-ல், இச் சட்டத்தின் 71 ஆவது பிரிவின்கீழ் தஞ்சாவூர் கூட்டுறவுச் சங்க இணைப்பதிவாளர் அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டார்; ஏனையவற்றுடன் கீழ்க்கண்டவற்றையும் அவர் தெரிவித்தார் :—

'' பொருள் : தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு, திருவாரூர்—1—1—1968 முதல் 31—12—1968 வரையிலான கால அளவுக்கும் 1-1-1969 முதல் 30-6-1970 வரையிலான கால அளவுக்கும் தணிக்கை—இருப்புகளில் குறைவு—வசூலித்தல்—அறிவிப்பு வெளியிடப்படுகிறது.''

1-1-1968 முதல் 31-12-1968 வரையிலான கால அளவுக்கும் 1-1-1969 முதல் 30-6-1970 வரையிலான கால அளவுக்கும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் கணக்குகளை, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 64-ஆவது பிரிவின்கீழ் தணிக்கை செய்ததில், மேற்சொன்ன கால அளவில் தலைவர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், செயலாளர் என்ற முறையில், மேற்படி கூட்டமைப்பின் நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்த கீழ்க்கண்டவர்கள், நம்பிக்கை மோசடிக் குற்றம் செய்திருப்பதும், நம்பிக்கை மோசடி செய்ததாலும் வேண்டுமென்றே அலட்சியமாக இருந்ததாலும், கூட்டமைப்பின் இருப்புகளில் 1,17,55,832.73 ரூபாய் அளவுக்குக் குறையக் காரணமாக இருந்தார்கள் என்பதும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மேற்சொன்ன, 1,17,55,832 ரூபாய் 73 காசு குறித்த விவரங்களும், நடவடிக்கைக்கான காரணமும் மேற்சொன்ன அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது; அதன் விவரம் வருமாறு :

	ரூ.	காசு
1. இருப்புக் குறைவுகள் :		
குறித்தகால இருப்பு சரிபார்ப்பு முடிவுகளை ஆய்வு செய்யவும், இருப்புக் குறைவுக்குப் பொறுப்பை முடிவு செய்து, அதை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதில் கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவும் செயலாளரும் அலட்சியமாக இருந்து விட்டனர். நிர்வாகம் தனது அலட்சியம் காரணமாக, எதிரே குறிப்பிட்ட அளவுக்குக் கூட்டமைப்பின் இருப்புகள் குறையக் காரணமாக இருந்திருக்கிறது.	61,33,218,00	

2. நெல் கொள்முதலில் இழப்பு :

அரசு நிர்ணயித்த விலைகளுக்கும் அதிகமான விலைகளில் நெல் கொள்முதல் செய்த வகையில் நிர்வாகமும் செயலாளரும் நம்பிக்கை மோசடி செய்துள்ளனர். இதனால் எதிரே குறிப்பிட்டுள்ள அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. 23,76,878.00

3. பூச்சிக் கொல்லி மருந்து கொள்முதல்—விற்பனை வகையில் இழப்பு :

அதிக விலைகளில், நிர்வாகமும், செயலாளரும் பூச்சிக் கொல்லி மருந்துகளை ஏராளமாக வாங்கிய வகையில், எதிரே குறிப்பிட்டுள்ள அளவுக்குக் கூட்டமைப்பிற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. 3,49,519.10

4. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவுக்குச் செலுத்திய அபராத வட்டி :

பொய்யானபொருள் இருப்புக் கணக்குகள் கொடுத்ததன் மூலம், கூட்டமைப்பு தொடர்பாக நிர்வாகம் நம்பிக்கை மோசடி செய்தது ; அதன் விளைவாக, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா எதிரே குறிப்பிட்டுள்ள அளவுக்கு அபராத வட்டி வசூலித்தது. 13,71,780.33

5. ரொக்கக் கடன் கணக்கில் நிலுவையாக இருந்த தொகையைக் கொடுத்துத் தீர்க்காததற்கு அபராத வட்டி :

நிர்வாகம், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவுடன் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தின்படி உரிய தேதியில் இக் கடனைக் கொடுத்துத் தீர்த்திருக்க வேண்டும் ; நிர்வாகிகள் குழுவும் அதைச் செய்யத் தவறியதால், இவ்வகையில் நிர்வாகிகள் குழுவும் செயலாளரும் அசட்டையாக இருந்ததால், எதிரே குறிப்பிட்டுள்ள அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது 14,36,112.30

6. கோணிப் பைகள் கொள்முதல் செய்ததில் இழப்பு :

எவ்வளவு கோணிப் பைகள் தேவை என்று உரிய நேரத்தில் சரியாக மதிப்பிட்டு, விவேகமான முறையில் அவற்றைக் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்வதில் நிர்வாகிகள் குழுவும் செயலாளரும் அலட்சியமாக இருந்து விட்டதால், எதிரே குறிப்பிட்டுள்ள அளவுக்குக் கூட்டமைப்பிற்கு இழப்பு ஏற்பட அவர்கள் காரணமாய் இருந்தார்கள் .. 88,525·00

மொத்தம் .. 1,17,55,832·73

இத்தகைய சூழ்நிலையில், ஏன் இழப்புத்தொகை வசூல் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு 19—4—73-ல் கொடுக்கப்பட்ட அறிவிப்பின் பகுதி வருமாறு :—

" கூட்டமைப்பு தொடர்பாக நம்பிக்கை மோசடிக் குற்றம் செய்த வகையிலும் நம்பிக்கை மோசடி செய்ததாலும் மேற்சொன்னவாறு வேண்டுமென்றே அலட்சியமாக இருந்ததாலும் கூட்டமைப்பின் இருப்பில் 1,17,55,832·73 ரூபாய் குறைவதற்குக் காரணமாய் இருந்தவகையிலும் நிர்வாகக் குழு இயக்குநர்களும், செயலாளரும், கூட்டமைப்பின் இருப்புக்கு, 12½ சதவீத வட்டியுடன் மேற்சொன்ன தொகையைக் கூட்டாகவும் தனித்தனியாகவும் கட்டுமாறு கேட்டு, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 71-ஆவது பிரிவின் கீழ், ஏன் உத்தரவு பிறப்பிக்கக் கூடாது என்பதற்கு 15—5—1973-க்கு முன்னர் காரணம் காட்டுமாறு கோரப்படுகின்றனர். "

பணம் அல்லது சொத்து எதனையும் கையாடல் செய்ததாக அல்லது ஏமாற்றி வைத்திருந்ததாக அல்லது, சங்கம் தொடர்பாக நம்பிக்கை மோசடிக் குற்றம் செய்ததாக அல்லது நம்பிக்கை மோசடி செய்ததன் காரணமாக அல்லது வேண்டுமென்றே அலட்சியமாக இருந்ததன் காரணமாக சங்கத்தின் இருப்புகள் குறைவதற்குப் பொறுப்பாய் இருந்ததாக, அல்லது, சட்டத்திற்கும் விதிகளுக்கும் அல்லது துணை விதிகளுக்கும் முரணுகத் தொகை ஏதும் கொடுத்ததாக அந்த காரணம் கேட்கும் அறிவிப்பில் (show cause notice), குற்றச்சாட்டு ஏதும் கூறப்படவில்லை என்பதிலிருந்து அவ்வாறு கூறப்படுவது 71 ஆவது பிரிவின் கீழ் நீதிமுறை நடவடிக்கை எடுப்பதற்கு இருக்கவேண்டிய அடிப்படை அதிகார முறைமை அதாவது இன்றியமையாத் தகுதிக் கூறு ஆகும் என்பது தெரியவரும். மேலும் அந்தப் பிரிவின் கீழ் விசாரணையொன்று நடத்திய பிறகு விசாரணை அதிகாரியால் அதாவது, பதிவாளரால் அல்லது இவ்வகையில் அவரால் தனிப்பட அதிகாரம் அளிக்கப்பட்டவர்களால் ஆணை பிறப்பிக்கப்படலாம்

110-G-13— 8A

என்றும் அப் பிரிவு கூறுகிறது. கையாடல் செய்தது, நிதிகளைத் தவருகப் பயன்படுத்தியது, ஏமாற்றி வைத்திருந்தது, நம்பிக்கை மோசடி செய்தது அல்லது வேண்டுமென்றே அலட்சியம் செய்தது தொடர்பாகச் சங்கத்திற்கு இழப்பீடாக, சம்பந்தப்பட்டவர், பணத்தையோ சொத்தி னையோ, அதன் ஒரு பகுதியையோ வட்டியுடன் சங்கத்திற்குத் திருப்பிச் செலுத்துமாறு அல்லது ஈடுசெய்யுமாறு அல்லது பதிவாளரோ அவரால் அதிகாரமளிக்கப்பட்டவரோ நியாயமானதென்று கருதக்கூடிய ஒரு தொகையைச் செலுத்துமாறு அந்த ஆணை கோரலாம்.

வி. எஸ்.டி. தலேவராகவும் நிர்வாக இயக்குநரா கவும் இருந்த திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனத் திற்குச் சலுகை விலைகளில் கடன் அடிப்படையில் உரங்கள் வழங்கியதுதான் வி.எஸ்.டி. சம்பந்தப் பட்டிருந்த திட்டவட்டமான ஒரே முறைகேடு என்று தணிக்கை அறிக்கைகள் கூறுகின்றன. இதனுல் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்ட மைப்புக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லையாத லின், இழப்புத் தொகை வசூல் நடவடிக்கைகளில் இது ஓர் இனமாகச் சேர்க்கப்படவில்லே.

இணைப்பதிவாளர் (இழப்புத் தொகை வசூல்) அந்த வழக்கை முடிவு செய்ததாக மன்றத்தில் திரு F.S. நாரிமன் என்னிடம் கூறினர். 19-4-1973-ல் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 71 ஆவது பிரிவின்கீழ் கொடுக்கப் பட்ட அறிவிப்பில் கோரியிருந்த மொத்தம் 1 17,55,832·73 ரூபாயில் 1,09,59,556·17 ரூபாயை அந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பில் கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக இணைப்பதி வாளர் தள்ளுபடி செய்தார். இணைப் பதிவாளர் (இழப்புத் தொகை வசூல்) தீர்ப்பின்படி (R.C. 17653/73-SUR ஆவணத்தைக் காண்க) தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டது போல தொகை ஏதும் குறையவில்லே;

சங்கக்கிளேகள், தனி நபர்கள், குத்தகை ஆலே கள் தொடர்பாக, R.C. 17653/73/SUR 107 ஆம் பக்கத்தில் (இணைப்பதிவாளர்) இழப்புத் தொகை வசூல் வழக்கில் தெரிவித்துள்ள முடிவுகளேப்பற்றி அரசு வழக்குரைஞரான திரு.வானமாமலே குறிப்பிட் டார். 3,98,404·49 ரூபாய் குறைவதாகக் கூறப் பட்ட மாங்குடி கிளேயைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட பதிவேடுகள் விசாரணே அதிகா ரிக்குக் கிடைக்காத காரணத்தால் இழப்புத் தொகை வசூல் கோரிக்கை அனுமதிக்கப்படவில்லே என்பதை வழக்குரைஞர் சுட்டிக்காட்டினர். குறிப்பு சம்பந்தப்பட்ட 109 ஆம் பக்கத்தில் கிடைக்காத ஆவணங்கள் என்று காட்டப்பட் டுள்ள ஆவணங்கள் பட்டியலேயும் வழக்குரைஞர் வாசித்துக் காட்டினர். 71 ஆவது பிரிவின்கீழ் பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் அவர்களுக்கெதிராக இழப்புத்தொகை வசூல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு சம்பந் தப்பட்ட ஆவணங்கள் கிடைக்காத காரணத் தினுலேயே 1,17,55,832.73 ரூபாயாகக் குறைக்கப்பட்டது என்பதுதான் கூறவந்த விஷயமாகும். ஆவணங் களேப் பிரதிவாதிகள் மறைத்திருக்கக்கூடும் என்ற ஊகத்திற்கு இடமிருப்பதாக எடுத்துக்கூறப் பட்டது. சட்டத்தின் 65 ஆவது பிரிவின்கீழ் முழு அளவில் விசாரணேயொன்றை நடத்தியிருந் தால் அவ்வாறு மறைக்க முயன்ற விஷயம் வெளிப் பட்டிருக்கும் என்றும் அந்நாள் முதலமைச்சர் தலேயீட்டின் பேரில் அவ்வாறு விசாரணே செய் யும் முயற்சி அனுமதிக்கப்படவில்லே என்றும் வழக் குரைஞர் வாதிட்டார். வழக்குரைஞர் எடுத்துக்காட்ட முற்படும் அனுமான விளக்கம் பொருந்திவருவதாக எனக்குத் தெரியவில்லே. இணைப்பதிவாளர் (இழப்புத் தொகைவசூல்) அனுமதிக்காத கோரிக்கை இனங்கள் மேற்சொன்ன R.C. 17653/73/SUR குறிப்பின் 3 ஆம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளன. ஆவ ணங்கள் கிடைக்காத காரணத்தால் 12,50,097·03 ரூபாய் தள்ளுபடிசெய்தது என்று "தள்ளுபடி செய்த இனங்கள்" என்ற தலேப்பில் இணைப்பதிவாளர் (இழப்புத்தொகை வசூல்) தெரி வித்துள்ளார். ஆணே முழுவதையும் கவனமாக ஆராய்ந்த பின்னர் இழப்புத் தொகை வசூல் அறிவிப்பில் சுட்டிக்காட்டுவதற்குக் கணக்குப் புத்தகங்களும் ஆவணங் களும் கிடைக்காத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட தனி இனங்களின் ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டது. ஆவணங்கள் கிடைக்காத காரணத்தினுல் தள்ளுபடி செய்ததாகக் காட்டப்பட்டுள்ள பல்வேறு இனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

இழப்புத் தொகை வசூல் அறிவிப்பு.

கிடைக்காத ஆவணங்கள்—கணக்குப் புத்தகங்கள்.

R.C. 17653/73-SUR

(12,50,097.13 ரூபாய்க்குக் கணக்குப் புத்தகங்களும் ஆவணங்களும் கிடைக்கவில்லை.)

		ரூ.	ரூ.
1968—			
நெல் இருப்பு— H.N.R. ஆலை *(பக்கம் 21)*		4,101·41	..
M.R. ஆலை, மன்னார்குடி அரிசி *(பக்கம் 35)*		168·62	.
M.R. ஆலை, திருவாரூர் நொய் அரிசி *(பக்கம் 37)*		46.13	..
கோணிப்பைகள்—கோணிப்பைகள் பிரிவு, திருவாரூர் *(பக்கம் 43)*.		16,65,179·50	..
சங்கக் கிளைகளில் கோணிப்பைகள்—			
பதிவுபெற்ற அலுவலகம்—			
பட்டுக்கோட்டை *(பக்கம் 45)*		24·50	..
மன்னார்குடி *(பக்கம் 45)*		41·25	..
திருவாரூர் *(பக்கம் 45)*		80·00	..
வடபாதிமங்கலம் *(பக்கம் 53)*		4,837·30	..
கிள்ளுகுடி. *[பக்கம் 55)*			
			1,74,478·71
1969–70—			
நெல் இருப்பில் குறைவு—			
கிளைகள்—மாங்குடி *(பக்கம் 109)*		3,28,404·49	..
பதிவு பெற்ற அலுவலகம்—			
கும்பகோணம் *(பக்கம் 113—109)*		2,824·39	..
M.R. ஆலை, தஞ்சாவூர் *(பக்கம் 119—113)*		03,309·30	..
M.R. ஆலை, பட்டுக்கோட்டை *(பக்கம் 119—113)*		09,739·10	..
விதை நெல் இருப்பில் குறைவு—			
மாங்குடி *(பக்கம் 113—109)*		8,641·50	6,23,919·70
அரிசி இருப்பு—			
M. R. ஆலை, தஞ்சாவூர் *(பக்கம் 121)*	7,574·05		
கலி அரிசி ஆலை, மாங்குடி *(பக்கம் 125)*	1,88,859·13		..
V.R. அரிசி ஆலை, குத்தாலம் *(பக்கம் 125)*	3,977·32		..
H. N. R. ஆலை *(பக்கம் 125-127)*	29,632·93		2,29,843·63
தூண்டப்பொருள் இருப்பு—			
நொய், M. R. ஆலை, கும்பகோணம் *(பக்கம் 129)* ..		17,500·17	..
M. R. ஆலை, மன்னார்குடி *(பக்கம் 129)*		2,961·76	..
ஜெர்ம்ஸ் : M.R. ஆலை, கும்பகோணம் *(பக்கம் 131)* ..		11,274·40	..
குத்தகை ஆலைகள்: கலி அரிசி ஆலை *(பக்கம் 133)*		20,632·75	52,409·08
			10,80,649·20

ஆவணங்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி இழப்புத் தொகை வசூல் அறிவிப்பு ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று இணைப் பதிவாளர் (இழப்புத் தொகை வசூல்) மேற்படி இனங்கள் குறித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

இவற்றில் பல்வேறு இனங்கள் பற்றியும் கணக்குப் புத்தகங்கள், வியாபாரத்தில் சாதாரணமாக வைத்துவரப்படும் ஏனைய அடிப்படைப் பதிவேடுகள் ஆகியவை கிடைக்கின்றன என்றும் வி.எஸ்.டி. முதலியார் அவற்றைப் பார்வையிட்டுள்ளார் என்றும் தணிக்கை அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதுபோல பற்றுக்குறை இல்லை என்று மெய்ப்பிக்க இவற்றில் பல்வேறு இனங்கள் குறித்து விரிவான விளக்கக் குறிப்புகள் கொடுத்துள்ளார் என்றும் நாரிமன் கூறுகிறார். திருவாரூரிலுள்ள கோணிப்பைகள் பிரிவில் 1968-ஆம் ஆண்டு ரூ. 1,65,179·50 மதிப்பிற்கு கோணிப்பைகள் பற்றுக்குறையாக உள்ளன என்ற குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில் 71-வது பிரிவின் கீழ் நடவடிக்கைகளின் போது விசாரணை செய்யப்பட்ட தணிக்கையாளர் P.இராமலிங்கம் கிழக்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார் என்று நாரிமன் கூறியுள்ளார்.

''திருவாரூரிலுள்ள கோணிப்பைகள் பிரிவில் பயன்படுத்தப்பட்ட கோணிப்பைகள் இருப்புப் பதிவேடு ஒன்று உள்ளது. இது 154-வது எண் ஆவணம் என்று இந்த நடவடிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பதிவேடு தணிக்கை செய்யப்பட்டுள்ளது. இதில் பற்றுக்குறை எதுவும் காணப்படவில்லை. ஆனால், தணிக்கையில் இதை நான் நம்பியிருக்கவில்லை.''

கூட்டமைப்பின் அன்றைய வியாபாரத்தில் பதிவேடு ஒன்று வைத்துவரப்பட்ட போதிலும், அதன் மீது நம்பிக்கை வைக்கப்படவில்லை என்பது திரு. P. இராமலிங்கம் அவர்களின் கூற்று என்றும், இப் பதிவேடு தணிக்கை செய்யப்பட்டபோதிலும் சாட்சியின் கூற்றுப்படி அதன்பால் நம்பிக்கை வைக்கப்படவில்லை என்பது தெளிவாகிறதென்றும் வழக்குரைஞர் கூறுகிறார். கூட்டமைப்பின் ஆவணங்கள் முறையாகத் தணிக்கை செய்யப்பட்டதில் அதில் குறைபாடு எதுவும் காணப்படவில்லை. மேலே இப்பத்தி குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், ரூ. 1,65,179·50 கொண்ட இந்தக் கோரிக்கை போதிய ஆவணங்கள் இன்மையால் மறுக்கப்பட்டது என்று இணைப்பதிவாளர் (இழப்புத் தொகை வசூல்) Rc. 17653/73-SUR எண்ணுள்ள கோப்பின் 43ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். ஏனைய இனங்கள் குறித்து அனுமதி மறுக்கப்பட்டிருக்கும் நிகழ்விலும் அதேதாதியான குறை கூறப்பட்டுள்ளது. கணக்குப் புத்தகங்களும் பதிவேடுகளும் இருந்த போதிலும், இணைப்பதிவாளர் (இழப்புத் தொகை வசூல்) ஆவணங்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி ஏனைய இனங்களைத் தள்ளி விட்டார் என்று வாதிடப்படுகிறது.

இழப்புத் தொகை வசூல் நடவடிக்கை அறிவிப்புகளில் கண்டுள்ள பல்வேறு கூறுகள் குறித்து எதிர் மனுதாரர்கள் அனுப்பியுள்ள பதில்கள் 1968, 1969–70-ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை முழுவதையும் கண்டிக்கின்றது. அனுகும் முறையிலும் நடைமுறையிலும் குற்றங்குறைகள் காணப்பட்டு, தணிக்கை முழுவதும், அதன் பரிவுரைகள் முழுவதும் ஆதார மற்றவையாகக் காணப்பட்டன. உரிய ஆவணங்கள் விசாரணை அதிகாரியிடம் இருந்தபோதிலும் ஒருசில இனங்கள் குறித்து ஆவணங்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்திலும் விசாரணை அதிகாரி இணைப் பதிவாளர் (இழப்புத் தொகை வசூல்) சில இனங்களை மறுத்துள்ளார்.

இந்த அடிப்படையில் திரு. N. T. வானமாமலை கொண்டு வர விழையும் அனுமானத்தை உண்மைக்குப் புறம்பானதென்றும் அவையற்ற தென்றும் கூறலாம்.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு அல்லது அதன்மீதில் துன்பமடைந்த தரப்பினர், இழப்புத் தொகை வசூல் நடவடிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அவர்களது கோரிக்கைகளில் கணிசமான பகுதியை மறுத்து இணைப் பதிவாளர் [இழப்புத் தொகை வசூல்] பிறப்பித்த ஆணையை எதிர்த்து வழக்காட விரும்புகின்றனர் என்று எனக்குத் தெரிய வருகிறது. அப்படி இருக்க, இதுபற்றி கருத்து தெரிவிப்பது சங்கடமானதும் நியாய மற்றதுமென நான் கருதுகிறேன். சமரச ஏற்பாடு ஒன்று மேலதிகாரியினுல் அல்லது மேல் நீதிமன்றம் ஒன்றினுல் தள்ளிவிடப்படாத வரையில் இந்த தீர்ப்புகள் செல்திறனுள்ளவையாகக் கொள்ளப்பட வேண்டும். எனவே, ரூ. 7,96,276·56 அளவுக்கு அன்றி மற்றப்படி இழப்புத் தொகை வசூல் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதல்ல என்று தகுந்த அதிகாரியினுல் கருதப்படுகிறதென நான் நினைக்கிறேன். எனவே, இந்த நடவர் தீர்ப்பு, தணிக்கை அறிக்கைகளில் கண்டுள்ளவற்றைக் கடுமையாக பாதிக்கின்றது.

சுருக்கமாகச் சொல்லின், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பில் இரண்டு கடுமையான முறைகேடுகள் மட்டுமே தணிக்கை அறிக்கைகளில் கண்டு பிடிக்கப்பட்டன என்றும் கூட்டுறவுத் துறை அதிகாரிகளின் ஏனைய அறிக்கைகளிலும் இந்த இரண்டு முறைகேடுகளே காணப்பட்டன என்றும் சொல்வது போதுமானது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பில் வி.எஸ்.டி. முதலியார் மோசடி செய்தார் என்றே பணத்தைக் கையாடல் செய்தார் என்றே இந்த ஆவணங்கள் எதுவும் குறிப்பிடவில்லை.

உண்மையில் இருப்பிலிருந்த சரக்கின் அளவிற்கும் பொய்யான விவர அறிக்கைகளில் சுட்டிப் பிடப்பட்டுள்ள சரக்கின் மதிப்பிற்கும் இடையே

பெரிய அளவிலான வேறுபாடு இருக்கையில் இந்திய ஸ்டேட் வங்கிக்குத் தவறான விவரக் கணக்குகள் கொடுக்கப்பட்டமை முதலாவதாகும். இந்திய ஸ்டேட் வங்கியிடமிருந்து மேற்கொண்டும் கடன் வாங்கும் எண்ணத்துடன்இந்தப் பொய்யான விவர அறிக்கைகள் தாயரிக்கப்பட்டமை வெளிப்படையாகவே குற்றவியல் சட்டப்படிக் குற்றமாகும். இதற்கான பொறுப்பு, அப்பொழுது தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின் செயலாளராக இருந்த G. N. தாஸ் மீது முழுவதும் சுமத்தப்பட்டது. இவருக்கு எதிராகக் குற்றவியல் வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது.

முதலியார் சம்பந்தப்பட்டுள்ள இரண்டாவது கடுமையான முறைகேடு என்னவென்றால், டி.ஏ.எஸ். நிறுவனத்திற்குச் சலுகை வீதங்களில் ரொக்கமாகவும் கடனுகவும் உரங்களை வழங்கியதாகும். இது கிரிமினல் குற்றமாகுமென்று நான் கருதவில்லை. ஏனெனில், தஞ்சாவூர் கூட்டுறவுச் சங்க முதலீலை இணைப் பதிவாளர் அவர்களின் ஆணையின் மீதேதான் உரங்கள் வழங்கப்பட்டன. உரங்களின் விலையை, உரங்கள் வழங்கப்படுகின்ற கரும்பு சாகுபடியாளர்களிடமிருந்து வசூலித்துச் செலுத்த, டி.ஏ.எஸ். நிறுவனம் உறுதியளிக்க வேண்டுமென்ற பரஸ்பர கடப்பாடும் அதன் மீது சுமத்தப்பட்டது. 1-1-1970-க்குப் பிறகு பரஸ்பரம் கணக்குகளைத் தீர்த்துக்கொண்ட பிறகு, டி.ஏ.எஸ். நிறுவனம் 66,000 ரூபாய் தான் கொடுக்க வேண்டுமெனவும் வர்த்தமானனின் 24-7-1970 நாளிட்ட அறிக்கையின்படி மேற்படி கூட்டுறவு கூட்டமைப்பிற்கு ரூ. 15·66 இலட்சம் கொடுக்கவேண்டியதிலில்லை எனவும்தெரிய வருகிறது. இந்த பாக்கித் தொகையும், 9 சதவீத ஆண்டு வட்டியுடன் பின்னர் கொடுத்துத் தீர்க்கப்பட்டது.

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பிலிருந்து வி.எஸ்.டி. முதலியார் ரூ. 2 கோடி அளவிற்குப் பணத்தை ''மோசடி செய்துள்ளார்'' அல்லது ''கையாடல் செய்துள்ளார்'' என்ற குற்றச்சாட்டில் சாரம் எதுவுமில்லை. முதலியார் மீது வழக்கு தொடருமாறு தலைமைச் செயலாளரோ வேறு எந்த அதிகாரியோ பரிந்துரை செய்யவில்லை. அப்பொழுதிருந்த அமைச்சர்கள், குறிப்பாக, முதலமைச்சர் திரு. கருணாநிதி செய்யவேண்டிய வற்றைச் செய்யாதிருத்தல், செய்யத் தகாதன வற்றைச் செய்தல் ஆகிய குற்றங்கள், கெட்ட எண்ணத்தின் பேரிலோ, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்புக்குப்பாதகமாகவோ பொது நலனுக்கு ஊறுவினைவிக்கும் வகையிலோ செய்யப்படவில்லை. வி.எஸ்.டி. முதலியார் திரு. கருணாநிதிக்கு வேண்டியவர் ; இரண்டு பேரும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். எனினும், 1970 ஏப்ரல் 25 ஆம் நாளன்று அரசு விருந்தினர் இல்லத்தில் நடைபெற்ற விவாதத்தில் 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 65 ஆவது பிரிவின்கீழ் விசாரணையை நடத்துமாறு பதிவாளருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் அவர் பச்சை விளக்கு காட்டினார். விசாரணையில் போதுமான காரணங்கள் தெரிந்தாலன்றி வி.எஸ்.டி. முதலியார் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அவர் எதிர்ப்பு தெரிவித்தார். இது எச்சரிக்கையான ஒரு நடவடிக்கைதான். நியாயமான மனப்பான்மையுள்ள எந்த முதலமைச்சரும் இத்தகைய சூழ்நிலையில் அவ்வாறு தான் நடந்து கொண்டிருப்பார்.

எனவே, இக் குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படவில்லை என நான் முடிவு கூறுகிறேன்.

குற்றச்சாட்டு எண். 20 கோடைக்காலில்— பழனி சாலை.

திரு. எம். கல்யாணசுந்தரம் அளித்த மகஜரில் கண்டுள்ள குற்றச்சாட்டு வருமாறு :—

''இந்தச் சாலை அமைப்புப் பணி 85 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்படவேண்டியதாகும். இது எஸ். அகமது அண்டு கம்பெனி என்ற நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டது. பெருந்தொகைகள் முன்பணமாக இந்த நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டன. கோயம்புத்தூரில் மேம்பாலம் கட்டும் பணி இதே நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டது. இப் பணிக்காகவும் ஒப்பந்தக்காரர்களுக்குப் பெருந்தொகைகள் முன்பணமாகக் கொடுக்கப்பட்டன. இவ்வாறு பெரிய அளவில் முன்தொகையைக் கொடுத்ததற்கான அவசியம் பற்றித் தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டும்.''

5 (2) (a) விதியின் கீழ் அனுப்பப்பட்ட அறிவிப்பிற்குப் பதில் அனுப்பும் வகையில், 16-6-1976 நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில், திரு. கல்யாணசுந்தரம் கூறியதாவது :— குடியரசுத் தலைவருக்கு அவர் அனுப்பிய மகஜரில் கோடைக்கானல்—பழனி சாலை அமைக்கும் பணி கொடுக்கப்பட்ட ஒப்பந்ததாரரது பெயர் தவறுதலாக எஸ். அகமது அண்டு கம்பெனி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒப்பந்தம், உண்மையில் திருவாளர்கள் நாகப்பட்டினம் இரக்குமதி-ஏற்றுமதி கார்ப்பரேஷனுக்குக் கொடுக்கப்பட்டது. திருவாளர்கள் மெட்ராஸ் ஜ். ஒர்க்ஸ் என்ற நிறுவனம் அனுப்பிய ஒரே டெண்டர் மிகச் சாதாரணமான காரணங்களுக்காகத் தள்ளிவிடப்பட்டது. அதன் பின்னர் சில காலம் கழித்து மீண்டும் டெண்டர்கள் வரவழைக்கப்பட்டன. திருவாளர்கள் தாகப்பட்டினம் இறக்குமதி-ஏற்றுமதி கார்ப்பரேஷன் அனுப்பிய டெண்டர் மிகவும் குறைத்த தொகையைக் குறிப்பிடாவிடினும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. கருணாநிதியும் ஏனைய எதிர்மனுதாரர்களும், 41/SCI/76 எண்ணுள்ள மனுவில் திரு. எம். கல்யாணசுந்தரத்தின் 16-6-1977 நாளிட்ட

உறுதிமொழிப் பத்திரத்திலிருந்து 1, 3, 4, 7, 9 ஆகிய பாராக்கள் எடுத்துவிடப்பட வேண்டு மென்றும் அந்த பாராக்களில் கண்டுள்ள குற்றச்சாட்டுகள் பொருத்தமற்றவை என்றும், 8-8-1976 நாளிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கமிஷனின் ஆய்வு வரம்பிற்கு அப்பாற்பட்டவை என்றும் கூறியிருந்தனர். 28-8-1976 நாளிட்ட என் உத்தரவில், திரு. கருணாநிதியும் ஏனையோரும் கொடுத்த இந்த மனுவை நான் ஏற்றுக்கொண்டு 16-6-1976 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்தில் கண்டுள்ள 1, 3, 4, 7, 9 ஆகிய பாராக்களை நீக்கிவிடுமாறு ஆணையிட்டேன். ஏனெனில், முதலில் சொன்ன குற்றச்சாட்டில் அகமது அண்டு கம்பெனி என்ற நிறுவனத்திற்கு ஆதரவு காட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. பின்னர் இக் குற்றச்சாட்டு மாற்றப்பட்டு, திருவாளர்கள் நாகப்பட்டினம் இறக்குமதி-ஏற்றுமதி கார்ப் பரேஷன் என்ற நிறுவனத்திற்கு அளவுக்கு மீறிய ஆதரவு காட்டப்படுவதாகக் குற்றச்சாட்டில் கண்டிருந்தது. என்னுடைய ஆணைய விசாரணைக் கமிஷன் முதல் அறிக்கையின் IV-வது இணைப்பில் காணலாம்.

மேற்படி சட்டத்தின் 5A பிரிவின்கீழ், விசாரணை கமிஷன் புலனுய்வுப் பிரிவு, மகஜரில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து வருவது அறிக்கையைச் சமர்ப்பித்தது. கோடைக்காலவில்—பழனி சாலை அமைக்கும் பணி அகமது அண்டு கம்பெனிக்குக் கொடுக்கப்படவில்லை எனபதும் திருவாளர்கள் நாகப்பட்டினம் இறக்குமதி—ஏற்றுமதி கார்ப்பரேஷன் என்னும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டதென்றும் அந்த அறிக்கை பிலிருந்து தெரிய வருகிறது. இதே மாதிரி, மகஜரில் குறிப்பிட்டுள்ள கோயம்புத்தூர் மேம்பாலம் கட்டும் ஒப்பந்தமும் அகமது அண்டு கம்பெனிக்குக் கொடுக்கப்படவில்லை. அது, திரு. K. இராஜ கோபாலன் என்னும் ஒப்பந்தக்காரருக்குக் கொடுக்கப்பட்டது.

எனவே, மேற்சொனன இரண்டு பணிகளுக்கும் அகமது கம்பனிக்குப் பெரிய தொகைகளை முன் பணமாகக் கொடுக்கும் கேள்விக்கு இடமில்லை. ஆகவே, திரு.எம். கல்யாணசுந்தரம் கொடுத்துள்ள மகஜரில் கண்டுள்ள குற்றச்சாட்டு தவருனது. அது மெய்ப்பிக்கப்படவில்லை.

குற்றச்சாட்டு எண் 21

முதலமைச்சர் திரு. . கருணாநிதி, அப் போதைய கல்வி அமைச்சர் திரு. வி. ஆர். நெடுஞ் செழியன், அப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் ஆகியோர் மீது;

திரு. கல்யாணசுந்தரம் கொடுத்த மகஜரில் கண்டுள்ள குற்றச்சாட்டு வருமாறு :—

" தி.மு. கழகமும் தனியார் அறக்கட்டளைகளும், கட்சியின் முன்னேற்றம் என்று சொல்லிக்கொண்டு முதல் அமைச்சரும் அவரது கூட்டாளிகளும், தனியார் அறக்கட்டளைகளை உருவாக்கி, அந்த அறக்கட்டளைகளின் பெயரில் சொத்துகளை வாங்கினர்.

அத்தகைய அறக்கட்டளை ஒன்று சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. அது, ஏறத்தாழ 100 மனைகள் கொண்ட மதிப்பு மிகுந்த சொத்து ஒன்றினை ரூ. 20 இலட்சத்திற்கு வாங்கியது.

அத்தகைய மற்றோர் அறக்கட்டளை மதுரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மதுரையில் உடுப்பி உணவு-உறையுள் இல்லம் (Udipi Boarding and Lodging House) என்று அழைக்கப்படும் விலை மதிப்பு மிக்க கட்டிடம் ஒன்றைப் போடி ஜமீன் தாரினியிடமிருந்து ரூ. 5 இலட்சம் தஸ்தாவேஜு மதிப்பிற்கு வாங்கியது.

அறங்காவலர்களின் பெயர்கள், அறக் கட்டளையின் நோக்கம், அறங்காவலர் குழுக்களின் நிபந்தனைகளும் வரையறைகளும், கட்சியின் பயனுக்காகச் சொத்துக்களை வாங்க, அறங்காவலர் குழுக்களை உருவாக்க வேண்டிய அவசியம் ஆகியவை அனைத்தும் மர்மமாகவே உள்ளன.

தி.மு. கழகம் சரிவர கணக்கு வைப்பதில்லை என்பது அனைவரும் அறிந்ததே. எனவே, இந்த அறக்கட்டளைகளுக்கான பெருந் தொகைகள் எங்கிருந்து வருகின்றன என்பது எவருக்கும் புரியாத மர்மமாகும்.

மேற்படி அறக்கட்டளையின் பத்திரம் ஒன்றைப் பத்திரப் பதிவுத்துறையிலிருந்து பெறுவதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகள் அனைத்தும் வீணாயின. இந்த தஸ்தாவேஜின் நகல்கள் முதலமைச்சரின் பாதுகாப்பில் உள்ளன என்று அஞ்சப்படுகிறது. இது பற்றி முழு புலனுய்வு தேவைப்படுகிறது ".

இதில் கவனிக்க வேண்டிய முதல் கேள்வி, தனியார் அறக்கட்டளைகள், முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதியாலும் அவரது கூட்டாளிகளாலும் உருவாக்கப்பட்டனவா? ஆம் எனில், அத்தகைய அறக்கட்டளைகள் பெயரில் சொந்த சொத்துக்கள் வாங்குவதற்காக அந்த அறக் கட்டளைகள் உருவாக்கப்பட்டனவா?

பல்வேறு நபர்கள் தாக்கல் செய்த உறுதி மொழிப் பத்திரங்களிலிருந்தும் விசாரணைக் கமிஷன் 5A பிரிவின்கீழ் நியமித்த புலனுய்வு அலுவலர் விசாரணை செய்து தாக்கல் செய்த சாட்சியங்களில் இருந்தும் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அதாவது, திரு. கருணாநிதியாலும் தி.மு.க. அரசில் அல்லது

தி. மு. கழகத்தில் அவருடன் நெருங்கி இருந்த கூட்டாளிகளினுலும் 10-க்குக் குறையாத அறக் கட்டளைகள் உருவாக்கப்பட்டன என்பது தெளி வாகத் தெரிகிறது. அவை வருமாறு :—

(A) சென்னை தி. மு. க. அறக்கட்டளை— 14-6-1971 நாளிட்ட அறக்கட்டளைப் பத்திரத் தின்படி உருவாக்கப்பட்டது.

(B) மதுரை தி. மு. க. அறக்கட்டளை— 633/72 எண்ணுள்ள ஆவணத்தின்படி 21-9-1972 அன்று உருவாக்கப்பட்டது.

(C) நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக் கட்டளை— 5-7-1971 நாளிட்ட பத்திரத்தின் படி உருவாக்கப்பட்டது.

(D) "பேரறிஞர் அண்ணு" அறக்கட்டளை— 22-1-1976 நாளிட்ட 6-ஆம் எண் ஆவணத்தின் படி உருவாக்கப்பட்டது.

(E) மன்றம் அறக்கட்டளை— 27-4-1969 அன்று உருவாக்கப்பட்டது.

(F) இராம அரங்கண்ணல் அறக்கட்டளை— 28-5-1975 நாளிட்ட 198/76 எண்ணுள்ள ஆவணத்தின்படி உருவாக்கப்பட்டது.

(G) கலிஞர் கருணுநிதி அறக்கட்டளை— 14-7-1971 நாளிட்ட 76/71 எண்ணுள்ள ஆவணத் தின்படி உருவாக்கப்பட்டது.

(H) அண்ணு அறக்கட்டளை— 5-11-1969 நாளிட்ட 671/69 எண்ணுள்ள ஆவணத்தின் படி உருவாக்கப்பட்டது.

(I) முத்துவேலர் அறக்கட்டளை— 4-10-1971 நாளிட்ட பத்திரத்தின்படி உருவாக்கப்பட்டது.

(J) டாக்டர் வெற்றிச் செல்வி அன்பழகன் அறக்கட்டளை— 1971-ல் உருவாக்கப்பட்டது. பத்திரம் எதுவும் பதிவு செய்யப்படவில்லே.

எடுத்துக்காட்டாக, அவர் மேலே குறிப்பிட் டுள்ள அறக்கட்டளைகள் பற்றிக் குறிப்பாகக் கூறி யுள்ளார் என்ருலும், இந்த அறக்கட்டளைகளின் தன்மை, அவற்றின் நோக்கங்கள், அவை உருவாக் கப்பட்ட முறை ஆகியவை பற்றி திரு. கல்யாண சுந்தரம் குடியரசுத்தலேவருக்கு அனுப்பிய மகஜரில் பொதுபடையாக விஞக்கள் எழுப்பி உள்ளார்.

16-6-1976 நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில், திரு. கல்யாணசுந்தரம் தனது மகஜ ரில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டை விளக்கும் வகையில் பின்வரும் விஷயங்களே விரித்துக் கூறியுள்ளார்:—

(1) இந்த அறக்கட்டளைகளேத் திரு.கருணுநிதி யும் அவர் சகாக்களும் உருவாக்கியதன் நோக்கம், கறுப்புப் பணத்தை வெள்ளேப் பணமாக மாற்று வதேயாகும்.

(2) அறக்கட்டளைகள் வாங்கியுள்ள சொத்து களின் மதிப்பு வேண்டுமென்றே குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. கணக்கில் வராத பணத்தை இதில் காண்பிப்பதே இதன் நோக்கமாகும்.

(3) இந்த அறக்கட்டளைகள் வெளிப் பார்வைக்கு அறக்கட்டளைகளின் இயல்புகள் அனைத் தும் கொண்டவையாக உள்ள போதிலும், கருணு நிதியின் செல்வம், அதிகாரம் முதலியவற்றைப் பெருக்கவும் நிலேப்படுத்தவும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஏனெனில், கருணுநிதியிடம்தான் எல்லா அதிகாரங்களும் குவிந்துள்ளன. பெரும் பான்மையான அறங்காவலர்களே அவர்தான் நிய மிக்கின்ருர். அவர் ஆயுள் முழுவதும் நிர்வாக அறங்காவலராகப் பதவி வகிக்கின்ருர். இதில், நிலேயான காலி இடங்களேயும் தற்காலிக காலி இடங்களேயும் நிரப்புவதற்கு அவருக்கே அதிகாரமுண்டு.

(4) இந்த அறக்கட்டளே பொது அறக் கட்டளே என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. வரி ஏய்ப்பு செய்யவும், வரிகள் செலுத்துவதைத் தவிர்ப்பதற்கும் இல்லாத உருவாக்கப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் மதிப்பில் 21-வது குற்றச்சாட்டாக தி.மு.கவும் தனியார் அறக்கட்டளைகளும் என்ற தலேப்பில் சொல்லுக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டு பொதுவாகவும் விரிவாகவும் அமைத் துள்ளது. எனவே, வரிசைப்படி ஒவ்வோர் அறக் கட்டளையாக எடுத்து விவாதிக்கக் கருதப்பட் டுள்ளது.

(A) சென்னை தி.மு.க. அறக்கட்டளை :

14—6—1972 நாளன்று பதிவு செய்யப் பட்ட பத்திரத்தின்படி (ஆவணம் எண் 1), தமிழ் நாட்டின் முதலமைச்சராகவும் தி.மு.க. தலேவரா கவும் இருந்த திரு மு. கருணுநிதியும், கல்வி அமைச்சரும் கட்சியின் பொதுச் செயலாளருமாக இருந்த திரு. நாவ. நெடுஞ்செழியனும் தி.மு.க. அறக்கட்டளை என்ற உருவாக்கினர். கட்சியின் நிர்வாகத்தின்படி தெட்சிணுமூர்த்தி தி.மு.க. தலேவராவார். அவருக்குப் பின் ரு. 5 லட்சம் இந்த அறக்கட்டளேக்கு மாற்றப்பட்டது. அறக்கட்டளேப் பத்திரத்தின்படி, திரு. கருணுநிதி அறங்காவலர் குழுவின் தலேவராவார். ஏனேய இரண்டு அறங்காவலர்கள் திரு. நெடுஞ்செழி யனும் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும் ஆவர். பதிவு செய்யப்பட்ட 18—10—1972 நாளிட்ட துணேப் பத்திரத்தின்படி (ஆவணம் எண் 2) திரு. கருணுநிதியும் திரு. நெடுஞ்செழியனும் அறங்கா வலர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் பெயர் நீக்கப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின்படி (ஆவணம் எண் 1) அறக்கட்டளையின் நோக்கங்கள் வருமாறு :—

1. ஏழைகளின் முன்னேற்றத்திற்கான நல்வாழ்வுத் திட்டங்களே நிறைவேற்றுதல்.

110-G—13—9

2. அறிவியல், இலக்கியம் ஆகிய எல்லா துறைகளிலும் கல்வி முன்னேற்றத்திற்காகப்படிப்பு உதவித் தொகைகளை வழங்க அறக்கட்டளை உருவாக்குதல்.

3. மாணவர்களுக்கும் அறிஞர்களுக்கும் பயன் ஏற்படும்வகையில் படிப்பு உதவித் தொகை, நன்கொடைகள், உதவித் தொகைகள், ஏனைய ஊக்கத் தொகைகள் ஆகியவற்றை அளித்தல். குறிப்பாக, தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி கற்க வகை செய்யும் நிட்டங்களை ஊக்குவித்தல்.

4. அனுதை இல்லங்களை நிறுவி, செவ்விய முறையில் நடத்துதல்.

5. படிப்பறிவில்லாத, வேலையற்றோருக்கு தொழில் இல்லங்களை ஏற்படுத்தி, அவற்றை நல்ல முறையில் நடத்தி அவர்களுக்குக் கலைகள், விட்டுத் தொழில்கள், கைத்திறத்தொழில்கள் ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்தல்.

6. மருத்துவ மனைகள், மருந்தகங்கள், பள்ளிகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை நிறுவுதல், நல்ல முறையில் நடத்துதல்.

7. மேற்சொன்ன நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எவற்றையேனும் எய்த இடைநிகழ்வான, பொருத்தமான, வசதியான செயல்கள் அனைத்தையும் செய்தல்.

மேற்சொன்னவை அனைத்தும் பொது அறக் கட்டளையின் நோக்கங்கள் ஆகும். எனவே, இந்த அறக்கட்டளை மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளபடி தனியார் அறக்கட்டளை ஆகாது. அறக்கட்டளை என்ற போர்வையில் திருவாளர்கள் கருணாநிதியோ நெடுஞ்செழியனோ சொந்த முறையில் சொத்துகளை ஈட்டியதற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த அறக்கட்டளை பொது அறக்கட்டளை என்ற பெயரில் வருமான வரியிலிருந்து விலக்கு பெறுவதற்காக, வருமான வரிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, மகஜரில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டின் முதல் பாரா வில் உட்கிடையாகச் சொல்லப்பட்டுள்ளது மெய்ப் பிக்கப்படவில்லை என நான் கருதுகிறேன்.

உறுப்பினர் கட்டணங்கள், பொதுக்கூட்டங்கள், மாவட்ட, மாநில மாநாடுகள் ஆகியவற்றில் வசூலிக்கப்பட்ட நன்கொடைகள் ஆகிய வைகளிலிருந்து கட்சிக்கு நிதி திடைக்கிறது என்று 1974 ஜூன் முதல் 1977 மே வரை தி.மு.க. பொருளாளராக இருந்த திரு. அன்பழகன் (சாட்சி எண் 1) தமது சாட்சியத்தில் சொல்லியுள்ளார். அச்சிட்ட டிக்கட்டுகள் மூலமாகவும் நன்கொடைகள் வசூலிக்கப்பட்டன.

கட்சி நிதிகளுக்குக் கணக்குகள் வைக்கப்பட்டுள்ளன. இவை தணிக்கை செய்யப்படுகின்றன. கட்சியின் நிதிகள் இராயபுரத்திலுள்ள இந்திய வங்கியின் கிளையில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளன. கணக்குப் புத்தகங்களும் டிக்கெட் புத்தகங்களின் அடிக் கட்டைகளும் வருமான வரித்துறையினரால் கைப் பற்றப்பட்டு, 'இப்பொழுது அவர்கள் பொறுப்பில் உள்ளன. கட்சியின் கணக்குகளும் அறக் கட்டளையின் கணக்குகளும் ஒரே பட்டயக் கணக் கரால் (திரு. ஜெகதீசன் அவர்களால்) தணிக்கை செய்யப்படுகின்றன.

வருமான வரி விவரக் கணக்குகள் ஆண்டு தோறும் வருமான வரித்துறையிடம் தாக்கல் செய் யப்படுகின்றன. அறக்கட்டளை சார்பாக 1973–74 ஆம் வரிவிதிப்பு ஆண்டிற்குத் தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி விவரக்கணக்கின்படி தி. மு. க. தலைமை அலுவலகத்திலிருந்து ரூ. 6,50,000 அறக்கட்டளைக்கு வரப்பெற்றது. கட்சியின் பல்வேறு பிரிவுகளிலிருந்து ரூ. 9,756 வரப்பெற்றது. கட்டிட நிதி டிக்கெட்டுகள் விற்பனையிலிருந்து ரூ 6,600 கிடைத்தது. இந்த ஆண்டில் மொத்தம் கிடைத்த தொகை 10,66,336 ரூபாய் ஆகும்.

அறக்கட்டளை குறித்த 1974-75 வரிவிதிப்பு ஆண்டிற்கான வருமான வரி விவரக்கணக்கின்படி, கட்சியின் பல்வேறு மாவட்டப் பிரிவுகளிலிருந்து ரூ. 7,95,420·40 நன்கொடையாகக் கிடைத்தது. 1975-76 வரி விதிப்பு ஆண்டிற்கான வருமான வரி விவரக்கணக்கின்படி, பல்வேறு மாவட்டங் களிலிருந்து நன்கொடை வகையில் ரூ. 40,967·55 கிடைத்தது. இவ்வாறாக, வரி விதிப்பு ஆண்டுகள் மூன்றுக்கும் சேர்த்து பல்வேறு மாவட் டங்களிலிருந்து நன்கொடை வகையில் ரூ. 12,52,723·95 கிடைத்தது. தி.மு.க. தலைமை அலுவலக நிதியிலிருந்து ரூ. 6,50,000 அறக்கட்டளைக்குக் கிடைத்தது. ஆக மொத்தம் ரூ. 19,02,723·95 கிடைத்தது.

ஆனால், சென்னை இராயபுரத்திலுள்ள இந்திய வங்கியின் கிளையிலிருந்து அனுப்பப்பட்ட கணக்கு விவர அறிக்கையின்படி 31—3—1975 வரை ரூ. 20,34,735·05 வைப்பீடு செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. இவ்வாறாக, அறக்கட்டளையின் வருமான வரி விவரக் கணக்கில் காண்பிக்கப் பட்டுள்ள தொகைக்கு மேலாக ரூ. 1,32,011·55 அதிகமாக உள்ளது. இவ்வளவு பெரிய உபரித் தொகை எவ்வாறு வந்தது என்பது விளக்கப்பட வில்லை. ஆனால், இது வருமானவரி அதிகாரிகளின் பொறுப்பாகும்.

விசாரணைக் கமிஷன் நியமித்த புலனுய்வு அதிகாரி சேகரித்த சாட்சியத்திலிருந்து, மேற்படி அறக்கட்டளையின் ஆதரவின் கீழ் அண்ணா அறிவாலயம் கட்டிட நிதிக்காகத் தொகை வசூலிப் பதற்கென பல்வேறு மாவட்டக் கட்சிச் செயலாளர்கள் மூலம் ஒரு ரூபாய் டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. இவ்வகையில்

8,13,000 ரூபாய் வசூலிக்கப்பட்டது. ஆனால் இக் கட்டிட நிதிக்காக வசூலிக்கப்பட்ட தொகைகள் குறித்து கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் அல்லது மாவட்டக் குழுக்கள் கணக்குகள் எதையும் வைத்துவரவில்லை.

ஊராட்சித் தலைவர்கள், இந்த டிக்கெட்டுகளை ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் பணிபுரியும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களிடம் சும்மதினர் என்பதற்குச் சாட்சியம் உள்ளது. ஆசிரியர்கள், தம் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் பணிபுரியும் குறைந்த சம்பளம் வாங்கும் அரசுப்பணியாளர்கள் ஆகியோரிடமிருந்து இக் கட்டிட நிதிக்காக நன்கொடை என்ற வகையில் குறிப்பிட்ட தொகைகளை அவர்களுடைய சம்பளத்திலிருந்து ஊராட்சித் தலைவர்கள் எதேச்சாதிகார மாகப் பிடித்துக் கொண்டனர். இதற்குப் பணிய மறுத்த ஆசிரியர்கள் அலமானத்திற்குள்ளானார்கள், தொல்லைக்குள்ளானார்கள், மாற்றல் செய்யப்பட்டார்கள்.

அண்ணு அறிவாலயம் கட்டிட நிதிக்காக நன்கொடைகள் வசூலிப்பதில் ஆசிரியர்கள் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டனர் என்று 3,4, 5, 6, 7, 8 ஆகிய சாட்சிகள் (5-ஆ பிரிவின்கீழ் விசாரிக்கப்பட்டவர்கள்) சொன்னார்கள். 1973-74 ஆம் ஆண்டு வரிவிதிப்பு ஆண்டில் டிக்கெட்டுகள் விற்பனை மூலம் ரூ. 6,500 வசூலிக்கப்பட்டது, அறக்கட்டளை, 1974-75, 1975-76 ஆகிய வரி விதிப்பு ஆண்டுகளுக்குத் தாக்கல் செய்த வருமானவரி விவரக்கணக்கில் தி.மு.க. நிதியிலிருந்து அறக்கட்டளைக்கு மாற்றப்பட்ட அடிப்படைத் தொகையான, ரூ. 6,50,000 கூட லிவரக்கணக்கில், கட்டிட நிதி என்ற தாண்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறுக, இந்த நன்கொடையை வசூலிப்பவர்கள் கணக்குகளைச் சரிவர வைத்து வரவில்லை, ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் பணிபுரிந்த ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அவர்களிடமிருந்து நிர்ப்பந்தமாக வசூல்கள் செய்யப்பட்டன என்று சந்தேகிக்க காரணம் உள்ளது. இதேமாதிரியான நன்கொடைகள் இதேமாதிரியான முறையில் மற்றோர் அறக்கட்டளைக்கும் வசூலிக்கப்பட்டது என்பது தெரியவரும்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சங்க திருவண்ணாமலை கிளையின் செயலாளராகிய திரு. கண்ணன் 5A பிரிவின்கீழ் 8வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். 24—5—1975 அன்று அவர் மட்டும் ஏனைய 15 ஆசிரியர்களை அழைத்துக்கொண்டு அமைச்சர் ப.உ. சண்முகத்தை அணுகியதாகவும் இக் கட்டிட நிதிக்காக ஆசிரியர்கள் சம்பளத்திலிருந்து எப்படி எதேச்சாதிகாரமாகத் தொகைகள் பிடித்துக் கொள்ளப்படுகின்றன என்பதை அவரிடம் கூறியதாகவும் அவர் சொன்னார். அவர்கள் சொன்னதைப் பொறுமையாகக் கேட்டதற்குப் பதிலாக, அவரை பணியிலிருந்து தற்காலிகமாக நீக்குமாறும் அமைச்சர் இல்லத்தின் முன்பாக தி.மு.க. கொடியை வலுக்கட்டாயமாகப் பறக்கவிட முயன்றார் என்று பொய்ப்புகார் ஒன்றைக் காவல் நிலையத்தில் தாக்கல் செய்யுமாறும் இரு. ப.உ. சண்முகம் ஊராட்சி ஆணையாளருக்குக் கட்டளை இட்டார். கண்ணன் அவ்வாறு 24 நாட்களுக்குப் பணியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டு, அதன்பின்னர் திருவண்ணாமலையிலிருந்து 23 கிலோமீட்டர் தொலைவிலுள்ள இடத்திற்குத் தண்டனை நடவடிக்கையாக மாற்றப்பட்டார்.

ரூ. 1,32,000 மிகையாக உள்ளதற்கு ஆதாரம் காட்டுமாறு கேட்டதற்கு விளக்கமேதுமில்லை. அன்றியும், மாவட்டப் பிரிவுகளிலிருந்து நன்கொடை வசூல் பற்றிய சாட்சியமும் ஒன்றுக் கொன்று முரணுக அமைந்துள்ளது. மாவட்டச் செயலாளர்களில் பலர், அதாவது 15 முதல் 27 வரையிலுள்ள சாட்சிகள் நன்கொடை வசூலித்து அறக்கட்டளைக்குக் கொடுத்தை மறுத்துள்ளனர்.

சென்னை அண்ணாசாலை 85-வது கதவிலக்கம் கொண்ட சொத்தினை வாங்கியது பற்றி :

இக் குற்றச் சாட்டின் 2-வது பாராவில் உட்பிரிவாகச் சொல்லப்பட்டது என்னவென்றால், 20 லட்சம் பெறுமானமுள்ள சொத்து இந்த அறக்கட்டளைக்காக மிகவும் குறைத்து மதிப்பிடப்பட்டு வாங்கப்பட்டுள்ளது. இச் சொத்து சென்னை அண்ணாசாலையின் 85-வது எண் கதவிலக்கம் கொண்டதாகும். கட்டிடமும் அதை அடுத்து நிலமும், 3 காணி 11 மனை 862 சதுர அடி கொண்டதாகும். இச் சொத்து, இந்த அறக்கட்டளையைச் P. சுப்பரத்தினம், அவருடைய குடும்பத்தினர் ஆகிய வர்களிடமிருந்து 1972ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ந் தேதியிட்ட பத்திரத்தின்மூலம் பதிவு செய்யப்பட்டு 9 இலட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்டது.

இது குறித்து உறுதிமொழிப்பத்திரம் வாயிலாக சாட்சியம் அளித்த முக்கியமான சாட்சி பி. சுப்பரத்தினம் ஆவார். (சாட்சி எண். 9) இவர் இச் சொத்தின் முன்னாள் சொந்தக்காரர் களில் ஒருவர். இச் சொத்தின் விற்றவரும் இவரே. அவருடைய உறுதிமொழிப் பத்திரத்தின்படி கட்டிடத்திலிருந்தும் பெட்ரோல் பங்கிலிருந்தும் ரூபாய் 19,200 வாடகையாக அவருக்குக் கிடைத்து வந்தது. இந்த வாடகைத் தொகை மாதாந்தரத் தொகையா அல்லது ஆண்டுத் தொகையா என்பதை அவர் சொல்லவில்லை. வாடகைக்காவ பத்திரம் எதுவும் அவர் கொடுக்கவில்லை. வாடகைக்கு இருந்தவர்கள் கொடுத்த வாடகை பற்றிய விவரங்களையும் அவர் கொடுக்கவில்லை. ஆனால், இவர் பொருவாகச் சொன்ன வாக்குமூலத்திலிருந்து, இது ஆண்டு வாடகையாகும் என்று தெரிகிறது. வாடகைப் பத்திரங்களைக் கொண்டு வந்து காண்பித்திருந்தால், அது சிறந்த சாட்சியமாக அமைந்திருக்கும். ஆனால், அவ்வாறு செய்யப்படவில்லை. அவரது சாட்சியத்தில் உள்ள முதல் குறைபாடு இதுதான்.

110-G—13—9A

தாம் இந்தச் சொத்தினை ரூ. 16, இலட்சத்திற்குக் கூட விற்கத் தயாராக இல்லை என்றும், ஆனால், தி.மு.க. ஆட்கள் 9 இலட்சம் ரூபாய்க்கு விற்கும்படித் தம்மைக் கட்டாயப்படுத்தியதாகவும் அவர் சொன்னார். இச் சொத்து குறித்து பேரம் பேசுவதற்காக, திரு. கருணாநிதி தம்மைக் கூப்பிட்டு அனுப்பியதாக அவர் தமது உறுதிமொழிப் பத்திரத்தில் கூறியுள்ளார். மேற்படி சாட்சி இச் சொத்தின் மற்ற பங்குதாரர்களின் சம்மதத்துடனும் அதிகாரத்துடனும் திரு. கருணாநிதியை அரசு விருந்தினர் மாளிகையில் சந்தித்தார். திருவாளர்கள் நெடுஞ்செழியனும் சாதிக்பாட்சாவும் அங்கிருந்தனர். அந்தச் சொத்தினை விற்கத் தயாரா என்று திரு. கருணாநிதி சாட்சியைக் கேட்டார். சாட்சி ஆம் என்று பதில் சொன்னார். அச் சொத்துக்கு திரு. கருணாநிதி ரூ.7 இலட்சம் வீலை கொடுப்பதாகச் சொன்னார். அத் தொகையை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தினார். சாட்சியின் மதிப்புப்படி அந்தச் சொத்தின் மதிப்பு ரூ. 18 இலட்சமாகும். அங்காடி மதிப்பு, மனை ஒன்றிற்கு ரூ. 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரை ஆகும். சாட்சி அந்தச் சொத்திற்கு 12 இலட்சம் வீலை கேட்டார். அந்தச் சொத்தின் மீது ஏகப்பட்ட ஆக்ரமிப்புகள் இருப்பதைத் திரு. கருணாநிதி நினைவூட்டினார். மேலும் தி. மு. க. அதை வாங்குவதில் அக்கறை கொண்டிருப்பதால் வேறு யாரும் அதனை வாங்க முன்வரமாட்டார்கள் என்றும் அவர் கூறினார். தி. மு. க. ஆட்சியிலிருப்பதை அவர் நினைவூட்டினார். அரசாங்க இயந்திரத்தைப் பயன்படுத்தி ஆக்ரமிப்பாளர்களை வெளியேற்ற அவர்களால் முடியுமென்றும், அச் சொத்தினை விற்க அவர்கள் மறுத்தால் அரசு அதனை எளிதில் கையகப்படுத்த முடியும் என்றும், அவ்வாறு கையகப்படுத்தப்பட்டால், மிகக் குறைந்த இழப்பீட்டுத் தொகையே கிடைப்பதுமன்றி, அத் தொகையும் தாமதமாகவே கிடைக்குமென்றும் அவர் கூறினார். அவர்கள் அந்தச் சொத்து குறித்து ரூ. 50 ஆயிரம் நகர்புற நிலவரி பாக்கி செலுத்த வேண்டுமென்பதை அவர்களுக்குத் திரு. கருணாநிதி நினைவூட்டினர். முதலமைச்சரின் கோபத்திற்கும் அவரது கட்சிக்காரர்களின் கோபத்திற்கும் பயந்து, தானும் தனது பங்குதாரர்களும் அச் சொத்தினை 9 இலட்சம் ரூபாய்க்கு விற்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்று சாட்சி மேலும் கூறினர்.

இந்தச் சொத்து அண்ணாசாலையில் அமைந்திருப்பதால், சந்தேகமின்றி மதிப்பு மிக்க சொத்தாகும். ஆனால், இதன் நிலவரமதிப்பைப்பாதித்தும் வகையில் பல்வகைக் கூறுகள் உள்ளன. முதலாவதாக, பலர் இச் சொத்தின் மீது ஆக்ரமிப்பு செய்து கொண்டிருந்தனர்என சாட்சியே ஒப்புக்கொண்டார் இரண்டாவதாக, இந்தச் சொத்து அதில் வாடகைக்கு இருப்பவர்கள் வசம் இருந்தது. வாடகைக்கு இருப்பவர்களே வெளியேற்ற முடியாதென்று சட்டம் இருப்பதால், உடனடியாக இக் கட்டிடத்தை வாங்கியவர்களிடம் அவர்களால் கொடுக்கமுடியாவிலீலை. நிலவர மதிப்பைப் பாதித்த மூன்றாவது விஷய மென்னவென்றால், விற்பவர்கள் 60,123 ரூபாய் வரி பாக்கிசெலுத்தவேண்டி இருந்தது. இவையெல்லாம் சேர்ந்து சொத்தின் நிலவர மதிப்பைக் குறைத்திருக்க வேண்டும், எனவே, தனது சொத்து 16 இலட்சம் முதல் 18 இலட்சம் வரை மதிப்புடையதாகும் என்றும் அதனை நிர்ப்பந்தத்தின்மேல் ரூ. 9 இலட்சத்திற்கு விற்பனை செய்யத் தாம் ஒப்புக் கொண்டதாகவும் சாட்சி சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்வது ஆபத்தானது. அவரே 12 இலட்சம் ரூபாய் வீலை கேட்டார். இறுதியில் 9 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புக் கொண்டார்.

இச் சூழ்நிலைகளில், இந்த மதிப்புமிக்க சொத்தினை மிகக் குறைந்த வீலையில் விற்கும்படியாகச் சாட்சி நிர்ப்பந்திக்கப்பட்டார் என்று சொல்ல முடியாது.

இச் சொத்தினை வாங்கியபின்னர் அதற்குத் தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச் சட்டத்தின் 29(k) பிரிவினின்று முந்தைய ஒரு நாளிலிருந்தே விலக்கு அளிக்கப்பட்டது. அதனால், அந்தச் சொத்தினை விற்றவர்கள் செலுத்த வேண்டிய ரூ. 60,123 பாக்கியைச் செலுத்தும் பொறுப்பிலிருந்து அறக்கட்டளைக்கு விலக்களிக்கப்பட்டதென்பதைத் திரு. வானமாமலை நமது கவனத்திற்குக் கொண்டுவந்தார். வழக்குரைஞரின் கருத்துப்படி இது அதிகாரத்தைத் தவருகப்பயன்படுத்தியதாகும். அடுத்து வரும் ஒருநாளிலிருந்து வரிவிலக்கு அளிப்பதைப் பொறுத்தவரையில், அது அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தியதாக நான் கருதவில்லை. ஏனெனில், அச் சொத்து பொது அறக்கட்டளையின் சொத்தாகி விட்டது. ஆனால், சென்ற ஒருகாலத்திலிருந்தே விலக்கு அளித்தது நிச்சயமாக அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தியதாகும்.

அறக்கட்டளை நிதியின் வருமானம் அல்லது அதன் பகுதி அறக்கட்டளையின் பத்திரத்தில் விளக்கப்பட்டுள்ள அறக் காரியங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதென்று காண்பிக்கச் சாட்சியம் எதுவுமில்லை. அறக்கட்டளையின் நிதி முழுவதையும் செலவிட வேண்டியிருக்கும் வகையில், 9 இலட்சம் ரூபாய் செலவில் சொத்து வாங்கியது. மேலே (1) முதல் (6) வரை உள்ள நோக்கங்கள் நிறைவேற்றுவதற்கு அவசியமானவையா, இடைநிகழ்வானவையா, பொருத்தமானவையா என்பது ஐயத்திற்குரியதாகும். ஏனெனில், இச் சொத்தினை வாங்கிய பிறகு மேலே (1) முதல் (6) வரை உள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்குச் செலவிட நிதியில் தொகை எதுவுமில்லை. மேலும், அறக்கட்டளையின் நோக்கங்களை எய்துவதற்கென்று இக் கட்டிடம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது அல்லது பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் எதுவுமில்லை.

திரு. எம். கல்யாணசுந்தரம் அனுப்பிய மகஜரில் கண்டுள்ள குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் திரு. மு. கருணாநிதி இந்நியா

பிரதம மந்திரிக்கு அனுப்பிய அச்சிட்ட பதிலில் அவர் கூறியதாவது :—

'' கட்சியின் சொத்துகளையும் நிதிகளையும் பத்திரமாகப் பாதுகாப்பதற்காக வழக்கமான நடைமுறையில் உருவாக்கப்பட்டுள்ள அறக் கட்டளைகளின் நோக்கங்களில் எந்தவித மர்மமும் இல்லை.

(வலியுறுத்திக் காட்டுவதற்காக கோடிட்டுக் காட்டியுள்ளேன்.)

'' கட்சியின் சொத்துக்களையும், நிதிகளையும் பத்திரமாகப் பாதுகாப்பதற்காக '' என்னும் முக்கியமான சொற்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

கட்சியின் நிதிகளைப் பத்திரமாகப் பாதுகாப்பதற்கும் கட்சியின் நலனைக் கட்டிக் காப்பதற்கும் இந்த அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது என்று திரு. கருணநிதி ஏறத்தாழ ஒப்புக் கொண்டுள்ளார். பின்னர் விசாரணைக் கமிஷன் முன்பு தாக்கல் செய்யப்பட்ட எதிர் மனுவில் திரு. கருணாநிதி தமது இந்த வாதத்தை மாற்றிக் கொண்டு தாம் ஏற் கெனவே அனுப்பின அச்சிட்டப்பதிலில்கொடுத்துள்ள காரணத்தை மாற்றி அதற்கு முரணாக இந்த அறக் கட்டளை பொது அறக்காரியங்களுக்காக மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறினார். தொகையில் பெரும் பகுதி இயக்காச் சொத்துக்களை வாங்குவதற்குச் செலவிடப்பட்டுள்ளது. எந்த நோக்கங்களுக்காக இந்த அறக்கட்டளை உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காக அறக்கட்டளையின் நிதி இதுவரையில் பயன்படுத்தப்படவில்லை என்னும் ஐயத்திற்கு இடமளிக்கின்றது. அறக் கட்டளைகளின் நோக்கங்கள் என்று சொல்லப்படுபவை உண்மையான நோக்கங்கள் இல்லையோ என்ற ஐயம் எழுகின்றது. இக் கட்டிடம் வருங்காலத்தில் என்ன நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படவிருக்கின்றது; இந்த அறக் கட்டளைகளின் நிதிகள் எந்த நோக்கத்திற்காக வருங்காலத்தில் பயன்படுத்தப் படப்போகின்றன என்பது, இந்த அறக்கட்டளையின் உண்மையான நிலையை இனிமேல்தான் காண்பிக்க முடியும்.

இவ்வாறாக, 21-வது குற்றச்சாட்டின் (A) இனம் ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது. இந்த அறக்கட்டளைக்காக நன்கொடைகள் வசூல் செய்வதில் சில இடங்களில் கட்டாய முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் பள்ளிகளின் நிர்வாகப் பொறுப்பு வகித்த ஊராட்சித் தலைவர்கள் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சிலரது ஊதியங்களிலிருந்து எதேச்சாதிகாரமாகத் தொகை பிடித்துக் கொண்டார்கள் என்பதையும் தவிர வேறு எதுவும் இதில் நிரூபிக்கப்படவில்லை.

2. குற்றச்சாட்டு எண். 21 (B)—
மதுரை மாவட்ட தி.மு.க. அறக்கட்டளை.

மதுரை மாவட்ட தி.மு.க. மாநாடு 1972 ஆகஸ்டு 4, 5, 6 ஆம் நாட்களில் நடைபெற்றது. அப்போது திரு. எஸ். முத்து மதுரை மாவட்ட தி.மு.க. செயலாளராக இருந்தார். மதுரையின் முன்னாள் மேயரும் அவரே. அம் மாநாட்டின் செலவுகளுக்காகவும் மதுரையில் கட்சிக்காகக் கட்டிடம் ஒன்று வாங்குவதற்காகவும் அவர் நன்கொடைகள் வசூலித்தார். மாநாட்டின் செலவு முழுவதும் சரிக்கட்டப்பட்ட பிறகு, நன்கொடையில் ரூ. 6 இலட்சம் முதல் 7 இலட்சம்வரை எஞ்சியிருந்தது. இத் தொகையில் திரு. முத்து 3 இலட்சம் ரூபாய் தி.மு.க.வுக்குக் கொடுத்தார். எஞ்சிய தொகையை மதுரை வங்கியில் மதுரை மாவட்ட 5-வது தி.மு.க. மாநாடு என்ற பெயரில் தனிப்பட்ட கணக்கு ஒன்றைத் தொடங்கி அதில் போட்டு வைத்தார்.

அதன்பின்னர், திரு. முத்து, நிலம்—கட்டிடத் தரகர்களாகிய எஸ். எம். அப்துல் காதர், திருஞானசாமித் தேவர் ஆகியோருடைய உதவியுடன் கட்டிடம் ஒன்றை வாங்கப் பேரம் பேசினார். இந்த இடத்தில் 1959 ஆம் ஆண்டிலிருந்து உடுப்பி ஹோட்டல் ஒன்று இருந்து வந்தது. மதுரை மேற்கு மாசித் தெரு 159-வது எண் கதவிலக்கத்தில் அமைந்த இக் கட்டிடம் போடி ஜமீன் தாரிணி குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்குச் சொந்தமானது. அக் கட்டிடத்தின் விலை ரூ. 4 இலட்சம் என்று இறுதியாகப் பேசி முடிவு செய்யப்பட்டது. 4—8—1972 அன்று முத்து ரூ.50,000 முன்தொகையாக காசோலை மூலம் அக் கட்டிடத்தின் பங்குதாரர்களில் ஒருவருக்குக் கொடுத்தார்.

மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை என்ற பெயரில் திரு. மு. கருணாநிதியால் 21—9—1972 நாளிட்ட பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின்மூலம் உருவாக்கப்பட்ட அறக் கட்டளை, ரூ. 101 மூலதனத்துடன் தொடங்கப் பட்டது. திரு. கருணாநிதி வழக்கம்போல் இதற்கு நிர்வாக அறங்காவலராக இருந்தார். திரு. நெடுஞ் செழியனும் திரு. எஸ். முத்துவும் ஏனைய அறங் காவலர்கள் ஆவர்.

அறக்கட்டளையின் நோக்கங்கள் வருமாறு :—

1. கல்வி நிறுவனங்களை நிறுவிப் பராமரித்தல்.

2. மாணவர்களுக்கும் கல்வி பயிலும் ஏனையோருக்கும் பயன்தரும் வகையில் படிப்பு உதவித் தொகைகளையும் நன்கொடைகளையும் ஏனைய ஊக்கத் தொகைகளையும் கொடுத்தல்.

3, அனுதை இல்லங்களை ஏற்படுத்தி நடத்துதல்.

4. மருத்துவமனைகளையும் மருந்தகங்களையும் ஏற்படுத்தி நடத்துதல்.

5. ஏழைகள், முடவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், புத்தி சுவாதீனமற்றவர்கள் ஆகியோரின்

பராமரிப்புக்காக இல்லங்களை நிறுவி, அவற்றை நல்லமுறையில் நடத்துதல்.

6. இயல், இசை, நாடகம் ஏனைய கலைகளின் கலைகள் ஆகியவை முன்னேற்றமடையச் செய்ய உதவி செய்தல்.

7. கைத்திறத் தொழில்களுக்கு ஊக்க மளித்து அவற்றின் மேம்பாட்டிற்கு வகை செய்தல்.

8. இந்த அறக்கட்டளையின் நோக்கங்களை ஒத்த நோக்கங்கள் கொண்ட ஏனைய பொது அறக்கட்டளைகளுக்கு நிதி உதவி செய்தல்.

வெளிப்படையாகப் பார்த்தால், இவை எல்லாம் பொது அறக்கட்டளையின் நோக்கங்களேயாகும். எனவே, முதல் குற்றச்சாட்டு நிருபிக்கப் படவில்லை.

ஆகவே, இரண்டாவது குற்றச்சாட்டை எடுத்துக் கொள்வோம். போடி ஜமீன்தாரிணி யிடமிருந்து மதுரை நகரிலுள்ள வில்லை மதிப் புள்ள கட்டிடம் ஒன்று குறைந்த விலையில் வாங்கப்பட்டுள்ளது என்பதே இந்த குற்றச் சாட்டாகும்.

நிர்வாக அறங்காவலராகிய திரு. மு. கருணாநிதி அவர்களின் கட்டளைப்படி, திரு. எஸ். முத்து, மதுரையில் உடுப்பி ஹோட்டல் 1939 ஆம் ஆண்டி லிருந்து இயங்கி வந்த கட்டிடத்தை வில்லை பேசினர் என்பது சாட்சியத்திலுள்ளது. இத்தக் கட்டிடம் போடி ஜமீன்தாரிணி குடும்பத்தைச் சேர்ந்த மூவரின் கூட்டுச் சொத்தாகும். இக் குடும்பத் தினர் இதனை விற்க திரு. ஜீ. சுந்தரராஜ அய்யங்கார் என்பவருக்கு அதிகாரமளித்தனர். இக் கட்டிடத்தின் விலை இறுதியாக 4-8-1972 அன்று 4 இலட்சம் ரூபாய் என்று முடிவு செய்யப்பட்டது. சுந்தரராஜ அய்யங்காருக்கு ரூ. 50,000 தொகைக்கு திரு. முத்து காசோலை கொடுத்தார். 2 இலட்சம் ரூபாய்க்கு இந்திய வங்கியில் உறுதிக் காசோலை கொடுக்கப்பட்டது. ரூ. 1,30,000 தொகைக்கு மற்றொரு உறுதிக் காசோலை மதுரை வங்கியின் பெயரில் கொடுக்கப் பட்டது. இதைத் தவிர, விற்பனைப் பத்திரம் 28-9-1972 அன்று பதிவு செய்யப்பட்டபோது உதவிப் பதிவாளர் முன்னிலையில் சுந்தரராஜ அய்யங்காரிடம் ரூ. 20,000-மும் ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட நகல் ஒன்று (எண். 5413/72) ஆவணத்தில் உள்ளது. (ஆய்வு அறிக்கையின் பட்டியலில் 3 ஆவது ஆவணம்.)

இக் கட்டிடத்திற்காகக் கொடுக்கப்பட்ட வில்லை, அது கொடுக்கப்பட்ட முறை ஆகியவற்றில் சாட்சியங்களிடையே வேறுபாடு உள்ளது என்பது 1, 2, 3 ஆகிய சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்து தெரிய வரும்.

1வது சாட்சியாகிய கே.எஸ். கிருஷ்ணன், தரகர்களில் ஒருவர். முத்து ரூ. 2 இலட்சம் ரொக்க மாகவும் மதுரை வங்கியின் பெயரில் ரூ. 50,000 காசோலை ஆகவும் முன்பணமாகக் கொடுத்தார் என்றும் எஞ்சிய தொகையை, விற்பனைப் பத்திரத் தைப் பதிவு செய்கையில் கொடுப்பதாக வாக்கு அளித்ததாகவும் கொன்னார். தேவரின் கூற்றுப்படி கட்டிடத்தின் விலை 6 இலட்சம்; விற்பனைப் பத்திரத்தில் காட்டியுள்ளபடி 4 இலட்சம் அல்ல; ஆயினும், 1வது சாட்சியாகிய முத்துவே, கட்டிடம் 4 இலட்சம் ரூபாய்க்கு மட்டுமே வாங்கப்பட்டது என்றும் இதில் ரூ. 50,000 முன்பணமாகக் கொடுக் கப்பட்டதென்றும் எஞ்சிய தொகை பத்திரம் பதிவு செய்யப்படுகையில் உதவிப் பதிவாளர் முன்னிலை யில் கொடுக்கப்பட்டதென்றும் கூறினர்.

5-A பிரிவின்கீழ் ஜீ. சுந்தரராஜ அய்யங்கார் புலனுய்வு அதிகாரியினுல் விசாரிக்கப்பட்டார். திரு. கருணாநிதி, திரு. முத்து ஆகியோரிடமிருந்து கட்டிடத்தின் விலையைப் பெற்றுக் கொண்டவர் இவரே. அவர்கள் இருவரும் பத்திரம் பதிவு செய்யப் படுகையில் உதவிப் பதிவாளர் முன்னிலையில் இருந்தனர். சுந்தரராஜ அய்யங்கார் 14-7-1977 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்தார். புலனுய்வு அதிகாரியின் முன்பு அவர் தாம் முன்னர் சொன்னதையே வலியுறுத்திச் சொன்னார். திரு. முத்து விடமிருந்து 4 இலட்சம் ரூபாய்க்கு மேல் எந்தத் தொகையும் பெறப்பட்டதாக திரு. சுந்தரராஜ அய்யங்கார் சொல்லவில்லை; மேலும், தானே கட்டிடத்தின் ஏனைய சொந்தக்காரர்களோ குறைவான விலைக்குக் கட்டிடத்தை விற்கும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் சொல்லவில்லை. கட்டிடத்தின் சொந்தக்காரர்களாகிய திருமதி முத்துமினுட்சி, வீர சமலமாள், மீனுட்சி நாகையசாமி ஆகியோரும் தாங்கள் தாக்கல் செய்துள்ள உறுதிமொழிப்பத்திரங்களில் இந்தச் சொத்தை விற்பதற்காக தாங்கள் கட்டாயப் படுத்தப்பட்டதாகவோ நிர்ப்பந்தப்படுத்தப்பட்ட தாகவோ கூறவில்லை. உண்மையில் சொல்லப் போனுல், இக் கட்டிடம் திரு. ஜெயத்தேவர் என்பவரின் அனுமோகத்திலிருந்து வந்தது. அவர் அங்கு ஹோட்டல் ஒன்றை நடத்தி வந்தார். எனவே, அக் கட்டிடத்தை வாங்கியவர்கள் உடனடியாக அக் கட்டிடத்தை எடுத்துக் கொள்ள முடியவில்லை.

மதுரை தெற்கு வட்டத் தாசில்தார் திரு. என். எஸ். சுப்பிரமணியம், அந்தக் கட்டிடம் பத்திரப் பதிவுக்காக குறைத்து மதிப்பிடப்பட்டது என்று கூறியுள்ளார். ஆனுல், 1967 ஆம் ஆண்டு முத்திரைத்தாள்கள் சட்டத்தின் 47A பிரிவின்கீழ் ஆணையை நிறுத்திப் பதிவாளர் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது என்று மாவட்டப் பதிவாளர் திரு. ஏ. ஏ. ராஜன் விளக்கம் கொடுத்துள்ளார்.

உரிய பதிவுக் கட்டணத்தைக் கொடுக்காமல் ஏய்ப்பதற்காக இரண்டு தரப்பினரும் கட்டிடத்தி தின் விலையைக் குறைத்து மதிப்பிட்டனர் என்று மகஜரில் கண்டுள்ள குற்றச்சாட்டில் உள் நோக்கம் கற்பிக்கப்படவில்லே.

இது எப்படியிருப்பினும், அதே கட்டிடம் ஜெயந்த் ராவிற்கு 1975ஆம் ஆண்டில் அறக் கட்டளையினுல் ரூ. 7,50,000க்கு விற்கப்பட்டது. (புலனுய்வு அறிக்கையின் I-வது இணேப்பில் 11 ஆம் எண் ஆவணத்தைக் காண்க.) அக் கட்டிடம் போடி ஜமீன்தாரினி குடும்பத் திடமிருந்து வாங்கப்பட்டபோது அதனே அவர் தன் அனுபோகத்தில் வைத்திருந்தார். அவர் தன்னுடைய வியாபாரத்தைக் காப்பாற்றும் பொருட்டும் அக் கட்டிடத்திலிருந்து வெளியேற்றப் படுவதைத் தவிர்க்கும் பொருட்டும், இந்த விலையைக் கொடுத்தார்.

அறக்கட்டளேப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள எந்த நோக்கத்திற்காகவும் எத் தொகையும் அறங் காவலர்களால் செலவுசெய்யப்பட்டதற்கு ஆதாரம் ஏதுமில்லே. 1975ஆம் ஆண்டு இக் கட்டிடம் மீண்டும் விற்பனே செய்யப்பட்டபோது வங்கிக்கணக்கு இராயபுரத்தில் உள்ள இந்திய வங்கியின் கிளேக்கு மாற்றப்பட்டது. கட்டிடத்தின் கிரயத் தொகையும் அந்தக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. அறக்கட்டளே யின் நடவடிக்கைக் குறிப்புகள் அல்லது வேறு யாதொரு ஆவணமும் கொடுக்கப்படவில்லே. கணக்குகள் சரிவர வைத்துவரப்படவில்லே.

ரூ. 9 இலட்சம் வரும் செய்யப்பட்டதாகவும். அதில் ரூ. 3 இலட்சம் கட்சியின் தலேமை அலு வலகத்திற்குக் கொடுக்கப்பட்டதாகவும், எஞ்சிய ரூ. 4.45 இலட்சம் உடுப்பி ஹோட்டல் கட் டிடத்தை வாங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட தாகவும் திரு. கருணநிதி 14-12-1972 நாளிட்டு பிரதம மந்திரிக்கு அனுப்பிய தனது அச்சிட்ட பதிலில் குறிப்பிட்டுள்ளார். என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். இந்த வருவாய் எந்த ஆதா ரத்திலிருந்து பெறப்பட்டது என்பதற்குக் கணக்கு இல்லே. அறக்கட்டளேயில் விவரிக்கப்பட்டுள்ள அறக் காரியங்களுக்காக செலவு எதுவும் செய்யப்பட வில்லே என்பது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது. அறக்கட்டளேயில் விவரிக்கப்பட்டுள்ள நோக்கங் களுக்காக அது உருவாக்கப்படவில்லே என்ற ஐயத்தை இது எழுப்புகின்றது.

ஆனுல், தி.மு.க. வின் செலவுகளுக்காக நிதி யிலிருந்து பணம் எடுக்கப்பட்டது என்பதற்கோ அறக்கட்டளேயில் குறிப்பிட்டுள்ள நோக்கங்கள் அல்லாத வேறு காரணங்களுக்காகப் பணம் எடுக்கப் பட்டது என்றோ நிரூபிக்கச் சாட்சியம் எதுவு மில்லே. கட்டிடம் வாங்குவதற்காக அறக்கட்டளே யின் நிதி முழுவதையும் செலவு செய்தது அறக் கட்டளேயின் நோக்கங்களே எய்துவதற்காகச் செய் யப்பட்ட செலவாகுமா என்பது பெரிய கேள்விக் குறியாகும். ஆனுல், இத்தகைய கேள்வி களுக்குப் பதில் காண்பது வரிவிதிப்பு அதிகாரி களுக்கே சார்ந்ததாகும்.

அறக்கட்டளேயின் நிபந்தனைகளின்படி அறங் காவலர்கள் கூட்டாகச் சேர்ந்தே செயல்பட வேண்டும்; கருத்துவேறுபாடு எழுந்தால், அவர் களில் பெரும்பான்மையினரது கருத்து மேலோங் கும். ஆனுல், அறங்காவலர்களில் பெரும்பா லோர் திரு. கருணநிதியினுல் நியமிக்கப்படுபவர் கள்; அறங்காவலர் பதவியில் நிலேயான காலி யிடங்களேயும் தாற்காலிகக் காலியிடங்களேயும் நிரப் பும் முழு அதிகாரம் திரு. கருணநிதிக்கே கொடுக் கப்பட்டிருந்தது. எனவே, முழு அதிகாரமும் திரு. கருணநிதியிடமே குவிந்திருந்ததாகச் சொல்லலாம். இது, சென்னே நி.மு.க. அறக்கட்டளேயின் நிலேயைப் போன்றது தான்.

அறக்கட்டளே நிதிக்கு எங்கிருந்து பணம் வந்தது என்பதை விளக்கும் வகையில் சரியான கணக்குகள் இல்லே. எனவே, ஐயப்பாடான ஆதா ரங்களிலிருந்து ஐயப்பாடான வகையில் வருவிக்கப் பட்டு கணக்கில் வைக்கப்படாத தொகை இந்த நிதியில் கொண்டு வரப்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் எழுகிறது. ஆனுல், இதுவெறும் அனுமானம்தான். நிச்சயமான ஆதாரம் கிடையாது.

குற்றச்சாட்டு எண் 21 (C)—நாவலர் நெடுஞ் செழியன் கல்வி அறக்கட்டளே.

கமிஷன் நியமனம் செய்த புலனுய்வு அதிகாரி, திரு. கருணநிதியாலும் அவர் கூட்டாளிகளாலும் உருவாக்கப்பட்ட பல்வேறு அறக்கட்டளேகள் பற்றி சாட்சியங்கள் சேகரித்தார். அத்தகைய அறக்கட்டளேகளுள் நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளே ஒன்றாகும். இது, 15–7–1971 நாளிட்ட பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் மேற் உருவாக்கப்பட்டதாகும். இதன் அறங் காவலர்கள் வருமாறு :

(1) அப்போதைய கல்வி அமைச்சராகிய திரு. நெடுஞ்செழியனும் அவருடைய இரண்டு சகோதரர்கள் திரு. ஆர். செழியனும் (முன்னுள் நாடாளுமன்ற உறுப்பினர்) வி. ஆர். இராமநாலிங் (தாராபூர் கம்பெனியின் கணக்கர்) ஆவர். இந்த அறக்கட்டளே, வட சென்னே பதிவாளர் அலுவலகத்தில் 12—7—1971 அன்று 623/71 எண்ணுள்ள ஆவணமாகப் பதிவு செய்யப்பட்டது. முதல் தொகுதி அறங்காவலர்களில் சத்தி பைல்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. என். மகாலிங்கமும், திரு ஆரூரான் சர்க்கரை ஆலேயைச் சேர்ந்த திரு. வி. எஸ். நியாகராஜ முதலியாரும் இருந்தனர்.

அறக்கட்டளே ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள படி இந்த அறக்கட்டளேயின்நோக்கங்கள் வருமாறு:

(1) தமிழ்நாட்டில் எல்லா நிலேகளிலும் கல்வியைப் பரப்புதல்.

(2) கல்வி நிறுவனங்களே நிறுவுதலும் அவற்றின் முன்னேற்றத்திற்கு உதவி நல்குதலும்.

(3) தகுதியுள்ள மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குதல், பொருக்கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றில் தகுதியுள்ள மாணவர்களுக்கு மேல்படிப்பிற்காகப் படிப்புதவித் தொகைகள் வழங்குதல்.

(4) பயனுள்ள கல்வி நூல்களை வெளியிடுதல்; கல்வி வெளியீடுனுக்கு ஊக்கமளித்தல்.

(5) தமிழ்நாட்டில் கல்வியைப் பரப்புவது தொடர்பான செயல்கள் அனைத்தையும் செய்தல்.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், இவை யெல்லாம் நல்ல நோக்கங்களே; 4-வது நோக்கம் மட்டும் வியாபார நோக்கமாக மாற்றப்பட்டதக்கதாகும்.

1 ஆவது சாட்சியாகிய வி. ஆர். இராமதாஸ் சாட்சியத்தின்படி, திரு. நெடுஞ்செழியனின் பிறந்த நாளைக் கொண்டாடுகையில் 1970 ஜூலைத் திங்களில் நடைபெற்ற விழா ஒன்றில் இத்தகைய அறக்கட்டளையை ஏற்படுத்தும் எண்ணம் உருவாகியது. மூன்று சகோதரர்களும் தொடக்க நன்கொடையாக ரூ. 1,001 கொடுத்தனர். சத்தி அறக்கட்டளையிலிருந்து ரூ. 10,000 அளித்த திரு. நா. மகாலிங்கம், 1971 ஜூலைத் திங்களில் நடந்த முதல் கூட்டத்தில் அறக்கட்டளையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1972 முதற்கொண்டு 1-வது சாட்சியாகிய திரு. வி.ஆர். இராமதாஸ்—திரு. நெடுஞ்செழியனின் இளவல்—இந்த அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலராகச் செயல்பட்டு வருகிறார்.

அச்சிட்ட வேண்டுகோள்கள், பொதுமக்களுக்கும் கட்சிக்காரர்களுக்கும் வினியோகம் செய்யப்பட்டு, நன்கொடைகள் மொத்தம் ரூ. 1,78,603 வரையில் வரப்பெற்றன. அடையாறு கிரீன்வேஸ் சாலையிலுள்ள, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியில் நடப்புக்கணக்கு ஒன்றும், குறித்த கால வைப்புக் கணக்கு ஒன்றும் தொடங்கப்பட்டன. இந்த இரு கணக்குகளிலும் திரு. மகாலிங்கம் பற்று வரவு வைத்திருந்தார். குறித்த கால வைப்பீடுகளில் இதுவரை ரூ. 21,989.54 வரையில் வட்டி கிடைத்துள்ளது.

இதன் மீது கிடைத்து வரும் வட்டித் தொகையிலிருந்து, தகுதி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதற்குக் கல்வி அறக்கட்டளை நிதிகளிலிருந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 5,000-மும், சென்னை மாநிலக் கல்லூரிக்கு ரூ. 1,000-மும் கொண்ட இரு நிதிக் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன. காலஞ்சென்ற, தலைமை நீதிபதி சுப்பாராவுக்குச் சொந்தமான அடையாறு, காந்திநகர், பிரசென்ட் பூங்காச் சாலையில் 8-ம் எண்ணுள்ள வீட்டினை வாங்குவது குறித்து, அவர் மகன் (சாட்சி எண். 4) திரு. கே. எஸ். அரேந்திராவுக்கு 1976-ஜனவரி 29-ல் முன்பணமாக ரூ. 20,000 கொடுக்கப்பட்டது. திரு. அரேந்திரா கூறுகிறபடி, இதற்காக ஒப்பந்தமாகிய விலை ரூ. 1,50,000 ஆனால் இந்த பேரம் முடிக்கப்படவில்லை. மேலே சொல்லிய இரு நிதிக்கட்டளைகளாக, மேற்படி கல்வி அறக்கட்டளையின் நிதிகள், மேற்சொன்ன கல்வி அறக்கட்டளையின் எந்தவிதமான நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படவில்லை.

திரு. வி. ஆர். நெடுஞ்செழியன், கல்வியமைச்சராகவும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் தலைவராகவும் இருந்தபோது புத்தகங்கள் வினியோகம் செய்துவந்த புத்தக விற்பனையாளர் கனீத் தூண்டியும் வலுக்கட்டாயம் செய்தும், மேற்படி கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்குமாறு கேட்டிருந்ததைப் புலப்படுத்துகிற சாட்சியம் ஒன்று கமிஷனுல் நியமிக்கப்பட்ட புலனுய்வு அதிகாரியால் சேகரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநராக இருந்த (சாட்சி எண் 5) எஸ். என். சொக்கலிங்கம் கூறுகிறபடி, திரு. நெடுஞ்செழியன், புத்தக விநியோகஸ்தர்களிடமிருந்து நன்கொடைகள் வசூலிக்குமாறும், அதனைத் தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று சத்தர்ப்பங்களில் அவ்வாறு செய்யுமாறு தமக்கு நினைவூட்டியதாகவும் கூறினர். வினியோகஸ்தரிடமிருந்து நேரடியாகச் சென்று வசூல் செய்ய சாட்சி தயங்கியபோது, விற்பனை அதிகாரியே சென்று நன்கொடைகளை வசூலித்து வருமாறு உத்தரவிடலாமென்று திரு. நெடுஞ்செழியன் அவரிடம் கூறினர். அதன்படி, வினியோகஸ்தர்களிடம் தொடர்புகொண்டு கல்வி அறக் கட்டளைக்கு வேண்டிய நன்கொடைகளைத் தரட்டுமாறு கொக்கலிங்கம் விற்பனை அதிகாரி தேவதாசனுக்கு உத்தரவிட்டார். அச்சிட்ட வேண்டுகோள்கள் வினியோகஸ்தர்கள் சிலருக்கு அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டன.

தேவதாசன் கூறுகிறபடி (5-A பிரிவின்படி 6-ம் எண் சாட்சியாக அவர் கொடுத்த வாக்கு மூலத்தையும் 26—7—1977 நாளிட்ட அவரது உறுதிமொழிப் பத்திரத்தையும் காண்க) இந்த கல்வி அறக்கட்டளைக்காக பல்வேறு வினியோகஸ்தர்களிடமிருந்து நன்கொடைகள் வசூலிக்கும் நோக்கத்திற்காகவே முக்கியமாக இவர் பரவலாகச் சுற்றுப்பயணங்கள் மேற் கொண்டார். இந்த அறக் கட்டளைக்கு நன்கொடைகள் கொடுக்குமாறு தேவதாசன் எந்த அளவுக்குத் தங்களை வலுக்கட்டாயப்படுத்தினர் என்பது பற்றி விநியோகஸ்தர்கள் பலர் சான்று பகர்ந்துள்ளனர். இந்தச் சாட்சி இவ்வாறு வசூலித்த மொத்தத் தொகை ரூ. 57,500 நன்கொடைகளில் அநேகமாக எல்லாம் காசோலைகளாகவே இருந்தன. இவற்றைச் சாட்சி தன்னிடம் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். 1975 பிப்ரவரி முடிவில் சொக்கலிங்கத்துடன் இந்த சாட்சி,

நெடுஞ்செழியன் வீட்டிற்குச் சென்று நன்கொடையாளர்கள் பெயர்களையும். அவர்கள் அளித்த தொகைகளையும், எண்பிக்கிற பட்டியல் ஒன்றை காசோலைகள் அனைத்துடனும் சேர்த்து அவரிடம் ஒப்படைத்தார். மேலும், 1974 டிசம்பருக்கும், 1975-பிப்ரவரிக்கும் இடையில் அரசாங்கப் பாட நூல் இருப்பாளர்கள் 48 பேரில் 34 பேரைச் சந்தித்து, 31 இருப்பாளர்களிடமிருந்து ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 வரை நன்கொடைகள் வசூலித்ததாகவும் தேவதாசன் சான்று கூறியுள்ளார். 1975 பிப்ரவரி 4-ல் இந்த சாட்சி தமிழ்நாட்டுப் பாடநூல்களை அச்சிடுகிற சென்னை, மெஸர்ஸ் ஏஷியன் பிரின்டர்ஸ் அச்சகத்திற்கு நேரடியாகச் சென்று, அந்த நிறுவனத்தின் பாகஸ்தராகிய திரு. ஆர். எம். சுப்பையாவிட மிருந்து, கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடையாக ரூ. 10,000-ம் கொண்ட காசோலை ஒன்றைப் பெற்றார்.

1974 நவம்பரில் அப்போது நிர்வாக இயக்குநராக இருந்த திரு. எஸ். எஸ். சொக்கலிங்கம் கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடைகள் வசூலிக்கும்படிக் கல்வி அமைச்சர் தன்னை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்ததாக அவரிடம் கூறிய தன் காரணமாக, தான் இந்த வசூல்களைச் செய்ததாக திரு. தேவதாசன் மேலும் தெரிவித்தார்.

தேவதாசனுடைய உறுதிமொழிப் பத்திரத்தில், 7-வது பாராவில் காணப்படும் இருப்பாளர்கள், அவர்களிடமிருந்து வசூலாகிய தொகைகள் ஆகியவை அடங்கிய பட்டியலைப் படித்துப் பார்த்தால், நன்கொடைகள் பெரும்பாலும் கணிசமான தொகைகளாக இருப்பது தெரியவரும். எடுத்துக் காட்டாக, மெஸர்ஸ் ஏஷியன் பிரின்டர்ஸ் ரூ. 10,000-மும், மெஸர்ஸ் கூத்தநாயனார், நாதன் பப்ளிகேஷன்ஸ், பாரி நிலையம் ஆகியவை ஒவ்வொன்றும் ரூ. 5,000-மும், பி. வி. நாதன் என்ற மற்றும் ஒருவர் ரூ. 3,000-மும் மற்றும் ஐந்து பேர் ஒவ்வொருவரும் ரூ. 2,000-மும் செலுத்தியிருக்கின்றனர். எஞ்சியவருள், அநேகமாக எல்லோரும் தலா ஆயிரம் ரூபாய் செலுத்தியிருக்கின்றனர்.

திரு. தேவதாசனது (சாட்சி எண் 6) சாட்சியம், P. சுந்தரேசன் (சாட்சி எண் 15), A. 49, ஃகதேவன் (சாட்சி எண் 9), பாலசுப்பிரமணியன் (சாட்சி எண் 10), டி. ராஜன் (சாட்சி எண் 11), வி. ஆர். ராமமூர்த்தி (சாட்சி எண் 12), என். புருஷோத்தமன் (சாட்சி எண் 14), ஆர். எம். சுப்பையா (சாட்சி எண் 16) ஆகியோரது சான்றுகளால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நபர்கள் தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றிற்கான பாட நூல்களின் விநியோகஸ்தர்கள்/இருப்பாளர்கள் ஆவர். இவர்கள் பாடநூல் நிறுவனத்தால் இவ்வாறு நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்கு எஸ். எஸ். சொக்கலிங்கம் (சாட்சி எண் 5) நிர்வாக இயக்குநராக இருந்தார். பாடநூல் நிறுவனத்தின் விற்பனை அதிகாரி திரு. தேவதாஸ் தங்களை நேரடியாக அணுகி அறக்கட்டளைக்கு நன்கொடைகள் வழங்குமாறு தங்களை வற்புறுத்தியதன் காரணமாகவே அவர்கள் நன்கொடைகள் கொடுத்தனர் என்கிற வகையில் அவர்களது சாட்சியங்களின் சாராம்சம் உள்ளது. எடுத்துக்காட்டாக, பி. ஆர். இராஜகோபால் செட்டியார் 16—7—1977 நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில் சான்று கூறியுள்ளதாவது :

"தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தின் விற்பனை அதிகாரி திரு. தேவதாஸ் நேரடியாக என்னிடம் வந்து என்னைக் கட்டாயப்படுத்தியதன் காரணமாகவே நான் ரூ. 1,000 நன்கொடை கொடுத்தேன். மேலும், அடித்து வரும் ஆண்டுகளில் மொத்த விற்பனை வியாபாரி என்கிற முறையில் வினியோக உரிமை பெறுவதில் எனக்குக் குந்தகம் ஏறபடுத்தலாம் என்கிற அச்சத்தின் காரணமாகவே நான் அவ்வாறு நன்கொடை கொடுத்தேன். ரொக்கப் புத்தகத்தின் 85 ஆம் பக்கத்தில் எனது கணக்கின்கீழ் நன்கொடைத் தொகை ரூ. 1,000-ஐக் காட்டியுள்ளேன்".

(முக்கியத்துவத்தை உணர்த்த அடிக் கோடிட்டுள்ளேன்.)

திரு. எம். வேலாயுதம் சான்று பகிர்ந்துள்ள தாவது :—(29—11—1976 நாளிட்ட அவரது உறுதி மொழிப் பத்திரத்தினைக் காண்க).

திரு. தேவதாஸ் என்னிடம் 'வேண்டுகோள் விடுத்து..... கல்வி அறக்கட்டளைக்கு ரூ. 2,000 நன்கொடை வழங்குமாறு கேட்டார். நான் ரூ. 2,000 அவருக்குக் கொடுக்க வேண்டுமென்றும், அந்தத் தொகைக்குக் குறையக்கூடாதென்றும் வற்புறுத்தினர். ரூ. 500-ஐ ஏற்றுக்கொள்ளுமாறு நான் அவரிடம் மன்றாடினேன். "இந்தத் தொகை மட்டுமே என்னால் கொடுக்க இயலும்" என்றுகூறினேன். "அப்படியாயின் என்னிடமிருந்து எந்தத் தொகையும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று அவர் கூறிவிட்டார். மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொண்டதன் பிறகு, ரூ. 1,000 ஏற்றுக் கொள்ள முன்வந்தார்..... என் வரையில் சொல்லப்போனால், அந்தக் கல்வி அறக் கட்டளைக்கு நன்கொடையாக எல்லைக் காசுக்கூட கொடுத்திருக்க மாட்டேன். செல்வாக்கு படைத்த விற்பனை அதிகாரியாக இருக்கிற திரு. தேவதாஸ் வலுக் கட்டாயப்படுத்தியதன் காரணமாகவே நான் உழைத்து ஈட்டிய பணத்திலிருந்து ரூ. 1,000 கொடுக்க வேண்டியதாயிற்று. மேலும், கணிசமான அந்த நன்கொடையை நான் கொடுத்திருக்காவிடில், பாட நூல்கள் விநியோக உரிமையைப் புதுப்பித்துக் கொண்டிருக்க முடியாது என்று நான் அஞ்சினேன்".

(முக்கியத்துவத்தை உணர்த்த அடிக்கோடிட்டுள்ளேன்.)

ரூ. 1,001 நன்கொடை கொடுக்குமாறு வற் புறுத்தப்பட்ட பி. சுந்தரேசன் இதைப்போன்ற வாக்கு மூலம் ஒன்றைக் கொடுத்துள்ளார்.

அந்தச் சமயத்தில் அரசு பாடநூல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக இருந்த எஸ். என். சொக்க லிங்கம், 5-A பிரிவின்படி 24—1—1977 நாளிட்டுக் கொடுத்த அவர் வாக்கு மூலத்திலும் 61-ம் என் தொடர் எண் உறுதி மொழிப் பத்திரத்திலும், முதற்கண் 1972 லும் அதனை அடுத்து இரண்டு மூன்று சந்தர்ப்பங்களிலும் நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைக்கு வசூல் செய்யப்படும் தொகைகள் பொது நலனை முன்னிட்டு அதாவது கல்வி முன்னேற்றத்திற்காக வசூலிக்கப்படுகிறது என்பதால் அதற்கு பாடநூல் விநியோகஸ்தர் களிடமிருந்து நன்கொடைகள் வசூலித்துக் கொடுக்குமாறு கல்வி அமைச்சர் திரு. நெடுஞ் செழியன், தன்னைக் கேட்டதாகத் தெரிவித் துள்ளார். இந்த கல்வி அறக்கட்டளைக்கு அளிக் கப்படும் நன்கொடைகள் வருமான வரியிலிருந்து விலக்கு பெறுபவை என்று விநியோகஸ்தர்களிடம் தெரிவிக்குமாறு சாட்சியிடம் அமைச்சர் கூறினர். விநியோகஸ்தர்களிடமிருந்து நேரடியாகத் தொகை வசூலிக்கச் சாட்சி தயங்கியபோது அமைச்சர், வினியோகஸ்தர்களைத் தெரிந்து வைத்துள்ள அவர்களிடம் சென்று நன்கொடை வசூலிக்கு மாறு விற்பனை அதிகாரிக்கு உத்தரவிடலாம் என்று அமைச்சர் சொன்னார். அதன்படி காசோலை மூலமாக நனகொடைகள் வசூலிக்க விற்பனை அதிகாரி தேவதாசனுக்கு (சாட்சி எண் 6) சாட்சி உத்தரவிட்டார். இந்த கல்வி அறக்கட்டளைக்காக நன்கொடைகள் வசூலிக்க முக்கியமாக தேவ தாசன் சுற்றுப்பயணம் செய்ய அனுப்பப்பட்டிருந் தார் என்றும், அந்தச் சுற்றுப் பயணத்தின் போது தேவதாசன், பாடநூல் நிறுவன வினியோகஸ்தர் களுக்கு வழங்கிய பாடநூல் இருப்பையும், விற்பனை யையும் சரிபார்க்க வேண்டுமென்று தாம் அவருக்கு உத்தரவிட்டிருந்ததாகவும், சாட்சி வெளிப்படை யாக ஒப்புக் கொண்டார். பின்னர் தேவதாசன் சுற்றுப்பயணம் சென்று, விணியோகஸ்தர்களிட மிருந்து நன்கொடையாக மொத்தத்தில் சுமார் ரூ.8000-க்குக் காசோலைகளாக வசூலித்தார். 1975 பிப்ரவரி முடிவிலோ 1976 மார்ச்சு முதல் வாரத்திலோ சாட்சி, தேவதாசனுடன் அமைச்சர் திரு.வி. ஆர். நெடுஞ்செழியனிடம் சென்று நன் கொடையாளர்கள் பட்டியலுடன் காசோலைகளையும் சேர்த்து அளித்தார்.

16-ம் எண் சாட்சியாக ஆர். எம். சுப்பையா புலவர்வு அதிகாரியால் விசாரிக்கப்பட்டார். இவ ரும் கமிஷன் முன் 15—7—1977 நாளிட்ட உறுதி மொழிப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்துள் ளார். இவர், சென்னை-14, பிட்டர்ஸ் சாலை, 14-ம் எண்ணிலுள்ள மெலர்ஸ் ஏஜீயன் பிரின்டர்ஸ் என்னும் நிறுவனத்தின் பாகஸ்தராவார். இந்த நிறுவனம் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் உயர்நிலைப் பள்ளிகளுக்காகவும், கல்லூரிகளுக்காக வும் வெளியிடும் பாட நூல்களை அச்சிடுகிறது. இந்தச் சாட்சி சான்று கூறியதாவது :—

"4—2—1975-ல் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் விற்பனை அதிகாரி திரு. தேவ தாசன் எங்கள் அச்சகத்திற்கு நேரில் வந்து .....நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளையின் பெயரில்.....கதிட்ரல் ரோடு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு எழுதிய ரூ.10,000க் கான (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) காசோலை ஒன்றை எங்களிடமிருந்து பெற்றார்.....தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரிட மிருந்து வேண்டுகோள் வந்திருந்ததாலும், நாங்கள் மேற்படி நிறுவனத்தின் அச்சிடுவோராகவும், விநி யோகஸ்தராகவும் இருப்பதாலும் இந்த நன் கொடை நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட் டளைக்குக் கொடுக்கப்பட்டது."

(வலியுறுத்திக்கூற அடிக்கோடிட்டுக் காட்டி யுள்ளேன்.)

எஸ். ஆர். எஸ். கூத்தநாயனார் (சாட்சி எண் 17) 5-A பிரிவின்படி புலனுய்வு அதிகாரியால் விசாரிக்கப்பட்டார். இவரும் 26—7—1977 நாளிட்ட உறுதி மொழிப்பத்திரமொன்றைத் தாக்கல் செய்துள்ளார். இதில், 5-A பிரிவின்படி இதற்கு முன் தெரிவித்த வாக்கு மூலம் தானுகவே கொடுக்கப்பட்டதென்றும் சரியானதென்றும் உறு திப்படுத்தியுள்ளார். இந்த சாட்சி ரூ. 5,000 நன்கொடை கொடுத்தார். நன்கொடை கொடுத் ததற்கு இந்த சாட்சி கொடுத்துள்ள காரணம், ஆர். எம். சுப்பையா தனது சாட்சியத்தில் தெரி வித்துள்ள அதே காரணமாகும்.

மேலே சொல்லியவற்றுடன், அப்போது பள்ளிக் கல்வி இயக்குநராக இருந்த மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சிட்டிபாபுவின் நேர்முக உதவியாளர், கே. என். நிராமநாதன் (சாட்சி எண் 18 உறுதி மொழிப் பத்திரம் எண் 41), என்ப வரிடமிருந்து ரூ. 1,001 நன்கொடை வசூலிப் பதற்கு உதவி செய்தார்.

கே. என். நிராமநாதன் தான் பள்ளிப் பாட நூல்கள், பொதுப் புத்தகங்கள் வெளியீடுகள் "எஸ்டார் பப்ளிகேஷன்ஸ்" என்கிற நிறுவனத்தில் ஒரே உரிமையாளர் என்று தனது உறுதிமொழிப் பத்திரத்தில் சான்று கூறியுள்ளார். தான் ஒரு தீவிர காங்கிரஸ்வாதியென்றும், 1971-ல் நடை பெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக் காகப் பாடுபட்டார் என்றும், இந்தக் காரணத்துக்காகவே, செங்கற்பட்டு மாவட்ட புத் தக விநியோக உரிமை தி.மு.க. வால் ரத்து செய்யப்பட்டது என்றும் தனது உறுதிமொழிப் பத்திரத்தில் சான்று பகர்ந்துள்ளார்.

மேலும் அவர் சான்று கூறியதாவது:—

"1974 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. சிட்டிபாபுவின் நேர்முக உதவியாளர் என்னிடம் வந்து, 'நாவலர்

நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைக்கு' நான் நன்கொடை அளித்தால் எனக்குச் சில நன்மைகள் கிடைக்கலாம் என்று கருத்து தெரிவித்தார் ..... அந்த ஆண்டிலும்கூட என்னிடம் பொதுப் புத்தகங்கள் வாங்கப்படவில்லையாதலால், நான் 'நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைக்கு' நன்கொடை வழங்கினேன், என்னுடைய புத்தகங்கள் வாங்கப்படும் என்று வெளியீட்டாளர்கள் சிலர் எனக்கு ஆலோசனை கூறினர். அதன் பேரில் அறக் கட்டளைக்கு அதன் சார்பில், பாங்க் ஆஃப் மதுரைக்கு 28—2—1975 தாளிட்டு, 743090-ம் எண்ணுடைய காசோலை எழுதி ரூ. 1,001 நன்கொடை வழங்கினேன். 1975 மார்ச் மாதத்தில் நன்கொடை அளித்த பிறகு, ரூ. 10,000 பெறுமானமுள்ள பொதுப் புத்தகங்கள் வழங்குவதற்குப் பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து ஆணைகள் வரப்பெற்றேன். இந்த நன்கொடையை நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைக்குக் கொடுத்திருக்கவிடில், பொதுப் புத்தகங்கள் வழங்குவதற்கான ஆணைகள் என்னிடம் பள்ளிக் கல்வி இயக்குநர் கொடுத்திருந்திருக்கமாட்டார்.''

திரு. ஏ. சுப்பையா (சாட்சி எண் 19) 21-ம் எண்ணுடைய தனது உறுதி மொழிப் பத்திரத்தில், நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளையின் பெயருக்குச் சென்னை சௌத் இந்தியா பாங்குக்கு 20—9—1971 நாளிட்ட காசோலை எழுதி அதன் மூலமாக ''தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்'' என்கிற தனது நிறுவனத்தின் சார்பாக ரூ. 2,500 நன்கொடை அளித்ததாகத் தெரிவித்தார். இவர் மேலும் கூறியதாவது: ''கல்வித் துறையிடமிருந்து இந்த வேண்டுகோள் வந்திருக்கவிடில், நாங்கள் நன்கொடை கொடுத்திருக்கமாட்டோம்.''

நன்கொடைகள் அல்லது அன்பளிப்புத் தொகைகள் வசூலிக்க அரசுப் பணியாளர்களின் பணியைப் பயன்படுத்துவது எப்போதுமே தவறானது. இது ஊழலில் வளர்த்து, பணம் கறப்பதற்கான வழிமுறைகளைக் கற்றுக் கொடுக்கிற நன்மை வாய்ந்தது. ஆனால், அரசு வரி வருவாய்ப் பகுதியாக இராமல், தனியாருக்குச் சொந்தமான ஒரு நிதியைத் திரட்டுவதற்காக, ஓர் அமைச்சர் அல்லது உயர் அதிகாரி தன்னுடைய சார்நிலை அதிகாரியைப் பயன்படுத்தும் போதும், நன்கொடை வசூலிக்கும் அதிகாரிகளுக்கும் தொகை கொடுக்கின்றவர்களுக்கும் இடையே பணம் சம்பந்தமான அல்லது தனிப்பட்ட உறவு முறை இருப்பதை முன்னிட்டு, முதலவர், இரண்டாமவர் மீது வேண்டாத செல்வாக்கை அல்லது ''ஆதிக்கத்தைச்'' செலுத்தும் நிலை இருக்கும் போதும், வசூல் நடைமுறை, அகப்பட்ட வரையில் தொகை சுருட்டும் நிலைக்குச் சீர்குலையும். இங்கு குறிப்பிட்ட பாட நூல் விநியோகஸ்தர்கள்/இருப்பாளர்கள், அவர்களை விட உயர்ந்த அதிகார நிலையில் இருப்பவர்கள் இவர்களை மன்றுடிக் கேட்ட தன் காரணமாகவன்றி மற்றப்படி தாங்களாகவே நன்கொடைகள் கொடுத்திருக்க மாட்டார்கள். விற்பனை அதிகாரி, அவருடைய நிர்வாக இயக்குநரின் அதிகாரத்தையும் அமைச்சரின் பக்க பலத்தையும் கொண்டு, விநியோகஸ்தர்களின் / இருப்பாளர்களின் மீது ஆதிக்கம் கொள்ளமுடிந்தது. வசூல் செய்யும் அதிகாரிகளிடம், அமைச்சர் உட்பட மேலிடத் தாரிடம் அனுகூலம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை அல்லது அனுகூலம் கிடைக்காமல்போய் விடுமோ என்ற அச்சம் காரணமாக, அவர்கள் இந்த நன்கொடைகளைச் செலுத்தினர். இத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலையில், அதிகாரத் தகுதியைத் தவருன வகையில் பயன்படுத்தி நன்கொடைகள் வாங்கப்பட்டுள்ளன என்றும், விநியோகஸ்தர்கள் இருப்பாளர்கள் மீது வேண்டியிராத அளவுக்கு ஆதிக்கமும், சுகமான நிர்ப்பந்தமும் செலுத்தப்பட்டுள்ளது என்றும் கருதுவது நியாயமற்றதாயிராது.

நன்கொடைகள் கொடுப்பதன் பேரில் கல்லூரியில் சேர அனுமதி:— இந்த இனம் சம்பந்தப்பட்ட மிக முக்கியமான சாட்சி, திரு. ஆர். செல்லையா அவர் (சாட்சி எண் 20) (உறுதி மொழிப் பத்திரம் எண் 46). இந்த சாட்சி 5A பிரிவின்படி, புலனுய்வு அதிகாரியால் விசாரிக்கப்பட்டார். இவரும் 13— 7— 1977 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளார். தான் முன்பே கொடுத்துள்ள வாக்கு மூலத்தை இதில் இவர் மீண்டும் உறுதிசெய்கிறார். அவருடைய நிலை அவருடைய சொற்களிலேயே மீண்டும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

'' .....1974 ஏப்ரலில், நான் திரு.காந்தி மதியை எழும்பூர் ரயிலடியில் தற்செயலாகச் சந்தித்தபோது, பொன்னையா முதலியார் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். அப்போது, நான் எனது மகன் லயோலா கல்லூரியில் கல்லூரிப் புகுமுக வகுப்பு படிப்பதாகவும், அவன் தேர்ச்சி பெற இருப்பதாகவும் அவரிடம் கூறினேன். எனவே, புதுக் கல்லூரியில் பி.காம., பட்டப் படிப்புக்கான இடம் வாங்கிக் கொடுக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டேன். தேர்வு முடிவுகளுக்குப் பிறகு 1974 ஜூலில் தனக்கு நினைவுபடுத்துமாறு என்னிடம் கூறினர். 1974 ஜூலில், எனது மகன் இரண்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்றான். நான் அவரது வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்து, புதுக்கல்லூரிக்கு எனது மகன் கொடுத்திருந்த விண்ணப்பம் பற்றிய தகவல்களையும் கொடுத்தேன். அதற்காக, அவர், 'நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக் கட்டளைக்காக' நன்கொடையாக ரூ. 1,000 என்னிடம் கேட்டார். நான் அவ்வளவு தொகை கொடுக்க இயலாது என்று தெரிவித்தேன். ஆனால் அவர், குறைந்தது ரூ. 500

கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். பிறகு நான், ரூ. 500-க்கு ஆயிரம்விளக்கு கானரா வங்கியிடமிருந்து உறுதிக் காசோலை வாங்கி அன்று மாலையே அவரிடம் கொடுத்தேன்.''

'' புதுக் கல்லூரியில் எனது மகனுடைய பி.காம். பட்டப்படிப்புக்கான கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டது. பி.காம். படிப்புக்கு எனது மகனின் அனுமதி விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது பற்றி திரு. பொன்னையாவிடம் தெரிவித்தேன். மாற்று ஏற்பாடாக, அதே கல்லூரியில் பி.எஸ்சி. (ரசாயனம்) பட்ட வகுப்புக்கு அனுமதி வேண்டி முயன்று பார்க்கலாம் என்று நான் ஆலோசனை கூறினேன். அதன் பேரில் அவர், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் திரு. ஷாபீர் உசேனிடம் என்னை அழைத்துச் சென்றார். அவர் அங்கு தன்னை 'நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைச் செயலாளர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, எனது மகனது விண்ணப்பம் பற்றி கல்லூரி முதல்வருக்குச் சிபாரிசு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி, திரு. ஷாபீர் உசேன் புதுக்கல்லூரி முதல்வரிடம் தொலைபேசியில் பேசினார். எனது மகனுக்கு புதுக்கல்லூரியில் பி.எஸ்சி. (ரசாயனம்) பட்ட வகுப்புக்கு இடம் கிடைத்தது. நான் புதுக்கல்லூரியில் அவனைச் சேர்த்தேன்.''

நன்கொடை கொடுக்க வேண்டும் என்கிற நிபந்தனையின்பேரில் அழைப்பினை ஏற்றுக் கொள்ளுதல்—

'' மகளிர்க்கான G.V.G. விசாலாட்சி கல்லூரி என்கிற மகளிர் கல்லூரி ஒன்று உள்ளது. இக் கல்லூரி, கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை, அமரஜீவ ஸ்ரீ வெங்கடேசா பேப்பர் மில்ஸ்'' என்னும் நிறுவனத்தால் நடத்தப்படுகிறது.

மேற்சொன்ன காதி அலுவலின் சென்னைக் கிளை அலுவலக மேலாளர் I. V. இராஜகோபால் (சாட்சி எண் 22) (உறுதிமொழிப் பத்திரம் எண் 27), திரு. வி. ஆர். நெடுஞ்செழியனைச் சந்தித்து, கல்லூரி நாள் விழாவில் அவரும் அவரது மனைவியும் கலந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுமாறு தன்னுடைய நிர்வாக இயக்குநர் 1971 ஜூலில், தன்னிடம் கூறினார் என்று சான்று கூறியுள்ளார். இதன்படி, சாட்சி, அப்போது கல்வி அமைச்சராக இருந்த திரு. நெடுஞ் செழியனைச் சந்தித்து இந்த வேண்டுகோள் அவரிடம் தெரிவித்தார். இது சம்பந்தமாக இவர் 2–3 சந்தர்ப்பங்களில் அமைச்சரைச் சந்தித்தார். கடைசிச் சந்தர்ப்பத்தில் கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் இவர் சந்தித்ததன் பேரில், அவர் '' நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை'' என்கிற ஒன்றைத் நான் நடத்திவருவதாகவும், சாட்சி அவருடைய நிர்வாக இயக்குநரிடமிருந்து ரூ. 10,000 நன்கொடையாக வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றும், அப்போதுதான் விழாவில் கலந்து கொள்வது பற்றி தன்னுல் ஆலோசிக்கக் கூடுமென்றும் சாட்சியிடம் கூறினர். சாட்சி இத் தகவலை நிர்வாக இயக்குநர் திரு. கெங்குசாமி நாயுடுவிடம் தெரிவித்த போது, அவர், முதலில் நன்கொடை அளிக்கத் தயக்கம் காட்டி, ஆனல், முடிவில் ஒப்புக்கொண்டு, மேற்சொன்ன அறக்கட்டளை பெயருக்கு, சென்னை, தங்கசாலை, இந்தியன் பாங்க் கிளைக்கு ரூ. 5,000-க்குக் காசோலை எழுதி நன்கொடை அளித்தார். சாட்சி, 17–7–1971 நாளிட்ட காசோலையை அமைச்சரிடம் கொடுத்தார். அமைச்சர், காசோலையைப் பெற்றுக் கொண்டதன் பிறகு, அவர் ஆலோசனை கூறியபடி கல்லூரி நாள் விழா 1971 ஆகஸ்டு 19-ம் நாள் நடைபெற வேண்டும் என்று கூறி அந்த விழாவில் தன் மனைவியுடன் தான் கலந்து கொள்வதாக வாக்குறுதி அளித்தார். இதனைத் தொடர்ந்து அமைச்சரும் அவரது மனைவியும் மேற்சொன்ன தேதியில் விழாவில் கலந்து கொண்டனர்.

''குவை பப்ளிகேஷன்ஸ்'', ''வைரம் பதிப்பகம்'' ஆகியவற்றைச் சேர்ந்த சாட்சி எண் 23, எஸ். வடிவேலு, மேற்சொன்ன அறக்கட்டளைக்காக, முன்னுள் கல்வி அமைச்சர் திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் தங்களிடமிருந்து எவ்வாறு நன்கொடை வசூலித்தார் என்பது குறித்து சாட்சியம் கொடுத்துள்ளார். இந்த சர்ச்சி திரு. வி. ஆர். நெடுஞ்செழியனுக்கு நேரடியாகவே நன்கு அறிமுகமானவர். இவர், பள்ளிக் கல்வி இயக்குநரையும், அப்போது கல்வி அமைச்சராக இருந்த திரு. வி.ஆர் நெடுஞ்செழியனையும் 1971 மே மாதத்தில் சந்தித்து, பள்ளிகளில் பாடப் புத்தகங்களை வைப்பதற்காக தங்கள் வெளியீடுகளின் மாதிரிப் பிரதிகளை '' குவை வெளியீட்டாரின்'' சார்பில் அமைச்சரிடம் கொடுத்தார். தங்கள் வெளியீடுகளில் மேலும் பலவற்றைப் பாடப் புத்தகங்களாக தீர்மானிக்குமாறு அமைச்சரை இந்தச் சாட்சி கேட்டுக் கொண்டார். அமைச்சர் இவரது வேண்டுகோளை பரிசீலித்துப் பார்ப்பதாக உறுதி அளித்தார்.

1971 ஜூலையில், பள்ளிக் கல்வி இயக்குநரின் நேர்முக உதவியாளர், நூலகர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்குமாறு சாட்சியைக் கேட்டார். இந்த வேண்டுகோளுக்கிணங்கு, சாட்சி, 20–7–1971-ல் அப்போது கல்வி அமைச்சராக இருந்த திரு. நெடுஞ்செழியனை, அவர் வீட்டில் சந்தித்து, இரண்டு காசோலைகள் கொடுத்தார். அவற்றில் ஒன்று சென்னை, கொத்தவால் சாவடி கிளை இந்தியன் பாங்குக்கு குவை பப்ளிகேஷன்ஸ் சார்பில் ரூ. 1,001-க்காக 20—7—1971 நாளிட்டு எழுதிய C.F. 834461-ம் எண் காசோலை; மற்றொன்று, நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடையாக, அதே இந்தியன் பாங்குக்கு ரூ. 1,001-க்காக 20-7-1971 நாளிட்டு எழுதப்பட்ட 69AA-297909 எண் காசோலை ஆகும். இந்த இரு காசோலைகளையும் கொடுத்த சமயத்தில், புத்தகங்கள் கிடைக்காத காரணத்தால் இதற்கு முந்தைய வெளியீடுகள் ரத்து செய்யப்பட்டிருந்த மாவட்டங்களில் தனது

புத்தகங்களே மீண்டும் நிர்ணயிக்குமாறு அமைச்சரை சாட்சி கேட்டுக்கொண்டார். இந்த வேண்டுகோள் அமைச்சரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விருப்பப்பட்டபடி, பாடப்புத்தகங்கள் மீண்டும் நிர்ணயிக்கப்பட்டன.

T. இலட்சுமணன் என்கிற (சாட்சி எண் 24-A—உறுதிமொழிப் பத்திரம் எண் 22) மற்றொரு சாட்சியும் உள்ளார். இவர், கல்வி அமைச்சர் திரு. வி. ஆர். நெடுஞ்செழியனே 1971 மே மாதத்தில் அவருடைய வீட்டில் சந்தித்து, தான் வெளியிடுகிற பாடப் புத்தகங்கள் தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளுக்கு நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று சிபாரிசு செய்யுமாறு கேட்டுக் கொண்டார் என்பதாகச் சான்று கூறியுள்ளார். அமைச்சர் இந்த வேண்டுகோளைப் பரிசிலிப்பதாக உறுதிதந்து அவ்வாறே சிபாரிசும் செய்தார். இதனைத் தொடர்ந்து அவர் வெளியிட்ட இயற்கை அறிவும் தோட்டக்கலையும் என்னும் பாடப் புத்தகம் சில பள்ளிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தாகவும், VI-ம் படிவத்துக்கான அறிவியல் பாடப் புத்தகங்கள் சில பள்ளிகளில் நிர்ணயிக் கப்பட்டுள்ளதாகவும், பள்ளிக் கல்வி இயக்குநர் சிட்டிபாபுவிடமிருந்து சாட்சிக்கு 13-6-1971-ல் செய்தி கிடைத்தது. அதன் பிறகு சாட்சி (லட்சுமணன்) அமைச்சரைச் சந்தித்து அவருக்கு நன்றி தெரிவித்தார். அப்போது அமைச்சர், கழகத்திற்கு நன்கொடை கேட்டார். சாட்சி அதற்கிணங்க ரொக்கமாக ரூ. 2,500 கொடுத்தார். இந்த நன்கொடை கொடுத்துள்ளது குறித்து தன் ரொக்கப் புத்தகத்தின் 15-ம் எண் பக்கத்தில் 16-7-1971 நாளிட்டுள்ள தனது கணக்குகளில் சாட்சி காட்டியுள்ளார். இத் தொகை வரப் பெற்றதற்கான ரசீதும் பின்னர் அவருக்கு கொடுக்கப்பட்டது.

ஏனையோரிடமிருந்து செய்த வசூல்கள்.—

மேற்சொன்ன நிதி ஆதாரங்களைத் தவிர்த்து, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி, சென்னை ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிடமிருந்து மொத்தத் தொகையாக முறையே ரூ. 5,000, ரூ. 1,000, ரூ. 1,662 நன்கொடைகள் வசூலிக்கப்பட்டன.

முன்னாள் எம்.எல்.ஏ. திரு. ஏ.வி.பி. ஆசைத் தம்பி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம், சென்னை ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கம் இவற்றுடன் தொடர்பு கொண்டிருந்தார். திரு. எம். சண்முகம், தி.மு.க. எம்.எல்.ஏ., தமிழ்நாடு மாநில நிலவள வங்கியின் தலைவராக இருந்தார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் செய்த வசூல்கள்.— 1973 ஜூலையிலிருந்து தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு அப்போது கணக்கு அலுவலராக இருந்த சாட்சி எண். 25 (உறுதி மொழிப் பத்திரம் எண். 35], திரு. சீ. விசுவநாதன் பிறவற்றுக்கிடையே கீழ்க்கண்ட வாறு சான்று கூறியுள்ளார், அவரது உறுதி மொழிப் பத்திரத்தின், 9-வது பாராவைக் காண்க.

....'எங்கள் தலைவர் திரு. ஆசைத்தம்பி,, டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைக்கு, சுற்றுலா வளர்ச்சிக் கழக நிதிகளிலிருந்து அவரது பிறந்த நாளின்போது நன்கொடையாக ரூ. 5,000 கொடுக்கலாம் என்று வாய்மொழியாக எங்களது நிர்வாக இயக்கு நரிடம் கருத்து தெரிவித்தார். இதன்படி குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு நிர்வாக இயக்குநரால் ஏற்பளிக்கப்பட்டது. 10—7—1974 நாளிட்ட 704-ம் எண் நடவடிக்கைகளில் தொகை கொடுக்க எனக்கு அதிகாரமளிக்கப்பட்டது. இத் தொகை, சென்னை, ஆயிரம் விளக்குக் கிளை இந்தியன் பாங்குக்கு 71/AE/248072-ம் எண்ணிட்ட காசோலை மூலம் கொடுக்கப்பட்டது. இந்தக் காசோலை, முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியனிடம் 11-7-74 அன்று தலைவரால் நேரிலேயே கொடுக்கப்பட்டது; வாரியம், 24-7-1974-ல் மாமல்லபுரத்தில் நடை பெற்ற அதன் கூட்டத்தில் இந்த நனகொடைக்கு ஒப்புதல் அளித்தது''.

எஸ். ஏ. பத்மநாபன், சாட்சி எண் 26, தனது 38-ம் எண் உறுதிமொழிப் பத்திரத்தில், தமிழ் நாடு மாநில நிலவள வங்கிக்கு அப்போது தலைவராக இருந்த திரு. முத்துவேலன், அப்போது கல்வி அமைச்சராக இருந்த திரு. வி. ஆர். நெடுஞ் செழியனுடைய பிறந்த நாள் விழாவின்போது சுற்றுலா வளர்ச்சிக் கழக நிதியிலிருந்து ரூ. 1,000 நன்கொடை வழங்கலாமென்று கருத்து தெரிவித்ததாக பிரமாணம் செய்து தகவல் கொடுத் துள்ளார். அதன்படி, 10-7-1974 நாளிட்ட AI/579690-ம் எண் காசோலை எழுதப்பட்டு, அமைச்சர் திரு. நெடுஞ்செழியனிடம் அவரால் நேரில் கொடுக்கப்பட்டது.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி கேட்டுக் கொண்டதன் பேரில், 11-7-1972-ல் நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைக்குச் சென்னை ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் சங்கத்தின் சார்பில் ரூ. 101 நன்கொடை கொடுக்கப்பட்டதென்றும், மேற்படி சங்கம் 11—7—1974-ல் நிறைவேற்றிய தீர்மானத்தினபோட்டி, மேலும் ரூ. 1,000 நன் கொடை கொடுக்கப்பட்டதெனறும் எஸ். பத்ம நாபன் சாட்சி எண் 27 சான்று கூறியுள்ளார். கல்வி அறக்கட்டளையின் பெயரில் அதே நாளில் காசோலை எழுதப்பட்டது. இந்த கல்வி அறக் கட்டளைக்கு 11-7-1975 நாளிட்டு ரூ 560-க்கான காசோலை எழுதி மேலும் நன்கொடை அளிக்கப் பட்டதாகவும் இவர் கூறுகிறார். 11-7-75-ல் மேலும் பல நன்கொடைகள் வரப்பெற்றதாகவும் இவர் கூறுகிறார்.

இந்த நன்கொடைகள் யாவும், அப்போது கல்வி அமைச்சராக இருந்த திரு. வி. ஆர். நெடுஞ்

செழியனது பிறந்த நாள் விழாவின்போது கொடுக்கப்பட்டன.

மேலே சொல்லிய விவாதத்தின் அடிப்படையில் நான் பின்வரும் கருத்து கொண்டுள்ளேன்;—

(a) இந்த அறக்கட்டளை, தனியார் அறக்கட்டளை அல்ல, வெளிப்படையாகவே அது ஒரு பொதுக்கட்டளை அதன் அறங்காவலர்கள் சொந்த அல்லது தனிப்பட்ட சொத்துக்களைச் சேர்க்க அதனைப் பயன்படுத்தவில்லை;

(b) அறக்கட்டளை நிதிகளின் ஒரு பகுதி அதன் காரியங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளது;

(c) இந்த அறக்கட்டளைக்கு நிதிகள் வழங்குமாறு, தமிழ்நாட்டு பாட நூல் விஸியோகஸ்தர்கள்/இருப்பாளர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி நிர்ப்பந்தப்படுத்தி அவர்களைத் தூண்டுவதற்கு, திரு நெடுஞ்செழியன், கல்வி அமைச்சர் என்கிற முறையிலும், தமிழ்நாட்டு பாட நூல் நிறுவனத் தலைவர் என்ற முறையிலும், பணியாளர்களையும் அவரது பதவியையும் தவருகப் பயன்படுத்தியுள்ளார்;

(d) ஒரு மாணவருக்குக் கல்லூரியில் இடம் வாங்கிக் கொடுத்ததற்குக் கைம்மாறாக, அம் மாணவரின் பெற்றோரிடமிருந்து, அறக்கட்டளைக்கு நன்கொடை வசூலிக்கப்பட்டது.

(e) ஸ்ரீவெங்கடேசா காதித ஆலை நிறுவனம் நடத்திவரும் மகளிர் கல்லூரிக்கான கல்லூரி நாள் விழாவில் கலந்து கொள்வதற்கான அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்பிருந்தபோதாக, அறக்கட்டளைக்கு ரூ. 5,000 நன்கொடை அளிக்குமாறு அப்போது கல்வி அமைச்சராக இருந்த திரு. நெடுஞ்செழியன் அந்த ஆலையைத் தகாதமுறையில் தூண்டி நிர்ப்பந்தப்படுத்தினார்-இந்த நடத்தை, அப்போது அவர் வகித்து வந்த உயர்ந்த அரசுப் பதவியின் கண்ணியத்துக்கு உகந்ததாயில்லை;

(f) அப்போது கல்வி அமைச்சராக இருந்த திரு. நெடுஞ்செழியனின் வலுக்கட்டாயத்தின் பேரில், தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தில்-அப்போது நிர்வாக இயக்குநராக இருந்த திரு. எஸ். என். சொக்கலிங்கம், இந்தப் அறக்கட்டளைக்காக பாடநூல் விஸியோகஸ்தர்களிடமிருந்து/இருப்பாளர்களிடமிருந்து முதற் கண் நன்கொடை வசூலிக்கவும், அவர்கள் வைத்துவரும் இருப்புகள், விற்பனைக் கணக்குகளைச் சரிபார்க்கவும், மாவட்டங்களில் விற்பனை அதிகாரி திரு. தேவதாசனைச் சுற்றுப்பயணம் செய்ய வைத்ததும், அதன்காரணமாகப் பாடநூல் நிறுவனம் (அரசு), பயணப்படி, நாட்படி வகையில், தவிர்க்கமுடிய சுற்றுப்பயணங்களுக்கான அவசிய மற்ற செலவுகளை ஏற்கவேண்டியிருந்தது.

அப்போது தமிழ்நாடு அமைச்சராக இருந்த திரு. ப. உ. சண்முகத்தின் 52-வது பிறந்த நாள் விழாவைக் கொண்டாட 25—9—1975-ல் திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற விழாவில், திருவண்ணாமலை வளர்ச்சிக் கோட்டத்தில் உள்ள ஒன்பது ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களின் சார்பில், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் திரு. டி. வேணுகோபால், ரூ. 52,001-க்கான உறுதிக் காசோலை ஒன்றை வெள்ளிப் பேழையில் வைத்து திரு. சண்முகத்திற்கு அளித்தார். அதற்கடுத்த நாள், அதாவது, 26—9—1975 அன்று திரு. ப. உ. சண்முகத்தின் விண்ணப்பத்தின் பேரில், திருவண்ணாமலை கூட்டுறவு அர்பன் பாங்கில் 'அறிஞர் அண்ணா அறக்கட்டளை' பெயரில், எப். டி. 923-ம் எண் குறித்த கால வைப்புக் கணக்கும், 5486-ம் எண் சேமிப்பு வங்கிக் கணக்கும் தொடங்கிவைக்கப்பட்டன. மாதம் தோறும் வட்டி கொடுக்கும் வகையில் ஆண்டொன்றுக்கு 11 சதவீத வட்டியுடன் 61 மாதகால அளவுக்கு குறித்தகாலவைப்புக் கணக்கில் இந்த உறுதிக் காசோலை போட்டு வைக்கப்பட்டது. திரு. சண்முகம், சேமிப்புவங்கிக் கணக்கில் தொடக்கத்தில் ரூ. 10 போட்டு வைத்து, குறித்த கால வைப்புக் கணக்கில் உள்ள தொகைக்கு மாதந்தோறும் கிடைத்துவரும் வட்டித் தொகையைச் சேமிப்பு வங்கிக் கணக்கில் வரவு வைக்குமாறு வங்கிக்குச் சொல்லி வைத்தார்.

1976 ஜனவரி 22-ம் நாளன்று, பத்திரம் எழுதும் தொழிலைக் கொண்ட முனுசாமிப்பிள்ளை என்பவர், (சாட்சி எண். 5, உறுதிமொழிப் பத்திரம் எண் 114) திருவண்ணாமலையில் திரு. ப. உ. சண்முகத்தின் வீட்டிற்கு வரவழைக்கப் பட்டு, அறக்கட்டளைப் பத்திரம் எழுதித்தருமாறு கேட்கப்பட்டார்.

இந்த அறக்கட்டளைப் பத்திரம் 23—2—1976ல், 6-ம் எண் ஆவணமாக திருவண்ணாமலை இணைப் பதிவாளரது அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. அறக்கட்டளைப் பத்திரத்தின் நிபந்தனைகளின்படி, இந்தக் கட்டளையின் கர்த்தா திரு. சண்முகம் ஆவார். இவரே, ஆயுள் முழுவதற்கும் இந்த அறக்கட்டளையின் தலைவராகவும் (அறங் காவலர்) இருப்பார். இவருக்குப் பிறகு இவரது மகன், அறக்கட்டளையின் தலைவராக இருப்பார். தலைவர் பதவிக்கான வாரிசுரிமை ஆண் சந்ததியினரிடம் இருக்கும்; ஆண் சந்ததி எவரும் இல்லை எனில், பெண் சந்ததியில் மூத்த ஆடவர் அறக்கட்டளையின் தலைவராக இருப்பார்.

இந்த அறக்கட்டளையின் நோக்கங்களாவன :—

(1) சாதி சமயம் முதலிய பாகுபாடின்றி, சிறுடைகள், சுரும்பலகைகள், புத்தகங்கள் இலவசமாக வழங்குவதன் மூலமாக ஏழை மாணவர்களுக்கு உதவிசெய்தல் ;

(2) ஏழைக் கைம்பெண்களுக்கு ஆடை வழங்குதல்;

(3) வெள்ளம், நீ விபத்து முதலிய பற்றில் சிக்கிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவியளித்து, துணை புரிதல்;

(4) முதியோர்கள் புனித யாத்திரை மேற் கொள்வதற்காக நிதி உதவி அளித்தல்;

(5) திருவண்ணாமலை நகரில், எஸ். எஸ். எல்.சி. தேர்வில் மிக அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் அளித்தல்;

(6) ஏழைகளின் மேம்பாட்டுக்கும் மறு வாழ்வுக்கும் வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளுதல்;

ஒன்பது ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்களின் கூட்டம் ஒன்று, 15—6—75-ல் கூடி, திரு. சண்முகத்தின் 52-வது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுவதற்கென்று அமைக்கப்பட்ட குழுவின் தலைவரும், செயலாளரும். பிறந்த நாள் அன்பளிப்புக் கென்று கணிசமான தொகை வழங்கும் பொருட்டு நிதி வசூலிக்க அவர்களுக்கு அதிகாரம் அளித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்ததாகச் சொல்லப்படுகிற எட்டு (ஊராட்சி ஒன்றியத்) தலைவர்களும் கூட்ட நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்தில் கையொப்பமிட்டுள்ளனர். திருவாளர்கள் திருவேங்கடம் (சாட்சி எண் 9, உ. பத்திரம் எண் 116), வேணுகோபால் (சாட்சி எண் 1 உ.ப. எண் 110), வேலியப்பன் (சாட்சி எண் 12, உ.ப. எண் 120), ஆகிய மூன்று பேர்கள் நீங்கலாக, குப்புசாமி நாய்க்கர் (சாட்சி எண் 10, உ.ப. எண் 118), வேங்கடாசல உடையார் சாட்சி எண் 11, உ.ப. எண் 119), தோதண்டராம பிள்ளை (சாட்சி எண் 13. உ.ப. எண் 121), குலசேகரன் (சாட்சி எண் 14, உ.ப. எண் 122), ராமபத்திர உடையார் (சாட்சி எண் 15, உ.ப. எண் 123), கே. திருஞ்சன் (சாட்சி எண் 8, உ.ப. எண் 141) ஆகிய ஏனைய ஆறு ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களும், அத் தகைய கூட்டம் ஒன்று நடைபெற்றதை அல்லது அத்தகைய ஒரு தீர்மானம் நிறைவேறியதை மறுத்துள்ளனர். இந்த ஒன்பது ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் நன்கொடையாக வசூலித்த பணம் எவ்வளவு என்பதுபற்றி வெவ்வேறு சாட்சிகள் கொடுத்துள்ள வெவ்வேறு விதமான சாட்சியங்களும் உள்ளன. இவர்களில் எவரும் கணக்கு வைத்துவரவில்லை. அன்றியும், எவரிடமிருந்து நன்கொடை வசூலித்தனரோ அவருக்கு ரசீது எதுவும் கொடுக்கவும் இல்லை. நன்கொடைகள் திருவேங்கடத்திடம் (சாட்சி எண் 9, உ. ப. எண். 116) ஒப்படைக்கப்பட்டன. தனித்தனி நபர்களிட மிருந்து நன்கொடையாக வசூலிக்கப்பட்ட தொகைகள் குறித்து முரண்பாடுகளும் உள்ளன. சாட்சிகளில் சிலர், திருவேங்கடம் கேட்ட தொகைக்கு மேலேயே தாங்கள் கொடுத்திருந்ததாகக் கூறுகின்றனர். திருவேங்கடமோ ரூ. 7,001 வசூலித்ததாகக் கூறுகிறார் ; ஆனால், மொத்தத்தில் ரூ. 2,100 தொகை கொடுத்துள்ள ஆறு நன்கொடையாளர்களின் பெயர்கள் மட்டுமே இவருக்கு நினைவில் இருக்கின்றன.

ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி நிதிகளைத் தவருகப் பயன்படுத்தி நன்கொடைகள் கொடுத்திருப்பதைப் புலப்படுத்துவதற்கு, கமிஷன் நியமித்தபுலனுய்வுஅதிகாரி, வாய்மொழியாக ஆவணம் வாயிலாக, ஏராளமான சாட்சியங்களைச் சேகரித்துள்ளார். சாட்சிகளில் பலர், புலனுய்வு அதிகாரியால் விசாரிக்கப்பட்டனர். இவர்களும் உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர். இவற்றில் இவர்கள் புலனுய்வு அதிகாரியின்முன் கூறியவற்றையே மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். இந்த சாட்சிகளின் சாட்சியத்தில் கூறியபடி, நன்கொடைகள் வசூலிக்க ஊராட்சித் தலைவர்கள் பின்பற்றிய வழிமுறைகள் பின் வருமாறு :—

(a) ஊராட்சி நிதிகளைப் பயன்படுத்தல் ;

(b) ஊராட்சி ஒன்றியப்பள்ளி ஆசிரியர் அலுவரிடமிருந்தும் ஒரு நாள் சம்பளத்தைக் கட்டாயமாக வசூலித்தல் ;

(c) வேலையில்லாத இளைஞர்களுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வேலை வாங்கித் தருவதாக உறுதி கூறிப் பணம் வாங்குதல் ;

(d) நன்கொடைகள் வாங்குவதற்கு அரசுப் பணியாளர்களைப் பயன்படுத்தல்.

ஊராட்சித் தலைவர்களில்/துணைத் தலைவர்களில் 60 பேருக்கும் மேலாக, 5A பிரிவின்படிப் புலனுய்வு அதிகாரியால் விசாரிக்கப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக அவர்களுக்குத் தெரிந்துள்ள தகவல்கள் குறித்து உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்யுமாறு கேட்டு அவர்களில் பலருக்குக் கமிஷன், அறிவிப்புகள் அனுப்பிவைத்தது.

அவர்களில் பெரும்பாலோர், எடுத்துக்காட்டாக

1. D. வேணுகோபால் (சாட்சி எண் 1 ஏ.எஸ்/110).

2. பி. சக்தி (சாட்சி எண். 6/ஏ.எஸ்ப். 115).

3. பி. எஸ். திருவேங்கடம் (சாட்சி எண் 9/ஏ.எஸ்ப் 116.)

4. ஜி. குப்புசாமி நாய்க்கர் (சாட்சி எண் 10?ஏ.எஸ்ப். 118).

5. கே. ஜ. வெலியப்பன் (சாட்சி எண். 12/ஏ.எஸ்ப். 120).

6. கே. தோதண்டராம பிள்ளை (சாட்சி எண். 13/ஏ.எஸ்ப். 121).

7. எல். பெரியசாமி (சாட்சி எண். 16/ஏ. எஃப். 131).

8. என். மாசிலாமணி (சாட்சி எண். 17/ ஏ.எஃப். 138).

9. ஆர். மண்ணு கவுண்டர் (சாட்சி எண். 22/ஏ.எஃப். 126).

10. முத்துகிருஷ்ணன் (சாட்சி எண். 27/ ஏ.எஃப். 160).

11. வேணுகோபால் உடையார் (சாட்சி எண். 36/ஏ.எஃப். 170).

12. கே. அருணாசலம் (சாட்சி எண். 46/ ஏ.எஃப். 179).

13. பொன்னுசாமி உடையார் (சாட்சி எண். 47/ஏ.எஃப். 180).

14. எம். வேலு (சாட்சி எண். 54/ஏ.எஃப். 187).

15. ஏ. பரசுராம கவுண்டர் (சாட்சி எண். 79/ஏ.எஃப். 216).

16. ஏ. மணிலிங்கம் (சாட்சி எண். 86/ஏ. எஃப். 223).

17. ஏ. விஜயரங்கம் (சாட்சி எண். 95/ ஏ.எஃப். 130).

18. எஸ். ஜெயராமன் (சாட்சி எண். 96/ ஏ.எஃப். 132).

19. பி. சிங்காரவேலு (சாட்சி எண். 97/ ஏ.எஃப். 133).

20. ஏ. கேசவ ராஜா (சாட்சி எண். 98/ ஏ.எஃப். 134).

21. ஏ. கிருஷ்ணன் (சாட்சி எண். 99/ஏ. எஃப். 135).

22. என். கோபால் (சாட்சி எண். 100/ ஏ.எஃப். 136).

23. ஆர். சுப்ரமணியம் (சாட்சி எண். 101/ ஏ.எஃப். 136).

24. ஏ. தர்மராஜன் (சாட்சி எண். 108/ ஏ.எஃப். 147).

25. எம். சுந்தரசாமி உடையார் (சாட்சி எண். 109/ஏ.எஃப். 148).

26. ஏ. ஆர். குப்புசாமி (சாட்சி எண். 112/ ஏ.எஃப். 151).

27. ஜி. ரங்கநாதன் (சாட்சி எண். 113/ ஏ.எஃப். 162).

28. வி. ஜீனதாஸ் (சாட்சி எண். 114/ஏ.எஃப் 153).

29. ஏ. லரத ரெட்டியார் (சாட்சி எண். 116 ஏ.எஃப். 155).

30. ராமகிருஷ்ணன் (சாட்சி எண். 126/ஏ. எஃப். 233).

31. பாலா கவுண்டர் (சாட்சி எண். 128/ ஏ.எஃப். 235).

32. ஏ. ரங்கநாதன் (சாட்சி எண். 132/ ஏ.எஃப். 239).

33. ஏ. மாணிக்கம் (சாட்சி எண். 139/ ஏ.எஃப். 246).

ஆகியோர், கமிஷனது அறிவிப்புக்கிணங்க, உறுதி மொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர். இவற்றில், இவர்கள், புலனுய்வு அதிகாரிமுன் ஏற்கெனவே கொடுத்துள்ள அதே வரலாற்றைப் போல அளவுக்கு உறுதிப்படுத்தியுள்ளனர். புலனுய்வு அதிகாரிமுன் சாட்சிகள் என்ன தெரிவித்திருந்தனரோ அதனையே கொண்டு, புலனுய்வு அறிக்கை நம்பகமான, உண்மையான பதிவுக் குறிப்புகளை உடையது என்பதை இது காட்டுகிறது.

ஊராட்சித் தலைவர்களும் துணைத் தலைவர்களும், தங்களது வாக்குமூலத்தில் நன்கொடைகள் அளிப்பதை முன்னிட்டு, ஒழுங்கற்ற முறையிலும், சட்ட விரோதமாகவும் எப்படி ஊராட்சி நிதிகள் பயன்படுத்தப்பட்டன என்பது பற்றிச் சாட்சியம் கூறியுள்ளனர். ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகிற வளர்ச்சி வட்டார அதிகாரிகள், வளர்ச்சி அதிகாரிகள், பொறியாளர்கள், மேல் பார்ப்பவர்கள் (Overseer) ஆகியோருடன் கூட்டாக மோசடி செய்யும் திட்டத்துடன், பொய்யான பணிகளுக்காக, போலிக் கைச்சாத்துகள் தயாரிக்கும் வழிகளிலும் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வழிமுறைகளிலும் இறங்கினர். பணிகள் நடைபெறும் இடங்களுக்கு நேரில் சென்று அளவுகள் எடுக்காமலேயே, மேற்பார்வையாளர்கள் மதிப்பீடுகள் தயாரிக்குமாறு வற்புறுத்தப்பட்டனர். கற்பனையான பணிகளுக்காக ஊராட்சித் தலைவர்கள் கேட்கும் போலித் தொகைகளுக்கு செலுத்து ஆணைகளில் கையொப்பமிடுமாறு ஒன்றியப் பொறியாளரும், வளர்ச்சி அதிகாரியும் கட்டாயப்படுத்தப்பட்டனர். கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் நன்கொடை அளிக்க அவர்களைத் தூண்டுவதற்காக, அரசாங்க வண்டிகளில் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் கிராமங்களைச் சுற்றி வந்தனர். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்கள் நன்கொடை அளிக்குமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர். தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த உள்ளூர் கிளைகளின் ஏழு செயலாளர்களும், உள்ளூர் ஆசிரியர்கள் பலரும், ஆசிரியர்களின் சம்பளத்திலிருந்து, ஒரு நாளுக்குரிய ஊதியம் எதேச்சாதிகார முறையில் எவ்வாறு பிடித்துக் கொள்ளப்பட்டது என்பது பற்றிச் சாட்சியம் கொடுத்துள்ளனர். தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டமைப்பு மாவட்டச் செயலாளரும், மாவட்டத் தலைவரும் (சாட்சிகள் எண். 55, 56) இதே கருத்திற்குச் சான்று கூறியுள்ளனர்.

இந்த அதிகாரிகளில் பெரும்பாலோர் புலனுய்வு அதிகாரியால் விசாரிக்கப்பட்டனர்; கமிஷன் அனுப்பிய அறிவிப்புகளுக்கு இணங்க, இவர்களில் பெரும்பாலோர் உறுதிமொழிப் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளனர். தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்கூட்டமைப்பின் உள்ளூர்க் கிளைச் செயலாளர்களில் குறைந்தது ஏழு பேரும், உள்ளூர் ஆசிரியர்கள் பலரும் 5A பிரிவின்படி கொடுத்த வாக்குமூலங்களில், ஆசிரியர்கள் சம்பளத்திலிருந்து ஒரு நாள் ஊதியத்தை எவ்வாறு எதேச்சாதிகார முறையில் பிடித்துக்கொண்டார்கள் என்பது குறித்துச் சாட்சியம் அளித்துள்ளனர். கமிஷன் அனுப்பிய அறிவிப்புக்கிணங்க, அவர்களில் பெரும்பாலோர் உறுதிமொழிப் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளனர். 5A பிரிவின் படித் தங்கள் வாக்குமூலங்களில் என்ன குறித்து வைக்கப்பட்டதோ அதனையே அவர்களது உறுதி மொழிப் பத்திரங்களில் ஆமோதித்துள்ளனர்.

போஸ்ஸர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், கே. ஜி. வேதியப்பன் (சாட்சி எண் 12, உ.ப. 120), வேலையில்லாமல் இருந்த பழனிவேலு, தட்டிணமூர்த்தி (சாட்சி எண்கள் 77, 78, உ.ப. 214, 231) ஆகிய இன்னுர்களுக்கு போஸ்ஸர் ஒன்றிய அலுவலகத்தில் குறுநேவலர்களாக நியமிப்பதாக உறுதி கூறி, அவர்கள் ஒவ்வொருவரிட மிருந்தும் ரு. 3,000 நன்கொடை வாங்கியதற் கான சாட்சியமும் உள்ளது.

25—9—1975-ல் நடைபெற்ற விழாவில் போது திரு. சண்முகத்திடம் கொடுக்கப்பட்ட ரு. 52,001-க்கான வங்கி உறுதிச் சான்றில் வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்டது. 1968 ஜூன் 26-ம் நாளிட்ட 1350-ம் எண் அரசாணையில் விதித்துள்ள அமைச்சர்களுக்கான நடைமுறைத்தத்தின் விதிக் கோவையில் சொல்லியுள்ளபடி, அரும் பொருட்காட்சியகத்தில் திரு. சண்முகம் வெள்ளிப் பேழையை வைத்தக் தவறிவிட்டார் என்பதைப் புலப்படுத்தவும் சாட்சியம் உள்ளது.

அறக்கட்டளையில் குறித்தகால வைப்பீட்டின் பேரில் வட்டியாக, 25—9—1976 நாள் வரையில் ரு. 7,239·05 சேர்ந்து வந்திருந்தபோதிலும் இத்தொகை, அறக்கட்டளைப் பத்திரத்தில் எடுத்துச் செல்லப்பட்டுள்ள அற நோக்கங்கள் எதற் காகவும் இதுவரையில் செலவிடப்படவில்லை.

மேலே சொல்லியுள்ள கருத்துகளின் பேரில் சாட்சியம்பற்றி இப்போது சுருக்கமாகக் குறிப் பிடுவேன்.

ஏற்கெனவே சொல்லியுள்ளவாறு, நன்கொடையாக வசூலித்த பணத்தின் அளவு குறித்துப் பலதரப்பட்ட கருத்துகள் உள்ளன. திரு. குப்புசாமி நாய்க்கர் (சாட்சி எண் 10) கூறுகிறபடி, அவர் ரூ. 5,000 நன்கொடை வசூலித்திருந்தார். ஆனால், அவர் மூன்று தவணைகளில் ரு. 7,001 கொண்ட தொகையைக் கொடுத்திருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வேங்கடாசல உடையார் (சாட்சி எண் 11) கூறுகிறபடி, அவர் ரூ. 5,000 வசூலித்தார்; ஆனால், கணக்குப் புத்தகத்தில் ரூ. 5,500 ஆகக் காட்டப்பட்டுள்ளது. குலசேகரன் கூறியபடி (சாட்சி எண் 14) அவர் ரூ. 4,700 வசூலித்தார்; ஆனால், அறக்கட்டளை நிதிக்காக அவர் ரு. 5,500 வசூலித்திருந்ததைக் கணக்குப் புத்தகம் காட்டுகிறது. ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எவரும், அவர்கள் செய்த வசூலுக்காக, கணக்கு வைத்து வரவுமில்லை அன்றி ரசீது எதுவும் கொடுக்கவுமில்லை, கட்டளையின் கணக்குப் புத்தகங்களில் சரிவர வைத்துவரப்படவுமில்லை.

இந்த இனக்கிலும் கூட, கட்டளைக்கான நிதி வசூலிப்பில், அதிகாரம் தவருகப் பயன்படுத்தப்பட்டது; (1) ஊராட்சி நிதிகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன, (2) ஊராட்சி ஒன்றியப்பள்ளி ஆசிரியர்கள் சம்பளத்திலிருந்து ஒரு நாள் ஊதியம் கட்டாயமாகப் பிடித்துக் கொள்ளப்பட்டிருக்கிறது, (3) ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் வேலையற்றோருக்கு தருவதாக உறுதியளித்த அந்தச் சாக்கில், வேலையற்றோரு இன்னுர்களிடமிருந்து பணம் வாங்கியது, (4) இதற்குள் கூட, கட்டாயப்படுத்திப் பணம் வாங்க அரசுப் பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

ஊராட்சி நிதிகளை அறக்கட்டளைக்காகப் பயன்படுத்தியது.

அறக்கட்டளைக்காக ஊராட்சி நிதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தகவல்பற்றி திரு. என். ஜி. சிவிலாசன் (சாட்சி எண் 30, உ.ப. எண் 165) சான்று கூறியுள்ளார். புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திரு. ராமபத்திர உடையார் (சாட்சி எண் 15, உ.ப. எண் 123), தான் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்டியதாகவும், அந்தக் கூட்டத்தில், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகத்தின் பிறந்தநாள் விழாவுக்காக, நன்கொடைகள் வசூலிக்க வேண்டுமென்று தலைவர்கள், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், மேல் பார்ப்பவர்கள் ஆகியோருக்கு அறிவுறுத்திய தாகவும் சான்று கூறியுள்ளார். சாலைகள் போடுதல் முதலியவற்றுக்காக மதிப்பீடுகள் தயாரித்து அவற்றின் அடிப்படையில் ஊராட்சி நிதியிலிருந்து பணம் வாங்கி, சாட்சியிடம் கொடுக்கப்பட வேண்டுமென்று சாட்சி உத்தரவிட்டார். அவ்வாறு அவர் வாங்கிய பணம், அறக்கட்டளையின் நிதிக்காக அவரால் அனுப்பி வைக்கப்பட்டது. சிவிலாசன் (சாட்சி எண் 30), தன்னைத் தலைவர் கட்டாயப்படுத்தியதன் பேரிலேயே, தான் மதிப்பீடு கணக்தயாரித்ததாகத் தெரிவித்தார். மதிப்பீடுகளின்

அடிப்படையில் பெறப்பட்ட பணம், அதன் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்றும், ஆனால் திரு. ப. உ. சண்முகத்தின் பிறந்த நாள் விழாவுக்காக அந்தப் பணம் திருப்பிவிடப்பட்டது என்றும் வெளிப்படையாகவே இவர் தெரிவித்துள்ளார். புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய வளர்ச்சி அதிகாரி இராமலிங்கம் (சாட்சி எண் 32), சினிவாசனுடைய சாட்சியத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

தேவராஜ பிள்ளையின் புகார்.

தேவராஜபிள்ளை (சாட்சி எண். 33, உ.ப. 167) திரு. ப. உ. சண்முகத்தின் பிறந்த நாள் விழாவுக்காக ரூ. 300 நன்கொடை அளிக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் (B.D.O.) தன்னை வற்புறுத்தியதாகத் தெரிவித்துள்ளார். அதன் பேரில், இந்த சாட்சி, வட்டார வளர்ச்சி அதிகாரி ஊராட்சி ஒன்றிய நிதிகளைத் தவருகப் பயனபடுத்தியதாகப் புகார் கூறி, 18—2—1976-ல் கோட்ட வளர்ச்சி அதிகாரிக்கு ஒரு மனுவும் 29—2—1976-ல் ஆளுநருக்கு ஒரு மனுவும் அனுப்பினர். இந்தப் புகார் பற்றி கஜராஜ் (சாட்சி எண் 34) விசாரித்தார். அவர், பணம் வாங்கியதில் பல முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன. என்றும், இந்த முறைகேடுகள், வட்டார வளர்ச்சி அதிகாரி கலியபெருமாளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன என்றும் கூறினர். சம்பள ஆணையில் இளநிலைப் பொறியாளர் செய்துள்ள மதிப்புச் சான்று பொய்யானது என்று வட்டார வளர்ச்சி அலுவலர் கலியபெருமாள் (சாட்சி எண் 31, உ.ப. எண் 163) ஒப்புக்கொண்டார் வேலை நிறைவேறியுள்ளதா இல்லையா என்று நேரில் சென்று சரிபார்க்க, வேலை நடைபெறும் இடத்திற்குக் கஜராஜ் முயலவில்லை. தேவராஜ பிள்ளையின் புகார், அதிக அக்கறை காட்டப்படாமல், மலு, வட்டார வளர்ச்சி அதிகாரியின் கருத்துகளுக்குப் பெற்றதன் பிறகு எதேச்சையான முறையில் பதிவுக்கட்டில் சேர்க்கப்பட்டது.

ஆர். எஸ். கண்ணபிரான் (சாட்சி எண் 35, உ.ப. எண் 169) மற்றுமொரு சாட்சியாவார், ஊராட்சி நிதிகள் தவருகப் பயன்படுத்தப்பட்டிருப்பது குறித்து இவர் சாட்சியம் அளித்துள்ளார். 1974 ஆம் ஆண்டில் ஏற்கெனவே போடப்பட்ட ஒரு சாலைக்காக 1974—75ல் ரூ. 3,000 வாங்கப்பட்டதாகவும், ஊராட்சி நிதியிலிருந்து அவ்வாறு வாங்கப்பட்ட பணம், 8—1—1975-ல் பவித்ரம் என்னுமிடத்தில் அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் கலந்து கொண்ட ஒரு விழாவை நடத்தியதற்கும் பயன்படுத்தப்பட்டது என்பதாகவும் தெரிவித்துள்ளார். 1975—76 ஆம் ஆண்டில் அதே சாலையை அமைப்பதற்காக ஊராட்சி ஒன்றியத் தலைவர் ரூ. 2,000 வாங்கி அந்தப் பணத்தைத் தவருகப் பயன்படுத்தியுள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். 1975 ஜூலை மாதத்திலும் கற்பனையான அதே காரியத்திற்காக ரூ. 5,000 எடுக்கப்பட்டது. அத் தொகை திரு. ப. உ. சண்முகம் பிறந்த நாள் விழாவுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

கட்சிக் காரியங்களுக்காக எவ்வாறு ஊராட்சி நிதிகள் தவருகப் பயன்படுத்தப்பட்டன என்பது குறித்து வட்டார வளர்ச்சி அதிகாரிக்கும் மாவட்ட ஆட்சியருக்கும் தான் மனுக்கள் அனுப்பியதாகவும், அதன் பேரில் பயனுள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் சாட்சி (கண்ணபிரான்) மேலும் தெரிவித்தார். சாட்சியின் இந்தக் கூற்றுக்கு 20-ம் எண் ஆவணத்தில் ஆதாரமுள்ளது (புலனுய்வு அறிக்கையைக் காண்க).

1972-லிருந்து 1976 பிப்ரவரி மாதம் வரையில் திருவண்ணமலையில் மேல்பார்ப்பவராக இருந்த திரு. எஸ். பாண்டியன் (சாட்சி எண் 39, உ.ப. எண் 171) ஊராட்சி நிதிகளைத் திருப்பிவிட்டுத் தவருகப் பயன்படுத்தியது குறித்து கண்ணபிரான் கூறியதை உறுதிப்படுத்தியுள்ளார். நிறைவேற்றப்படாத கற்பனையான பணிகளுக்காக 'M' புத்தகத்தில் அப்பணி சம்பந்தப்பட்ட அளவைகளைக் குறித்து வைக்குமாறு (சாட்சி எண் 1) திரு. வேணுகோபால் தன்னை வற்புறுத்தியதாக இந்த சாட்சி தெரிவித்துள்ளார். இதைத் தவிர (சாட்சி எண் 36) வேணுகோபால் தயாரித்துக் கொடுத்துள்ள சம்பள ஆண இணைப்புகளில், பதிவுத் தாள்கள் திருக்கப்பட்டிருந்தமை, கண்ணபிரான் (சாட்சி எண் 35), பாண்டியன் (சாட்சி எண் 39) ஆகியோரது குற்றச் சாட்டுகளுக்கு ஆதாரமளிக்கிறது.

பவித்ரம் ஊராட்சித் தலைவரான வேணுகோபால் உடையார் (சாட்சி எண் 36, உ.ப. எண் 170) சாலைகள் பணிக்காகத் தொகை எடுத்தது பற்றி ஒப்புக்கொள்கிறார். ஆனால், அவர் கூற்றுப்படி, தாழ்வான பகுதியில் சாலை அமைந்திருந்ததால் அதன் மட்டத்தை உயர்த்துவதற்காக அந்தப் பணத்தை அவர் செலவிட்டிருந்ததாகவும் கூறுகிறார். இவர் இந்தத் தொகையை விட அதிகமாகச் செலவிட்டிருந்தார் என்றும், அவரிடமிருந்து ரூ. 380 ஊராட்சிக்குச் சேர வேண்டியிருந்தது என்றும் தணிக்கை அறிக்கை புலப்படுத்துகிறது.

ஜேசுதாஸ் (சாட்சி எண் 38, உ.ப. 174) தான் கண்ணபிரான் (சாட்சி எண் 35) புகாரை விசாரித்ததாகவும், தொகை வருலிக்க நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஊராட்சி நிதிகளைத் தவருகப் பயன்படுத்தியுள்ளதற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு, மண்ணு கவுண்டர் (சாட்சி எண் 22) சாட்சியத்தில் இருப்பதைக் காணலாம். இவர் துரிஞ்சாபுரத்

தில் உள்ள மங்கலம் ஊராட்சித் தலைவர் எழுதப் படிக்கத் தெரியாதவர். இந்த சாட்சி, தொகை எடுத்த காரியத்திற்காக ஊராட்சி நிதியை ஒரு போதும் பயன்படுத்தியது இல்லை. அப்போது அமைச்சராக இருந்த திரு. ப. உ. சண்முகம் வருகைக்காக, தெருக்களைச் சுத்தமாக வைத்திருக்க 28—1—1976-ல் இவர் ரூ. 500 வாங்கினர். ஆனால், இந்தத் தொகை, அமைச்சர் இந்தக் ராமத்திற்கு வருகை தராதவிடத்து அவரது பிறந்த நாள் விழாவிற்காக, தலைவர் கொடுத்த நன்கொடைக்காகச் சரிக்கட்டப்பட்டது.

இந்தத் தகவலுக்கான ஆதாரத்தை, அருணாசலம் (சாட்சி எண். 42), அண்ணாமலை (சாட்சி எண் 43), ஆறுமுகம் (சாட்சி எண் 44) தனபால் கவுண்டர் (சாட்சி எண் 45) ஆகியோரது சாட்சியத்தில் காணலாம். இவர்கள் கூறுகிறபடி, மேற்சொன்ன ஊராட்சித் தலைவராகிய மண்ணு கவுண்டர் (சாட்சி எண் 39) தி.மு.க. வைச் சேர்ந்தவர்; திரு. ப. உ. சண்முகத்தின் நெருங்கிய நண்பருமாவார். இந்த முறையில் பலவகையாலும் ஊராட்சி நிதியை மண்ணு கவுண்டர் தவறுகப் பயன்படுத்தியிருக்கிறார்.

திரு. ப. உ. சண்முகத்தின் பிறந்த நாள் விழாவிற்காக, தான் நன்கொடையாக ரூ. 250 கொடுத்திருந்ததை மண்ணு கவுண்டர் ஒப்புக் கொள்கிறார். இருப்பினும், இவர், இத்தொகை ஊராட்சி நிதியைத் தான் பயன்படுத்தியதாக சொல்லப்படுவதை மறுக்கிறார். விவேராசம் (சாட்சி எண் 48) அருணாசலத்தின் (சாட்சி எண் 46) மனு மீது விசாரணை நடத்தினார். இந்த மனுவில் அவர் மண்ணு கவுண்டர் பணத்தைத் தவறுகப் பயன்படுத்தியது பற்றிப் புகார் கூறியிருந்தார்.

தும்பூர், பிலாகூர், காராபூண்டி, நம்பேடு ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து அமைச்சரின் பிறந்த நாள் விழாவிற்காகப் பணம் கொடுக்கப்பட்டிருப்பது பற்றி ஏ. சுப்பிரமணியமும் (சாட்சி 49) முருகேசனும் (சாட்சி 50) கூறுகின்றனர். 51, 52, 53, 54 ஆம் சாட்சிகள் இந்த ஊராட்சிகளின் தலைவர்களாவர். திரு. ப. உ. சண்முகத்தின் பிறந்த நாள் விழாவிற்கு நன்கொடை அளித்திருப்பதை அவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், இந்தச் செலவினங்களுக்குத் தணிக்கையில் மறுப்பு தெரிவிக்கப்பட்டபோது, அதற்குத் திருப்திகரமான விளக்கம் எதனையும் அவர்கள் கொடுக்கமுடியவில்லை.

ஆசிரியர்கள், கடைநிலை ஊழியர்கள் ஆகியோரின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்தல்.

உமாபதி (சாட்சி 55, உறுதிமொழிப் பத்திரம் எண் 188) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பின் மாவட்டச் செயலாளர்; C. கிருஷ்ணனும் (சாட்சி 56), ஓர் ஆசிரியராவார். திருவண்ணாமலை கோட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றும் எல்லா ஆசிரியர்களின் ஊதியத்திலிருந்தும் ஒரு நாள் ஊதியம், திரு. ப. உ. சண்முகத்தின் பிறந்த நாள் விழா நிதிக்கு நன்கொடையாகக் கொடுக்கப் பிடித்தம் செய்யப்பட்டதாக அவர்கள் கூறுகின்றனர்.

அந்தக் கோட்டத்தில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கையையும் பணியாளர்கள் அனைவரது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட ஒரு நாள் ஊதியம் 32,935 ரூபாய் என்றும், கோபால கிருஷ்ணன் (சாட்சி 57, உறுதிமொழிப் பத்திரம் எண் 190) தெரிவித்துள்ளார். ஆயினும், இது பற்றிப் புலனுய்வு செய்ததில் திருஞ்சாபுரம் திருவண்ணாமலை, தண்டராம்பட்டு, போளூர் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆசிரியர்கள், கடைநிலை ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து இப்படிப் பணம் வசூலிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதற்கு அண்ணாமலை (சாட்சி 58), ஜெயபால் (சாட்சி 59), S. கோடீஸ்வரன் (சாட்சி 60), கண்ணன் (சாட்சி 61), வேங்கடசாமி (சாட்சி 62), ஆறுமுகம் (சாட்சி 63) T. வேங்கடேசன் (சாட்சி 64), நாராயணசாமி, (சாட்சி 65), சீதாராமன் (சாட்சி 66) P. சுப்பிரமணியன் (சாட்சி 67), ஆறுமுகம் (சாட்சி 68), சாமிநாதன் (சாட்சி 69), அரங்கநாதன் (சாட்சி 70), நரசிம்மன் (சாட்சி 71), ஜி. வேங்கடேசன் (சாட்சி 72), பாண்டுரங்கன் (சாட்சி 73), இராமலிங்கம் (சாட்சி 74), ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர். போளூர் ஊராட்சி ஒன்றியத்தின் அப்போதைய தலைவர் வேதியப்பன் கெக் சென்டர் (cheque centre) தலைமையாசிரியர்களது கூட்டம் ஒன்றைக் கூட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், கடைநிலை ஊழியர்கள் ஆகியோரின் ஊதியத்திலிருந்து ஒருநாள் ஊதியத்தைப் பிடித்தம் செய்து திரு. ப. உ. சண்முகத்தின் பிறந்த நாள் விழா நிதிக்குத் தமது அலுவலகத்தில் கொண்டுவந்து கொடுக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டதாக இந்தச் சாட்சிகள் அனைவரும் கூறியுள்ளனர்.

தலைமையாசிரியர்கள் தன்னிடம் ஒப்படைத்த இந்தத் தொகையை வேதியப்பனிடம் கொடுத்தனுப்பியதாகச் சங்கர நாராயணன் (சாட்சி 75) ஒப்புக் கொள்கிறார். இந்த முறையில் ஆசிரியர்களிடமிருந்து நன்கொடை வசூலித்திருப்பதற்கு எஸ். ஆர். ஜானகிராமன் (சாட்சி 76) அளித்துள்ள சாட்சியம் மேலும் ஆதரவாக இருக்கிறது. ஆசிரியர்கள், கடைநிலை ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட ஒருநாள் ஊதியம் மொத்தம் 13,750 ரூபாய். ஆனால், இந்தத் தொகை முழுவதையும் ஊராட்சி ஒன்றியத் தலைவர் கணக்கில் காட்டவில்லை.

வேலையற்றிருக்கும் இளைஞர்களிடமிருந்து வலுக் கட்டாயமாக நன்கொடை வசூலித்தல்.

தட்சிணமூர்த்தி (சாட்சி 78), பழனிவேலு (சாட்சி 77) ஆகிய இருவரும் வேலை தேடிக் கொண்டிருந்ததாகக் கூறியுள்ளனர். அவர்கள் வேதியப்பனையும் (சாட்சி 12) பரசுராமக் கவுண்டரையும் (சாட்சி 79) அணுகித் தங்களுக்கு உதவும்படிக் கேட்டனர். திரு. ப. உ. சண்முகத்தின் பிறந்த நாள் விழா நிதிக்காக இவ்விரு சாட்சிகள் ஒவ்வொருவரும் 3,000 ரூபாய் நன்கொடை தரும்படி வேதியப்பனும் பரசுராமக் கவுண்டரும் கேட்டனர். பழனிவேலு (சாட்சி 77) வேங்கடமுனுசாமி செட்டியிடம் (சாட்சி 80) நிலத்தை அடைமானம் வைத்து ரூ. 3,000 வாங்கி நன்கொடையாகக் கொடுத்தார்.

இவர்களது சாட்சியத்தை ஒத்து, கோதண்ட ராமனும் (சாட்சி 81), பின்னிக் கவுண்டரும் (சாட்சி 82) சாட்சியம் அளிக்கின்றனர்.

தட்சிணமூர்த்தி (சாட்சி 78) அவரது நகைகளை அடைமானம் வைத்து 1,700 ரூபாய் பெற்று அதனை முதல் தவணையாகக் கொடுத்தார். அதன் பின்னர், இரண்டாவது தவணையாக 1,300 ரூபாயை வேதியப்பனிடம் கொடுத்தார். ஆனால், இந்த நன்கொடைகளைக் கொடுத்த பின்னரும்கூட சாட்சிகளுக்கு வேலை கிடைத்த பாடில்லை. இருப்பினும், வேதியப்பன் அவர்களை வேலைக்குத் தெரிந்தெடுத்தார். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு ஒப்புதல் அளிக்க வில்லை. பின்னர், இதற்காக பஞ்சாயத்து ஒன்று வைக்கப்பட்டது. அதில் வேதியப்பன் அவர்களுக்கு வேலை கொடுக்கத் தம்மால் இயலவில்லை என்று தெரிவித்ததோடு அவர்களிடமிருந்து வசூலித்த தொகையைத் திருப்பிக் கொடுக்க ஒப்புக் கொண்டார். ஆனால், சாட்சிகள் தங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை இன்னும் தங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப் படவில்லை என்று கூறுகின்றனர்.

இருப்பினும், சாட்சிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் 3,000 ரூபாய் வாங்கியுள்ளதாகச் சுட்டுவதை வேதியப்பன் மறுத்துள்ளார். குறிப்பிட்ட நிலர் 1977 பிப்ரவரி மாதத்தில் தனது வீட்டிற்கு வந்து பழனிவேலு, தட்சிணமூர்த்தி ஆகியோரிடமிருந்து தான் வாங்கிய தொகையைத் திருப்பிக் கொடுக்கும்படிக் கேட்டதை மட்டும் அவர் ஒப்புக் கொள்கிறார்.

வேலைவாய்ப்பு அலுவலகம் அனுப்பிய பட்டியலில் பழநிவேலு, தட்சிணமூர்த்தி பெயர்கள் இல்லாது இருப்பதை அவர் கண்டவுடன், போளூர் பேரூராட்சியில் இருக்கின்றவர்களின் பெயர்கள் இருப்பதற்குப் பதிலாக, போளூரில் இருக்கின்றவர்களின் பெயர்கள் இந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருப்பதாகக் கருதிப் புதிய பெயர்ப்பட்டியல் ஒன்றை அனுப்பும்படிக் கேட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரிக்குக் குறிப்பு ஒன்றை அனுப்பும்படிச் சாட்சிக்கு வேதியப்பன் கட்டளை யிட்டதாக மூர்த்தி (சாட்சி 87) கூறியுள்ளார். வேலை வாய்ப்பகம் பின்னர் அனுப்பிய பட்டியலில் பழநிவேலு, தட்சிணமூர்த்தி ஆகியோரது பெயர்கள் இருந்ததாக மூர்த்தி மேலும் கூறியுள்ளார்.

தட்சிணமூர்த்தி, பழநிவேலு ஆகியோரின் சாட்சியத்தை நம்பாமல் இருக்கக் காரணம் இல்லை.

வலுக்கட்டாயமாக நன்கொடை வசூலிக்க அதிகாரிகளைத் தவருகப் பயன்படுத்தியது.

இராமபத்திர உடையார் (சாட்சி 15) ஊராட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, திரு. ப. உ. சண்முகத்தின் பிறந்த நாள் விழாவுக்கு நன்கொடை வசூலிக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். எனவே, இராமபத்திர உடையார் ஊராட்சித் தலைவர்களிடமிருந்து முதல் தவணையாக ரூ. 1,700-ம் இரண்டாம் தவணையாக ரூ 3,400-ம் வசூலித்தார்.

எஸ். ஜி. ஸ்ரீநிவாசன் (சாட்சி 30) உடையாருக்கு ஆதரவாகச் சாட்சியம் அளிக்கிறார்.

வட்டார வளர்ச்சி அதிகாரி கலியபெருமாள் (சாட்சி 31) மேற்படி பிறந்த நாள் விழாவுக்காக ஊராட்சிகளின் தலைவர்களிடமிருந்து நன்கொடைகள் வசூலித்தார். தேவராஜ பிள்ளையும் (சாட்சி 33) கோவிந்தசாமி நாயக்கரும் (சாட்சி 88) இது குறித்துச் சாட்சியமளித்துள்ளனர். இதுபோலவே R.S. கண்ணபிரானும் (சாட்சி 35) பாண்டியனும் (சாட்சி 39) வட்டார வளர்ச்சி அதிகாரி நன்கொடைகள் வசூலித்து இருப்பது பற்றிக் கூறுகின்றனர்.

இவ்வாறு நன்கொடைகள் வசூலிக்க அலுவலர்களைத் தவருகப் பயன்படுத்திக் கொண்டதற்கு மற்றோர் உதாரணம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளரும் பிற சார்நிலைப் பணியாளர்களும் கிராமமாகச் சென்று திரு. ப.உ. சண்முகத்தின் பிறந்த நாள் விழாவுக்கு நன்கொடைகள் வசூலித்தமையாகும். ஜெயராமன் (சாட்சி 26) இராமஜெயம் (சாட்சி 89), மணவாளன் (சாட்சி 91) ஆகியோர் இதற்குச்சாட்சியம் அளித்துள்ளனர்.

இதுபோலவே கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் அந்த ஒன்றிய ஆணையாளர் தட்சிணமூர்த்தி நிதி வசூலித்தார். சுந்தரேச உடையார் (சாட்சி 92) இதனைத் தெரிவித்துள்ளார். இவரது சாட்சியத்தை ஒத்து ஜெயராம பிள்ளை (சாட்சி 94) சாட்சியம் அளிக்கிறார்.

போளூர் ஊராட்சி ஒன்றியத்தின் பணியாளர் சங்க அலுவலகத்தின் பணியாளர்கள் இப்படி நன்கொடைகள் வருலிப்பதில் ஈடுபடுத்தப்பட்டனர். எஸ்.ஆர். ஜானகிராமன் (சாட்சி 76) சங்கர நாராயணன் (சாட்சி 75) ஆகிய இருவரும் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளனர்.

மேற்கூறியவற்றினைப் பார்க்கும்போது, முதற் கண் திரு. ப.உ. சண்முகத்தின் தனிப்பட்ட நிதிச் சிலுக்காக அலுவலர்களைத் தவருகப் பயன்படுத்தி நிதிகள் வசூலிக்கப்பட்டிருப்பது அல்லது நிதி வசூல் கட்டாயமாக வசூலிக்கப்பட்டிருப்பது, ஊராட்சி நிதிகளை மோசடியாக இதற்குப் பயன்படுத்தியிருப்பது ஆகியவையும் குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல்படுத்தப்பட்ட பின்னர்தான், திரு. ப.உ. சண்முகம் அந்தப் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டிமேற்படிநிதியை அறக்கட்டளைநிதியாக மாற்றிவிட்டார் என்பதும் தெளிவாகின்றன.

இது எப்படியிருப்பினும், அப்போதைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியைப் போலவே அவரது அமைச்சரவை சகாவான திரு. ப.உ. சண்முகமும் அலுவலர்களைத் தவருகப் பயன்படுத்தியும் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தும் இந்த அறக்கட்டளைக்கு வலுக்கட்டாயமாக நிதி சேர்த்தார் அல்லது நிதி வருவித்தார்.

குற்றச்சாட்டு எண். 21 (ஆ)—மன்றம் அறக்கட்டளை

திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் அமைச்சரவை தற்கு முன்பு 17-4-1969 ஆம் நாளன்று பதிவு பெற்ற ஓர் ஆவணத்தின் மூலம் ''மன்றம் அறக்கட்டளை என்ற ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தினர். இந்த அறக்கட்டளை ஏற்படுத்திய ஏனையோர் அவரதுசகோதரர்கள் ஆவர். அந்த சகோதரர்கள் கூட்டாகச்சேர்த்துஇந்த அறக்கட்டளைக்கு அரம்ப நிதியாக 200 ரூபாய் அளித்திருந்தனர். இந்தத் தொகைசென்னை, சேத்துப்பட்டு, யூனைடெட் கமர்ஷியல் வங்கி கிளையில் 533 ஆம் நடப்புக் கணக்கில் போடப்பட்டிருந்தது. வேறு எந்த நன்கொடையும் இந்த அறக்கட்டளைக்கு வரவில்லை. இந்தக் கணக்கில் வரவு-செலவு செய்யாததன் காரணமாக, வங்கிக் கட்டணங்களே கழித்துக்கொண்ட பின்னர் 174 ரூபாய் மட்டும் கணக்கில் இருந்தது.

இந்த அறக்கட்டளை பற்றி அவ்வளவாக விசாரிக்க வேண்டியதில்லை. ஏனெனில், அது தொடங்கப்பட்ட காலத்திலிருந்து அப்படியேதான் இருந்தது. இந்த அறக்கட்டளை பற்றி இங்கு குறிப்பிட்டிருப்பதற்குக்காரணம் நாவலர் நெடுஞ்செழியன் அறக்கட்டளைக்கு எந்தெந்த முறைகளில் வலுக்கட்டாயமாகநிதிசேர்க்கப்பட்டதுஎன்பதைஒப்பிட்டுப்பார்ப்பதற்காகவேஆகும். மன்றம் அறக்கட்டளை, திரு.வி.ஆர்.நெடுஞ்செழியன் அமைச்சராக இராமல் சட்ட மன்றஉறுப்பினராக மட்டும் இருந்தபோது அவரது சகோதரர்களால் ஏற்படுத்தப்பட்டது. இந்த அறக்கட்டளை ஆரம்பித்தவர்கள் பலர் தானேமுன் வந்து கொடுக்கும் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளப் பெருமுயற்சி எடுத்திருந்த போதிலும் இந்த அறக்கட்டளைக்கு எவரும் பணம் கொடுக்க முன்வரவில்லை. இந்த அறக்கட்டளை வெளிப்படையாகவே பயனற்றுப்போய் விட்டது. ஏனெனில், அச்சமயம், திரு. நெடுஞ்செழியன் ஆதிக்கம் செலுத்துகின்ற பதவி எதிலும் இல்லை அல்லது இந்த அறக்கட்டளைக்கு வலுக்கட்டாயமாகப் பணம் சேர்க்கும் அளவுக்கு அதிகாரத்தில் இல்லை. ஆனால், நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்ட அதற்குப் பணம் சேர்க்கப்பட்டு வந்த சமயம் அவரிடம் ஏராளமான அதிகாரங்கள் இருந்தன. மேலும், அவர் கல்வியமைச்சராகவும், தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் தலைவராகவும் இருந்தார். கல்வித் துறையைச் சேர்ந்த ஏராளமான அலுவலர்களுக்கு நன்கொடை வருவிக்கும் படிக் கட்டளையிட்டு—இருந்திருக்க முடியும்—உண்மையில் அவ்வாறே செயல்படுத்தி இந்த அறக்கட்டளைக்கு நன்கொடைகளை வலுக்கட்டாயமாகச் சேர்த்தார். பாடநூல் நிறுவனத்தின் விலியோ கல்தர்களிடமிருந்து ( ) இருப்பாளர்களிடமிருந்து தனது செல்வாக்கைப் பயன்படுத்தி வலுக் கட்டாயமாக அந்த அறக்கட்டளைக்கு பணம் திரட்டினர்.

குற்றச்சாட்டு எண். 21 (இ)—ரோம அரங்கண்ணல் அறக்கட்டளை

திரு.க. தலைவர்களில் முக்கியமானவரும் முன்னுள் சட்டமன்ற உறுப்பினருமான திரு. ரோம. அரங்கண்ணல் குடிசைமாற்று வாரியத்தில், அது 1970 அக்டோபரில் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே தலைவராக இருந்து வந்திருக்கிறார். 30-1-1976 அன்று குடியரசுத் தலைவர் ஆட்சி அமுலுக்கு வந்த பின்னர் அவர் தனது பதவியை இராஜினாமா செய்து விட்டார். அவரது 47-வது பிறந்த நாள் விழாவன்று '' ரோம அரங்கண்ணல் அறக்கட்டளை '' என்ற அறக்கட்டளை ஒன்றை அவர் ஏற்படுத்தினர். இது 198/75 ஆம் எண் ஆவணமாகப் பதிவு செய்யப்பட்டது. இதலுடைய அலுவலகம் மயிலாப்பூரில் இருந்தது.

அப்போதைய மூகலமைச்சர் திரு. மு. கருணாநிதியோ அவரது அமைச்சரவை சகாக்களோ நேரடியாக இந்த அறக்கட்டளையின் அறங்காவலர்களாக இருந்தனர் அல்லது இந்த அறக்கட்டளையை ஏற்படுத்தியதற்கு அல்லது நடத்துவதற்கு பிற வகையில் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பதற்குச் சாட்சியம் இல்லை. மேலும் இது ஒரு தனி அறக்கட்டளையாகும். இந்த அறக்கட்டளையை ஏற்படுத்தியதற்குஅளித்த தொகை ரூ. 5,000 தான். இந்த அறக்கட்டளை நிதியில் மேலும் தொகை போடப்பட்டதற்குச் சாட்சியம் எதுவும் இல்லை. இந்தியன் பாங்கின் அறிக்கையின்படி அறக்கட்டளைக்கில் ரூ. 2,490.25தான் இருக்கிறது.

இந்த அறக்கட்டளையின் வெளிப்படையான நோக்கம் வருமாறு :

''இந்த அறக்கட்டளையில் குறிப்பிடப்பட்ட பள்ளிகள் ஏதாவது ஒன்றிலிருந்து பள்ளி இறுதி வகுப்பை முடித்துள்ள, பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த அல்லது அரிசன வகுப்பைச் சேர்ந்த தகுதியுள்ள, பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் மிக அதிகமாக மொத்த மதிப்பெண்கள் பெற்றுள்ள ஏழை மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகளும் பரிசுகளும் வழங்குதல்.'' இப்படிப்பட்ட மாணவர்கள் கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட படிப்புதவிப் பணம் வழங்கும் குழுவினால் தெரிந்தெடுக்கப்படுவர்.—

(1) திரு. கருணாநிதியின் மருமகன் முரசொலி மாறன் ;

(2) அரங்கண்ணல் மனைவி திருமதி ஆண்டாள் அரங்கண்ணல் ;

(3) அமைந்தகரை தி.மு.க. நிர்வாகி, எஸ். எம். இராமச்சந்திரன் ;

(4) அரங்கண்ணல் மாமனார் T. S. வேங்கடாசலம் ;

(5) இராம அரங்கண்ணல் ;

(6) கல்லூரிக் கல்வி இயக்குநரால் நியமனம் செய்யப்படும் ஓர் அதிகாரி.

அறக்கட்டளைப் பத்திரத்தில் ரூ. 10,000 முதலீடு என குறிப்பிடப்பட்டிருந்தாலும் திரு. இராம அரங்கண்ணல் 5,000 ரூபாயைத்தான் இதற்கென ஒதுக்கி, அதனைச் சென்னை இந்தியன் பாங்கியில் அறக்கட்டளை கணக்கில் போட்டு வைத்தார்.

படிப்பு உதவிப் பணம் வழங்கும் குழுவின் முதல் கூட்டம் 30-6-1975 அன்று நடைபெற்றது. பள்ளிகளின் பட்டியலில் மேலும் 4 பள்ளிகளைச் சேர்த்துக் கொள்ளுவது என இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் படிப்புதவித் தொகை பெறத் தகுதியுடையவராவர். படிப்புதவித் தொகையை 100 ரூபாயாகக் குறைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

படிப்பு உதவித் தொகை கோரி எவரும் விண்ணப்பித்துக் கொள்ளாததால், திரு. இராம அரங்கண்ணல், சாந்தோம், செயின்ட் பீட்ஸ் பள்ளி நடத்தி வரும் அனுதை இல்லத்தில் உள்ள வர்களுக்கு உணவளிப்பதற்காக அப் பள்ளியின் தலைமையாசிரியருக்கு 20-8-75ல் 500 ரூபாய்க்குக் காசோலை அனுப்பினர். மேலும், காஞ்சிபுரம், யாதவ சத்திர பரிபாலன சபையின் விடுதியைப் பராமரிப்பதற்காக அவர் 500 ரூபாய் நன்கொடை அனுப்பினர்.

இவற்றிற்கான செலவு அறக்கட்டளையின் நோக்கத்திற்கு உட்பட்டதா என்று வாதிடப்படுகிறது. இது எவ்வாறு இருப்பினும், தரும காரியங்களுக்காகவே இந்த நன்கொடை அளிக்கப்பட்டது.

இந்த அறக்கட்டளையின் நிதிகளுக்கு முறையாகக் கணக்கு எதுவும் எழுதி வரவில்லை என்று கூறப்படுகிறது.

குற்றச்சாட்டு எண் 21 (G)—கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை.

3-6-1971 அன்று திரு. கருணாநிதிக்கு 48-வது பிறந்த நாள் ஆகும். அன்று, முன்னாள் சென்னை மாநகராட்சி தி.மு.க. மேயர் திரு. சா. கணேசன் இந்த அறக்கட்டளையின் நிதிக்காக ரூ. 1,001-ஐ நன்கொடையாக அளித்தார். 14-7-1971 அன்று அறக்கட்டளைப் பத்திரம் எழுதப்பட்டு, 15-7-1971, அன்று சென்னை, திருவல்லிக்கேணியில் உள்ள உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் 76/71 ஆம் எண் ஆவணமாகப் பதிவு செய்யப்பட்டது. இந்த அறக்கட்டளை பத்திரத்திற்கு துணைப் பத்திரம் ஒன்று பின்னர் எழுதப்பட்டு, 23-2-1973 அன்று 35/73 ஆம் எண் ஆவணமாகப் பதிவு செய்யப் பட்டது. இந்தத் துணைப் பத்திரத்தை எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டதற்குக் காரணம், இந்த அறக்கட்டளை வருமான வரிச் சட்டத்தின் கீழ் வரி செலுத்துவதனின்றும் விலக்குபெற வேண்டி அறக்கட்டளை பத்திரத்தில் உள்ள பகுதிகளுக்கு நடைமுறைத் திருத்தங்கள் சிலவற்றைச் செய்யவேண்டும் என்று வருமான வரிக் கமிஷனர் கேட்டதேயாகும்.

இந்த அறக்கட்டளையின் அலுவலகம் சென்னை, அண்ணாசாலை 37-ல் பெயர் பெற்ற நிறுவனமான டி. வி. எஸ். நிறுவனத்தின் வளாகத்தில் அமைந்திருந்தது. அறக்கட்டளைப் பத்திரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு இந்த அறக்கட்டளையின் நோக்கங்கள் வருமாறு :—

(1) தருமம் செய்தல், தரும காரியங்களை மேற்கொள்ளுதல்.

(2) ஏழை எளியவர்கள், ஏலாமையுற்றவர், உடல் ஊனமுற்றவர், மன நோயுள்ளவர்களுக்கு இல்லங்களையும் நிலையங்களையும் ஏற்படுத்தி, அவற்றைப் பராமரித்தல்.

(3) ஏனைய நிறுவனங்களின் உதவியோடு குடிசைகளை அகற்றவும், பிச்சை எடுத்தலை ஒழிக்கவும், பிச்சைக்காரர்கள், வறியவர்கள், ஊனமுற்றவர்கள் ஆகியோருக்குப் புது வாழ்வு அளிக்கவும் ஏற்பாடு செய்தல்.

(4) ஏழை எளியவர்க்கு மருத்துவ வசதி அளித்தல்.

(5) நோயுற்றவர்களுக்கும், முதியவர்களுக்கும், அனுதைகள், பிச்சைக்காரர்கள், ஆதரவற்றவர்கள், கைம்பெண்கள் ஆகியோருக்கும் இல்லங்கள், மருத்துவமனைகள் கட்டிப் பராமரிக்கவும் மேம்படுத்தவும் நிதி உதவி செய்தல்.

(6) தகுதியுடைய மாணவர்களுக்கும் ஏழை மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகையும் பரிசுகளும் வழங்கி கல்வி கற்பித்தல்.

(7) ஏழை எளியவருக்கும் வேலை செய்ய முடியாதவர்களுக்கும் வாடகை இல்லா இல்லங்களைக் கட்டித்தந்து பராமரித்தல்.

(8) பொதுவாக ஏழை எளியவரின் நலனுக்குப் பாடுபடுதல், பொதுமக்களுக்குப் பயன் தரத்தக்கது என அறங்காவலர்கள் கருதக்கூடிய வேறு எந்த நோக்கத்திற்கும் பாடுபடுதல்.

இந்த அறக்கட்டளையில் 5 அறங்காவலர்கள் இருந்தனர். திரு. சா. கணேசன் ஆயுட்கால நிருவாக அறங்காவலராக இருந்தார். டி.வி.எஸ். நிறுவனத்தின் இயக்குநரான திரு. ஆர். இரத்தினம், கருணாநிதியின் உறவினரான திரு. எஸ். செல்வம், தகவல்–மக்கள் தொடர்புத்துறை முன்னாள் துணை இயக்குநர் திரு. எஸ். கருணைந்தம், திரு. எஸ். மோகன்தாஸ் ஆகியோர் பிற நான்கு அறங்காவலர்களாவர்.

சென்னை, ஹாரிஸ் டி. வி. எஸ். நிறுவனத்தின் இயக்குநரும், மதுரை டி. வி. எஸ். அறக்கட்டளையின் உறுப்பினர்களில் ஒருவருமான திரு. ஆர். இரத்தினம் இந்த அறக்கட்டளையின் பொறுப்பாளராக இருந்தார்.

பிச்சைக்காரர் புதுவாழ்வு முதலமைச்சர் நிதிக்காக அப்போதைய முதலமைச்சர் திரு. கருணாநிதியிடம் கொடுப்பதற்காக 1971 ஜூலை மாதத்தில் ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை டி. வி. எஸ். அறக்கட்டளை அனுப்பியது. இதனை நன்கொடையாக அளித்தவர் முதலமைச்சரைப் பேட்டி காணும் பத்திரிகையாளர் முயன்றார். ஆனால், முடியவில்லை. ஆகவே, அந்தக் காசோலையை அவர் டி. வி. எஸ். அறக்கட்டளையிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு கல்லூரி கருணாநிதி அறக்கட்டளைக்கு 50 ஆயிரம் ரூபாய் நன்கொடை அளிக்கும்படியும், எஞ்சியுள்ள 50 ஆயிரம் ரூபாயினை கோடைக்கானல் கொல்ஃப் சங்கத்திற்குக் கொடுத்துவிடும்படியும் கேட்டுக் கொண்டார். இந்த நன்கொடை ரூ. 50 ஆயிரமும் ஆரம்பத் தொகை ரூ. 1,001 ஐயும் சேர்த்து, சென்னை, மவுண்ட் ரோடில் உள்ள யூனைடெட் கமர்ஷியல் பாங்கில் இந்த அறக்கட்டளையின் குறித்த கால வைப்பீட்டுக் கணக்கில் போடப்பட்டது.

இந்த வைப்பீடுகளிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்திலிருந்து ரூ. 2,000 சென்னை, தியாகராயர் கல்லூரியில் மாலை நேர வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை ஒன்றை ஏற்படுத்துவதற்காகச் சென்னை பல்லேக் கழகப் பதிவாளருக்கு 1974 ஆகஸ்டு மாதத்தில் அனுப்பப்பட்டது. இந்தப் பணத்தைக் கணக்கிலிருந்து எடுத்ததற்கு ஆதரவாக, காசோலைகளின் அடிக்கட்டைகளை வைத்து வங்கி கொடுத்துள்ள விவர அறிக்கை இருக்கிறது என்று திரு. இரத்தினம் (சாட்சி 2), திரு. செல்வம் (சாட்சி 3) ஆகியோர் சாட்சியம் அளித்துள்ளனர். ஆனால், அறக்கட்டளைக்குக் கவலிக்கும் சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பாளர் திரு. கிருஷ்ணமூர்த்தியும் (சாட்சி 6), தியாகராஜர் கல்லூரியின் துணை முதல்வர் திரு. எம். இராஜமாணிக்கமும் (சாட்சி 7) கே. கே. அறக்கட்டளையிலிருந்து ரூ. 2,000-ம் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படுவதை அதுவும் நன்கொடை எதுவும் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படுவதை மறுத்தனர். எனவே, அறக்கட்டளை நிதியிலிருந்து செலவிடப்பட்ட 2,000 ரூபாய்க்கு உண்மையில் கணக்கு எழுதப்படவில்லை என்று சந்தேகப்படுவதற்குக் காரணம் இருக்கிறது.

1974–75 உடன் முடிவடையும் ஆண்டில் மாணவர்களுக்கு 1,400 ரூபாய் கொடுக்கப்பட்டுள்ள தாகவும், பல்வேறு கல்லூரிகள், பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை மாக 2,950 ரூபாய்க்குக் காசோலைகள் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அறக்கட்டளையின் நிதிகளுக்கு கணக்குப்புத்தகம் எதுவும் வைத்துவரப்படவில்லை. திரு. கணேசன் மீசாவின்மேற் காவலில் வைக்கப்பட்டார். ஏனைய அறங்காவலர்கள் இந்த அறக்கட்டளையில் அதிக அக்கறை காட்டாததால் திரு. இரத்தினம் 3–8–1976 அன்று அறக்கட்டளை பதவியை ஜூராளுமாசெய்துவிட்டுப் பதிவேடுகளை 16—11—1976 அன்று திரு. செல்வத்திடம் ஒப்படைத்தார்.

குற்றச்சாட்டு எண்.21(H)–அண்ணா அறக்கட்டளை

திரு. கருணாநிதி தமது 46-வது பிறந்த நாள் அன்று அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தி அதற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகர் அண்ணாவின் பெயரை இட்டு 'அண்ணா அறக்கட்டளை' என அறிவித்தார். இந்த அறக்கட்டளையின் பத்திரம் 5—11—1969 அன்று வடசென்னை, பதிவாளர் அலுவலகத்தில் 671 69 ஆம் ஆவணமாகப் பதிவு செய்யப்பட்டது. இந்த அறக்கட்டளைக்கு ஆரம்ப நிதியாக திரு. கருணாநிதி 101 ரூபாய் கொடுத்தார். அறங்காவலர்கள் குழுவில் ஐவர் இருந்தனர். அவர்கள், முரசொலி மாறன் (திரு. கருணாநிதியின் மருமகன்), செல்வம் (மாறனின் சகோதரர்), சென்னை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் மாவட்டச் செயலாளர் திரு. நீலநாராயணன், முன்னாள் மேயரும் அவை ஒசையின் இயக்குநருமான திரு. வேலூர் நாராயணன், பிரபல நிரைப்படத் தயாரிப்பாளர் சுந்தர்லால் நகாதா ஆகியோர் ஆவர். சுமார் ஓராண்டு கழித்து, வேலூர் நாராயணனுக்கும் திரு. கருணாநிதிக்கும் தகராறு ஏற்பட்டு வேலூர் நாராயணனுக்குப் பதிலாக பிரபல நிரைப்பட இயக்குநர் திரு. பஞ்சு அறங்காவலராக அமர்த்தப்பட்டார். பத்திரத்தின்படி இந்த அறக்கட்டளையின் அலுவலகம் முரசொலி அலுவலகத்தில் அமைந்திருந்தது.

அறக்கட்டளைப் பத்திரத்தில் கொடுத்துள்ளவாறு இந்த அறக்கட்டளையின் நோக்கங்களாவன :—

(a) கல்வி நிறுவனங்களை ஏற்படுத்திப் பராமரித்தல்.

(b) மருத்துவ மனைகளையும் மருந்தகங்களையும் ஏற்படுத்திப் பராமரித்தல்.

(c) ஏழை எளியவர்,ஏலாமையுற்றவர், உடல் ஊனமுற்றவர், மனநோயுற்றவர்களுக்கு இல்லங்களையும் நிலையங்களையும் ஏற்படுத்திப் பராமரித்தல்.

(d) தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் மேம்படுத்துதல்.

(e) இசை, நாடகம், ஏனைய நுண்கலைகளுக்கு உதவுதலும் அவற்றை மேம்படுத்தலும்.

(f) கைத்திறத் தொழிலுக்கு ஊக்கம் அளித்தலும் அதன் வளர்ச்சிக்குப் பாடுபடுதலும்.

(g) தகுநியுள்ள மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகளையும் பரிசுகளையும் ஏற்படுத்தல்.

(h) பொதுப் பயன் உள்ள வேறு எந்த நோக்கத்திற்கும் பாடுபடுதல்.

(i) இந்த அறக்கட்டளையைப் போன்று பொது மக்களுக்குத் தருமம் செய்கின்ற நோக்கத்துடன் ஏற்கெனவே இருந்து வரும் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளித்தல்.

அறக்கட்டளைப் பத்திரத்தின்படி, அதன் ஸ்தாபகர் திரு. கருணாநிதி, அந்நிர்வாகக்குழையே ஏற்படும் காலியிடத்தில் வேறு எவரையும் அமர்த்தும் அதிகாரம் அவர் ஆயுள்காலம் வரை அவரிடம் இருக்கும். அதன் பின்னர் திரு. மாறன் அந்த அதிகாரத்தைச் செலுத்தி வருவார்.

இந்த அறக்கட்டளையின் கணக்குப் புத்தகங்கள் திருவாளர் அறங்காவலர் திரு. முரசொலி மாறனால் எழுதி வரப்படுவதாகத் தோன்றுகிறது. இந்த கணக்குப் புத்தகங்களின்படி, ரூ. 2,04,000 நன்கொடையாகப்பெறப்பட்டது. குறிப்பாகச்சென்ன குதிரைப்பந்தய சங்கத்திடமிருந்து 50 ஆயிரம் ரூபாயும், திரு. வி. எஸ். தியாகராஜ முதலியாரிடமிருந்து 15 ஆயிரம் ரூபாயும் நன்கொடையாகப் பெறப்பட்டன. ஏ.வி.எம். அறக்கட்டளை ரூ. 10 ஆயிரம் நன்கொடை அளித்திருப்பதாகவும் இந்தக் கணக்குப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், ஏ.வி.எம். அறக்கட்டளையின் செயலாளர் திரு. வி. சீனிவாசன் (சாட்சி 4) இந்த அறக்கட்டளைக்குப் பணம் எதுவும் நன்கொடை அளித்துள்ளதாகக் கூறுவதை மறுத்துள்ளார்.

செல்வத்தின் (சாட்சி 1) சாட்சியத்தின்படி, 3,10,000 ரூபாய் அறக்கட்டளையின் பெயரில் குறிப்பிட்ட கால வைப்பீட்டுக் கணக்கில் போட்டு வைக்கப்பட்டுள்ளது. அறக்கட்டளையின் கணக்குப் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ள வரவைக் காட்டிலும் ரூ. 1,06,000 அதிகம் இருப்பதை இதுகாட்டுகிறது. இந்த முரண்பாட்டுக்கு என்ன காரணம் என்பது இன்னும் விளக்கப்படவில்லை. முரண்பாடு சரி செய்யப்படவுமில்லை.

திரு. பஞ்சு 5,000 ரூபாய் நன்கொடை அளித்தார் என்றும், பின்னர் அவர், திரு. வேலூர் நாராயணனுக்குப் பதிலாக அறங்காவலராக நியமிக்கப்பட்டார் என்றும் திரு.செல்வம் கூறினார். ஆனால், இந்த நன்கொடை பற்றி கணக்குப் புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை. இந்த முரண்பாடுகளைச் சீர் செய்யும்படி திரு. செல்வத்துக்குப் பலதடவை ஆள் அனுப்பப்பட்டது. ஆனால், அவ்வாறு செய்ய அவர் கவனிப்படவேயில்லை.

அறக்கட்டளை கணக்கிலுள்ள குறித்தகால வைப்பீட்டுத் தொகைக்குக் கிடைத்த வட்டியிலிருந்து 7,600 ரூபாய் 1970-ல் 38 மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 200 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டது. 1971-ல் 40 மாணவர்களுக்கு ரூ. 8,000 கொடுக்கப்பட்டது. 1972-ல் 36 மாணவர்களுக்கு ரூ. 7,200-ம், 1973-ல் 35 மாணவர்களுக்குத் தலா ரூ. 300 வீதம் ரூ. 10,500-ம், 1974-ல் 45 மாணவர்களுக்குத் தலா ரூ. 300 வீதம் ரூ. 13,500-ம், 1975-ல் 60 மாணவர்களுக்குத் தலா ரூ. 300 வீதம் ரூ. 18,000-ம், 1976-ல் 43 மாணவர்களுக்குத் தலா ரூ. 300 வீதம் 12,900-ம் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் தமிழில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பரிசு பெறத் தகுதியுடைய மாணவர்களின் பட்டியல் பள்ளிக்கல்வி இயக்குநரிடமிருந்து பெறப்பட்டது. இது தவிர, 1972 முதல் 1976 வரை 8 மாணவர்களுக்கு ரூ. 155-லிருந்து ரூ. 750 வரை மொத்தம் ரூ. 2,555 நிதியுதவி அளிக்கப்பட்டது.இவற்றைத் தவிர அறக்கட்டளையின் நோக்கங்களுக்காக வேறு எதுவும் செய்யவில்லை.

சுருங்கக்கூறின், இது, பொதுமக்களுக்கு அமம் செய்யும் ஒரு அறக்கட்டளை ஆகும். அறக்கட்டளையின் முக்கிய நோக்கங்களை நிறைவேற்றச் செலவு செய்யப்படுகிறது. ஆனால், அறக்கட்டளையின் கணக்குகளில் ஆட்சேபகரமான தகவல்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; அவையாவன :—

(a) கணக்குப் புத்தகத்தில், நன்கொடை வந்ததாகக் காண்பிக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலாக ரூ. 1,06,000 குறித்தகால வைப்பீட்டுக் கணக்கில் இருக்கிறது. அதிகப்படியாக உள்ள இந்தத் தொகை எப்படி வந்தது என்பதற்கு இன்னும் விளக்கம் கொடுக்கப்படாமலிருக்கிறது.

(b) திரு. பஞ்சு நன்கொடை கொடுத்துள்ளதாகக் கூறப்படும் ரூ. 5,000-ம் கணக்கில் வரவில்லை.

(c) ஏ.வி.எம். அறக்கட்டளையிடமிருந்து நன் கொடை வந்ததாகக் காட்டப்பட்ட ரூ. 10,000 உண்மையெனத் தோன்றவில்லை. ஏனெனில், அத் தொகையைக் கொடுத்துள்ளதாகக் கூறப்படுபவர் இந்த அறக்கட்டளைக்கு நன்கொடை எதுவும் கொடுக்கவில்லையெனக் கூறியுள்ளார். பின்னர், இந்த ரூ. 10,000 எப்படி வந்தது? அது இன்னும் மர்மமாகவே இருக்கிறது.

குறச்சாட்டு எண் 21 (1)—முத்துவேலர் அறக்கட்டளை.

இந்த அறக்கட்டளைக்குத் திரு. கருணாநிதியின் தகப்பனார் பெயர் சூட்டப்பட்டது. 6—10—71 அன்று வடக்குப் பதிவு அலுவலகத்தில் 4025/1971 ஆம் எண் ஆவணமாகப் பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைப் பத்திரத்தின்மீது இந்த அறக்கட்டளை திரு. கருணாநிதியால் ஏற்படுத்தப்பட்டது. இப் பத்திரத்தின்படி, திரு. கருணாநிதி நாகப்பட்டினத் தில் அவரது சொந்த ஊரான திருக்குவளை கிராமத் தில் அவர் சொந்தமாக வாங்கியுள்ள, 1,500 சுரூபாய் பெறுமானமுள்ள சுமார் 21 சென்ட் நிலத் தையும் அங்குள்ள ஓட்டு வீட்டையும் இந்த அறக் கட்டளைக்கு எழுதிவைத்தார்.

இந்த அறக்கட்டளையில் உள்ள அறங்காவலர்கள் வருமாறு : திரு. கருணாநிதியின் உறவினர் திரு. அமிர்தம் ; திரு. கருணாநிதியின் மற்றொரு உற வினரான செல்வம் ; கருணாநிதியின் மகன் மு. க. முத்து ; திருவாரூர் தேவன் ; திருச்சிராப் பள்ளி முத்துகிருஷ்ணன். பத்திரத்தில் கூறியுள்ள படி இந்த அறக்கட்டளையின் நோக்கங்களாவன :—

(a) மக்களிடத்தில் படிக்கும் பழக்கத்தை உண்டாக்குதல்; அப்பழகியுள்ள மக்களுக்கு அவர்கள் அறிவை வளர்த்துக் கொள்ள உதவு தல் ;

(b) நல்ல நூலகம் ஒன்றைத் தொடங்க பரிசுகளையும் நன்கொடைகளையும் நிரட்டுதல்.

நிர்வாக அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. அமிர்தம் 6— 4—1972 முதல் 7— 7—1972 வரை மொத்தம் ரூ. 34,803 ஐ வசூலித்தார். நன்கொடை வழங்கியவர்களுக்கு ரசீதுகள் கொடுக்கப்பட்டன. நன்கொடைப் பணமும் கணக்குப் புத்தகத்தில் வரவு வைக்கப்பட்டது. பரிசாகக் கொடுக்கப்பட்ட சுமார் 50 புத்தகங் களுடன் ஆரம்பிக்கப்பட்ட நூலகத்தை 1972 ஜூன் மாதத்தில் அப்போதைய ஆளுநர் திரு. கே. கே. ஷா தொடங்கி வைத்தார்.

கட்டிடத்தைச் செப்பனிடுவதற்காகவும் மாறுதல்களைச் செய்வதற்காகவும் ரூ. 26,367.89 செலவிடப்பட்டது; மேஜை, நாற்காலிகள் வாங்க ரூ. 6,064.86-ம் தொடக்க விழாவிற்காக அலங் கார விளக்குகளுக்கும் பிற ஏற்பாடுகளுக்கும் ரூ. 2,263.80-ம் செலவிடப்பட்டன. எஞ்சியிருப் பது ரூ. 5.35 தான்.

சென்னை, ஆயிரம் விளக்குப் பகுதியிலுள்ள இந்தியன் பாங்கில் 3— 6— 1972 அன்று அறங்காவ லர்கள் பெயரில் ரூ. 101 போட்டு ஒரு நடப்புக் கணக்கு தொடங்கப்பட்டது.

மேற்படி வங்கியின் மேலாளர் கொடுத்த கணக் குகளைப் பார்த்ததில், ஆரம்பத்தில் போட்ட பணத்தைத் தவிர, நன்கொடை வசூலித்த தாக ஒப்புக் கொள்ளப்பட்ட ரூ. 34,803-ல் பணம் எதுவும் வங்கியில் போடப்படவில்லை. நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்படும் பணம் யாவும் வங்கியில் போடப்பட வேண்டும் என்று அறக்கட்டளைப் பத்திரத்தில் திட்டவட்ட மாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் நன்கொடையாக வந்த பணம் வங்கியில் போடப்படவில்லை. அநேக மாக நன்கொடைப்பணம் முழுவதும் கட்டிடத் தைச் செப்பனிடுவதிலும் மாறுதல்கள் செய் வதிலும் செலவிடப்பட்டுள்ளதாகக் கூறப்படு கிறது. நூலகத்திற்காக ஒரு புத்தகம் கூட வாங்கப்படவில்லை. அநேகமாக எல்லாச் செலவு களையும் அபிர்தம் எதேச்சாதிகாரமாகச் செய் துள்ளார். மேலும், அறக்கட்டளைப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி, அறங்காவலர்கள் குழுவின் தீர்மானத்தையும் அவர் பெறவில்லை.

ஒரு நாளைக்கு ஆன மொத்த வசூல் தொகை மட்டுமே கணக்குப் புத்தகத்தில் காண்பிக்கப் பட்டிருக்கிறது. நன்கொடை கொடுத்தவர் களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லையாத லால், அந்த விவரங்கள் தெரியவில்லை. கட்டி டத்தைச் செப்பனிடுவதற்காகத் தச்சர், கொத்தர் ஆகியோருக்குப் பெரும் பணம் கொடுக் கப்பட்டுள்ளதாகக் கணக்கில் காட்டப்பட்டிருக் கிறது. ஆனால், அவர்களைப் பற்றிய விவர மில்லை. செலவுகளை நிருபிக்கச் சைசாத்து களும் இல்லை. அறங்காவலர்கள் கூட்டம் நடை பெறவில்லை. கணக்குகள் எவையும் ஒப்புதலுக் காகக் குழுவின்முன் வைக்கப்படவில்லையென்று தெரிகிறது. ரசீது புத்தகத்திலும் போதுமான தகவல் இல்லை. முக்கியமாக இருக்க வேண்டிய விவரங்கள் அதில் காணப்படவில்லை.

அறங்காவலர்களுள் ஒருவரான திரு. முத்து கிருஷ்ணன் (சாட்சி 2) இந்த அறக்கட்டளை இருப்பது பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாது எனத் தெரிவித்துள்ளார்.

கமிஷன் நியமித்துள்ள புலனுய்வு அதிகாரிகள், 41 சாட்சிகளை விசாரித்துள்ளனர். இந்த சாட்சிகளுள் பலர் நேரிவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாவர். கமிஷன் கொடுத்த அறிவிப்புகளையொட்டிப் பலரும் உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர். புலனுய்வு அதிகாரிகளிடம் அவர்கள் என்ன கூறியுள்ளனரோ அதையே அவர்களின் உறுதிமொழிப் பத்திரங் களிலும் வலியுறுத்தியிருக்கின்றனர். இந்த 41

சாட்சிகளுள், 17 சாட்சிகள் (சாட்சிகள் 3, 4, 5, 14 முதல் 22, 24, 26, 30, 39, 40) இந்த அறக்கட்டளை இருப்பது பற்றித் தங்களுக்கு எதுவுமே தெரியாது என அவர்களது வாக்கு மூலத்தில் கூறியுள்ளனர். இந்த அறக்கட்டளைக்கு அவர்கள் நன்கொடையை எதுவும் அளித்துள்ளதாகக் கூறுவதையும் அவர்கள் ஒட்டு மொத்தமாக மறுத்துள்ளனர். அவர்கள் பெயரில் தயாரிக்கப்பட்ட ரசீதுகளை அவர்களிடத்தில் காட்டியபோது அவர்கள், அவற்றைப் ''போலி'' யென்றும் 'புனையப்பட்டவை' யென்றும் கூறினர். இந்த அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்த சிலருக்கு விடுத்த அழைப்பாணைகள் ''இந்த முகவரியில் அப்படி யாரும் இல்லை'' ''கண்டுபிடிக்க முடியவில்லை'' என்னும் குறிப்புடன் திரும்பி வந்துவிட்டதால் அந்த நன்கொடையாளர்களின் முகவரியும் பொய்யான தெனத் தெரிய வந்தது. நிர்வாகிகளுள் ஒருவரான கழகத்தைச் சேர்ந்தவர்களே இந்த அறக்கட்டளை பற்றித் தங்களுக்கு எதுவும் தெரியாது எனக் கூறியுள்ளனர்.

ரசீது புத்தகங்கள் புனையப்பட்டதற்குச் சாட்சியாக எம். சமையப்பன், எம்.இ. அப்துல் வகாப், ஆர். பூச்சி நாயுடு ஆகியோரின் வாக்குமூலங்கள் இருக்கின்றன. திரு. சமையப்பன் தி.மு.க. கட்சியில் ஓர் உறுப்பினர். திரு. அப்துல் வகாப் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர். திரு. பூச்சி நாயுடு காங்கிரஸ் கட்சி உறுப்பினர். தி.மு.க. தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே அக் கட்சியில் தீவிர உறுப்பினராக இருக்கும் எம். சமையப்பன் (சாட்சி 3) அவரது வாக்கு மூலத்தில், இந்த அறக்கட்டளைக்கு நன்கொடை எதுவும் கொடுத்துள்ளதாகக் கூறுவதை மறுத்துள்ளார்; 244-ம் எண் ரசீதில் (புலனுய்வு அறிக்கையில் இணைப்பு II, வரிசை எஸ். 5) அவருடைய பெயர் இருக்கிறது. 25—4—72 அன்று அவர் 500 ரூபாய் கொடுத்ததாகச் சான்று காட்டுவதைப்போல் இது இருக்கிறது. ஆகவே, 244-ம் எண் ரசீது புனையப்பட்ட ஒரு ரசீது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

நன்கொடையில் பெரும்பகுதி மூன்று கோயில் களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. மூன்று தேவஸ்தானங்கள் அதாவது கோவிலூர் அருள்மிகு மந்திரபுரீஸ்வரர் தேவஸ்தானமும், முத்துப் பேட்டை அருள்மிகு சௌந்தரேஸ்வரசுவாமி தேவஸ்தானமும், எடும்பாவனம் அருள்மிகு சற்குணநாதசுவாமி தேவஸ்தானமும் முறையே ரூ. 2,000, ரூ. 2,500, ரூ. 2,500 நன்கொடை கொடுத்தன. தஞ்சாவூர் இந்து சமய-அறக் கட்டளைகள் துறையின் அப்போதைய துணை ஆணையாளர் திரு. வி. எஸ். கோதண்டபாணி (சாட்சி 6) கேட்டுக் கொண்டதன் பேரில், இந்த நன்கொடைகள் யாவும் கொடுக்கப்பட்டன. இதனை மறைக்கச் சமய நூல்கள் வாங்குவதற்காக இத் தொகை கொடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. ஆனால் அப்படிப்பட்ட புத்தகம் எதுவும் வாங்கப்படவில்லை. கோயில் நிதியிலிருந்து இந்த நன்கொடைகளை அனுப்பும்படிச் சென்னை, இந்து சமய-அறக்கட்டளைத் துறையின் அப்போதைய ஆணையாளர் திரு. K. S. நரசிம்மன் (சாட்சி 7) தனக்கு வாய்மொழியாக ஆணையிட்டதாகச் சாட்சி 6 கூறினார். இருப்பினும் திரு. நரசிம்மன் இதனை மறுத்துள்ளார்.

சம்பந்தப்பட்ட கோயில்களின் நிர்வாக அதிகாரிகள் S. காவியப்பன் (சாட்சி 8), R. கோவிந்தராஜ் (சாட்சி 9), C. R. குஞ்சித பாதம் (சாட்சி 10) ஆகியோர் திரு. அமிர்தத் திற்கு நன்கொடைகள் அனுப்பும்படித் தங்களுக்குக் கட்டளையிட்டு, திரு. தோதண்டபாணி பின்னையிடமிருந்து 23—5—1972 ஆம் நாளிட்ட, எழுத்து மூலமான கட்டளைகள் வரப்பெற்றதாகத் தெரிவித்துள்ளனர். சற்குணநாதசுவாமி தேவஸ்தானம் கொடுத்த நன்கொடை ரூ. 2,500 கணக்குப் புத்தகத்தில் காட்டப்படவில்லை.

இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் 36 ஆவது பிரிவின்படி, சமயக் காரியங்களுக்கு கோயில் நிதியிலிருந்து பணம் கொடுக்க அனுமதிக்கப்படுகிறது. எந்தெந்தக் காரியங்களுக்குக் கோயில் நிதியைப் பயன்படுத்தலாம் என்பது பற்றி மேற்படி சட்டத்தின் 66(i) பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கோயில் நிதியை இவ்வாறு வேறு காரியத்திற்குப் பயன்படுத்துவது சட்டப்படி அனுமதிக்கத்தக்கதா என்று கேட்டு தமிழ்நாடு அரசு சட்டத்துறை கூடுதல் செயலாளருக்கு எழுதப்பட்டது. இதில் பின்பற்றியுள்ள நடைமுறை 36-வது பிரிவில் குறிப்பிடப்பட்ட சட்டப்படிக்கான நடைமுறைக்கு நேர் எதிரிலையென்று எடுத்த எடுப்பில் கூறிவிடலாம். இதில், முதற்கண் ஆணையாளரது கட்டளைகளின் பேரில் கோயில் நிதி வேறு காரியத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பின்னர், அவ்வாறு வேறு காரியத்திற்குப் பயன்படுத்தியதற்கு ஆணையாளர் ஒப்புதல் அளித்திருக்கிறார். இது முன்னர் செய்து விட்ட செலவினைப் பின்னர் ஏற்று அனுமதிப்பதாகும். 36-வது பிரிவின்படி இது அனுமதிக்கத்தக்கதல்ல. ஆகவே, சமய நிறுவனங்களின் நிதியை நூலகம் ஏற்படுத்துவதற்காகக் பயன்படுத்தியதும், இந்த வகையில் பின்பற்றிய நடைமுறையும் இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் விதித்துறைகளுக்கு முரணானது என்று அவர் கருத்து தெரிவித் துள்ளார்.

எனவே, இக் கோயில்களிடமிருந்து அறக் கட்டளைகளுக்காக நன்கொடைகள் பெற்றது சட்டத்தை மீறியதாகும்.

குற்றச்சாட்டு எண் 21(1)

வெற்றிச்செல்வி அன்பழகன் அறக்கட்டளை.

முன்னுள் தி.மு.க. அரசில் மக்கள் நல் வாழ்வு அமைச்சராக இருந்த திரு. அன்பழகன் சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் முன்பு தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். 19—12—1971-ல் அவரது 50-வது பிறந்த நாளன்று சிறப்பு மலர் ஒன்றை வெளியிட அவரது பழைய மாணவர்கள் சிலர் முடிவு செய்தனர். சென்னை-2ல் உள்ள கனரா பாங்கில் திரு. அன்பழகனின் முன்னுள் மாணவர்களான ஹமீது, பாண்டுரங்கன் ஆகிய இருவர் பெயரில் குறைந்த தொகையான ரூ. 10 போட்டு கூட்டாகச் சேமிப்புக் கணக்கு ஒன்று 12—10—1971-ல் தொடங்கப்பட்டது. ரூ. 275 முதல் ரூ. 1,000 வரையிலான கட்டண விகிதங்களில் விளம்பரங்களைச் சிறப்பு மலரில் சேர்ப்பதற்காக விளம்பரம் கொடுக்கும்படிக் கேட்டு அச்சிட்ட வேண்டுகோள்கள் விடுக்கப் பட்டன. 170 வணிக நிறுவனங்களிடமிருந்து ரூ. 51,000 வசூலிக்கப்பட்டது. 20—4—1972 அன்று ஒரு விழாவில் திரு. கருணாநிதி இந்த சிறப்பு மலரை முறைப்படி வெளியிட்டார். இந்த விழாவில் திரு. நெடுஞ்செழியனும் ஏனையோரும் கலந்து கொண்டனர். மலர் 1,000 பிரதிகள் அச்சிடுவதற்கான செலவும் பிற இடை நிகழ் செலவுகளும் சேர்ந்து மொத்தம் ரூ. 17,500-ஐக் கழித்த பின்னர் எஞ்சியுள்ள ரூ. 38,541·57 சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

முன்னுள் சட்ட மன்ற உறுப்பினரும், தி.மு.க. கட்சியின் மாநிலச் செயலாளருமான திரு. வீராசாமியைத் தலைவராகவும், திருவாளர்கள் அன்புச் செல்வன், சுப்பிரமணியம், ஹமீது, பாஸ்கரன் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு டாக்டர் வெற்றிச் செல்வி அன்பழகன் அறக் கட்டளை 15—8—1974-ல் அமைக்கப்பட்டது. அச் சமயம், அறக்கட்டளை பத்திரம் எதுவும் எழுதப்பட வில்லை. ஆனால், குறிப்புப் புத்தகத்தின்படி, நோயுற்றிருக்கும் ஏழை மக்களுக்கு ஓமியோபதி சிகிச்சையளிப்பதில் கைதேர்ந்தவராக விளங்கின மறைந்த டாக்டர் வெற்றிச் செல்வியின் நினைவாக ஏழை, எளியோருக்கு மருத்துவக் கல்வி உட்பட கல்வி வசதிகளை அளிப்பதும், அறப் பணிகளுக்கு நன்கொடைகள் வழங்குவதும் இந்த அறக்கட்டளை யின் நோக்கங்களாகும்.

4—10—1975 அன்று நடைபெற்ற அறக்கட்டளைக் கூட்டமொன்றில், சென்னை-10-ல் உள்ள அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு அறக்கட்டளை நிதியிலிருந்து நன்கொடையளிப்பதென்றும் இது டாக்டர் வெற்றிச் செல்வி ஓமியோபதி மருத்துவக் கல்லூரி என அழைக்கப்படலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே திரு. அன்பழகனும் இந்த வேண்டுகோளைத் திரு. கருணாநிதிக்கு அனுப்பி வைத்தார். திரு. கருணாநிதி, இந்தக் கல்லூரி டாக்டர் வெற்றிச் செல்வி அன்பழகன் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியென அழைக்கப்படவேண்டும் என்று கூறி 27—10—1975-ல் அவரே நேரடியாக ஆணை பிறப்பித்தார். நன்கொடையளிப்பதாக உறுதியளித்திருந்த ரூ. 40,000 3—11—1975-ல் இந்திய ரிசர்வ் வங்கியில் செலுத்தப்பட்டது. 17—11—1975 அன்று ஓமியோபதி மருத்துவக் கல்லூரி டாக்டர் வெற்றிச் செல்வி அன்பழகன் பெயர் சூட்டப் பெற்றது; திரு. கருணாநிதி அக் கல்லூரியை முறைப்படித் தொடங்கிவைத்தார்.

இந்நாள் வரை இந்த அறக்கட்டளைக்கு அறக் கட்டளைப் பத்திரம் எதுவும் கிடையாது. குறிப்புப் புத்தகத்தின்படி இந்த அறக்கட்டளை 15—8—1974-ல் அமைக்கப்பட்டிருந்தாலும் இது பதிவு செய்யப்படவில்லை. திரு. S. ஹமீது வருமான வரி கட்டுபவராக இருந்தாலும் கூட, இந்த அறக்கட்டளை நிதிகளுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கும்படிக் கேட்கவில்லை. அரசு இந்த 40,000 ரூபாயைத் திருப்பிக் கொடுத்த பிறகு, 1977 பிப்ரவரி மாதத்தில்தான் இந்த அறக்கட்டளை பெயரில் வங்கிக் கணக்கு ஒன்று தொடங்கப்பட்டது.

ஓமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு டாக்டர் வெற்றிச் செல்வி அன்பழகன் என்று பெயர் சூட்டுவதானது இந்த அறக்கட்டளையின் நோக்கத் தின்கீழ் வரவில்லை.

இந்த அறக்கட்டளை தொடர்பாக முன்னுள் முதலமைச்சர் திரு. கருணாநிதி செய்த முறையற்ற செயல் பாதெனில் சுகாதாரத் துறைக்காக இந்த அறக்கட்டளையிடமிருந்து ரூ. 40,000 நன்கொடை பெற்றுக் கொண்டதன் பேரில், சென்னை, அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு திரு. அன்பழகனின் மனைவி பெயர் சூட்டப்படவேண்டும் என்று அவர் கட்டளையிட்டதாகும். இது செய்யத் தகாத சிறிய செயலாகும்.

ஏனெனில், குடியரசுத் தலைவர் ஆட்சி வந்த பின்னர், இந்த நன்கொடை திருப்பிக் கொடுக்கப் பட்டு அது அறக்கட்டளை கணக்கில் காண்பிக்கப் பட்டுள்ளது.

மேலே விவாதித்த சாட்சியத்திலிருந்து மேற்காணும் முடிவுகளை எடுக்கலாம் :—

(1) சென்னை, தி.மு.க. அறக்கட்டளை.

இந்த அறக்கட்டளைக்கு "நன்கொடைகள்" சேர்ப்பதில், சில இனங்களில் ஊராட்சிகளின் தலைவர்கள் நிர்ப்பந்த நடவடிக்கைகளைக் கைக் கொண்டு தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள சில தொடக்கப் பள்ளிகளின் ஆசிரியர்கள் ஊதியத் திலிருந்து எதேச்சாதிகாரத்துடன் குறிப்பிட்ட தொகையைப் பிடித்தம் செய்தனர்.

வருமான வரிக் கணக்கில் வரவாகக் காட்டியுள்ள தொகைக்கு அதிகமாக உள்ள ரூ. 1,32,011.55 எப்படி வந்தது என்பதற்கு விளக்கம் தெரிவிக்கப்படவில்லை.

சென்னை, 85, அண்ணாசாலையில் உள்ள சொத்தை விற்றவர்கள் அந்தச் சொத்தை மொத்தத்தில் குறைந்த மதிப்பிற்கு விற்றுவிடக் கட்டாயப்படுத்தப்பட்டனர் என்றே நிர்ப்பந்தப்படுத்தப்பட்டனர் என்றே ஐயத்திற்கு இடமின்றிக் கூற இயலாது. இந்தச் சொத்திற்கு நகர்ப்புற நிலவரியிலிருந்து முந்தைய ஒருநாளிலிருந்து விலக்கு அளித்திருப்பதானது முறையற்ற செயலாகும் அல்லது அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தியதாகும்.

இந்த அறக்கட்டளை நிதியின் பெரும்பகுதி இயங்காச் சொத்தினை வாங்குவதற்கே செலவிடப்பட்டுள்ளது. நிதியில் ஒரு பகுதியேனும் அறக்கட்டளைப் பத்திரத்தில் கூறியுள்ள அறக்காரியங்களுக்கு இதுவரை செலவிடப்படவில்லை அல்லது அறக்காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற அந்த அறக்கட்டளையின் நோக்கம் இது வரை செயல்படுத்தப்படவில்லை. இதனைப் பார்க்கும் போது, உறுதியிட்டுக் கூறிய நோக்கங்களும் எண்ணங்களும் இந்த அறக்கட்டளையை ஏற்படுத்துவதில் உண்மையாக இராதோ என்ற ஐயப்பாடு எழுகிறது.

(2) மதுரை மாவட்ட தி.மு.க. அறக்கட்டளை.

மதுரை நகரில் 159, மேற்கு மாசித் தெருவில் அமைந்துள்ள வீடு மதிப்புள்ள சொத்தினை மொத்தத்தில் குறைந்த மதிப்பிற்கு இந்த அறக்கட்டளை வாங்கியது எனபதற்குச் சாட்சியமில்லை.

அறக்கட்டளைப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள படி, அறக்கட்டளையின் நோக்கம் பொதுமக்களுக்கு அறப்பணி செய்வதாகும். ஆனால், இந்த நோக்கங்களுக்காகப் பணம் எதுவும் செலவிடப்படவில்லை. அறக்கட்டளைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் பொய் என்ற ஐயப்பாடு எழுவது நியாயமே.

இந்த அறக்கட்டளைக்கு எந்தெந்த வழிகளில் பணம் வந்தது என்பதற்கு முறையான கணக்குகள் இல்லாததைப் பார்க்கும்போது சந்தேகிக்கப்படத்தக்க வழிகளிலிருந்து சந்தேகிக்கப்படத்தக்க முறையில் கணக்கில் வராத பணத்தை அறக்கட்டளைக்குச் சேர்த்திருக்கக் கூடும் என்று ஐயம் கொள்ள இடமேற்படுகிறது. ஆயினும், இதனை நிரூபிக்கச் சான்று எதுவுமில்லை.

இந்த அறக்கட்டளை, சென்னை, தி.மு.க. அறக்கட்டளை ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அறங்காவலர்களில் பெரும்பாலோர் திரு. கருணாநிதியால் நியமிக்கப்படுகின்றனர். அறங்காவலர்களிடையே ஏற்படும் நிலையான அல்லது தற்காலிகமான காலியிடங்களில் வேறு ஒருவரை அமர்த்த அவருக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதனால், எல்லா அதிகாரமும் கட்டுப்பாடும் அவரிடமே இருப்பதற்கு வழி யேற்படுகிறது.

(3) நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை.

(a) இந்த அறக்கட்டளை தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமான அறக்கட்டளை அல்ல. ஆனல் பொதுவான ஓர் அறக்கட்டளையாகத் தெரிகிறது. அறங்காவலர்கள் தனிப்பட்ட முறையிலோ தனியாருக்குச் சொந்தமாகவோ உள்ள சொத்துக்களை வாங்க இந்த அறக்கட்டளை பயன்படுத்தப்படவில்லை;

(b) அறக்கட்டளை நிதிகளில் ஒரு பகுதி இந்த அறக்கட்டளையின் அறிவிக்கப்பட்ட அறப்பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது;

(c) திரு. நெடுஞ்செழியன், தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் விநியோகஸ்தர்களிடம்/இருப்பாளர்களிடம் அளவுக்குமிறிய செல்வாக்கைப் பயன்படுத்தியும் அவர்களை நிர்ப்பந்தப்படுத்தியும் இந்த அறக்கட்டளை நிதிக்குப் பணம் கொடுக்கும்படித் தூண்டுவதில் அவர் அலுவலர்களைத் தவருன முறையில் பயன்படுத்தியிருப்பதோடு கல்வி அமைச்சர் என்ற முறையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் தலைவர் என்ற வகையிலும் அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தியுள்ளார்;

(d) ஒரு மாணவருக்குக் கல்லூரி ஒன்றில் இடம் வாங்கிக் கொடுப்பதற்காக அவரது பெற்றோரிடமிருந்து இந்த அறக்கட்டளைக்கு நன்கொடை வசூலிக்கப்பட்டது.

(e) அமராவதி ஸ்ரீ வெங்கடேசா பேப்பர் மில்ஸ் நடத்திவரும் மகளிர் கல்லூரி நாள் விழாவில் பங்கேற்கும்படிக் கேட்டு அந்த ஆலை அனுப்பியிருந்த அழைப்பிதழை அப்போதைய கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் ஏற்றுக் கொள்வதற்கு முன் நிபந்தனையாக இந்த அறக்கட்டளைக்கு ரூ. 5,000 நன்கொடை கொடுக்க வேண்டுமென்று அந்த ஆலையைத் தகாதமுறையில் தூண்டியும் நிர்ப்பந்தப்படுத்தியும் இருக்கிறார். அவர் அப்போது வகித்து வந்த உயர் அரசுப் பதவியின் அந்தஸ்துக்கு இது தகாத செயலாகும்.

(f) அப்போதைய கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியனின் நிர்ப்பந்தத்தின் பேரில், தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தின் அப்போதைய நிர்வாக இயக்குநர் திரு எஸ். என். சொக்கலிங்கம், பாடநூல் நிறுவனத்தின் விநி

யோகஸ்தர்களிடமிருந்து இருப்பாளர்களிடமிருந்து இந்த அறக்கட்டளைக்கு நன்கொடை வசூலிப்பதென்ற முக்கிய நோக்கத் துடனும் விநியோகஸ்தர்களின் இருப்புகளையும் விற்பனைக் கணக்குகளையும் சோதிக்கப் போவ தாகக் கூறிக் கொண்டு பாடநூல் நிறுவனத் தின் விற்பனை அதிகாரி திரு. தேவதாஸன் மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்ய ஏற் பாடு செய்தார். இதனுல் தவிர்க்கக்கூடிய இந்த சுற்றுப் பயணங்களுக்காக பயணப்படி, நாட்படி வகையில் அநாவசியச் செலவை மேற் படி பாட நூல் நிறுவனம் (அதாவது அரசு) செய்ய வேண்டியிருந்தது.

(4) பேரறிஞர் அண்ணு அறக்கட்டளை.

இந்த அறக்கட்டளைக்கு வலுக்கட்டாயமாகப் பணம் சேர்க்க அல்லது நிதி வசூலிக்க திரு. ப. உ. சண்முகம் அவரது அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தினர். அலுவலர்களுடைய தகாத முறையில் இந்தப் பணியில் ஈடுபடுத்தினர். இந்த நிதி திரு. ப. உ. சண்முகத்தின் தலைப்பட்ட நிர்ப்பந்தங்களுக்காக முதற்கண் திரட்டப்பட்டது; குடியரசுத் தலைவர் ஆட்சி அமுலிலிருந்தபோது அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர்தான், அவர் இந்தப் பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளவேண்டி, அந்த நிதியை அறக்கட்டளை நிதியாக மாற்றினர் என்பது தெளிவாகிறது.

(5) மன்றம் அறக்கட்டளை.

இந்த அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் என்ன நிலையிலிருந்ததோ அதே நிலையில்தான் இருந்து வந்துள்ளது. திரு. நெடுஞ் செழியன் அதிகாரத்தில் இல்லாதபோது இந்த அறக்கட்டளைக்கு நன்கொடை திரட்ட முடி யாமல் இருந்ததை, நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைக்கு அவர் நிதி சேர்த்த முறையுடன் ஒப்பிட்டுப் பார்க்கத்தான் இது உதவுகிறது.

(6) இராம. அரங்கண்ணல் அறக்கட்டளை.

இந்த அறக்கட்டளையின் நிதிகளுக்கு முறைப்படி கணக்குகள் எழுதி வரப்படவில்லையே தவிர மற்றப் படி இந்த அறக்கட்டளை பற்றி மோசமான எதுவும் குறிப்பாகக் கூறப்படவில்லை.

(7) கலைஞர் கருணுநிதி அறக்கட்டளை.

இந்த அறக்கட்டளையின் நிதிகளுக்கு கணக்குப் புத்தகம் எதுவும் வைத்துவரப்படவில்லை. சென்னை யியகராயர் கல்லூரியில் மாலை நேர வகுப்பு மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகையை ஏற்படுத்துவதற்காக, சென்னை பல்கலைக்கழகப் பதி வாளருக்கு அனுப்பியுள்ளதாகக் கூறப்படும் 2,000 ரூபாய் முழுவதும் கணக்கில் காட்டப்படவில்லை என்று ஐயம் கொள்ளக் காரணமிருக்கிறது.

(8) அண்ணு அறக்கட்டளை.

இது ஒரு பொது அறக்கட்டளையாகும். இந்த அறக்கட்டளையின் அறிவிக்கப்பட்ட அறப்பணிகளுக் காக இந்த அறக்கட்டளை நிதி செலவிடப்பட்டு வருகிறது.

கணக்குப் புத்தகத்தில் நன்கொடை வந்ததாகக் காண்பிக்கப்பட்டுள்ள தொகைக்கு அதிகமாக வங்கியில் போடப்பட்டிருந்த 1,06,000 ரூபாய் எப்படி வந்தது என்பதற்கு விளக்கம் தரப்பட வில்லை.

திரு. பஞ்சு நன்கொடையாகக் கொடுத்த 5,000 ரூபாய் கணக்கில் காட்டப்படவில்லை.

ஏ.வி.எம். அறக்கட்டளையிடமிருந்து ரூ. 10,000 நன்கொடை பெற்றுள்ளதாகக் கூறப்படுவது ஆட் சேபணைக்குரியதாயிருக்கிறது. ஏனெனில், நன் கொடையாளர் இந்த அறக்கட்டளைக்கு நன் கொடை எதுவும் கொடுத்துள்ளதாகக் கூறுவதை மறுத்துள்ளார்.

(9) முத்து வேலர் அறக்கட்டளை.

வசூலான தொகை முழுவதும் கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்கும் திருத்தி அமைத்துக் கட்டு வதற்குமே பெரும்பாலும் செலவிடப்பட்டது. செலவினம் முழுவதும், அறங்காவலர் குழுவைக் கேட்டுத் தீர்மானம் எதுவும் நிறைவேற்றுமலேயே திரு. கருணுநிதியின் மருமகன் திரு. அமிர்தத்தால் தன்னிச்சையாகச் செய்யப்பட்டுள்ளது.

அறங்காவலர் குழுவின்முன் கணக்குகள் பரிசீலனைக்கு வைக்கப்படவில்லை. செலவினம் உண்மையானதுதானு என்பதை மெய்ப்பிப்பதற்குக் கைச்சாத்துகள் எதுவும் இடைக்கவில்லை.

அந்த அறக்கட்டளை நடத்துகிற நூலகம் ஒன்றை நிறுவும் பொருட்டு, கோவில் நிதிகள் சட்டத்துக்குப் புறம்பான முறையில் திரும்பி விடப்பட்டுச் செலவிடப்பட்டுள்ளன.

(10) டாக்டர் வெற்றிச் செல்வி அன்பழகன் அறக் கட்டளை.

இந்த அறக்கட்டளையைப் பொறுத்தவரை நடை பெற்ற ஒரே ஒரு முறைகேடு என்னவென்றால், இந்த அறக்கட்டளையிடமிருந்து மக்கள் நல்வாழ் வுத் துறைக்காக ரூ 40 ஆயிரம் வரப்பெற்றதன் பேரில், சென்னையிலுள்ள அரசு ஓமியோபதி கல்லூரிக்கு டாக்டர் வெற்றிச் செல்வி அன்பழ கனின் பெயர் வைக்கப்பட வேண்டுமென்று திரு. மு. கருணுநிதி கட்டளை பிறப்பித்தார் என்பது தான். இருந்த போதிலும், இந்த முடிவும் கூட குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது ரத்து செய் யப்பட்டது; இந்த அறக்கட்டளை வழங்கிய நன்கொடைத் தொகை அதனிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது.

குற்றச்சாட்டு எண். 23 (1)

திரு. சி. பா. ஆதித்தனார் மீதான குற்றச்சாட்டு.

திரு. எம். கல்யாணசுந்தரம் அளித்த புகார் மனுவில் இக் குற்றச்சாட்டு பின்வருமாறு கூறப் பட்டுள்ளது :—

" திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத் திலுள்ள வல்லநாடு நிலவள வங்கியின் தலைவர் டி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்; அவர், திடீ ரென்று ஒரு நாள் வங்கியிலிருந்து ரூ. 22 இலட்சம் தொகையை எடுத்தார். இந்த வங்கி கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனரின் கட்டுப் பாட்டு அதிகாரத்தின்கீழ் இயங்கி வந்தது. எந்தக் கணக்கின் பேரில் என்ன காரணத்துக்காக என்ன விதிமுறைகளின்கீழ் இந்தத் தொகை எடுக்கப் பட்டது முதலிய விவரங்கள் அனைத்தும் புலனுய் வுக்கு உரியனவாகும். "

ஆவணங்களிலிருந்தும் 5-A பிரிவின்கீழ் செய் யப்பட்ட புலனுய்வு அறிக்கையிலிருந்தும் கிடைத் துள்ள விவரங்களின் மூலம் இக் குற்றச்சாட்டு பற்றித் தெரியவந்துள்ள தகவல்களைப் பின்வரு மாறு தொகுத்துக் கூறலாம் :—

திரு. சி. பா. ஆதித்தனர் (இவர் சி. பா. ஆதித்தனர் என்றும் எஸ். பி. ஆதித்தன் என்றும் பலவாருகக் குறிப்பிடப்படுகிறார்.) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டம் சட்டப் பேரவைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்கு 1967, 1971 ஆகிய இரு தேர்தல்களின்போதும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்ரீவைகுண்டம் வட்டத்திலுள்ள கருங்குளம் ஒர் ஊராட்சி ஒன்றியமாகும். கருங்குளம் கூட்டுறவுத் தொடக்க நிலவள வங்கி 9-3-1970ம் நாளில் பதிவு செய்யப்பட்டது. அதன் பதிவு அலுவலகம் கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்துக்குள் அமைந் துள்ள வல்லநாடு கிராமத்திலுள்ளது. இங்கு, பிரச்னை எழுப்பப்பட்டுள்ள நான்கு இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிய நிலங்கள் தாதன் குளம், சேரகுளம் ஆகிய கிராமப் பகுதி களில் அமைந்துள்ளன— இவையும் கூட கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தின் அதிகாரப் பகுதிக்குள் அமைந்திருப்பனவாகும்.

இந்த இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு உரிய நிலங்களின் பின்னணியைக் குறித்துப் பின்வரு வருமாறு விளக்கலாம் :—

கீழ தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த 86·86 ஏக்கர் பரப்பும் மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உரிய 93.04 ஏக்கர் பரப்பும் ரயத்துவாரி நிலங்களாகும். இவை தனிப்பட்ட பல நபர்களுக்குச் சொந்த மானவை. அவற்றில் 19.88 ஏக்கர் நிலப் பரப்பைத் தவிர மற்ற நிலங்கள் யாவும் 1969-ம் ஆண்டில் ஆதித்தனர் கல்வி நிறுவனத்தால் வாங்கப்பட்டன. மேற்சொன்ன 19.88 ஏக்கர் நிலப்பரப்பும் திரு. எஸ். டி. ஆதித்தன் அவ ருடைய மனைவியான காலஞ்சென்ற திருமதி சொர்ணம் அம்மாளால் முத்தையா பிள்ளை என்ப விடமிருந்து நேரடியாக வாங்கப்பட்டன. அதன் பிறகு மேல தாதன்குளம் சங்கத்தைத் தொடங்கி வைத்தவர்களில் சொர்ணம் அம்மாளும் ஒருவராக ஆனர். மேற்சொன்ன எஸ். டி. ஆதித்தன் என்பவர் திரு. சி. பா. ஆதித்தனரின் சகோதரர் ஆவார்.

கீழப்பெருமாளேரி இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கம் 171.62 ஏக்கர் நிலப் பரப்புக்கு (கடன்கள் குறித்த கோப்புகள் காட்டுவதன்படி 170.61 ஏக்கர்) பணி புரிவதற்கென அமைக்கப் பட்டது. அதுபோல, சேரகுளம் இறைவைப் பாசன கூட்டுறவுச் சங்கம் 127.75 ஏக்கர் பரப்புக்குப் பணி புரிவதற்கென அமைக்கப் பட்டது. இவ்வாறு இரண்டு சங்கங்களுக்கும் பணி புரிவதற்காக உரிய மொத்த நிலப் பரப்பு 299.37 ஏக்கர் (கடன்கள் குறித்த கோப்பின்படி 298.36 ஏக்கர்) ; இந்த நிலப் பரப்பு முழுவதும், முன்னர் இளம் பகுதியாக இருந்தது. இவை யாவும் திருநெல்வேலி அருள்மிகு காந்திமதி அம்மன் தெய்வத்துக்கு உரிமை வழங்கப்பட்ட நிலமாகும். இந்த நிலங்கள் 5 உறுப்பினர்களைக் கொண்ட அறங்காவலர் குழுவின்கீழ் இருந்தன. இந்த நிலங்கள் இந்தக் குழுவின் உறுப்பினர் களால் 1964-ம் ஆண்டில் பொருனை ஆறு எரி பொருள் காடுகள் நிறுவனத்துக்கு (Porunaiyar Fuels Plantations company Private Limited) விற்கப் பட்டன. இந்த நிறுவனம் ஆதித்தனர் குடும்பத் துக்குச் சொந்தமானதாகும். இந்த நிறுவனம் ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்த உதவிப் பதிவாளர் அலுவலகத்தின் 1336/64 ஆம் எண்ணுள்ள ஆவணத்தின்படி அறங்காவலர்களின் தனிப்பட்ட சொத்து ஆகும் என்று கூறப்பட்டது. இவ்வாறு அச் சொத்தினை வாங்கிய நிறுவனம் அதனை 1965ஆம் ஆண்டில் அறக்கட்டளை வடிவில் ஒரு வாக்கப்பட்ட ஆதித்தனர் கல்வி நிறுவனத்துக்கு உடைமை உரிமை மாற்றம் செய்து தந்தது. இந்தக் கல்வி நிறுவனம் பாளையங்கோட்டை

பத்திரப் பதிவு அலுவலகத்தில் 15-7-1965 ஆம் நாளிட்ட 2909/65 ஆம் எண்ணுள்ள ஆவணத்தின்படி உருவாக்கப்பட்டதாகும். இந்த நிலங்களின் பேரில் ஆதித்தனர் கல்வி நிறுவனத்துக்குக் கோவில்பட்டி செட்டில்மென்ட் தாசில்தாருடைய 19-2-1968-ம் நாளிட்ட 2/SVM/67 ஆம் எண்ணுள்ள ஆணையின்படி 1963-ம் ஆண்டு 26-வது சட்டத்தின் 12 (1) பிரிவின்கீழ் ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டது. இதனை வழங்குகையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தனக்கு வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்த திருநெல்வேலி அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோவில் நிர்வாக அதிகாரியின் கோரிக்கை தள்ளிவிடப்பட்டது.

ஆதித்தனர் கல்வி நிறுவனம்.

இந்த நிறுவனம் 1860-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் சென்னை, வேப்பேரி, ரண்டால்ஸ் சாலை 1-ம் எண்ணில் உள்ள இல்லத்தில் 1-12-1968-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது ஆகும். இந்த நிறுவனம் தொடங்கப் பெற்ற நாளில் இதன் செயல் ஆட்சிக் குழு உறுப்பினர்களாக இருந்தவர்களின் பெயர் விவரம் வருமாறு :—

(1) பி. எஸ். ஆதித்தன் (எஸ். பி. ஆதித்தனின் மகன்).

(2) பி. ஆர். ஆதித்தன் (எஸ். பி. ஆதித்தனின் மகன்).

(3) ஆர். பால்வண்ணன் (திருஷ்ணகாந்தனின் சகோதரர்) தினத் தந்தியில் பணி புரிபவர். மேற தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் உறுப்பினர்.

இந்த நிறுவனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மற்ற உறுப்பினர்கள் வருமாறு :—

(1) கோவிந்தம்மாள் ஆதித்தன் (சி. பா. ஆதித்தனரின் மனைவி).

(2) எஸ். டி. ஆதித்யன் (சி. பா. ஆதித்தனரின் சகோதரர்).

பி. எஸ். ஆதித்தன், பால்வண்ணன் ஆகியோருடைய முகவரி எண். 1, ரண்டால்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை என்று காட்டப்பட்டுள்ளது.

தினத்தந்தி அறக்கட்டளையில் அடங்கியுள்ள அறங்காவலர்களில் ஒருவராக உள்ள நிறுவனமான கல்வி அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக திரு. சி. பா. ஆதித்தனரின் மனைவி திருமதி கோவிந்தம்மாள் இருந்தார்.

1970-ம் ஆண்டு ஜூன் திங்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தாதன் குளத்திலுள்ள ஆதித்தனரின் பண்ணையில் நிலப்பறி இயக்கத்தைத் தொடங்குவது என்ற தங்கள் முடிவை அறிவித்திருந்தது. அந்தச் சமயத்தில் காலஞ் சென்ற திரு. எஸ். டி. ஆதித்தன் (இவர் சி. பா. ஆதித்தனரின் தம்பி ஆவார்; காவல் துறை டெபுடி சூப்பிரண்ட் ஆக இருந்து ஓய்வு பெற்றவர்) ஆதித்தனர் கல்வி நிறுவனத்தின் கௌரவ நிர்வாக இயக்குநராகக் காட்டப்பட்டிருந்தார். ஆதித்தனர் கல்வி நிறுவனத்தின் சார்பில் இவருக்குப் பொது பவர் ஆப் அட்டர்னி (General Power of Attorney) வழங்கப்பட்டிருந்தது. இதன் மூலம் இந்த நிலங்களை விற்பனை முதலியவற்றின் மூலமாக உரிமை மாற்றம் செய்வதற்கு இவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. நிலப் பறி இயக்கத்தின் மூலம் மிரட்டல் விடுக்கப் பட்டிருந்த நிலைமையை ஒட்டி, திரு. எஸ். டி. ஆதித்யன், ஆதித்தனர் கல்வி நிறுவனத்தின் சார்பாக 23—7—1970-ம் நாள் வரையிலான கால அளவில் 160.02 ஏக்கர் நிலத்தை 52 பேர்களுக்கு விற்றதாகக் கூறி 52 விற்பனை உரிமைப் பத்திரங்களை எழுதி ஒப்பந்தம் செய்து அவற்றைப் பதிவு செய்வித்தார். அதாவது அந்த நிலங்களில் 93.04 ஏக்கர்கள் 23 பேர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதாகப் பத்திரப் பதிவு செய்யப்பட்டது. இந்த 23 பேர்களும் பின்னுல் மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகக் காட்டப்பட்டுள்ளனர்; இன்னும் எஞ்சியுள்ள 86.86 ஏக்கர்கள் 29 பேர்களுக்கு உரிமை மாற்றம் செய்துதரப்பட்டதாகப் பெயரளவில் வெளிக்குத் தெரியுமாறு (அதாவது போலியாக) காட்டப்பட்டது. இந்த 29 பேர்களும் பின்னுல் மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துக் கொண்டனர். மேற்சொல்லப்பட்ட மொத்தம் 52 பேர்களும் விற்பனைப் பத்திரங்களின்கீழ் சொத்துக்களை வாங்கியவர்களாக காட்டப்பட்டுள்ளனர். இவர்கள் யாவரும் பினாமிதாரர்கள் என்று பூகார் மனுக்கள் கொடுத்தவர்களின் சார்பில் வாதிடப்பட்டது. இவர்கள் எல்லாருமே பிரதிவாதியான திரு. சி. பா. ஆதித்தனருக்கு உறவினர்களாக இருந்தார்கள்; அல்லது தினத்தந்தி, சன் பேப்பர் மில்ஸ், மாலை முரசு ஆகிய நிறுவனங்களில் ஒன்றில் பணிபுரிகின்ற பணியாளர்களாக இருந்தார்கள். இந்த 52 விற்பனைப் பத்திரங்களும் ஸ்ரீவைகுண்டம் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டன. இவற்றிற்கான பதிவுக் கட்டணம் ரூ. 431.50 திரு. எஸ். டி. ஆதித்யனுல் கொடுக்கப்பட்டது. இந்த 52 விற்பனைகளுக்கும் விற்பனைப்பத்திர மதிப்பு (Sale consideration) இவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 20 வீதம் கொடுக்கப்பட்டது என்று காட்டப்பட்டுள்ளது. இந்த விற்பனைப் பத்திரங்கள் அனைத்துமே உடையார்பின்னை என்பவரால் எழுதப்பட்டுள்ளன.

பத்திரப் பதிவு செய்யப்பட்டபொழுது சொத்துக்களை வாங்கியவர்களில் எவருமே அல்லது அவர்களது பிரதிநிதிகள்கூட, உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் வந்திருக்கவில்லை. விற்பனைப் பத்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 20 வீதம் வழங்கப்பட்ட தொகையும் கூட (இத் தொகைதான் விற்பனைப் பத்திரங்களில் காட்டப்பட்டுள்ளது) உதவிப் பதிவாளர் முன்னிலையில் கொடுக்கப்படவில்லை.

இந்தச் சொத்துக்களை போலியாக வாங்கியவர் என்று காட்டப்பட்டுள்ளவர்களில் ஒருவரான திரு. முருகன், திரு. சி. பா. ஆதித்தனுடைய தந்தையின் சகோதரர் ஒருவருடைய பேரர் என்று கூறப்படுகிறது. மேலும், இவர் சன் பேப்பர் மில்லில் மேலாளராகப் பணிபுரிந்து வந்தார். திருமதி சற்குண தேவி முருகனின் மனைவியாவார். டி. ஆர். பாலகிருஷ்ணன் என்பவர் முருகனுடைய மைத்துனன் என்று கூறப்படுகிறது. இதுபோலவே சொத்துக்களை வாங்கிய மற்ற பினாமிதாரர்களைப் பற்றிய விவரம் வருமாறு: டி. ஆர். பிம்கிங் என்பவர் டி. ஆர். பாலகிருஷ்ணனின் சகோதரர். ரதி தேவி சி. பா. ஆதித்தனுடைய சகோதரர் திரு. எஸ். டி. ஆதித்தனின் மகள் ஆவார். பால்வண்ணன், ஆதித்யன், கிருஷ்ணகாந்தன், சுந்தரேசன் ஆகியோர் சகோதரர்களாவர். இவர்கள் யாவரும் திரு. சி. பா. ஆதித்தனுக்கு அவருடைய தந்தை வழியில் உறவு முறை உடையவர்கள் ஆவர். டி. இயகராஜன் என்பவர் சி. பா. ஆதித்தனின் மருமகன் ஆவார். தவசிமுத்து என்பவர் திரு. சி. பா. ஆதித்தனின் மைத்துனர் ஆவார். கிருஷ்ணகாந்தன் திருநெல்வேலியிலுள்ள ''தினத்தந்தி'' அலுவலகத்தின் மேலாளர். ஆறுமுகம்பிள்ளை என்பவர் திருநெல்வேலி ''தினத்தந்தி'' அலுவலகத்தில் பணிபுரியும் எழுத்தர் ஆவார். சடையாண்டி, மந்திரம், கணேசன், குருசாமி ஆகியோர் திருநெல்வேலி ''மாலை முரசு'' அலுவலகத்தில் பணிபுரிந்து வருகின்றனர். செல்லத்துரை ''தினத்தந்தி'' அலுவலகத்தில் கார் டிரைவராக உள்ளார். வேலுத் தேவர் என்பவர் தாதன்குளம் பண்ணையில் சுவலாளராக உள்ளார். சுப்பிரமணியம் மதுரை ''தினத்தந்தியில்'' ஊழியராக உள்ளார். சுயம்பு, சென்னை ''தினத்தந்தியில்'' உள்ளார். காவலாள் இராமையாவும் தலேவாணிமுத்துவும் திருச்சி ''தினத்தந்தி''யில் ஊழியர்களாவர். சிங்கமுத்து சென்னை ''தினத்தந்தி'' யில் பணிபுரிகிறார். சிவசுப்பிரமணியம், சுந்தரேசன் ஆகியோர் தோயம்புத்தூர் ''தினத்தந்தி''யில் பணிபுரிகின்றனர். ஆர். பால்வண்ணன் சென்னை ''தினத்தந்தியில்'' உள்ளார். டி. ஆர். பிம்கிங், சேதுபாண்டியன், வைரவன்—இவர் மாலைமுரசு அலுவலக காவலாள்—, வேல் நாடார், வி. பி. இரத்தினம் ஆகிய அனைவரும் சென்னை ''தினத்தந்தி''யில் பணிபுரிகின்ற ஊழியர்களாவர்.

சேரகுளம், மேற்பெருமானேரி இறைவைப் பாசன சங்கங்களுக்காகத் தொகுக்கப்பட்ட 299·41 ஏக்கர் நிலமும் இந்தச் சங்கங்களின் 24 உறுப்பினர்களால் மேற்சொன்ன விற்பனைகளின் மூலமாகப் போலியான முறையில் அல்லது பெயரளவில் 23—2—1971-ம் நாளில்தான் விலக்குப் பெறப்பட்டன என்பதும் அந்நாளில்தான் இச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மற்ற இரண்டு சங்கங்களைப் போல் அல்லாமல், இந்த நிலங்களும்கூட, ஆதித்தனர் கல்வி நிறுவனத்தால் மற்ற இரண்டு சங்கங்களின் உறுப்பினர்களாக பின்னர் ஆகிய நபர்களின் பேரில் உரிமை மாற்றம் செய்து தரப்பட்டன. பெயரளவில் இச் சொத்துக்களை வாங்கிய 24 பினாமிதாரர்களைப் பொறுத்தவரை விற்பனை தொகை முழுவதும் அதாவது ரூ. 1,20,200 தொகை 23—2—1971-ம் நாளிலேயே அதாவது பதிவு செய்யப்பட்ட நாளிலேயே சொத்துக்களை விற்ற வருக்கு கொடுக்கப்பட்டுள்ளதாகக் காட்டப் பட்டுள்ளது.

கிராம முன்சீப்பும், கிராமக் கர்ணமும் அளித்த சாட்சியத்தின் விவரங்களாவன : இந்த நிலங்களின் உரிமைப் பத்திரம் பல்வேறு தனிப்பட்ட நபர்களுக்கு மாற்றப்பட்டு விட்டபோதிலும்கூட, இந்த நிலங்கள் தொடர்பான நிலவரியை எஸ்.டி. ஆதித்யனே தொடர்ந்து செலுத்தி வந்துள்ளார். 1971-ம் ஆண்டில் 24 தனிப்பட்ட நபர்களின் பெயர்கள் ஆதித்தனர் கல்வி நிறுவனத்தின் பெயருடன் சேர்ந்து ரெவின்யூ லிஸ்தி பதிவேட்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஆனால், அந்த ஆண்டிலும் அதனை அடுத்து 1973, 74-ம் ஆண்டிலும் முன்பு போலவே திரு. எஸ். டி. ஆதித்யனுல் நிலவரி தொடர்ந்து செலுத்தப்பட்டு வந்தது. இருந்தபோதிலும்கூட, அவர் தெரிவித்த உத்தரவுகளின்படிக் கிராம வருவாய் வசூல் சிட்டையில் இந்த நிலவரி, தொடர்புடைய இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தால் செலுத்தப்பட்டது என்று பதிவு செய்யப்பட்டது. மேற்சொன்ன நபர்களின் பட்டியலைத் திரு. எஸ். டி. ஆதித்யன் கிராம முன்சீப்பிடம் கொடுத்திருந்தார். அந்த நபர்களின் பெயர்தான் லிஸ்தி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால் கிராம முன்சீப்புக்கு அவர்களில் எவரையும் தெரியாது. ஏனென்றால், அவர்களில் எவருமே எந்த ஆண்டிலும் அந்த நிலங்களில் பயிர் செய்வது இல்லை. அதன்விளைவாக, கிராம முன்சீப்புக்கு அவர்களைத் தெரியும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இந்த நிலங்களின் தொடர்பான பணிகள் அனைத்தும் எஸ். டி. ஆதித்யனுல் கவனிக்கப்பட்டு வந்தன.

இந்த விற்பனைகள் பதிவு செய்யப்பட்ட பிறகு, இந்த விற்பனைப் பத்திரங்கள் மேற்கொள்ளவாறு போலியாக வாங்கிய பினாமிதரர்கள் எவரிடமும்

ஒப்படைக்கப்படவில்லை. இந்த விற்பனைப் பத்திரங்கள் அனைத்தும் திரு. எஸ். பி. ஆதித்தனின் பாதுகாப்பில் மாலைமுரசு அலுவலகத்தில் வைத்து வரப்பட்டன என்று கூறப்பட்டது.

நான்கு இறைவைப் பாசன சங்கங்கள் உருவாக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதும்:—

மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கம் (இது இப்பால் மேல தாதன்குளம் சங்கம் என்று குறிப்பிடப்படும்) தூத்துக்குடியிலுள்ள துணைப் பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட தொடர் எண். R. C. 1851/71-D. யில் 30—1—71-ம் நாளில் துணைப் பதிவாளர் திரு. ஜி. காந்தி தாஸ் அவர்களால் பதிவு செய்யப்பட்டது. இந்த சங்கத்தை அமைத்து இதன் உறுப்பினர்களாக இருந்த 10 பேரின் பெயர் விவரம் வருமாறு :—

(1) திரு. எஸ். முருகன், மேலாளர், சன் பேப்பர் மில்ஸ், அரியநாயகிபுரம்.—இவர் திரு. சி. பா. ஆதித்தனரின் தந்தையாருடைய சகோதரரின் பேரர் ஆவார் (தலைவர்).

(2) திரு. டி. தியாகராஜன், பச்சையாறு சர்க்கரை ஆலை ஊழியர்—இவர் திரு. எஸ். டி. ஆதித்யனின் மருமகன் (துணைத் தலைவர்).

(3) திரு. T. கணேச மார்த்தாண்டம்.

(4) திருமதி சற்குண தேவி, திரு. முருகனின் மனைவி (உறுப்பினர்).

(5) ரதிதேவி, எஸ். டி. ஆதித்யனின் மகள்.

(6) திருமதி ஸ்வர்ணம் அம்மாள், திரு. எஸ். டி. ஆதித்யனின் மனைவி.

(7) திரு. ஏ. தவசிமுத்து.

(8) திரு. டி. ஆர். பீம்சிங், பணியாளர் அதிகாரி, ''தினத்தந்தி'' அலுவலகம், சென்னை. இவர் சி. பா. ஆதித்தனருடைய உறவினர் என்று கூறப்படுகிறது.

(9) திரு. எம். பெருமாள், காவலாள், ஆதித்தனர் கல்லூரி, திருச்செந்தூர்.

(10) திரு. பி. கொத்தளமுத்து, மேலாளர், ''மாலைமுரசு'', திருநெல்வேலி.

இவ்வாறு, இந்த உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் ஒருவருக்கொருவர் உறவினர் என்பதோடு எப்படியாவது ஒரு வழியில் திரு. சி. பா. ஆதித்தனருக்கும் உறவினர்களாக உள்ளனர்; அல்லது ஆதித்தனருடைய நிறுவனத் தொகுதிக்குச் சொந்தமானவை என்று கூறப்படுகின்ற ஏதாவது ஒரு நிறுவனத்தில் பணியாளர்களாக உள்ளனர்.

மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கமும் கூட அதே நாளில் அதாவது 30—1—70-ம் நாளில் மேற்குறிப்பிட்ட துணைப் பதிவாளர் திரு. காந்தி தாஸ் அவர்களால் பதிவு செய்யப்பட்டது. பார்க்க : தொடர் எண்கள் R.C. 1850/71-D.

இந்தச் சங்கத்தை அமைத்து இதன் உறுப்பினர்களாக இருந்த 10 பேர்களின் பெயர் விவரம் வருமாறு :—

(1) திரு. ஆர். கிருஷ்ணகாந்தன், மேலாளர், ''தினத்தந்தி'' அலுவலகம், திருநெல்வேலி. இவர் பால்வண்ணன் ஆதித்தனரின் சகோதரர்.

(2) திரு. எஸ். அருணசலம் பிள்ளை.

(3) திரு. ஏ. சடையாண்டி.

(4) திரு. எம். மந்திரம்.

(5) திரு. என். கணேசன்.

(6) திரு. எஸ். செல்லதுரை.

(7) திரு. பி. சப்பாணி.

(8) திரு. என். ஆறுமுகம்.

(9) திரு. ஆர். ராஜா.

இவர்கள் அனைவரும் ''மாலைமுரசு'' அல்லது ''தினத்தந்தி'' யில் பணிபுரியும் ஊழியர்கள்.

(10) திரு. எஸ். வேலு தேவர், இவர் ஆதித்தனர் நிறுவனத் தொகுதிக்குச் சொந்தமான தாதன்குளம் நிலங்களுக்குக் காவலாளாக உள்ளார்.

சேரகுளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கம் திரு. காந்தி தாஸால் 23—2—71-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது. பார்க்க : தொடர் எண் R.C. 3381/71. இந்தச் சங்கத்தை அமைத்து இதன் உறுப்பினர்களாக இருந்த நபர்களின் பெயர் விவரம் வருமாறு :—

(1) திரு. ஆர். அரிச்சந்திரன், கணக்கர், சன் பேப்பர் மில்ஸ், அரியநாயபுரம், தலைவர்.

(2) திரு. பி. ஜெயராமன், சன் பேப்பர் மில்லில் பணிபுரிந்த முன்னாள் காசாளர், செயலாளர்.

(3) திரு. எம். குருநாதன்.
(4) திரு. சி. பாலுபாண்டி.
} இவர்கள் சன் பேப்பர் மில்ஸ் ஊழியர்கள்.

(5) திரு. எஸ். அருணசலம் பிள்ளை. — இவர் திருநெல்வேலி ''தினத்தந்தி'' யில் பணிபுரியும் ஊழியர்

(6) திரு. டி.எ. ரஹ்மான் — ஷெ

(7) திரு. டி. ஆர். பீம்சிங். — ஷெ

(8) திரு. பி. வெற்றிவேல் — ஷெ

(9) திரு. வெயிலு முத்து — ஷெ

(10) திரு. எம். மந்திரம். திருநெல்வேலி ''மாலைமுரசு'' ஊழியர்.

(11) திரு. ராம ஜெயம். ஷெ

(12) திரு என். ஆறுமுகம், இவர் திரு. சி. பா. ஆதித்தனரின் இரண்டாவது மக னை பி. எஸ். ஆதித்தனின் நேர்முக உதவியாளர்.

கீழப்பெருமானேரி இறைவைப் பாசனக்கூட்டுறவுச் சங்கமும் கூட திரு. காந்தி தாஸால் 23—2—1971-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது. பார்க்க : தொடர் எண். ஆர்.சி. 3317/71-D. இந்த சங்கத்தை அமைத்த இதன் உறுப்பினர்கள் பெயர் விவரம் வருமாறு :—

(1) திரு. ஆர். கொத்தளமுத்து, மேலாளர், '' மாலைமுரசு'', திருநெல்வேலி.

(2) திரு. என். ராமஜெயம், உதவி ஆசிரியர், ''மாலைமுரசு'', திருநெல்வேலி.

(3) திரு. வி. பெருமாள் இவர் திருநெல்வேலி ''மாலை முரசு'' அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்.

(4) திரு. ஆர். திருவடி .. ஷெ

(5) திரு. ஆர் கணபதி .. ஷெ

(6) திரு. எம். சங்கரன் .. ஷெ

(7) திரு. ஆர் முத்து, காவலாள், தினத் தந்தி, சென்னை.

(8) திரு. எஸ். முத்துகிருஷ்ணன், காசாளர், ''மாலைமுரசு'', திருநெல்வேலி.

(9) திரு. ஏ. சடையாண்டி—''மாலை முரசு'' வேலூர்.

(10) திரு. என். நடராஜன், ''மாலை முரசு''.

(11) திரு. எஸ். பாலகிருஷ்ணன், '' தினத் தந்தி''.

(12) திரு. எஸ். பொன்னுசாமி—''தினத் தந்தி''.

இந்த நான்கு சங்கங்களையும் தொடங்கிய உறுப்பினர்களில் பெரும்பாலோர் உழவர்கள் அல்லர். இவர்கள் பெயரில் ஆதித்தனர் கல்வி நிறுவனம் போலியாகப் பெயரளவில் அந் நிலங்களே விற்பனை செய்வதற்கு முன்பு இவர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இருந்தவர் களும் அல்லர், சேரகுளம், கீழப்பெருமா னேரி இறைவைப் பாசன சங்கங்களைப் பொறுத்த வரை அவற்றின் உறுப்பினர்களின் பெயரில் நில விற்பனைப் பத்திரங்கள் 23—2—1971-ம் நாளில் பதிவு செய்யப்பட்டன. அன்றைக்கே அவர்கள் ஒரு கூட்டுறவுச் சங்கமாக தங்களுக்குள் சேர்ந்து அமைத்துக்கொண்டு அவ்விரண்டு சங் கங்களையும் பதிவு செய்யும் பணியையும் செய்து முடித்தனர். இந்த நான்கு சங்கங்களையும் பதிவு செய்கின்ற பணி, அவற்றிற்கான விண் ணப்பங்கள் வரப்பெற்ற அதே நாளில் செய்து முடிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள அடிப்படை நடை முறை மரபுகள், விதிகள் ஆகியன யாவும் புறக்கணிக்கப்பட்டன. அமைக்கக் கருதப் பட்டுள்ள சங்கங்களின் வள வாய்ப்பு குறித்தும் அவை வெற்றிகரமாகச் செயல்படுவது குறித்தும் முதல் நிலை விசாரணை எதுவும் நடத்தப்பட வில்லை.

புலனுய்வு அமைப்பு சேகரித்த சாட்சியங் களிலிருந்து தெரியவந்துள்ள தகவல்களாவன : கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் திருநெல்வேலியில் 28—1—1971-ம் நாள் முதல் 31—1—1971-ம் நாள் வரையில் முகாமிட்டிருந் தார். அவருடைய தூண்டுதலின் பேரிலேயே இச் சங்கங்கள் யாவும் பதிவு செய்யப்பட்டன. மேல, கீழ தாதன்குளம் சங்கங்களைப் பொறுத்தவரை அவர் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு. சுப்பையாவிடமும் கூட் டுறவு வளர்ச்சிப்பணி அலுவலர் திரு. ஹரிஹர னிடமும் சுருக்கமான விவரங்களைக் கொடுத்து உத்தரவிட்டிருந்தார். திரு. சுப்பையாவை இணைப்பதிவாளராகப் பதவி உயர்த்தி அரசு பிறப்பித்த ஆணையைக் கூட்டுறவு அமைச்சரின் நேர்முக உதவியாளர் திருநெல்வேலி ஆய்வு இல்லத்தில் 29—1—1971-ம் நாளில் அவரிடம் நேரிடையாக ஒப்படைத்த பிறகே மேற் சொன்னது போல சுருக்க வகை விளக்கமும், உத்தரவும் அவரிடம் அளிக்கப்பட்டன. பிறகு திரு. சுப்பையா தூத்துக்குடியிலுள்ள துணைப் பதிவாளர் அலுவலகத்திற்குத் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு அந்தச் சமயத்தில் சுற்றுப் பயணத்திலிருந்த திரு. காந்தி தாஸ் உடனடி யாகத் தலைமையிடத்துக்கு அழைத்துக் கொள்ளப் பட வேண்டும் என்றும் இந்த இரு சங்கங்களைப் பதிவு செய்யும் பொருட்டு அவர் இவ்வாறு திருப்பி அழைக்கப்பட வேண்டும் என்றும் உத்தர வுகள் பிறப்பித்தார். இந்தச் செய்தியைப் பெற்றதும் திரு. காந்தி தாஸ் தம்முடைய அலு வலகத்துக்கு விரைந்து மீண்டார். அவர் 30—1—1971-ம் நாளில் இரவு 9 மணி அளவில் அங்கு சென்றடைந்ததும், பீம்சிங்கும் மற்றும் ஒருவரும் அவருக்காகக் காத்திருப்பதை அறிந் தார். அவர்கள் இரண்டு சங்கங்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கொண்டு வந் திருந்தனர். காந்தி தாஸ், திரு. சுப்பையா மூல மாக வரப்பெற்ற அமைச்சரின் உத்தரவுக்கு

உடனடியாகக் கீழ்ப்படிந்தார். அதன்படியே அங்கேயே அப்பொழுதே உடனடியாக அந்த சங்கங்களுக்கு பதிவு செய்து பதிவுச் சான்றுகளை வழங்கினார்.

சேரகுளம், கீழப்பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கங்களைப் பொறுத்தவரையில் அமைக்கப்படவிருக்கும் ஒவ்வொரு சங்கத்துக்கும் ஒவ்வொன்று வீதம் இரண்டு விண்ணப்பங்களை திரு. பீம்சிங் 23—2—1971-ம் நாளில் தம்முடன் எடுத்துக்கொண்டு வந்து, காந்தி தாஸைப் பார்த்தார். திரு. பீம்சிங், திரு. சி. பா. ஆதித்தனாரின் ஆள்தான் என்று காந்தி தாசுக்கு ஏற்கெனவே தெரியுமாதலால், அவர் அதே நாளில் அந்த இரண்டு சங்கங்களையும் பதிவு செய்தார்.

கடன்கள் வழங்குதல் குறித்து.

அந்நாள் கூட்டுறவுப் பணி வளர்ச்சி அலுவலர் ஹரிஹரன் (சாட்சி 1) *23—2—1971-ம் நாள் மாலை சுமார் 7 மணி அளவில் சுப்பையாவிடமிருந்து (C.W. 38) உத்தரவுகளைப் பெற்றார். இணைப் பதிவாளர் சுப்பையா அவரைப் போனில் கோட்டையிலுள்ள தமது இல்லத்துக்கு வருமாறு அழைத்தார். அங்கே சென்றதும் அவர் இணைப் பதிவாளர் சுப்பையாவுடன் பிம்சிங் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தார். கீழ தாதன்குளம், மேல தாதன்குளம் சங்கங்களின் பதிவுப் பணியை அவர் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று ஹரிஹரனிடம் சுப்பையா கூறினர்.

கடன்களுக்கான விண்ணப்பங்கள்.

(1) கிழ, மேல தாதன்குளம் சங்கங்கள் ஒவ்வொன்றும் தமக்கு ரூ. 4 லட்சம் கடன் வேண்டும் எனக் கேட்டு 8—2—1971-ம் நாளில் இரண்டு கடன் விண்ணப்பங்களைக் கொடுத்தன.

இவ்விரு விண்ணப்பங்களிலுமே நிலங்களைப் பண்படுத்துவதற்காகவும், புதிய கிணறுகளைத் தோண்டுவதற்காகவும் கடன்கள் வாங்கப்படுகின்றனவென்று குறிக்கப்பட்டிருந்தது. இவ்விரு விண்ணப்பங்களுடனும் அந்தந்தச் சங்கங்கள் 3—2—1971-ம் நாளில் நிறைவேற்றிய தீர்மானங்களும் இணைக்கப்பட்டிருந்தன. கீழ தாதன்குளம் சங்கம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின்படி கிணறு ஒவ்வொன்றும் ரூ. 18,500 வீதம் 'A' வகைக் கிணறுகள் 12 தோண்டுவதற்கும் அதுபோல கிணறு ஒன்று ரூ. 13,000 வீதத்தில் 'B' வகைக் கிணறுகள் 6 தோண்டுவதற்கும் முறையே ரூ. 2,22,000 தொகையும் ரூ. 78,000 தொகையும், நிலங்களைப் பண்படுத்துவதற்காக ரூ. 1 லட்சம் தொகையும் தேவைப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

மேல தாதன்குளம் சங்கம் நிறைவேற்றிய தீர்மானத்தில் A-வகைக் கிணறுகள் 15 தோண்டுவதற்காக ரூ. 2,77,500-ம் 'B' வகைக் கிணறுகள் 2 தோண்டுவதற்காக ரூ. 26,000-மும் நிலங்களைப் பண்படுத்துவதற்காக ரூ. 96,500-ம் தேவைப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டது. தனிப்பட்ட ஆலோசனை வழங்கு பொறியாளரான கேசவன் என்பவர் தயாரித்த மதிப்பீடுகளும் கடன் விண்ணப்பங்களுடன் சேர்த்து இணைக்கப்பட்டிருந்தன.

ஆண்டியப்பன் (W-4) நிலத்தைப் பண்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டிருந்த மதிப்பீடு ரூ. 86,000, விசை ஏற்றங்களை நிறுவுவதற்கான அறைகளின் மதிப்பீடு ஆகியவற்றில் வெட்டு செய்து ரூ. 3,70,000 தொகைக்குப் பரிந்துரை செய்தார்.

அமைச்சர், சுப்பையாவிடம் சருக்க வகை விளக்கமும் உத்தரவும் கொடுத்தார் எனக் கூறப்படுவது பற்றி—அமைச்சர் திரு. சி.பா. ஆதித்தனர், மேற்சொன்ன சங்கங்களுக்குக் கடன்கள் உடனடியாக அனுமதிக்கப்பட்டு வழங்கப்படுமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சுப்பையாவுக்குச் சருக்க வகையில் விளக்கமும், உத்தரவும் கொடுத்தார். அவர் நிலவள வங்கி மேலாளர் கூட்டுறவு பணி வளர்ச்சி அலுவலர் ஹரிஹரனிடமும் கூட்டுறவு உதவிப் பதிவாளர் (கடன்கள்) திரு. ஆண்டியப்பனிடமும் அவர்கள் திருநெல்வேலியிலுள்ள தினத்தந்தி அலுவலகத்துக்குச் சென்று பீம்சிங்கைச் சந்தித்து அவரிடமிருந்து அவசியமான தகவல்கள் எல்லாவற்றையும் பெற்ற அமைச்சர் விருப்பம் தெரிவித்துள்ள முறையில் மிகமிக விரைவாக உடனடியாக அந்தக் கடன்களை அனுமதித்து அவற்றிற்குத் தொகைகளை வழங்கவேண்டும் என்று கட்டளையிட்டார்.

கடன்கள் அனுமதித்தது.

சுப்பையா கட்டளையிட்டபடி ஹரிஹரன், ஆண்டியப்பனுடன் சேர்ந்து தினத்தந்தி அலுவலகத்துக்குச் சென்றார். திருநெல்வேலியிலுள்ள தினத்தந்தி அலுவலகத்தில் 4—2—1971-ம் நாள் முதல் 8—2—1971-ம் நாள் வரை பீம்சிங்கின் முன்னிலையில் அந்த விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. கீழ தாதன்குளம், மேல தாதன்குளம் சங்கங்கள் நிறைவேற்றியிருந்த இரண்டு தீர்மானங்களையும் ஹரிஹரன் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக்கொண்டு சங்கத்தின் இயக்குநர்கள், உறுப்பினர்களது கையொப்பங்களைப் பெறுவதற்காக அனுப்பி வைத்தார். ஹரிஹரனும் 10—2—1971-ம் நாளில் தொடக்க அறிக்கை ஒன்றையும் பணிந்தனுப்பினர்.

---

*w 1 என்று வரும் எண்கள் யாவும் 5-A பிரிவின்கீழ் புலனுய்வு அறிக்கையில் வருகின்ற சாட்சிகளின் தொடர் எண்கள் ஆகும்; C.W. என்று வருவன கமிஷன் முன்னிலையில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளைக் குறிப்பிடுவதாகும்.

தினத்தந்தி அலுவலகத்தில் இவ்வாறு இந்த கடன் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப் பட்டுக்கொண்டிருந்தபோது சுப்பையா அவ்வப் போது பணி எந்த அளவுக்கு நடைபெற்றுள்ளது என்று கேட்டுக்கொண்டிருந்தார். ஹரிஹரன், கருங்குளம் கர்ணத்தின் உதவியுடன் அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யும் தமது பணியை முடித்த பிறகு அந்த விண்ணப்பங்கள் ஆண்டியப்பனிடம் கொடுக்கப்பட்டன. அவரும் கூட இந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து 8—2—1971ம் நாளில் தம்முடைய அறிக்கையை முடித்து அவற்றை மேல் நடவடிக்கைக்காக அதாவது மேல் தாதன்குளம் சங்கத்திற்கு ரூ. 3,50,000-மும் மேல தாதன்குளம் சங்கத்திற்கு ரூ.3,70,000மும் கடன் வழங்குவதற்காக பரிந்துரை செய்வதற்காக ஹரிஹரனிடம் ஒப்புவித்தார். இந்தக் கடன் விண்ணப்பங்கள் யாவும் நில வள வங்கியின் தலேவர் இவற்றிற்குக் கடன் வழங்க அனுமதித்து பிறப்பித்த ஆணையுடன் துணைப் பதிவாளரிடம் (கடன்கள்) நேரில் எடுத்துக் கொடுக்கப்பட்டன. துணைப் பதிவாளர் நாராயணன் சில மறுப்புகளை எழுப்பினர். அதற்கு முன், கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இணைப்பதிவாளர் சுப்பையாவின் அலுவலகத்திற்கு அவர் சென்றபோது, கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம், திரும்பிச் சென்று திரு.ஆண்டியப்பன் கொண்டு வரும் கடன் விண்ணப்பங்களை வகைப் படுத்தும் பணியைக் கவனிக்கவும் என்று கூறி இணைப்பதிவாளர் சுப்பையா அவரிடம் கூறியனுப்பினர். விண்ணப்பங்களைச் சரிபார்க்கவும், நிலங்களைச் சென்று பார்வையிடவும் செல் காலம் தேவைப்படும் என்று நாராயணன் திரு. சுப்பையாவிடம் கூறி எதிர்ப்பு தெரிவித்தார். அது போன்று எதையும் செய்ய வேண்டாம் என்றும் விண்ணப்பங்களைக் குறித்து வங்கி அவற்றை முழுவதும் கவனித்துக் கொள்வதற்காக வழக்கப்படியான பரிவுரைகளோடு கடன் விண்ணப்பங்களை அனுப்புவதில் அமைச்சர் இட்ட கட்டளைகளுக்குப் பணிந்து நடக்குமாறும் சுப்பையா அவரை எச்சரித்தார்.

பின்னர், பிற்பகல் சுமார் 1 மணி அளவில் ஆண்டியப்பனும் ஹரிஹரனும் பீம்சிங்கோடு நாராயணன் அலுவலகத்திற்குச் சென்று, தொடக்க வங்கிச் சட்ட ஆலோசகரின் கையொப்பத்திற்காக அந்த விண்ணப்பங்களை அவர் அனுப்பியிருக்கக் கூடாது என்றும், ஏனெனில், அமைச்சர் 15 நிமிடத்திற்கொருமுறை தொலேபேசி மூலம் தகவல் கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் நாராயணனிடம் கூறினர். அதற்கிணங்க, நாராயணன், ஹரிஹரனுலும் ஆண்டியப்பனுலும் பகுப்பாய்வு செய்யப்பட்ட இரு கடன் விண்ணப்பங்களைத் தனது வழக்கமான பரிவுரையோடு மாதில நிலவள வங்கியின் கிளைக்கு மாலே சுமார் 3 மணி அளவில் அனுப்பி வைத்தார்.

கடன் விண்ணப்பங்களை உடனடியாகச் சரி பார்க்க வேண்டுமென்றும், வழக்கமாக மேற் கொள்ளப்படும் நடைமுறைகளைத் தவிர்க்க வேண்டும் என்றும், உதவிச்செயலாளர் திரு எஸ். இராமகிருஷ்ணன், திருநெல்வேலி மாதில நில வள வங்கியின் சட்ட உதவியாளர்கள் மூவருக்கு அதாவது திரு எஸ். நடராசன், திரு ஆர். சீனிவாசன், திரு. ஏ. சீனிவாசகம் ஆகியோருக்குக் கட்டளை யிட்டார். அதற்கிணங்க, சட்ட ஆலோசகர்கள் உரிமைப் பத்திரங்களைச் சரிபார்க்காமல் ''கடன் வழங்கப்படலாம்'' என்று மேற்குறிப்பு எழுதி அனுப்பினர். அதன் கீழ், உதவிச்செயலாளர், ''ஆம்'' என்று எழுதி 8—2—1971 என்ற நாளிட்டு, கையொப்பமிட்டார்.

கடன் தொகையானது ஒட்டு மொத்தமாக 9—2—1971ல் வழங்கப்பட்டது.

கடனுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட அடுத்த நாளே, 3,50,000 ரூபாய். 3,70,000 ரூபாய் கடன் தொகைகள் ஒட்டு மொத்தமாகக் காசோலைகள் மூலம் முறையே கீழ, மேல தாதன்குளம் சங்கங்களுக்கு வழங்கப்பட்டன.

(2) கீழப்பெருமாளேரி, சேரகுளம் ஆகிய சங்கங்களால் கொடுக்கப்பட்ட 24—2—1971 ஆம் நாளிட்ட கடன் விண்ணப்பங்கள்.

24—2—1971-ல் அதாவது கீழப்பெருமாளேரி, சேரகுளம் ஆகிய சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட நாளுக்கு அடுத்த நாளில் அச் சங்கங்கள் முறையே 8,91,620 ரூபாய், 6,07,790 ரூபாய் கடன் கோரி விண்ணப்பித்தன. இந்தக் கடன் விண்ணப்பங்களில் அந்தந்தச் சங்கங்களின் தலேவர்கள் முறையே கொத்தளமுத்து, அரிச்சந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டிருந்தனர்.

24—2—1971-ல் நடைபெற்றதாகக் கூறப்படும் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அந்த விண்ணப்பங்களோடு இணைக்கப்பட்டிருந்தன. 7,20,000 ரூபாய் செலவில் 36 கிணறுகளைத் தோண்டவும். 1,72,620 ரூபாய் செலவில் நிலங்களைப் பண்படுத்தவும் கீழப்பெருமாளேரி சங்கம் தீர்மானித்தது. 4,80,000 ரூபாய் செலவில் 24 கிணறுகளைத் தோண்டவும் 1,27,790 ரூபாய் செலவில் நிலங்களைப் பண்படுத்தவும், சேரகுளம் சங்கம் தீர்மானித்தது. அரசின் 26—11—1970 ஆம் நாளிட்ட 35405/CEI ஆம் எண்ணுள்ள ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி உதவிப் பொறியாளர் அல்லது வேளாண்மைப் பொறியியல் மேற்பார்வையாளரது பணியைப் பயன்படுத்தாமல், தாதன்குளம் சங்கங்களைப் போல் தனிப்பட்ட ஆலோசனைப் பொறியாளர் திரு. சேசவனுல் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை இச் சங்கங்கள் தங்களது கடன் விண்ணப்பங்களோடு இணைத்து அனுப்பியிருந்தன.

இந்த இரு கடன் விண்ணப்பங்கள் குறித்தும் பீம்சிங்கின் மேற்பார்வையின் கீழ் அதே நடை

முறை மேற்கொள்ளப்பட்டது. இச் சங்கங்கள் கருங்குளம் வங்கிக்கு அளிக்க வேண்டிய உறுதி மொழிகள், ஒப்பந்தங்கள், நில அடைமானங்கள் ஆகியவை அதே நாளில் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளன. மேற்படி மாநேரி சங்கத்திற்கு 7,65,000 ரூபாய் கடனையும் சேரகுளம் சங்கத்திற்கு 5,40,000 ரூபாய் கடனையும் வழங்குவதற்கான சரிபார்த்தல், பரிவுரை செய்தல் ஆகியவை, தணிப்பிடுவாளர் திரு. ஆர். நாராயணன், திருநெல்வேலி, மாநில நிலவள வங்கி சட்ட உதவியாளர்கள் திரு. எஸ். நடராசன், திரு. சினிவாசன் ஆகியோரால் 25—2—1971ல் நடைபெற்றுள்ளன.

கடன் வழங்கல்— முதல் தவணைத் தொகை 26—2—71-ம் இரண்டாவது தவணைத் தொகை 4—3—1971 ஐம் வழங்கப்பட்டன.

அமைச்சரால் கட்டளை பிறப்பிக்கப்பட்டதன் பேரில், மாநில நிலவள வங்கித் தலைவர் திரு. சண்முகம் தொலைபேசி மூலம் மாநில நிலவள வங்கியின் சிவசுப்பிரமணியத்திற்குக் கட்டளையிட்டார். அதாவது, கடன் தொகையின் முதல் தவணைத் தொகை உடனே வழங்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு வழங்கியது குறித்த அறிக்கை நேரடியாக அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனருக்கு தொலைபேசி மூலம் ஸ்ரீ வைகுண்டத்தில் உள்ள 55-ஆம் இலக்கமுள்ள இல்லத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டார். இக் கட்டளையைத் திரு. சிவசுப்பிரமணியன் இராமகிருஷ்ணனிடம் தெரிவித்தார். அவர் அதற்கிணங்க கடன் தொகையின் முதல் தவணைத் தொகையான 3,82,500 ரூபாயைக் மேற்படி பெருமாநேரி சங்கத் தலைவர் திரு. கொத்தளமுத்துவிற்கும், 2,70,000 ரூபாயைச் சேரகுளம் சங்கத் தலைவர் திரு. அரிச்சந்திரனுக்கும் காசோலை மூலம் 26—2—1971-ல் கொடுத்தார்.

கடன் தொகையின் முதல் தவணைத் தொகை கொடுக்கப்பட்டதிலிருந்து ஒரு வாரம் முடிவடைவதற்கு முன்னரே திரு. சண்முகம், அவரது சுற்றின்படி, கடன்தொகையின் இரண்டாவது தவணைத் தொகையும் இவ்விரு சங்கங்களுக்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனரால் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

3—3—1971-ல் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் தொலைபேசி மூலம் சண்முகத்தோடு தொடர்பு கொண்டு, கடன் தொகையின் இரண்டாவது தவணைத் தொகையை இச் சங்கங்களுக்கு உடனடியாகக் வழங்குமாறு கட்டளையிட்டார். திரு. சண்முகம், மாநில நிலவள வங்கியின் விழுப்புரம் கிளை வங்கி உதவிச் செயலாளருடன் பேசி, கடன் தொகையின் இரண்டாவது தவணைத் தொகையை உடனடியாக வழங்குமாறு திருநெல்வேலி கிளை வங்கியின் உதவிச் செயலாளருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். அதே நாள் மாலையில் சண்முகம், கடன் தொகையின் இரண்டாவது தவணைத் தொகை வழங்கப்பட்டு விட்டதா இல்லையா என்பதை உறுதி செய்து கொள்ள திருநெல்வேலி, மாநில நிலவள வங்கியின் செயலாளர் திரு. இராமகிருஷ்ணனுடு தொடர்பு கொண்டார். அமைச்சரோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுமாறு சிவசுப்பிரமணியம் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன் பிறகு அவர் அமைச்சரோடு தொடர்பு கொண்டார். கடன் தொகையின் இரண்டாவது தவணைத் தொகைகளை இவ்விரு சங்கங்களுக்கும் உடனடியாக வழங்குமாறு திருநெல்வேலி உதவிச் செயலாளரைப் பணிக்குமாறு திரு. சிவசுப்பிரமணியனுக்கு அமைச்சர் தொலைபேசி மூலம் கட்டளையிட்டார். அதற்கிணங்க, திரு. சிவசுப்பிரமணியம் உடனடியாக திருநெல்வேலி கிளை வங்கி சட்ட உதவியாளர் சினிவாசகத்திற்குத் தொலைபேசி மூலம் இக் கட்டளைகளைத் தெரிவித்தார். அதன் விளைவாக, இவ்விரு சங்கங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வழங்கப்படாமல் இருந்த பாக்கித் தொகைகள், உரிய முறையில் வேண்டுகோளோ விண்ணப்பமோ அல்லது பெறப்பட்ட மூதல் தவணைத் தொகையைப் பொறுத்தமட்டில் பயன்பாட்டுச் சான்றிதழோ இவ்விரு சங்கங்களால் தாக்கல் செய்யப்படாத போதிலும், இவ்விரு சங்கங்களுக்கு மேற் சொன்ன கடன் தொகைகளில் எஞ்சியிருந்த தொகை 4—3—1971-ல் வழங்கப்பட்டது. கருங்குளம் தொடக்க நிலவள வங்கியின் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் உள்ள பதிவுகளுக்கு இணங்க, மேற் தாதன்குளம் சங்கமும், மேல தாதன்குளம் சங்கமும் இவ் வங்கியின் உறுப்பினர்களாக 15-2-1971-ல் அனுமதிக்கப்பட்டன. சேரகுளம், மேற்பெருமாநேரி, சங்கங்கள் 21—6—1971-ல் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டன. அதாவது, இந்த இறைவைப் பாசனச் சங்கங்கள் தான்கும் அவற்றிற்குக் கடன் தொகைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வழங்கப்பட்ட பின்னரே மேற்சொன்ன வங்கியின் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டுள்ளன.

இக் கடன் தொகைகள், இச் சங்கங்களுக்கு, திருநெல்வேலி நிலவளக் கூட்டுறவு வங்கியில் உள்ள கணக்குகளில் வரவு வைக்கப்பட்டன. மேழ, மேல தாதன்குளம் சங்கங்கள் ஒவ்வொன்றும் தொடக்கத்தில் 130 ரூபாய் ரொக்க வைப்பீடு செய்து நடப்புக் கணக்கை 9—2—1971-ல் இந்த வங்கியில் தொடங்கின. சேரகுளம், மேற்பெருமாநேரி சங்கங்கள் ஒவ்வொன்றும் தொடக்கத்தில், 143 ரூபாய் ரொக்க வைப்பீடு செய்து மேற் சொன்ன வங்கியின் 24—2—1971-ல் நடப்புக் கணக்குகளைத் தொடங்கின. கருங்குளம் கூட்டுறவு தொடக்க நிலவள வங்கியின் ரொக்கக் கடன் அளவு 25,000 ரூபாய் வரையில்தான் என்பதால், மேழ, மேல தாதன்குளம் சங்கங்களுக்கு உரிய இந்த 7.20,000 ரூபாய் கடன் தொகை முழுவதும் மேற்சொன்ன நிலவள வங்கியால் ஒப்புறுதி அனுமதி (Clearance Advice) மூலம்

9—2—1971-ல் கருங்குளம் தொடக்க நிலவள வங்கியின் பெயரில் வழங்கப்பட்டது. கருங்குளம் தொடக்க நிலவள வங்கியிலிருந்து காசோலைகள் வரப் பெற்றதன் பேரில், மேல தாதன்குளம் சங்கம் தங்களது நடப்புக் கணக்கில் 3,70,000 ரூபாயை 12—2—1971-ல் வரவு வைத்தது. இதேபோல் கீழ தாதன்குளம் சங்கமும் தங்களது நடப்புக் கணக்கில் 3,50,000 ரூபாயை அதே நாளில் வரவு வைத்தது. முதல் தவணைத் தொகையான 1,70,000 ரூபாயைச் சேரருளம் சங்கம் தங்களது கணக்கில் 26—2—1971-ல் வரவு வைத்தது. அதே நாளில், கீழப்பெருமானேரி சங்கம் தங்களது நடப்புக் கணக்கில் முதல் தவணைத் தொகையான 3,82,500 ரூபாயை வரவு வைத்தது. அக் கடனில் இரண்டாவது தவணைத் தொகையை இவ்விரு சங்கங்களும் டி. டி. சி. சி. வங்கியில் (T.D.C.C. Bank) உள்ள தங்களது நடப்புக் கணக்கில் 4—3—1971-ல் வைப்பீடு செய்தன.

கருங்குளம் தொடக்க நிலவள வங்கியின் உறுப்பினர்களாகச் சேர்ந்து நிதி வசதிகளைப் பெற வேண்டுமாயின் அவ் வங்கியில் தங்களது பங்கு மூலதனத்தைச் செலுத்த வேண்டும் என்பது முன் நிபந்தனையாக இருந்தபோதிலும், இந்த நான்கு சங்கங்களும் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டதும் தங்களது பங்கு மூலதனத்தை அவ் வங்கியில் செலுத்தவில்லை. கடன் தொகைகள் வரப் பெற்ற பின்னர் தான் இச் சங்கங்கள் தங்களது பங்கு மூலதனத் தொகைனைச் செலுத்தியுள்ளன. தங்களது பங்கு மூலதனத் தொகைனைச் செலுத்துவதற்கான காசோலைகள் கடன் தொகைகள் வரப்பெற்ற நாளுக்கு அடுத்த நாளில் வழங்கப்பட்டிருந்தபோதிலும், இவ் வங்கியில் தங்களது நடப்புக் கணக்குனைத் தொடங்குவதற்காக முதலில் அவர்கள் வைப்பீடு செய்த தொகையைத் தவிர வேறு தொகை ஏதும் இச் சங்கங்களுக்கு அவர்களது கணக்கில் இவ் வங்கியில் இல்லை.

13—2—1971-ல் மேல தாதன்குளம் சங்கமும், கீழ தாதன்குளம் சங்கமும் தங்களது பங்கு மூலதனத்தைச் செலுத்துவதற்காக, முறையே 18,584 ரூபாய்க்கும், 17,584 ரூபாய்க்கும் காசோலைகளை வழங்கின. 5—3—1971-ல் சேரருளம் சங்கமும் கீழப் பெருமானேரி சங்கமும் தங்களது பங்கு மூலதனத்தைச் செலுத்துவதற்காக, முறையே 27,084 ரூபாய்க்கும் 38,334 ரூபாய்க்கும் காசோலைகள் வழங்கின.

கடன் தொகைகளை வைப்பீடு செய்த உடனேயே, இந்த நான்கு சங்கங்களும் பெருந் தொகையை எடுத்துள்ளன. சங்கத்தின் மொத்தக் கடன் தொகையான 3,50,000 ரூபாயில், கீழ தாதன்குளம் சங்கம் 12—2—1971-ல் 2,00,000 ரூபாயும் 22—2—1971-ல் மேலும் 1,20,000 ரூபாயும் ஆகமொத்தம் 3,22,000 ரூபாயை எடுத்தது. சங்கத்தின் மொத்தக் கடன் தொகையான 3,70,000 ரூபாயில், மேல தாதன்குளம் சங்கம் 15—2—1971-ல் 2,10,000 ரூபாயும் 22—2—1971-ல் 1,41,000 ரூபாயும் ஆக மொத்தம் 3,51,000 ரூபாயை எடுத்துள்ளது. சங்கத்தின் மொத்தக் கடன் தொகையான 5,40,000 ரூபாயில் சேரருளம் சங்கம் 26—2—1971-ல் 2,42,000 ரூபாயும் 4-3-1971ல் 1,80,000 ரூபாயும் ஆக மொத்தம் 4,22,000 ரூபாயை எடுத்துள்ளது. சங்கத்தின் மொத்தக் கடன் தொகையான 7,65,000 ரூபாயில் கீழப் பெருமானேரி சங்கம் 22—2—1971-ல் 3,44,000 ரூபாயும் 4-3-1971-ல் 2,90,000 ரூபாயும் ஆக மொத்தம் 6,34,000 ரூபாயை எடுத்துள்ளது.

இவ்வாருக, இந்த நான்கு சங்கங்கள் கடனுகப்பெற்ற மொத்தம் 20·25 இலட்சம் ரூபாயில், அக் கடன் தொகை வழங்கப்பட்ட உடனேயே 17.39 இலட்சம் ரூபாயை எடுத்துள்ளன.

நாடாளுமன்ற மக்களவை, மாநிலச் சட்டப் பேரவை ஆகியவற்றிற்கான பொதுத் தேர்தல்கள் 1—3—1971-க்கும், 7—3—1971-க்கும் இடைப்பட்ட நாட்களில் நடைபெற்றுள்ளன என்பதையும், திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் வாக்குப்பதிவு ஒரே ஒரு நாள் அதாவது 1—3—1971-ல் நடைபெற்றுள்ளது என்பதையும் இங்கே கவனிக்கலாம். திருநெல்வேலி மாவட்டம் முழுவதற்கும் இ.மு.க. வுக்குத் தேர்தல் பிரச்சாரப் பணியைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு திரு. ஆதித்தனருடையதாக இருந்தது. இது தொடர்பாக அவர் 3—2—1971-லிருந்து 2—3—1971-வரையில் திருநெல்வேலியில் அவர் முகாமிட்டிருந்தபோது தேர்தல் பணியை அவரே நேரடியாக மேற்பார்வையிட்டுள்ளார்.

மேல தாதன்குளம் சங்கத் தலைவர் முருகனின் கூற்றுக்கிணங்க, இச் சங்கங்கள் பெற்ற கடன் தொகையில் அவர்களது நடப்புக் கணக்கில் இருந்த தொகை முழுவதும் இச் சங்கங்களால் எடுக்கப்பட்டு திரு. சி. பா. ஆதித்தனாரிடமோ திரு. திருவ்ணகாந்தனிடமோ நேரடியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

5-A பிரிவின் கீழ் புலனுய்வு அலுவலரால் சேகரிக்கப்பட்ட சாட்சியத்தின்படி, இந்த நான்கு சங்கங்களின் நிலங்களில் நிலமேம்பாட்டுப்பணி 1971 இறுதிவரை நடைபெறவில்லை. இது குறித்து மிக முக்கியமான சாட்சி, இந்திய ரிசர்வ் வங்கியின் நிராமக் கடன் வழங்கு அதிகாரி திரு. வேங்கடநாராயண ஆவார். இவர், இந்திய ரிசர்வ் வங்கியின் பொருளாதார உதவியாளர் திரு. கே. ஜி. மேனனுடு அந்த இடத்திற்கே சென்று பார்வையிட்டார். அவர்களது கூற்றின்படி இச் சங்கங்களைச் சேர்ந்த நிலங்களை 16—12—1971-ல் சென்று பார்த்தபோது, 9 மாதங்கள் கழித்த பிறகும் கூட, கீழ, மேல தாதன்குளம் சங்கங்களைப் பொறுத்தமட்டில்

எந்தவிதப் பணியும் தொடங்கப்படவில்லே. ஏனேய இரு சங்கங்களேப் பொறுத்தமட்டில், அவர்களது நிலங்களில் ஒரு சிலவற்றிலேயே பண்படுத்தும் பணி நடைபெற்றுள்ளது; ஒரு சில கிணறுகள் பல்வேறு நிலேகளில் தோண்டப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் காளான்போன்று ''திடீரெனத்'' தோன்றியது குறித்தும், சங்கங்களுக்குக் கடன் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் பின்பற்றப்படவேண்டிய கோட்பாடுகளேப் பின் பற்றுமல் '' கேலலமான அவசரத்தில் '' இச்சங்களுக்குக் கடன்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு வழங்கப்பட்டது குறித்தும் இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகள் தங்களது ஆய்வு அறிக்கையில் மிகவும் கடுமையாகக் கண்டனம் தெரிவித் துள்ளனர்.

இக் கடன் தொகைகள் வழங்கப்பட்ட பிறகு கணிசமான கால அளவு வரையில் இதன் உரிய காரியத்திற்குப் பயன்படுத்தாமல் இருந்தது குறித்துச் சாட்சியம் அளித்த பிறதொரு சாட்சி, திரு. கே. நடராசன் ஆவார் (C. W. 44). திரு. சி. பா. ஆதித்தனர் கட்டளேயிட்டதன் பேரில் இச் சங்கங்களின் நிலங்களே இவர் 1971 நவம்பரில் சென்ற பார்வையிட்டார். இச் சங்கங்களில் ஒரு சங்கத்தில் நிலப்பகுதியில் தெளிப்புப் பாசனம் குறித்த சாத்தியத்தை ஆய்வு செய்வதே இவர் அங்கு சென்றதன் முக்கிய நோக்கமாகும். இச் சங்கங்களின் நிலங்களில் பண்படுத்தும் பணி ஏதும் நடைபெறவில்லே என்று நடராசன் கண்டார், '' தொடக்கத்தில் முதல் பயிராக புளிச்சையைப் பயிரிட் அவர்கள் கருதியுள்ளனர்'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சேரகுளம் சங்கத்தைச் சேர்ந்த நிலங்களில் இரண்டு கிணறுகளுக்குத்தான் 1971 டிசம்பரில் மின் இணேப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், எஞ்சியிருந்த கிணறுகளுக்கு 1972 ஏப்ரலுக்குப் பிறகுதான் மின் இணேப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் மாநில மின்சார வாரியத்தின் ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது.

1972-லிருந்துதான் இந்த நிலங்களில் புதிதாகக் கிணறுகள் தோண்டப்பட்டன; பம்ப் செட்டுகள் நிறுவப்பட்டன. மின்சார மீட்டர்கள் பொருத்தப்பட்டன என்று சேரகுளம் கிராமத்தின் கர்ணம் நவநீதகிருஷ்ணனும் அக் கிராம முன்சீப் ஆர். ஷண்முகமும் சாட்சியம் அளித்துள்ளனர். இப் பணிகள் அனேத்தும் எஸ். டி. ஆதித்யனால் செய்து முடிக்கப்பட்டன. இச் சங்கங்களின் உறுப்பினர்களாகக் கூறப்பட்ட எவரும் இந் நிலங்களில் நில மேம்பாட்டுப் பணிகளே அல்லது பயிர் விளேச்சல் பணிகளேச் செய்து நாங்கள் பார்க்கவில்லே என்று இச் சாட்சிகள் கூறியுள்ளனர்.

ஆதித்தனர் கல்வி நிலேயத்தைச் சேர்ந்த நிலங்களே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் மேற்கொள்ள விடாமல் அவற்றை ஆதித்தனர் குடும்பத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் ''தினத்தந்தி'', ''மாலேமுரசு'' ஆகிய பத்திரிகை அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாற்றிக் கொடுத்துள்ளார் என்று பகிரங்கமாகச் சட்டப் பேரவையில் 4— 3— 1972-ல் முன்னுள் சட்ட மன்றப் பேரவை யின் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே. சுப்பு குற்றம் சாட்டினுர். தனது பணியாளர்கள் அடங்கியுள்ள இந்த நான்கு சங்கங்களுக்குப் பெருந் தொகை கடனுக வழங்கப்படுவதற்குத் திரு. ஆதித்தனர் ஏற்பாடு செய்துள்ளார் என்றும் அவர் ஆதித்தனர் மீது குற்றம் சாட்டினுர். இச் சங்கங்களின் போலித் தன்மை குறித்தும் இதில் சி. பா. ஆதித்தனர் மிகுந்த அக்கறை காட்டியது குறித்தும், இத்தப் போலிச் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்கியதில் உள்ள முறைகேடுகள் குறித்தும், எக்காரியத்திற்காக கடன்கள் வழங்கப்பட்டனவோ அக் காரியத்திற்காக கடன் தொகைகள் பயன்படுத் தப்படாதது குறித்தும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நான்கு சங்கங்கள் குறித்து திரு. வேங்கட நாராயண அளித்த நேரிட ஆய்வு அறிக்கையை விவரித்து இந்திய ரிசர்வ் வங்கி, மாநில நிலவள வங்கியின் தலேவருக்குக் கடிதம் அனுப்பியது, ஆய்வு அதிகாரியால் கவனிக்கப்பட்ட கடுமையான ஒழுங்கின்மைகள், முறைகேடுகள் ஆகிய அனேத்தையும் மாநில நிலவள வங்கியின் தலேவரது கவனத்திற்குக் கொண்டு வந்ததோடு, வழங்கப் பெற்ற கடன் தொகையில் பயன்படுத்தப்படாமலுள்ள தொகையைச் சங்கங்களிடமிருந்து திரும்பப்பெறுமாறு மேற்சொன்ன வங்கியின் தலேவருக்குக் கட்டளேகளேப் பிறப்பித்தது.

இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வந்த இந்தத் தகவல், மூடி மறைக்கும் பணியை உடனடியாகத் தொடங்க திரு. சி. பா. ஆதித்தனரைத் தூண்டிய தாகக் கூறப்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்ப வேண்டிய மாநில நிலவள வங்கித் தலேவரின் பதிலே அவரே தனது கைப்பட தயாரித்த தாகக் கூறப்படுகிறது. இச் சங்கங்களால் பெறப்பட்ட கடன் தொகை இப் பணிக்குப் பொறுப்பு வகிக்கும் பொறியியல் மேற்பார்வையாளரால் சான்றளிக்கப்பட்டவாறு முழுவதும் பயன் படுத்தப்பட்டுள்ளது என்று இப் பதிலில் உறுதி யாகக் கூறப்பட்டது. தொகை பயன்படுத்தியது மாநில நிலவள வங்கிப் பொறியாளரால் சரி பார்க்கப்பட்டது என்றும் அது சுட்டிக் காட்டியது. திரு. ஆதித்தனரால் தயாரிக்கப்பட்டதாகக் கூறப் படும் இந்தப் பதில் மாநில நிலவள வங்கித் தலேவரால் கையொப்பமிட்டு 25— 4— 72-ல் இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பின்னர், வேறு ஒரு பதில் மாநில நிலவள வங்கியின் தலேவரால் 3— 6— 1972-ல் அனுப்பி வைக்கப் பட்டது. இந்தப் பதிலும் முன்னர் தயாரிக்கப் பட்டுத் திருத்தப்பட்ட வரைவாக அமைந்திருந்

தது. இவ் வரைவை முதலில் மாநில நிலவள வங்கிப் பொறியாளர் திரு. கே. நடராசன் திருத்தினார். பயன்பாட்டைப் பொறியாளர் சரிபார்த்து வருகிறார் என்று சுட்டிக்காட்டவே இத் திருத்தம் செய்யப்பட்டது. வரைவுக் கடிதத்தின் செல்வைப் படி திரு. சி. பா. ஆதித்தனரால் மேலும் திருத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. பயன்பாட்டை மாநில அரசின் அதிகாரிகள் சரிபார்த்துள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டவே இத் திருத்தம் செய்யப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திரு. கேசவ கினியிடமிருந்து வரப்பெற்ற நேர்முகக் கடிதம் ஒன்றிற்கு இணைப்பதிவாளர் சுப்பையா பதில் ஒன்றை 15-5-1972-ல் அனுப்பி வைத்தார். கடன் தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று இக் கடிதத்தில் ஏகமனதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

திரு. கே. நடராசன் சங்கத்தின் பகுதிகளை மீண்டும் மார்ச்சிலும் (4-3-1972), ஏப்ரலிலும் (15-4-1972) பார்வையிட்டார். இந்தச் சங்கங்களின் பகுதிகள் அனைத்தையும் ஒன்றுசேர்த்துப் பார்த்தால், முறையே 5 இலட்சம் ரூபாய் 7·75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வளர்ச்சிப் பணி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இச் சங்கங்கள் வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெற அனுமதி கோரி, திருநெல்வேலி இணைப் பதிவாளருக்குச் செயற்குறிப்பு ஒன்று 28-7-1972-ல் சமர்ப்பிக்கப்பட்டது. இச் செயற் குறிப்பை, திரு. சுப்பையா 29-7-1972 ஆம் நாளிட்ட தனது கடிதத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அனுப்பி வைத்தார். பயன்பாட்டுச் சான்றிதழை வழங்குவதற்காகச் சங்கப் பகுதிகளைப் பார்வையிடுமாறு திரு. கே. நடராசன் அனுப்பப்பட்டார். மாநில நிலவள வங்கித் தலைவர் திரு. எம்.சண்முகத்தின் கட்டளைகளின்படி, திரு. கே. நடராசன், திரு. சி. பா. ஆதித்தனரைத் திருநெல்வேலியில் 28-7-1972-ல் சந்தித்தார். இது குறித்து திரு. கே. நடராசனிடமிருந்து என்ன எதிர்பார்க்கப் படுகிறது என்பதை திரு. சி. பா. ஆதித்தனர், திரு. கே. நடராசனிடம் கருக்கமாக எடுத்துக் கூறினார். சங்கப் பகுதிகளைச் சென்று பார்வையிட்ட அவற்றில் செய்யப்பட்டுள்ள வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்தார். மதிப்பீட்டை அதிகப் படுத்தி அளிக்குமாறு, அவரை அப்போது சங்கத்தின் நிலங்களுக்கு வந்திருந்த திரு. எஸ்.டி. ஆதித்யனும், பீம்சிங்கும் ஏனோரோடும் வலுக்கட்டாயப் படுத்தினர். திரு. நடராசன் முதலில் வளர்ச்சிப் பணிகள் குறித்து உண்மையில் 14,57,337 ரூபாய் செலவிட்டிருப்பதாக மதிப்பிட்டார். எவ் வளவு ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதை உறுதியாகத் தெரிந்து கொண்ட பிறகு, இம் மதிப்பீட்டை 21,57,337 ரூபாயாக உயர்த்தினார்.

கடன் தொகையைத் திருப்பிக் கொடுத்தல்.

வட்டித் தொகை உட்பட திருப்பித் கொடுக்க வேண்டிய கடன் தொகையின் முதல் தவணைத் தொகையான 2,53,517·89 ரூபாயை 1-11-1971ன் செலுத்த வேண்டும். ஆனல், இத் தொகை 28-10-1971-ல் அதாவது உரிய நாளுக்கு முன்னதாகச் செலுத்தப்பட்டது. 28-10-1971-ல் மேல தாதன்குளம் சங்கமும், கீழ தாதன்குளம் சங்கமும், திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியல் தங்களுக்கு இருந்த நடப்புக் கணக்குகளில் ஒவ்வொன்றும் 546 ரூபாயையே மிச்சமாக வைத்திருந்தன. சேரகுளம் சங்கத்திற்கு 91,133·21 ரூபாயும், கீழப் பெருமானேரி சங்கத்திற்கு 92,886·58 ரூபாயும் மிச்சமிருந்தன. சேரகுளம் சங்கமும், கீழப் பெருமானேரி சங்கமும் முதல் தவணைத் தொகையைச் செலுத்துவதற்காக தங்களது கணக்குகளிலிருந்து முறையே 56,000 ரூபாயையும், 42,000 ரூபாயையும் செலுத்தின. எஞ்சிய 1,55,517·89 ரூபாய் ரொக்கமாகச் செலுத்தப்பட்டது.

அதே நேரத்தில், சன் பேப்பர் மில் இச் சங்கங்களுக்கு 16 இலட்சம் ரூபாய் முன்பணம் அளித்தது. அப்போது, கடன் தொகையில் கட்ட வேண்டி எஞ்சியிருந்த தொகை 20,06,025·30 ரூபாய் ஆகும். இதுகருங்குளம் கூட்டுறவுத் தொடக்க நிலவள வங்கிக்குச் செலுத்தத்தக்கதாகும். அத் தொகை பின்வருமாறு செலுத்தப்பட்டது :—

			ரூ.
28-7-1972-ல்	..	..	6,76,134·68
4-8-1972-ல்	..	..	5,07,897·12
10-8-1972-ல்	..	..	7,20,326·49

கொடுக்கவேண்டிய பாக்கித் தொகையில் ஒரு பகுதி அவர்களது பங்கு மூலதனத்திலிருந்து கொடுத்துத் தீர்க்கப்பட்டது. அப்போது கூட, தோராயமாக 3 இலட்சம் ரூபாய் ஏனைய வழிகளிலிருந்து பெற்று ரொக்கமாகக் கொடுத்துத் தீர்க்க வேண்டியிருந்தது.

திரு. குத்தாலம் கருங்குளம் தொடக்க நிலவள வங்கியில் 10-6-1972-ல் மேலாளர் பதவியில் சேர்ந்தார். 1972 ஆகஸ்டு மாதத்தின் முதல் வாரத்தில் அமைச்சர், குத்தாலத்தை மீண்டும் அழைத்து, இந்த நான்கு சங்கங்கள் சம்பந்தப்பட்ட நான்கு கடன் விண்ணப்பங்களையும், நான்கு திருத்த மதிப்பீடுகளையும், நான்கு பயன்பாட்டுச் சான்றிதழ்களையும் கொடுத்து, கருங்குளம் தொடக்க நிலவள வங்கியின் தலைவர் திரு. புதிய முத்துவால் இவற்றில் முன் தேதியிட்டு கையொப்பம் இடப்பட்டு சம்பந்தப்பட்ட கடன் விண்ணப்பக் கோப்புக்களில் அவை சேர்க்கப்பட வேண்டுமென்று அவருக்குக் கட்டளையிட்டார். நான்கு பயன்பாட்டுச் சான்றிதழ்களும் 29-11-1971 ஆம் நாளிட்ட வையாகும். அமைச்சர் விரும்பியபடியே அனைத்தையும் குத்தாலம் செய்து முடித்தார்.

தனியார் பொறியியல் மேற்பார்வையாளர் திரு. மகாதேவனுல் வழங்கப்பட்ட பயன்பாட்டுச் சான்றிதழ்களே அடிப்படையாகக் கொண்டு, மாநில நில வள வங்கித் தலேவர், எக் காரியங்களுக்காக இந்த நான்கு இறைவைப் பாசனங்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டனவோ, அக் கடன் தொகைகளே வழங்குவதில் முறைகேடு ஏதும் நடைபெறவில்லே என்று கூறி பதில் ஒன்றை 25—4—1972-ல் இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பி வைத்தார். ஆகையால் எழுதப்பட்ட வரைவின் வரிக்கு வரி அப்படியே உள்ள நகல் ஒன்று மாநில நில வள வங்கியின் தொடர்புள்ள கோப்புகளில் காணப்படுகின்றது. (Ex. C.W.36—3) இந்த வரைவு திரு. ஆதித்தனரே தனது கைப்பட எழுதியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இக் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கு எவ்வாறு தொகை பிடைத்தது என்பதற்கான விவரங்கள் பின்வருமாறு :—

காதித்த தாள்களே வழங்குவதற்கான முன்பணம் என்ற போர்வையில் '' தினத்தந்தி '' 19—7—72-ல் 6.8 இலட்சம் ரூபாயையும் 4—8—72-ல் 4 இலட்சம் ரூபாயையும் சன் பேப்பர் மில்லுக்குக் கொடுத்தது. இதே காரணத்திற்காக, '' தினத்தந்தி '' 9—8—72-ல் மேலும் 5.2 இலட்சம் ரூபாயை சன் பேப்பர் மில்லுக்கு முன்பணமாக வழங்கியது. மூலப் பொருள்களே வழங்குவதற்கான முன்பணம் என்ற போர்வையில் மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 3,15,000 ரூபாயையும், கீழ தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்திற்கு 3,30,000 ரூபாயையும் முன்பணமாகச் சன் பேப்பர் மில் 28—7—72-ல் வழங்கியது. இதேபோல், சேரகுளம் சங்கத்திற்கு 4 இலட்சம் ரூபாயை 4—8—72 அம் கீழப்பெருமானேரி சங்கத்திற்கு 5,20,000 ரூபாயை 10—8—72-லும் சன் பேப்பர் மில் வழங்கியது. இவ்வாருக சன் பேப்பர் மில்லால் இச் சங்கங்களுக்கு மொத்தம் 16 இலட்சம் ரூபாய் முன்பணமாக அளிக்கப்பட்டது.

இதில் இருந்து தான் இக் கடன் தொகையின் பெரும் பகுதி திருப்பிச் செலுத்தப்பட்டது. எஞ்சியுள்ள தொகை, கணக்கில் காட்டப்படாத ஆதாரத்திலிருந்து பெற்று ரொக்கமாக இரண்டு தவணேகளில் இச் சங்கங்களின் தலேவர்கள் திரு. அரிச் சந்திரனுலும், கொத்தளமுத்துவாலும் செலுத்தப்பட்டது.

சன் பேப்பர் மில்லிலிருந்து பெறப்பட்ட இந்த முன்பணங்களேக் கொடுத்துத் தீர்ப்பதற்கான அல்லது சரிக்கட்டுவதற்கான நிதி ஆதாரங்களேயும் காணலாம். 5—6—72-ல் வழக்குரைஞர் திரு. உத்தர பாண்டியன் இந்த நான்கு சங்கங்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் என்று சொல்லிக் கொண்டு, இந்த நான்கு சங்கங்களுக்கும் நடுத்தரக் கால, குறுகிய காலக் கடனுக மொத்தம் 15 இலட்சம் ரூபாயை வழங்குமாறு கேட்டு பெங்களூரில் உள்ள கனரா வங்கியை அணுகினர்.

திரு. ஆதித்தனர், கூட்டுறவுச் சங்கங்கள் கூடுதல் பதிவாளர் திரு. கேசவ் கினியிடம் கூறி, இந்த நான்கு சங்கங்களுக்கும் தாராள நிபந்தனேகளின் கீழ் கணிசமான அளவிற்குப் பயிர்க் கடன்களேயும், நடுத்தர காலக் கடன்களேயும் பெறுவதற்குக் கனரா வங்கியின் உயர் அதிகாரிகளோடு பேச்சு வார்த்தை நடத்துவதற்காக விமானத்தின் மூலம் 19—6—1972-ல் அவரை அலுவல் முறையின் பயணம் மேற்கொள்ள அனுப்பி வைத்தார். திரு. கேசவ்கினி தனது பணியில் வெற்றி கண்டார். இந்த நான்கு சங்கங்களுக்கும் கடன் வழங்க கனரா வங்கி ஒப்புக் கொண்டது.

17—8—1972-ல் 12,06,250 ரூபாயையும், 29—3—1973-ல் மேலும் 1,20,410 ரூபாயையும் இந்த நான்கு சங்கங்களுக்குக் கனரா வங்கி கடனுக வழங்கியது. இச் சங்கங்கள், கீழ்க்காணும் தொகைகளே, அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில், சன் பேப்பர் மில்லுக்கு மாற்றிக் கொடுத்தன :—

		ரூ.
21—8—1972	.. .. ..	5,50,000
29—8—1972	.. .. ..	5,00,000
31—10—1972	.. .. ..	1,53,000
21—12—1972	.. .. ..	1,10,000
30—3—1973	.. .. ..	95,000
30—6—1973	.. .. ..	1,92,000
	மொத்தம் ..	16,00,000

மூலப் பொருட்களே வழங்குவதற்காக இச் சங்கங்களுக்கு சன் பேப்பர் மில் இத் தொகைகளே வழங்கிய போதிலும், அது போன்ற மூலப் பொருள்கள் எதையும் இச் சங்கங்கள் சன் பேப்பர் மில்லுக்கு வழங்கவில்லே. ஆனல், அத் தொகையை ரொக்கமாகத்தான் திருப்பிச் செலுத்தியுள்ளன.

சன் பேப்பர் மில்லும், கீழ்க்காணும் தொகையை அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் '' தினத்தந்தி ''-க்குத் திருப்பிச் செலுத்தியது :—

		ரூ.
23—8—1972	.. .. ..	4,00,000
30—8—1972	.. .. ..	4,00,000
31—10—1972	.. .. ..	1,50,000
30—3—1973	.. .. ..	2,50,000
	மொத்தம் ..	12,00,000

இங்கும் இத் தொகைக்குக் காதிதம் எதுவும் வழங்கி சரிக்கட்டப்படவில்லே. ஆனல், வழங்கப்பட்ட 12 இலட்சம் முன்பணம் '' தினத்தந்திக்கு '' ரொக்கமாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

9-7-1973-க்கும் 27-12-1973-க்கும் இடைப்பட்ட கால அளவில், இச் சங்கங்கள் 10,02,213.41 ரூபாயை கனரா வங்கிக்குத் திருப்பிச் செலுத்தின. கனரா வங்கியிடம் இச் சங்கங்களால் அடைமானம் வைக்கப்பட்ட நிலங்களில் இக் கால அளவில் மிகக் குறைந்த பகுதிகளில்தான் புளிச்சைக் கீரையும் பருத்தியும் பயிரிடப்பட்டன என்று அக் நிறாம வரு வாய்துறை அதிகாரிகள் சாட்சியம் அளித்துள்ளனர். அடைமானம் வைக்கப்பட்ட இந்த நிலங்களிலிருந்து தொடர்புடைய இக் கால அளவில் இந்த நான்கு சங்கங்களுக்கும் கிடைக்கப்பெற்ற மகசூலிலிருந்து கிடைத்த வருமானம் 1.70 இலட்சம் ரூபாய்க்கு மேற்படாது என்று மதிப்பிடப்பட்டது. கனரா வங்கியிலிருந்து கடன் பெறும் அதே நேரத்தில், இச் சங்கங்கள், அதே வங்கியில் நடப்புக் கணக்குகளைத் தொடங்கி, 1974 பிப்ரவரியிலிருந்து 5-6-1974 வரையிலான கால அளவிற்குள், அச் சங்கங்கள், தங்கள் நடப்புக் கணக்குகளில் அவ்வப் போது தொகை வைப்பீடு செய்ததன் மூலம், மொத்தம் 24,93,000 ரூபாயை வைப்பீடு செய்துள்ளன என்பதையும் கவலிக்க வேண்டும். பங்கு பெறும் சான்றிதழ் நிட்டம், வர்த்தகக் கமிஷன் பட்டியல் நிட்டம் ஆகிய இவ்விரண்டு நிட்டங்களின்கீழ், மதுரை, திருநெல்வேலி ஆகிய இவ்விரு இடங்களிலும் உள்ள வங்கிகளில் இச் சங்கங்கள் 24-4-1974-லிருந்து 26-4-1975 வரை பெருந் தொகைகளை வைப்பீடு செய்துள்ளன. கனரா வங்கியில் இருந்த தங்களது நடப்புக் கணக்குகளிலிருந்து பெரும் தொகையை எடுத்த பிறகு, சேரகுளம் இறைவைப் பாசன சங்கத்தின் பெயரில் மதுரை வங்கியில் 24-4-1974 குறித்த கால வைப்பீடாக 15இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. கீழ தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் பெயரில் 6-6-1974-ல் குறித்தகால வைப்பீடாக 12 இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது மதுரை வங்கியில் வைப்பீடு செய்யப்பட்ட இத்தத் தொடக்க வைப்பீடு ஒரு தடவை அல்லது பல தடவைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 65,15,000 ரூபாய் இந்த நான்கு சங்கங்களுக்கும் 24-4-1974-லிருந்து 26-7-1975வரையில் உள்ள கால அளவில் புழக்கத்திற்குத் திடைக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு செலுத்தப்பட்ட இந்த வைப்பீடுகளுக்காக பல இலட்சம் ரூபாய் வட்டித்தொகையை இந்த நான்கு சங்கங்களில் ஒவ்வொன்றும் பெற்றுள்ளது. மதுரை வங்கியிலிருந்து தொகை முழுவதையும் கடையாகப் பெற்ற பிறகு சென்னை, அண்ணா சாலையில் உள்ள தேனு வங்கியில் குறித்தகால வைப்பீட்டுக் கணக்குகள் ஏற்படுத்தப் பட்டன. 10-9-1975ல் கீழ தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் தலைவர் கிருஷ்ண காந்தனும், செயலாளர் அருணாசலமும் சென்னை, அண்ணா சாலையில் உள்ள தேனு வங்கியில் 12,52,270 ரூபாயைக் குறித்தகால வைப்பீட்டுத் தொகையாகச் செலுத்தினர். இதே வங்கியில் குறித்தகால வைப்பீட்டுக் கணக்கில் மேற்சொன்ன வர்களால் மேலும் 1,04,640 ரூபாய் 7-10-1975ல் கட்டப்பட்டது. இந்த இரு குறித்தகால வைப்பீட்டுத் தொகைகளுக்கான கால அளவு முடிவடைந்ததன் பேரில், இத் தொகைகள், நலாங்கரை தமிழ்நாடு உழவர்கள் பணி கூட்டுறவுக் கூட்டமைப்பில் 3413 ஆம் எண்ணுள்ள சேமிப்பு வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டன. இக் கணக்கு நிர்வாக இயக்குநர், திரு. எஸ். சத்திரசேகர் பெயரில் 10-9-1975-ல் தொடங்கப்பட்டது. அவர் 10-9-1975 ல் 4,15,000 ரூபாயும், 24-10-1975-ல் 10 இலட்சம் ரூபாயும் வைப்பீடு செய்தார். கூட்டமைப்புக் கணக்கில் மொத்தம் 83,97,267.93 ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டது.

5 (2) (a) விதியின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகளுக்குப் பதிலளிக்கையில், மனுதாரர், திரு. எம். கல்யாணசுந்தரம் இரண்டு உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்தார். குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய மகஜரில் அவர் செய்துள்ள குற்றச்சாட்டை அவற்றில் விளக்கினார்.

23-7-1976 நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில் திரு. சி.பா. ஆதித்தனார் கூறியுள்ளது வருமாறு :—

(i) நில மேம்பாட்டுக்காக, வல்லநாடு தொடக்க நிலவள வங்கி மூலம் மாநில நிலவள வங்கி, இறைவைப்பாசனச் சங்கங்களுக்குக் கடன்கள் அனுமதித்து வழங்கியது. சரியான நடைமுறைகள் கவனத்துடன் பின்பற்றப்பட்டு, காசோலைகள் மூலம் பற்றுவரவுகள் நடைபெற்றுள்ளன.

கடன் பெறுவதற்காக விண்ணப்பம் கொடுப்பதற்கும் தொடக்க நிலவள வங்கி கடன் கொடுப்பதற்கும் இடையிலான கால அளவு, 6-4-1968 நாளிட்ட 21685/68/K.2 ஆம் எண் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் சுற்றறிக்கையின்படி 30 நாட்களுக்கு மேற்படக்கூடாது. இது மேல் வரம்புதான். ஆனால், வங்கி இதற்கும் குறைந்த காலத்திற்குள் கடன் வழங்க முயற்சி செய்ய வேண்டும். இதில் கடன் பெறுபவர்களான இறைவைப் பாசனச் சங்கங்கள் 1971 ஜனவரி, பிப்ரவரியில் கடன் பெறுவதற்காக வழக்கப்படித் தங்களது விண்ணப்பங்களைச் செய்து கொண்டன. மேற்படி விதியில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்குள் அதாவது 1971, பிப்ரவரி, மார்ச் திங்களுக்கிடையில் வெவ்வேறு தேதிகளில் காசோலைகள் மூலம் கடன்தொகைகள் வழங்கப்பட்டன.

(ii) வல்லநாடு கருங்குளம் நிலவள வங்கியும் அதன் விவகாரங்களும் இயக்குநர் குழுவால் நிர்வகிக்கப்படுகின்றன. இயக்குநர் குழுவின் தீர்மானங்களின் பேரில், தலைவர் செயல்படுகிறார். தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, கருங்குளம் நிலவள வங்கிக்கு மேற்சொன்ன கடனுக்கு அனுமதி வழங்கியது. அக் கடன், இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு முறைப்படி வழங்கப்பட்டது.

(iii) கட்டுப்படுத்தும் நலிமை வங்கி அதிகாரிகள், கடனே முழுவதும் பயன் படுத்தியது குறித்து சரிபார்த்து சான்றளித்துள்ளனர்; கடன் பெற்ற சங்கங்கள் சுமார் 500 ஏக்கர் தரிசு நிலத்தை மிகு வீணர்ச்சல் நிலமாக மாற்றியுள்ளன. கடன்கள் எந்த நோக்கத்திற்காக வங்கப்பட்டனவோ அந்நோக்கம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மாநில நிலவள வங்கி நலிமைப் பொறியாளர், நேரடியாகச் சென்று விசாரணை செய்த பின்னர், 3-8-1972 நாளிட்ட தனது அறிக்கையில் கூறியதாவது: "உண்மையில், காடாகக் கிடந்த இடம், மிகக் குறுகிய காலத்தில் அழகான நன்செய் நிலமாக மாற்றப்பட்டுள்ளது. நீர் வசதி செம்மையாக உள்ளது. சாகுபடி முழு மூச்சாக நடைபெறுகிறது. உண்மையிலேயே வியத்தகு பணி செய்யப்பட்டுள்ளதைக் காணலாம் "(இணைப்பு-II)".

(iv) கடன்கள் பெற்ற சங்கங்கள் எக்காரியத்திற்காக இவற்றைப் பெற்றனவோ அவற்றிற்காக இக் கடன் தொகைகளைப் பயன்படுத்திய பின்னர், வட்டியுடன் சேர்த்து முழுக் கடன் தொகையையும் (20.25 இலட்சம் ரூபாய், அதாவது ஏக்கர் ஒன்றுக்குச் சுமார் 4,000 ரூபாய்) தொடக்க நிலவள வங்கிக்கும் மாநில நிலவள வங்கிக்கும் திருப்பித் தந்தன. இக் கடன் தொகை, திரு. கல்யாணசுந்தரம் தனது மகஜரை அனுப்புவதற்கு வெகுகாலம் முன்னரே இவ்வாறு திருப்பிச் செலுத்தப்பட்டது.

(v) தொடக்க நிலவள வங்கிகள் தமிழ்நாடு 1934 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிச் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் வருகின்றன. மனுதாரர் திரு. கல்யாணசுந்தரம், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கச் சட்ட விதித் துறைகளின் கீழ் வரும் ஏனைய வங்கிகளான நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றுடன் இவற்றைச் சேர்த்து குறிப்பிட்டுள்ளதுபோல் இவற்றின் நிலைமையைக் குழப்பப்படுத்தமுடியாது. தொடக்க நிலவள வங்கிகள் மாநில நிலவள வங்கியின் கட்டுப்பாடு, மேற்பார்வை, பொறுப்பின்கீழ் உள்ளன "(இணைப்பு I-ஐக் காண்க)".

(vi) வல்லநாடு கருங்குளம் நிலவள வங்கியின் நிதிகளை அதன் தலைவரோ வேறெருவரோ கையாடல் செய்யவில்லை. இந்தத் தொடக்க நிலவள வங்கி, கடன் முழுவதையும் மாநில நிலவள வங்கிக்குத் திருப்பிச் செலுத்தியுள்ளது.

திரு. ஆதித்தனார் தனது உறுதிமொழிப் பத்திரத்தில், மத்திய அரசு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து மட்டுமே தனது வாக்குமூலத்தை அளித்திருப்பதைக் காணலாம்.

உண்மையில், திரு. கல்யாணசுந்தரத்தின் உறுதிமொழிப் பத்திரத்திலுள்ள பிற சிறந்த விவரங்கள் கமிஷனின் ஆய்வு வரம்பிற்குப் பொருத்த மற்றவை, அப்பாற்பட்டவை என்ற அடிப்படையில் அவற்றை நீக்கிவிடுவதற்கு விண்ணப்பம் ஒன்றை அவர் செய்து கொண்டார். 28—8—1976 நாளிட்ட கமிஷனின் ஆணையின்படி அந்த விண்ணப்பம் (பல்வகை மனு எண். 20/1976) தள்ளிவிடப்பட்டது. 20/1976-ஆம் எண் பல்வகை மனு முடிவு செய்யப்படாமல் இருந்தபோது, கமிஷன் நியமனம் செய்த புலனுய்வு அலுவலர் இக் குற்றச்சாட்டு குறித்த புலனுய்வு அறிக்கையை அனுப்பினர். எனவே, கமிஷன் 4—12—1976 நாளிட்ட ஆணையின் மூலம், புலனுய்வு அறிக்கையில் அவருக்கெதிராக உள்ளதாகத் தோன்றுகிற குற்றச்சாட்டுகளுக்கு எதிர் உறுதிமொழிப் பத்திரம் ஒன்றை 4—1—1977-க்குள் தாக்கல் செய்யுமாறு கமிஷன் எதிர்மனுதாரருக்குக் கட்டளையிட்டது. அதன் மேல், திரு. ஆதித்தனர் 4—1—1977 நாளிட்ட இரண்டாவது உறுதிமொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்தார். அதில் அவர் ஏனையவற்றுக் கிடையில் குறிப்பிட்டதாவது:

"புலனுய்வு அலுவலரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தையும் நான் மறுக்கிறேன். புலனுய்வு அலுவலர் செய்துள்ள முடிவுகள் உண்மையின் அடிப்படையில் இல்லை. மேலும், அவை வேண்டுமென்றே தவருகச் செய்யப்பட்டவையாகும். 54 பேர் கொடுத்துள்ள தாக சொல்லப்படுபவையும் தொகுதி II-ல் குறிப்பிட்டுள்ளவையுமான வாக்குமூலங்கள் உண்மையானவையல்ல. புலனுய்வு அலுவலரும் வாக்குமூலங்கள் அளித்துள்ள பலரும் எனக்கெதிராகவும் சங்கங்களின் விவகாரங்களில் என்னை ஈடுபடுத்தியும் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் பலவும் பொய்யானவையாகவும் எரிச்சலூட்டுபவையாகவும் இருக்கின்றன."

23 (i) ஆம் எண் குற்றச்சாட்டு பொய்யான தாகவும் கேலிக்கூத்தாகவும் உள்ளதாக அவர் கூறினர். மேலும், அவர் குறிப்பிட்ட தாவது: "குற்றச்சாட்டில் கூறியுள்ளது போல் வங்கித் தலைமை அதிகாரி 22 இலட்சம் ரூபாய் எடுத்ததற்கும் எனக்கும் எத் தொடர்பு மில்லை. இந்த வங்கி எனது நேரடிக் கட்டுப் பாட்டின்கீழ் இல்லை" புலனுய்வு அலுவலர் அறிக்கையிலும் பல்வேறு வாக்குமூலங்களிலும் கண்டிருந்த குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றுக்கும் எல்லா கோப்புகளையும் பார்வையிட்ட பின்னர், விரிவான, முழுமையான எதிர் உறுதிமொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்ய அனுமதியளிக்குமாறு அவர் வேண்டிக் கொண்டார்.

31—1—1977 நாளிட்ட திரு. சி. பா. ஆதித்தனரின் உறுதிமொழிப் பத்திரம்

31—1—1977 அன்று திரு. சி. பா. ஆதித்தனார் தனது இரண்டாவது உறுதிமொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்தார். அதில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார் :—

"(i) ஏனைய 223 தொடக்க நிலவள வங்கிகளைப் போலவே கருங்குளம் வங்கியும் எனது நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இல்லை. 20—5—1971 நாளிட்ட BJ5 ஆம் எண் வங்கிக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மாநில நிலவள வங்கியின் 23 கோடி ரூபாய் கடன்வழங்கு திட்டத்தின் ஒரு பகுதியாக இக் கடன்கள் வழங்கப்பட்டன. இக் கடன்கள், தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு நிலவள மேம்பாட்டு வங்கிகள் (பல்வகை) விதிகளின் 13-வது விதியில் பொருள் விளக்கம் அளிக்கப் பட்டுள்ள மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டன (இணைப்பு IIஐக் காண்க).

(ii) அனுமதிக்கப்பட்டு பெறப்பட்ட தொகை வருமாறு :—

(1) சேரகுளம் இறைவைப் பாசனச் சங்க உறுப்பினர்களின் நிலங்களை அடைமானம் வைத்து 5.13 இலட்சம் ரூபாய் 26—2—1971 அன்று 2.7 இலட்சம் ரூபாயும் 4—3—1971 அன்று 2.7 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது. இதில் தொடக்க நிலவள வங்கியின் பங்கு முழுதனமாக 5 சதவீதம் தொகை 27,000 ரூபாய் கழித்துக் கொள்ளப் பட்டது.

(2) கீழ தாதன்குளம் இறைவைப் பாசன சங்க உறுப்பினர்களின் நிலங்களை அடைமானம் வைத்து 12—2—1971 அன்று 3.235 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. 12—2—1971 அன்று 3.50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. தொடக்க நிலவள வங்கியின் பங்கு மூலதனமாக 5 சதவீதத் தொகை 17,500 ரூபாய் இதில் கழித்துக் கொள்ளப்பட்டது.

(3) மேலதாதான்குளம் இறைவைப் பாசனச் சங்க உறுப்பினர்கள் நிலங்களை அடைமானம் வைத்து 12—2—71 அன்று 3.515 இலட்சம் ரூபாய், (12—2—71 அன்று 3.70 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. தொடக்க நிலவள வங்கியின் பங்கு மூலதனமாக 18,507 ரூபாய் இதில் கழித்துக் கொள்ளப்பட்டது).

(4) கீழப்பெருமாணேரி இறைவைப் பாசனச் சங்க உறுப்பினர்கள் நிலங்களை அடைமானம் வைத்து —7.2675 இலட்சம் ரூபாய் (26— 7—71 அன்று 3.825 இலட்சம் ரூபாயும் 4—3—71 அன்று 3.825 இலட்சம் ரூபாயும், வழங்கப்பட்டது. தொடக்க நிலவள வங்கி பங்கு மூலதனமாக 5 சத வீதத்தொகை 38,250 ரூபாய் இதில் கழித்துக் கொள்ளப்பட்டது).

4 சங்கங்களுக்கும் மொத்தக் கடன்— 19,23,750 ரூபாய்.

"மேற்சொன்ன புள்ளி விவரங்கள், சேரகுளம் நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களின் தொகுதித் தலைவர் திரு. ஆர். கிருஷ்ணகாந்தன் கொடுத்த தகவலில் கண்டுள்ளன."

(iii) நான்கு சங்கங்களின் தொகுதித் தலைவர் கொடுத்துள்ள தகவலின்படி உறுப்பினர்களின் நிலங்களை மேம்படுத்துவதற்காகப் பெறப்பட்ட தொகைகளை 4 இறைவைப் பாசனச் சங்க உறுப்பினர்கள் முழுவதும் பயன்படுத்தியுள்ளனர். தொகையைப் பயன்படுத்தியது குறித்து விரிவான உறுதிமொழிப் பத்திரத்தை அவர் தாக்கல் செய்வார்.

சாட்சிக்குத் தேர்தல் செலவுக்குப் பணம் தேவைப்பட்டதாகவும், அவ்வாறு தேவைப்பட்ட பணத்தைத் திரட்டுவதற்கு நிலத்தின் பெயரைச் சொல்லி பணம் சேர்த்ததாகவும் திரு. கல்யாண சுந்தரத்தின் 16—6—76 நாளிட்ட உறுதிமொழி பத்திரத்திலும் 5-A பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட புலனுய்வு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்ட குற்றச் சாட்டு குறித்து திரு. ஆதித்தனார், அக் குற்றச் சாட்டு பொய்யானது, பொருளற்றது, நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதேயல்ல என்றும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தேர்தலுக்கு நிற்பவர் செய்யக்கூடிய தேர்தல் செலவு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 77-வது பிரிவின்படி உயரவு 12,000 ரூபாய் ஆகும் என்றும், அச் செலவு இத் தொகைக்கு மேற்பட்டிருந்தால், அது இலஞ்சப் பழக்கமாகி அவரது (சாட்சியின்) தேர்தலைச் செல்லாதாக்கிவிடும் என்றும் கூறினர். 1971-ஆம் ஆண்டில் தேர்தலுக்காக தான் 7,000 ரூபாய்க்குமேல் செலவு செய்யவில்லை என்று சாட்சி, தனது தேர்தல் செலவு குறித்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். வரையறுத்த அளவுக்கு மேல் தேர்தல் செலவு செய்யப்பட்டது என்ற அடிப்படையில் சாட்சிக்கு எதிராக தேர்தல் மனு எதனையும் திரு. கல்யாணசுந்தரம் தாக்கல் செய்ய வில்லை என்பதிலிருந்து இக் குற்றச்சாட்டு நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதல்ல என்று தெரிகிறது. திரு. கல்யாணசுந்தரம் "கடைசி முயற்சியாக" இக் குற்றச்சாட்டைக் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் தொகுதிக்கு வெளியில் தான் தேர்தல் செலவு செய்யவில்லையென்று சாட்சி மறுத்தார்.

(iv) சாட்சி, கூட்டுறவு அமைச்சராக 15—2—1969-ல் பதவியேற்றபோது, தமிழ் நாட்டில் உணவு நிலைமை மிக மோசமாக இருந்தது. முக்கியமாக, தரிசு நிலங்களைப் பாசனத்தின் கீழ்க் கொண்டு வருவதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதன் அவசர அவசியத்தை அவர் உணர்ந்தார். 1969-ஆம் ஆண்டில் 72

கோடி செலவிலான (சிறு பாசனத்திற்கு 62 கோடி, பண்ணை இயந்திரமாக்குவதற்கு 10 கோடி) சிறு பாசனத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இந்திய அரசுமூலம் உலகவங்கிக்கு அனுப்பப்பட்டது. சாட்சி நேரடியாக இந்திய ரிசர்வ் வங்கி கவர்னரைச் சந்தித்து, சிறு பாசனத் திட்டங்களுக்கும் நில மேம்பாட்டுக்கும் மாநில நிலவள வங்கிக்குப் பெருந் தொகையை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மறு நிதியுதவிக் கழகத்தின் உதவியுடனும் 30—6—1970 நாளுடன் முடியும் ஆண்டில் மாநில நிலவள வங்கி உழவர்களுக்கு நில மேம்பாட்டுக்காக சுமார் 14 கோடி ரூபாய் மட்டுமே வழங்கியது. 21—7—1970 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேளாண்மை மறுநிதியுதவிக் கழகம் வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு முழு அளவு நிதியுதவி செய்ய முன்வந்தது. இந்த அறிவிப்பு மாநிலத்தின் நலனை முன்னிட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று சாட்சி கருதினார். இந்தத் திட்டம் சிறு உழவர்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய தாகும். முழு அளவு நிதியுதவி வழங்குவதற்கு குரிய திட்டங்களை ஏற்பதற்கான கால அளவு 30—6—1971 க்கு முன்னர் மறுநிதியுதவிக் கழகத்தால் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இது பொருந்தக்கூடிய தாகும். ''(இணைப்பு III-ஐக் காண்க)''.

(v) இம் மாநிலத்தில் கூட்டுப்பண்ணைமுறை பலன் அளிக்காததால், மாற்றுத் திட்டமாக இறைவைப் பாசனச் சங்கங்களுக்குத் திட்ட வட்டமான வழிவகை கொடுக்கப்பட்டது. அவற்றின் மூலம் உழவர்கள் தங்களுக்குச் சொந்தமான நிலத்தை மேம்படுத்த முடியும். பாசன வசதியைப் பெறுவதற்குச் சங்கங்களை நாட முடியும். சிறு உழவர்களை உறுப்பினர்களாக்கொண்டு உள்ள இறைவைப் பாசனச் சங்கங்கள் சிறந்த முறையில் செல்படுவதற்குச் சட்டத்தில் சில விதித் துறைகளைச் செய்ய வேண்டி இருந்தது. இறைவைப் பாசனச் சங்கத்தின் இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 9—10—1970 அன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்—திருத்த அவசரச் சட்டம் இந்தியக் குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதலுடன் அதிகார முறையில் வெளியிடப் பட்டது.

(vi) ''காவல்துறை, டெபுடி சூப்பிரண்டு, திரு. கே. முத்தையா, இந்தக் கமிஷனின் புலனுய்வு அலுவலர்களில் ஒருவரல்லர் என்று நான் கூறுகிறேன். எனினும், திரு. கே. முத்தையா, இ. பு. கோ. விண்மீழ் தமக்குள்ள அதிகாரங்களைக் கொண்டு, திட்டவட்டமான நோக்கத்துடனும் கருத்துடனும், அச்சுறுத்தல் முறைகளைப் பயன்படுத்தியும் சில சாட்சிகளுக்கெதிராக அதே சமயத்தில் மற்றொரு விசாரணையை நடத்திய தைக் காணலாம். அச்சுறுத்தியதற்கு எடுத்துக் காட்டாக, கே. எஸ். மணி, திரு. உடையார் பிள்ளை ஆகியோர் எழுதிய கடிதங்களைக் கூறலாம். புலனுய்வு அலுவலர்களின் அறிக்கையின் II-வது தொகுதியின் 393-வது பக்கத்திலும்கூட திரு. கே. முத்தையா தாளின் வாக்குமூலம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது ஆச்சரியத்திற் குரியதாகும். புலனுய்வு அலுவலர் அறிக்கை, திரு. கே. முத்தையா வாக்குமூலத்தின் விரிவையாகும் என்பதை நான் கண்டறிந்தேன் ..... இக் காரணத்தின் அடிப்படையிலும், புலனுய்வு அலுவலர் அறிக்கை தள்ளப்படத்தக்கதாகும் என்று நான் கூறுகிறேன்.

மகஜரில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்குச் சட்டத்தின் 5 A பிரிவின் கீழ் காவல் துறை, டெபுடி சூப்பிரண்டு, திரு. கே. முத்தையாவுக்கு அதிகார மளிக்கப்படவில்லை. ஆனல், இந்த விசாரணையில் இந்தச் சாட்சிகளைப் பின் தொடர்வதை அவர் நிறுத்திவிடவில்லை. குறிப்பாக திரு. முருகேயும் திரு. கொத்தளமுத்துவையும் வாக்கு மூலங்களை அளிக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தினர்.''

(vii) புலனுய்வு அதிகாரி, ரத்து செய்யப்பட்ட துணைவிதிகளையும், கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பிறப்பித்த சுற்றறிக்கை — கடிதங்களையும் குறிப்பிடுவதன் மூலம் குழப்பத்தை ஏற்படுத்த முயன்றுள்ளார். 26—11—1970 நாளிட்ட அரசு குறிப்பாணைக்கும் 27—11—70 நாளிட்ட சுற்றறிக்கைக்கும் அவர் தவருகப் பொருள் விளக்கம் தந்துள்ளார். உண்மையில், எந்த விதியும் மீறப்படவில்லை.

(viii) திருநெல்வேலியில் தாம் இருந்தபோது இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கம் குறித்து இணைப்பதிவாளர் திரு. கே. சுப்பையா, கருங்குளம் தொடக்க நிலவள வங்கித் தலைவர், திரு. புதியமுத்து, துணைத்தலைவர் திரு. சுப்பையா அல்லது வளர்ச்சிப் பணி அதிகாரி திரு. ஹரி ஹரனுக்கு அவர் கட்டளைகள் பிறப்பித்ததாகக் கூறியிருப்பதைச் சாட்சி மறுத்தார்.

(ix) இச் சங்கங்களை அல்லது வேறெந்த சங்கத்தை உருவாக்குவதில் அல்லது அமைப்பதில் அவருக்கு நேரடியாக எந்தத் தொடர்பும் இல்லை என்று சாட்சி தெரிவித்தார்.

(x) புலனுய்வு அதிகாரியால் அல்லது ஏனைய வகையில் பிறர் குற்றஞ்சாட்டியுள்ளவாறு, சாட்சி, அதிகாரி எவருடனும் தனிப்பட்ட முறையில் பேச்சு வார்த்தை நடத்தவில்லையென மறுக்கிறார். திரு. கே. சுப்பையாவின் பதவி உயர்வில் தாம் ஏதேனும் குழ்ச்சி செய்திருப்பதாகக் கூறியிருப்பதை அவர் மறுக்கிறார். மேலும், பணி முதுநிலைப்படிதான் அந்த அதிகாரிக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்ட தென்றும் கூறுகிறார். சுப்பையா அவரது கட்டளை

அனைத்தையும் சிரமேற்கோண்டு செய்யத் தயாராக இருந்தார் என்பதையும் சாட்சி அத்தகைய கட்டளைகளைப் பிறப்பித்தார் என்பதையும் சாட்சி மறுக்கிறார்;

(xi) திரு. T. R. பீம்சிங் அவரது உறவினர் என்பதையும் குற்றஞ்சாட்டியுள்ளபடி முன்னதாகவே அவர் தகவல் கொடுத்தார் என்பதையும் சாட்சி மறுக்கிறார். எதையாகிலும் கூறும்படி பீம்சிங்குக்கு அவர் கட்டளை இட்டார் அல்லது அதிகாரமளித்தார் என்பதை மறுக்கிறார்.

(xii) 27—11—70 நாளிட்ட 54266 எண் சுற்றறிக்கையிலும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பிறப்பித்த கட்டளைகளையும் 26-11-1970 நாளிட்ட 35405 எண் அரசுக் குறிப்பாணையையும் கருத்தில் கொண்டு பார்த்தால், "சங்கங்கள் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்ற விசாரணை பூர்வாங்க நடவடிக்கையாகும். இறைவைப் பாசனச் சங்கத்தைப் பதிவுசெய்வது இதனுள் தாமதமாக வேண்டிய தில்லை."

(xiii) புதியமுத்து, சுப்பையா அல்லது ஹரி ஹரனுக்குச் சொல்லிக் கொடுத்ததாகக் கூறப்படுவதைச் சாட்சி மறுக்கிறார். சங்கங்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளவும், பெருங்கடன் தொகையை உடனடியாக அனுமதித்து வழங்க வேண்டுமென்றும் அவர் விரும்பினர் என்று கூறப்பட்டுள்ளதை அவர் மறுக்கிறார்.

(xiv) இறைவைப் பாசனச் சங்கங்களைப் பொறுத்த வரை, கூட்டுறவு நிர்வாக அதிகாரி, சங்கத்தின் சார்பாக பரிவுரை செய்ய வேண்டியது கட்டாயமல்ல. அவ்வியமற்ற இக் காரியத்திற்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் எவை குறித்தும் சாட்சிக்குத் தெரியாது.

(xv) புலனுய்வு அறிக்கையின் 29 ஆவது பாராவைப் பொறுத்தவரை, சில வணிக நிறுவனங்களின் மீது கட்டுப்பாட்டு அதிகாரத்தையும், நிர்வாகத்தையும் உடையவராய் சாட்சி இருந்தார்: "ஆதித்தனர் நிறுவனத் தொகுதி" ஒன்று இருந்தது, அதன்மீது அவர் "முழு அதிகாரம்" உடையவராய் இருந்தார் என்ற அனுமானத்தின் பேரில் புலனுய்வு அதிகாரி நடவடிக்கை மேற் கொண்டுள்ளார் என்று கூறப்படுகிறது. இக் குற்றச் சாட்டும் அனுமானமும் ஆதாரமற்றவை; உண்மையானவை அல்ல. அறிக்கையின் 161 ஆவது பாராவில் குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் எதிலும் நிர்வாகக் குழு உறுப்பினராகச் சாட்சி இருக்கவில்லை.

(xvi) மேற் தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் அமைப்பு, பதிவு அல்லது அதற்குக் கடன் வழங்குவதில் சாட்சிக்கு எவ்வித சம்பந்தமுமில்லை. குற்றச்சாட்டில் கூறப் பட்டுள்ளவாறு திரு. பீம்சிங் இச்சங்கத்தைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டாரா என்பது சாட்சிக்குத் தெரியாது. இச் சங்கத்தைப் பரிந்துரைக்கும் ஆவணங்களைத் திரு. ஹரிஹரன் எதற்காகத் திருத்தி எழுதினர் என்பதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. அவர் ஆவணங்கள் எவற்றையேனும் திருத்தி எழுதியிருந்தால், அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(xvii) புலனுய்வு அறிக்கையின் 34 ஆவது பாராவில் கூறியுள்ளவாறு, நிலங்களை மற்றெருவருக்கு மாற்றியதில் சாட்சிக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை.

(xviii) பொருனையாறு ஃப்யுவல் பிளான்டேஷன் கம்பெனி, ஆதித்தனர் நிறுவனத் தொகுதியில் ஒன்று என்று 39 ஆவது பாராவில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டு பொய்யானதும், ஆதாரமற்றதும் ஆகும். சாட்சிக்கும், பொருனையாறு ஃப்யுவல் பிளான்டேஷன் கம்பெனிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. மேலும், புலனுய்வு அதிகாரிகள் தோற்றுவித்துள்ளவாறு "ஆதித்தனர் நிறுவனத் தொகுதி" ஏதும் சாட்சிக்குச் சொந்தமாக இல்லை.

(xix) கடன் திரட்டுதல்.—தகுதியைக் கணக்கிடுவதற்கான புதிய நடைமுறையின்கீழ், நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களில் சேரகுளம் தொகுதிக்கு வழங்கப்பட்ட கடன் அதன் தகுதியில் கால் பாகமே ஆகும். இச் சங்கங்களின் தொகுதி பெற்றுள்ள கடனைப் போல் நான்கு மடங்கு கடன் பெறும் தகுதி யுடையதாகும்.

(xx) பயன்படுத்துதல்.—கடன் தொகையைப் பயன்படுத்தியது, சங்கங்களின் உறுப்பினர் பதவி, வட்டியுடன் கடன் தொகை முழுவதையும் கருங்குளம் தொடக்க நிலவள வங்கிக்குத் திருப்பிச் செலுத்தியது ஆகிய விஷயங்களுக்குச் சேரகுளம் சங்கத் தொகுதி பதிலளிக்க வேண்டும். சாட்சியைப் பொறுத்த வரையில், இந்த விஷயங்கள் அவருக்குத் தொடர்பற்றவையாகும். புலனுய்வு அறிக்கையில் 161, 174 ஆவது பாராக்களில் அவரைச் சம்பந்தப்படுத்திக் கூறியுள்ள அனைத்தையும் சாட்சி மறுக்கிறார்.

3—2—1977 நாளிட்ட திரு. ஆதித்தனரின் உறுதி மொழிப் பத்திரம்.

திரு. சி. பா. ஆதித்தனர் 3—2—1977 நாளன்று மூன்றாவது உறுதிமொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்தார். அதில் அவர் வலியுறுத்திக் கூறியதாவது:

(i) சங்கங்களை அமைப்பதில் அல்லது அவற்றுக்குக் கடன்கள் வழங்குவதில் அவருக்கு எவ்விதச் சம்பந்தமுமில்லை. எனினும், வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் நிலத்தைப்

பண்படுத்துதல், மேம்படுத்துதல், சிறு பாசனம் ஆகியவை தொடர்பாக மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குத் தனிப்பட்ட ஆலோசனைப் பொறியாளர்களை அனுமதிக்கிறது.

(ii) புலனுய்வு அறிக்கையின் 55ஆவது பாராவில் கூறப்பட்டுள்ளவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் அல்லது அதில் குறிப்பிடப்பட்ட இடங்களில் கடன் கோப்புகள் தயாரிக்கப்பட்டதெனக் கூறப்படுவது மறுக்கப்படுகிறது. இச் சங்கங்களைப் பதிவு செய்யுமாறு திரு. சுப்பையாவையும் ஏனைய அதிகாரிகளையும் சாட்சி கட்டாயப்படுத்தினர் என்பதும் மறுக்கப்படுகிறது.

(iii) அவசரம் அவசரமாகக் கடன் அனுமதிக்கப்படவில்லை. திரை மறைவில் இருந்து கொண்டு கட்டளை எதனையும் சாட்சி பிறப்பிக்கவில்லை. திரு. சண்முகம் என்ன செய்தாரோ அதெல்லாம் சாட்சி கட்டாயப்படுத்தியதன்பேரில் செய்யப்பட்டதல்ல.

(iv) இக் கடன்கள் வழங்கப்படுவது குறித்துப் பல்வேறு நபர்களுக்குச் சாட்சி கொடுத்ததாக (திரு. சி. பா. ஆதித்தனார்) நீள் தொலை பேசிச் செய்திப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட தொலைபேசிச் செய்திகள் போலியான பதிவுகளாகத் தோன்றுகின்றன; மேலும், அவை திருத்தி எழுதப்பட்டுள்ளன.

(v) 3—3—1971 அன்று சிவசுப்பிரமணியத்துடன் தொலைபேசியில் பேசியதாகக் கூறப்படுவது மறுக்கப்படுகிறது. அச் சமயத்தில் இச் சங்கங்களைப் பதிவு செய்யுமாறு அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் அல்லது கடன் பெறுவதற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் குறித்துச் சாட்சிக்குத் தெரியாது.

(vi) ''முருகன் கொடுத்த வாக்குமூலத்தைப் படித்துப் பார்த்தால், K. P. கந்தசாமிக்கும் தனக்கும் இடையே பிளவு இருந்ததாகவும், சன் பேப்பர் மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் தம்மைப் பணியிலிருந்து நீக்கியதற்குச் சாட்சி பொறுப்புடையவராக இருந்ததாலும் அவர் எப்படித் தவருகக் கருதினார் என்பது தெளிவாகத் தெரியவரும். முருகன் அளித்த வாக்குமூலம் உள் நோக்கமாக அளிக்கப்பட்ட சாட்சியத்தையும் அவருக்கு எதிராகப் பொய்யான, அற்பத்தனமான குற்றச்சாட்டுகளைச் செய்வதற்கான நோக்கத்தையும் நன்கு தெளிவுபடுத்துகிறது. வங்கிகள் வழங்கிய காசோலைகள் திரு. முருகனால் கையொப்பமிடப்பட்டு அவரது பாதுகாப்பில் வைத்து வரப்பட்டதாகவும், வங்கியிலிருந்து பணம் எடுக்க வேண்டியபோதெல்லாம் முருகனே அவர் வழக்கமாக கூப்பிட்டு வரவழைத்ததாகவும், விவரங்கள் எழுதி நிரப்பப்பட்ட காசோலை அவரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், இரண்டு சமயங்களில் இரு பெருந்தொகைகளைப் பணமாக மாற்றிய பின்னர், ஒரு சமயத்தில் பெறப்பட்ட தொகையை முருகன் அவரிடம் நேரடியாகக் கொடுத்ததாகவும், மற்றொரு சமயத்தில் மேதாதன்குமம் சங்கத் தலைவர் திருஷ்ணகாந்தன் மூலம் அவருக்கு அனுப்பியதாகவும் கூறப்பட்ட குற்றச் சாட்டுகள் பொய்யானவை, அற்பத்தனமானவை, மேலும், ஆதாரமற்றவை. ''பெறப்பட்ட தொகை முழுவதும் திரு. சி. பா. ஆதித்தனுக்குப் போய்ச் சேர்ந்தது என்ற முடிவிற்கு வருவதற்கு அதிக சிரமப் படத் தேவையில்லை' என்று புலனுய்வு அதிகாரி செய்துள்ள முடிவு திரு. முருகனின் வாக்குமூலத்தையே முழுவதும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மேலும், இது ஏற்றுக் கொள்ளத் தக்கதாய் இல்லை. அவர் காசோலைப் புத்தகத்தைத் தம்மிடம் வைத்து வரவில்லை. மேலும் தலைவர்கள் எவரிடமிருந்தும் எந்தத் தொகையையும் பெறவில்லை''.

(vii) திரு. வேங்கடநாராயணனின் வாக்கு மூலம், சங்கங்களுக்குச் சொந்தமான நிலங்களையும் உறுப்பினர்கள் நிலங்களையும் ஒன்றுடன் ஒன்று குழப்பிக் கொண்டு, அந்த அடிப்படையில் கொடுத்தது என்பது வெளிப்படை. திரு. நியாகராஜனுக்கு அழைப்பாணை விடுத்து அழைத்து சாட்சியாக்கி கமிஷன் விசாரணை செய்தால் இது தெளிவாகும். (குறிப்பு:—நியாகராஜனுக்கு அழைப்பாணை கொடுத்து அழைக்கப்பட்டது. ஆனால், பின்னர், எதிர்மனுதாரரால் அவர் கைவிடப்பட்டார்.)

(viii) தொகையைப் பயன்படுத்தியது குறித்துத் தமக்கு ஏதும் தெரியாதென்று சாட்சி கூறினார். தொகையைப் பயன்படுத்தியது குறித்து கூறப்பட்ட குறை எதற்கும் சங்கத் தொகுதித் தலைவரே பதில் சொல்லவேண்டியவராவார்.

(ix) திரு. குத்தாலத்தை வங்கி மேலாளராக நியமித்து, கடன் சம்பந்தப்பட்ட கோப்புகளில் முந்தைய தேதியிட்ட ஆவணங்களைச் சேர்ப்பதற்கு அவரைச் சாட்சி பயன்படுத்தினர் என்ற குற்றச்சாட்டு மறுக்கப்படுகிறது.

(x) சங்கங்கள் கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்தியது குறித்துப் புலனுய்வு அறிக்கையின் 124—160-வது பாராக்களில் உள்ள குறிப்பீடு மறுக்கப்படுகிறது.

(xi) சாட்சி திருநெல்வேலிக்கு வருகை தந்ததற்கும் சங்கங்களின் பதிவு, கடன்கள் வழங்குதல் அல்லது அவற்றைச் சங்கங்கள் திருப்பிச் செலுத்தல் ஆகியவற்றுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை.

ஆர். கிருஷ்ணகாந்தன் வழக்கு:

இந்த இடத்தில், கிருஷ்ணகாந்தனின் வழக்கைக் குறிப்பிடுவது உகந்ததாயிருக்கும். இந்த

நான்கு இறைவைப் பாசனக் கூட்டுறவு சங்கங்கள் தொடர்பான கடன்கள் குறித்த கோப்புகளில் கிருஷ்ணகாந்தன், கீழ தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராக விவரிக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதுபோல் இவர் திருநெல்வேலி ''தினத்தந்தி'' அலுவலக மேலாளர் ஆவார். இது மறுத்துரைக்கப்பட முடியாத உண்மையாகும்.

இந்த நடவடிக்கைகளில் பங்கு கொள்ளவும், குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவு தருவதாகத் தோன்றிய சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும் கிருஷ்ணகாந்தன் அனுமதிக்கப்பட்டார். ஏனெனில், சட்டத்தின் 8-B பிரிவின் பொருள் விளக்கத்திற்குள், விசாரணையின் மூலம் பாதிக்கப் படக் கூடியவராக தோன்றிய நபர்களில் இவரும் ஒருவராவார். சேரருளும் தொகுதி இறைவைப் பாசனச் சங்கங்கள் நான்கின் தலைவராக கிருஷ்ணகாந்தன் தம்மைக் கூறிக் கொள்கிறார். இவர் சார்பில் வழக்குரைஞர் வந்திருந்தார்.

திரு. கிருஷ்ணகாந்தன்மீதும் இந்த நான்கு சங்கங்களின் ஏனைய தலைவர்கள் மீதும் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கை சி.பு.கோ.-வின் கீழ் புலனுய்வு செய்து வந்த காவல்துறை, டெபுடி சூப்பிரண்டு திரு. முத்தையா தாஸ் மீது சில குற்றச்சாட்டுகளைக் கூறி 20—3—1976 அன்று கிருஷ்ணகாந்தன் மனு ஒன்றை அனுப்பினர். இந்தச் சங்கங்களின் நிதிகளைக் கையாடல் செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கமிஷன் முன்னர் தற்போது விசாரணையிலுள்ள இக் குற்றச்சாட்டு தொடர்பான விஷயங்களைப் பொறுத்தமட்டில், காவல் துறை, டெபுடி சூப்பிரண்டு அவர் மீது நடத்தி வரும் இரண்டு புலனுய்வை நிறுத்தி வைக்கும்படிக் கமிஷன் கட்டளை பிறப்பிக்க வேண்டுமென அந்த விண்ணப்பத்தில் அவர் வேண்டிக் கொண்டார். கிருஷ்ணகாந்தன் மனுவிலுள்ள சில இணைப்புகளும் திரு. சி. பா. ஆதித்தனார் 23—7—1976 அன்று தாக்கல் செய்த உறுதி மொழிப் பத்திரத்தின் இணைப்புகளும் ஒன்றுபோல் பொதுவாக உள்ளன.

5-A பிரிவின் கீழ் கமிஷனுல் நியமிக்கப்பட்ட புலனுய்வு அலுவலர்கள், கிருஷ்ணகாந்தனும் கொத்தள முத்துவையும் அவர்களது சாட்சியம் இன்றியமையாதது என்று கருதியதாலும், அவர்கள் முறையே கீழ தாதன்குளம், கீழப் பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கங்களின் தலைவர்களாக இருந்துவந்ததாலும் அவர்களே விசாரணை செய்வதற்காக அழைத்தனர். அழைப்பாணைகள், ஒப்புறுதிப் பதிவு அஞ்சல் மூலம் அவர்களது சரியான முகவரிகளுக்கு அனுப்பப் பட்ட போதிலும், அவர்கள் அந்த முகவரிகளில் இல்லை என்ற அஞ்சல அதிகாரிகளின் குறிப்புடன் திரும்பின. அதன் பின்னர், புலனுய்வு அலுவலர் அவர்களே விசாரணை செய்ய எந்த முயற்சிகளேயும் மேற்கொள்ளவில்லை.

கமிஷனின் காரியத்திற்குப் பொருத்தமான அலுவலக ஆவணங்களைத் தம் பொறுப்பில் வைத்து வரும் சிறப்புப் பணி அலுவலரான திரு. விஜய ராகவனுக்கு 2-9-1976 அன்று கிருஷ்ண காந்த னிடமிருந்து தந்திச் செய்தி வந்தது. அதில் கூறப்பட்டிருந்தது வருமாறு :—

''உமது புலனுய்வு அதிகாரிகள் தாங்கள் தயாரித்த உண்மையல்லாத வாக்குமூலங்களில் என்னை கையொப்பமிடுமாறு கட்டாயப்படுத்துகின்றனர். உத்தரவிட்டபடி ஒரு வாரத்திற்குள் தலைமைச் செயலகத்திற்கு நான் வந்து முழுமையான, உண்மையான வாக்குமூலத்தை எனது வழக்குரைஞர் முன்னிலையிலும், உங்கள் முன்னிலையிலும் அளிக்கிறேன். இதற்கிடையில், என் விருப்பத்திற்கு மாறுக, வாக்குமூலங்களில் கையொப்பமிடுமாறு கட்டாயப்படுத்த வேண்டாமென்று. உங்களது அதிகாரிகளுக்குத் தயவுசெய்து கட்டளையிடுங்கள். வழக்குரைஞர்களுக்கு நகல் அனுப்பப்படுகிறது.''

சென்னையில், சி.பா. ஆதித்தனருடன் தொடர்புள்ள ''தினத்தந்தி'', அதன் துணை அலுவலகங்களின் வளர்ச்சி 3-9-1976 அன்று திடீர் சோதனையிட்டபோது, வருமான வரி அதிகாரி, திரு. ஜி. லட்சுமி நரசிம்மன், தட்டச்சர் கிருஷ்ணமூர்த்தி ஒரு கடிதத்தை அபிர்துவிட முயற்சி செய்த போது அதனை அவரிடமிருந்து கைப்பற்றினர். அக் கடிதத்தில் சென்னையிலிருந்து அரியநாயபுரம் சன் பேப்பர் மில்ஸ் நிறுவனத்திலிருந்த கிருஷ்ணகாந்தனுக்கு, சிறப்புப்பணி அதிகாரிக்கு— தமது வழக்குரைஞருக்கு அனுப்பப்படுவதற்கான ஒரு நகலுடன்— தந்திச் செய்தி (இதன் நகல் இத்துடன் இணைக்கப் பட்டது) ஒன்று அனுப்புமாறு கட்டளையிட்டு டெலக்ஸ் செய்தி ஒன்று கண்டிருந்தது. வருமான வரி அதிகாரிக்கு முன்னர் சத்தியப் பிரமாணம் செய்து அளித்த வாக்குமூலத்தில், தட்டச்சர், திருஞானமூர்த்தி, டெலக்ஸ் செய்தி திரு. சி.பா. ஆதித்தனுர் தம்மிடம் சொல்ல தாம் தட்டச்சு செய்ததை ஒப்புக்கொண்டார்.

கமிஷன் முன்னர் 15-2-1977 அன்று தாக்கல் செய்த தனது உறுதிமொழிப் பத்திரத்தில் கிருஷ்ணகாந்தன் கூறியுள்ளதன் சுருக்கம் வருமாறு :—

தாதன்குளம், சேரருளும், கீழப்பெருமானேரி கிராமங்களைச் சேர்ந்த சிறு உழவர்கள், தாமிர வருணி ஆற்றின் எதிர் கரையிலிருந்த சாயர்புரத்தைச் சுற்றியுள்ள பகுதி மேம்பாடடைந்ததைப் பார்த்து ஊக்கமடைந்தனர். இக் கிராமத்தில், வணிக வங்கிகள் அளிக்கும் நிதியுதவியைக்கொண்டு உழவர்கள் தரிக நிலங்களை, வாழை பயிரிடும் பகுதியாக மாற்றி ஏக்கர் ஒன்றுக்குச் சுமார் 5,000 ரூபாய் வருமானம் சம்பாதித்து வந்தனர். சாயர்

புரம் பகுதியில் நிலத்தின் மதிப்பு ஏக்கர் ஒன்றுக்கு 40,000 ரூபாய் வரையில் திடீரென உயர்ந்தது. அதையடுத்து, சேரகுளம் விவசாயிகள் தங்களுக்குள் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொண்டு, மாறில நிலவள வங்கியிடமிருந்து நிலச்சீர்திருத்தக் கடனும், மேம்பாட்டுக் கடனும் பெறுவதென்று முடிவெடுத்தனர். எனினும், அந்த விவசாயிகள், தங்கள்நிலங்களைத் தங்களிடமே வைத்துக்கொண்டனர். வாக்குமூலம் கொடுத்த திருஞ்ஞகாந்தன், மேழ தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத் தலைவராகவும் சங்கங்கள் குழுவின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். முருகன், அரிச்சந்திரன், கொட்டாலமுத்து ஆகியோர், முறையே, மேல தாதன்குளம், சேரகுளம், கீழப்பெருமானேரி சங்கங்களின் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வழக்குரைஞர் திரு. உத்தர பாண்டியன், இந்தச் சங்கங்கள் குழுவின் அங்கீகாரம் பெற்ற முகவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நான்கு சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட பிறகு, கடன் வேண்டி விண்ணப்பங்கள் செய்து கொள்ளப்பட்டன; அந்த விண்ணப்பங்கள் முறையாகப் பரிசிலிக்கப்பட்டு, ஏற்பளிக்கப்பட்டன. கருங்குளம் நிலவள வங்கி கடன் தொகைகள் வழங்கிய பிறகு, மேழ தாதன்குளம் சங்கக் கணக்கிலிருந்து 12-2-1971-ல் 2 இலட்சம் ரூபாயைக் கிருஞ்ஞகாந்தன் எடுத்து, சேரகுளத்தில் ஒரு சிறிய கட்டிடத்தில் அமைந்திருந்த சங்கங்கள் குழு அலுவலகத்திற்கு ஒரு ஜீப்பில் கொண்டு சென்றார். சங்கங்கள் குழுவின் காசாளரும் நிர்வாகியும், ஒவ்வோர் உறுப்பினருக்கும் சேர வேண்டிய வீதாச்சாரத் தொகையைக் கணக்கிட்டனர். அன்றுடச் செலவுகளுக்காகவும் கூலி கொடுப்பதற்காகவும் சுமார் 1,500 ரூபாயை வைத்துக் கொண்டு, வந்திருந்த உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் சேர வேண்டிய வீதாச்சாரத் தொகையைக் கிருஞ்ஞகாந்தன் கொடுத்தார். 13-2-1971-ல், மேற்கொண்டும் 1,20,000 ரூபாய் எடுக்கப்பட்டு, முன்னர் செய்தது போலவே, சேரகுளத்தில் உள்ள சங்கங்கள் குழுவின் அலுவலகத்திற்கு ஒரு ஜீப்பில் கொண்டு செல்லப்பட்டு, 1,000 ரூபாய் மட்டும் வைத்துக் கொள்ளப்பட்டு, எஞ்சிய தொகை வீதாச்சாரப்படி கணக்கிடப்பட்டு, உறுப்பினர்களுக்குக் கிருஞ்ஞகாந்தனால் கொடுக்கப்பட்டது.

மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தின் விஷயத்திலும் இதே நடைமுறை பின்பற்றப்பட்டது. அச் சங்கத்தின் தலைவரான திரு. முருகன் 15-2-1971-ல் 2,10,000 ரூபாயை எடுத்து, கிருஞ்ஞகாந்தனிடம் கொடுத்து அதைச் சேரகுளத்திற்குக் கொண்டு சென்று, மேல தாதன்குளம் சங்க உறுப்பினர்களுக்குக் கொடுக்குமாறு கிருஞ்ஞகாந்தனைக் கேட்டுக் கொண்டார். ஒரு வாரம் கழித்து, மேற்கொண்டும் 1,41,000 ரூபாயை முருகன் எடுத்து, முன்னர் சொன்னது போலவே, உறுப்பினர்களுக்கு வழங்கக் சொல்லி, கிருஞ்ஞகாந்தனிடம்ஒப்படைத்தார்.

கீழபெருமானேரி இறைவைப் பாசனச் சங்கத் தலைவரான கொத்தளமுத்து 26-2-1971-ல் 3,44,000 ரூபாய் எடுத்தார். அவர் சில விவசாயிகளுடன் சேர்ந்து கொண்டு, கிருஞ்ஞகாந்தனோடு சேரகுளத்திற்குச் சென்று, நிலச் சீர்திருத்தத் திற்காகவும் மேம்பாட்டிற்காகவும் உறுப்பினர்களுக்குப் பணம் வழங்கினர். 4-3-1971-ல் கொத்தளமுத்து மேற்கொண்டும் 2,90,000 ரூபாய் எடுத்தபோது இதே நடைமுறை பின் பற்றப்பட்டது. அதேபோன்று, அரிச்சந்தினும் 26-2-1971-ல் 2,42,000 ரூபாயும், 4-3-1971ல் 1,80,000 ரூபாயும் எடுத்து, சேரகுளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காக, அப் பணத்தைச் சேரகுளத்திற்குக் கொண்டு செல்வதற்கென கிருஞ்ஞகாந்தனிடம் கொடுத்தார்.

அதன் பிறகு, அந்த விவசாயிகள் அவரவர் நிலங்களில் இருந்த காடுகளை (Juliflora) தாங்களாகப் பாடுபட்டும், தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டும் அகற்றினர்: காடுகளை அழித்த பிறகு, முட் புதர்களையும் மரக் கிளைகளையும் அந்தத்தச் சங்க எல்லைக்குக் கொண்டு சென்றனர்; சீர்செய்யப்பட்ட நிலத்தின் மீது 12 அங்குல கனத்திற்கு ஏரி வண்டல் நிரப்ப வேண்டியிருந்ததால் அண்டைக் கிராமங்களிலுள்ள ஏரிகளிலிருந்து வண்டல் மண் கொண்டு வருவதற்காக லாரிகளை வாடகைக்கு அமர்த்தினர்''.

பின்னர் அவர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் வேலைக்கு அமர்த்தியிருந்த தகுதிவாய்ந்த, தணிக்காளிப்பாளர்களின் மேற்பார்வையில் கிணறு தோண்டும் வேலையை மேற்கொண்டனர்.

1971 அக்டோபரில், முதல் தவணையைத் திருப்பிச் செலுத்துமாறு நிலவள வங்கியிடமிருந்து அறிவிப்புக் கடிதம் வந்தபோது மேம்பாட்டுப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது, என்றாலும், கீழப்பெருமானேரி, சேரகுளம், இறைவைப் பாசனச் சங்கங்களின் கணக்கில் அப்போது ஓரளவு பணம் இருந்தது. அச் சங்கங்கள் தத்தம் கணக்கிலிருந்து கொஞ்சம் பணம் எடுத்தும், பெரிய விவசாயிகள் மூலம் சிறு விவசாயிகளிடமிருந்து பணம் வசூலித்தும் முதல் தவணை உரிய தேதியில் கட்டப்பட்டது.

ரிசர்வ் வங்கி அதிகாரியான திரு. வேங்கட நாராயண நிலம் பண்படுத்தும் வேலை நடைபெறும் இடத்திற்கு 1972 ஏப்ரலில் சென்று பார்வையிட்டார்; அப்போது சங்கத்திற்குச் சொந்தமான நிலம் மேம்பாடு செய்யப்படவில்லை என்று

தாதன்குளம் இறைவப் பாசனச் சங்கச் செயலாளரான தியாகராஜன் என்பவர் அந்த அதிகாரியிடம் தவறுன தகவல் கொடுத்தார். தியாகராஜன் கூற வந்தது சங்கத்திற்குச் சொந்த மான நிலமென்று எதுவுமில்லை என்பதுதான்.. இந்திய ரிசர்வ் வங்கி ஆட்சேபணைகள் தெரிவித் ததன் காரணமாக, தொடக்க நிலவள வங்கிக்குச் சேர வேண்டிய தொகை முழுவதையும் கொடுத்துத் தீர்க்க, வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறு வதென்று தொகுதிச் சங்கங்களின் உறுப்பினர்கள் தீர்மானித்தனர். அதன்படி, 17—8—1972-ல் கனரா வங்கியிடமிருந்து 12 இலட்சம் ரூபாய் கடன் பெறப்பட்டது. இதற்கிடையில், நான்கு சங்கங்களையும் சேர்ந்த விவசாயிகள் பயிர் செய்த புளிச்சைக் கீரையையும், அகத்திக் கீரையையும் சன் பேப்பர் மில்ஸ் நிறுவனத்திற்கு வழங்க ஒப் பந்தமொன்று செய்துகொள்ளப்பட்டது; அந்த நிறுவனத்தார் 16 இலட்சம் ரூபாய் முன் பணம் கொடுத்தனர். தொடக்க நிலவள வங்கியிட மிருந்து பெற்ற கடன் முழுவதும் இந்தத் தொகை களைக் கொண்டு திருப்பிச் செலுத்தப்பட்டது; மேம்பாட்டுப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு பூர்த்தி செய்யப்பட்டது. விவசாயிகள் முதலில் வினியித்த வாழையை விற்று, கனரா வங்கிக்குக் கடனைத் திருப்பிச் செலுத்தவும், சன் பேப்பர் மில்ஸ் நிறுவனத்திற்கு நிலுவைத் தொகையைத் திருப்பிக் கொடுக்கவும் முடிந்தது.

திருஞானசாந்தன், தன்னுடைய உறுதி மொழிப் பத்திரத்துடன், சண்முகத் தேவர், பூலுத்தேவர், வீரபத்ரதேவர், எம். பழனிக் கோனுர் ஆகியோருடைய உறுதிமொழிப் பத்தி ரங்களையும் தாக்கல் செய்தார். இத்த உறுதி மொழிப் பத்திரங்கள் எல்லாவற்றிலும் ஒரே மாதிரியான வாசகங்கள் இருந்தன. தாங்கள் பெரிய விவசாயிகள் என்றும், தங்கள் மேற் பார்வையின்கீழ் ஏனைய விவசாயிகள் நிலச் சீர் திருத்தப் பணியும் மேம்பாட்டுப் பணியும் செய்ததாகவும் சாட்சிகள் கூறுகின்றனர். அச் சங்கங்களின் உறுப்பினர்கள் பயிரிட்ட வாழைத் தோட்டங்களையும் அகத்தித் தோட்டத்தையும் காட்டக்கூடிய புகைப்படமொன்று திருஞான சாந்தன் கூறிக்கொண்ட புகைப்படங் களையும் தன்னுடைய உறுதிமொழிப் பத் திரத்துடன் தாக்கல் செய்தார். இந்தப் புகைப்படங்கள், 31—10—1972 அன்றே அந்தத் தேதி அளவிலோ, கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் திரு. சுப்பையாவிடம் தாக்கல் செய்யப்பட்டன என்று கூறப்படுகிறது. புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுறவுச் சங்கக் கூநதல் பதிவாளருக்கு திரு. சுப்பையா கடிதம் எழுதியிருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட கோப்புகளில் அப்படிப்பட்ட புகைப்படம் ஏதும் காணப்படவில்லை.

சுருங்கச் சொன்னால், திருஞானசாந்தன் தலைவராகவுள்ள நான்கு இறைவப் பாசனத் தொகுதிச் சங்கங்களுக்கு, கருங்குளம் தொடக்க நிலவள வங்கி வழங்கிய கடனை முழுவதும், திருஞானசாந்தனின் நேரடி மேற்பார்வையின் கீழ், சங்க உறுப்பினர்களாக இருந்த தனிப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது என்றும் நிலவள வங்கி விதிகளைச் சேர்ந்த 13 ஆவது விதியில் கூறப்பட்டுள்ள நில மேம் பாடு, பாசனம், பண்ணை வீடு கட்டுதல், ஏனைய நோக்கங்கள் ஆகியவைகளுக்கு இந்தப் பணத்தை அவர்கள் பயன்படுத்தினர் என்றும், திருஞானசாந்தனே, இந்தச் சங்கத் தலைவர்களில் வேறு ஒருவரோ இந்தப் பணத்தில் ஒரு பகுதியை, தேர்தல் செலவுகளுக்காக ஆதித்தனாரிடமோ வேறு எவரிடமோ கொடுக்கவில்லை என்றும் கிருஷ்ணகாந்தன் தனது உறுதிமொழிப் பத்திரத்தில் கூறியுள்ளார்.

திரு. சி. பா. ஆதித்தனார் சார்பாக வாதாடிய வழக்குரைஞருடைய வாதத்தையும், அரசு சார்பிலும் மனுதாரர்கள் சார்பிலும் வழக்காடிய வழக்குரைஞர்களுடைய வாதத்தையும் நான் கேட்டு, ஆவணங்களையும் கவனமாக ஆய்வு செய்துள்ளேன்.

விசாரணைக் கமிஷன் சட்டத்தின் 5-A பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கமிஷன் புலனாய்வு அதிகாரி புலனாய்வு செய்வதற்கு முன்னரே குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின்படி, புலனாய்வு ஒன்றைக் காவல்துறை டெபுடி சூப்பிரண்டு திரு. முத்தையா செய்திருந்தார் என்று டாக்டர் சிட்டேல் செய்த வாதம் முதல்நிலை ஆட்சேபணை அடிப்படையில் அமைந்திருக்கிறது. கமிஷனின் புலனாய்வு அதிகாரியால் விசாரணை செய்யப்பட்ட (பிட்டத் தட்ட) எல்லா சாட்சிகளும் குற்றவியல் நடை முறை விதிக்கோவையின் 161/162 ஆவது பிரிவுகளின்கீழ் காவல்துறை டெபுடி சூப் பிரண்டு முத்தையாவினால் ஏற்கெனவே விசாரணை செய்யப்பட்டிருந்தனர். 5-A பிரிவின்கீழ் புலனாய்வு அதிகாரியால் கொடுக்கப்பட்ட அறிக்கை திரு. முத்தையா கொடுத்த அறிக்கை யின் தொகுப்புரையே, அதாவது, 5-A பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் வாக்கு மூலங்கள், குற்றவியல் நடைமுறை விதிக் கோவையின் 162 ஆவது பிரிவின்கீழ் திரு. முத்தையா பதிவு செய்த வாக்கு மூலங்களின் மறு பதிப்பே என வாதிடப்படுகிறது: விசாரணை கமிஷன் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழிப் பத்திரங்களிலும் அதே வாக்கு மூலங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலைகளில், கமிஷன் நியமித்த புலனாய்வு அதி காரியின் புலன் விசாரணை மதிப்பிழந்து விடுகிற தென்றும், அது பிரதிவாதிகளின் தரப்புக்கு ஈடுசெய்ய முடியாத பாதிப்பை ஏற்படுத்துகிற தென்றும் இது இயல்பான நீதி நெறிமுறைகளுக்குப் புறம்பாக உள்ளதென்றும் வாதிடப்படுகிறது.

5-A. பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்களிலும் சாட்சிகள் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரங்களிலும், குற்றவியல் நடை முறை விதிக்கோவையில் காவல்துறை டெபுடி சூப்பிரண்டு பதிவு செய்த வாக்கு மூலங்களில் கூறப்பட்டுள்ளவையே கூறப்பட்டி ருக்கின்றன என்பது, கமிஷன் அறிவிப்பு வெளியிட்டதற்கிணங்க சாட்சிகள் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரங்களும் வாக்கு மூலங்களும், அவர்களாக விரும்பித் தாக்கல் செய்தவை அல்ல என்று காட்டுவதாக வாதம் செய்யப்படுகிறது. இந்த விசாரணைக் கமிஷன் அமைக்கப்படுவதற்குக் காரணமான 3—2—76 ஆம் தேதியிட்ட அறிவிப்பு வெளியிடப்பட்ட பிறகு, 208/1976 ஆம் எண்ணுள்ள குற்ற வழக்கு காவல் துறையினரால் பதிவு செய்யப் பட்டதென வலியுறுத்திக் கூறப்படுகிறது. 5-A பிரிவின்கீழ் விசாரணைக் கமிஷனின் புலனுய்வு அலுவலர் மேற்கொள்ள அனுமதிக்கப்படாத ஒன்றைக் குற்றப் புலனுய்வு என்ற போர்வையில் வழக்குப் பதிவின்மூலம் செய்வதே இதன் நோக்கமாகும். குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின்கீழ் அதைப்போன்றதொரு புல னுய்வை மேற்கொள்வது, விசாரணைக் கமிஷன் சட்டத்தின் 5-A பிரிவின் கோட்பாட்டிற்கு முரணானது.

விசாரணைக் கமிஷன் அனுப்பிய அறிவிப்புக் கடிதத்திற்கு பதிலிலக்கும் வகையில், திருநெல் வேலி காவல்துறை சூப்பிரண்டு திரு. வைகுந்திட மிருந்து 17—2—1976 ஆம் தேதியிட்ட கடிதம் (கோப்பு 3-பக்கம் 7) வந்தது என்னு டைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 208/1976 ஆம் எண் குற்ற வழக்கில், காவல் துறையினரின் புலன் விசாரணை வரம்பு, கமிஷ னின் ஆய்வு வரம்பிற்குள் வரும் விசாரணைக்குச் சமமாகும் அளவுக்குச் சட்டவிரோதமாக விரிவு படுத்தப்பட்டது என்பது, இந்தக் கடிதத்தி லிருந்து எடுத்துக்காட்டப்படும் ஒரு விஷய மாகும்.

காவல்துறையின் மூலம் மாநில அரசு செயல் பட்டதன் நோக்கமே, எல்லாத் தகவல்களையும் தங்கள் வசப்படுத்திக்கொண்டு, தயார் நிலையில் ஒரு வழக்கை உருவாக்கிக் கொடுப்பதும், விசாரணைக் கமிஷன் மூலம் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மூலம் உண்மையைக் கண்டறிய விசாரணைக் கமிஷன் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளும் புலனுய்வை முறியடிக்க வேண்டும் என்பதும்தான் என்று வாதம் தொடர் கிறது.

1952 ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன்கள் சட்டத்தின் 3 ஆவது பிரிவைச் சேர்ந்த வரம்பு நிபந்தனையை ஆராய்ந்து பார்த்தால், ஒரு பொருள் குறித்து விசாரணை செய்ய மத்திய அரசு ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்து ஏற்கெனவே உத் தரவு பிறப்பித்திருந்தால், மத்திய அரசின் அனு மதியின்றி, அதே பொருள் குறித்து விசாரணை செய்ய மாநில அரசு ஒரு கமிஷன் நியமிப்பதை யும், அதேபோன்று, ஒரு பொருள் குறித்து விசாரணை செய்ய மாநில அரசு ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்து ஏற்கெனவே உத்தரவு பிறப் பித்திருந்தால், மாநில அரசின் அனுமதியின்றி, அதே பொருள் குறித்து விசாரணை செய்ய மத்திய அரசு ஒரு கமிஷன் நியமிப்பதையும் அந்த வரம்பு நிபந்தனை தடை செய்கிறது என்பது தெரியவரும். இரு அமைப்புகள் ஒரே மாதிரியான விசாரணைகள் நடத்துவதற்கு அச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரே தடை இதுதான். குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின்படிக் குற்றவழக்கொன்று பதிவு செய்து, காவல்துறையினர் அவ் வழக்கில் புலன் விசாரணை செய்வதையோ, வேறு ஏதேனும் ஒரு சட்டத்தின்படி விசாரணையொன்று நடத்து வதையோ அச் சட்டம் தடுக்கவில்லை. ஒரு குற்றம் குறித்து விசாரணைக் கமிஷன் சட்டத்தின்கீழ் விசாரணையொன்று நடைபெறும்போது, அதே குற்றம் குறித்து காவல்துறையினர் புலனுய்வு செய் வதற்குத் தடை விதிக்கக்கூடிய அம்சம் எதுவும் குற்றவியல் நடைமுறை விதிக்கோவையில் இல்லை.

விசாரணைக்குட்பட்ட விஷயம், "பொது முக்கியத்துவம் வாய்ந்ததொரு திட்டவட்டமான விஷயமாக" இருக்கவேண்டும் என்ப இச் சட்டத்தின் தலையாய நோக்கம் என்ற வகையில், விசாரணைக் கமிஷன் சட்டத்தின்கீழ் நியமிக்கப் படும் கமிஷன் செய்யும் ஒரு விசாரணைக்கும் வேறெரு சட்டத்தின்கீழ் செய்யப்படும் விசா ரணைக்கும் புலனுய்வுக்கும் அடிப்படையிலேயே வித்தியாசம் இருக்கிறது. பொது மக்களின் நலனை முன்னிட்டு உண்மைகளைக் கண்டறிவதேஅத்தகைய தொரு விசாரணையின் நோக்கமாகும். அதன் முடிவு கனை, சட்டப்படி அப்படியே செயற்படுத்த முடி யாது ; அவற்றிற்குச் சட்டபலம் கிடையாது. இச் சங்கங்களின் அலுவலக நிர்வாகிகளுக்கெதிராக இணைப்பிவாளர் புகார் தாக்கல் செய்ததன் பேரில் இ.பி.கோ. 468, 409, 477எ, 175, 188 ஆகிய பிரிவுகளின்கீழ்வரும் குற்றங்கள் தொடர்பாக, 14—2—1976-ல் பதிவு செய்யப்பட்ட 208/1976 ஆம் எண் குற்ற வழக்கில் புலனுய்வு செய்யப்பட்டு வரும் விஷயம், கமிஷன் விசாரணை செய்துவரும் விஷயத்தின் ஒரு பகுதி என்பது உண்மையே. ஆனல், குற்றவியல் நடைமுறை விதிக் கோவையின் கீழ் கொடுக்கப்பட்ட வாக்குமூலங்கள் அனைத்தும், விசாரணைக் கமிஷன் சட்டத்தின் 5-A பிரிவின்கீழ் புலனுய்வு அலுவலர் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னரே முத்தையா தாஸ் என்பவரால் பதிவு செய்யப்பட்டவை ஆகும். அந்த வழக்கு சம்பந்தமாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குப் பாதகமோ, கமிஷனுக்குத் தர்ம சங்கடமோ ஏற்படாத வகையில், கமிஷன் நியமனத்திற்குப்

பின்னர் அந்தவழக்கில் காவல்துறையினர் புலனுய்வு செய்வது தற்காலிகமாகத் தடை செய்யப் பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரிவிக்கப்பட் டுள்ளது. மேற்சொன்ன வழக்கில் குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின்படிக் காவல்துறை யினர் மேற்கொண்டிருந்த புலனுய்வு முழுவகையில் முடிக்கப்படவில்லே என்று தெரிகிறது. உண்மையில், கீழ்க்கண்ட 19 பேரும், குற்றவியல் நடை முறை விதிக்கோவையின்படிக் காவல்துறையினரால் விசாரணே செய்யப்படவில்லே ; அவர்கள் 5-A பிரிவின்கீழ் விசாரணேக் கமிஷன் புலனுய்வு அலுவலரால் விசாரணே செய்யப்பட்டிருக் கின்றனர் ; அந்த 19 பேர் வருமாறு :—

1. திரு. ஆர். சீனிவாசன், சாட்சி எண் 11/AF 6.
2. திரு. எஸ். இராமகிருஷ்ணன், சாட்சி எண் 14/AF 9.
3. திரு. எஸ். இராமலிங்கம், சாட்சி எண் 17/AF 12.
4. திரு. எம். சண்முகம், சாட்சி எண் 19/AF 14.
5. திரு. ஜி. வேங்கடநாராயணு, சாட்சி எண் 20/AF 15.
6. டாக்டர் டி.தத்தே,சாட்சி எண் 21/A.F16.
7. திரு. சிங்கமுத்து, சாட்சி எண் 27/A.F21.
8. திரு. பால்வண்ணன், சாட்சி எண் 28/AF 22.
9. திரு. வி. பி. ரத்னம், சாட்சி எண் 29/AF 23.
10. குருமூர்த்தி, சாட்சி எண் 33/AF 26.
11. திரு. கே. கேசவ் கினி, சாட்சி எண் 34 (CW 40)/AF 27.
12. திரு. கே. பி. கந்தசாமி, சாட்சி எண் 39/ AF 32.
13. திரு. கே. நடராஜன், சாட்சி எண் 40 (CW 44)/AF 33.
14. திரு. எஸ். நாராயணசர்மி, சாட்சி எண் 47 (CW 34)/AF 40.
15. திரு. எம். மூஸா, சாட்சி எண் 48 (CW 33)/AF 41.
16. திரு. எம். உமாபதி, சாட்சி எண் 49 (CW 35)/AF 42.
17. திரு. வி. கோவிந்தன், சாட்சி எண் 51/AF44.
18. திரு. கே. வள்ளிநாயகம் பிள்ளே, சாட்சி எண் 52/AF 45.
19. திரு. ஜீ. லக்ஷ்மி நரசிம்மன், சாட்சி எண் 53/AF46.

மேற்சொன்னவர்களில் பெரும்பாலானேர் முக்கிய சாட்சிகளாவர். ஆகவே, 5-A பிரிவின்கீழ் கமிஷனுல் நியமிக்கப்பட்ட விசாரணே அலுவலர் நடத்திய புலனுய்வு, குற்றவியல் நடைமுறை விதிக் கோவையின்கீழ் திரு. முத்தையா தாஸ் பதிவு செய்து தயாராக வைத்திருந்த வாக்குமூலங்களே அப்படியே எடுத்து கொண்ட · என்பது சரி யல்ல. குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின் கீழ் காவல்துறையினரால் விசாரணே செய்யப் பட்ட சாட்சிகள் கொடுத்துள்ள வாக்குமூலங்களும், 5-A பிரிவின்கீழ் புலனுய்வு அலுவலர் பதிவு செய் துள்ள வாக்குமூலங்களும் பெரும்பாலும் ஒன்றை யொன்று ஒத்திருக்கின்றன என்பது உண்மையே. 5-A பிரிவின்கீழ் சாட்சிகளேப் புலனுய்வு அலுவலர் விசாரிக்கும்போது, குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின்படி, திரு.முத்தையா தாஸ் பதிவு செய்திருந்த வாக்குமூலங்களேப் பயன்படுத்தி யிருக்கக்கூடும் ; அதனுலேயே புலனுய்வு அலுவலர் தனியே புலனுய்வு எதுவும் நடத்தவில்லே என்றுகிவிடாது. மேற் சொன்னதைப் போன்றதொரு முறையைப் பின் பற்றியதால் பிரதிவாதிகளுக்கு எவ்வகையிலும் பாதகம் ஏற்படவில்லே; சாட்சிகள் ஏற்கெனவே உறுதிமொழிப்பத்திரம் எதுவும் தாக்கல் செய்ய வில்லேயெனில் அவர்கள் எல்லோரும் அவ்வாறு உறுதிமொழிப் பத்திரங்களேத் தாக்கல் செய்யுமாறு விசாரணேக் கமிஷன் கோரி கமிஷனே அவர்களுடைய சாட்சியங்களேப் பதிவு செய்தது என்பதுதான் இதற்குக் காரணம். அதையொட்டி, இந்த சாட்சிகள் அனேவரும், உறுதிமொழிப் பத்திரங்களில் வாக்கு மூலங்கள் கொடுத்துள்ளனர்; அவை, காவல் துறையி னரின் செல்வாக்குக்கு அல்லது கட்டுப்பாட்டுக்கு ஆட்பட்டவர்கள் என்று கூறமுடியாத, தகுதி வாய்ந்த வழக்கறிஞர்களினுல் அல்லது மாஜிஸ்ட் ரேட்டுகளால் சான்றுரப்பம் இடப்பட்டு, சரி பார்க்கப்பட்டன. 5-A பிரிவின்கீழ் கொடுக்கப் பட்ட வாக்குமூலங்களிலும் உறுதிமொழிப் பத்திரங்களிலும், கொடுக்கப்பட்டுள்ள தகவல் கள், ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ள வாக்கு மூலங்களில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு ஒத்து இருக்கின்றன என்பதாலேயே அந்த சாட்சிகள், 'இளிப்பிள்ளே' சாட்சிகள் என்றேரு. அவர்களுடைய வாக்குமூலங்கள், நிர்ப்பந்த மாகவோ தகாத முறையிலோ பெறப்பட்ட வாக்குமூலங்கள் என்றே கூறிவிட முடியாது. மேலும், 5-A பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களே அல்லது கமிஷன் முன்னிலேயில் தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழிப் பத்திரங்களே மட்டும் கமிஷன் நம்பி யிருக்கவில்லே. முக்கிய சாட்சிகள் அனேவரும் விசாரிக்கப்பட்டனர். சாட்சிகளேக் குறுக்கு விசாரணே செய்ய எதிர் மனுதாரர் சார்பில் ஆறரான வழக்குரைஞருக்கும் கிருஷ்ணகாந்தனுக் கும் முழு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அவர் களும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண் டனர்.

5-A பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட புலனுய்வு அலுவலர் விசாரணே மேற்கொள்வதற்குத்

தடை விதிக்கக் கோரி, எதிர் மனுதாரர், மனு செய்துகொள்ளவோ ஆட்சேபணை தெரிவிக்கவோ முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்க தாகும். சொல்லப்போனால், இந்தக் கமிஷன் முன்னிலையில் சக எதிர் மனுதாரர் நீலியிலுள்ள திருஞ்ஞானந்தன், 20—5—1976-ல் தாக்கல் செய்த தன்னுடைய உறுதிமொழிப் பத்திரத்தில், கீழ்க்கண்டவாறு முறையிட்டுக் கொண்டார் : "(i) விசாரணைக் கமிஷன்கள் சட்டத்தின் 5-A (i) (a) பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மாநில அரசு அதிகாரிகள் மட்டும், விசாரணைக் கமிஷன் சட்டத்தின் 5-A (4), (5) பிரிவுகளைச் சேர்ந்த விதித்துறைகளுக்குட்பட்டு, தற்போது கமிஷனின் விசாரணையிலுள்ள விஷயங்கள் தொடர்பாக கமிஷனின் கட்டளைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு, புலனுய்வு ஒன்றை நடத்தலாம் அல்லது தொடரலாம் என்றும் (ii) மாநில அரசு அதிகாரி எவரும் விசாரணைக் கமிஷனின் முடிவுகளை முன்கூட்டியே எதிர்பார்த்துச் செயல்படக்கூடாது என்றும், விசாரணைக் கமிஷன் முன்னிலையில் விசாரணை அல்லது அறிக்கை சம்பந்தமாக உள்ள விஷயங்கள் குறித்து நிரிமினல் நடவடிக்கை ஏதும் தொடரக்கூடாது என்றும்" விசாரணைக் கமிஷன் உத்தரவிடலாம். எனினும், குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின்படி, காவல்துறை அதிகாரிகள் மேற்கொண்டும் புலன் விசாரணை செய்வது நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால், இந்த முறையீடு இறுதியில் வலியுறுத்தப்படவில்லை.

குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின்படி இந்த வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்ட தால், சாட்சிகள் அவற்றிற்குக் கட்டுப்பட்டவர்களாகி விட்டார்கள் என்றும், நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அவர்களை விசாரணை செய்வது பயனற்றதாகிவிட்டதென்றும் 5-A பிரிவின்கீழ் அவர்களுடைய வாக்குமூலங்களைப் பதிவு செய்வது அர்த்தமற்ற சம்பிரதாயமாகிவிட்டது என்றும் கூறும் வாதத்தில் வலு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின்படிக் கொடுக்கப்பட்ட வாக்குமூலங்கள், சம்பந்தப்பட்ட சாட்சிகள் தாமாகவே முன்வந்து கொடுத்த வாக்குமூலங்கள் அல்ல என்று இந்த வாதம் அனுமானிக்கிறது, இந்த ஊகத்திற்கு முகாந்திரம் ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லே. உண்மை அவ்விதமாக இருந்தால், சாட்சிகள் முன்னர் கூறியதை மறுத்து வேறு விதமாகச் சாட்சியம் கூற முன்வருவதற்கு எதுவும் தடையாக இல்லே. 5-A பிரிவின்கீழ் விசாரணை செய்யப்பட்ட இந்த சாட்சிகளில் பலரும், விசாரணைக் கமிஷன் வெளியிட்ட அறிவிப்புக்கு / அறிவிக்கைக்கு இணங்க உறுதிமொழிப் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளனர் என்பதும், அந்த உறுதிமொழிப் பத்திரங்கள், புலனுய்வு அலுவலர் முன்னிலையில் அவர்கள் கொடுத்துள்ள வாக்குமூலங்களேப் பெரிதும் ஒத்துள்ளன என்பதும், சாட்சிகள் தாங்களே முன்வந்து வாக்குமூலங்கள் கொடுத்தனர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. நான்கு அல்லது ஐந்து சாட்சிகள், உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும்போது, வித்தியாசமான வாக்குமூலங்கள் கொடுத்துள்ளனர் என்பது உண்மையே. ஆனல், அவர்கள் ஏற்கெனவே கொடுத்த வாக்குமூலங்கள் நிர்ப்பந்தம் காரணமாகவும் தூண்டுதல் காரணமாகவும் கொடுக்கப்பட்ட வாக்குமூலங்கள் எனக் குறிப்பிடவில்லே எவரும் ஒருபோதும் நிர்ப்பந்திக்கப்படவில்லே என்பதையே இது தெளிவுபடுத்துகிறது.

5-A பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட புலனுய்வு அறிக்கை அனுமதிக்கப்படுவது தொடர்பாக எதிர் மனுதாரர் எழுப்பிய ஆட்சேபணை ஒன்றின்மீது முடிவு கூறுகையில், பொதுவாக ஒரு குற்றச்சாட்டு கிரிமினல் குற்றச்சாட்டாக மாறும் போது; விசாரணைக் கமிஷன் முன்னிலையில் தாக்கல் செய்யப்படும் உறுதிமொழிப் பத்திரத்தில் கூறப்படும் சாட்சியத்தையோ நேரடி விசாரணையில் கூறப்படும் சாட்சியத்தையோ தான் என்னுடைய முடிவுகள் அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்றும், புலனுய்வு அலுவலர் அல்லது வேறு அலுவலர் முன்னிலையில் சாட்சிகள் ஏற்கெனவே கொடுத்துள்ள வாக்குமூலங்கள், சம்பந்தப்பட்ட சாட்சியை ஒட்டியோ வெட்டியோ வாதிடப் பயன்படுத்தப்படலாம் என்றும் நான் பெரிதும் முன்னெச்சரிக்கையாகக் கருத்து தெரிவித்தேன்.

சாட்சிகள் ஏற்கெனவே கொடுத்துள்ள வாக்குமூலங்கள், உறுதிமொழிப் பத்திரங்கள் உட்பட அடுத்துக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குமூலங்களுடன், வைப்பு முறையிலும் தகவல் வகையிலும் ஒத்திருக்கின்றன என்ற வாதத்தைப் பொறுத்த வரை, இது குறித்து குத்தாலம் என்பவரைத் தவிர வேறெந்த சாட்சியையும் குறுக்கு விசாரணைக்கு அழைக்க எதிர்மனுதாரர் முன்வரவில்லே என்பதைக் குறிப்பிடலாம். முதலில் யார் யாரைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று தெரிவித்திருந்தாரோ அவர்களேயெல்லாம் விசாரணை செய்வதைக் கைவிட்டார். குத்தாலம் என்பவரை எதிர் மனுதாரரின் வழக்குரைஞர் குறுக்கு விசாரணை செய்தார்; குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின் கீழ் திரு. முத்தையா தாஸ் விசாரணை செய்தபோது தான் (குத்தாலம்) கொடுத்திருந்த வாக்கு மூலங்கள் தொடர்பான குறிப்புகளே குறித்துக் கொண்டதாக இந்தக் குறுக்கு விசாரணையில் குத்தாலம் விளக்கினர். அந்தக் குறிப்பின் உதவியுடன் இந்த உறுதிமொழிப் பத்திரத்தைத் தயாரித்ததாகவும் அவர் கூறினர். அவருடைய உறுதிமொழிப் பத்திரத்திற்கும் அவர் ஏற்கெனவே கொடுத்திருந்த வாக்குமூலங்களுக்கும் இடையே அதிக அளவு ஒற்றுமை இருப்பதற்கான காரணத்தை இது விளக்குகிறது.

அது எப்படியிருந்தாலும், குத்தாலத்துக்கு அழைப்பாணை கொடுக்கப்பட்டு, கமிஷன் முன்னிலையில் விசாரிக்கப்பட்டிருக்கிறார். தான் ஏற்கெனவே கொடுத்தவாக்குமூலத்தில் என்ன கூறியிருந்தாரோ அதையேதான் விசாரணைக் கமிஷன் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலத்திலும் பெரும்பாலும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். கமிஷன் முன்னிலையில் அவர் கொடுத்த வாக்குமூலம் அதிக விளக்கமாக இருந்தது உண்மைதான். விசாரணைக் கமிஷன் கேள்விகள் கேட்டதும், எதிர் மனுதாரர் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சியைக் குடைந்து குடைந்து கேள்வி கேட்டதும் இதற்குக் காரணம்.

இந்தச் சங்கங்கள் ஒன்றின் தலைவரென்று கூறப்படும் முருகன், 9—2—1977-ல் கடைசி உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்தார்; அதில், தான் உறுதிமொழிப் பத்திரம் தயார் செய்வதற்கோ 5-A பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரி முன்னிலையில் வாக்குமூலம் கொடுப்பதற்கோ, காவல் துறை டெபுடி சூப்பிரண்டு முத்தையா தாசினுல் முன்னர் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் அடிப்படை ஆதாரமாக இருந்தது என்று அந்த உறுதிமொழிப் பத்திரத்தில் முருகன் குறிப்பிடவில்லை.

இறுதியாக, விசாரணைக் கமிஷன் போதுமான வாய்ப்பளித்தும், எடுத்துக்கூறியும், தன்னுடைய தரப்பை விளக்கிக் கூறவும், குறுக்கு விசாரணைக்கு உட்படவும் சாட்சிக் கூண்டில் ஏற எதிர் மனுதாரர் தயாராக இல்லை. ஆகவே, குற்றவியல் நடைமுறை விதிக் கோவையின் கீழ் புலனுய்வு மேற்கொள்ளப்பட்டபோது இந்த சாட்சிகளில் சிலருடைய வாக்குமூலங்களைப் பதிவு செய்ததால் இந்த விசாரணையில் எவரும் பாதிக்கப்பட்டதாகக் கூறுவதற்கு முகாந்திரமே இல்லை.

மேற்சொன்ன காரணங்களினுல், டாக்டர் சிட்லின் வாதத்தை என்னுல் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அடுத்ததாக, கிரிமினல் வழக்கில் புலனுய்வு செய்தபோது, நான்கு சங்கங்களின் கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள் எல்லாவற்றையும் மாநில காவல் துறையினர் 14—2—1976-ல் கைப்பற்றினர் என்றும், புலப்படாத காரணங்களுக்காக அந்தப் புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுப்பது நின்றிருக்கிறது என்றும் எதிர் மனுதாரர் வழக்குரைஞர் அடித்துக் கூறினர். சங்கங்களுக்குச் சொந்தமான அந்தப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் கைப்பற்றியது குறித்து கிருஷ்ணகாந்த் தன்னுடைய உறுதிமொழிப் பத்திரத்தில் சாட்டியுள்ள குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தக்கூடிய, மறுக்க முடியாத இரண்டு சூழ்நிலைகள் இருக்கின்றன என்று வாதிடப்படுகிறது : முதலாவதாக, இந்தப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் கைப்பற்றுமாறு காவல் துறை புலனுய்வு அதிகாரிக்குக் கூட்டுறவுச்சங்கப் பதிவாளர் நிட்டவட்டமான உத்தரவு பிறப்பித்திருந்தார். இரண்டாவதாக, கிருஷ்ணகாந்தனும் I. உத்தராண்டியனும் கைது செய்யப்பட்ட 14-2-1976க்கு அடுத்த நாளான 15—2— 1976-ல் பட்டியக் கணக்கர் திரு. நாராயணனிடமிருந்து அத்தகைய பதிவேடுகள் சிலவற்றைக் காவல் துறையினர் கைப்பற்றியதை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர்.

சேரகுளம் சங்கத் தலைவரான அரிச்சந்திரன் தன்னுடைய நிராமத்தை விட்டுச் செல்லக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில், கைது எதிர்பார்ப்புப் (anticipatory bail) பிணையத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது என்பதும் என்னுடைய நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கணக்குப் புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்கக் கோரி காவல் துறையினருக்கு எதிராக உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு 1354/1976 ஆம் எண் ரிட் மனுவைத் திரு. அரிச்சந்திரன் தாக்கல் செய்தது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1976 பிப்ரவரி 14/15 நள்ளிரவில், கூட்டுறவுச் சங்க இணைப்பதிவாளர், காவல் துறை இன்ஸ்பெக்டர் ஒருவருடன் வந்து, நான்கு சங்கங்களுடைய கணக்குப் புத்தகங்களையும் ஆவணங்களையும் கைப்பற்றியதாக இந்த ரிட் மனுவில் அரிச்சந்திரன் தெரிவித்ததாகச் சுட்டிக்காட்டப் படுகிறது.

சம்பந்தப்பட்ட கால அளவில் இச் சங்கங்கள் கணக்குகள் எவையும் வைத்து வரவில்லையாதலின், மேற்சொன்ன கூற்றுப்படி, அவற்றைக் கைப்பற்றுவது அல்லது மறைப்பது என்ற பிரச்சினையே எழவில்லை என்று அரசு வழக்குரைஞர் பதில் கூறியுள்ளார். திரு. வானமாமலை தன்னுடைய வாதத்திற்கு ஆதரவாக, கிருஷ்ணகாந்தன், நாராயணன், முருகன் ஆகியோரின் உறுதி மொழிப் பத்திரங்களை என்னுடைய கவனத்திற்குக்கொண்டு வந்துள்ளார் ; அவர்களுடைய வாக்குமூலங்களை ஆராய்ந்தால், சர்ச்சைக்குரிய இந்தக் கணக்குப் புத்தகங்கள் எங்கு வைக்கப்பட்டன என்பது குறித்து கிருஷ்ணகாந்தன், முருகன் ஆகியோரது வாக்குமூலங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க முரண்பாடு இருப்பதைக் காணலாம். சேரகுளம் சங்க அலுவலகக் கட்டிடத்தில் இந்தக் கணக்குப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்ததாக கிருஷ்ணகாந்தன் 20—5—1976-ல் கொடுத்துள்ள உறுதிமொழிப் பத்திரத்தின் 4ஆவது பாராவில் கூறியுள்ளார் ; அப்படியிருக்க, இதற்குப் பெரிதும் முரணுக, சங்கத்தின் அங்காரம் பெற்ற ஏஜென்டாகக் கருதப்பட்ட I உத்தரபாண்டியன் வசம் இந்தக் கணக்குப் புத்தகங்கள் இருந்ததாக முருகன் தெரிவித்துள்ளார்.

தணிக்கையாளர் திரு. நாராயணனிடம் தான் இந்தக் கணக்குகள் இருந்தன என்று திரு. உத்தரபாண்டியன் தெரிவித்தது, விசாரணைக் கமிஷனுக்கு 21—12—1976-ல் திரு. வைகுந்த் எழுதிய

கடிதத்தின் 2 ஆவது பாராவில் கூறப்பட்டுள்ள விவரங்களிலிருந்து தெளிவாகும். 9—12—1977-ல் விசாரணைக் கமிஷன் கொடுத்திருந்த அறிவிப்புக்குப் பதில் அளிக்கும் வகையில் 8-1-1977-ல் எழுதிய கடிதத்திலும், 9—12—1977-ல் கடைசியாகக் கொடுத்த உறுதிமொழிப் பத்திரத்தின் 9-ஆவது பாரா'விலும், கணக்குப் புத்தகங்கள் உத்தரபாண்டியனிடம் இருந்ததாக முருகன் அடித்துக் கூறியுள்ளார். எனினும், தான் தலீவராக இருந்த மேலதாதன்குளம் பாசனச் சங்கத்தின் கணக்குப் புத்தகங்கள் பற்றித் தனக்குத் தெரியாது என்று 1—7—1976 ஆம் தேதியிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தின் கடைசி வாக்கியத்தில் முருகன் கூறியிருந்தார். நான்கு கோணிப்பை நிறைய பதிவேடுகள் காவல் நிலீயத்திற்கு ஜீப்பில் கொண்டு வரப்பட்டதைக் கண்டதாகவும், அவை அச் சங்கங்ளுடைய பதிவேடுகள் என்று ஒரு போதும் அடையாளம் காட்டப்படவில்லை என்றும் உத்தர பாண்டியன் கூறியுள்ளார்.

பட்டயக் கணக்கர் திரு. நாராயணன், தன்னுடைய பாதுகாப்பிலிருந்த சில பதிவேடுகளைக் காவல் துறையினரிடம் கொடுத்தார். சில பதிவேடுகளை I. உத்தரபாண்டியன் எடுத்துச் சென்றதாக அவர் தெரிவித்துள்ளார். கமிஷன் முன்னிலீயில் விசாரணை செய்யப்பட்ட சாட்சியை வழக்குரைஞர் ஒருவர் மூலம் குறுக்கு விசாரணை செய்ய கமிஷனின் அனுமதியைக் கிருஷ்ணகாந்தன் கோரியிருந்த போதிலும், சாட்சிக் கூண்டில் ஏற அவர் மறுத்து விட்டார் என்பதும் குறுக்கு விசாரணை மூலம், தன்னுடைய உறுதிமொழிப் பத்திர வாக்குமூலத்தைச் சோதித்துப் பார்க்க அனுமதிப்பதை வேண்டுமென்றே தவிர்த்தார் என்பதும் குறிப்பிடத்தக்கவை ஆகும். சாட்சிக் கூண்டில் ஆஜராவதை அவர் தவிர்த்தது, இந்தக் கணக்குப் புத்தகங்களைக் காவல் துறையினர் கைப்பற்றியது குறித்து அவர் கூறியுள்ளது உட்பட உறுதிமொழிப் பத்திரத்தில் அவர் கொடுத்துள்ள வாக்குமூலம் எந்த அளவுக்கு உண்மையானது என்பது குறித்து பாத்தகமான ஊகத்திற்கு இடமளிக்கிறது.

காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டன என்று கிருஷ்ணகாந்தனும் குற்றஞ் சாட்டிக் கூறப்படும் கணக்குப் புத்தகங்கள் உண்மையில் ஒருபோதும் இல்லீ என்பதைக் காட்ட ஏராளமான சான்றுகள் உள்ளன. பட்டயக் கணக்கர் திரு. நாராயணன் காவல் துறையினரிடம் கொடுத்த ஒரு சில பதிவேடுகளும்கூட பெரிதும் ஐயத்திற்கிடமானவையாகத் தோன்றுகின்றன ; ஒருவேளை, இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகள் வந்து, இச் சங்கங்களின் நடைமுறையில் காணப்பட்ட கண்கூடான முறைகேடுகளைச் சுட்டிக் காட்டியதற்குப் பின்னர் அந்தக் கணக்குப் புத்தகங்கள் அவசரம் அவசரமாகத் தயாரிக்கப்பட்டிருக்கக்கூடும். நாளது வரை இச் சங்கங்களின் புத்தகங்கள், கூட்டுறவுத் துறைத் தணிக்கையாளர்களிடம் தணிக்கைக்காக ஒரு போதும் கொடுக்கப்படவில்லீ என்பதை எதிர்மனுதாரரின் வழக்குரைஞர் மறுக்கவில்லீ.

இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரியான திரு. வேங்கடநாராயணு, 16—12—1971-ல், மேலதாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்திற்குச் சென்றபோது, அச் சங்கத்தின் பெயர்ப் பலகையை மட்டுமே கண்டதாகத் தன்னுடைய அறிக்கையில் கூறியுள்ளார் ; அச்சங்க அலுவலகமும் மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்க அலுவலகமும் மூடியிருந்ததாக அவருடைய ஆய்வு அறிக்கை கூறுகிறது. மற்ற இரண்டு சங்கங்களில் பெயர்ப் பலகைகள்கூட காணப்படவில்லீ. தணிக்கைக்காக அந்த இறைவைப் பாசனச் சங்கங்களின் கணக்குப் புத்தகங்களைப் பெற திருநெல்வேலியில் இருந்த துறை அதிகாரிகள் பெரு முயற்சி செய்தனர். ஆனால், அவர்களுடைய முயற்சி தோல்வியுற்றது.

கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் வரையறுத்துள்ள படிவத்தில் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் கணக்குகள் தயாரிக்க வேண்டுமென 36(5) துணிவிதி கூறுகிறது. இந்தத் துணிவிதியை மதித்து நடக்கவில்லீயெனத் தோன்றுகிறது.

ஜூன் மாதம் 30 ஆம் தேதி கூட்டுறவு ஆண்டு முடிந்ததிலிருந்து 15 நாட்களுக்குள் ஐந்தொகைக் குறிப்பு அனுப்பப்பட வேண்டுமெனத் துணை விதிகள் கூறுகின்றன. அவ்வாறு ஒருபோதும் செய்யப்படவில்லீ.

1—12—1969 முதல் 31—3—1975 வரை, கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகத்தில், திரு. கே. வைத்தியநாதன் தலீமைத் தணிக்கை அதிகாரியாக இருந்தார். இந்த விசாரணை சம்பந்தப்பட்ட நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களின் கணக்குப் புத்தகங்கள், 1974, நவம்பர் வரை எழுதப்படவில்லீ என்றும், அந்த விஷயத்தைத் தனியே கவனிக்குமாறு 1974, நவம்பரில் எப்போதோ ஒருநாள் வேளாண்மைத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் தன்னிடம் கூறியதாக, 5-A பிரிவின்கீழ் கையொப்பமிட்டு எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தில் திரு. கே. வைத்தியநாதன் (சாட்சி எண். 45) தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக, திருநெல்வேலியில் இருந்த I. உத்தரபாண்டியனீச் சந்திக்குமாறும் சாட்சிக்கு (கே. வைத்தியநாதனுக்கு) அமைச்சர் உத்தரவிட்டார். அதையடுத்து, 24—12—1974-ல் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி விருந்தினர் மாளிகையில் உத்தரபாண்டியனீச் சாட்சி சந்தித்தார். கணக்குகள் எழுதுவது எப்படி என்று உத்தரபாண்டியனுக்குச் சாட்சி விளக்கினர். கணக்குகள் எழுத ஏற்பாடு

செய்வதாகவும், அதன் பின்னர் தணிக்கைக்கு அவற்றைக் கொடுப்பதாகவும் உத்தரபாண்டியன் உறுதியளித்தார். அதுவரை கணக்குகள் எவையேனும் வைத்துவரப்பட்டதாக அவருக்குக் குறிப்பு ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்று வைத்தியநாதன் விளக்கம் கொடுத்துள்ளார். உத்தரபாண்டியனுடன் தொடர்பு கொள்ளுமாறும் கணக்குப் புத்தகங்கள் கிடைக்கையில் தணிக்கையை முடிக்குமாறும் சாட்சி, மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரியிடம் சொன்னார். அதே நாளில் திருநெல்வேலி தணிக்கை வட்டத்தில் தணிக்கையின் முன்னேற்றத்தை ஆய்வு செய்ய தணிக்கை அதிகாரிகளின் கூட்டம் ஒன்று நடந்தது. இந்த 4 இறைவைப் பாசனச் சங்கங்கள் தணிக்கை செய்யப்படாதது பற்றியும் ஆய்வு செய்யப்பட்டது. இந்த 4 சங்கங்களின் கணக்குப் புத்தகங்களும் தாம் எவ்வளவு முயன்ற போதிலும் தமக்குக் கிடைக்கவில்லை என்று சம்பந்தப்பட்ட கூட்டுறவு உதவிப் பதிவாளர் (தணிக்கை) சாட்சிக்குச் சொன்னார். மேலும், கணக்குப் புத்தகங்களும் 1971 ஆம் ஆண்டு இந்த சங்கங்கள் தொடங்கப்பட்ட திலிருந்து தணிக்கை செய்யப்படவில்லை என்று அவர் சொன்னார்.

வைத்தியநாதனின் சாட்சியத்தில் குறைபாடு ஏதும் இல்லை. மனுதாரர் மீதோ இந்த சங்கங்களின் நிர்வாகிகள் மீதோ அவருக்கு எவ்வித வருத்தமும் இல்லை. 17—8—1976 நாளிட்ட அவரது கையெழுத்திட்ட வாக்கு மூலத்தை நம்பாதிருப்பதற்குக் காரணம் ஏதுமில்லை. இந்தச் சங்கங்கள் எதுவும் 31—3—1975 வரையில் எந்தவித கணக்கையும் வைத்துவரவில்லை என்பதை அவரது சாட்சியம் நிரூபிக்கிறது.

46-வது சாட்சியாகிய திரு. கே. எஸ். ராம மூர்த்தி, கோயம்புத்தூர் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளராகச் செயல்பட்டவர். அவர் 5-A பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார். முக்கியமான இந்தச் சமயத்தில் அவர் இந்த பதவியைத் திருநெல்வேலியில் விட்டு வந்தார். விசாரணைக் கமிஷன் முன்பு அவர் 14—12—76 அன்று உறுதி மொழிப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். இச் சங்கங்கள் தொடங்கப்பட்டதிலிருந்தே அவற்றின் கணக்குகள் தணிக்கை செய்யப்படவில்லை என்பதை 1975 டிசம்பர் திங்களில் அவர் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் கண்டறிந்ததாக அவர் சாட்சியம் அளித்தார். பெருந்தொகை இதில் சம்பந்தப்பட்டிருந்ததிலும் இச் சங்கங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்படவில்லை என்பது அவருக்கு சற்று அதிர்ச்சியாக இருந்தது. இச் சங்கங்களின் கணக்குகள் 1970-71 ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளுக்கு மேலாக ஏன் தணிக்கை செய்யப்படவில்லை என்று திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு அதிகாரி திரு. என். எல்லப்பனைச் சாட்சி கேட்டார். இச் சங்கங்களின் கணக்குப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்றும் தானும் தன்னுடைய பணியாளர்களும் எவ்வளவு முயற்சி செய்தபோதிலும் கணக்குப் புத்தகங்களை எவரும் கொண்டு வந்து தரவில்லை என்றும் எல்லப்பன் சாட்சியிடம் சொன்னார். எனவே, தணிக்கையாளர்கள் முன்பு கணக்குப் புத்தகங்கள், நொக்கம் முதலியவற்றைக் கொண்டு வந்து காட்டுமாறு இச் சங்கங்களின் அதிகாரிகளுக்கு மேற்படி சட்டத்தின்கீழ் அழைப்பாணை அனுப்புமாறு தணிக்கை அதிகாரிக்குக் கட்டளையிடும்படித் தூத்துக்குடி துணைப்பதிவாளருக்கு சாட்சி கட்டளையிட்டார். இச் சங்கங்கள் அப்பொழுது கூட்டுறவு அமைச்சராக இருந்த திரு. சி. பா. ஆதித்தனார் முயற்சியின் பேரில் பதிவு செய்யப்பட்டன என்றும் அமைச்சர் கட்டளையிட்டால் தான் அச் சங்கங்களின் கணக்குப் புத்தகங்களைப் பெற இயலும் என்றும் எல்லப்பன் சாட்சியிடம் மேலும் சொன்னார். இது அமைச்சரின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டது என்றும் அமைச்சர் இது குறித்துத் தலையைக் கணக்கு அதிகாரியாகிய திரு. வைத்தியநாதனுடன் தொடர்பு கொண்டார் என்றும் அவர் மேலும் கூறினார். சாட்சி 20—12—1975 அன்று கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளருக்கு இரகசிய அறிக்கை ஒன்றை அனுப்பினார். அமைச்சரின் உதவியின்றிக் கணக்குப் புத்தகங்களைப் பெறுவதில் தணிக்கையாளர்களுக்கு உள்ள இடர்ப்பாடுகள் இந்த இரகசிய அறிக்கையில் விளக்கப்பட்டிருந்தன. இவ்வளவு முயற்சிகள் செய்திருந்தபோதிலும், தணிக்கைக்குக் கணக்குப் புத்தகங்களைக் கேட்டுப் பெறுவதில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

இந்த 4 இறைவைப் பாசனச் சங்கங்களும் கணக்குகளை ஒழுங்காக வைத்துவரவில்லை என்பதையும், எனவேதான் அச் சங்கங்களைக் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தணிக்கைசெய்ய கணக்குப் புத்தகங்களைக் கொண்டு வர இயலவில்லை என்பதையும் திரு. கே. எஸ். ராமமூர்த்தியின் சாட்சியம் மேலும் வலுப்படுத்துகிறது. இந்த அதிகாரியின் சாட்சியத்தை நம்பாதிருக்க சரியான காரணம் ஏதுமில்லை.

16—12—1971 அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகாரிகள் இச் சங்கங்களுக்குச் சென்று பார்வை யிட்டனர். அதன் பின்னர், இச் சங்கங்களின் கணக்குப் புத்தகங்களைப் பெறுவதற்குக் கூட்டுறவுத்துறை தணிக்கை அதிகாரிகள் பெரிதும் முயன்றனர். இது 20-வது சாட்சியாகிய ஜி. வேங்கடநாராயணனின் சாட்சியத்திலும் அவர் அனுப்பிய அறிக்கையிலும் தெளிவாகத் தெரிகிறது. சங்கங்களின் அலுவலகங்கள் பூட்டப்பட்டிருந்தன என்றும் மேலதாதன்களும் இறைவைப் பாசனச் சங்கத்தின் கௌரவ செயலாளராகிய திரு. நியாகராஜன், அங்கிருந்தார் என்றும், இந்த 4 சங்கங்களின்

கணக்குப் புத்தகங்களும் அலுவலகங்களில் வைத்துவரப்படவில்லை என்றும், ஆனால் திருநெல்வேலியிலுள்ள "தினத்தந்தி", "மாலைமுரசு" அலுவலகங்களில் பணியாற்றி வரும் நிர்ச் சங்கத் தலைவர்களின் பாதுகாப்பில் இருப்பதாக அவர் கூறியதாகவும் வேங்கடநாராயணு கூறினார். தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் அலுவலகத்தைத் திறந்துவிடுமாறு வேங்கடநாராயணு தியாகராஜனைக் கேட்டுக் கொண்டார். ஆனால், தன்னிடம் அதன் சாவி இல்லையென்று தியாகராஜன் சொன்னார். மேலும், கணக்குப் புத்தகங்கள் எதுவும் சங்க அலுவலகத்தில் இல்லையென்று தியாகராஜன் திட்டவட்டமாகச் சொன்னார். தாம் அந்தச் சங்கங்களில் கணக்குப் புத்தகங்களை எழுதுவதில்லை என்றும் தலைவருடன் கூட்டாக அச் சங்கத்தின் கணக்குகளில் கையெழுத்திட அதிகாரமளிக்கப்பட்டுள்ளவர்களில் தானும் ஒருவர் என்றும், சங்கத்தின் நிதி விவகாரங்கள் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றும் தியாகராஜன் சொன்னார்.

வேங்கடநாராயணு மேலும் கூறியதாவது :—

"துறையைச் சேர்ந்த மாவட்ட அதிகாரிகள் ஒத்திழைப்பைத் தராததனால் இந்த இறைவைப் பாசனச் சங்கங்களின் கணக்குப் புத்தகங்களைப் பெற, நாங்கள் செய்த நீலிரமான முயற்சி தோல்வியுற்றது. திருநெல்வேலி வட்டாரத்தின் பொறுப்பு வகித்த இணைப்பதிவாளரிடம் இந்த சங்கங்களின் கணக்குப் புத்தகங்களை நாங்கள் பார்க்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டோம். குறிப்பாக, நிலவள வங்கியிடமிருந்து அவை பெற்ற நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள உதவும் வகையில் கணக்குப் புத்தகங்களை பார்வையிட ஒத்துழைக்குமாறு அவரைக் கேட்டுக் கொண்டோம். இணைப்பதிவாளர் முதலில் இந்த வேண்டுகோளை அலட்சியமாகத் தள்ளிவிட்டார். இந்த இறைவைச் சங்கங்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று பாவனை செய்ததோடு தூக்குக்குடி துணைப்பதிவாளர் இவற்றைப் பதிவு செய்தார் என்றும் அவர் கூறினார். ஆனால், நாங்கள் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதன் மேல் அவர் எங்களது வேண்டுகோளைத் துணைப்பதிவாளருக்குத் தெரிவித்து, ஆவன செய்யுமாறு அவருக்குக் கட்டளையிடுவதாக ஒப்புக்கொண்டார். அவருக்கு நான் மீண்டும் நினைவூட்டியபோது, துணைப்பதிவாளர் சுற்றுப்பயணம் சென்றிருப்பதாகவும் அவரிடம் தொடர்புகொள்ள இயலவில்லையென்றும் அவரை எப்போது தாங்கள் சந்திக்க முடியும் என்பது பற்றி இட்டவட்டமாகச் சொல்ல முடியாது என்றும், அவர் கூறினார். மேற்படி இறைவைப் பாசனச் சங்கங்கள் பற்றித் தகவல் எதையும் எங்களுக்குக் கொடுக்க அவரும் அவரதுசார்நிலை அலுவலர்களும் விரும்பவில்லை என்ற எண்ணமே அவர்களைச் சந்தித்த பிறகு எங்களுக்கு ஏற்பட்டது."

கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வோர் ஆண்டும் தணிக்கைக்காக தங்கள் கணக்குப் புத்தகங்களை வைத்துவர வேண்டும் என்றும் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் அந்தக் கணக்குப் புத்தகங்களைத் தணிக்கைக்காக கொண்டுவந்து காண்பிக்க வேண்டுமென்றும் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒவ்வொன்றின் கணக்குகளையும் ஆண்டுக்கொருமுறையாவது கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தணிக்கை செய்ய வேண்டும் அல்லது தணிக்கை செய்யும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 64வது பிரிவு வகை செய்கிறது. கூட்டுறவுத் துறையில் தணிக்கையாளர் பலர் உள்ளனர். இவர்கள் தலைமைத் தணிக்கை அதிகாரியின்கீழ் பணிபுரிகின்றனர். பெரிய சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்குத் தலைமைத் தணிக்கை அதிகாரி பொறுப்பு வகிக்கிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரி ஒருவர் பணிபுரிகின்றார். அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் பல (தணிக்கை) உதவிப் பதிவாளர்கள் உள்ளனர். சாதாரணமாக பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒவ்வொன்றின் கணக்குகளும் துறை சார்ந்த தணிக்கை அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட வேண்டும். பதிவாளரால் எழுதப்படும் மூலமாகப் பொதுவான அல்லது பிறப்பான ஆணை ஒன்றின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டாலன்றி, தனிப்பட்ட தணிக்கையாளர் ஒருவர் அத்தகைய சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய முடியாது.

கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகள், ஆவணங்கள், சுட்டுறுதிப் பத்திரங்கள், பிணையங்கள் ரொக்கம் அல்லது ஏனைய சொத்துக்கள் நியாயமான எல்லாக் காலங்களிலும் பார்வையிடப் பதிவாளருக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்ற அதிகாரிக்கு மேற்படி சட்டத்தின் 64-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவு அதிகாரமளிக்கிறது. மேலும், மேற்படி கணக்குப் புத்தகங்கள் முதலியவற்றின் பொறுப்பு வகிக்கும் நபரை அக் கணக்குப் புத்தகங்களைச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் அல்லது அதன் யாதொரு கிளை அலுவலகத்தில் கொண்டுவந்து காட்டுமாறு அவர் அழைப்பு அனுப்பலாம். அவர் மேற்படி சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் வெளியிடப்பட்ட அழைப்பாணை, வேண்டுகோள் அல்லது சட்டப்படிக்கான ஏனைய ஆணை அல்லது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அவ்வாறு கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்றே மறுத்தால் அல்லது நியாயமான காரணமின்றி மறுத்தால் அல்லது அவரிடமிருந்து சட்டப்படிக் கேட்கப்படும் தகவலே வேண்டுமென்றே கொடுக்க மறுத்தால் அல்லது அவ்வாறு கொடுக்கத் தவறினால், அவர்மீது மேற்படி சட்டத்தின் 101-வது பிரிவின்கீழ் வழக்கு தொடரப் பெறுவதற்கும் ரூ.200 வரை தண்டனை விதிக்கப் பெறுவதற்கும் உள்ளானார்.

தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய விதிகளின் 13-வது விதியின்

கீழ் ஒவ்வொரு சங்கமும் தான் செய்யும் வணிகத்தைப் பதிவு செய்வதற்காக மேற்படி விதிகளில் விவரிக்கப்பட்டுள்ளவாறு பல்வேறு கணக்குப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் வைத்து வரவேண்டும்.

13-வது விதியின் கீழ் வைத்து வர வேண்டிய கணக்குகளையும் பேரேடுகளையும் நாளது தேதிவரையில் குறிப்பிட்ட படிவத்திலும் குறிப்பிட்ட கால அளவுக்குள்ளும் எழுதி வருமாறு சங்கம் ஒன்றிற்கு 14-வது விதியின் கீழ் பதிவாளர் கட்டளையிடலாம். அவ்வாறு சங்கம் செய்யத் தவறினால், பதிவாளர் தனது அதிகாரி ஒருவரை அத்தகைய கணக்குகளையும், பேரேடுகளையும் எழுதி வருமாறு அனுப்பலாம்.

சங்கம் ஒன்று கணக்குகளையும் பேரேடுகளையும் வைத்து வரவில்லையென்ற அல்லது தணிக்கைக்காக, விசாரணைக்காக அல்லது ஆய்வுக்காக அக் கணக்குப் புத்தகங்களையும் பேரேடுகளையும் கொண்டுவந்து காண்பிக்கத் தவறி விட்ட தென்று சந்தேகமறத் தெரிந்து கொண்டால், அரசு அல்லது வேறு மாதொரு நிறுவனம் அச் சங்கத்திற்குக் கொடுக்கும் கடன் உதவியை அல்லது வேறு எந்த உதவியையும் அவர் நிறுத்தலாம். ஆனல் அவ்வாறு செய்வதற்கு முன் தமது தரப்பை எடுத்துச் சொல்ல அச் சங்கத்திற்கு வாய்ப்பு ஒன்றை அளிக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொன்றும் கூட்டுறவு ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டுமென்று 16-வது விதி வகை செய்கிறது. அதே மாதிரி ஆதாய–வீரயக் கணக்கு ஒன்றையும் ஐந்தொகைக் கணக்கு ஒன்றையும் அரசு அல்லது பதிவாளர் அவ்வப்பொழுது நிச்சயிக்கக்கூடிய ஏனைய விவர அறிக்கைகளையும் தயாரிக்க வேண்டுமென்றும் அந்த விதி வகை செய்கிறது. பதிவாளர் குறிப்பிடக்கூடிய கால அளவுக்குள் ஒவ்வொரு சங்கமும் மேற்படி விவர அறிக்கையின் நகலைப் பதிவாளருக்கு ஆண்டுதோறும் அனுப்ப வேண்டும். இத்தகைய அறிக்கை அல்லது விவர அறிக்கையை எந்தச் சங்கமாவது அனுப்பத் தவறினால், அத்தகைய அறிக்கை அல்லது விவர அறிக்கைகளைத் தயாரிக்க அலுவலர் ஒருவரைப் பதிவாளர் அனுப்புவதுடன் அதற்காகும் கால அளவு, அப் பணியைச் செய்ய அனுப்பப்படும் அதிகாரியின் ஊதியங்கள் ஆகியவற்றை ஒட்டி சங்கத்திடமிருந்து அதற்கான கட்டணங்களை வசூலிக்கவும் வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒவ்வொன்றும் கணக்குகளை எழுதிக் கொண்டுவந்து காண்பிக்க வேண்டுமென்று, கூட்டுறவுத் துறையில் பதிவாளருக்கும் அவர் அதிகாரத்தின் மேள்ள அலுவலர்களுக்கும், மேற்படி சட்டத்தின் மேலும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளின் மேலும் போதுமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பது இதிலிருந்து தெரியவரும். அப்படியிருக்க, இந்த அதிகாரிகள் ஏன் தங்கள் அதிகாரங்களைப் பயன் படுத்தவில்லை? இந்த 4 இறைவைப் பாசனச் சங்கங்களும் தொடங்கப்பட்டதிலிருந்து அவற்றின் கணக்குப் புத்தகங்களைத் தணிக்கை செய்வதில் தங்கள் ஏலா நிலையை ஏன் அவர்கள் காண்பித்துக் கொண்டார்கள்? இந்தச் சங்கங்களின் அலுவல கங்களைக் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த எந்த அதிகாரியும் ஒரு முறை கூட பார்வையிட்டதில்லை. அப்படிப் பார்வையிட முயற்சி செய்யப்பட்ட போதெல்லாம், அவர்கள் கண்டது ஓர் அறையில் அல்லது கூரை வேய்ந்த கொட்டகையில் தொங்க விடப்பட்ட சங்கப் பெயர்ப் பலகைகள். அலுவலகமும் பெரும்பாலும் மூடப்பட்டு தான் இருந்தது. இச் சங்கங்களின் தலைவர்களுக்குக் கணக்குப் புத்தகங்களை அனுப்புமாறு பதிவுச் சலில் அனுப்பப்பட்ட கடிதங்கள் அனைத்தும் திரும்பி வந்தன. கொடுக்கப்பட்ட முகவரியில் முகவரிக்குரியவர்கள் இல்லை என்ற குறிப்புடன் அக் கடிதங்கள் திரும்பி வந்தன.

தணக்குப் புத்தகங்கள் சில இருந்தன என்றும் அவை காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டு மறைத்து வைக்கப்பட்டன என்றும் திரு. கிருஷ்ண காந்தன் சொல்வதை உண்மையென்றே வைத்துக் கொண்டாலும், நிலத்தைப் பண்படுத்தும் பணி களும் வளர்ச்சிப் பணிகளும் தனிப்பட்ட உழவ ரால் தங்கள் நிலத்தில் செய்யப்பட்டன என் பதையும் திரு. கிருஷ்ணகாந்தனே சொல்கின்றார். அப்படியானால், தனிப்பட்ட உழவர் தங்களி கணக்குகளை வைத்து வந்திருக்க வேண்டும். 15–2–1977 நாளிட்ட தனது உறுதி மொழிப் பத்திரத்தில் கிருஷ்ணகாந்தன் சொல்வ தாவது :—முட்புதர்களை வெட்டி அகற்றுவதற்குத் தகுதி பெற்ற மேற்பார்வையாளர்களை நியமித்து அவர்கள் மேற்பார்வையின் கீழ் கிணறுகளைத் தோண்டவும் நிலங்களைப் பண் படுத்த டிராக்டர்களை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளவும் ஏரிகளிலிருந்து வண்டல் மண்ணை லாரிகளில் கொண்டு வரவும் உழவர்களுக்குக் கணிசமான செலவு ஏற்பட்டது. கிருஷ்ண காந்தனின் இக் கூற்று உண்மையாயின், சங்கங்கள் கணக்குகளை வைத்திருந்து அந்தக் கணக்குகளில் வங்கிகளிலிருந்து எடுத்த தொகை, தனிப்பட்ட உழவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை, நிலத்தைப் பண்படுத்துவதற்கும் உழுவதற்கும் ஆன தொகை ஆகியவை தனிப்பட்ட உழவர் களின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கும், உழவரிடமிருந்தோ சங்க உறுப்பினரிட மிருந்தோ காவல் துறையினர் கணக்குப் புத்தகங் களைக் கைப்பற்றியதாக வழக்கு எதுவும் இல்லை. உழவர் எவரும் செலவுக் கணக்கைக் காண் பிக்கும் வகையில், ஒரு சிறு துண்டு தாள் கூட கொண்டு வந்து காண்பிக்கவில்லை என்பது, கிருஷ்ண காந்தனின் கூற்று பொய்யென நிரூபிக்கவே உதவு கின்றது.

கூட்டுறவுத் துறை அதிகாரிகளைச் சந்தித்த பிறகு, துறை அதிகாரிகளும் சங்க நிர்வாகிகளும் இந்த 4 இறைவைச் சங்கங்கள் தொடர்பான தகவல் அனைத்தையும் மறைக்க முயன்றதாக இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையில் திட்ட வட்டமாகச் சொல்லப்பட்டுள்ளது என்பதை மீண்டும் இங்குக் குறிப்பிடவேண்டியுள்ளது. திரு. ஆதித்தனார் இந்த இறைவைச் சங்கங்களில் எடுத்துக் கொண்டுள்ள அக்கறை காரணமாக இந்த அதிகாரிகள் இத்தகைய நிலையை மேற் கொண்டார்கள் போலும்! இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகள் கேள்வி கேட்டால் அமைச்சர் தங்களைப் பாதுகாப்பார் என்பதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மனநிலை போலும்!

இந்தப் பின்னணியில் பார்த்தால், சேரகுளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் தலைவராகிய ஆர். அரீச்சந்திரன் ரிட் மனு ஒன்றைத் (1354/1976) தாக்கல் செய்ததும், அதில் ரிலர் இந்த 4 இறைவைப் பாசன சங்கங்களைச்சார்ந்த ஆவணங்கள் உள்ளூர் காவல்துறை அதிகாரிகளால் கைப்பற்றப் பட்டனவென்றும், அவை தங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளையிடப் படவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டதாகவும் கூறுவது வினோதமாக உள்ளது. இச் சங்கங்கள் தொடர்பான கணக்குகள் எவையும் சென்னையிலுள்ள தனிப்பட்ட பட்டயக் கணக்கர் திரு. நாராயணனிடம் கொடுக்கப்பட்டதாக தனது ரிட் மனுவிற்கு ஆதரவாகக் கொடுக்கப்பட்டுள்ள உறுதிமொழிப் பத்திரத்தில் அரிச்சந்திரன் கூறவில்லை. இந்த 4 சங்கங்கள் தொடர்பான கணக்குகள் எவையும் கைப்பற்றப்படவில்லை என்று உள்ளூர் காவல்துறை அதிகாரிகளும் திருநெல்வேலி கூட்டுறவுச் சங்க இணைப்பதிவாளரும் இந்த ரிட் மனு குறித்து எதிர் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல்செய்தனர். சேரகுளத்திலுள்ள சங்கங்களின் அலுவலகத்திற்கு தாங்கள் செல்லவேயில்லை யென்று இணைப்பதிவாளரும் காவல்துறை அதிகாரிகளும் கூறியுள்ளனர். சென்னையிலுள்ள பட்டயக் கணக்காயரிடம் திரு. நாராயணன் இந்த 4 இறைவைப் பாசனச் சங்கங்கள் தொடர்பான சில ஆவணங்களை அப்போது உதவிக் காவல்துறைக் கமிஷனராயிருந்த தாமஸ் பாலிடம் கொடுத்ததாகக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தமது எதிர் உறுதிமொழிப் பத்திரத்தில் கூறியுள்ளார். இந்த இரு தரப்பினரின் வாதங்களைக் கேட்டபின்னர் உயர்நீதி மன்றம் இடைக்காலத் தடை ஆணை பிறப்பிக்க மறுத்தது. பின்னர் உயர்நீதிமன்றம் 15—7—77 நாளிட்ட தனது ஆணையில் மேற்படி ரிட்மனுவைக் காரணங்காட்டாமலேயே தள்ளிவிட்டது.

இந்த இறைவைப் பாசனச் சங்கங்கள் தாங்கள் கணக்குகள் வைத்து வராததை மறைப்பதற்காகக் காவல்துறை அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டி மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர் என்றும் திரு. அரிச்சந்திரன் தாக்கல் செய்த ரிட் மனு, உண்மையை மூடி மறைக்கும் போர்வை என்றும் திரு. வான மாமலை வாதிடுவதில் அறவே பொருளில்லை என்று சொல்ல முடியாது. இந்தச் சங்கங்களின் ஆவணங்கள், வழக்குரைஞராகிய திரு. உத்தர பாண்டியனிடம் இருந்தன என்று திரு. கிருஷ்ண காந்தன் விசாரணையின்போது சொன்னார் என்பது குறிப்பிடத்தக்கது. மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரி கொடுத்த வாக்கு மூலம் இதனை உறுதிப்படுத்துகிறது. காவலர் அதன்மேல் உத்தரப்பாண்டியனைக் கையெழுத்து விசாரணை செய்தனர். காவலில் இருக்கையில் உத்தரபாண்டியன் வாக்குமூலமொன்றைக் கொடுத்தார். அதாவது சங்கங்களின் ஆவணங்கள் திரு. ஏ. பி. ஆதித்தனாரின் நிறுவனங்களைக் கவனித்து வருபவரும் சென்னையிலுள்ள பட்டயக் கணக்குமாகிய நாராயணன் அவர்களிடம் உள்ளன என்று அந்த வாக்கு மூலத்தில் கொன்னார். இத் தகவலைப் புலனுய்வு அதிகாரி திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்பினார். அவர் இத் தகவலைச் சென்னை மாநகர் காவல்துறை உதவியுடன் சென்னையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அனுப்பினர். இதன் பலனுக, திரு. நாராயணன் இந்த சங்கங்களின் கணக்குப் புத்தகங்களையும், பேரேடுகளையும் 15—2—1976 அன்று காவல்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தார். அவர்கள் அவற்றைக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடம் ஒப்படைத்தனர். 21—12—1976 அன்று அப்பொழுது காவல்துறை டுப்பிரண்டாக இருந்த திரு. வைகுந்த் விசாரணைக் கமிஷன் முன்பு கொடுத்த சாட்சியத்திலிருந்து இவை தெரிய வருகின்றன.

இது குறித்த ஆவணங்களை நான் படித்துப் பார்த்தேன். சங்கங்களுக்கு அவை அமைந்த இடங்களில் கணக்குகள் எவையும் இல்லை யென்றும், 14—2—1976 அன்று சங்கங்களின் வளவுகளில் இருந்து கணக்குப் புத்தகங்கள் எவையும் காவல்துறையினரால் கைப்பற்றப்பட வில்லை என்றும் மனுதார் இதுகுறித்துச் செய்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மையாகத் தோன்றவில்லை என்றும் நான் முடிவு செய் கிறேன்.

திரு. நாராயணனிடம் கைப்பற்றப்பட்ட ஆவணங்களிலிருந்து, 1972 மார்ச் முதல் 1972 அக்டோபர் 31-ஆம் தேதி வரையில் உள்ள பல் வேறு கால அளவுகளுக்கான மாதிரி ஐந்தொகைக் கணக்குகள் காணப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கதாகும். இந்த ஐந்தொகைக் கணக்குகளின் படி (27ஆம் எண் உள்ள கோப்பைப் பார்க்கவும்) ஏழு மாதங்களில் யாரோ ஒருவரிடமிருந்து(பெயர் குறிப்பிடப்படவில்லை). 4,40,000 ரூபாய் வரப்

பெற்றதென்று தெரிய வருகிறது. இதனால் கணக்கு கூ ஜோடிக்க முயற்சி செய்யப்பட்டதோ என்ற ஐயம் தோன்றுகிறது.

இந்த நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களின் பெயர்களில் இருந்த நிலங்களின் உண்மையான சொந்தக்காரர்கள் திரு. சி. பா. ஆதித்தனாரும் அவர்களது குடும்பத்தினர்கள் அல்லது நெருங்கிய உறவினர்களுமா என்ற கேள்வி அடுத்தபடியாக நிச்சயிக்கப்பட வேண்டும்.

இந்த நான்கு சங்கங்கள் அமைக்கப்பட்டது மோசடியானது, போலியானது என்றும் அவர்கள் பெயரில் பெறப்பட்ட 22 இலட்சம் ரூபாய் கடன் திரு. சி. பா. ஆதித்தனாருக்குச் சென்றது என்றும் திரு. எம். கலியாணசுந்தரம் தனது மகஜரில் குறிப்பிட்டுள்ளார். 400 ஏக்கர் கொண்ட இந்த நிலங்கூ ஆதித்தனார் கல்வி அறக்கட்டளை 52 நபர்களுக்கு மாற்றியது ஏமாற்றுவித்தை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். குற்றங்குறை கூறமுடியாத அளவிற்கு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இச் சங்கங்களின் உண்மையான கட்டுப்பாட்டு அதிகாரமும் சங்க உறுப்பினர்களின் பெயர்களிலுள்ள நிலங்களும், திரு. சி. பா. ஆதித்தனாரின் நெருங்கிய உறவினர்கூ யும் குடும்பத்தினர்கூ யும் சேர்ந்தவையாகும் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த நிலங்களில் 299:37 ஏக்கர் நிலங்கள் கீழப் பெருமானேரி கிராமத்திலுள்ளவை என்றும் அவை முதலில் காந்திமதி அம்மன் கோயிலைச் சேர்ந்தவை என்றும் ஆவணங்களில் கூறப்பட்டுள்ளன. (வள்ளிநாயகம் பிள்ளை அறிக்கையில் 43-A ஆவணத்தைப் பார்க்கவும்). இந்த இனம் நிலம் 1886 ஆம் ஆண்டில் இனாம் ஆணையாளரினால் வாரம் அளித்து வரியின்றி அளிக்கப்பட்டது. இந்த இனம் திருநெல்வேலி காந்திமதியம்மன் பெயரில் சிறப்புக் கட்டளையாக வழங்கப்பட்டது. நாளடைவில் அறங்காவலர்கள் அவற்றைத் தனியார் நிலங்களாகக் கோரி திரு. சி. பா. ஆதித்தனாரின் சகோதரராகிய திரு. எஸ். டி. ஆதித்யனின் பிரதிநிதியாக விளங்கிய பொருனையாறு ஃப்யூவல் பிளான்டேஷன் கம்பெனியின் சார்பாக விற்பனைப் பத்திரங்கூ எழுதிக்கொண்டனர். இந்த நிறுவனம் இந்த நிலத்தை ஆதித்தனார் கல்வி அறக்கட்டளைக்கு விற்றது. நிலவரி ஏற்பாட்டுத் தாசில்தாரர் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையில் கோவில் தேவஸ்தானத்தின் உரிமை மனு தள்ளிவிடப்பட்டது. மற்றவர்களிடமிருந்து 179 அல்லது 180 ஏக்கர் நிலம் ஆதித்தனார் கல்வி அறக்கட்டளையால் வாங்கப்பட்டது.

ஆதித்தனார் கல்வி நிலையம் 1960 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் 1—12—1962 அன்று சென்னையில் பதிவு செய்யப்பட்ட தென்பது 76ஆம் எண் ஆவணத்திலிருந்து தெரிய வருகிறது. சங்கத்தின் ஸ்தாபகர்கள் வருமாறு :

(1) கோவிந்தம்மாள் ஆதித்யன் (எதிர் மனுதாரர் சி. பா. ஆதித்தனின் மனைவி).

(2) பி. எஸ். ஆதித்யன் (சி. பா. ஆதித்தனின் மகன்).

(3) எஸ். டி. ஆதித்யன் (சி. பா. ஆதித்தனின் சகோதரர்).

(4) ஆர். பால்வண்ண ஆதித்தன் (சி. பா. ஆதித்தனின் உறவினர்).

(5) அ. சரவணபெருமாள் ஆதித்தன்.

(6) பி. இராமச்சந்திர ஆதித்தன்.

(7) அமுதா ஆதித்தன் (சி. பா. ஆதித்தனின் மருமகள்).

சங்கத்தின் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் பின் வருமாறு :—

(1) பி.சிவந்தி ஆதித்தன்—தலைவர்(எதிர் மனுதாரர் சி. பா. ஆதித்தனின் மகன்).

(2) பி. இராமச்சந்திர ஆதித்தன்—உறுப்பினர்.

(3) அ. சரவணபெருமாள் ஆதித்தன்—துணைத்தலைவர்.

(4) ஆர். பால்வண்ண ஆதித்தன்—உறுப்பினர் (சி. பா. ஆதித்தனின் உறவினர்).

இந்த நிறுவனத்தின் விதிமுறைகளின்படி, ஆட்சி மன்றத்திற்கு மிகையான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

உறுப்பினராக விழையும் ஒருவரை ஆட்சிமன்றம் 5-வது விதியின்கீழ் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம் அல்லது காரணம் காட்டாமலேயே அவரது மனுவைத் தள்ளிவிடலாம்.

உறுப்பினர் ஒருவர், ஆட்சி மன்றத்தின் பெரும் பான்மையோரால் நிறைவேற்றப்படும் தீர்மானத்தினுல் உறுப்பினராக இருப்பதினின்றும் அற்றுப் போவார் என்று 8 (i) விதி கூறுகிறது.

சங்கத்தின் நிர்வாகத்திற்கும் சங்கம் நடத்தும் நிறுவனங்கள், நிலையங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்திற்கும் தேவைப்படக்கூடிய விதிகள், துணை விதிகள், விதிமுறைகள் ஆகியவற்றைச் செய்ய, திருத்தியமைக்க, நீக்கிவிட ஆட்சி மன்றத்திற்கு 17-வது விதி அதிகாரமளிக்கின்றது.

கூட்டம் நடப்பதை எதிர்பார்த்து, ஆட்சி மன்றத்தின் அதிகாரங்கள் எவற்றையேனும் தற்காலிகமாகச் செலுத்த தலைவருக்கு 14 (3) விதி அதிகாரமளிக்கின்றது.

இவ்வாறுக, இந்த நிறுவனத்தைப் பொறுத்த வரையில் தலைவருக்கு மிக அதிமான அதிகாரங்கூ விதிகள் அளித்துள்ளன. இந்த நிறுவனம் தொடங்கியதிலிருந்து மனுதாரர் சி. பா. ஆதித்தனரின் மகன் திரு. பி. எஸ். ஆதித்தன் இதன் தலைவராக இருந்து வந்துள்ளார். தந்தைக்கும்

மகனுக்கும் இடையே நல்ல உறவு இருந்து வந்தால்—அவ்வாறு இல்லையென்பதற்கான அறிகுறி ஏதுமில்லை—மனுதாரர் தனது மகன் மூலமாக இந்த நிறுவனத்தின் நிர்வாகம் முழுவதையும் தன்வசம் வைத்திருக்கலாம்.

ஆதித்தனர் கல்வி நிறுவனத்தின் பெயரிலிருக்கும் இந்த நிலங்கள் உண்மையில் திரு. சி. பா. ஆதித்தன் கையில்தான் உள்ளன என்றும், இவை 1970 ஆகஸ்டு திங்களில் நிலப் பறி இயக்கத்தின் போது (Land Grab Movement) எடுத்துக் கொள்ளப்படும் என்றும் கம்யூனிஸ்ட் கட்சி 1970 ஜூன் திங்களில் அறிவித்தது (ஆவணம் எண். 50, திருநெல்வேலி தனிக் காவல் பிரிவின் அறிக்கை). இந்த இயக்கத்தை எதிர்பார்த்து மாறில அரசு இந்த நிலங்களுக்கு மிகவும் வலுவான பாதுகாப்பை அளித்தது. அதிகார பூர்வமான ஆவணங்களும் இந்த நிலங்கள் ஆதித்தனர் பண்ணை என்று விவரிக்கப் பட்டன (ஆவணங்கள் எண் 48, 49, 50, 51).

இந்த நிலையில் 1970 ஜூலை 18 ஆம் நாளுக்கும் 1970 ஆகஸ்டு 13 ஆம் நாளுக்குமிடையே சாத்தன்குளம் கிராமத்தில் அமைந்துள்ள தையும் ஆதித்தனர் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்தவையுமான 179·90 ஏக்கர் நிலங்கள் திரு. எஸ். டி. ஆதித்யனுல் 52 பேர்களுக்கு விற்கப் பட்டன. இந்த நிலங்களை விற்பதற்கான அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது. இந்த நிலங்களின் உரிமை மாற்றிக்கொண்டவர்கள் கீழ, மேல, தாதன்குளம் இறைவைப்பாசனச் சங்கங்களை அமைத்துக் கொண்டனர்.

23—2—1971 அன்று சேரகுளம் கிராமத்தில் அமைந்துள்ள நிலங்கள் மேற்படி அதிகாரத்தினுல் 24 பேருக்கு விற்பனை செய்யப்பட்டன. இவற்றில் 12 பேர் அதே நாளில் சேரகுளம் இறைவைப் பாசனச் சங்கத்தை அமைத்துக் கொண்டனர். எஞ்சிய 12 பேர் கீழப்பெருமனேரி இறைவைப் பாசனச் சங்கத்தை அமைத்துக் கொண்டனர். எதிர்மனுதாரர் திரு. எஸ். பி. ஆதித்தனின் சகோதரராகிய எஸ். டி. ஆதித்யனின் மனைவி திருமதி ஸ்வரணம்மாள் தாதன்குளம் கிராமத்தில் 19·88 ஏக்கர் நிலத்தைச் சொந்தமாவைத்திருந்தார். மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தில் இவரும் சேர்ந்து கொண்டார். இவ்வாருக, 76 விற்பனைப்பத்திரங்கள் செயலில் இருந்தன. ஆனுல், விற்பனையாளர்கள் 72 பேர்தான் இருந்தனர். திருமதி ஸ்வர்ணம்மாளுடன் சேர்ந்து 4 இறைவைப் பாசனச் சங்கங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 73 மட்டும் தான் இருந்தது.

மேற்சொன்ன 76 பேர் சார்பில் ஆதித்தனர் கல்வி நிறுவனத்தால் செய்யப்பட்ட இந்த விற்பனைகள் அனைத்தும் போலியானவையே என்று அவரது வாதத்திற்கு ஆதரவாக மாநில அரசின் வழக்குரைஞரும் மனுதாரரின் வழக்குரைஞரும் கீழே குறிப்பிட்டுள்ள சூழ்நிலைகளை விளக்கியுள்ளனர் :—

(a) 52 பேர்களுக்குச் செய்யப்பட்ட விற்பனைகளைப் பொறுத்தவரையில்—இவர்கள் பின்னர் கீழ, மேல தாதன்குளம் சங்கங்களை அமைத்துக் கொண்டனர்—அவரவர் விற்பனைப் பத்திரத்தின்படி ஒவ்வொரு நிலத்திற்காகவும் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 20 என்று காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனுல், மொத்தம் ரூ. 2,000 முதல் ரூ. 9,000 வரை கொடுக்கப்பட்டிருந்தது. சேரகுளம் கீழப்பெருமானேரி சங்கங்களின் உறுப்பினர்களுக்கு உதவிப் பதிவாளர் முன்னிலையில் எத் தொகையும் கொடுக்கப் படவில்லை. தொகை முழுவதும் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுவிட்டதாக விற்பனைப் பத்திரத்தில் சொல்லப்பட்டிருந்தது. இந்த நபர்களின் சார்பாக 24 விற்பனைப் பத்திரங்களும் ஒரே நாளில் அதாவது 23—2—1971 அன்று எழுதப் பட்டன. இந்தச் சங்கங்கள் அனைத்தும் அதே நாளில் பதிவு செய்யப்பட்டன.

(b) தாதன்குளம் சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 20 கூட அந்த நிலத்தை வாங்கியவர்கள் கொடுக்கவில்லை.

(c) விற்பனைப் பத்திரங்கள் அனைத்தினும் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட தேதியன்றே தொகை கொடுக்கப்பட்டதாகக் காண்பிக்கப் பட்டுள்ளது.

(d) விற்பனைப் பத்திரங்களைப் பதிவு செய்த உதவிப் பதிவாளர்முன் விற்பனைத் தொகையாகக் ஒரு காசு கூட கொடுக்கப்படவில்லை.

(e) பதிவுக் கட்டணம், முத்திரைத்தாள் மதிப்பு ஆகிய அனைத்தையும் எதிர்மனுதாரராகிய திரு. சி. பா ஆதித்தனரின் சகோதரர் திரு. S. D. ஆதித்யன் செலுத்தினர்.

(f) விற்பனைப் பத்திரங்கள் பதிவு செய்யப் பட்டபோது, அந்த நிலங்களை வாங்கியவர்கள் என்ற எவரும் வரவில்லை.

(g) நிலங்களை வாங்கியதாகச் சொல்லப்படுபவர்கள் எவரும் விற்பனைப் பத்திரங்களைப் பதிவாளரிடமிருந்து வாங்கிக் கொள்ளவில்லை.

விற்பனைப் பத்திரங்கள், பதிவாளர் அலுவலகத்திலிருந்து அருணுசலம், உடையார் பிள்ளை ஆகியோரால் எடுத்துச் செல்லப்பட்டு, திரு. S. D. ஆதித்யனிடம் கொடுக்கப்பட்டன. அவர் அவற்றைத் திருநெல்வேலியில் உள்ள 'தினத்தந்தி' அலுவலகத்தில் வைத்துக்கொண்டார்.

(h) நிலம் வாங்கியவர்களால் பூர்த்தி செய்யப்படவேண்டிய ஆவணங்கள் அனைத்தும்—இவை 13-ம் எண் படிவத்தில் உள்ளவை—நிலங்களை

வாங்கியவர்கள் அனைவரும் பல்வேறு பருதியில் வசிப்பவர்களாய் இருந்தாலும் திரு. உத்தர பாண்டியனுல் மேற்கையெழுத்திடப்பட்டு, உடை யார் பிள்ளையிடம் கொடுக்கப்பட்டன.

(i) ஆதித்தனர் குடும்பத்தினர் அக்கறை கொண்டுள்ள பல்வேறு நிறுவனங்களுக்கு, 15-வது படிவத்தின் படிகள், கையெழுத்துப் பெறுவதற் காக அனுப்பப்பட்டன.

(j) எல்லா விற்பனைப் பத்திரங்கள் குறித்தும் எழுத்துக் கட்டணங்கள் திரு. S. D. ஆதித்தனுல் கொடுக்கப்பட்டன. இவருடைய ஏற்பாட்டின் மேல்தான் விற்பனைப் பத்திரங்கள் எழுதப்பட்டன.

(k) முருகன் (சாட்சி எண் 25), ரதி தேவி (சாட்சி எண். 26), வி. பி. ரத்தினம் (சாட்சி எண் 29), பால்வண்ணன் (சாட்சி எண் 28), சிங்க முத்து (சாட்சி எண் 27) முருகனின் மனைவி சற்குண தேவி ஆகியோர் தங்கள் பெயரில் தாதன் குளத்தில் நிலங்கள் இருப்பது தங்க ளுக்குத் தெரியாது என்றும் சங்கங்கள் அமைக்கப் பட்டதற்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமு மில்லை என்றும் தங்களது உறுதிமொழிப் பத்திரங் களில் தெரிவித்துள்ளனர்.

(l) வேலு தேவர், மசான முத்து ஆகியோர் தவிர, நிலங்கள் வாங்கியவர் எவரும், அவர்கள் வாங்கிய நிலம் அமைந்துள்ள கிராமத்தில் வசிப் பவரில்லை.

(m) நிலங்களை வாங்கியதாகச் சொல்லப் படும் எவரும் நிலவரி செலுத்தியவர் அல்லர். நிலத்தை வாங்கியபிறகு அவர்களில் எவரும் நிலத்தை அனுபோகத்தில் வைத்திருக்கவில்லை. இந்த நிலங்கள் குறித்த முதல் இரண்டாண்டு களுக்கான கிஸ்தி, ஆதித்தனர் கல்வி நிலையத்தின் பெயரில் எஸ். டி. ஆதித்தனுல் செலுத்தப்பட்டது. நிலத்தை வாங்கியதாகச் சொல்லப்பட்டவர் களின் பெயர்கள் பின்னர் சேர்க்கப்பட்டன.

(n) அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனரே 4—8—1970 முதல் 6—8—1970 வரையிலும், 9—8—1970 முதல் 13—8—1970 வரையிலும், 3—2—1971 முதல் 2—3—1971 வரையிலும் திருநெல்வேலியில் இருந்தார்.

மேற்சொன்ன சாட்சியங்கள் அனைத்தும் விற் பனைப் பத்திரங்களிலிருந்தும்--இவற்றின் படிகள் சாட்சியமாக வைக்கப்பட்டுள்ளன—பதிவு செய் யப்பட்ட பத்திரங்களிலிருந்தும் தெரிய வருகின் றன. இது குறித்து விசாரிக்கப்பட்ட முக்கிய சாட்சி உடையார் பிள்ளையாவார் (C. W.39). அவர் ஆவண எழுத்தர். முன்பு இவர் பல்வேறு கால அளவுகளில் பல்வேறு வழக்குரைஞர்களிடம் பணிபுரிந்துள்ளார். 1951 முதல் 1958வரை இவர் எதிர்மனுதாரராகிய திரு. சி. பா. ஆதித்தனரின் சகோதரரும் வழக்குரைஞருமாகிய திரு. எஸ். டி. ஆதித்தனிடம் எழுத்தராகப் பணி புரிந்தார். திரு. எஸ். டி. ஆதித்தனிடம் எழுத்த ராகப் பணிபுரிந்த பொழுதுதான் அவருக்கு ஆதித் தனர் குடும்பத்தைத் தெரியவந்தது. 1958ஆம் ஆண்டிலிருந்து சாட்சி பத்திரம் எழுதுபவராக ஆகி விட்டார்.

உடையார் பிள்ளை (C. W. 39).

வழக்குரைஞரும் எதிர்மனுதாரரின் சகோ தரருமாகிய திரு. எஸ். டி. ஆதித்தன் இந்த விற் பனைப் பத்திரங்களை எழுதுமாறு தன்னைக் கேட்டுக் கொண்டதாக சாட்சியே சொன்னர். அவ் வண்ணமே 52 வெவ்வேறு நபர்கள் சார்பாக 52 விற்பனைப் பத்திரங்களைச் சாட்சி எழுதினர். பின்னர் சாட்சி இந்தப் பத்திரங்கள் அனைத்தையும் அடையாளம் காட்டினர். தனது கையொப்பத்தை யும் அவர் அடையாளம் காட்டினர் இந்த நபர்களில் பெரும்பான்மையோரைத் தமக் குத் தெரியும் என்று சாட்சி சொன்னர். இவர்கள் நிலத்தை வாங்கியவர்களாகப் பத்திரங்களில் காட் டப்பட்டிருந்தன. பத்திரங்கள் எழுதும் சமயத் தில் இவர்களில் எவரையும் தாம் பார்த்ததில்லை என்று அவர் சொன்னர். குறிப்பாக அவர்களில் சிலர் திரு. சி. பா. ஆதித்தனருடைய பல்வேறு நிறுவனங்களில் பணியாளர்களாக இருந்தனர் என்று அவர் சொன்னர். அவர்களில் ஒரு சிலர் திரு சி. பா. ஆதித்தனரின் பணியாளர்களா அல்லது உறவினரா என்பது தமக்குத் உறுதியாகத் தெரியாது என்றும் அவர் சொன்னர்.

இவருடைய சாட்சியம் 23—2—1977 அன்று பதிவு செய்யப்பட்டது. அப்பொழுது அவர் தமது சாட்சியத்தைத் தாமாகவே வலிய வந்து கொடுத் தார். (Ex.C.W. 39-A)5-A பிரிவின்கீழ் நியமிக்கப் பட்ட அதிகாரிமுன் 15—8—1976 அன்று அவர் கொடுத்த வாக்குமூலம் தாமாகவே முன்வந்து கொடுக்கப்பட்டது என்றும் அவர் சொன்னர்.

அவரது சாட்சியம் தொடர்ந்து 12— 5— 1977 அன்று பதிவு செய்யப்பட்டது. தாம் எழுதியதாகச் சில பத்திரங்களை அப் பொழுது அடையாளம் காட்டினர். இந்த பத்திரங்களை எழுதியதற்கான கட்டணங்கள் அணைத்தும் திரு. எஸ். டி. ஆதித்தனுல் கொடுக்கப் பட்டன என்றும் அவர் சொன்னர். உத்தர பாண்டியன் வழக்குரைஞர் எஸ். டி. ஆதித்தனிடம் இளநிலை வழக்குரைஞராக பணி புரிந்து கொண்டிருந்த பொழுது 1956—57 முதற் கொண்டு தமக்குத் தெரியும் என்று அவர் சொன்னர். திரு. உத்தரபாண்டியன் வழக்குரைஞராக திருச்செந்தூரிலுள்ள ஆதித்தனர் கல்லூரியில் பகுதி நேர விரிவுரை யாளராகவும் பணியாற்றி வந்தார் என்று சாட்சி கூறினர். உத்தரபாண்டியன், திரு. கணேச நாடா ரின் மகளை—கணேச நாடார் ஆதித்தனர் சகோ தரியைத் திருமணம் செய்து கொண்டவர்— திருமணம் செய்துகொண்டார்.

மேற்படி பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட பிறகு அருணாசலப் பிள்ளையினுல் உதவிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு திரு நெல்வேலியில் 'மாலே முரசு' அலுவலகத்தில் அமைந்துள்ள திரு. எஸ். டி. ஆதித்யன் அலுவல கத்தில் வைத்துவரப்பட்டன என்றும் அவர் கூறினர்.

சாட்சியிடம் கேள்வி கேட்கப்பட்டது: 'மாலே முரசு' அலுவலகத்தில் இப் பத்திரங்கள் வைக்கப் பட்டிருந்தன என்று உங்களால் எப்படிச் சொல்ல முடியும்? சாட்சி சொன்னர்: ''எல்லா பத்திரங் களும் திரும்பி வந்துவிட்டன்வா என்று சரிபார்க்க் கும்படியும் அப் பத்திரங்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும்படியும் திரு. எஸ். டி. ஆதித்யன் என்னிடம் சொன்னர். மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் இதன் நான் செய்தேன். அந்தச் சமயத்தில் அப் பத்திரங்களே அங்கு நான் பார்த் தேன்.''

20 ரூபாய் முதலில் கொடுக்கப்பட்ட தென்றும் எஞ்சிய தொகை கொடுக்கப்படவேண்டும் என்றும் அப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், விற்பனைத் தொகை எதுவும் உதவிப் பதிவாளர் முன் கொடுக்கப்படவில்லை எனவும் உதவிப் பதிவாளர் முன் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட சமயத்தில் தாம் அங்கிருந்த தனுல் அதனை உறுதியாகக் கூறமுடியும் என்றும் சாட்சி சொன்னர்.

நிலத்தை வாங்கியவர்கள், 'மாலே முரசு' 'தினத் தந்தி', 'சன் பேப்பர் மில்ஸ்' அகிய நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் என்று சாட்சி கூறியதை நம்ப இயலாது என்பதை மெய்ப் பிப்பதற்கு ஏராளமான குறுக்கு விசாரணைகள் செய்யப்பட்ட போதிலும், அவர் பத்திரங் களை எழுதியபோதும் பத்திரங்களில் கையெ முத்து இடப்பட்டபோதும், உதவிப் பதிவாளர் முன் அவை பதிவு செய்யப்பட்ட போதும் அந்த நிலங்களை வாங்குவதாக சொல்லப்பட்ட வர்கள் எவரும் இல்லை என்ற வகையில் அவர் கூறியது உண்மை யில்லை என்பதனைக் காட்ட எந்தவிதமான கடுமையான முயற்சியும் செய்யப்படவில்லை. குமாரசுவாமி புரம், காயாமொழியில் வசிக்கும் கலியபெருமாள் மகன் இராமையா மேற்படி சாட்சி விற்பனை பத்திரங்களை எழுதியபோது அந்த இடத்தில் இருந்தார் என்பதைக் காண்பிக்க ஒரளவு முயற்சி செய்யப்பட்டது. ஆனுல் சாட்சி இதை வன்மையாக மறுத்தார். விற்பனைப் பத்திரம் எழுதப்பட்டபோது இராமையா அங்கில்லை. என்று அவர் ஆணித்தரமாகக் கூறினர். இராமையா பற்றிய விவரங்கள் தமக்குத் திரு. எஸ். டி. ஆதித்தனுல் கொடுக்கப்பட்டன என்று அவர் சொன்னர். அவர் மேலும் சொன்னதாவது:

''யாருடைய பெயரில் இப்பத்திரங்கள் எழு தப்படவேண்டுமென்ற விவரங்களை எஸ். டி. ஆதித்யன் கொடுத்தார். அவர்களது பெற்ருேர் பெயர், அவர்கள் எந்த கிராமத்தைச் சேர்ந்த வர்கள் போன்ற விவரங்களை அவர் கொடுத்தார். இந்த விவரங்களை வைத்துக் கொண்டு அந்தப் பத்திரங்களை எழுதினேன். 15 ஆம் எண் படிவப் படியிலுள்ள இந்த உறுதிமொழிப் படிவங்கள் தாக்கல் செய்யப்படுவதற்காக அவற்றை அவர்கள் வேலே செய்யும் இடத்திற்கு அனுப்ப வேண்டி யிருந்தது. அவை அஞ்சலில் அவர்கள் பணி செய்யும் இடத்திற்கு அனுப்பப்பட்டன; கிராமத்திற்கு அல்ல, அவை அவர்கள் வேலே செய்கின்ற இடங்களுக்கு அனுப்பப்பட வேண்டியிருந்ததால் அந்த முகவரிகளை அவர் கொடுத்தார். எனவே, அவர்கள் எங்கு வேலே செய்தனர் என்பது எனக்குத் தெரியும்.''

இப் படிவங்கள், திரு. உத்தரபாண்டியனுல் மேற் கையெழுத்திடப்பட்டன. அவ்வாறு மேற் கையெழுத்திடுவதற்காக அவற்றை எஸ். டி. ஆதித்யன் உத்தரபாண்டியனிடம் கொடுத்தார். விற்பனைப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டு உதவிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டபோது தான் அங்கிருந்த தாக மற்ருெரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் சாட்சி சொன்னர். அவை பதிவு செய்யப் படுவதற்காக உதவிப் பதிவாளர் அலுவலகத்திற் குக்கொண்டு வரப்பட்ட நாளன்று அவை பதிவு செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டன என்று ஆணித்தரமாக அவர் சொன்னர். அதே நாளில் அப் பத்திரங்கள் பதிவாளர் அலுவலகத்தி னுல் திருப்பி அனுப்பப்படவில்லை என்றும் அவர் இது குறித்து கூறியது அனைத்தும் பொய் என்றும் அவரிடம் கூறப்பட்டது. ஆனுல் சாட்சி இக் கருத்தை மறுத்தார். பத்திரங்கள் பதிவு செய்யப் படுவதற்காக, பதிவு அலுவலகத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிறகு, அவர் அந்த அலுவலகத்திற்குச் செல்லவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். சாட்சி யிடம் பின்வருமாறு கேள்வி கேட்கப்பட்டது:—

''எஸ். டி. ஆதித்யன் தம்மிடம் இருந்த பத்தி ரங்கள் குறித்த பட்டியல் ஒன்றைத் தயாரிக்க வேண்டுமென்று உன்னைக் கேட்டுக்கொண்டதாக நீங்கள் சொன்னீர்கள். இப் பத்திரங்கள் எஸ். டி. ஆதித்யனிடம் கொடுக்கப்பட்ட பிறகு அவை நிலங்களை வாங்கியவர்களுக்கு அனுப்பப்பட வில்லையா? இது உங்களுக்குத் தெரியாதா?''

சாட்சி அளித்த பதில்:—

''எனக்குத் தெரியாது. அவற்றைப் பெற்றுக் கொண்ட பிறகு, அவற்றை நிலங்களை வாங்கிய வர்களுக்கு அனுப்பிவிட்டாரா என்று எனக்குத் தெரியாது.''

கிரயத் தொகையின் பாக்கித் தொகை பின்னர் அந்நிலங்களை வாங்கியவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று கருத்து தெரி விக்கப்பட்ட போது தனக்குத் தெரியாது என்று

சாட்சி சொன்னர். விற்பனை முடிந்த பிறகு, நிலத்தை வாங்கியவர்கள் எவரையுமே தான் பார்க்கவில்லை என்று அவர் ஒப்புக் கொண்டார். உத்தரபாண்டியன், கணேச நாடாரின் முதல் மனைவியின் மகனே மணந்து கொண்டது தனக்குத் தெரியாது என்று சாட்சி சொன்னர். கணேச நாடாரது முதல் மனைவி இறந்து விட்டதும் அவர் மீண்டும் மணந்து கொண்டதும் தனக்குத் தெரியாது என்று அவர் சொன்னர். நிலங்களை வாங்கியவர்களிடமிருந்து திரு எஸ். டி. ஆதித்யன் தொகை வசூல் செய்து, முத்திரைத்தாள்கள் வாங்குவதற்காக அத் தொகையைச் சாட்சியிடம் கொடுத்திருக்கலாம் என்றும், அது அவருக்குத் தெரியாமல் இருக்கலாம் என்றும் சாட்சியிடம் சொல்லப்பட்டது. அப்படியில்லே என்றும் எஸ். டி. ஆதித்யன் தன் கையிலிருந்து பணம் கொடுத்தார் என்றும் சாட்சி சொன்னர். இந்தப் பத்திரங்களே எழுதுமாறு எஸ். டி. ஆதித்யன் முதலில் சாட்சியைக் கேட்டுக் கொண்டபிறகு இரண்டு நாட்களுக்குள் அவரிடம் தொகை கொடுத்து விட்டபடியால் நிலங்களே வாங்கியவர்களிடமிருந்து தொகையை வசூலிப்பதற்கு அவருக்கு நேரம் இருந்திருக்காது என்று அவர் சொன்னர். எஸ். டி. ஆதித்யன் பின்னர் அவர்களிடமிருந்து தொகை வசூலித்தாரா என்பது தவக்குத் தெரியாது என்று சாட்சி கூறினர். அந்த நிலங்கள் ஆதித்தனர் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்தவை என்றும் உச்சவரம்பு மசோதாவில் வரையறுக்கப்பட்ட உச்சவரம்பிலிருந்து விலக்குப் பெற்றவை என்றும் சாட்சி ஒப்புக் கொண்டார். இந்த நிலங்கள் விற்பனை செய்யப்பட்ட தற்கும் நிலப்பறி இயக்கத்திற்கும் தொடர்புண்டா என்று அவரிடம் கேட்கப்பட்டது. "நிலப்பறி இயக்கத்தின் காரணமாக அந்த நிலங்கள் பல்வேறு நபர்களுக்கு விற்கப்பட்டது போன்று பத்திரங்கள் எழுதுமாறு திரு. எஸ். டி. ஆதித்யன் என்னைக் கேட்டுக் கொண்டார்." அந்த நிலங்களுக்குத் தன்னே எஸ். டி. ஆதித்யன் அழைத்துச் சென்றதாகவும் அவை பின்னர் நில அளவை செய்யப்பட்டதாகவும் எல்லைகள் சரிபார்க்கப்பட்டதாகவும் அவர் கூறினர். ஆயினும், தன் முன்னிலையில் எல்லைகள் குறிப்பிடப்பட்டன என்பதை அவர் மறுத்தார். சிறிது தயங்கியபிறகு, கிராம கர்ணம் அந்த இடத்திற்கு வந்து தன் முன்னிலையில் எல்லைகள் குறிப்பிட்டார் என்று சாட்சி ஒப்புக் கொண்டார். நிலங்கள் அளவை செய்யப்பட்டது, விற்பனைப் பத்திரங்கள் எழுதுவதற்கு முன்னர் நடைபெற்றது என்று சாட்சி விளக்கம் கூறினர். விற்பனைப்பத்திரம் ஒவ்வொன்றுடனும் விற்கப்பட்ட நிலத்தின் படம் ஒன்று இணைக்கப்பட்டது. இவ் வரைபடங்களே திரு எஸ்.டி. ஆதித்யன் சாட்சிக்குக் கொடுத்தார். நிலங்கள் அளவை செய்யப்பட்டபோது 5 அல்லது 6 பேர் அந்த இடத்தில் இருந்ததாகச் சாட்சி ஒப்புக் கொண்டார். உடையார் பிள்ளையின் சாட்சியத்தைத் திரு. இராமசாமி தவறு என்று சொன்னர்.

சாட்சி காவலில் வைக்கப்பட்டு காவல் துறை டெபுடி சூப்பிரண்டு முத்தையா தாஸ் முன்பு குறிப்பிட்டதொருவாக்குமூலத்தை அளிக்குமாறு வற்புறுத்தப்பட்டார் என்றும் அதன்பின்னர் 5 A பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணே அதிகாரி முன்பு அதே வாக்குமூலத்தைத் திரும்பச் சொல்லுமாறு அவர் கட்டாயப்படுத்தப்பட்டார் என்றும் திரு. பி.இராமசாமி கூறினர். காவல்துறை டெபுடி சூப்பிரண்டாள திரு. டி. கங்காதரன் சப் இன்ஸ்பெக்டர் நாராயணனுக்கு எழுதியதாகச் சொல்லப்படும் 26—4—1977 நாளிட்ட கடிதம் இதற்குச் சான்றுகாட்டப்பட்டது. கடிதத்தின் வாசகம் வருமாறு :

" சர்க்காரியா விசாரணேக் கமிஷன் அனுப்பியுள்ள 2 தொகுதி அழைப்பாணேகளேக் காவலர் அங்குயுத்து 5361 மூலம் அனுப்பியுள்ளேன். இதில் ஒர் அழைப்பாணே திரு. முருகனுக்கும் மற்றேர் அழைப்பாணே கிருஷ்ணகாந்தனுக்கும் அனுப்பப்படவேண்டும். அவர்கள் ஊட்டியில் சர்க்காரியா விசாரணேக்கமிஷன் முன்னிலையில் 17, 18—5—1977 நாட்களில் சாட்சியம் அளிக்க வேண்டும். இந்த நபர்கள் அழைப்பாணேகளே வாங்கிக் கொள்ளாமல் தப்பு முயற்சி செய்யலாம். அவை அந்த நபர்களிடம் சேர்ப்பிக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ளவும் அவர்களின் ஒப்பம் பெற்ற படிகளே கமிஷனுக்கு அனுப்பவும்.

திரு. உடையார் பிள்ளே 12—5—1977 அன்று ஊட்டியில் விசாரிக்கப்பட விருக்கிறர். எனவே, திரு. உடையார் பிள்ளையுடன் உங்கள் ஊரிலிருந்து 9-ம் தேதி காலே புறப்பட்டு, அன்றிரவு மதுரையில் இராமேசுவரம் — கோயம்புத்தூர் எக்ஸ் பிரஸ் வண்டியைப் பிடித்து 10—5—1977 அன்று பிற்பகல் மேட்டுப் பாளையம் — ஊட்டி வண்டிக்கு மாறவும், நானும் டெபுடி சூப்பிரண்டு முத்தையாவும் நீங்களே பயணம் செய்யும் வண்டியிலேயே கோயம்புத்தூரில் ஏறி ஊட்டிக்கு வருகிறோம்.

இந்த மாதம் 29-ம் தேதி வரையில் பகல் வேளையில் எந் நேரத்திலும் தலேமைச் செயலகத்தில் (570)என்ற தொலேபேசி எண்ணில் தொடர்பு கொண்டு மேற்கொண்டும் விளக்கம் பெறலாம். "

இந்த வாதத்தில் சாரம் இருப்பதாக எனக்குப் படவில்லே. இந்தவாதம் எதிர்மனுதாரரைப் பாதிப்பதாகவே உள்ளது. முதலாவதாக, விசாரணேக் கமிஷனுக்கு உதவுவதற்காக, 5-A பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணே அதிகாரிகளில் ஒருவரான காவல் துறை அதிகாரி ஒருவரால் அந்த ரங்கமாக எழுதப்பட்ட கடிதம் இது. இக் கடிதத்தின் மூலத்தை எங்கிருந்து எப்படிப் பெற்றர் என்பதற்கு எதிர்மனுதாரர் பதில்சொல்லி

யாக வேண்டும். ஆயினும் இது, காவல் துறை யால், துறை அளவில் செய்யப்படவேண்டிய விசாரணையாகும். இந்த ஆவணமும் ஐயப்படத் தக்க எச் சூழ்நிலைகளில் பெறப்பட்டு விசாரணைக் கமிஷனிடம் கொண்டு வந்து கொடுக் கப்பட்டதோ அச் சூழ்நிலைகளும், சாட்சி உடையார் பிள்ளை 7—9—76 அன்று விசாரணைக் கமிஷனுக்கு எழுதிய கடிதமும் (Ex.C.W. 39/141) ஒருங்கிணைந்து எடுத்துக் கொள்ளப்பட்டால், சாட்சிகளைக் கலைக்க திரு. சி. பா. ஆதித்தனார் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண் டார் என்ற முடிவுக்கு வராமல் இருக்க முடியாது. 7—9—76 நாளிட்ட இக் கடிதத்தின் ஆங்கில மொழியாக்கத்தின் கருத்து பின்வருமாறு உள்ளது.

தமிழ் நாட்டின் முன்னாள் அமைச்சராகிய திரு. சி. பா. ஆதித்தனார் மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டு குறித்து காவல் துறையினரால் நான் சாட்சி யாக விசாரிக்கப்பட்டேன். உறுதிமொழி ஒன்றையும் விசாரணைக்கமிஷனுக்குப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி உள்ளேன். சர்க்காரியா கமிஷனின் துணை டெபுடி சூப்ரெண்டினுல் 15—8—1976 அன்று சென்னையில் நான் விசாரிக்கப்பட்டேன். எழுத்து மூலமான வாக்குமூலம் ஒன்றை அவர் முன்பும் நான் கொடுத்துள்ளேன். பேட்டையில் உள்ள திரு. கே. எஸ். மணி இது பற்றி தெரிந்து கொண்டு நான் பத்திரிகை எழுத்தராகப் பணியாற்றும் என் அலுவலகத்திற்கு சுமார் 15 நாட்களுக்கு முன்னர் வந்து என்னைச் சந்தித்தார். நான் வாக்கு மூலம் கொடுத்தது பற்றி என்னை விசாரித்தார். உண்மையைத்தான் எழுதிக் கொடுத்திருக்கிறேன் என்று நான் சொன்னேன். அவருக்குக் கோபம் வந்து விட்டது. முன்னாள் அமைச்சர் மீது எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்தது ஏன் என்று வெகுண்டு கேட்டார். முன்னாள் அமைச்சர் குடும்பத்தினர்களால் நடத்தப்படும் சன் பேப்பர் மில்ஸ் என்னும் ஆலைக்கு திரு. கே. எஸ். மணி பழைய காகிதம் அனுப்பி வருகிறார். தொடக்க காலத்தில் சன் பேப்பர் மில்லில் அவர் பணி செய்தார். அவர் முன்னாள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர்.

நான் கொக்கிர குளத்தில் வசிக்க வந்துள்ளேன். இந்த ஊருக்கு நான் புதியவன். என்னையும் என் குடும்பத்தினர்களையும் பாதுகாக்குமாறு காவல் துறையினரைக் கேட்டுக் கொள்ளு கிறேன்''.

இந்த வேண்டுகோளின் காரணமாகத்தான் சாட்சி 12—5—1977 அன்று விசாரணைக்கமிஷன் முன் சாட்சியம் அளிக்க ஊட்டிக்குச் செல்கையில் அவருடன் செல்லுமாறு சப்-இன்ஸ்பெக்டருக்கு விசாரணைக் கமிஷனின் புலனுய்வு அதிகாரியும், காவல் துறை டெபுடி சூப்ரெண்டுமாகிய திரு. டி. கங்காதரன் கடிதம் எழுதினர். இவ்வாறுக, திரு. சி. பா. ஆதித்தனருக்கு மிகவும் நெருங்கிய வர்கள் சாட்சியை அச்சுறுத்தவும், சாட்சிகளுக் குத் தெரிந்த உண்மையை விசாரணைக் கமிஷன் முன் தெரிவிக்க இயலாத வகையில் அவர்களைத் தடுக்கவும் முயன்று வந்துள்ளனர் என்பது வெளிப்படையாகும். 29—6—1976 நாளிட்ட மற்றொரு கடிதம் (Ex.C.W. 39/9) 12—5—1977ல் திரு. ஜி. இராமசாமியால் குறுக்கு விசாரணை செய்யப்படும் போது சாட்சிக்குக் காண்பிக்கப் பட்டது. இக் கடிதத்தின் ஆங்கில மொழியாக் கருத்தின் கருத்து வருமாறு :

''தாதன்குளம் சங்கத்தைப் பொறுத்த வரையில், இரகசிய போலீஸ் டெபுடி சூப்பிரண் டாயி திரு. முத்தைய தாஸ் கடந்த ஒரு வார காலமாக எனக்கு ஆட்கள் மூலமாகச் சொல்லி அனுப்பிக் கொண்டிருக்கிறார். சென்ற ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணி அளவில் நான் என்.ஜி.ஓ காலனியில் A-92 எண்ணுள்ள வீட்டுக்குச் சென் றேன். பத்திரங்கள் எழுதிய பற்றிய விவரங் களை என்னிடம் கேட்டார். நடந்ததற்கு மாறுன விஷயங்களைச் சொல்லுமாறு அவர் என்னைக் கட் டாயப் படுத்தினார். குறிப்பாகப் பத்திரப் பதிவு இரவு நடந்ததாக சொல்லுமாறு கூறி னார். மேலும் நான் எழுதியது போலவே இருக்க வேண்டும் என்பதற்காக சான்றுரிதி அலுவலர் திரு. பி.ஜி. வெங்கடா சலம் முன்பாக உறுதி மொழி யொன்றை எழுதுமாறு அல்லது மாஜிஸ்டிரேட் முன் வாக்கு மூலம் ஒன்றில் கையெழுத்திடுமாறு அவர் கூறு கிறார். இந்தக் காரியத்திற்காக முழு விவரங் களுடன் காவலர் ஒருவரை என்னுடன் அனுப்பு வதாக அவர் கூறுகிறார். அவருடைய கட்டா யத்தை என்னல் மறுக்க முடியவில்லை''.

இக் கடிதம் குறித்து சாட்சியைக்குறுக்கு விசா ரணை செய்ய திரு. எம்.சி. நந்தா விசாரணைக் கமிஷனின் அனுமதி பெற்று சாட்சியைச் சில கேள்விகள் கேட்டார். வழக்குரைஞராகிய திரு. எஸ். டி. ஆதித்யவிடம் தாம் ஏழு ஆண்டுகள் எழுத்தராகப் பணி புரிந்திருப்பதாகவும், அதன் பின்னர் அவரது குடும்பத்திற்காக எழுத் திருப்பதாகவும் பல்வேறு பத்திரங்களையும், அவ ணங்களையும் தாம் எழுதியுள்ளதாகவும், பல்லாண் டுகளாகத் தனக்கு வாழ வழி காட்டியதற்காக அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தாம் மிகவும் கடமைப் பட்டிருப்பதாகவும் சாட்சி விளக் கம் அளித்தார். இக் கடிதத்தை (Ex.C.W. 39/9) உத்தரபாண்டியன் சொன்னதன் பேரில் தான் எழுதியதாகவும், கடிதத்தில் கண்டுள்ள விஷயங்கள் உண்மையல்ல, சரியல்ல என்றும் அவர் சொன்னர்.

கடிதம் எழுதப்பெற்றவர் சாட்சியின் இல்லத் திலிருந்து 1½ மைல் தொலைவில்தான் வசித்து வந்தார். எனவே, இக் கடிதத்தைச் சாதாண

மாகச் சாட்சி எழுதியிருக்க முடியாது. உத்தர பாண்டியன் வழக்குரைஞர் திரு. எஸ். டி. ஆதித்தனிடம் இளநிலை வழக்குரைஞராகப் பணியுரிந்துள்ளார். எனவே, இக் கடிதத்தைச் சாட்சி எழுத வேண்டிய அவசியமில்லை. அவர் சுலபமாக இந்த விஷயத்தை வாய்மொழியாகச் சொல்லியிருக்கலாம். திரு.G.இராமசாமி சாட்சியை மேலும் குறுக்கு விசாரணை செய்தார். அப்போது 5-A பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரியாகிய திரு. கங்காதரனுல் 15–8–1976 அன்று விசாரணை செய்யப்பட்டிருக்க, அக் கடிதம் அவரால் 29-6-1976 அன்று எழுதப்பட்டதாகவும் அவர் சொன்னர். உத்தரபாண்டியன் சொல்ல 29–6–1976 அன்று இக் கடிதத்தை S. T. ஆதித்தனுக்குத் தாம் ஏன் எழுதினர் என்பதைத் திரு. கங்காதரன் முன்பாக அளித்த வாக்குமூலத்தில் அவர் சொல்லவில்லை.

7–9–1976 நாளிட்ட கடிதம் (Ex.C.W. 39/140 சாட்சியால் சுயமாக எழுதப்பட்ட கடிதம் அல்ல என்றும் ஆனல், காவல் அலுவலினர் வற்புறுத்தியதன் பேரில் எழுதப்பட்டது என்றும் காண்பிக்க திரு. G. இராமசாமி குறுக்கு விசாரணையில் முயன்றார். சாதாரணமாக தாம் தமது கைப்படவே தமிழில் கடிதங்கள் எழுதுவது) வழக்கம் என்றும், ஆனல் அந்த நாளில் தனக்கு உடல் நலமில்லை யென்றும், எனவே அக் கடிதத்தைத் திரு. சுப்பிரமணியம் என்பவருக்குச் சொல்ல, அவர் அதை எழுதினர் என்றும், அக் கடிதத்தைத் தட்டச்சு செயலிக்குமாறு அவரைக் கேட்டுக்கொண்டார் என்றும் சொன்னர். சுப்பிர மணியமும் அவ்வாறே செய்தார். தட்டச்சு செய்யப்பட்ட கடிதத்தில் சாட்சி கையெழுத்து இட்டார். ஈவிரக்கமின்றிக் குறுக்கு விசாரணை செய்யப் பட்ட போதிலும், மணி அல்லது அவரது நண்பர்கள் மூலமாகத் தனக்கு ஆபத்து நேரிடலாம் என்று அஞ்சியதாகச் சொன்ன தனது வாக்கு மூலத்திலிருந்து அவர் பிறழவில்லை.

திரு. எஸ். டி. ஆதித்தனுக்கு மிகவும் நெருங் கியவராக இருந்த இந்த சாட்சியைக் கலைக்க முயற்சிகள் செய்யப்பட்டன என்பது மேற் குறிப்பிட்ட விவரங்களில் இருந்து தெரியவரும். 29–6–1976 நாளிட்டகடிதத்தை (Ex.W39/9) எழுதிய நிலை மிகவும் பரிதாபகரமாகும். எதிர் மனு தாரருக்குச் சாதகமாகச் சாட்சியம் அளிக்கு மாறு அவர் தூண்டப்பட்டு அவ்வாறே சாட்சியமளித்தார். சாட்சிக்கூண்டில் நிற்கை யில், சாட்சி தனது முந்திய வாக்குமூலங்களைத் தாமாகவே முன் வந்து கொடுத்ததாகவும், கட்டா யத்தின் பேரில் கொடுக்கவில்லை யென்றும் உறுதி யாகவும் மீண்டும் மீண்டும் சொன்னர். மேலும், (a), (b), (d), (e), (f), (g), (j) ஆகிய சூழ்நிலைகளைப் பொறுத்தவரையில் அவரது வாக்குமூலம், விற்பனைப் பத்திரத்திலும் அதன்மீது உதவிப் பதிவாளர் எழுதியுள்ள மேற்குறிப்பின் மூலமும் பதிவுப்பத்திரங்களிலும் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. மேலும், அவரது வாக்குமூலம் குறுக்கு விசாரணையில் மாற்ற முடியாதவாறு அமைந்துள்ளது. அன்றியும், 25, 26, 27, 28, 29 ஆகிய சாட்சிகளின் வாக்கு மூலங்களும், மேற் படி சாட்சியின் வாக்குமூலத்தை உறுதிப்படுத்து கின்றன. தாங்கள் விற்பனைப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களை வாங்கவில்லை யென்று அந்தச்சாட்சிகள் மறுத்துள்ளனர். தனக்கும் சங்கும் அமைக்கப்பட்டதற்கும், அல்லது நிலம் வாங்கப்பட்டதற்கும் தொடர்பு ஏதும் இல்லை என்று முருகன் மனைவி சற்குணதேவியும் கூறியுள்ளார்.

(l) சந்தர்ப்பம், கிராமக் கர்ணத்தின் தனிப் பட்ட சாட்சியத்தைக் கொண்டு ஊர்ஜிதப் படுத்தப்பட்டுள்ளது.

(m) சந்தர்ப்ப சூழ்நிலை, கிராமக் கர்ணத்தின் சாட்சியத்தினுல் மட்டுமன்றி, ரெவின்யூ பதிவுக் கூட்டங்களினுலும் தெளிவாகப் புலப்படுத்தப்பட் டுள்ளது.

(n) சந்தர்ப்ப சூழ்நிலை, அப்போது அமைச்சராக இருந்த திரு. சி. பா. ஆதித்தனரின் பயணப்படி பட்டிகளிலிருந்து தெரியவரும்.

மேலே அட்டவணையிட்டுள்ள சந்தர்ப்ப சூழ் நிலைகளை, மொத்தத்தில் எடுத்துக் கொண்டு பார்ப்போமாகில், இந்த விற்பனைகள் யாவும் போலியாக அல்லது பெயருக்குச் செய்யப்பட்ட பேரங்கள் என்ற நியாயமான சந்தேகத்தை எழுப்பு வனவாகவும், இந்த நிலங்கள் யாவும், ஆதித்த னர் கல்வி நிறுவன ஆட்சிக் குழு உறுப்பினர்களின் பொறுப்பிலும் அனுபோகத்திலும் தொடர்ந்து இருந்து வந்துள்ளன என்றும் தெரியவருகின்றன.

இந்த நிலங்களை வாங்கியவர்களில் பெரும் பாலோர், திரு. சி. பா. ஆதித்தனரின் உறவினர் களாகவோ அவரது சகோதரர்களாகவோ 'சன் பேப்பர் மில்ஸ்', "தினத் தந்தி (Daily Telegraph)"'s "மாலே முரசு" (Evening Drum) நிறுவனங்களின் பணி யாளர்களாகவோ இருக்கின்றனர் என்கிற நிலை யிலிருந்து மேற்சொன்ன அனுமானம் மேலும் உறுதிப்படுகிறது. இந்த நிறுவனங்களின் அலு வலகங்கள் சென்னை, கோயம்புத்தூர், வேலூர், திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளன. சன் பேப்பர் மில்ஸ் தொழிற்சாலை, திருநெல்வேலி மாவட்டம், அரியநாயகிபுரத்தில் உள்ளது.

திரு. ஆதித்தனரின் குடும்பத்தினர் இந்த நிறு வனங்கள் அனைத்தின் முழுப் பொறுப்பும் பெற்றிருந்தனர் என்று திரு. வானமாமலை கூறுகி ருர். ஆனல், திரு. ஜி. ராமசாமி, சன் பேப்பர் மில்ஸ் நிறுவனம் கூட்டு வாணிப நிறுவனம் என் றும், ஏனைய இரு நிறுவனங்களும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள்

என்றும், திரு. சி. பா. ஆதித்தனார், இந்த நிறுவனங்களின் நிர்வாகக் குழு எதிலும் இல்லை என்றும் கூறியிரு்தார். இந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றையும் ஒட்டி, இந்தச் கூற்றினை நாம் ஆராய்வோம்.

I. ''தினத் தந்தி''

(77 ஆம் எண் ஆவணத்தைக் காண்க.)

நாள்தோறும் வெளிவரும் இந்த செய்தித்தாள் மயிலாப்பூர், உதவிப் பதிவாளரது அலுவலகத்தில் 1—3—1954 அன்று பொறுப்புக் கழகமாகப் பதிவு செய்யப்பட்டது.

பொறுப்புக் கழகப் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள முதல் (தொடக்க நிலை) பொறுப்பாளர்கள் (டிரஸ்டிகள்) பின்வருமாறு :—

1. திரு. எஸ்.பி. ஆதித்யன் (ஸ்தாபகர்)–எதிர் மனுதாரர்.

2. திரு. எஸ். டி. ஆதித்யன் (1 ஆம் எண்ணில் குறிப்பிட்டுள்ளவரின் சகோதரர்).

3. திரு.பி. ஆர். ஆதித்யன் (1ஆம் எண்ணில் குறிப்பிட்டுள்ளவரின் குமாரர்).

பொறுப்புக் கழகப் பத்திரத்தின் (ஆவணம் எண் 77) 3 (a) (c) (d) (j) பிரிவில் சொல்லியபடி, ஸ்தாபகர் சி. பா. ஆதித்யன், ''தினத்தந்தி'' மீது முழுப் பொறுப்பு கொண்டவராக உள்ளார்.

முதல் டிரஸ்டிகள், திரு. எஸ். பி. ஆதித்யனை ''தினத்தந்தி'' இயக்குநராக நியமித்துள்ளது பற்றி 3 (c) பிரிவு விவரிக்கிறது.

3 (d) பிரிவு வகை செய்துள்ளதாவது :—

''ஸ்தாபகர், முதல் டிரஸ்டி அல்லது டிரஸ்டிகளுக்குக் கூடுதலாக அல்லது பதிலாக டிரஸ்டிகளாக எந்த நபரையாகிலும், உயிரோடு இருப்பவர்களிடையே இருந்து அல்லது உயில் எழுதி வைத்து அதன் மூலமாகத் தற்காலிகமாக நியமிக்கலாம். ஸ்தாபகரின் வாழ்நாள் முடிந்த பிறகு, உயிரோடுள்ள டிரஸ்டிகளும், தாற்காலிகமாக உள்ள டிரஸ்டிகளும் தங்களுக்குக் கூடுதலாக, டிரஸ்டி அல்லது டிரஸ்டிகளாக இருக்கும்படி எந்த நபரையும் நியமிக்கலாம். அத்தகைய கூடுதல் டிரஸ்டிகள் நியமிக்கப்படும்போதெல்லாம், டிரஸ்டிகள் அல்லது கூடுதல் டிரஸ்டிகளை நீதிமன்றம் நியமிக்க வேண்டியுள்ள போதெல்லாம், ஸ்தாபகரின் வாரிசை அல்லது வழித்தோன்றல்களை ஏஜெண்யோருக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கலாம் என்பது ஸ்தாபகரது விருப்பமாகும்''.

II. ''நெல்லை முரசு''.

(இது திருநெல்வேலி ''மாலைமுரசாக'' நடைபெறுகிறது—78 ஆம் எண் ஆவணத்தைக் காண்க.)

இது பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாக 4—8—1959-ல் பதிவு செய்யப்பட்டது. இதை நிறுவியவர்களும் முதல் இயக்குநர்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:—

1. பி. எஸ். ஆதித்யன் (எஸ்.பி. ஆதித்யன் மகன்).

2. எஸ்.டி. ஆதித்யன் (எஸ்.பி. ஆதித்யனின் சகோதரர்).

3. கே.பி. கந்தசாமி (சி. பா. ஆதித்யனின் மருமகன்).

30—12—1971-ல் இந்த நிறுவனத்தின் இயக்குநர்களாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் இருந்தனர் என்பது மேலும் வெளிப்படையாகும் :—

1. பி. எஸ். ஆதித்யன் (சி. பா. ஆதித்யன் மகன்).

2. கே. பி. கந்தசாமி (சி. பா. ஆதித்யனின் மருமகன்).

3. திருமதி எஸ். அமுதா (எஸ். பி. ஆதித்யன் மருமகள்).

III. ''சென்னை முரசு''

(இதை ''மாலை முரசு'' நடத்துகிறது.)

இது சம்பந்தப்பட்ட தகவலை, 79-ஆம் எண் ஆவணத்திலும் புலனுய்வு அறிக்கை தொகுதி II-லும் காணலாம். இது பொறுப்புவரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாக 2—12—1960-ல் பதிவு செய்யப்பட்டிருப்பதை இந்த ஆவணம் காட்டுகிறது. இந்த நிறுவனத்தை நிறுவியவர்கள் வருமாறு :—

1. பி. ஆர். ஆதித்யன் (சி. பா. ஆதித்யனின் மகன்).

2. எஸ். டி. ஆதித்யன் (சி. பா. ஆதித்யனின் சகோதரர்).

3. ஆர். பங்கஜம் (சி. பா. ஆதித்யனின் மருமகள்).

இதன் முதல் இயக்குநர்கள் வருமாறு :—

1. பி. ஆர். ஆதித்யன் (சி. பா. ஆதித்யனின் மகன்).

2. ஆர். பங்கஜம் (சி. பா. ஆதித்யனின் மருமகள்).

IV. ''வேலூர் முரசு''

(இதை ''மாலை முரசு'' நடத்துகிறது.)

இது பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாக 21—10—1963-ல் பதிவு செய்யப்பட்டிருப்பதை ஆவணம் எண் 80, புலனுய்வு

அறிக்கை தொகுதி II காட்டுகிறது. இதன் முதல் இயக்குநர்களும் 30—6—1970-லிருந்த இயக்குநர்களும் வருமாறு :—

1. கே. பி. கந்தசாமி (எஸ். பி. ஆதித்யனின் மருமகன்).

2. கே. சரஸ்வதி (எஸ்.பி.ஆதித்யனின் மகள், 1 ஆம் எண்ணில் குறிப்பிட்டுள்ளவரின் மனைவி).

V. '' கோவை முரசு ''.

(இதைக் கோயம்புத்தூர் '' மாலை முரசு '' நடத்துவது). ஆவணம் எண் 81-ஐக் காண்க.

இது பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாக 26—2—1960-ல் பதிவு செய்யப்பட்டது. இதை நிறுவியவர்களும் உதவி இயக்குநர்களும் வருமாறு :—

1. ஏ. வேங்கடாசலம்.

2. கே. பி. கந்தசாமி (எஸ்.பி. ஆதித்யனின் மருமகன்).

31—12—1971-ல் இருந்த இயக்குநர்கள் வருமாறு :—

1. கே. பி. கந்தசாமி, (எஸ்.பி. ஆதித்யனின் மருமகன்).

2. திருமதி கே. சரஸ்வதி, (எஸ்.பி. ஆதித்யனின் மகள்).

VI '' ராணி பிரின்டர்ஸ் ''.

(ஆவணம் எண். 82ஐக் காண்க).

இது பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 17—9—1970-ல் பதிவு செய்யப்பட்டது. இதன் முதல் இயக்குநர்கள் வருமாறு :—

1. திருமதி சி. காளியம்மா (எஸ்.பி. ஆதித்யனின் உறவினர்).

2. ஆர். பால்வண்ணன் (எஸ். பி. ஆதித்யனின் உறவினர்).

3-2-1975-ல் இருந்த இயக்குநர்கள் வருமாறு—

1. டி. ஆர். பிம்சிங் (சென்னை '' தினத்தந்தி'' யின் பணியாளர்).

2. டி. சந்திரன்

3. ஆர். பால்வண்ணன் (இயக்குநர் பதவி அற்றுப்போயிற்று) (எஸ். பி. ஆதித்யனின் உறவினர்).

VII. '' சன் பேப்பர் மீல்ஸ் லிமிட்டெட் ''

(ஆவணம் எண். 83ஐக் காண்க). புலனுய்வு அறிக்கை, தொகுதி II.

இது கூட்டு வாணிப நிறுவனமாக 1961-ல் பதிவு செய்யப்பட்டது. இதை நிறுவியவர்கள் வருமாறு:—

1. எஸ்.டி. ஆதித்யன், (எஸ்.பி. ஆதித்யனின் சகோதரர்).

2. பி.எஸ். ஆதித்யன் (எஸ்.பி. ஆதித்யனின் மகன்).

3. கே. எஸ். நாராயணன்.

4. பி.ஆர். ஆதித்யன் (எஸ்.பி. ஆதித்யனின் மகன்).

5. ஆர். பால்வண்ணன் (எஸ்.பி.ஆதித்யனின் உறவினர்).

6. எஸ். பார்வதிநாதன்.

7. ஆர். இராமகிருஷ்ண மூர்த்தி.

30-6-1973-ல் இருந்த இயக்குநர்கள் வருமாறு:

1. எஸ்.டி. ஆதித்யன் (எஸ்.பி. ஆதித்யனின் சகோதரர்).

2. பி.எஸ். ஆதித்யன் (எஸ்.பி. ஆதித்யனின் மகன்).

3. கே. எஸ். நாராயணன்.

4. சி. பி. துரைக்கண்ணு.

30-6-1971-ல் இருந்த இயக்குநர்கள் வருமாறு:—

1. கே.பி. கந்தசாமி (எஸ்.பி. ஆதித்யனின் மருமகன்).

2. எஸ்.டி. ஆதித்தன் (எஸ்.பி. ஆதித்யனின் சகோதரர்).

3. பி.எஸ். ஆதித்தன் (எஸ்.பி. ஆதித்யனின் மகன்).

4. கே.எஸ். நாராயணன்.

VIII. எஜ்கேஷனல் டிர்ஸ்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட் (ஆவணம் எண். 84 ஐக் காண்க).

இது பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாக 8—8—1958-ல் பதிவு செய்யப்பட்டது. 1959-லிருந்து இந்த நிறுவனம் ''தினத்தந்தி'' டிரஸ்டைச்சேர்ந்த டிரஸ்டுகளில் ஒன்றும். இதன் நிறுவனர்களும் முதல் இயக்குநர்களும் வருமாறு :—

1. எஸ்.பி. ஆதித்யன் (எதிர் மனுதாரர்).

2. எஸ்.டி. ஆதித்யன் (1-ம் எண்ணில் குறிப்பிட்டுள்ளவரின் சகோதரர்).

3. பி.ஆர். ஆதித்யன் (1-ம் எண்ணில் குறிப்பிட்டுள்ளவரின் மகன்).

4. பி. இராமரத்தினம்.

5. கோவிந்தம்மாள் (1-ம் எண்ணில் குறிப்பிட்டுள்ளவரின் மனைவி).

29—10—1972-ல் இருந்த இயக்குநர்கள் வருமாறு :—

1. பி.எஸ். ஆதித்யன் (எஸ்.பி. ஆதித்யனின் மகன்).

2. அமுதா ஆதித்யன் (எஸ்.பி. ஆதித்யனின் மருமகள்).

இந்த சங்கங்களின் உறுப்பினர்கள் திரு. சி.பா. ஆதித்தனரோடு கொண்டுள்ள உறவு முறை கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது :—

1. முருகன், தலைவர், மேல தாதன்குளம் சங்கம். — சி.பா. ஆதித்தன், தந்தையின் சகோதரரது பேரன்.

2. டி. நியாகராஜன், செயலாளர், மேல தாதன்குளம் சங்கம். — எஸ். டி. ஆதித்யனின் மைத்துனர்-எதிர்மனுதாரரின் சகோதரர்.

3. கணேசமார்த்தாண்டம், உறுப்பினர், மேல தாதன்குளம் சங்கம். — எஸ்.டி. ஆதித்தனின் உறவினர், சி.பா. ஆதித்யனின் சகோதரர்.

4. சற்குணதேவி, உறுப்பினர், மேல தாதன் குளம் சங்கம். — முருகனது மனைவி.

5. தவசிமுத்து, உறுப்பினர், மேல தாதன் குளம் சங்கம். — எஸ். பி. ஆதித்யனின் மகனுகிய பி. எஸ் ஆதித்யனின் மைத்துனர்.

6. டி. ஆர். பீம்சிங், உறுப்பினர், மேல தாதன் குளம் சங்கம், சேரகுளம் சங்கம்.
7. டி. ஆர். பாலகிருஷ்ணன், உறுப்பினர், மேல தாதன்குளம் சங்கம்.

5, 6 எண்களுடையவர்கள் சகோதரர்கள் ஆவர். டி. ஆர். பாலகிருஷ்ணன் முருகனது சகோதரியை மணந்துகொண்டுள்ளார். 5-ம் எண்ணில் குறிப்பிட்டுள்ளவர் சென்னை ''தினத்தந்தி'' பணியாளர் அதிகாரியாவார்.

8. ரதி தேவி, உறுப்பினர், மேல தாதன் குளம் சங்கம். — இவர் எஸ். பி. ஆதித்யனின் சகோதரராகிய எஸ்.டி. ஆதித்யனின் மகள்.

9. ஸ்வர்ணம் அம்மாள், உறுப்பினர், மேல தாதன்குளம் சங்கம் — எஸ் பி. ஆதித்யனின் சகோதரராகிய எஸ். டி. ஆதித்யவின் மனைவி.

10. ஆர். சுந்தரேசன், உறுப்பினர், கீழ தாதன் குளம் சங்கம்.
11. ஆர். பால்வண்ணன், உறுப்பினர், கீழ தாதன்குளம் சங்கம்.

9, 10, 11 எண்களுடையோர் எஸ். பி. ஆதித்யனுக்குச் சகோதரியும் சகோதரர்களும் ஆவர். ஆர். சுந்தரேசன் கோயம்புத்தூர் ''தினத்தந்தி'' பணியாளர் ஆவார்.

12. ஆர். கிருஷ்ணகாந்தன், தலைவர், கீழ தாதன்குளம் சங்கம். — ஆர். பால்வண்ணன் சென்னை ''தினத்தந்தி''யின் பணியாளர். ஆதித்தனர் கல்வி நிறுவன இயக்குநர். ராணி பிரின்டர்ஸ் இயக்குநர். சன் பேப்பர் மீல்ஸ் ஆதரவாளர். ஆர். கிருஷ்ணகாந்தன், திருநெல்வேலி ''தினத்தந்தி''யின் மேலாளர்.

13. டி. பாலசுப்பிரமணியம், உறுப்பினர், மேல தாதன்குளம் சங்கம். — எஸ். பி. ஆதித்யனின் சகோதரராகிய எஸ். டி. ஆதித்யனின் உறவினர்.

14. எஸ். லட்சுமணன், உறுப்பினர், மேல தாதன்குளம் சங்கம். — எஸ். பி. ஆதித்யனின் மகனுகிய பி.எஸ். ஆதித்யனின் மைத்துனர்.

ஏற்கெனவே கூறியபடி, உடையார் பிள்ளை, எதிர் மனுதாரராகிய சி.பா. ஆதித்தனரின் சகோதர ராகிய திரு. எஸ்.டி. ஆதித்யனுடன் நீண்டநாளாக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். சுமார் 7 ஆண்டுகளாகத் திரு. எஸ். டி. ஆதித்யனின் குமாஸ்தாவாக இருந்துகொண்டு அவருடைய சொந்த அலுவல்களைக் கவனித்து வந்தார். ஆகவே, மேலே சொல்லிய நான்கு இறைவைப் பாசனச் சங்க உறுப்பினர்கள், திரு. சி. பா. ஆதித் யனுடன் அல்லது அவரது நெருங்கிய உறவினர் களுடன் கொண்டுள்ள உறவு முறையைத் தவிப் பட்ட முறையில் இவர் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.

முருகன் (சாட்சி எண். 25) 5-A பிரிவின்படி 29-8-1976-ம் நாளிட்ட அவருடைய வாக்குமூலத் தில் திரு. சி. பா. ஆதித்தனருடன் தனக் குள்ள உறவு முறை மட்டுமல்லாமல் டி. தியாக ராஜன் சற்குணதேவி, ரதிதேவி, ஸ்வர்ணம் அம்மாள் ஆகியோரிடம் உள்ள உறவு முறையை யும் தெரிவித்துள்ளார். இவர் சற்குணதேவி தன்னுடைய மனைவி என்பதை ஒப்புக்கொண் டுள்ளார். கமிஷன் முன் தாக்கல் செய்த 1-7-1976 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்தில் இவர் சி.பா. ஆதித்தனருடன் தமக்குள்ள உறவு முறை பற்றிக் கூறுகிறார். மீண்டும் இவரது 9—2—1977 நாளிட்ட இரண்டாவது உறுதிமொழிப் பத்திரத்தில் 19—8—1976 நாளிட்ட அவரது வாக்குமூலத்தில் சொல்லியிருந்த உறவு முறைகளை இவர் மறுக்க வில்லை. இதற்கு முந்திய இவரது வாக்குமூலத் திலிருந்து நழுவிச் செல்ல முயன்ற போதிலும் அப்போது அமைச்சராக இருந்த திரு. சி. பா. ஆதித்தனரைப் பற்றி இவர் குறிப்பாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

5-A பிரிவின்படிக் குறித்துக்கொண்ட தனது வாக்குமூலத்தில் பால்வண்ணன் (புலஸ்வ அறிக்கையைச் சேர்ந்த கமிஷனது நகலின் 755-ம் பக்கத்தைக் காண்க) தெரிவித்துள்ளதாவது :

'' முன்னாள் அமைச்சர் திரு. ஆதித்தன் எனது தந்தை வழி உறவினராவார் . . . என் இனிய சகோதரர் திரு. னைகாந்தன் திருநெல்வேலியிலுள்ள தினத்தந்தி அலுவலகத் தில் மிகவும் மேலாளராவார் ''.

இருப்பினும், 1—1—1977 நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில் திரு சி.பா. ஆதித்த னரிடம் உள்ள உறவு முறையைப் பால்வண்ணன் மறுத்துள்ளார்.

எதிர்மனுதாரர் திரு. ஆதித்தனர் 23-7-1976, 9-9-1967, 9-10-1976, 15-11-1976 நாட்களிட்ட எதிர் உறுதிமொழிப் பத்திரங்களில் தன்னுடன் அல்லது தன்னுடைய சகோதரருடன் மேற் கொன்ன சங்கங்களின் உறுப்பினர்கள் கொண் டுள்ள உறவு முறையைப் பற்றி திட்டவட்டமாக மறுக்கவில்லை.

ஆயினும், திரு. சி. பா. ஆதித்தனர் தனது 31-1-1977 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்தில் டி. ஆர்.பீம்சிங்குடன் தனக்குள்ள உறவுமுறையை மறுத்துள்ளார். இந்த உறுதிமொழிப் பத்திரத் திலும் கூட இவரை உட்படுத்தி (எதிர்மனுதாரர்) முருகனிடமிருந்து திரு. கே. முத்தையா, டி.எஸ்.பி வாக்குமூலம் வாங்கியிருந்தார் என்று இவர் தெரி வித்துள்ளபோதிலும், முருகனிடம் உறவுமுறை இருந்ததாகச் சொல்லப்படுவதை இவர் மறுக்க வில்லை. ஆனால் டி. ஆர். பீம்சிங் தவமெழுத்தின் சகோதரர் என்பது மறுக்கப்படவில்லை. திரு. சி. பா. ஆதித்தனர் மகனின் மைத்துனர்தான் தவமெழுத்து என்பதும் மறுக்கப்படவில்லை. மேலும் மேற்சொன்ன விவர அட்டவணையில் 11, 12 எண் கள் எனக் காட்டப்பட்டுள்ள பால்வண்ணன், கிருஷ்ணகாந்தன் என்பவர்கள் சகோதரர்கள், என்பதும் கிருஷ்ணகாந்தன் திருநெல்வேலியி லுள்ள தினத்தந்தி அலுவலக மேலாளர் என்பது மான தகவலில் தகராறு ஏதும் இல்லை. திரு. ஆதித்தனருடன் டி. ஆர். பீம்சிங், பால்வண்ணன், கிருஷ்ணகாந்தன் ஆகியோருக்குள்ள உறவுமுறை குறித்து சிறிது ஐயப்பாடு இருக்கலாம் ; ஆனால், 1-லிருந்து 10-வரையில் எண்களுடைய உறுப்பி னர்கள் குறித்து அவர்கள் திரு. சி. பா. ஆதித்தன ருடன் நேரடியாகவோ மற்றப்படியோ உறவினர் என்பதை ஐயந்திரிபறக் கூறலாம்.

ஆதித்தனர் கல்வி நிறுவனத்தால் நிலங்கள் விற்பனைசெய்யப் பெற்றவரும், நான்கு இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களைத் தங்களிடையே அமைத்துக் கொண்டவர்களுமான 76 நபர்களும், மேற்சொன்ன நான்கு நிறுவனங்களில் பணியாளர்கள் ஆவர் என்றும், திரு. சி. பா. ஆதித்தனர் அல்லது அவருடைய நெருங்கிய உறவினர்கள் அந்த நிறுவனங்களின் மீது ஆதிக்கம் கொண்டவர்கள் என்றும், இந்த சாட்சியத்தில் சொல்லப்பட்டுள்ளது. கீழ்க்காணும் விவர அட்டவணை, இந்த நான்கு சங்கங்களின் உறுப்பினர்களையும், அவர்களது சொந்த ஊர்களையும் அவர்கள் பணியாற்றும் இடங்களையும் காட்டுகின்றன :—

கீழ் தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கம்.

	தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும்.	விற்பனைப் பத்திரத்தின்படி சொந்த ஊர்.	எங்கு பணியாற்றுகிறார் என்பது.
	(1)	(2)	(3)
1.	ஆர். கிருஷ்ணகாந்தன், தலைவர்.	சிந்து பூந்துறை, திருநெல்வேலி.	"தினத் தந்தி", திருநெல்வேலி.
2.	அருணாசலம் பிள்ளை, செயலாளர்.	சிந்து பூந்துறை, திருநெல்வேலி.	"தினத் தந்தி", திருநெல்வேலி.
3.	சடையாண்டி	திருநெல்வேலி சந்திப்பு ..	"மாலை முரசு", திருநெல்வேலி.
4.	மந்திரம்	திருநெல்வேலி சந்திப்பு ..	"மாலை முரசு", திருநெல்வேலி.
5.	என். கணேசன்	சிந்து பூந்துறை, திருநெல்வேலி.	"மாலை முரசு", திருநெல்வேலி.
6.	எஸ். செல்லதுரை ...	பாளையங்கோட்டை ..	"தினத் தந்தி", திருநெல்வேலி.
7.	பி. சப்பாணி	திருநெல்வேலி சந்திப்பு ..	"தினத் தந்தி", திருநெல்வேலி.
8.	எஸ். வேலு தேவர் ...	தாதன்குளம்	காவலாள், தாதன்குளம் பண்ணை.
9.	என். ஆறுமுகம்	சிந்து பூந்துறை, திருநெல்வேலி.	"தினத் தந்தி", திருநெல்வேலி.
10.	சுப்பிரமணியம்	காயாமொழி, திருநெல்வேலி மாவட்டம்.	"தினத் தந்தி", மதுரை.
11.	டி. என். சுயம்பு	காயாமொழி, திருநெல்வேலி மாவட்டம்.	"தினத் தந்தி", மதுரை.
12.	கே. இராமையா	காயாமொழி, திருநெல்வேலி மாவட்டம்.	"தினத் தந்தி", திருச்சி.
13.	தலவாணிமுத்து	தர்ம்புப்பட்டு, திருச்செந்தூர்.	"தினத் தந்தி", திருச்சி.
14.	குருசாமி	காயாமொழி ..	"மாலை முரசு", திருநெல்வேலி.
15.	டி. நாராயணன் ..	காயாமொழி	"தினத் தந்தி", மதுரை.
16.	சுந்தசாமி	காயாமொழி	"தினத் தந்தி"
17.	ஆதிக்கண்ணு	காயாமொழி	"தினத் தந்தி", திருநெல்வேலி.
18.	சிங்கமுத்து	காயாமொழி	"தினத் தந்தி", சென்னை.
19.	சிவலிங்கம்..	காயாமொழி	"தினத் தந்தி", மதுரை.
20.	மசனமுத்து	தாதன்குளம்	"தினத் தந்தி", சென்னை.
21.	சிவசங்கு	காயாமொழி	"தினத் தந்தி", மதுரை.
22.	ஆதிமுத்து	காயாமொழி	"மாலை முரசு", திருநெல்வேலி.
23.	ஜி. சுப்பிரமணியம் ..	காயாமொழி	"மாலை முரசு", வேலூர்.
24.	கே. சுப்பிரமணியம் ..	காயாமொழி	"மாலை முரசு", வேலூர்.
25.	சிவசுப்பிரமணியம் ..	காயாமொழி	"தினத் தந்தி", கோயம்புத்தூர்.
26.	ஆர். சுந்தரேசன்	வேலூர், வடஆர்க்காடு மாவட்டம்.	"தினத் தந்தி", கோயம்புத்தூர்.
27.	ஆர். பால்வண்ணன் ..	எண் 1, ரண்டால்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-7.	"தினத் தந்தி", சென்னை.
28.	ஆதி	காயாமொழி	"தினத் தந்தி", சென்னை.
29.	எம். பெருமாள்	காயாமொழி	ஆதித்தனர் கல்லூரி, திருச்செந்தூர்.

மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கம்.

	(1)	(2)	(3)
30.	எஸ். முருகன், தலைவர் ..	அரியநாயகிபுரம் (காயாமொழி).	மேலாளர், சன் பேப்பர் மில்ஸ், அரியநாயகிபுரம்.
31.	தியாகராஜன், செயலாளர்.	மேட்டுநிலம், பானையங் கோட்டை.	பச்சையாறு சுகர் மில்ஸ், தருவை.
32.	கணேச மார்த்தாண்டம் ..	பானையங்கோட்டை ..	எஸ். டி ஆதித்யனின் உறவினர் எஸ். பி. ஆதித்தனின் சகோதரர்.
33.	சற்குண தேவி	அரியநாயகிபுரம்	முருகனின் மனைவி.
34.	டி. ஆர். பீம்சிங்	கடையம், திருநெல்வேலி மாவட்டம்.	"தினத் தந்தி", சென்னை.
35.	ஆர், ராமசாமி	காயாமொழிக்கு அருகில் உள்ள திருஸ்டியா நகர்.	"தினத் தந்தி", திருநெல்வேலி.
36.	தவசிமுத்து	பொறையாறு, தஞ்சாவூர், மாவட்டம்.	பி. எஸ். ஆதித்யனின் மைத்துனர் எஸ். பி. ஆதித்தனின் மகன்.
37.	எம். காட்டேரி ..	தெக்கூர், காயாமொழி அருகில்.	"மாலை முரசு", திருநெல்வேலி.
38.	என். கந்தன்	காயாமொழி	"மாலை முரசு", திருநெல்வேலி.
39.	வி. முத்து	காயாமொழி	"மாலை முரசு", திருநெல்வேலி.
40.	எஸ். இராமநாதன் ..	காயாமொழி	"தினத் தந்தி", திருநெல்வேலி.
41.	என். மணி	காயாமொழி	"தினத் தந்தி", திருநெல்வேலி.
42.	ஆதிமணி	காயாமொழிக்கருகில் உள்ள மேல்புரம்.	"தினத் தந்தி", திருச்சி.
43.	எஸ். பெரியசாமி	காயாமொழி	"தினத் தந்தி", திருச்சி.
44.	பி. சாத்தான்குட்டி ..	காயாமொழி	"மாலை முரசு", வேலூர்.
45.	வி. நாராயணன்	காயாமொழி	மேற்பார்வையாளர், தாதன் குளம், பணிமை.
46.	பி. சுப்பிரமணியன் ..	காயாமொழி	"தினத் தந்தி", சென்னை.
47.	செந்தூர்பாண்டியன் ..	காயாமொழி	"தினத் தந்தி", சென்னை.
48.	பி. வைரவன்	காயாமொழி	"மாலை முரசு", திருநெல்வேலி.
49.	டி. ஆர். பாலகிருஷ்ணன்	காயாமொழி	"தினத் தந்தி", கோயம்புத்தூர்
50.	வி. பி. இரத்தினம் ..	புதுக்குடி, ஸ்ரீவைகுண்டம் ..	"தினத் தந்தி", திருநெல்வேலி.
51.	வேல் நாடார்	வேலூர், ஸ்ரீவைகுண்டம் ..	"தினத் தந்தி", சென்னை.
52.	ஸ்வர்ணம் அம்மாள் ..	பானையங்கோட்டை ..	எஸ். டி.. ஆதித்யனின் மனைவி.
53.	ரதி தேவி	பானையங்கோட்டை ..	எஸ். டி.. ஆதித்யனின் மகள்.

கீழப்பெருமாளேரி இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கம்.

54.	கொத்தளமுத்து, தலைவர்.	திருநெல்வேலி சந்திப்பு ..	"மாலை முரசு", திருநெல்வேலி.
55.	எல். நடராஜன், செயலாளர்.	சிந்து பூந்துறை, திருநெல்வேலி.	"மாலை முரசு", திருநெல்வேலி.
56.	என். ராமஜயம் ..	கொக்கிரகுளம், திருநெல் வேலி.	"மாலை முரசு", திருநெல்வேலி.
57.	வி. பெருமாள்	காயாமொழி	"மாலை முரசு", வேலூர்.
58.	ஆர். சுபபதி	திருநெல்வேலி	"மாலை முரசு", திருநெல்வேலி.
59.	எம். சங்கரன்	திருநெல்வேலி	"மாலை முரசு", திருநெல்வேலி.
60.	எஸ். பாலகிருஷ்ணன் ..	திருநெல்வேலி	"தினத் தந்தி", மதுரை.
61.	திருவடி	சிந்துபூந்துறை, திருநெல்வேலி.	"மாலை முரசு", திருநெல்வேலி.
62.	ஆர். முத்து	திருநெல்வேலி சந்திப்பு ..	"தினத் தந்தி", மதுரை.
63.	பி. பொன்னுசாமி ..	திருநெல்வேலி	"தினத் தந்தி", திருநெல்வேலி.
64.	முத்துகிருஷ்ணன் ..	திருநெல்வேலி	"மாலை முரசு", திருநெல்வேலி.
65.	சடையாண்டி (தொடர் எண் 3-ம் கூட).	திருநெல்வேலி சந்திப்பு ..	"மாலை முரசு", வேலூர்.

66.	அரிச்சந்திரன், தலைவர் ..	அரியநாயகிபுரம்	சன் பேப்பர் மில்ஸ், அரியநாயகி புரம்.
67.	எம். குருநாதன்	சிந்துபூந்துறை	சன் பேப்பர் மில்ஸ், அரியநாயகி புரம்.
68.	பால்பாண்டியன்	பரமன்குறிச்சி, திருச்செந்தூர்.	சன் பேப்பர் மில்ஸ், அரியநாயகி புரம்.
69.	எஸ். அருணசலம் பிள்ளை (தொடர் எண் 2-ம்கூட).	சிந்துபூந்துறை	''தினத் தந்தி'', திருநெல்வேலி.
70.	பி. ஏ. ரெஹ்மான்	திருநெல்வேலி சந்திப்பு ..	''தினத் தந்தி'', திருநெல்வேலி.
71.	எம். மந்திரம்	மகாலிங்கபுரம், திருநெல்வேலி.	''மாலை முரசு'', திருநெல்வேலி.
72.	டி. ஆர். பீம்சிங் (தொடர் எண் 34-ம் கூட).	கடையம்	''தினத் தந்தி'', சென்னை.
73.	பி. வெற்றிவேல்	திருநெல்வேலி சந்திப்பு ..	''தினத் தந்தி'', சென்னை,
74.	வேல்முத்து	களக்காடு, திருநெல்வேலி மாவட்டம்.	''தினத் தந்தி'', திருநெல்வேலி.
75.	என். ஆறுமுகம்	திருநெல்வேலி சந்திப்பு ..	பி. எஸ். ஆதித்யனின் நேர்முக உதவியாளர்.
76.	எஸ். ராமஜயம் ..	காயாமொழி	''மாலை முரசு'', திருநெல்வேலி.
77.	பி. ஜெயராமன் (செயலாளர்).	காயாமொழி	சன் பேப்பர் மில்ஸ், அரியநாயகி புரம்.

திரு சி. பா. ஆதித்தனார் அல்லது அவரது நெருங்கிய உறவினர்களின் பொறுப்பிலுள்ள நிறுவனங்களில் மேற்சொன்னவர்கள் வேலையில் அமர்ந்துள்ளது குறித்த சாட்சியம், உடையார் பிள்ளை என்பவரால் (C. W. 39) வீரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 5-A பிரிவின்படிக்கான அவரது விவர வாக்குமூலத்தில் மேற்சொன்ன ஒவ்வொருவரது வேலை பற்றிய விவரங்களை அவர் கொடுத்துள்ளார். கமிஷன் முன் சாட்சிக் கூண்டில் இதனையே அவர் பெரும்பாலும் உறுதி செய்துள்ளார்.

உடையார்பிள்ளை (C.W. 39) தனது 2-7-1976 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்தில், ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நிரயதாரர்கள் யாவரும் ''தினத்தந்தி'', ''மாலைமுரசு'' அல்லது சன் பேப்பர் மில்ஸ் இவற்றில் எதிலாவது பணியாற்றி வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

இந்தச் சங்கங்களின் உறுப்பினர் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட எந்த நிறுவனத்தில் அப்போது பணியாற்றி வந்தார் என்பது குறித்த விவரத்தை இவர் குறுக்கு விசாரணையின் போது துல்லியமாகவும் சரியாகவும் குறிப்பிட்டுக் காட்ட இயலாதபோதிலும், திரு. சி. பா. ஆதித்தனார் தொடர்பு கொண்டுள்ள மேற்சொன்ன நிறுவனங்களில் ஏதாவது ஒன்றில் இந்தச் சங்கங்களின் உறுப்பினர்கள் அனைவரும் பணியாற்றி வந்திருக்கின்றனர் என்ற பொதுவான வாக்குமூலத்தை இவர் கண்டிப்பாக உறுதி செய்துள்ளார் என்பது உண்மை.

முருகனும் 5-A பிரிவின்படித் தனது வாக்குமூலத்தில் மேற்சொன்ன விவர அட்டவணையில் தொடர் எண்கள் 1, 30, 31, 34, 53, 54, 66, 72, 77 ஆகியவற்றில் காட்டியுள்ள நபர்களின் வேலை பற்றித் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:—

''இந்தச் சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் யாவரும் தினத்தந்தி, மாலைமுரசு, சன் பேப்பர் மில்ஸ் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர்''

(புலனுய்வு அறிக்கை, தொகுதி I, *801-ம் பக்கத்தைக் காண்க)

முருகன் தனது 1-7-1976 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்தில் மேலே சொல்லியுள்ள விவர அட்டவணையில் 1, 30, 31, 33, 53, 66, 77 தொடர் எண்களுடைய சாட்சிகள் மேற்சொன்ன நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர் என்று சான்று பகர்ந்துள்ளார். இவர் அடுத்து 9-2-1977 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்திலும்கூட தான் ஏற்கெனவே அளித்துள்ள வாக்குமூலங்களிலிருந்து சில தகவல்களை மாற்றிச் சொல்ல முற்பட்டிருந்தாலும், முருகன், திரு. சி. பா. ஆதித்தனர் சம்பந்தப்பட்டுள்ள மேற்சொன்ன நிறுவனங்களில் மேற்சொன்னவர்கள் வேலையில் இருக்கும் உண்மையை மறுக்கவில்லை.

சிங்கமுத்து, பால்வண்ணன், இரத்தினம் ஆகியோர் 5-A பிரிவின்படிக்காவ தங்களது வாக்கு மூலங்களில் சென்னை தினத்தந்தியில் தாங்கள் பணியாற்றுவதாகத் தெரிவித்துள்ளனர். கமிஷனது புலனுய்வு அறிக்கையின் பிரதியில் முறையே 745, 755, 765 ஆவது பக்கங்களைக் காண்க.

சிங்கமுத்து 1-1-1977 நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில் தினத்தந்தியில் தான் வேலையில் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். பால்வண்ணன் 1-1-1977 நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்திலும், வி. பி. இரத்தினம் 1-1-1977 நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்திலும் சென்னை தினத்தந்தியில் தாங்கள் வேலையில் இருந்து வருவதை மறுக்கவில்லை.

இதில் மிகவும் முக்கியமானது என்னவெனில், எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனரே, 23-7-1976, 9-9-1976, 19-10-1976, 15-11-1976 நாட்களிட்ட தன்னுடைய எதிர் உறுதிமொழிப் பத்திரங்களில் மேற்கொள்ள சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ''தினத்தந்தி'', ''மாலை முரசு'', சன் பேப்பர் மில்ஸ் நிறுவனங்களின் பணியாளர்கள் என்பதை மறுக்கவில்லை.

திருமணகாந்தன், 20-4-1976, 21-1-1977 நாட்களிட்ட தனது எதிர் உறுதிமொழிப் பத்திரங்களில் தானும் சங்கங்களின் ஏனைய உறுப்பினர்களும் திரு. சி. பா. ஆதித்தனர் தொடர்புடைய மேற்கொள்ள நிறுவனங்களின் பணியாளர்கள் என்பதை மறுக்கவில்லை.

நிலைமை இவ்வாறு இருக்கையில், இந்த நான்கு இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களில் பெரும்பாலோர் திரு. சி. பா. ஆதித்தனரின் உறவினர்களாகவோ ''தினத்தந்தி'', ''மாலை முரசு'', சன் பேப்பர் மில்ஸ் நிறுவனங்களின் பணியாளர்களாகவோ உள்ளனர் என்பதும், இந்த நிறுவனங்களுக்குப் பொறுப்புடைய திரு. சி. பா. ஆதித்தனர்தான் நடைமுறையில் உண்மையான அதிகாரம் செலுத்துபவராவார் என்று கருதுவதில் நியாயமுள்ளது.

எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனர், ஆதித்தனர் கல்வி நிறுவனம், ஈண்டு குறிப்பிட்டுள்ள சங்கங்களைப் பின்னர் அமைப்பதில் பொறுப்பானவர்களுக்குவிற்பனைசெய்த நிலங்களின்மீது உரிமையோ கட்டுப்பாட்டையோ, எந்தக் கட்டத்திலும் கொண்டிருக்கவில்லை என்று திரு. ஜி. ராமசாமி கூறியுள்ளார். உடையார் பிள்ளையின் சாட்சியம் நம்பத் தகுந்ததல்ல. ஏனெனில், அவர் எதிர்மனுதாரரின் பொறுப்பிலுள்ள பல்வேறு நிறுவனங்களின் பணியாளர்கள் சார்பில் அவ்வாறு விற்பனைகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். இது சம்பந்தமான ஆதாரக் குறிப்பு இந்தக் கருத்தின் பேரில் உடையார் பிள்ளையிடம் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் காட்டப்பட்டுள்ளது. இந்த நபர்களின் வேலை குறித்து, உடையார் பிள்ளை வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு வாக்குமூலங்களைக் கொடுத்துள்ளார் என்று சொல்லப்படுகிறது. உடையார் பிள்ளை அவ்வப்போது வெவ்வேறு வாக்குமூலங்களைக் கொடுத்திருந்தது பற்றிய ஒப்புநோக்கு விவர அட்டவணையை வழக்குரைஞர் கீழே கொடுத்துள்ளார்.

ஒப்புநோக்கு விவர அட்டவணை.

தொடர் எண்ணும் பெயரும்.	குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 161- வது பிரிவின் கீழ் வரும் வாக்கு மூலத்தில்.	5-A பிரிவின்கீழ் வரும் வாக்கு மூலத்தில்	முதன்மை விசாரணை.	குறுக்கு விசாரணை.
(1)	(2)	(3)	(4)	(5)
1 செல்லதுரை ..	நெல்லை தந்தி	நெல்லை மாலை முரசு	....	....
2 சப்பாணி ..	நெல்லை தந்தி	நெல்லை மாலை முரசு	....	தொடர்ச்சியாக சன் பேப்பர் மில்லில் பணி புரிந்து கொண்டிருக்கிறார்.
3 டி. நாராயணன்	மதுரை தந்தி	மதுரை தினத் தந்தி	கோயம்புத்தூர்	....
4 டி. கந்தசாமி ..	கோயம்புத்தூர், வேலூர் தந்தி	கோயம்புத்தூர், வேலூர் தந்தி.	எனக்குத் தெரியாது.	....
5 ஆதிக்கண்ணு ..	நெல்லை தந்தி	நெல்லை தந்தி	மாலை முரசு	....

(1)	(2)	(3)	(4)	(5)
6 சிவலிங்கம் ..	மதுரை தந்தி	மதுரை தந்தி	வேலூர் அவரை எங்கேயாகிலும் பார்த்தீரா—இல்லை (மறுபடியும்) கோயம்புத்தூர்.	நான் ஒருபோதும் அவரை வேலூரில் பார்த்ததில்லை. (க.கே.
7 மசனமுத்து ..	மதுரை தந்தி	மதுரை தந்தி	நெல்லை மாலை முரசு	நெல்லை கதிர் தந்தி
8 சிவசங்கு ..	மதுரை, திருச்சி தந்தி.	மதுரை, திருச்சி தந்தி.	வேலூர் முரசு	....
9 ஆதிக்கண்ணு ..	நெல்லை மாலை முரசு.	நெல்லை மாலை முரசு.	சென்னை தந்தி	....
10 ஜீ. சுப்பிரமணியம்	வேலூர் மாலை முரசு.	வேலூர் மாலை முரசு.	கோயம்புத்தூர்	எனக்குத் தெரியாது.
11 கே. சுப்பிரமணியம்	வேலூர் மாலை முரசு.	கோயம்புத்தூர் தந்தி.	கோயம்புத்தூர் தந்தி.	....
12 ஆதி	சென்னை தந்தி	சென்னை தந்தி	நெல்லை தந்தி	....
13 ஆர். பெருமாள்	ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்.	ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்	தாதன்குளம் பண்ணைக் காவலாளி.	....
14 ஆர். இராமசாமி	நெல்லை தந்தி	நெல்லை தந்தி	எனக்கு நினைவில்லை	....
15 காட்டேரி ..	நெல்லை முரசு	நெல்லை முரசு	கோயம்புத்தூர் மாலை முரசு.	....
16 எஸ். கந்தன் ..	நெல்லை முரசு	நெல்லை முரசு	நெல்லை தந்தி	திருச்சி.
17 வி. முத்து ..	நெல்லை முரசு	நெல்லை முரசு	தந்தி, மதுரை	....
18 இராமநாதன்	நெல்லை தந்தி	நெல்லை தந்தி	என்னால் நினைவு கூர முடியவில்லை.	....
19 மணி	நெல்லை தந்தி	நெல்லை தந்தி	திருச்சி அல்லது கோயம்புத்தூர்.	எனக்கு நினைவில்லை.
20 அத்திமணி ..	திருச்சி தந்தி	திருச்சி தந்தி	சென்னை தந்தி	....
21 பெரியசாமி ..	திருச்சி தந்தி	திருச்சி தந்தி	என்னால் நினைவு கூர முடியவில்லை.	
22 சாத்தகுட்டி ..	வேலூர் முரசு	வேலூர் முரசு	சென்னை தந்தி	....
23 நாராயணன் ..	மேற்பார்வையாளர்.	மேற்பார்வையாளர்.	வேலூர் முரசு	....
24 பி. சுப்பிரமணியம்	சென்னை தந்தி	சென்னை தந்தி	கோயம்புத்தூர் தந்தி.	....
25 வெற்றிவேலு	சென்னை தந்தி	சென்னை தந்தி	நினைவில்லை.	....
26 வேலுமுத்து ..	சென்னை தந்தி	சென்னை தந்தி	நெல்லை தந்தி	....
27 என். ஆறுமுகம்	B. S. P. A.	B. S. P. A.	நெல்லை தந்தி	....
28 இராமஜயம் ..	நெல்லை முரசு	நெல்லை முரசு	தந்தி	....
29 எல். நடராசன்	தெரியவில்லை	தெரியவில்லை	மாலை முரசு	....

110G-13—18A

(1)	(2)	(3)	(4)	(5)
30 இராமஜயம் ..	நெல்லை முரசு உதவி ஆசிரியர்.	நெல்லை முரசு	நெல்லை தந்தி	....
31 பெருமாள் ..	நெல்லை முரசு ..	வேலூர் முரசு ..	நிஜவில்லை	....
32 எஸ். பால கிருஷ்ணன்.	தெரியாது ..	தெரியாது ..	மதுரை தந்தி	....
33 முத்து	மதுரை தந்தி, காவலாளி ..	மதுரை தந்தி, காவலாளி. ..	நெல்லை முரசு	....
34 பொன்னுசாமி ..	தெரியாது ..	தெரியாது ..	நெல்லை தந்தி	....
35 முத்துகிருஷ்ணன்..	நெல்லை முரசு ..	நெல்லை முரசு ..	நெல்லை தந்தி. காசாளர்.	....
36 சடையாண்டி ..	வேலூர் முரசு ..	வேலூர் முரசு ..	நெல்லை முரசு	....

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. சி. பா. ஆதித்தனார் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் இந்த 36 பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டு இருப்பதைப் பொறுத்தவரையில், அவரது சாட்சியம் மன நிறைவு அளிப்பதாக இல்லை என்பது உண்மை ; ஆனால், எஞ்சியுள்ள 41 பேர்களின் நிலை என்ன ? உடையார் பிள்ளை அளித்த சாட்சியத்தின்படி இந்த 41 பேர் மூன்று நிறுவனங்களில் அதாவது, ''மாலை முரசு'', ''தினத்தந்தி'', ''சன் பேப்பர் மில்ஸ்'' (இவற்றில் திரு. சி. பா. ஆதித்தருடைக்கோ அவரது நெருங்கிய உறவினருக்கோ கணிசமான பங்கிருந்தது) ஏதாவது ஒன்றில் பணியாளர்களாக இருந்தனர். இவர்கள் குறித்து அவர் அளித்த சாட்சியத்தைக் குறுக்கு விசாரணையில் கவிக்க முடியவில்லை. மேலும், எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனர் சாட்சிக் கூண்டிற்கு வராமல் இருந்ததோடு, இந்த நபர்களை மேற்சொன்ன ஏதாவது ஒரு நிறுவனத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டு இருப்பதாகக் கூறுவதைத் திட்டவட்டமாக மறுத்துள்ளார். அவரது உறுதிமொழிப் பத்திரங்கள் எதிலும் இந்த நபர்களை (பீம்சிங் தவிர) மேற்சொன்ன நிறுவனங்களில் ஏதாவதொன்றில் வேலைக்கு அமர்த்தி இருப்பதாகக் கூறும் தகவல்கள் திட்டவட்டமாக மறுக்கவில்லை.

திரு. ஜி. இராமசாமி, எதிர்மனுதாரர் கொடுத்துள்ள எதிர் உறுதிமொழிப் பத்திரத்தில் எல்லாக் குற்றச்சாட்டுகளும் திட்டவட்டமாக ஒப்புக் கொள்ளப்படாததால் அல்லது கவனிக்கப்படாத தால் அவற்றைத் ''திட்டவட்டமாக மறுத்துள்ளார்'' எனக் கூறினர். ஆயினும், ''மறுப்பு'' என்ற சொல்லுக்கு முன்னல் ''திட்டவட்டமாக'' என்ற வீணைச் சொல்லைப் பயன்படுத்தியிருந்தபோதிலும் இவ்வாறு பொதுப்படையாக மறுத்து இருப்பதைத் திட்டவட்டமாக மறுத்திருப்பதாகக் கூற இயலாது. கமிஷனின் முன்பான இந்த நடவடிக்கைகள் ஒரு குற்ற வழக்கு விசாரணையின் தன்மையில் அமைந்திருக்கலாகாது. ஒரு குற்ற வழக்கில் குற்றச் சாட்டை மெய்ப்பிக்கும் பொறுப்பு எப்போதும் அந்த வழக்கைத் தொடர்ந்தவர்களையே சாரும். குற்றம் சாட்டப்பட்ட 5-A பிரிவின் கீழ் அவர் அளித்த வாக்கு மூலத்திலும் கமிஷனின் முன்பு தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்திலும், அந்த உறுதிமொழிப் பத்திரத்தின் நகல் எதிர்மனுதாரருக்குக் கொடுக்கப்பட்டு அவரது வழக்குரைஞரும் இதனை விரிவாக ஆய்வு செய்து புலனுய்வு அறிக்கையை அப்படியே குறிப்பு எடுத்துக் கொண்டிருந்த போதிலும், உடையார் பிள்ளையின் பொதுவான குற்றச்சாட்டை அவர் திட்டவட்டமாக மறுக்கவில்லை என்பது உண்மை. எவ்வாருயினும், கமிஷனின் முன்பு உடையார் பிள்ளையை விசாரித்த பின்னர் அவர் சாட்சிக் கூண்டில் ஏறி, மேற்சொன்ன நிறுவனங்களில் அவரைச் சம்பந்தப்படுத்தி அல்லது தொடர்பு படுத்தி சாட்சியத்தில் குறிப்பிடக்கூடிய முக்கிய மான தகவல்கள் அனைத்தும் சம்பந்தப்பட்டிருப்பதாக உடையார் பிள்ளையின் சாட்சியத்தில் குறிப்பிடப்பட்ட நபர்கள் அந்த நிறுவனங்களுடனும் சாட்சியுடனும் சம்பந்தப்பட்டிருப்பதையும் தவறு என மெய்ப்பிக்க வேண்டும்.

உடையார் பிள்ளை அளித்துள்ள சாட்சியம் தவிர, முருகனின் சாட்சியம் இருக்கிறது. இவர் 1—7—1976 ஆம் நாளிட்ட தனது உறுதி மொழிப் பத்திரத்தில், மேற்கண்ட விளக்கப் படத்தில் 1, 30, 33, 53, 66, 67 ஆகிய வரிசை எண்களில் காட்டப்பட்டுள்ள நபர்கள் அந்தப் படத்தில் 3-வது பத்தியில் அவர்களின் பெயர் களுக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ளபடி வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர் அல்லது சம்பந்தப் பட்டிருந்தனர் என்று தெரிவித்திருந்தார். 9—2—1977 ஆம் நாளிட்ட அவரது உறுதி மொழிப் பத்திரத்திலும் கூட, மேற்சொன்ன நிறுவனங்கள் ''தினத்தந்தி'', ''மாலை முரசு'', ''சன் பேப்பர் மில்ஸ்'', ஏதாவது ஒன்றுடன் இந்த சாட்சிகள் சம்பந்தப்பட்டு இருப்பதை அல்லது திரு. சி. பா. ஆதித்தனருக்கும் அல்லது அவரது சகோதரர் எஸ். டி. ஆதித்யனுக்கும் அவர்களுக் கும் உள்ள உறவை அவர் மறுக்கவில்லே. பால் வண்ணன் 1—1—1977 ஆம் நாளிட்ட அவரது உறுதிமொழிப் பத்திரத்திலும், வி. பி. இரத்தினம் 1—1—1977 ஆம் நாளிட்ட அவரது உறுதி மொழிப் பத்திரத்திலும்கூட சென்னை, ''தினத் தந்தி''யில் தாங்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு இருப்பதை மறுக்கவில்லே.

நன்குவிசாரம் தெரிந்தவரும் இந்த 4 இறைவைப் பாலைச் சங்கங்களின் தொகுதிக்குத் தலேவர் எனக் கூறப்படுபவருமான திருவண்ணகாத்தன் 20—5—1976 ஆம் நாளிட்ட, 5—1—1977 ஆம் நாளிட்ட, 21-1-1977 ஆம் நாளிட்ட அவரது எதிர் உறுதிமொழிப் பத்திரங்களில், இத்தச் சங்கங்களில் அவரது உறப்பினர்கள் அல்லது பிற உறப்பினர்கள் ''இனத்தந்தி'', ''மாலே முரசு'' அல்லது ''சன் பேப்பர் மில்ஸ்'' நிறுவனங்களில் பணியாளர்களாக இருப்பதை மறுக்கவில்லே. திருவண்ணகாத்தனும் எதிர்மனுதாரர் நிலேயில் இருந்தார். சாட்சிகளுக்குக் குறுக்கு விசாரணை செய்யவும், அவர் சார்பில் வழக்கறிஞர் ஒருவர் வாதிடவும் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. கமிஷன் அழைப்பாணே விடுத்த சாட்சிகளே விசாரணை செய்த பின்னர் சாட்சிக் கூண்டிற்கு அவரும் வர வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இவை அனைத்தும் செய்யப்பட்டன. இருப்பினும், கடைசி நேரத்தில் அவர் வரவில்லே. சாட்சிக் கூண்டில் நின்று எதிர்தரப்பினர் தன்னேக் குறுக்கு விசாரணே செய்வதற்கும் அவர் இடமளிக்கவில்லே.

எனவே, முருகனின் முந்தைய சாட்சியங்களுடன் இணேத்தும் மேற்குறிப்பிட்ட 36 பேர்கள் சம்பந்தப்பட்ட வழக்கை நீக்கிய பின்னரும், இந்த 36 பேர் குறித்து வெவ்வேறு காலங்களில்

வேவ்வேறு வாக்கு மூலங்களே அவர் கொடுத்திருக்கிறார்—உடையார் பிள்ளையின் சாட்சியத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால், குறைந்தது 41 பேர்களாவது ஆதித்தனார் கல்வி நிறுவனத்திடமிருந்து இந்த நிலங்களே வாங்கினர் என்ற சாக்கில் நான்கு இறைவைப் பாசனச்சங்கங்களே அவர்கள் அமைத்தனர் என்றும் இவர்கள் திரு. சி.பா. ஆதித்தனரின் நேரடி உறவினர்களாக அல்லது பிறர் மூலமாக சி. பா. ஆதித்தனருடன் உறவுள்ளவர்களாக இருந்தனர் அல்லது ''மாலே முரசு'', ''தினத்தந்தி'', ''சன் பேப்பர் மில்ஸ்'' ஆகிய நிறுவனங்களில் ஏதாவது ஒன்றில் பணியாளர்களாக இருந்தனர் என்பதை (இந்த நிறுவனங்களே நிருவகிப்பதில் திரு. சி. பா. ஆதித்தனருக்கு அல்லது அவரது நெருங்கிய உறவினர்களுக்கு அதிக செல்வாக்கு இருந்தது) இவரது சாட்சியம் வெளிப்படையாகவே மெய்ப்பிக்கிறது. எவ்வாறு ஆயினும், இந்த 4 சங்கங்களில் நிருவாகிகளாக இருந்த அவர்கள் அனைவரும் திரு. சி. பா. ஆதித்தனருக்கு உறவினர்களாக இருந்தனர் அல்லது மேற் சொன்ன 3 நிறுவனங்களில் ஏதாவது ஒன்றில் பணியாளர்களாக இருந்தனர் என்பதை வெளிப்படையாக மெய்ப்பிக்கிறது.

எதிர் மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனர், ஆதித்தனர் கல்வி நிறுவனத்தில் ''மாலே முரசில்'' நிருவாகியாகவோ, ''சன் பேப்பர் மில்ஸில்'' ஓர் இயக்குநராகவோ இல்லே என்பது உண்மை. இருப்பினும், 1959 முதல் ''தினத்தந்தி டிரஸ்டி''ல் ஒரு டிரஸ்டியாக இருக்கிற கல்வி டிரஸ்டுகள் கம்பெனி பிரைவேட் லிமிடெட்டை ஸ்தாபித்த வரும், வளர்த்தவரும் இயக்குநருமாவார். ஆனல், பின்னர், எதிர் மனுதாரர் தெத்தந்தி டிரஸ்டில் டிரஸ்டி பதவியை ராஜினுமா செய்து பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதாகத் தோன்றுகிறது. ஆனல், அதன் பின்னரும் கூட 29—12—1972 அன்று அவரது மகன் பி. எஸ். ஆதித்தன் அவரது மருமகள் அழுதா ஆதித்தன் ஆகிய இருவரும் தினத்தந்தி டிரஸ்டை நிருவித்து வருகிற இந்த பிரைவேட் லிமிடெட் கம்பெனியில் இயக்குநர்களாக இருந்தனர் என்பது உண்மை. இது போலவே, எதிர்மனுதாரரின் இரு மகன்களும் அவரது சகோதரர்களில் ஒருவரான எஸ். டி. ஆதித்யனும் இந்தக்கம்பெனியை உருவாக்கிய 7 பேர்களில் மூவர் ஆவர். சம்பந்தப்பட்ட காலத்தில் 30—6—1971 அன்று இயக்குநர்கள் குழுவில் உள்ள 4 பேர்களில் மூவர் எதிர் மனுதாரரின் மகன் (பி. எஸ். ஆதித்தன்), சகோதரர் (எஸ். டி. ஆதித்யன்), மருமகன் (கே. பி. கந்த சாமி) ஆகியோர் ஆவர். இயக்குநர்கள் குழுவில் இவர்கள் பெரும்பான்மை வகித்தனர். ஆகவே, இந்த ஆலையின் நிருவாகப் பொறுப்பு இவர்கள் கையில் இருந்ததாகக் கூறலாம். இது போலவே, எதிர்மனுதாரர் திரு. சி.பா. ஆதித்தனரின் மகளும் மருமகனும் தான் மாலே முரசை (கோயம்புத்தூரில்) நடத்துகின்ற கோவை முரசு, வேலூர் முரசு ஆகிய பிரைவேட் லிமிடெட் கம்பெனிகளில் இயக்குநர்களாக இருந்தனர். இவர்கள் இந்த நிறுவனங்களே நிருவகித்து வந்தனர். சென்னை, ''மாலே முரசு'' நடத்தி வருகிற சென்னை முரசிலும் இதே நிலைமை தான் இருந்தது. திரு. சி. பா. ஆதித்தனரின் மகனும் சகோதரரும் மருமகனும் இந்த கம்பெனியில் இயக்குநர்களாக இருந்தனர். இந்த வகையில் இந்த கம்பெனியின் நிருவாகப் பொறுப்பு இவர்கள் கையில் இருந்தது. இயக்குநர்களாக இருக்கின்ற திரு. சி. பா. ஆதித்தனரின் மருமகனும், மருமகனும் திருநெல்வேலியில் ''மாலே முரசை'' நடத்துகின்ற மாலே முரசுக்குப் பொறுப்பு வகித்திருந்தனர். எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனருக்கு இந்த நிறுவனங்களே நடத்துவதில் நேரடிப் பொறுப்பு இல்லே என்று தொழில் நுட்ப வகையில் கூறினலும் கூட இயக்குநர்களாயிருக்கிற அவரது மகன் வழியிலும் பிற நெருங்கிய உறவினர் வகையிலும் அதிக்கம் செலுத்தும் நிலேயில் அவர் இருந்ததால் இந்த நிறுவனங்களே அவர் நிருவகித்து வந்தார் என்று கூற முடியும். எதிர்மனுதாருக்கும் அவரது மகனுக்கும் அவரது சகோதருக்கும் இடையே பரஸ்பர நல்லுறவு இருந்ததனல்—அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு எதுவும் ஏற்பட்டதாகப் பதிவேட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லே—எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனர் அவரது மகன், சகோதரர், நெருங்கிய உறவினர்கள் ஆகியோர் மூலமாக இந்த நிறுவனங்களின் பணியாளர்கள் மீது நேரடிக் கட்டுப்பாட்டு அதிகாரத்தைச் செலுத்தி வருவதற்கான வாய்ப்பும் இல்லே என்று கூற முடியாது.

இந்த 4 இறைவைப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்களே அமைத்தல்.

இப்போது அடுத்த னைத்தை, அதாவது, இந்த 4 இறைவைப் பாசன கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தது பற்றிய விஷயத்துக்கு நான் வருகிறேன். இந்த 4 சங்கங்கள் இடமிரன்று அமைக்கப்பட்டன. மேழ, மேல தாதன்குளம் சங்கங்களுப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 30—1—1971 அன்று அனுப்பப்பட்டன. தூத்துக்குடி, துணேப் பதிவாளர் காந்தி தாஸ் (சாட்சி 3) சாட்சியம் அளிக்கையில், இணேப் பதிவாளர் திரு. சுப்பையா (கமிஷன் சாட்சி 36), முகாமிலிருந்து தன்னே வரும்படி அழைப்பு விடுத்து இச் சங்கங்களே உடனடியாகப் பதிவு செய்யும் படிக் கேட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவ்வாறு துணேப் பதிவாளர் இந்தச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்படுவதற்கான வாய்ப்பு பற்றி வெளிப்படையாக அறிந்து கொள்ளாமலேயே இந்தச் சங்கங்களே உடனடியாகப் பதிவு செய்தார்.

அமைக்கக் கருதியுள்ள சங்கங்களின் சாத்தியக்கூறு பற்றி துணேப்பதிவாளர் தொடக்க

விசாரணையைச் செய்யத் தவறியதானது, 27-11-1970 ஆம் நாளிட்ட Rc. 54266/70 W3 (2) ஆம் எண் பதிவாளர் சுற்றறிக்கையில் கண்டுள்ள கட்டளைகளை மீறியதாகும் என்று அரசு வழக்குரைஞர் கூறினர்.

இதுபோலவே, சேரகுளம் மேழப்பெருமாளேரி சங்கங்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 23-2-1972 அன்று கொடுக்கப்பட்டன. அன்றே அவை பதிவு செய்யப்பட்டன. அன்றே ஆதித்தனார் கல்வி நிறுவனத்தின் சார்பில் இந்தச் சங்கங்களின் உறுப்பினர்கள் அனைவரின் பெயருக்கும் விற்பனைப் பத்திரங்கள் எழுதிக் கொடுக்கப்பட்டது விநோதத்திலும் விநோதம்.

இந்தச் சங்கங்களைப் பதிவு செய்வதில் உள்ள விநோத அம்சங்களையும் நடந்துள்ள இந்த முறைகேடுகளையும் அரசு வழக்குரைஞர் திரு. வானமாமலை பட்டியலிட்டுக் கொடுத்துள்ளார்:—

(i) மேல தாதன்குளம் சங்கத்தை அமைப்பதற்கு ஆதரவு அளித்தவர்களில் ஒருவரும், பின்னர் அந்தச் சங்கத்தில் ஒருவருமான கொத்தளமுத்து மேல தாதன்குளத்தில் ஒரு நிலம் கூட சொந்தத்தில் வைத்திருக்கவில்லை. ஜனன மாதத்தில்தான் அவர் நிலத்தை வாங்கியுள்ளதாகக் காட்டப்பட்டிருக்கிறது.

(ii) மேல தாதன்குளம் சங்கத்தை அமைப்பதற்கு ஆதரவு அளித்தவரான திரு. எம். பெருமாள் இந்தச் சங்கத்தில் ஒருபோதும் உறுப்பினராக இருந்ததில்லை. ஆனால் கீழதாதன்குளம் சங்கத்தில் ஓர் உறுப்பினராக இருந்தார்.

(iii) இந்த நான்கு சங்கங்கள் எதற்கும் கீழ், மேல தாதன்குளம் சங்கங்களைப் பொறுத்த வரையில் 8-2-1971 வரையிலும் மேழப்பெருமாளேரி, சேரகுளம் சங்கங்களைப் பொறுத்த வரையில், 24-2-1971 வரையிலும் அவசியமான அறிவிப்பை அந்தச் சங்க உறுப்பினர் எவரும் கொடுக்கவில்லை. இதனால், தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் 84 (c) (1) (a) பிரிவின் விதித்துறைகளும் இறைவைப் பாசனச் சங்கங்களின் 6-வது துணை விதியும் மீறப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

கீழ, மேல தாதன்குளம் சங்கங்களைப் பொறுத்தவரையில் 8-2-1971 அன்று ஒப்பந்தங்களும் அறிவிப்புகளும் பதிவு செய்யப்பட்டன; அடைமானங்களும் வைக்கப்பட்டன, அதுவும் இரவு நேரத்தில் அவை நடந்திருக்கின்றன. சேரகுளம், மேழப் பெருமாளேரி சங்கங்களைப் பொறுத்தவரையில் இவை அனைத்தும் 24-2-1971 அன்று நடைபெற்றன.

சங்கங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்று விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்ட அன்றே அந்தச் சங்கங்களைப் பதிவு செய்து அவற்றை அமைத்திருப்பதானது அசாதாரணமானது என அரசு வழக்குரைஞர் கூறினர்.

இந்த 4 சங்கங்களும் மின்னல் வேகத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது ஒரு அசாதாரணமான நிகழ்ச்சியாகும் என்பது உண்மை. பிற சங்கங்களைப் பொறுத்தவரையில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்ட நாளுக்கும் சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட நாளுக்கும் இடையே உள்ள கால அளவு 10-லிருந்து 177 நாட்கள் வரை இருந்ததாக மூசாவின் (கமிஷன் சாட்சி 33) அறிக்கையில் VI-வது இணைப்பு குறிப்பிடுகிறது. இந்தச் சங்கங்களைப் பொறுத்தவரையில் தான் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்ட அன்றே அவை பதிவு செய்யப்பட்டன.

எதிர்மனுதாரரான அப்போதைய கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார், சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளுடனும் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு 'இந்தச் சங்கங்களைப் பதிவு செய்யவும் அவற்றிற்குக் கடன் வழங்கவும் தேவையான கட்டளைகளை அவர்களுக்குப் பிறப்பித்தார் என்றும் சாட்சியம் அளிக்கப்பட்டிருக்கிறது. 28-1-1971 அன்று திருவாளர்கள் தன், முருகன், அரிச்சந்திரன், ஜெயராமன் மற்றும் என்யோரை ஸ்ரீவைகுண்டத்தில் அமைச்சர் சந்தித்து, இறைவைப் பாசனச் சங்கங்களை அமைக்கக் கருதியிருப்பதாக அவர்களிடத்தில் தமது விருப்பத்தைத் தெரிவித்ததோடு அவர்கள் பெயரில் கடன் வாங்கக் கருதியிருப்பதாகவும் அதற்கு அவர்களுடைய முழு ஒத்துழைப்பும் தங்களுக்குத் தேவைப்படுவதாகவும் கூறினர் என்பது சாட்சியத்தில் மேலும் கூறப்பட்டிருக்கிறது. 28-1-1971 அன்று திரு. சுப்பையாவுக்கு (கமிஷன் சாட்சி 36) பதவி உயர்வு அளித்து பிறப்பிக்கப்பட்ட ஆணையை அய்வு இல்லத்தில் அமைச்சரின் (திரு. சி. பா. ஆதித்தனர்) முன்னிலையில் அவரது நேர்முக உதவியாளர் சுப்பையாவிடம் நேரடியாகக் கொடுத்தார் என்பதற்கும், 30-1-1971 அன்று அமைச்சர் இந்த 4 சங்கங்களையும் விரைவில் பதிவு செய்து அவற்றிற்குத் தாராளமாகக் கடன் வழங்கும்படிச் சுப்பையாவுக்குத் தனிப்பட்ட முறையில் கட்டளையிட்டார் என்பதற்கும் பதிவேட்டில் சான்று உள்ளது. திரு. பீம்சிங் இந்தச் சங்கங்களை விரைவாகப் பதிவு செய்து கடன் வழங்கச் செய்ய அதிகாரிகளை எப்போதும் நிர்ப்பந்தப் படுத்தி வந்திருந்தார். இந்த 4 சங்கங்களைப் பதிவு செய்வதிலும் அவற்றிற்குக் கடன்களை வழங்குவதிலும் அமைச்சர் தனிப்பட்ட முறையில் அக்கறை காட்டியுள்ளதைக் குறிப்பிடும் சாட்சியத்தை நான் பின்னர் கவனிப்பேன். இங்கு இந்த 4 சங்கங்களைப் பதிவு செய்வதில் முறைகேடுகள் எவையும் நடந்தனவா அல்லது சட்டத்திற்கு முரணாக எவையும் நடந்தனவா என்பது பற்றி முதற்கண் கவனிக்கக் கருதப்படுகிறது.

இந்த 4 இறைவைப் பாசனச் சங்கங்களை அமைப்பதில் சட்டத்தின் விதித்துறையோ, விதியோ, விதிமுறையோ, துணைவிதியோ அரசு ஆணை

களோ மீறப்படவில்லே என்று எதிர்மனுதாரர் திரு. ஐ. பா ஆதித்தனரின் வழக்குரைஞர் தொடர்ந்து வாதிட்டார். இறைவைப் பாசனச் சங்கங்களேப் பொறுத்தவரையில், அந்தச் சங்கங்கள், அவற்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் வந்து சேர்வதன்பேரில் அவை நேரடியாகப் பதிவு செய்யப்பட வேண்டும்; அவை தனித்தியங்கும் வல்லமை பெற்றவையா என்ற விவரங்களேப் பின்னர் அறிந்துகொள்ள லாம் என்பது அரசு வகுத்துள்ள கோட்பாடாகும் என்று மேலும் அவர் கூறினர். இதுதொடர் பாக, 26-11-1970 ஆம் நாளிட்ட அரசு குறிப் பாணே, 27-11-1970 ஆம் நாளிட்ட பதிவாள ரின் சுற்றறிக்கை ஆகியவை பற்றி குறிப் பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 109, 111-வது பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களேச் செயல்படுத்துவதில் அரசு இந்த நடைமுறைகளே விட்டுவிடலாம் என்றும் சுட்டிக்காட்டப் படுகிறது.

இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு மட்டுமே பொருந்துகின்ற X-A அத்தியாயத்தின் விதித்துறைகள் இறைவைப் பாசனச் சங்கங்களேப் பதிவு செய்வதற்குப் பொருந்தா என்று அரசுத் தரப்பு வழக்குரைஞர் கூறினர். சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (9) பகுதியில், '' பதிவு பெற்ற சங்கம் '' என்பது, '' இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பெற்றதாகக் கருதப் படுகிற ஒரு சங்கம் '' எனக் கூறப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கம் ஒன் றைப் பதிவு செய்ய X-A அத்தியாயத்தில் விதித்துறை ஏதும் இல்லே. இந்தச் சட்டத்தின் கீழ் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கம் இருப்பதை ஊகிக்க இந்த அத்தியாயத்தின் விதித் துறைகள் இடமளிக்கின்றன என்பது உண்மை. இந்தச் சட்டத்தின் கீழ் சங்கங்களேப் பதிவு செய்வதற்கான நடைமுறையை II-ம் அத்தி யாயத்தில் காண வேண்டும்.

இந்த அத்தியாயத்தில் 9 (1) பிரிவு கீழ்க் கண்டவற்றிற்கு வகை செய்கிறது :

''ஒரு சங்கத்தைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம், இந்தச் சட்டத்தின் விதித் துறை களின்படி. இருக்கிறதா என்பதையும் செய்யக் கருதியுள்ள துணே விதிகள், இந்தச் சட்டத்திற்கு அல்லது விதிகளுக்கு அல்லது கூட்டுறவுக் கோட்பாடுகளுக்கு முரணுக இல்லே என்பதை யும் பதிவாளர் அறிந்துகொண்டாரேயானுல், அந்தச் சங்கம் நல்ல முறையில் செயலாற்றும் என்று அவர் கருதினுல், அந்தச் சங்கத்தையும் அதன் துணே விதிகளேயும் அவர் பதிவு செய்ய லாம்.''

முக்கியமான சொற்கள் கோடிட்டுக் காட் டப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து தெரிந்துகொள் வது என்னவென்றால், இந்தச் சட்டத்தின்கீழ் ஒரு சங்கத்தைப் பதிவு செய்வதற்கான முன் நிபந் தனேகளில் ஒன்று, அந்தச் சங்கம் நல்ல முறையில் செயலாற்றும் என்று பதிவாளர் தாமே நன்கு அறிந்துகொள்ள வேண்டும் என்பதாகும். இந்த நிபந்தனேயைத் துணேப் பதிவாளர் மீறியுள்ளார் என்று தெரியவந்தது. இந்தச் சங்கங்களேப் பதிவு செய்த துணேப் பதிவாளர் அமைக்கக் கருதியுள்ள இந்தச் சங்கங்கள் நல்ல முறையில் பணியாற்றும் என்று தாம் அறிந்துகொள்ள எந்தவித நடவடிக் கையும் எடுக்கவில்லே என்று சுப்பையா அளித்த சாட்சியத்தின் மூலம் இந்த முடிவு எடுக்கப்படு கிறது.

எதிர்மனுதாரரின் வாதத்திற்குப் பெரும் ஆதர வாக இருக்கின்ற 26—11—1970 ஆம் நாளிட்ட அரசுக் குறிப்பாணே, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் X-A அத்தியா யத்தைச் சேர்த்து தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு 5ஆம் எண் அவசரச் சட்டம் 10-11-1970 முதல் அதிகார முறையில் வெளியிடப்பட்டதை ஒப்பிப் பிறப்பிக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டத் தின் கீழ், கூட்டுறவுத் துறையின் 26-11-70 ஆம் நாளிட்ட 508 ஆம் அரசாணேயில் விதிகள் வெளி யிடப்பட்டன. இத்தச் சங்கங்களின் மாதிரித் துணேவிதிகளுக்குக் கூட்டுறவுத்துறை 26-11-1970ம் நாளிட்ட 509 ஆம் எண்ணில் அரசு ஒப்புதல் அளித் துள்ளது. மேற்சொன்ன அவசரச் சட்டம் அதிகார முறையில் வெளியிடப்பட்டதைக் குறிப்பிட்ட பின் னர் 26-11-1970 ஆம் நாளிட்ட இந்த அரசுக் குறிப் பாணேயின் முக்கியமான பகுதி பின்வருமாறு :—

''2. இந்தக் கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள் அல்லது பிற உழவர்கள் கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்களேப் பதிவு செய்து மேற்பார்வை செய்யும் பணியை முறையான வட் டங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் கூட்டுறவுச் சங்க துணேப் பதிவாளர் கவனிக்க வேண்டும் என்று அரசு கட்டளேயிடுகிறது. சங்கங்கள் பதிவு செய் யப்பட்ட பின்னர் அவற்றிற்குத் தேவையான மூலதனச் செலவுக்காகச் சம்பந்தப்பட்ட நிலவள வங்கிகளிடமிருந்து இந்தச் சங்கங்களுக்குக் கடன் வாங்கித் தர உரிய நடவடிக்கை எடுப்பதை நில வள வங்கிகளுக்குப் பொறுப்பு வகிக்கும் துணேப் பதிவாளர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.''

'' 3. கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கீழ்க்கண் டவை குறித்து அவரது சார்நிலே அதிகாரிகளுக்கும் மாநில நிலவள வங்கிக்கும் தொடர்க்க நிலவள வங்கிகளுக்கும் கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கும் தருந்த கட்டளேகளேப் பிறப்பிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறர் :—

(a) இந்தச் சங்கங்களேத் துரிதமாக அமைத் தல்.

(b) இந்தச் சங்கங்கள் அமைக்கப்பட்ட பின் னர், இவற்றிற்குத் தேவையான நிதிகளே நிலவள

வங்கிகளிடமிருந்து வாங்கித் தர சிரிய நடவடிக்கை எடுத்தல்.

(c) இந்தச் சங்கங்கள் தங்களுக்குத் தேவைப்படும் பராமரிப்புச் செலவிற்காகவும் சங்கங்களே நடத்துவதற்கான செலவிற்காகவும் கூட்டுறவு மத்திய வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெற சிரிய நடவடிக்கை எடுத்தல். இந்த நிதி உதவி, கடன் வழங்கு தொடக்கச் சங்கங்கள் மூலமாக பயிர்க் கடனின் ஒரு பகுதியாகப் பெறப்படும்.

(d) கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள் அவை வாங்கிய பயிர்க் கடன்களை கடன் வழங்கு தொடக்கச் சங்கங்களுக்கு (அல்லது நேரடியாக மத்திய வங்கிகளுக்கு அது பற்றிய தகவலை கடன் வழங்கு தொடக்கச் சங்கங்களுக்குத் தெரிவித்து) ஒழுங்காகத் திருப்பிக் கொடுத்தல். ஆண்டுத் தவணைகளையும் வட்டியையும் நிலவள வங்கிக்குக் கொடுத்தல்.

உறுப்பினர்கள் வாங்கிய பயிர்க் கடனில் ஒரு பகுதி சங்கத்தின் பராமரிப்புச் செலவிற்காகவும் நடத்துவதற்கான செலவிற்காகவும் ஒதுக்கப்படுகிறது. இது, கூட்டுறவு மத்திய வங்கிகள் வைத்து வரும் இறைவைப் பாசனக் சங்கங்களின் கணக்குகளில் உண்மையில் வரவு வைக்கப்படுகிறதா என்பதையும், கடன் வழங்கு தொடக்கச் சங்கங்களின் கணக்குகளில் இந்தக் கடன் வரவு-செலவுகள் எழுதப்பட வேண்டும் என்றாலும்கூட, மேற்படி தொகை, கடன் வழங்கு தொடக்கச் சங்கத்துக்கு அனுப்பப்படாமல் இருப்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். இறைவைப் பாசனச் சங்கங்கள் பணத்தைப் பெறுவதற்கு முன்பு அளவிய எழுத்துப் பணியும் தாமதமும் இல்லாமல் இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும்."

"4. .. .. ."

"5. .....இந்த முழு நிதியுதவி, சிறு உழவர்களின் பயன்களுக்காக வகுக்கப்பட்ட திட்டங்களுக்கு மாநில அரசின் மூலமாகக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், பிற உழவர்கள் மேம்பாட்டு அமைப்பு செயலில் இருக்கின்ற பகுதிகளில் மட்டும் இந்த நிதிவசதி இருக்கக்கூடாது என்றும் கேட்டு மாநில அரசு இந்திய அரசுடன் இதுபற்றித் தனியாக விவாதித்துள்ளது. இப் பிரச்சினை பற்றித் தெளிவான பதில் வரும்வரை வேளாண்மை நிதியுதவிக் கழகத்திடமிருந்து வந்த இந்தக் கடிதத்தின் வரம்பிற்குள் வருகிற திட்டங்களை வகுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 21—7—70 ஆம் நாளிட்ட Sec. 1561/53-70/71 ஆம் குறிப்பு எண்ணைக் காண்க : இந்தக் குறிப்பின் நகல் ஒன்று இத்துடன் இணைக்கப் பெற்றிருக்கிறது. இந்தத் திட்டங்களை வகுப்பதற்குள் ஏற்படும் அனுகூலம் யாதெனில், கடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அரசு 10 சதவீதம் தொகை அளிக்கவேண்டிய பொறுப்பு இருக்காது. பிற பகுதிகளில் இந்த இறைவைப் பாசனச் சங்கங்களுக்கான கடன்கள் நிலவள வங்கிகளின் இயல்பான கடன் திட்டத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டும் அல்லது வேளாண்மை நிதி உதவிக் கழகம் நிதி உதவி செய்யக்கூடிய குறிப்பிட்ட பகுதிகளுக்குக் கூட்டுத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்."

"6. இந்த இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு கைப்பிடிச் சுவர் இல்லாத கிணறுகள் அல்லது குழாய்க் கிணறுகள் அல்லது வடிமுனை குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு ஆக்கூடிய மூலதனச் செலவு குறித்து முறையான மதிப்பீடுகள் தயாரிக்கப்படுவது அவசியம் ஆகும். இதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் நுட்பப் பிரிவில் இருக்கின்ற வேளாண்மை உதவிப் பொறியாளர்—மேற்பார்வையாளரின் பணியை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான், நிலவள வங்கிகளிடமிருந்து கடனுக்குப் பெறப்படும் மூலதனச் செலவுத் தொகை குறைந்த பட்சத் தொகையாக வைத்திருக்கப்படமுடியும். இறைவைப் பாசனச் சங்கங்களில் உள்ள ஒவ்வோர் உறுப்பினரிடமிருந்தும், சங்கங்களே இயக்குதல், பராமரித்தல் தேய்மானச் செலவு ஆகியவற்றிற்காக பயிர் ஒன்றுக்கு வசூலிக்கப்பட வேண்டிய தொகை எவ்வளவு என்பதைத் தொழில்நுட்ப இந்த அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும். மின்சாரக் (அல்லது எண்ணெய்) கட்டணங்கள் மதிப்பீட்டுச் செலவு, தேய்மானம் முதலியவை உட்பட மேல் செலவுகள் ஆகியவற்றைக் கருதிப் பார்த்து அறிவியல் முறையில் இந்த விதம் நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்தக்கூறுகள் அனைத்தையும் கருதிப் பார்க்காமல் குறைந்த விதம் நிர்ணயித்து விட்டால், பின்னர் அந்தத் தொகையை உயர்த்திவது கடினம்."

27—11—1970 ஆம் நாளிட்ட 5426/70 N3 (2) எண் பதிவானரது சுற்றறிக்கையையும் குறிப்பிடலாம். 1970 ஆம் ஆண்டு 5 ஆம் எண் அவசரச் சட்டம் அதிகார முறையில் வெளியிடப்பட்டதை இதுவும் குறிப்பிடுகிறது. இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்படுவது குறித்து இதில் கூறப்படுவதாவது :—

"2. இது குறித்து முன்னர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் அனைத்தையும் ரத்து செய்து அவற்றுக்குப் பதிலாக, இத்துடன் அனுப்பப்படும் மாதிரி அணை விதிகளைப் பின்பற்றியும் இறைவைப் பாசன கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான விதிகளுக்குட்பட்டும் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்படலாம். இறைவைப் பாசனக் கூட்டுறவுச்சங்கங்களை வட்டத்துணைப்பதிவாளர்கள் பதிவு செய்வர். சங்கங்களை அமைப்பவர்கள் அந்தப் பாசனச் சங்கங்களைப் பதிவு செய்யும்படிக் கோரி வட்டத் துணைப்பதிவாளர்களை அணுகி அந்தச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக வெளிப்படையாகத் தெரியவருமானால், துணைப் பதிவாளர்களை அந்தச் சங்கங்களை நேரடியாகப் பதிவு செய்யலாம்.

இது சம்பந்தமாக ஆரம்ப நடைமுறைகளில் தாம தம் இருக்கக்கூடாது. இந்தச் சங்கங்களின் பொரு ளாதார சாத்தியக்கூறு, பாசனம் அளிக்கப்படும் நிலத்தின் பரப்பு, மூலதனச் செலவு முதலியவை பற்றிய நுணுக்கமான விவரங்கள் இந்தச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் தயாரிக்கப் படலாம். எக் காரணத்தைக் கொண்டும் இந்தச் சங்கங்களைப் பதிவு செய்வது தள்ளிப் போடப்படக் கூடாது. இந்தச் சங்கங்களைப் பதிவு செய்தவுடன், அதுபற்றித் தகவல் தெரிவித்து அறிக்கை ஒன்றைப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்,''

''3. சங்கத்தைப் பதிவு செய்வதற்கு முன்பு குறைந்த பட்ச பங்கு மூலதனத்தைச் செலுத்த வேண்டியது அவசியம் என வற்புறுத்த வேண்டியதில்லை. சங்கத்தை அமைப்பவர்கள் அந்தச் சங்கம் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு இயல்பான ஒரு தொகையைச் செலுத்துவார்களே யானால் அதுவே போதுமானதாகும். சங்கத்தின் அளவைப் பொறுத்து 500 ரூபாய் அல்லது 1,000 ரூபாய் ஆரம்ப பங்கு மூலதனத்தை வசூலிக்க ஒரு மாத அவகாசம் சங்கத்தை அமைப்பவர் களுக்கு அளிக்கப்படலாம்.''

பதிவு செய்யப்பட்டதற்குப் பின்னர் உள்ள விஷயங் கள் பற்றி இந்தச் சுற்றறிக்கை குறிப்பிடுவதாவது:—

''6. சங்கம் பதிவு செய்யப்பட்ட பின்னர், அந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளவேண்டிய உழவர்களின் எண்ணிக்கை குறித்தும் பாசனம் அளிக்கப்பெறும் நிலத்தின் பரப்பு குறித்தும், பாசனத் திட்டத்தின் வகை, பாசன வசதிகள் அளிப்பதற்கு ஆகக்கூடிய மூல தனச் செலவு, உண்மையான பராமரிப்புச் செலவு, உறுப்பினர்கள் மூலதனச் செலவைத் திருப்பிச் செலுத்தவும், பராமரிப்புச் செலவு களையும் தண்ணீர் கட்டணங்கள் முதலியவற்றைச் செலுத்தவும் போதுமான நிதிவசதி படைத்தவர் களா என்பதையும் பற்றி துணைப் பதிவாளர்கள் உடனடியாக அறிந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடக்க ஆய்வின் முடிந்த பின்னர் துணைப் பதிவாளர்கள் (நிலவள வங்கிகள்), ஷெ சங்கங்களுக்குத் தேவைப்படும் மூலதனச் செல விற்காக, சம்பந்தப்பட்ட நிலவள வங்கிகளிட மிருந்து கடன் பெற தூரித நடவடிக்கை எடுக்கப் படுமாறு கவனித்துக் கொள்ள வேண்டும்.''

26-11-1970 ஆம் நாளிட்ட அரசுக் குறிப்பாணையையும் 27-11-1970 ஆம் நாளிட்ட பதிவாளரின் சுற்றறிக்கையும் இணைத்துப் பார்க்கின்றபோது எழுகின்ற 3 முக்கியமான கருத்துகள் வருமாறு :—

(1) இறைவைப் பாசனச் சங்கங்கள் விரைந்து பதிவு செய்யப்பட வேண்டும். ஆரம்ப நடை முறைகளில் தாமதம் இருக்கக்கூடாது. ஆனால், பதிவு செய்யக் கருதியுள்ள சங்கம் நல்ல முறையில் செயல்படுவதற்கான வாய்ப்புகள் வெளிப்படை யாகத் தெரிகின்றன என சம்பந்தப்பட்ட துணைப் பதிவாளர் அறிந்துகொண்டால் அப்போது இந்தச் சங்கங்கள் தாமதம் இன்றிப் பதிவு செய்யப்பட வேண்டும்.''

(2) சங்கம் பதிவு செய்யப்பட்ட பின்னர் அந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாக அனுமதிக்கப் படும் உழவர்களின் எண்ணிக்கை, பாசனம் அளிக் கப்படும் நிலத்தின் பரப்பு,பாசன ஆதாரம்,பாசனத் திட்டத்தின் வகை, பாசன வசதிகளை அளிப்பதற்கு ஆகக்கூடிய மூலதனச் செலவு, உண்மையான பரா மரிப்புச் செலவு, மூலதனச் செலவைத் திருப்பிக் கொடுக்கவும், பராமரிப்புச் செலவுகள், தண்ணீர் கட்டணங்கள் முதலியவற்றைச் செலுத்தவும் உறுப்பினர்களுக்குப் போதுமான நிதிவசதி உள்ளதா என்பதையெல்லாம் சம்பந்தப்பட்ட துணைப்பதிவாளர் அறிந்துகொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(3) இந்த இறைவைப் பாசனச் சங்கங் களுக்குக் குழாய் இணைகளை, அல்லது வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு ஆகக்கூடிய மூலதனச் செலவு குறித்து சரியான மதிப்பீடுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழில் நுட்பப் பிரிவில் இருக்கும் வேளாண்மை உதவிப் பொறியாளர் அல்லது வேளாண்மைப் பொறி யாளர், மேற்பார்வையாளரால் தயாரிக்கப்பட்டு பெறப்பட வேண்டும். அப்போதுதான் நிலவள வங்கிகளிடமிருந்து கடனுகப் பெறப்படும் மூல தனச் செலவுத் தொகை குறைந்த பட்ச அளவில் வைத்திருக்கப்பட முடியும். இயக்குதல் செலவு, பராமரிப்புச் செலவு, தேய்மானச் செலவு ஆகிய வற்றிற்காக இறைவைப் பாசன சங்கங்களில் உள்ள உறுப்பினர் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு பயிருக்கு வசூலிக்கவேண்டிய தொகை எவ்வளவு என்பதைத் தெளிவாக இந்த அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும்.''

இந்தச் சங்கங்களுக்குக் கடன்கள் கொடுப்பது பற்றி விவாதிக்கும் போது, இந்த மூன்றுவது கருத்து பற்றி நான் கவலிப்பேன். இறைவைப் பாசனச் சங்கங்கள் பதிவு செய்யப்படுவதற்குச் சட்டத்தின் 9-வது பிரிவின் செயல் வரம்பிலிருந்து மேற்கொன்ன அரசு குறிப்பாணை அல்லது பதி வாளர் சுற்றறிக்கை விலக்கு அளித்திருப்பது சரி யல்ல என்பதை இப்போதைக்குக் குறிப்பிடுவது போதுமானதாகும். இதற்கு முரணுக, சங்கம் நல்ல முறையில் செயல்படுவதற்கான வாய்ப்பு பற்றி பதிவாளர் அல்லது துணைப் பதிவாளர் முதற்கண் அறிந்துகொள்ள வேண்டுமென்று 9-வது பிரிவில் கூறப்பட்டுள்ள நிபந்தனை 27-11-1970 ஆம் நாளிட்ட பதிவாளர் சுற்றறிக்கையில் இரண்டாவது பாராவில் மூன்றுவது வாக் கியத்தில் குறிப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த 4 இறைவைப் பாசனச் சங்கங்களைப் பொறுத்தவரையில் 9-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள தும் மேற்சொன்ன சுற்றறிக்கையில் வலியுறுத்தப்

பட்டிருப்பதுமான இந்த தொடக்க நடவடிக்கைகள் முழுவதுமாகப் புறக்கணிக்கப்பட்டு விட்டன. அமைக்கக் கருதியுள்ள சங்கங்களின் செயல்முறை பற்றிப் பொதுவாக மேலோட்டமாகக்கூட ஆய்வு செய்யவில்லே. எத்தனே நிறைகள் தோண்டப்பட வேண்டும், இவற்றிற்காகும் செலவு மதிப்பீடு எவ்வளவு, பாசனம் அளிக்க வேண்டிய பகுதி,அந்தப் பாசன வாயிலுக்கான மூலதனச் செலவு, இயக்கு குதல் செலவு ஆகியவை குறித்துப் பதிவாளர் ஒருபோதும் கவனம் செலுத்தவே இல்லே.

இப்போது நான் 109,111-வது பிரிவுகளின் விதித்துறைகளேக் கவனிக்கிறேன். இந்த விதித் துறைகளின் அடிப்படையில்தான் மேற்சொன்ன 26-11-1970 ஆம் நாளிட்ட அரசுக் குறிப்பாணே பிறப்பிக்கப்பட்டிருப்பதாக வழக்குரைஞர் கூறினர். ''பதிவு செய்வதற்கான நிபந்தனேகளிலிருந்து சங்கங்களுக்கு விலக்கு அளிக்க அதிகாரம்', என்னும் தலேப்பின்கீழ் 109-வது பிரிவு கூறுவதாவது:—

'' இந்தச் சட்டத்தில் என்ன சொல்லியிருப் பினும், அரசு ஒவ்வோர் இனத்திலும் சிறப்பு ஆணே பிறப்பித்து அதன் மூலம், அரசு விதிக்கக் கூடிய நிபந்தனேகள் எவையேனும் இருப்பின் அவற்றிற்கு உட்பட்டும், பதிவு செய்வது தொடர் பாக இச் சட்டத்தில் கூறியுள்ள நிபந்தனேகள் எவற்றிலிருந்தும் சங்கம் எதற்கும் விலக்களிக் கலாம். ''

111-வது பிரிவு ''பதிவு பெற்ற சங்கத்திற்கு விலக்கு அளிக்க அதிகாரம்'' எனத் தலேப்பிடப் பட்டிருக்கிறது. அது கூறுவதாவது :—

''110-வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத் திற்குப் பாதகமின்றி, அரசு பொதுவான அல்லது சிறப்பு ஆணேபிறப்பித்து அதன்மூலம்.—

(a) இச் சட்டத்தின் விதித்துறை எதிலிருந் தும் (அல்லது விதிகளிலிருந்தும்) பதிவு பெற்ற ஒரு சங்கத்திற்கு பின்னர் வரும் ஒரு நாளிலிருந்து அல்லது முன்னர் ஒரு நாளிலிருந்து விலக்களிக்க லாம். அல்லது

(b) இந்த விதித்துறைகள், ஆணேயில் குறிப்பிடக்கூடிய மாற்றங்களுடன் அந்தச் சங் கத்திற்கு, பின்னர் ஒரு நாளிலிருந்து அல்லது முன்னர் ஒரு நாளிலிருந்து பொருந்தும் எனக் கட்டளேயிடலாம். ''

109, 111ஆவது பிரிவுகளேச் சேர்த்துப் பார்க் கும் போது, இந்தச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின் விதித்துறைகள் எவற்றி லிருந்தும் ஒரு சங்கத்திற்கு விலக்கு அளிக்க வகை தொகை இல்லாமல் அதிகாரங்களே மாநில அரசுக்கு வழங்குவதாகத் தோன்றுகின்றன என் பதில் ஐயம் இல்லே. ஆனல், 26—11—1970 ஆம் நாளிட்ட மேற்சொன்ன அரசுக் குறிப்பாணேயோ 27—11—1970ஆம் நாளிட்ட பதிவாளரின் சுற்றறிக்கையோ 9 ஆவது பிரிவின் விதித்துறை களிலிருந்து அல்லது சட்டத்தின் பிற விதித்துறை களிலிருந்து இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று வெளிப்படையாகக் கூறவில்லே. அல்லது அவசியமான நிபந்தனேக் குட்பட்டு விலக்கு அளிக்கவேண்டும் என்று குறிப் பிடப்படவில்லே. மேற்சொன்ன அரசுக் குறிப் பாணேயிலும் பதிவாளர் சுற்றறிக்கையிலும், இறைவைப் பாசனச் சங்கங்களேத் துரிதமாகப் பதிவு செய்வதற்கான விரிவான உத்தரவுகளேக் குறைத்துக்கொள்ளும்படியும் அந்தச் சங்கம் பதிவு செய்யப்பட்ட பின்னர் அதில் உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவது பற்றியும்தான் பொது வான கட்டளேகள் இருக்கின்றன. மேலும் 109 ஆவது பிரிவின்மேற் சங்கத்தைப் பதிவு செய் வது தொடர்பாக ஒவ்வோர் இனத்திலும் சிறப்பாக ஆணே பிறப்பித்து அதன் மூலம்தான் ஒரு சங்கத்திற்குச் சட்டத்தில் கூறியுள்ள எந்த விதித்துறையிலிருந்தும் விலக்கு அளிக்கப்படலாம்.

மேற்சொன்ன அரசுக் குறிப்பாணே 109 ஆவது பிரிவை ஈர்க்கவில்லே. ஒரு சங்கத்தைப் பதிவு செய்வது தொடர்பாக சட்டத்தில் கூறியுள்ள விதித்துறைகள் எவற்றிலிருந்தும் அந்தச் சங்கத் திற்கு விலக்கு அளிக்கலாம் என்பதை ஈண்டுக் குறிப்பிடலாம். 109 ஆவது பிரிவு சங்கத்தைப் பதிவு செய்யும் நிலேயில் செயல்படுகிறது. சங் கத்தைப் பதிவு செய்த பின்னர் தான் 111 ஆவது பிரிவைச் செயல்படுத்தலாம். அப்படியே இருந் தாலும் 111 ஆவது பிரிவு குறிப்பிட்ட ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்ட பின்னர் அந்தச் சங்கத்திற்கு மட்டுமே பொருந்தலாம். ஆகவே, மேற்சொன்ன அரசுக் குறிப்பாணேயிலும் பதிவாளர் சுற்றறிக்கை யிலும், சங்கத்தைப் பதிவு செய்வது தொடர்பாக இறைவைப் பாசனச் சங்கங்கள் அணேத்திற்கும் பொருந்தத்தக்க பொதுவான கட்டளேகள் இடம் பெற்றிருக்கின்ற வரையில் அவை 109 ஆவது பிரிவின் மீதோ 111ஆம் பிரிவின் மீதோ வரவில்லே. 9 (1) பிரிவின் விதித்துறைகளேப் பொறுத்த வரையில் விவாதிக்கப்படும் இந்தக் கருதுகோளுக்கு 111ஆவது பிரிவைக் குறிப்பிடுவது பொருத்தமாகாது என்பது உண்மை. ஆகவே, அமைக்கக் கருதியுள்ள சங்கங்கள் நல்ல முறை யில் செயல்படுவதற்கான வாய்ப்பு வெளிப்படை யாக இருக்கிறதா என்பதைக் குறித்து ஆணேப் பதிவாளர் அறிந்து கொள்ளாது இருப்பதைப் பொறுத்த வரையில் இது 9ஆவது பிரிவை மீறி யுள்ளதாகும். 9(a) பிரிவின் கட்டளேப் பாங்கில் அமைந்த விதித்துறைகளே இப்படி மீறியிருப்பது முக்கியமான ஒரு முறைகேடு ஆகும்.

இந்தச் சங்கங்கள் 8—2—1971 வரை அவசி மான அறிவிப்புகளேக் கொடுக்கவில்லே என்பதைப் பொறுத்தவரையில், 84C(1)(b) பிரிவு மீறப்பட் டுள்ளதாக வாதிடப்படுகிறது. இதில் அவ்வள வாகப் பொருள் இருப்பதாகத் தோன்றவில்லே. 84C பிரிவு, பதிவுக்குப் பிந்திய நிலேயில் செயல் படுகிறது. 84C பிரிவின் (1) (a) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் இறைவைப் பாசனச் சங்கம் ஒன்றை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வதற்கான ஒரு விண்ணப்பமாகத் தோன்று

கிறது. மேற்படி பிரிவின் (5) உட்பிரிவில் பதிவு பற்றி கூறியிருப்பது, உறுதி அறிவிப்பை அல்லது அதன் மாறுதலே அல்லது அதன் ரத்தை பதிவு செய்வதைக் குறிப்பிடுகிறதே தவிர சங்கத்தைப் பதிவு செய்வது பற்றிக் குறிப்பிடவில்லை.

கமிஷன் நியமனம் செய்த புலனுய்வு அதிகாரிகள் முன்பாக அப்போதைய (கூட்டுறவு) வளர்ச்சிப் பணி அதிகாரி திரு. ஏ. ஹரிஹரன் அளித்த வாக்குமூலத்திலும் அவரது உறுதிமொழிப் பத்திரத்திலும் இறைவைப் பாசனச் சங்கத்தைப் பதிவு செய்வதில் பின்பற்ற வேண்டிய நடைமுறையை நுணுக்கமாக விவரித்துள்ளார். அவருடைய வாக்குமூலத்திலிருந்து இதற்குப் பொருத்தமான பகுதி கீழே சுருக்கிக் கொடுக்கப் பட்டுள்ளது :—

''வளர்ச்சிப் பணி அதிகாரி (கூட்டுறவு) கிராமத்திற்குச் சென்று நிலங்கள் அமைந்திருக்கும் இடத்தைப் பார்த்து, மனுதாரர்கள் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் தானு என்பதை அங்கு விசாரித்து அறிந்துகொள்ளவேண்டும். அந்த நிலத்தில் உள்ள மண்ணை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துடன் இணைந்துள்ள பொறியாளரால், பொறியியல் அதிகாரியால் (வேளாண்மை) சோதிக்கப்பெற்று மனுதாரர்கள் தொருக்கும் இந்த நிலங்கள் பயிர் செய்வதற்கு ஏந்தவையா, கிணறு தோண்ட இந்த நிலங்கள் தகுந்தவைதானு என்பதை அவர் அறிந்து கொள்ள வேண்டும். பின்னர், இறைவைப் பாசனச் சங்கங்கள் நிட்டத்தின் விவரங்களை மனுதாரருக்கு அவர் விளக்கிக் கூறவேண்டும். அமைக்கக் கருதியுள்ள சங்கத்திற்குத் தலைமை ஆதரவாளராக ஒருவரை அவர் களிடையே இருந்து தேர்ந்தெடுக்க அவர் ஏற்பாடு செய்யவேண்டும். அதன் பின்னர், தாம் எடுத்த நடவடிக்கைகளை விளக்கிக்கூறியும், தலைமை ஆதரவாளராக மனுதாரர்கள் தேர்ந்து எடுத்துள்ள நபரை நியமிக்கும்படிப் பரிவுரை செய்தும், உறுப்பினர்களிடமிருந்து ஆரம்ப பங்கு மூலதனத்தை வசூலித்து அதனை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியில் செலுத்த அவருக்கு அதிகாரம் அளித்தும் தொடக்க அறிக்கை ஒன்றைச் சம்பந்தப்பட்ட துணைப் பதிவாளருக்கு அவர் அனுப்பிவைக்க வேண்டும். ஆரம்ப பங்கு மூலதனத்தை வசூலித்த பின்னர், வளர்ச்சிப்பணி அதிகாரி, உறுப்பினர்களின் மற்றொரு கூட்டத்தைக் கூட்டி, சங்கத்தின் துணை விதிகளின் விதித்துறைகளை அவர்களிடத்தில் விளக்கிக்கூறவேண்டும். துணை விதிகளுக்கு அவர்கள் அளிக்கும் ஒப்புதலுடன் சங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருவதற்கான வாய்ப்புகளையும் அதனுடைய நடைமுறை மூலதனத்தையும் பொருளாதார வகையில் அது தனித்து இயங்கக்கூடிய தன்மையையும் விவரித்து ஆரம்பப் பங்கு மூலதனத்தை வசூலித்துச் செலுத்தியது பற்றிய விவரங்களுடன் தனது இறுதி அறிக்கையைத் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 84C பிரிவின்கீழ் துணைப் பதிவாளருக்கு அவர் அனுப்பிவைக்க வேண்டும். அந்த அறிக்கை முறைப்படி இருப்பதாகத் துணைப்பதிவாளர் அறிந்து கொள்வாரேயானால், சங்கத்தை அவர் பதிவு செய்வார்.''

இந்த நான்கு சங்கங்களைப் பொறுத்தவரையில், 30-1-1971 அன்று திருநெல்வேலியில் ஆய்வு இல்லத்தில் முன்னர் அமைச்சர் திரு. ஆதித்த னரைச் சந்திக்கும்படி தமக்குத் தெரிவிக்கப் பட்டதாக திரு. ஹரிஹரன் மேலும் கூறியுள்ளார். அவர் வங்கியின் தலைவர் திரு. புதியமுத்துவுடன் காலை 11 மணிக்கு ஆய்வு இல்லத்துக்குச் சென்ற போது அங்கு வங்கியின் துணைத்தலைவர் திரு. சுப்பையா, அமைச்சரின் நேர்முக உதவியாளர் பகீரதன் ஆகியோர் அமைச்சரின் அறையில் இருந்ததைக் கண்டார். அமைச்சர் இவரிடத்தில் கூறியதாவது :—

''தாதன்குளம் பகுதியிலுள்ள எனது நிலங்களை எனது பணியாளர்கள் சிலருக்கு விநியோகம் செய்துள்ளேன். இந்த நிலங்களைக்கொண்டு இறைவைப் பாசனச் சங்கங்களைப் பதிவு செய்ய நான் ஏற்பாடு செய்துள்ளேன். உங்கள் வங்கி மூலமாக இதற்குச் சங்கங்களுக்குச் சில இலட்ச ரூபாயை நீண்டகாலக் கடனுக அனுமதித்து அதனை விரைவில் வழங்க, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு நான் கட்டளையிட்டுள்ளேன். ஆகவே, கடன் விண்ணப்பங்களைத் தாங்கள் பெறுவிருபோது அதனை விரைவாகக் கவனித்து இந்தச் சங்கங்களுக்குத் தாமதமின்றிக் கடன் வழங்கும்படிப் பார்த்துக் கொள்ளவும்''.

புதிய சங்கங்களைப் பதிவு செய்வதற்கான செயற்குறிப்புகளைத் தொடங்குவது உண்மையில் தனது பணியாக இருக்கும் போது, ''சங்கங்களைப் பதிவு செய்ய ஏற்பாடுகள்'' செய்யப்பட்டு இருப்பது பற்றி திரு. ஹரிஹரன் கேள்விப்பட்டு ஆச்சரியம் அடைந்தார். துணைப்பதிவாளர் அலுவலகத்திற்கு அவர் சென்ற போது பீம்சிங் என்பவர் கொண்டுவந்த இரு விண்ணப்பங்கள் பேரில் துணைப்பதிவாளர் தூத்துக்குடி கீழ, மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கங்களை ஏற்கெனவே பதிவு செய்துவிட்டதாகச் சம்பந்தப்பட்ட எழுத்தர் அவரிடம் கூறினர். துணைப்பதிவாளர் திரு. காந்திதாஸ் அவரது வாக்கு மூலத்

தில், திரு. ஹரிஹரனிடமிருந்து தொடக்க அறிக்கை ஒன்றைப் பெறும்படி தமது அலுவலக உதவியாளருக்குக் கட்டளையிட்டுள்ளதாகக் கூறியுள்ளார். அவ்வாறே, திரு. ஹரிஹரன் சுருக்க அறிக்கை ஒன்றை 30-1-1971 ஆம் நாள் என முந்தைய தேதியைக் குறிப்பிட்டு 3-2-1971 அன்று கொடுத்தார். சங்கத்தைத் தொடங்கும் முதன்மை நபர் நியமனம் பற்றி அவரது அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடப்படாதிருந்தாலும், கீழ தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தைத் தொடங்கும் முதன்மை நபராக ஆர். கிருஷ்ணகாந்தனையும் மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தைத் தொடங்கும் முதன்மை நபராக எஸ். முருகனையும் தூண்டு பதிவாளர் தாமாகவே நியமித்திருக்கிறார் என்பதைக் கோப்பில் அவர் கண்டார்.

சேரக்குளம், மேழப்பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டது குறித்து, திரு. ஹரிஹரன் பின்வருமாறு கூறியுள்ளார்.

'' 23-2-1971 அன்று இரவு சுமார் 7 மணிக்குப் பாளையங்கோட்டையில் உள்ள எனது வீட்டில் நான் இருந்தபோது, திருநெல்வேலி இணைப்பதிவாளர் திரு. எம். சுப்பையா என்னை உடனடியாகப் பார்க்க விரும்புவதாக எனக்குத் தகவல் கிடைத்தது. பாளையங்கோட்டையில் உள்ள அவரது வீட்டிற்கு நான் சென்றேன். அவரது வீட்டில் இணைப்பதிவாளருடன் திரு. பிச்சிங் பேசிக் கொண்டிருந்ததை நான் கண்டேன். மேலும், இரு இறைவைப் பாசனச் சங்கங்களை நான் உடனடியாகப் பதிவு செய்ய வேண்டுமென்றும், இதுபற்றித் தூத்துக்குடி தூண்டுப்பதிவாளருக்குத் தாம் ஏற்கெனவே தெரிவித்து விட்டதாகவும் இணைப்பதிவாளர் என்னிடம் கூறினார்''.

திரு. ஹரிஹரன் மதியம் சுமார் 12 மணிக்குத் தூண்டுப்பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்ற போது, அந்த இரு சங்கங்கள் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிருந்ததை அவர் கண்டார். ஏனைய இரு சங்கங்கள் குறித்துச் செய்தது போலவே முந்தைய ஒரு தேதியிட்டு இரு சுருக்க அறிக்கைகளைக் கொடுக்கும்படி என்னிடம் கேட்கப்பட்டது. சேரக்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவு சங்கத்தைத் தொடங்கும் முதன்மை நபராக ஆர். அரிச்சந்திரனையும் மேழப்பெருமானேரி இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்கும் முதன்மை நபராக திரு. கொட்டால முத்துவையும் தூண்டுப்பதிவாளர் திரு. காந்திதாஸ் தாமாகவே நியமித்தார்.

இந்தச் சங்கங்கள் அமைக்கப்பட்டது தொடர்பாக சம்பந்தப்பட்ட கோப்புகளைப் பார்த்ததில் கீழ்க்காணும் தகவல்கள் தெரிய வருகின்றன.

1. மேழ தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கம் (ஆவணம் எண் 1)

இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைப்பதற்காக 29-1-1971 அன்று உழவர்கள் கூட்டம் ஒன்று காலை 10½ மணிக்கு நடந்திருக்கிறது. இச் சங்கத்தைப் பதிவு செய்யப் பரிவுரை செய்து வளர்ச்சிப் பணி அதிகாரி (கூட்டுறவு) திரு. ஏ. ஹரிஹரன், கருங்குளம் நீர்மானத்தின் நகல் ஒன்றைத் தூத்துக்குடி கூட்டுறவுச் சங்கத் தூணைப் பதிவாளருக்கு 30-1-1971 அன்று அனுப்பிவைத்திருக்கிறார். அதாவது 30-1-1971 அன்று தூத்துக்குடி தூணைப்பதிவாளர் பதிவுச்சான்றிதழ் ஒன்றை வழங்கிறார். அப்போதிருந்த தூணைப்பதிவாளர் திரு. காந்திதாஸ் (சாட்சி 3) அளித்த சாட்சியத்தின்படிச் சங்கத்தைப் பதிவு செய்யும் பணி இரவு 9 மணிக்குத்தான் முடிவடைந்தது. ஆனால், அதே நாளன்று அதாவது 30-1-1971 அன்று பிற்பகல் 4 மணிக்கு அத்தச் சங்கத்தின் உறுப்பினர்களது மற்றொரு கூட்டம் நடைபெற்றதாகவும், அந்தக் கூட்டத்தில் சங்கத்தைப் பதிவு செய்யும் பதிவாளர் பிறப்பித்திருந்த ஆணை உறுப்பினர்களுக்குப் படித்துக் காட்டப்பட்டதாகவும், அந்தக் கோப்பில் நடவடிக்கைக் குறிப்புகள் இருப்பதைப் பார்க்கும்போது இது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது.

இதில் தெரியவந்துள்ள குறிப்பிடத்தக்க மற்றோர் அம்சம் என்னவெனில், 29-1-1971 அன்று காலை 10½ மணிக்கு நடைபெற்ற முதல் கூட்டத்தில் நடவடிக்கைக் குறிப்புகள்கூட சங்கத்தின் முத்திரையிடப்பட்ட கடிதத் தாள் ஒன்றில் எழுதப்பட்டுள்ளன. அதில் பதிவு எண் EE. 481 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கூட்டம் நடைபெற்றபோது சங்கம் பதிவு செய்யப்பட்டிருக்க முடியாது என்பது தெளிவு. இதனால், இந்த ஆவணங்கள் அனைத்தும் உண்மைதானா என்ற பெரும் ஐயப்பாடு எழுகிறது.

2. மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கம் (ஆவணம் எண் 2.)

இச் சங்கத்திற்கு ஆதரவளிக்கும் உறுப்பினர்கள் கூட்டம் 29-1-1971 அன்று காலை 10-30 மணிக்கு நடைபெற்றது. இதற்குத் தயாரிக்கப்பட்ட நீர்மானம் அநேகமாக மேழ தாதன்குளம் சங்கம் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட நீர்மானத்தின் அதே நகலாகும். பெயர்களில்தான் ஒரு சில மாற்றங்கள் தென்படுகின்றன. இவ்விரு நீர்மானங்களும் ஒரே கையெழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்தத் நீர்மானத்தை 30-1-1971 அன்று தூத்துக்குடி தூணைப் பதிவாளருக்கு அனுப்பிவைத்து, திரு. ஏ. ஹரிஹரன் எழுதிய கடிதமும் மேழ தாதன்குளம் சங்கம் சம்பந்தமாக அவர் எழுதிய கடிதமும் ஒன்றாக இருக்கின்றன.

இந்த சந்தர்ப்பத்திலும்கூட பதிவுச் சான்றிதழ் 30-1-1971-ஆம் நாளில் வழங்கப்பட்டது. திரு. காந்திதாஸ் இந்தச் சான்றிதழ் இரவு 9 மணி அளவில் வழங்கப்பட்டது என்று கூறினர். ஆனால், 30-1-1971-ம் நாள் மாலை 4மணி அளவில் சங்க உறுப்பினர்கள் கூட்டம் ஒன்று நடைபெற்றது என்றும் அக் கூட்டத்தில் சங்கத்தின் பதிவைக் குறித்த துணைப்பதிவாளரின் கடிதம் படித்துக் காட்டப்பட்டது என்று குறிப்பிடப்பட்ட தாகவும் அவர் சொன்னார்.

3. சேரகுளம் இறைவைப் பாசனச் சங்கம்

(ஆவணம் எண். 3,)

இந்தச் சங்கத்தை அமைத்த உறுப்பினர்களின் கூட்டமொன்று 23-2-1971-ம் நாள் காலை 9மணி அளவில் நடைபெற்றது. அதே நாளில் திரு. ஹரிஹரன் ஒன்றுபோல் அமைந்த வாசகங்களைக் கொண்ட கடிதம் மூலமாக இந்தத் தீர்மானத்தைத் தூத்துக்குடியிலுள்ள துணைப் பதிவாளருக்கு அனுப்புகிறார். அவர் அதே நாளில் அதாவது 23-2-1971-ம் நாளில் பதிவுச்சான்றிதழ்களை வழங்குகிறார். அதே நாளில் பிற்பகல் 4 மணி அளவில் இன்னொரு கூட்டம் நடைபெறுகிறது. அந்தக் கூட்டத்தில் துணைப் பதிவாளரின் கடிதம் படித்துக் காட்டப்படுகிறது. அதே கூட்டத்தில் சங்கத்துக்கு அலுவலர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்.

4. கீழப்பெருமாநேரி இறைவைப் பாசனச் சங்கம்.

(ஆவணம் எண். 4.)

இந்தச் சங்கத்தைத் தொடங்கியவர்களின் கூட்டம் ஒன்று 23-2-1971-ம் நாளில் காலை 9 மணி அளவில் நடைபெறுகிறது. இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கூட சேரகுளம் சங்கம் தொடர்பாக இதே போல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அப்பட்டமான நகலாகஉள்ளது. இன்னும் முந்தைய தீர்மானம் எத்தக் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்ததோ அதே கையெழுத்தில் இதுவும் எழுதப் பட்டிருந்தது. அதே நாளில் அதாவது 23-2-1971-ம் நாளில் திரு. ஹரிஹரன் ஒன்றுபோல் அமைந்த வாசகங்களைக் கொண்ட தமது பரிவுரையைத் தூத்துக்குடியிலுள்ள துணைப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கிறார். அவர் அதே நாளில் பத்திரப் பதிவுச் சான்றிதழை வழங்குகிறார். 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் நாளில் பிற்பகல் 4 மணி அளவில் உறுப்பினர்கள் மீண்டும் கூடி தங்கள் அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்தக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பும் கூட சேரகுளம் சங்கத்தின் நடவடிக்கைக் குறிப்பைப் போலவே இருப்பதுடன் மட்டுமல்லாமல் அதை எழுதியர் கையெழுத்திலேயே இதுவும் எழுதப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு 1963-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்க விதிகளின் 6-வது விதியின்படி ஒவ்வொரு சங்கமும் பதிவு செய்த நாள் தொடங்கி 3 மாத கால அளவிற்குள் தங்கள் பணியைத் தொடங்கவேண்டும். இந்த விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தில், அது தன்னுடைய முதல் பொதுக் குழு கூட்டத்தை நடத்தி, உறுப்பினர்களை அனுமதித்து, பங்குத் தொகைகளை ஒதுக்கீடு செய்து தம்முடைய குழுவை அமைத்திருந்தால் அப்போது அது தன்னுடைய பணியைத் தொடங்கியுள்ளதாகக் கருதப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இது இவ்வாறு, சங்கத்தின் பணித் தொடக்க அறிக்கை தொடர்புடைய கூட்டுறவு மேற்பார்வையாளரிடமிருந்து வந்தாலொழிய அச் சங்கம் கடன்களும் ஏனைய உதவிகளும் வழங்கப் படுவதற்குத் தகுதியுடையதல்ல. மேற் தாதன்குளம், மேல தாதன்குளம் சங்கங்களைப் பொறுத்தவரை அவை 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் நாளிலேயே செயல்படத் தொடங்கிவிட்டன என்று அறிக்கை ஒன்றைத் திரு. ஹரிஹரன் 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் நாளில் அனுப்பினர். சேரகுளம், கீழப் பெருமாநேரி சங்கங்களைப் பொறுத்தவரை, அவை 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் நாளிலிருந்தே அதாவது அந்த சங்கங்களைத் தொடங்கவேண்டுமென்ற கருத்து உருவான அந்த நாளிலேயே செயல்படத் தொடங்கிவிட்டன என்று 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் நாளில் அவர் ஓர் அறிக்கையை அனுப்பியுள்ளார்.

சங்கங்களைத் தொடங்க விழைகின்ற உறுப்பினர்கள் கூட்டம் கூடி தங்களுக்குள் சங்கத்தை அமைத்துக் கொள்ள வேண்டுமென முடிவு செய்வது, அவர்கள் எல்லாரும் கூட்டுறவு வளர்ச்சிப்பணி அலுவலரை அணுகுவது, அவர் முதற் பார்வையில் இந்தச் சங்கங்கள் வெற்றிகரமாக இயங்கும் என்று மன நிறைவு கொண்ட பிறகு அச் சங்கத்தைப் பதிவு செய்யும் படிப் பரிந்துரை செய்வது, அந்த விண்ணப்பம் சட்டம், விதிகள் இவற்றில் கண்டுள்ள விதித் துறைக்கிணங்க உள்ளது என்றும் உத்தேச துணை விதிகள் சட்டத்திற்கோ விதிகளுக்கோ முரணாக இல்லையென்றும் ஐயமறத் தெளிந்த பின் துணைப் பதிவாளர் அச் சங்கத்தைப் பதிவு செய்வது, மேலும் அவ்வாறு பதிவு செய்தது குறித்து பதிவுச் சான்றிதழில் ஒப்பமிட்டு வழங்குவது, சங்கங்கள் அந்தப் பதிவுச் சான்றிதழைப் பெறுவது, அவை உறுப்பினர்களைச் சேர்க்கவும் அலுவலகப் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கவும் நடப்புக் கணக்கு ஒன்றைத் தொடங்கவும் பங்கு மூலதனத்தைத் திரட்டவும் இது போன்ற காரியங்களுக்காக கூட்டத்தைக் கூட்டுவது அதன் பின்னர்வளர்ச்சிப் பணி மேற்பார்வையாளர் அச் சங்கங்கள் செயல்படத் தொடங்கி

வட்டன என்று 6-வது விதியின் கீழ் சான்றளிப்பது, ஆகிய இவை போன்ற பல்வேறு நடைமுறைகள் அனைத்தும் ஒரே ஒரு நாளுக்குள் அல்லது 36 முதல் 48 மணி நேரத்துக்குள்ளாக நடந்து முடிந்திருக்கும் என்பது புரிந்துகொள்ள இயலாத விந்தையாக உள்ளது. இந்தக் கோப்புகளில் காணப்படுகின்ற ஆவணங்களும் அவற்றைச் சுழ்ந்து கிடக்கிற சந்தர்ப்ப சுழ்நிலைகளும் திரு. ஹரிஹரன் அளித்த சாட்சியத்துக்கு ஆதரவு அளிக்கின்றன என்பது உறுதி. அதாவது தீர்மானங்கள், பணித்தொடக்க அறிக்கை முதலிய ஆவணங்கள் அனைத்தும் திருநெல்வேலியிலுள்ள தினத்தந்தி அலுவலகத்தில் தயாராகத் தயாரிக்கப்பட்டு பின்னர் இந்த கோப்புகளில் சேர்க்கப்பட்டன என்று அவர் கூறிய கூற்றுக்கு இவை ஆதரவளிப்பதாக உள்ளன என்பது உறுதி.

கடன்கள் அனுமதித்தல்.

இந்த வழக்கின் அடுத்த கட்டத்தை இந்த 'நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு 'கடன்கள் அனுமதித்தல்' என்னும் தலைப்பின் கீழ் எடுத்துரைக்கப்படலாம். இந்த மேல், கீழ தாதன்குளம் சங்கங்கள் சார்பில் கடன் விண்ணப்பங்கள் 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ம் நாளில் கொடுக்கப்பட்டன. இந்தக் கடன்கள் அனுமதித்ததில் காணப்படுகின்ற மிகவும் புதிரானதோர் அம்சம் என்ன வென்றால், திரு. ஆண்டியப்பன்—இவர் கடன்கள் குறித்த கூட்டறவுத் துணைப் பதிவாளர்; இவரிடம் கொடுக்கப்பட்ட கடன் மனுக்களிலிருந்து (ஆவணம் எண் 6) இங்கு குறிப்பிடப்படும் புதிரான அம்சம் நமக்குத் தெரியவருகிறது. இந்த கடன் விண்ணப்பங்களை 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ம் நாளிலேயே அதாவது அவை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே அவற்றைச் சரிபார்த்துப் பரிசீலனை செய்துள்ளார் என்று தெரியவருகிறது.

ஆண்டியப்பனின் சாட்சியம்.

ஆண்டியப்பன் 1976-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் நாளில் கமிஷன் முன்னிலையில் உறுதி மொழிப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்தார். அதனைத் தொடர்ந்து அவர் 5-A பிரிவின் கீழ் 1976-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் நாளில் புலனுய்வு அலுவலரால் விசாரணை செய்யப்பட்டார். அவர் தம்முடைய உறுதி மொழிப் பத்திரத்தில் இந்த கடன் விண்ணப்பங்கள் யாவும் திருநெல்வேலியிலுள்ள 'தினத்தந்தி' அலுவலகத்தில் 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ம் நாள் முதல் 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ம் நாள் வரையிலான கால அளவில் பரிசீலனை செய்யப்பட்டன என்று **பிரமாணம் செய்து** கூறியுள்ளார். இது தொடர்பாக இவர் அளித்துள்ள சாட்சியப் பகுதி கீழே எடுத்துக் கொடுக்கப்படுகிறது :—

,, ...1970-ம் ஆண்டு மத்தியில் தொடங்கி 1971-ம் ஆண்டு ஜூலை வரையில் நான் கருங்குளத்தைத் தலைமையிடமாகக்கொண்ட திருநெல்வேலி-2 தொடக்க நிலவள வங்கியின் கூட்டுறவு உதவிப் பதிவாளராகப் பணிபுரிந்தேன். 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ம் நாள் காலையில் நானும், கருங்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த கூட்டுறவு உதவிப் பதிவாளரும், விரிவாக்க அலுவலருமான திரு ஏ. ஹரிஹரனும்— இவரே கருங்குளம் கூட்டுறவு நிலவள வங்கியின் மேலாளருமாவார்—முன்னுள் வட்டார இணைப் பதிவாளராகத் திருநெல்வேலியில் பணியாற்றி வந்த திரு எம். சுப்பையாவைப் பானையங்கோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் எங்களுக்கு இடப்பட்ட கட்டளை மின்படிச் சென்று சந்தித்தோம். அந்தச் சமயத்தில் சென்னை தினத்தந்தியைச் சேர்ந்த பணியாளரான ஆர். ஆர். பிச்சிங் என்பவரும் அங்கு இருந்தார். முன்னுள் கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களில் நேரடியாக அக்கறை கொண்டுள்ளார் என்றும் ஆகவே, மேற்சொன்ன இறைவைப் பாசனச் சங்கங்கள் தாக்கல் செய்துள்ள கடன் மனுக்கள் எவ்விதக் காலதாமதமுமின்றிப் பரிசீலனை செய்யப்பட்டு அவற்றிற்கு உடனடியாகக் கடன்கள் வழங்கப்படவேண்டும் என்று தாம் விரும்புவதாகவும் இணைப்பதிவாளர் என்னிடம் சொன்னார். மேலும் பிணையச் சொத்தாகக் காட்டப்பட்டுள்ள நிலங்களின் மதிப்பை நிர்ணயிக்கையில் நான் யூகித்துக் கருதிக்கொள்ளும் மதிப்பு முறையே பின்பற்றவேண்டும் என்றும் முந்நாள் அமைச்சர் (சி. பா. ஆதித்தனர்) இதை மிகவும் குறிப்பாக வலியுறுத்துகிறார் என்றும் அவர் என்னிடம் கூறினர். திரு. பிச்சிங் கூட என்னிடம் இதையே சொன்னர். இந்த நிலவள வங்கிகளின் துணை விதிகளில் விதிக்கப்பட்டுள்ளவாறு உத்தேசமாக ஊகித்துக் கருதும் மதிப்பு முறை என்பது மேம்பாட்டுக்குரிய செலவையும் சேர்த்துக் கூட்டி வரும் தொகை மதிப்பாகும்.....கிடைத்த மொத்த மதிப்பில் 50 சதவிகித அளவுக்கு கடன் பெறுவதற்குத் தகுதி உண்டு .....''.

''.....இணைப் பதிவாளர் கட்டளையிட்டபடி நானும், திரு. ஏ.ஹரிஹரனும் (பி.எல்.டி.) வங்கியின் சட்ட ஆலோசகர் திரு. பலவேசம், வங்கி மேற்பார்வையாளர் திரு. வேங்கடசுப்பு கருங்குளம் கிராமக் கர்ணம், திரு. பிச்சிங் ஆகியோரும் மற்றும் **ஏனையவர்களும்** தினத்தந்தி அலுவலகக் கட்டிடத்தில் மேல் மாடி

யில் உள்ள அறையில் இந்த கடன் விண்ணப்பங்களைச் சரி பார்த்துப் பரிசீலனை செய்தோம்....''

''இணைப் பதிவாளர் கட்டளையிட்டபடி உத்தேசமாக ஊகித்துக் கருதிக் கொள்ளும் முறையில் நிலங்களின் மதிப்பை நான் நிர்ணயித்தேன். வழக்கமான முறைப்படி மதிப்பிடப்படுகின்ற நிலங்களின் மதிப்பைக் காட்டிலும் இந்த முறையில் மதிப்பிடப்படும் நிலங்களின் மதிப்பு ஒரேயடியாக உயர்த்திக் காட்டப்படுகிறது. இவ்வாறு பரிசீலனை செய்யும் பணியை 8-2-1971 ஆம் நாளில் முடித்தோம். அதன் பிறகு, நானும் ஹரிஹரனும், பிச்சிங்கும் திருநெல்வேலியிலுள்ள (நிலவள வங்கி) துணைப்பதிவாளர் அலுவலகத்துக்குச் சென்று அப்போது அங்கு துணைப் பதிவாளராக இருந்த திரு. ஆர். நாராயணனிடம் அவருடைய பரிவுரைகளைப் பெறுவதற்காக இந்த கடன் விண்ணப்பங்களைக் கொடுத்தோம். ஏனென்றால், கடன் தொகை ரூ. 10,000-க்கு மேற்பட்டிருந்ததாலும், நிலங்களின் மதிப்பு யூகித்துக் கருதும் முறைப்படி மதிப்பிடப்பட்டதாலும் அவருடைய பரிவுரை தேவைப்பட்டது. முதலில் இந்த விண்ணப்பங்களை முறைப்படி ஆய்வு செய்யாமலும், நேரில் இடத்துக்கு வருகை தந்து விசாரணை ஒன்றை நடத்தாமலும் இந்தக் கடன்களுக்குப் பரிந்துரை செய்ய அவர் தயாராக இல்லை. ஆனால், இணைப் பதிவாளர் அவர் மீது தம் செல்வாக்கை மீறக் கடுமையாகச் செலுத்தி மீறவும் வற்புறுத்தியதால் இந்தக் கடன்களுக்கு உடனடியாகப் பரிவுரை அளிப்பதைத் தவிர துணைப் பதிவாளருக்கு வேறு வழியில்லாமற் போனது. பின்னர், இந்தக் கடன் விண்ணப்பங்கள் திருநெல்வேலியிலுள்ள மாநில கூட்டுறவு நில வளவங்கிக் கிளையின் உதவிச் செயலாளர் திரு. இராம கிருஷ்ணனின் ஒப்பளிப்பைப் பெறுவதற்காக அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நான் மேற்கூறிய தாதன்குளம் இறைவைப் பாசனகூட்டுறவுச் சங்கத்துக்கு ரூ. 3,50,000-ம் மேல தாதன்குளம் இறைவைப் பாசன கூட்டுறவு சங்கத்துக்கு ரூ. 3,70,000-ம் வழங்கப்படலாம் என்று பரிந்துரை செய்தேன். இதே தொகைக்கு அதே நாளில் அதாவது 8—2—1971-ம் நாளில் துணைப் பதிவாளரும் பரிந்துரை செய்து உதவிச் செயலாளரும் ஒப்புதல் வழங்கினர். பிறகு மாலையில் நானும் ஹரிஹரனும் சட்ட ஆலோசகர் பல வேசமும் வெங்கட சுப்புவும் பிச்சிங்கும் சங்கத் தலைவரும் மற்றும் பலரும் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள உதவிப் பதிவாளர் அலுவலகத்துக்குச் சென்றோம். அங்கே உறுதிமொழி ஒப்பந்தப் பத்திரங்கள், அடைமானப் பத்திரங்கள் யாவும் அலுவலகத் தலைமை எழுத்தரால் பதிவு செய்யப் பெற்றன. பதிவாளரின் பணி நள்ளிரவுக்குள் முடிந்தது''.

பல்வேறு வகைப்பட்ட மண்ணுக்கும் (நிலம்) வெவ்வேறு வீதங்களில் மதிப்புப் போட்டு இணைகள் தோண்டுவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. நிலத்தைப் பண்படுத்துவதற்காக தனித் தொகைகள் ஒதுக்கப்பட்டன. விசையேற்ற நீர்ப்பாய்ச்சல் கட்டுவதற்கும் நிலத்தைப் பண்படுத்துவதற்கும் உரிய பணிகள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைகளில் சில அடையாள தொகைக்குறைப்புகளைக் கூட்டுறவு உதவிப் பதிவாளர் ஆண்டியப்பன் செய்தார்.

நாம் முன்னர் குறிப்பிட்ட '5-2-1971ஆம் நாள் தொடர்பாகக் காணப்படுகின்ற வியப்புக்குரிய மற்றோர் அம்சம் மேல, கீழ தாதன்குளம் சங்கங்கள் தொடர்பாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட அதே நாளில் மேற்சொன்ன தனிப்பட்ட ஆலோசனை வழங்கும் பொறியாளர் கேசவனால் திருத்த மதிப்புகள் தயாரிக்கப்பட்டன என்பதே என்று கூறப்படுகிறது. இத் திருத்த மதிப்பீடுகளில் குறைந்த அளவு எண்ணிக்கையிலான இணைகளுக்குக் கூடுதலான தொகைகள் ஒதுக்கப்பட்டன. ஆனால், இந்தக் கடன்கள் யாவும் திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் அல்லாமல் மூல மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே அனுமதிக்கப்பட்டன.

நிலங்களைத் தான் பார்வையிட்ட பிறகு முதல் மதிப்பீடுகளைத் தயாரித்ததாகக் கேசவன் கூறியுள்ளார்.

மதிப்பீடுகள் யாவும் துறைப் பொறியாளர்களால் அல்லது அலுவலர்களால் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டுமென்று 26-11-1970 ம் நாளிட்ட 35405/CEI எண்ணுள்ள அரசு ஆணை கட்டளையிடுகிறது என்பதை நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். இவ்வாறு, தனிப்பட்ட ஆலோசனை வழங்கு பொறியாளர் ஒருவரைக் கொண்டு திருத்த மதிப்பீடுகளைத் தயாரித்த தானது மேற் சொன்ன கட்டளைகளையும் தொடர்புடைய விதிகளையும் மீறியதற்கு ஒப்பாகும்.

கீழப் பெருமாளேரி, சேரகுளம் சங்கங்கள் தொடர்பான மதிப்பீடுகள் 25-2-1971-ம் நாளில் மேற் சொன்ன அதே தனிப்பட்ட பொறியாளரான கேசவனால் தயாரிக்கப்படன. இந்த மதிப்பீடுகள் அதே நாளில் ஏற்றுக் கொள்ளப் பட்டன. கடன் விண்ணப்பங்களும் கூட, அதே நாளில் செய்யப்பட்டு அவற்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. (25-2-1971).

கீழ மேல தாதன்குளம் சங்கங்கள் தொடர்பாக கடன்கள் 8-2-1971 ம் நாளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டன. அவற்றிற்கு 9-2-1971ம் நாளில் தொகை வழங்கப்பட்டன. கீழப் பெருமாளேரி, சேரகுளம் சங்கங்களைப் பொறுத்தவரை, கடன்களுக்கு 25-2-1971-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. கடனின் முதல் தவணைத் தொகை 26-2-1971-ம் நாளில் வழங்கப்பட்டது.

இந்தக் கடன் விண்ணப்பங்களைத் தனித்தந்தி அலுவலகத்தில் பரிசீலனை செய்ததனாலேயே அவை சட்டத்திற்குப் புறம்பானவையாகவோ ஒழுங்கீனமானவையாகவோ ஆகிவிடா என்று பிரதிவாதியின் வழக்குரைஞர் திரு. ஜி. ராமசாமி சுட்டிக்காட்டியுள்ளார். கடன்களைத் திரட்டுவதற்கான தீர்மானங்கள் மீது மேல தாதன்குளம் சங்கங்களால் 3-2-1971 ம் நாளிலேயே நிறைவேற்றப்பட்டன என்றும், இருந்த போதிலும் இந்தக் கடன்விண்ணப்பங்கள் 8—2—1971ம் நாளில் தான் முறையாகக் கொடுக்கப்பட்டன என்றும் கீழப்பெருமானேரி, சேரகுளம் சங்கங்களைப் பொறுத்தவரை கடன் விண்ணப்பங்கள் 25—2—1971-ம் நாளில் கொடுக்கப்பட்டன என்றும் எடுத்துரைக்கப் பட்டது. மேலும், கடன் விண்ணப்பங்கள் யாவும் தொடக்க நிலவள வங்கியின் மேலாளராக இருந்த திரு. ஹரிஹரனிடம் 3-2-1971-ம் நாளிலேயே கொடுக்கப்பட்டன என்றும் எடுத்துக் கூறப்பட்டது. இவ்வாறு எடுத்துரைக்கப் பட்ட வாதத்துக்கு ஆதாரமாக இணைப் பதிவாளர் திரு. சுப்பையாவின் சாட்சியத்திலிருந்தும் மேற்கோள் காட்டப்பட்டது.

இந்த வாதத்தில் சாரம் இல்லாமல் இல்லை. இந்த விண்ணப்பங்கள் யாவும் ஹரிஹரனிடம் 3-2-1971-ம் நாளிலேயே ஒப்படைக்கப்பட்டு விட்டன என்று ஹரிஹரன் ஒப்புக் கொண்டுள்ளார். அது உண்மையானால் இந்த விண்ணப்பங்களை அலுவல் முறையிலன்றி சாதாரண நடைமுறையில் பரிசீலனை செய்யும் பணி 3—2—1971-ம் நாளிலேயே தொடங்கியதில் தவறேதும் இல்லை : அதுவும் சட்ட விதித்துறை ஒன்றுக்கு முரணாகவோ அரசு பிறப்பித்த உத்தரவுகளுக்கு முரணாகவோ இல்லாதிருக்கின்ற வரையில் அப்படிச் செய்ததில் தவறேதும் இல்லை.

கடன்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது இதில் எதிர்மனுதாரர் சம்பந்தப்பட்டிருந்தாரா என்பது.

அந்நாள் கூட்டுறவு அமைச்சர் திரு. தி. ப. ஆதித்தனும்-எதிர்மனுதாரர்-இந்தக் கடன்கள் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட விஷயங்களில் சம்பந்தப்பட்டிருந்தாரா என்பது பற்றி ஆய்வு செய்யும் பிரச்னையை இனி எடுத்துக் கொள்கிறேன்.

இந்த முக்கியமான கால கட்டத்தில் திரு. தி. பா. ஆதித்தனார் திருநெல்வேலியில் இருந்தார் என்றும், அவர் நேரடியாக இந்தக் கடன்களுக்கு அனுமதி அளித்து தொகைகள் வழங்கும் பணியை விரைவுபடுத்துமாறு கூட்டுறவுச் சங்கங்கள் இணைப் பதிவாளர் திரு. எம். சுப்பையாவுக்கு உத்தரவிட்டிருந்தார் என்பதும் சாட்சியங்களிலிருந்து தெரிய வந்துள்ளன. இந்த பிரச்சினையில் சம்பந்தப்பட்ட முக்கியமான சாட்சி சுப்பையா ஆவார்.

எம். சுப்பையா (C.W. 36.)

கமிஷனுல் நியமிக்கப்பட்ட புலனுய்வு அலுவலர் 5-A பிரிவின் கீழ் எம். சுப்பையாவை விசாரணை செய்தார். மேலும், அவரே கூட 5-7—1976-ம் நாளில் கமிஷன் முன்னிலையில் உறுதிமொழிப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். இன்னும், கமிஷன் முன்னிலையில் நேர்முகமாக அவர் விசாரணை செய்யப்பட்ட பொழுது, அவர் அளித்த சாட்சியமும் பதிவு செய்யப்பட்டது. பிரதிவாதியின் வழக்குரைஞர் அவரை நன்முகக் குறுக்கு விசாரணை செய்தார். அவர் அளித்துள்ள மூன்று வாக்குமூலங்களும் முக்கியமான தொடர்புடைய அம்சங்களில் ஒன்றையொன்று கணிசமான அளவில் ஒத்துள்ளன.

எம். சுப்பையா (C.W. 36) கமிஷன் முன்னிலையில் அளித்த சாட்சியமாவது : 1969-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் அவர் நிலவள வங்கி துணைப்பதிவாளராக இருந்தார். கூட்டுறவு அமைச்சராக அந்நாளில் இருந்த எதிர் மனுதாரர் திருச்சிராப்பள்ளிக்கு வருகை தரும் போதெல்லாம் சாட்சியின் பணிகளை ஆய்வு செய்வது வழக்கம். 28—1—1971-ஆம் நாளில் அமைச்சர் திரு. தி. பா. ஆதித்தனார் திருநெல்வேலியிலுள்ள ஆய்வு இல்லத்தில் தங்கியிருந்தார். சாட்சியும் அங்குச் சென்றார்.

அப்போது அமைச்சரின் நேர்முக உதவியாளர் இந்த சாட்சியைக் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளராகப் பதவி உயர்த்தி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றை அவரிடம் அளித்தார். இதன் விளைவாகச் சாட்சி பெரும் பூரிப்பு அடைந்தார். அமைச்சருக்கு தான் பெரிதும் நன்றிக் கடன் பட்டிருப்பதாக உணர்ந்தார். அதற்கு அடுத்தநாளில் கூட்டுறவுத் துறை அலுவலர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. சாட்சி அக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார். அமைச்சர் தம்முடைய அதிகாரிகளிடம் இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு விரைவாகப் பதிவு அளிக்கப்படவேண்டும் என்று விரிவான கட்டளைகளைப் பிறப்பித்தார். இந்தக் கூட்டம் நடைபெற்று முடிந்தபிறகு, பிரதிவாதி (தி. பா. ஆதித்தனார்) சாட்சியைக் கூப்பிட்டு பீம்சிங், திருஞானசம்தன் என்னும் இருவர் மேல மேல தாதன குளம் பருதிக்கான இறைவைப் பாசன கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்ற இரண்டு செயற்குறிப்புகளைக் கொண்டு வருவார்கள் என்றும் அவை மிக விரைவாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அவரிடம் தெரிவித்தார். பிறகு, இந்தச் சாட்சி தொலைபேசியின் மூலம் தூத்துக்குடியிலுள்ள துணைப்பதிவாளர் காந்திதாசுடன் தொடர்பு கொண்டார். காந்தி

தாஸ் அப்போது தலைமையிடத்தில் இல்லை. ஆகவே, இவர் அவரைத் தலைமை இடத்திற்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டார். பின்னர் இந்த சாட்சி மேற்சொன்ன கட்டளைகளைத் தொலைபேசியின் வாயிலாகத் துணைப் பதிவாளர் காந்தி தாசுக்குத் தெரிவித்தார். பீம்சிங், கிருஷ்ணகாந்தன் ஆகிய இருவரும் 3-2-1971-ம் நாளில் தம்மைத் தம்முடைய இல்லத்தில் சந்தித்து பின்வருமாறு கூறினர்கள் என்று இந்த சாட்சி சொன்னார். ''இந்தச் சங்கங்கள் பதிவு செய்யப்படுவதிலும் இவற்றிற்குக் கடன் வழங்க ஒப்பளிப்பு வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதிலும் அமைச்சர் கொண்டுள்ள அக்கறையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, கீழ்மட்டத்திலுள்ளகளப் பணியாளர்கள் இந்த பரிசீலனைப் பணியை முற்றிலும் நாங்கள் விரும்புகின்ற வகையில் விரைந்து முடிக்க போதுமான அளவு வீரவாகச் செயல்படவில்லை.''

இத் திட்டம் மிக விரைவாகச் செயற்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படுமாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சாட்சி தம்முடைய சார்நிலைப் பணியாளர்களுக்குத் தெரிவித்தார். திட்டவட்டமான அலுவலக உத்தரவுகளைப் பிறப்பிக்கவேண்டுமென பீம்சிங் தெரிவித்தார். அதற்கிணங்க இந்த கடன்களுக்கு ஒப்பளிப்பு வழங்குகின்ற பணியையே மற்றெல்லாப் பணிகளையும் விட முன்னுரிமை அளித்து மேற்கொண்டு கவனித்து அதனை மிக வேகமாக விரைந்து முடிக்க வேண்டுமென தம்முடைய பணியாளர்களுக்கு உத்தரவு பிறப்பித்தார். மேலும் தம்முடைய சார் நிலை அதிகாரிகள் இரண்டு தரப்புகளும் சங்கங்களுக்கும் கடன் வழங்குவது குறித்த மனுக்களைப் பரிசீலனை செய்யும் பணியை 'நிலைத்தந்தி' அலுவலகத்திலேயே வைத்து கவனிக்குமாறும் தேவைப்படுகின்ற அனைத்து விவரங்களையும் பீம்சிங், கிருஷ்ணகாந்தன் ஆகிய இருவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளுமாறும் தான் உத்தரவிட்டதாகச் சாட்சி ஒப்புக்கொண்டார். சுப்பையா இது குறித்து மேலும் தெரிவித்ததாவது: இந்தக் கடன் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்ட 3-2-1971 முதல் 8-2-1971 வரையிலான நாட்களில் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் திருநெல்வேலியில் முகாமிட்டிருந்தார். இந்தக் கடன்கள் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை எந்த அளவில் உள்ளது என்று அவர் சாட்சியிடம் விசாரித்தார். அவர் அதன் மேல் ஹரிஹரனுக்கும், ஆண்டியப்பனுக்கும், தன்னை வந்து பார்க்குமாறு சொல்லியனுப்பினர். ஹரிஹரன் அவரை 3-2-1971-ம் நாளில் இரவில் திருநெல்வேலியில் உள்ள ஆய்வு இல்லத்தில் வந்து பார்த்தார். சாட்சி அவரிடம் இந்த மனுக்கள் மீதான நடவடிக்கை எந்த அளவில் இருக்கிறதுஎன்பது குறித்து அவ்வப்போது அமைச்சர் தகவல் கேட்டுக்கொண்டிருக்கிறார் என்று சொன்னார். எனவே, சாட்சி இந்த விஷயம் முழுவதும் இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் திருப்தி ஏற்படுகின்ற வகையில் மின்னல் வேகத்தில் முடிக்கப்பட வேண்டுமென்று தாம் விரும்புவதாக ஹரிஹரனுக்குத் தெளிவுபடுத்தினார். 4-2-1971-ம் நாளில் சுருங்குளம் தொடக்க நிலவள வங்கி மேலாளர் ஹரிஹரன், ஆண்டியப்பன், கூட்டுறவு உதவிப்பதிவாளர், நிலவள வங்கி ஆகியோர் சாட்சியைச் சந்தித்தனர். அப்போது பீம்சிங்கும் அங்கு இருந்தார். அவர் கீழ்மட்டத்திலுள்ள பணியாளர்கள் மந்தமாகவும் வேண்டா வெறுப்பாகவும் செயல்படுவதைக் குறித்துப் புகார் செய்தார். இந்தச் சங்க உறுப்பினர்களின் நிலங்களை மதிப்பிடுவது குறித்து உத்தரவுகள் பிறப்பிக்குமாறு ஆண்டியப்பன் கேட்டார். 30-1-1971-ம் நாளில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் விளக்கிக் கூறிய வண்ணம் இந்த நிலங்களை மதிப்பிடுவதற்கு நில மதிப்பை ஊகித்துக் கருதிக்கொள்ளும் முறையைப் பின்பற்றுமாறு சாட்சி அவருக்குக் கட்டளை இட்டார். அமைச்சர் 4-2-1971 முதல் 7-2-1971 வரையில் சில நாட்கள் திருநெல்வேலி ஆய்வு இல்லத்தில் தங்கியிருந்தார். இந்தச் சங்கங்களின் கடன் மனுக்கள் என்னவாயிற்று என்று அமைச்சர் சாட்சியிடம் கேட்டார். இந்த விஷயத்தில் யாவும் இன்னும் சற்று விரைவாக நடைபெறும் என்று இந்த சாட்சி அவருக்கு விடையளித்தார்.

8—2—1971ஆம் நாளில் இணைப்பதிவாளராகிய இந்த சாட்சி தம்முடைய வட்டாரத்திலுள்ள துணைப்பதிவாளர்கள் அனைவரையும் அழைத்து ஒரு கூட்டம் நடத்தினார். நில வள வங்கி துணைப் பதிவாளரான நாராயணனும் இக் கூட்டத்துக்கு வந்திருந்தார். இந்தக் கடன் மனுக்களைப் பரிசீலனை செய்து முடிவு செய்யும் பணி எந்த அளவிற்கு நடந்தேறியுள்ளது என்று அமைச்சர் அடிக்கடி கேட்பதாக சாட்சி அவரிடம் சொன்னார். தான் அந்த மனுக்களை முதலில் ஆய்வு செய்து பரிசீலனை செய்யவேண்டியுள்ளது என்றும் பிறகு மேற்சொன்ன விண்ணப்பங்களுக்குப் பரிந்துரை வழங்கி மாதிரி நிலவள வங்கியின் திருநெல்வேலிக்கினைக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்காக அனுப்பும் முன்னதாக தான் நேரில் சென்று அந்த நிலங்களைப் பார்வையிட வேண்டியுள்ளது என்றும் நாராயணன் சொன்னார். அமைச்சரின் ஆவலையும் விருப்பத்தையும் அறிந்திருந்த காரணத்தால், இந்த சாட்சி அவரிடம் (நாராயணன்) நீங்கள் கூட்டத்திற்குக் கூட வரத் தேவையில்லை, ஆனால், செயல்களைச் செய்து முடித்து, பலனைத் தந்தால் போதுமானது என்று சொன்னதாகவும் அதன் மூலம் இந்தக் கடன்களுக்கு விரைவில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு தொகை வழங்க வேண்டுமென்று தான் குறிப்பிட்டதாகவும் சொன்னார்.

சுப்பையா மேலும் குறிப்பிட்டதாவது: ஒரு கடன் வழங்குவது தொடர்பாகச் சாதாரணமாக

பின்பற்றப்படுகின்ற நடைமுறை என்னவென்றால் அத்தக் கடன் அனுமதிக்கப்பட்ட பிறகு கேட்கப்பட்ட கடன் தொகையில் 50 சதவீதம் மட்டுமே முதற்கண் வழங்கப்படும். அதற்குப் பின்னர் இவ்வாறு முதலில் வழங்கப்பட்ட 50 சத வீதம் கடன் தொகை பயன்படுத்திக் கொள்ளப் பட்டது குறித்து வேளாண்மைப் பொறியாளர் அல்லது கூட்டுறவுப் பணி வளர்ச்சி அலுவலர் அல்லது நிலவள வங்கி கூட்டுறவு உதவிப் பதிவாளர் ஆகிய எவரேனும் ஒருவரிடமிருந்து கடன் தொகை பயன்பாட்டுச் சான்றிதழ் பெறப்படும். இதுபோன்ற ஒரு சான்றிதழைப்பெற்று இக் கடன் தொகையில் 50 சதவீதம் உள்ள முதல் தவணைத் தொகை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப் பட்டு விட்டது என்று முற்றிலும் ஐயமறத் தெரிந்த பின்னரே, கடன் தொகையில் எஞ்சியுள்ள 50 சத வீதம் வழங்கப்படும். ஆனல், அமைச்சர் இவ்வாறு செய்ய வேண்டும் என்று கட்டளையிட்ட காரணத்தால் கீழ, மேல தாதன்குளம் சங்கங் களுக்கு அனுமதிக்கப்பட்ட முழுத் தொகையும் அப் படியே மொத்தமாகக் கொடுத்துவிட வேண்டு மென்று அமைச்சர் கட்டளையிட்டிருந்தபடியால் அவ்வாறே ஒரு மொத்தத் தொகையும் வழங்கப் பட்டது.

இந்தத் தொகையை ஒட்டு மொத்தமாக வழங்க வேண்டுமென்று குறிப்பிட்ட அமைச்சரின் கட்டளைகள் சாட்சியால் நிலவள வங்கி துணைப் பதிவாளர் நாராயணனுக்கு 8—2—1971-ஆம் நாளில் தெரிவிக்கப்பட்டது என்று சாட்சி தெவிவு படுத்தினர். அந்நாளில் அவர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தபோது, நாராயணன் இந்த கடன் தொகை முழுவதையும் ஒட்டு மொத்தமாக வழங்கவேண்டுமா என்று கேட்டு சாட்சியிடம் ஒரு கடிதத்தைப் கொடுத்தார். இப் படி வழங்குவதில் தான் நேரடியாகச் சம்பந்தப்பட வேண்டாமென்று சாட்சி விரும்பிய தால் அவர் நாராயணனிடம் பின்வருமாறு சொன்னர்:

" நீங்கள் என்னுடைய எழுத்து மூலமான அனு மதி வேண்டுமென்று வற்புறுத்தினுல், நீங்களே அமைச்சரிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ள லாம். உங்களுக்கு நான் எழுத்து மூலமான அனு மதி எதுவும் தரமாட்டேன்.....நீங்கள் என் னுடைய கட்டளையை நிறைவேற்றத் தயாராக இல்லையென்றல், நீங்களே போய் அமைச்சரிடம் கட்டளையைப் பெற்றுக் கொள்ளலாம்."

இவ்வாறு கடன் தொகையை மொத்தமாக வழங்க எழுத்து மூலமான அனுமதி அளிப்பதற்கு அவர் ஏன் மறுத்தார் என்று கமிஷனுடைய வழக் குரைஞர் அவரிடம் கேள்வி கேட்டபொழுது அவர் கூறிய பதில் :—

" இது கொள்கை பற்றிய பிரசினை. அமைச்சரே தெரிவித்திருந்தாலும் கூட இணைப்பதிவாளர் என்ற முறையில் நான் அத்தகைய முடிவுஎடுக்க இய லாது.....அரசு அதிகாரி என்ற முறையில், எழுத்து மூலமான இறுதி ஆணை இல்லாத நிலையில் அதிகார பூர்வமில்லாத கட்டளை பிறப்பிக்கப்பட் டிருந்த போதிலும் கூட, இத்தகைய பெரும் பொறுப்பை எடுத்துக் கொள்ளும் நிலையில் நான் இல்லை. "

அலுவலகக் கோப்புகள் எண். 7, 8 ஆகிய வற்றை முறையே கூட்டிக் குறிப்பிட்டு (C.W. 33/3, C.W. 33/5) இந்த சாட்சி 1971ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் மூன்றுவது வாரத்தில் பிம்சிங் தன்னை வந்து சந்தித்ததாகவும் சேர குளத்தில் ஒன்றும் கிழப்பெருமானேரியில் பிறி தொன்றுமாக மேலும் இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுக்கு உரிய செயற் குறிப்புக்களைத் தன்முன்னர் வைத்ததாகவும் சொன்னர். அமைச்சர் இவ்விரு சங்கங்களின் பதிவினும் அக்கறை கொண் டிருப்பதாகவும், மேலும் கீழ மேல தாதன் குளம் சங்கங்கள் தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட அதே விரைவுடனும் முனைப்புடனும் இவ்விரு சங்கங்கள் தொடர்பாகவும் தேவையானவற்றைச் சாட்சி செய்ய வேண்டுமென அமைச்சர் விரும்பிய தாகவும் பிம்சிங் அவரிடம் சொன்னர். சாட்சி முன்பு செய்தது போல இப்போதும் ஹரிஹரன், ஆண்டியப்பன் ஆயோரை வரச் சொல்லி அனுப் பினர். அவர்களிடம் முதல் இரு சங்கங்களுப் பொறுத்தவரையில் எத்தகைய நடைமுறை பின் பற்றப்பட்டதோ அதே நடைமுறையையே இங்கும் பின்பற்றி இந்த இரு சங்கங் களின் கடன் விண்ணப்பங்களையும் விரைவாக முடித்துக் கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். மேலும், சாட்சி தம்முடைய பணியாளர்களிடம் நினைத்தந்தி அலுவலகத்திற்குச் சென்று இந்தக் கடன் விண்ணப்பங்களுப் பரிசிலனை செய்வதற்குரிய தகவல்கள் அனைத்தையும் பெற் றுக் கொள்ளுமாறு அவர்களுக்கு உத்தரவிட்டதா கவும் கூறினர். இதனையடுத்து, இந்த சாட்சி இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகாரி வருகை தந்தது பற்றியும் தான் மேலும் அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளது பற்றியும் சாட்சியத்தில் தொடர்ந்து குறிப்பிட்டார். இப் பகுதியை நாம் பின்னர் பரிசிலனை செய்வோம்.

எஸ். இராமகிருஷ்ணன்,
கடன் வழங்குவதற்கான நடைமுறை.

இந்தச் சங்கங்களுக்குக் கடன்கள் அனுமதிப் பதிலும், வழங்குவதிலும் உதவி புரிந்ததில் எதிர் மனுதாரர் ஈடுபட்டிருந்தது தொடர்பாக அடுத்து வரும்மிகமுக்கியமான சாட்சி எஸ். இராமகிருஷ்ணன் என்பவர்ஆவார். இந்தவழக்குக்குத் தொடர்புடைய காலத்தில் இவர் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலி கிளைக்கு உதவிச் செயலாளராக இருந்தார். கூட்டுறவுச் சங்கங் களுக்குக் கடன்கள் வழங்குவதற்காக இயல்பான

நடைமுறை என்ன என்பது பற்றி இவர் பின் வருமாறு விளக்கினர் :—

''5. தனிப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து வருகின்ற கடன் விண்ணப்பங்கள், தொடர்புடைய தொடக்க நிலவள வங்கிகளால் மட்டுமே பெறப்பட்டன. ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று தொடக்க நிலவள வங்கிகளுக்கும் ஒரு கூட்டுறவு உதவிப் பதிவாளர் (அரசு அலுவலர்) இணைக்கப்பட்டிருந்தார். இவருடைய பொறுப்புகள் அந்தத் தொடக்க நிலவள வங்கி குறித்து சட்டபூர்வமான சோதனைகளும் ஆய்வுகளும் நடத்துதல். கடன்களுக்குப் பிணையமாக வைக்கப் படுகிற அடைமான நிலங்களைப் பார்வையிட்டு, அவற்றை மதிப்பிடுவதும் அவ்வாறு அவர் மதிப்பிட்டதன் அடிப்படையில் அவற்றிற்குக் கடன்கள் வழங்கப் பரிந்துரை செய்தல் ஆகியன. கடன்களின் தொகை ரூபாய் 10,000-க்கு மேற்படுமானால், அத்தகைய நிகழ்வுகளில் நிலவள வங்கிகளின் துணைப் பதிவாளர் (இவர் மாநில அரசின் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு அதிகாரி ஆவார்.) அந்த நிலங்களைப் பார்வையிட்டு மதிப்பீடுசெய்து தாமேகையொப்பமிட்டு அக்கடனுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும். தொடக்க நிலவள வங்கியின் இயக்குநர் குழு அந்தக் கடனுக்கு ஒப்பளிப்பு வழங்கி அதன் மாநில நிலவள வங்கி ஒப்பளிப்பைப் பெறுவதற்காக அதற்குக் கடன் கோப்பினை அனுப்பிவைக்கும். இந்தக் கடன் கோப்பில் உரியைப் பத்திரங்கள் அனைத்தும் இருக்கும். மேலும், கூட்டுறவு உதவிப் பதிவாளரின் அறிக்கை, கடன் வாங்குவோரது உரிமையைக் குறித்துத் தொடக்க வங்கியின் சட்ட ஆலோசகருடைய சட்டக் கருத்து முதலியனவும் இருக்கும். இந்தக் கடன்கோப்புகள் வரப்பெற்றதும் அவற்றை மாநில நிலவள வங்கிக் கினையின் சட்ட உதவியாளர்கள் ஆய்வு செய்வார்கள். அதன் பின்னர், அக் கினையின் உதவிச் செயலாளர் அவற்றிற்கு அனுமதி வழங்குவார். இவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட கடன்கள் குறித்து, சென்னையிலுள்ள மாநில நிலவள வங்கியின் தலைமை அலுவலகத்தில் உள்ள வங்கிக் கடன் குழு அதனை ஏற்று உறுதி செய்வதற்காக அவை அங்கு அனுப்பி வைக்கப்படும். மாநில நிலவள வங்கியின் அனுமதி பெற்ற பின்னர், தொடக்க நிலவள வங்கி, சம்பந்தப்பட்ட கடன் பெறுவோரிடமிருந்து அடைமான பத்திரங்களைப் பெறும். இறைவைப் பாசன சங்கங்களைப் பொறுத்தவரை, அந்தச் சங்கத்தின் செயலாளர், தலைவர் ஆகிய இருவரும் அல்லது செயலாளரும், துணைத் தலைவரும் அந்தக் கடன் தொகைக்காக அடைமானப் பத்திரத்தை எழுதித் தரவேண்டும். தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்டத்தைச் சேர்ந்த 84 (C) பிரிவின்படி செய்யப்படுகின்ற உறுதிமொழியும், 84 (D) பிரிவின் கீழ் செய்யப்படும் ஒப்பந்தமும் இறைவைப் பாசன சங்க உறுப்பினர்களால் செய்யப்பட்டு அவை 84(C) (5), 84 (C) (2) ஆகிய பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட பின்னரே தொடக்க நிலவள வங்கி இறைவைப் பாசனச் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் தொகைகளை வழங்க வேண்டும்.''

''6. தலைமை நிதி உதவி அளிக்கும் வங்கி என்ற முறையில் நான் உதவிச் செயலாளராகப் பணி புரிந்து வருகிற தமிழ்நாடு மாநில நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகளுக்கு நிதி உதவி அளிக்கிறது. அவை அந்தக் கடன் தொகைகளைத் தங்கள் உறுப்பினராயுள்ள கடன் பெறுவோருக்கு வழங்குகின்றன. கடன் பெறுபவர்கள் தனிப் பட்டவர்களாயிருந்தாலும் இறைவைப் பாசனச் சங்கங்களாக இருந்தாலும், மாநில நிலவள வங்கிக்கு அவர்களுடன் நேரடியான உறவுகள் ஏதுமில்லை. தொடக்க நிலவள வங்கிகளுக்கு நிதி உதவி அளிப்பதற்காக மாநில நிலவள வங்கிக்குச் சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியில் ரொக்கக் கடன் வசதிக் கணக்கு ஒன்று உள்ளது. மாநிலக் கூட்டுறவு வங்கி பல்வேறு தொடக்க நிலவள வங்கிகளுக்கும் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கும் ரொக்கக் கடன் வசதி வரையறை அளவுகள் வழங்க வகை செய்துள்ளது. தொடக்க நிலவள வங்கிகளும்கூட மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியில் நடப்புக் கணக்கு ஒன்று வைத்திருந்தன.

''கூடன் வாங்குபவர் இறைவைப் பாசன சங்கமாக இருந்தால், தொடக்க வங்கி அச் சங்கத்தின் பேருக்கு கடன் தொகைக்குக் காசோலை வழங்கும். அந்தச் சங்கம் அந்தக் காசோலையை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியில் கொடுத்துப் பணம் பெற்றுக் கொள்ளும். அந்த வங்கியில் அவ்வாறு கொடுக்கப்பட்ட பணத்துக்காக, அந்த தொடக்க வங்கியின் நடப்புக் கணக்குகளில் பற்று எழுதப்படும். தொடக்க நிலவள வங்கிகள் மட்டுமே மாநில நிலவள வங்கியில் உறுப்பினர்களாக இருந்தன. இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்க நிலவள வங்கிகளின் உறுப்பினர்களாக இருந்தன.''

இது தொடர்பாக இவர் மேலும் அளித்துள்ள சாட்சியமாவது: 8-2-1971 ஆம் நாளில் விழுப் புரத்திலிருந்து இவருக்குத் தொலைபேசி வாயிலாக மாநில நிலவள வங்கித் தலைவரிடமிருந்து உத்தரவுகள் வந்தன. அந்த உத்தரவுகளில், கருங்குளம் தொடக்க நிலவள வங்கியின் மூலமாக கிழ, மேல தாதன்குளம் இறைவைப் பாசன கூட்டுறவுச் சங்கங்கள் விண்ணப்பித்துக் கொண்டுள்ள கடன் தொகைகளை முழுமையும் அனுமதி அளிக்கப்பட்டு அவற்றிற்கு வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. அந்நாள் கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் பிறப்பித்த கட்டளைகளின்படி அந்த இரு கடன்களும் ஒட்டு மொத்தமாக அனுமதிக்கப்பட்டு உடனடியாக

வழங்கப்பட வேண்டும் என்றும் கோப்புகளைப் பரிசீலனை செய்வது போன்ற மற்ற முறை மரபு நடவடிக்கைகள் அனைத்தும் அதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படலாம் என்றும் மாநில நிலவள வங்கியின் தலைவர் இந்த சாட்சியிடம் கண்டிப்பாகத் தெரிவித்தார். அதே நாளில் மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலி கிளைக்கு, கருங்குளம் தொடக்க நிலவள வங்கியின் மூலமாக கீழ, மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கங்களிடமிருந்து இரண்டு கடன் விண்ணப்பங்கள் வந்தன. கீழ தாதன்குளம் சங்கத்துக்கு ரூ. 3,50,000 வழங்கப்படலாம் என்று தொடக்க நிலவள வங்கியின் இயக்குநர் குழு அக் கடன் தொகைக்கு அனுமதி வழங்கியிருந்தது. கூட்டுறவு நிலவள வங்கிகளின் உதவிப் பதிவாளரும், துணைப் பதிவாளரும் அத் தொகை வழங்கப்படலாம் எனப் பரிவுரை செய்திருந்தனர். அது போலவே, மேல தாதன்குளம் இறைவைப் பாசனச்சங்கங்களுக்கு ரூ. 3,70,000 கடன் தொகை வழங்க, தொடக்க நிலவள வங்கியின் இயக்குநர் குழு அனுமதித்திருந்தது. அதற்குத் தொடக்க நிலவள வங்கிகளின் உதவிப் பதிவாளரும், துணைப் பதிவாளரும் பரிந்துரை செய்திருந்தனர். இந்தக் கடன் கோப்புகள், கடன் பெறுவோரின் உரிமைப் பத்திரங்களை ஆய்வு செய்வது முதலான காரியத்துக்காக சட்ட உதவியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அவை, மாநில நிலவள வங்கியின் தலைவரிடமிருந்து வந்திருந்த கட்டளைகளுக்கிணங்க அவற்றை விரைந்து முடிக்க வேண்டியிருந்ததால், பெரும்பாலும் இருந்த அந்தக் கோப்புகளில் உள்ள ஆவணங்களை முறைப்படி ஆய்வு செய்வதற்குச் சட்ட உதவியாளர்களுக்குப் போதுமான கால அவகாசம் இல்லை. அதுபோல சாட்சியும் தம்முடைய அளவில் அந்தக் கோப்புகளை மறு சோதனை செய்வதற்குப் போதுமான கால அவகாசம் இல்லை. இந்த இரண்டு கடன்களுக்கும் அதே நாளில் அனுமதி வழங்கப்பட்டது. அந்தக் கடன் கோப்புகள் அடைமானப் பத்திரங்களை எழுதிக் கொடுப்பதற்காக அன்றே கருங்குளம் தொடக்க நிலவள வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

9–2–1971 ஆம் நாளில் கருங்குளம் தொடக்க நிலவள வங்கி, தேவையான அடைமானப்பத்திரங்களைப் பெற்று அனுப்பி வைத்தது. மேலும், கடன் தொகை முழுவதும் மொத்தமாக வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டது. இவ்வாறு கடன் தொகை முழுவதையும் மொத்தமாக வழங்கியது 4–4–1966 ஆம் நாளிட்ட C. 44/65–66 ஆம் எண்ணுள்ள மாநில நிலவள வங்கியின் சுற்றறிக்கையில் கண்டுள்ள விதிகளை மீறியதாகும் என்று இந்த சாட்சி விளக்கினார். துணைப் பதிவாளர் திரு. ஆர். நாராயணன் தம்முடைய 9–2–1971 ஆம் நாளிட்ட ஆர். சி. 1851/71 ஆம் எண்ணுள்ள கடிதத்தின் மூலம் இந்தக் கடன் தொகை முழுவதையும் மொத்தமாக வழங்குவதற்குப் பரிந்துரைத்தார். அதற்கிணங்க, மேற்சொன்ன கடன் தொகைகளை மாநில நிலவள வங்கி 9–2–1971 ஆம் நாளில் கருங்குளம் தொடக்க நிலவளவங்கிக்கு, தொடக்க நிலவள வங்கியின் நடப்புக் கணக்குகளில் வரவு வைப்பதற்கு குறிப்பிடுகின்ற 9–2–1971 ஆம் நாளிட்ட இசைவுக் கடிதத்தின் மூலமாக வழங்கியது. இந்த சாட்சி இவ்விரு கடன் தொகைகள் தொடர்பான அலுவலகக் குறிப்புகளில் 9–2–1971 ஆம் நாளில் முறையற்ற வகையில் நிதானம் தவறி வேகம் வேகமாக இந்தக் கடன் தொகைகள் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட சூழ்நிலைகளை விளக்கமாகப் பதிவு செய்துள்ளார். கருங்குளம் தொடக்க நிலவள வங்கிக்கு மேற்சொன்ன வகையில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையாகிய ரூ. 7,20,000 தொகைகளையும் குறைவாகவேஅந்த வங்கிக்குத் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியில் ரொக்கக் கடன் வசதி வரையறை இருந்தது என்று இந்தச் சாட்சி தெரிவித்துள்ளார்.

இந்த சாட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது: 24–2–1971 ஆம் நாளில் மாநில நிலவள வங்கியின் செயலாளர் திரு. என். சிவசுப்பிரமணியனிடமிருந்து இவருக்குத் தொலைபேசி செய்தி ஒன்று வந்தது. அந்தச் செய்தியில் வங்கியின் தலைவரது உத்தரவுகள் சாட்சிக்குத் தெரிவிக்கப்பட்டன. அதாவது இவர் உடனடியாகச் சேருகும் இறைவைப் பாசனச் சங்கத்துக்கு ரூ. 5,40,000மும் கீழப் பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கத்துக்கு ரூ. 7,65,000மும் கடன் தொகைகளுக்கு அனுமதி அளிக்கவேண்டுமென்றும் கருங்குளம் தொடக்க நிலவள வங்கியின் மூலமாக இந்தச் சங்கங்களுக்குத் தொகையை வழங்கும் பொருட்டு மேற்குறிப்பிட்ட கடன் தொகைகளில் பாதித் தொகைகளை முதல் தவணைத் தொகைகளாக உடனே வழங்கவேண்டுமென்றும் தலைவரது உத்தரவில் குறிப்பிடப்பட்டது. மேலும், இந்தக் கடன் தொகையை வழங்குவதை விரைவுபடுத்துவதற்காக அவர் இணைப் பதிவாளர் திரு. சுப்பையாவை உடனே சந்திக்க வேண்டும் என்றும் தகவல்கள் உடனடியாக அந்த நாள் கூட்டுறவு அமைச்சருக்கு ஸ்ரீவைகுண்டத்திலுள்ள 55 ஆம் எண் தொலைபேசியுடன் நெடுந்தொலைவு தொலைபேசி தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டுமென்றும் சாட்சிக்குக் கட்டளையிடப்பட்டது. கருங்குளம் தொடக்க நிலவள வங்கியின் மூலமாகச் சேருகும், கீழப் பெருமானேரி சங்கங்களின் கடன் விண்ணப்பங்கள் இரண்டும் 25–2–1971 ஆம் நாளில் வந்து சேர்ந்தன. தலைமை அலுவலகத்தின் கட்டளைகளின்படி, சாட்சி, கடன்களுக்கு உடனடியாக ஒப்புகு லவித்து அதுபற்றி விழுப்புரத்திலுள்ள மாநில நிலவள வங்கித் தலைவருக்கு போனெகிராம் மூலம் தகவல் தெரிவித்தார். இதிலும், கடன்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கு முன்னர், நிலங்களின் மதிப்பைச் சரிபார்த்தல், சோதித்தல், வாங்கும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும்

திறனை ஆய்தல் என முறைமையாகப் பின்பற்றப் படும் நடைமுறை பின்பற்றப்படவில்லை கடன் தொகையின் முதல் தவணைத் தொகை அடுத்த நாளே அதாவது 26–2–1971-ல் வழங்கப்பட்டது. இவ்வாறு கடன் தொகையின் முதல் தவணைத் தொகை வழங்கப்பட்டது பற்றி விழுப்புரத்தில் உள்ள தலைவருக்கும், சென்னை தலைமை அலுவல கத்திலுள்ள செயலாளருக்கும் போனேகிராம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு கடன் தொகையின் முதல் தவணைத் தொகை வழங்கப்பட்டது பற்றி இவர் உடனடியாக 55-ஆம் எண்ணுள்ள தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அந்த நாள் கூட்டுறவுத் துறை அமைச்சருக்கும் தெரிவித்தார்.

கடன் தொகைகளின் இரண்டாவது தவணைத் தொகைகளை சேரளாம் சங்கத்திற்கும், மேற்பெருமானேரி சங்கத்திற்கும் உடனடியாக வழங்குமாறு மாநில நிலவள வங்கித் தலைவர் பிறப்பித்த கட்டளைகளைத் தெரிவித்து, தலைமை அலுவலகத்திலுள்ள உதவிச் செயலாளர் திரு எஸ். அய்யர்சாமியிடமிருந்து தொலைபேசி மூலம் 3–3–1971-ல் கட்டளைகள் வரப்பெற்றன எனவும் சாட்சி தெரிவித்துள்ளார். கடன் தொகையில் கொடுக்கப்பட்ட முதல் தவணைத் தொகை முழுவதும் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று தொடக்க நிலவள வங்கியிடமிருந்து சான்றிதழ் பெற்று பிறகுதான் கடன் தொகையின் இரண்டாவது தவணைத் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்பது வழக்கமான நடைமுறையாகும் என்று சாட்சி விளக்கியுள்ளார். கடன் தொகையின் இரண்டாவது தவணைத்தொகைகளை வழங்குமாறு கோரி தொடக்க நிலவள வங்கியிடமிருந்து வரப்பெற்றவேண்டுகோள் கடிதத்தோடு இச் சான்றிதழ் இணைக்கப்படுவது வழக்கமாகும். இந்த குருபிட்டிதழ்வில் கடன் தொகையின் இரண்டாவது தவணைத் தொகையை வழங்குவதற்காக கருங்குளம் தொடக்க நிலவள வங்கியிடமிருந்து வரையறுக்கப்பட்ட படிவத்தில் பயன்பாட்டுச் சான்றிதழோடு வழக்கமாக அனுப்பப் படும் முறையில் அமைந்த வேண்டுகோள் தங்களது கிளை அலுவலகத்திற்கு வராததால், தலைமை அலுவல கத்தில் உள்ள செயலாளரோடு தொலைபேசி மூலம் பிற்பகல் சுமார் 2-30 மணிக்குத் தொடர்பு கொண்டு பயன்பாட்டுச் சான்றிதழ் வரப் பெருமல் கடன் தொகையின் இரண்டாவது தவணைத் தொகையை வழங்குவதில் உள்ள இடர்ப்பாடுகளை அவருக்கு விளக்கினார். ஆனால், கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் பிறப்பித்துள்ள கட்டளைகள் காரணமாக, கடன் தொகையின் இரண்டாவது தவணைத் தொகை வழங்குவதை எக் காரணத்தைக் கொண்டும் தாமதப்படுத்தக் கூடாது என்று செயலாளர் சாட்சியிடம் கூறினார். அதற்கிணங்க, சேரகுளம், மேற்பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கங்களுக்குக்கான கடன் தொகையில் இரண்டாவது தவணைத் தொகைகள் அதாவது முறையே 2,70,000 ரூபாயும் 3,82,500 ரூபாயும் 4–3–1971-ல் தொடக்க நிலவள வங்கிக்கு, கருங்குளம் கூட்டுறவு நில வள வங்கியின் நடப்புக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்காக, திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிக்கு ஒப்புறுதி அனுமதி (Clearance advice) வழங்கும் அதே முறையில் கொடுக்கப்பட்டன. கடன் தொகையின் இரண்டாவது தவணைத் தொகை வழங்கப் பட்டது குறித்து தலைமை அலுவலகத்தில் உள்ள செயலாளருக்கும் மாநில நிலவள வங்கித் தலைவருக்குத் தெரிவிப்பதற்காக விழுப்புரம் கிளையில் உள்ள உதவிச் செயலாளருக்கும் போனேகிராம் மூலம் சாட்சி தகவலித் தெரிவித்தார். அந்நாள் கூட்டுறவுத்துறை அமைச்சர் எதிர் மனுதாரர் திரு.பி.பா.ஆதித்தனார் திருநெல்வேலிக்கு வருகை தரும்போதெல்லாம் கூட்டுறவுத்துறை, கூட்டுறவு நிறுவனங்களின் அதிகாரிகளை ஆய்வு மாளிகையில் சந்திப்பது வழக்கம் என்று சாட்சி விளக்கியுள்ளார். ஆய்வு மாளிகையில் அமைச்சரை இச் சாட்சியும் சந்திப்பது வழக்கம். கடன் தொகை முழுவதையும் ஒட்டுமொத்தமாக ஒரே தடவையில் மேல தானதர்மங்களும் சங்கங்களுக்கு வழங்குவது தொடர்பாக துணைப் பதிவாளரின் கட்டளைகளை இச் சாட்சி கோரியுள்ளார் என்று அமைச்சருக்குத் தெரிய வந்தபோது, இவ்வாறு கடன் வழங்கப்படுவது ஒரு நிறுவனத்திற்கே யன்றி ஒரு தனிப்பட்டவருக்கல்ல என்பதால் கடன் தொகைகள் முழுவதையும் தவணை தவணையாக வழங்க வேண்டும் என்றுள்ள நிபந்தனையைப் பின்பற்றுமாறு கடன் தொகை முழுவதையும் ஒட்டு மொத்தமாக ஒரே தடவையில் இந்த இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு வழங்க வேண்டுமென்று அமைச்சர் இச் சாட்சியிடம் கூறினார். அமைச்சர் திரு.பி.பா.ஆதித்தனார் இதில் நேரடியாக அக்கறை கொண்டிருந்தார் என்றும் குறிப்பாக இந்த நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களுக்கும் 20,25,000 ரூபாய் கொண்ட கடன் தொகைக்கு உடனடியாக ஒப்புதல் அளிக்கப்பட்டு வழங்கப்பட்டதா என்பதைக் காண்பதில் அமைச்சர் குறியாக இருந்தார் என்றும் இச் சாட்சி மேலும் கூறினார்.

தனது சொந்தப் பாதுகாப்பில் வைத்திருந்த 15-ம் எண் அலுவலகக் கோப்பை கமிஷனின் புலனுய்வு அதிகாரியிடம் இச் சாட்சி தாக்கல் செய்தார். இந்த நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு மட்டுமேறி விரைவாகக் கடன் களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வழங்கப்பட்டது தொடர்பாக தான் பின்பற்றிய முறையற்ற

தடைமுறை பற்றி விளக்குமாறு பின்னர் ஒரு நாளில் தான் கோரப்படலாம் என்று கருதியதால் இக் கோப்பைத் தன்னிடமே வைத்திருந்த தாக இச் சாட்சி விளக்கினர். புலனுய்வு அதிகாரால் 24—7—1976-ல் பதிவு செய்யப்பட்ட அவரது வாக்குமூலத்தில் இந்த ஆவணங்களின் விவரங்கள் பட்டியலிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. இராமகிருஷ்ணனால் தாக்கல் செய்யப்பட்ட மேற்சொன்ன ஆவணங்கள் உரிய பாதுகாப்பிலிருந்து தாக்கல் செய்யப்படவில்லையாதலால் இவற்றை அலுவலக ஆவணங்களாகக் கருத இயலாது என்றும், இவற்றைச் சாட்சியத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்றும் திரு ஜீ. இராமசாமி வாதிட்டுள்ளார், இந்த ஆவணங்கள் அலுவலக ஆவணங்கள்தானு என்பது பற்றி உரிய முறையில் நிரூபிக்கப்படவில்லை என்றும் மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூற்றை நான் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இந்த ஆவணங்களை ஏன் தனது சொந்தப் பாதுகாப்பில் வைத்திருந்தார் என்பதைச் சாட்சி விளக்கியுள்ளார். தனது சொந்தப் பாதுகாப்பிலிருந்து இச் சாட்சியால் தாக்கல் செய்யப்பட்ட பத்திரங்கள், ஆவணங்களின் பட்டியல் ஒன்று 5A பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டது. அவரது உறுதிமொழி வாக்குமூலத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பி புலனுய்வு அறிக்கையின் I-வது தொகுதியில் 579 முதல் 581 வரையிலான பக்கங்களில் காணலாம். இவற்றில் பெரும்பாலானவை, கடிதங்களின் அல்லது அலுவலகக் குறிப்புகளின் அலுவலக நகல்களாகும். இவற்றில் சில சாட்சியால் சென்னை மாநில நிலவள வங்கித் தலைவருக்கும் மாநில நிலவள வங்கி திருநெல்வேலி கிளையின் உதவிச் செயலாளருக்கும் கொடுக்கப்பட்ட போலெஜிராம்களின் நகல்களாகும். இவற்றின் அதிகாரபூர்வமான தன்மை குறித்து ஐயுறுவதற்கு காரணம் ஏதும் இல்லை. இவற்றை ஏன் தனது சொந்தப் பாதுகாப்பில் வைத்து வந்தார் என்பதற்கும் இச் சாட்சி மன நிறைவளிக்கத்தக்க விளக்கத்தை அளித்துள்ளார். இக் கடன்களுக்கு ஒப்புதல் அளித்து வழங்கப்பட்ட தொடர்பான பல்வேறு முறைகேடுகள் குறித்து விசாரணை நடைபெற்றால் அப்போழுது தானும் இடர்ப்பாட்டிற்கு உள்ளாவார் என்று அவர் உணர்ந்திருந்தார். சாட்சிக்கு எதிராக உள்ள அதுபோன்ற எந்தவொரு குற்றச்சாட்டுக்கும் இந்த ஆவணங்கள் முழு விடையை அளிக்கும். எப்படியிருப்பினும், இச் சாட்சி, இந்த முறை கேடுகளுக்கு மனமுவந்து உடந்தையாக இல்லை என்பதை இவை காட்டும்.

திரு. எம். சண்முகம்.

கமிஷனால் நியமிக்கப்பட்ட புலனுய்வு அதிகாரால் 5-A பிரிவின் கீழ் திரு. எம். சண்முகம் 1976-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் நாளில் விசாரணை செய்யப்பட்டார். பின்னர், கமிஷனால் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்புக்குப் பதில் அளிக்கும் வண்ணம் 1976-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ம் நாளிட்ட உறுதிமொழிப் பத்திரம் ஒன்றையும் அவர் தாக்கல் செய்தார். 1976-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் நாளில் (5-A பிரிவின் கீழ்) புலனுய்வு அதிகாரியிடம் தான் அளித்த வாக்குமூலம் தானே முன்வந்து அளித்ததாகும் என்றும், கட்டாயப்படுத்துதல், மிரட்டுதல், அல்லது சொல்லிக்கொடுத்துச் சொல்லுதல் போன்ற தகாத வழிகளின் மூலம் பெறப்பட்டது அல்ல என்றும், அவர் தனது உறுதிமொழிப் பத்திரத்தில் உறுதியாகக் கூறியுள்ளார். இந்த நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டதில் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனருக்கு எந்த அளவிற்குத் தொடர்பு உண்டு என்பதைக் காட்டுவதற்கு, 5-A பிரிவின்கீழ் திரு. எம். சண்முகம் அளித்த உறுதிமொழி வாக்குமூலத்திலுள்ள முக்கிய பகுதிகளை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

"இறைவைப் பாசனச் சங்கங்களைத் தொடங்குவது என்ற திட்டம் 1970-ம் ஆண்டு இறுதியில் தயாரிக்கப்பட்டது. 1971 பிப்ரவரியில் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் அமைக்கப்பட்ட இரு இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு பெருந் தொகையைக் கடனாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அப்போது திரு. சி. பா. ஆதித்தனர் தொலைபேசி மூலம் என்னைக் கேட்டுக் கொண்டார். தற்போது என்னிடம் காட்டப்பட்ட மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலி கிளையின் கடன் கோப்பையும் திருநெல்வேலி ஆய்வு மாளிகை நீள் தொலைபேசிப் பதிவேட்டையும் நான் பார்த்தேன். விழுப்புரத்திலிருந்த என்னிடம் 205-ம் எண்ணுள்ள என்னுடைய தொலைபேசியில் திரு. சி.பா. ஆதித்தனர் திருநெல்வேலியிலிருந்து 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ம் தேதியில் இரண்டு முறை பேசினர் என்பது தற்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. இதே பொருள் குறித்து, திரு. சி. பா. ஆதித்தனர் 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ம் நாளிலும் என்னுடு பேசினர். அவரது வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும் வண்ணம், மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலி கிளையைச் சேர்ந்த உதவிச் செயலாளரோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, தூண்டப் பதிவாளரால் பரிவுரை செய்யப்பட்ட கடன் தொகையைக் மேல தாதன்குளம் மேல தாதன்குளம் சங்கத்திற்கு உடனடியாக வழங்குமாறு அவருக்குக் கட்டளையிட்டேன். 8—2—1971-ல் பிற்பகல் 3.00 மணிக்கு நான் அவ்வாறு கட்டளையிட்டேன் என்று தற்போது எனக்கு நினைவுக்கு வருகிறது.

'24—2—1971-ல் செயலாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, சேரகுளம்,

மூப்பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு அக் கடன் தொகையை உடனடியாக வழங்குமாறு அவருக்கு நான் கட்டளையிட்டது, மாநில நிலவள வங்கிச் செயலாளரின் குறிப்புக் கோப்பை தற்போது நான் பார்வையிடும் பொழுது எனக்கு நினைவுக்கு வருகிறது. மேற்சொன்ன சங்கங்களுக்கு அக் கடன் தொகையை உடனடியாக வழங்குமாறு தொலை பேசி மூலம் திரு. சி. பா. ஆதித்தனர் என்னைக் கேட்டுக் கொண்டார். அதே போல் திரு. சி. பா. ஆதித்தனர் தொலைபேசி மூலம் என் ஞேடு தொடர்பு கொண்டு என்னைக் கேட்டுக் கொண்டவாறு, 3—3—1971-ல் மாநில நிலவள வங்கியின் விழுப்புரம் கிளையின் உதவிச் செயலாளருடன் நான் பேசி, சேரகுளம், கீழப் பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கடன் தொகையின் இரண்டாவது தவணைத் தொகையை உடனடியாக அவற்றிற்கு வழங்குமாறு மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலிக் கிளையின் உதவிச் செயலாளருக்கு எனது தட்டச்சையைத் தெரிவிக்குமாறு அவரைக் கேட்டுக்கொண்டேன். இது தொடர்பாக, 3—3—1971-ம் நாளன்று மாலையில், மாநில நிலவள வங்கியின் செயலாளரோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அக் கடன் தொகை வழங்கப் பட்டுவிட்டதா என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் தொலைபேசி மூலம் என்னைக் கேட்டுக்கொண்டதால்தான், அக் கடன் தொகைகளை உடனடியாக வழங்குமாறு மாநில நிலவள வங்கியின் செயலாளர், உதவிச் செயலாளர் ஆகியோருக்கு நான் கட்டளையிட்டேன். இது தவிர, எனது சொந்தப் பொறுப்பில் நான் எதுவும் செய்யவில்லை''.

இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகாரிகளால் இந்த நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களின் நிலங்கள் 1971 டிசம்பரில் பார்வையிடப்பட்டதற்குப் பிறகு, அவர் தான் ஆற்றிய செயல்கள் குறித்தும் கூறியுள்ளார். அவரது சாட்சியத்தின் அப் பகுதியை நான் பின்னர் எடுத்துக்கொள்கிறேன். 18—7—1976-ம் நாளிட்டு முன்னர் அவரளித்த வாக்குமூலத்தில் என்ன கூறியிருந்தாரோ அதனையே திரு. எம். சண்முகம் தனது உறுதிமொழிப் பத்திரத்திலும் வலியுறுத்திக் கூறியுள்ளார். 5-A பிரிவின்கீழ் தான் முன்னர் அளித்த வாக்கு மூலத்தின் சரியான தன்மை குறித்தும் அதனைத்தானே முன்வந்து அளித்தது குறித்தும் திரு. எம். சண்முகம் அளித்த முதல் உறுதி மொழிப் பத்திரத்தில் உறுதியாகக் கூறியுள்ளார்.

இருப்பினும், திரு. எம். சண்முகம் 7—7—1977-ம் நாளிட்ட இரண்டாவது உறுதிமொழிப் பத்திரத்தை கமிஷன்முன் தாக்கல் செய்துள்ளார்; அதில் குற்றச் சாட்டுகள் அனைத்தையும் மறுத்துக் கூறியுள்ளார் என்று திரு. ஜீ. இராமசாமி குறிப்பிட்டுள்ளார். கமிஷனுல் நியமிக்கப்பட்ட புலனுய்வு அலுவலரால் திரு. எம். சண்முகம் 18—7—1976-ல் முதன் முதலில் விசாரணை செய்யப்பட்டார் என்பதைக் குறிப்பிடலாம். அதன் பிறகு, 5—12—1976-ம் நாளிட்ட அவரது உறுதிமொழிப் பத்திரத்தை அவர் தாக்கல் செய்தார். அதில் 18—7—1976-ல் அவர் என்ன கூறியிருந்தாரோ அதனையே வலியுறுத்திக் கூறியுள்ளார். இந்த பிற்பட்ட உறுதிமொழிப் பத்திரம் 7—7—1977-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நீண்ட இடைவெளிக் காலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன என்பது வெளிப்படையாகும். தேவையான இந்த அலுவலக ஆவணங்களைத் தனது சொந்தப் பாதுகாப்பில் அவர் வைத்திருக்கலில்லையென்றும், யாருடைய வேண்டுகோளின் பேரில் மிகவும் அவசர அவசரமாக இக் கடன்கள் வழங்கப்பட்டதில் அவர் முறைகேடுகளைப் புரிந்தாரோ அவர்கள், தங்களுக்கும் இந்த முறைகேடுகளுக்கும் சம்பந்தமில்லை என்று கூறி, விளக்கினை திரு. இராமகிருஷ்ணன் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளுமாறு செய்துவிடுவர் என்கின்ற அச்சத்தால் திரு. எஸ். இராமகிருஷ்ணன் மேற்சொன்ன ஆவணங்களைத் தனது சொந்தப் பாதுகாப்பில் வைத்திருந்தார் என்பதை இது உறுதிப்படுத்துகிறது. எனவே, 7—7—1977 ஆம் நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில் திரு. சண்முகம் என்ன கூறியுள்ளாரோ அது உண்மையில்லை என்பதில் எனக்கு ஐயமேதுமில்லை.

இந்த கடன்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது, இக் கடன்கள் வழங்கப்பட்டது ஆகியவற்றில் திரு. சி. பா. ஆதித்தனரின் தலையீடு எந்த அளவிற்கு இருந்தது என்பது தொடர்பாக 18—7—1976, 5—12—1976 ஆம் நாட்களிட்ட அவரது வாக்குமூலங்களில் திரு. சண்முகம் கூறியுள்ளதை, திருநெல்வேலி ஆய்வு மாளிகை நீள் தொலைபேசிப் பதிவேட்டிலுள்ள பதிவுகளிலிருந்தும், திரு. சி.பா. ஆதித்தனரின் பயணப் படி குறித்த கோப்புகளிலுள்ள பதிவுகளிலிருந்தும் எடுக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட மறுத்துரைக்க இயலாத ஆவணச் சாட்சியம் உறுதிப்படுத்துகிறது.

திருநெல்வேலியில் எதிர் மனுதாரர் தங்கியது.

இந்த ஆவணங்கள் 5-A. பிரிவின் மேற் புலனுய்வு அலுவலரால் எடுக்கப்பட்டு, கமிஷனின் ஆவணக்கட்டில் சேர்க்கப்பட்டன. 15—2—1969 முதல் 26—4—1973 வரையிலான கால அளவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் செய்த சுற்றுப் பயணங்கள் குறித்த பயணப்படி பதிவேடு, புலனுய்வு அறிக்கையின் I-வது

தொகுதியில் 969-வது பக்கத்தில் 16ஆம் எண் ஆவணமாகக் குறிபிடப்பட்டுள்ளது.

முன்னுரை கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார், திருநெல்வேலி ஆய்வு மாளிகையில் 28—1—1971-ல் முற்பகல் 11-30 மணியிலிருந்து 31—1—1971-ல் பிற்பகல் 1 மணி வரையில் தங்கியிருந்ததாக இப் பதிவேட்டில் பதிவுகள் காட்டுகின்றன.

புலனுய்வு அறிக்கையின் அதே பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 18 ஆம் எண் ஆவணம், திருநெல்வேலி, ஆய்வு மாளிகையின் பார்வையாளர்கள் புத்தகம் ஆகும். கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார், திருநெல்வேலி, ஆய்வு மாளிகையில் 3—2—1971-ல் முற்பகல் 11-30 மணியிலிருந்து 12—2—1971-ல் காலை 8-30 மணிவரையிலும் அதன் பிறகு 12—2—1971-ல் காலை 9-00 மணியிலிருந்து 13—2—1971-ல் முற்பகல் 11-30 மணி வரையிலும் தங்கியிருந்தார் என்று இப் புத்தகத்திலுள்ள பதிவுகள் காட்டுகின்றன. இப் பதிவுகள், இப் புத்தகத்தின் 3-4 பக்கங்களில் காணப்படுகின்றன.

புலனுய்வு அறிக்கையின் அதே பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 19 ஆம் எண் ஆவணம், திருநெல்வேலி, ஆய்வு மாளிகையின் நீள் தொலைபேசிப் பதிவேடு ஆகும். திரு. சி. பா. ஆதித்தனார், திருநெல்வேலி ஆய்வு மாளிகையில் 1971 பிப்ரவரியில் தங்கியிருந்தபோது, 7—2—1971-ல் ஒரு தடவையும், 8—2—1971-ல் பிறிதொரு தடவையும் வலதாடு நிலவள வங்கியின் தலைவர் திரு. எம். சண்முகத்தோடு நீள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார் என்பதை, இப் பதிவேட்டின் 40, 44 ஆம் பக்கங்களில் உள்ள பதிவுகள் காட்டுகின்றன. தமிழ்நாடு மாநில நிலவளவங்கிச் செயலாளர் திரு. எம். சிவசுப்பிரமணியமோடும் சென்னை, மாநில நிலவளவங்கி உதவிச் செயலாளர் திரு. எஸ். இராமகிருஷ்ணனோடும் திரு. சி. பா. ஆதித்தனார் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார் என்பதை இப் பதிவேட்டில் உள்ள நீள் தொலைபேசி குறித்த பதிவுகள் காட்டுகின்றன. 8—2—1971-ல் விழுப்புரத்திலிருந்து திரு எம். சண்முகம் நீள் தொலைபேசி மூலம் திரு. எஸ். இராமகிருஷ்ணனோடு தொடர்பு கொள்ள முயன்றார் என்பதும், மேற்கு மேலநாத்தன் குளம் சங்கங்களிலிருந்து கடன்கள் கோரி அனுப்பப்பட்ட கோப்புகள் ஒப்புதல் வழங்கப் படுவதற்காக திரு. எஸ். இராமகிருஷ்ணன், வரப்பெற்ற பெரும்பாலும் அதே நேரத்தில் அதாவது பிற்பகல் 3-00 மணிக்கு அவர் பேசி முடித்தார் என்பதும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

மேலும், 15 ஆம் எண் ஆவணம் ஒன்று உள்ளது. இது சென்னை, மாநில நிலவள வங்கியின் கோப்பாகும். இதில் பத்து தாள்கள் அடங்கியுள்ளன. சென்னை, தலைமைச் செயலகத்தில் 5-A பிரிவின் கீழ் கமிஷனின் புலனுய்வு அலுவலரால் விசாரணை செய்யப்பட்டபோது 24—7—1976-ல், திரு நெல்வேலி, மாநில நிலவள வங்கியின் அந்நாள் உதவிச் செயலாளர் திரு. இராமகிருஷ்ணனுல் ஒப்படைக்கப்பட்ட 1-முதல் 57-பக்கங்களைக் கொண்ட கோப்பான 20 ஆம் எண் ஆவணத்துடன் இதனைக் குழப்பிக் கொள்ளக்கூடாது.

திரு. இராமகிருஷ்ணனுல் தாக்கல் செய்யப்பட்ட இந்த ஆவணங்களை, திரு. ஜீ. இராமசாமி கவனமின்மையால் 15 ஆம் எண் கோப்பு என்று தவறுதலாகக் குறிப்பிட்டுள்ளார். 15 ஆம் எண் கோப்பு அலுவலகத்தின் பாதுகாப்பிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது. சேரளமும், மேற்குப் பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கங்கள் சார்பாக 24—2—1971-ல் ஒப்புதல் வழங்கப்பட்ட கடன் தொகைகளின் முதல் தவணைத் தொகையை உடனடியாக வழங்குவதற்கும், முதல் தவணைத் தொகை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வாரகாலத்திற்குள் பயன்பாட்டு அறிக்கையைப் (சான்றிதழைப்) பெருமலே கூட இரண்டாவது தவணைத் தொகையை வழங்குவதற்கும், மாநில நிலவளவங்கியின் தலைவரிடமிருந்து தொலைபேசி மூலம் வரப்பெற்ற கட்டளைகளின்பேரில் சென்னை, மாநில நிலவள வங்கியின் முன்னுள் செயலாளர், உதவிச் செயலாளர் ஆகியோரால் தயாரிக்கப்பட்ட அலுவலகக் குறிப்பும் மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலி கிளையின் உதவிச் செயலாளரிடமிருந்து வரப்பெற்ற பதில் தகவலும் அதில் அடங்கியுள்ளன. இந்த இரு இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு கடன்கள் ஒப்புதலித்து வழங்கப்பட்டதில் முன்னுள் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தார் என்பதற்குச் சான்றாக உள்ள தகவல்களும் இதில் அடங்கியுள்ளன.

கடன் தொகை முழுவதையும் மேற்குப் பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கத்திற்கும், சேரளமும் இறைவைப் பாசனச் சங்கத்திற்கும் வழங்குமாறு மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலிக் கிளையின் உதவிச் செயலாளருக்குக் கட்டளைகளைத் தெரிவிக்குமாறு தொலைபேசி மூலம் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் 3—3—1971 முற்பகலில் தனக்குக் கட்டளையிட்டார் என்று தொடர்புடைய அக்கால அளவில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் நிலவள வங்கியின் முன்னுள் செயலாளராக இருந்த திரு. என். சிவசுப்பிரமணியம் தனது உறுதிமொழிப் பத்திரத்தில் கூறியுள்ளார். திருநெல்வேலி, மாநில நிலவள வங்கிச் செயலாளரோடு தொலைபேசி மூலம் உரையாடியதைச் சாட்சி தன்னிடம் தெரிவிக்கவேண்டுமென்றும் அமைச்சர் விரும்பினார். அவ்வாறே சாட்சி நடந்துகொண்டார். தலைவரின் தகவலுக்காக 3—3—1971 ஆம் நாளிட்ட

குறிப்பில் அவர் இதைப் பதிவு செய்துள்ளார். இது 21 ஆம் எண் ஆவணத்தில் காணப்படுகிறது.

கடன் விண்ணப்பங்களை உடனடியாகச் சரி பார்க்க வேண்டும் என்றும், உரிமைப் பத்திரங்கள் முதலியவற்றை ஆய்வு செய்யும் வழக்கமான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியதில்லையென்றும் உதவிச் செயலாளர் திரு. இராமகிருஷ்ணன் தங்களுக்குக் கட்டளையிட்டதாக, திருநெல்வேலி மாநில நிலவள வங்கியின் சட்ட உதவியாளர் களான திரு. எஸ். நடராசன், திரு. ஆர். சீனிவாசன், திரு. ஆர். சீனிவாசம் ஆகிய மூவரும் கமிஷன்முன் தாக்கல் செய்த தங்களது உறுதி மொழிப் பத்திரங்களில் தெரிவித்துள்ளனர். சாதாரணமாக, சங்கங்களிடமிருந்து வரப் பெறும் கடன் விண்ணப்பங்களைச் சரிபார்த்த பிறகு, இந்தச் சாட்சிகள், அவற்றின் உரிமைப் பத்திரங்கள் முதலியவை குறித்து மனுதாரரு அடைவதன்பேரில், தங்களது அலுவலகக் குறிப்புகளில் பின்வருமாறு எழுதுவது வழக்கமாகும்:

''உரிமைப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கனவாக உள்ளன. கடனுக்கு ஒப்புதல் அளிக்கலாம்''. ஆனால், மேற்படி மேல் தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கங் களோ பொறுத்தமட்டில், இவர்கள் தங்களது அலுவலகக் குறிப்புகளில், ''உரிமைப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கனவாக உள்ளன'' என்று குறிப்பிடவில்லை. ஏனெனில், அந்த உரிமைப் பத்திரங்களை அவர்கள் சரிபார்க்கவே யில்லை.

சேரகுளம், கீழப்பெருமாளேரி இறைவைப் பாசனச்சங்கங்களின் கடன் விண்ணப்பங்களைப் பொறுத்த நிலைமையும் இதுவேதான். அதே நாளில் கடன்களுக்கு ஒப்புதல் வழங்கவேண்டும் என்ற தனக்குக் கட்டளைகள் வரப்பெற்றதாக உதவிச் செயலாளர் அவர்களிடம் தெரிவித்தார். உரிமைப் பத்திரங்களையும், ஏனைய ஆவணங் களையும் சரிபார்க்க அவர்களுக்கு வாய்ப்பு ஏதும் அளிக்கப்படவில்லை. எனவே, அவர் கள் 25—2—1971 ஆம் நாளிட்ட அலுவலகக் குறிப்பில் சுருக்கொப்புத்தை மட்டுமே குறிப்பிட்டு கையொப்பம் இட்டனர். உதவிச்செயலாளர் அதன் கீழ், பச்சைமையில் ''ஆம்'' என்று எழுதிக் கையொப்பம் இட்டு 25—2—1971 எனத் தேதி யிட்டார்.

கடன் தொகை முழுவதையும் ஒட்டு மொத்த மாக ஒரே தடவையில் வழங்குமாறு கேட்டுக் கொண்டு 8—2—1971 பிற்பகல் 2 மணிக்கு, கீழ, மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கங்களால் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப் படும் தீர்மானங்களை மீண்டும் ஆராயத் தொடங்கினால் இந்தத் தீர்மானங்களும், ''தினத் தந்தி'' அலுவலகத்தில் மேலாளர் திரு. ஹரி ஹரனால் எழுதப்பட்டு, சங்கத்தின் தலைவர்கள், ஏனைய ''இயக்குநர்கள்'' ஆகியோரின் கையொப் பங்களைப் பெறுவதற்காக மேற்பார்வையாளர் திரு. வேங்கட சுப்பு மூலம் அனுப்பப்பட்டன. இரண்டு தீர்மானங்களின் நகல்களில் திரு. ஹரி ஹரன் சான்றொப்பம் இட்டுள்ளார். இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட நேரத்தி லிருந்து ஒருமணி நேரத்திற்குள் திருநெல்வேலி மாநில நிலவள வங்கிச் செயலாளரை அடைந் துள்ளன என்பதிலிருந்து இந்த நடவடிக்கை கள் குழ்ச்சித் திறத்தால் கையாளப்பட்டுள்ளன என்பதோடு இக் கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யும் அதிகாரிகள் அவர் களுக்கு மேலுள்ள அதிகாரிகளால் எல்லா நிலை களிலும் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது. ஏற்கெனவே குறிப் பிடப்பட்டவாறு இக் கடன் தொகைகள் முறையே 3,50,000 ரூபாயும் 3,70,000 ரூபாயும் அவற் றிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நாட்களுக்கு அடுத்த நாளில், கீழ, மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கங்கள் பேரில் காசோலைகள் மூலம் வழங்கப்பட்டன.

இச் சங்கங்களின் உறுப்பினர்களால் அளிக்கப் பட்ட உறுதிமொழிகள், ஒப்பந்தப் பத்திரங்கள் கருவூலம் தொடக்க நிலவள வங்கி பெயரில் இச் சங்கங்களால் எழுதிக்கொடுக்கப்பட்ட அடைமான பத்திரங்கள் ஆகியவை அவசரம் அவசரமாக 8—2—1971 இரவு ஸ்ரீவைகுண்டம், உதவித் பதிவாளர் அலுவலகத்தில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டன என்பது குறித்து, இந்த அலுவலகத்தின் உதவியாளர் திரு. P. குமார சுந்தரம் நடந்தது நடந்தபடி சித்தரித்துள்ளார்.

P. குமார சுந்தரம்.

ஸ்ரீவைகுண்டம், உதவிப் பதிவாளர் அலுவல கத்தின் உதவிப்பதிவாளர் 7—2—1971 லிருந்து 9—2—1971 வரை தற்செயல் விடுப்பில் இருந்ததால், உதவிப் பதிவாளர் அலுவலகத்திற்குத் தற்காலிகமாகத் தான் பொறுப்பு வகித்ததாக இந்த சாட்சியும் இந்த அலுவலகத்தின் உதவியாள ருமான திரு. P. குமாரசுந்தரம் 30—11—1976 ஆம் நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத் தில் கூறியுள்ளார். 8—2—1971 மாலை சுமார் 6-30 மணிக்கு கூட்டுறவு உதவிப் பதிவா ளர் திரு. ஆண்டியப்பன், கிருஷ்ணகாந்தன், வல்லநாடு கருவூலம் தொடக்க நிலவள வங்கி மேலாளர் ஹரிஹரன், பத்திர எழுத்தர் உடையார் பிள்ளை (C. W. 39) பீம்சிங் ஆகியோர் அவரது அலுவலகத்திற்கு வந்தனர். கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி.பா. ஆதித்த னரின் பணி தொடர்பாக உடனடியாகப் பதிவு செய்தால்தான் அடுத்த நாளில் வங்கியிடமிருந்து கடன் பெற ஏற்பாடு செய்ய முடியுமாதலால் உடனடியாகப் பதிவு செய்யப்பட வேண்டிய

ஒரு சில ஆவணங்களைக் கொண்டு வந்துள்ளதாகத் திரு. பீம்சிங்கும் திருஷ்ண காந்தனும் சாட்சியிடம் தெரிவித்தனர். மாலே 5 மணிக்குப் பிறகு எந்தவிதப் பதிவும் செய்யப்பட மாட்டாது என்று அவர்களுக்குச் சாட்சி தெரிவித்தார். இறைவைப் பாசன கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான அரசு ஆணையின் நகல் ஒன்றைத் திரு. திருஷ்ணகாந்தன் அவரிடம் கொடுத்தார். அந்த ஆணையின் நகல் உரிய முறையில் உதவிப் பதிவாளர் அலுவலகத்திற்கு வரவில்லையாதலால், அப் பத்திரங்களைப் பதிவு செய்ய அவர் மேலும் தயங்கினர். கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி.பா. ஆதித்தனார் ஸ்ரீவைகுண்டத்தில் தனது இல்லத்தில் முகாமிட்டுள்ளார் என்றும், இப் பத்திரங்களை உடனடியாகப் பதிவு செய்வதில் அவர் நேரடியாக அக்கறை கொண்டுள்ளார் என்றும் திருஷ்ணகாந்தனும் பீம்சிங்கும் இச் சாட்சியிடம் தெரிவித்தனர். அமைச்சர் நேரடியாக ஆணைகள் பிறப்பித்தால் இப் பத்திரங்களைப் பதிவு செய்வதில் தங்களுக்கு மறுப்பு ஏதும் இல்லையென்று இச் சாட்சி கூறினர். இச் சாட்சியைத் திரு. திருஷ்ணகாந்தனும் திரு. பீம்சிங்கும் ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துச் சென்று அமைச்சர் திரு சி.பா. ஆதித்தனரிடம் அறிமுகப்படுத்தினர். அப் பத்திரங்கள் அனைத்தையும் அன்றிரவே பதிவு செய்து முடிக்கவேண்டும் என்றும், மாலே 5 மணிக்கு முன்னதாக ஏதேனும் ஒரு நேரத்தில் பதிவு செய்யப்பட்டதாகக் காட்டு மாறும் இச் சாட்சியிடம் அமைச்சர் அப்போது கட்டளையிட்டார். அதன் பிறகு இச் சாட்சி எழுத்தர்கள் ஆண்டி, குப்சாமி ஆகியோரை அழைத்து இப் பத்திரங்களைப் பதிவு செய்யும் பணியை மேற்கொண்டார். அப் பணி இரவு சுமார் 1 மணிக்கு முடிக்கப்பட்டது. இப் பத்திரங்களுக்கான உரிய பத்திரப் பதிவுக் கட்டணம் 1,778·50 ரூபாயும் 1,878·50 ரூபாயும் முறையே திருஷ்ணகாந்தனுலும் முருகனுலும் செலுத்தப்பட்டன. அட்டமான பத்திரங்களைப் பதிவு செய்வதற்காக அமைச்சர் திரு. சி.பா. ஆதித்தனர் கூறியதைப்போல் பொய்யான ஒரு நேரத்தில் பதிவு செய்யப்பட்டதாகக் காட்டப்பட்டது.

மேழப்பெருமாளேரி இறைவைப் பாசனச் சங்கமும், சேரகுளம் இறைவைப் பாசனச் சங்கமும் முறையே 8,91,620 ரூபாயும் 6,07,790 ரூபாயும் கடன் கோரி 24—2—1971 (அதாவது அவை பதிவு செய்யப்பட்டதற்கு மறு நாள்) விண்ணப்பங்களைத் தாக்கல் செய்தன என்று ஆண்டியப்பன் மேலும் கூறியுள்ளார். இந்தக் கடன் விண்ணப்பங்களில் அச் சங்கங்களின் தலேவர்கள் முறையே கொத்தன முத்துவும், அரிச்சந்திரனும் கையொப்பமிட்டனர். 24—2—1971-ல் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் தீர்மானங்கள் அந்த விண்ணப்பங்களோடு சேர்த்து அனுப்பி வைக்கப்பட்டன.

மேழப்பெருமாளேரி சங்கம் 7,20,000 ரூபாய் செலவில் 30 கிணறுகளைத் தோண்டவும் 1,33,620 ரூபாய் செலவில் நில மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் ''தீர்மானித்தது''. அதேபோல் சேரகுளம் சங்கம் 4,80,000 ரூபாய் செலவில் 24 கிணறுகளைத் தோண்டவும் 1,27,790 ரூபாய் செலவில் நில மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் தீர்மானித்தது. மேழ, மேல தாதன்குளம் சங்கங்களைப் போல, தனிப்பட்ட ஆலோசனைப் பொறியாளர் திரு. சேவனுல் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் இந்தக் கடன் விண்ணப்பங்களோடு சேர்த்து அனுப்பப்பட்டிருந்தன. 26—10—1970-ஆம் நாளிட்ட 35405 CEI/70-ஆம் எண்ணுள்ள அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் இந்த மதிப்பீடுகள் எதுவும் இப் நுமையின் உதவிப் பொறியாளர் அல்லது வேளாண்மைப் பொறியாளர் அல்லது மேற்பார்வையாளரால் தயாரிக்கப் படவில்லே.

இந்த இரு கடன் விண்ணப்பங்களைப் பகுப்பாய்வு செய்வதும், முன்னர் செய்யப்பட்ட அதே முறையில் மீம்சிங்கின் மேற்பார்வையில் நடைபெற்றது.

ஏற்கெனவே கூறியுள்ளதுபோல், மேழப்பெருமாளேரி சங்கத்திற்கு 7,65,000 ரூபாயும், சேரகுளம் சங்கத்திற்கு 5,40,000 ரூபாயும், கடன் வழங்க சரிபார்த்து, பரிவுரை செய்து, வழங்கியது ஆயினை 25—2—1971-ல் துணேப்பதிவாளர் ஆ. நாராயணனும், திருநெல்வேலி, மாநில நிலவள வங்கியின் சட்ட உதவியாளர்கள் நடராசன், வினுசாசு ஆகியோராலும் நடத்தப்பட்டன.

இந்தக் கடன் விண்ணப்பங்கள் இவ்வளவு விரைவில் பகுப்பாய்வு செய்யப்பட்டு கடன்கள் வழங்கப்பட்டதற்கான காரணம், தொடர்புடைய கால அளவில் திருநெல்வேலி ஆய்வு மாளிகையில் முன்னுள் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் முகாமிட்டிருந்து இப் பணியாளர்களைக் கட்டாயப்படுத்திக் கட்டளைகள் பிறப்பித்ததேயாகும் என்பதற்கு ஆதார பூர்வமான சான்று உள்ளது. அந்நேரத்தில் தனது சொந்த ஊரான விழுப்புரத்தில் இருந்த வங்கியின் தலேவர் எம். சண்முகத்தைக் கட்டாயப் படுத்த நீள்தொலேபேசி வசதியை இவர் பயன்படுத்தினர். அதன் காரணமாக, இக் கடன் தொகையின் முதல் தவணேத் தொகையை உடனடியாக வழங்குமாறும் அவ்வாறு வழங்கப்பட்டது குறித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனருக்கு ஸ்ரீ வைகுண்டத்தில் அவரது வீட்டில் உள்ள 55 ஆம் எண்ணுள்ள தொலேபேசியுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டு திரு. எம். சண்முகம் அச் செய்தியைத் தொலேபேசி மூலம் மாநில நிலவள வங்கியின் சிவசுப்பிரமணியத்

திற்குத் தெரிவித்தார். இந்தக் கட்டளைகளைத் திரு. சிவசுப்பிரமணியம், அப்படியே பின்பற்றி, இக் கடன் தொகைகளை வழங்குமாறு மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலிக் கினையின் உதவிச் செயலாளருக்குக் கட்டளையிட்டு 24-2-1971-ஆம் நாளிட்ட அலுவலகக் குறிப்பு ஒன்றைப் பதிவு செய்து வைத்துள்ளார். மேலும், அவ்வாறு வழங்கப்பட்டது குறித்து ஸ்ரீ வைகுண்டத்தில் முகாமிட்டுள்ள அமைச்சருக்குத் தெரிவித்த சிவசுப்பிரமணியத்தின் இந்த அலுவலகக் குறிப்பு 15-ஆம் எண். ஆவணத்தில் அதிகார பூர்வமான கோப்பு காணப்படுகிறதென்பது ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சரிடமிருந்து திரும்பத் திரும்ப கட்டளைகள் வரப் பெற்றதாலும், அவை மாநில நிலவள வங்கியின் தலைவராலும், இவ் வங்கியின் திருநெல்வேலிக் கினையின் உதவிச் செயலாளராலும் தெரிவிக்கப்பட்டதாலும், பின்பற்றப்பட வேண்டிய குறைந்த அளவு நடைமுறைகள் கூட பின்பற்றப்படாமல் இக் கடன் தொகைகள் அவசர அவசரமாக வழங்கப்பட்டன என்ற வாய்மொழிச் சாட்சியத்தை இந்த ஆவணம் உறுதிப்படுத்துகிறது.

இதன் வினைவாக, கீழப்பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கத் தலைவர் கொத்தளமுத்துவிற்கு முதல் தவணைத் தொகை 3,82,500 ரூபாயும், சேரகுளம் இறைவைப் பாசனச் சங்கத் தலைவர் திரு. அரிசந்திரனுக்கு 2,70,000 ரூபாயும் காசோலைகள் மூலம் 26-2-1971-ல் வழங்கப்பட்டன.

இக் கடன் தொகையின் முதல் தவணைத் தொகை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வார கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இச் சங்கங்களுக்கு இரண்டாவது தவணைத் தொகையையும் உடனடியாக வழங்குமாறு இவ்வங்கியின் தலைவர் திரு. எம். சண்முகத்தை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் கட்டாயப்படுத்தினர் என்பதும் தெரியவந்துள்ளது. சென்னை, தமிழ் நாடு மாநில நிலவள வங்கியின் திரு. சிவசுப்பிரமணியத்தால் பதிவு செய்யப்பட்ட 3-3-1971-ம் நாளிட்ட அலுவலகக் குறிப்பு 21-ஆம் எண்ணுள்ள ஆவணமாகும். இது, புலனுய்வு அறிக்கையின் 75ஆவது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இக் கடன் தொகைகள் முழுவதையும் இவ்விரு சங்கங்களுக்கு வழங்குமாறு மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலிக் கினையின் உதவிச் செயலாளருக்குக் கட்டளையிடும்படிச் சிவசுப்பிரமணியம் அமைச்சரால் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும், அவரது கட்டளைக்கிணங்க நடைபெற்ற பிறகு அது குறித்து மீண்டும் தன்னோடு தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறும் அமைச்சர் விரும்பினர் என்றும் கூறி அந்தக் குறிப்பு வங்கியின் தலைவருக்கு எழுதப்பட்டிருந்தது. இந்த அலுவலகக் குறிப்பு, திரு. சிவசுப் பிரமணியம் அளித்ததாக ஏற்கெனவே சொல்லப் பட்டுள்ள வாய்மொழிச் சாட்சியத்தை உறுதிப் படுத்துகிறது.

அமைச்சரிடமிருந்து இக் கட்டளைகள் வரப் பெற்ற பிறகு திருநெல்வேலிக்கு உடனடியாக நீள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இக்கட்டளைகளைச் சட்ட உதவியாளர் திரு. ரெனி வானலிடம் தெரிவித்ததாகவும், தனது உறுதி மொழிப் பத்திரத்தில் சிவசுப்பிரமணியம் கூறியுள்ளார்.

இதன்வினைவாக, இவ்விரு சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கிக் கடன் தொகை, இச் சங்கங்களிடமிருந்து உரிய முறையில் வேண்டுகோள் வரப்பெறுமலேயே அல்லது 5 அல்லது 6 நாட்களுக்கு முன்னர் கொடுக்கப்பட்ட முதல் தவணைத் தொகையைப் பொறுத்தமட்டில் அதனைப் பயன்படுத்தியதற்கான பயன்பாட்டுச் சான்றிதழைத் தாக்கல் செய்யாமலேயே 4-3-1971-ல் வழங்கப்பட்டது. கடன்கள் வழங்குவதற்கான விதிகள், கட்டளைகள் ஆகியவற்றை ஒரு சிறிதும் பின்பற்றாது இவ்வாறு செய்யப்பட்டது.

இந்த நான்கு இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் கோரிய கடன்களுக்கு ஒப்புதல் அளித்து கடன்கள் வழங்கப்பட்ட பிறகுதான் இவை கருங்குளம் தொடக்க நிலவள வங்கியின் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டன என்பதை நினைவுகூரலாம். இவ்வங்கியின் நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தில் உள்ள பதிவுகளின் படி, கீழ், மேல தாதன்குளம் சங்கங்கள் 15-2-1971-லும், சேரகுளம், கீழப்பெருமானேரி சங்கங்கள் 21-6-1971-லும் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டன.

திரு. எம். சண்முகம் அளித்த சாட்சியம் (வங்கியின் தலைவர்).

5-A பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் மாநில நிலவள வங்கியின் முன்னாள் தலைவர் திரு. எம். சண்முகம் பின்வருமாறு கூறியுள்ளார்:—

"ஸ்ரீ வைகுண்டம் வட்டத்தில் 1971 பிப்ரவரியில் அமைக்கப்பட்ட இறைவைப் பாசனச் சங்கங்கள் இரண்டிற்குப் பெருந் தொகையைக் கடனாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் தொலை பேசி மூலம் என்னைக் கேட்டுக் கொண்டார். மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலி கினையின் கடன் கோப்பும், திருநெல்வேலி ஆய்வு மாளிகை நீள்தொலை பேசிப் பதிவேடும் தற்போது என்னிடம் காண்பிக்கப்பட்டன. அவற்றை நான் படித்துப் பார்த்தேன். திரு. சி. பா. ஆதித்தனார் 7-2-1971-ல்

விழுப்புரத்தில் இருந்த என்னெடு 205 ஆம் எண் ஜுன்ன எனது தொலேபேசியில் தொடர்பு கொண்டு திருநெல்வேலியிலிருந்து இரண்டு முறை பேசினர் என்று எனக்கு நினைவுக்கு வருகிறது. இதே பொருள்குறித்து 8-2-1971-லும் அவர் என்னெடு பேசினர். அவரது வேண்டுகோளுக்கு இணங்க, மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலிக் கினையின் உதவிச் செயலாளரோடு தொலேபேசி மூலம் தொடர்பு கொண்டு கட்டளை பிறப்பித்து, தணிப் பதிவாளரால் பரிவுரை செய்யப்பட்ட கடன் தொகையைக் கீழ, மேல தாதன்குளம் இறைவப் பாசனச் சங்கங்களுக்கு உடனடியாகக் கொடுக்குமாறு அவரை நான் கேட்டுக்கொண்டேன்.''

நிருநெல்வேலிக் கினையின் செயலாளரோடு 24-12-1971-லும் 3-3-1971-லும் தான் தொடர்பு கொண்டு, திரு. ஏ. பா. ஆதித் தனரால் தொலேபேசி மூலம் கேட்டுக்கொள்ளப் பட்டபடி கடன் தொகையை வழங்குமாறு கூறியதாகவும் திரு. சண்முகம் சொல்லியுள்ளார். 5-A பிரிவின்கீழ் திரு. சண்முகம் அளித்துள்ள வாக்குமூலம் அவரால் கமிஷன்முன் 5-12-1976-ல் தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழிப் பத்திரத்தில் சொல்லப்பட்டிருப்பவற்றிற்கு இணங்க உள்ளது.

சுமார் ஓராண்டு கழித்து, திரு. சண்முகம், 7-7-1977 ஆம் நாளிட்ட மிகுதொரு உறுதி மொழிப் பத்திரத்தைக் கமிஷனுக்கு அனுப்பி வைத்தார். அதில் முன்னர் கூறியதற்கு மாறுகக் கூறியுள்ளார். நியமிக்கப்பட்ட ஏலலுவ்வு அதி காரியின் முன் 18-12-1976-ல் அளித்தி வாக்கு மூலமும், 5-12-1976-ல் அவர் அனுப்பி வைத்த உறுதிமொழிப் பத்திரமும் காவலர்களால் வலுக் கட்டாயமாகத் தன்னிடமிருந்து பெறப்பட்டவை யாகும் என்றும், 1971-ல் அமைச்சரோடு தொலே பேசி மூலம் பேசிய பேச்சு தனக்கு நினைவில்லை என்று அந்நாட்களில் காவலர்களிடம் தெரிவித்த தாகவும் அதில் அவர் கூறியுள்ளார்.

மாநில நிலவள வங்கியால் இச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள் பற்றிய சில உரை யாடல்கள் காவலரால் சேர்க்கப்பட்டுள்ளன என்று திரு. சண்முகம், பின்னர் அளித்த உறுதி மொழிப் பத்திரத்தில் புகார் செய்துள்ளார். ஏற் கெனவே கூறப்பட்டதைப்போல், திரு. சண்முகம் கடையாக அளித்த வாக்குமூலம், 5-12-1976 ஆம் நாளிட்டு அவர் முன்னர் அளித்த உறுதி மொழிப் பத்திரத்திற்குப் பிறகு ஓராண்டு கழித்து அளிக்கப்பட்டதாகும். இந்த இடைவெளிக் காலத் தில், ஏராளமான நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கவே செய்யும். எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்த னருக்கெதிராக, முக்கியமான சாட்சியம் அளிக்க வந்தவர்களிடம் செல்வாக்கு அல்லது அச்சுறு த்தலின் மூலம் சாட்சிகளைக் கலைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதைப் பற்றி நான் தனியாக விவாதிக்கின்றேன். எதிர்மனுதார் சார்பில் செயல்பட்டுக் கொண்டிருந்த சக்திகள் ஓராண்டு முன்னர் சாட்சி அளித்த வாக்குமூலத்தை இன்னும் முன்னதாகவே மாற்றுவதில் வெற்றி அடையாததே இவ்வாறு சாட்சி தன் வாக்கு மூலத்தை மாற்றிக் கொள்வதில் ஏற்பட்ட தாமதத்திற்குக் காரணமாகும். தான் முதலில் கொடுத்த உறுதிமொழிப் பத்திரமும் வாக்கு மூலமும் காவல்துறை அதிகாரிகளின் அச்சுறுத்த லினுலும் நிர்ப்பந்தத்தின் பேரிலும் பெறப்பட்டன என்று, தாமதிமாகக் கொடுத்த தனது 7-7-1977 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்திலும் சண் முகம் சொல்லவில்லே. காவல்துறை அதிகாரிகள் கடன்கள் குறித்து வேறு எதையோ அவர் வாக்குமூலத்தில் சேர்த்துள்ளனரென்று மட்டுமே காலந்தாழ்த்தி அனுப்பிய அவரது உறுதிமொழிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. எம். சண்முகத்தை அழைத்து விசாரணை செய்யுமாறு எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்த னர் முதலில் கமிஷனிடம் கேட்டுக் கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். அவரது வேண்டுகோளுக் குக் கமிஷன் இணக்கம் தெரிவித்தது. ஆலை, அவரது முந்தைய வாக்குமூலங்களுக்கு நேர்எதிராக சண்முகம் இந்த உறுதிமொழிப் பத்திரத்தை அனுப்பியதால், பின்னர் எதிர்மனுதாரர், திரு. சண்முகத்தை விசாரணை செய்யுமாறு வலியுறுத்த வில்லே. வேறு விதமாகக் கூறப்போனல், கமிஷன் முன்னர் தான் விசாரணை செய்யப்பட் போவ தில்லே என்று சண்முகத்துக்குத் தெரிய வந்த பின்னர்தான் இந்த உறுதிமொழிப் பத்திரத்தை அனுப்பினர்.

திருவனகாந்தன், எம். சண்முகம், அமீர்சந் நிரன், முருகன், நான்கு இறைவப் பாசன சங்கங்களின் ஏனய அலுவலக நிர்வாகி கள் ஆகியோர் மீது குறித்த குற்றவழக்கு பற்றிப் புலன் விசாரணை நடந்து வந்தது என்ற காரணத்தால் மட்டுமே சாட்சி அவர்களைக் கமிஷன் கூட்டாயப்படுத்தவில்லே என்பதைக் கண் டறியலாம்; ஆலை, சாட்சி கூற சாட்சிக் கூண் டிற்கு வராமல் இருந்தது அவர்கள் கமிஷன் முன்னர் விசாரணை அல்லது குறுக்கு விசாரணை செய்யப்பட்டிருந்தால் அவர்கள் முன்னர் அளித்த வாக்கு மூலங்களில் கூறப்பட்டவை கிட்டத்தட்ட உண்மை என்று அவர்களுக்குப் பாதகமான அது மானத்தை ஏற்படுத்தக் கூடும் என்பது அவர் களிடம் தெளிவுபடுத்தப்பட்டது. சண்முகம் தாமதமாக அளித்த 7-7-1977 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வாதக்கருத்தை, நிருநெல்வேலி மாநில நிலவள வங்கி உதவிச் செயலாளர் எழுதிய குறிப்பு பொய்யாக்குகிறது. எஸ். இராமகிருஷ்ணன் கீழ தாதன்குளம் இறைவப் பாசனச் சங்கத்தின் கடன் விண்ணப்பம் குறித்து 9-2-1971

அன்று குறிப்பொன்று எழுதியதாகவும் அதில் 8—2—1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு தொலைபேசியில் பெற்ற உத்தரவின்படித் தலைவர் கட்டளையிட்டுள்ளதால் இக் கடன் தொகை ஒரே தவணையில் வழங்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார் என்றும் இந்த விளக்க உரையின் முன் பகுதியில் நான் கூறியுள்ளேன்.

மேலும், 24—2—71 அன்று மாநில நிலவள வங்கிச் செயலாளர் எழுதிய அலுவலகக் குறிப்பின் மூலம் சண்முகத்தின் கடைசி உறுதிமொழிப் பத்திரம் மறுக்கப்படுகிறது. பிற்பகல் 3-15 மணிக்கு, தலைவர் அவரிடம் தொலைபேசியில் பேசியதாகவும், சேரகுளம், மேழப் பெருமானேரி இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்குமாறு உதவிச் செயலாளருக்கு அவர் கட்டளையிட வேண்டுமென்றும், அதனில் தொலை பேசி மூலம் அமைச்சருக்கு அவர் தெரிவித்தார் என்றும், அக் குறிப்பில் அவர் எழுதியிருந்தார். அதன்படி, கடன்கள் உடனடியாக வழங்கப் பட்டன. வழக்கமான அலுவலகப் பணிகளில் நடந்த திகழ்ச்சிகளின் போதே இந்த அலுவலக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. அவற்றின் உண்மைத் தன்மை குறித்து ஐயப்படுவதற்குக் காரணமேதுமில்லை. தலைவர் திரு. எம். சண்முகத்திடமிருந்து கட்டளைகள் வரப் பெற்றதலும் (திரு. சண்முகம், எதிர்மனுதாரர் திரு. ஆதித்த னார் தூண்டப்பட்டுக் கட்டளையிட்டார்.) ஒட்டு மொத்தமாகக் கடன் தொகையை வழங்குவதில் இந்த முறைகேடுகள் ஏற்பட்டன என்பதையும் இந்த மேற்குறிப்புகளும், அலுவலகக் குறிப்பு களும் காட்டுகின்றன.

நிலவள வங்கிகளின் சட்டப்படிக்கான நிலைமை குறித்து—எதிர் மனுதாரரின் கருத்து.

எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனரின் 23—7—76 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத் தின் இணைப்பு 1-ல், தொடக்க நிலவள வங்கி, மாநில நிலவள வங்கிகள் ஆகியவற்றின் சட்டப் படிக்கான நிலைமை குறித்த குறிப்பு ஒன்று அடங்கி யுள்ளது. அது வருமாறு :—

"வல்லநாடு தொடக்க நிலவள வங்கி, கூட்டுறவு அமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட் டின் கீழ் உள்ளது என்ற கூறப்படும் குற்றச்சாட்டு சரியல்ல. திரு. கல்யாணசுந்தரம், தொடக்க நிலவள வங்கியை, நகர்ப்புறக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கி போன்ற ஏனைய கூட்டுறவு வங்கிகளுடன் குழப்பிக் கொண்டுள்ளார். நகர்ப்புற வங்கிகள், மத்திய வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் யாவும், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் விதித் துறைகளின் ஆளுகையில் உள்ளன. ஆனல், நிலவள வங்கிகள் (தொடக்க வங்கிகளும், மாநில நில வள வங்கிகளும்) தனிச் சட்டத்தின் கீழ் அதாவது தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டத்தின் கீழுள்ள விதித் துறைகளின் ஆளுகையில் உள்ளன. அமைச்சகத்தின் கட்டுப் பாட்டிலுள்ள ஏனைய வங்கிகளைப் போலல்லாமல் மாநில நிலவள வங்கிகள் குழு, தொடக்க நில வள வங்கி மீது மேற்பார்வையிடும் பொது அதி காரத்தை உடையதாயிருக்க, தமிழ்நாடு கூட்டுறவு நில வள வங்கிகள் சட்டத்தின் 38-வது பிரிவு வகை செய்கிறது. மேலும், மாநில நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகளுக் கட்டுப் படுத்தி மேற்பார்வையிடுவதற்கு விதிமுறைகளை இயற்றலாம். கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் (இதன்கீழ் ஏனைய வங்கிகள் செயல்படுகின்றன) என்ன சொல்லியிருப்பினும், இச் சட்டத்தில் விதித் துறைகள் மேம்பட்டு நிற்குமென நிலவள வங்கிச் சட்டம் வகை செய்கிறது. நில மேம் பாட்டுச் சட்டத்தின் '38(c) பிரிவு, இச் சட்டம் ஏனைய சட்டங்களை விட மேலோங்கி நிற்க வகை செய்கிறது. "தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் அல்லது நிகழ் காலத்தில் செயலிலுள்ள ஏனைய ஒரு விதியில் அல் லது ஏனைய ஒரு சட்டத்தில் முரணுக என்ன சொல்லியிருப்பினும், இச் சட்டத்தின் விதித் துறைகள் செயலில் இருக்கும்."

எந்த மாநில நிலவள வங்கியின் மேற்பார்வை, கட்டுப்பாட்டு அதிகாரத்தினிழ் தொடக்க நிலவள வங்கிகள் செயல்படுகின்றனவோ அந்த மாநில நிலவள வங்கி, சொத்துக்களை மதிப்பிடு வதற்கும், தொடக்க நிலவள வங்கிகளுக்கு நிதி யுதவி அளிப்பதற்கும் கணக்குகளை முடிவு செய் வதற்கும் அதிகாரங்கள் உடையதாக இருக்கும். மாநில நிலவள வங்கி அதற்கென்று சட்ட ஆலோ சகர்களை உடையதாய் இருக்கிறது.

இக் குறிப்பு இரண்டு முக்கிய கருத்துகளை வெளிப்படுத்துகிறது :—

(a) தொடக்க நிலவள வங்கிகளும், மாநில நிலவள வங்கிகளும் தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்ட விதித் துறைகளின் ஆளுகை யில் உள்ளன. இவற்றிற்குத் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் விதித் துறைகள் பொருந்தா.

(b) தொடக்க நிலவள வங்கிகள் மாநில அரசு அமைச்சகத்தின் அதாவது கூட்டுறவுத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை.

இவ்விரு கருத்துகளும், மாநில நிலவள வங்கிகள் சட்டத்தின் 38 (c) பிரிவிலிருந்து எடுத்து விளக்கப்படுகின்றன. இப் பிரிவு, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் அல்லது நிகழ்காலத்தில் செயலிலுள்ள ஏனைய விதிகளில் அல்லது பிறிதொரு சட்டத்தில் முரணுக என்ன சொல்லியிருப்பினும் இச் சட்டத்தின் விதித்துறைகள் செல்நிறனுடையதாய் இருக்க வகை செய்கிறது.

கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் விதித்துறை ஏதேனும் நிலவளவங்கிச் சட்டத்தின் விதித் துறைக்கு முரணுக இருந்தால் முரணுக உள்ள பகுதிகள் சம்பந்தப்பட்ட வரையில் மட்டும் நிலவள வங்கிச் சட்டம் மேலோங்கி நிற்கும் என்று தான் 38 (c) பிரிவு குறிப்பிடுகிறது. வேறு வகையில் சொல்லப்போனுல், 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், நிலவள மேம்பாட்டுச் சட்ட விதித்துறைகளுக்கு முரணுக இல்லாத வரையில் கூட்டுறவு நிலவள வங்கிகளுக்குப் பொருந்துகிறது. இவ்விரு சட்டங்களும் வெவ்வேறு வகைப்பட்ட வையும் ஆனுல், ஒன்றையொன்று சார்ந்துள்ள வையுமான பொருட்களுக்கு வகை செய்கின்றன. நிலவள வங்கிச் சட்டம், நிலவள மேம்பாட்டிற்கான நிதியை எந்த முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதை முறைப்படுத்துகிறது. கூட்டுறவு நிலவள வங்கிகள் கடனீட்டுறுதிப் பத்திரங்களே வழங்குதல், கடன்களே வசூலித்தல் முதலியவை தொடர்பான விதித்துறைகளே இச் சட்டம் கொண்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான பதிவு செய் தல், உறுப்பினர்களைச் சேர்த்தல், பொதுக்கூட்டங் களே நடத்துதல், தணி விதிகளே மேற்கொள்ளுதல், தணை விதிகளுக்குத் திருத்தங்கள் செய்தல், ஆய்வு செய்தல், குழு மேற்பார்வையிடுதல், கலேத்துவிடு தல், குழுவின் அதிகாரங்கள், கடமைகள் ஆகிய பொது விஷயங்கள் தொடர்பாக இச் சட்டத்தில் விதித்துறைகள் எவையும் இல்லே. இவற்றைப் பொறுத்தவரையில், நிலவளக் கூட்டுறவு வங்கி கள், இறைவைப் பாசன கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட கூட்டுறவுச் சங்கங்கள் அனேத்திற்கும் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங் கள் சட்டமும் அதன்கீழ் செய்யப்பட்ட விதி களும் பொருந்துவன ஆகும். வேளாண்மை மேம் பாட்டுப் பணிகளே மேற்கொள்ளவும், கட்டுபடி யாக்கூடிய அளவு பரப்புள்ள நிலங்களாகக் கொண்டு வருவதற்கு, நிலத்தைக் கையகப்படுத்து தலும், இதுபோன்ற ஏனேய காரியங்களே மேற் கொள்ளவும் (இவற்றின் மூலம் உழவர்களுக் கிடையே சிக்கனத்தன்மையும், தமக்குத் தாமே உதவிக் கொள்ளும் மனப்பான்மையும் வளரும்) கூட்டுறவு நில அடைமான வங்கிகள் செயல்படு வதற்கு வசதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் விதித்துறை களுக்குத் தணேயாக இச் சட்டம் இயற்றப்பட்டது என்று தமிழ்நாடு நில அடைமான வங்கிகள் சட் டத்தின்(1969 இல் திருத்தம் கொண்டு வருவதற்கு முன்னர் இருந்த சட்டம்) தோற்றுவாயில் குறிப் பிடப்பட்டது.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 9ஆவது பிரிவு, பதிவாளருக்குச், சங்கங்களேப் பதிவு செய்வதற்குள்ள அதிகாரங்களேப் பின்வருமாறு வரையறுக்கிறது : சங்கத்தைப் பதிவு செய்வதற்கு முன்னர், சங்கம் பதிவு செய்வதற்காக அனுப்பப் பட்ட விண்ணப்பம் சட்டத்தின் விதித்துறைகளுக் கும், விதிகளுக்கும் இணங்க இருக்கிறது என்றும், செய்யக் கருதியுள்ள அதன் தணே விதிகள், இச் சட்டம் அல்லது விதிகள் அல்லது கூட்டுறவுக் கொள்கைகளுக்கு முரணுக இல்லே என்றும், அச் சங்கம் அவரது கருத்தின்படி வெற்றிகரமாகச் செயல்படும் என்றும் பதிவாளர் மனநிறைவடைய வேண்டும் என்ற கடப்பாட்டினேப் பதிவாளருக்கு விதித்துள்ளது. மேலும், சங்கத்தைப் பதிவு செய் யாமல் மறுப்பதற்கும் அவருக்கு அதிகாரம் உண்டு என்பதை 9 ஆவது பிரிவின் (2) உட்பிரிவு தெளிவு படுத்துகிறது. அவ்வாறு பதிவாளர் மறுக்கும் பொழுது அதற்கான காரணங்களே அவர் எழுதி வைக்க வேண்டும்.

சிலவற்றைச் சிலமுறைகளில்தான் செய்யவேண்டு மென்று சட்டத்தின் மூலம் ஒருவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தால் அவற்றை அவர் அம்முறை களிலேயே செய்யவேண்டும் என்பது காலங் கால மாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சட்ட முறை யாகும். எனவே, 9 ஆவது பிரிவின் மூலம் பதி வாளருக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப்படிக்கான அதிகாரத்தைச் சட்டத்தின் விதித்துறைகளுக்கு இணங்கவும் தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூட் டுறவுச் சங்க விதிகளின் II-ஆவது அத்தியாயத்தில் கண்டுள்ள விதிகளுக்கிணங்கவும் செலுத்தவேண்டி யுள்ளது.

இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களேப் பொறுத்த வரையில், இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்காகத் தனியாக வகுக் கப்பட்ட தணே விதிகளேப் பதிவாளர் பின்பற்ற வேண்டும் எனக் கூறப்படுகிறது. தொடக்க நில வள வங்கிகள், இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பாக மாநில அரசு வகுத்துள்ள மாநிலத் தணே விதிகளேப் படித்துப் பார்த்தால், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் விதித்துறைகள் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்து வது தெரியவரும்.

தொடக்க நிலவள வங்கிகளின் முதலாவது தணே விதிகள் 1961 ஆம் ஆண்டின் 53ஆவது சட்டத்தின் கீழ் (இது தமிழ்நாடு கூட்டுறவுச் சங் கங்கள் சட்டமாகும்.) கூட்டுறவுச் சங்கமாக .....எண்ணில் பதிவு செய்யப்பட்ட கூட்டு றவு நிலவளவங்கி லிமிடெட் என்று குறிப்பிடு கிறது. ஏனேய தணே விதிகளில் அவசியம் ஏற் படும் போதெல்லாம் இவ்விரு சட்டங்களும் குறிப் பிடப்பட்டுள்ளன. 6 ஆவது தணே விதி உறுப்பின ராகச் சேர்வதற்கு வகை செய்கிறது. இதில் தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு 53 ஆவது சட்டத்தின் 18 ஆவது பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ள தக வின்மைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பொதுக் கூட்டமொன்றில் குழுவின் உறுப்பினர்களேத் தேர்ந்தெடுப்பதற்குப் பின்பற்றவேண்டிய நடை முறை, தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்க விதிகளிலும், தமிழ்நாடு நிலவள வங்கிச்

சட்டத்திலும் அதன்மீழ் செய்யப்பட்ட விதிகளி லும், விதிக்கப்பட்டுள்ள நடைமுறையாக இருக்க வேண்டுமென்று மீண்டும், 17 (5) தூண விதியில் வகைசெய்யப்பட்டுள்ளது. 18 (6) தூண விதியும், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு 53 ஆவது சட்டத் தில் 91 ஆவது பிரிவைக் குறிக்கிறது. குழு உறுப் பினர்களைத் தெரிந்தெடுப்பது பற்றிக் குறிப்பிடு கிற 20(3) தூணவிதி, தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்க விதிகளில் வரை யறுத்துள்ள முறையில் வாக்குப்பதிவு நடை பெற வேண்டுமென்று வகை செய்கிறது. 21 (1)(a), 21 (1) (b) தூண விதிகள் குழுவின் உறுப்பினராக இருப்பதற்குரிய தகுதிகள்/இருக்கக்கூடாத தக யின்மைகளைக் குறிப்பிடுகின்றன. மேலும், இவை முறையே தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், சட்டத்தைக் குறிக்கின்றன. 21 (1) (b) தூண விதி, 21 (2) (a) தூண விதியின் வரம்பு நிபந்தனை, 21 (3) தூண விதி, 21 (4) (b) தூண விதி ஆகிய வையும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத் தைக் குறிப்பிடுகின்றன. தொகை செலுத்தத் தவறிய உறுப்பினர்கள் மற்றொரு சங்கத்தில் பிரதி நிதித்துவம் வகிப்பது குறித்துக் கட்டுப்பாடு விதிப்பது தொடர்பான 22 (1) (b) தூண விதியும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 91 ஆவது பிரிவைக் குறிக்கிறது. அலுவலக நிர்வாகிகள் தேர்தல், தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்க விதிகளின் 31 ஆவது விதியில் வரையறுத்துள்ள முறையில், வாக்கு மூலம் நடை பெற வேண்டுமென்று 24 (1) தூண விதி கூறு கிறது. அதுபோன்றே, 25, 29, 32 (2), 34, 36, 37 (8) தூண விதிகள், தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள், தமிழ்நாடு ஆம் ஆண்டு 53 ஆவது சட்டம் ஆகிய லற்றின் விதித்துறைகளைக் குறிப்பிடுகின்றன.

பல்வேறு தூண விதிகளில் கூறப்பட்டுள்ள இந்தக் குறிப்பிடுகள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமும், அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளும் தொடக்க நிலவள வங்கிகளுக்கும், மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கிகளுக்கும் பொருந் துவது குறித்து ஏற்பட்ட ஐயமனைத்தையும் போக்குகின்றன.

இவ்வாறாக, எதிர் மனுதாரர் குறிப்பிட்டுள்ள முதல் கருத்திற்கு வலிமை இல்லை.

தொடக்க நிலவள வங்கிகள், மாநில நிலவள வங்கிகள், இறைவைப் பாசன கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின்மீது கூட்டுறவு அமைச்சகத்திற்கு எந்தவிதக் கட்டுப்பாட்டு அதிகாரமும் கிடையாது என்பதே எதிர் மனுதாரரின் உறுதிமொழிப் பத்தி ரத்திலுள்ள இரண்டாவது கருத்தாகும். நிலவள வங்கிகள், இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் தூண விதிகள் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்குப் பெருமளவு கட்டுப்பாட்டு அதிகாரத்தைக் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்க தாகும். தொடக்க நிலவள வங்கி, மாநில நிலவள வங்கி ஆகியவற்றின் மேலாளர் பதிவாளரால் நியமிக்கப்படுகிறார். மேலும், அந்த மேலாளர் வங்கி நிர்வாகக் குழுவின் ஒழுங்குமுறைக் கட்டுப் பாட்டிற்கு உட்பட்டவரல்லர். பதிவாளருக்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய அதிகாரங்கள் வருமாறு:

(a) ஓர் உறுப்பினர் வங்கியின் உறுப்பினராக ஒருமுறை சேர்க்கப்பட்டுவிட்டால், பதிவாளரின் முன் ஒப்புதலின்றி குழு அவரை நீக்கிவிட முடி யாது ;

(b) ஒரு திங்கள் அறிவிப்பு கொடுத்த பின் னர் பதிவாளர் எச் சமயத்திலும் வங்கியின் நிறப்பு மகா சபைக் கூட்டத்தை அல்லது மகாசபைக் கூட்ட மொன்றைக் கூட்டலாம் ;

(c) பதிவாளர் மகாசபைக் கூட்டத்தை நடத்துவதற்கு எந்த அதிகாரியையும் நேமகஞ் செய்யலாம் ;

(d) வங்கி நிர்வாகக் குழுவிற்கு ஒருவரைப் பதிவாளர் நியமனம் செய்யலாம் ; அவர் நிய மனம் செய்த அந்த நபரை எச்சமயத்திலும் நீக்கி விட்டு அவருக்குப் பதிலாக வேறொருவரை நிய மனம் செய்யலாம் ;

(e) தலைவர், துணைத் தலைவர், உட்பட நிர் வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரையும் அல்லது எவரையேனும் 3 ஆண்டுக் காலத்திற்கு நியமனம் செய்வதற்கும், அவர் நியமனம் செய்த ஒருவரை எச் சமயத்திலும் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி விட்டு வேறொருவரை நியமனம் செய்வதற்கும் பதிவாளருக்கு முழு அதிகாரங்கள் உண்டு ;

(f) வங்கி மேலாளர் பதிவாளரால் நியமிக் கப்படாதிருந்தால், அவரது சம்பளமும் படிகளும் பதிவாளர் வரையறுத்துள்ள வீதங்களுக்கினங்க நிர்ணயிக்கப்பட வேண்டும் ;

(g) உறுப்பினர் எவரும் தான் அடைமானம் வைத்த உடைமையைப் பதிவாளரின் முன் ஒப்பு தலின்றி மற்றவருக்கு உரிமையாக்கவாவது தனது நிலத்தை வங்கியின் வேறோர் உறுப் பினருக்கு மாற்றவாவது கூடாது.

(h) முன்னரே முடித்துவிடப்பட்ட கடனைப் பதிவாளரின் இசைவின்றி வங்கி மீண்டும் தொடங்க இயலாது ;

(i) பதிவாளரின் முன் அனுமதியின்றி, வங்கி நிலத்தை வாங்கவோ, கட்டிடம் ஒன்றைக் கட் டவோ கூடாது ;

(j) தூண விதிக்கான திருத்தம், புதிய தூண விதியை இயற்றுதல் எதுவும் பதிவாளரால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படிச் செல்நிறன் உள்ளதாகாது ;

(k) வங்கிக்கு ஏற்பட்ட இழப்பைப் பதி வாளரின் முன் அனுமதியின்றிக் கணக்கிலிருந்து நீக்கிவிடவோ வங்கியின் இயங்காச் சொத்தை விற்று விடவோ கூடாது. வரவு-செலவுகள், ஆதாயம்,

வீரயக் கணக்கு, ஐந்தொகைக் குறிப்பு ஆகியவை குறித்த ஆண்டு அறிக்கைகளை அனுப்புமாறு வங்கியைக் கேட்பதற்குப் பதிவாளருக்கு அதிகாரம் உண்டு ;

இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களின் துணை விதிகளின் மூலமாகவும் இத்தகைய அதிகாரங்கள் பதிவாளருக்கு வழங்கப்பட்டுள்ளன. அவையாவன : சங்கத்தின் செயலாளர், பதிவாளரின் ஒப்புதலின்றி நியமிக்கப்படக் கூடாது, குழு வகுத்துள்ள ஒழுங்குமுறை விதிகளுக்குப் பதிவாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும் ; சங்கத்தின் நிகர ஆதாயம் ஒவ்வோர் ஆண்டும் பதிவாளரால் அறிவிக்கப்பட வேண்டும் ; அந்த ஆதாயம் பதிவாளரின் தனி அனுமதியின்றித் துணை விதிகளுக்கு முரணான முறையில் ஒதுக்கப்பட முடியாது ; துணை விதிகளுக்கான திருத்தங்கள் அல்லது புதிய துணை விதிகளை இயற்றுதல் பதிவாளரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் ; சட்டம், விதிகள் அல்லது துணை விதி ஒன்றுக்குப் பொருள்கொள்வது குறித்து ஐயம் ஏதேனும் இருப்பின் ஆலோசனை பெறுவதற்காகப் பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும் ; அவரது ஆலோசனையே முடிவான தாகும் ; இது சங்க உறுப்பினர்களைக் கட்டுப் படுத்தும்.

இவ்வாருக, தொடக்க நிலவள வங்கிகள், மாநில நிலவள வங்கிகள், இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மீது கூட்டுறவுச்சங்கப் பதிவாளரும், மாநில அரசின் கூட்டுறவுத் துறையும் செலுத்தும் மேற்பார்வை, கட்டுப்பாட்டு அதிகாரம் மாநிலத்திலுள்ள ஏனைய கூட்டுறவு நிறுவனங்கள் மீது அவர் செலுத்தும் அதிகாரத்தினின்று வேறுபட்டதாகாது என்பது தெளிவாகத் தெரிகிறது.

23-7-76 நாளிட்ட தனது உறுதி மொழிப் பத்திரத்தின் I ஆவது இணைப்பில் எதிர் மனுதாரர் கூறியுள்ள வாதம் நிலைத்து நிற்காது. திரு. ஜி. ரங்சுசாமி I ஆவது இணைப்பில் அடிப்படையில் திரு. சுப்பையாவைக் குறுக்கு விசாரணை செய்தார்.

இந்தச் சட்டங்கள், விதிகள், துணை விதிகள் ஆகியவை செயல்படுவது குறித்துச் சுப்பையா தெளிவானதொரு கருத்து தெரிவிக்காமல் குறுக்கு விசாரணையில் குழப்பமான பதில்களை அளித்தார். ஆனால், இணைப் பதிவாளர் திரு. மூலா உள்ள நிலைமையைத் தமது அறிக்கையில் (Ex.C.W. 33/10) மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான கருத்துக்கள் வருமாறு :—

(1). 27—11—1970 நாளிட்ட RC. 54266/70/NS(2) எண் பதிவாளரது சுற்றறிக்கையின்படி, இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்களின் மாதிரி துணை விதிகளைச் சேர்ந்த 6 (C) துணை விதியின் விதித்துறைகளும் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 84C, பிரிவின் விதித்துறைகளும் கண்டிப்பாகப் பின் பற்றப்பட வேண்டியவையாகும். சங்கம் பெறும் கடனுக்குப் பிணையமாக விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள நிலத்தை அடைமானம் வைக்க சங்கத்திற்கு அதிகாரமளித்து வரையறுக்கப் பட்ட படிவத்தில், உறுப்பினராவதற்கு விண்ணப் பித்துக் கொள்ளும் ஒவ் வொருவரும் உறுதிமொழி ஒன்றைக் கொடுக்க வேண்டுமென்று 6 ஆவது துணை விதியில் கூறப்பட்டுள்ளது. சங்கம் பதிவு செய்யப்பட்ட உடனேயே, நிலம் வைத்திருப்பவர் களை உறுப்பினர்களாகச் சேர்த்தல், பாசனம் அளிக்கப்படும் நிலத்தின் பரப்பு, பாசன வாய்க்கள், பாசனத் திட்டத்தின் வகை, ஆகக்கூடிய மூலதனச் செலவு, கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கும் அவசியமான பேனுதல் கட்டணங்கள், தண்ணீர்த் தீர்வை முதலிய வற்றைச் செலுத்துவதற்கும் உறுப்பினருக்குத் தகுதியுள்ளதா என்பதை நிச்சயித்தறிதல் ஆகியவை குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது.

கிணறுகள் தோண்டுதல் போன்ற காரியங் களுக்கு ஏற்படும் மூலதனச் செலவு குறித்து உரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டு மென்றும், அதற்கு மாவட்டக் குழுவுடன் இணைக்கப்பட்டுள்ள வேளாண்மை உதவிப் பொறியாளர், அல்லது வேளாண்மைப் பொறியியல் மேற்பார்வையாளரின் பணிகள் பயன் படுத்தப்பட வேண்டுமென்று 26—11—1970 நாளிட்ட 35406/CEI/70 (கூட்டுறவு) ஆம் எண் அரசுக் குறிப்பாணையில் வகைசெய்யப்பட் டுள்ளது. இக் கட்டளைகள் இங்கு குறிப்பிடப் பட்டுள்ள நான்கு இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் விஷயத்தில் பின்பற்றப்பட வில்லை.

(2) ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கடன் விண்ணப்பங்களுக்குச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட 8 நாட்களுக்குள், கடன் விண்ணப்பம் வந்து சேர்ந்த அதே நாளன்று அல்லது அடுத்த நாளன்று, அனுமதி வழங்கப்பட்டது. 1970 டிசம்பர் முதல் 1971 மார்ச்சு வரையிலான கால அளவில் கருங்குளம் நிலவள வங்கியின் கடன் விண்ணப்பப் பதிவேட்டைச் சரிபார்த்த பொழுது, கடன் விண்ணப்பத்திற்கும், கடன்கள் அனுமதிக்கப்பட்டதற்கும் இடையே 20 முதல் 240 நாட்கள் வரை கால இடைவெளி இருப்பது வழக்கமெனத் தெரியவருகிறது. அதுபோன்றே, தூத்துக்குடி துணைப்பதிவாளரின் நிறுவனக் கோப்புகளைச் சரிபார்த்ததில் பதிவு செய்வதற் காக விண்ணப்பித்துக் கொண்ட நாளுக்கும், பதிவு செய்த நாளுக்கு மிடையே 10 முதல் 177 நாட்கள் வரை கால இடைவெளி இருந்தது தெரிய வருகிறது.

(3) திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட சேமிப்பு அதிகாரி கே. வள்ளிநாயகம் பிள்ளையைச் சேரகுளம், கருங்குளம் கிராமங்களுக்குச் சென்று வருவாய்த் துறை ஆவணங்களை ஆய்வு செய்து சங்கங்கள் அடைமானம் வைத்துள்ள நிலங்களின் பாத்தியதை, அனுபோகம் குறித்து விசாரணைகள் செய்வதற்காக முகமையில் அனுப்பினர். அவர் கிராம மணியக்காரரையும், கணக்குப்பிள்ளையையும் விசாரணை செய்தார். அவர்கள் அவர் முன்பாக வாய் மொழி வாக்குமூலங்கள் அளித்தனர். அவற்றை அவர் தமது அறிக்கையில் கொடுத்துள்ளார். நான்கு இறைவைப் பாசன கூட்டுறவுச் சங்கங்களின் 77 உறுப்பினர்களில் எஸ். வேலு தேவரைத் தவிர வேறு எவரும் நிலம் சொந்தத்தில் வைத்துள்ளதாகக் கூறப்படும் இக் கிராமங்கள் எதிலும் வசிப்பவராக இல்லை என்பது அவர் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. கிராமத்தவர்களுக்கு இவர்களைத் தெரியவில்லை. மேலும் இவர்கள் எந்த ஆண்டிலும் நிலங்களைப் பயிரிட்டதை அவர்கள் பார்த்ததில்லை. இந்த நிலங்களுக்கு விதிக்கப்படும் நிலவரி எதிர்மனுதாரரான முன்னாள் அமைச்சரின் சகோதரர் மறைந்த எஸ். டி. ஆதித்தியலுல் செலுத்தப்படுவது வழக்கமாக இருந்தது. ஆதித்தனார் கல்வி நிறுவனங்களின் நிலத்தை வாங்குபவராக தமது பெயருக்குப் பட்டாவை மாற்றுமாறு சங்கத்தின் உறுப்பினர்கள் எவரும் விண்ணப்பித்துக் கொள்ளவில்லை.

(4) மேலும், சங்கத்தின் அலுவலக நிர்வாகிகள் மீது காவல்துறை குற்றவழக்கு குறித்த புலனாய்வை மேற்கொள்வதற்குமுன், 77 உறுப்பினர்களின் முகவரிகளையும் கண்டறிய முடியவில்லை அல்லது நிச்சயித்தறிய முடியவில்லை என்று திரு. மூஸா தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த விதிகளின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கிணங்க, சாட்சி விவரித்துள்ளவாறு, கடன் பற்றிய ஒவ்வொரு கோப்பிலும், கீழ்க்காணும் ஆவணங்களும், தஸ்தாவேஜுகளும் இருக்கவேண்டும் :—

1. கடன் விண்ணப்பம்.

2. நிலச் சொந்தக்காரர் ஒவ்வொருவரிடமிருந்தும் அனுப்பப்பட்ட தூண விண்ணப்பம்.

3. மாவட்டத் தொழில் நுட்பக் குழுவின் அதிகாரிகள் தயாரித்த மதிப்பீட்டுடன் கூடிய திட்டம் அல்லது திட்ட அறிக்கை.

4. சிட்டாவிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள்.

5. குடிவழி விவரங்கள்.

6. வில்லங்கச் சான்றிதழ்கள்.

7. அடைமானம் வைக்கக் கருதப்பட்டுள்ள சொத்துக்களின் உரிமைப் பதிரங்கள்.

8. சொத்தின் சொந்தக்காரரும் அதில் பற்றுள்ள ஏனையோரும் கையொப்பமிட்ட உறுதி மொழி, ஒப்பந்தம்.

9. நிலவளவங்கி மேற்பார்வையாளர் தயாரித்த உரிமைக் குறிப்புத்தாள்.

10. நிலத்திலிருந்து பயனடைவோரின் உரிமை குறித்த சட்டக் கருத்து.

11. கூட்டுறவுத் துணைப் பதிவாளரின் (நிலவள வங்கி) மதிப்பீட்டு அறிக்கை.

12. உரிய முறையில் பதிவு செய்யப்பட்ட அடைமான பத்திரம்.

13. சத்தியப் பிரமாணம் செய்து அளிக்கப்பட்ட உறுதிமொழிப் பத்திரம்.

14. மாநில நிலவள வங்கியின் அந்தந்த கிளைத் தலைவரது கடன் அனுமதி ஆணை.

15. கடன் தவணைகள் பெற்றதற்கான பட்டுவாடா கைச்சாத்து.

16. கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அல்லது வளர்ச்சிப்பணி அதிகாரி (கூட்டுறவு) வழங்கிய ஒவ்வொரு கடன் தொகையைப் பயன்படுத்தியதற்கான சான்றிதழ்கள்.

17. கூட்டுறவு உதவிப் பதிவாளர் (நிலவள வங்கிகள்) கடன் தொகையைப் பயன்படுத்தியதற்காக வழங்கிய இறுதிச் சான்றிதழ்கள்.

இந்த 4 சங்கங்கள் சம்பந்தப்பட்ட கோப்புகளைப் படித்துப் பார்த்தபோது, மேலே 1, 11, 14 ஆகிய இனங்களில் குறிப்பிட்டுள்ள வற்றைத் தவிர வேறு எந்த ஆவணங்களோ, தஸ்தாவேஜுகளோ இல்லை என்று தான் கண்டதாக மூஸா சான்றளித்துள்ளார்.

பயனடைபவர் அன்னவரிடமிருந்தும் தூண விண்ணப்பங்கள் வராதது, பயனடைபவர்களுக்குச் சொந்தமான நிலங்களை அடைமானம் வைப்பதற்குச் சங்கத்திற்கு உரிமை அளிக்கின்ற பதிவு செய்யப்பட்ட உறுதிமொழிகள் வரப் பெறுமை ஆகியவை மிகக் கடுமையான விடுபாடுகளாகும்.

(5) விண்ணப்பங்கள், பயன்பாட்டுச் சான்றிதழ்கள் ஆகியவை வரப்பெற்றமைக்குத் தேதியுடன் கையொப்பமிட்டதில் காணப்படும் வேறுபாடுகள் குறித்து மூஸா கண்டது, திருத்த மதிப்பீடுகளும், பயன்பாட்டுச் சான்றிதழ்களும் உண்மையில் 1971ஆம் ஆண்டில் இல்லை என்றும், ஆனால் பின்னர் அவை பெறப்பட்டு கோப்புகளில் வைக்கப்பட்டதாகவும் அவரை நம்பச் செய்கிறது.

(6) கிழக்கு, மேற்கு தாதன்குளம், சங்கங்களின் பொறுத்தவரையில், ரூ. 900-லிருந்து ரூ. 2,345 வரையிலான விற்பனைத் தொகையில் அவற்றின் உறுப்பினர்கள் ரூ. 20 மட்டுமே

செலுத்தினர். எஞ்சிய வீற்பனைத் தொகையை வாங்குவோர் செலுத்தியதைக் குறிப்பிடும் பதிவு செய்யப்பட்ட ரசீது ஏதுமில்லை.

(7) சேரகுளம், மேழப் பெருமானேரி சங்கங்களின் பொறுத்தவரையில், அவற்றினுல் வாங்கப் பட்டதாகச் சொல்லப்படும் நிலங்கள் கோயிலுக்குச் சொந்தமான "இனம் நிலங்கள்" ஆகும். இந்தச் சொத்துக்களை நிர்வகித்து வந்த பொறுப்பாளர்களான பொருளையாறு ஃப்யூவல் பிளான்டேஷன் கம்பெனியிடமிருந்து இந்நிலங்களை ஆதித்தனர் கல்வி நிலையம் வாங்கியது. கல்வி நிறுவனம் பொறுப்பாளராக இருந்து நிர்வகித்துவந்த கோயில் சொத்தை உரிமைமாற்றம் செய்வதற்கு எந்த உரிமையும் கிடையாது என்பது திரு. மூலாவின் கருத்தாகும். இச் சந்தர்ப்பங்களில் இச் சங்கங்கள் மறுக்கமுடியாத உரிமையைக் கொண்டிராகு நிலங்களைத் தவருக அடைமானம் வைத்ததைக் கருங்குளம் நிலவள வங்கி பிணையாக ஏற்றுக்கொண்டிருக்கக்கூடாது.

(8). 4—1—1969 நாளிட்ட 124896/F1/68-2 ஆம் எண் அரசாணையின் படி, கிணறுகள் தோண்டுவதற்கு, அளிக்கப்படும் கடன் இரு தவணைகளில் அளிக்கப்படவேண்டும். இக் கட்டளைகளின்படி கடன் தொகையில் பாதித்தொகை, பணி தொடங்குவதற்குமுன் அளிக்கப்படவேண்டும். இரண்டாவது தவணையாகிய எஞ்சிய பாதித் தொகை முதல் தவணைத் தொகை உரியவாறு பயன்படுத்தப்பட்டது என்று மன நிறைவு அளிக்கும் வகையில் மெய்ப்பிக்கப்பட்ட பின்னரே வழங்கப் படவேண்டும். அவ்வாறு மெய்ப்பிக்கப்படுவது நிலவள வங்கியின் தொழில் நுட்பப்பணியாளரிட மிருந்து பெறப்பட்ட பயன்பாட்டுச் சான்றிதழ் வடிவில் இருக்கவேண்டும். மிழக்கு, மேற்கு தாதன்குளம் சங்கங்களுக்கு ஒட்டு மொத்தமாக கடன் தொகையை வழங்கியது மேற்சொன்ன 4-1-1969 நாளிட்ட 124896/F1/68-2 ஆம் எண் அரசாணையை மீறியதாகும். 5 முதல் 6 நாட்களுக்கு முன்னர் அளிக்கப்பட்ட முதல் கடன் தவணைத் தொகை வழங்கியது குறித்து பயன்பாட்டுச் சான்றிதழைப் பெருமலேயே மேழப்பெருமானேரி, சேரகுளம் சங்கங்களுக்கு இரண்டாவது தவணைத் தொகையை வழங்கியது மேற்கூறிய அரசாணையை மீறிச் செய்யப்பட்ட முக்கியமான முறைகேடாகும். இந்த முறைகேட்டின் கடுமை, கருங்குளம் நிலவள வங்கியின் வேண்டுகோளுப் பெருமலேயே இவ்விரு சங்கங்களுக்கும் இரண்டாவது கடன் தவணைத் தொகை வழங்கப்பட்டதிலிருந்து தெரியவரும். மாநில நிலவள வங்கியின் கோப்புகளில் காணப்படும் குறிப்புகள், இக் கடன்களை அனுமதித்து வழங்குவதில் முன்னாள் அமைச்சர் திரு.சி. பா. ஆதித்தனருக்கு இருந்த தனிப்பட்ட அக்கறையைத் தெளிவாக வெளிப் படுத்துகிறது என்று மூலா குறிப்பிட்டுள்ளார்.

(9) மாநில நிலவள வங்கியின் தொழில் நுட்பப் பிரிவிலுள்ள முன்னாள் இணை இயக்குநர், திரு. கே. நடராஜன் கொடுத்துள்ள பயன்பாட்டுச் சான்றிதழ் நுணுக்கமாக ஆராய்ந்து பாராமலேயே கொடுக்கப்பட்டது என்று தோன்றுகிறது. திரு. மூலா, வேளாண்மைப் பொறியாளர் திரு. எஸ். நாராயணசாமியைக் கொண்டு மேம்பாட்டுப் பணிகள் அணைத்தையும் பார்வையிடச் செய்தார். அவரது மதிப்பீட்டின்படி 4 சங்கங்களும் கடன் கால அளவில் 10,12,200 ரூபாய்க்கு மேல் செலவிட்டிருக்க முடியாது. (எனினும், நாராயணசாமியின் மதிப்பீடு மிகவும் குறைவாகத் தோன்றுகிறது.)

(10) நிலங்களைப் பயிரிடுவதன் மூலம் 4 சங்கங்களுக்கும் கிடைத்த உயர் அளவு வருமானம் 5.50 ஹெக்டேர் ரூபாய்க்கு மேற்பட்டிருக்கமுடியாது என்பது அடங்கல் பதிவேட்டிலிருந்து மதிப்பிடப்பட்டது. இந்த வருமானத்தைக் கொண்டு கடனும் வட்டியும் சேர்த்து 22.99 ஹெக்டேர் ரூபாயைத் திருப்பிச் செலுத்துவதற்கு முடியாது. கிணறுகளுக்கு அமைக்கப்பட்ட விசை ஏற்றங்களுக்கும் 6-4-1972-க்கும் 31-8-1972-கும் இடைப்பட்ட காலத்தில்தான் மின் இணைப்பு வழங்கப்பட்டது. இத்தகைய சந்தர்ப்பங்களில், கடன்தொகை முழுவதும் 10-8-1972க்குள் எப்படித் திருப்பிக் கொடுக்கப்பட்டது என்பது புரியாத புதிராக உள்ளது.

இச் சங்கங்கள் அந்த அளவிற்குச் செல்வ வளமுள்ளவையாக இருந்தால் அல்லது ஏனைய வருமான ஆதாரங்களை உடையனவாய் இருந்தால், 10 ஆண்டு நீண்ட காலக் கடனைப் பெறுவதற்கு அச் சங்கங்கள் தொடக்க நிலவள வங்கியை அணுகியிருக்கத் தேவையில்லை.

திருநெல்வேலி, பாங்க் ஆப் மதுரையில் 24-4-1974 முதல் 30-10-1975 வரையில், பெருந்தொகைகளை இச் சங்கங்கள் குறித்த கால வைப்பீடு செய்திருந்தன என்பதைத் திரு. மூலா தன்னுடைய புலன்விசாரணையில் கண்டறிந்தார். இச் சங்கங்களின் மேற்சொன்ன வைப்பீட்டுக் கணக்குகளின்மேற் மொத்தம் 3,07,20,000 ரூபாய் சேர்ந்தது (அவற்றின் மூலம் 8.98 இலட்சம் ரூபாய் வட்டி கிட்டியது) என்று திரு. மூலாவின் அறிக்கையைச் சேர்ந்த XXV இணைப்பிலிருந்து தெரிய வருகிறது. தனியார் வங்கியொன்றில் கூட்டுறவுச் சங்கங்கள் அவ்வளவு பெரிய தொகைகளை குறித்த கால வைப்பீடு செய்வது, தமிழ்நாட்டின் கூட்டுறவுத் துறை வரலாற்றிலேயே இல்லாத ஒன்று என்று திரு. மூலா கூறுகிறார்.

(11) இச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டதிலிருந்து இவற்றின் கணக்குப் புத்தகங்களும் ஏனைய பதிவேடுகளும், ஆய்வுக்கோ தணிக்கைக்கோ துறை அதிகாரி எவரிடமும் ஒரு

போதும் சமர்ப்பிக்கப்பட்டதேயில்லை என்று திரு. மூஸா கண்டறிந்தது குறிப்பிடத்தக்க விஷய மாகும். இச் சங்கங்களுக்கெதிராகத் தொடரப் பட்ட காவல்துறை வழக்கில் புலன் விசாரணை செய்யும்போதுதான், இச்சங்கங்கள் பெருந் தொகைகளை வைப்பீடு செய்த விஷயம் தெரிய வந்தது.

முருகனின் சாட்சியம் (சாட்சி எண் 25).

இந்த நான்கு சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்ட கடன் தொகைகளை எடுப்பதிலும் பயன்படுத்து வதிலும், எதிர் மனுதாரர் திரு. சி.பா. ஆதித்த னார் நேரடித் தொடர்பு கொண்டிருந்தார் என் பதற்கு முக்கிய சாட்சி, S. முருகன் (சாட்சி எண் 25) ஆவார்.

மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் தலைவரென்று கருதப்படும் எஸ். முரு கன் என்பவர், வெவ்வேறு சமயங்களில் ஆறு வாக்குமூலங்கள் கொடுத்திருக்கிறார். கிருஷ்ண காந்தன், முருகன் மற்றவர்கள் ஆயோருக்கும் எதிராகப் பதிவு செய்யப்பட்ட கிரிமினல் வழக் கில் காவல் துறையினர் புலனுய்வு செய்யும் போது, காவல்துறை டெபுடி சூப்பிரண்டு P. முத்தையாவிடம் 10-5-1976 ஆம் தேதி யன்று கொடுத்த வாக்குமூலம்தான், முருகன் கொடுத்த முதல் வாக்குமூலம். 27-5-1976 ஆம் தேதி கி.பி.கோ. 164 ஆவது பிரிவின் கீழ் மாஜிஸ்டிரேட் ஒருவர் பதிவு செய்த வாக்குமூலம் தான் அவர் கொடுத்த இரண்டாவது வாக்குமூலம் 5 (2) (b) பிரிவின்கீழ் வெளியான அறிவிப்புக் கினங்க, கமிஷன் முன்னிலையில் 1-7-1976 ஆம் தேதியன்று தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்தி ரத்தில் கண்டுள்ள வாக்குமூலம்தான் அவர் கொடுத்த மூன்றாவது வாக்குமூலம். விசாரணைக் கமிஷன் நியமித்த புலனுய்வு அலுவலரிடம், 19-8-1976 ஆம் தேதியன்று, 5-A பிரிவின் கீழ் கொடுத்துள்ள வாக்குமூலம்தான் அவர் கொடுத்த நான்காவது வாக்குமூலம். 11-8-1976-ல் வருமானவரி அதிகாரியிடம் கொடுத்துள்ள வாக்கு மூலம்தான் அவர் கொடுத்த ஐந்தாவது வாக்கு மூலம், 9-2-1977-ல் கடையிரகத் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தில் கொடுத் துள்ள வாக்குமூலம்தான் அவர் கொடுத்த ஆறு வது வாக்குமூலம். அதில் எதிர்மனுதாரர் சி. பா. ஆதித்தனர் குறித்து அவர் ஏற்கெனவே கூறி யிருந்த தகவலில் இருந்து பின்வாங்கினர். 9-2 1977-ல் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்வதற்குமுன்னர் கொடுத்திருந்த வாக்கு மூலங்களில் அவர் கூறியிருந்த தகவலும் கமிஷன் முன்னிலையில் 1-7-1976-ல் முதன் முதலாகத் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தில் அவர் கூறியிருந்த தகவலும் பெரும்பாலும் ஒத்திருந்தன. அவர் கூறியதை அப்படியே எடுத்துக் கூறுவது மிகவும் பொருத்த மாயிருக்கும்; அவர் கூறியதாவது:

''என்னுடைய தந்தைவழிப் பாட்டனரும் முன் னுள் அமைச்சர் திரு.சி.பா. ஆதித்தனரின் தந்தையும் சகோதரர்கள். முன்னுள் அமைச்சர் சி. பா. ஆதித்தனர், என்னுடைய தந்தையின்சகோ தரர் ஆவார்.... ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதம் 27-ந் தேதி எங்களுடைய ஆலேக்கு விடுமுறை. அந்த நாள் முன்னுள் அமைச்சர் சி. பா. ஆதித்தனரின் பிறந்த நாளாதலின், மீகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

30-1-1971-க்கு ஒரிரு நாட்களுக்கு முன்னர், அரிச்சந்திரனையும் ஜெயராமனையும் ஸ்ரீ வைகுண் டத்திற்கு அழைத்துச் சென்று, பெரிய அய்யாவைச் சந்திக்குமாறு லன் பேப்பர் மில்லில் இருந்த என் னிடம் திருநெல்வேலி ' தினத்தந்தியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணகாந்தன் சொல்லியனுப்பினர். அந் தப் பேப்பர் மில்லில் அரிசந்திரன் கணக்கர ராகவும் ஜெயராமன் எழுத்தராகவும் இருந்தனர். முன்னுள் அமைச்சர் சி. பா. ஆதித்தனரை நாங்கள் எல்லோரும் பெரிய அய்யா என்று கூப்பிடுவது வழக்கம். அதன்படி அரிச்சந்திரன், ஜெயராமன், நான் ஆகியோர் ஸ்ரீ வைகுண்டம் சென்று முன்னுள் அமைச்சரை அவர் வீட்டில் இரவில் சந்தித்தோம். அச்சமயத்தில், கிருஷ்ண காந்தன், வழக்குரைஞர் உத்தரபாண்டியன், S. D. ஆதித்தன் ஆகியோரும் அங்கிருந்தனர். அவர் (அமைச்சர்) வண்ணரப்பேட்டை பயணகிள மாளி கையில் தங்கி, ஸ்ரீ வைகுண்டத்திற்குப் போவதும் வருவதுமாக இருந்தார். முன்னுள் அமைச்சர் எங்களைப் பார்த்ததும், ஆதித்தனர் கல்வி நிறு வனத்திற்குச் சொந்தமான நிலங்கள் தொழி லாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு விட்டதாகவும், அதையொட்டி இறைவைப் பாசனச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, நிதிகள் வசூலிக்கப்பட வேண் டுமென்றும், அதற்கென்ற தயாரிக்கப்பட்ட பதி வேடுகள், கிருஷ்ணகாந்தன், பி.எ., உத்தர பாண்டியன் ஆகியோரால் கொண்டு வரப்படு மென்றும் அவர்கள் குறிப்பிடக்கூடிய பத்திரங் களில் கையெழுத்திடுமாறும் அவர் (முன்னுள் அமைச்சர்) எங்களுக்குத் தெரிவித்தார். என்ன பதில் சொல்வதென்று நான் யோசனையில் ஆழ்த்துவிட்டேன். உடனே அவர் (முன்னுள் அமைச்சர்) என்னிடம், '' பயப்பட வேண்டாம் ; உன்னைப் பார்த்துக்கொள்ள நாவிருக்கிறேன் ; உனக்குக் கெடுதல் எதுவும் வராது ; தைரியமாக இரு '' என்று கூறினர். பின்னர் ஒப்புக் கொண் டேன் ; நாங்கள் திரும்பினேம். அடுத்து ஒரு நாள், கிருஷ்ணகாந்தனும் அருணுசலமும் ஆலேக்கு வந்து மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கம் அமைக்கப்படப்போவதாகக் கூறி, பத்தி ரங்களில் கையொப்பங்கள் பெற்றனர். முன் னுள் அமைச்சர் ஏற்கெனவே கூறியிருந்தபடி, அந்தப் பத்திரங்களில் அவர்கள் காட்டிய இடங் களில் கையொப்பமிட்டேன். பின்னர், அவர்கள் என்னுடைய மனைவியும் கையொப்பமிட வேண்டு மென்று கூறினர்கள். அவ்வாறே கையொப்ப

மிடுமாறு நான் என் மனைவியிடம் கூறினேன். அவள் வீட்டில் கையொப்பமிட்டார். சங்கம் அமைப்பதற்காக நானே என் மனைவியோ மேல தாதன்குளத்திற்குச் செல்லவுமில்லை ; சங்கக் கூட்டம் எதிலும் பங்கு கொள்ளவும் இல்லை. தாதன் குளத்தில் எங்களுக்கு நில மெதுவும் இல்லை ; அந்தக் கிராமத்தில் கிஸ்தியோ நிலவரியோ நாங்கள் செலுத்துவ தில்லை ; நிலங்களுக்காக எங்களிடம் பத்திரங்கள் எவையும் இல்லை ; சங்கத்திற்கு நாங்கள் எந்தத் தொகையும் செலுத்தியதில்லை ; சங்கத்திடமிருந்து நாங்கள் எந்தத் தொகையும் பெற்றதில்லை.....

திருநெல்வேலி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிடம் பெற்ற காசோலைப் புத்தகங்கள் முன்னுள் அமைச்சரிடம் இருந்தன. காசோலைப் புத்த கங்களைப் பெற்றதும், அச் சங்கங்களின் தலைவர் கள், செயலாளர்கள் ஆகிய எல்லோருடைய கையொப்பங்களையும் வெற்றுக் காசோலைகளில் அவர் பெற்றுக் கொண்டார். பின்னர், அவருக்குப் பணம் தேவையாகபோதெல்லாம் எங்களை வர வழைத்து, ஏற்கெனவே எங்களுடைய கையொப்ப பங்களைப் பெற்று, வைத்திருந்த காசோலைகளை எங்களிடம் கொடுத்து வங்கியிலிருந்து பணம் வாங்கிவருமாறு சொல்வது வழக்கம். வங்கியி லிருந்து பணம் பெறுவதற்கு எங்களில் எவரும் தனியே அனுப்பப்பட்டதில்லை. கிருஷ்ணகாந்தன், வழக்குரைஞர் உத்தரபாண்டியன் அல்லது S. D. ஆதித்தன் ஆகியோரில் ஒருவர் எங்களுடன் அனுப்பப்படுவது வழக்கம். மேல தாதன்குளம் சங்க வங்கியிலிருந்து நான் பெற்ற பணம் முன்னுள் அமைச்சர் சி. பா. ஆதித்தனரிடம் அல்லது கிருஷ்ணகாந்தனிடம் நேரில் கொடுக்கப்பட்டது. சங்கங்களின் ஏனைய தலைவர்களும் நான் கொடுத் தது போலவே பணம் கொடுத்தனர்.

முன்னுள் அமைச்சர் சி. பா. ஆதித்தனர் சொல்லியனுப்பியதன் பேரில், அவரை வண்ணுரப் பேட்டை பயணிகள் மாளிகையில் 15—7—1974ல் சந்தித்தேன். அவர் என்னிடம் 9,80,000 ரூபாய் கொடுத்து, மேல தாதன்குளம் சங்கத்தின் சார்பில், திருநெல்வேலி நகரிலுள்ள பாங்க் ஆப் மதுரையில் குறித்த கால வைப்பீட்டுக் கணக்கில் போடும்படி கூறினர். கிருஷ்ணகாந்தனும் வழக் குரைஞர் உத்தரபாண்டியனும் என்னுடன்வந்தனர் முன்னுள் அமைச்சர் சொன்னபடியே செய்து, சம்பந்தப்பட்ட ரசீதை அவரிடம் நேரில் கொடுத் தேன். அந்த ரசீதில் குறிப்பிட்டுள்ள நாள் கணக் குப் படி 91 நாட்களுக்குகொரு முறை நான் அந்த மூலதனத்திற்கு வட்டி பெற்று, தாக்கல் செய்தால் சொன்னபடி அந்த வட்டிப் பணத்தை கிருஷ்ண காந்தனிடமோ உத்தரபாண்டியனிடமோ கொடுத்தேன். சில சமயங்களில், முன்னுள் அமைச்சரிடம் நேரிலேயே அந்த வட்டிப் பணத் தைத் கொடுத்ததுண்டு. இதே மாதிரி, பல முறை வட்டி பெற்றதுண்டு. கடைசியாக, எனக்குத் தகவல் வந்தபடி, வண்ணுரப்பேட்டை பயணிகள் மாளிகையில் 18—10—1975-ல் முன் னுள் அமைச்சரைச் சந்தித்தேன் ; அவர் என்னிடம் ரசீது கொடுத்து, மூலதனத் தொகையையும் வட்டியையும் பெற்றுத் தன்னிடம் கொடுக்குமாறு கூறினர். அவர், என்னுடன் கிருஷ்ணகாந்தனை யும் உத்தரபாண்டியனையும் பாங்க் ஆப் மதுரைக்கு அனுப்பினர். அவர் உத்தரவிட்டப்படி, 10,39,790·36 ரூபாயைப் பெற்று, பயணிகள் மாளிகையிலிருந்த அவரிடம் நேரில் கொடுத்தேன். அந்தப் பணத்தை பாங்க் ஆப் மதுரையில் குறித்த கால வைப்பீடாகப் போடும்போது, சங்கச் செய லாளரான தியாகராஜன் பேரில் முன்னுள் அமைச் சருக்குச் சந்தேகம் இருந்ததால், அவர் (அமைச்சர்) சொன்னபடி சங்க விஷயங்களில் கையொப்பமிட வேருெருவரை அமர்த்திக் கொள்ளுமாறு கிருஷ்ண காந்தன் என்னிடம் கூறினர். அதன்படி, செய லாளர் என்ற முறையில் கையொப்பமிட என் னுடைய பொறுப்பின் கீழ் வேலை செய்து கொண் டிருந்த தங்கதுரையை அமர்த்திக் கொண்டேன். அவர்தான், பாங்க் ஆப் மதுரையில் குறித்த கால வைப்பீட்டிற்குக் கையொப்பமிட்டார். அதே போன்று, பாங்க் ஆப் மதுரையில் குறித்தகால வைப்பீடு செய்திருந்த ஏனைய சங்கத் தலைவர்களும் தொகைகளைப் பெற்று, முன்னுள் அமைச்சரிடம் கொடுத்தனர். அந்தத் தொகைகளுக்கும் அந்தச் சங்கங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

.....அந்தச் சங்கங்களின் விவகாரங் களைக் கவனித்துக்கொள்ள, வழக்குரைஞர் உத்தர பாண்டியனுக்கு மாதமொன்றுக்கு 200 ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தச் சங்கங்களுக்குரிய நிலங்களை S.D. ஆதித்தன் கவனித்துக்கொண்டார்

.....

வங்கியிலிருந்து எடுத்த பணம் முழுவதையும் முன்னுள் அமைச்சரிடம் நேரிலோ, கிருஷ்ண காந்தன் மூலமாகவோ, உத்தரபாண்டியன மூல மாகவோ கொடுத்தேன். எனக்கும் அந்தச் சங் கங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. மேல தாதன்குளம் சங்கத்தின் கணக்குப் புத்தகங்கள் என்னிடம் இல்லை. கணக்குப் புத் தகங்கள் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது ''.

இந்த வித்தைவிட் பாசனச் சங்கம் அமைக்கப் பட்டது, இச்சங்களுக்குக் கடன் அனுமதிக்கப்பட் டது, வழங்கியது ஆகியவை தொடர்பான ஒவ் வொரு விஷயத்திலும், முன்னுள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் குத்திரதாரியாகச் செயல் பட்டார் என்று அவரது வாக்கு மூலத்தில் காட்டக் கூடிய பகுதிகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

9—2—1977-ல் உறுதிமொழிப் பத்திரம் ஒன்றை முருகன் தாக்கல் செய்தார். மாஜிஸ் டிரேட் ஒருவர் முன்னிலையில் குற்றவியல் நடை முறை விதிக்கோவையின் 164-ஆவது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் உட்பட, முருகன் தான் ஏற்கெனவே கொடுத்திருந்த வாக்குமூலங்களில் கூறியிருந்த தகவல்களிலிருந்து அந்த உறுதிமொழிப் பத்திரத்தில் பின்வாங்கினர்

என்பது ஏற்கெனவே தெரிந்த விஷயம். 1-7-1976-ல் தான் ஏற்கெனவே தாக்கல் செய்திருந்த உறுதிமொழிப் பத்திரம் குறித்து 9—2—1977-ல் அவர் தாக்கல் செய்த உறுதி மொழிப்பத்திரத்தில் எதுவும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தான் ஏற்கெனவே தாக்கல் செய்திருந்த உறுதி மொழிப்பத்திரம் அல்லது வாக்குமூலங்கள் தன்னிச்சையாகச் செய்யப் பட்டவை அல்ல என்று அவர் கூறியிருக்கிறார்.

தான் ஏற்கெனவே கொடுத்திருந்த வாக்கு மூலங்களிலிருந்து அவர் எந்த அளவுக்குப் பின் வாங்கியிருக்கிறார் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள, அவர் கடையாகத் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தை விவரமாக எடுத்துக் கூறுவது அவசியமாகும் ; அது வருமாறு :

'' (1)குற்றம் சாட்டப்பட்டவர் என்ற வகையில் காவல் துறை டெபுடி சுப்பிரண்டு திரு. கே. முத்தையா என்னையும் சம்பந்தப்படுத்தியிருந்த 208/76 ஆம் எண் குற்ற வழக்கில் புலனுய்வு செய்துகொண்டிருந்த அவர் 1-5-1976 அன்று என்னை திருநெல்வேலி முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டிடம் அழைத்துச் சென்று, புலனுய்வுலுள்ள வழக்கு தொடர்பாக வாக்குமூலம் ஒன்று கொடுக்குமாறு கூறினர். அது, இந்த விசாரணைக் கமிஷன் முன்னிலையில் தாக்கல் செய்யப்படவேண்டிய வாக்குமூலம் அல்ல.''

'' (2) மாஜிஸ்டிரேட் முன்னிலையில் நான் கையொப்பமிட்ட வாக்குமூலம், விசாரணைக் கமிஷனின் 10 ஆவது விதியுள்ளபடி சரிபார்க்கப்படவில்லை. அந்த வாக்குமூலத்தின் நகலொன்றை விசாரணைக் கமிஷனுக்கு நான் அனுப்பவும் இல்லை ; வேறு எவரும் அனுப்புவதற்கு நான் அனுமதி கொடுக்கவும் இல்லை. அந்த வாக்குமூலம் முழுக்க முழுக்க திரு. கே. முத்தையாவினுல் தயாரிக்கப்பட்டது ; அதை நான் அப்படியே எழுதிக் கொடுத்தேன். அந்த வாக்குமூலத்தில், பல இடங்களில், முன்னுள் அமைச்சர் என்னிடம் சொன்னது போன்ற சொற்களை திரு. கே. முத்தையா சேர்த்திருந்தார். ஆனுல், அவையெல்லாம் திரு. பீம்சிங் கூறியவையே அன்றி அமைச்சர் கூறியவை அல்ல. அமைச்சர் சார்பில் பேச பீம்சிங்கிற்கு எவ்வித அதிகாரமும் இல்லையென்பது பின்னர் எனக்குத் தெரியவந்தது. சொல்லப்போனுல், அமைச்சரை நான் அவருடைய வீட்டில் சந்தித்ததே இல்லை. பத்திரங்களைப் பதிவு செய்ய திரு. பீம்சிங்தான் கொஞ்சம் பணம் கொடுத்தார்.''

''(3) திருநெல்வேலி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெற்ற காசோலைப் புத்தகங்கள், சேரகுளம் தொகுதிச் சங்கங்கள் தலைவரிடமோ அச்சங்கங்களின் அங்கீகாரம் பெற்ற முகவரான திரு. ஐ. உத்தரபாண்டியனிடமோ இருந்தன. மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் வங்கியிலிருந்து நான் எடுத்த பணமெல்லாம், தலைவரிடமோ அங்கீகாரம் பெற்ற முகவரிடமோ தான் கொடுக்கப்பட்டதேயன்றி முன்னுள் அமைச்சரிடம் கொடுக்கப்பட விலலே. '' அல்லது '' என்ற சொல் இருப்பதால், அந்தப் பணமெல்லாம் கிருஷ்ணகாந்தவிடம் அல்லது அங்கீகாரம் பெற்ற முகவரிடம் '' அல்லது முன்னுள் அமைச்சரிடம் '' கொடுத்ததாகத் தெரிவிப்பதில் தவறேதும் இல்லையென்று திரு. முத்தையா என்னிடம் உறுதி கூறினர். முன்னுள் அமைச்சர் சி. பா. ஆதித்தனுரிடம் பணமெதுவும் நான் கொடுத்ததில்லை என்று நான் சுட்டிக் காட்டியபோது திரு. முத்தையா இவ்வாறு கூறினர்.

''(4) நிலங்களைச் சீர்திருத்தும் வேலையையும் மேம்படுத்தும் வேலையையும் விவசாயிகளே செய்தனர் ; மேல தாதன்குளம் உட்பட, நான்கு சங்கங்களுக்கும் திரு. கிருஷ்ணகாந்தன் தலைவராகவும், திரு. உத்தரபாண்டியன் அங்கீகரிக்கப்பட்ட முகவராகவும் இருந்ததால், நான் எடுத்த பணத்தை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்காகவும் சீர்திருத்த - மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் அவர்களிடம் (திரு. கிருஷ்ணகாந்தன், திரு. உத்தரபாண்டியன் ஆகியோரிடம்) கொடுத்தேன். '' சீர்திருத்தம், மேம்பாடு செய்ய தேவைப்பட்டபோதெல்லாம் என்னும் பொருள்பட்டதான் பணம் தேவைப்பட்டபோதெல்லாம் என்று நான் கூறினேனே தவிர, வேறெந்த நோக்கத்திலும் அல்ல. நிலச் சீர்திருத்த வேலைக்காக மட்டும் என்னிடமும் பணம் கொடுக்கப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்டினேன். ''

''(5) திருஷ்ணகாந்தனிடம் அல்லது வழக்குரைஞர் ஐ. உத்தரபாண்டியனிடம் கொடுத்தேன்'' என்ற சொற்களைப் பயன்படுத்தினேன் ; ஆனுல், '' முன்னுள் அமைச்சர் சி. பா. ஆதித்தனர் உத்தரவிட்டபடி '' என்ற சொற்கள் என்னுடைய ஆட்சேபணையையும் மீறி வாக்குமூலத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டன ; அந்தப் பணமெல்லாம் தலைவரிடம் அல்லது அங்கீகாரம் பெற்ற முகவரிடம் கொடுக்கப்பட்டதால், '' அல்லது '' என்ற சொல்லைப் பயன்படுத்தினுல் எல்லாம் சரியாகிவிடும் என்று திரு. முத்தையா மீண்டும் மீண்டும் உறுதி கூறினர்.

(6) ; 1974,1975 ஆண்டுகளில் நடைபெற்ற பண விவகாரங்கள் இவ்விசாரணைக்குச் சம்பந்தப்பட்டவை அல்ல ; ஆனுல், அந்தப் பணமெல்லாம், மரவள்ளிக் கிழங்கு டியிரிட்டு நல்ல மகசூல் கண்ட விவசாயிகளின் பணம் என்று நான் சொல்கிறேன்.

முழுமையாகவும், அந்தந்தக் காலத்தும் அறிந்து இருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. 5-A பிரிவின்கீழ் தான் கையொப்பமிட்ட வாக்கு மூலத்தையும் 1—7—1976 ஆம் தேதி தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தையும் படித்து, அவற்றில் என்ன சொல்லியிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு அவற்றில் கையொப்பமிட்டிருக்கிறார் என்பதே இதன் அனுமானம். சாட்சி (முருகன்), எழுதப் படிக்கத் தெரிந்தவர், அவர் (பொறுப்பு) வரையறுக்கப்பட்டதொரு பெரிய நிறுவனத்தின் அலுவலக நிர்வாகியாக இருந்திருக்கிறார்; 1—7—1976 ஆம் தேதியிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில் என்ன கூறியிருந்தது என்பதை அவர் முழுமையாக அறிந்திருந்தார்; 1—7—1976 ஆம் தேதியிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில் முருகன் சரியான வாக்குமூலம்தான் கொடுத்திருக்கிறார் என்று அறிந்து கொண்ட பின்னர்தான் அலுவலர் அதில் மேலொப்பமிட்டுச் சரிபார்த்தார் என்ற அனுமானத்தை இது உறுதிப்படுத்துகிறது.

மீண்டும், 9—2—1977-ல் தாக்கல் செய்துள்ள உறுதிமொழிப் பத்திரத்தில் முருகன் கொடுத்துள்ள வாக்குமூலத்தில், ''திருஷ்ணகாந்தன் மூலமாக'' என்று தான் ஏற்கெனவே கொடுத்திருந்த மேற்சொன்ன (2) பகுதி வாக்குமூலத்திலிருந்து அவர் பின்வாங்கியிருக்கிறார். தான் ''திருஷ்ணகாந்தனிடம்'' என்று சொன்னதாகவும்; ஆனால், அதற்குப் பதிலாக, ''திருஷ்ணகாந்தன் மூலமாக'' என்ற சொற்களை முத்தையா சேர்த்துக்கொண்டதாகவும் தான் ஆட்சேபமே தெரிவித்தபோது ''அதனால் பாதகம் ஏதும் இல்லை'' என்று உறுதி கூறி முத்தையா தன் வாயை அடக்கி விட்டதாகவும் நம்பவேண்டுமென முருகன் விரும்புகிறார்.

நான் ஏற்கெனவே கொடுத்த வாக்குமூலம் ''முழுக்க முழுக்க திரு. கே. முத்தையாவினால் தயாரிக்கப்பட்டது; அதைப் பார்த்து நான் எழுதிக் கொடுத்தேன்'' என்று, 9—2—1977-ல் தாக்கல் செய்த தனது உறுதிமொழிப் பத்திரத்தின் 2ஆவது பாராவைச் சேர்த்த இரண்டாவது வாக்கியத்தில் பொதுப்படையான, பெரிய குற்றச்சாட்டை முருகன் கூறியிருந்தார். ஆனால், அடுத்த மூச்சில், ''அந்த வாக்குமூலத்தில் பல இடங்களில் முன்னுள் அமைச்சர் என்னிடம் சொன்னதுபோன்ற சொற்களே திரு. கே. முத்தையா சேர்த்திருந்தார், ஆனால், அவையெல்லாம் திரு. பீம்சிங் கூறியவையே அன்றி, அமைச்சர் கூறியவை அல்ல'' என்று முன்னர் சொன்ன வாக்கு மூலத்திற்கு முரணாகக் கூறியுள்ளார்.

திருநெல்வேலி முதல் வகுப்பு நீதித்துறை மாஜிஸ்டிரேட் முன்னிலையில் 1—5—1976-ல் தான் கொடுத்த ஒரு வாக்குமூலம் பற்றி, 9—2—1977-ல் தான் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தில் முருகன் குறிப்பிட்டிருக்கிறார். முருகனுடைய வாக்குமூலம் எதுவும் 1—5—1976-ல் பதிவு செய்யப்படவில்லை. தேதி நிச்சயமாகத் தவருக இருக்க வேண்டும். இ.பு.கோ. 164ஆவது பிரிவின்கீழ் அவர் கொடுத்த வாக்கு மூலத்தை, 27—5—1976-ல் மாஜிஸ்டிரேட் பதிவு செய்திருக்கிறார்; ஆனால், அவருடைய முதல் உறுதிமொழிப் பத்திரத்திற்கு 1—7—1976-ல் திருநெல்வேலி முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் மேலொப்பம் இட்டிருக்கிறார். இ.பு.கோ. 164ஆவது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட இவரது (முருகனது) வாக்குமூலத்தைப் பற்றியோ முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் முன்னிலையில், இவர் சத்தியப்பிரமாணம் செய்து 1—7—1976-ல் கொடுத்த வாக்குமூலத்தைப் பற்றியோ இவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கலாம். முருகனுடைய இரண்டாவது உறுதிமொழிப் பத்திரத்தில் தேதிகள் பற்றிய குழப்பம் காணப்படுவது, அது அவசரம் அவசரமாகத் தயாரிக்கப்பட்டது என்பதையே காட்டுகிறது.

மாஜிஸ்டிரேட் முன்னிலையில் கையொப்பமிட்ட தன்னுடைய மூத்தைய வாக்குமூலத்தின் நகலொன்றைத் தான் விசாரணைக் கமிஷனுக்கு அனுப்பவில்லை என்று, 9—2—1977-ல் தான் தாக்கல் செய்துள்ள உறுதிமொழிப் பத்திரத்தில் முருகன் கூறியுள்ளார். விசாரணைக் கமிஷனுக்கு 1—7—1976-ல் அனுப்பப்பட்ட உறுதிமொழிப் பத்திரம், இ.பு. கோ. 164-ஆவது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தின் அப்பட்டமான நகல் அல்ல என்பதையும், அதை அவர் தாமாகவே விசாரணைக் கமிஷனுக்கு அனுப்பினர் என்பதையும் இது உறுதிப்படுத்துகிறது. மாஜிஸ்டிரேட் முன்னிலையில் தான் கையொப்பமிட்ட வாக்குமூலம் விசாரணைக் கமிஷனின் 10ஆவது விதிமுறைபின்படிச் சரிபார்க்கப்படவில்லை என்று உறுதிமொழிப் பத்திரத்தில் எடுத்துக் காட்டியுள்ளார். விசாரணைக் கமிஷன் வரையறுத்துள்ள படிவம், நடைமுறை அடிப்படையானதுதான். 1—7—1976ம் தேதியிட்ட உறுதிமொழிப் பத்திரம், திருநெல்வேலியிலுள்ள முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் ஒருவரால் மேலொப்பம் இடப்பட்டிருக்கிறது; அவர், உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டவரே அன்றி, அரசு நிர்வாகம் பிரிவின் அதிகாரத்துக்கு உட்பட்டவரல்ல. நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள், காவல் துறையின் தயவுதாட்சண்யத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பது நியதி. ஆகவே, மேலொப்பத்தில் நேர்த்துள்ள சிறு தவற்றினைப் பொருட்படுத்த வேண்டிய தில்லை. முருகன், மாஜிஸ்டிரேட் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து வாக்குமூலம் கொடுத்தார் என்பது மாஜிஸ்டிரேட்டின் மேலொப்பத்திலிருந்து தெரியவருகிறது. ஆகவே, தன்னுடைய வாக்குமூலத்தை மாஜிஸ்டிரேட் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொடுக்கவில்லை என்று முருகன் கூறியுள்ளதை ஏற்றுக் கொள்வது கடினமாக இருக்கிறது. அவருடைய (முருகனுடைய) வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டபோது, அதில் சில சொற்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அப்போதே எதிர்ப்பு தெரிவித்த

''(7) வங்கியிலிருந்து எடுத்த பணத்தை, தலைவர் திரு. கிருஷ்ணகாந்தனிடம் அல்லது அங்கிகரிக்கப்பட்ட முகவர் திரு. உத்தரபாண்டியனிடம் கொடுத்ததாக எனனுடைய வாக்குமூலத்தின் கடைசிப் பாராவில் தெரிவித்தேன். ஆனால், '' அல்லது '' என்ற சொல் அந்த வாக்கியத்தில் இருப்பதால், இதில் தவறேதுமில்லை என்று திரு. கே. முத்தையா உறுதி கூறியதன் பேரில், பதிலியாக, முன்னாள் அமைச்சரைப் சம்பந்தப்படுத்தும் சொற்கள் அந்த வாக்கு மூலத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. திரு. முத்தையா கூறிய அதே உறுதிமொழியின் பேரில், '' கிருஷ்ணகாந்தனிடம் '' எனனும் சொல்லுக்குப் பதிலாக, '' கிருஷ்ணகாந்தன மூலமாக '' எனனும் சொற்கள் வைதுக்கொள்ளப் பட்டன.

''(8) அந்தத் தொகுதிச் சங்கங்களின் தலைவரும் அங்கிகரிக்கப்பட்ட முகவரும் விவசாயிகளுடனும் உறுப்பினர்களுடனும் தொடர்பு கொண்டிருந்ததால், அச் சங்கங்களின் பண விவகாரங்கள் எல்லாவற்றையும் அந்தத் தலைவரோ முகவரோ கவனித்துக் கொண்டார் என்பதைக் குறிப்பிடவே ''எனக்கும் அந்தச் சங்கங்களுக்கும் எவ்வித்த தொடர்புமே இல்லை'' என்று கூறினேன்; ஆலையில் அலுவலக மேலாளராகப் பணியாற்றி வந்ததால், அச் சங்கங்களின் வேலையைக் கவனிக்க எனக்கு நேரமே கிடைக்க வில்லை.

''(9) அந்தத் தொகுதிச் சங்கங்களின் அங்கிகரிக்கப்பட்ட முகவரான திரு. I. உத்தரபாண்டியனிடம்தான் கணக்குப் புத்தகங்கள் இருந்தன என்றும் நான் சொன்னேன்; இது குறித்து கமிஷனுக்கு எழுதியுள்ள கடிதத்தின் நகலொன்றை இத்துடன் இணைத்திருக்கிறேன்.

''(10) சத்தியப் பிரமாணம் செய்யாமல் 1—8—1976-ல் நான் கொடுத்த வாக்கு மூலத்தைப் பொருட்படுத்தக்கூடாதென்றும், இந்த விசாரணை ஆவணங்களிலிருந்து அதை நீக்கி விட வேண்டுமென்றும் இந்தக் கமிஷனிடம் கேட்டுக் கொள்கிறேன். திகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக நான் என்னுடைய சொந்த ஊரிலிருந்து திருச்செந்தூருக்குச் சென்றிருந்தேன்; அங்கு, காவல் துறை இன்ஸ்பெக்டர் அந்த வாக்கு மூலத்தைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து, என்னுடைய கையொப்பத்தைப் பெற்றார்; அந்த வாக்கு மூலத்தைப் படிக்கவோ, அதில் என்ன எழுதியிருந்தது என்பதைப் புரிந்து கொள்ளவோ எனக்கு அவகாசமே கொடுக்கப்பட வில்லை. சத்தியப் பிரமாணம் செய்யாத வாக்கு மூலத்தை இந்தக் கமிஷன் பொருட்படுத்தாது என்றும், ஆகவே, அது சரியில்லையென்றுமும் அதில் நான் கையொப்பமிடலாமென்றும் அந்த இன்ஸ்பெக்டர் என்னிடம் தெரிவித்தார். சத்தியப் பிரமாணம் செய்யாத அந்த வாக்கு மூலத்தை இந்தக் கமிஷனின் விசாரணை ஆவணங்களிலிருந்து நீக்கிவிடலாம் என்று கமிஷனை நான் கேட்டுக் கொள்கிறேன்.''

[முக்கியத்துவத்தை உணர்த்த நான் அடிக் கோடிட்டுள்ளேன்.]

9—2—1977 ஆம் தேதி முருகன் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தில் கண்டுள்ள மேற்சொன்ன வாக்குமூலத்தை, குறிப்பாக, கோடிட்டப் பகுதிகள், 1—7—1976 ஆம் தேதி அவர் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தில் கொடுத்துள்ள வாக்குமூலத்துடனும், கி. பு.கோ. 164 ஆவது பிரிவின்கீழ் கொடுத்துள்ள ஒரு வாக்குமூலம் உட்பட, ஏனைய நான்கு வாக்கு மூலங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்தால், முக்கிய மாக, முன்னாள் அமைச்சர் திரு. பி. பா. ஆதித்தனாரைச் சம்பந்தப்படுத்துவதைப் பொறுத்த வரை, அந்த வாக்குமூலங்களிலிருந்து அவர் பின்வாங்கியிருக்கிறார் என்பது தெரியவரும். முருகன் 1—7—1976-ல் ஏற்கெனவே தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தில் பின்வருமாறு கூறியிருந்தார்:

(1) ''மேல் தாதன்குளம் சங்கத்திற்காக வங்கியிலிருந்து நான் பெற்ற பணம், முன்னாள் அமைச்சர் திரு. பி. பா. ஆதித்தனாரிடம் அல்லது கிருஷ்ணகாந்தனிடம் கொடுக்கப்பட்டது''.

''அந்தச் சங்கங்களின் மற்ற தலைவர்களும் நான் கொடுத்தது போலவே பணம் கொடுத்தனர்.''

(2) ''வங்கியிலிருந்து எடுத்த பணம் முழுவதையும், நேரில் அல்லது கிருஷ்ணகாந்தன் மூலமாக அல்லது உத்தரபாண்டியன் மூலமாக முன்னாள் அமைச்சரிடம் கொடுத்தேன்.''

5—A பிரிவின்கீழ் கொடுத்த வாக்குமூலத்திலும் முருகன் மேற்சொன்னதையேதான் கூறியிருக்கிறார்.

மேற்சொன்ன வாக்குமூலத்திலிருந்து மாறுபடும் வகையில், 9—2—1977-ல் தாக்கல் செய்த தனது உறுதிமொழிப் பத்திரத்தில் முருகன் வாக்குமூலம் கொடுக்கிறார்; தனது வாக்கு மூலத்தில், அமைச்சர் பி. பா. ஆதித்தனாரிடம் பணம் கொடுக்கப்பட்டது என்ற சொற்கள் காவல் துறை டெபுடி சூப்பிரண்டு திரு. முத்தையாவினால் சேர்த்துக்கொள்ளப்பட்டன என்றும், இவ்வாறு சேர்த்துக்கொள்ளுவதற்குத் தான் ஆட்சேபணை தெரிவித்தபோது, ''அந்தப் பணமெல்லாம் தலைவரிடம் அல்லது அங்கிகாரம் பெற்ற முகவரிடம் கொடுக்கப்பட்டதால்'' ''அல்லது'' என்ற சொல்லைச் சேர்த்துக்கொண்டால் ''எல்லாம் சரியாகிவிடும்'' என்று கூறி ''அல்லது'' என்ற சொல்லைச் சேர்த்துக்கொண்டார் என்று முருகன் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

முருகனுடைய வாக்குமூலத்தில் திரு. பி. பா. ஆதித்தனாரைச் சம்பந்தப்படுத்தும் சொற்களை முத்தையா சேர்த்தபோது அவர் (முருகன்) ஆட்சேபணை தெரிவித்தார் என்பது, அவருடைய முற்றைய வாக்குமூலங்களில் பதிவு செய்யப்பட்டு, 1—7—1976 ஆம் தேதியிட்ட உறுதிமொழிப் பத்திரத்தில் மீண்டும் கூறப்பட்ட ஒவ்வொன்றையும்

தாக அவரே கூறியுள்ளார் என்பதை ஏற்கெனவே பார்த்தோம். அப்படியென்றால், அவர் 1-7-1976ல் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தில் என்ன எழுதியிருந்தது, என்ன பொருள்பட அது எழுதப்பட்டிருந்தது என்பதையெல்லாம் முற்றிலும் அறிந்திருக்கவேண்டும்.

கமிஷனுல் நியமிக்கப்பட்ட புலனுய்வு அதிகாரியால் பதிவு செய்ததாகக் கூறப்படும் 19-8-1976-ஆம் தேதியிட்ட வாக்குமூலம், மேற்படி அதிகாரி சொன்னதன் பேரிலேயே, தான் கையொப்பமிட்ட—ஏற்கெனவே தயாராக வைக்கப்பட்டிருந்த வாக்குமூலம் என்று, காலம் கழித்து 9—2—1977-ல் தாக்கல் செய்த தனது உறுதிமொழிப் பத்திரத்தின் கடைசிப் பாராவில் முருகன் கூறியுள்ளார். இந்த வாதத்தை ஏற்றுக்கொள்வது கடினமாக இருக்கிறது. கமிஷனுல் நியமிக்கப்பட்ட புலனுய்வு அதிகாரிகள், கமிஷனின் உத்தரவுகளுக்கிணங்கவும் அதற்குக் கட்டுப்பட்டும் செயல்பட்டிருக்கின்றனர். முருகனுடைய வாக்குமூலத்தைப் பதிவு செய்த இன்ஸ்பெக்டர் சாமிராஜு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் 5-A பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மாநிலப் புலனுய்வுப் பிரிவின் தலைவரான காவல் துறை ருப்பிரன்டு திரு. கணேசன் ஆகிய இருவரும், 9—2—1977-ல் முருகன் தாக்கல் செய்துள்ள உறுதிமொழிப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டைச் சத்தியப்பிரமாண உறுதிமொழிப் பத்திரத்தில் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.

9—2—1977-ல் முருகன் தாக்கல் செய்துள்ள உறுதிமொழிப் பத்திரத்தில் அவர் கூற முனைந்த விஷயங்கள் மேலே சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன :

(1). 1—5—1976-ல் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலத்தில், பல இடங்களில், முருகனிடம் பீம்சிங் கூறிய வார்த்தைகளை முன்னுள் அமைச்சர் திரு. சி.பா. ஆதித்தனுர் கூறியதுபோல முத்தையா சொல்லியிருக்கிறார். அமைச்சர் சார்பில் பேச பீம்சிங்கிற்கு எவ்வித உரிமையும் இல்லை என்பது சாட்சிக்கு (முருகனுக்கு) பின்னர் தெரியவந்தது.

(2) மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் சார்பில் வங்கியிலிருந்து முருகன் எடுத்த பணம், தலைவரிடமோ அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமோதான் கொடுக்கப்பட்டதே அன்றி, முன்னுள் அமைச்சரிடம் கொடுக்கப்படவில்லை 'அல்லது' என்ற சொல் சேர்க்கப்பட்டிருப்பதால்' இந்தப் பணம் திருஞ்சுகாத்தனிடம் அல்லது அங்கீகிக்கப்பட்ட முகவரிடம் அல்லது அமைச்சரிடம் கொடுக்கப்பட்டது என்று கூறவதில் தவறேதுமில்லை என்று சாட்சியிட்டம் முத்தையா உறுதிகூறினர்.

(3) நிலம் பண்படுத்தல்—மேம்பாட்டுப் பணிகளை விவசாயிகளே செய்தனர் முருகன், தான் எடுத்த பணத்தை, விவசாயிகளுக்குக் கொடுத்து, நிலம் பண்படுத்தல்—மேம்பாட்டுப் பணியை மேற்கொள்வதற்காக, சம்பந்தப்பட்ட நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களுக்கும் தலைவரான திருஞ்ஞ காந்தனிடமும் அங்கீகாரம் பெற்ற முகவராக உத்தரபாண்டியனிடமும் கொடுத்தார்.

(4) '' பணம் தேவைப்பட்ட போதெல்லாம் '' என்று அவர் கூறவந்தது நிலம் பண்படுத்தல்—மேம்பாட்டுப் பணிக்குத் தேவைப்பட்ட போதெல்லாம் என்பதே அன்றி, வேறெதற்கும் அல்ல.

(5) '' திருஞ்ஞகாந்தனிடம் அல்லது வழக்குரைஞர் உத்தரபாண்டியனிடம் '' என்ற சொற்களுக்கு முன்னர், ''முன்னுள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனுர் உத்தரவிட்டபடி '' என்ற சொற்கள் திரு. முத்தையாவினுல் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

(6). 1974—75-ல் நடைபெற்ற பணிவிவகாரங்கள்] இந்த விசாரணைக்குச் சம்பந்தப்பட்டவை அல்ல ; ஆனுல், பணம், மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டு நல்ல மகசூல் கண்ட விவசாயிகளைச் சேர்ந்த தாகும்.

(7) வாக்குமூலத்தின் கடைசிப் பாராவில், அந்த வாக்கியத்தில் '' அல்லது '' என்ற சொல் இருப்பதால் முன்னுள் அமைச்சரைச் சம்பந்தப்படுத்தும் சொற்களைச் சேர்த்துக் கொள்வதில் தவறு இல்லை என்று முத்தையா உறுதி கூறியதன் பேரில், அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்டன.

(8) ஆலையில் அலுவலக மேலாளராக இருந்ததால், அச்சங்கங்கள் சம்பந்தப்பட்ட வேலையைக் கவனிக்கத் தனக்கு நேரமேதுவும் இல்லை என்னும் பொருள்பட, ''அந்தச் சங்கங்களுக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை'' என்று கூறியதாக முருகன் விளக்கியுள்ளார்.

(9) கணக்குப் புத்தகங்கள், அந்தத் தொகுதிச் சங்கங்களின் அங்கீகாரம் பெற்ற முகவர் உத்தரபாண்டியனிடம் இருந்தன என்று அவர் கூறினர். ''

முருகன், தான் முன்னர் கொடுத்திருந்த வாக்குமூலங்களில் திரு. சி. பா. ஆதித்தனுரை நேரடியாக்க் குறிப்பிடக்கூடிய பகுதிகளிலிருந்து தப்பிக்க முயன்றிருக்கிறார் என்பது மேற்சொன்னவற்றில் இருந்து தெளிவாகும்.

சன் பேப்பர் மில்லிலிருந்து முருகன் வேலை நீக்கம் செய்யப்பட்டதற்குத் தானே (திரு. சி.பா. ஆதித்தனுர்) பொறுப்பு என்று முருகன் தவருக எண்ணியிருந்ததால், தனக்கு (திரு. சி. பா. ஆதித்தனுருக்கு) எதிராக அவர் சாட்டியுள்ள குற்றச்சாட்டுகளெல்லாம் பொய்யானவை—அற்பத் தனமானவை—எரிச்சலூட்டுபவை என்று, எதிர் மனுதாரர் 3—2—1977-ல் தாக்கல் செய்துள்ள தனது உறுதி மொழிப் பத்திரத்தில் வாதிட்டுள்ளார். இது தொடர்பாக, ஆலையிலிருந்து தன்னை தற்காலிக வேலை நீக்கம் செய்யும் உத்தரவு ஒன்று 31—12—1975-ல் கொடுக்கப்பட்டதாக, வரு

மானவரி அதிகாரி முன்னிலையில் 11-9-1976-ல் கொடுத்த வாக்கு மூலத்தில்தான் முருகன் தெரிவித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. சி. பா. ஆதித்தனாரின் உத்தரவின் பேரில் தான் ஆலையிலிருந்து முருகன் வேலை நீக்கம் செய்யப்பட்டார் என்பது உண்மை என்றால், அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட 31-12-75-ஆம் தேதிக்குப் பின்னர் திரு. சி. பா. ஆதித்தனரைச் சம்பந்தப்படுத்தும் வகையில் வாக்கு மூலங்கள் கொடுப்பதற்கு காரணம் இருந்திருப்பது உறுதி. அவருடைய சாட்சியத்தைத் தள்ளுபடி செய்வதற்கு அதுவே அடிப்படையாகிவிட முடியாது. ஆனால், அது, அவருடைய சாட்சியத்தை முன்னெச்சரிக்கையுடன் ஏற்றுக் கொள்ளும் தனிப்பட்ட சில வழிகளில் அதனை உறுதிப்படுத்துவதில் கமிஷனே ஷூராராக இருக்கச் செய்யும்.

கீழ்க் கண்ட விஷயங்கள் தொடர்பாக, முருகன் 29--1977-ல் தாக்கல் செய்திருந்த உறுதிமொழிப் பத்திரத்திலும் கூட, ஏற்கெனவேகொடுத்திருந்த வாக்கு மூலத்திலிருந்து இட்டவட்டமாகப் பின் வாங்கவில்லை :—

(1) வண்ணர்பேட்டை பயணிகள் மாளிகையில் இருக்கும் தன்னை வந்து பார்க்குமாறு 15-7-1974-ல் திரு. சி. பா. ஆதித்தனர் முருகனுக்குச் சொல்லி அனுப்பினர் ; அவர் (திரு. ஆதித்தனர்) 9,80,000 ரூபாயை முருகவிடம் கொடுத்து, திருநெல்வேலியிலுள்ள பாங்க் ஆப் மதுரையில், மேல தாதன் குளம் இரைவைப் பாசனச் சங்கத்தின் பெயரில் குறித்த கால வைப்பீட்டுக் கணக்கில் போடுமாறு கூறினர்.

(2) வண்ணர்பேட்டை பயணிகள் மாளிகையில் 18-10-1975-ல் மீண்டும் அவர் (முருகன்) திரு. ஆதித்தனரைச் சந்தித்தார் ; பாங்க் ஆப் மதுரையில் முதலீட்டுத் தொகையையும் வட்டித் தொகையையும் பெற்று, தன்னிடம் கொடுக்கு மாறு அவர் (திரு. ஆதித்தனர்) முருகனிடம் கூறினர். அவர் உத்தரவிட்டபடி, திருஷ்ண காந்தன் உத்தரபாண்டியன் ஆகியோருடன், முருகன் பாங்க் ஆப் மதுரைக்குச் சென்று, 10,49,730.36 ரூபாயைப் பெற்றுக் கொண்டு பயணிகள் மாளிகையிலிருந்த திரு. சி. பா. ஆதித்தனரிடம் சென்று நேரில் கொடுத்தார்.

(3) அதே போன்று, பாங்க் ஆப் மதுரையில் குறித்த கால வைப்பீடுகள் செய்திருந்த ஏனைய சங்கத் தலைவர்களும் வங்கியிலிருந்து தொகைகளை எடுத்து, முன்னள் அமைச்சரிடம் கொடுத்தனர். இந்தத் தொகைகளுக்கும் சங்கங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

(4) உத்தரபாண்டியன், திருஷ்ணகாந்தன், பீம்ஜி ஆகியோர், ஸன் பேப்பர் மில்லின் இயக்குநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள் ; அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனருக்கு மிகவும் நெருக்கமானவர்கள். சங்க விஷயங்களைக் கவனித்துக் கொள்ள உத்தரபாண்டியனுக்கு மாதமொன்றுக்கு 200 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டது. நிலம் பண்படுத்தும் வேலைக்காக, திருஷ்ணகாந்தனுக்கு அல்லது S. D. ஆதித்தனுக்கு முன்னள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் பணம் கொடுப்பது வழக்கம்.

பிறிதொரு சூழ்நிலைச் சான்று உள்ளது. அது ஒரளவுக்கு 10-8-1972 ஆம் நாளிட்ட 219507ஆம் எண்ணுள்ள காசோலையின் மூலம் வங்கியிலிருந்து பணம் பெற்றது தொடர்பாக முருகன் முன்னர் அளித்த உறுதிமொழியை மெய்ப்பிக்கிறது. புலனுய்வு அறிக்கையின் 22ஆம் எண்ணுள்ள ஆவணத்தைக் காண்க. அதன் மீதுள்ள கையொப்பம் அதன் பின்புக்குத்திலுள்ள சான்றுப்பம் ஆகியவை எழுதப்பட்டுள்ள நடை, முறை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவிற்கு வேறுபாடு உள்ளது. இது குறித்து முருகனே விளக்கிக் கூறியுள்ளார். தனது கையொப்பம் மிகவும் நன்கு தெரிவாகத் தெரியும் வண்ணம் இருக்க வேண்டும் என்று ஏனையோர் கூறியதன் பேரில் தனது கையொப்பத்தின் நடையை 1971க்கும் 1972-க்கும் இடைப்பட்ட கால அளவில் மாற்றி விட்டதாக அவர் தெரிவித்துள்ளார். முருகன் முன்னர் அளித்த உறுதிமொழிகினைங்க காசோலைப் புதகங்களில் உள்ள பூர்த்தி செய்யப்படாத காசோலைகள் அனைத்திலும் அவர் கையொப்பமிட்டு அவற்றை திரு. சி.பா. ஆதித்தனரிடம் கொடுத்த போது 1971ல் மேற்சொன்ன காசோலையில் கையொப்பம் இட்டுள்ளார். முருகன் முன்னர் அளித்த உறுதிமொழிக் ,ணைங்க அந்தக் காசோலையின் பின் பக்கத்தில் இடப்பட்ட சான்றுப்பங்கள் அந்தக் காசோலை வங்கியில் பணமாக்கப்படும் போது 1972-ல் தான் மேற்குறிப்பு எழுதப்பட்டுள்ளது. அக் காசோலையில் கையொப்பம் இட்டதற்கும் அக் காசோலையின் பின்பக்கத்தில் சான்றுப்பம் இட்டதற்கும் இடைப்பட்ட காலஅளவில் அவர் தனது எழுதும் கையொப்பம் இடும் நடையை மாற்றியுள்ளார். இந்தக் காசோலையில் இடப்பட்ட கையொப்பத்திற்குக்கீழேநாள்குறிப்பிடப்படவில்லே. ஆனல், இக் காசோலையின் பின் பக்கத்தில் இடப்பட்டுள்ள சான்றுப்பங்கள் அனைத்திலும் நாட்கள் இடப்பட்டுள்ளன என்பதோடு இருவேறு சமயங்களில் இரண்டு கையொப்பங்கள் இடப்பட்டுள்ளன என்பதையும் கொண்டு பார்த்தால் பல மாத இடைவெளிக்குப் பிறகுதான் சான்றுப்பம் இட்டேன் என்று முருகன் முன்னர் அளித்த உறுதிமொழியை இவை உறுதிப்படுத்துகின்றன. மேலும் முருகன் எழுதப்படிக்கத்தெரியாதவர் அல்லர். இவர் பி.ஏ., வரையில் படித்தவர். ஸன் பேப்பர் மில்லின் அலுவலக மேலாளராக இருந்துள்ளார். எனவே, 5-A பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரிகள்முன் தான் அளித்த உறுதிமொழியாக எண்ணி, கையொப்பம்

இட்டுள்ளார் அல்லது 1-7-1976-ல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டால் சான்றொப்பம் இடப்பட்ட தனது உறுதிமொழிப் பத்திரமாக எண்ணியுள்ளார் என்று கூறுவதை நம்புவதற்கு இயலாததாக உள்ளது.

கமிஷன் முன் விசாரணை செய்யப்படுவதற்காக முருகனுக்குப் பலமுறை அழைப்பாணைகள் அனுப்பப் பட்டன. கமிஷன் முன் வருவதை அவர் தவிர்த் துள்ளார். எதிர்மனுதாரர் திரு. சி.பா. ஆதித்தனு டைய வழக்குரைஞரின் வேண்டுகோளுக்கிணங்க கமிஷன் முன் அவர் விசாரணை செய்யப்படுவது குறித்து வலியுறுத்தப்படவில்லை. கமிஷன் முன் முருகன் விசாரணை செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டால், 9-2-1977 ஆம் நாளிட்ட தனது கடைசி உறுதிமொழிப் பத்திரத்தை எச்சூழ்நிலை யில் அவர் தாக்கல் செய்தார் என்பதை அவர் வெளிப்படுத்தக்கூடும். பல்வேறு நேரங்களில் பல் வேறு அதிகாரிகளுக்கு அவர் முன்னர் அளித்த 5 வாக்குமூலங்களில் என்ன கூறியுள்ளாரோ அவற்றில் முக்கியமான சில தகவல்கள் குறித்து வேறுபடுத்திக் கூறியுள்ளார்.

கி.பு.கோ. 164-வது பிரிவின்கீழ் முருகன் அளித்த வாக்கு மூலமும் வருமானவரி அதிகாரியின் முன் சத்தியப்பிரமாணம் செய்து அவர் அளித்த வாக்குமூலமும், அவரால் நேரடியாக கமிஷனுக்கு 1-7-1976-ல் அனுப்பி வைக்கப்பட்ட அவரது மூத்த உறுதிமொழிப் பத்திரத்தில் என்ன கூறி யிருந்தாரோ அதனை ஒட்டியே உள்ளன. இந்த இரு வாக்குமூலங்களையும் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம் :—

கி.பு.கோ. 164-வது பிரிவின் கீழ் முருகன் அளித்த வாக்குமூலம்.

மாஜிஸ்ட்ரேட்டால் தயாரிக்கப்பட்ட ஆவணத் திலிருந்து பின்வருமாறு தெரியவருகிறது :—

முருகனது ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்யுமாறுகாவல்துறை தணீ ரூப்பிரன்டுகேட்டுக் கொண்டமுருகன் 25-5-1976-ல்பிற்பகல் 1மணிக்கு திருநெல்வேலி இரண்டாம் வகுப்பு 1 ஆம் எண் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் கொண்டுவரப்பட் டார். ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க அவர் கட மைப்பட்டவர் அல்லர் என்றும், அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை அவர் கொடுத்தால் அது அவருக்கு எதிராக விசாரணையின்போது பயன் படுத்தப்படலாம் என்றும் வழக்கமான எச்சரிக் கையை அவருக்கு மாஜிஸ்ட்ரேட் விடுத்தார். ஒப் புதல் வாக்குமூலம் அளிக்குமாறு காவல்துறை அதி காரி எவராலும் அவர் தூண்டப்பட்டாரா, வலுக் கட்டாயப் படுத்தப்பட்டாரா என்று அவரிடம் கேட்கப்பட்டது. இல்லையென்று அவர் பதில் கூறி னார். இந்த வழக்கில் தான் குற்றம் ஏற்ற சாட்சி யாக ஆக்கப்படுவார் என்ற எண்ணத்தில் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அளிக்கிறார என்றும் அவரிடம் கேட்கப்பட்டது. இந்த வழக்கில் தன்னைக் குற்றம் ஏற்ற சாட்சியாக ஆக்கும் எண்ணம் ஏதும் இல்லையென்று தனக்குத் தெரியும் என்றும், தான் கூறப்போகின்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் குற்றவியல் வழக்கில் தான் தண்டிக்கப்படலாம் என்று தனக்குத் தெரி யும் என்றும் அவர் பதிலளித்தார். மீண்டும் கருதிப்பார்த்து திரும்பவும் 27-5-1976-ல் காலை 11 மணிக்கு வருமாறு அவருக்கு அவகாசமளித்துக் கூறப்பட்டது.

27-5-1976-ல் அவரது ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றப் பொதுவில் மாஜிஸ்ட்ரேட்டால் பதிவு செய்யப்பட்டது. அவரது ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவு செய்யத் தொடங்கும் முன், அவ்விடத்தில் காவல் துறை அதிகாரி யாரும் இல்லை என்பதையும், முருகனுக்கு 25-5-1976-ல் வழங்கப்பட்ட எச்சரிக்கை திரும்பவும் அளிக்கப் பட்டதா என்பதையும் மாஜிஸ்ட்ரேட் பார்த்துக் கொண்டார். குற்றம் சுமத்தப்பட்டவரை (முருகன்) கேள்வி கேட்டதன்பேரிலும் அவர் நடந்து கொள்ளும் விதத்திலிருந்தும் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவரே முன்வந்து அளிக்கிறார் என்று தான் நியமறத் தெரிந்ததாக மாஜிஸ்ட்ரேட் பதிவு செய்துள்ளார்.

அவரது ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்த பிறகு மாஜிஸ்ட்ரேட், அந்த வாக்குமூலத் தின் அடியில் சான்றிதழ் ஒன்றை வழங்கியுள்ளார். அது 1973 ஆம் ஆண்டு கி.பு. கோவின் 164 (4) பிரிவில் சொல்லியுள்ளதற்கு வெளிப்படையாகவே ஒத்துள்ளது.

''ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க அவர் கடமைப் பட்டவர் அல்ல என்றும், அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் எதையும் அவர் அளித்தால் அது அவருக்கு எதிரான சாட்சியமாகப் பயன்படுத்தப் படலாம் என்றும், இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவரே முன் வந்து அளிப்பதாக நான் நம்புகிறேன் என்றும் குற்றம் சுமத்தப்பட்ட முருகனிடம் நான் எடுத்து விளக்கியுள்ளேன். காலை 11.10 மணியிலிருந்து பிற்பகல் 2-00 மணி வரையிலுள்ள கால அளவில் நீதிமன்றப் பொதுவில் அவர் கூறுகூற என்னுல் பதிவு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு தான் கூறியது முழுவதும் சரியாக எழுதப்பட்டுள்ளது என்றும் இது உண்மையானது என்றும் அவர் ஏற்றுக் கொண்டார். அவரது ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்யும் நேரத்தில் காவல் துறை அதிகாரி எவரும் அவ்விடத்தில் இல்லை.''

சட்டப்படிப் பின்பற்றப்பட வேண்டிய நடை முறைகள் பின்பற்றப்பட்டுள்ளதையும், மாஜிஸ்ட் ரேட்டால் விடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை களையும் கருத்தில் கொண்டு பார்த்தால், கி.பு. கோ. 164-வது பிரிவின்கீழ் முருகன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை, கமிஷன் முன் 1-7-1976-ல் அவர் தாக்கல் செய்த அவரது

உறுதிமொழிப் பத்திரத்தில் என்ன கூறியுள்ளாரோ அதனை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தலாம். மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன் தொகை கருங்குளம் தொடக்க நிலவள வங்கியிலிருந்து எடுக்கப்பட்டு T.D.C வங்கியில் சங்கத்தின் கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டது என்று திரு. முருகன் கி.பு. கோ. 164-வது பிரிவின் கீழ் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தெளிவாகக் கூறியுள்ளார். தன்னுடைய அச் சங்கச் செயலாளர் டி. நியாகராஜனுடைய கையொப்பமிடப்பட்ட காசோலைகள் அடங்கிய தொகுப்பு ஒன்றையும் கொண்டு பூர்த்தி செய்யப்படாத காசோலைப் புத்தகம் ஒன்றையும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனாரிடம் அவரால் கொடுக்கப்பட்டது. பல நேரங்களில் தான் திருவாளர் கிருஷ்ணகாந்தனுடனும், உத்திரபாண்டியனுடனும் வங்கிக்குச் சென்று தன்னுடைய கையொப்பமிடப்பட்ட காசோலைகள் மூலம் தொகை பெற்று சில நேரங்களில் நேரடியாக அத் தொகையை சி. பா. ஆதித்தனாரிடம் கொடுத்ததாகவும் வேறு சில நேரங்களில் தொகை கனை சி. பா. ஆதித்தனாரிடம் கொடுப்பதற்காக திருவாளர் கிருஷ்ணகாந்தனிடம் அல்லது உத்திரபாண்டியனிடம் கொடுத்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

1974 ஆகஸ்டில் திரு. சி. பா. ஆதித்தனார், வண்ணாரப்பேட்டையில் உள்ள ஆய்வு மாளிகைக்குத் தன்னை அழைத்ததாக அவர் மேலும் கூறியுள்ளார். அவர் தன்னிடம் 9,80,000,- ரூபாய் ரொக்கத்தைக் கொடுத்து மதுரை வங்கியின் திருநெல்வேலி கிளையில் அதனை வைப்பீடு செய்துவிட்டு, அந்த ரசீதைத்தன்னிடம் கொடுக்குமாறு கூறினார். அதற்கிணங்க, அவர் திருவாளர் காந்தன், அரிச்சந்திரன், உத்திரபாண்டியன் ஆகியோருடன் மேற்சொன்ன வங்கிக்குச் சென்று அத் தொகையை வைப்பீடு செய்து விட்டு குறிப்பிட்ட கால வைப்பீட்டுத் தொகைக்கான (Fixed deposit) அந்த ரசீதை முன்னள் அமைச்சரிடம் கொண்டு வந்து கொடுத்தார். 1975 அக்டோபரில் அத் தொகையையும் அதற்குரிய வட்டியையும் அதாவது 10,40,000 ரூபாயை வங்கியிலிருந்து எடுத்து அதனை முன்னள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனாரிடம் நேரடியாகக் கொடுத்தார். இதுபோன்றதொரு பெருந் தொகையைச் சங்கம் வைப்பீடு செய்வதற்கு இயலும் வண்ணம் அச் சங்கத்தின் நிலங்களிலிருந்து வருவாய் ஏதும் வரவில்லையென்று அவர் கூறினார். முன்னள் அமைச்சர் கட்டளையிடுமாறு பல்வேறு பணிகளைப் பார்ப்பதற்கும் நான்கு சங்கங்களின் அன்றாட அலுவல்களைக் கவனிப்பதற்கும் உத்தரபாண்டியனுக்குத் திங்கள் ஒன்றுக்கு 200 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. முருகனே அவரது மனைவியோ மேல தாதன்குளம் சங்கத்தின் எந்தக் கூட்டத்திற்கும் வரவில்லை. அவர்களில் எவரும் தாதன்குளம் கிராமத்தில் நிலம் எதுவும் வைத்திருக்கவில்லை. ஆதித்தனார் கல்வி அறக்கட்டளையிலிருந்து வாங்கியதாகக் கூறப்படும் நிலங்கள் தொடர்பான பத்திரங்கள் அவர்களிடம் கொடுக்கப்பட்டன.

1—7—1976 ஆம் நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தில் திரு. முருகன் கூறியுள்ளது 5-A பிரிவின் கீழ் 19—8—1976-ல் பதிவு செய்யப்பட்ட உறுதிமொழி வாக்கு மூலத்திற்கு இணங்க உள்ளதை மாஜிஸ்ட்ரேட்டால் கி. பு. கோ. 164-வது பிரிவின் கீழ்27—5—76ல் பதிவு செய்யப்பட்ட அவரது வாக்குமூலத்தின் மூலம் முக்கிய தகவல்களில் உறுதிப்படுத்துகிறது.

உறுதிமொழி அளித்ததன் பேரில் 11—9—1976ல் வருமானவரி அதிகாரியின் முன் அளித்த வாக்குமூலத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.

தந்தி அறக்கட்டளை—கல்வி அறக்கட்டளை பேப்பர் ஆலை மீது கட்டுப்பாட்டு அதிகாரமுள்ளதாகும். சன் பேப்பர் ஆலையில் நான் நீண்டகாலமாகப் பணியிரிந்து வருவதைச் சாதகமாக எடுத்துக்கொண்டு முன்னள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனாரும் அவரது தூரத்து உறவினர் திருவாளர் கிருஷ்ணகாந்தனும் 1971 ஆம் ஆண்டில் என்னை அணுகி, தொடங்க உத்தேசிக்கப்பட்டிருந்த மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக எனது பெயரைப் பயன்படுத்திக் கொள்ள இசையுமாறு கேட்டனர். மீந்த காணும்மூன்று பெயர்களில் மேற்கொண்டும் மூன்று சங்கங்கள் இதே நேரத்தில் தொடங்கப்படவிருந்தன என்று திரு. கிருஷ்ணகாந்தன் என்னிடம் சொன்னார்.

(1) சேரகுளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கம்.

(2) மேற்பெருமானேரி இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கம்.

(3) மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கம்.

மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் தலைவராக இருக்கப்போவதாகத் திரு. கிருஷ்ணகாந்தன் என்னிடம் சொன்னார். அவசியமானபோது சில கடிதங்களில் அல்லது துண்டு கடிதங்களில் அல்லது ஆவணங்களில் கையெழுத்திடுமாறு நான் கேட்கப்பட்டேன். இச் சங்கத்தின் அணை விதிகளை வகுத்தவர் யார் என்று எனக்குத் தெரியாது. என்னிடம் சொன்ன இடங்களில் நான் கையெழுத்திட வேண்டும். இச் சங்கம் தூத்துக்குடியில் எப்பொழுது பதிவு செய்யப்பட்டதென்று எனக்குத் தெரியாது. திரு. பி. ஆர். ஆதித்தன் (முன்னள் அமைச்சரின் முதல் மகன்) கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பச்சையர் சர்க்கரை ஆலையில் அப்போது செயல்பட்டுக்

கொண்டிருந்த திரு. டி. தியாகராஜன் இச் சங்கச் செயலாளராகச் செயல்பட்டத் தேர்ந்தெடுக்கப் பட்டார். நானே தியாகராஜனே மேலதாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்திற்காகச் செயல்படவில்லே. இச் சங்கத்தின் கூட்டங்கள் எதுவும் நடைபெறவில்லே. ஆனல், பின்னர் நில வள வங்கியிடமிருந்து கடன் பெற வேண்டியிருந்தபோது சங்கக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புப் புத்தகம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதிலும் நாங்கள் கையெழுத்திட்டோம். என்னு டைய தலேமையின் கீழ் செயல்பட்டதாகச் சொல்லப்பட்ட சங்கத்தில் 12 உறுப்பினர்கள் இருந்தனர். என்னுடைய மனைவி சர்குண முருகன் (2) திரு. D. ஆதித்தன் மகள் ரதி ஆதித்தன் (3) தியாகராஜன் (4) பீம்சிங் ஆகிய உறுப்பினர்களேத்தான் எனக்கு நினைவிருக்கிறது. 1971ஆம் ஆண்டிலிருந்து அண்மைக்காலம் வரை பெயரளவில் செயல்பட்டு வந்த இந்தச் சங்க உறுப்பினர்களுடன் நான் ஒருபோதும் சங்க விவகாரங்கள் தொடர்பாக உரையாடியதில்லே.

மேலே குறிப்பிட்டுள்ள இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் வெறும் தாளில் மட்டும் தான் செயல்பட்டன என்பதும் உண்மையில் அவை இல்லேயென்பதும் எனக்கு நன்முகத் தெரியும்.

ஆதித்தனர் கல்விச் சங்கத்தினுல் வைத்து வரப்பட்டிருந்த நிலங்கள் மேற்சொன்ன 4 இறைவைப் பாசனச் சங்கங்களின் உறுப்பினர்கள் பெயரில் ஒரளவு பிரித்தளிக்கப்பட்டன. என்னுடைய பெயரிலோ என்னுடைய மனைவி பெயரிலோ ஏனேயோர் பெயரிலோ மாற்றப் பட்ட நிலத்தின் பரப்பளவு எனக்குத் தெரியாது. இந்த நிலங்கள் எங்கு இருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. இச் சங்கங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதையும் இச் சங்கங்கள் மீது யாருக்கு மேலாதிக்கம் இருந்தது என்பதை யும் நீங்கள் புரிந்துகொள்ளலாம். எங்களில் பெரும்பாலோர் முன்னுள் அமைச்சர் திரு. ஆதித்தனருக்காகப் பெயர் கொடுத்தவர்களே.

திருநெல்வேலி மாவட்டம், கருங்குளம் நிலவள வங்கி வழங்கிய தொகை என் மூலம் மற்றவர் களுக்குப் போய்ச் சேரவில்லே. உத்தேச நிலவள நடவடிக்கைகளுக்காக தலேவன் என்ற முறையில் இதில் ஒரு காசைக்கூட நான் செலவிடவில்லே. நானும் ஏனேயோரும் எப்படி கைப்பொம்மைகளாக செயல்பட்டோம் என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். நிலவள வங்கி வழங்கிய 22 இலட்சம் ரூபாய் அது எந்தக்காரியத்திற்காக வழங்கப்பட்டதோ அந்தக் காரியத்திற்காகப் பயன் படவில்லே என்று எனக்குத் தெரியும். இது பின்னர் விசாரணேக்கு வந்தது. இந்த 22 இலட்சம் ரூபாய் தேர்தலுக்காகச் செலவிடப்பட்டது என்பது எனது கருத்தாகும்.

திருநெல்வேலியிலுள்ள கனரா வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன்கள் நிலவள வங்கிக்குக் கொடுக்க வேண்டிய கடன்களேக்கொடுப்பதற்காகப் பயன்பட்டனவா என்று என்னுல் சொல்ல முடியாது. எனக்கு இவற்றிலெல்லாம் எவ்விதத் தொடர்புமில்லே. இத்தகைய கடன்கள் எதற்குப் பயன்படுத்தப்பட்டன, எவ்வாறு பயன்படுத்தப் பட்டன, எக்கால அளவில் பயன்படுத்தப்பட்டன என்பது எனக்குத் தெரியாது. அதே மாதிரி அத் தொகை எவ்வாறு திருப்பித்தரப்பட்டது, எக் கால அளவில் செலுத்தப்பட்டது, கனரா வங்கிக் குத் திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்ற விவரங்கள் எனக்குத் தெரியாது. இறைவைப் பாசனச் சங்கங்கள் முதற்கண் பெற்ற கடனுன 22 இலட்சம் ரூபாய் முன்னுள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் கைக்குப் போய்ச் சேர்த்தது. கனரா வங்கி வழங்கிய கடன்கள் திரு.சி.பா ஆதித்தனர் கைக்குப்போய்ச் சேர்ந்தது. அவர்தான் எல்லா நிதிகளேயும் பயன்படுத்தினர்.

''ஆனுல், 1974ஆம்ஆண்டில் முன்னுள் அமைச்சர் சி. பா. ஆதித்தனர் என்னிடம் ரூ. 9,80,000 கொடுத்துஅத்தொகையை மதுரை வங்கியில் செலுத் தி மேலதாதன்குளம் இறைவைப் பாசன சங்கத் தின் பெயரில் குறித்த காலவைப்பீட்டுத் தொகை ரசீது ஒன்றைப் பெறுமாறு என்னிடம் சொன்னர். அவ்வண்ணமே குறிப்பிட்ட தால வைப்பீடு ரசீது ஒன்றை நான் பெற்று அதனே முன்னுள் அமைச்சர் சி. பா. ஆதித்தனரிடம் கொடுத்தேன். தமக்கு இத்தொகை எவ்வாறு கிடைத்தது என்பதையோ மேலதாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் பெயரில் ஏன் குறித்த கால வைப்பீடு ரசீது பெறப்பட வேண்டும் என்பதையோ திரு. சி.பா.ஆதித்தனர் என்னிடம் கூறவில்லே. 1975 அக்டோபர் திங்களில்முதல்வைப்பீட்டுத் தொகை திருப்பிப் பெறுவதற்கான காலம் வந்தது. இத் தொகை என்னுல் மதுரை வங்கியிலிருந்து பெறப் பட்டது. மேற்படி வைப்பீட்டுத் தொகையை முன்னுள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனரிடம் நான் நேரடியாகச் சென்று கொடுத்தேன். தலேவர் என்ற முறையில் மேலதாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தின் நட வடிக்கைகள் பற்றி விளக்க எனக்குத் தெரியாது. எத்தகைய மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடங் கப்பட்டன அல்லது செயல்படுத்தப்பட்டன, எத் தகைய வேளாண்மை நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன, அவற்றிலிருந்து கிடைத்த தொகை எவ்வளவுஎன்பது பற்றி எனக்கு எந்த விவரங்களும் தெரியாது. எனக்குத் தெரிந்த வரையில் நான் எக்கணக்குகளேயும் எழுதவில்லே ; எந்தக் கணக்குகளும் என்னிடம் காண்பிக்கப்படவும் இல்லே. கணக்குகள் எழுத கணக்கர் எவரையும் நான் நியமிக்கவில்லே. கணக்குகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. முன்னுள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனரைத்தான் இதுபற்றிக் கேட்க வேண்டும். 1971 ஆம் ஆண்டில் மேலதாதன்குளம்

இறைவைப் பாசனச் சங்கத்திற்காக எந்த அலுவலகமும் இல்லே. தாலில்தாரால் நிலவரி எப்பொழுது உயர்த்தப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. 200 ஏக்கர் நிலங்களில் மர வள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டதென்று என்னிடம் சொல்லப்பட்டது. 50 ஏக்கர் நிலங்களில் வாழை பயிரிடப்பட்டது. அகத்தி சிறுபயிர் வினவிக்கப் பட்டு ஸன் பேப்பர் மில்லுக்கு வழங்கப்பட்டது. இவையெல்லாம் பிறர் சொல்லி எனக்குத் தெரிந்த வையே. நான் பயிர் எதையும் பார்த்தது இல்லே. பயிரிடப்பட்ட பரப்பு எவ்வளவு, வினச்சல் என்ன என்பது எனக்குத் தெரியாது. ஒவ்வோர் ஆண்டும் வேளாண்மை செய்யப்பட்டதா என்றும் எனக்குத் தெரியாது. மேல தாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரையில்கூட எனக்கு எந்த விவரமும் தெரியாது. ஏனெனில், இதற்கு நான் பொயரள வில்தான் தலேவர். தாதன்குளத்திலிருந்து 40 மைல் தொலேவிலுள்ள ஸன் பேப்பர் மில்லில் நான் பணிபுரிந்து கொண்டிருந்தேன். சங்கத்தின் நட வடிக்கைகளில் நான் பங்கெடுத்துக் கொள்ளவில்லே. சங்கச் செயலாளர் தியாகராஜன் நீலேயும் இதுவே தான். அவர் தாதன்குளத்திலிருந்து 30 மைல் தொலேவிலுள்ள பச்சையர் சர்க்கரை ஆலேயில் பணிபுரிந்து வந்தார். மேலதாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்தும் அல்லது ஏனேய மூன்று பாசனச் சங்கங்களிட மிருந்தும் எந்த அளவிற்கு வினச்சல் கிடைத்தது என்று என்னால் ஊகிக்கக் கூட முடியாது. பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புக்கு ஆதாயம் கிடைத்தது என்பதை என்னால் நம்ப முடியாது.

'' மேலதாதன்குளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்திற்காக நான் எக்கணக்குகளேயும் அரசு அதிகாரிகளின்முன் கொண்டு காண்பிக்க வில்லே. நான் ஏற்கெனவே சொல்லியுள்ளபடி கணக்குகள் எவையும் வைத்துவரப்படவில்லே. அரசுத்துறை எதுவும் கணக்குகள் கேட்கவில்லே. கணக்குகளேப் பார்வையிடவும் இல்லே. என்ற ஆண்டு கணக்குகள் அனுப்பிமாறு இணேப்பிவாளர் ரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது''

'' தமிழ்நாடு உழவர் பணிக் கூட்டுறவு விற்பனேக் கூட்டமைப்பு என்று ஒன்று உள்ளது என்றே திரு. சந்திரசேகர் அதற்கு நிர்வாக இயக்குநர் என்றே எனக்குத் தெரியாது. சந்திரசேகரை நான் பார்த்தது உண்டு. அவர் என்னுடைய ஊரைச் சேர்ந்தவர். அதேமாதிரி தமிழ்நாடு உழவர் பணிக் கூட்டுறவு விற்பனேக் கூட்டமைப்புக்காக எந்த வங்கிகளில் கணக்குகள் உள்ளன அல்லது குறிப் பிட்ட கால வைப்பீட்டுத் தொகைகள் உள்ளன என்று எனக்குத் தெரியாது''.

முருகனது சாட்சியம் குற்றத்திற்கு உடந்தையாக இருப்பவரது சாட்சியமாகும். ஆனால் இந்த விசாரணேயின் காரியத்திற்காக நீதிமன்ற மாஜிஸ்டி ரேட் பி.டி.கோ. 164-வது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட முந்தைய வாக்குமூலம் விசாரணேக் கமிஷன் முன்னர் 1—7—1976 அன்று அவரது உறுதிமொழிப் பத்திரத்தில் சொல்லியிருந்த தகவல் உண்மையாக இருக்கலாம் என ஆக்குகிறது. வருமான வரி அதிகாரிகளின் முன்னர் அவர் பின்னர் கொடுத்த வாக்குமூலமும் மேற்சொன்ன உறுதிமொழிப் பத்திரத்தையொட்டியே அமைந் துள்ளது. அதோடு மட்டுமல்ல ; முருகன் 1—7—1976 அன்று கொடுத்த உறுதிமொழிப் பத்திரத்தில் சொல்லியுள்ள தகவலே உறுதிப்படுத் தும் வகையில் மேற்கொண்டும் சாட்சியம் உள்ளது.

அப்போது கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.சி.பா.ஆதித்தனர், எந்த அளவிற்கு இச் சங்கங் களுக்குக் கடன்கள் வழங்கப் பெறுவதில் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதும் இதில் எந்த அளவிற்கு ஆழந்த அக்கறை எடுத்துக் கொண் டிருந்தார் என்றும் எம். தங்கதுரை கொடுத்த 43-வது என் உறுதிமொழிப்பத்திரத்திலிருந்து தெரியவரும். இவர் சன் பேப்பர் மில்லில் காசாளராக இருந்தார். பல்வேறு தொகைகளே வங்கியில் செலுத்துவதற்கும் வங்கியிலிருந்து பணம் எடுப்பதற்கும் மேல தாதன்குளம் சங்கத் தலேவருடன் பல்வேறு சமயங்களில் திருநெல்வேலியி லுள்ள மதுரை வங்கிக்குச் சென்றதுபற்றி அவர் தமது உறுதிமொழிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள் ளார்.

எம். தங்கதுரை (43 ஆம் எண் உறுதி மொழிப் பத்திரம்.)

18—10—1975 அன்று மேழ தாதன்குளம் சங்கத்தின் தலேவர் கிருஷ்ணகாந்தன், வழக்குரைஞர் உத்தரபாண்டியன் ஆகிய வருடன் தான் மதுரை வங்கிக்குச் சென்று 10 இலட்சம் ரூபாய் குறித்த கால வைப்பீட்டுத் தொகையையும், 39,890·38 ரூபாய் வட்டியை யும் எடுத்ததாக முருகன் சாட்சியம் கூறியுள்ளார். வங்கி ரசீதின் பின்புறத்தில் தலேவர் என்ற முறையில் முருகனும், மேல தாதன்குளம் சங்கச் செயலாளர் என்ற முறையில் சாட்சியும் கையெழுத்திட்டனர். முருகன், கிருஷ்ணகாந்தன், உத்தரபாண்டியன் ஆகியோர் சாட்சியைச் சன் பேப்பர் மில்லுக்குச் செல்லுமாறு தாங்கள் வங்கியிலிருந்து எடுத்த தொகையுடன்பெரிய அய்யாவைச் சந்திக்கச் செல்ல தாகவும் சொன்னர்கள். திரு.சி. பா. ஆதித்தனர் பெரிய அய்யா என்று அழைக்கப்பட்டதாகவும் செப்டம்பர்.27ஆம் நாள் வரும் அவரது பிறந்தநாள் ஸன் பேப்பர் ஆலேயில் விடுமுறையாகக் கருதப் பட்டதென்றும் தங்கதுரை மேலும் உறுதி யாகச் சொன்னர். அவர் தாதன்குளம் இறை வைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப் பினர் இல்லேயென்றும், ஏனெனில், அக் கிராமத் தில் தனக்கு எந்த நிலமும் சொந்தமில்லே என்றும் சங்கத்தின் பெயரில் வைப்பீடு செய் யப்பட்ட தொகைகளுக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லேயென்றும் அவர் கூறினர்.

இந்தச் சாட்சி கொடுத்துள்ள உறுதிமொழி வாக்குமூலத்தை ஏன் நம்பக்கூடாதென்பதற்கு வெளிப்படையான காரணம் இல்லே. வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் கடன் பெற்றுக்கொண்ட பிறகு, அத் தொகை முருகன், திருமணகாந்தன், ஆர். அரிச்சந்திரன், உத்தரபாண்டியன் ஆகியோரால் மதுரை வங்கிக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பது இவரது வாக்குமூலத்திலிருந்து தெரியவருகிறது.

இத் தொகை சங்கத்தின் பெயரில் வைப்பீடு செய்யப்பட்டதா என்பது சாட்சிக்குத் தெரியாது. சன் பேப்பர் ஆலேயின் ஒரு பிரிவில் மேலாளராக இருந்த முருகனது கட்டளேயின் மேல் வங்கிக் கடிதங்களில் அவர் கையெழுத்திட்டார். அப் பிரிவில் அவர் முருகனின் அதிகாரத்தின் கீழ் செயல்பட்டு வந்தார். 18—8—1976 அன்று விசாரணே அதிகாரி பதிவு செய்தபோது தாமாகவே ஒரு வாக்குமூலத்தைக் கொடுத்ததாகவும், அந்த வாக்குமூலம் நிர்ப்பந்தத்தின் பேரிலோ அச்சுறுத்தலின் பேரிலோ வாக்குறுதியின் பேரிலோ தம்மிடமிருந்து பெறப்படவில்லே என்றும் சாட்சி கூறினர்.

இந்த உறுதிமொழிப் பத்திரம் 5—12—1976 அன்று சாட்சியால் கையெழுத்திடப்பட்டது. 5A பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் 18—8—1976 அன்று கொடுக்கப்பட்டது. இந்த இரண்டு வாக்குமூலங்களும் ஒன்றையொன்று ஒத்துள்ளன. இந்தச் சாட்சியை நம்பாமலிருப்பதற்குக் காரணம் எதுவுமில்லே. வங்கியிலிருந்து ரூ. 10,39,890·38 பெற்றுக் கொண்டபிறகு, திருஞ்ணகாந்தன், முருகன், உத்தரபாண்டியன் ஆகிய மூவரும் அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு அவர்களால் ''பெரிய ஐயா'' என்று குறிப்பிடப்படும் திரு. சி. பா. ஆதித்தனரைச் சந்திக்கச் சென்ருர்கள் என்பதை அவருடைய சாட்சியம் மெய்ப்பிக்கிறது.

திரு. சி. பா. ஆதித்தனர் அவர்களே ஸன் பேப்பர் மில் பணியாளர்கள் ''பெரிய ஐயா'' என்று அழைப்பார்கள் என்பதற்கு ஆவணங்களில் வேறு சாட்சியமும் உள்ளது.

திரு. கே. பி. கந்தசாமி (உறுதிமொழிப் பத்திரத்தின் தொடர் எண்32) அவர்களும் ஓர்உறுதி மொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளார். இவர் எதிர்மனுதாரரான திரு. சி. பா. ஆதித்தனரின் மருமகனுவார். அவருடைய மனேவி, அதாவது திரு. சி. பா. ஆதித்தனரின் மகள் இப்போது இறந்துவிட்டார். 1971 முதல் 1973 வரை சன் பேப்பர் மில்லின் துணே நிர்வாக இயக்குநராக இருந்ததாக இவர் சாட்சியம் அளித்துள்ளார். முருகன், அரிச்சந்திரன், திருஞ்ணகாந்தன், தங்துரை ஆகியோர் சன் பேப்பர் மில்லின் பணியாளர்கள் என்றும், இவர்கள் பிரச்சினேயிலுள்ள இந் நான்கு இறைவைப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏதாவதொன்றில் அலுவலக நிர்வாகிகளாகவும், உறுப்பினர்களாகவும் இருந்தார்கள் என்றும் சாட்சி தெரிவித்துள்ளார். 1971-72 ஆம் ஆண்டில் சன் பேப்பர் மில்லில் திரு. ஏ. ஜே. நற்குணம் மேலாளராகவும், திரு. எஸ். முருகன் அலுவலக மேலாளராகவும், திரு. ஆர். அரிச்சந்திரன் கணக்காளராகவும், திரு. பி. ஜெயராமன் உதவிப் பணியாளர் அதிகாரியாகவும், திரு. தங்கதுரை காசாளராகவும் இருந்தார்கள் என்று இவர் மேலும் சாட்சியம் அளித்துள்ளார். இவர்களில் திரு. நற்குணம் தவிர, ஏனேய அனேவரும், பிரச்சினேயிலுள்ள நான்கு இறைவைப் பாசன கூட்டுறவுச் சங்கங்கள் ஏதாவதொன்றில் அலுவலக நிர்வாகிகளாகவும், உறுப்பினர்களாகவும் இருந்தார்கள்.

1973 ஆம் ஆண்டு ஜூலே இறுதி வாக்கில் இந்த நான்கு சங்கங்களிடமிருந்து பேப்பர் தயாரிக்க மூலப் பொருள்களேப் பெறுவதற்காக, இந்த நான்கு சங்கங்களுக்கு சன் பேப்பர் மில் ரூ. 16 இலட்சம் முன் பணம் வழங்கியது என்று சாட்சி மேலும் சாட்சியம் அளித்தார். சங்கங்களிடமிருந்து மூலப் பொருள்களேப் பெறுவதற்கு அவற்றின் இறை பற்றி முறையான ஆய்வு செய்யப்படவில்லே. இத்த முன்பணம் திரு. சி. பா. ஆதித்தனரின் ஆலோசனேயின் பேரில்தான் வழங்கப்பட்டது என்று சாட்சியிடம் சன் பேப்பர் மில்லின் மேலாளர் நற்குணம் தெரிவித்தார். அந்தச் சமயத்தில், பேப்பர் வழங்க முன் பணம் என்ற பெயரில் இனத் தந்தியிடம் இருந்து ரூ. 12 இலட்சமும், வைப்பீடுகள் என்ற பெயரில் ஆதித்தனர் கல்வி நிறுவனத்திடமிருந்து ரூ. 4 இலட்சமும் வரப்பெற்றிருந்தன. கடைசியில் சங்கம் முன் பணம் முழுவதையும் திருப்பிச் செலுத்திவிட்டது. அவை ரொக்கமாகச் செலுத்தப்பட்டதன் பேரில் மட்டுமே மூலப் பொருள்களேப் பெயரளவுக்கு வழங்கியது. அடுத்து, சன் பேப்பர் மில் ரூ. 12 இலட்சம் முழுவதையும் கினத் தந்திக்குத் திருப்பிச் செலுத்திவிட்டது. ரூ. 16 இலட்சம் முன்பணம் வழங்க ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இதில் நான்கு சங்கங்களின் சார்பாக அதிகாரம் பெற்ற முகவரான திரு. உத்தரபாண்டியனும், சன் பேப்பர் மில்லின் சார்பாக திரு. நற்குணமும் கையெழுத்திட்டுள்ளனர்.

திரு. வி. நடேசன் (உறுதிமொழிப் பத்திரம் தொடர் எண் 36) என்பவர் 28—5—1973 முதல் 23—5—1975 வரை திருநெல்வேலி கனரா வங்கியின் மேலாளராக இருந்தார். உத்தரபாண்டியன் அதேபோல இந்தச் சங்கங்களின் நான்கு தலேவர்கள், அதாவது, முருகன், திருஞ்ணகாந்தன், அரிச்சந்திரன், கொத்தளமுத்து ஆகியோரை அவருக்குத் தெரியும் என்று அவருடைய உறுதிமொழிப் பத்திரத்தில் சாட்சியம் அளித்துள்ளார். தலேவர் பணம் எடுக்க அல்லது பணம் போட வங்கிக்கு வந்தபோதெல்லாம் உத்தரபாண்டிய

னுடனேயே வருவார். வங்கிக்குத் தகவல் அல்லது ஏனைய விவரங்கள் தேவைப்பட்ட போதெல்லாம், அவர்கள் சி. பா. ஆதித்தனாரோடு தொடர்பு கொண்ட பின்னரே தகவல் களைக் கொடுத்தார்கள். சங்கங்கள் தொடர்பான ஒவ்வொரு விஷயத்திற்கும் உத்தரபாண்டியனுக்கு அமைச்சர் உதவி வந்தார்.

திரு. சி. பா. ஆதித்தனார் திருநெல்வேலிக்கு வருகைதந்தபோதெல்லாம், ஆய்வு இல்லத்தில் தன்னை வந்து சந்திக்கும்படி வட்டார மேலாளர் ஜி. ஆர். பிரபுவை வரவழைப்பதுண்டு. சாட்சியும் இரண்டு அல்லது மூன்று முறை ஜி. ஆர். பிரபுவுடன் அமைச்சரைச் சந்தித்திருக்கிறார். இந்தச் சந்திப்புகளின் போது, அமைச்சர் பொதுவான விஷயங்கள் பற்றியும் சங்கங்கள் செயல்படுவது பற்றியும் விவாதிப்பதுண்டு.

உத்தரபாண்டியனுடன் சேர்ந்துகொண்டு இரண்டு அல்லது மூன்று முறை சங்கங்களின் நிலங்களை சாட்சி பார்வையிட்டார். அவ்வாறு பார்வையிட்ட பொழுது எந்தவொரு சங்கத்தின் தலைவரும் அங்கே காணப்படவில்லை. ஊழியரும் பெரும்பணியாளர்களும் கூலிகளும்தான் அங்கே பணிபுரிந்து கொண்டிருந்தார்கள்.

ஏ. ஜே. நற்குணம்.

தொடர்புடைய இந்த நேரத்தில், ஸன் பேப்பர் மில்லின் மேலாளர் ஏ. ஜே. நற்குணம் கமிஷன் முன் 9—7—1976 அன்று உறுதிமொழிப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். உத்தரபாண்டியனும் முருகனும் திரு. சி. பா. ஆதித்தனருக்கு மிகவும் வேண்டிய வர்கள் என்றும், இந்த இரண்டு பேரும் 1972 ஆம் ஆண்டு மத்தியில் தட்டச்சு செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒன்றைச் சாட்சியிடம் காட்டி ஸன் பேப்பர் மில் சார்பில் அதில் கையொப்பம் இடுமாறு அவரைக் கேட்டனர். மேற்படி இறைவைப் பாசன சங்கங்கள் 4க்குத் தேவைப்படும் மூலப்பொருள்களை வழங்குவதற்காக சுமார் ரூ. 15 இலட்சம் முன் பணம் கொடுப்பதைப் பற்றி இந்த ஒப்பந்தம் குறிக்கிறது. முருகனும் உத்தரபாண்டியனும் இந்த ஒப்பந்தம் 'பெரிய ஐயாவின்' உத்தரவுபடி செய்து கொள்ளப்படுவதாகச் சாட்சியிடம் சொன்னர்கள். நிர்வாக இயக்குருக்கு இது பற்றித் தெரிவிக்கப் பட்டதாகவும் அவர்கள் சாட்சியிடம் தெரிவித்தார்கள். 'பெரிய ஐயா' என்பது முன்னுள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனாரைக் குறிக்கிறது என்றும் சாட்சிக்குத் தெளிவுறுத்தப்பட்டது. அதன் பேரில், சாட்சி, ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டார். முருகனும் உத்தரப்பாண்டியனும் அதை எடுத்துச் சென்று விட்டனர். சாட்சி மேலும் கூறினர்: ''மேற்படி ரூ.15இலட்சம் முழுவதற்கும் மூலப் பொருள்கள் வழங்கப்பட்டனவா என்பது எனக்குத் தெரியாது. ஏதோ சிறு அளவுகளில்தான் மூலப் பொருள் வழங்கப்பட்டது.''

நற்குணம் சாட்சியத்தில், நடக்க முடியாததோ நம்பத் தகாததோ எதுவுமில்லை.

P. ஜெயராமன்

இது சம்பந்தமான அடுத்த சாட்சி P. ஜெயராமன் ஆவார். சேரகுளம் இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் என்று சொல்லப்படுபவர் இவர். மேற்படி சட்டத்தின் 5-A பிரிவின்படி கமிஷன் நியமித்த புலனுய்வு அதிகாரிகள் இவரை விசாரணை செய்தனர். உறுதிமொழிப் பத்திரம் ஒன்றையும் இவர் கமிஷன் முன் தாக்கல் செய்துள்ளார். அவரது இரு வாக்குமூலங்களும் கணிசமான அளவில் ஒன்றையொன்று ஒத்துள்ளன. அவரது உறுதிமொழிப் பத்திரத்தின் நகல் ஒன்று எதிர் மனுதாரர் சி. பா. ஆதித்தனருக்கு வழங்கப் பட்டது. எனினும், அவர் நமது எதிர் உறுதி மொழிப்பத்திரம் எதிலும் இந்தச் சாட்சியத்தின் உறுதிமொழி பற்றி எதையும் குறிப்பிடவில்லை.

திரு. ஜெயராமன் தனது உறுதிமொழிப் பத்திரத்தில் கூறியுள்ளதாவது :—

'' நான் 1964–65-ல் புகுமுக வகுப்புத் தேர்வில் தேறினேன். 1966ஆம் ஆண்டில் சேரன்மாதேவி அருகே அரியநாயகிபுரத்தில் அமைந்துள்ள ஸன் பேப்பர் ஆலையில் மேலாளர் திரு. எஸ். முருகனுக்கு உதவியாளராக நான் பணியில் சேர்ந்தேன். திரு. கே. பி. கந்தசாமி, நிர்வாக இயக்குநராவார். இவர் முன்னுள் அமைச்சர் சி. பா. ஆதித்தனரின் மருமகனுவார். முன்னுள் அமைச்சரை நாங்கள் 'பெரிய அய்யா' என்றுதான் கூப்பிடுவோம். திருநெல்வேலியிலுள்ள தினத்தந்தியின் மேலாளர் திரு. கிருஷ்ணகாந்தன் நாங்கள் 'பெரிய அய்யாவை' அவசரமாக ஸ்ரீவைகுண்டத்தில் பார்க்கவேண்டுமென்று கூறியதாகத் திரு. முருகன் 1971 ஜனவரி இறுதியில் என்னிடமும் அரிச்சந்திரனிடமும் சொன்னர். திரு. முருகன் எங்களை ஸ்ரீவைகுண்டத்திற்குக் காரில் அழைத்துச் சென்றார். அங்கு நான் கிருஷ்ணகாந்தனையும் ஏனையோரையும் பார்த்தேன். திரு. முருகனும் திரு. அரிச்சந்திரனும் அமைச்சரைச் சந்தித்தார்கள். நான் வெளியில் காத்திருந்தேன். அதன் பின்னர் அவர்கள் வெளியில் வந்தனர். பல சங்கங்கள் அமைப்பது தொடர்பாகச் சில பத்திரங்களில் நான் கையெழுத்துப் போடவேண்டும் என்று 'பெரிய அய்யா' விரும்பியதாகத் திரு. முருகன் என்னிடம் சொன்னர். அவர் பின்னர் எங்கள் ஊருக்கு வந்துவிட்டார். மூன்று வாரங்கள் கழிந்த பிறகு கிருஷ்ணகாந்தன்,

அருணாசலம் பிள்ளை, லக்கீல் உத்தரபாண்டியன் ஆகியோர் சன் பேப்பர் ஆலுக்கு வந்து என்னுடைய கையெழுத்தையும் அரிச்சந்திரன் கையெழுத்தையும் சில படிவங்களிலும் நோட்டுப் புத்தகங்களிலும் வாங்கினர். சங்கங்கள் அமைக்கப் படப்போவதாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள். எனவே, நான் கையெழுத்திட்டேன். அதன் பின்னர் ஒரு நாள் நானும் அரிச்சந்திரனும் மூன்னர் அமைச்சரின் சகோதரர் திரு. D. ஆதித்தனும் ஏனையோரும் ஸ்ரீவைகுண்டத்திலுள்ள உதவிப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்றோம். அங்கு திரு. D. ஆதித்தன் சொன்னபடி நான் சில பத்திரங்களில் கையெழுத்திட்டேன். மற்றவர்களும் கையெழுத்திட்டனர். சேரகுளம் சங்கத்தின் செயலாளர் நான் என்றும், அரிச்சந்திரன் தலைவர் என்றும் திரு. D. ஆதித்தன் சொன்னார். அதன்பின்னர் ஒருநாள் D. ஆதித்தன் வக்கீல் உத்தரபாண்டியன், திருவண்காத்தன் ஆகியோர் காகித ஆலுக்கு வந்து தமிழ்நாடு மாவட்டக் கூட்டுறவு வங்கியின் காசோலைப் புத்தகத்தில் எனது கையெழுத்தைப் போடச்சொன்னார்கள். திரு. அரிச்சந்திரன் காசோலைப் புத்தகத்தின் எல்லா ஏடுகளிலும் முன்னரே கையெழுத்து இட்டு விட்டார். நானும் அவ்வண்ணமே கையெழுத்திட்டேன். எவ்வளவு பணம் வங்கியிலிருந்து எடுக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. ரொக்கம் எடுப்பதற்கு நான் ஒருநாளும் வங்கிக்குச் சென்றதில்லை. 1974ஆம் ஆண்டில் திருவண்காத்தன், அரிச்சந்திரன், வக்கீல் உத்தரபாண்டியன் ஆகியோர் திருநெல்வேலியிலுள்ள மதுரை வங்கியில் ரொக்கம் செலுத்தினர்கள். அவர்கள் என்னை வங்கிக்கு அழைத்துச் சென்று சேரகுளம் சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் ஒருசில படிவங்களில் கையெழுத்து இடச்சொன்னார்கள். 3 மாதங்களுக்கு ஒரு முறை அவர்கள் என்னை வங்கிக்கு அழைத்துச் சென்று வட்டித் தொகையைப் பெற்றார்கள். பின்னர் திருவண்காத்தனும் அரிச்சந்திரனும் கணக்கை முடித்து விட்டு வவப்பிட்டுத் தொகையையும் அதற்கான வட்டியையும் வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டனர்.

வக்கீல் உத்தரபாண்டியன் சொன்னபடி நானும் திரு. அரிச்சந்திரனும் கனரா வங்கிக்காசோலைகளில் பல தடவைகளில் கையெழுத்திட்டுள்ளோம். நான் ரொக்கம் எதையும் பெறவில்லை. வங்கியிலிருந்து எக் காரியத்திற்காக அவர்கள் பணம் பெற்றனர் என்று எனக்குத் தெரியாது. கையெழுத்திட்ட பிறகு, ஆலுக்குத் திரும்பிச் செல்லுமாறு அவர்கள் என்னிடம் சொல்வார்கள். எனக்குத் தெரிந்த வரையில் சேரகுளம் சங்கத்தில் கணக்குப் புத்தகம் எதுவும் வைத்துவரப்படவில்லை. திரு. D. ஆதித்தன், வக்கீல் உத்தரபாண்டியன் ஆகியோர் சங்கப் பணியைக் கவனித்தனர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

''சேரகுளம் கிராமத்தில் எனக்கு நிலம் எதுவுமில்லை. நான் நிலவரி செலுத்தவில்லை. நான் விவசாயி அல்ல. நான் நிச்சங்கத்தின் உறுப்பினரும் அல்ல. ஆனல் பெயரளவிற்கே எனக்குச் சிறிது நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதாக என்னிடம் சொல்லப்பட்டது. நிலத்திற்காக நான் எந்த விலையும் கொடுக்கவில்லை. என்னிடம் விற்பனைப் பத்திரம் எதுவும் கிடையாது. சேரகுளத்தில் சங்கக் கூட்டத்திற்கு நான் சென்றதில்லை. கேட்டபோதெல்லாம் நான் காலிதங்களில் கையெழுத்திட்டேன்.''

(வலியுறுத்தப்படவேண்டிய இடங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டன.)

திருமதி சற்குண தேவி.

அடுத்து, நான் திருமதி. சற்குண தேவியின் சாட்சியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். இந்த அம்மாள் சன் பேப்பர் மில்ஸ் நிறுவன நிர்வாகியும், மேல் தாதன்குளம் சங்கத்தின் தலைவருமாகிய முருகனுடைய மனைவியாகும். 5-A பிரிவின்படிப் புலனுய்வு அதிகாரியால் விசாரிக்கப் படவில்லை. ஆனலும், 5(2) (b) விதியின் கீழ் கமிஷன் பிறப்பித்த அறிவிப்பிற்கிணங்க 9-7-1976ன் இவர் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார். இந்த அம்மாளின் உறுதிமொழிப் பத்திரத்தின் நகல் எதிர்மனுதாரருக்கும் கொடுக்கப்பட்டது. ஆனல், அவருடைய எதிர் உறுதிமொழிப் பத்திரத்தில் இந்த அம்மாளது சாட்சியம் பற்றி அவர் ஏதும் குறிப்பிடவில்லை. இவரது கணவர் முருகன் 9—2—1977 நாளிட்டு அணமையில் கொடுத்த உறுதிமொழிப் பத்திரத்தில் அவரது முந்தைய வாக்குமூலங்களிலிருந்தும் வழுவிச் செல்ல முற்பட்டிருந்தாலும் இந்த அம்மாள் அவ்வாறு செய்யவில்லை. இந்த அம்மாள் 9—7—1976 நாளிட்ட வாக்குமூலத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் விலகி அடுத்து ஓர் உறுதிமொழிப் பத்திரத்தையோ மனுவையோ தாக்கல் செய்யவில்லை. திருமதி சற்குண தேவி தனது உறுதிமொழிப் பத்திரத்தில் கூறியுள்ளதாவது :—

''நான் 1967-ல் திரு. எஸ். முருகேன் மணந்து கொண்டேன். எங்களுக்கு ரமேஷ், பிரகாஷ் என்கிற இரு குமாரர்கள் உள்ளனர். 1975 டிசம்பர் வரையில் எனது கணவர் (திருநெல்வேலி மாவட்டம்) அரியநாயகிபுரம் சன் பேப்பர் மில்ஸ் மேலாளராகப் பணியாற்றி வந்திருக்கிறார். இந்த ஆலை வளவுக்குள்ளேயே எங்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கப்பட்டது. 1971 ஜனவரி, பிப்ரவரியில், சங்கம் ஏதோ அமைக்கப்படுவதாகவும், எனவே நான் கையொப்பமிடவேண்டும் என்றும் காரணம் கூறி, திருநெல்வேலி ''தினத்தந்தி'' அலுவலகத்திலிருந்து சில நபர்கள் கொண்டுவந்திருந்த ஒரு சில படிவங்களிலும் நோட்டுப் புத்தகங்களிலும்

கையொப்பமிடுமாறு எனது கணவர் என்னைக் கேட்டார். தாதன்குளம் எங்குள்ளது என்றுகூட எனக்குத் தெரியாது. எனது பெயரிலோ எனது கணவர் பெயரிலோ தாதன்குளத்தில் நிலம் ஏதுமில்லை. அன்றியும், நிலத் தீர்வை எதுவும் நாங்கள் செலுத்தியதில்லை. மேலும், நிலம் எதுவும் அங்கு பயிரிட்டதுமில்லை. மேல தாதன் குளத்தில் நாங்கள் வசித்ததில்லை. சங்கக் கூட்டங்கள் எதிலும் நான் கலந்துகொண்டதுமில்லை; அன்றி அச் சங்கத்திலிருந்து கடன் எதுவும் வாங்கியதுமில்லை. சங்க நடவடிக்கைகளில் எந்த விதத்திலும் நான் சம்பந்தப்பட்டவள் அல்லள்.''

ஜெயராமன், சற்குணதேவி ஆகிய இருவரும் உறுதி மொழியின் பேரில் கொடுத்த வாக்குமூலங்களை நம்பக்கூடாது என்பதற்குக் காரணம் ஏதும் இல்லை என்பது வெளிப்படை. இதனை உறுதிப்படுத்தக் கூடிய சாட்சியங்களைக் கருத்தில் கொண்டு பார்த்தால், 9-2-1977 நாளிட்ட அவரது உறுதி மொழிப் பத்திரத்திற்கு முன் வெவ்வேறு நிகழ்வுகளில் முருகன் கொடுத்த வாக்குமூலங்கள் பொதுவாக உண்மை என்றே தோன்றுகிறது. ஆனால், 9—2—1977-ல் அவரது உறுதிமொழிப் பத்திரத்தில் அவர் ஏற்கெனவே அளித்த வாக்குமூலங்களின் சில பகுதிகளிலிருந்து அவர் வழுவிச் செல்ல முற்பட்டிருப்பதைத்தான் நம்புவதற்கில்லை.

கடன்கள் வாங்கியிருத்தல்.

இறைவைப் பாசனச் சங்கங்கள் ஒவ்வொன்றுக் குறித்தும், பெறப்பட்ட கடன் தொகை, பங்கு மூலதனம் செலுத்திய தேதி, கடன் வாங்கிய தேதிகள், அவ்வாறு வாங்கிய தொகைகள் சம்பந்தப்பட்ட நிலவரத்தைப் புலனுய்வு அறிக்கை தொகுதி I, 55 முதல் 57 பக்கங்களில் 72—73 பாராக்களின் 5-A பிரிவின்படி புலனுய்வு அதிகாரி அதிகார பூர்வமான பதிவுக் கட்டுகளைப் பரிசீலித்துப் பார்த்ததன் பிறகு சுருக்கமாகக் கொடுத்துள்ளார்;

கடன் தொகை வரவு வைத்த தேதிகளும், பங்கு மூலதனத் தொகை செலுத்திய தேதிகளும் பின்வருமாறு :—

சங்கம். (1)	கடன் தொகைகள் வரப்பெற்ற தேதி. (2)	பங்கு மூலதனம் செலுத்திய தேதி. (3)	தொகை. (4) ரூ.
மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கம் ..	12—2—1971 ரூ. 3,70,000	13—2—1971	18,584.00
கீழ தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கம்	12—2—1971 ரூ. 3,50,000	13—2—1971	17,584.00
சேரகுளம் இறைவைப் பாசனச் சங்கம் ..	26—2—1971 ரூ. 2,70,000 (முதல் தவணை) 4—3—1971 ரூ. 2,70,000 (இரண்டாவது தவணை)	5—3—1971	27,084.00
கீழப்பெருமானேரி இறைவைப் பாசன சங்கம் ..	26—2—1971 ரூ. 3,82,500 (முதல் தவணை) 4—3—1971 ரூ. 3,82,500 (இரண்டாவது தவணை)	5—3—1971	38, 334.00

கடன்தொகை வைப்பீடு செய்த பின்னர் உடனேயே தொகை வாங்கிய தேதிகள் பின்வருமாறு:—

சங்கம். (1)	தேதி. (2)	பெறப்பட்டத் தொகை. (3) ரூ
மேல தாதன் குளம் இறைவைப் பாசனச் சங்கம்	15—2—1971	2,10,000.00
	22—2—1971	1,41,000.00
கீழ தாதன் குளம் இறைவைப் பாசனச் சங்கம்	12—2—1971	2,00,000.00
	13—2—1971	1,20,000.00 0
	22—2—1971	12,000.00 0
சேரகுளம் இறைவைப் பாசனச் சங்கம்	26—2—1971	2,42,000.00 0
	4—3—1971	1,80,000.00
கீழப்பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கம்	26—2—1971	3,44,000.00
		2,90,000.00

மேலே சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ள உண்மை நிலவரம் பற்றி தகராறு ஏதும் இல்லை.

சுருக்கமாக, 28–10–1971-ல் இந்த நான்கு சங்கங்களிடம் வரவு வைக்கப்பட்டிருந்த தொகைகள் பின்வருமாறு :—

		ரூ. பை
1.	மேல தாதன்குளம் இறை வைப் பாசனச் சங்கம் ..	546·00
2.	கீழ தாதன்குளம் இறை வைப் பாசனச் சங்கம் ..	546·00
3.	சேரகுளம் இறைவைப் பாசனச் சங்கம்	91,133·21
4.	கீழப்பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கம் ..	92,887·58

இந்தச் சங்கங்களில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகைகளில் சிறிது அதிகரிப்பு காணப்படுவதற்குக் காரணம் வைப்பீடுகளின் பேரில் சேர்ந்து வந்துள்ள வட்டித் தொகையாகும்.

சேரகுளம், கீழப்பெருமானேரி சங்கங்களின், கணக்கில் விட்டு வைக்கப்பட்டுள்ள இருப்புத் தொகையிலிருந்து கடன் பெறப்பட்ட காரியத்திற்காக சங்கங்கள் தொகை எதுவும் எடுக்கவில்லை. உண்மையில் கடனிருப்புத் தொகையிலிருந்து சேரகுளம் சங்கம் ரூ. 86,000-மும் கீழப்பெருமானேரி சங்கம் ரூ 41,000-மும் வங்கிக் கடனுக்கான முதல் தவணையைத் திருப்பிச் செலுத்த 28–10–1971-ல் பயன்படுத்தப்பட்டன. இந்த நான்கு சங்கங்களிடமிருந்தும் சேர வேண்டிய கடனுக்கான முதல் தவணைத் தொகை மொத்தம் ரூ. 2,53,517·89 இத்தொகையில் சேரகுளம், கீழப்பெருமானேரி சங்கங்களிலிருந்து சேர வேண்டிய முதல் தவணை ரூ. 97,000 அவர்களது கணக்கில் இருந்த கடன் இருப்புத் தொகையிலிருந்து இந்த இரு சங்கங்களும் செலுத்தி உள்ளன. ஆனல், கடனுக்கான முதல் தவணை குறித்து மேல, கீழ தாதன்குளம் சங்கங்களிலிருந்து சேர வேண்டிய ரூ 1,55,517·89 இருப்புத் தொகை இந்த நான்கு சங்கங்களின் நிதிகளைத் தவிர வேறு ஏதோ ஆதாரத்திலிருந்து ரொக்கமாகத் தொகை பெற்று ஈடு செய்யப்பட்டதென்று தெரிகிறது. இது தொடர்பாக, இடையில் இந்தக் கடன் தொகைகளைத் தவருகப் பயன்படுத்திக் கடனுக்கான தொகையைச் சங்கங்கள் திருப்பிச் செலுத்துவதிலும் வெளியே ஏதோ ஒரு நபர் செயல்படுட்டிருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு இது போதிய ஆதாரமளிக்கிறது.

கடன்கள் பயன்படுத்தப்படுவது சம்பந்தமாக

எந்த நோக்கங்களுக்காக இக் கடன்கள் வழங்கப் பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்பட்டனவா என்பது குறித்து நாம் இப்போது ஆராய முற்படுவோம்.

இந்தக் கடன்களின் பெரும்பகுதி அவை வரவு வைக்கப்பட்டதும் உடனேயே எடுக்கப்பட்டிருப் பதும் எந்த நோக்கத்திற்காக அவை எடுக்கப் பட்டதோ அந்த நோக்கத்தைத் தவிர, மற்ற காரியங்களுக்காக கடன் தொகை எடுக்கப்பட்டிருப் பதற்கான அறிகுறியைத் தீர்மானமாகத் தெரிவிக்கா விட்டாலும் ஓரளவிற்குத் தெரிவிக்கிறேன். இருப் பினும், பெருமளவு எடுக்கப்பட்ட தொகைகள் தேர்தல் செலவுக்காக எடுக்கப்பட்டிருந்தன என்ப தற்கு எந்த வகையிலும் சாட்சியம் ஏதும் இல்லை.

(a) இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகளின் வருகை

இவ்வாறு தொகை எடுக்கப்பட்ட சுமார் 10 மாதங்களுக்குப் பிறகு இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகள் திரு. வேங்கடநாராயணு (சாட்சி எண் 15) தொழிநாத்மேனன் ஆகிய இருவரும் 16-12-1971-ல் கீழ்மேல் தாதன்குளம் சங்கங்களைச் சேர்ந்த உறுப் பினர்களின் நிலங்களைச் சென்று பார்வையிட்ட னர். மேற்படி நிலம் "முட்கள் நிறைந்த புதர் களைக் கொண்ட பரந்த வெளியாக" காணப்பட்ட தென்று அவர்களின் அறிக்கை காட்டுகிறது. அவர் கள் சென்று பார்வையிட்ட நாள் வரையில் இச் சங்கங்கள் பெயரளவுக்குகூட எந்த வகையான அபிவிருத்தியும் செய்யவில்லை. பல்வேறு உறுப் பினர்களுக்குச் சொந்தமான இந்தச் சங்கங்களுக் குக் கீழ் வரும் நிலங்கள் அந்த இடத்தில் எல்லை வரையறுக்கப்படாமலேயே இருந்ததை அவர்கள் கண்டறிந்தனர். பல்வேறு உறுப்பினர்களுக்குச் சேர்ந்தமான இந்தச் சங்கங்கள் ஒவ்வொன்றின் நிலப்பரப்பிலும் ஒரே ஒரு கிணறு மட்டும் எல்லை வரையறுக்கப்படாது இருந்ததையும் இவர்கள் கண்டனர். இந்தச் சங்கங்கள் ஒவ்வொன்றின் (சேரகுளம், கீழப்பெருமானேரி) பகுதியிலும் ஒரே ஒரு கிணறு மட்டுமே முடிக்கப்பட்டிருந்ததை யும் மேலும் ஐந்து கிணறுகள் தோண்டப்பட்டு வருகிற நிலையில் இருந்ததையும் அவர்கள் கண் டனர்.

கீழப்பெருமானேரி சங்கத்திற்குரிய நிலப்பகுதி யில் 35 ஏக்கர் மட்டுமே முட்புதர்கள் முதலிய வற்றை வேரோடு பிடுங்கி பரம்புப் பொறிகளைக் கொண்டு பண்படுத்தப்பட்டிருந் ததையும், இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகள் கண் டனர். சேரகுளம் சங்கத்திற்கு உரிய சுமார் 25 ஏக்கர் நிலமும் பண்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கீழப்பெருமானேரி சங்கத்தின் பகுதியில் ஒரு கிணறு முடிக்கப்பட்டு மேலும் மூன்று கிணறுகள் கட்டப்படுகின்ற வெவ்வேறு நிலைகளில் இருந்ததாகத் தெரிகிறது. ஆனல், அவற்றில் எதுவும் தண் ணீர் இடைக்கக்கூடிய நிலையை அடைந்ததில்லை. கடன் வாங்கப்பட்டிருந்த இந்தச் சங்கத்தில் பகுதியில் தோண்டப்படவேண்டிய கிணறுகளின் மொத்த

எண்ணிக்கை 36 ஆகும். மேற்படி நிலப்பகுதியில் அதிக மின் ஆற்றல் வாய்ந்த மின் அழுத்த மாற்றி ஒன்று நிறுவப்பட்டு மின்சார மோட்டார்களுக்கும், நீரேற்றுப் பொறிகளுக்கும் மின்சாரம் கிடைப்ப தற்கான ஏற்பாடுகள் அவர்களது வருகைக்கு முன் சுமார் 20 நாட்களில் முடிக்கப்பட் டிருப்பதையும் இந்த அதிகாரிகள் கண்டனர்.

சேரகுளம் சங்கத்திற்குரிய 128 ஏக்கர் பரப் பளவுள்ள நிலப்பகுதியில் 25 ஏக்கர் சமன்படுத் தப்பட்டு பயிர்கள் பயிரிடத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது என்பதை அந்த அதிகாரி கள் கண்டனர். ஆனல், பயிர்கள் எதுவும் பயிரிடப்படவில்லே.

கிழப் பெருமானேரி சங்கத்தைப் பொறுத்த மட்டில், 171.62 ஏக்கர் பரப்பளவில் 34 ஏக்கர் பகுதி மட்டுமே மாறில வேளாண்மைத் துறைக் குச் சொந்தமான பரம்புப் பொறிகளேப் பயன் படுத்தி பண்படுத்திச் சமன் படுத்தப்பட்டிருந்தது. பண்படுத்தப்பட்ட நிலப் பகுதியில், காடுகைக் கூழ் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப் படுகிற (உள்ளூரில் புளிச்சக்கீரை எனப்படுகிற), பயிர் மட்டுமே விதைக்கப்பட்டிருப்பதும், அந்தப் பயிர் அப்போது சுமார் 10 நாள் பயிராக இருந்த தாகவும், இவர்களுக்குத் தெரியவந்தது.

அந்த இடத்திலிருந்து அவர்கள் கண்டறிந்த திலிருந்து இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகள் தாங்கள் சென்று பார்வையிட்ட நாள் வரையில் சேரகுளம், கிழப் பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கங்கள் கடன்களேச் சொற்ப அள வுக்கே பயன்படுத்தி உள்ளன என்கிற முடிவுக்கு வந்தனர். (வேங்கடநாராயண அறிக்கையில் காணும் விவர அட்டவணே, ஆவணம் எண் 23— 18 முதல் 70 வரையுள்ள பக்கங்கள்).

வேங்கட நாராயண தனது அறிக்கையில், மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் செயலாளர் என்று தன்னேத் தானே அறிமுகப்படுத்திக் கொண்ட நியகராஜன் இந்த 4 இறைவைப் பாசனச் சங்கங்களுக்குரிய நிலங் களே அவாகளுக்குக் காட்டினர் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

வேங்கடநாராயணனின் அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.—

திரு. நியகராஜன், பச்சையர் சர்க்கரை ஆலே யில் மேலாளராகப் பணியாற்றி வந்தார் என் பதை ஏற்கெனவே நாம் பார்த்தோம். இவர் திரு. எஸ். டி. ஆதித்தனின் நெருங்கிய உறவினர் என்று சொல்லப்படுகிறது. நியகராஜனேப்பற்றி திரு. வேங்கடநாராயண தனது அறிக்கையில் என்ன கூறியுள்ளார் என்பதிலிருந்து சில பகுதியை எடுத்துக் கொடுப்பது ஈண்டு பயனுள்ளதாயிருக் கும். அவர் கூறுவதாவது :—

'' இதன்படி, மேல தாதன்குளம் இறை வைப் பாசனச் சங்கத்தின் கௌரவச் செயலாளர் திரு. நியகராஜன் இந்த இடத்திற்குச் செல்ல நேரிட்டது. தன்னே இறைவைப் பாசனச் சங் கத்தின் கௌரவச் செயலாளர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு, சென்னேயிலுள்ள ஆதித்தனர் கல்வி நிறுவனத்தின் பணியாளர் தான் என்றும், அந்த நிறுவனத்திலிருந்து தொடர்ந்து தான் சம்பளம் வாங்குவதாகவும், இவர் தெரிவித் துள்ளார். ஆதித்தனர் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமாய் உள்ள பண்ணேகளில் அது மேற் கொண்டுள்ள வேளாண்மைப் பணிகளேக் கவனித்து வரவும், அமைச்சரது குடும்பத்திற்குச் சொந்தமாக உள்ள தனியார் நிலங்களில் நடை பெறும் வேளாண்மைப் பணிகளேயும் கவனித்து வருவதற்காகக் கூட்டுறவு அமைச்சர் இதற்கெனத் தனியே தன்னே அனுப்பியுள்ளதாகக் கூறுவதோடு, அவர் தன் மனேவிக்குச் சொந்தமாக அருகிலுள்ள நிலத்தில் கினறு ஒன்றின் கட்டுமான வேலேயைப் பார்வையிட அன்று காலேதான் தாதன்குளத்திற்குத் தான் வந்திருந்ததன் காரணமாகவே திருநெல் வேலிக்கு அருகில் பாளேயங் கோட்டையில் தனது வீட்டிற்குத் தான் திரும்பும் வழியில் நாங்கள், அங்கு சென்றிருந்தபோது அங்கு அவர் வர நேரிட் டது என்றும் அவர் கூறினர். இந்தச் சங்கங் களின் அலுவலகங்கள் திரு. ஆதித்தனர் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் அமைந்துள்ளன. எளிதில் ஏமாறும் விதத்தில் ஆதித்தனர் கல்வி நிறுவனம் கிரயப்படுத்தியுள்ள நிலங்களின் அனுபோகதாரர்கள் என்று சொல்லப் படுபவர்களும் தொடக்க நிலவள வங்கியால் நிதி யுதவி அளிக்கப்பட்டு தங்களிடையே நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களே அமைத்துக் கொண்டவர்களுமாளவர்கள் ஒரு சிலரைத் தவிர அமைச்சருக்கும், அமைச்சரின் குடும்பத்தினருக் கும் சொந்தமாக உள்ள ' தினத்தந்தி, ' ' மாலே முரசு ' பத்திரிகை நிறுவனங்களிலும், திருநெல் வேலி அருகில் செயல்படும் சன் பேப்பர் மில்ஸ் நிறுவனத்தில் மேற்பார்வைப் பதவிகளிலும், எழுத்தர் பதவிகளிலும் உள்ள பணியாளர்கள்தான் என்பதை அவர் எங்களுக்கு உடனடியாகப் புரிய வைத்துவிட்டார். '' சன் பேப்பர் மில்ஸ் லிமி டெட் நிறுவனம் '' மிகப் பெரிய பணியாள ரமைப்பினேக் கொண்டது. இதில் அமைச்சரது குடும்பம் பெரும்பகுதி பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ளது எனச் சொல்லப்படுகிறது. திரு. நியகராஜன் கூறுகிறபடி, பேப்பர் மில்ஸ் நிறு வனத்தில் நிர்வாக இயக்குநரும், பெரும் பங்கு தாரரும் அமைச்சரது மருமகனான திரு. கந்த சாமிதான் என்றும், இவர் அமைச்சரும் உறுப்பின ராக உள்ள ஆளும் கட்சி சட்டப் பேரவையின்

உறுப்பினரும் ஆவார். ஆயிரத்தனர் கல்வி நிறுவனம் தனது பெயருக்கு நிலத்தின் கிரயப் பத்திரத்தை எழுதி உள்ளது அவருக்குத் தெரிந்த போதிலும், விற்பனை செய்யப்பட்ட நிலங்களை அந்தந்த சர்வே எண்களைக் கொண்டுஅடையாளம் காட்டமுடியும் என்ற போதிலும் தனக்கு வழங்கப் பட்ட நிலம் எந்த இடத்தில் உள்ளது என்பதுபற்றி யோ அதன் பரப்பளவு எவ்வளவு என்பது பற்றியோ தனக்குத் தெரியாது என்று கூறியுள்ளார். விசாரித்ததில்அவர் தானே அல்லது சங்கங்களின் உறுப்பினர் எவரோ நிலத்தின் மதிப்புக்காக அல்லது பங்கு மூலதனத்திற்காகவும் அந்தந்தச் சங்கங்கள் மேற் கொண்ட பாசனத் திட்டத்தின் மூலதனச் செலவில் அடங்கியுள்ள பங்குக்காகவும், தொகை எதுவும் செலுத்தியது இல்லை என்று அவர் கூறினார்.

1970-ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கி நிலப்பறி இயக்கத்தினைத் தொடர்ந்து, தனது குடும்பத்திடம் சுவாதீனமாக இருந்த நிலங்களின் உடைமை உரிமை அமைப்பைப் பரவலாக ஏற்படுத்தும் திட்டமொன்றை அமைக்கச் தயாரித்ததாக இவர் கூறுகிறார். அவர் தெரிவித்ததிலிருந்து, இம்மாநிலத்தில் நில் உச்சவரம்புச் சட்டங்களினால் மேலும் கெடுபிடி படுத்தும் விதத்தில் துறைகளை ஏமாற்றும் நோக்கத்துடனேயே அமைச்சர் இந்த முறையைக் கைக்கொண்டார் என்பது வெளிப்படுகிறது. இந்த நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களின் கணக்குப் புத்தகங்களை சங்கங்களின் அலுவலகத்தில் வைத்து வரப்படுவதில்லை என்றும், '' தினத் தந்தி '' '' மாலை முரசு '' ஆகிய நிறுவனங்களில் பணியாற்றுகிற மேற்படி சங்கங்களின் தலைவர்களுக்து பொறுப்பில் திருநெல்வேலியில் அவற்றின் அலுவலகங்களிலேயே வைத்து வரப்படுகின்றன என்றும், எங்களுக்குப் புலப்படுத்தினர். அவர் செயலாளராக உள்ள இறைவைப் பாசனச் சங்கங்களில் அலுவலகங்களைத் திறந்து காட்டுமாறு நாங்கள் கேட்டுக்கொண்டதற்கு அதற்கான சாவியினைத் தான் வைத்திருக்கவில்லை என்றும், மேற்படி சங்கத்தின் அலுவலகம் அதற்குரிய கணக்குப் புத்தகங்கள் அங்கு இல்லை என்பது தனக்கு நிச்சயமாகத் தெரியும் என்றும், அவர் பதிலளித்தார். மேற்படி சங்கத்தின் கணக்குப் புத்தகங்களைத் தான் எழுதி வருவதில்லை என்றும், மேற்படி சங்கத்தின் கணக்குகளில் தலைவரோடு கூட்டாகப் பற்றுவரவு வைத்து வருவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டவர்களில் தான் ஒருவர் என்பதைத் தவிர மேற்படி சங்கத்தின் பணப் பற்றுவரவுகளில் தனக்கு விரிவாக தெரிந்தது முற்றிலும் ஒன்றுமில்லை என்றும் அவர் மேற்கொண்டு தெரிவித்துள்ளார். இதற்கிடையில், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் திருத்தப்பட்ட விதித் துறைகளில் சொல்லியபடி உறுதிமொழிப் பத்திரமும், ஒப்பந்தப் பத்திரமும் தான் எழுதிக் கொடுத்திருப்பதாகவும் கூறியுள்ளார் 1971 பிப்ரவரி மாதத்திற்கு முன்னமேயே சங்கங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகை ரூ. 7.20 இலட்சம் ரூபாயை பயன்படுத்தியதைப் பொறுத்த மட்டில், திட்டம் முழுவதும் 1972 ஜனவரி மாதம் முடிவிற்குள் முடிக்கப்பட வேண்டும். மென்று அமைச்சரது வெளிப்படையான ஆவலும், விருப்பமுமாக இருந்தபோதிலும், மேல தாதன்குளம், கீழ தாதன்குளம் ஆகிய இடங்களில் உள்ள சங்கங்கள் அதுவரையில் எந்தவித வேலையையும் தொடங்கியிருக்க வில்லை என்றும், அவர் கூறினர். 1971-நவம்பர் கடைசி வாரம் தொடங்கி இந்த மாவட்டத்தில் பெருத்த மழை பெய்துவந்ததால், கிணறுகள் கட்டுமானம், நீரேற்றுப்பொறி அறை கட்டுதல், நிலங்களைப் பயன்படுத்துதல் ஆகியவை குறித்த வேலை தொடங்கப்படுவது பெரிதும் பாதிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ''ஏற்கெனவே நிதியுதவி அளிக்கப்பட்ட இறைவைப் பாசனத் திட்டத்திற்கு மேற்சொன்ன இரு சங்கங்களும், ஒருங்கு நிரட்டியுள்ள நிலங்களை அடையாளம் காட்டுவதில் அவர் அளித்த உதவியை அனுசுலமாகக் கொண்டு. நாங்கள் அந்த நிலங்களைச் சென்று பார்த்துக் கருங்குளத்திற்கு செல்கிற பெரிய சாலையிலிருந்து உள்ளே சுமார் 2 பர்லாங் தூரம் வரையில் நிலங்கள் முழுவதும், முட்புதர்களையும், ''உடை மரங்களையும் '' கொண்ட மிகப்பரந்த வறண்ட நிலப்பகுதியைத் தவிர வேறில்லை என்பதைக் கண்டறிந்தோம். ஆனால், மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கம் ஒருங்கு நிரட்டியுள்ள பகுதிக்கு நடுவில் ஆயிரத்தனர் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமாக ஒருசில தென்னந்தோப்புகளும், வாழை பயிராகிய பசுமையான நிலங்களும் அமைந்துள்ளன. இந்த நிலங்கள் கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கத்தின் ஆதரவில் எஞ்சிய நிலப்பகுதி நிரட்டியிருப்பது கடனுக வாங்கிய தொகையுடன் பாசனம்பெறும் நிலைமையில் உள்ள நிலங்களைப் பண்படுத்தி பயிரிடப்படுவதற்காக கண்டுபிடிக்கப்பட்ட வசதியான ஒர் உபாயமாகும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறபடி இந்த நிலங்கள் பயிரிடப்பட்டு வந்திருக்கின்றன. இறைவைப் பாசனச் சங்கத்தின் உறுப்பினர்களுக்குத் தள்ளிவிடப்பட்ட நிலங்களைப்போன்றே இந்த நிலங்களும் இருந்தன என்றும், பயிரிடுவதற்கு ஏற்றவகையில் பண்படுத்தியுள்ளதாகவும் கூறப்பட்டது. ஆதித்தனர் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமாகப் பரந்த அளவில் இருந்த தரிசு நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்றுவதற்காக வேண்டிய கடன் தொகைகளைத் திரட்டும் நோக்கத்துடனேயே கூட்டுறவு அமைப்பு அடிப்படையில் இறைவைப் பாசனத் திட்டம் என்னும் கொள்கை முக்கியமாக வகுக்கப்பட்டது என்பது தொக்கி நிற்கிறது. நியாகராஜனிடம் தெரிந்து கொண்டதிலிருந்து நான்கு இறைவைப்

பாசனச்சங்கங்கள் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டிய இறைவைப் பாசனத் திட்டத்தின் மீது மேற்பார்வை செலுத்தும் பொறுப்பை மாநிலக் காவல்துறை பணியாளரமைப்பைச் சேர்ந்த அரசிதழ் பதிவுபெற்ற ஒய்வு பெற்ற அதிகாரி யாகிய அவர் சகோதரரிடம் அமைச்சர் ஒப்படைத் திருந்தார்.'' எனத் தெரிகிறது.

திரு. வேங்கடநாராயணன் தனது அறிக்கையில் மேற்படி சங்கத்தின் உறுப்பினர்களின் நிலங்கள் '' மேற்படி சங்கங்களேச் சேர்ந்தவை'' என்று மேம்போக்காகக் குறிப்பிட்டுள்ளார். '' சேர்ந்தவை '' என்று மேலெழுந்தவாரியாகச் சொல்லப்பட்டதை அனுகூலமாகக்கொண்டு திருவேங்காந்தன் 15—2—1977 நாளிட்ட தனது உறுதி மொழிப் பத்திரத்தில் (பாரா 16) மாதில நிலவள வங்கியிடமிருந்து 1972-ஏப்ரலில் கடிதம் ஒன்று வரப்பெற்றதென்றும், அந்தக் கடிதத்தில் திரு. வேங்கடநாராயணன் அந்த இடத்திற்கே நேரில் சென்று விசாரித்தார் என்றும், மேற் படிச் சங்கத்திற்குச் சொந்தமான நிலங்கள் அடியிருத்தி செய்யப்படவில்லே என்று அதிகாரி யிடம் திரு. நியாகராஜன் கூறினர் என்றும் தெரிவிக்கிறார். மேற்படிச் சங்கத்திற்குச் சொந்த மாக நிலம் எதுவும் இல்லே என்று நியாக ராஜன் என்னிடம் கூறியுள்ளார்.

மேலே சொல்லியவற்றிலிருந்து திருவேங்காந்த தன், இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரியான திரு.வேங்கடநாராயணனுக்குத் திரு. நியாகராஜன் நிலங்களேக் காட்டினர் என்பதை மறுக்கவில்லே, கண்டிப்பாகக் கூறுவதாயின், மேற்படிச் சங்கங் கள் கொதுவை உரிமை கொண்ட உரிமை யாளர்கள் மட்டும்தான் என்பதும், மீட்பு உரிமை அதன் உறுப்பினர்களுக்கு உரியது என்பதும் உண்மை. ஆனல், '' சொந்தமானவை '' என்னும் சொற்றொடரை வேங்கடநாராயணனின் அறிக்கை யில் மேலெழுந்தவாரியாகப் பயன்படுத்தியது அந்த இடத்தில் அவர் கண்டறிந்த உண்மைகளின் சாராம்சத்தைப் பாதிக்காது. அவரது உறுதி மொழிப் பத்திரத்தின் மேற்சொன்ன பாராவில் திருவேங்காந்தனும்கூட, 1972 ஏப்ரலில் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து மாநில நிலவள வங்கிக்கு வந்த கடிதம் பற்றிக் குறிப்பிடுகிறார். உண்மையில், ரிசர்வ் வங்கியின் இந்தக் கடிதத்தில் (இது 24-ம் எண் ஆவணம்; புலனுய்வு அறிக்கையில் 1 முதல் 24 பக்கங்கள் என பதிவுக்கட்டில் காட்டப்பட்டுள்ளது) நியாகரா ஜனேப் பற்றியோ அன்றி அவர் வேங்கடநாராய ணனுடன் பேச்சு வார்த்தை நடத்தியது பற்றி யோ குறிப்பு எதுவும் இல்லே.

நியாகராஜனது 6-7-1977 நாளிட்ட
உறுதிமொழிப்பத்திரம்.

6-7-1977-ல் நியாகராஜனுக்குரியது என சொல்லப்படுகிற உறுதிமொழிப் பத்திரம் ஒன்று திரு. திருவேங்காந்தனின் வழக்குரைஞரால் ஒரு மகஜருடன் தாக்கல் செய்யப்பட்டது. இந்த உறுதி மொழிப்பத்திரத்தில் தெரிவித்துள்ளதாவது :—

'' நான் மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் கௌரவச் செயலாளர். 1971 டிசம்பர் மூன்றுவது வார வாக்கில் ஒருநான் இரண்டு அல்லது மூன்று பேர்கள் தாதன்குளத் திற்கு வந்தனர். இறைவைப் பாசனச் சங்கங்கள் அவர்களுக்குப் புதியவகைச் சங்கங்களாக இருப்ப தால் அவை செயல்படுவது பற்றி ஆய்ந்தறிய இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து தாங்கள் வந் துள்ளதாக அவர்கள் கூறினர். மேற்படிச் சங்கங் களுக்குச் சொந்தமாயிராமல், ஆனல் உழவர்களுக் குச் சொந்தமாக உள்ளதும் அவர்கள் பண்படுத்தி யுள்ளதுமான நிலங்களேக் காட்டுமாறு அவர்கள் என்னேக் கேட்டனர். உழவர்கள் பண்படுத்திய சில நிலங்களே நான் அவர்களுக்குக் காட்டினேன். அதற்கு மேல் என்னே எதுவும் கேட்காமல் அவர் கள் சென்றுவிட்டனர்.''

இந்த உறுதிமொழிப் பத்திரத்தில் சொல்லப்பட் டிருப்பது ஒரு நிமிடமேனும் ஆராய்ந்து பார்ப்ப தற்கு உரியதாயில்லே. இது தெளிவாக இல்லே. காலந்தாழ்த்தி வந்த தகவலாகவும் உள்ளது. இத் தகைய கடன்கள் பற்றியும், அவை எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பது பற்றியும், உண்மை யைக் கண்டறிய மேனக்கெட்டு அவ்வளவு தூரத்தி லிருந்து வந்திருந்த ரிசர்வ் வங்கி அதிகாரிகளும் விசாரணே ஏதும் செய்யாமல் சென்றுவிட்டனர் என்பதை நம்பமுடியவில்லே. இருந்தாலும்கூட, சாட்சியம் அளித்தவர், ரிசர்வ் வங்கி அதிகாரிகளுக் குச் சில நிலங்களேக் காட்டியதாகவே ஒப்புக் கொள்ளுகிறார். அவர் வேங்கடநாராயணன் கூறி யதைத் திட்டவட்டமாக மறுக்கவுமில்லே. திரு. வேங்கடநாராயணன் அவரது அறிக்கையில் என்ன கூறியிருந்தாரோ அதிலுள்ள உண்மையைச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணம் ஏது மில்லே. வேங்கடநாராயணனும் கமிஷன் முன் 4—12—1976 நாளிட்ட உறுதிமொழிப் பத்திர மொன்றைத் தாக்கல் செய்துள்ளார். அதில் அவர் அந்த இடத்திலேயே நியாகராஜனுடன் நடைபெற்ற உரையாடல் பற்றி தனது அறிக்கை யில் ஏற்கெனவே தெரிவித்ததையே உறுதி செய் திருர். தகவல் வகையில் தவருன அல்லது பொய் யான அறிக்கையைக் கொடுக்கவோ அல்லது தனது உறுதிமொழிப் பத்திரத்தில் பிரமாணம் எடுத்துக் கொண்டு அதையே ஊர்ஜிதம் செய்யவோ வேங்கடநாராயணனுக்கு உள்நோக்கம் எதுவும் இடையாது.

(ஆவணம் எண் 2). அறிக்கை ஒரே காலத்தில் அல்லது மேற்படி சங்கங்களின் நிலங்களேச் சென்று பார்த்த உடனேயே வேங்கடநாராயணனல் தயாரிக்கப்பட்டு, காலதாமதமின்றி அவருடைய மேலதிகாரிக்கு அவரால் அனுப்பிவைக்கப்பட்டது.

என்பதை தினவு கூர்தல் வேண்டும். மேற்படி அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள அவரது தீர்ப்புகளின் முடிவை ரிசர்வ் வங்கி மாநில நிலவள வங்கித் தலைவருக்கு அனுப்பிவைத்தது. இவையனைத்தும் புகார் கூறுவதற்கு முன்னமேயே நடைபெற்ற நிகழ்ச்சிகளாகும். ஆகவே வேங்கட, நாராயணனது அறிக்கை மிகவும் நம்பகமான சாட்சியமாகும்.

இந்திய ரிசர்வ் வங்கி ஆணத்தினுல் புலப்பட்டுள்ள முழு விவரம் (கோப்பு எண் 23).

சென்னை, இந்திய ரிசர்வ் வங்கி, வேளாண்மைக் கடன் வழங்கு துறையின் கோப்பினை நான் படித்துப் பார்த்தேன். (புலனுய்வு அறிக்கையில் இது 23ம் எண் ஆவணமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.) இதுவரையில் கிடைத்துள்ள சாட்சியங்களில் இது ஆவண வகையில் அமைந்த முக்கியமான சாட்சியமாகும். எந்த நோக்கத்திற்காகக் கடன்கள் வழங்கப்பட்டனவோ, அந்த நோக்கத்திற்குச் சரிவர கடன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. ரிசர்வ் வங்கிக் கோப்பில் இதர ஆவணங்களும் அடங்கியுள்ளன. மனுதாரர்கள் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு மஜர் சமர்ப்பித்த வெகு காலத்திற்கு முன்னமேயே முறையான அலுவலக நடைமுறைகளில் நிகழும் நிகழ்ச்சிகளோடு ஒரே சமயத்தில் இந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. இந்த அதிகாரபூர்வமான ஆவணம், எதிர்மனுதாரராயிய நிரு. சி. பா. ஆதித்தனர் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சராக உயர்ந்த பதவியில் இன்னும் இருந்த காலத்தில் தயாரிக்கப்பட்டது. இந்த ஆவணங்களைத் தயாரித்த சம்பந்தப்பட்ட ரிசர்வ் வங்கி அதிகாரிகள், எதிர்மனுதாரருக்கு விரோதமாக இருந்தனர் என்றே அவர் மீதாயினும் இந்தச் சங்கங்களின் அலுவலகப் பணியாளர் மீதாயினும் பாதகமான கருத்துகள் கூற உள் நோக்கம் எதுவும் கொண்டிருந்தனர் என்றே, அன்றி இந்தச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் குறித்தும் அவற்றைப் பயன்படுத்துவது குறித்தும் பொய்யான அறிக்கையைத் திரித்துக் கூறும் உள்நோக்கம் கொண்டிருந்தனர் என்றே குறிப்பிட்டுச் சொல்வதற்கு ஒன்றுமில்லே. இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகார பூர்வமான இந்த ஆவணத்தைப் பற்றிச் சந்தேகப்படுவதற்கு ஏதுமில்லே. இது குற்றச்சாட்டுக்கு அப்பாற்பட்ட நம்பதற்குரிய உறுதியான சான்றுகும்.

இந்திய ரிசர்வ் வங்கியின் 23-ம் எண் கோப்பினைப் படித்துப் பார்க்கையில் அது புலப்படுத்துவதாவது: சென்னை, இந்திய ரிசர்வ் வங்கி வேளாண்மைக் கடன் வழங்கும் துறை துணைத் தலைமை அதிகாரி திரு. ஜி. வி. இராமமூர்த்தி அதே அலுவலகத்தைச் சேர்ந்த கிராமக் கடன் அதிகாரி திரு. ஜி. வேங்கடநாராயணனை வங்கியின் உத்தேச 99-வது தொடர் கடனீட்டு உறுதிப் பத்திரங்கள் வெளியிடுதல் குறித்த நிலைமையை நேரே சென்று ஆய்வதற்காக தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கு அனுப்பி வைத்திருந்தார். அவர் அதை ஆய்ந்து பார்க்கையில் கருங்குளம் தொடக்க நிலவள வங்கி மூலமாக இந்த நான்கு சங்கங்களுக்குக் கடன் வழங்கப்பட்டிருப்பதை வேங்கடநாராயணன் பார்த்தார். இந்தக் கடன்கள் குறித்துச்சந்தேகத்திற்குரிய சில சூழ்நிலைகள் இருப்பதாக 3-11-1971 நாளிட்ட ஒரு குறிப்பில் இவர் துணைத்தலைமை அதிகாரிக்கு கட்டிக்காட்டியுள்ளார். அதன் பிறகு, துணைத் தலைமை அதிகாரி, கருங்குளம் தொடக்க நிலவள வங்கிக்கு நேரில் சென்று இந்த நான்கு சங்கங்கள் கடன்களைப் பயன்படுத்தியமை குறித்து ஆய்ந்து வருமாறு வேங்கடநாராயணனுக்குக் கட்டளையிட்டார். இந்த விஷயம் குறித்து இவர் பம்பாய் மத்திய அலுவலகத்திலுள்ள வேளாண்மைக் கடன் வழங்கு துறையின் இணைத் தலைமை அதிகாரிக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்ததோடு, திரு. வேங்கடநாராயணன் ஆய்வு செய்து முடித்தபோது மத்திய அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்புவதாகவும் உறுதியளித்தார்.

அதன் பிறகு வேங்கடநாராயணன் மாநில நிலவள வங்கியின் திருநெல்வேலி கிளைக்குப் பொறுப்புடைய உதவிச் செயலாளருடன் 15—12—1971-ல் கருங்குளம் நிலவள வங்கிக்குச் சென்றார். இவர் கடன் ஆவணங்களையும் சம்பந்தப்பட்ட ஏனைய பதிவுக் கட்டுகளையும் நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்ததோடு 16-12-1971-ல் இந்த நான்கு சங்கங்களுக்கானத் திட்டத்தின்கீழ் வரும் நிலங்களை நேரில் சென்று பார்த்தார். பிறகு இவர் பார்வையிட்டதன்பேரில் கண்டறிந்தவை பற்றிய விரிவான அறிக்கையொன்றை 19—6—1972-ல் திரு. இராமமூர்த்திக்கு அனுப்பி வைத்தார். அந்த அறிக்கையின் சுருக்கம் ஒன்று இவரது 19-1-1972 நாளிட்ட குறிப்பில் அடங்கியுள்ளது. இதுவே இந்திய ரிசர்வ் வங்கியின் கோப்பில் 10—16 பக்கங்களில் இணைப்பு 'A' வாக உள்ளது.

இவ்வறிக்கையின் முக்கியமான அம்சங்கள், இந்த விளக்க உரையின் முந்தைய பாராவில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளதால் மீண்டும் கூற வேண்டிய அவசியமில்லே.

துணைத் தலைமை அதிகாரி இராமமூர்த்தியின் குறிப்புரை.

மேற்சொன்ன வேங்கடநாராயணனின் 19-1-1972 நாளிட்ட குறிப்பில் சுருக்கத்தின் கீழே துணைத் தலைமை அதிகாரி இராமமூர்த்தி பின் வரும் குறிப்புரையை எழுதியுள்ளார் :—

"மிகவும் கஷ்டமான ஆய்வுப்பணி நன்முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அறிக்கை

நிடுக்கிடும் தகவல்களைக் கொடுக்கிறது. கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள் என்கிற சாதனம் இம் மாநிலத்தில் கடந்த ஆண்டில் நடைபெற்ற இடைக்காலத் தேர்தல் சம்பந்தப் பட்ட செலவுகளைச் சரிக்கட்டுவதற்காகவே முக்கியமாக நிட்டமிட்டு நிதி நிரட்டுவதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது என்றும், கூட்டுறவுத் துறை அமைச்சரின் உறவினருக்குச் சொந்தமான பரந்த தரிசு நிலங்களை மேம்படுத்தப் பெயரளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது. தொடக்க நிலவள வங்கி ஒரு கருவியாக மாறிய நிலவள வங்கியால் பயன்படுத்தப்பட்டது. மாறிய நிலவள வங்கியின் தலைவர், நிர்ணயிக்கப் பட்ட சீரான ஒழுங்குமுறை விதிகளையும், நடைமுறைகளையும் புறக்கணித்துக் கடன்கள் உடனடியாக வழங்கப்படுவதிலேயே குறியாக இருந்திருக்கிறார். கூட்டுறவுத்துறைப் பணியாளர்களை, அமைச்சர் ஒருவர் இந்த விவகாரத்தில் சம்பந்தப் பட்டிருப்பதன் காரணமாகவே ஒருக்கால் மறைமுகமான இந்தப் பேரத்திற்கு இணங்க ஒத்துழைப்பைத் தருவதாகவே தெரிகிறது. இவ்வகைப் பேரங்கள் பெருகுமானால் கூட்டுறவுக் கடன் வழங்கு அமைப்பு முறைக்கே பெருத்த அவக் கேட்டினைக் கொண்டுவரும். மொத்தத்தில் கூட்டுறவு இயக்கத்தின் நல்திறனில் மக்களுக்குள்ள நம்பிக்கையைக் குலைத்துவிடலாம். இத்தப் பேரத்திலும் முடிவாக மாநில நிலவள வங்கியின் குழுவையே முக்கியமாக மாற்றியமைக்க வேண்டிய நாகிறது என்பதைக் காண்கிறோம்.''

(வலியுறுத்திக் கூறவே கோடிட்டுக் காட்டியுள்ளேன்.)

கருங்குழம் தொடக்க நிலவள வங்கிக்குக் கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள் நிலுவையாக வைத்துள்ள கடனிருப்புத் தொகை முழுவதையும் உடனடியாகத் திரும்பப் பெறுமாறு மாநில நிலவள வங்கிக்கு ஆலோசனை கூற வேண்டுமென்று கருத்து தெரிவித்து திரு. இராமமூர்த்தி வேங்கடநாரயணனின் ஆய்வு குறித்த நகலொன்றைப் பம்பாய் மத்திய அலுவலகம் வேளாண்மைக் கடன் துறைத் தலைமை அதிகாரி டாக்டர் ஹடேவுக்கு அனுப்பினர். (ரிசர்வ் வங்கிக் கோப்பின் 71-முதல் 73-வரையிலுள்ள பக்கங்களைக் காண்க.)

இந் நான்கு சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த 20 இலட்சம் ரூபாயைப் பெறுவதற்காக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி.பா. ஆதித்தனார் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் இணைப் பதிவாளரிலிருந்து கடைநிலைப் பணியாளர் வரை அனைத்துப் பணியாளர்களையும் திரட்டியிருந்தார் என்று குற்றஞ்சாட்டி இத்தச் சங்கங்களின் உறுப்பினர்களாகக் கூறப்படுபவர்கள் மாண்புமிகு அமைச்சரின் பலதரப்பட்ட நிறுவனங்களில் ஊதியம் பெறுபவர்கள் அல்லாமல் வேறு அல்லர்—அனுமதேய மனு ஒன்று 25—1—1972-ல் பம்பாய் மத்திய அலுவலகம், இராமக்கடன் வழங்கு தலைமை அதிகாரிக்கு வரப் பெற்றது என்பது ரிசர்வ் வங்கிக் கோப்பிலிருந்து தெரியவருகிறது. இந்த அனுமதேயப் புகாரும், 1971 மார்ச்சு 4-ம் தேதியன்று நடைபெறுவதாக இருந்த ஸ்ரீவைகுண்டம் தொகுதி(இத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் திரு. ஆதித்தனர் போட்டியிட்டார்) தேர்தல் நாளும் கடன்கள் நாளும் பெரும்பாலும் ஒத்துள்ளன என்பதைக் குறிப்பிடுகிறது. இந்தப் புகார் அதன் மூலப் படிவத்திலேயே துணைத் தலைமை அதிகாரி இராமமூர்த்திக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆயினும், இராமமூர்த்தி, ஏற்கெனவே அறிக்கை ஒன்று அனுப்பியுள்ளதால் இதன் மீது நடவடிக்கை ஏதும் எடுக்க வேண்டிய அவசியமில்லை என்று கருத்து தெரிவித்தார்.

நிலவள வங்கிக்கு டாக்டர் ஹடே எழுதிய 6—4—1972 நாளிட்ட கடிதம்.

இராமமூர்த்தியின் கடிதம் வரப்பெற்றதன் பேரில் இணைத் தலைமை அதிகாரி டாக்டர் ஹடே தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கித் தலைவருக்கு 6—4—1972-ல் கடிதம் ஒன்று எழுதினர். (ரிசர்வ் வங்கிக் கோப்பின் 86 முதல் 88-வரையிலுள்ள பக்கங்களைக் காண்க.) இதில் கீழ்காணும் கருத்துகள் சொல்லப் பட்டுள்ளன :—

''. . . . . இந்த விண்ணப்பங்கள் பலவேறு சட்டங்களில் இலல்பாகத் தாமதப்படுவதற்கு மாறாக, மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருப்பதாலேயே, கடன் அனுமதிக்கப்படுவதற்கு முன், செய்து முடிக்க வேண்டிய எல்லா நடைமுறைகளையும் முழுக்க பின்பற்றினுல் ஒழிய கடன் அனுமதிக்க முடிந்திருக்காது என்பதைச் சுட்டிக் காட்டுவதாகத் தெரிகிறது. . . . . இந்தச் சங்கங்கள் அனுப்பியுள்ள கடன் விண்ணப்பங்களை ஆய்ந்து பார்த்தால் அவை எதிர்பார்க்கும் வளர்ச்சிப் பணி குறித்த முழுச்செலவும் உரியமுறையில் கணக்கிடப்படவில்லை என்பதைப் புலப்படுத்துகின்றன. பெரு வாரியான விண்ணகளைத் தோண்டி ஏற்படுத்தக் கூடிய பாசன வளத்தைப் பயன்படுத்தும் நோக்குடன் நீரேற்று இயந்திரங்களை வாங்குவதற்கான நிதிகளுக்கு இச் சங்கங்கள் எவ்வாறு ஏற்பாடு செய்ய உத்தேசித்துள்ளன என்பது குறித்து விண்ணப்பத்தில் எந்த அறிகுறியும் இல்லை. அன்றியும், வங்கி பின்னர் அதைப்பற்றிக் கண்டறியவும் இல்லை. இந்த விண்ணப்பங்களைக் கருதிப் பார்ப்பதற்காக நிலவள வங்கி, சங்கங்களின் நிதிநிலைமை பற்றிய தகவல்கள் எதையும் பெறவுமில்லை; அன்றி அவை பதிவு பெற்ற தேதிகள், அஞ்சல் முகவரி, செயல்படும் பகுதி, உறுப்பினர்களின் எண்ணிக்கை, செலுத்தப்பட்ட பங்குமூலதனின் மதிப்பு, பிணையமாக அடைமானம் வைக்கக்

கருதியுள்ள நிலங்களின் சர்வே எண்கள், இத்திட்டத்தினுல் பயனடையும் பாசனப்பரப்பு முதலியனவு பற்றியும் அறுதியிட்டுத் தெரிந்து கொள்ளவில்லே. கடன்களுக்கான பிணையமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிலங்களின் மதிப்பும், ஏதேச்சாதிகார முறையில் மதிப்பிடப்பட்டுள்ளன. மேல தாதன்குளம், கீழ தாதன்குளம் சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்ட கடன்கள் 9-2-1971-ல் மொத்தத்தில் முறையே ரூ. 3·50 இலட்சம், 3·70 இலட்சம் ஆக வழங்கப்பட்டுள்ளன. இவை அனுமதி வழங்கப்படுவதற்கு உட்பட்டிருந்த நிபந்தனைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை கண்டறியாமலே அதே நாளில் தொடக்க நிலவள வங்கி மூலமாக மாநில நிலவள வங்கியால் ஒட்டு மொத்தமாக இந்தத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. பிப்ரவரி 25 ஆம் தேதியில் முறையே ரூ. 7·65 இலட்சம், ரூ. 5.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருந்த கீழப்பெருமானேரி, சேரகுளம் ஆகிய இரு சங்கங்களுக்கு மொத்தம் ரூ. 6·53 இலட்சம் கொண்ட முதல் தவணைத் தொகை பிப்ரவரி 26-ல் வழங்கப்பட்டது. முதல் தவணைத் தொகை முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அறுதியிட்டுத் தெரிந்துகொள்ளாமலேயே எஞ்சிய தொகை மார்ச் 4-ம் தேதியன்று வழங்கப்பட்டது.

தொடக்க நிலவள வங்கியோ, அன்றி மாநில நிலவளவங்கியோ சங்கங்கள் கடன்களைப் பயன் படுத்தியது குறித்து எதுவும் தெரிந்து கொள்ளவில்லே. இந்தச் சங்கங்கள், 1971 டிசம்பரில் நிலவள வங்கிக்கு அடைமானம் செய்து வைத்திருந்த நிலங்களை நமது அதிகாரி நேரில் சென்று பார்த்ததில் திட்டங்கள் இப்போதுதான் எடுத்துக் கொள்ளப்பட்டன என்றும், வழங்கப்பட்ட கடன் தொகை முழுவதையும் செலவிட்டிருக்க முடியாதென்றும் கருதப்பட்டது. ஆயினும், திருநெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கியில் வைத்திருந்த மேற்படிச் சங்கங்களின் நடப்புக் கணக்குகளிலிருந்து இந்தச் சங்கங்கள் அவற்றுக்கு வழங்கிய கடன் தொகையில் பெரும்பாலும் முழுவதையும் கணக்கிலிருந்து எடுத்துக் கொண்டு பெயரளவுக்கு இருப்புத் தொர்க்கையை விட்டு வைத்திருப்பது தெரியவந்தது. எந்த நோக்கங்களுக்காக இந்தக் கடன்கள் அனுமதிக்கப்பட்டனவோ அந்த நோக்கங்களைத் தவிர பிற காரியங்களுக்காகப் பயன் படுத்தப்பட்டன என்பதைச் இது சுட்டிக்காட்டுகிறது. 1971 நவம்பரில் சேரவேண்டிய கடன்தொகைக் காண முதல் தவணைத் தொகையைச் சங்கங்கள் உரிய காலத்திற்கு முன்னமேயே திருப்பிச் செலுத்தி விட்டன. நிலவள வங்கியிலிருந்து பெரும் கடனைக் கொண்டு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திப் பணிகள் முடிக்கப்படவில்லே என்ற நில நிலவும்போது, கடனுக்குச் சேரவேண்டிய தொகையைத் திரும்பிக் கொடுக்க முடிந்திருப்பது வியப்பாக உள்ளது''.

(வலியுறுத்திக் கூறவே கோடிட்டுக் காட்டியுள்ளது).

டாக்டர் ஹடே தனது கடிதத்தின் இறுதிப் பகுதியில் இந்த வங்கி, நிர்ணய நடைமுறையையும் வழக்கமாக மேற்கொள்ளும் பாதுகாப்பு முறைகளையும், பின்பற்றுமுறையும் இயல்பாக உள்ள விதிகளையும் புறக்கணித்துக் கடன்கள் வழங்கியதிலும் சீர்வ் வங்கி மனக்குறை படுவதையும் தெரிவித்துப் பயன்படுத்தப்படாத கடன்கள் உடனடியாகத் திருப்பிப் பெறப்படலாம் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

இந்திய ரிசர்வ் வங்கிக்கு, வங்கித் தலேவர் எழுதிய 25—4—1972 நாளிட்ட பதின் கடிதம்.

சங்கங்கள், கட்டுமானப் பணிக்குப் பொறுப்புடைய பொறியாளர் வழங்கிய சான்றுகளின் அடிப்படையில் கடன் தொகைகளை முழுவதையும் பயன்படுத்தியுள்ளன என்று தெரிவித்து டாக்டர் ஹடேவுக்கு தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் தலேவர் 25—4—1972-ல் பதில் கடிதமொன்று எழுதினர். மேற்படிச் சங்கங்கள் தங்களுடைய கணக்குகளே பட்டயக் கணக்கரைக் கொண்டு சோதித்துச் சரிபார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பட்டயக் கணக்கரது அறிக்கையும், கடன் பயன்படுத்தியது குறித்து மாநில நிலவள வங்கியின் பொறியாளர் வழங்கும் சான்றும் வரப்பெறுவதன் பேரில் மேற்கொண்டு தாம் கடிதம் எழுதுவதாக உறுதியளித்தார்.

டாக்டர் ஹடேவுக்கு தலேவர் எழுதிய 3—6—1972 நாளிட்ட கடிதம்.

மேற்சொன்ன சங்கங்களின் அதிகாரம் பெற்ற ஏஜெண்ட் திரு. உத்தரபாண்டியன், தலேவருக்கு முகவரியிட்டு கடிதத்தின் நகல் ஒன்றையும், பட்டயக் கணக்கர்களாகிய திருவாளர்கள் நாராயணன் அண்டு தம்பெனியிடமிருந்து பெற்ற, மேற் சொன்ன நான்கு சங்கங்களுக்கும் சம்பந்தப்பட்ட 15—5—1972 நாளிட்ட தணிக்கை அறிக்கையின் நகல்களையும் வைத்து, இந்திய ரிசர்வ் வங்கிக்கு 3—6—1972-ல் மற்றொரு கடிதம் அனுப்பினர். இந்தக் கடிதத்தின் மூலமாக, டாக்டர் ஹடே 6—4—1972 நாளிட்டு எழுதிய அவரது கடிதத்தில் அடங்கிய பிரதிகூலமான குறிப்புரைகளே வாபஸ் வாங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.

ராமமூர்த்தியின் கருத்துகள்.

டாக்டர் ஹடே, திரு. சண்முகத்தின் 3—6—1972 நாளிட்ட கடிதம் பற்றி திரு. ராமமூர்த்தியின் கருத்துகளைக் கேட்டிருந்தார். அதன் பேரில் திரு. ராமமூர்த்தி, தனது கடிதத்தில்

கருத்துகளே எழுதி அனுப்பினர் (ரிசர்வ் வங்கியின் கோப்பில் 110–114 பக்கங்களில் இது காணப்படுகிறது). இதில் இவர் கீழ்க்காணும் கருத்துகளைக் கூறியுள்ளார்.

1. ..... தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் சொல்லியபடி துறை அதிகாரிகளால் செய்யப்படவேண்டுமென்கிற இயல்பான, குறிப்பிட்ட சட்டத்தின்படிக்கான தணிக்கை முறைக்குப் புறம்பாக, தொழில்சார் தணிக்கையாளர்களைக் கொண்டு, வங்கி, தணிக்கை செய்ய வைத்ததன் நோக்கம் என்னவெனில், இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த நீண்ட கால கடனுக்கு அவர்கள் உரிய முறையில் கணக்கு காட்டியுள்ளனரா என்று நாங்கள் சந்தேகமறத் தெரிந்துகொள்வதற்காகவே அவ்வாறு செய்தோம். இந்தச் சங்கங்கள் எடுத்துக் கொண்டதாகச் சொல்லப்படுகிற இறைவைப் பாசனத் திட்டங்கள், மாநில நிலவள வங்கி, கருங்குளம், தொடக்க நிலவள வங்கி மூலமாக நீண்ட கால முதலீட்டுப் பணம் வழங்கியிருந்ததன் அடிப்படையில் முன்னரே அமையப்பெற்றிருந்த திட்டங்களிலிருந்து முக்கியமாக மாறுபட்டுள்ளன என்பதை, தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளைப் படித்துப் பார்த்தால் அவை புலப்படுத்தும்..... ஆகவே, இந்தச் சங்கங்களால் வைத்துவரப்படுவதாகச் சொல்லப்படுகிற கணக்குகள் கூட்டல் கழித்தல் வகையில் சரியாக இருக்கின்றனவா என்பதை உறுதி செய்துகொள்ளவே செய்யப்பட்ட ஒரு பயிற்சியாக இந்தத் தணிக்கை அறிக்கை உள்ளது என்று எங்களுக்குத் தோன்றுகிறது.....

2. தலைவர், 25—4—1972 நாளிட்ட தனது முந்தைய கடிதத்தில், பணம் பயன்படுத்தப்பட்டிருப்பதை வங்கிப் பொறியாளர்களைக் கொண்டு சரிபார்ப்பதாக அவர் உறுதிமொழி கொடுத்திருந்த போதிலும், அவரது 3—6—1972 நாளிட்ட கடிதத்தில், பணம் பயன்படுத்தியது குறித்து வங்கியைச் சேர்ந்த பணியாளர்கள் சரிபார்த்துச் செய்த சோதனை முடிவுகள் பற்றித் தெளிவாக எதுவும் சொல்லப்படவில்லை.

3. தலைவருடைய 3—6—1972 நாளிட்ட கடிதத்துடன் சேர்த்து வைத்து அனுப்பிய உள்ளடக்கங்களிலிருந்து, இந்த நான்கு இறைவைப் பாசனச் சங்கங்கள் தங்களுடைய அதிகாரம் பெற்ற ஏஜெண்டாகச் செயல்படுமாறு திருநெல்வேலியிலுள்ள திரு. I. உத்தர பாண்டியன், பி.ஏ.,பி.எல்., என்பவரை நியமித்துள்ளன என்பது காணப்படும். இத்தகைய இறைவைப் பாசனச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் அமைக்கப்பட்ட நிர்வாகக் குழு ஒன்று இருக்கும் போது அவர்களுக்காக வரிந்து கட்டிப் பேசுவதற்கு ஏஜெண்ட் ஒருவரை ஏன் அவர்கள் நியமிக்க வேண்டும் என்பது தான் புரியவில்லை. அவர்களுடைய அண்ண விதிகளில் குறிப்பிட்டுள்ள அலுவலகத் தலைமையிடத்திலிருந்து செயல் வரம்புப் பகுதியிலிருந்து வெகுதூரம் தள்ளி திருநெல்வேலியில் வசிக்கின்ற குறிப்பிட்ட தனி நபர் தங்களது ஏஜெண்டாகச் செயல்பட ஏன் தான்ற சங்கங்களும் விழைய வேண்டும் என்பதுதான் இன்னமும் வியப்பாக உள்ளது.....

4. பெருவாரியாக மாநிலம் சட்டமேலவை வகையிலிருந்தும், அவர்கள் வாங்கியதாகச் சொல்லப்படுகிற நிலத்தின் பெயரளவு மதிப்பைக்கூட தொடக்கத்தில் செலுத்த வழி எதுவும் இல்லாதிருந்தவர்களான உறுப்பினர்களைக் கொண்ட சங்கங்கள், தங்களுக்கென்று கணிசமான தொகைகளைத் திரட்டி, ரூ. 0.51 இலட்சம் வரை வட்டிச் செலவுகளைச் செலுத்தியதுடன், கூடுதலாக ரூ. 3·31 இலட்சம் எவ்வாறு முதலீடு செய்ய முடிந்தது என்பது மேலும் புரியாமல் உள்ளது. எங்களுடைய ஆய்வு அறிக்கையில் ஏற்கெனவே சுட்டிக்காட்டியபடி, திட்டம் முடிக்கப்பட்டு உறுப்பினர்கள் பயிர் செய்து வருமானம் பெற்ற வகையில் பலன் ஏதும் கிடைப்பதற்கு முன்னமேயே, கடனுக்கான முதல் தவணைத் தொகை தொடக்க நிலவள வங்கிக்குச் செலுத்தப்பட்டிருந்தது.....

இதுவும், சங்கங்கள் இணைப்புக்கும் சங்கங்களின் சொந்தக் கணக்கிலேயே பயிர் செய்வதென்கிற உத்தேசத் திட்டமும், இந்த நான்கு இறைவைப் பாசனச் சங்கங்கள் மேற்கொண்டுள்ளதாகச் சொல்லப்படுகிற நடவடிக்கைகளில் பின்னிப் பிணைந்து சூடுபடுகிற தனிப்பற்றுடையவர் இருக்கிறார் என்னும் கருத்துக்கு ஆதாரம் அளிக்கும்.

திரு. இராமமூர்த்தி தனது கருத்துகளில், முடிவாக, தாம் ஏற்கெனவே தெரிவித்துள்ள பிரதிகூலமான கருத்துகளை எடுத்துவிடுவதற்கான நியாயம் ஏதுமில்லை என்று கூறினார். மாநில நிலவள வங்கி இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு நிதி அளித்ததில் தான் செய்துள்ள பல்வேறு குறைகள், முறைகேடுகள் குறித்து திருப்திகரமான விளக்கம் ஏதும் கொடுத்திருக்கவில்லை.

இதன்படி மத்திய அலுவலகம் தங்களுடைய 19—7—1972 நாளிட்ட கடிதத்தில் (ரிசர்வ் வங்கியின் கோப்பில் 117-பக்கத்தைக் காண்க) தாங்கள் கூறியவை சரியல்ல என்றும், வேண்டியிராத கருத்துகள் என்பதையும் புலப்படுத்த, போதிய புள்ளி விவரங்களைக் கொடுக்கப்பட்டாலொழிய அவர்கள் கூறிய கருத்துகளை நீக்கிவிடுவதென்னும் பிரச்சினைக்கு இடமில்லையென்றும் தலைவருக்குத் திருப்பி எழுதியது. தலைவர் அனுப்பிய தனிக்கை அறிக்கையின் நகல்கள், கடன்களைப் பயன்படுத்தியது குறித்து இந்திய ரிசர்வ் வங்கியின் வேண்டப்படாத கருத்துகளை உறுதிப்படுத்தவில்லை. கடன்கள் எந்த நோக்கங்களுக்காக வழங்கப்பட்டனவோ

அந்த நோக்கங்களுக்காக முழுவதும் பயன் படுத்தப்பட்டுள்ளன என்பதைக் கண்டறியும் பொருட்டு, அந்த இடத்திலேயே புதிதாக ஆய்வு ஒன்றை நடத்துமாறு வட்டார அலுவலகத்தை மீண்டும் அவர்கள் கேட்பார்கள் என்று மத்திய அரசு கூறியது.

ஆயினும், சேரவேண்டிய பாக்கித் தொகைகளைச் சங்கங்கள் செலுத்திவிட்டபடியால், கடன்களைப் பயன்படுத்தியது குறித்துச் சரிபார்க்க இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரி ஒருவரை அனுப்பி வைப்பது அவசியமில்லை என்று குறிப்பிட்டு திரு. இராமமூர்த்தி 16—8—1972ல் டாக்டர் ஹடேவுக்கு எழுதினார். இராமமூர்த்தி தனது கடிதத்தில் குறிப்பிடத்தக்க கருத்துரையைக் கொடுத்துள்ளார். அது மேலே எடுத்துக் கொடுக்கப் பட்டுள்ளது:—

''எங்களது தீர்ப்புகளைப் பொய் என்று கூறுவதற்கு நிலவள வங்கி போதிய தகவல்களையும் புள்ளி விவரங்களையும் கொடுத்தாலொழிய அந்த வங்கிமீது குறிப்பிட்ட பிரதிகூலமான கருத்துரைகளை நீக்க நாங்கள் மறுத்ததாவேயே தொடக்க நிலவள வங்கிக்குச் சங்கங்கள் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைகளைத் தீர்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கச் செய்திருக்க வேண்டு மெனத் தெரிகிறது.''

வங்கித் தலைவர் திரு ஹடேவுக்கு எழுதிய 24—8—1972 நாளிட்ட கடிதம்.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கித் தலைவர் திரு. சண்முகம் 24—8—1972-ல் வேளாண்மை (பொறியியல்) இணை இயக்குநர் திரு. கே. நடராஜன் ஒரே மாதிரியாக எழுதிக் கையொப்பமிட்ட நான்கு பயன்பாட்டுச் சான்றுகளை வைத்து டாக்டர் ஹடேவுக்குக் கடிதம் ஒன்று எழுதினர்.

ரிசர்வ் வங்கி அதன் அதிருப்தியை மாநில நிலவள வங்கிக்குத் தெரிவித்த சந்தர்ப்பங்களை விளக்கியும், தொடக்க நிலவள வங்கிக்குச் சேர வேண்டிய கடன் பொறுப்புகள் முழுவதையும் கொடுத்துத் தீர்க்க ரூ. 20 இலட்சம் வரையில் சங்கங்கள் திடீரென்று எவ்வாறு நிதிகள் பெற முடிந்தது என்பதைச் சரிபார்க்குமாறு அவரைக் கேட்டுக்கொண்டும் பயன்பாட்டுச் சான்றினைச் சோதித்துப் பார்க்குமாறும் 13—9—1972-ல் டாக்டர் ஹடே கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு எழுதினர். இந்தக் கடிதத்தின்மீது பதிவாளர் எவ்வித நடவடிக்கையும் எடுத்த தாகத் தெரியவில்லை. ரிசர்வ் வங்கியின் கோப்பு, அவர்களது 13—9—1972 நாளிட்ட கடிதத்தைப் பற்றி பதிவாளருக்கு தினஞ்சுட்டி வரையில் அவரது கருத்துகளை அனுப்பிவைக்குமாறு அவரைக் கேட்டுக்கொண்டு 19—1—1973 நாள் இட்ட நினைவூட்டுக் கடிதத்துடன் முடிகிறது

அந்த இடத்திலேயே விசாரணை செய்த பிறகு வேங்கட நாராயணன் அளித்த தீர்ப்புகள், மாநில நிலவள வங்கி வேளாண்மைப் பொறியியல் துறையில் அப்போது இணை இயக்குநராக இருந்த கே. நடராஜன் (C. W. 44.) தயாரித்த பதிவுக் கட்டுக்களைக் கொண்டு ஊர்ஜிதப்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். இவர் 1971 நவம்பர் –டிசம்பர் மாதங்களில் அந்த நிலங்களைச் சென்று பார்த்தார். அவருக்குத் தெரிய வந்த தகவல் அவரது அறிக்கையில் காணப்படுகிறது. (ஆவணம் எண். 75-ஐ காண்க.)

(a) 26—11—1971-ல் கே. நடராஜனின் முதல் வருகை.

பரிசீலனைக்குரிய நிலங்களை இவர் முதலில் சென்று பார்த்தது தெளிப்பு முறை பாசனக் கருவிகளை நிறுவ முடியுமா என்னும் சாத்தியக் கூறினை ஆராய்ந்து பார்ப்பதற்கேயாகும். 26—11—1971-ல் இவர் சேரக்குளம், மேப் பெருமானேரி சங்கங்கள் உள்ள இட்டப்பகுதிகளை முதலில் சென்று பார்த்தார். அதன் பின்னர் காட்சிப் பொருள் 44-1 அலுவலகக் கோப்பில் காட்சிப்பொருள் C. W. 44-2 பயணக் குறிப்பு பொன்றை இவர் கொடுத்துள்ளார்.

(b) கே. நடராஜனின் ஆய்வு செய்வதற்கான வருகைகளும் ஆய்வு அறிக்கைகளும்.

வேங்கட நாராயண அந்த இடத்திலேயே விசாரணை நடத்தியதன் பேரில் அளித்த தீர்ப்புகள் மாநில நிலவள வங்கியின் வேளாண்மைப் பொறியியல் துறையில் அப்போது இணை இயக்குநராக இருந்த (C.W. 44) கே. நடராஜன் தயாரித்துக் கொடுத்த ஆய்வு அறிக்கைகளிலிருந்து மேலும் உறுதி பெறுகின்றன. நடராஜன் நவம் பரிலும், மீண்டும் டிசம்பரிலும் இந்தச் சங்கங்களைச் சேர்ந்த பிட்டப்புகுதிகளுக்குச் சென்று வந்திருக்கிறார். அந்த இடத்திலேயே அவர் கண்டறிந்து கூறியவை அவரது அறிக்கையில் அடங்கியுள்ளன.(காண்க— 75ஆம் எண் ஆவணம்.)

26—11—1971-ல் கே. நடராஜனின் முதல் வருகை.

இந்தச் சங்கங்களில் இரண்டினைச் சேர்ந்த பகுதியில் தெளிப்பு முறைப் பாசனத்தின் சாத்தியக் கூறினை ஆராய்வதற்காக அப்போது அமைச்சராக இருந்த S. பா. ஆதித்தனார் தேரில் கேட்டுக் கொண்டதன்பேரில், நடராஜன் இந்தச் சங்கங்களின் பிட்டப் பகுதிகளுக்குத் தான் முதலில் சென்று பார்த்ததாக இவர் (C.W. 44) சான்று பகன்றுள்ளார். இவ்வாறு இந்த இடத்திற்கு வருகைபுரிந்த போது காட்சிப் பொருள் C.W. 44/2, 2—12—1971 நாளிட்ட

110G-13—85a

சுற்றுப் பயணக் குறிப்பு [காட்சிப் பொருள் 44(1) கே. 192332/71-ம் எண் கோப்பில் 265-266 பக்கங்களில்] எழுதி வைத்துள்ளார். இதில் அவர் நிலம் பண்படுத்திய பிறகு சாகுபடியின் கீழ் 171 ஏக்கர் கொண்டுவரப்பட வேண்டியுள்ளன என்றும் 25 ஏக்கருக்கு பாசனம் அளிக்கக்கூடிய தெளிப்பு முறைக் கருவி ஒன்றை உடனடியாக நிறுவமுடியுமா என்பது குறித்து ஆய்வு செய்தார் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி பெருமானேரி, சேரகுளம் சங்கங்களின் திட்டப்பகுதிகளில், நிலங்களே அவர்கள் முழுது முடித்து விட்டு சுமார் ரூ. 17,000 செலவு மதிப்பீட்டில் பாசன ஏற்பாட்டை நிறுவத் தொடங்கினர் என்று இவர் மேலும் குறிப்பிட்டார். இத்தக் குறிப்பில் டிசம்பர் திங்களில் கிணறுகள் தோண்டி முடிக்கப்பட்டது சம்பந்தப்பட்ட பணி எதனையும் இவர் குறிப்பிட வில்லை.

30–12–1971-ல் கே. நடராஜனின் இரண்டாவது வருகை.

கே. நடராஜன் 30–12–1971-ல் சேரகுளம், கீழப்பெருமானேரி சங்கங்களின் திட்டப்பகுதிகளுக்கு மீண்டும் சென்றார். இந்த வருகை சம்பந்தப்பட்ட மட்டில் இந்த சாட்சி காட்சிப் பொருள் C.W. 44/3 என்கிற ஆய்வுக்குறிப்பு ஒன்றைத் தயாரித்தார். (மேற்சொன்ன கே. 192332/71-ஆம் எண் கோப்பில்— ஆவணம் எண் 47 காட்சிப் பொருள் C.W. 44/1) 9–1–1971 நாளிட்ட இந்தக் குறிப்பில் இவர் சேரகுளம், கீழப் பெருமானேரி ஆகிய சங்கங்களின் கீழ் வரும் பகுதிகளில் தெளிப்பு முறைப் பாசனக் கருவியை நிறுவியுள்ளதாகவும், அந்தத் தெளிப்புக் கருவிகள் செல்வனே இயங்குவதாகவும் பிரவற்றிற்கு இடையில் குறிப்பிட்டுள்ளார். 80 ஏக்கர் நிலம் புளிச்சகரைப் பயிரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் இவர் மேலும் குறிப்பிடுகிறார். மேலும், 100 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், சங்கங்கள் அண்த்தையும் சேர்ந்த திட்டப்பகுதிகளில் 7 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன என்றும் கடந்த 3 மாதங்களில் பணி செவ்வனே முன்னேறி வருகிறது என்றும் இவர் கூறினார். அமைச்சரது கட்டளைக்கிணங்க தான் இரண்டாவது முறை அங்கு சென்றதாகவும் ஆய்வுக் குறிப்பை எழுதி வைப்பதற்கு முன் பிரச்சனைக்குரிய சங்கத்திற்கு நிசர்வ் வங்கி அதிகாரிகள் சென்றது பற்றியும் அந்த அதிகாரிகளின் கருத்து பற்றியும் இவருக்குத் தெரியவந்தது என்றும் சாட்சியம் அளித்தார்

3/4–3–1972-ல் கே. நடராஜனின் மூன்றாவது வருகை.

அப்போது அமைச்சராக இருந்த திரு. சி.பா. ஆதித்தனாரின் உத்தரவின்பேரில் நடராஜன் தான் சாட்சியம் அளித்துள்ளபடி நிசர்வ் வங்கி அதிகாரிகளின் அறிக்கையையும் அவர்களது பாதகமான கருத்துரைகளையும் ஒட்டி சங்கங்களில் நிறைவேற்றி யுள்ள பணிகளின் அளவு பற்றிக் கண்டறிய அவற்றின் திட்டப்பகுதிகளுக்கு மூன்றாவது முறையாகச் சென்று பார்த்தார். இவரது கருத்துக்கள், அந்த இடத்திலேயே காட்சிப் பொருள் C.W. 44/4 என்கிற ஆய்வுக் குறிப்பில் குறித்து வைக்கப்பட்டுள்ளன. (புலனுய்வு அறிக்கையில் 47-ம் எண் கோப்பு/ஆவணம்.) இந்தக் குறிப்பிலும் கூட, இவர், இந்தச் சங்கங்கள் அனைத்தும் சேர்ந்து அவற்றில் ''100 ஏக்கருக்கும் மேலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், 7 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன என்றும், சேரகுளம், கீழப்பெருமானேரி சங்கங்களைச் சேர்ந்த பகுதிகளில் 80 ஏக்கர் நிலம் புளிச்சைக் கிரைப் பயிரின்கீழ் வருகின்றன'' என்றும் மீண்டும் கூறியுள்ளார். இவர் மேலும் கூறியதாவது :— ''பண்படுத்தப்பட்ட மொத்தப் பரப்பளவு சுமார் 300 ஏக்கர் இருக்கும். மேற் சொன்ன இரு சங்கங்களில் விதைக்கப்பட்டிருந்த புளிச்சைக் கிரைப் பயிர்கள் சுமார் 4அடி உயரம் வளர்ந்துள்ளன. ஒரு சில இடங்களில் பல்வேறு காரணங்களை முன்னிட்டு எதிர்பார்த்தபடி அவை வளரவில்லை. தெளிப்பு முறைப் பாசன ஏற்பாடு செவ்வனே நடைபெற்று வருகிறது. கிணறுகளில் போதிய தண்ணீர் உள்ளது.''

15–4–1972-ல் கே. நடராஜனின் 4-வது வருகை.

இந்தச் சங்கங்களின் திட்டப்பகுதிகளுக்கு சாட்சி செய்த 4-வது ஆய்வுப் பயணம் 15–4–1972-ல் நிகழ்ந்தது. தலைமையகத்திற்கு இவர் திரும்பிய அம் சாட்சிப் பொருள் 44/5 என்று ஆய்வுக் குறிப்பு ஒன்றை எழுதினார். (ஆவணம் எண் 47). இந்தக் குறிப்பைத் தயாரிக்கையில் இவர் ரிசர்வ் வங்கி அதிகாரிகளுக்கு வருகை சம்பந்தமாக அப்போது திருந்த அமைச்சர் தனக்குக் கொடுத்துள்ள உத்தரவு களைக் கருத்தில் கொண்டிருந்ததாக நடராஜன் சாட்சியம் அளித்துள்ளார். இந்த குறிப்பில் சாட்சி குறித்து வைத்துள்ளாவது :—

''15-ம் தேதியன்று நான் சேரகுளம், கீழப் பெருமானேரி கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்களுக்குச் சென்று புளிச்சைக் கிரைப் பயிர் 8 அடிக்கு மேல் வளர்ந்துள்ளதைக் கண்டேன். நான் முன்பு சென்று பார்த்த ஒரு மாத காலத்திற்குள்ளாகவே ஏறக்குறைய 100 ஏக்கருக்கு மேலுள்ள நிலப்பரப்பளவு பச்சைப் பசேல் என்கிற பரந்த வயல்வெளித் தோற்றத்தைக் கொடுத்தது. இந்தப் பயனத்தின்போது அதிக எண்ணிக்கையில் கிணறுகள் தோண்டப்பட்டும் (43 கிணறுகள்-இது 34 என்று தவருக சொல்லியுள்ளதாகத் தெரிகிறது- தோண்டப்பட்டு வருவதாகத் தெரிகிறது) அதிக எண்ணிக்கையுள்ள நீரேற்று இயந்திரக் கொட்டகைகளும் (7) அதிக எண்ணிக்கையுள்ள நீரேற்றுப் பொறிகளும் நிறுவப் பெற்று வீரவாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 10 நீரேற்றுப் பொறிகள் வரப்பெற்றுள்ளன. கூடுதலாகச் சுமார் 100 ஏக்கர் நிலம் பண்படுத்தப் பட்டுள்ளது. சீரமைப்புக்கான செலவு இதற்கு

மூன் ஏற்பட்ட 5 இலட்சத்திற்கு மாறுக மொத்தம் ரூ. 7.75 இலட்சம் ஏற்பட்டுள்ளது. இத் தொகை யில், இவர்கள் ஈரப்பெற்ற டிராக்டர், சாகுபடிக் கருவி, இரும்புக் கலப்பைகள் ஆியவற்றின் செல வும், இலி இவர்களுக்கு வரவிருக்கின்ற தொடர் வண்டிச் செலவும் அடங்கும் ''.

ஆக, நடராஜன் கூறியுள்ளபடி 15—4—1972 வரை இச்சங்கங்கள் பண்படுத்தி உள்ள நிலங் களின் மொத்தப் பரப்பளவு 400 ஏக்கர்களாகும்: (வேளாண்மை இயந்திரங்கள், டிராக்டர் ஆிய வற்றின் செலவு உள்பட) நிலத்தைப் பண்படுத்திச் சீரமைப்பதற்கான மொத்தம் மதிப்பீட்டுச் செலவு ரூ 7.75 இலட்சமாகும்.

28—7—1972-ல் கே. நடராஜனின் 5-வது வருகை.

இந்தச் சந்தர்ப்பத்தின்போது நிலவள வங்கித் தலைவர் திரு. சண்முக உடையார் திருநெல்வேலி யில் அமைச்சரைச் சந்தித்துப் பேசுமாறு தனக்குச் கட்டளையிட்டதாக இந்தச் சாட்சி காட்டியம் அளித்துள்ளார். அதற்கிணங்க, சாட்சி திருநெல் வேலி ஆய்வு மாளிகையில் 28—7—1972-ல் அமைச் சரைச் சந்தித்தார். அமைச்சர் திரு. பி.பா. ஆதித்தனார் இந்த இரைவைப் பாசனச் சங்கங் களுக்குச் சென்று பார்வையிட்டு, கடன் பயன் படுத்தியமை குறித்துக் கண்டறியுமாறு சாட்சி யைக் கேட்டார். கடனுக அவர்கள் வங்கியிலிருந்து பெற்றிருந்த பணத்தைக் காட்டிலும் அதிக பணத்தை ஏற்கெனவே செலவிட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினர். இதன் பிறகு சாட்சி கடன் கோப்பைப் பார்வையிட்டு அதன் பின்னர் அமைச்சரது சகோதரர் திரு. ஆதித்தன், இறைவைப் பாசனச் சங்கங்களுக்குப் பொறுப் பாக இருந்த திருநெல்வேலி வழக்குரைஞர் திரு. உத்தரபாண்டியன் உள்ளிட்ட ஏனைய நபர்கள் இருந்த இடத்திற்குச் சென்று அவர்களைச் சந்தித்தார். இந்தச் சாட்சி மூன்று நபர்களின் உதவியுடன் திட்டப்பகுதியில் நடைபெற்ற வேலை களைப் பார்வையிட்டு அவைகள் எடுத்து, 47-ம் எண் ஆவணத்தில் C. W. 44/7 முதல் 44/13 வரையுள்ள காட்சிப் பொருளாக குறிக்கப்பட்டுள்ள 7 தாள்களைக் கொண்ட தொப்பில் பணிகள், அவற்றில் செய்யப்பட்ட முன்னேற்றங் கள் பற்றிய மதிப்பீடு ஒன்றைத் தயாரித்து வைத்தார். இதில் இவர் அவற்றின் இனம் வாரியான மதிப்பீடுகளைத் தயாரித்தார். இந்த நான்கு சங்கங்களின் திட்டப் பகுதிகளில் நிலம் பண்படுத்துதல், இணைகளைத் தோண்டுதல், நீரேற்றுப் பொறிகள் நிறுவுதல், வேலி அமைத்தல் மிமிட்டிக் கற்கலவையில் நீர்க்கால்கள் அமைத்தல் முதலியவை உட்பட நிலச் சீரமைப்புப் பணி களுக்கான மொத்தச் செலவு முதற்கண் ரூ. 14.57 இலட்சம் என்று கணக்கிடப்பட்டது. இதன் பின்னர், சாட்சி, சேர வேண்டிய கடன் தொகை ரூ. 21.25 இலட்சம் என்று திருநெல்வேலி கூட் டுறவு நிலவள வங்கியிலிருந்து தெரிந்து கொண் டார். இந்தத் தகவல் திரு. ராமகிருஷ்ணனது குறிப்பில் உள்ளது. அமைச்சரின் சகோதரர் திரு. ஆதித்தன், திரு. ஆதித்தனார், உத்தர பாண்டியன் மதிப்பீட்டுத் தொகையை அதிகரித் துக் காட்டுமாறு சாட்சிக்கு குறிப்புணர்த்தி னார்கள். அமைச்சர் திரு. ஆதித்தனார் 28-ம் தேதி காலையில் கொடுத்த உத்தரவுகளிலிருந்து, சங்கங்கள் வாங்கிய கடனைக் காட்டிலும், அதிகத் தொகையில் பயன்பாட்டுச் சான்று இருக்க வேண்டு மென்று சாட்சி தெரிந்து கொண்டார். ஆகவே, இந்த சாட்சி இதனைத் தொடர்ந்து கடனுக வழங்கப் பெற்ற தொகையைச் சரிக்கட்ட, ரூ. 14.57 இலட்சத்திலிருந்து தொகையை அதிகரித்து, சீரமைப்புக்கான செலவு மதிப்பை ரூ. 21.57 இலட்சத்திற்கு உயர்த்தினர்.

சங்கங்களைப் பொறுத்தமட்டில் நீரேற்றுப் பொறிகள் குறித்து செலவு செய்ய தொகை எதுவும் அனுமதிக்கப்படவில்லை என்றும், அன்றி வேலி அமைப்பதற்கான அனுமதியும் இல்லை என்றும், அரசு வழக்குரைஞர் திரு. வானமாமலை என்முன் எடுத்துக் கூறியுள்ளார். வழக்குரைஞர் கூறியபடி, பண்ணை வீடு அல்லது சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கான அனுமதியும் இல்லை பண்ணை/சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு அல்லது வேலி அமைப்பதற்கு அல்லது மிமிட்டிக் கற்கலவைகளான நீர்க்கால்கள் அமைப்பதற் கும் அல்லது நீரேற்றுப் பொறிகளை நிறுவுவதற் கும் கடன் வழங்கப்படவில்லை அல்லது எடுக்க வில்லை என்று வலியுறுத்தப்படுகிறது. கடன் விணப்பங்களில் இந்தப் பணி இனங்கள் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்படாதபோதிலும், இந்தப் பணி இனங்கள் நிலங்களைப் பண்படுத்துவதற்கும் கடன்களில் அனுமதிக்கப்பட்டிருந்த பாசன வசதி களைச் செய்து கொடுப்பதற்கும் அப்பாற்பட்ட வையல்ல என்றே எனக்குத் தெரிகிறது. ஆகவே, நான், வேலி அமைத்தல், மிமிட்டிக் கற்கலவை யிலான நீர்க் கால்கள், நீரேற்றுப் பொறிகள் முதலியவை குறித்து ஏற்பட்ட செலவினங்களை நீக்குவதை விரும்பவில்லை.

நான் இதுபற்றி பின்னர் விவரிக்கிறேன். தற் போதைக்கு இந்த இனங்களைப் பற்றி நினைவில் குறித்துக் கொள்வது பொருமானதாகும். ஏனெனில், இந்த வாதத்தின் பின்னணியில்தான் நடராஜனது சாட்சியத்தைக் கவனிக்க வேண்டி யுள்ளது.

நடராஜன் கூறுகிறபடி, சேரகுளம், மேல தாதன்குளம் சங்கங்களுக்குச் செய்யப்பட்டுள்ள வேலி அமைப்புக்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 29,000-மும், மிமிட்டிக் கற்கலவையிலான நீர்க்கால்கள் குறித்த செலவு ரூ. 76,000-மும் ஆகும்.

(c) பரம்புப் பொறிகளை வாடகைக்கு விடுதல்— நவம்பர் 1971—எம். காளியப்பன் (சா. எண் 24).

இதன் பிறகு, திருநெல்வேலி உதவிப் பொறி யாளர் அலுவலகத்தில் 1970-மார்ச்சிலிருந்து 1976 மே 10-ம் நாள் வரை (வேளாண்மை) இள

நீலேப் பொறியாளர் எம். காளியப்பனது சாட்சியம் உள்ளது. 5-A பிரிவின்படி புலனுய்வு அதிகாரியால் இந்தச் சாட்சி விசாரிக்கப்பட்டார். இவரும் 30-11-1976 நாளிட்ட உறுதிமொழிப் பத்திரமொன்றை கும்மூன்முன் தாக்கல் செய்துள்ளார். சேரருமும், மேற்ப பெருமானேரி சங்கங்களின் பருநியிலிருந்து காடு மேடுகளை அகற்றுவதற்காகப் பரம்புப் பொறிகளை வாடகைக்கு எடுப்பதற்கென எதிர் மனுதாரர் திரு. பி. பா. ஆதித்தனரின் சகோதரர் திரு. எஸ். டி. ஆதித்யன் தன்னே அணுகியதாக இவர் சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு வாடகைக்கு எடுப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் அந்தந்தச் சங்கத்தின் தலைவரால் பூர்த்தி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்டன.

மேலும் இந்தச் சாட்சி சான்றளித்துள்ளதாவது: மேற்பெருமானேரி சங்கத்தைப்பொறுத்தமட்டில், அதன் தலைவர் கே. கொத்தளமுத்து, விண்ணப்பப் படிவத்தில் 2-வது பத்தியில் இதச் சங்கத்திற்குரிய மொத்தப் பரப்பளவான 171 ஏக்கர் சாகுபடி செய்யப்படாமலுள்ளது என்று தெளிவாகவும், ஐயப்பாட்டிற்கு இடமில்லாமலும் குறிப்பிட்டுள்ளார். இதனேயே இவர் 4-ம் பத்தியிலும் ஆமோதித்துள்ளார். புலனுய்வு அறிக்கையின் 1-வது பக்கம் 69-ம் எண். ஆவணத்தைக் காண்க. விண்ணப்பதாரர் 40 ஏக்கர் நிலத்தை மட்டும் பண்படுத்தினர். விண்ணப்பதாரர் அளித்த தகவலின்படி 10-11-1971-லிருந்து 15-11-1971-வரை 28 ஏக்கர் நிலம் பரம்புப் பொறிகளைப் பயன்படுத்திச் சமன்படுத்தப்பட்டதென்றும், அதற்காக மணிக்கு ரூ. 60 வீதம் 25 மணிகளுக்கான வாடகைக் கட்டணங்கள் விதித்து வாங்கப்பட்டன என்றும், 2-11-1971-ல் 1,55,850-ம் எண் பட்டியல் படியும், 10-11-1971-ல் 1,55,865-ம் எண் பட்டியல் படியும் ரூ. 1,500 கொண்ட தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

பரம்புப் பொறி வாடகைக் கட்டணங்கள் சங்கத்தின் சார்பில் யாரோ ஒருவரால் செலுத்தப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

50 ஏக்கர் நிலம் பண்படுத்த பரம்புப்பொறி வாடகைக்கு எடுப்பதற்கான மற்றெரு விண்ணப்பம் 15—11—1971-ல் வரப்பெற்றது என்றும் பரம்புப்பொறிகள் உண்மையில் செய்த வேலே அளவு மொத்தம் 297 மணி நேரம் என்றும் வசூலிக்கப்பட்ட வாடகைக் கட்டணங்கள் ரூ. 17,820 என்றும் காளியப்பன் சாட்சியம் அளித்துள்ளார்.

இந்திய ரிசர்வ் வங்கியைச் சேர்ந்த வேங்கடநாராயண 16—12—1971-ல் வருகை தரு வதற்கு முன்னமே சேரருமும், மேற்பெருமானேரி இறைவைப் பாசனச் சங்கங்களில் காடுகள் அழிக்கும் வேலே ஓரளவுக்கு மட்டுமே செய்யப் பட்டது என்று காளியப்பனது சாட்சியத்தில் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்பிறகேதான் தூதன்குளம் சங்கங்களேச் சார்ந்த பகுதியில் வேலே நடைபெற்றது.

பரம்புப் பொறிகள் வாடகைக்கு விட்டு இயங்குவது சம்பந்தமாக ஒரே காலத்திய அரசு பதிவுக் கட்டுகளின் ஆதாரம் கொண்ட காளியப்பனது சாட்சியம், வேங்கடநாராயணனின் அறிக்கையில் (ஆவணம் எண் 69) கொடுத்துள்ள சாட்சியத்திற்கு மேலான சான்று உறுதிப்பாடினே வழங்குகிறது.

எதிர்மனுதாரர் திரு. பி. பா. ஆதித்தனர், 1971-டிசம்பரில் மேற்படி சங்கங்களின் பகுதியைச் சென்று பார்வையிட்டார் என்று காளியப்பனும் தெரிவிப்பது குறித்து ஈண்டுக் குறிப்பிடலாம். இந்தச் சங்கங்களின் நிட்டப்பகுதிகளில் மேற்கொண்ட மேம்பாட்டுபணியில் எதிர்மனுதாரர் நேரில் எடுத்துக்கொண்ட அக்கறையை காளியப்பனது சாட்சியம் மேலும் புலப்படுத்துகிறது.

இரு தினறுகளில் மட்டுமே நீரேற்றுப் பொறிகள் வைக்கப்பட்டு அவற்றிற்கு 1971 டிசம்பரில் மின்சக்தி வழங்கப்பட்டிருப்பதைக் காட்டுகிற ஆவண வகையிலான சாட்சியமும் (காண்க: ஆவணம் எண் 24) உள்ளது.

(C. W. 34) எஸ். நாராயணசாமியின் அறிக்கை, 31—3—1976.

எஸ். நாராயணசாமி, 5-A பிரிவின்படி விசாரிக்கப்பட்டார். இவர், கமிஷன் முன்னிலையில் 27-11-1976 உறுதிமொழிப் பத்திரம் ஒன்றையும் தாக்கல் செய்தார். இவர் சென்னே, தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி தொழில்நுட்பக் குழு, வேளாண்மை (பொறியியல்) துறை, இணே இயக்குநராக 1973 டிசம்பரிலிருந்து பணியாற்றி வந்திருக்கிறார். சென்னேக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் நேரில் கொடுத்த உத்தரவுகளின் பேரில், இவர், நான்கு இறைவைப் பாசனச் சங்கங்கள் அவர்களுக்கு நிலவள வங்கி கொடுத்த கடன் தொகைகளில் பயன் படுத்தியிருக்கக் கூடிய தொகை பற்றி நேரில் சென்று பார்ப்பதற்காக, 25—3—1976, 26—3—1976 ஆகிய நாட்களில் களத்திற்கே சென்று பார்வை யிட்டார். தான் நேரில் களத்திற்கே சென்று சரிபார்த்தபோது, திருவாளர்கள் எம். மூலர. சென்னே கூட்டுறவுச் சங்க இணேப்பதிவாளர், கே. வள்ளிநாயகம் பிள்ளே, மாவட்டச் சேமிப்பு அலுவலர், திருநெல்வேலி, எம். கோவிந்தன், உதவி வேளாண்மைப் பொறியாளர், மாவட்டத் தொழில் நுட்பக் குழு, மாவட்ட ஆட்சியரகம் திருநெல்வேலி, களமேற்பார்வையாளர், கருங்குளம், கணக்குப்பிள்ளே ஆகியோர் அங்கு வந்திருந்தனர். இந்த நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களுக்குச் சம்பந்தப்பட்ட பகுதிகளில் நிறைவேறிய எல்லாப் பணிகளேயும் பற்றிய விரிவான அறிக்கை ஒன்றை இவர் கொடுத்தார். இவரது 31—3—1976 நாளிட்ட மேல் கடிதத்துடன், இந்த அறிக்கையை இவர் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அனுப்பிவைத்தார். இந்த

அறிக்கையை இவர் 26—7—1976-ல் கமிஷனைச் சேர்ந்த புலனுய்வு அதிகாரியிடம் காண்பித்தார். சாட்சி தனது அறிக்கையில், நிலவள வங்கி மொத்தம் ரூ. 20·25 இலட்சம் அனுமதித்திருந்ததற்கு மாறுக, திருத்திய மதிப்பீட்டின் கீழ்வரும் காரியங்களுக்காக, இந்த நான்கு சங்கங்களும் பயன்படுத்தியுள்ளதாகச் சொல்லப் படுகிற மொத்தத் தொகை ரூ.10,13,200 என்று மதிப்பிடப்பட்டது. இந்த நான்கு சங்கங்களும் தொடக்க நிலவள வங்கிக்குக் கடனே முழுவதும் கொடுத்துத் தீர்த்த தேதியை அதாவது 1972 ஆகஸ்டு இடையில் கொடுத்து தீர்த்ததைக் கருத்தில் கொண்டதன் பிறகே மேற்சொன்ன மதிப்பீட்டை சாட்சி கொடுத்துள்ளார். இந்த சாட்சியின் மதிப்பீட்டிலிருந்து வேறு வகையில் கூறுவதாயின் கடன்தொகையில் திருத்திய மதிப்பீட்டின் கீழ்வரும் காரியங்களுக்காக, இந்த சங்கங்கள் 10—8—1972 வரையில் பயன் படுத்தியுள்ள மொத்தத் தொகை ரூ. 10,13,200 ஆகும். இந்தச் சாட்சி மேலும் கூறுவதாவது; இந்தச் சங்கங்கள் புதிய கிணறுகளைத் தோண்டுவதில் பயன்படுத்திய கடன் தொகையைச் சரி பார்க்கையிலே, இந்த நான்கு சங்கங்களுக்கான திருத்திய மதிப்பீடு 34 கிணறுகள் மட்டுமே தோண்டுவதற்கு வகை செய்யப்பட்டிருப்பதால், கடன் அனுமதிக்கப்பட்டதன் பிறகு இந்தச் சங்கங்கள் தோண்டிய புதிய 34 கிணறுகளே மட்டுமே தான் கருத்தில் எடுத்துக் கொண்டதாகக் கூறுகிறார். இவ்வாறு தோண்டப்பட்ட 34 புதிய கிணறுகளைத் தவிர்த்து, சேரவும் இறைவைப் பாசனம் பகுதியில் 1900 முதல் 1998-ம் சர்வே புல எண்களில் ஏற்கெனவே இருந்த இரண்டு பழைய கிணறுகளும் ஆழப்படுத்தப் பட்டு கைப்பிடிச்சுவர் உட்பட கருங்கல் சுவர் கட்டப்பட்டது. வழங்கிய கடன் தொகையி லும், திருத்திய மதிப்பீட்டின்கீழும், இப்போ துள்ள பழைய கிணறுகளை ஆழப்படுத்தி அவற்றில் கைப்பிடிச்சுவரும், கருங்கல் சுவரும் கட்டும் பணி சேரவில்லே. ஆதலால், பயன் படுத்திய கடன் தொகையை மதிப்பீடுகையில் இந்தப் பணிகளைச் சாட்சி கருத்தில் கொள்ள வில்லை.

கிணறுகளைத் தோண்டுகையில் ஏற்பட்ட நீர் இறைப்பதற்கான செலவுகள் குறித்த செலவு மதிப்பீட்டைப் பொறுத்தமட்டில், சாட்சி கைக் காப்பாக ஒரு மொத்தமான தொகையை ஒதுக்கினார். பொதுப்பணித் துறையில் புழக்கத் திலிருந்த நடைமுறையின்படி, கடினமான பாறைப் பகுதியிருந்தால் நீர்மட்டத்திற்குக் கீழே இருந்து கிணறு தோண்டுவதற்காகும் செலவில் 5 சதவீதமாகவும், வேறு வகையான நில அடுக்குகள் இருந்தால் 10 சதவீதமாகவும் நீர் இறைக்கும் செலவுகளை மதிப்பிடுவது வழக்கமாகும்.

திருத்திய மதிப்பீடுகளில் தூண்கிணறுகளுக் கான நிதி ஒதுக்கீடு ஏதுமில்லையாதலால், தூண்க் கிணறுகள் தோண்டுவதும் (நிலமட்ட தூண்க்கிணறு கள்) கருத்தில் கொள்ளப்படவில்லே. ஆயினும் இந்தச் சாட்சி சில கிணறுகளின் அருகில் அடி மண் மாதிரிகளேக்கொண்டு தெரிவந்துள்ளபடி. சில கிணறுகளுக்குள் மாதிரி தூண் இயந்திரங்கள் இறக் கப்பட்டு இருக்க வேண்டுமென்று கண்டறிந்ததாக ஒப்புக்கொண்டார். தோண்டப்பட்ட எல்லாக் கிணறுகளிலும் சோதனைத் தூண் இயந்திரங்கள் இறக்கப்பட்டதைக் கண்டறிய இயலாது என்றும் தனது அறிக்கையில் சாட்சி குறிப்பிட்டுள்ளார். இதன்பயனுக, தூண் இறக்கப்பட்ட மாதிரி கிணறு களின் தோராய மதிப்பீட்டைக் கணக்கிடுவதற் காக 'காலிக்ஸ்' தூண் இயந்திரம் வாடகைக்கு விட்டு வேளாண்மைத் துறைக்குச் செலுத்திய வாடகைக் கட்டணங்களேயே அடிப்படையாகக் கொள்ள முடியும். வேளாண்மைத் துறையிலுள்ள பதிவுக்கட்டுகளின்படி 'காலிக்ஸ்' தூண் இயந் திரத்தை இந்தச் சங்கங்கள் 1972 மே மாதத்தி லிருந்து 1972 நவம்பர் மாதம் வரையில் வாடகைக்கு எடுத்தன. கடன் தொகை முழுவதும் 8—8—1972-க்குள் கொடுத்துத் தீர்க்கப்பட் டிருந்தபடியால், கடன் தீர்க்கப்படும் நாள்வரை 'காலிக்ஸ்' தூண் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு இருந்திருக்கக்கூடிய நாட்களே மட்டுமே மதிப்பிட் டார். 8—8—1972-க்குப் பிறகு தூண் இயந்தி ரத்தைப் பயன்படுத்தியதற்குச் செலுத்திய வாட கைச் செலவுகளேக் கணக்கில் கொள்ளவில்லே. கடன் கொடுத்துத் தீர்க்கப்பட்டதன் பிறகு, வேளாண்மைத் துறையிடமிருந்து கையளுல் இயங் கும் தூண் இயந்திரமும், பிற சாதனங்களும், வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளன என்பதைச் சாட்சி கவனித்தார். ஆகவே, இந்தச் சாதனங்களே வாடகைக்கு எடுத்ததில் மேற்கொண்ட செலவு, பயன்படுத்திய தோராயமான கடன் தொகையை மதிப்பிடுவதற்காகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வில்லே. தெளிப்புச் சாதனக் கருவிகள் வாங்கப் பட்டன என்பதை சாட்சி இந்தச் சங்கங்களி லிருந்து அறிந்து கொண்டார்; ஆலுல், திருத்திய மதிப்பீடுகளிலோ அன்றி இந்தச் சங்கங்களுக்கு முதலில் எந்தக் காரியங்களுக்காக கடன் அனு மதிக்கப்பட்டதந்தேதோ அந்தக் காரியங்களிலோ தெளிப்புச் சாதனங்கள் வாங்குவது அடங்கலில்லே யாதலால் இந்தச் சாதனங்களுக்கான செலவையும் சாட்சி கருத்தில் கொள்ளவில்லே.

சாட்சி நிட்டப்பகுதியை 25—3—1976-லும், 26—3—1976-லும் சென்று பார்த்த சமயத்தில் அந்தப் பகுதியில் அப்போதிருந்த உண்மையான அளவீடுகளின் அடிப்படையில் வேலி அமைப்பதன் தோராயச் செலவினே அவர் மதிப்பிட்டார். பொதுப்பணித்துறையில் தொழிலாளர்களுக்கான கூலிவீதங்களேயும், மூலப்பொருளின் தோராய மான விலே வீதங்களேயும் பின்பற்றி, மீட்டர் ஒன்றுக்கான விலே வீதம் கணக்கிடப்பட் டுள்ளது. சாட்சி தனது அறிக்கையில் வேலி அமைப்பதற்குத் தோராயமான செலவு ரூ. 87,500 என்று மதிப்பிட்டார். கமிஷன் நியமித்த புலனுய்வு அதிகாரி 5-A பிரிவின்படிச்

சாட்சியை விசாரிக்கையில் அப்போது முடிக்கப் பட்டிருந்த வேலிப் பணி மதிப்பின்படி, சேர குளம், மேல தாதன்குளம் சங்கங்களுக்காக மட்டுமே வேலிச்செலவை மதிப்பிட்டிருந்த வேளாண்மைத் (பொறியியல்) துறையில் அப்போ திருந்த இணை இயக்குநர் திரு. கே. நடராஜனால் செய்யப்பட்ட மதிப்பை 26—7—1976-ல் சாட்சிக்குக் காட்டினர். கடன் தீர்க்கப்பட்ட தாள்வரை செய்து முடிக்கப்பட்ட வேலியின் நீளத்தை மதிப்பிட சாட்சியால் முடியாததால், 1976 மார்ச்சில் இவர் வேலியின் மதிப்பை ரூ. 87,500 என்று மதிப்பிட்டிருந்ததை ரூ. 29,000 ஆகக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்தார்.

(i) ஜூலிப்ளோரா பூண்டுச்செடி களை (வேரோடு பிடுங்குவது உட் பட) அழிப்பதற்கு 10 சதுர மீட்டருக்கு ரூ. 1·50 வீதத்தில் (5,86,960 ச. மீட்டர்கள்) 145 ஏக்கருக்கான செலவு		88,044·00
(ii) ஜூலிப்ளோரா பூண்டுச்செடி களை (வேரோடு பிடுங்குவது உட் பட) அழிப்பதற்கு 10 சதுர மீட்டருக்கு ரூ. 2·50 வீதத்தில் (13,15,600 ச.மீ.) 325 ஏக்கருக் கான செலவு		3,28,900·00
மொத்தம் ..		4,16,944·00

போத்தி வாய்க்கால்களின் தோராயச் செலவை மதிப்பிடுகையில் அவற்றைக் கட்டுவதற்காகப் பயன்படுத்திய முன்வார்ப்பிட்ட, கற்கலவைனிலு லான பாளங்களின் எண்ணிக்கை எஸ். 8 ஆம் எண் ணைற்றில், 820 என்பதற்குப் பதிலாக, 320 என்று தவருக்குக் குறித்துக்கொண்டதாகத் தனது உறுதி மொழிப் பத்திரத்தின் 11-வது பாராவில் இவர் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார். இந்தப் பிழை யினைத் திருத்தி சாட்சி கூட்டுறவுச் சங்கப் பதி வாளருக்கு அனுப்பிய அறிக்கையில் போத்தி வாய்க் கால்களின் மதிப்பு ரூ. 76,100 என்பதை ரூ. 81,351 என்று படித்துக்கொள்ளலாம் என்பதாகத் தெரிவித்துள்ளார். ஏக்கர்களைச் சதுர மீட்டர்க ளாக மாற்றியதில் சில கணக்குத் தவருகள் நேர்ந்து விட்டதாக இவர் மேலும் ஒப்புக்கொண்டார். பரம்புப் பொறி இயந்திரங்களை வாடகைக்கு எடுத்ததில் வேளாண்மைத் அறைக்கு இச் சங்கங் கள் செலுத்திய ரூ. 41,160 என்கிற வாடகைக் கட்டணங்களை அடிப்படையாகக் கொண்டும், ஒரு ஏக்கர் நிலத்தைச் சமன்படுத்த 2½ மணிநேரம் தேவைப்படும் என்பதை அனுமானித்தும், குறைத் தது 145 ஏக்கர்களாவது 1972 மார்ச்சுக்குள் சமன் படுத்தியிருக்க இயலும் என்று கொள்ளலாம். திட்டப்பகுதியில், நிலத்தில் உள்ள புல் புண்டுகளை அழிப்பதற்கான செலவை மதிப்பீடும் பொருட்டு, பொதுப்பணித்துறை அந்தப் பகுதி பூராவும், 'ஜூலி ப்ளோரா' பூண்டுச் செடிகள் மண்டிக் கிடப்பதைக் கொண்டு, அவற்றை அழிப்பதற்காக பொதுப் பணித்துறை 1971—72-ல் பின்பற்றிய செலவு லீதங்களையே பின்பற்றலாம் என்று தெரிவித்தார். இங்கு எஞ்சியுள்ள 325 ஏக்கர் நிலம் 1972—73-ல் புல் புண்டு அழிக்கப்பட்டுப் பண்படுத்தப்பட்டுள் ளது. ஆகவே, 1972-73 ஆம் ஆண்டுக்கான ஏற் புடைத்த அட்டவணை லீதங்களை இந்தப் பகுதியில் நிலத்தைப் பண்படுத்துவதற்கான தோராயச் செலவைக் கணக்கிடப் பின்பற்றலாம். இந்த வகையில் சாட்சி தனது உறுதிமொழிப் பத்திரத் தில் நான்கு சங்கங்கள் அனைத்திலும் உள்ள நிலப் பகுதியில் புல்புண்டு அழிப்பதற்கான செலவைக் கீழ்க்கண்டவாறு மதிப்பிட்டார் :—

இந்த விளக்கங்களுக்கும், திருத்தங்களுக்கும் பிறகு, மேற்கொள்ள நான்கு சங்கங்கள் அனைத் தும் 8—8—1972 வரை பயன்படுத்தியுள்ள மொத்தக் கடன் தொகை ரூ. 13,21,253-க்கு மேற்பட்டிருக்காது என்று சாட்சி தெரிவித்தார்.

28—7—1972 வரை நிறைவேறிய மேம்பாட் டுப் பணிகளுக்கான செலவு ரூ. 14·75 இலட்சம் என்று கே. நடராஜன் மதிப்பிட்டதை ஈண்டு நினைவுகூர்தல் வேண்டும். இந்தக் கணக்கீடு களுக் காக அந்த இடத்திலேயே துல்லியமான புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் நிறந்த நிலையில் நடராஜன் இருந்தார். ஆனல், 1972-ஜூலை-ஆகஸ்டில் சங்கங்களுக்குச் சென்றிராத நாரா யணசாமி இந்தக் கணக்கீடுகளுக்கான அடிப் படைப் புள்ளி விவரத்தைக் குறைந்தது ஓரள விற்கு மட்டுமே அனுமதித்திருக்க முடியும். எனவே, நாராயணசாமியின் அறிக்கை நட ராஜன் செய்த மதிப்பீட்டைப் பொய்யான தாக்காது.

வேலி அமைப்பதற்கான செலவு, கடன் விண் ணப்பங்களில் தெரிவித்த முதல் காரியங்களின் கீழ் வரவில்லையாதலால், .. அதுகுறித்த ரூ. 1,75,900 செலவை நிலம் புண்படுத்து வதற்கான செலவு மதிப்பீட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று திரு. வானமாமலை கூறுகிறார். திருத்திய மதிப்பீடுகளை 1972-ஜூலுக்குப் பிறகு, எதாவது ஒரு சமயத்தில் குத்தாலம் மூலமாக திரு. ஆதித்தனர் கடன் கோப்புகளில் இணைக்கச் செய்திருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. வேலி அமைப்பதற்கான செலவில் வீதாச்சார சென்டேஜ் கட்டண வகையில் ரூ. 8,795 சேர்க் கப்பட்டிருப்பதை திரு. வானமாமலை ஆட்சேபிக் கிறார். இந்த இரு இனங்களும் நீக்கப்படுமா யின், நாராயணசாமி தயாரித்த கடன் பயன் பாட்டுத் தொகையின் மதிப்பு ரூ. 11,36,550 ஆகக் குறையும். இது மேலும் மேம்பாட்டுப் பணிக்கென்று எடுக்கப்பட்டதாகச் சொல்லப் படுகின்ற கடன் தொகையைவிட மீக மீகக் குறைவானதாக இருக்கும்.

இவ்வரசின் மதிப்பிற்குரிய வழக்குரைஞர் சுட்டிக்காட்டியுள்ள மேற்சொன்ன இனங்கள் நிலத்தைப் பண்படுத்துவதற்கான செலவு மதிப்பீடுகளிலிருந்து நீக்கப்பட வேண்டுமா என்பது குறித்து, திரு. சி. பா. ஆதித்தனார் மூடி மறைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது பற்றிக் கூகதாலத்தின் சாட்சியத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கையில், பரிசீலிக்கப்படும். சங்கங்களின் நிட்டப்பகுதியைச் சுற்றிலும் வேலி அமைப்பது, நிலம் பண்படுத்தும் வேலைகளுக்கு முற்றிலும் புறம்பானதல்ல என்று இந்தக் கட்டத்தில் சொல்லிக்கொள்வது போதுமானதாகும்.

மூடி மறைத்ததாகக் குற்றம் சாட்டப்படும் செயல்.

இச் சங்கங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகள் திடீர் வருகை புரிந்ததன் விளைவாக, சங்கங்களுக்கு வழங்கிய கடன்கள் முழுவதும் பயன்படுத்தப்பட்டன என்று தோற்றம் அளிப்பதற்காகவே மூடி மறைக்கும் நடவடிக்கைகளில் திரு. சி. பா. ஆதித்தனார் இறங்கி நேரிட்டது என்று திரு. வானமாமலை கூறினார். இதற்காகவே, அவர் செய்த காரியங்களில் ஒன்று யாதெனில், சென்னையிலிருந்து கருங்குளம் நிலவள வங்கிக்கு மேலான ராகத் திரு. குத்தாலத்தை அனுப்பியது என்றும், 3—8—1970 நாளிட்ட கடன் விண்ணப்பங்களை கடன் கோப்புகளில் 1972 மே மாதத்தில் அல்லது மாத வாக்கில் இவர் சேர்த்தார் என்றும், கடன் கோப்புகளில் திருத்திய மதிப்பிருனர்ச் சேர்த்து வைக்கவும் செய்தார் என்றும் அதனால் தேரண்டு வதற்குத் திட்டமிட்ட கிணறுகளின் எண்ணிக்கை கணிசமான அளவுக்குக் குறைந்து, அதற்குப் பதிலாக, கடன் பயன்படுத்தியது குறித்து விளக்கம் கொடுப்பதற்கு வேறுவகைப் பணிகளும் சேர்க்கப் பட்டன என்றும் கூறப்படுகிறது. இந்த அவணங்களில் கருங்குளம் நிலவள வங்கித் தலைவர் புதிய முதீதுவிடமிருந்து தேவையான மேற் குறிப்புகளைப் பெற்று தக்க இடங்களில் கடன் கோப்புகளில் சேர்க்க வேண்டுமென்று சொல்லி இந்த ஆவணங்கள், திரு. ஆதித்தனாரால் குத்தாலத்திடம் கொடுக்கப்பட்டன என்று நில நாட்டப்படுகிறது. குத்தாலத்தின் சாட்சியம் பற்றி வழக்குரைஞர் குறிப்பிட்டு, இந்த அனுமானத்திற்குச் சந்தேகமின்றி இடமளிக்கின்ற, இவர் கூறுகிற, பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் குறிப்பிட்டுள்ளார். எனவே, முதற்கண் திருவாளர்கள் குத்தாலம், புதியமுத்து ஆகியோரது சாட்சியத்தையும், அதன்பிறகு மதிப்பிற்குரிய வழக்குரைஞர் சுட்டிக்காட்டிய சந்தர்ப்பச் சூழ்நிலைகளையும் காணுவது முறையாகும்.

(a) முந்தைய ஒரு தேதியிட்ட ஆவணங்களைச் சேர்த்தல்.

P. குத்தாலம் (கமிஷன் சாட்சி 37)

திரு. P. குத்தாலம், கமிஷன் முன்பு சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது :—

''ரிசர்வ் வங்கியின் மறுப்புக்கு 1972 ஆகஸ்டு முதல் வார வாக்கில் மாண்புமிகு அமைச்சர் பதில் அளித்தபோது என்னுடன் தொடர்பு கொண்டு இந்திய ரிசர்வ் வங்கியின் மறுப்புகள் குறித்து வங்கியிலிருந்து நான் எப்படிப் பதில் அனுப்ப வேண்டும் என்று எனக்குத் தெரிவித்தார். பின்னர் அடுத்த நாள் அவரை வந்து பார்க்கும்படி என்னிடம் கூறினர். அவர், மூன்று தாள்களை என்னிடம் கொடுத்தார் : (1) ஒவ்வொரு சங்கத்திற்குமான 3—8—1970 ஆம் நாளிட்ட விண்ணப்பம் ; (2) திரு. மகாதேவன் என்பவர் கொடுத்த 29—11—1971 ஆம் நாளிட்ட, பயன்பாட்டுச் சான்றிதழ். இந்த ஆவணங்களைத் தலைவர் திரு. புதியமுத்துவிடம் கொடுத்து, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு இந்தத் தாள்கள் அனுப்பப்பட்ட நாளுக்கு அடுத்த நாளன்று அவற்றைப் பெற்றுக் கொண்டிருந்ததாக முந்தைய தேதியிட்டு அவரது சுருக்கொப்பத்தைப் பெறும்படி என்னிடம் தெரிவித்தார்.'' (கூடன் சம்பந்தமான 4 கோப்புகளில்—ஆவணம் எண்கள் 5, 6, 7, 8-ஒவ்வொரு சங்கத்திற்குமான ஆவணங்களை அடையாளம் காட்டுகிறார்). ''இந்த ஆவணங்கள் அனைத்தையும் தலைவர் திரு. புதியமுத்துவிடம் நான் கொடுத்து இந்தத் தாள்களை சங்கத்திற்குக் கொடுத்த நாளுக்கு அடுத்த நாளிட்டு சுருக்கொப்பம் இடும்படி அவரைக் கேட்டுக் கொண்டேன். மேற் தாதன்குளம் சம்பந்தமான கோப்பில் 57 ஆம் பக்கத்தில் உள்ள பொறியாளர் சான்றிதழில் தலைவரது சுருக் கொப்பத்திற்குக் கீழ் ''30—11—1971'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதற்கண் அவர் ''30—11—1972'' என போட்டிருந்து பின்னர் '' 30—11—1971 '' எனத் திருத்தியிருந்தார். என்முன்னே இந்தத் திருத்தத்தை அவர் செய்தார். சேரகுளம் இறைவைப் பாசனம் சங்கம் தொடர்பான கோப்பில் 25 ஆம் பக்கத்தில் உள்ள திருத்தம் மதிப்பீட்டின் அனுப்பியுள்ள முகப்புக் கடிதத்தில் 25—2—1971 எனத் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. தலைவர் '' 25—2—1972 '' எனத் தேதி குறிப்பிட்டு அவரது வொப்பத்தை இட்டார். இது முந்தைய தேதியில்லை. அப்போது இதனை நான் கவனிக்கவில்லை. இதனை நான் கவனித்திருந்தால் மாண்புமிகு அமைச்சர் விரும்பியதுபோல இது திருத்தப்பட்டு இருக்கும். அதே கோப்பில் 63ஆம் பக்கத்தில் 29—11—1971 ஆம் நாளிட்ட பொறியாளரின் கடிதம் ஒன்று இருக்கிறது. 1972 ஆகஸ்டு திங்களில் தலைவர் இதில் சுருக்கொப்பம் இட்டு '' 30—11—1971 '' என முந்தைய தேதி குறிப்பிட்டிருக்கிறார். இங்கும் கூட '' 1 '' என்ற எழுத்து மீண்டும் மாற்றப்பட்டிருக்கிறது. ''1972'' ஆம் ஆண்டு '' 1971 '' எனத் திருத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மாண்புமிகு அமைச்சர் விருப்பத்தின் பேரிலேயே இவை அனைத்தையும் நான் செய்து முடிக்கப் பெற்றேன்.''

திரு. புதிய முத்து (கமிஷன் சாட்சி 38), கமிஷன் முன்பு சாட்சியம் அளித்துள்ளதாவது :—

'' ஒரு நாள் திரு. குத்தாலம், என்னிடம் வந்து வங்கி கட்டிடத்திற்கு வரும்படி கூறினர். இந்த 4 சங்கங்கள் சம்பந்தமான கடன் விண்ணப்பப் படிவங்களையும் பயன்பாட்டுச் சான்றிதழையும் திருத்த மதிப்பீடுகளையும் என்னிடம் கொடுத்தார். இந்த ஆவணங்களைக் கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் தன்னிடம் கொடுத்ததாகவும் கடன்கள் மிகக் குறுகிய காலத்தில் அனுமதிக்கப் பட்டதாகவும் இந்த ஆவணங்களில் நான் (தலேவர்) முந்தைய ஒரு தேதியிட்டு அவரிடம் கொடுக்க வேண்டுமென்றும் என்னிடம் திரு. குத்தாலம் தெரி வித்தார். மாண்புமிகு அமைச்சர் கூறியது போலவே செய்ய நான் ஒப்புக் கொண்டேன். (5, 6, 7, 8 ஆம் எண் கோப்புகளில் உள்ள சம்பந்தப் பட்ட ஆவணங்களில் இருக்கும் அவரது சுருக் கொப்பங்களை அடையாளம் காட்டுகிறார்).

மேழ தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கம் தொடர்பான 5ஆம் எண் கோப்பில் 29—11—1971 ஆம் நாளிட்ட பயன்பாட்டுச் சான்றிதழை '' 30—11—1971 '' என்று தேதிகுறிப்பிடப்பட்டு எனது சுருக்கொப்பம் இருக் கிறது. முதலில் நான் ''72'' எனப் போட்டு பின்னர் அதை '71' ஆகத் திருத்தினேன். இந்த ஆவணங்கள் அனைத்தும் திரு. குத்தாலம் 1972 ஆகஸ்டு மாதத்தில் என்னிடம் கொடுத்தார். சேர குளம் சம்பந்தமான கோப்பில் 63—69ஆம் பக்கங் களில் உள்ள பயன்பாட்டுச் சான்றிதழில் நான் '' 30—11—1971 '' எனத் தேதி குறிப்பிட்டுள் ளேன். முதற்கண் இது '72' என எழுதப்பட்டிருந் தது. பின்னர் அதனை ' 71 ' ஆக நானே திருத்தி னேன்.

சேரகுளம் தொடர்பான 7 ஆம் எண் கோப் பில் 25—37ஆம் பக்கங்களில் உள்ள நிருத்த மதிப் பீட்டில் நான் ' 25—4—1972 ' என தேதி குறிப் பிட்டுள்ளேன். உண்மையில், இந்தத் தாளினை 1972 ஆகஸ்டு மாதத்தில் திரு. குத்தாலம் என் னிடம் கொடுத்தார்.

எதிர்தரப்பு வழக்குரைஞர், திரு.குத்தாலத்தைக் குறுக்கு விசாரணை செய்தபோது, நிராவிட முன் னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரும் அமைச்சருக்கு மிகவும் வேண்டியவருமான திரு. புதியமுத்து மூலமாக இதனைச் செய்வதற்குப் பதிலாகக் கடன் சம்பந்தமான கோப்புகளில் இந்த ஆவணங்களைச் சேர்க்க அமைச்சர் ஏன் உங்களைப் பயன்படுத்தி யிருக்க வேண்டும் என்று திரு. குத்தாலத்திடம் கேட்டார். சாட்சியிடம் கேட்ட கேள்வியையும் அதற்கு அவர் அளித்த பதிலையும் சுருக்கமாக இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

'' கேள்வி : தலேவர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யான ஆவணம் ஒன்றைத் தயாரித்து அதனைக் கோப்பில் சேர்த்துவிடும் இந்த துணிச்சலான செயலே அமைச்சர் செய்ய விரும்பியபோது, புதியமுத்து மூலமாக நேரடி யாக இதனைச் செய்வதற்குப் பதிலாக, உங்கள் மூலமாக அமைச்சர் ஏன் இதனைச் செய்ய வேண் டும் என்பதற்குத் தனிப்பட்ட காரணம் எதுவும் இருப்பதாக நீங்கள் சொல்ல முடியுமா?

பதில் : மண்னிக்கவும், வங்கியின் அன்றாட நிருவாகப் பணியில் தலேவருக்கு நேரடித் தொடர்பு இடையாது. நடைமுறையிலும் விதிகளின்படியும் ரொக்கம், கோப்புகள் எல்லாம் உள்விட்ட சொத்துக்கள் யாவும் மேலாளரின் பொறுப்பில் இருக்கின்றன. ஆகவே, இந்தக் காரியத்தைத் திரு. புதியமுத்து செய்ய வேண்டும் என்று அமைச்சர் விரும்பினால் திரு. புதியமுத்து செய்ய வேண்டி யதை, என்னிடம் கேட்டிருந்தால் நான் அதற்கு மறுப்பு தெரிவித்திருப்பேனு என்பது எனக்குச் சந்தேகம்தான். ஆகவே, அந்த வேலையை செய்ய சரியான ஆள் நான்தான் என்று அமைச்சர் நினைத்திருக்கிறர்''.

குத்தாலத்தின் இந்தக் கூற்று வெளிப் படையாகவே நம்பத்தக்கது. கமிஷனுல் விசாரிக்கப் பட்ட புதியமுத்து அரைகுறையாக எழுதப்படிக்கத் தெரிந்தவராகவும் சராசரி மனிதனுக்குரிய புத்திசாலித்தனம் கூட அவரிடம் இல்லே என்றும் தெரிகிறது. பொய்யாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் முந்தைய ஒரு தேதி குறிப்பிடப் பட்டு அவற்றை வாங்கிய பின்னர் சம் பந்தப்பட்ட கோப்புகளில் அவற்றை உரியஇடத்தில் வைக்கும் அளவுக்குக்கூட அவருக்குப் புத்தி சாலித்தனம் இல்லே என்று தெரிகிறது. அவ ருடைய நிறமைக்கு அப்பாற்பட்ட இத்தகைய ஒரு பணியை அவரிடம் ஒப்படைத்திருக்க முடியாது. ஆகவே, இந்த வேலையைச் செய்து முடிக்க திரு. குத்தாலத்தை அமைச்சர் தெரிந்தெடுத்ததில் ஆச்சரியம் இல்லே.

எவ்வையாகவும் புத்திசாலித்தனம் இல்லா மலும் இருக்கின்ற புதியமுத்துவிடம் இந்த ஆவணங்களில் முந்தைய ஒரு தேதியை இடுமாறு கேட்டபோது அவர் குழம்பிவிட்டதாகத் தெரி கிறது. அவர் புத்திசாலித்தனமின்றி ஆண்டை '1972' எனப் போட்டுள்ளார். ஓர் ஆவணத்தில் இந்தத் தவறைக் கண்டுபிடித்த குத்தாலம் அப்போதைக்கப்போது அதனைச் சரி செய்து வாங்கிக் கொண்டார். '1972' என்பதை அப்ப டியே அதன்மீது '1971' ஆக மாற்றினர். ஆனல், பிற ஆவணங்களில் புத்திசாலித்தனமின்றி புதிய முத்து செய்த இந்தத் தவறை உரிய காலத்தில் குத்தாலம் கண்டுபிடிக்கவில்லே. இதன் விளைவாக, அந்த ஆவணத்தில் அவர் 25—2—1971 என்று சுருக்கொப்பம் இட்டுள்ளதாகத் தோன்றினலும் அந்த ஆவணங்களில் '25—2—1972 ' என்றே தேதி குறிப்பிடப்பட்டு இருந்தது.

குத்தாலம், அமைச்சர் திரு. சி. பா. ஆதித் தனரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந் திருக்க முடியாது. ஏனெனில், அமைச்சர் அவ ருக்கு எந்தவித சாதகமும் செய்யவில்லே. கூட்டுறவு உதவிப் பதிவாளர் பதவியில் அவரை நியமித்தது முறைப்படி நடந்ததாகும். திருநெல் வேலிக்கு மாற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே அவர் திருநெல்வேலிக்கு

மாற்றப்பட்டார். சென்னையிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்வதற்கான பயணப்படியைக் கேட்பதில்லை என்று அவரிடமிருந்து கடிதம் ஒன்று பெறப்பட்டது. அவர், வல்லநாடு வங்கியில் அமர்த்தப்பட்டதாக அலுவலகக் கோப்பில் குறிப்பில்லை. அவர் திருநெல்வேலி வட்டாரத்திற்கு மாற்றப்பட்டார். அவரைத் திருநெல்வேலி வட்டத்தில் எங்கு அமர்த்த வேண்டும் என்பது திருநெல்வேலி பதிவாளரின் முடிவுக்கு விடப்பட்டது. குத்தாலத்தை வல்லநாடு வங்கியில் அமர்த்தும்படி எதிர் மனுதாரரிடமிருந்து உத்தரவு எதுவும் வந்ததாக சுப்பையாவோ வினியோ கூறவில்லை. இவ்வாறு எதிர் தரப்பு வழக்குரைஞர் வாதிடுகிறார்.

வங்கியின் தலைவர் புதியமுத்து தி.மு.க. வில் ஒரு தீவிரவாதி என்றும், ஆவணத்தில் ஒரு மாற்றத்தைச் செய்யவேண்டியிருந்தால் வங்கியின் தலைவரைக் கொண்டே அதனை செய்து முடித்திருக்க முடியும். இதில் குத்தாலத்தை இழுப்பதற்குக் காரணம் இல்லை என்ற வழக்குரைஞரின் வாதம் ஏற்கெனவே கவனிக்கப்பட்டு நிராகரிக்கப் பட்டுவிட்டது.

குத்தாலம் கூறியபடி, ஆவணங்கள், பிசர்வ் வங்கிக்கு அனுப்பிவிருக்கும் திருத்தப் பதிலுக்கு ஆதரவாகக் கோப்பில் வைக்கப்பட்டன. அஞ்சல் இதனைப் பற்றிக் குறிப்பாகக் கேள்வி கேட்டபோது அந்தப் பதிலுக்கு ஆதரவாக இந்த ஆவணங்களில் எந்தப் பகுதியையும் நுணுக்கமாக எடுத்துக் கூற சாட்சிக்கு இயலவில்லை என்று வழக்குரைஞர் மேலும் கூறினர்.

குத்தாலத்துக்கு அமைச்சர் சாதகமாக எதுவும் செய்யவில்லை என்ற வாதம் குறித்து குத்தாலம் தாம் பதவி உயர்வு பெறுவதற்கு முன்னர் சென்னை, கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகத்தில் முதுநிலை ஆய்வாளராகப் பணியாற்றி வந்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். முதுநிலைப் பட்டியல் அடிப்படையிலும், நேர்மையாகவும் நிறமையாகவும் பணியாற்றியதன் காரணமாகவும் அவர் கூட்டுறவு உதவிப் பதிவாளராகப் பதவி உயர்வு பெற்றார். ஆனால், இன்ய சகோதரர் தம்மை நம்பியிருப்பதாகவும், அவரது அத்தையின் (விதவை) குழந்தைகள் அவரோடு சென்னையில் தங்கிப் படித்து வந்ததாலும் சென்னையிலேயே தங்கிவிட்டதாக விரும்பியதாக அவர் கூறியுள்ளார். ஆகவே, சாட்சி, கூட்டுறவுச் சங்கங்கள் கூடுதல் பதிவாளர் (கடன்) திரு. கேசவ் வினியிடம் சென்று தனக்குள்ள கவலைகளை அவரிடம் விளக்கிக் கூறினார். கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள், நியமனங்கள் சம்பந்தப்பட்ட பணிக்காக, கூட்டுறவு உதவிப் பதிவாளர், துணைப் பதிவாளர் பதவிகள் புதிதாக ஏற்படுத்தப்படலாம் என்று கேசவ் வினி அவரிடம் தெரிவித்தார். சிறிது காலத்துக்குப் பின்னர் புதிதாக ஏற்படுத்தப்படும் உதவிப் பதிவாளர் பதவியில் எவரையும் நியமிப்பதற்கு முன்பு அமைச்சரின் ஒப்புதலைப் பெறவேண்டுமென்று கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் தமக்குக் கட்டளையிட்டதாக கேசவ் வினி சாட்சியிடம் கூறினர். அந்தப் பதவியில் அமர்த்தக்கூடிய நபரை அமைச்சர் பார்த்த பின்னரே அதற்கு ஒப்புதல் வழங்கப்படும் என்பது இதன் பொருள். சாட்சிக்குப் பதவி உயர்வு அளித்து புதிய பதவியில் அமர்த்துவதற்காக அவரது பெயரை அமைச்சரிடம் தாம் பரிந்துரைப்பதாகவும் தலைமைச் செயலகத்துக்குச் சென்று அமைச்சரைச் சந்திக்க வேண்டும் என்றும் கேசவ் வினி சாட்சியிடம் கூறினர். அதன்படி சாட்சி அமைச்சரைச் சந்தித்தார். அவரைப் பற்றிய விவரங்கள், அவருடைய சொந்த ஊர், அனுபவம், நியமனம் தொடர்பாக சட்டம், விதிகள் ஆகியவற்றின் விதித்துறைகளை அவர் எந்த அளவுக்குத் தெரிந்துகொண்டிருக்கிறார் என்பதைப் பற்றியும் அமைச்சர் அவரிடம் விசாரித்தார். அமைச்சர் திருப்தி அடையும் வகையில் இந்த விஷயங்களுக்குச் சாட்சி பதில் அளித்தார். பின்னர் அமைச்சர் ''நீங்கள் போகலாம். நான் திரு. கேசவ் வினியிடம் பேசுகிறேன்'' என்று கூறினர். குறுக்கு விசாரணையின்போது கேசவ் வினியின் ஆலோசனையின் பேரில் தான் திருநெல்வேலி வட்டாரத்திற்குச் செல்ல தமது விருப்பத்தைத் தானே எழுதிக் கொடுத்ததாகவும், இதற்கு ரூ. 100 அல்லது ரூ. 150 செலவாகக் கூடும் என்றும் இந்தப் பயணப்படியை விட்டுவிட தாம் முடிவு செய்ததாக இதற்குப் பொருள் என்றும் சாட்சி கூறினர். அவரது சொந்த ஊரில் அவரது தகப்பனார் நோய் வாய்ப்பட்டிருந்ததாக அந்தக் கடிதத்தில் தவருகக் கூறியிருந்ததாகவும் உண்மையில் அவரது தகப்பனார் சென்னையில் சாட்சியுடன் வசித்து வந்தார் என்றும் அவர் விளக்கிக் கூறினர். ஆயினும், அவரது உயர் அதிகாரிகளின் கட்டளைகளின்படி நியமனங்கள் தொடர்பாக அவர் அமைச்சரைச் சந்தித்து அவரிடமிருந்து உத்தரவு கனப் பெற்று குறிப்பிட்ட நிறுவனத்தில் குறிப்பிட்ட நபரை நியமிக்கும்படி அமைச்சர் விரும்பியதாக சம்பந்தப்பட்ட பிற அதிகாரிகளிடம் அவர் தெரிவித்ததாகவும், அவ்வாறே நியமனங்கள் செய்யப்பட்டதாகவும் சாட்சி கூறியுள்ளார். நியமனம் செய்யப்படவேண்டிய நபர்களின் பட்டியல் ஒன்றை அமைச்சர் சாட்சியிடம் கொடுத்தார். அவ்வாறு கொடுக்கையில் நியமனம் செய்வதற்கான நபர்களின் பெயர்களை வேறு யாருக்கும் தெரியப்படுத்தக்கூடாது என்று சாட்சியிடம் கூறினர்.

குத்தாலத்தை திரு. ஜி. ராமசாமி குறுக்கு விசாரணை செய்தபோது, குத்தாலம் தாம் பதவி உயர்வு பெற்று திருநெல்வேலி வட்டாரத்தில்

கூட்டுறவு உதவிப் பதிவாளராக அமர்த்தப் பட்டதாக ஒப்புக் கொண்டார். இந்த திருநெல்வேலி வட்டாரத்தில் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கும். இந்த வட்டாரத்தில் அவரை எங்கு வேண்டுமானாலும் இணைப்பதிவாளர் நியமிக்கலாம். கூடுதல் பதிவாளர் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் (சாட்சி) மாற்றப்பட்டார் என்ற கருத்தை சாட்சி ஒப்புக் கொள்ளவில்லை. கூடுதல் பதிவாளர் திரு. கினி ஆலோசனை கூறியதுபோல், அமைச்சர் கேட்டுக் கொண்டதன் பேரில், தாம் மாற்றப்பட்டதாக அவர் கூறினார். சாட்சி திருநெல்வேலியில் 1972 ஜூன் மாதத்தில் கூட்டுறவு உதவிப் பதிவாளராகப் பொறுப்பேற்றார். 28-7-1972 அன்று அவர் அமைச்சரைச் சந்தித் தார். எதிர் தரப்பு வக்கீல் அவரிடம் சாதுரிய மாகவும் கிண்டிக் கிளறியும் கேள்விக் கணை களைத் தொடுத்த போதிலும், 28-7-1972 அன்று அமைச்சரைச் சந்தித்ததாக சாட்சி கூறியவற்றி லிருந்து அவரை அசைக்க முடியவில்லை.

சாட்சிக்குக் கூட்டுறவுத்துறை உதவிப் பதிவாள ராகப் பதவி உயர்வு அளித்ததில் குறிப்பாக சாதகம் எதுவும் செய்யப்படவில்லை என்று கூறுவது, சாட்சி அப்போதைய அமைச்சர் திரு. கி. பா, ஆதித்தனாரின் நம்பிக்கையைப் பெற்றிருந்தார் என்று எடுத்துக் காட்டியிருப்பதை மறுப்பதாக ஆகாது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியமனம் செய்வது தொடர்பான பணியை ஒப்படைக்க இவரை அமைச்சர் குறிப்பாகத் தேர்ந்தெடுத்தார். அமைச்சர் அவரது ஆட்களையே நியமிக்க விரும்பினர் என்பது வெளிப்படையாகத் தெரி கிறது. இதற்குத் தன் நம்பிக்கைக்குரிய ஒருவர் தேவைப்பட்டார். இவரைத் திருநெல்வேலிக்கு மாற்றியதனால், அவரை நம்பியிருக்கும் அவரது தகப்பனார், சகோதரர்கள், உறவினர்கள் அவ ரோடு இருந்து சென்னையில் படித்துவரும் ஏனைய குடும்பத்தினர்களை விட்டு விலகி வந்ததனால் அவருக்கு ஒரு வகையில் தொல்லை ஏற்பட்டா லும்கூட, இந்த மாற்றம் 3 அல்லது 4 மாதங் களுக்குத்தான் இருக்கும் என்று அவருக்கு உறுதியளிக்கப்பட்டது. அவர் பதவி உயர்வில் சென்றார். திருநெல்வேலி வட்டாரத்திற்கு அவர் மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் பேரிலேயே அவர் மாற்றப்படுவதாகவும், அவரது பயணப்படியை விட்டுவிடுவதாகவும் அவரி டமிருந்து விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டது. ஏதோ ஒரு நோக்கத்துடன் அமைச்சர் தமக்குத் தெரிந்த ஒருவரைத் திருநெல்வேலியில் உதவிப் பதிவாளராக அமர்த்தியிருக்கிறார் என்று குறை கூறுவதற்கு இடம் அளிக்காவண்ணம் இவ்வாறு விண்ணப்பம் ஒன்று அவரிடம் எழுதி வாங்கப் பட்டது. சுமார் 6 மாத காலத்தில் குத்தாலம் சென்னைக்கு மீண்டும் மாற்றப்பட்டார்.

ரிசர்வ் வங்கி எழுப்பியுள்ள மறுப்புரைக்குப் பதில் அனுப்ப ஆதரவாக இந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுப் பதிவேடுகளில் சேர்க்கப்பட் டன என்று கூறப்படும் வாதத்தில் அப்படி ஒன் றும் பொருள் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. கடன் விண்ணப்பங்களில் குறிப்பிடப் பட்ட திட்ட மேம்பாட்டுக்குக் குறிப்பாக உட் பட்டிராத செலவினங்கள் உண்மையாகச் செல விடப்பட்டவைதான் என்று தெரிவிக்க அவர்கள் விரும்பியதாகத் தெரிகிறது.

அமைச்சரின் உத்தரவின்பேரில் இந்த ஆவணங் களைப் பின்னர் கடன் சம்பந்தமான கோப்பு களில் தாம் சேர்த்து வைத்ததாக குத்தாலம் அளித்துள்ள சாட்சியத்தை வலுப்படுத்துகிற சந்தர்ப்பங்களை நான் இப்போது கவனிக்கிறேன். அவையாவன:—

(i) கடன் விண்ணப்பங்கள்; இவற்றில் ஐயத் திற்கிடமாக உள்ள அம்சங்கள்:

3-8-1970 ஆம் நாளிட்ட இந்தக் கடன் விண்ணப்பங்கள் யாவும் 8—2—1971 ஆம் நாளிட்ட, 24—2—1971 ஆம் நாளிட்ட அச் சிடப்பட்ட கடன் விண்ணப்பங்களின் படிவருக்கு நகல்கள் ஆகும். இதில் குறிப்பிடத்தக்க ஒரு வேறு பாடு இருக்கிறது. மேற் தாதன்குளம் இறை வைப் பாசனச் சங்கத்தின் 3-8-1970 ஆம் நாளிட்ட கடன் விண்ணப்பத்தில், உறுதிமொழியின்கீழ், தமிழில் ஒரு வாக்கியம் கைப்பட சேர்த்து எழுதப் பட்டிருந்தது. அது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. அதன் கருத்து பின்வருமாறு:—

"நானும் ஏனைய 28 விண்ணப்பதாரர்களும் கூட்டாகச் சேர்ந்து மேற் தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தை அமைத்துள் ளோம். எனது சார்பாகவும் ஏனையோரின் சார்பாகவும் இந்த விண்ணப்பத்தில் நான் கையொப்பம் இட்டுள்ளேன். 10—11—1970 ஆம் நாளிட்ட 5/1970 ஆம் எண் அவசரச் சட்டத்தின் மூலம் இறைவைப் பாசனச் சங்கங்களை அமைப் பதற்கான நடவடிக்கை தொடங்கப்பட்டது".

3—8—1970-ஆம் நாளிட்ட கடன் விண் ணப்பங்களில் இதே போல் ஒரே கையெழுத்தில் இந்த வாக்கியம் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால், சங்கத்தின் பெயர் மட்டும்தான் வேறுபட்டிருக் கிறது. ஏனைய 3 சங்கங்கள் இதேபோல் செய்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. 10—11—1970 அன்று 5/1970-ஆம் எண் அவசரச் சட்டம் அதிகார முறையில் வெளியிடப்பட்ட பின்னர்தான் இறைவைப் பாசனச் சங்கங்கள் முதல்தடவையாக அமைக்கப்பட்டன. 25—11—1970 ஆம் நாளிட்ட 508 ஆம் எண் அரசாணையின்படி இப்படிப்பட்ட சங்கங்களை அமைக்க, அரசு, தேவையான கட்டளை களைப் பிறப்பித்தது. ஆகவே, 3—8—1970 அன்று இறைவைப் பாசனச் சங்கங்கள் அமைக்கப்பட்டி

ருக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு சங்கத் திடம் இருந்து கடன் கேட்டு விண்ணப்பம் எதுவும் வந்திருக்க முடியாது. இந்த விண்ணப்பங்கள் பின்னர்தான் கொடுக்கப்பட்டன என்று இந்தச் சந்தர்ப்பத்தில் முடிவுக்கு வரவேண்டி யிருக்கிறது.

(ii) திருத்த மதிப்பீடுகளில் ஐயத்திற்கிடமாக உள்ள அம்சங்கள் :

கீழ், மேல தாதன்குளம் சங்கங்களீப் பொறுத்த வரையில், ஆலோசகப் பொறியாளர் தயாரித்த 5—2—1971 ஆம் நாளிட்ட மூல மதிப்பீடு, 'A' வகைக் கிணறு ஒவ்வொன்றுக்கும் ரூ.18,500 என்றும், 'B' வகைக்கிணறு ஒவ்வொன்றுக்கும் ரூ. 13,000 என்றும் நிலத்தைப் பண்படுத்த ஏக்கருக்கு ரூ. 1,000 என்றும் வகை செய்யப் பட்டிருப்பதை நினைவு கூரலாம். திருத்த மதிப் பீட்டில் கிணறுகளின் எண்ணிக்கை குறைக்கப் பட்டிருந்தது. ஆனால் கான்கிரீட் போடுதல், கால்வாய் வெட்டுதல், நீர் வழங்கும் முறை, எல்லை யோரத்தில் கான்கிரீட் தூண்களை வைத்து முள் வேலி போடுதல் ஆகியவற்றிற்கான செலவு உட்பட ஒரு கிணற்றுக்காகும் செலவு 33,769 ரூபாயாக உயர்த்தப்பட்டிருந்தது. நிலத்தைப் பண்படுத்துவதற்கான செலவும் ஏக்கருக்கு 1,125 ரூபாயாக உயர்த்தப்பட்டிருந்தது.

இந்தத் திருத்த மதிப்பீட்டில் விநோதமான அம் சம் என்னவெனில், மூல மதிப்பீட்டுடன் முகப்புக் கடிதம் எதுவும் இல்லாதிருக்கும் போது, கையொ ளாருக்காக என்று எழுதி அதில் உத்தரபாண் டியனுல் கையொப்பமிடப்பட்ட 6—2—1971 ஆம் நாளிட்ட கடிதம் ஒன்று திருத்த மதிப்பீட் டுடன் அனுப்பப்பட்டிருந்தது என்பதாகும்.

மூல மதிப்பீட்டில் திரு. கேசவன் ''5—2—1971'' என்று தேதி குறிப்பிட்டுள்ளார். அவரது கையொப்பத்திற்குக் கீழே இடப்பட்டுள்ள முத் திரையில் அவரது முகவரி ''4-B, சிந்து பூந்துறை சாலை, திருநெல்வேலி ஜங்ஷன்'' என்று குறிப் பிடப்பட்டிருக்கிறது ஆனுல், திருத்த மதிப் பீட்டில் அவர் தேதி எதுவும் குறிப்பிடவில்லே. அவரது கையொப்பத்திற்குக் கீழே இடப்பட்டுள்ள முத்திரையிலும் அவரது முகவரி ''65-A, நெடுஞ் சாலே, திருநெல்வேலி-1'' எனக் குறிப்பிடப்பட் டிருந்தது.

திருத்த மதிப்பீட்டுடன் அனுப்பியிருந்த முகப் புக் கடிதத்தில், தோண்டப்படும் கிணறுகளுக்கு குறைத்தபட்ச இடைவெளி விடுவது குறித்து அரசு நிலத்தடி நீர் பொறியியல் குழு வெளி யிட்டுள்ள வழிமுறைக் கோட்பாடுகளின்படி இத்தத் திருத்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருப்ப தாகக் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழிமுறைக் கோட்பாடுகளே நிலத்தடி நீர் பொறி யியல் குழு 29— 11— 1971 அன்று தான் வெளி யிட்டது. ஆகவே, திருத்த மதிப்பீடுகள் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிற 5— 2— 1971 அன்று இந்த வழிமுறைக் கோட் பாடுகள் கிடைத்திருக்க முடியாது.

சேரகுளம், கீழப் பெருமானேரி சங்கங் களீப் பொறுத்த வரையில் மூல மதிப்பீடு ''24— 2— 1971'' எனத் தேதி குறிப்பிடப்பட் டிருக்கிறது. திருத்த மதிப்பீடு ''25— 2— 1971'' எனத் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது உண்மையாயின், ஏனைய இரு சங்கங்கள் குறித்து திருத்த மதிப்பீடுகள் நிலத்தடி நீர் பொறியியல் குழு வெளியிட்ட வழி முறைக் கோட்பாடுகளின் படித் தயாரிக்க வேண்டி இருந்தது என்பது உண் மையாயின், இந்தச் சங்கங்களுக்கான மூல மதிப் பீடுகள் 24—2—1971 அன்று தயாரிக்கப்பட்ட போது இந்த வழிமுறைக் கோட்பாடுகள் எவை யேனும் வெளியிடப்பட்டிருப்பின் அல்லது கொடுக் கப்பட்டிருப்பின் அவற்றை ஏன் கருத்தில் கொள்ள வில்லே என்பதற்குக் காரணமே இல்லே. திரு. கேசவன் 5—2—1971 அன்று தவறு செய்திருப்ப தாக அவர் அறிந்திருந்ததால், 24— 2—1971 அன்று அதே தவறை மீண்டும் செய்வார் என்று எதிர்பார்த்திருக்க முடியாது. மீண்டும் மூல மதிப்பீட்டிலும் திருத்த மதிப்பீட்டிலும் திரு. கேசவனின் கையொப்பங்களுக்குக் கீழே இடப் பட்டுள்ள முத்திரையில் முகவரிகள் வேறுபடு கின்றன. திரு. கேசவன் (AW. 31) அவ ரது உறுதி மொழிப் பத்திரத்தில் கூறியுள்ள தாவது :—

''இந்தத் திருத்த மதிப்பீடுகளில் எனது கையொப்பங்களுக்குக் கீழே தேதி குறிப்பிட வில்லே, எந்தத் தேதியன்று இவற்றில் நான் கையெழுத்திட்டேன் என்பது எனக்கு நினவில்லே''

இது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். 5—2—1971 அன்றும், 24—2—1971 அன்றும் திருத்த மதிப் பீடுகளில் தாம் கையொப்பம் இட்டதாக அவர் ஒப்புக் கொள்ளவில்லே. இதிலிருந்து, இந்த மதிப்பீடுகள் பின்னர் அவரிடம் கொண்டு செல்லப் பட்டு அவற்றில் கையொப்பம் இடும்படி அவரிடம் கேட்கப்பட்டதாகச் சந்தேகம் கொள்ள ஏதுவாகிறது. அவற்றில் முந்தைய ஒரு தேதியைக் குறிப்பிட அவர் விரும் பவில்லே போலும் ; அத னுல் தான் அவர் அவற்றில் கையொப்பம்மட்டும் இட்டு தேதி குறிப்பிடவில்லே. 5-A பிரிவின் மேற் பலனுய்வு அதிகாரியிடம் திரு. கேசவன் வாக்கு மூலத்தில், திருத்த மதிப்பீடுகள் பின்னர் தன் னிடம் கொடுக்கப்பட்டதாகக் கூறியுள் ளார். கிருஷ்ணகாந்தன் இவற்றைத் தட்டச்சு செய்து பெற்றார். அவற்றில் அவர் கையொப்பம் மட்டும் இட்டார். திருத்த மதிப்பீடுகள் எந்த

நோக்கத்திற்காக அவரிடமிருந்து பெறப்பட்டன என்பதும் அவருக்குத் தெரியாது.

சந்தர்ப்பம் (i).—இந்த ஆவணங்கள் பின்னர் சேர்க்கப்பட்டன என்ற முடிவுக்கு வர இடமளிக்கின்ற மூன்றாவது சந்தர்ப்பம் என்னவெனில், கிழ, மேல தாதனருகும் சங்கங்களைப் பொறுத்தவரையில், மூல மதிப்பீட்டின் பேரில் தான் கடனுக்கு அனுமதி வழங்கப்பட்டதே தவிர, திருத்த மதிப்பீட்டின் அடிப்படையில் அல்ல.

சந்தர்ப்பம் (iv).—அதே முடிவிற்கு வர இடம் அளிக்கின்ற மற்றொரு சந்தர்ப்பம் பற்றி ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. கருங்குளம் நிலவள வங்கியின் தலைவர் புதியமுத்து, சேரகுளம் இறைவைப் பாசன சங்கம் குறித்த திருத்த மதிப்பீட்டுடன் உத்தரபான்டியன் கையொப்பமிட்டு அனுப்பிய கடிதத்தில் இட்டுள்ள மேலொப்பத்தில் தெரிய வருகிறது. அந்த மேலொப்பத்தின்கீழ் புதியமுத்து முதற்கண் ''22—5—1972'' என தேதி குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், அந்த முகப்புக் கடிதத்தில் அவர் ''22—5—1971'' என தேதி குறிப்பிட்டிருக்கிறார். அவர் 1972 ஆம் ஆண்டில் கையொப்பம் இட்டிருப்பதால், அவர் 1971 ஆம் ஆண்டில் கையொப்பம் இட்டுள்ளதாகச் சொல்லப்பட்ட போதிலும் புத்திசாலித்தனம் இன்றி 1972 எனச் குறிப்பிட்டிருக்கிறார் என வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த ஆவணங்களில் 1972-ல் அவர் கையொப்பம் இட்டார் என்ற கூற்று, மகாதேவனின் 29—11—1969 ஆம் நாளிட்ட கடிதத்தில் அவர் மேலொப்பம் இடுகையில் மீண்டும் புத்திசாலித்தனம் இன்றி ''30—11—1972'' எனத் தேதி குறிப்பிட்டிருப்பதால் மேலும் வலுப் பெறுகிறது. இதனைக் குத்தாலம் சுட்டிக் காட்டியதன் பேரில், முதற்கண் ''2'' என்று இருப்பதன் மீது அதன் மேலேயே ''1'' ஆகத் திருத்தினார். ''2'', என்பதை ''1'' ஆகத் திருத்தியிருப்பது ஆவணத்தின் முகப்பிலேயே தெரிகிறது. 2 தனுல் புதியமுத்து 1972 ஆம் ஆண்டிலன்று இதில் கையொப்பம் இட்டிருக்கிறார். 1971 ஆம் ஆண்டில் அல்ல என்ற முடிவிற்கு வர முடிகிறது.

சந்தர்ப்பம் (v) :—

மகாதேவனின் 29—11—1971 ஆம் நாளிட்ட பயன் பாட்டுச் சான்றிதழ் பற்றி.

இந்த 4 கடன் சம்பந்தமான கோப்புகளில் பயன்பாட்டுச் சான்றிதழ்கள் ஒரே மாதிரியாக இருக்கின்றன. சங்கத்தின் பெயர் மட்டும்தான் வேறுபடுகிறது. இந்தச் சான்றிதழ்களில் பொறியியல் மேற்பார்வையாளர் ஆர். மகாதேவனின் கையொப்பம் இருக்கிறது. இந்தச் சான்றிதழின்படி, கேசவனின் திருத்த மதிப்பீட்டை ஒட்டி 29—11—1971க்குள் எல்லாப் பணிகளும் முடிவடைந்து விட்டன; தெளிப்புச் சாதனம் நிறுவும் பணியும் முடிவடைந்து விட்டது. பணத முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1971 டிசம்பர் மாதத்தில் இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகள் இச் சங்கங்களைப் பார்வையிட்டபோது, நிலம் பண்படுத்தும் பணி அப்போதுதான் தொடங்கப்பட்டிருப்பதைக் கண்டனர். கே. நடராஜன் 1971 நவம்பர்-டிசம்பர் மாதங்களில் சங்கத்தைப் பார்வையிட்டபோது பணிகள் நடந்தேறி வருவதைக் கண்டார். 1972 ஏப்ரல் கடையில் கூட செய்து முடித்த பணியின் மதிப்பு 7.75 இலட்சம் ரூபாய்தான் என அவர் மதிப்பிட்டார். இவ்விரு அறிக்கைகளையும் பார்க்கும் போது, மகாதேவன் 29—11—1971 அன்று கொடுத்த பயன்பாட்டுச் சான்றிதழ்கள் தவருனவை எனத் தெரியவருகிறது. அவற்றை 29-11-1971 அன்று கொடுத்து இருக்க முடியாது. அந்த நாளுக்குப் பின்னர்தான் கொடுத்து இருக்க முடியும். இந்தப் பயன்பாட்டுச் சான்றிதழ்களைத் துறையின் பொறியாளரிடமிருந்து பெறுவதற்குப் பதிலாக, தனிப்பட்ட பொறியியல் மேற்பார்வையாளர் ஒருவரிடமிருந்து பெற்றதற்கான காரணம் என்ன எனறு கேட்டதற்கு விளக்கம் அளிக்கப்படவில்லை.

சந்தர்ப்பம் (vi).—இது போலவே, சேரகுளம் இறைவைப் பாசனச் சங்கம் தொடர்பாக ஆர். மகாதேவனின் 29—11—1971 ஆம் நாளிட்ட கடிதத்தில் புதியமுத்து முதற்கண் தனது சுருக்கொப்பத்திற்குக் கீழே 13—11—1972 எனத் தேதி குறிப்பிட்டிருந்தார். ஆனல் இதனைக் குத்தாலம் சுட்டிக் காட்டியதன் பேரில் அவர் அதனை 13—11—1971 என மாற்றினர் போலும்.

சந்தர்ப்பம் (v).—மேலும் ஓர் ஆவணத்திலும் புதியமுத்து 1972-ல் தேதி குறிப்பிட்டிருந்ததால் 25—2—1972 எனத் தேதி குறிப்பிட்டிருந்தார். இந்த ஆவணம் ஒரு முகப்புக் கடிதமாகும். குத்தாலம் இதனை மாற்ற வேண்டுமென்று சுட்டிக் காட்டாததால் அவர் இதனைத் திருத்தவில்லை. ஆகவே, இந்த ஆவணம் 1972-ல் தயாரிக்கப்பட்டது. புதியமுத்து இயல்பாக அவ்ரது சுருக்கொப்பத்தின்கீழ் அதே ஆண்டைக் குறிப்பிட்டிருக்கிறார்.

சந்தர்ப்பம் (vii).— இந்த 4 சங்கங்களுக்கு கொடுத்த கடன்களில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் கடன் தொகையை உடனடியாகத் திருப்பிக் கேட்க நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தி இந்திய ரிசர்வ் வங்கி தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் தலைவருக்கு 6—4—1972 அன்று கடிதம் எழுதியது. இந்தக் கடிதத்திற்கு மாநில நிலவள வங்கித் தலைவர் எளிதாக இடைக்காலப் பதில் ஒன்றை அனுப்பினர். பணிக்குப் பொறுப்பு வகிக்கும் பொறியாளர்கள் கொடுத்த சான்றிதழ்களின்படி இந்த இறைவைப் பாசனச் சங்கங்களுக்குக் கொடுத்த

கடன்தொகை முழுவதையும் இந்தச் சங்கங்கள் பயன்படுத்தியுள்ளதாக அந்தப் பதிலில் அவர் குறிப்பிட்டிருந்தார். மாநில நிலவள வங்கியின் பொறியாளர்கள் இதனைச் சரிபார்த்தபின்னர் பயன்பாட்டுச் சான்றிதழ்களை அனுப்பி வைப்பதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் கடிதம் பதிவேட்டில் வைக்கப்பட்டு Ex. CW. 36/3 ஆகக் குறியிடப்பட்டுள்ளது. அப்போதைய கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் எம். சுப்பையா (கமிஷன் சாட்சி 36) அளித்துள்ள சாட்சியத்தின்படி இந்தக் கடிதம் திரு. சி. பா. ஆதித்தனாரால் அவரது சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் இந்திய ரிசர்வ் வங்கிக்கு இந்தப் பதில் எழுதப்பட்டது என்பது குறித்து எம். சுப்பையாவின் வாக்கு மூலத்தைக் கேள்வி பதில் முறையில் சுருக்கமாக இங்கே கொடுப்பது சாலப் பொருத்தமாகும்.

''கேள்வி : இங்கே பாருங்கள், சென்னை ரிசர்வ் வங்கி தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கியின் தலைவருக்கு எழுதப்பட்ட 24 ஆம் எண் கோப்பில் 1 ஆம் பக்கத்தில் உள்ள 6-4-1972ஆம் நாளிட்ட கடிதம் இதுதானே ?

பதில் : ஆம். கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரிடமிருந்து நான் பெற்றுக் கொண்ட கடிதம் இதுதான் (Ex. CW. 36/2).

கே. : ரிசர்வ் வங்கியின் கடிதத்தில் இப் பகுதி குறித்து மாண்புமிகு அமைச்சருடன் நீங்கள் பேசினீர்களா ? ஆம் எனில், இப்படிப்பட்ட குறிப்புகள் எப்படிக் கவனிக்கப்பட வேண்டும் என்பது குறித்து எப்போதேனும் அவர் உங்களிடத்தில் வழிமுறை ஏதேனும் சொன்னாரா ?

ப. : சாதாரணமாக, வட்டாரத்தில் உள்ள சங்கங்கள் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களும் குறிப்பாக சங்கத்தைக் கலைத்தல், இழப்புத் தொகை வசூல் நடவடிக்கை போன்ற முக்கியமான விஷயங்கள் மாண்புமிகு அமைச்சருடன் கலந்தாலோசித்துக் கவனிக்கப்படும். ஆகவே, இது தொடர்பாகக் கடிதத்துக்குப் பதில் அனுப்பும் முன்பு நாங்கள் அவருடன் கலந்து அவரிடமிருந்து ஆலோசனை பெறுவது வழக்கம். பார்வையில் உள்ள இந்தக் கடிதம் குறித்து நானும் 22-4-1972 அன்று பதிவாளருக்குப் பதில் ஒன்றை அனுப்பினேன்.

கே. : ஆக, 1 ஆம் பக்கத்தில் 6-4-1972 ஆம் நாளிட்ட இந்திய ரிசர்வ் வங்கியின் கடிதத்தில் அந்த வங்கி தெரிவித்துள்ள மறுப்புரைகளுக்கு விளக்கம் கொடுத்து இந்தக் கோப்பில் 19 ஆம் பக்கத்தில் உள்ள 15-5-1972 ஆம் நாளிட்ட கடிதத்தை (Ex.CW. 36/1) நீங்கள் பதிவாளருக்குக் கொடுத்தீர்கள், இல்லையா ?

ப. : ஆம்.

கே. : நீங்கள் அனுப்பிய இந்தப் பதிலில் உள்ளவை உங்களது சொந்தக் கருத்துக்களா ? அல்லது வேறு யாரேனும் இவற்றை உங்களுக்குச் சொன்னார்களா ?

ப. : அவை அமைச்சரால் கூறப்பட்ட கருத்துகளாகும்.

கே. : இதனை வேறுவகையில் சொல்லப் போனால், அனுப்பியிருந்த பதில் என்னவாக இருந்தாலும், அதனை இப்பொழுது மன்றத்தில் இருக்கும் மாண்புமிகு அமைச்சர் உங்களிடத்தில் கூறியதுதான். அவருடைய விருப்பத்தின்படியே இந்த பதிலை நீங்கள் அனுப்பினீர்கள் இல்லையா ?

ப. : ஆம். 24 ஆம் எண். கோப்பில் 7-8 ஆம் பக்கங்களில் உள்ள (Ex. CW. 36/3 வரைவுக் கடிதமும் சுப்பையாவிடம் காட்டப்பட்டது. இந்த வரைவுக் கடிதத்தை அமைச்சர் அவரது முன்னிலையில் தன்னிடம் கொடுக்கவில்லை என்று அவர் கூறியிருந்தாலும் இந்தக் கடிதம் அப்போதைய அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனரின் கையெழுத்தில் இருப்பதை சுப்பையா அடையாளம் கர்ட்டினார். திரு. சி. பா. ஆதித்தனர் அவரது எதிர் உறுதிமொழிப் பத்திரங்கள் எவற்றிலும் இந்தக் கடிதம் (Ex. CW. 36/3) அவரது கையால் எழுதப்பட்டது என்ற தகவலை மறுக்கவில்லை. ஆனால், திரு. ஜி. ராமசுவாமி இந்த கருத்து குறித்து சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார். சாட்சியிடம் கேட்ட கேள்விகளும், அவற்றிற்குச் சாட்சி அளித்த பதில்களும் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

''கே. : அன்றைக்கு கமிஷன் வழக்குரைஞர் உங்களிடம் காட்டிய இந்த 24-ஆம் எண் கோப்பு உங்கள் அலுவலகத்தில் உள்ள எந்த கோப்பிற்கும் சம்பந்தப்படவில்லை, மாநில நிலவள வங்கிக்கு இது சம்பந்தப்பட்டது, இல்லையா ?

ப. : ஆம். இந்தக் கோப்பு எனது அலுவலகத்துக்குச் சம்பந்தப்பட்டது அல்ல. சென்னையில் உள்ள மாநில நிலவள வங்கிக்குச் சம்பந்தப்பட்டதாகும்.

கே : அந்தக் கடிதம் (Ex. CW. 36/3) 7 ஆம் பக்கத்தில் இருக்கிறது. இந்த வரைவுக் கடிதத்தின்படி அனுப்பப்பட்டுள்ள உண்மையான கடிதம் 9 ஆம் பக்கத்தில் இருக்கிறது, இல்லையா ?

ப. : ஆம். அது 9 ஆம் பக்கத்தில் இருக்கிறது.

கே. : அந்தக் கடிதம் மாநில நிலவள வங்கித் தலைவர் இந்திய ரிசர்வ் வங்கிக்கு எழுதிய கடிதம், இல்லையா ?

ப. : இந்தக் கடிதம் சென்னை மாநில நிலவள வங்கித் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அது இணைத் தலைமை அதிகாரி, இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை என்று விளாசம் இடப்பட்டிருக்கிறது.

கே. : திரு. சுப்பையா! திரு. எம். சண்முகம் அந்த வங்கியின் அலுவல் சார்பற்ற தலைவராக இருந்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா ?

ப. : அவர் அலுவல் சார்பற்ற வங்கித் தலைவர் என்று எனக்குத் தெரியும்.

கே. : சட்டமன்றத்தில் அவர் தி.மு.க. உறுப்பினராக இருந்தார்; இல்லையா ?

ப. : ஆம். அவர் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தார்.

கே. : சுப்பையா! அந்தக் கடிதம் எழுதப்பட்ட போது நீங்கள் அங்கிருக்கவில்லையா ?

ப. : ஆம். நான் அங்கு இருக்கவில்லை.

கேள்வி : நீங்கள் கையெழுத்து வல்லுநர் அல்ல, இல்லையா ?

பதில் : இல்லை.

கே. அந்தக் கடிதத்தைப் பார்த்தவுடனேயே அமைச்சரால் எழுதப்பட்டது என எப்படிக் கூறுகிறீர்கள் ?

ப : நான் மாண்புமிகு அமைச்சர் எழுதும் கடிதங்களைப் பார்த்திருக்கிறேன். அந்த அனுபவத்திலிருந்து அவரது கையெழுத்தை நான் அடையாளம் காட்டமுடியும்.''

சுப்பையா, அப்போதைய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.சி.பா.ஆதித்தனாரின் கையெழுத்தை நன்கு அறிந்தவராதலால், இந்த வரைவுக் கடிதம் (Ex. C. W. 36/3) எதிர் மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனாரின் கையெழுத்தில் இருப்பதாக மெய்ப்பிக்கிறார். இது மிகவும் சரி. எனெனில், திரு. ஆதித்தனார் அவரது உறுதிமொழிப் பத்திரங்கள் எதிலும் இதனைத் திட்ட வட்டமாக மறுக்கவில்லை.

வரைவுக் கடிதத்தில் உள்ள (Ex.C.W. 36/3) கையெழுத்து எதிர்மனுதாரர் திரு. ஆதித்தனருடையதுதான் என்று தனிப்பட்ட வல்லுநரின் கருத்துப்படியும் (ஆவணம் எண். 67) மெய்ப்பிக்கப் பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பார்க்கும்போது இந்திய ரிசர்வ் வங்கிக்கு, தனக்கு உகந்த பதில் ஒன்றை மாநில நிலவள வங்கியின் தலைவர் மூலமாக அனுப்புவதில் திரு. ஆதித்தனார் தனிப்பட்ட முறையில் மிகுந்த அக்கறை காட்டினார் என்பது தெளிவாகிறது.

சந்தர்ப்பம் (ix) : எதிர்மனுதாரர் இந்த விஷயத்தில் தலையீட்டிருப்பதைக் குறிப்பிடும் அடுத்த சந்தர்ப்பம் யாதெனில், மாநில நிலவள வங்கித் தலைவர் இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பிய 3—6—1972 ஆம் நாளிட்ட இரகசியக் கடிதத்தில் அவர் (திரு. ஆதித்தனார்) கையப்பட செய்த '' திருத்தங்கள் '' இருந்தன. (Ex. CW. 44/15ஐக் காண்க).

மாநில நிலவள வங்கித் தலைவர் இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பிய 3—6—1972 ஆம் நாளிட்ட இரகசியக் கடிதத்தைத் திரு. சி. பா. ஆதித்தனார் திருத்தியுள்ளார் என்பதற்குச் சாட்சியம் இருக்கிறது. அவர் செய்த இந்தத் ''திருத்தம்'' முக்கியமானது. மூலக் கடிதத்தில் கடன் தொகை பயன்படுத்தப்பட்டிருப்பது குறித்து ''சரிபார்க்கப்பட்டு வருவதாகக்'' குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. ஆதித்தனார் இதனை '' சரிபார்க்கப்பட்டுள்ளதாக'' மாற்றியுள்ளார் எனத் தெரிகிறது. ''மாநில நிலவள வங்கியின் வேளாண்மைப் பொறியாளர்'' என்ற சொற்களை அவர் அடித்துவிட்டு '' மாநில அரசைச் சேர்ந்த அதிகாரிகள் '' என்ற சொற்களை மட்டும் வீட்டுவிட்டிருக்கிறார் எனத் தெரிகிறது. ''மாநில நிலவள வங்கியின் உதவிப் பொறியாளரும் அந்தப் பகுதிகளை அவ்வப்போது ஆய்வு செய்துள்ளார் '' என்ற சொற்களையும் அவர் சேர்த்துள்ளார்.

இந்த வரைவுக் கடிதம் அதில் குறிப்பிட்டுள்ள தகவல்களைச் சரிபார்த்துக் கொள்வதற்காக மாநில நிலவள வங்கித் தலைவருக்குக் கொடுக்கப்பட்டதாக அந்த வங்கியில் அப்போதிருந்த வேளாண்மைப் பொறியாளர் நடராஜன் மேலும் சாட்சியம் அளித்துள்ளார். இந்த வரைவுக் கடிதத்தைப் பார்த்ததில், இறைவைப் பாசனச் சங்கங்கள் நிதிகளை முழுவதுமாகப் பயன்படுத்தியிருப்பது பற்றி இந்தப் பாராவில் கூறப்பட்டுள்ளவை சாட்சிக்குத் திருப்திகரமாக இல்லை. தனது நிலையைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு சாட்சி இரண்டாவது பாராவில் பின்வருமாறு திருத்தங்களைச் செய்தார்:—

''நிதிகள் பயன்படுத்தப்பட்டிருப்பது பற்றி மாநில நிலவள வங்கியின் வேளாண்மைப் பொறியாளரும் மாநில அரசின் அதிகாரிகளும் அப்போதைக்கு அப்போதே ஆய்வு செய்து வருவதாகவும் அறியப்படுகிறது.''

நடராஜன் தெரிவித்தபடி இந்த வரைவுக் கடிதம் தட்டச்சு செய்யப்பட்டு வங்கியின் தலைவர் அதில் கையொப்பம் இட்டார். ஆனால், திரு. சி. பா. ஆதித்தனார் இந்தக் கடிதத்தை இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்ப அனுமதிக்கவில்லை. ஏனெனில், இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பும் அறிக்கையில், சங்கங்கள் கடன் தொகை முழுவதையும் பயன்படுத்தியுள்ளதாகக் கூறப்பட்டிருந்தது. இதில் திரு. ஆதித்தனார் மிக ஆர்வம் கொண்டிருந்தார். திரு. சி. பா. ஆதித்தனார் மூல வரைவுக் கடிதத்தைப் பார்த்தபோது, தான் அங்கு இல்லையென்றும், அந்தக் கடிதத்தில் அவரே கைப்பட '' திருத்தங்கள்'' செய்தார்

என்றும் நடராஜன் விளக்கிக் கூறியுள்ளார். நிதி கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை பற்றி மாநில அரசின் அதிகாரிகள் சரி பார்த்துள்ளார் என்றும் வேளாண்மைப் பொறியாளர் அப்போதைக்குப் போது அந்தப் பகுதிகளை மட்டுமே ஆய்வு செய் தார் என்றும், அந்தக் கடிதத்தில் சேர்த்து அவர் திருத்தியுள்ளார்.

3—6—1972 ஆம் நாளிட்ட இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பயன்பாட்டுச் சான்றிதழ் திரு. எம். சுப்பையாவின் 15—5—1972 ஆம் நாளிட்ட தாகும்.

15—5—1972 ஆம் நாளிட்ட இந்தக் கடி தத்தை (Ex. C. W. 36/1) திரு. சி. பா. ஆதித்த னார் சொல்ல எழுதப்பட்டுள்ளதாகும் என்று திரு. எம். சுப்பையா சாட்சியம் அளித்துள்ளார். கமிஷனின் வழக்குரைஞர் கேட்ட கேள்விக்கு சுப் பையா பதில் அளிக்கையில், அமைச்சர் எல்லா வற்றையும் தெரிந்தவரா தலால், அவர் சொல்லிய எல்லா விஷயங்களும் உண்மையென்று சாட்சி எடுத்துக் கொண்டதாகச் சுப்பையா கூறினார். சாட்சி முன்னர் கொடுத்த உறுதிமொழிப் பத்தி ரத்திலும் வாக்குமூலத்திலும், சம்பந்தப்பட்ட பகுதி குறித்து சர்ச்சையைக் கிளப்பியுள்ளார். அதில், சங்கங்கள் 4 இலட்சத்து ரூபாய் மதிப்புள்ள புளிச்சை நாரை சன் பேப்பர் மில்லுக்கு வழங்கக் கருதியிருப்பதாகக் கூறுவது சரியில்லை என்றாலும், அவ்வாறு வழங்கக் கருதியிருப்பதாக எழுதும்படித் தம்மை வற்புறுத்தியதாக அவர் கூறினார். மேலும் கேட்ட கேள்விக்குச் சாட்சி பதில் அளிக்கையில், "புலனுய்வு அதிகாரி" லெ விஷயங்களைப் பெரிது படுத்தியுள்ளார் என்றும், உண்மையில் அவை சரி யானவைதான் என்று அறிந்துகொள்ள அதிகாரிக்கு வாய்ப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் கமிஷனின் முன்பு நான் ஒப்புக்கொள்ள விழைகிறேன்." அப்படியே இல்லாவிட்டாலும்கூட, எல்லா விஷ யங்களையும் அவர் அறிந்திருக்கவில்லை. ஆனால், இந்த இரு கூறுகளையும் அவர் வலியுறுத்தியிருக்க லாம். இதனுல் ஏனையவை அவரால் சொல்லச் சொல்ல எழுதப்படவில்லை என்று பொருள் அல்ல. எனது வாக்குமூலத்தில் 'புளிச்சை நார் வழங்குவது தொடர்பான தகவல்களை நான் வலியுறுத்திக் கூறி னேன்'. இதனுல், 15—5—1972 ஆம் நாளிட்ட கடிதத்தில் உள்ள பிற தகவல்கள் சரியானவையே என்றும் எனது சொந்தக் கருத்துகளாகும் என் றும் பொருள் அல்ல. இதனை விளக்கிக் கூற வேண்டுமானுல், ஒரு பாணை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் இது இருக்கிறது என நான் கூறுவேன்".

இந்தக் கருத்து பற்றி நீண்ட நேரம் குறுக்கு விசாரணை செய்திருந்தாலும், விசாரணையில் அப் போதைய அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனுர் சொல்லச் சொல்ல இந்தக் கடிதத்தைத் தாம் எழுதி யதாகச் சுப்பையா கூறிய கூற்றிலிருந்தும் அவரை அசைக்க முடியவில்லை. அவரது கூற்றை நம்பாமல் இருக்கக் காரணம் ஏதும் இல்லை என்று நான் வெளிப்படையாகவே அறிகிறேன். ஆகவே, திரு. சி. பா. ஆதித்தனுர் 3—6—1972 ஆம் நாளிட்ட கடிதத்தில் செய்த "திருத்தங்களை" உறுதிப்படுத் தவும் கடன் தொகையைச் சங்கங்கள் முழுவதும் பயன்படுத்திக்கொண்டதாகத் தோன்றச் செய்வதும் வேண்டுமென்ற நோக்கத்துடன் 15—5—1972 ஆம் நாளிட்ட இந்தக் கடிதத்தை சுப்பையாவிடமிருந்து பெற்றார் என்பது தெளிவா கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைக் கருதிப் பார்க்கும் போது இந்த விவகாரத்தில் திரு. ஆதித்தனுர் தவிர்ப்பட்ட முறையில் ஆழ்ந்த அக்கறை எடுத்துக் கொண்டார் என்ற முடிவு மேலும் வலுப்பெறு கிறது.

"நவசக்தி" தமிழ் நாளிதழில் வெளியிடப் பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து அனுப்பப்பட்ட 7—11—1972 ஆம் நாளிட்ட அறிக்கை ஒன்றில், "எனவே, எங்க உறப்பினர்கள் கூடுதலாக முதலீடு செய்து காடாக இருந்த நிலத்தை வளமான நஞ்சை நிலமாக மாற்றியிருப்பது உண்மை" என்று சுப்பையா கூறியிருந்ததை ஈண்டுக் குறிப்பிட லாம். திரு. சி. பா. ஆதித்தனுரின் 23—7—76 ஆம் நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்தின் இணைப்பு களாக இருக்கின்ற ஒரே மாதிரியான 4 பயன் பாட்டுச் சான்றிதழ்களில் திரு. நடராஜன் என்ன கூறியுள்ளாரோ அதையே தற்செயலாக இந்த அறிக் கையில் திருப்பிக் கூறப்பட்டிருக்கின்றன. 5-A பிரிவின்கீழ் சுப்பையா வாக்குமூலம் அளிக்கையில் (புலனுய்வு அறிக்கையில் 427 ஆம் பக்கம்) இந்த சொற்கள் அமைச்சர் (திரு. ஆதித்தனுர்) கூறிய படி தான் எழுதியதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

(A) இந்தச் சங்கங்களின் விவகாரங்கள், குறிப்பாக விசாரணைக்குரிய கடன் விஷயத்தில் எதிர்மனுதாரரின் நலனுக்கு உறுதிப்படுத்து கின்ற கூடுதல் சந்தர்ப்பம் யாதெனில், இப் பிரச் சினை குறித்து சாட்சியம் அளிக்கக்கூடியவர்களாக இருந்த முக்கியமான சாட்சிகள் கூறுவதைத் திரித்துக் கூற அல்லது கைக்கூலி கொடுத்து வசப் படுத்த படிப்படியாக முயற்சிகள் எடுக்கப்பட்டு டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பம் பற்றி தனிப்பட்ட ஒரு தலைப்பின் கீழ் மேலும் விரிவாகப் பரிசிலிக்கப் படும்.

திருஞானகாந்தன் விவகாரம்.

திருஞானகாந்தன் 20-5-1976, 21-1-1977, 15-2-1977 ஆம் நாள்களிட்ட அவரது உறுதி மொழிப்பத்திரங்களில் கூறிய விவரத்தை நான் இப்போது எடுத்துக்கொள்கிறேன்.

5-A பிரிவின்கீழ் நியமனம் செய்யப்பட்ட புலனுய்வு அதிகாரிகள் திருஞானகாந்தனுக்குஅழைப் பாணை விடுத்து அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்ய முயன்றதாகக் கூறலாம். அவர் அவ்வாறு வாக்குமூலம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார்;

இதற்குப் பதிலாக அவர் அவரது வழக்குரைஞர் திரு. பத்தரேயுடன் 27-1-1977 அன்று கமிஷன் முன் வந்து தமது சார்பில் வழக்குரைஞர் ஒருவர் வாதாடவும், தமக்கு எதிரான சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும் அனுமதி கேட்டு மனு ஒன்றைக் கொடுத்தார். 8-B பிரிவின் பொருள் விளக்கத்திற்குள் அவர் விசாரணையிலுள் பாதிக்கக்கூடிய ஒரு நபராக இருந்ததால் மனுதாரருக்கு அனுமதி வழங்கப்பட்டது. திருஷ்ணகாந்தன் 20-5-1976 அன்று உறுதிமொழிப் பத்திரத்துடன் மனு ஒன்றையும் தாக்கல் செய்தார். அவர்மீதான குற்றச்சாட்டுகள் கமிஷன் நியமித்த ஓர் அதிகாரியால்தான் புலனுய்வு செய்யப்பட வேண்டும் என்றும், அவர்மீதான அதே குற்றச்சாட்டை காவல்துறை டெபுடி சூப்பிரண்டு திரு. முத்தையா அல்லது வேறெருரு அரசு அதிகாரி புலனுய்வு செய்வதற்குத் தடைவிதித்துக் கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் அந்த மனுவில் கேட்டிருந்தார். திருஷ்ணகாந்தன் 20—5—1976ஆம் நாளிட்ட அவரது உறுதி மொழிப் பத்திரத்தில், இந்த 4 இறைவைப் பாசனச் சங்கங்கள், நில மேம்பாட்டுக்காக கருங்குளம் வங்கி வாங்கிய கடன்கள் முழுவதையும் பயன்படுத்தியுள்ளதாகக் கூறினர். கடன்களைப் பெற்றபின்னர் சங்கங்களின் உறுப்பினர்கள் அவர்களது நிலங்களைப் பண்படுத்திக்கொள்ள மீதாச்சார அடிப்படையில் அந்தத் தொகையை உறுப்பினர்களுக்கு அவர் வினியோகம் செய்ததாகவும்இந்த உறுதி மொழிப் பத்திரத்தில் எந்தவகையிலும் சுட்டிக் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். முருகன் மீதான குற்றப் புலனுய்வின்போது அவர் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையில் 164-வது பிரிவின்கீழ் மாஜிஸ்ட்ரேட் முன்பு வாக்குமூலம் கொடுத்தற்குச் சுமார் 9 நாட்களுக்கு முன்பு இந்த உறுதிமொழிப் பத்திரத்தை திருஷ்ணகாந்தன் கொடுத்தார் என்பது மேலும் குறிப்பிடத்தக்கதாகும். 20-5-1976ஆம் நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்தைக் திருஷ்ணகாந்தன் தாக்கல் செய்தபோது, வங்கியிடமிருந்து கடன் தொகையை எடுத்தபின்னர் அது எவருக்கும் கொடுக்கப்படவில்லை என்று முருகன் கூறியதை அவர் அறிந்திருக்கமாட்டார் என்பது இதிலிருந்து புலனுகிறது.

7-1-1977க்குப் பின்னர் திருஷ்ணகாந்தன் கமிஷனின் முன்பு நடந்த விசாரணையில் கலந்து கொண்டு சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தார். 15-2-1977 அன்று கமிஷனின் முன்பு மற்றும் ஓர் உறுதிமொழிப் பத்திரத்தை அவர் தாக்கல் செய்தார். கருங்குளம் வங்கியிடமிருந்து இந்தச் சங்கங்கள் பெற்றுக்கொண்ட கடன்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக முற்றிலும் ஒரு புதிய கூற்றினை முதற்தடவையாக அதில் அவர் கூறியிருந்தார். அந்த உறுதிமொழிப் பத்திரத்தில் முக்கியமான பகுதிகளை விரிவாக நான் கோடிட்டுள்ளேன். இந்தச் சங்கங்களுக்கு அனுமதிக்கப்பட்ட கடன் தொகைகளை எடுத்த பின்னர் அதே நாளன்று முழுத்தொகையையும் அவர் பிரித்து உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்தார். ஜூலிப்ளோரா செடிகளை அப்புறப்படுத்தி ஏரியிலிருந்து தூர் வாரிய மண்ணைக் கொண்டு அந்த நிலத்தில் போட்டு பண்படுத்தும் பணியை உறுப்பினர்கள் மேற்கொண்டதாக இந்த உறுதிமொழிப் பத்திரத்தில் அவர் கூறியிருப்பதை ஈண்டுக் கூறுவது போதுமானதாகும். இந்த வேலைகளை மேற்கொண்ட பின்னர் கிணறு தோண்டும் பணி தொடங்கப்பட்டது. சங்க உறுப்பினர்களிடமிருந்து அவசியமான தொகை வசூல் செய்து இந்தக் கிணறு தோண்டும் பணிக்குச் செலவிடப்பட்டது.

அவர் பின்னர் நீண்டு இந்தக் கூற்றினைப் புனைந்து கூறியதாகத் தெரிகிறது. இந்தக் கூற்றை விசாரணையின் தொடக்க நிலையிலேயே தெரிவிக்க அவருக்கும் எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனுக்கும் நிறைய வாய்ப்பு இருந்தது. அவர்களுக்கு வாய்ப்பு இருந்தும் இதனை ஏன் முன்னரே கூறவில்லை என்று அவர்களைக் கேட்டதற்கு அவர்கள் விளக்கம் எதுவும் அளிக்கவில்லை. 15-12-1977 ஆம் நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள இந்தக் கூற்று, திரு. திருஷ்ணகாந்தனும் திரு. சி. பா. ஆதித்தனும் அவர்களின் முந்தைய உறுதிமொழிப் பத்திரங்களில் கூறியுள்ள வற்றுக்குத் தலைகீழாக இருக்கிறது.

திருஷ்ணகாந்தன் 15-2-1977 ஆம் நாளிட்ட அவரது உறுதிமொழிப் பத்திரத்தில் சேரளும் இறைவைப் பாசனச் சங்கங்கள் குருப்பிற்குத் தாம் தலைவர் என்று விவரித்துள்ளார். இது தொடர்பாகச் சங்கங்களை ஒன்றுசேர்ப்பதற்கும் அவ்வாறு ஒன்றுசேர்த்து அதற்கு ஒரு தலைவரைத் தேர்ந்து எடுப்பதற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திலோ சங்கங்களின் துணைவிதிகளிலோ விதித்துறை ஏதும் இல்லை என்பதை அறிந்து கொள்ளலாம். இந்தச் சட்டப்படிக்கான விதித்துறைகள், துணைவிதிகளின்கீழ் இந்த 4 சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் தனி அந்தஸ்து உண்டு. தனிப்பட்ட பிரிவு என்ற முறையில் அதற்குத் தனியாக நிருவாகிகள் உண்டு. அதற்கெனச் சொந்தமாக நிட்டப்பகுதி உண்டு. அதற்கெனத் தனியாகப் பணிகள் உண்டு. இந்த 4 சங்கங்கள் தொடர்பாக திருஷ்ணகாந்தன் தலைவராக ஏன் செயல்பட்டார் என்பதை விளக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் சேரளுடைதைச் சேர்ந்த இந்தச் சங்கங்களின் குருப்பிற்குத் தானே தலைவர் என்று காட்டிக்கொண்டார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அனுமதிக்கப்பட்ட கடன்களைப் பெறுவதிலும், பின்னர் அவற்றை எடுத்து ஒன்றுசேர்க்கவும் இந்த சங்கங்களுக்குத் தனிப்பட்ட உரிமை இருந்தது. இந்த இடர்ப்பாட்டிலிருந்து மீளவேண்டி அவர் சேரளுடன் சங்கங்கள் குருப்பிற்குத் தானே தலைவர் என்று நினைத்துக்கொண்டு செயல்பட்டார்.

இதற்கொப்பாக 20-5-1976 அன்று அவர் கொடுத்த உறுதிமொழிப் பத்திரத்தில் கீழ தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தில் தான் கௌரவத் தலைவர் என்று அவர் கூறியிருந்தார். சங்கத்தின் பதிவேடுகளை ஆய்வுசெய்ததில் இந்தச் சங்கமோ பிற 3 சங்கங்களோ தேர்தல் மூலம் அல்லது பிற வகையில் திருஞான காந்தனை அவற்றின் தலைவராக நியமித்து நீர் மானம் எதுவும் நிறைவேற்றவில்லை எனத் தெரி கிறது. இந்தச் சங்கங்களின் உறுப்பினர்கள் சேர குளம் சங்கங்கள் குரூப் என்ற ஒரு குரூப்பை அமைத்திருப்பதற்கு ஆவணச் சாட்சியமும் இல்லை.

இந்த 4 சங்கங்களின் சார்பில் உயர்நீதிமன்றத் தில் தாக்கல் செய்யப்பட்ட 1534/76 ஆம் எண் ரிட் மனுவிற்கு ஆதரவாகச் சேரகுளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் தலைவர் அரிச்சந்திரன் உறுதி மொழிப் பத்திரம் ஒன்றைத் தொடக்கத்தில் தாக்கல் செய்திருந்தார். இந்த உறுதிமொழிப் பத்திரத்திலும், இந்த 4 சங்கங்கள் ஒரு 'குரூப்' ஆக ஆக்கப்பட்டன என்றும் தேர்தல் மூலமாகவோ பிற வகையிலோ அந்த குரூப்பிற்குத் தலைவராக திருஞானகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அரிச்சந்திரன் கூறவில்லை.

திருஞானகாந்தன் தன்னைத்தானே வேளாண்மை நில உரிமையாளர் எனக் கூறிக்கொள்கிறார். அவர் பயிர் செய்பவர் அல்லர். ஆனால், சன் பேப்பர் மில்லில் ஒரு நிருவாகி. இந்த 4 இறைவைப் பாசனச் சங்கங்களை அமைப்பதில் தீவிர ஆதர வாளராகத் தாம் இருந்ததாகவும், அதில் பங் கெடுத்துக்கொண்டதாகவும் அவர் கூறியிருந்தா லும், 3-8-1970 அன்று கொடுக்கப்பட்ட கடன் விண்ணப்பத்தில் அவர் கையெழுத்திட்டுள்ளதாகத் தெரியவில்லை. அந்தச் சங்கத்தில் ஓர் உறுப்பின ராக ஆக்கூடிய நபர்களில் ஒருவராக அவரது பெயரும் அதன் கீழ் குறிப்பிடப்படவில்லை. அருளு சலமும் கீழ தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கத்தின் சார்பில் கடன் விண்ணப்பத்தில் கையொப்பமிடவில்லை.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 13, 14ஆவது பிரிவுகளிலும் அச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட 32, 33ஆவது விதிகளிலும் கொடுத் துள்ள நடைமுறையைப் பின்பற்றி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டுறவுச்சங்கங்கள் ஒன்றுக இணைய விரும்பினால், அந்தச் சங்கங்களின் பொதுக் குழுக்கள் அந்த இணைப்புக்காகவே கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் எல்லாச் சங்கங்களையும் ஒரு சங்கமாக இணைக்கும்படித் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்று மேற்படி சட்டத்தின் 13, 14ஆவது பிரிவுகள் குறிப்பிடுகின்றன. ஒன்றுச் சேர்க்கப்படும் சங்கங்களுக்குச் செய்யக் கருதியுள்ள துணைவிதிகளும் அந்த ஆரம்பத் தீர்மானத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

ஆரம்பத் தீர்மானத்தின் நகல் ஒன்று அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் அந்தச் சங்கத் தினருக்குக் கடன் கொடுத்தவர்களுக்கும் அனுப்பப்பட வேண்டும். பின்னர் அந்த ஆரம்ப தீர்மானத்தின் நகலைப் பெற்றுக் கொண்ட உறுப் பினர் எவரும் ஒன்றுச் சேர்க்கப்படும் சங்கத்தில் உறுப்பினராக இருக்க விரும்பவில்லை என்ற தனது விருப்பத்தைத் தெரிவித்து சங்கத்திற்கு அறி விப்பு கொடுக்கலாம்.

இதுபோலவே, அப்படிப்பட்ட ஒரு சங்கத் திற்குக் கடன் கொடுத்த ஒருவர், இதற்கு முரணை ஒப்பந்தம் எதுவும் இருப்பினும், தமக்குச் சேர வேண்டிய தொகையைத் திருப்பித் தரும்படிக் கேட்கும் தமது விருப்பத்தைத் தெரிவித்து அந்தச் சங்கத்திற்கு அறிவிப்பு ஒன்றைக் கொடுக்க லாம். எல்லா சங்கங்களின் உறுப்பினர்களுக் கும் கடன் கொடுத்தவர்களுக்கும் ஆரம்ப தீர்மானம் அனுப்பப்பட்டு இரண்டு மாதங்கள் கழிந்த பின்னர் உறுப்பினர்கள், கடன் கொடுத்த வர்கள் ஆகியோர் சேர்ந்த கூட்டம் ஒன்றைக் கூட்டி அதில் ஆரம்ப நிர்மானமும் அது விதி களும் பரிசீலிக்கப்படவேண்டும். அந்தக் கூட்டத் தில் ஆரம்ப தீர்மானமும் புதிய சங்கங்களின் உத்தேசத் துணைவிதிகளும் அந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கும் உறுப்பினர்களில் 3-ல் 2 பங்குக்குத் குறையாத உறுப்பினர்களால் நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒன்றின் மூலம், மாற்றங்கள் இன்றி அல்லது பதிவாளர் முக்கியமானவை அல்ல என்று கருதக்கூடிய மாற்றங்களுடன் உறுதிசெய்யப் படுமாயின், (c) பகுதி, 9ஆவது பிரிவு அகியவற்றின் விதித்துறைகளுக்குட்பட்டும் ஒன்றுக இணைப்பதற் கான ஆரம்ப தீர்மானத்திற்கு ஏற்பளித்து அந்த தீர்மானத்தின் நகல் ஒன்று வருவதன் பேரிலும் பதிவாளர் ஒன்றுக இணைந்த சங்கத்தையும் அதன் துணைவிதிகளையும் பதிவு செய்யலாம். ஒன்றுக இணைந்த சங்கத்தின் பங்கு மூலதனம், இருப்புகள், பொறுப்புகள் ஆகியவை குறித்த வேறு சில நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

இருப்புகளையும், பொறுப்புகளையும் பதிவு பெற்ற சங்கங்களிடையே மாற்ற 14ஆவது பிரிவு வகை செய்கிறது.

இந்த நான்கு சங்கங்களும் இந்த விதித்துறை களின்படியும் அது சம்பந்தமான விதிகளின் படியும் சேர குளம் சங்கங்கள் குரூப்பாக இணைக்கப் பட்டன என்பதற்கு ஆவணத்தில் ஒரு துளி சாட்சியம் கூட இல்லை.

இந்த விதித்துறைகள் தவிர, தனித் தனியாகப் பதிவுசெய்யப்பட்ட பல சங்கங்கள் தங்களுக்குச் சட்டப்படிக்கான அந்தஸ்து உள்ள பொதுவான தலைவர் ஒருவரை நியமிப்பதற்கு அனுமதிக்க சட்டத்தில் விதித்துறை எதுவும் இல்லை.

நியமனம் செய்யப்பட்ட அதிகாரி, திருஞான காந்தனை 14-8-1976 அன்று சென்னைக்கு வரும் படி அவருக்கு அழைப்பாணைகள் விடுத்திருந் தாலும் அவை உரியவரிடம் சேர்ப்பிக்கப்படாமல்

திருமபி வந்ததாக ஏற்கெனவே அறியப் பட்டுள்ளது. காவல் துறையினர் தம்மைக் கட்டாயப்படுத்துவதாகப் புகார் செய்து தந்தி ஒன்றை 2–9–1976 அன்று திருஞ்ணகாந்தன் தவிப் பொறுப்பு அதிகாரிக்கு அனுப்பினர். அதாவது 5A பிரிவின் மேழ் விசாரிக்கப்படுவதற் காகப் புலனுய்வு அதிகாரியின் முன்பு வரும்படி அவர் கேட்கப்பட்ட நாளுக்குப் பின்னர் சுமார் 20 நாட்கள் கழித்து அந்த தந்தியை அவர் அனுப்பி னர். உடையார் பிள்ளையைச் சாட்சியம் அளிக்க விடாமல் அவரைத் தடுக்க திரு. சி. பா. ஆதித்த னரும் அவரது ஆட்களும் கொடுக்கக்கூடிய அச்சுறுத்தல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அவர் (உடையார் பிள்ளை) பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுக்கொண்டதற்கு எதிராக இந்த தந்தி கொடுக்கப்பட்டது என்று திரு. வான மாமலை வாதிடுகிறார். சாட்சியத்தைக் கலைக்கும் முயற்சிகளைத் தவிப்பட்ட ஒர் இனமாகவிவாதிப் பேன்; இப்போதைக்கு இந்தப் புகார் மீதெழும் காலங்கடந்து கொடுக்கப்பட்டதாக இங்கே கூறலாம். இந்த தாமதமும் காட்சிக்கூண்டிற்கு வராது ஏமாற்றிய விதமும், சந்தி முலம் செய்யப் பட்ட இந்த புகார் ஆதாரமற்றது என்றும் எதிர் மனுதாரர் திரு.சி. பா. ஆதித்தனர் விருப்பத்தின் பேரில் இந்த தந்தி அனுப்பப்பட்டிருக்கவேண்டும் என்றும் அவரது ஏஜெண்ட் திரு.உத்தரபாண்டியன் இதில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததையும் மெய்ப்பிக்கப் போதுமானதாகும்.

முருகன் அளித்த வாக்குமூலம் திருஞ்ணகாந்தனின் கூற்றினம் பொய்யாக்குகிறது.

மேல தாதன்குளம் இறைவப் பாசனச் சங்கத்தின் தலேவர் முருகன் 29–5–1976 அன்று குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 164ஆவது பிரிவின்கீழ், முதல் வகுப்பு மாஜிஸ்ட் ரேட்டு ஒருவரால் விசாரிக்கப்பட்டார் என்பதை நாம் நினைவுகூறலாம். முருகன் 1–7–1976 ஆம் நாளிட்ட உறுதிமொழிப் பத்திரம் ஒன்றையும் சுமிஷன் முன்பு தாக்கல் செய்தார். பின்னர் அவர் 19–8–1976 அன்று 5A பிரிவின் மேழ் புல னுய்வு அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் வருமானவரி அதிகாரி யாலும் விசாரிக்கப்பட்டார். குற்றயியல் நடை முறைச் சட்டக்கோவையின்கீழ் அவர்மீதான குற்ற வழக்கு ஒன்றைப் புலனுய்வு செய்த காவல் துறை டெபுடி சூப்பிரண்டு திரு. முத்தையா குற்ற வியல் நறைமுடைச் சட்டக்கோவையின் 161ஆவது பிரிவின்கீழ் அவரது வாக்குமூலத்தை முதல் தடவையாகப் பதிவு செய்தார்.

9–2–1977–க்குமுன்பு உறுதிமொழியின் பேரில் அளித்த வாக்குமூலம் உட்பட 5 வாக்குமூலங்கள் அல்லது உறுதிமொழிப் பத்திரங்கள் எல்லா வற்றிலும், வங்கியிடமிருந்து கடன்தொகை எடுத்த பின்னர் அது திருஞ்ணகாந்தனிடம் அல்லது அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனரிடம் ஒப் படைக்கப்பட்டதாக முருகன் கூறினர். அவர் களின் முந்தைய வாக்குமூலங்களில், இந்த 4 சங்கங்களும் ஒரு குருப்பாக அமைக்கப்பட்டன என்றும் அந்த குருப்புக்குக் திருஞ்ணகாந்தனைத் தலேவராக இந்தச் சங்கங்கள் நியமித்தன என்றும் குறிப்பிடப்படவேயில்லே. அப்படிப்பட்ட குருப்பக் எதுவும் அமைக்கப்பட்டு அந்த குருப் புக்கு திருஞ்ணகாந்தன் தலேவராக நியமிக்கப் பட்டிருந்தால், முருகன் வெவ்வேறு அதிகாரி களின் முன்பு அவ்வப்போது கொடுத்த அவரது 5 வாக்குமூலங்களில் இப்படிப்பட்ட முக்கியமான தகவலேக் குறிப்பிடத் தவறியிருக்கமாட்டார்.

ஆயினும், இந்தக் குற்றத்திலிருந்து திரு. சி. பா. ஆதித்தனரை மறைப்பதற்காகத்தான் சேரளும் சங்கங்கள் குருப்பிற்கு திருஞ்ண காந்தன் தன்னேத்தானே தலேவராகக் கருதிக் கொண்டு அந்த வகையில் கடன் தொகையைப் பெற்றார் என்று சந்தேகிக்கொள்ளக் காரணம் உண்டு.

திருஞ்ணகாந்தன் சேரளும் சங்கங்கள் தொகுதிக்குத் தானே தலேவர் என்று சொல்லிக் கொண்டது பெரும் கட்டுக் கதைதானே ஒழிய நம்பத்தகுந்தது அல்ல. 5-A பிரிவின் மேழ் கமிஷ னுல் நியமிக்கப்பட்ட ஒர் அதிகாரியான திரு. மனேகரன் முனிவிலியில் திருஞ்ணகாந்தன் அவ ருக்கு விடுக்கப்பட்ட பல அழைப்பு ஆணேகள் சார்வு செய்யப்பட்டிருந்தும் வரவில்லே. திருஞ்ணகாந்தனுக்குப் பதிலாக அவர் சார்பில் திரு. மனேகரன் முன்னிலேயில் திருநெல்வேலி யைச் சேர்ந்த வழக்குரைஞர் திரு. ஆர். எஸ். வெங்கடாசலம் வந்திருந்தார். அவர் சார்பில் இவர் ஒரு மனுவை அளித்தார். புலனுய்வுக்கான காலக் கெடு ஏறகெனவே முடிந்துவிட்டது என்ற காரணம் கூறி, திருஞ்ணகாந்தனே விசாரணே செய்ய மேற்சொன்ன நியமன அதிகாரிக்கு எவ்வித அதிகார வரம்பும் இல்லேயென்று அந்த மனுவில் வாதிடப்பட்டது. அந்த மனுவின் ஒரு நகல் புதுடில்லியில் உள்ள உச்ச நீதிமன்ற வழக் கறிஞர் திரு. வீரேந்த குமாருக்கு குறிப்பிடப்பட்டி ருந்தது. விந்தையிலும் விந்தையே; மேற் சொன்ன வழக்கறிஞர் திரு. சி. பா. ஆதித்தனரின் வழக்குரைஞர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தச் சூழ்நிலேயானது திரு. சி. பா. ஆதித்தனருக்கும் திருஞ்ணகாந்தனுக்கும் இடையிலான தொடர்பைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது.

திருஞ்ணகாந்தனேத் தம் முன் வரவழைத்து விசாரணே செய்வதற்கு கமிஷனுல் நியமனம் செய்யப் பெற்ற அதிகாரிமற்றுமொரு முயற்சியை மேற்கொண்டார். அவர் திருஞ்ணகாந்தனுச் சென்னே தலேமைச் செயலகத்தில் 14–8–76-ம் நாளில் தம் முன்னர் வருமாறு கட்டளே பிறப்பித்து 9–8–76-ம் நாளில் சென்னேயிலிருந்து, திருஞ்ணகாந்தன் முகவரிக்கு சான்றுப்பம்

பெறும் பதிவு அஞ்சலில் அழைப்பாணைகளை அனுப்பினர். இந்த முகவரியில் இவர் இல்லை யென்று மேற்குறிப்புடன் அந்த அழைப்பாணைகள் சார்வு செய்யப்படாமல் திரும்பி வந்தன. அவ் வாறிருந்தும் கூட திருவணகாந்தன் மேற்சொன்ன அஞ்சல் உறையில் என்ன அடங்கியிருக்கும் என் பதைச் சாதாரணமாகத் தெரிந்துகொண்டிருக்க வேண்டிய நிலையிலிருந்தும் அவர் சென்னையில் தனிப் பொறுப்பு அதிகாரி (ஒ. எஸ். டி.) திரு. பி. விஜயராகவலுக்கு 2–9–76-ம் நாளில் தந்திச் செய்தி ஒன்றை அனுப்பினர். அச் செய்தியில் அதிகாரிகள் அவர்கள் தயாரித்திருந்த ஒரு அறிக்கையில் தம்மைக் கையொப்பம் இடுமாறு நிர்ப்பந்திக்கின்றனர் என்ற குற்றம் சாட்டினர். (அவர் முன்பு அனுப்பிய மனுவில் இது போன்ற குற்றச்சாட்டு எதையும் அவர் குறிப்பிடவில்லை). மேலும் தாம் ஒரு வாரத்துக்குள் கலைமைச் செயலகத்துக்கு வந்து தனிப் பொறுப்பு அதிகாரி முன்னிலையில் தம்முடைய வழக்குரைஞருடன் வந்திருந்து முழுமையான, உண்மையான வாக்கு மூலம் ஒன்றை அளிப்பதாகவும் அவர் தெரிவித் தார். மேலும் அதே தந்திச் செய்தியில் அவர் எந்த வாக்குமூலத்திலும் தம்மைக் கையொப்பம் இடுவதற்குக் கட்டாயப்படுத்தக்கூடாது என்று தனிப் பொறுப்பு அதிகாரி தம்முடைய அலுவலர் களுக்குக் கட்டளையிட வேண்டும் என்றும் அவ ரைக் கேட்டுக் கொண்டார். இதில் குறிப்பிடத் தக்க அம்சம் என்னவென்றால், திருவணகாந்தன் 2–9–76-ம் நாளில் அனுப்பியிருந்த தந்தி வாசகம் சென்னை இனத்தந்தியில் உள்ள அலுலகத்தில் திரு. ஜி. இலட்சுமி நரசிம்மன், வருமானவரி அதிகாரி 3–9–76-ம் நாளில் டிடார் சோதனை நடத்தியபொழுது சென்னை இனத்தந்தி அலுவலகத்தைச் சேர்ந்த திருவணமூர்த்தி என்பவரிடமிருந்து கைப்பற்றிய ஒரு தாளில் அதே வாசகம் இருந்தது என்பதாகும்.

திரு. ஜி. இலட்சுமி நரசிம்மன்.

ஜி. இலட்சுமி நரசிம்மன் தம்முடைய உறுதி மொழிப் பத்திரத்தில் கூறியுள்ளதாவது: கே. திருஞ்ணமூர்த்தி என்பவர் ஒரு தாளைக் கிழிக்க முயற்சி செய்வதைப் பார்த்தபொழுது இவர் அவரைப் பிடித்து அந்தத் தாளைக் கிழக்க விடாமல் கைப்பற்றினர். அந்தத் தாளை படித்துப்பார்த்த பொழுது அது திரு. திருவணகாந்தன் அனுப்பிய தந்தி வாசக நகல் என்று அந்த வருமான வரி அதிகாரி அறிந்தார். அவரை இதுபற்றி மேற் கொண்டு விசாரித்தபொழுது, திரு. திருவண மூர்த்தி திரு. ரி. பார. ஆதித்தனார் தமக்குச் சொன்னபடி அந்த தாளில் உள்ள வாசகங்களைத் தட்டச்சு செய்தார் எனவும் அதன்படியே சென்னையிலிருந்து அரியநாயபுரம் சன் பேப்பர் மில்லில் உள்ள திருவணகாந்தனுக்கு டெலக்ஸ் செய்தி ஒன்று அனுப்பப்பட்டது என்றும் அந் தச் செய்தியில் அவர் தனிப் பொறுப்பு அதிகாரிக்கு தந்திச் செய்தி ஒன்று அனுப்புமாறும் அதன் நகல்களை வழக்குரைஞர்களுக்கு அனுப்புமாறும் திருவணகாந்தனுக்குக் கட்டளையிட்டிருந்தார் எனவும் தெரிய வந்தது. இதிலிருந்து திருவண காந்தனைக் கருவியாகக் கொண்டு ரி.பார. ஆதித்தனரே இந்த விவகாரங்கள் அனைத்தையும் ஆட்டிப் படைத்து வந்தார் என்கிற ஊகத்துக்கு மேலும் வலிமை பிடைக்கிறது.

திருவணகாந்தன் 15–2–77-ம் நாளில் மிகவும் காலங்கடந்து கொடுத்த 2-வது உறுதிமொழிப் பத்திரத்தில் அடங்கியுள்ள கருத்துகள் அவர் சொல்லிச் சேர்த்தது கட்டுக்கதை என்று ஐயப் படுவதற்குக் காரணங்கள்பலஉள்ளன. ஒருவேளை மனம் செய்யப்பெற்றஅலுவலர் திருவணகாந்தனிசாரணை செய்கையில் தூண்டித் துருவிக் கேட்கப்படும் கேள் விகளுக்கு மனதிறைவு அளிக்கக்கூடிய வகையில் அவரால் விடையளிக்க முடியாமல் போகலாம் என்று திருவணகாந்தனும் திரு. ரி. பார. ஆதித்த னும் அஞ்சியிருக்கலாம். ஆகவே அவர்கள் கமிஷனுல் 5-A பிரிவினுக்கு நியமனம் செய்யப் பட்ட புலனுய்வு அதிகாரி முன்னிலையில் திருவண காந்தன் வந்திருந்து விசாரணை செய்யப்படுவதைத் தவிர்க்கவும் தப்பிக்கவும் உபாயதைச் செய்வதே சிறந்தது என எண்ணியிருக்கலாம். மேலும், கமிஷன் முன்னிலையில் வருகின்ற தொடர்புடைய சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பிறகு எண்ணிப் பார்த்துத் தயாரிக்கப்பட்ட ஒரு வாசகத்தையும் தயாராக உருவாக்கப்பட்ட விடை களையும் கூறுவதே தங்களுக்குச் சாதகமாக இருக்கும் என்றும் அவர்கள் எண்ணியிருக்கலாம்.

திருவணகாந்தன் கமிஷனுல் 5-A பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட புலனுய்வு அதிகாரி முன்னிலையில் ஆஜராகாமல் தப்பினர் என்பது மட்டுமல்ல; அவர் கமிஷன் முன்னிலையில் வந்திருந்து சாட்சிக் கூண்டில் ஏற்றப்படாமலும் தந்திரமாக தவிர்த்துக் கொண்டார். அவர் சாட்சிகளைக் குறுக்கு விசா ரணை செய்த பிறகு தாமும் சாட்சிக் கூண்டில் ஏறி நின்று விசாரணை செய்யப்படுவதற்கு உட்பட வேண்டும் என்கின்ற ஓர் உடன்படிக்கையின் பேரில் வழக்குரைஞர் ஒருவரின் உதவியுடன் சாட்சிகளைக் குறுக்குவிசாரணை செய்யவும் வழக்கில் பங்கு கொள்ளவும் அவர் அனுமதிக்கப்பட்டார். ஆனுல், அவர் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்கின்றவசதியை முழுமையாகப் பயன் படுத்திக் கொண்டார். அதன் பிறகு அக்கிருத்து வெளி யேறிவிட்டார். சாட்சிக் கூண்டில் ஏறவேயில்லை. அர் மட்டும் சாட்சிக் கூண்டில் ஏறினாலும் மற்ற நரப்பு வழக்குரைஞரால் அல்லது கமிஷன் வழக்குரைஞரால் குறுக்கு விசாரணை செய்வதற்குத் தம்மை உட்படுத்தியிருப்பாரேயானுல், அவர் கால தாமதமாகக் கொடுத்த இரண்டாவது உறுதி மொழிப் பத்திரத்தில் இட்டுக்கட்டியிருந்த கதை பொய்யானது என்று பிய்த்து உதறித் தள்ளி

விடப்பட்டிருக்கும் என்று நாம் நியாயமாக ஊகம் செய்துகொள்ளலாம்.

இந்தச் சங்கங்களின் திட்டப்பகுதியிலிருந்து கிடைக்கின்ற வேளாண்மை வருமானம் இன்னது என்று திருஞானசுந்தரன் கூறிய உரை.

திருஞானசுந்தரன் 15—2—1977-ம் நாளில் கொடுத்த தம்முடைய உறுதிமொழிப் பத்திரத்தில் மாநிலத்தின் கோடியிலுள்ள இச் சங்கங்கள் செயல்படுகின்ற பகுதியில் கிடைக்கும் வேளாண்மை வருமானத்தைப் பற்றி பொதுவான மதிப்பீடு ஒன்றைக் கொடுத்தார். அந்தப் பகுதியில் 1971 ம் ஆண்டில் பயிரிடப்பட்ட பல்வேறு பயிர்களின் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு கிடைத்த வருவாய் மதிப்பீடு இது என்று கீழே உள்ள விவரங்களை அவரது உறுதிமொழிப் பத்திரத்தின் 3-வது பாராவில் கூறியுள்ளார்.

ரூ. 5,000— ஒரு போக வாழை சாகுபடி— இரட்டை நடவு— குட்டை வகை வாழை.

ரூ. 5,000—மஞ்சள்—ஊடு பயிர்ச் சாகுபடி.

ரூ. 5,000—புதிய கலப்பின வகை மரவள்ளிக் கிழங்கு.

ரூ. 7,000— தென்னை குட்டை வகை— கடற்கரை ஓரமாக மாவட்டங்களில் வீனையும் உயர் வினைச்சல் ரகம்.

17-வது பாராவில் மேலும் அவர் கூறியுள்ளதாவது; இந்தச் சங்கங்கள் கனரா வங்கியிடமிருந்து ரூ. 12 லட்சம் கடன் பெற்றன. இதற்கிடையே இந்த 4 சங்கங்களும் சன் பேப்பர் மில்லுக்கு இவற்றைச் சேர்ந்த உழவர்கள் புளிச்சை நார் பயிரிட்டு வழங்குவதற்காக ஏற்கெனவே ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது. அவர்கள் அந்த நிறுவனத்திடமிருந்து ரூ. 16 லட்சம் முன்பணம் பெற்றார்கள். இது தொடர்பாக அவர் மேலும் கூறுவதாவது: "இந்தப் பணத்தைக் கொண்டு தொடக்க நிலவள வங்கியிடமிருந்து பெற்ற கடன்கள் முழுமையாகக் கொடுத்துத் தீர்க்கப்பட்டன. இந்த நிலங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பெற்று நடைபெற்று முடிந்தன. உழவர்கள் முதலில் வாழை சாகுபடி செய்ததும், அதன் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு அவர்களால் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடிந்தது. வாழை மகசூலைக் கொண்டு கனரா வங்கியிடமிருந்து பெற்ற கடனையும் சன் பேப்பர் மில்லிடமிருந்து பெற்ற முன்பண நிலுவைகளையும் அவர்கள் திருப்பிக் கொடுத்து விட்டனர்."

18-வது பாராவில் அவர் மேலும் கூறியுள்ளதாவது: உறுப்பினர்கள் வாழைத் தோட்டமும் அகத்தியும் பயிரிட்டிருந்ததைக் காட்டுகின்ற புகைப்படங்கள் எடுக்கப்பட்டு அவை 31—10—72-ம் நாளில் அல்லது அந்நாள் வாக்கில் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளரிடம் கொடுக்கப்பட்டன. இந்தப் புகைப்படங்களிலிருந்து சங்க உறுப்பினர்கள் நிலங்களில் வாழையும் மதிப்புள்ள பணப் பயிர்களும் பயிரிடப்பட்டிருந்தது தெரிந்தது. புகைப்படங்கள் எடுக்கப்பட்ட சமயத்தில் வாழைப் பயிர் ஏறத்தாழ 10 மாத வளர்ச்சியைப் பெற்றிருந்தன. இந்தப் புகைப்படங்களைப் பற்றி இணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளருக்கு (கூடன் வசதி) எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த போதிலும், இந்த புகைப்படங்கள் எங்கே என்பதை என்னால் கண்டுபிடிக்க இயலவில்லை....."

இந்தப் பிரச்சினைக்குத் தொடர்புடைய காலத்தில் சங்கங்கள் திட்டப்பகுதியில் பயிரிட்ட தாகக் கூறப்பட்ட உண்மையான சாகுபடியின் அடிப்படையில் அமைந்த தெளிவான தகவல்களையும் புள்ளி விவரங்களையும் அப் பயிர்களின் விற்பனை தொடர்பான தகவல்களையும் புள்ளி விவரங்களையும் அவர் கொடுக்கவில்லை. ஆனால், அவர் கூறியதன் சாராம்சம் என்னவென்றால், கனரா வங்கி அளித்த கடன் முழுவதுமே இந்தச் சங்கங்கள் திட்டப்பகுதியில் பயிரிட்ட பயிர்களில் வருவாயைக் கொண்டு இச் சங்கங்களால் முழுமையாகத் திருப்பிக் கொடுக்கப் பட்டன என்பதாகும். ஆனால், இப்படிச் சொன்ன இந்தத் தகவலானது பெரும் கற்பனையாகும். கற்பனை உலகிலேயே வாழ்கின்ற ஒரு குழந்தையால் கூட இவ்வளவு பெரிய கற்பனையை இட்டுக் கட்டிச் சொல்ல முடியாது, அல்லது இக் கற்பனையைத் தாங்கிக் கொள்ள முடியாது.

திருஞானசுந்தரன் கூறிய கூற்று உள்ளீடற்ற முழுப் போலிக்கூற்று என்பதை இங்கு மேலே கொடுக்கப்படுகின்ற கணித முடிவுகள் மெய்ப்பிக்கும். இந்த நான்கு சங்கங்களும் 1971 மார்ச் திங்களில் அவை தொடங்கப்பெற்ற நாள் முதல் 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் வரையில் அவற்றிற்கு ஏற்பட்டதாகக் கூறப்பட்ட மொத்தச் செலவு விவரம் பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

(1) நிலத்தைப் பண்படுத்தல், மேம்படுத்தல் தொடர்பான பணிகளுக்கு.	20.25
(2) தொடக்க நிலவள வங்கிக்கு வட்டியுடன் கடனைத் திருப்பிச் செலுத்தியது.	22.99
(3) இந்த நான்கு சங்கங்களும் பங்கு மூலதனத்துக்கு அளித்த பங்குத் தொகை.	1.61

(4) கனரா வங்கிக்குக் கடனைத் திருப்பிச் செலுத்தியது.	10.02
(5) சன் பேப்பர் மில்லுக்கு முன் பணத்தைத் திருப்பிக் கொடுத்தது.	16.00
மொத்தம் ..	70.27

இந்தச் சங்கங்களுக்கு இதே கால கட்டத்தில் கடன்கள், முன்பணங்கள் வடிவில் கிடைத்த மொத்த வரவுகள் விவரம் பின்வருமாறு :—

	(ரூபாய் இலட்சத்தில்)
(1) கருங்குளம் தொடக்க நிலவள வங்கியிடமிருந்து பெற்ற கடன்.	20.25
(2) கனரா வங்கியிடமிருந்து பெற்ற கடன்.	13.06
(3) சன் பேப்பர் மில்லிடமிருந்து பெற்ற முன்பணம்.	16.00
மொத்தம் ..	48.31

இவ்வாறு இந்த கால கட்டத்தில் கிடைத்த வரவுகளுக்குக் கூடுதலாக இவை ஏறத்தாழ ரூ. 22 லட்சம் அளவிற்கு மிகைச் செலவு செய்துள்ளன. கிருஷ்ணகாந்தன் தம்முடைய உறுதி மொழிப் பத்திரத்தில் எத்தனை ஏக்கர் பரப்பில் வாழை பயிரிடப்பட்டது என்பது குறித்த தகவல்களையும், புள்ளி விவரங்களையும் திட்ட வட்டமான முறையில் தரவில்லையென்றாலும் கூட, அவர் தம்முடைய உறுதிமொழிப் பத்திரத்துடன் சேர்த்து வேறு நான்கு 'முன்னணி' விவசாயிகளிடமிருந்து அச்ச நகல்கள் எடுத்தாற் போன்றமைந்த உறுதிமொழிப் பத்திரங்களைப் பெற்று தாக்கல் செய்திருந்தார். அந்த உறுதி மொழிப் பத்திரங்களில் அவர்கள் ஏக்கர் ஒன்றுக்கு 4,500 ரூபாய் அளவுக்கு வாழை மகசூல் ஆதாயம் கொடுத்தது என்று கூறியுள்ளனர். கிருஷ்ணகாந்தன் நம்மை நம்பச் சொல்கிறாரே— அந்தப்படிக்கு இந்த நான்கு சங்கங்களும் அடங்கிய மொத்த திட்டப் பகுதியான 479 ஏக்கர் பரப்பிலும் வாழை சாகுபடி செய்யப்பட்டது என்று வைத்துக் கொண்டாலும் கூட, அந்த மொத்தப் பரப்பில் கிடைத்திருக்கக்கூடிய ஆதாயக் கணக்கு இது தான் !

ரூ. 4,500 × 479 = 21.55 லட்சம்.

கிருஷ்ணகாந்தன் நம்மிடம் கூறிய விவரங்கள் உண்மையாக இருக்குமானால் இந்தச் சங்கங்களில் திட்டப் பகுதி முழுவதிலும் 27—12—73 நாளுடன் முடிவடைந்த இரண்டாண்டுக் காலத்தில் பயிரிடப்பட்ட வாழைப் பயிரின் மொத்த மதிப்பு கணக்கிட்டுப் பார்த்தால் ரூ. 43.55 இலட்சம் வரும். (அதாவது ரூ. 22 இலட்சம் + ரூ. 21.55 இலட்சம்) இதைப போல பிரும் மாண்டமான கற்பனையும் கட்டுக் கதையும் வேறெதுவும் இருக்க முடியாது.

இந்தத் திட்டப்பகுதி முழுவதுமோ அல்லது எப்படிப்பார்த்தாலும் அது ஒரு கணிசமான பகுதியோ, மேம்பாடு செய்யப்பட்ட பிறகு அதில் வாழை அல்லது ஏனைய பணப் பயிர்கள் பயிரிடப்பட்டன எனக் கூறிய கிருஷ்ணகாந்தனின் கூற்றினை வருவாய்த் துறை பதிவேடுகள் காட்டுகின்ற பதிவுகளோக் கொண்டு பார்த்தால், அக் கூற்று முழுப் பொய் என்று தெரிய வருகிறது.

தமிழ்நாட்டில் வருவாய்த் துறையின் அமைப்பு கிராம மட்டத்தில் கிராம மணியம், கிராமக் கர்ணம் ஆகியோர்களைக் கொண்டு அமைந்துள்ளது. இவ்விரு அதிகாரிகளும் களத்தில் 24 மணி நேரமும் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் அதிகார வரம்புப் பகுதியிலுள்ள ஒவ்வோர் உழவரையும் மிகவும் நெருக்கமாகத் தெரிந்து வைத்திருக்கவேண்டும். பயிரிடப்படும் பயிர்கள் குறித்த புள்ளி விவரங்களைக் கர்ணம் வைத்து வருகிறார். அது தான் அதிகார பூர்வமான பதிவேடாகும். அது 'அடங்கல்' அல்லது பயிர் பதிவேடு என்றழைப்படுகிறது. இது தமிழ்நாட்டின் தொகுக்கப்படுகிற வேளாண்மைப்புள்ளி விவரங்கள் அனைத்துக்கும் தொடக்க நிலை அடிப்படைப் பதிவேடாகும். மேலும், கடன்கள் பெறுவதற்காக நிலங்களைப் பிணையமாக வைக்கும் பொழுது அடங்கல் பதிவேட்டிலிருந்து அந்நிலங்கள் தொடர்புள்ள பகுதி நகல்களைப் பெற்று கர்ணத்தின் சான்றுடன் தர வேண்டும் எனவும் வற்புறுத்தப்படுகிறது.

இங்கு, இப் பிரச்னைக்குத் தொடர்புடைய காலத்தில் சேரகுளம், கீழப் பெருமாளேரி இறைவைப் பாசனச் சங்கங்களின் திட்டப் பகுதிகள் அமைத்துள்ள சேரகுளத்தின் கர்ணம் திரு. ஏ. நவநீத கிருஷ்ணன் என்பவராவார். இரண்டு தாதன் குளம் சங்கங்களுக்கும் சொந்தமான நிலங்கள் அமைந்திருக்கும் கருங்குளம் கிராமத்தில் கே. முத்துக் குமாரசாமிபிள்ளையும், அவருடைய தந்தையும் கர்ணங்களாகப் பணி புரிந்தனர்.

நவநீத கிருஷ்ணன் (A.W- 18), கே. முத்துக்குமாரசாமி (A.W- 19) ஆகியோர் அளித்த உறுதிமொழிப் பத்திரங்களில் தொடர் புடைய காலங்களில் சங்கங்களின் திட்டப் பகுதியில் வீனிவிக்கப்பட்ட பயிர்களைக் குறித்து அடங்கல் பதிவேட்டிலிருந்து பகுதி நகல்கள் எடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதி நகல்களிலிருந்து கீழப்பெருமானேரி, சேரகுளம் சங்கங்களைச் சேர்ந்த நிலங்களில் கீழே குறிப்பிட்டுள்ள பயிர்கள் பயிரிடப்பட்டன என்பது தெரிய வருகிறது.

1971—72 1381 பசலி	35	ஏக்கர் புளிச்சை
1972—73 1382 பசலி	16	ஏக்கர் 30 சென்ட் வாழை
	10	ஏக்கர் 50 சென்ட் அகத்தி
	3	ஏக்கர் 50 சென்ட் நெல்
	30	ஏக்கர் 30 சென்ட்
1973—74 1383 பசலி	196.50	ஏக்கர் மர வள்ளிக் கிழங்கு
	48.84	ஏக்கர் வாழை
	30.50	ஏக்கர் அகத்தி
	1.50	ஏக்கர் இலவமரம்
	187.34	ஏக்கர்.
1974—75 1384 பசலி	இல்லை (காரணம் பதிவு செய்துள்ளபடி இந்த ஆண்டில் இந்த நிலங்களில் பயிர் ஏதும் வீனிவிக்கப் படவில்லை).	

இரண்டு தாதன்குளம் சங்கங்களைச் சேர்ந்த திட்டப் பகுதிகளில் சீழ்க்காணும் பயிர்கள் பயிரிடப்பட்டிருந்தன என்று அடங்கல் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது :—

1971—72 1972—73	பயிர் செய்யப்படவில்லை.
1973—74—	சிறு பகுதியில் இருந்த பனை மரங்களைத் தவிர வேறு பகுதிகளில் பெரும்பாலும் ஒருபயிரும் பயிரிடப்படவில்லை.
1974—75—	மர வள்ளிக் கிழங்கு 25 ஏக்கர் 87 சென்ட்.

மேற்சொன்ன பயிர்களுக்குரிய மதிப்பைக் குறித்து மாநில நிலவள வங்கியின் (தொழில் நுட்பக் குழு) இணை இயக்குநரைக் கொண்டு மதிப்பீடுகளைத் தயாரிக்கச் செய்து கூடுதல் பதிவாளர் (கூடன் வசதி) திரு. மூஸா அவர்களைப் பெற்றுக் கொண்டார். அந்த மதிப்பீடுகள் காட்டுகின்றபடி இந்த நிலங்கள் அனைத்திலும் தொடர்புடைய காலத்தில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் ரூ. 5.5 இலட்சத்துக்கு மேல் வருவாய் ஈட்டியிருக்க முடியாது. இத்தகைய சூழ்நிலைகளில் உழவர்கள் பயிரிட்ட முதல் பயிரான வாழைப் பயிரிலிருந்து கிடைத்த வருவாயைக் கொண்டு சங்கங்கள் கனரா வங்கி கொடுத்த கடனையும் திருப்பிச் செலுத்த முடிந்து, சன் பேப்பர் மில்லிடமிருந்து பெற்ற முன்பணத்தையும் திருப்பிக் கொடுத்து மேலும் மற்ற செலவினங்களையும் சரிக்கட்டிய பிறகும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 4,500 ஆதாயம் பெற முடிந்தது என்று திருஞானசாந்தன் சொன்ன கூற்றினை நம்ப இயலாது. மேலும், 1974-ம் ஆண்டு தொடங்கி இந்தச் சங்கங்களின் செல்வ நிலை திடீரென்று உயர்ந்து சென்றதற்கு திரு. கிருஷ்ண காந்தனும் சரி, திரு. சி. பா. ஆதித்தனரும் சரி எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை.

சங்கங்களின் பெயரில் வைக்கப்பட்ட குறித்த கால வைப்பீட்டுத் தொகைகள்.

இந்தச் சங்கங்கள் ஒவ்வொன்றின் பெயரிலும் உள்ள கணக்குகளில் பல இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள தொகைகள் குறித்த கால வைப்பீடுகளாக வைப்பீடு செய்யப்பட்டுள்ளன. ஜி. இலட்சுமி நரசிம்மன் (AW46) பதிவு செய்த தனது வாக்குமூலத்தில் எஸ். சந்திரசேகர் இந்த மதிப்பீட்டுத் தொகைகள் யாவும் வாழை மகசூல் விற்பனையிலிருந்தும் ஏனைய வீனைபொருள்கள் விற்பனையிலிருந்தும் கிடைத்த வருவாய்கள் என்று S. D. ஆதித்யன் தம்மிடம் சொன்னதாகக் கூறினார்.

மேலும் திருஞானசாந்தன் இந்த நிலங்களைப் பண்படுத்துகின்ற பணியும், மேம்பாட்டுப் பணிகள் முழுவதும் முற்றிலும் அந்தந்த நிலங்களுக்குத் தொடர்புடைய தனிப்பட்ட நபர்களிடம் பிரித்து விடப்பட்டன என்றும் அவர்கள் வேறெந்த கூட்டுப் பண்ணைச் சங்கத்திலும் செய்யப்பட்டிருப்பதைப் போன்றே தத்தம் நிலங்களைத் தாமே பண்படுத்தி தனியாக காப்புச் செய்து வந்தனர் என்றும் கூறுகிறார். இந்தக் கூற்றுங்கூட இந்தச் சங்கங்கள் அனைத்துக்கும் பொதுவான பண்ணை வீடு, பொதுவான கிடங்கு, மற்றும் இந்த சங்கங்கள் தொகுதிக்கென பொதுவான செய்முறைக் களம் ஆகியவற்றிற்கான தேவை இருந்தது என்று கூறப்பட்ட கூற்றுக்கு இசைவாக அமையவில்லை.

இந்த உழவர்களில் ஒருவர்கூட தமக்குத் தமது நிலங்களைப் பண்படுத்துவதற்காகவும், பயிரிவதற்காகவும் கொடுக்கப்பட்டதெனக் கூறப்படுகின்ற பணத்துக்குக் கணக்காட்ட முடியவில்லையே.

ஏன் சன்று கேட்டபொழுது அதற்கு கிருஷ்ண காந்தன் எந்தவித விளக்கமும் அளிக்கவில்லே.

அடுத்ததாக, கிருஷ்ணகாந்தன் புதியதொரு விளக்கத்தைக் கூற முன் வந்தார். அதாவது இந்தச் சங்கங்கள் அனேத்திலும், அவ்வவற்றை அமைத்துத் தொடங்கிய உறுப்பினர்களுடன்கூட, மொத்தம் 600-க்கு மேற்பட்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர் என்று கூறினர். அவர் அந்த உறுப்பினர்களின் பெயர்களேயோ அவ்வாறு உறுப்பினர்கள் என சொல்லப்படுபவர்கள் வைத்திருந்த நிலங்களின் விவரங்களேயோ தெரிவிக்கவில்லே. எவ்வாறிருந்த போதிலும், இந்தக் கடன்களுக்கு யாருடைய நிலங்கள் அடமானம் வைக்கப்பட்டனவோ அவர்களுக்கு மட்டுமே அந்தச் சங்கங்களில் உறுப்பினராக இருக்கும் உரிமை இருந்தது என்பதை கடன் கோப்புகள் தெளிவாகக் காட்டுகின்றன.

மேலும், சேரகுளம் தொகுதிச் சங்கங்களேச் சேர்ந்த நிலங்களேப் பண்படுத்தி மேம்படுத்தும் பணிகளேக் கவனித்தவர்கள் என்று கூறப்பட்ட அப் பணிகளே மேற்பார்வை செய்வதில் சம்பளம் பெற்ற அலுவலர்களின் பெயர்களேயும் கிருஷ்ண காந்தன் வெளிப்படுத்தவில்லே. அன்றியும், இந்தச் செலவினங்களேக் குறித்து சங்கங்களின் உறுப்பினர்களாக உள்ள உழவர்கள் கணக்கு எதையும் பேணி வந்தார்கள் எனக் காட்டுகின்ற எந்த ஆவணத்தையும் அவர் தாக்கல் செய்ய வில்லே. அடுத்தமைந்துள்ள கிராமங்களிலிருந்து ஏரி உள்வாய் பகுதியில் எடுத்த வண்டல் மண்ணேக் கொண்டு வருவதற்கு வண்டிகளே வாடகைக்கு அமர்த்தியது குறித்த தொழிலாளர் பெயர்ப் பட்டியல்கள் (மஸ்டர்ரோல்)-கைச் சாத்துக்கள், பற்றுச் சீட்டுக்கள் எதையும் கிருஷ்ண காந்தன் தாக்கல் செய்யவில்லே. அது மட்டுமன்றி, கிணறுகள் தோண்டுகின்ற பணியை மேற்பார்வையிடுவதற்காக அமர்த்தப்பட்டதாகக் கூறப்படுகின்ற தகுதி வாய்ந்த மேற்பார்வையாளர்களுக்கு ஊதியம் எதுவும் கொடுத்ததற்கான சான்று எதுவும் இல்லே.

அவர் தம்முடைய உறுதிமொழிப் பத்திரத்தில் கடைசிப் பாராவில் தாம் சென்னியிலுள்ள பண்ணே ஆலோசனேப் பணிகள் நிறுவனத்தைச் சேர்ந்த (Farm Consultancy Service Private Limited) தகுதி வாய்ந்த பொறியாளர் ஒருவரைக் கொண்டு அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்வதாகக் கூறியிருந்தார் ; ஆனல், கடைசி வரை அந்த அறிக்கையை அவர் தாக்கல் செய்யவேயில்லே. கிருஷ்ணகாந்தன் தமது உறுதிமொழிப் பத்திரத்தில் கூறியுள்ள வாக்குமூலங்கள், முன்பு வருமான வரி அதிகாரி ஜி. எத்திராஜன் முன்னிலேயில் பிரமாணம் எடுத்துக் கொண்டு உறுதி கூறிய வாக்குமூலத்துடன் முக்கியமான அம்சங்களில் பெரிதும் முரண்பட்டுக் காண்கின்றன. நாம் மின்னர் குறிப்பிட்ட இந்த வாக்குமூலத்தில் அவர் தம்முடைய பெயரிலோ, தம்முடைய மனேவியின் பெயரிலோ இயங்கும்.இயங்காச் சொத்துக்கள் எவையும் தமக்கு இல்லேயென்றும், மேலும் இனத்தந்தி நிர்வாகம் அவருடைய சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்கின்ற வருமான வரியைத் தவிர்த்து வேறு எந்த வருமான வரியையும் செலுத்தவில்லே என்றும் கூறியிருந்தார்.

கிருஷ்ணகாந்தன் தம்முடைய உறுதிமொழிப் பத்திரங்களில் கூறியுள்ள வாக்குமூலம் பொய் என்பது வேறு ஒரு சாட்சியத் தகவலிலிருந்தும் நமக்கு மேலும் தெளிவாகப் புலப்படுகிறது.அதாவது அவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 16,000 வீதத்தில் அதாவது நிலத்தில் அங்காடி மதிப்பைப் போல் 8 மடங்குக்கு கடன் வழங்குகின்ற திட்டம் பல காலம் கழித்த பின்னர்தான் செயலுக்கு வந்தது. கிருஷ்ணகாந்தன் இந்த திட்டம் 1971 ஆம் ஆண்டில் இத்தச் சங்கங்கள் கடன் களுக்காக விண்ணப்பம் செய்த சமயத்திலேயே நடப்பில் இருந்தது என்று கூறியது அவர் இட்டுக் கட்டிய கதையாகும்.

இந்த நான்கு சங்கங்களேயும் ஒரே தொகுதியாக ஆக்குவதற்கு கிருஷ்ணகாந்தன் காட்டிய காரணங்கள் விசாரணேயில் மெய் என்று நிலே நிறுத்தப்பட முடியாது என்பது தெளிவு. ஒவ்வொரு தனித் திட்டத்திலும் ஈடுபடுத்தப்படுகின்ற முதலீடு ரூ.5 இலட்சத்துக்கு குறைவாகஇல்லே என்றும் தான், வேளாண்மை நிதிக் கழகம் கடன் உதவி அளிக்கும் என்று மாநில நிலவள வங்கிக்குத் தெரிவிக்கப்பட்டது என அவர் சொன்னர். ஆனல் சேரகுளம் மேற்பெருமாளேரி இறைவைப் பாசனச் சங்கங்கள் ஒவ்வொன்றுமே தனித் தனியாக ரூ. 5 இலட்சத்துக்கு மேற்பட்ட அளவுக்குக் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தன. அது போலவே கீழ, மேல தாதன்குளம் சங்கங்கள் இரண்டும் சேர்ந்து மொத்தம் ரூ. 5இலட்சத்துக்கு மேற்பட்ட தொகை கடன் வழங்க வேண்டுமென விண்ணப்பித்தன. உண்மை இவ்வாறிருக்க, கடன் பெறும் பொருட்டு சேரகுளம், கீழப்பெருமாளேரி இறைவைப் பாசன சங்கங்கள் சேர்ந்து கூட்டாக ஒரு தொகுதியாக கடன் பெறவேண்டிய தேவை எதுவுமில்லே.

வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெறுவதற்குப் பேச்சுவார்த்தை நடத்துவற்கு இந்தச் சங்கங்கள் தகுதி வாய்ந்தவை அல்ல என்னும் உண்மையிலிருந்து கிருஷ்ணகாந்தன் சொன்ன கூற்று உள்ளீடற்றது, சாரமற்றது என்னும் உண்மை புலனுகிறது. மாநில நிலவள வங்கி மட்டுமே தனக்குக் கடன் வழங்குமாறு வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்தை அணுக முடியும். மேலும், அந்தக்

கழகத்திடமிருந்து கடன் வசதி பெறுவதற்கு உரிய தேவைகளை நிறைவு செய்ய வேண்டியது வங்கியின் பொறுப்பாகும். இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்சொன்ன வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்துடன் நேரடியாகத் தொடர்புடையன அல்ல. அவ்வாறிருந்தும் கூட மாநில நிலவள வங்கி எந்த ஒரு சமயத்திலாவது அக் கடன்களை வழங்க வேண்டும் எனக் கேட்டு அக் கழகத்தை அணுகியது என்றோ, அதற்கு மேற் சொன்ன கழகம் திருஞானகாந்தன் தம்முடைய உறுதிமொழிப் பத்திரத்தில் கூறியது போல மேற் சொன்ன நிபந்தனைகளை விதித்தது என்றோ எள் முனை அளவேனும் சாட்சியமில்லை. இவ்வாறு திருஞானகாந்தன் இந்த 4 சங்கங்களையும் ஒரு தொகுதி ஆக்குவதற்குக் காட்டிய காரணங்கள் விந்தையானவை, மெய்யல்ல என்பது தெரிய வரும்.

அன்றியும், இந்தச் சங்கங்களின் தொகுதிக்கு அதிகாரம் பெற்ற முகவராக விழுக்கறிஞர் திரு. உத்தரபாண்டியன் தெரிந்தெடுக்கப்பட்டார் என்று திருஞானகாந்தன் கூறியதும்கூட சிறிதும் நம்பத்தக்கதல்ல. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமோ வேறு சட்ட விதித் துறைகளோ தெரிந்தெடுக்கப்பட்ட குழுக்களைத் தவிர்த்து அதிகாரம் பெற்ற முகவர் ஒருவரைத் தெரிந்தெடுக்க வகை செய்யவில்லை.

மேலும், இந்தக் கடன் பணத்தைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தும் பணியை மேற் கொள்வதற்கு அதனைச் செலவிடுமாறு ஒவ் வொரு உழவர் உறுப்பினர்களுக்கும் அதனைத் தாம் பங்கிட்டுக் கொடுத்துவிட்டதாக திருஞானகாந்தன் கூறியுள்ளார். இது நம்பத்தகாதது என்பதோடு தொடர்புடைய சட்ட விதித் துறைகளுக்கும் சங்கத்தின் துணை விதிகளுக்கும் முற்றிலும் முரணானதுமாகும். எனவே, மற்ற சாட்சியத்தால் மேற் சொன்ன கூற்று பொய் என்பது தெளிவாகி விட்டது.

இந்தச்சங்கங்களில் ஒர்உறுப்பினராக இருப்பவர் என்று கூறப்படும் சண்முகம் என்பவரை 5-A பிரிவின்கீழ் கமிஷன் நியமித்த புலனாய்வு அதிகாரி விசாரணை செய்தார். மேற்சொன்ன சண்முகம் என்பவர், திருஞானகாந்தன் தம்முடைய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல கடன் பணத்தை நபர்வாரியாகப் பிரித்துக் கொடுக்கப் பட்டது என்றோ, தம் பங்குக்குரிய பணத்தைத் தான் பெற்றுக் கொண்டதாகவோ சொல்ல வில்லை. அவர் சொன்னதெல்லாம் எதிர் மனுதாரின் நெருங்கிய உறவினர்கள் அக்கறை கொண்டிருந்த நிறுவனங்களில் தாம் தொடர்ந்து பணியாற்றி வந்தார் என்பதுதான்.

திருஞானகாந்தன் இரண்டாவதாகக் கொடுத்த 15—2—1977 ஆம் நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்துடன், மற்றும் மூன்று பேர்களுடைய உறுதிமொழிப் பத்திரங்களை இணைத்துக் கொடுத்திருந்தார் அல்லவா ? அந்த மூன்று பேர்களில் ஒருவர்கூட இந்த நான்கு சங்கங்களில் எதிலும் உறுப்பினராக இல்லவே இல்லை. ஆவணம் எண் 11-ஐப் பார்த்தால் இவ்வுண்மை புலப்படும்.

இந்த நிலங்களைப் பண்படுத்திச் சமப்படுத்துவதற்காக வேளாண்மைத் துறையிடமிருந்து பரம்புப் பொறிகளை வாடகைக்கு அமர்த்த வேண்டியிருந்தது. (காண்க: சாட்சி 30 காளியப்பன் அளித்த சாட்சியம் ; ஆவணம் எண் 69) ஆகவே, இந்தச் சங்கங்களின் உறுப்பினர்களே நிலத்தைப் பண்படுத்தி, சமப்படுத்தும் பணிகளைச் செய்தனர் என்று திருஞானகாந்தன் கூறியுள்ளது பொய் என்றுரைக்கிறது. 1971 நவம்பரில் மேற் சொன்ன பரம்புப் பொறிகளை வாடகைக்கு அமர்த்துவதற்காகச் செய்துகொள்ளப்பட்ட விண்ணப் பத்தின் அவை இந்தச் சங்கங்களின் நிட்டப் பகுதியில் பயன்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாலைகள் அமைப்பதற்காகவே அந்த பரம்புப் பொறிகள் பயன்படுத்தப்பட்டன என்று கூறி இந்தத் தகவலைத் திரித்துக்கூற திருஞானகாந்தன் முயன்றுள்ளார். திரு. கே. நடராசன் அளித்துள்ள சாட்சியத்தின் மூலம் இந்தத் தகவலும் மறுக்கப்பட்டுவிட்டது. திரு. கே. நடராசன் (C.W. 44) தாம் கடந்த முறை அதாவது 1972 ஜூலை இறுதி வாக்கில் அந்தப் பகுதிக்குச்சென்றிருந்தபோதுகூட அந்தச் சங்கங்களின் நிட்டப் பகுதிக்குள் சாலைகள் எவையும் அமைக்கப்பட்டிருப்பதைக் காணவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும், மாநில நிலவள வங்கியிடமிருந்து பெற்றிருந்த கடன்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக வணிக வங்கிகளிடமிருந்து கடன்கள்பெறப்பட்டன என்று திருஞானகாந்தன் கூறியுமுள்ளார். உண்மையில் சன் பேப்பர் மில்லிடமிருந்து பெற்ற ரூ. 16 லட்சம் முன்பணத்தைக் கொண்டுதான் மாநில நிலவள வங்கியிடமிருந்து பெற்ற கடன்கள் கொடுத்துத் தீர்க்கப்பட்டன. அதற்குப் பிறகுதான் கனரா வங்கியிடமிருந்து கடன்கள் பெறப்பட்டன. சன் பேப்பர் மில்லிடமிருந்து பெற்ற முன்பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காகவே கனரா வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் பயன்படுத்தப்பட்டது என்று திருஞானகாந்தனே ஒப்புக் கொண்டுள்ளார். கனரா வங்கியிடமிருந்து பெற்ற கடனில் பெரும் பகுதி பயிர்க் கடன் ஆகும். முந்தைய கடன்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்காக அக் கடன் பெறப்படவில்லை. மேலும், கனரா வங்கியிடமிருந்து பெற்ற கடன்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டி வீதம் மாநில நிலவள வங்கியிடமிருந்து பெற்ற கடன்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டி வீதத்தை விட மிகவும் குறைவாகும் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். மேலும், கனரா வங்கியிடமிருந்து என்ன காரணத்திற்காக அக் கடன்கள்

பெறப்பட்டனவோ, அக் காரியத்துக்கு அவை பயன்படுத்தப்படவில்லை என்பது உண்மையே ; ஆனலும், இந்த விஷயம் முற்றிலும் கனரா வங்கிக்கும் சங்கங்களுக்கும் இடைப்பட்ட ஒரு விஷய மாகும்.

புகைப்படங்கள்.

இவி கிருஷ்ணகாந்தன் தம்முடைய உறுதி மொழிப் பத்திரத்தில் தாக்கல் செய்துள்ள புகைப் படங்களைக் குறித்துக் காணலாம். இந்தப் புகைப்படங்கள் இந்தச் சங்கங்களின் நிட்டப் பகுதிக்குத் தொடர்புடையன என்ற வகையில்— வேறெந்தப் பகுதிக்கும் தொடர்புடையன அல்ல என்ற வகையில்—நம்பிக்கைக்குரிய சாட்சியம் எதனேயும் இவை அளிக்கவில்லே. இன்னும், இந்தப் புகைப்படங்களேப் பற்றி கிருஷ்ணகாந்தன் கூறியுள்ள கூற்றை கே. நடராசன் (C. W. 44) அறிந்துள்ள சாட்சியம் பொய்யாக்குகிறது. நடராசன் அச் சங்கங்களின் நிட்டப் பகுதியில் 1972 ஜூலேயில் சென்று பார்வையிட்டுப்பழகு அங்கே (Ex.C.W. 44/21)-ல் புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஒரே ஒரு கட்டிடத்தைத் தவிர வேறு எந்த கட்டிடத்தையும் பார்க்கவில்லே என்று சாட்சியம் அளித்துள்ளார். நடராசன் இந்தப் புகைப்படங்களேப் (Ex. C.W. 44/21-ஐ) பார்த்த பிறகு இவற்றில் காட்டியுள்ள பரப்பளவிற்கு அவர் சென்றிருந்தபோது அங்கு பயிர் செய்யப் பட்டிருக்கவில்லே என்று சொன்னர்.

இந்தப் புகைப்படங்கள் 31—10—1972 ஆம் நாளில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அனுப்பப்பட்டன என்ற எதிர்மனுதாரர்கள் கூறியுள்ள வாக்குமூலத்தைத் திருவாளர்கள் சுப்பையாவும், கேசவ கினியும் கூட மறுத்துள்ளனர். இணேப்பதிவாளரால் (திரு. சுப்பையா) தமக்கு '' இணேப்புக்களாக '' அனுப்பப்பட்டன என்று கூறப்படுகிற இந்தப் புகைப்படங்கள் தமக்கு வந்து சேரவே இல்லே என்று கேசவ கினி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் இணேப் பதிவாளரது கடிதங்களில் பல இடங்களில் விஷயங்கள் சேர்த்தும் அடித்தும் திருத்தப்பட்டுள்ளன என்பதை இங்குக் குறிப்பிடலாம். இத்தகைய திருத்தங்கள் ஐயப்பாட்டினேத் தோற்றுவிக்கும்தன்மையன; அவை அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புகைப்படங்கள் இணேப் பதிவாளரால் அனுப்பப்பட்ட கடிதத்தோடு சேர்த்து அனுப்பப்பட்டன என்று கூறப்படும் கூற்றின் மெய்மை குறித்து கணிசமான அளவுக்கு ஐயத்தை தோற்றுவிப்பனவாக உள்ளன. அந்நாள் இணேப் பதிவாளர் சுப்பையா (C. W. 36) 6—11—1972 ஆம் நாளில் எழுதப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அனுப்பப்பட்ட (Ex C.W. 36/6A) எண்ணுள்ள கடிதம் முற்றிலுமாக அந்நாள் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் சொல்லச் சொல்ல தம்மால் எழுதப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். இருந்தபோதிலும், இந்தக் கடிதத்தில் உள்ள கடைசி இரண்டு வரிகள் மற்ற வரிகளில் உள்ள எழுத்திலிருந்து மாறுபட்ட வடிவத்தில் உள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது என அவர் ஒப்புக் கொண்டார். அக் கடிதத்தில் உள்ள இணேப்புக்களில் பலவற்றைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவற்றிற்கிடையே புகைப்படங்களேப் பற்றியும் குறிப்பிடப்படுகிறது என்றும், ஆனல், அவர் அந்தக் கடிதத்திற்குக் கையொப்பம் இட்ட சமயத்தில் அந்த இணேப்புக்கள் அக் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லே யென்றும் தெளிவுபடுத்தினர். அந்தக் கடிதத்தில் அவர் புகைப்படப் பிரதிகளே இணேத்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தது உண்மையென்றும் ஆனல் கடிதத்தை அனுப்பும் பொழுது அப் புகைப்படங்களே அனுப்பவில்லே யென்றும் சொன்னர். இந்த சாட்சி அந்தக் கடிதத்தில் காணப்படுகின்ற பின்வரும் வாசகங்கள் பின்னல் திருத்தி இணேக்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஒப்புக் கொண்டார். ''.....அவற்றை அறுவடை செய்துவிட்டு அங்கு சிமை அகத்தி (செஸ்பேனியா ரொண்டி ஃப்ளோரா) வாழை போன்ற பணப் பயிர்களே நடவு செய்தனர். புகைப்படங்கள் : (1) வாழைத் தோட்டம் ; (2) இனறும் விசையேற்ற நிலையமும் ; (3) கால்வாய் கட்டப்பட்டு வருதல் ; (4) சிமை அகத்தி (செஸ் பேனியா ரொண்டி ஃப்ளோரா) தோட்டம், (5) விசையேற்றங்கள். ''

இந்தக் கடிதத்தில் புதிதாக விஷயங்கள் அடித்துச் சேர்த்துத் திருத்தப்படாத முன்னர் அக் கடிதவாசகத்தின் கடைசி வாக்கியம் பின்வருமாறு அமைந்திருந்தது என்று சாட்சி கூறினர் :—

''சங்க உறுப்பினர்கள் இந்த வயல்களில் வாழை, நெல் ஆகியவற்றையும் பயிரிட்டுள்ளனர். (இதனேக் கடிதத்துடன் இணேக்கப்பட்டுள்ள புகைப்படப் பிரதிகளிலிருந்தும் அறியலாம்.). இத்தக் கடிதத்தில் முன்னர் கூறிய வரிகளும் புகைப்படங்களேப் பற்றிய விளக்கங்களும் இந்தச் சாட்சி இக் கடிதத்தில் கையொப்பம் இட்டு இதனேச் சென்னேக்குக் கொண்டு செல்வதற்காக ஒரு தனி ஆளிடம் இதனே ஒப்படைத்த பின்னர் சேர்க்கப்பட்டுள்ளன என்று விளக்கினர். அவர் தம்முடைய கடிதத்தில் பிற்பகுதியில் குறிப்பிட்டிருந்தது போல, வாழை, நெற் பயிர்களின் புகைப்படங்கள் அந்தச் சமயத்தில் இவர் கைக்குக் கிடைக்கவில்லேயாதலால் அவை கடிதத்துடன் இணேத்து அனுப்பப்படவில்லே என்று விளக்கினர்.

கேசவ் கினி, (Ex C. W. 36/6 ஆக உள்ள) 31—10—1972 ஆம் நாளிட்ட கடிதத்தைப் பார்த்த பிறகு இக் கடிதத்துடன் புகைப்படங்கள் எதனேயும் தாம் பெறவில்லே என்றும் தட்டச்சு செய்தவருடைய கையெழுத்துக்குக் கீழே காணப் படுகின்ற தட்டச்சு வரிகள்தாம் அந்தக் கடிதத்தைப்

பெற்ற சமயத்தில் அதில் காணப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இந்தக் கடிதத்தைப் பெற்றதற்கு அடையாளமாக இந்த சாட்சி கடிதத்தில் 7—11—1972 ஆம் நாளில் இக் கடிதம் தனி ஆள் மூலமாக ஜெ. என். இன்று வரப்பெற்றார் என்று குறிப்பிட்டு மேலொப்ப மிட்டார். இந்த மேலொப்பக் குறிப்பில் அவர் புகைப்படங்கள் வரப்பெற்றது குறித்துக் குறிப்பிடவில்லை. இந்தக் கடிதத்தைப் பெற்ற பிறகு அவர் (சாட்சி) வேட்டுறவுத் துறைச் செயலாளர் திரு. சி. என். ராகவனுக்கு அனுப்பப்பட்டு அலுவலகக் கோப்பில் 17-வது பக்கத்தில் காணப்படுகிற நேர் முகக் கடிதத்தை வரைந்தார். அந்தக் கடிதத்தில் புகைப்படங்கள் எதையும் பற்றிய குறிப்பேதும் இல்லை.

கிருஷ்ணகாந்தன் அளித்த சாட்சியத்தை மீட, சுப்பையா, கேசவ் கிளி ஆகியவர்கள் அளித்த சாட்சியங்களேயே நாம் பெரிதாக மதிக்கவேண்டும். மேற்சொன்னதுபோல புகைப்படங்கள் அனுப்பப்பட்டன என்று கூறப்படுவது குறித்து கிருஷ்ணகாந்தன் கூறியவை சரியல்ல என்று அவ் விருவரது சாட்சியங்களும் முடிவாகக் காட்டுகின்றன.

கிருஷ்ணகாந்தன் தம்முடைய உறுதிமொழிப் பத்திரத்தில் இந்தச் சங்கங்களில் மொத்தம் 600 உறுப்பினர்கள் இருந்தார் என்று சுசாமல் பொய் உரைத்துள்ளார். அலுவலகப் பதிவேடுகள் காட்டுகின்றபடி இந்தச் சங்கங்களின் உறுப்பினர்கள் பெயர்ப் பட்டியலில் 77 பெயர்கள் மட்டுமே (உண்மையில் 73 பேர்கள் தான்) இடம் பெற்றிருந்தனர் என்பது தெரிய வருகின்றது.

தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 84-வது பிரிவு, சங்கத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் சங்க உறுப்பினராகின்ற சமயத்தில் தம்முடைய நிலத்தை அடைமானம் செய்து அதன் மீது கடன் பெறுவதற்கு சங்கத்துக்கு அதிகாரம் அளித்து உறுதிமொழி ஒன்றைத் தாக்கல் செய்ய வேண்டுமென விதிக்கிறது. இத்தகைய உறுதிமொழியை 77 உறுப்பினர்கள் மட்டுமே தாக்கல் செய்துள்ளார். இவ்வாறு பார்த்தால், இந்த 77 பேர்கள் தவிர மேற்சொன்ன நான்கு சங்கங்களிலும் உள்ள பெயர்ப் பட்டியல்களில் வேறு எவருமே உறுப்பினராக இடம் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவு.

இந்த நான்கு சங்கங்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவரெனக் கூற்றப்படும் வழக்குரைஞர் திரு. உத்தரபாண்டியன் கூட, இச் சங்கங்களுக்காக கடன் கோரும்போது கனரா வங்கியிடம் இச் சங்க உறுப்பினர்களின் விவர அறிக்கையைத் தாக்கல் செய்தார். இந்த விவர அறிக்கைக்கிணங்க, இச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் 277 பேர் மட்டுமே ஆவர்.

மேலே விவாதிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு பார்த்தால், இந்தக்கடன்களை உழவர்கள் எவ்வாறு பயன்படுத்தினர் என்பது குறித்த கிருஷ்ணகாந்தனின் கூற்றை ஒரேயடியாக மறுக்க வேண்டியுள்ளது. இக் கடன் தொகைகள் எக் காரியங்களுக்காக எந்நாளில் பெறப்பட்டனவோ அந்நாளுக்கும் இக் கடன் தொகைகள் திருப்பிச் செலுத்தப்பட்ட நாளுக்கும் இடைப்பட்ட காலத்தில் இக் கடன் தொகைகள் முழுவதும் பயன்படுத்தப்படவில்லை என்று முடிவாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

திரு. சி.பா. ஆதித்தனுருடன் கிருஷ்ணகாந்தனுக்குள்ள நெருங்கிய தொடர்பு

திரு. கிருஷ்ணகாந்தன், திருநெல்வேலியிலுள்ள தினத்தந்தி அலுவலகத்தின் மேலாளர் என்பதை நினைவு கூலாம். திரு. கிருஷ்ணகாந்தனுல் தாக்கல் செய்யப்பட்ட 20-5-1976 ஆம் நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்திற்கும் திரு. சி. பா. ஆதித்தனாரால் தாக்கல் செய்யப்பட்ட 23-7-1976 ஆம் நாளிட்ட உறுதிமொழிப் பத்திரத்திற்கும் இடையே அதிக ஒற்றுமை காணப்படுகிறது. இவ்விரண்டு உறுதிமொழிப் பத்திரங்களும் ஒரே தட்டச்சுப் பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு ஒரே மாதிரியான தாளில் படியெடுக்கப்பட்டு உள்ளன என்று கிடைக்கிறது. திரு. கிருஷ்ணகாந்தன் வாக்குமூலம் அளிக்கத் தானே முன்வருவதாகச் சென்னையில் சிறப்புப் பணியில் இருந்த திரு. B. விஜயராகவனுக்குத் தந்தி ஒன்றைக் கொடுத்ததாக இதன் முன் பகுதியில் சுவளித்தோம். இத் தந்தி திரு. பி. விஜயராகவனுக்குக் கொடுக்கப்பட்டதாகும். 2-9-1976 ஆம் நாளிட்ட இத் தந்தி சென்னையிலுள்ள தினத் தந்தி அலுவலகத்திலிருந்து கொடுக்கப்பட்டது. இத் தந்தியின் நகல் ஒன்று, திரு. சி. பா. ஆதித்தனரின் புதுடில்லி வழக்குரைஞர் திரு. வினீத் குமாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தந்தியைக் கிழித்தெறிய திரு. கிருஷ்ணமூர்த்தி முயன்றார் என்றும், ஆனால், தான் தடுத்துவிட்டதால் அது நடைபெறவில்லையென்றும் வருமான வரி அதிகாரி திரு. ஜி. இலட்சுமிநரசிம்மன் சாட்சியம் அளித்துள்ளார். இத் தந்தியில் உள்ள வாசகங்கள் தினத்தந்தி அலுவலகத்திலிருந்து டெலக்ஸ் மூலம் அனுப்பப்பட்டுள்ளன என்பதை இச் சூழ்நிலை மேலும் தெரிவிக்கிறது.

கவனிக்கப்படவேண்டிய பிறிதொரு முக்கிய சூழ்நிலை யாதெனில், 20-5-1976 ஆம் நாளிட்ட தனது முதல் உறுதிமொழிப் பத்திரத்தோடு, அலுவலகக் குறிப்புகளின் நகல்களையும், மாநில நிலவள வங்கியின் மேலாளருக்கு திரு. கே. நடராசன் அனுப்பிவைத்த விசாரணை அறிக்கை உட்பட ஏனைய அலுவலகக் கடிதங்களையும், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் சுப்பையாவால் கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளருக்கு எழுதப்பட்ட

கடிதத்தையும் திருஞானசாந்தன் இயல்பான முறையில் இணைத்து அனுப்பியுள்ளார். குறிப்பாக, திருஞானசாந்தன் இந்த உறுதிமொழிப் பத்திரத்தைத் தாக்கல் செய்தபோது எதிர் மனுதார் யாராலும் ஆவணங்கள் பார்வையிடப்படவில்லை என்னும்போது, அலுவலகக் கடிதங்கள், அரசு ஆவணத்தின் ஒரு பகுதி ஆகியவற்றின் நகல்களை எவ்வாறு திரு. திருஞானசாந்தன் வைத்திருக்க முடிந்தது என்பது புரியவில்லை. இந்த ஆவணங்களை அவர் வைத்திருந்தது பற்றி விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை. இந்த ஆவணங்களைத் திரு. சி. பா. ஆதித்தனர் அவரிடம் கொடுத்திருக்கக் கூடும் என்று கூறுவது நியாயமற்றதாகாது. இந்த ஆவணங்களின் நகல்களைப் எதிர் மனுதார் திரு. சி.பா. ஆதித்தனர் கமிஷன் முன் தாக்கல் செய்த 23-7-1976 ஆம் நாளிட்ட தனது உறுதிமொழிப் பத்திரத்தோடு சேர்த்து அனுப்பியுள்ளார் என் பதிலிருந்து இது மேலும் உறுதிப்படுகிறது.

திரு. திருஞானசாந்தனுக்கும் எதிர்மனுதாரர் சி. பா. ஆதித்தனருக்கும் இடையே உள்ள தெளிவான தொடர்பைச் சுட்டிக் காட்டும் பிறிதொரு சூழ்நிலை யாதெனில், நியமிக்கப்பட்ட அதிகாரி திரு. D. மஜேகரனுல் விசாரணை செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகத் திரு. திருஞானசாந்தனுல் தாக்கல் செய்யப்பட்ட புகார் மனுவின் நகல் எதிர் மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனரின் வழக்குரைஞர் திரு. விஸ்வநாதருக்கு அனுப்பப்பட்டது என்பதாகும்.

கடன்களைத் திருப்பிச் செலுத்தல்

கடன்களைத் திருப்பிச் செலுத்தியது குறித்துச் சான்று உள்ளது. எதிர்மனுதாரரால் எடுக்கப் பட்ட மூடிமறைக்கும் நடவடிக்கைகளைக் கூறக் கூடிய பிறிதொரு கூருகும் இது என்பது, மாறிய அரசு, மனுதாரர் ஆகியோரது வழக்குரைஞரின் வாதம் ஆகும்.

இந்தக் கடன்கள் எக் காரியங்களுக்காக வழங்கப் பட்டனவோ அக் காரியங்களுக்கு இவை முழுவதும் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிய நேரடியாக நிலத்துக்கே சென்று ஆய்வைப் புதிதாகத் தங்களது வட்டார அலுவலகம் நடத்தியதற்குப் பிறகு, பயன்பாடுகுறித்து மீண்டும் தாங்கள் கருதிப் பார்ப்போம் என்று தமிழ் நாடு நிலவள வங்கியின் தலைவருக்கு 19-7-1972 ஆம் நாளிட்ட தங்களது கடிதத்தின் மூலம் (இந்திய ரிசர்வ் வங்கியின் 23 ஆம் எண்ணுள்ள ஆவணத்தின் 117 வது பக்கத்தைக் காண்க) இந்திய ரிசர்வ் வங்கி எடுத்துத் தெரிவித்தபோது, இக் கடன் தொகைகளை இனியும் பாக்கியாக விட்டுவைப்பது விரும்பத் தக்கதல்ல என்று இச் சங்கங்களைக் கட்டுப்படுத்தும் நபர் அல்லது நபர்கள் எண்ணி, கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக உடனடி நடவடிக்கைகள் எடுத்தனர். திருநெல்வேலி ஆய்வு மாளிகையில் 28-7-1972-ல் அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனுரைக் குத்தாலம் சந்தித்தபோது, சங்கங்கள் கடன் தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்திவிட வேண்டும் என்றும், இக் கடன்கள் குறித்து எவ்வளவு தொகை செலுத்த வேண்டும் என்று துல்லியமாகக் கணக்கிட்டு தன்னிடம் அறிவிக்குமாறும் திரு. குத்தாலத்திடம் அமைச்சர் கூறியதாக ஏற்கெனவே கண்டுள்ளோம். வணிக வங்கியிடமிருந்து கடன்களைப் பெற இச் சங்கங்களுக்கு திரு. சி. பா. ஆதித்தனர் நேரடியாக உதவி புரிந்தார் என்பது, சம்பந்தப்பட்ட அலுவலகக் கோப்புகளின் குறிப்புகளிலிருந்தும் கூட்டுறவுச் சங்கங்களின் அக் காலப் பதிவாளர் திரு. P. M. பெல்லியப்பாவின் உறுதிமொழிப் பத்திரத்திலிருந்தும் (உறுதிமொழிப் பத்திரம் எண் 25) கூட்டுறவுத் துறையின் அப்போதைய அமைச்செயலாளர் திரு. P. குருமூர்த்தியின் உறுதி மொழிப் பத்திரத்திலிருந்தும் (உறுதி மொழிப் பத்திரம் எண் 26) தெளிவாகத் தெரிய வருகிறது.

திரு. P. M. பெல்லியப்பா (உறுதிமொழிப் பத்திரம் எண் 25), தனது உறுதிமொழிப் பத்திரத்தில் பின் வருமாறு கூறியுள்ளார்.

> "கனரா வங்கியிலிருந்து கடன் பெறமேற் சொன்ன சங்கங்களுக்கு ஒப்புதல் அளிக்குமாறு திரு. சி. பா. ஆதித்தனர் வாய்மொழியாக எனக்குக் கட்டளையிட்டார். இறைவைப் பாசனச் சங்கங்களின் 15(c) துணை விதியின் கீழ் பதிவாளரின் அதிகார வரம்பிற்குள் இதனைச் செய்யலாம் என்பது எனக்குத் தெரியும். ஆனுல், இச் சங்கங்கள் முன்னர் வளர்ச்சிக் கடன்களைப் பெற்று அவற்றை உரிய முறையில் பயன்படுத்த வில்லை என்று இச் சங்கங்கள் குறித்து இந்திய ரிசர்வ் வங்கி பாதகமான கருத்துரையை வழங்கியுள்ளதாலும், இச் சங்கங்களின் நடவடிக்கைகள் குறித்துச் சட்டப் பேரவையில் வினுக்கள் தொடுக்கப்பட்டதாலும், இவை அனைத்தையும் நான் 3-8-1972-ல் அரசுக்குத் தெரிவித்து, இந்த நான்கு இறைவைப் பாசனச் சங்கங்கள் வணிக வங்கி மூடமிருந்து கடன்கள் பெறுவதற்காக அவற்றின் செயற்குழுப்புக்கு அரசு ஒப்புதல் அளிக்குமா என்றும், தேவையான அனுமதியைப் பதிவாளர் வழங்க இயலுமா என்றும் நான் அரசுக்கு எழுதிக் கேட்டேன். ஒப்புதல் வழங்கப் பதிவாளர் தகுதிவாய்ந்த அதிகாரியாவார் என்று அரசு எனக்குத் தெரிவித்தது. இச் சங்கங்களுக்கு முன்னர் கொடுக்கப்பட்ட கடன்கள் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்று மனநிறைவளிக்கத்தக்க அளவில் நான் தெரிந்து கொள்ளும் நோக்கோடு, இனம் வாரியாகக் கடன்கள் பயன்படுத்தப்பட்டது குறித்த விவரங்களையும், இச் சங்கங்கள் கருங்குழம் நிலவள

வங்கிக்குத் திருப்பிச் செலுத்திய தொகை குறித்த விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு திருநெல்வேலி இணைப் பதிவாளர் திரு. என். சுப்பையாவிற்கு நான் கட்டளையிட்டேன். எனது கட்டளைக்குத் திருநெல்வேலி இணைப் பதிவாளர் திரு. என். சுப்பையா பதில் எதையும் அனுப்பி வைக்கவில்லை. நான் எடுத்த இந்த நடவடிக்கையைக் கூட்டுறவுத் துறை அமைச்சர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் பொறுமை இழந்து, இணைப் பதிவாளரின் அறிக்கைக்காகக் காத்திராமல் நான் ஒப்புதல் வழங்கவேண்டுமென வற்புறுத்தினார். அவ்வாறு செய்ய நான் தயாராக இல்லை. சட்டப் பேரவை அந்நேரத்தில் கூடக்கூடும் என்பதால். கனரா வங்கியிலிருந்து இச் சங்கங்கள் விரைவாகக் கடன் பெற வேண்டும் என்று அமைச்சர் விரும்பினார் என்பது எனது நினைவாகும். இச் செயற்குறிப்பை ஏற்றுக்கொள்ளுமாறு அவர் என்னிடம் கேட்டுக் கொண்டதோடு, தலைமைச் செயலகத்தில் இருக்கும்போது என்னோடு நேரடியாகப் பேசியதன் மூலமும், சுற்றுப்புயணத்தில் இருக்கும்போது தொலைபேசி மூலம் பகலிலும் இரவிலும் தொடர்பு கொண்டு பலதடவைகள் என்னோடு நீண்ட நேரம் பேசியதன் மூலமும், ஏறத்தாழ 1 வார கால அளவிற்கு அவர் என்னை மிகவும் கட்டாயப்படுத்தினார். நீங்கள் என்னை எவ்வளவு தான் கட்டாயப்படுத்தினாலும், முன்னர் கொடுக்கப்பட்ட கடன்கள் குறித்த பயன்பாடு பற்றி உரிய விசாரணை நடத்தாமலும், இணைப் பதிவாளரின் அறிக்கை வரப்பெறாமலும், இச் செயற்குறிப்பை நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று திட்டவட்டமாக அவரிடம் கூறினேன்.....இச் செயற்குறிப்பை நான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர் விரும்பினால், முதலமைச்சரின் ஒப்புதலைப் பெற்று ஆணை ஒன்றை அவர் பிறப்பிக்க வேண்டுமென்றும், அதற்கு முதலமைச்சர் ஒப்புதல் வழங்கியுள்ளார் என்று நான் மனநிறைவடையும் வரையில் தேவையான கட்டளை இந்நான்கு சங்கங்களுக்கு நான் பிறப்பிக்க மாட்டேனென்றும் அவரிடம் மேலும் கூறினேன். இறுதியாக, என்னோடு பேச்சுவார்த்தை நடத்துவதும் இப் பிரச்னை குறித்து என்னைக் கட்டாயப்படுத்துவதும் பயனளிக்காது என்று உணர்ந்து கொண்டு, கோப்பு ஒன்றைச் சுற்றுருட்ட முறையில் அனுப்பி 7-8-1972-ல் முதலமைச்சரின் ஒப்புதலே அவர் பெற்றார். தலைமைச் செயலகக் கோப்பை அமைச்சரின் நேர்முக உதவியாளர் என்னிடம் கொண்டு வந்தார். முதலமைச்சரின் ஆணையைக் கண்ணுற்ற பிறகு, எனது அலுவலகக் கோப்பில் 9ஆவது பக்கத்தில் குறிப்பு ஒன்றை எழுதி வைத்து அரசின் கட்டளைக்கு இணங்க நடந்தேன்''

P. குருமூர்த்தி (உறுதிமொழிப் பத்திரம் எண் 26).

அப்போதிருந்த துணைச் செயலாளர் திரு. P. குருமூர்த்தி தனது உறுதிமொழிப் பத்திரத்தில் பின்வருமாறு கூறியுள்ளார் :—

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நான்கு இறைவைப் பாசனச் சங்கங்கள் வணிக வங்கியிடமிருந்து நிதி உதவி பெறுவதற்கு அனுப்பிய செயற்குறிப்புகளுக்கு அரசு ஒப்புதல் அளிக்குமா என்பது குறித்த விளக்கங்களைக்கோரி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடமிருந்து கடிதம் ஒன்று 3-8-1972-ல் வந்தது. பின்னர், மாநில நிலவள வங்கியிடமிருந்து அறிக்கை ஒன்று அரசுக்கு 7-8-1972-ல் வந்தது. ''தொலைபேசி மூலம்'' விடுக்கப்பட்ட வேண்டுகோளைச் சுட்டிக்காட்டி இக் கடிதம் தொடங்குகிறது. தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்ட இத் தகவல் என்னுலோ மாநில நில வள வங்கியின் கடிதம் எழுதப்பட்டுள்ள அரசுச் செயலாளர் உட்பட கூட்டுறவுத் துறையில் உள்ள யாராலுமோ எனக்குத் தெரிந்து தெரிவிக்கப்படவில்லை. அந்நாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் மாநில நிலவளவங்கி அதிகாரிகளோடு நேரடியாக நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். குறிப்பிடப்படும் இதைத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்ட தகவல் நேரடியாக அவராலோ அமைச்சரது அலுவலகத்திலிருந்தோ தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ''இந்த அமைச்சர் இந்த நான்கு இறைவைப் பாசனச் சங்கங்கள் குறித்துச் சிறப்புக் கவனம் செலுத்துவது வழக்கமாகும். இவ்வாறு இவர் சிறப்புக் கவனம் செலுத்தினார் என்பதற்குப் பின்வருவனவை சான்றாக உள்ளன :—

(1) அரசு ஆணையின் நடப்புக் கோப்பின் 19ஆவது பக்கத்தில் இந்த நான்கு சங்கங்களின் உறுப்பினர்கள், அவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிலப்பரப்பு ஆகியவை குறித்த விவரங்களை அமைச்சர் தனது கைப்பட எழுதியுள்ளார்.

(2) மாநில நிலவள வங்கியின் 7-8-1972 ஆம் நாளிட்ட அறிக்கை வரப்பெற்றதா, அறிக்கை முதலியவற்றுடன்கூடிய அக் கோப்பு ஏன் அவருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று தொலைபேசி மூலம் திரும்பத் திரும்ப அமைச்சர் கேட்டுள்ளார். அதலால் தான் அக் கோப்பினைச் செயலாளர் மூலம் சுற்றுருட்ட முறையில் அவருக்கு அனுப்பி வைக்க நான் விரும்பினேன்... முதலமைச்சரின் ஒப்புதலே அமைச்சரே பெற்றார். முதலமைச்சரின் கையொப்பத்தைப் பெறுவதற்கு தனது நேர்முக உதவியாளர் மூலம் ஏற்பாட்டைச் செய்திருக்க வேண்டும் அல்லது முதலமைச்சரைத் தானே நேரடியாகச் சந்தித்து அவரது கையொப்பத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

(3) நமது செயலாளர் மூலம் கூட்டுறவுத் துறை அமைச்சருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கூறி இக் கோப்பினைச் செயலாளருக்கு

7-8-1972-ல் அனுப்பி வைத்தேன். ஆனல், அதனைச் செயலாளர் பார்க்கவில்லை. முத லமைச்சரின் ஆணைகளோடு இக் கோப்பு திரும்பி வந்தபோது ''செயலாளர்'' என்று நான் எழுதி யிருந்ததை யாரோ அடித்திருந்ததைக்கவனித்தேன். நான் அதை அடிக்கவில்லை. அமைச்சர் மிகவும் அவசரப்பட்டார். அதனல் அக் கோப்பு எனது பிரிவிலிருந்து அல்லது செயலாளரின் அறையி லிருந்து நேரடியாக அமைச்சரின் பணியாளர்கள் மூலமாக அமைச்சருக்கு எடுத்துச் செல்லப் பட்டிருக்க வேண்டும் என்பது வெளிப்படையாகும்.

(4) இக் கோப்பை அமைச்சர் அடிக்கடி கோரினர் என்பது எனக்கு நினைவிருக்கிறது. பிரச்னையில் உள்ள இந்த இறைவைப் பாசனச் சங்கங்கள் வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெற அனுமதித்து 8-8-1972 ஆம் நாளிட்ட குறிப்பாணை செயலா ரின் ஒப்புதலோடு பிறப்பிக்கப்பட்ட பிறகும் கூட இக் கோப்பு அமைச்சரது நேர்முகப் பணியாளர்களால் அமைச்சரிடம் கொண்டு செல்லப்பட்டது. அக் கோப்பு அமைச்சரிடம் 1½ மாத கால அளவிற்கு மேலாக இருந்தது. இக் கோப்பை அனுப்பி வைக்குமாறு அரசிதழ் பதிவு பெற்ற நேர்முக உதவியாளருக்குத் திரும்பத் திரும்ப நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்ட பிறகு தான் அக் கோப்பு என்னிடம் திரும்பி வந்தது.

(வலியுறுத்திக் கூறுவதற்காக இப் பகுதிக்கு அடிக்கோடிட்டுள்ளேன்)

இந்த உயர் அதிகாரிகள் அளித்த வாக்கு மூலங்களை ஐயுறுவதற்குக் காரணம் ஏதும் இல்லை. குறிப்பாக, இவர்களது வாக்குமூலங்களை அலுவ லகக் குறிப்புகளும் தொடர்புள்ள கோப்பு களில் உள்ள கடிதங்களும் உறுதிப்படுத்தும்போது இவர்களது உறுதிமொழிகளை ஐயுறுவதற்குக் காரணம் ஏதும் இல்லை. (புலஞ்ய்வு அறிக்கையின் 35, 36ஆவது ஆவணங்களைக் காண்க).

இந்நான்கு சங்கங்கள் சார்பாக திரு. உத்தர பாண்டியன் நடுத்தர கால, குறுகிய காலக் கடன் களாக மொத்தம் 16.20 இலட்சம் ரூபாய் கடன் பெற 1972 ஜூன் தொடக்கத்தில் பெங்களூரில் உள்ள தலைமை அலுவலகத்தின் வேளாண்மை நிதி உதவிப் பிரிவுடன் தொடர்பு கொண்டார். உத்தரபாண்டியன் கனரா வங்கி யோடு தொடர்புகொள்வது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, யாதேனுமொரு வணிக வங்கியிடமிருந்து கடன்கள் பெறுவதற்கு அனுமதி கோரி 28-7-1972ஆம் நாளிட்ட கடிதம் ஒன்றைக் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பிதிவாளருக்கு அவர் எழுதினர். திரு. உத்தரபாண்டியனின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு, வணிக வங்கிகளிடமிருந்து இச் சங்கங்கள் கடன்களைப் பெறத் தேவையான ஒப்புதலை வழங்கப் பரிவுரை செய்து 29-7-72 ஆம் நாளிட்ட கடிதம் ஒன்றை அந்நாள் இணைப்பதிவாளர் திரு சுப்பையா (C.W. 36) எழுதினர். இந்தடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், இந்த நான்கு சங்கங்களும் செலுத்த வேண்டிய கடன் தொகை குறித்து 16 இலட்சம் ரூபாய் திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியில் செலுத்தப் பட்டது. இந்த நான்கு சங்கங்கள் சார்பாகச் சன் பேப்பர் மில்லால் வழங்கப்பட்ட காசோலைகள் மூலம் இந்த 16 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட் டது. இச் சங்கங்கள் புளிச்சை (மெஸ்தா) போன்ற மூலப் பொருட்களை சன் பேப்பர் மில்லுக்கு வழங்குவதற்காக அவற்றிற்குக் கொடுக்கப்படும் முன்பணமாக இத் தொகை காட்டப்பட்டது. மீண்டும், சன் பேப்பர் மில் லால் கொடுக்கப்பட்ட 16 இலட்சம் ரூபாய் தினத்தந்தியிலிருந்தும், ஆதித்தனர் கல்வி அறக்கட்டளையிலிருந்தும் பெறப்பட்டது ஆகும். ஆதித்தனர் கல்வி அறக்கட்டளை வழங்கிய 4 இலட்சம் ரூபாய் கடனுக்கு ஆண்டொன்றுக்கு 12 சதவீத வட்டியளிக்க வேண்டும். ஆனல் தினத் தந்தி அளித்த 12 இலட்சம் ரூபாய் கடனுக்கு சன் பேப்பர் மில், காகிதத்தினை வழங்க வேண்டும்.

புளிச்சை (மெஸ்தா) வழங்குவதற்காக சன் பேப்பர் மில்லால் 16 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது என்பதெதிர் மனுதாரர் கூறுவது நம்பத்தகுந்ததாக இல்லையென்று திரு.வானமாமலை கூறினர். ஏனெனில், இச் சங்கங்கள் மிகவும் குறைந்த அளவு மெஸ்தாவைத்தான் அதாவது 17,172.85 ரூபாய் மதிப்புள்ள மெஸ் தாவைத்தான் வழங்க முடிந்தது. அதுவும் ரொக்கமாக வீலை கொடுக்கப்படுவதன்பேரில் தான் வழங்கியது என்று கட்டிக் காட்டப்பட்டு உள்ளது. வழங்கப்பட்ட 16 இலட்சம் ரூபாய் கடனுக்கு இச் சங்கங்கள் மெஸ்தாவை வழங் கவேயில்லை என்று வலியுறுத்திக் கூறப்படு கிறது. இச் சூழ்நிலைகளைக் கொண்டு பார்த்தால், மூலப்பொருள் வழங்கப்பெறுவதற்காக இந்த 16 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்படவில்லை. கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற் காகத்தான் வழங்கப்பட்டது என்று பொருள் கொள்வது தவிர்க்க முடியாததாகும்; இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகள் மேற்கொண்டும் ஆய்வு செய்வதைத் தடுக்கும் பொருட்டு இந்த 16 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

இக் கூற்றில் நிரம்ப உண்மை உள்ளது என்று எனக்குத் தெரிகிறது. உண்மையில் கூறப்போனல், இச் சங்கங்களின் கணக்குகளில் போதிய அளவிற்குத் தொகை இல்லை. அவர்களது வங்கிக் கணக்கில் அவர்களுக்கிருந்த மொத்தத் தொகை 1.70 இலட்சம் ரூபாய்தான். இச் சங்கங்கள் கட்டவேண்டிய கடன் தொகை 20.06 இலட்சம் ரூபாய் ஆகும். ஆனல், இச் சங்கங்கள் சன்

பேப்பர் மில்லிலிருந்து பெற்ற கடன் தொகை 16 இலட்சம் ரூபாய் ஆகும். இச் சங்கங்களின் கணக்குகளில் வங்கியிலிருந்த தொகை 1.70 இலட்சம் ரூபாய் ஆகும்; இவ்விரண்டு தொகை களையும் கூட்டிப்பார்த்தால் மேற்சொன்ன 20.06 இலட்சம் ரூபாய் கடனைக் கட்டித் தீர்க்க சுமார் 3 இலட்சம் ரூபாய் குறைந்தது. எனவே, இந்த 3 இலட்சம் ரூபாய் ஏனைய சில ஆதாரங்களிலிருந்து பெறப்பட்டது. இந்தப் பற்றாக்குறையான 3 இலட்சம் ரூபாயைச் சரிக்கட்ட எவ்வழியிலிருந்து தொகை பெறப் பட்டது என்பது குறித்து எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனாரோ திருஷ்ணகாந்தனோ உத்தர பாண்டியனோ விளக்கம் எதுவும் அளிக்கவில்லை. தனது சொந்த நிதி வாயிலிலிருந்து அல்லது தனது சொந்த பிணையத்தின் பேரில் இந்த 3 இலட்சம் ரூபாயைத் திரட்டும் அளவிற்கு இச் சங்கங்களின் உறுப்பினர்கள் எவரும் செல்வ வளம் மிக்கவர்கள் அல்லர். எனவே, இது குறித்த விவரம் வெளியில் தெரியக்கூடாது என்று அஞ்சிய எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனார்தான் இந்த 3 இலட்சம் ரூபாயைக் கணக்கில் காட்டப்படாத வழியிலிருந்து பெறு வதற்கு ஏற்பாடு செய்தார் எனலாம்.

இக் கடன் தொகைகள் இரண்டு ஆண்டுக் கால அளவிற்குள் திருப்பிச் செலுத்தப்பட்டு விட்டன என்பதோடல்லாமல், சங்கங்களின் பங்கு மூலதனம் 3 ஆண்டுக்கால அளவு முடிவடை வதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கக்கூடாது என்று வங்கியின் தீண விதிகளில் கூறப்பட்டிருந்த போதிலும் இந்த நான்கு சங்கங்களின் பங்கு மூலதனம் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

பெங்களூர் கனரா வங்கிக்குக் கேசவ் கிளி சென்றது.

வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெற திரு. சி. பா. ஆதித்தனர் நேரடியாக அக்கறை செலுத்தினர் என்பதற்குச் சான்று உள்ளது. இதற் காக கனரா வங்கியிலிருந்து கடன் பெறுவதற் காகப் பேச்சு வார்த்தை நடத்துமாறு கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திரு. கேசவ் கினியை அவர் பெங்களூருக்கு அனுப்பி வைத் தார். கேசவ் கினியைப் புலனுய்வு அலுவலர் 5-A பிரிவின் மேற் விசாரணை செய்தனர் என்ப தோடு, உறுதிமொழி எடுத்துக் கொள்வதன் பேரில் C. W. 40 ஆக அவரைக் கமிஷனும் விசாரணை செய்தது. எதிர்மனுதாரர் அவரை வீரி வாகக் குறுக்கு விசாரணை செய்தார். அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் கட்டளை யிட்டதன் பேரில் சாட்சி பெங்களூர் சென்று கனரா வங்கியின் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டதாகத் திரு. கேசவ் கிளி சாட்சியமளித் துள்ளார். கேசவ் கினி நடத்திய பேச்சுவார்த் தைகளின் பலனுக, இச் சங்கங்களுக்குப் பயிர்க் கடன்களாக 9,65,430 ரூபாயையும், நடுத்தர காலக் கடனுக 61,213 ரூபாயையும் வழங்க கனரா வங்கி அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

ஆர். கைலாசத்தின் உறுதிமொழிப் பத்திரம்.

கனரா வங்கியின் திருநெல்வேலி ஜங்ஷன் கிளை மேலாளராக 1972 ஆம் ஆண்டு ஜூன் 1—லிருந்து 1973 மே வரையில் உள்ள கால அளவில் திரு. கைலாசம் இருந்துள்ளார் என்று அவரது உறுதி மொழிப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இக் கால அளவில் சேரகுளம் தொகுதி இறைவைப் பாசனச் சங்கங்களுக்குப் பயிர்க் கடன்களும் நடுத்தரக் காலக் கடன்களும் வழங்கப்பட்டன. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

1. சேரகுளம் இறைவைப் பாசனச் சங்கம்:

(a) ரூ. 2,56,218·75—பயிர்க் கடன்.
(b) ரூ. 83,835·00—நடுத்தர காலக் கடன்.

2. மேழப்பெருமாநேரி இறைவைப் பாசனச் சங்கம்:

(a) ரூ. 3,04,436·25—பயிர்க் கடன்.
(b) ரூ. 1,55,030·66—நடுத்தர காலக் கடன்.

3. கீழ தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கம்:

(a) ரூ. 1,95,435.00—பயிர்க் கடன்.
(b) ரூ. 46,575·00—நடுத்தர காலக் கடன்.

4. மேல தாதன்குளம் இறைவைப் பாசனச் சங்கம்:

(a) ரூ. 2,09,340·00—பயிர்க் கடன்.
(b) ரூ. 65,790·00—நடுத்தர காலக் கடன்

பயிர்க்கடன் ஓராண்டுக் காலத்திற்குள்ளும், நடுத்தர காலக் கடன் ஐந்தாண்டுக் காலத்திற் குள்ளும் சமமான ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தத்தக்கவையாகும்.

நடுத்தர காலக் கடன், குறுகிய காலக் கடனுக மொத்தம் 15.60 இலட்சம் ரூபாய் கடன் பெறு வதற்கான திட்டத்துடன் மதுரையில் உள்ள கனரா வங்கியின் மேலாளர் திரு. எஸ். திருவேங்கடத்தை இந்த நான்கு சங்கங்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் திரு. உத்தர பாண்டியன் 1976 ஆம் ஆண்டு ஜூன் 8—ல் அணுகினர் என்றும், இதற்கு முன்னர் இவர் இச் சங்கங்கள் மாநில நிலவள வங்கிக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டிய கடனுக்காக 18 இலட்சம் ரூபாய் கடனை மாற்றிக் கொள்ளுமாறு கனரா வங்கியை அணுகினர் என்றும், ஆனுல் அதற்குக் கனரா வங்கி இணங்கவில்லை என்றும் சாட்சி மேலும் கூறியுள்ளார்.

அதன்பிறகு, திரு உத்தரபாண்டியன் இத்தக் கடன் விண்ணப்பங்களை 1972ஜூன் முதல் பாதியில் கொடுத்தார். 1972 ஜூன் 14 ஆம் நாளிட்ட அறிக்கையைச் சாட்சி முதலில் தலைமை அலுவல கத்திற்குத் தாக்கல் செய்தார். அந்த வங்கி இக் கடன் விண்ணப்பங்களுக்குப் பரிவுரை செய்து, ஆனல் அரசின் உத்தரவாதம் பெற வேண்டியது தேவை என்று வலியுறுத்திக் கூறியது. அரசின் உத்தரவாதம் வேண்டுமென்று வங்கி வலியுறுத் தினல் இதில் அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனர் அக்கறை கொண்டுள்ளதால் அரசின் உத்தரவா தத்தைத் தான் பெற்றுத்தர இயலும் என்று தனது மறுமொழியில் அவர் தெரிவித்தார். இக் கடன் தொகைகள் 1972 ஜூலை 5-ல் அனுமதிக் கப்பட்டன. பயிர்க்கடன் 7 சதவீத வட்டியுடனும் நடுத்தரக் காலக் கடன்கள் 8 சதவித வட்டியுட னும் திருப்பிச் செலுத்தத் தக்கவையாகும்.

கனரா வங்கியிடமிருந்து இக்கடன் தொகை யைப் பெற்றதன் பேரில், 17—8—72-ல் 1,26,250 ரூபாயும், 29—3—73 ல் 20,410 ரூபாயும் எடுக்கப்பட்டுள்ளன என்பதற்கு ஆவணச்சான்று உள்ளது வெளிப்படை. இவ்வாறு எடுக்கப்பட்ட தொகையிலிருந்து, சன் பேப்பர் மில்லுக்கு 21—8—72-ல் 5,50,000 ரூபாயும், 29—8—72-ல் 5,00,000 ரூபாயும், 31—12—72-ல் 1,53,000 ரூபாயும், 21—12—72-ல் 1,10,000 ரூபாயும், 13—3—73-ல் 95,000 ரூபாயும் கொடுக்கப்பட்டுள்ளன. மெல்தாவை வழங்குவதற்காகச் சன் பேப்பர் மில் இச் சங்கங்களுக்குக் கொடுத்ததாகக் கூறப்படும் 16 இலட்சம் ரூபாய்க் கடனைத் திருப்பிச் செலுத்தித் தீர்ப்பதற்காக சன் பேப்பர் மில்லுக்கு மேற்சொன்ன தொகைகளோடு இந்நான்கு சங்கங்களும் 21—12—72-ல் 1,10,000 ரூபா யையும், 30—6—73-ல் 1,92,000 ரூபாயையும் கொடுத்துள்ளன. கடைசியாகக் கூறப்பட்ட இந்த இரு தொகைகளும் சேர்ந்து மொத்தம் 3,02,000 ரூபாய் எவ்வழியிலிருந்து பெறப் பட்டது என்பது இன்னும் கணக்கு காட்டப் படாமல் உள்ளது.

ஆவணங்களிலிருந்து எடுக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட பின்வரும் தொகுப்புகள், இந்த நான்கு சங்கங்கள் பெற்ற கடன்கள்—முன் பணங்களைத் திருப்பிச் செலுத்தியது தொடர்பான நிலைமையைப் புரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

இந்த நான்கு சங்கங்கள் மாநில நிலவள வங்கிக்குக் கடனைத் திருப்பிச் செலுத்தியது குறித்த விவரங்கள்.

முதல் தவணைத் தொகை.

சங்கத்தின் பெயர்.	திருப்பிச் செலுத்தப் பட்ட மொத்தத் தொகை.	சரிக்கட்டல் மூலம்	நொக்கமாக
	ரூ.	ரூ.	ரூ.
மேல தாதன்குளம் சங்கம்	47,399.68	இல்லை.	47,399.68*
கீழ தாதன்குளம் சங்கம்	44,837.54	இல்லை.	44,837.54*
சேரகுளம் சங்கம்	66,736.82	56,000†	10,736.82*
கீழப்பெருமாளேரி சங்கம்	94,543.85	42,000‡	52,543.85*
	2,53,517.89	98,000	1,55,517.89

* வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி மாவட் டக் கூட்டுறவு மத்திய வங்கியின் தணை நொக்கப் புத்தகத்தின் 210 ஆம் எண்ணுள்ள பக்கத்திலிருந்து எடுத்த பகுதியைக் காண்க—71-ஆம் எண்ணுள்ள ஆவணத்தின் 1-வது பக்கம்.

† திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் 28—10—71 ஆம் நாளிட்ட சரிக்கட்டல் சீட்டு 22 ஆம் எண் ணுள்ள ஆவணத்தின் 53-வது எண் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

‡ மேற்சொன்ன வங்கியின் 28—10—71 ஆம் நாளிட்ட சரிக்கட்டல் சீட்டு 22 ஆம் எண் ணுள்ள ஆவணத்தின் 65-வது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது தவணைத்தொகை.

மேல தாதன்குளம் சங்கம் ரூ. 3,47,458.10* (31—7—72 ஆம் நாளிட்ட 219504 ஆம் எண்ணுள்ள காசோலையின் மூலம்)

கீழ தாதன்குளம் சங்கம் ரூ. 3,18,676.57† (31—7—72 ஆம் நாளிட்ட 295180 ஆம் எண்ணுள்ள காசோலையின் மூலம்).

*திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் நடப்பு வைப்பீட்டுப் பதிவேட்டிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி—53/1 ஆம் எண்ணுள்ள ஆவணத்தின் 5-வது பக்கம்.

† திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் நடப்பு வைப்பீட்டுப் பதிவேட்டிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி—53/1 ஆம் எண்ணுள்ள ஆவணத்தின் 3-வது பக்கம்.

மூன்றாவது தவணைத் தொகை

சேரகுளம் சங்கம் .. ரூ. 3,07,897.12* (5—8—72 ஆம் நாளிட்ட 219632 ஆம் எண்ணுள்ள காசோலையின் மூலம்)

* திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் நடப்பு வைப்பீட்டு பதிவேட்டிலிருந்து எடுக்கப்பட்ட 53/1ஆம் எண்ணுள்ள ஆவணத்தின் 9—ம் பக்கம்.

தான்.	சங்கம்.	காசோலை எண்ணும், வங்கியின் பெயரும்.	தொகை.
(1)	(2)	(3)	(4)
			ரூ.
28-7-72	மேல தாதன்குளம்	683178 சேரன்மாதேவி, இந்திய வங்கி	3,50,000
28-7-72	கீழ தாதன்குளம்	683179 சேரன்மாதேவி, இந்திய வங்கி	2,75,000
28-7-72	கீழ தாதன்குளம்	881772 திருநெல்வேலி, கனரா வங்கி ..	55,000
4-8-72	சேரகுளம்	683231 சேரன்மாதேவி, இந்திய வங்கி	4,00,000
10-8-72	மேழப்பெருமானேரி ..	683235 சேரன்மாதேவி, இந்திய வங்கி	5,20,000
		மொத்தம்	15,00,000

சன் பேப்பர் மில்லால் இந்த சங்கங்கள் அனைத்திற்கும் வழங்கப்பட்ட காசோலைகள் அனைத்தும், திருநெல்வேலி கூட்டுறவு மத்திய வங்கியில் அந்தந்தச் சங்கத்திற்குள்ள கணக்குகளில் வரவு வைக்கப்பட்டன என்றும், இக் காசோலைகள் வரவு வைக்கப்பட்ட பிறகுதான், இச் சங்கங்களுக்கு வல்லநாடு தொடக்க நிலவள வங்கி கொடுத்த கடனைத் திருப்பிச் செலுத்த அவ்வங்கிக்குக் காசோலைகளே இச் சங்கங்கள் அளிக்க இயன்றது என்றும், திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் நடப்புக் வைப்பீட்டுப் பதிவேட்டிலிருந்து (ஆவணம் எண் 53/1) எடுக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த 16 இலட்சம் ரூபாய் முழுவதையும் வைப்பீடு செய்த பிறகும் கூட, வாங்கிய கடன் தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்த மேலும்

நான்காவது தவணைத் தொகை.

கீழப்பெருமானேரி சங்கம்.. ரூ. 7,20,326.49* 11—8—72 ஆம் நாளிட்ட 219606 ஆம் எண்ணுள்ள காசோலையின் மூலம்).

*திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் நடப்பு வைப்பீட்டுப் பதிவேட்டிலிருந்து எடுத்த பகுதி—53/1 ஆம் எண்ணுள்ள ஆவணத்தின் 7-வது பக்கம்.

இந்நான்கு சங்கங்களால் திருப்பிச்செலுத்தப் பட்ட மொத்தத் தொகை 21,57,876.18

மூலப் பொருட்கள் வழங்குவதற்காக இச் சங்கங்களுக்குச் சன் பேப்பர் மில்லால் வழங்கப்பட்ட கடன் தொகை

சென்னை, கம்பெனி சட்டக் கழகம், ஆய்வு அதிகாரி, திரு. வி. கோவிந்தன் (சாட்சி எண். 51) அளித்த ஆய்வு அறிக்கையின் 21-வது பக்கத்தில் கடன்கள் குறித்த விவரங்கள் கொடுக்கப் பட்டுள்ளன (ஆவணம் எண். 57) சன் பேப்பர் மில், 28—7—72லிருந்து 10—8—72 வரையிலான கால அளவில் இந்த நான்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மொத்தம் 16 இலட்சம் ரூபாயைக் கடனுக வழங்கியுள்ளது என்பது 30—6—73 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான நிறுவனப் பேரேட்டிலிருந்து தெரிய வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு :

3,07,500 ரூபாய் தேவைப்பட்டது. 4—8—72 ஆம் நாளிட்ட X-20-ஆம் எண்ணுள்ள செலுத்துச் சீட்டின் மூலமும், 10—8—72 ஆம் நாளிட்ட X-5 ஆம் எண்ணுள்ள செலுத்துச் சீட்டின் மூலமும் முறையே 1,08,000 ரூபாயும், 1,99,500 ரூபாயும் ரொக்கமாக முறையே சேரகுளம், கீழப்பெருமானேரி சங்கங்களின் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டன என்று திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் நடப்பு வைப்பீட்டுப் பதிவேட்டிலிருந்து தெரிய வருகிறது. இத் தொகைகள் பின்னர் கருங்குளம் தொடக்க நிலவள வங்கிக்கு மாற்றப்பட்டன.

(மூன்று சங்கங்களுக்குச் சேரன்மாதேவி, இந்திய வங்கி வகையில் சன் பேப்பர் மில் வழங்கிய மூன்று காசோலைகள் மடிப்பு ஆவணம் 31-ல் காணப்படுகின்றன.)

கனரா வங்கியிலிருந்து நான்கு சங்கங்கள் பெற்ற கடன்கள் குறித்த விவரங்கள்.

திருநெல்வேலி கனரா வங்கியில் 4 சங்கங்கள் தொடங்கிய நடப்புக் கணக்குகள், கடன் கணக்குகள் ஆகியவற்றின் உண்மை நகல்கள் மடிப்புத் தாளில் (ஆவணம் எண் 53/2)ல் காணப்படுகின்றன. இக் கடன்கள் குறித்த விவரம் வருமாறு :—

நாள்.	சங்கத்தின் பெயர்.	பயிர்க்கடன்.	நடுத்தர காலக் கடன்.
(1)	(2)	(3)	(4)
		ரூபாய்.	ரூபாய்.
17—6—1972	கிழ தாதன்குளம்	1,95,435.00	31,050
17—6—1972	மேல தாதன்குளம்	2,09,340.00	43,860
17—6—1972	சேரகுளம்	2,56,218.75	55,890
17—6—1972	கீழப் பெருமானேரி	3,04,436.25	1,10,020
		9,65,430.00	2,40,820
29—8—1973	கீழ தாதன்குளம்	..	15,525
29—8—1973	மேல தாதன்குளம்	..	21,930
29—8—1973	சேரகுளம்	..	27,945
29—8—1973	கீழப்பெருமானேரி	..	55,010
		..	1,20,410

கனரா வங்கியால் கடன்கள் அனுமதிக்கப்பட்ட உடனே, திருநெல்வேலி கனரா வங்கியின் நடப்புக் கணக்கில் நான்கு சங்கங்களாலும் தொகைகள் வரவு வைக்கப்பட்டன. பின்வரும் தொகைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிட்டுள்ள நாட்களில் திருப்பிப் பெறப்பட்டன:-

தேதி.	சங்கம்.	தொகை.	காசோலை எண்
(1)	(2)	(3)	(4)
		ரூபாய்.	
21—8—1972	கிழ தாதன்குளம்	1,10,000	120301
21—8—1972	மேல தாதன்குளம்	1,25,000	120351
21—8—1972	சேரகுளம்	1,55,000	120251
21—8—1972	கீழப்பெருமானேரி	2,10,000	120201
		6,00,000	
29—8—1972	கிழ தாதன்குளம்	90,000	120302
29—8—1972	மேல தாதன்குளம்	1,10,000	120352
29—8—1972	சேரகுளம்	1,30,000	120252
29—8—1972	கீழப்பெருமானேரி	1,70,000	120220
		5,00,000	

நாள். (1)	சங்கத்தின் பெயர். (2)	பயிர்க்கடன். (3) ரூபாய்.	காசோலை எண். (4)
29—3—1973	மேழ தாதன்குளம்	15,000	120305
29—3—1973	மேல தாதன்குளம்	20,000	120354
29—3—1973	சேரகுளம்	28,000	120254
29—3—1973	மேப்பெருமாளேரி	52,000	120205
		1,15,000	

21—8—1972 அன்று 4 சங்கங்களும் சன் பேப்பர் மில்ஸ் நிறுவனத்திற்கு 5,50,000 ரூபாய் திருப்பிக் கொடுத்தன என்பது சன் பேப்பர் மில்ஸ் லிமிடெட்டின் 1972–73 ஆம் ஆண்டின் நிறுவனப் பேரேட்டிலிருந்து (திரு. கோவிந்தன் கொடுத்த அறிக்கையின் 'ஜே' இணைப்பு—ஆவணம் எண். 57) தெரியவருகிறது. 29—8—73 அன்று அவை 5 இலட்சம் ரூபாயும் 30—8—73 அன்று 95,000 ரூபாயும் திருப்பிக் கொடுத்தன. திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகைகள், நாட்களிலிருந்து கனரா வங்கியிலிருந்து பெற்ற கடன் தொகைகளிலிருந்துதான் இத் தொகைகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன என்பது தெளிவாகத் தெரிகிறது. இத் தொகைகளைத் தவிர, 31—10—1972, 21—12—1972 ஆகிய நாட்களில் முறையே 1,53,000 ரூபாய், 1,10,000 ரூபாய் ரொக்க வைப்பீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. இக் கால அளவில், சங்கங்களின் கணக்கில் தொகையேதும் இல்லாததால், இத் தொகைகள் எங்கிருந்து கிடைத்தன என்பது மர்மமாயுள்ளது. 30—6—1973 அன்று மேலும் 1,92,000 ரூபாய் சன் பேப்பர் நிறுவனத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. இத் தொகையும் கணக்கில் காட்டப்படாத நிதியிலிருந்து பெறப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது.

பொருட்கள் எதனையும் பிரமோலேயே பொருட்கள் வழங்குவதற்காக இச் சங்கங்களுக்குப் பெருந் தொகையை முன்பணமாக சன் பேப்பர் மில்ஸ் நிறுவனம் அளித்தது வழக்கத்திற்கு மாறுனதாகும் என்று திரு. கோவிந்தன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். 30—6—1973 உடன் முடியும் ஆண்டில் சன் பேப்பர் மில்ஸ், மேழப் பெருமாளேரி, சேரகுளம் ஆகிய இரு சங்கங்களிலிருந்து மட்டும் 17,000 ரூபாய் மதிப்பிற்கு 'புளிச்சை ரேரை' வாங்கியது. மற்ற இரண்டு சங்கங்களிலிருந்து எதுவும் வாங்கப்படவில்லை. மேப்பெருமாளேரி, சேரகுளம் சங்கங்களிடம் செய்யப்பட்ட இச் சிறு கொள்முதல்களுக்கு ரொக்கமாகத் தொகை வழங்கப்பட்டது. அச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட முன்பணத்தில் இத் தொகை சரிகட்டப்படவில்லை. உண்மையில் இந்த முன்பணங்கள் மூலப் பொருட்களை வழங்குவதற்காகக் கொடுக்கப்பட்டவையல்ல. ஆனால், நிலவரை வங்கியிடமிருந்து பெற்ற கடன்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்கேயாகும் என்பது தெளிவாகிறது.

திரு. கோவிந்தன் முன்னர் பதிவு செய்யப்பட்ட அவரது சத்திய பிரமாண வாக்குமூலத்தில், நிர்வாக இயக்குநர் திரு. கந்தசாமி, திரு. சி.பா. ஆதித்தனார் கட்டளையிட்டவாறு தான் நடந்ததாகக் கூறுகிறார். சங்கங்களின் சார்பில் முன்பணமாக அளிக்கப்பட்ட காசோலைகளில் கையொப்பமிட்ட திரு. எஸ். டி. ஆதித்தனையும் திரு. கோவிந்தன் விசாரணை செய்தார். அவை நிர்வாக இயக்குநர் என்ற தகுதியில் காசோலைகளில் கையொப்பமிட்டதாகவும் நிர்வாக இயக்குநர் திரு. கந்தசாமியின் கட்டளைகளின்படி தாம் செயல்பட்டதாகவும் அவரது வாக்குமூலத்தில் அவர் குறிப்பிட்டார். தொகைகளை வழங்குவதற்கு தாமாக அதிகாரமளித்துள்ளார் என்று கூறப்படுவதைக் கந்தசாமி மறுத்துள்ளார். மூலப் பொருட்களை வழங்குவதற்காக சங்கங்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்வதற்குத் திரு. சி.பா. ஆதித்தனாரிடமிருந்து கட்டளைகள் வந்தன என்பது குறித்து திரு. கந்தசாமி கூறியதையே திரு. நற்குணமும் கூறியுள்ளார்.

நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு சன் பேப்பர் மில்ஸ் வழங்கிய 16 இலட்சம் ரூபாய் முன்பணத்துக்கு எந்த முறையில் தொகை பெறப்பட்டது என்பது குறித்த விவரங்கள் திரு. கோவிந்தனின் அறிக்கையிலும் கொடுக்கப்பட்டுள்ளன. ''நினைத்தநிதி'' அலுவலகத்திலிருந்து சன் பேப்பர் மில்ஸ் நிறுவனத்தின் பதிவு பெற்ற அலுவலகத்தில் 19-7-1972 அன்று 7 இலட்சம் ரூபாய் பெறப்பட்டு, சென்னை-3, பார்க் டவுன், இந்திய வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டது. இது பின்னர், சேரன்மாதேவி இந்திய வங்கிக்கு மாற்றப் பட்டது. 2-8-1972 அன்று ஆதித்தனார் கல்வி நிறுவனத்திலிருந்து 4 இலட்சம் ரூபாய் பெறப்பட்டது. இத் தொகையும் சென்னை, பார்க் டவுன், இந்திய வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டு, தந்திச் செய்தி மூலம் சேரன்மாதேவி இந்திய வங்கிக்கு மாற்றப்பட்டது. ''நினைத்தநிதி'' அலுவலகத்திலிருந்து 9-8-1972 அன்று மேலும் 5 இலட்சம் ரூபாய் பெறப்பட்டு, அதே முறையில் சரன்மாதேவி, இந்திய வங்கிக்கு மாற்றப் பட்டது.

''தினத்தந்தி'' அலுவலகத்திலிருந்து பெறப் பட்ட 12 இலட்சம் ரூபாயும் தவணை முறைகளில் கீழ்க்காணும் நாட்களில் சன் பேப்பர் மில்ஸ் நிறு வனத்தால் திருப்பிக் கொடுக்கப்பட்டது என் பதும் திரு. கோவிந்தனின் அறிக்கையிலிருந்து வெளிப்படையாகத் தெரிகிறது:—

	ரூபாய்.
1972, ஆகஸ்ட் 23 ஆம் நாள் ..	4,00,000
1972, ஆகஸ்ட் 30 ஆம் நாள் ..	4,00,000
1972, அக்டோபர்	1,50,000
1973, மார்ச்	75,000
1973, ஜூன்	1,75,000

ஆதித்தனார் கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்ற 4 இலட்சம் ரூபாயைப் பொறுத்த வரையில், சன் பேப்பர் மில்ஸ் செலுத்த வேண்டிய தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு 12 சதவீத வட்டி கொடுத் தது. ஒரு புறத்தில் சன் பேப்பர் மில்ஸ் நிறு வனத்திற்கும், மறுபுறத்தில் ''தினத்தந்தி'' ஆதித்தனார் கல்வி நிறுவனத்திற்கும் இடையே ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு அன்று டம் தொகை செலுத்தல், திருப்பிக் கொடுத் தல் என்ற வகையில் முறையான நடப்புக் கணக்கு உள்ளதைத் திரு. வெங்கிடாசலம் அறிக்கையில் 'L' 'M' இணைப்புகளிலிருந்தும் காணலாம். இந்த நிறுவனங்களும் சம்பந்தப்பட்ட நான்கு இறை வைப் பாசனச் சங்கங்களும் ஒரே தொகுதியைச் சேர்ந்தவர்களால் நிருவகிக்கப்பட்டு வந்தன என் பதையும் அந்த அறிக்கை காட்டுகிறது. சன் பேப்பர் மில்ஸ் விவகாரங்களில் ஆதித்தனுக்குள்ள முழு மேலாதிக்கத்தைத் திரு. கோவிந்தன் முன்னர் நற்குணம் அளித்துள்ள வாக்குமூலத்தில் குறிப் பிட்டுள்ளார். தயாரிப்பு விவரங்கள், பில்களின் மொத்த மதிப்பு, வருவிக்கப்பட்ட தொகை, கையி லிருந்த இருப்பு, பொருள் இருப்பு நிலைமை ஆகியவை அடங்கிய அன்றாட அறிக்கைகள் ''பெரிய ஐயா''விற்கு (இவர் திரு. சி. பா. ஆதித்தனார் ஆவார்) ஆலியால் வழக்கமாக அனுப் பப்பட்டு வந்ததாக அவர் கூறியுள்ளார்.

கனரா வங்கியிலிருந்து பெறப்பட்ட பயிர்க் கடன்கள் அனைத்தும் 1973, ஜூலை திங்களுக் கும், 1973, டிசம்பர் திங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் பல தவணைகளில் ரொக்கமாக 4 சங்கங் களாலும் முழுமையாகத் திருப்பிக் கொடுக்கப் பட்டன என்பதைக் கடன் கணக்குகளின் உண்மை நகல்களில் (ஆவணம் எண் 53/2) காணலாம். 1973 டிசம்பர் 27-ஆம் கடன் தொகை முழுவதும் திருப்பிக் கொடுக்கப்பட்டது. சங்கங்களால் பெறப்பட்ட நடுத்தர காலக் கடன்கள் இன்னும் கொடுத்துத் தீர்க்கப்படவில்லை. கனரா வங்கிக்குக் கடன் தொகைகள் திருப்பிச் செலுத்தப்பட்ட நாட்கள் மேற்காணும் விளக்க அட்டவணையி லிருந்து வெளிப்படையாகத் தெரியும்:—

கடன்கள் எவ்வாறு திருப்பிக் கொடுக்கப்பட்டன என்பதைக் காட்டும் கால விளக்க அட்டவணை.

19—7—1972	''தினத்தந்தி'' அலுவலகம் சன் பேப்பர் மில்லுக்கு 7 இலட்சம் ரூபாய் மாற்றியது.
28—7—1972	சன் பேப்பர் மில்ஸ், நான்கு சங்கங்களுக்கு 6.80 இலட்சம் ரூபாய் முன்பணம் வழங்கியது.
ஷை	சங்கங்கள் தொடக்க நிலவன வங்கிக்கு 6.76 இலட்சம் ரூபாய் திருப்பிக்கொடுத்தன.
2—8—1972	ஆதித்தனார் கல்வி நிறுவனம் சன் பேப்பர் மில்லுக்கு 4 இலட்சம் ரூபாயை மாற்றியது.
4—8—1972	சன் பேப்பர் மில்ஸ் நான்கு சங்கங்களுக்கு 4 இலட்சம் ரூபாய் முன் பணம் கொடுத்தது.
ஷை	சங்கங்கள், தொடக்க நிலவன வங்கிக்கு 5.07 இலட்சம் ரூபாய் திருப்பிக் கொடுத்தன.
9—8—1972	''தினத்தந்தி'' அலுவலகம் சன் பேப்பர் மில்லுக்கு 5 இலட்சம் ரூபாய் மாற்றியது.
10—8—1972	சன் பேப்பர் மில்ஸ் நான்கு சங்கங்களுக்கு 5.20 இலட்சம் ரூபாய் முன் பணம் வழங்கியது.
ஷை	சங்கங்கள், தொடக்க நிலவன வங்கிக்கு 7.20 இலட்சம் ரூபாய் திருப்பிக் கொடுத்தன
17—8—1972	கனரா வங்கி, நான்கு சங்கங்களுக்கு 12.06 இலட்சம் ரூபாய் கடன் வழங்கியது.
21—8—1972	சங்கங்கள், சன் பேப்பர் மில்லுக்கு 5.50 இலட்சம் ரூபாய் திருப்பிக் கொடுத்தன.
23—8—1972	சன் பேப்பர் மில்ஸ், ''தினத்தந்தி''க்கு 4 இலட்சம் ரூபாய் திருப்பிக்கொடுத்தது.
29—8—1972	சன் பேப்பர் மில்லுக்கு, சங்கங்கள் 5 இலட்சம் ரூபாய் திருப்பிக் கொடுத்தன.
30—8—1972	சன் பேப்பர் மில்ஸ் ''தினத்தந்தி''க்கு 4 இலட்சம் ரூபாய் திருப்பிக் கொடுத்தது.

31—8—1972	சங்கங்கள், சன் பேப்பர் மில்லுக்கு 1·53 இலட்சம் திருப்பிக் கொடுத்தன.
டெ.	சங்கங்கள், சன் பேப்பர் மில்லுக்கு 1·53 இலட்சம் ரூபாய் திருப்பிக் கொடுத்தன.
30—5—1973	சங்கங்கள், சன் பேப்பர் மில்லுக்கு 95,000 ரூபாய் திருப்பிக் கொடுத்தன.
டெ.	சன் பேப்பர் மில்ஸ் ''தினத் தந்தி''க்கு 75,000 ரூபாய் திருப்பிக் கொடுத்தது.
30—6—1973	சங்கங்கள், சன் பேப்பர் மில்லுக்கு 1,92,000 ரூபாய் திருப்பிக் கொடுத்தன.
டெ.	சன் பேப்பர் மில்ஸ், ''தினத் தந்தி''க்கு 1,75,000 ரூபாய் திருப்பிக் கொடுத்தது.

சாட்சிகளைக் கலைப்பதற்கான முயற்சிகள்.

விசாரணையிலுள்ள விஷயங்களில் எதிர் மனுதாரரைச் சம்பந்தப்படுத்தித் சாட்சியம் அளிக்கக்கூடிய முக்கியமான சாட்சிகளைக் கலைப்பதற்கு அல்லது பொய் சாட்சியம் அளிக்கச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைக் குறிப்பிடாமல் இருந்தால் நான் கடமையிலிருந்து தவறியவனவேன்.

நமது உறுதிமொழிப் பத்திரத்தை அனுப்பிய சில நாட்களுக்குப் பின்னர், திரு. ஆதித்தனரின் முன்னாள் நேர்முக உதவியாளர் திரு. பீரீதரன் சென்னையிலிருந்து தொலைபேசியில் தம்முடன் தொடர்பு கொண்டதாகவும், மாவட்டக் காவல் துறை சூப்பிரண்டு நடத்திவரும் விசாரணை குறித்துக் கேட்டார் என்றும், கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு 19—8—1976 அன்று அனுப்பிய கடிதத்தில் திரு. சுப்பையா (C.W. 36) தெரிவித்தார். மாவட்டக் காவல்துறை சூப்பிரண்டிடம் கொடுத்த தமது வாக்குமூலத்தில் விரிவான பயன் பாட்டு அறிக்கையை [இதனைப் பதிவாளருக்கு அவர் (சுப்பையா) ஏற்கெனவே அனுப்பினர்] மறுத்து எதுவும் கூறக்கூடாதென அவர் திரு. சுப்பையாவிடம் சொன்னர். அவர் உண்மையைக் கூறியதால் பாதிக்கப்பட்டவர், வழக்கு நடைபெறுங்கால் தமக்கு எதிராக ஏதாவது செய்யக் கூடுமென்று அவர் அஞ்சியதாகவும் தமது நலனைப் பாதுகாப்பதற்காகப் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் பதிவாளரைக் கேட்டுக் கொண்டதாகவும் தமது கடிதத்தில் சுப்பையா குறிப்பிட்டார். இக்கடிதத்தின் நகல் ஒன்றும், 5A பிரிவின்கீழ் நியமனம் செய்யப்பட்ட புலனாய்வுக் குழுவுக்குத் தலைமை வகித்த காவல்துறை சூப்பிரண்டு திரு. கணேசனுக்கு அனுப்பப்பட்டது.

தனி அலுவலிலிருந்த அதிகாரி திரு. விஜயராகவனுக்கு திரு. ஆதித்தனர் எழுதியுள்ளவாறு தந்தி அனுப்புமாறு அரியநாயகிபுரம் சன் பேப்பர் மில்ஸ் நிறுவனத்தில் இருந்த கிருஷ்ணகாந்தனுக்குக் கட்டளையிட்டு டெலக்ஸ் செய்தி ஒன்று தினத்தந்தி அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டது பற்றியும் திரு. ஆதித்தனரின் வழக்குரைஞருக்கு இதன் நகல் ஒன்று அனுப்பப்பட்டது பற்றியும் முன்னரே கண்டோம்.

கமிஷன் அலுவலகத்திற்குத் திரு. உடையார் பிள்ளையிடமிருந்து (C .W. 39) கடிதமொன்று தமிழில் எழுதப்பட்டு 7-9-1976 அன்று வந்தது. நியமனஞ் செய்யப்பட்ட அலுவலர் அவரை விசாரித்த பின்னரும், பதிவு அஞ்சலில் கமிஷனுக்கு உறுதிமொழிப் பத்திரம் ஒன்றை அவர் அனுப்பிய பின்னரும், சன் பேப்பர் மில்ஸ் நிறுவனத்துக்குக்கறிவுத் தாள் வழங்கும் கே. எஸ். மணி, திருநெல்வேலியிலுள்ள அவரது அலுவலகத்தில் அவரைச் சந்தித்து, இந்த விஷயம் குறித்து முன்னஞ் அமைச்சருக்கு எதிராக ஏன் உண்மையைக் கூறினர் என்று கோபமாகக் கேட்டதாக அக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டார். திரு. உடையார் பிள்ளை தனக்கோ தன் குடும்பத்தினருக்கோ எத்தீங்கும் நேரிடாதிருக்கும் வகையில் காவலர் பாதுகாப்பு தருமாறு கேட்டுக் கொண்டார். அவசியமான நடவடிக்கையை மேற்கொள்வதற்காக இக் கடிதத்தின் நகல் ஒன்று (காட்சிப் பொருள் C. W. 39/141) திரு. விஜயராகவனுக்கு அனுப்பப்பட்டது.

உடையார் பிள்ளை, கமிஷன் முன்னர் சாட்சியம் அளித்தபோது, இக் கடிதம் அவரால் எழுதப்பட்டதா என்றும் அதில் கண்டுள்ள விவரங்கள் சரியா என்றும் அவரிடம் கேட்கப்பட்டது. அவர் அவை சரியானவை என்று உறுதிப்படுத்தினர். அவர் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது, திரு. எஸ்.டி. ஆதித்தனுக்கு அவர் எழுதிய கடிதத்தை (காட்சிப் பொருள் C.W.139/13) திரு. ஜீ. இராமசாமி அவர் முன்பாக வைத்தார். அச் சுறுத்தப்பட்டதாலும் வலுக்கட்டாயப்படுத்தப் பட்டதாலும் காவலரிடம் சில வாக்குமூலங்களைக் கொடுத்ததாகத் திரு. உடையார்பிள்ளை அக்கடிதத்தில் எழுதியிருந்தார். ஆயினும், மேற்சொன்ன கடிதத்தை, வழக்குரைஞர், திரு. உத்தரபாண்டியன் கேட்டுக் கொண்டதன் பேரில், அவர் எழுதியதாக கமிஷன் வழக்குரைஞர் மேற்கொண்டு விசாரித்தபோது அவர் தெளிவு படுத்தினர்.

உடையார் பிள்ளையைக் குறுக்கு விசாரணை செய்தபோது, திரு. ஆதித்தனரின் வழக்குரைஞர் திரு. ஜீ. இராமசாமி மற்றோர் ஆவணத்தைக் (காட்சிப் பொருள் C. W. 39/140) கொடுத்தார். இது, காவல் துறை, டெபுடி சூப்பிரண்டு, திரு. T. கங்காதரன் (கமிஷன் நியமன அதிகாரிகளுள் ஒருவராவார்), திருநெல்வேலி, காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர் திரு. நாராயணனுக்கு அனுப்பிய இரகசியக் குறிப்பின் அசல் பிரதியாகும். இக்

குறிப்பாள், முருகன், சிவசுப்பிரமணியம் ஆகியோர் நேரடியாக வந்து வாக்குமூலம் தருவதற்காக அவர்களுக்கு அளிக்கப்படவிருந்த கமிஷனின் இரண்டு தொகுதி அழைப்பாணைகள் பற்றி அவர் குறிப்பிட்டிருந்தார். மேலும், உடையார் பிள்ளையுடன் உதகமண்டலத்திற்குச் செல்லுமாறு சப்-இன்ஸ்பெக்டருக்கு அவர் கட்டளையிட்டார். கே.எஸ். மணி தம்மைப் பயமுறுத்தியதாக உடையார் பிள்ளை முன்னரே புகார் செய்துள்ளதால், கமிஷன் முன்னர் சாட்சியம் அளிக்க அவர் வருகையில் அவருக்குக் காவல் துறையின் பாதுகாப்பு அளிப்பது பொருத்தமானது என்று கருதப்பட்டது. எனவே, இக் குறிப்பில் ஆட்சேபணைக்குரிய விஷயம் ஏதுமில்லை. ஆனால், காவல் நிலையத்திலிருந்து இக் குறிப்பு கடத்தி வரப்பட்ட முறையும், கமிஷன் முன்னர் விசாரணையின்போது அதனைக் கொண்டு வந்து வைத்த அசட்டுத் துணிச்சலும் எதிர்மனுதாரர் அல்லது அவரது ஆட்கள் சாட்சிகளை அச்சுறுத்த அல்லது சாட்சிகளைக் கலைக்க என்னென்ன செய்வர், எந்த அளவுக்குப் போவர் என்பதைக் காட்டுகின்றன.

நியமனஞ் செய்யப்பட்ட அதிகாரி தன்னை விசாரணை செய்த பின்னரும், கமிஷனுக்குத் தனது உறுதிமொழிப் பத்திரத்தை அனுப்பிய பின்னரும், அது குறித்த விவரங்களைத் திரு. ஆதித்தனார் தம்மிடம் கேட்டதாகக் கூறி 20-8-1976 நாளிட்ட கடிதமொன்றை (காட்சிப் பொருள் C W 38/2) திரு. புதியமுத்து (C W 38) அனுப்பினார். காவலரிடம் உண்மைகளைக் கூறிவிட்டதாக திரு. புதியமுத்து பதிலளித்தபோது, திரு. ஆதித்தனார் மகிழ்ச்சியற்றதாகத் தெரியவில்லை. எனவே, காவல் துறையின் பாதுகாப்பு அளிக்குமாறு கேட்டு புதியமுத்து, கமிஷன் அலுவலகத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பினார். சென்னைக்கு வருமாறு பல முறை அவரை அமைச்சர் அழைத்ததாகவும், அவரது ஆட்கள், அவர் இடத்துக்கு வந்து தொல்லை கொடுத்ததாகவும் சென்னையில் கமிஷன் முன்னர் விசாரணை செய்த போது திரு. புதியமுத்து கூறினார். அவரைக் குறுக்கு விசாரணை செய்த போது, 18—2—1977 அன்று கமிஷனுக்கு வந்த தந்திச் செய்தியில் (இது அவரது மகன் நெடுஞ்செழியனுல் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது) (காட்சிப் பொருள் C.W. 38/3) கண்டிருந்த விவரங்கள் குறித்து அவரிடம் கேட்கப்பட்டது. இந்தத் தந்திச் செய்தியை அவர் மறுத்தார். தனது மகன் பெயரில் இந்தத் தந்திச் செய்தியை அனுப்பி விஷமத்தனம் பண்ண சிலர் முயன்றிருப்பதாக அவர் கூறினார். கமிஷன் முன் சாட்சியமளிக்க தன் வீட்டிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் தனது குடும்பத்தினர் அனைவருக்கும் இது குறித்துத் தெரிவித்தார். அதனுல், இத்தகைய சூழ்நிலைகளில் தான் எங்கு இருப்பார் என்பதை அவர்கள் அறிந்திருப்பர். தந்தி அனுப்பியது குறித்து கமிஷனுக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டும். அப்படியிருக்கும்போது திரு. ஆதித்தனாருக்கும் அவரது வழக்குரைஞருக்கும் தெரிந்திருப்பது இந்தப் பொய்யான தந்தியை அனுப்பியதில் எதிர்மனுதாரருக்குப் பங்கு உண்டு என்ற அனுமானம் ஏற்படுவது நியாயமேயாகும்.

கமிஷன் முன் சென்று தாம் சாட்சியம் அளிக்கப் புறப்பட்டுக்கொண்டிருந்தபோது, உத்தரபாண்டியன் என்று சொல்லிகொண்டு வழக்குரைஞர் ஒருவர் தன் வீட்டிற்கு வந்து, குறிப்பிட்ட முறையில் சாட்சியம்கூறுமாறு தன்னைக் கேட்டுக் கொண்டதாகத் திரு. கிவி (C. W. 40) கூறினார். குறுக்கு விசாரணையின்போது, குற்றப் புலனுய்வுக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர், உத்தரபாண்டியன் போல் நடித்திருக்கலாம் என்று திரு. கிவியிடம் கூறப்பட்டது. இது நம்பமுடியாத தாகும். ஏனெனில், குற்றப் புலனுய்வுக் கழகத்திற்கும் 23(1) குற்றச்சாட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மேலும், திரு. ஆதித்தனாருக்கு ஆதரவாகச் சாட்சியம் அளிக்க கிவியை இணங்க வைப்பதன் மூலம் எத்தகைய இலாபமும் அடையமுடியாது. திரு. ஆதித்தனரின் முன்னுள் நேர்முக உதவியாளர் பரீரதன் தன்னைச் சந்தித்து திரு. ஆதித்தனர் சார்பில் சான்று கூறுமாறு தம்மிடம் வலிந்து கோரியதாகவும் சில ஆவணங்களைத் (காட்சிப் பொருள் C. W. 40/75) தன்னிடம் அளித்ததாகவும் கிவி சாட்சியம் அளித்தார். அந்த ஆவணங்களை விசாரணையின்போது கமிஷன் முன்னர் கிவி கொடுத்தார்.

மாநில நிலவள வங்கிக் குழுவின் கூட்ட நடவடிக்கைகளின் நகல் ஒன்று பரீரதனுல் கிவியிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுவது காட்சிப் பொருள் C. W. 37/7-ன் அப்பட்டமான நகல் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முருகன், பால்வண்ணன், சிங்கமுத்து, வி. ஆர். இரத்தினம், சண்முகம் (வங்கித்தலைவர்) ஆகியோர் முன்னர் அளித்த கருத்துகளிலிருந்து மாறி பின்வாங்கும் வகையில் உறுதிமொழிப் பத்திரங்களின் பின்னர் தாக்கல் செய்துள்ளனர். அவர்கள் கடைசியாக அளித்த உறுதி மொழிப் பத்திரங்களில் என்ன கூறியிருந்தாலும், அது, இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்ட கடன்களை தவருகப் பயன்படுத்தியதாக உள்ள குற்றச்சாட்டிலிருந்து திரு. சி. பா. ஆதித்தனரை விடுவிப்பதாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். தாங்கள் முன்னர் கொடுத்த வாக்குமூலங்களில் திரு. ஆதித்தனர் சம்பந்தப்பட்ட பகுதிகளை மட்டும் மாற்றிக் கூறுவது திரு. ஆதித்தனர் கேட்டுக் கொண்டதன் பேரில் தான் செய்யப்பட்டிருக்கக்கூடும் என்பதைக் காட்டுகிறது.

எதிர்மனுதாரர் கேட்டுக் கொண்டதன்பேரில், முருகன், சண்முகம் ஆகியோர் சாட்சிகளாக விசாரணை செய்வதற்காக அழைக்கப்பட்டார்கள். அவர்கள் தங்களது முதல் வாக்குமூலங்களிலிருந்து பின் வாங்கி உறுதிமொழிப் பத்திரங்களைத் தாக்கல் செய்தபின்னர் அழைக்கப்படாமல் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்மனுதாரரும், அவரது முகவர்களும் சாட்சிகளைக் கலைக்க அல்லது பொய் சாட்சியம் அளிக்கச் செய்ய முயன்றுள்ளதை சுமியன் முன்னர் அளிக்கப்பட்ட சாட்சியத்தை மறுப்படுகையில் புறக்கணிக்க முடியாது.

முடிவுகள்—முறைகேடுகள், தகாதசெயல்கள்.

நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களுக்குப் பொறுத்தமட்டில், சட்ட விதித் துறைகள், துணை விதிகள், நிர்வாகக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு நிபந்தனைகள், விவேகமான நடைமுறை ஆகியவை மீறப்பட்டது குறித்துச் சுருக்கமாகக் கீழே கொடுக்கலாம்:—

(1) சங்கங்கள் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கான வெளிப்படையான சாத்தியக்கூறு குறித்து தாம் ஐயமறத்தெரிந்து கொள்ளாமலேயே துணைப்பதிவாளர் இச்சங்கங்களைப் பதிவு செய்தது தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 9(a) பிரிவை மீறியதாகும்.

(2) தொடக்க நிலவள வங்கியின் உறுப்பினர்களாக நான்கு இறைவைப் பாசனச் சங்கங்களையும் அனுமதித்தது வங்கியின் 6-வது துணை விதியை மீறியதாகும். அதன்கீழ் வேளாண்மை நிலங்களை வைத்திருப்போர் அல்லது பயிரிபவர்கள் மட்டுமே உறுப்பினர்களாய் இருக்க முடியும்.

(3) (i) சங்கங்களின் நிதிநிலைமை குறித்து வங்கி ஆராய்ந்து பார்க்கவில்லை. மேலும், கடன்கள் வழங்குவதற்குமுன்னர் அவற்றின் பணவசதிகள் அல்லது நிதி ஆதாரங்கள் குறித்து வங்கி கருதிப் பார்க்கவில்லை.

(ii) தோண்டடக் கருதப்பட்டுள்ளஒவ்வொரு கிணற்றின்கீழ் பாசனம் பெறலாகும் நிலங்களின் விவரங்கள், அக் கிணறுகள் தோண்டப்படும் சரியான இடம் ஆகியவற்றைக் காட்டும் விவர அட்டவணைகள் கடன் விண்ணப்பங்களில் இல்லை. [27-6-68 நாளிட்ட 68129/68 ஆம் எண் பதிவாளரின் சுற்றறிக்கையையும் இறைவைப் பாசனச் சங்கங்களின் 6-வது துணை விதியையும் (i), (ii) இனங்கள் மீறியவையாகும்.]

(4) (i) உதவிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து கோரிக்கப்பட்ட விற்பனைப் புள்ளி விவரங்கள் அடிப்படையில் வழக்கமாக மதிப்பிடுவதற்குமாறாக, அமைச்சரிடமிருந்து வந்த கட்டளைகளின்கீழ் தோராயமதிப்பீட்டு முறை பின்பற்றப்பட்டது நிலங்களின் மதிப்பை உயர்த்தும் நோக்கத்துடன் செய்யப்பட்டது என்பதும், அதன்மூலம் கடன்களுக்கு விண்ணப்பித்துக் கொண்ட சங்கங்கள் பெறக்கூடிய கடன் தொகை அளவு பெருகியது என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது. (இது மேற்சொன்ன 27-6-68 நாளிட்ட 68129/68 ஆம் எண் சுற்றறிக்கையை மீறிச் செய்யப்பட்டதாகும்.) இத் தவறு சரியானது என்று மெய்ப்பிப்பதற்கு கூட்டுறவு நிலவள வங்கியின் 32 (4) துணை விதியை மேற்கோள் காட்ட முடியாது. விவேகமான வங்கியியல் நிபந்தனைகளை விட்டுவிட்டு, கடன் பெற்றவர்களுக்கு இரட்டைப்பலன் அளிப்பதற்காக இந்தத் துணை விதிக்குப் பொருள் சொன்னு அதைப் பயன்படுத்த முடியாது.

(ii) இந்தச் சங்கங்களின் கடன் திருப்பிச் செலுத்தும் தகுதியை மதிப்பிடுவதற்குத் தரை நிதிகாரிகள் பின்பற்றிய முறை, விருப்புடன் எதேச்சையாகச் செய்யப்பட்டதாகும்.

(5) தொடக்க நிலவள வங்கி இத்தக் கடன் விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டு கடன் அனுமதித்தபோது, அச் சங்கங்கள் அதன் உறுப்பினர்களாகக்கூட சேரவில்லை. அச் சங்கங்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு அனுமதித்து, 6 (4) துணைவிதியின் நிபந்தனையின்படி வங்கிக் குழுவினால் ஒரு தீர்மானங்கூட நிறைவேற்றப்படவில்லை.

(6) கடன்களை அனுமதிப்பதற்கு முன்னர், சங்க உறுப்பினர்களின் உறுதி மொழிகள், ஒப்பந்தங்கள் ஆகியவற்றைச் சரிபார்த்தது பற்றிய குறிப்பு, வங்கி ஆவணங்களில் காணப்படவில்லை. வரையறுக்கப்பட்ட பங்கு கடன் விகிதாச்சாரத்துக்குத் தேவைப்படும் தொகையையும், கடன் தொகைக்கு மேல் திட்டத்திற்காகும் கூடுதல் செலவையும் இச் சங்கங்கள் செய்யமுடியும் என்பதை உறுதிப்படுத்துவதற்குச் சங்கங்களின் நிதி வசதி குறித்துப் பரிசீலனை செய்ய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(7) சங்கங்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்ட பின்னர்தான் அவற்றிடமிருந்து பங்குத் தொகையும் ஏனைய கட்டணங்களும் வசூலிக்கப்பட்டன.

(8) (i) விவேகமான வணிக நியதிகளுக்கும் தவணைகளில் கடன்கள் வழங்கும் வழக்கமான நடைமுறைக்கும் முரணாக, அனுமதிக்கப்பட்ட கடன்களை முழுவதும் ஒட்டு மொத்தமாக கீழ், மேல தாதன்குளம் சங்கங்களுக்கு வழங்கப்பட்டன.

(ii) விவேகமான வணிக நியதிகளுக்கும் இரண்டாவது கடன் தவணைத் தொகையை வழங்குவதற்குச் செயலிலுள்ள நடைமுறைக்கும்

மாருக, (முதல் தணிக்கைத் தொகை உரிய முறையில் பயன்படுத்தப்பட்டதா என்று சரிபார்த்த பின்னர்) பயன்பாட்டுச்சான்றிதழ் எதனையும் பெருமலேயே சேரருளும், மேற்பெருமானேரி, சங்கங்களுக்கு இரண்டாவது தவணைத் தொகை அளிக்கப்பட்டது.

9) முதலீட்டுக் கடன் நிட்டத்திற்கு நிதி புதவி அளிப்பதற்கு முன்னர், அத் நிட்டத்தின் தொழில் நுட்ப சாத்தியக்கூறு, அது பொருளா தார நிலையில் தனித்தியங்கக்கூடியதா என்பது ஆகியவை குறித்துத் துறை அதிகாரிகளோ மாநில நிலவன வங்கியோ பரிசிலனை செய்யவில்லே. இந்த நிலங்கள் மிகக் குறைந்த உற்பத்தித் திறனுடைய மட்டமான நிலங்களாகும். விவேகமற்ற முறையில் தோராய மதிப்பீட்டு முறையைப் பின்பற்றியிராவிட்டால், அச் சங்கங் களுக்கு அளிக்கப்பட்ட பெருந்தொகை கடனுக்கு அவை தகுதியுடையவையாய் இருந் திருக்கா என்று குறிப்பிடுவது நியாயமற்ற தல்ல.

10. வங்கியின் சட்ட ஆலோசகரான வழக் குரைஞர் திரு. என். பலவேசம் எழுதிய குறிப்பிலிருந்து, கடன்களுக்குப் பிணையமாக வழங்கப்பட்ட சொத்துக்கு உறுப்பினர்களின் உரிமை நிட்டவட்டமாக உள்ளது குறித்து அவர் மனநிறைவடைந்ததாகக் கூற இல்லாரு. கடன் விண்ணப்பங்கள் தொடர்பாக தேவைப் படும் வில்லங்கச் சான்றிதழ்களும், ரிப்பீனப் பத்திரங்கள் எழுதப்பட்ட சங்கங்கள் பதிவு செய்யப்பட்டபோது 23—2—71 ஆம் நாளி லேயே பெறப்பட்டு வைத்திருக்கப்பட்டன.

11. கடன்களே வழங்கிய பின்னருங்கூட, கடன்களைப் பயன்படுத்தியது குறித்து சரி பார்ப்பதற்குத் தொடர்ந்த நிலவன வங்கியும், மாநில நிலவன வங்கியும், நடவடிக்கை எதனையும் மேற்கொள்வதில் கவனம் செலுத்த வில்லே.

12. (i) பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கத்தின் கணக்குகளையும் ஆண்டுக்கொரு முறையாவது தணிக்கை செய்விக்குமாறு தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 64-வது பிரிவின்கீழ் பதிவாளருக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டப்படிக்கான கடமை, நான்கு சங்கங்களைப் பொறுத்தமட்டில் துறை அதிகாரிகள் எவராலும் ஆற்றப்படவில்லே. உண்மையில், துறை அதிகாரி எவரும் இச் சங்கங்களின் அலுவலகத்துக்கு வந்ததாகவோ அவற்றின் கணக்குப் புத்தகங்களைப் பார்வையிட முயன்றதாகவோ தெரியவில்லே.

(ii) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூட்டு றவுச் சங்க விதிகளின் 13-வது விதியை, இச் சங்கங்கள் தங்களுக்கு எதுவும் நேராதென்று சர்வ அலட்சியத்துடன் மீறியிருப்பதாகத் தெரிய வருகிறது. அந்த விதியின்படி, அச்சங்கங்கள் நடவடிக்கையைப் பதிவு செய்வதற்காக விதியின்கீழ் விவரித்துள்ளவாறு வெவ்வேறு கணக்குகளையும் புத்தகங்களையும் எழுதி வைத்து வர வேண்டும்.

(iii) பதிவாளர், தன்னுடைய சார்நிலே அலுவலர் ஒருவரை அனுப்பியாவது, கணக்குப் புத்தகங்களில் நாளதுவரை கணக்குகள் எழுதச் செய்ய, 14(a), 16 ஆகிய விதிகள் அவருக்கு அதிகாரம் அளிக்கின்றன. அந்த விதிகளும் மீறப்பட்டுள்ளன. அமைச்சரின் (திரு. ஆதித்த னரின்) தலேயீடு இல்லாமல் தாங்கள் கணக்குப் புத்தகங்களேப் பெற முடியாது என்பது துறை அதிகாரிகளுக்குத் தெரிந்திருக்கிறது. [கே. வைத் தியநாதன் (சாட்சி எண். 45), கே. எஸ். இராம மூர்த்தி (சாட்சி எண். 46) ஆகியோரின் சாட்சி யத்தைக் காண்க.]

மேலே விவாதிக்கப்பட்ட சாட்சியத்திலிருந்து, மேற் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகளும் நிலே மைகளும், வெவ்வேறு அளவுகளுக்கு உண்மை யானவையாயிருக்கக்கூடும் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது:—

(a) ஸ்ரீவைகுண்டத்திலுள்ள திரு. இ. பா. ஆதித்தனர் வீட்டில், 28—1—1971 ஆம் நேதி, கிருஷ்ணசாந்தன், முருகன், அரிச் சந்திரன், ஜெயராமன் ஆகியோரும் ஏனே யோரும் கலந்துகொண்டு நடைபெற்ற கூட்டத் தில் திரு. சி. பா. ஆதித்தனர் எடுத்துச் சொன்னதன் பேரில்தான், இந்த இறையவப் பாசனச் சங்கங்கள் அமைத்து, அவற்றின் பெயர்களில் கடன் வாங்கும் யோசனேயே உருவாயிற்று. (முருகன், P. ஜெயராமன் ஆகி யோரின் சாட்சியத்தைக் காண்க.)

(b) திரு. சி. பா. ஆதித்தனர் 28— 1—1971 முதல் 31—1—1971 வரை திருநெல் வேலியில் முகாமிட்டிருந்தார்; அப்போது, மேல தாதன்குளம், கீழ தாதன்குளம் இறையவப் பாசனச் சங்கங்களே அவசரமாகப் பதிவு செய்து, அவற்றுக்கு விரைவில் கடன் அனுமதித்து வழங்குமாறு கூட்டுறவுச் சங்க இணேப்பதிவாளர் சுப்பையா, தொடக்க நில வள வங்கியின் தலேவர் புதியமுத்து, கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி ஹரிஹரன் ஆகியோருக்குச் சொல்லி உத்தரவிட்டு, அதற்கான அவசியத்தையும் வலியுறுத்தி னர். சுப்பையா மூலம் தொடர்ந்தாற்போல் அவர் வலியுறுத்திவந்ததன் காரணமாகக் கூட்டுறவுத் துறை அதிகாரி, கூட்டுறவுச் சங்கச் சட்டம், விதி கள் ஆகியவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளே மீறியும், விருப்ப அதிகாரம், கடமை குறித்த நடைமுறை விதிகளேப் பின்பற்றுமலும், அச் சங்கங்களே அவசரம் அவசரமாகப் பதிவு செய்தார். விண்ணப்பம் செய்துகொண்ட அன்றே மேற்பெருமானேரி, சேரருளும் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. அந்த விண்ணப்பங்களேப் பதிவு செய்ய எடுத்துவந்த மீம்கள்

திரு. ஆதித்தனரின் ஆள் என்று உதவிப் பதிவாளரி காந்திதாஸுக்கு அப்போது தெரியவந்ததால், அவர் அச் சங்கங்களே உடனே பதிவு செய்தார். [சுப்பையா, ஹரிஹரன், காந்திதாஸ், புதிய முத்து (சாட்சிகள் 2, 1, 3, 8) ஆகியோரின் சாட்சியத்தைக் காண்க. அந்தச் சங்கங்களைத் தன் ஜுடைய ஆட்கள்தான் தொடங்கினர் என்று திரு. ஆதித்தனர் தங்களிடம் கூறியதாக, புதிய முத்துவும், வங்கியின் துணைத்தலைவரான ஏ. சுப்பையாவும் சாட்சியமளித்துள்ளனர்.]

(c) இந்தச் சங்கங்களுக்கு உடனடியாகக் கடன்கள் அனுமதித்து வழங்கச் செய்யுமாறு சுப்பையாவிடம் எதிர்மனுதாரர் திரு. ஆதித்தனர் கூறி உத்தரவிட்டார். கடன் கொடுப்பது எந்த அளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளது என்றறிய 15 நிமிடங்களுக்கு ஒருமுறை, சுப்பையாவிற்கு எதிர்மனுதாரர் போன் செய்தார். துறை அதிகாரிகள் சந்திப்பதற்கு இடங் கொடாமலும், முன்யோசனை செய்யாமலும், வழக்கமான நடைமுறை விதியைப் பின்பற்றாமலும், கடன்களை அனுமதித்து, வழங்க சுப்பையா மூலமாக துறை அதிகாரிகளையும், வங்கி அதிகாரிகளையும் நெருக்கிக் கொண்டிருந்தார். [சுப்பையாவின் (C. W. 36) சாட்சியத்தைக் காண்க].

(d) கடன்களை அனுமதித்து, முழுத் தொகை களையும் ஒட்டுமொத்தமாக வழங்குமாறு தமிழ் நாடு மாநில நிலவள வங்கியின் தலைவரான சண்முகத்தின் மூலமாக, திருநெல்வேலி மாநில நிலவள வங்கி உதவிச் செயலாளர் எஸ். இராம திரு. கிருஷ்ணனுக்குத் திரு. ஆதித்தனர் உத்தர விட்டார். திரு. ஆதித்தனர் திருநெல்வேலி-யிலிருந்து போன் மூலம் இவ்வாறு உத்தர விட்டார். [இராமகிருஷ்ணன் (சாட்சி எண் 14), சண்முகம் (சாட்சி எண் 19) ஆகியோரின் சாட்சியத்தையும் திரு. ஆதித்தனரின் பயணப்படி பட்டியல்கள் (ஆவண எண் 16), ஆய்வு மாளிகை நீள் தொலைபேசிப் பதிவேடு (ஆவண எண் 19) ஆகியவற்றையும் காண்க].

(e) மேல தாதன்குளம், கீழ தாதன்குளம் சங்கங்கள் எழுதிக்கொடுத்த உறுதிமொழிப் பத்திரம், ஒப்பந்தப் பத்திரங்கள், அடைமானப் பத்திரங்கள் ஆகியவற்றை 8—2—1971 ஆம் தேதி அலுவலக நேரத்திற்குப் பிறகும் பதிவு செய்யுமாறு, தற்காலிக உதவிப் பதிவாளர் குமார சுந்தரத்திற்கு (சாட்சி எண். 5) திரு. ஆதித்தனர் நேரில் உத்தரவிட்டார் (அமைச்சரைச் சந்திப்பதற்காக, கிருஷ்ணகாந்தனும், பீம்சிங்கும், தன்னை ஸ்ரீவைகுண்டத்திற்கு அழைத்துச் சென்றதாக குமாரசுந்தரம் அளித்துள்ள சாட்சியத்தைக் காண்க).

(f) கீழப்பெருமாளேரி, சேரகுளம் சங்கங்களின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருந்த போதும் ஆதித்தனர் திருநெல்வேலியில் முகாமிட்டிருந்தார். அவர், விழுப்புரத்திலிருந்த சண்முகத்திற்குப் போன் செய்து, கடன்களை உடனடியாக வழங்கும்படி மாநில நிலவள வங்கியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியத்திற்குத் தாக்கீது கொடுக்குமாறும், அவர் அதன்படிச் செய்தாரா என்பதைப் போனில் தெரிவிக்குமாறும் உத்தரவிட்டார். [சண்முகம் (சாட்சி எண். 19), சிவசுப்பிரமணியம் (சாட்சி எண். 18) கொடுத்துள்ள சாட்சியத்தையும், நீள் தொலைபேசிப் பதிவேட்டையும் (ஆவண எண். 19), கோப்பில் சிவசுப்பிரமணியம் எழுதியுள்ள குறிப்பையும் காண்க.]

(g) மேழப் பெருமாளேரி, சேரகுளம் சங்கங்களுக்கு இரண்டாவது தவணைக் கடன்களை உடனடியாக வழங்கச் செய்யுமாறு 3—3—1971-ல் சண்முகத்தைத் திரு. ஆதித்தனர் நீள் தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டார். அதன் பின்னர் திருநெல்வேலி, மாநில நிலவள வங்கியின் செயலாளரான இராமகிருஷ்ணனுடன் சண்முகம் தொடர்பு கொண்டார். ஆதித்தனரே சிவ சுப்பிரமணியத்திடம் பேசினார். இதுவிஷயமாக சட்ட உதவியாளர் சீனிவாசனுக்குத் தொலைபேசி மூலம் சிவசுப்பிரமணியம் உத்தரவிட்டார். [சண்முகம் (சாட்சி எண். 19), இராமகிருஷ்ணன் (சாட்சி எண். 14), சிவசுப்பிரமணியம் (சாட்சி எண். 18), சீனிவாசன் (சாட்சி எண். 13) ஆகியோரின் சாட்சியத்தையும், நீள் தொலைபேசிப் பதிவேட்டில் கண்டுள்ள பதிவையும், கோப்பில் சிவசுப்பிரமணியம் 3—3—1971-ல் எழுதிவைத்துள்ள குறிப்பையும் காண்க].

(h) தொடக்க நிலவள வங்கியின் கடன் விவரக் கோப்புகளில் சில ஆவணங்களைச் சேர்ப்பதற்கென்றே, திருநெல்வேலிக்குக் குத்தாலம் என்பவரை ஆதித்தனர் அனுப்பினர் (குத்தாலம், பின், புதியமுத்து ஆகியோரின் சாட்சியத்தைக் காண்க).

(i) 15—5—1972 ஆம் தேதியிட்ட அறிக்கையைச் சுப்பையாவுக்கு திரு. ஆதித்தனரே சொல்லி எழுதச் செய்தார். (காட்சிப் பொருள் எண். C. W. 36/1) சன் பேப்பர் மில்லுக்கு அச்சகங்களுள், புளிச்சை நார் விற்பனை செய்யப் போவதாக ஆதித்தனர் சொல்லித்தான் சுப்பையாவுக்குத் தெரிந்திருக்க முடியும். [சுப்பையாவின் (C. W. 36) சாட்சியத்தைக் காண்க.]

(j) மாநில நிலவள வங்கியின் தலைவர், இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பிய பதிலின் மூலப் பிரதியில் (Ex C.W.44/15) திரு. ஆதித்தனரே பேனாவினால் செய்த 'திருத்தங்கள்' இருந்தன [நடராசனின் (C. W. 44) சாட்சியத்தைக் காண்க].

(k) இச் சங்கங்கள், இட்டப்பகுதியில் செய்திருந்த மேம்பாட்டுப் பணிகளின் மதிப்பைப் பெரிதும் உயர்த்திக் காட்டுமாறு நடராசனுக்கு ஆதித்தனர் உத்தரவிட்டார் [நடராசனின் (C. W. 44) சாட்சியத்தைக் காண்க].

(l) புளிச்சை நார் விற்பனை செய்வதற்காக சன்பேப்பர் மில்லால் அந்த நான்கு சங்கங்களுக்கு 16 இலட்சம் ரூபாய் முன்பணம்

ஆதித்தனரின் உத்தரவின் பேரில் கொடுக்கப் பட்டது [கந்தசாமி (சாட்சி எண். 39), நற் குணம் (உறுதிமொழிப்பத்திரம் எண். 102) ஆகியோரின் சாட்சியத்தைக் காண்க].

(m) அந்த நான்கு சங்கங்களுக்குக் கனரா வங்கி மூலம் கடன் வழங்கப் பெறுவதற்கு திரு. ஆதித்தனர் மட்டுமிறிய அக்கறை காட்டினர் [கிளி (C.W.40), பெல்லியப்பா (சாட்சி எண். 32), குரு மூர்த்தி (சாட்சி எண். 33) ஆகியோரின் சாட்சியத்தைக் காண்க].

(n) மாநில நிலவள வங்கித் தலைவர் திரு. சண் முகம், இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பிய பதிலின் வாசகத்தைத் [காட்சிப்பொருள் C.W. 36/37 திரு. ஆதித்தனரே தயாரித்தார்; அவர் தம் கைப் பட எழுதிய மூல வாசகம், கோப்பில் இன்னமும் வைக்கப்பட்டிருக்கிறது [சுப்பையாவின் (C.W 36) சாட்சியத்தையும் கையெழுத்து நிபுணரின் சான்று தூரையையும் (ஆவணம் எண். 67) காண்க].

(0) மேம்பாட்டுப் பணிகளை மேற்பார்வை யிட்ட பணியாளர்கள், ''பெரிய அய்யாவை'' அதாவது, திரு. சி. பா. ஆதித்தனரைச் சந்திக்க பயணங்கள் மேற்கொண்டதாகவும், மேற் கொண்ட இந்தப் பயணங்களுக்காக சங்கங் களிடமிருந்து பயணப்படி கோரியதாகவும், தணிக்கையாளர் நாராயணனிடமிருந்து கைப் பற்றிய கணக்குப் புத்தகங்களிலிருந்தும் ஆவ ணங்களிலிருந்தும் (ஆவணம் எண். 567 தெரி கிறது. தான் இந்தச் சங்கங்களின் தணிக்கை யாளர் என்று நாராயணன் கூறிக்கொள்கிறார். சன் பேப்பர் மில்லுக்கு வரி முறையிட்டு வேலை செய்திருப்பதாகவும், திரு. சி. பா. ஆதித்த னருக்குக் கட்டுப்பட்டவர் எனவும் அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

(p) (i) சர்ச்சைக்கிடமான அந்த நான்கு இறை வைப் பாசனச் சங்க அமைப்பு உறுப்பினர்களுக்கு, ஆதித்தனர் கல்வி நிறுவனம் முதலில் ஏட்டளவில் தான் 1970 மார்ச்சில் நிலங்களை ''விற்பனை'' செய்தது. இந்த நிலங்களை வாங்கியதற்காக, பெயரளவு விற்பனையாளர்களுக்குக் கிரயம் எதை யும், பெயரளவு கொள்முதல்காரர்கள் செலுத்த வில்லை. பத்திரம் பதிவு செய்யப்படும்போது அவர்களில் எவரும் உதவிப் பதிவாளர் முன்னில யில் ஆஜராகவில்லை அல்லது அவருக்கு விற்ற தாகச் சொல்லப்படும் நிலத்தை அவர் அனு போகத்தில் எடுத்துக்கொள்ளவில்லை அல்லது சாகுபடி செய்யவில்லை.

(ii) இந்தப் பெயரளவு விற்பனைகளுக்குப் பிறகும் நிலச் சாகுபடி அனுபோகம், பின்னர் இந்த4 சங்கங்களின் நிட்டப்பதியின் கீழ் ஆதித்த னர் கல்வி நிறுவனத்திடமே தொடர்ந்து இருந் தது; ஆதித்தனர் கல்வி நிறுவனத்தின் வழக்குரை ஞர் அதிகாரம் பெற்றிருந்த திரு. எஸ். டி. ஆதித்தனிடம்தான் (இவர் சி. பா. ஆதித்தனரின் சகோதரர்) அந்த நிலங்களின் அதிகாரமும் கட்டுப்பாடும் உண்மையிலேயே நிலைபெற்றிருந் தது. இந்த நிலங்களின் சீர்திருத்தம், மேம்பாடு, சாகுபடி சம்பந்தமாக பின்னர் தாமதித்துச் செய் யப்பட்டதெல்லாம் மேற்சொன்னவாறு எதிர் மனுதாரரின் சகோதரரின் நேரடியான, தனிப் பட்ட மேற்பார்வையில்தான் செய்யப்பட்டது [நவநீதகிருஷ்ணன் (சாட்சி எண். 23), முத்துக் குமாரசுவாமி (சாட்சி எண். 24) ஆகியோரின் சாட்சியத்தைக் காண்க.].

(iii) அமைப்பு ''உறுப்பினர்கள்'' உண்மை யான ''சிறு உழவர்கள்'' அல்லர்; அவர்கள் ஆதித்தனரின் உறவினர்களாகவோ ''மாலை முரசு'', ''தினத்தந்தி'' சன் பேப்பர் லிமி டெட் நிறுவனங்கள் எதிலாகிலும் பணியாளர்க ளாகவோ இருந்தனர்; அந்த நிறுவனங்களின் அலுவல்கள், பணியாளர்கள் விஷயத்தில் பொது வாகவும், அந்த நிறுவனங்களின் பணியாளர்களான மேற்படி சங்கங்களின் நிர்வாகிகள் விஷயத்தில் குறிப்பாகவும், அவர் (சி. பா. ஆதித்தனர்) செல் வாக்கைப் பயன்படுத்த முடியும், உண்மையில் பயன்படுத்தியிருக்கக்கூடும் என்றும், தனது நெருங்கிய உறவினர்கள் மூலமாக அந்த நிறு வனங்களின் நிர்வாக அமைப்புகள் மீது கட்டுப் பாட்டு அதிகாரம் செலுத்த முடியும், உண்மை யில் செலுத்தியிருக்கக்கூடும் என்றும் தோன்று கிறது. மேற்சொன்ன நிறுவனங்களின் பணியாளர் கள், குறிப்பாக, இந்தச் சங்கங்களின் நிர்வாகிகள் என்று கூறப்படுபவர்கள், சி. பா. ஆதித்தனரை மரியாதை காரணமாக 'பெரிய அய்யா' என்று அழைப்பது வழக்கம்; அவர்கள் எப்போதுமே அவ ருடைய விருப்பப்படியும் உத்தரவுப்படியும் நடந்து வந்தனர் (கந்தசாமி, முருகன், பால் வண்ணன், சிங்கமுத்து, நற்குணம், ஜெயராமன் ஆகியோரின் சாட்சியங்களைக் காண்க).

(iv) அநேகமாக, கிருஷ்ணகாந்தன், முருகன், அரிச்சந்திரன், கொத்தமுத்து, நியாகராசன் நீங்கலாக, இந்தச் சங்கங்களைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள், பெயரளவில்தான் உறுப்பினர்க ளாக இருந்தனர். இந்த உறுப்பினர்களில் பெரும்பாலானோர் நிலத்தில் இறங்கியதே இல்லை. அவர்கள் அந்த நிலத்தில் சாகுபடி செய்ததும் இல்லை.

(v) (i) முதல் (iv) வரையிலான காரணங்களி னால், மொத்தத்தில், இச்சங்கங்கள் போலிச் சங் கங்கள் என்று முடிவுக்கு வருவது நியாயமற்றதாக இருக்க முடியாது.

(q) 1970 பிப்ரவரி, மார்ச்சில், கடன்கள் வழங் கப்பட்டதிலிருந்து 6 நாட்களுக்குள்ளாக பங்கு மூலதனம் செலுத்துவதற்கு எடுத்த தொகைகள் நீங்கலாக4தங்களுடைய வங்கிக் கணக்குகளிலி ருந்து சங்கங்கள் 17,40,000 ரூபாய் [(கடன் தொகையில் பெருந்தொகையை) எடுத்தன; அது குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	ரூபாய்.
மேல தாதன்குளம்	3,51,000
கீழ தாதன்குளம்	3,34,000
சேரகுளம்	4,24,000
கீழப்பெருமாணேரி	6,33,000

(வங்கிக் கணக்குகளைப் பார்க்க.)

(r) வங்கிகளிலிருந்து எடுக்கப்பட்ட மேற் சொன்ன மொத்தம் 17,40,000 ரூபாய், இந்த நான்கு தொகுதிச் சங்கங்களின் தலைவரெனச் சொல்லப்பட்ட கிருஷ்ணகாந்தனிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு எடுக்கப்பட்ட தொகைகள், கிருஷ்ணகாந்தன் அல்லது திரு. சி. பா. ஆதித்தனுரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தான் ஏற்கெனவே கொடுத்திருந்த ஐந்து வாக்கு மூலங்களில் முருகன் கூறியிருந்த போதிலும், அவர் கடைசியாகத் தாமதித்துத் தாக்கல் செய்திருந்த உறுதிமொழிப் பத்திரத்தில் திரு. சி. பா. ஆதித்தனர் மீது குற்றஞ் சாட்டுவதை விலக்கிக் கொண்டார். வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட இந்தத் தொகைகள் வரப்பெற்றதாகக் கிருஷ்ண காந்தன் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகவே, அவ்வாறு எடுக்கப்பட்ட தொகைகளில் ஏதேனும் ஒரு பகுதி, உண்மையிலேயே திரு. சி. பா. ஆதித்தனுரிடம் கொடுக்கப்பட்டதாக ஐயத்திற்கிடமின்றிக் கூறவியலாது.

(s) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் இந்தத் தொகைகள் எடுக்கப்பட்டதால் இவற்றுக்கும் அடுத்துவந்த தேர்தலுக்கும் ஏதோ தொடர்பிருக்க வேண்டுமென்ற ஐயத்திற்கு இடமளிக்கிறது. ஆனால், அவ்வாறு எடுக்கப்பட்ட தொகையின் ஒரு பகுதி, உண்மையிலேயே தேர்தலுக்குத்தான் செலவிடப்பட்டது, அல்லது நிலச் சீர்திருத்தம்—மேம்பாட்டுப் பணிக்காக வாங்கப்பட்ட கடன்கள், வேறு காரியத்திற்குப் பயன்படுத்தப்பட்டன என்று காட்டக்கூடிய சாட்சியம் எதுவுமில்லை.

(t) (i) இந்தத் தொகைகள் எடுக்கப்பட்ட பிறகு, குறைந்தது எட்டு மாதங்கள் வரையில் கூட, (அதற்கு மேற்படாவிடினும்), எந்தப் பணிகளுக்காகக் கடன்கள் வாங்கப்பட்டனவோ அந்தப் பணிகளே நிறைவேற்றுவதற்கு எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) அந்த நிலங்களில் காட்டைத் திருத்தவும், ஜூலிஃப்ளோராவை அகற்றவும் 1971 நவம்பரில் புல்டோசர்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன. நிலச் சீர்திருத்த வேலை, அநேகமாக, 1971 நவம்பரில்தான் தொடங்கியது என்பதையும், சொல்லப்போனால், நிசர்வ் வங்கி அதிகாரிகள் 16-12-71ல் வந்து பார்வையிட்ட பிறகே, அந்த வேலை முடுக்கி விடப்பட்டது என்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது.

(iii) திரு. வேங்கட நாராயண தலைமையிலான நிசர்வ் வங்கி அதிகாரிகள் குழு 16—12—1971-ல் இந்தச் சங்கங்களின் திட்டப் பகுதிக்கு வருகை புரிந்த போது, 60 ஏக்கர் நிலம்தான் சீர்திருத்தம் செய்யப்பட்டதும் எஞ்சிய பகுதி, முட் புதர்களைக் கொண்ட பரந்த தரிசு நிலமாக இருந்ததும் தெரிய வந்தன. திட்டப் பகுதியில் நிறுவுவதற்கென்று சில பம்பு செட்டுகளும், இயந்திரங்களும் டெக்கக் கண்டனர்; என்றாலும், இப் பகுதியில் புதிதாகத் தோண்டப்பட்ட கிணறுகள் இரண்டு மட்டுமே இருக்கக் கண்டனர். இந்த நிலங்களைச் சீர்திருத்துவது, கிணறுகள் தோண்டுவது அல்லது மேம்பாடு செய்வது குறித்து நடராசன் தயாரித்திருந்த செலவு மதிப்பீட்டைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், இந்தப் பணிகளுக்காக, 16—12—1971 வரை செலவிடப்பட்ட தொகை 2·00 இலட்சம் ரூபாய்க்கு மேற்படாது.

(iv) இந்த நிலங்களை மேம்படுத்துவது தொடர்பாக நடராசனின் செலவு மதிப்பீடு சரியென்று எடுத்துக் கொண்டாலும், நிலச் சீர்திருத்தம், கிணறுகள் தோண்டுவது, இச் சங்கங்களின் நிலங்கள் தொடர்பான ஏனைய மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுவது ஆகிய வகைகளில், 15-4-72 வரையில் 7.75 இலட்சம் ரூபாயும், 28-7-72 வரையில் 14.57 இலட்சம் ரூபாயும் மட்டுமே செலவிடப்பட்டிருக்கும். இந்த 14.57 இலட்சம் ரூபாய் செலவு மதிப்பீட்டில், கங்கிரீட் கரை யிடப்பட்ட பாசன வாய்க்கால்கள் அமைப்பது, வேலி போடுவது, தெளிப்புப் பாசனம் முதலியவை குறித்த செலவு மதிப்பீடும் அடங்கும். உண்மையில் பார்க்கப் போனால், இந்த இனங்கள் அனுமதிக்கப்பட்ட இனங்கள் அல்ல. பதிவாளரின் முன் அனுமதியின்றிச் செய்யப்பட்ட இந்தச் செலவு, தணிக்கையாளரின் கருத்துப்படி அங்கீகரிக்கப்படாத செலவாகும். இந்தத் தவறு, பொருட்படுத்தக்கூடிய பெரிய தவறல்ல. ஏனெனில், பெரு நோக்கில் பார்த்தால், இந்த இனங்கள் குறித்துச் செய்யப்பட்ட செலவு, கடன்கள் எந்த காரியத்திற்காகப் பெறப்பட்டனவோ அந்த காரியத்துடன் தொடர்புடையதல்ல எனக் கூற முடியாது.

(v) இவ்வாறுக, நடராசனின் அசல் மதிப்பீடு அப்படியே சரியென எடுத்துக் கொள்ளப் பட்டாலும், 1972 ஆகஸ்டில் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படும்வரை, 1971 பிப்ரவரி, மார்ச்சில் இச்சங்கங்கள் தாம் எடுத்திருந்த 17.40 இலட்சம் ரூபாயில் சுமார் 14.57 இலட்சம் ரூபாய் மட்டுமே செலவிட்டிருந்தன. எஞ்சிய சுமார் 3 இலட்சம் ரூபாய் அதுவரை பயன்படுத்தப்படாமலேயே இருந்தது. 3 இலட்சம் ரூபாய் செலவில் மேம் பாட்டுப் பணிகள் எவையேனும் செய்யப்பட்டிருந்தால், அவை இந்தக் கடன்கள், நிலவள வங்கிக்குத் திருப்பிச் செலுத்தப்பட்ட பின்னரே செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(u) (i) வங்கியிலிருந்து மொத்தம் 17·40 இலட்சம் ரூபாய் கடன் தொகைகளை எடுத்த பிறகுதான் வீதாச்சாரப்படி சங்க உறுப்பினர்களுக்குத் தான் வழங்கியதாகக் கிருஷ்ணகாந்தன் கூறியுள்ளது நிரூபிக்கப்படவில்லை ; அது உண்மையாகவும் தோன்றவில்லை.

(ii) 1971 பிப்ரவரி—மார்ச்சில் பணம் எடுக்கப்பட்டதிலிருந்து 1971 நவம்பரில் இச் சங்கங்களின் திட்டப் பகுதியில் மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்பட்டவரை, இந்த 17.40 இலட்சம் ரூபாய் என்ன செய்யப்பட்டது என்பதற்கு உருப்படியான விளக்கம் எதுவும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

(v) (i) ரிசர்வ் வங்கியின் குறிப்புக்குப் பதிலளிக்கும் வகையில், திரு. சி. பா. ஆதித்தனார் சொல்லி எழுதிய—கடன் தொகைகளை முழுவதுமாகப் பயன்படுத்தியதாக 25—11—1971ஆம் தேதியிட்டு மகாதேவன் கொடுத்த பயன்பாட்டுச் சான்றிதழ்கள் இணைக்கப்பட்ட அறிக்கையும், நாராயணனின் தணிக்கை அறிக்கையும் எப்படிப் பார்த்தாலும், உண்மைக்குப் புறம்பானவையாக இருக்கின்றன. அதற்கு மாறாக, இச் சங்கங்களின் விவகாரங்கள் தொடர்பாகவும் இச் சங்கங்கள் தாங்கள் பெற்ற கடன்களைப் பயன்படுத்தியது தொடர்பாகவும் நாராயணன் தனது ஆய்வு அறிக்கையில் கூறியுள்ள முடிவுகள் கணிசமான அளவுக்குச் சரியானவை என்று தோன்றுகிறது.

(ii) இந்தக் கடன் தொகைகளை எடுப்பதில் திரு. கிருஷ்ணகாந்தனுக்கும் திரு. சி. பா. ஆதித்தனுருக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தோன்றுகிறது. கிருஷ்ணகாந்தன், "இனத் தந்தி" அலுவலகத்தின் மேலாளராக இருந்தார். அதேகாலகட்டத்தில் அவர், திரு. சி. பா. ஆதித்தனாரின் உறவினராக இருக்கக்கூடும். திரு. ஆதித்தனார், கிருஷ்ணகாந்தனைத் தன் வசத்தில், தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நிலையில் இருந்தார்.

(w) கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான பணம், திரு. சி. பா. ஆதித்தனார் கொண்டதன் பேரில் சன் பேப்பர் மில்லினுல் வழங்கப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கி அதிகாரிகள் இரண்டாவது முறையும் வந்து பார்வையிடுவார்களோ என்ற அச்சத்தை, நிலவள வங்கிக்கு உரிய தேதிக்கு முன்னரேகூட கடன்களைத் திருப்பிச் செலுத்தி, இச் சங்கங்களின் திட்டப் பகுதியில் மேம்பாட்டுப் பணியை முடுக்கிவிடுவதன் மூலம் திரு. சி. பா. ஆதித்தனார் தவிர்க்க விரும்பினார்.

(x) கமிஷனல் அழைப்பாணை கொடுக்கப்பட்ட திரு. சி. பா. ஆதித்தனார் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்குச் சாட்சியமளிப்பவர்கள் என்று கருதப்பட்ட சாட்சிகள் அச்சுறுத்த, பொய் சாட்சியம் அளிக்கச் செய்ய அல்லது கலைக்க முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. ஆகவே, திரு. சி.பா. ஆதித்தனரின் அனுமதியின் பேரில் அல்லது உத்தரவின் பேரில் செயல்பட்டு வந்தவர்கள்தான் இந்த முயற்சிகளைச் செய்தனர் என்று ஊகிப்பது தவருகாது.

முடிவு.

I. மேலே விவரித்துள்ள நிலவரங்களும், நிலைமைகளும், சர்ச்சைக்குரிய நான்கு இறவைப் பாசனச் சங்க விவகாரங்களில் அந்நாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் நெருங்கிய வகையில் நேரடித் தொடர்பு கொண்டிருந்தார் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. இந்தச் சங்கங்களை அமைப்பதோ, பதிவு செய்வதோ, இவற்றுக்குக் கடன்கள் அனுமதித்து, வழங்குவதோ அல்லது அவற்றின் கடன்களைத் திருப்பிச் செலுத்தப் பணத்திற்கு ஏற்பாடு செய்வதோ, பழியைத் துடைத்துக் கொள்வதோ, இந்திய ரிசர்வ் வங்கி கொடுத்துள்ள பாதகமான அறிக்கையின் விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதோ, எதுவாயினும், திரு. சி.பா. ஆதித்தனார்தான் மூலவராகச் செயற்பட்டிருக்கிறார். இச்சங்கங்களைப் பதிவு செய்வது, இவற்றுக்குக் கடன்கள் அனுமதித்து வழங்குவது, தவருன பயன்பாட்டுச் சான்றிதழ்கள் கொடுப்பது, அது போன்ற சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் செய்துள்ள மேற்சொன்ன முறைகேடுகள், ஒழுங்கீனங்கள் ஆகியவற்றுக்கு முழு முதல் பொறுப்பு எதிர் மனுதாரரையே சாரும். இவை எதிர் மனுதாரரின் முழையற்ற அல்லது சட்ட விரோதமான உத்தரவுகளை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்மூடித்தனமாகப் பின்பற்றியதால் ஏற்பட்ட வீணவுகள்தான். அவர் ஆட்டுவித்தப்படி ஆடாவிட்டால், என்ன நீங்கழைத்துவிடுவாரோ என்று அவர்கள் அஞ்சியதே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர் இட்ட பணியை விழுந்தடித்துக் கொண்டு செய்ததற்கான காரணம். அந்த அதிகாரிகள் தங்களுடைய பொதுக் கடமையை நிறைவேற்றும்போது செய்திருக்கக் கூடாத பணிகளை இவ்வாறு முறையற்ற வகையில் செய்ய வைத்த தன் மூலம் எதிர்மனுதாரர் அமைச்சர் என்ற முறையில் தன்னுடைய அதிகாரத்தையும் பதவியையும் தவருகப் பயன்படுத்தியுள்ளார்.

II. 1971 பிப்ரவரி/மார்ச்சில் இச் சங்கங்களின் சார்பில் 17.40 இலட்சம் ரூபாய் எடுக்கப்பட்டது தொடர்பாக, எதிர்மனுதாரர் திரு. சி. பா. ஆதித்தனர்மீது கிரிமினல் குற்றம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதுதான் கேள்வி. இது தொடர்பாக, கிருஷ்ணகாந்தன், முருகன், இச் சங்கங்களின் ஏகிய நிர்வாகிகள் ஆகியோர்மீது கிரிமினல் கையாடல் குற்றங்களை முதலியவை குறித்து, குற்ற நடைமுறை விதிக்கோவையின்கீழ் காவல்துறை மேற்கொண்டுள்ள புலனுய்வுகள் (தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட போதிலும்) முடிவு செய்யப்படாமல் இருக்கின்றன என்பதைக் குறிப்பிடலாம். ஆகவே, இந்த முகாந்திரத்தை எச்சரிக்கையுடன்

ஆராய வேண்டும். இல்லையெனில், ஏனைதானே என்றும் முன்னெச்சரிக்கை இன்றியும் முடிவுக்கு வருவது, காவல் துறையினர் நியாயமானதொரு புலனுய்வை மேற்கொள்வதைப் பாதிக்கும். குற்றஞ் சாட்டப்பட்டவர் மீது வழக்கு தொடரப்பட்டால், நியாயமான முறையில் நீதி விசாரணை மேற்கொள்வதில் தர்மசங்கடம் ஏற்படும். நான் கூறவிழைவதெல்லாம், கமிஷன் முன்னிலையில் கொடுக்கப்பட்ட சாட்சியத்தின் அடிப்படையில், கிரிமினல் வழக்கு நிலைநாட்டப் பட்டுவிட்டதென்று திட்டவட்டமாகக் கூறிட இயலாது என்பதே. அதே சமயத்தில், இந்த 17.40 இலட்சம் ரூபாயைக் கிரிமினல் கையாடல் செய்த அல்லது சுருட்டிய குற்றமொன்று நடந்திருக்கக் கூடும் என்பதையும் மறுக்க முடியாது. இந்த விஷயத்துக்கு ஆதரவான பதிலுக்குச் சாதகமாக அல்லது பாதகமாக இருக்கக்கூடிய—என் முன்னிலையில் கூறப்பட்ட சாட்சியத்திலிருந்து மெய்ப்பிக்கப் படும் நடப்புகளும் நிலவரங்களும், கீழ்க்கண்டவாறு பட்டியல் போட்டுக் காண்பிக்கப்படலாம். சாத்தியமான, சாதகமான விஷயத்தில் இடம் பெறும் சூழ்நிலைகள் வருமாறு :

(1) 1971 பிப்ரவரி, மார்ச்சில் வங்கியிலிருந்து பணம் (இந்தரூ. 17.40 இலட்சம் கடன் தொகை) எடுக்கப்பட்ட பிறகு இந்தத் தொகையைக் கிருஷ்ணகாந்தன் பெற்றார் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது.

(2) கிருஷ்ணகாந்தன், திரு. சி. பா. ஆதித்தனரின் செல்வாக்குக்கும் அதிகாரத்திற்கும் கட்டுப் பட்டிருந்தார்; திரு. சி. பா. ஆதித்தனர் கிருஷ்ணகாந்தனைத் தன்வயப்படுத்தி, கட்டுப் படுத்தக்கூடிய சக்தி பெற்றிருந்தார்.

(3) அந்தப் பணம், 8 மாதம் வரை அப்படியே வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது; ஏன் அவ்வாறு வைத்துக்கொள்ளப்பட்டது என்பதற்கு உருப்படியான விளக்கமேதும் கொடுக்கப் படவில்லை. அதற்கு மாறாக, இந்தப் பணத்தைச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கியதாகக் கிருஷ்ண காந்தன் கொடுத்திருக்கும் விளக்கம் தவறானது என்பது தெளிவாகத் தெரிகிறது.

(4) பெருந்தொகையான இந்த 17.40 இலட்சம் ரூபாய், தமிழ் நாடு சட்டமன்றப் பேரவைத் தேர்தல் சமயத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது.

மேற்சொன்னவற்றுக்கு எதிராக, கீழ்க்காணும் விஷயங்களைக் கருதிப் பார்க்காமல் இருக்க முடியாது :—

(1) இந்தத் தொகையின் ஏப் பகுதியும் தேர்தல் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்டதற்கு அல்லது கடன்கள் எந்தக் காரியத்திற்கு வாங்கப் பட்டனவோ அந்தக் காரியம் அல்லாத வேறு காரியத்திற்குப் பயன்படுத்தப்பட்டதற்கு எவ்வித சாட்சியமும் இடையாது.

(2) இந்தச் சங்கங்களுக்குச் சொந்தமான நிலங்களைச் சீர்திருத்தம் செய்வது, கிணறுகள் கட்டுவது அல்லது தோண்டுவது, ஏனைய மேம் பாட்டுப் பணிகளை மேற்கொள்வது முதலான வேலைகளுக்கு, 28-7-1972 வரை, அதாவது, இந்தக் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படுவதற்கு முன்னுக, இந்தத் தொகையிலிருந்துதான் 14.57 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்க வேண்டும்.

(3) இந்தக் குற்றச்சாட்டைக் கூறி மனுதாரர் தமது மகஜரைக் முடியரசுத் தலைவருக்கு அனுப்புவதற்கு முன்னரே, இந்தக் கடன்கள் அனைத்தும் வட்டியுடன் திருப்பிச் செலுத்தப் பட்டுவிட்டன.

(4) கடன் எதற்காக வழங்கப்படுகிறதோ அதற்குத் தான், இன்ன கால அளவுக்குள்தான் செலவிடப்பட வேண்டும் என்று, கடன் ஒப்பந்தத்தில் நிபந்தனை அல்லது வரையறை எதுவும் விதிக்கப்படவில்லை.

எனவே, குறை நிறைகளைச் சீர்தூக்கிப் பார்த்தால், இந்த ரூ17.40 இலட்சம் தொடர்பான கிரிமினல் நம்பிக்கை மோசடி அல்லது கிரிமினல் கையாடல் குற்றமெதுவும் செய்யப்பட்டிருப்பதாக, ஐயந்திரிபுயின்றி, திட்டவட்டமாகக் கூற முடியாது. இந்தத் தொகை தற்காலிகமாகக் கையாடல் செய்யப்பட்டிருக்கும் சாத்தியம் இருக்கிறது என்பதைக் கமிஷன் முன்னிலையில் கொடுக்கப்பட்ட சாட்சியம் நிரூபிக்கிறது. இச் சங்கங்களின் நிர்வாகிகளுக்கெதிராகப் பதிவு செய்யப்பட்ட மேற்சொன்ன கிரிமினல் வழக்கில் மேற்கொண்டும் புலன் விசாரணை செய்தால்தான், குற்றம் நடந்திருக்குமோ (possibility) என்ற ஐயத்திற்கிடமான நிலைமையை நடந்திருக்கக் கூடும் (probability) என்ற சாத்தியமான நிலைமைக்குக் கொண்டு செல்லவும், புலன் விசாரணையிலுள்ள குற்றங்களில் திரு சி. பா. ஆதித்தனர் எந்த அளவுக்குச் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதை வெளிப்படுத்தவும் இயலும்.

குற்றச்சாட்டு எண் 23 (2).

திரு. எம். கல்யாணசுந்தரத்தின் மகஜரில் இடம் பெற்றிருந்த இந்தக் குற்றச்சாட்டு வருமாறு :

''தி.மு.க.-வைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞரான திரு. இராஜமாணிக்கம் என்பவர், தஞ்சாவூர் அர்பன் பேங்கிலிருந்து 2.00 இலட்சம் ரூபாய் எடுத்தார். அவருக்கெதிராகக் கிரிமினல் வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. பணம் எடுக்குமாறு கூறியது யார்? எதற்காக? இந்தக் கேள்விகளையும் சம்பந்தப்பட்ட விஷயங்களையும் ஆராய விசாரணையொன்று நடத்தவேண்டும்.''

விசாரணைக் கமிஷன் நியமித்த புலனுய்வு அலுவலர்கள் சேகரித்த தகவல்கள் வருமாறு :

தஞ்சாவூர் அர்பன் பேங்க் என்ற பெயரில் ஒரு வங்கியே இடையாது. என்றாலும், 'கருத்தங்குடி திராவிடன் கோ-ஆபரேடிவ் அர்பன்பேங்க்' என்ற பெயரிலும் 'திக்கல்லன் கோ-ஆபரேடிவ் டவுன் பேங்க்' என்ற பெயரிலும் இரண்டு அர்பன் பேங்குகள் இருக்கின்றன. இவ்விரண்டிலும் எவரேனும் நிதிகளைக் கையாடல் செய்ததாகப் புகார் ஏதும் இல்லை. தஞ்சாவூரிலுள்ள இவ் விரண்டு வங்கிகள் எதனுடனும் தொடர்பு கொண்டுள்ள அல்லது தொடர்பு கொண்டிருந்த இராஜமாணிக்கம் என்ற பெயர்கொண்ட வழக்கறிஞர் எவருமில்லை.

ஏ. இராஜமாணிக்கம் என்ற பெயரில் நாகப்பட்டினம் தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ. ஒருவர் இருக்கிறார். அவர் ஒரு வழக்குரைஞர், தி.மு.க-வைச் சேர்ந்தவர். அவர், தஞ்சாவூர் நிலவள வங்கியின் தலைவராகவும், திருவாரூரில் நாகப்பட்டினம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். பின்னர் இந்தப் பதவிகளை ராஜினாமா செய்து விட்டார். இவ் விரு வங்கிகளிலிருந்தும் அவர் கடன்கள் வாங்கியிருந்தார்; கடனில் ஒரு பகுதியை அவர் திருப்பிச் செலுத்திவிட்டார். இவ்விரு வங்கிகளில் எதிலும் அவர் கையாடல் செய்தார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

தொண்டராயன்படி கிராமக் கூட்டுறவு வேளாண்மைக் கடனுதவிச் சங்கத்தில் நடைபெற்ற கையாடல் தொடர்பாக, இராஜ மாணிக்கம் என்ற ஒருவர் மீது தஞ்சாவூர் காவல்துறையினர் கிரிமினல் வழக்கொன்று தொடர்ந்தனர். அவர் ஒரு வழக்குரைஞரும் அல்லர் தி.மு.க.-வைச் சேர்ந்தவரும் அல்லர் ஆகவே, அவர், இந்தக் குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ளவர் அல்லர்.

மேற்சொன்ன நிலைமையில் இந்தக் குற்றச்சாட்டு முழுவதும் தவருனதாகத் தோன்றுகிறது.

குற்றச்சாட்டு எண். 23(3)

திரு. எம். கல்யாணசுந்தரத்தின் மகஜரில் இடம்பெற்றிருந்த இந்தக் குற்றச்சாட்டு வருமாறு :—

''தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைவரும், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினருமான, திரு. பி. மாணிக்கவாசகம், பல்வேறு போலிப் பெயர்களில் 2·00 இலட்சம் ரூபாய் கையாடல் செய்து, 2—9—1972-ல் கைது செய்யப்பட்டிருக்கிறார்''.

சுமிஷன் நியமனம் செய்யப்பட்ட அலுவலர் நடத்திய விசாரணையில் சேகரிக்கப்பட்டத் தகவலிலிருந்து கிராமக் கூட்டுறவு வேளாண்மைக் கூடுனுதவி சங்க உறுப்பினர்கள் 41 பேருக்கு (போலி நபர்கள்) 2·04 இலட்சம் ரூபாய் ரொக்கக் கடன் கணீத் தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு விற்பனை வங்கியின் அந்நாள் தலைவராள திரு. பி. மாணிக்க வாசகம் அனுமதித்ததாகத் தோன்றுகிறது 2·04 இலட்சம் ரூபாயில் 1·50 இலட்சம்ரூபாயை, திரு. மாணிக்கவாசகம் தன் உறவினர்கள் பெயரில், திருச்சிராப்பள்ளியிலுள்ள 3 வங்கிகளில். வைப்பீடு செய்தார். தஞ்சாவூர் கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர் விசாரணை நடத்தத் தொடங்கிய பிறகு, வைப்பீட்டாளர்கள் அந்தத் தவ வங்கிகளிலிருந்து தொகைகளை எடுத்து, 8—8—1972-க்கும் 10—8—1972-க்கும் இடையில், தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியில் 1,50,490.36 ரூபாயை ரொக்கமாகச் செலுத்தினர். எஞ்சிய 53,510 ரூபாய் இன்னும் நிலுவையாக இருக்கிறது.

துணைப் பதிவாளர் அறிக்கையின் பேரில், இ.பி.கோ. 409, 420 ஆவது பிரிவுகளின் கீழும் 109 ஆவது பிரிவின் கீழும், திரு. மாணிக்கவாசகத் தின்மீதும் மற்றும் 5 பேர் மீதும் வழக்கொன்றைக் காவல்துறையினர் தொடர்ந்தனர். மாணிக்கவாசகத்தை 2—9—1972-ல் காவல் துறையினர் கைதுசெய்தனர். அதைத் தொடர்ந்து, குற்றஞ்சாட்டப் பட்டவர்களில் ஒருவர் அப்ரூவராவும் மற்றொருவர் பிராஸிக்யூஷன் தரப்பு சாட்சியாகவும் மாறினர். எஞ்சிய நால்வர் மீது புதுக்கோட்டை செஷன்ஸ் நீதிபதி முன்னிலையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்த நீதிபதி, அவர்கள் ஒவ்வொருவருக்கும் பல்வேறு கால அளவுக்குக் கடுங்காவல் தண்டனை விதித்தார். மாணிக்க வாசகத்திற்கு இரண்டாண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப் பட்ட அனைவரும், தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்துகொண்டுள்ளனர்; அந்த மேல் முறையீடு, சென்னை, உயர்நீதி மன்றத்தில் இன்னும் முடிவு செய்யப்படாமல் இருக்கிறது.

ஆகவே, சுமார் 2·00 இலட்சம் ரூபாய் கையாடல் செய்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டு, வழக்கு தொடரப்பட்டு, தண்டனை விதிக்கப்பட்ட மாணிக்கவாசகம் (தி.மு.க. செயற்குழு உறுப்பினர்களில் ஒருவர்), 2·00 இலட்சம் ரூபாயைக் கையாடல் செய்திருக்கிறார் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது. எனினும், இதை, அந்நாள் தி.மு.க. அரசுக்கு எதிரான ஒரு குற்றச்சாட்டாக எப்படிக் கொண்டுவரமுடியும் என்பது புரியவில்லை. தங்கள் கட்சியைச் சேர்ந்த செல்வாக்குள்ள ஓர் உறுப்பினர் சம்பந்தப்பட்டிருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதை தி.மு.க. அரசினர் அனுமதித்திருக்கிறார்கள் என்பது, அவர்களுக்குப் பெருமை தரக்கூடிய ஒன்றாகும். கையாடலில் அல்லது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் படுவதைத் தடுக்கும் முயற்சியில் அமைச்சர்கள் எவரையும் சம்பந்தப்படுத்துவதற்கு 'ஆதாரமே இல்லை. மேற்சொன்ன நிலைமைகளில் இந்தக் குற்றச்சாட்டும் முழு அளவில் தவருனதாகவே தோன்றுகிறது.

குற்றச்சாட்டு 23 (4)

திரு. M. கல்யாணசுந்தரம் மகஜரில் இந் குற்றச்சாட்டு பற்றி பின்வருமாறு கூறப்பட் டுள்ளது:—

''தி.மு.க. தலைவரின் ஆணைகளின்படி தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் பினமி பெயர்களில் ரூ. 52 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த மோசடி கண்டு பிடிக்கப்பட்டபிறகும்கூட எந்த நடவடிக்கை யும் இதுவரை எடுக்கவில்லை''.

கமிஷனுல் நியமிக்கப்பட்ட புலனுய்வு அலுவலர் புலனுய்வின்போது சேகரித்த உண்மை கள் பின்வருமாறு:—

சேலம் மாவட்டம், இரண்டு மாவட்டங்க ளாக, அதாவது சேலம், தருமபுரி என்று பிரிக்கப் பட்டபிறகு 17-11-1966 ஆம் நாள் முதல் தருமபுரி மத்தியக்கூட்டுறவு வங்கி செயல்படத் தொடங்கியது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 27 ஆவது பிரிவில் வழங்கப்பட் டுள்ள அதிகாரங்களைக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், ஓராண்டிற்கு, வங்கியின் நிருவாகக் குழுவிற்கான இயக்குநர்களின் முதல் அமைப்பை ஏற்படுத்தப் பின்வருபவர்களை நியமித்தார்.

1 S. நாகராஜ முனேகர்
2 P. M. குப்புசாமி
3 D. திருவ ணமூர்த்தி
4 நீர்த்தகிரி கவுண்டர்.
5 K. அப்பாவு பிள்ளை
6 D. N. வடிவேல் எம். எல். ஏ.
7 தருமபுரியிலுள்ள கூட்டுறவுச் சங்கங் களின் துணைப்பதிவாளர்.
8 P. M. முனுசாமி கவுண்டர்
9 கிருஷ்ணகிரி வட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத் தலைவர்.

இவர்களில் நான்கு பேர் ஏற்கெனவே சேலம் மத்திய வங்கியில் இயக்குநர்களாக இருந்தவர் கள். தொடர் எண் 1, 2 ஆகிய இருவரும் முறையே தலைவர், துணைத்தலைவராக நியமிக்கப் பட்டனர்.

நிர்வாகக் குழு 1967 ஆம் டிசம்பரில் மாற்றியமைக்கப்பட்டபோது, நான்கு பழைய உறுப்பினர்கள் மாற்றப்பட்டனர். இவர்களுக்குப் பதிலாக தி.மு.க. வினரின் தீவிர ஆதரவாளர் களான திரு கரிவேங்கடம் (தருமபுரி வழக்குரை ஞர்), மேலும் மூவர், அதாவது பி. எஸ், முரு கேசன், பி. வி. ஸ்ரீராமுலு, என், ஆறுமுகம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். திரு கரிவேங் கடம் தலைவராகவும், திரு. முருகேசன் துணைத் தலைவராகவும் கொண்டுவரப்பட்டனர். இரண் டாவது நிர்வாகக் குழு இரண்டாண்டுகள் முழுமை யாகத் தொடர்ந்திருந்தது. அதன்பிறகு வங்கி யின் நிர்வாகம் மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் இல்லை என்ற காரணத்தினுல், சேவம், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர், திருவாளர்கள் கரிவேங்கடம், முருகேசன், ஸ்ரீராமுலு, ஆறுமுகம் இவர்களை மாற்ற வேண்டு மென்று கருத்து தெரிவித்தார். குழுவிற்கு இயக்குநர்களை நியமிக்கும் கால அளவை 3 ஆண்டுகளிலிருந்து ஆறு ஆண்டுகளாக நீட்டிக் கும் வகையில் வங்கியின் துணை விதிகளைத் திருத்தக் குழு தீர்மானித்தது. அதன்படிக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் பின்வருமாறு இயக்குநர் குழுவை மாற்றி அமைத்தார்.

1. தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர்—தலைவர்
2. S. சண்முகம்—துணைத்தலைவர்.
3. D. N. நீர்த்தகிரி கவுண்டர்.
4. R. முனுசாமி செட்டி.
5. D. திருவ ணமூர்த்தி.
6. D. சென்னியப்பன்
7. கரிவேங்கடம்.

இணைப்பதிவாளர் மறுப்பு தெரிவித்திருந்த போதிலும் திரு. எம். வி. கரிவேங்கடம் மீண்டும் நியமிக்கப்பட்டது வியக்கத்தக்கதாகும். மேலும் அவர் நிருவாகப் பொறுப்பு வகித்திருந்த காலத் தில் வங்கியிலும், அதேபோல பலவேறு சங்கங்களி லும் அதிக அளவில் முறைகேடுகள் செய்யப் பட்டிருந்தன. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் முதுநிலை அதிகாரி திரு. வி. ஆர். கணபதி தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை ஆய்வு செய்து, பல்வேறு கடுமையான முறைகேடுகளைக் கண்டுபிடித்தார். அவை பின் வருமாறு :—

(1) மத்திய கூட்டுறவு வங்கி மாநிலக் கூட்டுறவு வங்கியிடமிருந்து ரூ. 50 இலட்சம் கடன் பெற்றது. வருல்கள் ரூ. 12.77 இலட்சமே இருக்கு, 26 இலட்சம் திருப்பிச் செலுத்தியது. குறுகியகால வேளாண்மைக் கடன்களாக ரூ.4.83 இலட்சம் வழங்கியது.

(2) 1969ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரையுள்ள காலத்தில் மாநிலக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெற்ற கடன்கள், திருப்பிச் செலுத்தப்பட்டவை இவற்றில் பெருமளவில் வித்தியாசங்கள் இருந்தன.

(3) கணக்கில் சரிக்கட்டல் மூலமாக பல வகையில் கணக்குகள் சரிக்கட்டப் பட்டிருந்தன. வருல்கள் செய்யப்பட்டபிறகு 15 நாள் கழித்துக் கடன்கள் வழங்க வேண்டு மென்று நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளை மீறி

கடன்கள் வசூல் செய்யப்பட்ட அன்றே அல்லது அடுத்த நாள் சங்கங்களுக்குக் கடன்கள் கொடுக்க கப்பட்டன. கடன்களைப் பட்டுவாடா செய் வதற்கு வசதியாக ரொக்க இருப்புகளை ஏற் படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத் திற்காக குறுகிய காலத்திற்கு ரொக்க வைப் பீடுகள் (Call Deposits) ஏற்றுக் கொள்ளப்பட்டன. மேலும் வசூல்கள் செய்யப் பட்ட பின்னர், ரொக்க வைப்பீடுகள் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டன.

(4) கடன்களைப் பட்டுவாடா செய்வதற்கு வசதியாக, ரொக்க இருப்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற அதே நோக்கத்திற்காக, மத்திய வங்கிப் பணியாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் ஆகியோருடைய சேமிப்புக் கணக்குகளில் தொகைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

(5) வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களின் உதவியுடன், வசூல்கள் செய்யவும், கடன்கள் பட்டுவாடா செய்ய வேண்டிய நோக்கத்திற்காக வும் பல சங்கங்கள் அமைக்கப்பட்டன. வசூல்கள், பட்டுவாடா 100 ரூபாய்நோட்டுகள் மூலமே நடைபெற்றன. இது கணக்குகளைச் சரிக் கட்டப்பட்டதையும், மோலியாகக் கணக்குப் புத்தகங்களில் குறிக்கப் பட்டதையுமே காட்டு கிறது.

இந்த வங்கியை முழுமையாக ஆய்வு செய்யு மாறு மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரி திரு. பி. நடராஜனுக்கு பதிவாளர் கட்டளையிட் டார். கடன்கள் வழங்கியதில் பல்வேறு முறை கேடுகள், அதிக அளவில் பாக்கி உள்ள தொகைகள் வைப்பீடு பற்றுக்குறைகளை வசூல் செய்யக் கையா ளப்பட்ட தவறான முறைகள், ரொக்க இருப்பு களை வைத்து வருதல் ஆகியவற்றை அவர் கண்டு பிடித்தார்.

இந்திய ரிசர்வ் வங்கியின் வேளாண்மைக் கடன் துறையைச் சேர்ந்த ஓர் அதிகாரி இந்த வங்கியின் கணக்குகளை ஆய்வு செய்தார். இதற்கு முன் ஆய்வுகளை மேற்கொண்ட அதி காரிகள் சுட்டிக் காட்டிய அதே முறை கேடுகளை இவரும் கண்டுபிடித்தார்.

பல்வேறு தவறுகள், முறைகேடுகள் ஆகிய வற்றிற்கான பொறுப்பு, தணிப் பதிவாளரும், 1968 ஜூன் 30 முதல் 1969 ஜூன் 30 வரை இந்த வங்கியின் செயலாளராகவும் இருந்த திரு. சவரிமுத்து மீதே ஆய்வு செய்த அதிகாரிகளால் பெருமளவில் சாட்டப்பட்டது. வங்கியின் தவறான நிர்வாக நடவடிக்கை களுக்காக நிர்வாகக் குழு, செயற்குழு ஆகியவை மீதும் குற்றஞ் சாட்டப்பட்டது. மூழ்கிக் கொண்டிருக்கும் நீலியிலிருந்து வங்கியைக் காப்பாற்ற பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கப் பதிவாளர் தீர்மானித்தார். அவையாவன :—

(a) நிர்வாகக் குழுவில் நீய சக்திகள் தொடர்ந்து செலுத்திவரும் செல்வாக்கைத் தடுத்தல்.

(b) இதற்குப் பொறுப்பான நபர்கள் மீது நடவடிக்கை எடுத்தல். அலுவலக அதிகாரிகள் மீது துறை நடவடிக்கையும், பாதிக்கப்பட்ட சங்கங்களில் சம்பந்தப்பட்டவர்கள், தலைவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கையும் எடுத்தல்.

(c) கடன்கள், நிலுவைகள் வசூல் செய்யப் படுவது ஆகியவை பற்றித் தீவிரமாகச் சரிபார்த்தல். நிர்வாகக் குழுவைக் கலைத்துவிட வேண்டுமென்றும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட் டது. ஆனால் 1968, 1969 ஆம் ஆண்டுகளில் எல்லா நடவடிக்கைகளுக்கும் தலைமை வகித்த வரும், மாவட்ட ஆட்சித்தலைவர் இவ் வங்கி யின் தலைவராத நியமிக்கப்பட்ட பிறகும் பதவியில் இருக்க அனுமதிக்கப்பட்டவருமான திரு. கரிவேங்கடத்தின் செல்வாக்கு காரண மாக இந்த முயற்சி வெற்றிபெறவில்லை. அடுத்து திரு. கரிவேங்கடம் பாலக்கோடு தொகுதியிலிருந்து இ.மு.க. சார்பில் மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இருந்த போதிலும், தி.மு.க. அரசு அல்லது ஒரு குறிப்பிட்ட அமைச்சரின் விருப் பத்தின் பேரில் இவர் அந்தக் குழுவில் இருந் தார் என்பதைக் குறிப்பிடும் வகையில் கோப்பு களில் எந்தக் குறிப்பும் இல்லை.

தணிப் பதிவாளரும், வங்கியின் செயலாளரு மான திரு. சவரிமுத்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு 7—11—1969 அன்று அவர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப் பட்டது. இருந்தபோதிலும் 3—7—1971 அன்று மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டு வயதுமுதிர்ச்சியின் காரணமாக வேலையிலின்று ஓய்வு பெற அவர் அனுமதிக்கப்பட்டார். அவருடைய ஓய்வூதியம் மாதத்திற்கு ரூ. 20 என்று நிரந்தரமாகக் குறைக்கப்பட்டது. இதோடு தொடர்புடைய மத்தியக் கூட்டுறவு வங்கியின் 18 பணி யாளர்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு களுக்கேற்ப அவர்கள் தண்டிக்கப்பட்டனர்.

கடன்கள் பற்றித் தீவிரமாகப் பரிசீலனை மேற் கொள்ளப்பட்டதன் காரணமாக, ரூ. 7·31 இலட்சம் தொகைக்குரிய கையாடல் சம்பந்த மான 21 இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை பற்றிப் புலனுய்வு செய்ய, இவை காவல் துறைக்கு அனுப்பப்பட்டன. 5 இனங் கள் பற்றிக் குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப் பட்டன. மத்தியஸ்தம், நிபந்தனைக்குட்பட்ட ஜப்தி செய்தல் ஆகியவை மூலமாகத் துறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கையாடல் சம்பந்தமான தொகையில் ஒரு பகுதி பணமாக அல்லது நேரடியாக மத்திய வங்கிக்குத் திருப்பிச் செலுத்தப்பட்டுவிட்டது.

திரு. கரிவேங்கடம் அல்லது நிர்வாகக் குழு உறுப்பினர் எவருக் கெதிராகவும் குற்றவியல் பொறுப்புக் குற்றத்திற்காகச் சாட்சியம் எதுவும் இல்லாததால், திரு. கரிவேங்கடத்திற் கெதிராக குற்றவியல் வழக்கு எதுவும் தொடரப்படவில்லை.

திரு. கருணாநிதியினுல் கொடுக்கப்பட்ட அச்சடிக்கப்பட்ட பதிலில் (பக்கம் 278–280) பின் வருமாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது :—

வங்கியின் நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், அந்த நிர்வாகக் குழு மாற்றியமைக்கப் பட்டது ; மாவட்ட ஆட்சித் தலைவர் அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன் செய லாளராக இருந்த துணைப் பதிவாளர் இடத்தில் இணைப் பதிவாளர் நியமிக்கப்பட்டார்; மேலும் பல்வேறு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1969–ஆம் ஆண்டு ஜூலை மாதம் ரூ. 97 இலட்சம் என்ற அளவில் இருந்த வராத கடன்கள், இதன் விளைவாக 30—6—1972–ஆம் நாளன்று ரூ. 77·3 இலட்சம் என்ற அளவிற்குக் கொண்டு வரப்பட்டன.

தி.மு.க.,வின் முக்கிய உறுப்பினரான திரு. கரிவேங்கடம் அவர்கள் வங்கியின் தலைவராக இருந்த காலத்தில், வங்கியின் செயல் முறை களில் முறைகேடுகள் செய்யப்பட்டன என்று நிருபிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த முறை கேடுகளுக்கு, முந்தைய தி.மு.க. அரசின் எந்த உறுப்பினரோ திரு. கரிவேங்கடமோ எந்தவிதத்திலும் பொறுப்பானவர் என் பதற்கு நடைமுறையில் சாட்சியம் எதுவும் இல்லை. திரு. கரிவேங்கடம் இருந்த காலத்தில் வங்கியின் நடவடிக்கைகளிலான நிர்வாகக் கேடுகள் தெரியவந்தபோதிலும், நிர்வாகக் குழுவில் இவரை மீண்டும் நியமனம் செய்தது ஒரு சந்தேகத்திற்குரிய சூழ்நிலையாகவே உள்ளது. ஆனால், எந்த அமைச்சரும் இதோடு தொடர்பு உடையவர் என் பதற்கு எங்கேயும் சாட்சியம் ஏதும் இல்லை. மோசடி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, நடவடிக்கை எடுக்கவில்லை என்று மகஜரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு உண்மையானதாகத் தோன்ற வில்லை. உண்மையில், இந்த முறைகேடுகள் பற்றித் தெரியவந்த பிறகு, பல்வேறு உரிய நட வடிக்கைகள் எடுக்கப்பட்டன. இச் சூழ்நிலையில் குற்றச்சாட்டு 23(4) நிருபிக்கப்பட்டுள்ளதாகத் தோன்றவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS